வெளியீடு : 8-5-2024 Issued: 8-5-2024

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு
(பதினாறாவது பேரவை)

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT
(SIXTEENTH ASSEMBLY)

செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 18, 2023—தொகுதி 67

Tuesday the 18th April 2023—Volume 67

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.
Legislative Assembly Secretariat, Chennai-600 009.

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS

18–4–2023

உள்ளடக்கம்

	பக்கங்கள்
ஆளுநரும் அமைச்சரவையும்	vii-xii
Governor and Council of Ministers	xiii-xvii
பேரவைத் தலைவர், பேரவைத் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள், செயலாளர் மற்றும் முக்கிய அலுவலர்கள்	xix-xxii
பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி)	xxiii-xxx
1. வினாக்கள்-விடைகள்—	
உடுக்குறியிட்ட வினாக்கள்	1-51
2. விதி 110—ன்கீழ் அறிக்கை—	
கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் திரு. இளையபெருமாள் அவர்களுக்கு நூற்றாண்டு நினைவரங்கம் அமைப்பது குறித்த முதலமைச்சரின் அறிக்கை	52-55
**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்*	52-55, 66
3. கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் திரு. இளையபெருமாள் அவர்களுக்கு நூற்றாண்டு நினைவரங்கம் அமைத்தல்—முதலமைச்சரின் அறிவிப்பிற்கு நன்றி—	55-72
திரு. மு. ஜெகன்மூர்த்தி	56
திரு. தி. வேல்முருகன்	56-57
திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்	57
முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா	58

பக்கங்கள்

3. கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் திரு. இளையபெருமாள் அவர்களுக்கு நூற்றாண்டு நினைவரங்கம் அமைத்தல்—முதலமைச்சரின் அறிவிப்பிற்கு நன்றி—தொடர்ச்சி

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்	58-59
திரு. ட்டி. இராமச்சந்திரன்	59-60
திரு. வி.பி. நாகைமாலி	60
*திரு. ம. சிந்தனை செல்வன்	60-62
திரு. நயினார் நாகேந்திரன்	62-63
திரு. ஜி.கே. மணி	63-64
திரு. கு. செல்வபெருந்தகை	64-66
திரு. ப. தனபால்	66
*மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்	67-68
மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்	69
மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்	69-70
மாண்புமிகு திரு. துரைமுருகன்	70-72

4. தகவல் கோரல்—

கோவை வனக் கோட்டம், தொண்டாமுத்தூர் தொகுதி, மதுக்கரை வனச் சரகம், காட்டுத் தீயைக் கட்டுப்படுத்த நடவடிக்கை	72-75
*திரு. எஸ்.பி. வேலுமணி	72-73
திரு. இரா. அருள்	73
மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்	73-75

பக்கங்கள்

5. கவன ஈர்ப்பு— 75-81, 82-91

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் தொகுதி, நீரோடித்துறை முதல் இரையுமன்துறை வரையுள்ள ஏ.வி.எம். கால்வாய், ஆக்கிரமிப்புகளை அகற்றி தூர்வாருதல் 75-81

திரு. செ. ராஜேஷ் குமார் 75, 78, 80-81

மாண்புமிகு திரு. துரைமுருகன் 76-77, 79-81

(ஆ) பால் கொள்முதல் விலையை உயர்த்துதல் 82-91

*திரு. மா. சின்னதுரை 82, 84, 88

திரு. ஜே.ஜி. பிரின்ஸ் 82, 85-87

*மாண்புமிகு திரு. சா.மு. நாசர் 83-84, 89-91

திரு. கே.பி. முனுசாமி 84, 89

திரு. தி. வேல்முருகன் 85

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் 87

திரு. ட்டி. இராமச்சந்திரன் 88

6. அறிவிப்புகள்— 91, 93-94

(அ) தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவு, 2023 (ஆ.இ.) 91

(ஆ) தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2023 (ஆ.இ.) 93

(இ) அண்ணா பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு உறுப்பினர் தேர்வு 94

TRUTH ALONE TRIUMPHS

	பக்கங்கள்
7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—	92-94
(அ) தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவு, 2023	92
மாண்புமிகு திரு. பி. மூர்த்தி	92
(ஆ) தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2023	93-94
மாண்புமிகு திரு. பி. மூர்த்தி	93-94
8. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி	95-427, 432-456
(அ) கோரிக்கை எண் 19 - மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை	95-121, 131-286
மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்	95, 117-118, 121,133-134, 136, 138-145, 149-154, 216-285
டாக்டர் சி. விஜயபாஸ்கர்	118-121, 131-141, 143, 145-146, 148-155
மாண்புமிகு திரு. துரைமுருகன்	143-144, 154
திரு. எடப்பாடி K. பழனிசாமி	144, 147-148
திரு. R.D. சேகர்	155-163
திரு. ப. அப்துல் சமது	163-168
திரு. இராம. கருமாணிக்கம்	168-171
திரு. N. அசோக்குமார்	172-180
*திரு. எம்.ஆர். காந்தி	180-186

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

	பக்கங்கள்
8. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*	
*திரு. ம. சிந்தனை செல்வன்	186-198
*திரு. க. கணபதி	198-209
*திரு. வே. சம்பத்குமார்	111-112, 210-216
மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு	211
திரு. வி.பி. நாகைமாலி	109, 217
(ஆ) கோரிக்கை எண் 4 – ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	286-427, 432-455
மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்	287, 301, 308, 311-312, 315-317, 434-455
*திருமதி கு. மரகதம் குமரவேல்	298, 301-307, 309-311, 313-318
மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்	304-305, 310
*திரு. எஸ்.பி. வேலுமணி	300, 313, 370
*திரு. அ. சௌந்தரபாண்டியன்	319-328
திரு. தே. மதியழகன்	328-364
திரு. S. அம்பேத்குமார்	364-376
மாண்புமிகு திரு. எ.வ. வேலு	371, 388-389
மாண்புமிகு திரு. சு. முத்துசாமி	371
*திரு. S.S. பாலாஜி	296, 376-385
மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி	380, 383, 388-389

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

	பக்கங்கள்
8. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*	
மாண்புமிகு முனைவர் க. பொன்முடி	383-384
**திரு. மா. சின்னதுரை*	295, 385-396
திரு. S. ராஜகுமார்	396-405
**திரு. A.G. வெங்கடாசலம்*	405-419
திரு. அ. பண்ணாரி	287, 420-427
திரு. கு. செல்வபெருந்தகை	432-433
**திரு. ம. சிந்தனை செல்வன்*	434
9. பேரவை நிகழ்ச்சிகளை நேரடி ஒளிபரப்பு செய்தல்	122-130, 427-432
திரு. எடப்பாடி K. பழனிசாமி	122-123, 126-127, 129-130
திரு. எஸ்.பி. வேலுமணி	128-129, 427-429
மாண்புமிகு திரு. துரைமுருகன்	129, 431
**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்*	428
மாண்புமிகு திரு. எ.வ. வேலு	429-430
திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்	432
10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்	456-457
11. இணைப்புகள்	459-902

ஆளுநரும் அமைச்சரவையும்

ஆளுநர்—மாண்புமிகு திரு. ஆர்.என். ரவி

அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1.	முதலமைச்சர்	..	**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி, மற்ற அகில இந்திய பணி, மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல், உள் துறை, சிறப்பு முயற்சிகள், மாற்றுத் திறனாளிகள் நலன்*
2.	நீர்வளத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** *சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, தேர்தல்கள் மற்றும் கடவுச் சீட்டுகள், கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள்*
3.	நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** *நகராட்சி நிர்வாகம், நகர்ப்பகுதி மற்றும் குடிநீர் வழங்கல்*
4.	ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** *ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள்*
5.	உயர் கல்வித் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு முனைவர் க. பொன்முடி:** *தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல்*

6. பொதுப் பணித் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** *பொதுப் பணிகள் (கட்டடங்கள்), நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்*
7. வேளாண்மை — உழவர் நலத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** *வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, சர்க்கரை, கரும்புத் தீர்வை, கரும்புப் பயிர் மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு*
8. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்:** *வருவாய், மாவட்ட வருவாய் பணியமைப்பு, துணை ஆட்சியர்கள், பேரிடர் மேலாண்மை*
9. தொழில் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** *தொழில்கள், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு, தொல்லியல்*
10. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின்** *இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை, வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் ஊரகக் கடன்கள்*
11. சட்டத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி:** *சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்புச் சட்டம்*

12.	**வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்** ..	**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** *வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகரமைப்புத் திட்டமிடல் மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, இட வசதிக் கட்டுப்பாடு, நகரத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி*
13.	**கூட்டுறவுத் துறை அமைச்சர்** ..	**மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன்:** *கூட்டுறவுத் துறை*
14.	**குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்** ..	**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** *குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்*
15.	**செய்தித் துறை அமைச்சர்** ..	**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** *செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்*
16.	**சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர்** ..	**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** *மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், ஆதரவற்றோர் இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள் மற்றும் சமூக சீர்திருத்தம் மற்றும் சத்துணவுத் திட்டம்*

17. **மீன்வளம் — மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்:**
மீன்வளம், மீன் வளர்ச்சிக் கழகம் மற்றும் கால்நடை பராமரிப்பு

18. **பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்:**
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர்மரபினர் நலன் மற்றும் கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம்

19. **சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்:**
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

20. **உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி:**
உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு

21. **மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி:**
மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு

22. **கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆர். காந்தி:**
கைத்தறி மற்றும் துணிநூல் துறை, பூதானம் மற்றும் கிராம தானம்

23. **மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்:**
மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வு

24. வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. பி. மூர்த்தி:** *வணிக வரிகள், பதிவு மற்றும் முத்திரைத்தாள் சட்டம், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டுகள் மற்றும் கம்பெனிகள் பதிவு*
25. போக்குவரத்துத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** *போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்தி சட்டம்*
26. இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு:** *இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம்*
27. நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்:** *நிதித் துறை, திட்டம், மனிதவள மேலாண்மை, ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்கால நன்மைகள் மற்றும் புள்ளியியல் துறை*
28. பால்வளத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. சா.மு. நாசர்:** *பால்வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி*
29. சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்:** *சிறுபான்மையினர் நலன், வெளிநாடு வாழ் தமிழர் நலன், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் மற்றும் வக்ஃப் வாரியம்*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

30. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி:**

பள்ளிக் கல்வி

31. சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்:**

சுற்றுச்சூழல், மாசுக் கட்டுப்பாடு மற்றும் முன்னாள் படைவீரர்கள்

32. தொழிலாளர் நலன் — திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்:**

தொழிலாளர்கள் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, மக்கள் தொகை கணக்கெடுப்பு, நகரம் மற்றும் ஊரக வேலைவாய்ப்பு

33. தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்:**

தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள்

34. வனத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர்** மா. **மதிவேந்தன்**:

வனம்

35. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர்கள் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

GOVERNOR AND COUNCIL OF MINISTERS

GOVERNOR–HON'BLE THIRU R.N. RAVI

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1.	**Chief Minister**	..	**The Hon. Thiru M.K. Stalin:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, Other All India Service, District Revenue Officers, Police, Home, Special Initiatives and Welfare of the Differently abled persons
2.	**Minister for Water Resources**	..	**The Hon. Thiru Duraimurugan:** Irrigation Projects including small Irrigation, Legislative Assembly, Governor and Ministry, Elections and Passports, Minerals and Mines
3.	**Minister for Municipal Administration**	..	**The Hon. Thiru K.N. Nehru:** Municipal Administration, Urban and Water Supply
4.	**Minister for Rural Development**	..	**The Hon. Thiru I. Periyasamy:** Rural Development, Panchayats and Panchayat Union
5.	**Minister for Higher Education**	..	**The Hon. Dr. K. Ponmudi:** Higher Education including Technical Education, Electronics, Science and Technology
6.	**Minister for Public Works**	..	**The Hon. Thiru E.V. Velu:** Public Works (Buildings), Highways and Minor Ports

7.	Minister for Agriculture and Farmer's Welfare	..	**The Hon. Thiru M.R.K. Panneerselvam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co–operatives, Horticulture, Sugars, Sugarcane Excise, Sugarcane Development and Waste Land Development
8.	Minister for Revenue and Disaster Management	..	**The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:** Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Disaster Management
9.	Minister for Industries	..	**The Hon. Thiru Thangam Thennarasu:** Industries, Tamil Official Language and Tamil Culture, Archeology
10.	Minister for Youth Welfare and Sports Development	..	**The Hon. Thiru Udhayanidhi Stalin** Youth Welfare and Sports Development, Special Programme Implementation Department & Poverty Alleviation Programme and Rural Indebtedness
11.	Minister for Law	..	**The Hon. Thiru S. Regupathy:** Law, Courts, Prisons and Prevention of Corruption
12.	Minister for Housing and Urban Development	..	**The Hon. Thiru S. Muthusamy:** Housing, Rural Housing, Town Planning Projects and Housing Development, Accommodation Control, Urban Planning and Urban Development

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

13. **Minister for Co–operation**	..	**The Hon. Thiru KR. Periakaruppan:** Co–operation
14. **Minister for Micro, Small and Medium Enterprises**	..	**The Hon. Thiru T.M. Anbarasan:** Rural Industries including Cottage Industries, Small Industries, Tamil Nadu Urban Habitat Development Board
15. **Minister for Information & Publicity**	..	**The Hon. Thiru M.P. Saminathan:** Information & Publicity, Film Technology and Cinematograph Act, Newsprint Control, Stationery and Printing, Government Press
16. **Minister for Social Welfare & Women Empowerment**	..	**The Hon. Tmt. P. Geetha Jeevan:** Social Welfare including Women and Children Welfare, Orphanages and Correctional Administration, Integrated Child Development Scheme and Beggar Homes and Social Reforms & Nutritious Meal Programme
17. **Minister for Fisheries – Fishermen Welfare and Animal Husbandry**	..	**The Hon. Thiru Anitha R. Radhakrishnan:** Fisheries, Fisheries Development Corporation and Animal Husbandry
18. **Minister for Backward Classes Welfare**	..	**The Hon. Thiru R.S. Rajakannappan:** Backward Classes Welfare, Most Backward Classes Welfare, Denotified Communities Welfare and Khadi & Village Industries Board

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS

19.	**Minister for Tourism**	..	**The Hon. Thiru K. Ramachandran:** Tourism and Tourism Development Corporation
20.	**Minister for Food and Civil Supplies**	..	**The Hon. Thiru R. Sakkarapani:** Food and Civil Supplies, Consumer Protection and Price Control
21.	**Minister for Electricity, Prohibition & Excise**	..	**The Hon. Thiru V. Senthilbalaji:** Electricity, Non Conventional Energy Development, Prohibition and Excise, Molasses
22.	**Minister for Handlooms and Textiles**	..	**The Hon. Thiru R. Gandhi:** Handlooms and Textiles, Boodhan and Gramadhan
23.	**Minister for Health and Family Welfare**	..	**The Hon. Thiru Ma. Subramanian:** Health, Medical Education and Family Welfare
24.	**Minister for Commercial Taxes and Registration**	..	**The Hon. Thiru P. Moorthy:** Commercial Taxes, Registration and Stamp Act, Weights and Measures, Debt Relief including legislation on Money lending, Chits and Registration of Companies
25.	**Minister for Transport**	..	**The Hon. Thiru S.S. Sivasankar:** Transport, Nationalised Transport and Motor Vehicles Act
26.	**Minister for Hindu Religious and Charitable Endowments**	..	**The Hon. Thiru P.K. Sekarbabu:** Hindu Religious and Charitable Endowments and CMDA

27. **Minister for Finance and Human Resources Management**	..	**The Hon. Dr. Palanivel Thiaga Rajan:** Finance, Planning, Human Resources Management, Pensions and Pensionary benefits and Statistics
28. **Minister for Milk & Dairy Development**	..	**The Hon. Thiru S.M. Nasar:** Milk and Dairy Development
29. **Minister for Minorities Welfare and Non Resident Tamils Welfare**	..	**The Hon. Thiru Gingee K.S. Masthan:** Minorities Welfare, Non Resident Tamils Welfare, Refugees & Evacuees and Wakf Board
30. **Minister for School Education**	..	**The Hon. Thiru Anbil Mahesh Poyyamozhi:** School Education
31. **Minister for Environment and Climate Change**	..	**The Hon. Thiru Siva.V. Meyyanathan:** Environment and Pollution Control and Ex–Servicemen
32. **Minister for Labour Welfare and Skill Development**	..	**The Hon. Thiru C.V. Ganesan:** Labour Welfare, Population, Employment and Training, Census, Urban and Rural Employment
33. **Minister for Information Technology and Digital Services**	..	**The Hon. Thiru T. Mano Thangaraj:** Information Technology and Digital Services
34. **Minister for Forests**	..	**The Hon. Dr. M. Mathiventhan:** Forests
35. **Minister for Adi Dravidar Welfare**	..	**The Hon. Tmt. N. Kayalvizhi Selvaraj:** Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour Welfare

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பேரவைத் தலைவர், பேரவைத் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள், செயலாளர் மற்றும் முக்கிய அலுவலர்கள்

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. மு. அப்பாவு

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி

மாற்றுத் தலைவர்கள்#

திரு. க. அன்பழகன்

திரு. நா. இராமகிருஷ்ணன்

திரு. S.R. இராஜா

திரு. தா. உதயசூரியன்

திரு. துரை. சந்திரசேகரன்

முனைவர் T.R.B. ராஜா

செயலாளர்

முனைவர் கி. சீனிவாசன்

11–1–2023 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

முக்கிய அலுவலர்கள்

திருமதி வி.சு. வசந்திமலர், எம்.ஏ., எம்.ஏ., பி.ஜி.எல். ..	சிறப்புச் செயலாளர்
திரு. ந. இரவிசந்திரன், பி.எஸ்சி., பி.எல். ..	கூடுதல் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. தே. நாகராஜன், பி.எஸ்சி., பி.எல். ..	கூடுதல் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. பா. சுப்பிரமணியம், பி.காம்., பி.ஜி.எல். ..	கூடுதல் செயலாளர்
திருமதி ச. ஆண்டாள், பி.எஸ்சி., பி.ஜி.எல். ..	இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. ச. ஜெயகணேசன், பி.எஸ்சி., பி.ஜி.எல். ..	இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. வ. பூபாலன், பி.காம்., பி.ஜி.எல். ..	இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி ஸ்ரீ. ஸ்ரீவித்யா, பி.எஸ்சி., பி.ஜி.எல். ..	இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி இரா. சாந்தி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல். ..	இணைச் செயலாளர்
திரு. அ. அய்யன்பெருமாள், எம்.ஏ., பி.ஜி.எல். ..	இணைச் செயலாளர்
திரு. செ. பாண்டியன், எம்.ஏ., எம்.ஃபில்., எம்.எல். ..	இணைச் செயலாளர்
திரு. மு. ஆதிசேசன், எம்.காம்., பி.எட்., எல்.எல்.பி. ..	மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் சிறப்பு தனிச் செயலர் (இணைச் செயலாளர் நிலை)
திரு. ப. பத்மகுமார், எம்.எஸ்சி., பி.எட்., பி.எல். ..	மாண்புமிகு பேரவைத் தலைவரின் சிறப்பு தனிச் செயலர் (இணைச் செயலாளர் நிலை)

திரு. மு. கருணாநிதி, பி.ஏ., பி.ஜி.எல். .. இணைச் செயலாளர்

திருமதி பி. தேன்மொழி, எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்., பி.எல். .. இணைச் செயலாளர்

திருமதி சி. சாந்தா, எம்.காம்., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. த. ரகுபதி, எம்.காம்., பி.ஜி.எல். .. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் துணைச் செயலாளர் (மாற்றுப்பணி)/

துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. சி. ஸ்ரீதரன், எம்.காம்., பி.எட்., எல்.எல்.பி. .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திருமதி பு. சங்கீதா, பி.காம்., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திருமதி சு.சீ. அலமேலு, எம்.காம்., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திருமதி டி.வி. ஜெயஸ்ரீ, பி.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

திருமதி பா. ரேவதி, பி.எஸ்சி., பி.எட்., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

திரு. கே. ரமேஷ், பி.எஸ்சி., பி.எல். .. துணைச் செயலாளர்

திரு. க.லோ. சிவகுமரன், பி.எஸ்சி., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

திருமதி பெர்லின் ரூப்குமார், எம்.ஏ., பி.எல். .. துணைச் செயலாளர்

திரு. கோ. கணேஷ், பி.எஸ்சி., பி.எல். .. துணைச் செயலாளர்

திரு. சு. பாலகிருஷ்ணன், பி.ஏ., பி.எல். .. துணைச் செயலாளர்

திருமதி சீ. உஷா, பி.காம்., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

திரு. ஸ்ரீரா. ரவி, எம்.காம்., பி.எல். .. துணைச் செயலாளர்

திருமதி த. சுஜாதா தேவி, பி.இ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

திரு. அ.சு. கேளுடை நம்பி, எம்.எஸ்சி., பி.ஜி.எல். .. குழு அலுவலர் (பொதுக் கணக்குக் குழு)

திரு. மு. மோகன் ராஜா, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். .. குழு அலுவலர் (துணைச் செயலாளர் நிலை) மாற்றுப் பணியில் மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்

திருமதி வி. விமலா தேவி, பி.காம்., பி.ஜி.எல்., எம்.பி.ஏ. .. தலைமை நிருபர்

திரு. கோ. வரதராஜன், பி.காம்., எம்.பி.ஏ., எல்.எல்.பி. .. தலைமை நிருபர்

திருமதி ஆர். மலர்விழி, பி.ஏ. .. தலைமை நிருபர்

திரு. இரா. இராஜேந்திரன், பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. கி. முரளீதரன் நாயர், பி.ஏ. .. சார்புச் செயலாளர்

திருமதி வி. சுமதி, பி.காம்., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. அ. பாஸ்கரன், பி.காம்., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. ஜெ. பாலசீனிவாசன், எம்.காம்., எம்.ஃபில்., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. வே. லோகநாதன், பி.எஸ்சி. .. சார்புச் செயலாளர்

திருமதி த. இந்திராகாந்தி, பி.ஏ. .. சார்புச் செயலாளர்

திருமதி ஏ. மகாலட்சுமி, பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திருமதி பாஸ்ஹரிதேசிங், பி.காம், பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

பேரவை உறுப்பினர்கள்
(அகர வரிசைப்படி)
பெயர்களும் தொகுதிகளும்

1.	அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு.	.. போளூர்
2.	அசன் மௌலானா, திரு. JMH.	.. வேளச்சேரி
3.	அசோகன், திரு. G.	.. சிவகாசி
4.	அசோக்குமார், திரு. கி.	.. கிருஷ்ணகிரி
5.	அசோக்குமார், திரு. N.	.. பேராவூரணி
6.	அண்ணாதுரை, திரு. கா.	.. பட்டுக்கோட்டை
7.	அப்துல் சமது, திரு. ப.	.. மணப்பாறை
8.	அப்துல் வஹாப், திரு. மு.	.. பாளையங்கோட்டை
9.	அப்பாவு, திரு. மு.	.. ராதாபுரம்
10.	அமலு, திருமதி V.	.. குடியாத்தம் (தனி)
11.	அமுல் கந்தசாமி, திரு. T.K.	.. வால்பாறை (தனி)
12.	அம்பேத்குமார், திரு. S.	.. வந்தவாசி (தனி)
13.	அம்மன் K. அர்ச்சுணன், திரு.	.. கோயம்புத்தூர் (வடக்கு)
14.	அய்யப்பன், திரு. பி.	.. உசிலம்பட்டி
15.	அரவிந்த் ரமேஷ், திரு. ச.	.. சோழிங்கநல்லூர்
16.	அருண்குமார், திரு. P.R.G.	.. கவுண்டம்பாளையம்
17.	அருண்மொழிதேவன், திரு. ஆ.	.. புவனகிரி
18.	அருள், திரு. இரா.	.. சேலம் (மேற்கு)
19.	அர்ஜுனன், திரு. பொ.	.. திண்டிவனம் (தனி)
20.	அனிதா R. ராதாகிருஷ்ணன், திரு.	.. திருச்செந்தூர்
21.	அன்பரசன், திரு. தா.மோ.	.. ஆலந்தூர்
22.	அன்பழகன், திரு. க.	.. கும்பகோணம்
23.	அன்பழகன், திரு. கே.பி.	.. பாலக்கோடு
24.	அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திரு.	.. திருவெறும்பூர்
25.	ஆனந்தன், திரு. எம்.எஸ்.எம்.	.. பல்லடம்
26.	இசக்கி சுப்பையா, முனைவர்	.. அம்பாசமுத்திரம்
27.	இராசேந்திரன், திரு. சபா.	.. நெய்வேலி

28. இராமகிருஷ்ணன், திரு. நா.	.. கம்பம்
29. இராமச்சந்திரன், திரு. ட்டி.	.. தளி
30. இராமச்சந்திரன், திரு. K.K.S.S.R.	.. அருப்புக்கோட்டை
31. இராஜா, திரு. S.R.	.. தாம்பரம்
32. இராஜேந்திரன், திரு. இரா.	.. சேலம் (வடக்கு)
33. இராஜேந்திரன், திரு. வி.ஜி.	.. திருவள்ளூர்
34. இலட்சுமணன், டாக்டர் இரா.	.. விழுப்புரம்
35. இளங்கோ, திரு. ரா.	.. அரவக்குறிச்சி
36. இளங்கோவன், திரு. ஈ.வெ.கி.ச.	.. ஈரோடு (கிழக்கு)
37. இனிகோ இருதயராஜ், முனைவர் த.	.. திருச்சிராப்பள்ளி (கிழக்கு)
38. ஈஸ்வரப்பன், திரு. J.L.	.. ஆற்காடு
39. ஈஸ்வரன், திரு. ஈ.ஆர்.	.. திருச்செங்கோடு
40. உடுமலை K. ராதாகிருஷ்ணன், திரு.	.. உடுமலைப்பேட்டை
41. உதயகுமார், திரு. ஆர்.பி.	.. திருமங்கலம்
42. உதயசூரியன், திரு. தா.	.. சங்கராபுரம்
43. உதயநிதி ஸ்டாலின், திரு.	.. சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி
44. ஊர்வசி அமிர்தராஜ், திரு. செ.	.. ஸ்ரீவைகுண்டம்
45. எடப்பாடி K. பழனிசாமி, திரு.	.. எடப்பாடி
46. எபினேசர் என்கிற ஜான் எபினேசர், திரு. ஜே.ஜே.	.. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
47. எழிலரசன், திரு. சி.வி.எம்.பி.	.. காஞ்சிபுரம்
48. எழிலன், டாக்டர் நா.	.. ஆயிரம் விளக்கு
49. ஐட்ரீம் இரா. மூர்த்தி, திரு.	.. இராயபுரம்
50. ஐயப்பன், திரு. கோ.	.. கடலூர்
51. கடம்பூர் ராஜூ, திரு.	.. கோவில்பட்டி
52. கணபதி, திரு. க.	.. மதுரவாயல்
53. கணேசன், திரு. சி.வி.	.. திட்டக்குடி (தனி)
54. கணேஷ், திரு. ஆர்.	.. உதகமண்டலம்
55. கண்ணன், திரு. க.சொ.க.	.. ஜெயங்கொண்டம்

56. கதிரவன், திரு. சீ.	.. மண்ணச்சநல்லூர்
57. கந்தசாமி, திரு. V.P.	.. சூலூர்
58. கயல்விழி செல்வராஜ், திருமதி என்.	.. தாராபுரம் (தனி)
59. கருணாநிதி, திரு. இ.	.. பல்லாவரம்
60. கருணாநிதி, திரு. ஜெ.	.. தியாகராய நகர்
61. கருப்பணன், திரு. K.C.	.. பவானி
62. கருமாணிக்கம், திரு. இராம.	.. திருவாடனை
63. காதர்பாட்சா முத்துராமலிங்கம், திரு.	.. இராமநாதபுரம்
64. காந்தி, திரு. ஆர்.	.. ராணிப்பேட்டை
65. காந்தி, திரு. எம்.ஆர்.	.. நாகர்கோவில்
66. காந்திராஜன், திரு. எஸ்.	.. வேடசந்தூர்
67. காமராஜ், திரு. இரா.	.. நன்னிலம்
68. கார்த்திகேயன், திரு. க.	.. ரிஷிவந்தியம்
69. கார்த்திகேயன், திரு. ப.	.. வேலூர்
70. கிரி, திரு. மு.பெ.	.. செங்கம் (தனி)
71. கிருஷ்ணசாமி, திரு. ஆ.	.. பூந்தமல்லி (தனி)
72. கிருஷ்ணமுரளி, திரு. செ.	.. கடையநல்லூர்
73. கீதா ஜீவன், திருமதி பி.	.. தூத்துக்குடி
74. கோவிந்தசாமி, திரு. ஆ.	.. பாப்பிரெட்டிப்பட்டி
75. கோவிந்தராஜன், திரு. டி.ஜெ.	.. கும்மிடிப்பூண்டி
76. சக்கரபாணி, திரு. அர.	.. ஒட்டன்சத்திரம்
77. சக்ரபாணி, திரு. மு.	.. வானூர் (தனி)
78. சங்கர், திரு. கே.பி.	.. திருவொற்றியூர்
79. சண்முகையா, திரு. எம்.சி.	.. ஒட்டப்பிடாரம் (தனி)
80. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி.	.. வாசுதேவநல்லூர் (தனி)
81. சதாசிவம், திரு. S.	.. மேட்டூர்
82. சந்திரசேகரன், திரு. துரை.	.. திருவையாறு
83. சந்திரசேகர், திரு. துரை.	.. பொன்னேரி (தனி)
84. சந்திரன், திரு. S.	.. திருத்தணி
85. சம்பத்குமார், திரு. வே.	.. அரூர் (தனி)

86. சரவணக்குமார், திரு. கே.எஸ். .. பெரியகுளம் (தனி)
87. சரவணன், திரு. பெ.சு.தி. .. கலசப்பாக்கம்
88. சரஸ்வதி, டாக்டர் சி. .. மொடக்குறிச்சி
89. சாமிநாதன், திரு. மு.பெ. .. காங்கேயம்
90. சித்ரா, திருமதி கு. .. ஏற்காடு (ஆ.வ.)
91. சிந்தனை செல்வன், திரு. ம. .. காட்டுமன்னார் கோவில் (தனி)
92. சிவகாமசுந்தரி, திருமதி க. .. கிருஷ்ணராயபுரம் (தனி)
93. சிவகுமார் என்கிற தாயகம் கவி, திரு. ப. .. திரு.வி.க. நகர் (தனி)
94. சிவகுமார், திரு. ச. .. மயிலம்
95. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். .. குன்னம்
96. சின்னதுரை, திரு. மா. .. கந்தர்வகோட்டை (தனி)
97. சின்னப்பா, திரு. கு. .. அரியலூர்
98. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்
99. சுதர்சனம், திரு. எஸ். .. மாதவரம்
100. சுந்தரராஜன், திரு. செ. .. சங்கரி
101. சுந்தர், திரு. க. .. உத்திரமேரூர்
102. சுப்பிரமணியன், திரு. மா. .. சைதாப்பேட்டை
103. செங்கோட்டையன், திரு. கே.ஏ. .. கோபிசெட்டிபாளையம்
104. செஞ்சி K.S. மஸ்தான், திரு. .. செஞ்சி
105. செந்தில்குமார், திரு. ஐ.பி. .. பழனி
106. செந்தில் குமார், திரு. கோ. .. வாணியம்பாடி
107. செந்தில்குமார், திரு. மா. .. கள்ளக்குறிச்சி (தனி)
108. செந்தில்நாதன், திரு. பெரி. .. சிவகங்கை
109. செந்தில்பாலாஜி, திரு. V. .. கரூர்
110. செல்லூர் கே. ராஜூ திரு. .. மதுரை (மேற்கு)
111. செல்வபெருந்தகை, திரு. கு. .. ஸ்ரீபெரும்புதூர் (தனி)
112. செல்வராஜ், திரு. க. .. திருப்பூர் தெற்கு
113. செல்வராஜ், திரு. A.K. .. மேட்டுப்பாளையம்
114. செழியன், முனைவர் கோவி. .. திருவிடைமருதூர் (தனி)
115. சேகர், திரு. R.D. .. பெரம்பூர்

116. சேகர், திரு. S.	.. பரமத்தி–வேலூர்
117. சேகர்பாபு, திரு. பி.கே.	.. துறைமுகம்
118. சேவூர் S. இராமச்சந்திரன், திரு.	.. ஆரணி
119. சௌந்தரபாண்டியன், திரு. அ.	.. லால்குடி
120. தங்கப்பாண்டியன், திரு. எஸ்.	.. ராஜபாளையம்
121. தங்கமணி, திரு. பி.	.. குமாரபாளையம்
122. தங்கம் தென்னரசு, திரு.	.. திருச்சுழி
123. தமிழரசி, திருமதி ஆ.	.. மானாமதுரை (தனி)
124. தமிழ்செல்வம், திரு. T.M.	.. ஊத்தங்கரை (தனி)
125. தளபதி, திரு. கோ.	.. மதுரை (வடக்கு)
126. தளவாய் சுந்தரம், திரு. ந.	.. கன்னியாகுமரி
127. தனபால், திரு. ப.	.. அவினாசி (தனி)
128. தாமோதரன், திரு. செ.	.. கிணத்துக்கடவு
129. திண்டுக்கல் சி. சீனிவாசன், திரு.	.. திண்டுக்கல்
130. தியாகராஜன், திரு. ந.	.. முசிறி
131. துரைமுருகன், திரு.	.. காட்பாடி
132. தேவராஜி, திரு. க.	.. ஜோலார்பேட்டை
133. தேன்மொழி, திருமதி எஸ்.	.. நிலக்கோட்டை (தனி)
134. நத்தம் ஆர். விசுவநாதன், திரு.	.. நத்தம்
135. நந்தகுமார், திரு. A.P.	.. அணைக்கட்டு
136. நயினார் நாகேந்திரன், திரு.	.. திருநெல்வேலி
137. நல்லதம்பி, திரு. அ.	.. கெங்கவல்லி (தனி)
138. நல்லதம்பி, திரு. A.	.. திருப்பத்தூர்
139. நாகைமாலி, திரு. வி.பி.	.. கீழ்வேளூர் (தனி)
140. நாசர், திரு. சா.மு.	.. ஆவடி
141. நிவேதா எம். முருகன், திரு.	.. பூம்புகார்
142. நீலமேகம், திரு. டி.கே.ஜி.	.. தஞ்சாவூர்
143. நேரு, திரு. கே.என்.	.. திருச்சிராப்பள்ளி (மேற்கு)
144. பண்ணாரி, திரு. அ.	.. பவானிசாகர் (தனி)
145. பரந்தாமன், திரு. இ.	.. எழும்பூர் (தனி)
146. பழனி நாடார், திரு. S.	.. தென்காசி

147. பழனியாண்டி, திரு. மொ.	.. ஸ்ரீரங்கம்
148. பழனிவேல் தியாக ராஜன், முனைவர்	.. மதுரை (மத்தி)
149. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே.	.. குறிஞ்சிப்பாடி
150. பன்னீர்செல்வம், திரு. ஓ.	.. போடிநாயக்கனூர்
151. பன்னீர்செல்வம், திரு. மு.	.. சீர்காழி (தனி)
152. பாண்டியன், திரு. K.A.	.. சிதம்பரம்
153. பாபு, திரு. மு.	.. செய்யூர் (தனி)
154. பாலசுப்ரமணியன், திரு. ஈ.	.. சேலம் (தெற்கு)
155. பாலாஜி, திரு. S.S.	.. திருப்போரூர்
156. பால் மனோஜ் பாண்டியன், திரு.	.. ஆலங்குளம்
157. பிச்சாண்டி, திரு. கு.	.. கீழ்பெண்ணாத்தூர்
158. பிரகாஷ், திரு. ஒய்.	.. ஓசூர்
159. பிரபாகரராஜா, திரு. எ.எம்.வி.	.. விருகம்பாக்கம்
160. பிரபாகரன், திரு. ம.	.. பெரம்பலூர் (தனி)
161. பிரின்ஸ், திரு. ஜே.ஜி.	.. குளச்சல்
162. புகழேந்தி, திரு. நா.	.. விக்கிரவாண்டி
163. பூண்டி கே. கலைவாணன், திரு.	.. திருவாரூர்
164. பூமிநாதன், திரு. மு.	.. மதுரை (தெற்கு)
165. பெரியகருப்பன், திரு. கேஆர்.	.. திருப்பத்தூர்
166. பெரியசாமி, திரு. இ.	.. ஆத்தூர்
167. பெரியபுள்ளான் என்கிற செல்வம், திரு. பெ.	.. மேலூர்
168. பொள்ளாச்சி V. ஜெயராமன், முனைவர்	.. பொள்ளாச்சி
169. பொன்முடி, முனைவர் க.	.. திருக்கோவிலூர்
170. பொன்னுசாமி, திரு. கே.	.. சேந்தமங்கலம் (ஆ.வ.)
171. மகாராஜன், திரு. ஆ.	.. ஆண்டிப்பட்டி
172. மகேந்திரன், திரு. சி.	.. மடத்துக்குளம்
173. மணி, திரு. ரா.	.. ஓமலூர்
174. மணி, திரு. ஜி.கே.	.. பெண்ணாகரம்
175. மணிக்கண்ணன், திரு. A.J.	.. உளுந்தூர்பேட்டை
176. மணியன், திரு. ஓ.எஸ்.	.. வேதாரண்யம்

177. மதியழகன், திரு. தே. .. பர்கூர்
178. மதிவேந்தன், டாக்டர் மா. .. ராசிபுரம் (தனி)
179. மரகதம் குமரவேல், திருமதி கு. .. மதுராந்தகம் (தனி)
180. மனோ தங்கராஜ், திரு. த. .. பத்மநாபபுரம்
181. மாங்குடி, திரு. சா. .. காரைக்குடி
182. மாணிக்கம், திரு. இரா. .. குளித்தலை
183. மாரிமுத்து, திரு. K. .. திருத்துறைப்பூண்டி (தனி)
184. மார்க்கண்டேயன், திரு. G.V. .. விளாத்திகுளம்
185. மான்ராஜ், திரு. இ.மா. .. ஸ்ரீவில்லிபுத்தூர் (தனி)
186. முகம்மது ஷாநவாஸ், திரு. ஜெ. .. நாகப்பட்டினம்
187. முத்துசாமி, திரு. சு. .. ஈரோடு (மேற்கு)
188. முத்துராஜா, டாக்டர் வை. .. புதுக்கோட்டை
189. முருகேசன், திரு. செ. .. பரமக்குடி (தனி)
190. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
191. முனுசாமி, திரு. கே.பி. .. வேப்பனஹள்ளி
192. மூர்த்தி, திரு. பி. .. மதுரை (கிழக்கு)
193. மெய்யநாதன், திரு. சிவ.வீ. .. ஆலங்குடி
194. மோகன், திரு. M.K. .. அண்ணா நகர்
195. ரகுபதி, திரு. எஸ். .. திருமயம்
196. ரகுராமன், திரு. A.R.R. .. சாத்தூர்
197. ரவி, திரு. சு. .. அரக்கோணம் (தனி)
198. ராதாகிருஷ்ணன், திரு. R. .. விருத்தாசலம்
199. ராமசந்திரன், திரு. கா. .. குன்னூர்
200. ராமச்சந்திரன், திரு. தி. .. அறந்தாங்கி
201. ராமலிங்கம், திரு. பெ. .. நாமக்கல்
202. ராஜகண்ணப்பன், திரு. R.S. .. முதுகுளத்தூர்
203. ராஜகுமார், திரு. S. .. மயிலாடுதுறை
204. ராஜமுத்து, திரு. M. .. வீரபாண்டி
205. ராஜன் செல்லப்பா, திரு. வி.வி. .. திருப்பரங்குன்றம்
206. ராஜா, திரு. ஈ. .. சங்கரன்கோவில் (தனி)
207. ராஜா, முனைவர் T.R.B. .. மன்னார்குடி

TRUTH ALONE TRIUMPHS

208. ராஜேஷ் குமார், திரு. செ. .. கிள்ளியூர்
209. ரூபி ஆர். மனோகரன், திரு. .. நாங்குநேரி
210. வரலட்சுமி, திருமதி ம. .. செங்கல்பட்டு
211. வானதி சீனிவாசன், திருமதி .. கோயம்புத்தூர் (தெற்கு)
212. வில்வநாதன், திரு. அ.செ. .. ஆம்பூர்
213. விஜயகுமார், திரு. K.N. .. திருப்பூர் (வடக்கு)
214. விஜயதரணி, திருமதி S. .. விளவங்கோடு
215. விஜயபாஸ்கர், டாக்டர் சி. .. விராலிமலை
216. வெங்கடாசலம், திரு. A.G. .. அந்தியூர்
217. வெங்கடேசன், திரு. ஆ. .. சோழவந்தான் (தனி)
218. வெங்கடேஷ்வரன், திரு. எஸ்.பி. .. தருமபுரி
219. வெற்றிஅழகன், திரு. அ. .. வில்லிவாக்கம்
220. வேலு, திரு. எ.வ. .. திருவண்ணாமலை
221. வேலு, திரு. த. .. மயிலாப்பூர்
222. வேலுமணி, திரு. எஸ்.பி. .. தொண்டாமுத்தூர்
223. வேல்முருகன், திரு. தி. .. பண்ருட்டி
224. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு
225. ஜவாஹிருல்லா, முனைவர் எம்.எச். .. பாபநாசம்
226. ஜெகன் மூர்த்தி, திரு. மு. .. கீழ்வைத்தினான்குப்பம் (தனி)
227. ஜெயக்குமார், திரு. S. .. பெருந்துறை
228. ஜெயசங்கரன், திரு. A.P. .. ஆத்தூர் (தனி)
229. ஜெயசீலன், திரு. பொன். .. கூடலூர் (தனி)
230. ஜெயராம், திரு. கே.ஆர். .. சிங்காநல்லூர்
231. ஜோசப் சாமுவேல், திரு. .. அம்பத்தூர்
232. ஜோதி, திரு. ஒ. .. செய்யாறு
233. ஸ்டாலின், திரு. மு.க. .. கொளத்தூர்
234. ஸ்டாலின் குமார், திரு. செ. .. துறையூர் (தனி)

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

திரு. ஆர். சண்முகசுந்தரம் .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 5, திருவள்ளுவர் ஆண்டு—2054

2023 ஏப்ரல் 18, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி உணின்."

உண்ட உணவு செரிப்பதற்கான கால இடைவெளி தந்து உணவு அருந்துகிறவர்களின் உடலுக்கு வேறு மருந்தே தேவையில்லை.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 171, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கணபதி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

171—

குடிநீர்

***9570—திரு. க. கணபதி:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரவாயல் தொகுதி, 143–வது வார்டு, நொளம்பூர் பகுதிக்கு சென்னை குடிநீர் வாரியத்தின்மூலம் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) மதுரவாயல் தொகுதிக்குட்பட்ட வார்டு எண் 143, பகுதி 11 நொளம்பூர் பகுதியில் உள்ள 232 தெருக்களில் சென்னை குடிநீர் வாரியத்தின் மூலமாக குடிநீர்க் குழாய்கள் பதிக்கப்பட்டு, டிசம்பர், 2018 முதல் 226 தெருக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எஞ்சியுள்ள 6 தெருக்களில் 377 மீட்டர் நீளத்திற்கு குடிநீர் குழாய்கள் அமைக்கும் பணிகள் ரூ.42.15 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவிட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கணபதி அவர்கள்.

திரு. க. கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரவாயல் சட்டமன்றத் தொகுதியில் சென்னை மாநகராட்சி மண்டலம் 11, வார்டு எண் 143-ல் சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் pipeline அமைக்கப்பட்டு, குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டு, குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போதுள்ள பிரச்சினை என்னவென்றால், அங்குள்ள Tank-ன் கொள்ளளவு குறைவாக இருக்கிறது. அதனால், குடிநீர் விநியோகம் அடிக்கடி தடைபடுகிறது. அது ஒரு பெரிய குறையாக இருக்கிறது. ஆகவே, கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைக் கட்டி, அதிக கொள்ளளவில் நீரைத் தேக்கி, அதன்மூலமாக குடிநீர் வழங்கினால் முழுக் கொள்ளளவு நீரையும் பொதுமக்கள் எல்லோரும் பயன்படுத்திக்கொள்வார்கள் என்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைச் செய்து தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எஞ்சிய பகுதிகளிலும் குடிநீர் வழங்க வேண்டுமென்று சொல்லியிருந்தார்கள். ஆனால், குடிநீர் தொட்டிகளின் கொள்ளளவை அதிகப்படுத்த வேண்டுமென்று இப்போதுதான் கேட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி அதிகாரிகளுடன் கலந்து பேசி, உடனடியாக அதிக கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத்

2023 ஏப்ரல் 18]

தொட்டிகளைக் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், மதுரவாயல் சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள வளசரவாக்கத்தில், இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு, பல பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதையும், 2023 ஆம் ஆண்டு 6–வது மாதத்தில் இந்தப் பணிகளெல்லாம் முடிவுற்று, அனைத்தும் மக்கள் பயன்பாட்டிற்கு வரவிருக்கின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கின்றேன். தற்போது, அங்குள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின் கொள்ளளவை அதிகப்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கணபதி அவர்கள்.

திரு. க. கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்ற பதில் நிறைவானது. ஆகவே, அதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள்.

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சி, ஊராட்சிப் பகுதிகளில் இருக்கக்கூடிய பழுதான group house–களை சரிசெய்வதற்காக அதிகபட்சமாக 50 ஆயிரம் ரூபாய் வரை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி வழங்கப்படுகிறது. புதிதாகத் தேவைப்படுகின்றவர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து group houses கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 10, 15 ஆண்டு

காலம் அமைச்சராக இருந்தவர்கள். எனக்குத் தெரிந்தவரையில், ஊராட்சிப் பகுதிகளில் வீடுகள் கட்டுவது என்பது ஒன்றிய அரசின் திட்டத்தின்கீழ் நடைபெற்று வந்தது. பேரூராட்சிகளில் தனியாகவே வீடுகள் கட்டக்கூடிய திட்டம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பயனாளர்களின் பட்டியலைத் தந்தால், அவர்கள் தகுதியானவர்களாக இருந்தால்—ஒவ்வொரு பேரூராட்சியிலும் அரசாங்கமே ரூ.2 இலட்சத்து 30 ஆயிரம் என்று கருதுகிறேன்; மானியமாகத் தரவிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேரூராட்சிப் பகுதிகளில் புதிய வீடுகள் கட்ட வேண்டுமென்று சொன்னால், அதைக் கட்டித் தருவதற்கு நடவடிக்கை எடுக்கிறோம். அதே நேரத்தில், ஏற்கெனவே கட்டித் தரப்பட்ட வீடுகள் பழுதடைந்திருப்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதுகுறித்து கலந்து பேசி, அவற்றையும் repair செய்து தருவதற்கான முயற்சிகளை எடுக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

முற்பகல் 10–05

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், கும்பகோணம் மாநகராட்சியில் சமீப காலமாக குடிநீர்த் தட்டுப்பாடு அதிக அளவில் ஏற்படுகின்றது. இந்த நேரத்தில், மக்கள்தொகையும் அதிகரித்து, தெருக்களும் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. தாராசுரம் பேரூராட்சியை மாநகராட்சியுடன் எடுத்ததற்குப் பிறகு, இன்னும் 1½ ஆண்டுகளில் கும்பகோணம் மாநகராட்சியைச் சுற்றியிருக்கிற 13 ஊராட்சிகளையும் இதிலே சேர்க்க இருக்கிற இந்தச் சூழ்நிலையில், நிரந்தரமாக குடிதண்ணீர்த் தட்டுப்பாடு இல்லாமல் செய்வதற்காக கொள்ளிடம் ஆற்றில் new connected wells என்று சொல்லக்கூடிய புதிய இணைப்புக் கிணறுகள் இரண்டோ அல்லது மூன்றோ அமைத்துக் கொடுத்தால் விரைவாக குடிநீர் பிரச்சினை தீரும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொண்டு, மாண்பிற்கினிய அமைச்சர் அவர்கள் போர்க்கால அடிப்படையில் கும்பகோணத்தினுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2023 ஏப்ரல் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதைப்பற்றி அங்கு இருக்கிற சட்டமன்ற உறுப்பினரும், அதைப்போல அங்கு இருக்கிற உள்ளாட்சிப் பிரதிநிதிகளும் எங்களுக்கு மனு தந்திருக்கிறார்கள். அது புதிதாகத் தரம் உயர்த்தப்பட்ட மாநகராட்சி என்ற காரணத்தினால், அதற்கென்று தனி பாதாளச் சாக்கடை திட்டம் மற்றும் குடிநீர் வழங்குகிற திட்டத்திற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, புதிதாக மாநகராட்சியோடு இணைக்கப்பட்ட 13 ஊராட்சிகளும் சரி, தாராசுரம் பேரூராட்சியில் இருக்கிற பகுதிகளிலும் சரி, குடிநீர் விநியோகத்திற்காக திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு நிதி ஆதாரம் தேடப்பட்டு விரைவிலே அந்தப் பணி தொடங்குவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்கின்ற பூண்டி, புழல், செம்பரம்பாக்கம், போரூர் போன்ற ஏரிகளை ஒட்டி வாழ்கின்ற பொதுமக்கள், அவர்கள் பயன்படுத்துகின்ற குப்பைகளை, கழிவுகளை அந்த ஏரிகளில் போடுகிறார்கள். சிலர் வாகனங்களைக் கழுவுகின்ற பணிகளையும் செய்கிறார்கள். இதனால், சுகாதாரக் கேடு ஏற்படுகிறது. நாம் குடிக்கின்ற உயிர் நீரான குடிநீரை இதுபோன்று விழிப்புணர்வு இல்லாமல் கேடு விளைவிக்கின்ற மக்களிடத்திலிருந்து அதைப் பாதுகாத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போர்க்கால அடிப்படையில் இந்த ஏரிகளைச் சுற்றி பாதுகாப்புச் சுவர் அமைத்தும், ஏரிகளுக்கு காவலர்களை நியமனம் செய்தும் பாதுகாக்கப்பட்ட குடிநீராக சென்னை மாநகர மக்களுக்கு வழங்குவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு சென்னை மாநகருடைய குடிநீர் அளவினை கடந்த ஆண்டைவிட 200 MLD கூடுதலாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். தற்போது, சென்னைக்குக் குடிநீர் அளவு என்பது 1,200 MLD ஆக இருக்கிறது. குடிநீர் வழங்குகிற ஏரிகள் அனைத்தும் நீர்வளத் துறையினுடைய நிர்வாகத்தில் வருகிறது. ஏற்கெனவே இந்த மாதிரி கழிவுநீரை அங்கு கொண்டுபோய் கொட்டுவதையும், குப்பைகளைக் கொட்டுவதையும் தடுத்து, அவர்களுக்கு அபராதம் விதித்து, அந்தக் கழிவினைக் கொண்டுவரும் லாரிகளைப் பறிமுதல் செய்கின்ற பணியையும் செய்துகொண்டிருக்கிறோம். கழிவுநீர் லாரிகளுக்கு உரிய அடையாள அட்டை தந்து, அதற்கு GPS கருவி பொருத்தி, அது எங்கு செல்ல வேண்டுமென்று அனுமதி வாங்கித்தான் செல்ல வேண்டும் என்று புதிய சட்டம் போடப்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்திற்கு, ஏற்கெனவே அரசு சார்பாக, நம்முடைய துறையின் சார்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மேலும், ஏதாவது குறிப்பிட்டுச் சொல்வீர்கள் என்றால் உடனடியாக அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. சிவகாமசுந்தரி அவர்கள்.

திருமதி க. சிவகாமசுந்தரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கரூர் மாநகராட்சி, காந்தி கிராமம் வார்டு பகுதியில் 12 நாட்களுக்கு ஒருமுறை மட்டுமே குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இப்பகுதி மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும்வகையில் 2021–2022 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 63 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படுமென அறிவிக்கப்பட்டதற்கு தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, விரைவாக இத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

2023 ஏப்ரல் 18]

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான நிதி எல்லாம் ஒதுக்கப்பட்டு விட்டது. இப்போது* tender process *நடந்து கொண்டிருக்கிறது. விரைவிலே, அந்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட பிறகு, பணி தொடங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. தங்கமணி அவர்கள்.*

திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சட்டமன்றத்தினுடைய மானியக் கோரிக்கையின் பதிலுரையிலே, நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் வரையறுக்கப்படும் என்று சொல்லியிருக்கின்றார்கள். அந்த வகையிலே, அருகாமையில் இருக்கின்ற ஊராட்சிகளை இணைக்க வேண்டுமென்று நகராட்சி அதிகாரிகளும், பேரூராட்சி அதிகாரிகளும் தீர்மானம் போட்டுக் கொடுங்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், அந்த ஊராட்சியிலே இருக்கின்ற மக்களும், தலைவர்களும் ஊராட்சியாகவே இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். அரசினுடைய கொள்கை முடிவு என்ன? அப்படிச் சொல்பவர்களை விட்டுவிடுவீர்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவரின் வாயிலாக, மாண்புமிகு அமைச்சரிடத்தில் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–10

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்களுக்குச் சொல்கிறேன், ஒரு நகராட்சியை விரிவுபடுத்துகின்றபோது, அருகில் இருக்கிற ஊராட்சியை இணைத்துத்தான் ஆக வேண்டும். அந்த மக்கள் ஏன் அதை விரும்பவில்லை என்று சொன்னால், அங்கே 100 நாள் வேலைத் திட்டம் இருக்கிறது. ஊராட்சி என்றால் 100 நாள் வேலைத் திட்டம் வருகிறது. ஊராட்சியாக இருந்து பேரூராட்சியாக மாறினால் 100 நாள் வேலைத் திட்டம் இருக்காது என்ற காரணத்தால் அதை மறுக்கிறார்கள். ஆனால், அந்தப் பகுதியை இணைத்தால்தான் விரிவடைவதற்கும், முன்னேறுவதற்கும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஓர் ஊராட்சியில் எடுக்கிற நடவடிக்கைகளைவிட, பேரூராட்சியிலே*

அல்லது நகராட்சியிலே—அது சாலைகளாக இருந்தாலும், கழிவுநீர் ஓடைகளாக இருந்தாலும், மழைநீர் வடிகாலாக இருந்தாலும், light போடுவதாக இருந்தாலும், கழிவறை கட்டுவதாக இருந்தாலும், சிறப்பாக நிதி ஒதுக்க முடியும். ஊராட்சியாக இருந்தால், அதற்கு நிதி கொஞ்சம் குறைவாக இருக்கும். அதோடு மட்டுமல்ல, நகராட்சியை விரிவுபடுத்துகிறபோது, புதிய கட்டடங்கள் மற்றும் அரசு நிர்வாகத்திற்கு வேண்டிய இடங்கள் வேண்டுமென்றால், நகரப் பகுதியில் கிடைப்பது சிறிது சிரமமாக இருக்கிறது. ஊரகப் பகுதியென்றால், அங்கிருக்கும் பகுதியில் அரசு திட்டத்தினை நிறைவேற்றுவதற்கு வசதியாக இருக்கும். அந்த ஒரு காரணத்திற்காகத்தான் இணைக்க வேண்டுமென்று விரும்புகிறோம்.

இப்போது உறுதியாகச் சொல்ல வேண்டுமென்றால், சென்னை மாநகராட்சியில் இல்லாமல், அருகில் இருக்கின்ற செம்மஞ்சேரி அருகிலுள்ள பகுதிகளை எடுத்துக்கொண்டால், கிட்டத்தட்ட 25,000, 30,000 மக்கள் வசிக்கிறார்கள்; 10,000 வீடுகள் இருக்கின்றன. ஆனால், அப்பகுதிகள் ஊராட்சியாக இருப்பதால் திட்ட மதிப்பீடு செய்வதற்கும், சாலை போடுவதற்கும் அல்லது அதற்குத் தேவையான முன்னேற்றப் பணிகளுக்கும் சரியான ஆட்கள் இல்லை. அதனால்தான் அதையெல்லாம் இணைக்க வேண்டுமென்று இருக்கிறோம். அதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொல்கிறபோது, பேரூராட்சிகளிலும் 100 நாள் வேலைத் திட்டத்தைத் தரலாம் என்று கூறி, கடந்த ஆண்டில் 100 கோடி ரூபாயும், இந்த ஆண்டில் 200 கோடி ரூபாயும் அதற்காக நிதியொதுக்கித் தந்திருக்கிறார்கள். அதுமாதிரி இணைக்கப்பட்ட பகுதிகளில், உடனடியாக 100 நாள் வேலைத் திட்டத்தை நிறுத்தாமல் தருவதற்குரிய முயற்சிகளை எடுக்கலாம். அதனால், அந்த மக்களும் பயனடைவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. ராஜா அவர்கள்.

திரு. ஈ. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரன்கோவில் நகரத்திற்குட்பட்ட புதிய கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கான சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது. விரைவில் அந்தத் திட்டம் தொடங்கவிருக்கிறது. அதற்காக சங்கரன்கோவில் தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 18]

தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் தொகுதிக்குட்பட்ட சங்கரன்கோவில் ஒன்றியம், குருவிகுளம் ஒன்றியம், மேலநீலிதநல்லூர் ஒன்றியம் மற்றும் மானூர் ஒன்றியத்தில் உள்ள கிராமப்புற மக்களுக்கு தண்ணீர் தட்டுப்பாடு அதிகமாக இருக்கின்றது. தலைவர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்ட தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்டம் மட்டும்தான் செயல்பாட்டில் இருக்கிறது. கடந்த 15 ஆண்டு காலமாக எந்தக் குடிநீர்த் திட்டமும் கொண்டுவராததால், மக்கள்தொகை பெருக்கத்தால் மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள்.

அதைவிட இன்னும் ஒரு முக்கியமான விஷயம் என்னவென்றால், நிலத்தடி நீர் 100 சதவிகிதம் அங்கேயில்லை என்று அரசாணை எண் 155, Public Works Department*-லிருந்து கொடுத்திருப்பதனால், புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரைவில் கொண்டுவரும்பட்சத்தில்தான் அந்த மக்களின் தாகத்தைத் தீர்க்க முடியும். அதைச் செய்வார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரன்கோவில் தொகுதியில் திட்டம் முடிக்கப்பட்டு, இப்போது தண்ணீர்* trial run*-ல் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், தென்காசி மற்றும் ஆலங்குளம் தொகுதிகளில் உள்ள எல்லா இடங்களிலும் இதுபோன்ற தண்ணீர் தட்டுப்பாடு இருக்கிறது என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இப்போது கடையநல்லூர் பகுதியிலும் அப்படி சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதிகாரிகளிடம் ஆய்வு நடத்தச் சொல்லியிருக்கிறோம். எந்த இடத்திலிருந்து தண்ணீர் எடுத்தால் வற்றாமல் வரும் என்பதை ஆய்வு செய்து, அனைத்துப் பகுதிகளையும் இணைத்து, ஒரு புதிய திட்டம் உருவாக்குவதற்குரிய முயற்சியை எடுத்திருக்கிறோம். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை இந்தத் துறை கருத்தில்கொள்ளும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜோசப் சாமுவேல் அவர்கள்.*

திரு. ஜோசப் சாமுவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வார்டு எண் 85, 86-ல் அமைந்துள்ள அன்னை சத்யா நகர், MKB Nagar பகுதிகளில் விடுபட்ட தெருக்களுக்கும், சிவானந்தா நகர் முதல் குளக்கரை கழிவுநீரகற்று நிலையம் வரை மற்றும் வார்டு எண் 84-ல் அமைந்துள்ள படவட்டம்மன் நகர், Tiny Sector—Sidco Insdustrial Estate பகுதிகளில் விடுபட்ட பாதாளச் சாக்கடை கட்டமைப்பு ஏற்படுத்தும் பணிகளுக்கு சுமார் 21 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணி ஆணை வழங்கிய தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாக மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், வார்டு எண் 83-ல் அமைந்துள்ள மாதனாங்குப்பம் பகுதியில் கழிவுநீர் கட்டமைப்பு வசதி இல்லாத சுமார் 150 தெருக்களுக்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் துணைக் கேள்வியை 4 paper வைத்து வாசித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

திரு. ஜோசப் சாமுவேல்: இப்போதுதான் கேள்விக்கு வருகிறேன். வார்டு எண் 83-ல் அமைந்துள்ள மாதனாங்குப்பம் பகுதியில் கழிவுநீர் கட்டமைப்பு வசதி இல்லாத சுமார் 150 தெருக்களுக்கும் மற்றும் வார்டு எண்கள் 79, 80, 81 ஆகிய பகுதிகளில் உள்ள சுமார் 147 தெருக்களுக்கும் DPR-விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தப் பணிகள் இந்த நிதியாண்டில் துவங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையைச் சுற்றியுள்ள விரிவாக்கப்பட்ட பகுதிகளில் திட்டங்கள் ஏற்கெனவே நடைபெற்று முடிந்துள்ளன. இது தவிர, புதிதாக ஆங்காங்கே பாதாள சாக்கடைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குரிய திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆவடி பகுதியில்

2023 ஏப்ரல் 18]

மாண்புமிகு அமைச்சர் திரு. நாசர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். அம்பத்தூர் பகுதியிலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எங்கள் பகுதியிலிருந்துதான் நீங்கள் குடிநீரே எடுக்கிறீர்கள், எங்களுக்கு குடிநீர் தேவை என்றுகூட சொல்லியிருக்கிறார்கள். எனவே, இப்போது செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து நாளொன்றுக்கு 280 MLD *தண்ணீர் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.* National Highways *இருக்கின்ற பகுதியில் அடியில்* trench *மூலமாக குழாய்கள் இணைக்கிற பணிகள் முடிய இன்னும் ஆறு மாத காலமாகும். ஏனென்றால்,* tender *விடப்பட்டும், யாரும் வரவில்லை. எனவே, அந்தக் குடிநீர் இணைப்பு கொடுத்துவிட்டால், நாளொன்றுக்கு செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து 580* MLD *தண்ணீர் கொடுத்துவிடலாம். அந்தளவுக்கு வசதியிருக்கிறது. சென்னை மாவட்டத்தினுடைய ஒட்டுமொத்தத் தேவை 1,100* MLD *என்று சொன்னால், செம்பரம்பாக்கத்தில் மட்டுமே 580* MLD *கூட எடுக்கக்கூடிய வசதியிருக்கிறது. அதையும் அந்தப் பகுதிகளுக்கு விரிவாக்கம் செய்யலாம். அதோடு, பாதாளச் சாக்கடைத் திட்டத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே, ரூ.21 கோடி நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. மீண்டும், தேவையான இடங்களில் வழங்குவதற்குரிய நிதி ஆதாரங்களைத் திரட்டுவதில் தற்போது கொஞ்சம் சிரமம் இருக்கிறது. ஏற்கெனவே,* Jal Jeevan *திட்டத்திலே கிட்டத்தட்ட ரூ.16,000 கோடி அளவிலே பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகளும், குடிநீர்ப் பணிகளும் நடைபெற்றிருக்கின்றன. எனவே, நிதியாதாரத்தைப் பெருக்கி உங்களுக்குத் தேவையானதை வழங்குவதற்கு முயற்சிகள் எடுக்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன் அவர்கள்.*

திரு. ஆ. அருண்மொழிதேவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி. கடலூர் மாவட்டத்தில் கங்கைகொண்டான், பெண்ணாடம், மங்களம்பேட்டை, குறிஞ்சிப்பாடி ஆகிய பேரூராட்சிகளுக்கும், திட்டக்குடி, விருத்தாச்சலம், வடலூர் ஆகிய நகராட்சிகளுக்கும், மங்களூர், நல்லூர் ஆகிய ஒன்றியங்களிலுள்ள 625 ஊரகக் குடியிருப்புகளுக்கும், நெய்வேலி சுரங்க நீரை ஆதாரமாகக் கொண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டம் 21-4-2020 அன்று மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களால் ரூ.479 கோடி மதிப்பீட்டில் துவங்க உத்தரவிடப்பட்டு, பணிகள் நிறைவு*

பெற்றுள்ளதாக அறிகின்றேன். அதை மக்கள் பயன்பாட்டிற்கு விரைந்து திறப்பதற்கு ஆவன செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் பக்கத்திலிருக்கிற உறுப்பினரைக் கேட்டால் அது எவ்வளவு சிரமம் என்பது தெரியும். உறுப்பினர் இசக்கி சுப்பையா அவர்களைக் கேளுங்கள். அவர்தான் நிறைய பணிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே, 2018-ல் ஆரம்பித்த பணிகளை விரைந்து முடித்து, அந்தப் பகுதிகளுக்கெல்லாம் குடிநீரைத் தருவதற்கான நடவடிக்கையை நாங்கள் நிச்சயமாக எடுப்போம். மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல, விரைவாக அதை மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வருவோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 172, மாண்புமிகு உறுப்பினர் திரு. R.D. சேகர், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

172—

பொறியியல் கல்லூரி

***5308—திரு. R.D. சேகர்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பூர் தொகுதியில் பொறியியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பெரம்பூர் தொகுதி அமைந்துள்ள சென்னை மாவட்டத்தில், 3 அண்ணா பல்கலைக்கழக கல்லூரிகளும், 7 சுயநிதி

2023 ஏப்ரல் 18]

பொறியியல் கல்லூரிகளும், 9 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும், 2 அரசு உதவி பெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும், 2 அரசு இணைவு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும், 7 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும், 10 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 22 அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 46 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அம்மாவட்ட மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், சென்னை மாவட்டம், பெரம்பூர் தொகுதியில் புதிதாக ஒரு பொறியியல் கல்லூரி துவங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. R.D. சேகர் அவர்கள்.*

திரு. R.D. சேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பெரம்பூர் தொகுதி ஏழை, எளிய தொழிலாளர்கள் மற்றும் அடித்தட்டு மக்கள் வசிக்கின்ற ஒரு பகுதி. அவர்களின் பிள்ளைகள் தனியார் கல்லூரிகளில் சேர்ந்து படிக்கிற வாய்ப்பு மிகவும் குறைவு. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் அண்ணா பல்கலைக்கழகம் அமைந்திருக்கிறது. சென்னை மாநகராட்சியைச் சேர்ந்த இடம்தான் *பெரம்பூர். *பெரம்பூரிலேயே ஏழைகள் இருக்கிறார்கள். கல்லூரிகளில் இடம் கிடைக்கவில்லை என்று சொன்னால், தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளிலே இதனைவிட பிரச்சினைகளெல்லாம் இருக்கத்தான் செய்கின்றன. ஆக, தற்போது *பெரம்பூரைப் பொறுத்தவரையில், பொறியியல் கல்லூரிகள் என்று சொன்னாலே பெரும்பாலும் இந்தத் தொகுதியில் மட்டும் 1,210 பேர் சேருவதற்கு வாய்ப்பிருந்தது. 2020–2021–ல் 1,370 இடங்கள் காலியாக இருந்தன. அதேமாதிரி,*

* *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.*

2021–2022 இல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்தவுடன் அந்தக் காலியிடங்கள் 797 ஆகக் குறைந்தன. இந்த வருடம் 2022–2023 இல், 524 ஆகக் குறைந்திருக்கிறது. இதற்குக் காரணம் தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள "நான் முதல்வன்" திட்டம், Skill Development Scheme. *அதுவும் குறிப்பாக, அதற்காக தமிழக முதலமைச்சர் அவர்களுடைய முதன்மைச் செயலாளர் திரு. உதயசந்திரன் அவர்கள் பல்வேறு திட்டப் பணிகளுக்காக ஆங்காங்கு சென்று, இந்த வளர்ச்சிகளையெல்லாம் செய்து வருகிற காரணத்தினால், இந்த எண்ணிக்கை குறைந்திருக்கிறது. இந்த ஆண்டு, இன்னும் குறையுமென்று நினைக்கிறோம். தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிற 7.5 சதவிகித இட ஒதுக்கீடு மற்றும் "புதுமைப் பெண்" திட்டத்தின் மூலமாக இது இன்னும் குறையுமென்று நாங்கள் கருதுகிறோம். குறிப்பாக, இந்தப் பொறியியல் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், பல்வேறு காலியிடங்களை நிரப்புவதற்கான ஏற்பாடுகளையெல்லாம் செய்திருக்கிறோம். ஏனென்றால், மாணவர்கள் இன்றைக்கு வேலைவாய்ப்பு இருந்தால்தான் அதில் போய் சேருகிறார்கள். தற்போது அந்த வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்காகத்தான், அவர்கள் படிக்கிறபோதே தொழிற்சாலைகளோடு தொடர்புகொண்டு பயிற்சியையும் மேற்கொள்ள வைக்கிறோம். இதுகுறித்து முன்பே சொல்லியிருக்கிறேன். அதைத்தான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முதன்மையாகச் செய்து கொண்டிருக்கிறார்கள்.*

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, பெரம்பூர் என்று சொல்வதற்குப் பதிலாக ** என்று சொல்லிவிட்டதாக நினைக்கிறேன். அவ்வாறு ** என்று சொல்லியிருந்தால், அதை பெரம்பூர் என்று மாற்றிக்கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு.* R.D. *சேகர் அவர்கள்.*

திரு. R.D. சேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஏற்கெனவே பேராசிரியராகப் பணியாற்றி, நீண்ட அனுபவம் உள்ளவர். அவர்களது விளக்கத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதே நேரத்தில், என்னுடைய தொகுதி*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2023 ஏப்ரல் 18]

மிக மிக சாமானியர்கள் மற்றும் ஏழையெளிய மக்கள் வசிக்கின்ற தொகுதி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கக்கூடிய கல்லூரிகளுக்கு பயணம் செய்வதற்குக்கூட இயலாத நிலையிலுள்ள மக்கள் அங்கு வசிக்கிறார்கள். என் தொகுதிக்கு அருகிலேயே ICF இரயில் பெட்டி தொழிற்சாலை இருக்கிறது. அதில் பணிபுரிகிற வாய்ப்பை ஏற்படுத்துகிற வகையில், குறைந்தபட்சம் ஒரு Polytechnic கல்லூரியையாவது அமைத்துத் தருவார்களா என்பதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே விளக்கமாகப் பதில் சொல்லிவிட்டேன். பெரம்பூர் தொகுதியைப் பொறுத்தவரையில், கல்லூரி மாணவர்கள் பயில்வதற்கான எல்லா வசதிகளும் அங்கேயே இருக்கின்றன. சுற்றி சுற்றி கல்லூரிகள் இருக்கிற இடம் சென்னைதான். எனவே, இந்த மாநகராட்சியில் தற்போது புதிய கல்லூரிகள் துவக்குவதற்கான வாய்ப்புகள் எதுவும் இல்லை. எந்தத் தொகுதியில் கல்லூரிகள் இல்லையோ, அங்கே கல்லூரிகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கான முயற்சிகளை விரைவில் மேற்கொள்வோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் ஒரு புதிய தொழில்நுட்பப் பாடப் பிரிவு தொடங்க இருப்பதாகவும், அதற்காக ஒரு புதிய தனியார் நிறுவனத்துடன் ஒப்பந்தம் போடப்பட்டு, அதற்குக் கூடுதல் கட்டணம் வசூலிப்பதாகவும், அதேநேரத்தில் அண்ணா பல்கலைக்கழகத்தில் அதற்கு இணையான பாடப் பிரிவுகளுக்கு ரூ.10,000/–, ரூ.13,000/– அளவில் வசூலிக்கின்ற நிலையில், இதற்கு மட்டும் 1½ இலட்சம் ரூபாய் வசூலிக்க இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. அதேநேரத்தில், இந்தப் பாடப் பிரிவில் சேர்வதனால் எதிர்காலத்தில் வேலைவாய்ப்பே கிடைக்காது*

LEGISLATIVE ASSEMBLY ... TRUTH ALONE TRIUMPHS

என்றும் சொல்லப்படுகிறது. அந்தப் பல்கலைக்கழகம், மாநில அரசின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்ற பல்கலைக்கழகம். ஆகவே, தனியார் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டது, புதிய பாடப் பிரிவு துவங்க இருப்பது குறித்த தகவல் அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா, அதை அரசு அனுமதிக்குமா என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பி.டெக்., எம்.டெக். போன்ற பொறியியல் படிப்புகளையெல்லாம் தொடங்குவதற்கு அனுமதியளிக்கிற உரிமை அண்ணா பல்கலைக்கழகத்திற்குத்தான் இருக்கிறது. மற்ற பல்கலைக்கழகங்களுக்கு அந்த உரிமை இல்லை. திருநெல்வேலியில் இருந்த அந்தப் பல்கலைக்கழகம் முதலில் எம்.டெக். நடத்திக்கொண்டிருந்தது. அதையும் தற்போது நிறுத்தியாயிற்று. சேலம் பல்கலைக்கழகத்திலும் எம்.டெக். நடைபெற்றது. அதையும் தற்போது நிறுத்தியாயிற்று. இந்த ஆண்டு பி.டெக். நடத்துவதற்கு ஒரு தனியார் கல்லூரிக்கு இதுபோன்று அனுமதி கொடுத்தது குறித்து அரசின் கவனத்திற்கு வரவில்லை. அரசிற்குத் தெரியாமல் அனுமதி கொடுத்திருப்பதாக நாங்கள் கேள்விப்பட்ட பிறகு, துணை வேந்தர் அவர்களிடமும், செயலாளர் அவர்களிடமும் காலையிலேயே பேசி, அதைத் தடை செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். அதிலும் குறிப்பாக, அவர்களிடம் கேட்டால் All India Council for Technical Education (AICTE) permission கொடுத்துவிட்டதாகச் சொல்கிறார்கள். நான் AICTE-யிடம் கேட்டுக்கொள்வது என்னவென்றால், மாநில அரசிடம் அனுமதி கேட்டு, மாநிலங்களில் உள்ள இதுபோன்ற கல்லூரிகளுக்கு அனுமதி வழங்க வேண்டும். அப்படி அவர்கள் வழங்கியிருந்தாலும், கண்டிப்பாக சேலம் பல்கலைக்கழகத்தின் மூலமாக அது நடைபெறாது. அதற்கான அனுமதி கொடுத்திருந்தால், அதை நிச்சயமாக நிறுத்துமாறு துணை வேந்தரிடம் சொல்லிவிட்டேன். எனவே, அந்தப் பாடப் பிரிவு நடத்தப்படாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர் அவர்கள்.

2023 ஏப்ரல் 18]

திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம் சுமார் 10 சட்டமன்றத் தொகுதிகளை உள்ளடக்கிய பின்தங்கிய மாவட்டம். 10 சட்டமன்றத் தொகுதிகளிலும் மக்கள் எங்களை வெற்றிபெறச் செய்திருக்கிறார்கள். அந்த மாவட்டத்தில் அரசு சார்பில் ஒரு பொறியியல் கல்லூரி அமைத்துத் தர அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெளிவாகப் பதில் சொல்லியிருக்கிறேன். பெரும்பாலான சட்டமன்ற உறுப்பினர்கள் இந்தக் கேள்வியைத்தான் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நியாயமானதுதான். அந்தந்தத் தொகுதிகளில் அவர்களுக்கு இந்தக் கல்லூரிகள் துவங்கப்படுவதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று நினைப்பதிலே எந்தத் தவறும் இல்லை. ஆனால், அதேநேரத்தில் மாணவர்கள் சேர்க்கையின் எண்ணிக்கையையும், கல்லூரிகள் துவங்குவதற்கான செலவுகளையும் நாம் எண்ணிப் பார்த்திட வேண்டும். குறிப்பாக, ஒரு பொறியியல் கல்லூரி துவக்க வேண்டுமென்றால், சுமார் 100 கோடி ரூபாய்க்கும்மேல் அதற்கு செலவாகிறது. தற்போதைய நிதி நெருக்கடியான காலத்தில், அதுவும் மாணவர்கள் சேர்க்கையில்லாத இந்தச் சூழ்நிலையில் இதுபோன்று பொறியியல் கல்லூரிகளையெல்லாம் ஒவ்வொரு தொகுதியிலும் துவக்குவது என்பது கடினமான ஒன்று. நான் முன்பே சொல்லியிருப்பதைப்போல வருங்காலங்களிலே தேவை ஏற்படின், இந்த ஆண்டு மாணவர் சேர்க்கை அதிகரிக்குமாயின் அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு அரசு பரிசீலிக்கும்.*

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 173, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

பாலம்

***6888—திரு. அ. நல்லதம்பி:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கெங்கவல்லி தொகுதி, தெடாவூர் பேரூராட்சியில் சுவேத நதியின் குறுக்கே பாலம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தெடாவூர் தெற்கு மணல்காடு சாலையில் சுவேத நதியின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்ட விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும் என்று அன்றைய அரசால் அறிவிக்கப்பட்டு, 2019–ல் 12.58 இலட்சம் ரூபாய்க்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டது. இந்தப் பாலம் பேரூராட்சிக்குச் சொந்தமான இடமாக இருக்கிற காரணத்தினால் இந்தப் பாலத்தை நெடுஞ்சாலைத் துறை மூலமாகக் கட்ட இயலாது. இது பேரூராட்சி மூலமாகத்தான் கட்டப்படும். எனவே, பேரூராட்சியின் மூலமாகக் கட்டுவதற்கு அந்தத் துறையின் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டால் அதற்குரிய பதிலை அவர் தருவார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி அவர்கள்.

திரு. அ. நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2022 ஆம் ஆண்டு சட்டமன்றக் கூட்டத் தொடரில் கேட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியை உள்வாங்கிக்கொள்ளுங்கள். எங்கள் துறை இல்லை என்று சொல்லிவிட்டார்கள். நீங்கள் கேளுங்கள். நமது மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்தான் அதற்குப் பதில் சொல்ல வேண்டும். கேளுங்கள்.

திரு. அ. நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட

2023 ஏப்ரல் 18]

தெடாவூர் பேரூராட்சியில் சுவேத நதியின் குறுக்கே ஓர் உயர்மட்ட மேம்பாலம் கட்ட 2019 ஆம் ஆண்டு களப்பணி ஆய்வு செய்து அது நடைமுறையில் உள்ளதால்தான், சென்ற வருடம் 2022 ஆம் ஆண்டு நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அது பேரூராட்சி என்று சொன்னபோது, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்கச் சொன்னார்கள். அந்த தெடாவூர் பேரூராட்சியினுடைய பொதுமக்களின் கருத்தை மனதில்கொண்டு, அந்தப் பாலத்தைக் கட்டித்தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அண்ணன் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், அந்த சுவேத நதியின் ஆற்றைக் கடந்தால்தான் மக்கள் அந்தப் பக்கம் விவசாயத்திற்குச் சென்று வேலை பார்க்க முடியும் என்பதால், இதைச் செய்து தருவாரா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே விளக்கமாகச் சொல்லிவிட்டேன். கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டு சொல்லக் கூடாது என்பதற்காகத்தான் நான் நாகரிகமாகச் சொன்னேன். ஏற்கெனவே, அதற்காகப் பணம் ஒதுக்கப்பட்டு 12.58 இலட்சம் ரூபாயிலே நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது. இல்லை என்று மறுக்கவில்லை. ஆனால், அது நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமாக இல்லாத இடம்; அது பேரூராட்சிக்குச் சொந்தமான இடம். அதனால், மீண்டும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்கிற காரணத்தால் நான் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறையின் அமைச்சர் அவர்களுக்குப் பரிந்துரை செய்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. சித்ரா அவர்கள். (குறுக்கீடு) கேள்விதான், நீங்கள் துறை மாறி கேட்டிருக்கிறீர்கள். அதற்குப் பிறகு, என்ன கேள்வி கேட்க முடியும்? கேளுங்கள். துறை மாறி கேள்வி வந்ததினால் அதற்கு என்னவென்று பதில் சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: *நான் சொல்கிறேன். ஐயா, தெடாவூர் பேரூராட்சிதானே!*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுங்கள். இன்னொரு கேள்வி கேட்கிறார்கள். தயவுசெய்து அமைச்சர் அந்தக் கேள்வியையும் உள்வாங்கிக்கொண்டு சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *கேள்வி முதலில் கேட்கட்டும்.*

திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெடாவூர் பேரூராட்சி, தெடாவூர் சுவேத நதியின் குறுக்கே ஒரு உயர்மட்ட மேம்பாலம் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)*

திரு. அ. நல்லதம்பி: *ஐயா, ஒரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதி, தம்மம்பட்டி பேரூராட்சி, கோனேரிப்பட்டியிலிருந்து பாரதிபுரம் செல்லும் வழியில் சுவேத நதியின் குறுக்கே உயர்மட்டப் பாலம் ஒன்றை அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, கடந்த ஆட்சியிலே ரூபாய் 12.58 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள். நெடுஞ்சாலைத் துறையின் சார்பிலே 'முடியாது' என்று சொன்னார். மாண்புமிகு உறுப்பினர், நாங்கள் பேரூராட்சி சார்பிலே அதைச் செய்து தருகிறோம். உறுதியாக இந்த ஆண்டு எடுத்துக்கொள்கிறோம். வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.*

2023 ஏப்ரல் 18]

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோடு நகரத்தில் பேருந்து நிலையத்திற்கு அருகில் நாமக்கல் சாலையில் சேலம் சாலை வந்து இணைகிறது; கோழிக்கால்நத்தம் சாலை வந்து இணைகிறது; சங்கரி சாலை வந்து இணைகிறது. 5 சாலைகள் பேருந்து நிலையத்திற்கு அருகிலே நாமக்கல் சாலையில் இணைகின்றன. இதனால், மிகப் பெரிய போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. அந்த இடத்திலே ஒரு சிறிய பாலத்தைக் கட்டினால் போக்குவரத்து நெரிசலுக்குத் தீர்வு வரும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோடு பகுதியில் அதிகமான போக்குவரத்து நெரிசல் உள்ளது என்பதை அறிகிற காரணத்தினால்–– அரசாங்கத்தின் சார்பாக சில விதிகள் இருக்கின்றன. இதுபோன்ற நகரப் பகுதியிலே உயர்மட்டப் பாலம் கட்ட வேண்டும் என்று சொன்னால் ஒருமணி நேரத்திற்கு 10,000 PCU, அதாவது போக்குவரத்து செறிவு இருக்கிறதா என்று கணக்கெடுக்க வேண்டும். அப்படி நாங்கள் கணக்கெடுத்துப் பார்க்கிறோம். கணக்கெடுத்துப் பார்க்கும்போது, அது 10,000-க்குமேல் இருக்கும் என்று சொன்னால் சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கையை நிறைவேற்ற விரைவிலேயே, இந்த ஆண்டிலேயே, அதற்காக திட்ட மதிப்பீடு மற்றும் DPR தயார் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்படும்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. சித்ரா அவர்கள்.

திருமதி கு. சித்ரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகப் பொதுச் செயலாளர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி), ஏற்காடு தொகுதி, ஏற்காடு ஒன்றியம், மாரமங்கலம் ஊராட்சி செல்லும் பிரிவு சாலையில் ஆற்றின் குறுக்கே உள்ள தரைமட்டச் சாலையினை உயர்மட்டச் சாலையாக அமைத்திட அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்காடு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தரைமட்டப் பாலம் என்று குறிப்பிடுவதற்குப் பதிலாக தரைமட்டச் சாலை என்று குறிப்பிடுவதாக நான் கருதுகிறேன். தரைமட்டப் பாலத்தைப் பொறுத்தளவிற்கு, தமிழக அரசின் சார்பாக எங்கெங்கெல்லாம் தரைமட்டப் பாலங்கள் இருக்கின்றனவோ அவற்றையெல்லாம் உயர்மட்டப் பாலங்களாகக் கட்ட வேண்டுமென்று திட்ட மதிப்பீடுகள் எல்லாம் தயார் செய்யப்பட்டு, கடந்த இரண்டு ஆண்டுகளிலே ஏறத்தாழ 850-க்கும் மேற்பட்ட பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன. எஞ்சியிருக்கின்ற பாலங்கள் இந்த மூன்று ஆண்டு காலத்தில் கட்டப்படும். அவர் குறிப்பிடுகிற அந்தப் பாலப் பணியினை அடுத்த ஆண்டு அல்லது அதற்கடுத்த ஆண்டு எடுத்துக்கொள்வதற்கு அரசு முயற்சி செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் த. இனிகோ இருதயராஜ் அவர்கள்.

முனைவர் த. இனிகோ இருதயராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாநகராட்சிக்குட்பட்ட காவேரி பாலம் பகுதியிலிருந்து சிந்தாமணி, காந்தி மார்க்கெட், பாலக்கரை வழியாக தலைமை தபால் நிலையம், மத்திய பேருந்து நிலையம் வந்தடைய உயர்மட்ட பாலம் அமைக்க மேற்கொள்ளப்பட்ட பணிகளினுடைய தற்போதைய நிலை என்ன என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அண்ணன் மாண்புமிகு திரு. நேரு அவர்கள் ஏற்கெனவே என்னிடத்திலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலும் திருச்சியைப் பொறுத்தளவிற்கு மூன்று பாலங்கள் அமைக்க வேண்டுமென்ற அடிப்படையில் கோரிக்கைகளை எல்லாம் வைத்து, அரசின் சார்பாக ஏற்கெனவே அறிவிப்பு செய்யப்பட்டிருக்கிறது.

2023 ஏப்ரல் 18]

ஒன்று, காவிரி ஆற்றின் குறுக்கே புதிதாக ஒரு பாலம் கட்ட வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்தார்கள். அதனடிப்படையில், அதற்கு DPR *எல்லாம் தயார் செய்யப்பட்டு, இந்த ஆண்டே அந்தப் பாலம் கட்டுவதற்கு வேண்டிய திட்ட மதிப்பீடுகள் எல்லாம் தயார் செய்யப்பட்டு, நிதித் துறைக்கு அனுப்பப்பட்டு, இன்னும் ஒரு சில மாதங்களிலே அந்தப் பாலம் கட்டுகிற பணிகள் டெண்டர் மூலமாக எடுக்கப்படும். இது ஒன்று. இன்னொன்று, குடமுருட்டி, அதாவது கலைஞர் அவர்களின் பெயரில் இருக்கிற குடமுருட்டி என்கிற அந்தப் பகுதியிலிருந்து ஒரு பாலம் கட்ட வேண்டுமென்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு, அந்தப் பணிகளும் இப்போது நடைபெறுவதற்கு வேண்டிய திட்ட மதிப்பீடுகளெல்லாம் தயார் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இன்னொன்று, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் முனைவர் இனிகோ இருதயராஜ் அவர்கள் கேட்ட பாலம் என்பது நகரத்திலே இருக்கிற, முழுமையாக நகரப் பகுதியிலே செல்ல வேண்டிய ஓர் உயர்மட்டப் பாலம் ஆகும். அந்த உயர்மட்டப் பாலம் நகரப் பகுதிகளில் செல்கிறபோது-- திருச்சி என்பது தமிழ்நாட்டின் மையப் பகுதியில் இருக்கிற ஒரு மாநகராட்சியாகும்—பல இடங்களில் கட்டடங்களையெல்லாம் இடிக்கிற சூழ்நிலை எல்லாம் ஏற்படுகிறது. அப்படி பல கட்டடங்களை இடிக்கிறபோது, அரசின்மீது அதிருப்தி வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அஃதன்னியில், அதற்காக பல கோடி ரூபாய் பணம் கொடுத்தால்தான் நில எடுப்பு செய்ய முடியும். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில், மீண்டும் ஒருமுறை* DPR *தயார் செய்வதற்காக ஆய்வு செய்யச் சொல்லியிருக்கிறேன். அதில், ஏதாவது* design-*ஐ மாற்றி அமைக்க முடியுமா என்று நாங்கள் யோசித்துக்கொண்டிருக்கிறோம். அந்தப் பணியைப் பொறுத்தளவிற்கு, இன்றைக்கு ஆய்வு நிலையில் இருக்கிறதேயொழிய, அதற்கடுத்து முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை. எனவே, கூடுமானவரைக்கும் எப்படியாவது அதை மாற்றி அமைக்க முடியுமா என்று அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி அவர்கள்.*

திரு. ஆ. கோவிந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். எங்கள் மாவட்டத்தில் தருமபுரி–மொரப்பூர்–அரூர் சாலையைப் பொறுத்தவரையில், ஏறக்குறைய ரூ.300 கோடி மதிப்பீட்டில் சாலைப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.*

அங்கே ஒடசல்பட்டி கூட்ரோடு அருகே மலைப் பாதையில் ஏறக்குறைய 100 மீட்டர் தூரத்திற்கு மட்டும் மிகவும் வளைவான பாதையாகச் சென்று கொண்டிருக்கிறது. இதுவரை அங்கே 11 உயிரிழப்புகள் நடந்திருக்கின்றன. எனவே, அந்தச் சாலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து நேராக அமைத்துக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வாரா என்று தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒரு புதிய திட்டத்தை அறிவித்தார்கள். அதாவது, முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டம் என்கிற திட்டம். அது ஒரு மாவட்டத்தையும் இன்னொரு மாவட்டத்தையும் இணைக்கிற திட்டம். அதைத்தான் நான்கு வழிச்சாலை என்று அவர் குறிப்பிடுகிறார். அவர் தென்னம்பட்டி ஏரியிலிருந்து மூக்கனூர் பகுதியில் நேராக அந்தச் சாலையை அமைக்க வேண்டுமென்ற ஒரு கேள்வியைத்தான் எழுப்பியிருக்கிறார். அந்தப் பகுதியில் சாலையின் வலதுபுறத்திலே குடிநீர் வடிகால் வாரியத்தின் நீரேற்றும் குழாய்களும், இடதுபுறம் வரையறுக்கப்பட்டிருக்கிற வனப் பகுதியும் இருக்கின்றன. ஆனால், வனப் பகுதியிலிருந்து இடத்தை எடுக்க வேண்டுமென்று சொன்னால், இப்போது ஒன்றிய அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதி, அவர்களெல்லாம் அனுமதிப்பது என்பது சிறிது சிரமமாக இருக்கிறது; இது ஒரு பகுதி. மேலும், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலமாக நீரேற்றும் பகுதி இன்னொரு பகுதியில் இருக்கிறது. அதனால்தான், அரசின் சார்பாக ஏற்கெனவே 50 கிலோ மீட்டர் வேகத்தில் செல்கிற அளவிற்கு அந்த வளைவுப் பகுதியை IRC என்று சொல்லப்படுகிற, வரையறுக்கப்பட்டிருக்கிற அந்த அடிப்படையில் நேர் செய்யப்பட்டிருக்கிறது. அந்த இடத்தில் கொஞ்சம் அதிகமான வேகத்தில் சென்றால்கூட விபத்து ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. எனவே, அந்த அடிப்படையிலே இப்போது அமைத்து இருப்பதுதான் சரியாக இருக்கும், விபத்து ஏற்படாமல் இருக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 18]

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 174, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. அப்துல் சமது, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

174—

வட்டியில்லாக் கடன்

***483—திரு. ப. அப்துல் சமது:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிறு வணிகர்களுக்கு வாரத் தவணை முறையில் திருப்பிச் செலுத்தும் வகையில் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலமாக வட்டியில்லாக் கடன் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிறு தொழில் செய்பவர்களுக்கு வாரத் தவணை முறையில் திருப்பிச் செலுத்துகின்ற வகையில் வட்டியில்லாக் கடன் வழங்கப்படுமா என்று கேட்டிருக்கிறார். அவர் இரண்டு கோரிக்கைகளை வைத்திருக்கிறார். அதில் முதல் கோரிக்கையான, வாராவாரம் வசூல் செய்யும் அந்த முறை நடைமுறைப்படுத்தப்படும், நடைமுறையிலும் இருக்கிறது. இரண்டாவதாகக் கேட்டிருக்கும் கோரிக்கை, வட்டியில்லாக் கடன் வழங்கப்படுமா என்பதாகும். அதற்கு நிச்சயமாக வாய்ப்பு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. அப்துல் சமது அவர்கள்.*

திரு. ப. அப்துல் சமது: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தில் தரைக் கடை, தள்ளுவண்டி, தலையில் சுமை தூக்கி வியாபாரம் செய்யக்கூடிய அந்தச் சிறு வியாபாரிகள், இவர்களெல்லாம் கந்துவட்டிக்காரர்கள், தண்டல்காரர்களிடம் ஐந்தாயிரம், பத்தாயிரம் ரூபாயை கடன் வாங்கிவிட்டு, அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய சொற்ப*

இலாபத்தையும் அவர்களிடத்தில் கொடுத்துவிடக்கூடிய மோசமான ஓர் அவல நிலை இருக்கிறது. அதைத் தவிர்ப்பதற்காக நம்முடைய கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அரசு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வட்டியில்லாத வாரக்கடன் வழங்கினால், அது சாதாரண, சாமானிய, ஏழையெளிய வணிகர்களுடைய வாழ்விலே ஒளி ஏற்றுவதாக அமையும். எனவே, அதைப் பரிசீலனை செய்து, அவர்களுக்கு கடனை வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய சிறு வியாபாரிகளுடைய கஷ்டங்களை உணர்ந்துதான் ஐம்பதாயிரம் ரூபாய் வரையில் அவர்களுக்குக் கடன் வழங்கப்படுகிறது. அவர் ஏற்கெனவே குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, இப்போது நடைமுறையில் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி, நகரக் கூட்டுறவு வங்கி, நகரக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றில் வாராந்திர வசூல் முறைகள் எல்லாம் இருக்கின்றன. வட்டியில்லாமல் கடன் கொடுப்பது என்பது, கூட்டுறவுத் துறையின் மூலமாக அது சாத்தியப்படாது. காரணம் கூட்டுறவுத் துறை மக்களுடைய பங்களிப்பின் மூலமாகத்தான் இயங்கிக் கொண்டு இருக்கிறது. பொதுமக்களுடைய வைப்புத் தொகை மூலமாகப் பெறப்படுகின்ற அந்தத் தொகைகளுக்கு நாம் வட்டியைச் செலுத்தித்தான் சங்கங்களிலிருந்து, வங்கிகளிலிருந்து செலுத்த வேண்டி இருக்கிறது. ஆகவே, மக்களுடைய வைப்புத் தொகைக்கு வட்டியைச் செலுத்தி வாங்குகின்றபோது, கூட்டுறவுத் துறையினுடைய வங்கிகளிலோ அல்லது நாணயச் சங்கங்களிலோ வட்டியில்லாமல் கடன் கொடுப்பது என்பது ஏதுவாக இருக்காது. ஒருவேளை அப்படிச் செய்ய வேண்டுமென்றால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே அதற்கான கோரிக்கைகளை வைத்து, அவர்கள் அந்தச் சலுகைகளை ஏற்றுக்கொண்டு அறிவித்தார்களேயானால் அதைச் செயல்படுத்துகின்ற துறைதான் இந்தத் துறை. குறிப்பாக, விவசாயக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததைச் செய்திருக்கிறார்கள். நகைக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது, அதுவும்

2023 ஏப்ரல் 18]

அரசின் சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு செய்யப்பட்டிருக்கிறது. அதுபோல் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. இவை அனைத்தையும் செய்கின்ற துறை இந்தத் துறையே தவிர, கூட்டுறவுத் துறையின் மூலமாக வழங்கப்படுகின்ற கடன்களை வட்டியில்லாமல் வழங்குவதற்கு சுயமான முடிவுகள் எடுக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. அப்துல் சமது அவர்கள்.*

திரு. ப. அப்துல் சமது: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு முன்மாதிரிகளை இந்தியாவிலேயே உருவாக்கிய அரசு நம்முடைய திராவிட மாடல் அரசு (மேசையைத் தட்டும் ஒலி). இந்தக் கடன் வழங்கும் திட்டத்திலும் முன்மாதிரியை உருவாக்கி, இந்த ஏழை எளிய, சிறு வியாபாரிகளுக்கு வட்டி இல்லாமல் கடன் வழங்க வேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொண்டு, என்னுடைய மணப்பாறை தொகுதியில்* MM *348 கவுண்டம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தில் 2016-ல் வழங்கப்பட்ட சிறு, குறு விவசாயிகளுக்கான பயிர்க் கடனும், அதேபோன்று 2021-ல் வழங்கப்பட்ட பயிர்க் கடனும் அந்த நேரத்தில் தள்ளுபடி செய்யப்பட்டன. அந்தத் எதுவும் என்னுடைய கவுண்டம்பட்டி* society*-ல் செய்யப்படாமல், 1,156 பேருக்கு கடன் நிலுவையில் இருக்கும் காரணத்தினால் புதிய கடன் அவர்களுக்கு வழங்கப்படாமல் அவர்கள் மிகப் பெரிய பிரச்சினைகளுக்கு ஆளாகியிருக்கிறார்கள். அப்பகுதியில் விவசாயிகளுக்கு மீண்டும் கடன் கிடைக்காமல் விவசாயம் செய்வதற்குச் சிரமப்படுகிறார்கள். எனவே, கவுண்டம்பட்டி* society*-ல் விவசாயிகளின் கடனைத் தள்ளுபடி செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைந்து நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் முறையான வழிமுறைகளின்படி கடன்கள் வழங்கப்பட்டு அவை இந்த விவசாயக் கடன் தள்ளுபடி என்ற அறிவிப்பில். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எல்லோரும் அவரவர் இருக்கையில் சென்று அமருங்கள்.*

முற்பகல் 10–40

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *இடம்பெற்று இருக்குமேயானால், உரிய வழிமுறைகள் கடைப்பிடிக்கப் பட்டிருக்குமேயானால், அதுபற்றி விசாரித்து, உடனடியாகக் கடன்களைத் தள்ளுபடி செய்வதற்கான முயற்சிகள் நிச்சயமாக மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணிமங்கலம் படப்பை கூட்டுறவு வங்கியானது சொந்தக் கட்டடத்தில் இயங்கி வந்தது. 10 ஆண்டுகளுக்கு முன்பு வரை சொந்தக் கட்டடத்தில் இயங்கி வந்த அந்த வங்கியானது, நகர்ப் பகுதியான படப்பையில் வாடகைக் கட்டடத்திற்கு மாற்றப்பட்டு, இயங்கி வருகிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இதுகுறித்து நான் பேசியபோது, அக்கட்டடத்தை உடனே சீர் செய்து தந்தால் அங்கு வங்கி இயக்கப்படும் என்று மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கூறினார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் தெரிவிப்பது என்னவென்றால், சொந்தக் கட்டடம் இருக்கும்போது ஏன் வாடகைக் கட்டடத்தில் இயங்க வேண்டும்? படப்பை மேல்நிலைப் பள்ளியில் உள்ள கூட்டுறவு வங்கியை மீண்டும் சொந்தக் கட்டடத்தில் இயக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்றபடி, தேவையான அளவிற்கான இடம் அங்கு இருந்தால்,*

2023 ஏப்ரல் 18]

எதிர்காலத்தில் நிச்சயமாக அங்கு இயக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஏனெனில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தற்போதுள்ள வங்கிகள், நியாய விலைக் கடைகள் ஆகியவற்றை நவீனப்படுத்த வேண்டும் என்றும், எதிர்காலத்தில் இவையனைத்தும் சொந்தக் கட்டடத்தில் இயங்குகின்றவாறு வாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்றும் சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்த வங்கி முன்பு சொந்தக் கட்டடத்தில் இயங்கியது என்று கூறுகிறார்கள். எனவே, அதுபற்றி பரிசீலித்து நிச்சயமாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S.R. இராஜா அவர்கள்.

திரு. S.R. இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் குறைந்தபட்சம் 2,000 தரைக் கடைகள் இருக்கின்றன. யார் கூறினாலும், அந்தக் கடைகளை அப்புறப்படுத்துவதற்கான வாய்ப்புகள் இல்லை. காரணம், அங்கு அந்தளவிற்கு வியாபாரம் அதிகளவில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S.R. இராஜா, இக்கேள்வி கூட்டுறவுத் துறை சம்பந்தப்பட்ட கேள்வியாகும்.

திரு. S.R. இராஜா: அதுபற்றிதான் கேட்கிறேன். தாம்பரத்தில் நகர வங்கி இயங்கி வருகிறது. என்னுடைய கணிப்பு சரியாக இருந்தால், தற்போது அந்த வங்கியில் குறைந்தபட்சம் 75 கோடி ரூபாய்க்குமேல் deposits இருக்கும். எனவே, அங்கே தனியாக ஒரு முகாம் அமைத்து, அங்கு இருக்கின்ற சிறு வியாபாரிகளுக்குக் கடன் கொடுத்தால், வங்கிக்கும் இலாபம் கிடைக்கும். சிறு வியாபாரிகளுக்கும் இலாபம் கிடைக்கும். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ப. அப்துல் சமது அவர்கள் கூறியதைப் போன்று, தனியார் தண்டலைத் தவிர்ப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முகாம் அமைக்க நடவடிக்கை மேற்கொண்டு, அந்த வியாபாரிகளுக்கு உதவி செய்ய முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தாம்பரம் நகர வங்கியில் 75 கோடி ரூபாய் வைப்பு நிதி இருக்கின்ற காரணத்தால், அவையனைத்தையும் கடனாகக் கொடுக்க வேண்டும் என்று விரும்புகிறார். கடன் கொடுப்பதற்காகத்தான் வங்கிகளும், நாணயச் சங்கங்களும் இருக்கின்றன என்பதில் மாறுபட்ட கருத்து கிடையாது. ஆனால், கொடுக்கின்ற கடன்கள் முறையாக வசூல் செய்யப்பட வேண்டும், கடன் வாங்குகிறவர்கள் முறையாகக் கடனைத் திருப்பிச் செலுத்தவும் வேண்டும். நான் ஏற்கெனவே குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, பொதுமக்களுடைய வைப்புகள்–*deposits *மூலமாகத்தான், அவர்களுக்கு வட்டியைச் செலுத்தித்தான், வங்கிகளும், நாணயச் சங்கங்களும் இயங்குகின்றன. ஆக, இந்நிலையில், வட்டிக்கு கடன் வாங்கக் கூடியவர்கள், சிறு வியாபாரிகளாக இருந்தாலும் சரி, பெரு வியாபாரிகளாக இருந்தாலும் சரி, நாணயமாக நடக்கக்கூடியவர்களுக்கு எல்லா கதவுகளும் திறந்திருக்கும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற வியாபாரிகள் நாணயமாக நடப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உறுதியளித்தால் நிச்சயமாக அனைத்தும் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள்.*

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மத்தியக் கூட்டுறவு வங்கியில் பயிர்க் கடன் தள்ளுபடி செய்யப்பட்டது. அனைத்து மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கும் அந்தக் கடன் தொகை இரண்டு தவணைகளில் திரும்பச் செலுத்தப்பட்டிருக்கிறது. ஈரோடு மாவட்டத்தில் வழங்கப்பட்ட பயிர்க் கடன்களைப் பொறுத்தவரையில், இதுவரையிலும் மத்தியக் கூட்டுறவு வங்கிக்கு நிதி வழங்கப்படவில்லை. ஏறத்தாழ ரூ.1,083 கோடி; அதிலே 203 சங்கங்கள் இருக்கின்றன; அவற்றில், 95045 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இதுகுறித்து அரசிடமும் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. மேற்காணும் ஈரோடு மத்தியக் கூட்டுறவு வங்கிக்கு விரைந்து நிதியினை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.*

2023 ஏப்ரல் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலான இந்த அரசு 'எல்லோருக்கும் எல்லாம்' என்ற தத்துவத்தின் அடிப்படையில் செயல்படுகின்ற அரசாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தற்போது சேலம் மாவட்டத்தில் வழங்கப்பட்டிருப்பதைப்போல, ஈரோடு, திருப்பூர் மற்றும் நாமக்கல் வங்கிகளுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று கேட்கின்றார். அதற்கான கோப்புகளில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஒரு கண்ணில் வெண்ணெய், ஒரு கண்ணில் சுண்ணாம்பு என்று இல்லாமல் எல்லோரையும் சமமாகப் பாவிக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான அரசு நிச்சயமாக அவர்களுக்கு எதிர்காலத்தில் உரிய தீர்வுகளை வழங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைர் தலைவர்: *வினா வரிசை எண் 175, மாண்புமிகு உறுப்பினர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

175—

சுற்றுலாத் தலம்

***50522—திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதிக்குட்பட்ட சிறுமலைப் பகுதியை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திண்டுக்கல்லிலிருந்து சுமார் 25 கிலோ மீட்டர் தொலைவில் சிறுமலை பகுதி அமைந்துள்ளது. இப்பகுதியில் விளையும் மலை வாழைப்பழம், பலா, மிளகு மற்றும் காபி ஆகியவை தமிழ்நாட்டின்

சிறப்பு வாய்ந்தவையாக உள்ளன. சிறுமலையின் பெரும் பகுதி வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஓரிடத்திற்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மற்றும் தேவையின் அடிப்படையில் பல்வேறு வசதிகளை சுற்றுலாத் துறை ஏற்படுத்தித் தருகிறது. மேலும், சிறுமலை பகுதியில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ள, தமிழ்நாடு சுற்றுலாத் தலங்கள் வளர்ச்சித் திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி, தொடர்புடைய துறையின் மூலமாக சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடு தயார் செய்து, வனத் துறையின் தடையின்மைச் சான்று மற்றும் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையுடன் பெறப்படுமாயின், சுற்றுலாத் துறையின் நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர். (குறுக்கீடு) மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன் அவர்கள்.*

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுமலை பகுதி, திண்டுக்கல் மாவட்டத்தின் முக்கிய சுற்றுலாத் தலமாக வளர்ந்து வருகிறது. மலைகளின் அரசி ஊட்டி என்று சொன்னால், மலைகளின் இளவரசி கொடைக்கானல் என்று சொல்கின்ற வகையிலே, சிறுமலை இன்றைக்கு மலைகளின் சிற்றரசியாக வளர்ந்து கொண்டிருக்கிறது. அந்தளவுக்கு இன்றைக்கு சுற்றுலாப் பயணிகள் நாளுக்கு நாள் அதிகமாக வர ஆரம்பித்திருக்கிறார்கள். திண்டுக்கல்லிலிருந்து 25 கிலோ மீட்டர் தொலைவில்தான் அந்தப் பகுதி உள்ளது. ஏற்கெனவே சில அடிப்படை வசதிகளை வனத் துறையின் மூலமாகச் செய்திருக்கிறார்கள். கடந்த ஆட்சியில், எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, 5 கோடி ரூபாயை வனத் துறைக்கு ஒதுக்கீடு செய்து, பல்லுயிர் பூங்கா அமைப்பதற்கான பணிகள் தொடங்கி வைக்கப்பட்டன. சுற்றுலாப் பயணிகளை கவரக்கூடிய அளவிற்கு பல்லுயிர் பூங்கா என்ற வகையில் அங்கே பணிகள் நடைபெற்று வந்தாலும், இன்றைக்கு சுற்றுலாப் பயணிகள் அங்கே தங்குவதற்கு ஒரு விடுதி இல்லை. அதேபோல், அங்கே பொழுதுபோக்கு அம்சமாக நீரூற்று போன்று, ஒரு சுற்றுலாப் பூங்கா. . .*

2023 ஏப்ரல் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், தங்களுக்கு இன்னொரு கேள்வி இருக்கிறது.*

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே* park *ஒன்று அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தோட்டக்கலைத் துறைக்குச் சொந்தமான 500 ஏக்கர் நிலம் சிறுமலையில் இருந்தது. அந்த 500 ஏக்கரில் கிட்டத்தட்ட 340, 350 ஏக்கர் நிலம், வனத் துறைக்கு மாற்றப்பட்டுவிட்டது. மீதியிருக்கின்ற இடம் இன்னும் தோட்டக்கலைத் துறையின் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. ஆக, தோட்டக்கலைத் துறைக்குச் சொந்தமான அந்த இடத்தில் தேவையான வசதிகளை, உதாரணமாக* park *அமைப்பது, சுற்றுலாவை மேம்படுத்துவது, நடைபாதை அமைப்பது, தங்கும் விடுதி அமைப்பது போன்ற பல்வேறு பணிகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சிறுமலை பகுதி, சுற்றுலாத் தலமாக அறிவிக்கப்படுமா, இதுதான் கேள்வி. மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உங்களுக்கு இன்னொரு கேள்வி இருக்கிறது. வாய்ப்பு தருகிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள், இன்னொரு கேள்வி இருக்கிறது; வாய்ப்பு தருகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலைக் கேட்டுக்கொள்ளவும். மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள், பதிலைச் சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் என்னைப் பார்த்துப் பேசவும். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் என்னைப் பார்த்துப் பேசவும்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே உயிரியியல் பூங்கா அமைக்க வேண்டுமென்று சொன்னால், அதனை வனத் துறையின் மூலமாகத்தான் செய்ய முடியும். அதேபோல் தோட்டக்கலைத் துறையின் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோன்று, பெரிய பூங்கா–*Garden *அமைக்கலாம். அதனை அந்தத் துறையும், சுற்றுலாத் துறையும் இணைந்தும் அமைக்கலாம்.*

அப்படிச் செய்ய வேண்டுமென்றால், தனியாக ஒரு கருத்துருவை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக எங்களுக்கு அனுப்பினால், அங்கே என்ன செய்ய வேண்டும், எவ்வளவு area இருக்கிறது, என்னென்ன அமைக்கலாம் என்பதைத் தெரிவித்தீர்களென்றால், நிச்சயமாக அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன் அவர்கள்.

முற்பகல் 10–50

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனை சுற்றுலாத் தலமாக அறிவிக்கக்கூட வேண்டாம். அறிவிப்பதற்கு கொள்கை முடிவு இல்லை என்று சொன்னால், அரசினுடைய திட்டத்தில் இல்லை என்று சொன்னால், சுற்றுலாப் பயணிகள் வருவதற்கு வேண்டிய அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளையாவது மேம்படுத்தித் தர வேண்டுமென்பதுதான் இந்த அரசை நான் வற்புறுத்தி, வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிற கோரிக்கையாகும்.

அதோடுமட்டுமல்லாமல், சுற்றுலாவை மேம்படுத்த வேண்டுமென்றால் சாலை அமைப்பது முக்கியம். அதற்காக ஏற்கெனவே கடமான்குளம் முதல் தாழைக்காடு வரை ஒரு சாலை அமைக்கப்பட்டது. அந்தச் சாலையை புதுப்பிப்பதற்காக ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக நிர்வாக ஒப்புதல் வழங்கி, நிதியும் ஒதுக்கீடு செய்துவிட்டார்கள். ஆனால், வனத் துறை அதற்கு அனுமதி கொடுக்க மறுக்கின்றது. ஏற்கெனவே அமைக்கப்பட்ட சாலைக்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது பதில் சொல்வது சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள். அதற்கு அவர்கள் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். நீங்கள் கேள்விக்கு வாருங்கள்.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: சுற்றுலாவை மேம்படுத்துவதற்குத்தான் கேட்கிறேன். என்னை முழுவதுமாகச் சொல்லவிடுங்கள். சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்பது, சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக, சாலை வசதியைச் செய்து கொடுப்பதற்கு வனத் துறைக்கு நீங்கள் பரிந்துரை

2023 ஏப்ரல் 18]

செய்து, இரண்டு அமைச்சர்களும் கலந்து பேசி, அதற்கான நடவடிக்கைகளை எடுத்து, அந்தச் சாலை அமைப்பதற்கு அனுமதி தர வேண்டுமென்றும், சுற்றுலாவை மேம்படுத்துவதற்கு அடிப்படை கட்டமைப்புகளைச் செய்ய ஆவன செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் முதலிலேயே சொன்னேன். அந்த இடத்தில் என்ன மேம்பாடு செய்ய வேண்டுமென்றாலும், அந்தத் திட்டத்தை முழுமையாக வகுத்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக, அந்தத் திட்ட அறிக்கையை சுற்றுலாத் துறைக்கு அனுப்பினால், வனத் துறையுடன் கலந்து பேசி, அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைகளின் அரசி இருக்கிறது. மலைகளின் இளவரசி பற்றி கேள்விப்பட்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. நத்தம் விசுவநாதன் அவர்கள் இப்போது புதிதாக மலைகளின் சிற்றரசி ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார். நான் இந்த அவையின் மூலமாகக் கேட்டுக்கொள்வது, மலைகளினுடைய அரசி அவருடைய ஊர். மலைகளினுடைய சிற்றரசி அண்ணனுடைய ஊர். எனவே, அரசி, சிற்றரசியை கொஞ்சம் கவனித்துக்கொள்ள வேண்டுமென்று நான் உங்கள் சார்பாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. ஜோதி அவர்கள்.*

திரு. ஓ. ஜோதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யாறு தொகுதிக்குட்பட்ட. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *அப்படியென்றால் எங்களுடைய ஏலகிரி என்ன? (சிரிப்பு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒ. ஜோதி அவர்கள்.*

திரு. ஒ. ஜோதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யாறு தொகுதிக்குட்பட்ட மாமண்டூர் ஏரி 3,110 ஏக்கர் பரப்பளவில் திருவண்ணாமலை மாவட்டத்தில் இருக்கும் மிகப் பெரிய ஏரியாகும். இயற்கை எழிலோடு உள்ள இந்த ஏரியில் படகு சவாரி, செயற்கை நீரூற்று போன்றவற்றை அமைத்து சுற்றுலாத் தலமாக மாற்றித் தருவார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாவற்றிற்கும் ஒரே பதில்தான். சம்பந்தப்பட்ட துறையின் மூலமாக* application *கொடுங்கள். நாங்கள் நடவடிக்கை எடுக்கின்றோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி, ஏற்கெனவே சொன்ன பதில் தான். நன்றி.*

வினா வரிசை எண் 176, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஜெ. கோவிந்தராஜன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

176—

துணை மின் நிலையம்

***4479—திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சட்டப்பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 18]

கும்மிடிப்பூண்டி தொகுதி, கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், மாதர்பாக்கம் மற்றும் ஆரம்பாக்கம் ஆகிய ஊராட்சிகளில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கும்மிடிப்பூண்டி தொகுதி, கும்மிடிப்பூண்டி ஒன்றியம், கும்மிடிப்பூண்டி மதுர ராமச்சந்திரபுரம் கிராமத்தில் 110/33 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்க 3-4-2023-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, துணை மின் நிலையம் அமைப்பதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் பணி ஆணை வழங்கப்பட்டு, துணை மின் நிலையம் அமைக்கக்கூடிய பணிகள் துவங்க ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஜெ. கோவிந்தராஜன் அவர்கள்.*

திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்மிடிப்பூண்டி ஒன்றியம், ராமச்சந்திரபுரத்தில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு அனுமதி கொடுத்த மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

ஆரம்பாக்கம் பகுதியில் புதிய வசூல் மையத்துடன்கூடிய உதவிப் பொறியாளர் அலுவலகம் ஒன்றை அமைத்துத் தர முடியுமா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்குள்ள மின் இணைப்புகள் ஆய்வு செய்யப்பட்டு, தேவை ஏற்படின் முன்னுரிமை அடிப்படையில் அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[*2023 ஏப்ரல் 18*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஜெ. கோவிந்தராஜன் அவர்கள்.*

முற்பகல் 10–55

திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. கும்மிடிப்பூண்டி, பேரூர் மக்கள்தொகை அதிகமான பகுதியாக, வளர்ந்து வரக்கூடிய பகுதியாக இருக்கின்றது. அங்கே இருக்கக்கூடிய துணை மின் நிலையத்தில் 33/11* KV Indoor Sub-station *அமைத்துத் தர முடியுமா என்றும், ஊத்துக்கோட்டை வட்டம், குஞ்சலம் பகுதியில் 11* KV *துணை மின் நிலையம் ஆரம்பிக்கப்பட்டு நான்கு ஆண்டுகளாகியும் இதுவரை முடிக்கப்படாமல் இருக்கின்றது; அதனை முடித்துத் தர முடியுமா என்றும், ஏலம்பாக்கம், செங்கரைப் பகுதியில் புதிதாக துணை மின் நிலையம் ஒன்றை அமைத்துத் தர முடியுமா என்றும் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊத்துக்கோட்டை வட்டத்தில் இருக்கக்கூடிய துணை மின் நிலையம் ஆரம்பிக்கப்பட்டு, நான்காண்டுகளாகப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்று சொன்னார்கள். தற்போது 80 சதவிகிதப் பணிகள் நடந்து முடிந்துள்ளன. மீதமிருக்கக்கூடிய 20 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டு, இன்னும் இரண்டு மாத காலத்திற்குள் பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

ஏலம்பாக்கத்தில் புதிய துணை மின் நிலையம் வேண்டுமென்று கேட்டார்கள். 33/11 KV *துணை மின் நிலையம் அமைப்பதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. டெண்டர் முடிந்த பிறகு, அதற்கான பணிகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. இலட்சுமணன் அவர்கள்.*

2023 ஏப்ரல் 18]

டாக்டர் இரா. இலட்சுமணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருகிவரும் மின் தேவையைக் கருத்தில்கொண்டு, விழுப்புரம் தொகுதிக்குட்பட்ட கோலியனூர் ஒன்றியம், பொய்யப்பாக்கம் பகுதியிலும், விழுப்புரம் நகரம் மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்திலும் துணை மின் நிலையங்கள் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021–2022 ஆம் ஆண்டு 216 துணை மின் நிலையங்களும், 2022–2023 ஆம் ஆண்டு 100 துணை மின் நிலையங்களும், இந்த ஆண்டு 72 துணை மின் நிலையங்களும் அமைப்பதற்கான அனுமதிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் ஆய்வு செய்யப்பட்டு, தேவை ஏற்படின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. KA. பாண்டியன் அவர்கள்.*

திரு. K.A. பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் நகரில் ஆண்டுக்கு இருமுறை பிரசித்திபெற்ற திருத்தேர் உற்சவம் வெகு விமரிசையாக நடைபெறுகிறது. தேரோடும் நான்கு வீதிகளில் மின் புதைவடக் கம்பி இணைப்பு வழங்கிட மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களால் 2020–2021 ஆம் நிதியாண்டில் திட்டம் கொண்டுவரப்பட்டு, முதற்கட்டமாக தெற்கு வீதி மற்றும் மேல வீதியில் மின் புதைவடக் கம்பி இணைப்பு வழங்கப்பட்டுவிட்டது. எனவே, முன்னுரிமை அடிப்படையில், மீதமுள்ள வடக்கு வீதி மற்றும் கீழ வீதியில் மின் புதைவடக் கம்பி அமைக்க அரசு முன்வருமா என மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கக்கூடிய சிதம்பரம் திருக்கோயிலுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று, இந்த ஆண்டு பணியில் சேர்த்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி அவர்கள்.

திரு. ஆ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் வெள்ளியூர், வீளாம்பாக்கம், கீழனூர் போன்ற 30-க்கும் மேற்பட்ட கிராமங்களில் மூன்று நாட்களாக விவசாயிகளுக்கு மின்தடை ஏற்பட்டிருக்கிறது. அங்கே கேபிள் பழுதடைந்திருக்கின்ற காரணத்தினால், அந்த கேபிளை செவ்வாய்பேட்டை இரயில்வே நிலையத்தைக் கடந்து கொண்டுவர முடியாமல் இரயில்வே நிர்வாகம் அனுமதி தர தாமதிக்கிற காரணத்தினால், விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதே பகுதியில், கீழனூரில் 33 KV துணை மின் நிலையம் இருக்கிறது. கடந்த ஆண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 110 KV துணை மின் நிலையமாக அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அதற்கான பணிகள் இன்னும் தொடங்கப்படாமல் இருக்கின்றன. எனவே, துணை மின் நிலையம் அமைப்பதற்கான பணிகள் மிக விரைவாகத் தொடங்கப்படுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற பகுதியில் துறையினுடைய அதிகாரிகள் களத்திலே நின்று பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். இன்றைக்குள் அந்தப் பணிகள் முடிக்கப்பட்டு, சீரான மின் விநியோகம் வழங்குவதற்கான நடவடிக்கைகள்

2023 ஏப்ரல் 18]

எடுக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல, புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுவிட்டது. டெண்டர் கோரக்கூடிய பணிகள் இப்போது நடைமுறையில் இருக்கின்றன. அது முடிந்த பிறகு துணை மின் நிலையம் அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 177, மாண்புமிகு உறுப்பினர் திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

177—

கல்லூரி

***59131—திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலின் சார்பாக கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஏற்கெனவே அந்தப் பகுதியில் அப்துல் கலாம் அவர்களுடைய திருப்பெயரில் ஒரு கல்லூரி சிறந்த முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதோடு, சங்கராச்சாரியாரின் காஞ்சி மடத்தின் சார்பில் ஒரு கல்லூரி 2001 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, 2014 ஆம் ஆண்டு போதிய அளவுக்கு அங்கு மாணவர்களின் சேர்க்கை இல்லாததாலும், அந்தப் பகுதி ஒரு தீவு போல் அமைந்திருப்பதால் மக்கள் அதிகமாக இல்லாத நிலையிலும் அந்தக் கல்லூரி மூடப்பட்டிருக்கிறது. ஆகவே, தற்போது அப்துல் கலாம் அவர்களுடைய பெயரிலே அமைந்திருக்கின்ற அந்தக் கல்லூரியிலே போதுமான அளவு மாணவர்கள்

சேர்க்கைக்குண்டான இடங்கள் இருப்பதால், கூடுதலாகக் கல்லூரி தேவைப்படும் என்ற வினா எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள்.

திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள்மிகு இராமேஸ்வரம் இராமநாத சுவாமி திருக்கோயிலில் சுப முகூர்த்த காலங்களில் அதிகமான திருமணங்கள் நடைபெறுகின்றன. துறையின் சார்பிலே திருமண மண்டபமும் இருக்கிறது. மேலும், திருக்கோயிலைப் பாதுகாப்பதற்காக, 100–க்கும் மேற்பட்ட காவல் துறையினர் அங்கு பணி செய்கிறார்கள். அவர்களுக்கு அடிப்படை வசதிகளுடன் தங்குவதற்கான கட்டடம் கட்டித்தர முடியுமா என்பதைத் தங்கள் வாயிலாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள, தஞ்சாவூர் சத்திரம் என்ற இடத்தில் சுமார் 12,000 சதுரடி நிலப்பரப்பில், 250 நபர்கள் உணவருந்துகின்ற கூடமும், 700 நபர்கள் திருமண மண்டபத்தில் அமருகின்ற வகையிலும், ஒரு மண்டபத்தை வடிவமைக்க, ஏற்கெனவே இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை சார்பாக அங்கு இருக்கின்ற அழகப்பா பல்கலைக்கழகத்திடம், மண் பரிசோதனை செய்து, சுமார் 3 கோடி ரூபாய் செலவிலே திருமண மண்டபம் அமைப்பதற்குண்டான பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதேபோல் உறுப்பினர் கோரியவாறு காவலர் தங்குவதற்குண்டான, குடிநீர் வசதி, கழிவறை வசதி, ஓய்வறை வசதி, 100 பேர் படுக்கை வசதியோடு சேர்த்து ஒரு காவலர் தங்குமிடமும் ரூபாய் 2 கோடி செலவிலே அமைக்கப்படும்

2023 ஏப்ரல் 18]

என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள்.*

திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கு வெளி மாவட்டம் மற்றும் வெளி மாநிலங்களிலிருந்து, அமாவாசை, பௌர்ணமி, மற்ற விஷேச நாட்களில், ஏறத்தாழ 50,000–க்கும் மேற்பட்ட பக்தர்கள் தரிசிக்க வருகிறார்கள். அந்தக் கோயிலை மேம்படுத்துவதற்கு அரசின் சார்பில் ஏதேனும் திட்டப்பணிகள் இருக்கின்றனவா என்பதைத் தங்களின் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் நான் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, அக்னி தீர்த்தம் மற்றும் 22 குளங்களில் புனித நீராடுவதற்கு இரண்டரை கோடி ரூபாய் செலவிலே தரை தளமும், கருங்கல் நடைபாதையும் அமைக்கப்பட்டு வருகின்றன. அதோடுமட்டுமல்லாமல் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அந்தத் திருக்கோயிலை* Master Plan *திட்டத்தின்கீழ் எடுத்ததன் அடிப்படையில், தனியார்* consultant *ஒருவர் வாயிலாக, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கின்றது. தற்போது விரிவான திட்ட அறிக்கை பெறப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலைப் பெற்று, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை மானியக் கோரிக்கையில், அந்தத் திருக்கோயிலுக்காக எவ்வளவு தொகையில், எத்தனை பணிகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை அறிவிக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்கள்.*

திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி, காசி விஸ்வநாதர் கோயிலுக்கு*

பல நேரங்களில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வந்திருக்கிறார்கள். மாமன்னர் அரிகேசரி பராக்கிரம பாண்டியனால் 600 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட இந்தத் திருக்கோயிலின் குடமுழுக்கு, 2006 ஆம் ஆண்டு நடைபெற்று, கடந்த 2018 ஆம் ஆண்டு நடைபெற வேண்டியது, இதுவரை நடைபெறவில்லை. அதேபோன்று தெப்பக்குளமும் செப்பனிடப்படவில்லை. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்பதெல்லாம் அந்தக் குடமுழுக்கை நடத்தி, தெப்பக் குளத்தைச் சீரமைத்து, முழுநேர அன்னதானத் திட்டமும், அதேபோன்று, மாமன்னர் முடிசூடி 600 ஆண்டுகள் ஆனதை அரசு விழாவாகக் கொண்டாடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கோரிய காசி விஸ்வநாதர் திருக்கோயிலுக்கு, தற்போது ஒரு வேளைக்கு 100 பேருக்கு அன்னதானத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. திருக்கோயிலின் அன்னதான வைப்பு நிதி 20 இலட்சம் ரூபாய்தான் இருக்கின்றது. திருக்கோயிலினுடைய திருப்பணிகளை மேற்கொள்வதற்கு 6 கோடி ரூபாய் அளவிற்குத் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. உபயதாரர்கள் எதிர்பார்க்கப்படுகின்றார்கள். உபயதாரர்கள் கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 1,000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோயில்களுக்கு ரூபாய் 100 கோடியை ஆண்டுதோறும் ஒதுக்கி வருகின்றார்.

முற்பகல் 11-05

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அந்த நிதி ஒதுக்கீட்டிலேயிருந்து ஒரு பகுதி நிதியை காசி விஸ்வநாதர் திருக்கோயில் திருப்பணிகளுக்குப் பயன்படுத்தி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய வகையில், முதல் கட்டமாக திருப்பணியை முழு வேகத்தோடு சிறந்த முறையில் நடத்தி முடித்து, அதன் பிறகு, கூடுதலாக பக்தர்கள் வருகின்றபொழுது, தற்போது வழங்கப்படுகின்ற 100 பேருக்கான அன்னதானத் திட்டத்தை விரிவுபடுத்துகின்ற முயற்சி மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2023 ஏப்ரல் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 178, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.*

வினா வரிசை எண் 179, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

179—

கூடுதல் வகுப்பறைகள்

***371—மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்):**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்ப்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்ப்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், வேடநத்தம் ஊராட்சியில் உள்ள மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்டவும், ஆய்வகம் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். தங்களுடைய அனுமதியோடு விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், கீழ்ப்பெண்ணாத்தூர் தொகுதி, வேடநத்தம் அரசு மேல்நிலைப் பள்ளியின் மொத்தப் பரப்பு 1 ஏக்கர் ஆகும். இப்பள்ளியில் 13 வகுப்பறைகள் உள்ளன. கூடுதலாக மூன்று வகுப்பறைகள் தேவையெனக் கண்டறியப்பட்டு, தற்போது நபார்டு RIDF *திட்டம்–27, பகுதி 21–ன்கீழ் ரூ.63.54 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வரும் கல்வியாண்டில் மூன்று வகுப்பறைகள் கட்டப்படும். எத்தனை ஆய்வகங்கள் தேவையெனக் கணக்கிட்டு, அதற்கான நிதியும் விரைவில் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்): *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கீழ்ப்பெண்ணாத்தூர் தொகுதி, வேடநத்தம் ஊராட்சி மேல்நிலைப் பள்ளியில் 284 மாணவர்களும், 210 மாணவிகளும், ஆக மொத்தம் 494 மாணவ, மாணவிகள் பயில்கிறார்கள். தற்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, அப்பள்ளிக்கு மேலும் மூன்று வகுப்பறைகள் தேவைப்படுகின்றன. தேவையான நிதியை நபார்டு வங்கியின்மூலம் பெற்றுத் தருவதாகவும் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, கணிதம், தாவரவியல், கணினி அறிவியல், வரலாறு, வணிகவியல் போன்ற பாடப்பிரிவுகள் இருக்கின்றன. இருப்பினும், Lab வசதி இல்லாமல் இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, வேடநத்தம் மேல்நிலைப் பள்ளிக்கு அந்த வசதிகளை ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பள்ளிக்கு மூன்று வகுப்பறைக் கட்டடங்கள், ஓர் இயற்பியல் ஆய்வகம், ஒரு வேதியியல் ஆய்வகம் மற்றும் 2 மாணவர் கழிப்பிடங்கள் கூடுதலாகத் தேவைப்படுகின்றன என்ற செய்தி எங்களுடைய முதன்மைக் கல்வி அலுவலர் மூலமாக வந்திருக்கிறது. நபார்டு* RIDF *திட்டம்–27, பகுதி 21–ன்கீழ் பரிந்துரைக்கப்பட்டு, ஏற்கெனவே, சுமார் 608 பள்ளிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்கான கருத்துருக்களும் அனுப்பப்பட்டிருக்கின்றன. அதன் முதல் பகுதியாக எடுத்துக்கொள்ளப்படவுள்ள 274 பள்ளிகளில், மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அண்ணன் அவர்கள் குறிப்பிட்ட பள்ளியும் இருக்கிறது. எனவே, அது கண்டிப்பாக செய்து தரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்): *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கீழ்ப்பெண்ணாத்தூர் தொகுதியில் ஆவூர், நாரையூர், சு. வாழவெட்டி, ஆர். பாக்கம், ராஜன்தாங்கல் மற்றும் செங்கம்*

2023 ஏப்ரல் 18]

ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, தரடாப்பட்டு உயர்நிலைப் பள்ளி போன்ற பள்ளிகளெல்லாம் பழுதடைந்தும், கூடுதல் கட்டடங்கள் தேவைப்படுகின்ற நிலையிலும் இருக்கின்றன. அவற்றையும் நபார்டு திட்டத்தில் சேர்த்து, அப்பள்ளிகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்டித் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

குறிப்பாக, ஆவூரிலுள்ள ஆரம்பப் பள்ளிக் கட்டடம் இடிக்கப்பட்டது. அந்தக் கட்டடத்தைக் கட்ட வேண்டுமென்று சொன்னபொழுது, அந்தக் கட்டடம் நீர்நிலைப் புறம்போக்கில் இருக்கிறதென்று தற்போது தடுக்கிறார்கள். ஆகவே, வகுப்பறை இல்லாமல் மாணவர்கள் கஷ்டப்படுகிறார்கள். அதுபோல, ஏற்கெனவே இருக்கிற கட்டடங்களையே கட்ட முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த ஆரம்பப் பள்ளிக் கட்டடங்களைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். ஆசிய வங்கியின்மூலம் கடனுதவியைப் பெற்று, மேல்நிலைப் பள்ளிகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொன்னதுபோல,* High Schools and Higher Secondary Schools*-ஐப் பொறுத்தவரைக்கும், நபார்டு வங்கியின் மூலமாக கிட்டத்தட்ட 608 பள்ளிகளுக்கு சுமார் 3,265 வகுப்பறைகள் கட்டுகின்ற திட்டம், ரூ.1,156.51 கோடி மதிப்பீட்டில் செய்வதற்காக தனியாக ஒரு கருத்துரு அனுப்பப்பட்டிருக்கிறது.*

அதுமட்டுமல்லாமல், 10 பள்ளிகளுக்கு, 10 கலையரங்கங்கள் அமைப்பதாக இருந்தாலும் சரி, 146 கழிப்பிட வசதிகள் ஏற்படுத்துவதாக இருந்தாலும் சரி, 51 ஆய்வகங்கள் ஏற்படுத்துவதாக இருந்தாலும் சரி, அவற்றிற்கான கருத்துருக்கள் அனுப்பப்பட்டு, தற்போது administrative sanction*-க்காக நாங்கள்* wait *செய்துகொண்டிருக்கிறோம். அந்த ஒப்புதல் வந்தவுடன் அதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மட்டுமல்ல, பல்வேறு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களும் இடிக்கப்பட்ட கட்டடங்கள் உடனடியாக*

கட்டித் தரப்படுமா, கூடுதல் வகுப்பறைகள் கட்டப்படுமா என்ற கோரிக்கைகளைத்தான் முன்வைத்திருக்கிறார்கள். அவற்றையும் நாங்கள் செய்து தருகின்றோம்.

அதுமட்டுமல்லாமல், பராமரிப்புக்கென ஏற்கெனவே கிட்டத்தட்ட ரூ.150 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கல்வியாண்டுக்கென தனியாக ரூ.200 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ரூ.150 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதில் கிட்டத்தட்ட 1,283 பள்ளிக்கூடங்களுக்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட அந்தப் பள்ளிக்கூடத்திற்கான இடம் நீர்நிலைப் புறம்போக்கில் உள்ளது என்னும்போது, local–ல் இருக்கின்ற மாவட்ட நிர்வாகத்தின்மூலமாக அனுமதி பெற வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இதுபோன்று எந்தெந்த இடங்களிலெல்லாம் பள்ளிக்கூடங்கள் இடிக்கப்பட்டிருக்கின்றனவோ—ஏற்கெனவே நான் மானியக் கோரிக்கையில் கூறியவாறு, 3,330 பள்ளிகள் identify செய்யப்பட்டுள்ளன. அவற்றில் 1,747 பள்ளிகளுக்கான வகுப்பறைகள் இடிக்கப்பட்டு, அவற்றைக் கட்டுகின்ற பணிகளும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். நேற்று அவையில் பேசும்போது மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. ஈஸ்வரன் அவர்கள், ஒவ்வொரு ஊராட்சியிலும் இருக்கின்ற நூலகங்களுக்கு digital வசதி செய்துதரப்பட வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அது ஊராட்சியில் இருப்பதால், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் கட்டுப்பாட்டில் வருவதால் அவர்களிடமும் மற்றும் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் ஆகியோரிடமும் எடுத்துக் கூறப்பட்டு அதற்கான கருத்துரு பெறப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 180, மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல், மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

2023 ஏப்ரல் 18]

180—

தொழிற்பயிற்சி நிலையம்

***13604—திருமதி கு. மரகதம் குமரவேல்:**

மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதியில், புதியதாக அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல் அவர்கள்.*

திருமதி கு. மரகதம் குமரவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறுவனத் தலைவர், புரட்சித் தலைவர் மற்றும் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, கழகப் பொதுச் செயலாளர் திரு. எடப்பாடியார் அவர்களையும் வணங்குகிறேன் (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதியில் எல்லை கிராமங்களிலிருந்து செங்கல்பட்டு அரசு தொழிற்பயிற்சி நிலையம் சுமார் 50 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. இங்குள்ள மக்கள் பெரும்பாலும் விவசாயத் தொழிலாளர்கள் ஆவர். இவர்களது பிள்ளைகள் மேல்படிப்பினைத் தொடர்வதற்கு போதுமான அளவில் பொருளாதார வசதி இல்லை. அரசு கல்லூரி, Polytechnic *கல்லூரி போன்ற எந்த ஓர் அரசு உயர் கல்வி நிறுவனமும் மதுராந்தகம் தொகுதியில் இல்லை. இதனால் மாணவர்கள் தங்கள் படிப்பைத்*

தொடர இயலாமல் கூலி வேலைக்குச் செல்லும் சூழ்நிலை உள்ளது. எனது தொகுதி அருகே அமைந்துள்ள செய்யூர் வருவாய் வட்டம், 146 வருவாய்க் கிராமங்களை உள்ளடக்கியதாக உள்ளது. இங்குள்ள மாணவர்களுக்கும் இதே நிலைதான் உள்ளது. எனவே, மதுராந்தகம் சுற்று வட்டார கிராமப்புறங்களில் வாழும் ஏழையெளிய மாணவர்கள் பயன்பெறும்வகையில், மதுராந்தகம் தொகுதியில் வேலைவாய்ப்பினை உருவாக்கக்கூடிய தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில், இரண்டு அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் உள்ளன. தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் 8 உள்ளன. இவற்றில் 1,500 மாணவ இருக்கைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. அதில் 974 மாணவர்கள் மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும், 526 மாணவர்கள் சேர்க்கைக்கான இடங்கள் காலியாக உள்ளன. குறிப்பாக, மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதியில் ஒரு தனியார் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் உள்ளது. அதற்கென 128 மாணவ இருக்கைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. 17 மாணவர்கள் மட்டுமே சேர்ந்துள்ளனர். மேலும், 111 இடங்கள் காலியாக உள்ளன. எனவே, இத்தகைய சூழ்நிலையில், மதுராந்தகத்தில் புதிதாக அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல் அவர்கள்.*

திருமதி கு. மரகதம் குமரவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் தொகுதியில் தொழிற்பயிற்சி நிலையத்தை இனிவரும் காலங்களிலாவது அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

மேலும், மதுராந்தகம் வட்டத்தில் வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையத்தின்மூலம் போட்டித்

2023 ஏப்ரல் 18] தேர்வுக்கான நிரந்தரப் பயிற்சி மையம் மற்றும் தன்னார்வ பயிலும் வட்டம் அமைக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தர வேண்டுமென்ற நோக்கத்தோடுதான், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கடந்த இரண்டாண்டுகளில் மட்டும் புதிதாக 12 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் துவக்கப்பட்டன. 53 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில், 100 விழுக்காடு மாணவர்கள் சேர்ந்துள்ளனர். மீதமுள்ள 49 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில், 94 சதவிகித மாணவர்கள் சேர்ந்துள்ளனர். அங்கு படிக்கக்கூடிய மாணவர்கள் 76 சதவிகிதம்* campus selection-*மூலம் தேர்வு செய்யப்பட்டு பணிகளுக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொழில் நெறி வழிகாட்டும் மையம் அமைக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். அனைத்து மாவட்டங்களிலும் தொழில் நெறி வழிகாட்டும் மையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையினை ஏற்று-- புதிதாக* Staff Selection Commission, Banking Recruitment, Railway Recruitment *போன்ற ஒன்றிய அரசுப் பணிகளில் சேருபவர்களுக்கான பயிற்சி அளிப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. இதுவரையில், 98 இடங்களில் வேலைவாய்ப்பு முகாம்களை நடத்தி, 1,44,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கிய அரசு, மாண்புமிகு தளபதி அவர்களின் அரசு என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. விதி 110—ன்கீழ் அறிக்கை

கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் திரு. இளையபெருமாள் அவர்களுக்கு நூற்றாண்டு நினைவரங்கம் அமைப்பது குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கையளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–15

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒடுக்கப்பட்ட சமூக மக்களின் ஒளிவிளக்காக மட்டுமல்ல; நெறிசார்ந்த அரசியலின் அடையாளமாகவும் விளங்கிய அய்யா இளையபெருமாள் அவர்களின் நூற்றாண்டைப் போற்றும் வகையில் விதி 110–ன்கீழ் அறிவிப்பு ஒன்றை இம்மாமன்றத்தில் அறிவிப்பதை என்னுடைய கடமையாக நான் கருதுகிறேன்.*

சமூக சீர்திருத்தத்தின் பெருமைமிகு தலைவர்களான அயோத்திதாசப் பண்டிதர், இரட்டைமலை சீனிவாசன், எம். சி. ராஜா, என். சிவராஜ், எல்.சி. குருசாமி, சுவாமி சகஜானந்தர் ஆகியோர் வரிசையில் கம்பீரமாக நின்று போராடியவர்களில் ஒருவர்தான் பெரியவர் திரு. எல். இளையபெருமாள் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நந்தனை மறித்த சிதம்பரம் மண்ணில் பிறந்து, நாடு முழுவதும் பட்டியலின மக்களுக்காக அடைபட்டிருந்த உரிமை வாசலைத் திறந்தவர் இளையபெருமாள் அவர்கள்.

பள்ளியில் படிக்கும்போது இரட்டைப் பானை முறையைப் பார்க்கிறார். பள்ளிக்குள் மறைந்திருந்து இரவு நேரத்தில் பானைகளை உடைக்கிறார் இளையபெருமாள் அவர்கள். இப்படி அவர் தொடர்ச்சியாக உடைத்ததால்தான், இரட்டைப் பானை முறை அந்தக் காலத்தில் அந்த வட்டாரத்தில் நீக்கப்பட்டது. இராணுவத்தில் சேர்கிறார், அங்கும் பாகுபாடு காட்டப்பட்டது. உடனடியாக, துணிச்சலோடு உயர் அதிகாரிக்குப் புகார் செய்கிறார். அந்தப் பாகுபாடு களையப்படுகிறது. ஓராண்டு காலத்திலேயே இராணுவத்திலிருந்து விலகி மக்கள் பணியாற்ற வந்துவிடுகிறார்.

2023 ஏப்ரல் 18] [திரு. மு.க. ஸ்டாலின்]

ஒன்றுபட்ட தென்னார்க்காடு மாவட்டம், தஞ்சை மாவட்டத்தில் 1940 முதல் 1970 வரையில் நடந்த மிகப்பெரிய சமூகப் போராட்டங்களை நடத்தியவர் பெரியவர் இளையபெருமாள் அவர்கள். பட்டியலின மக்கள் மத்தியில் எழுச்சி ஏற்பட இவரது போராட்டங்கள்தான் காரணம்.

காங்கிரஸ் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்ட இளையபெருமாள் அவர்களுக்கு, சுதந்திர இந்தியாவில் நடந்த முதல் பொதுத் தேர்தலில், 1952 ஆம் ஆண்டு கடலூர் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு கிடைக்கிறது; வெற்றியும் பெற்றார். அப்போது அவருக்கு வயது 27.

டெல்லி சென்ற இளையபெருமாள் அவர்கள், அண்ணல் அம்பேத்கர் அவர்களைச் சந்திக்கிறார். 'இவ்வளவு இளம் வயதில் நாடாளுமன்ற உறுப்பினராக ஆகி வந்திருக்கிறீர்களே? அந்த மக்களுக்காக இதுவரை என்ன செய்திருக்கிறீர்கள்?' என்று கேட்டிருக்கிறார். தென்னாற்காடு மாவட்டம், தஞ்சை மாவட்டங்களில், தான் நடத்திய மக்கள் போராட்டங்கள், தீண்டாமை எதிர்ப்புப் போராட்டங்களை இவர் பட்டியல் போட்டுச் சொன்னதைக் கேட்டு அண்ணல் அவர்களே வியப்படைந்திருக்கிறார்கள், இளையபெருமாள் அவர்களைப் பாராட்டி இருக்கிறார்கள்.

மூன்று முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராகவும், அகில இந்திய தீண்டாமை ஒழிப்புக் கமிட்டி தலைவராகவும் இருந்தவர் பெரியவர் இளையபெருமாள் அவர்கள்.

அவரது பெரும் சிறப்புகளில் மிக முக்கியமானது; பட்டியலின பழங்குடி மக்களின் மேன்மைக்காக 1965 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அகில இந்திய ஆணையத்தின் தலைமைப் பொறுப்பை அவர் வகித்ததுதான். மூன்றாண்டு காலம் இந்தியா முழுமைக்கும் பயணம் செய்து, சாதிக் கட்டமைப்பையும், தீண்டாமைக் கொடுமையையும் ஆய்வு செய்தார்கள். அந்த அறிக்கையானது இந்திய சமூக அமைப்பின் சாதிய வேர்களை மறைக்காமல், துல்லியமாக வெளிப்படுத்தும் அறிக்கையாக அமைந்திருந்தது. எனவே, இந்த அறிக்கை வெளியே வருவதைத் தடுக்க சிலர் முயற்சித்தார்கள். அதனை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யும் அன்று, அவரது அறையில் தாக்குதல்

நடத்தினார்கள். அங்கிருந்து தப்பி வந்து அறிக்கையைத் தாக்கல் செய்தார் பெரியவர் இளையபெருமாள் அவர்கள்.

இப்படி நடக்கும் என்று தெரிந்து, திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர் திரு. இரா. செழியன் அவர்களிடம் அறிக்கையின் பிரதியைக் கொடுத்து வைத்திருந்தார் இளையபெருமாள் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் அந்த அறிக்கையை அன்றையதினம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய முடிந்தது. பிற்காலத்தில் கொண்டு வரப்பட்ட வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்துக்கு அடித்தளமே பெரியவர் இளையபெருமாள் ஆணையத்தின் அறிக்கைதான். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள், 1971 ஆம் ஆண்டு அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதற்கு எதிராக சிலர் உச்ச நீதிமன்றம் சென்றார்கள். அப்போது கழக அரசு தாக்கல் செய்த மனுவில், 'சமூக சீர்திருத்தத்துக்காக அமைக்கப்பட்ட இளையபெருமாள் கமிட்டி அறிக்கை அடிப்படையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது' என்று குறிப்பிட்டோம். (மேசையைத் தட்டும் ஒலி) 'அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்' என்ற சட்டம் செல்லும் என்பதற்கு ஆதாரமாக இளையபெருமாள் ஆணைய அறிக்கையையே உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில் சுட்டிக் காட்டியது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–20

தலைவர் கலைஞர் அவர்கள், பெரியவர் இளையபெருமாள்மீது மிகப் பெரிய மரியாதையை வைத்திருந்தார்கள். சிதம்பரத்தைச் சார்ந்தவர் என்பதால் 'சம்மந்தி' என்றுதான் அழைப்பார்கள். எனது பெரியம்மா பத்மா அவர்களது ஊர் சிதம்பரம். 1980 ஆம் ஆண்டு தேர்தலில் இந்திரா காந்தி அம்மையார், தலைவர் கலைஞர், பெரியவர் இளையபெருமாள் ஆகிய மூவரும் திறந்தவெளி காரில் ஊர்வலமாகச் சென்று வாக்கு கேட்டதை தமிழ்நாடு அறியும். 1998 ஆம் ஆண்டு அண்ணல் அம்பேத்கர் அவர்கள் பெயரிலான தமிழ்நாடு அரசின் விருதை முதன்முதலாக பெரியவர் இளையபெருமாள் அவர்களுக்குத்தான் அப்போது முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

2023 ஏப்ரல் 18] [திரு. மு.க. ஸ்டாலின்]

இந்திய மனித உரிமைக் கட்சியின் சார்பில் சமூகநீதி மாநாட்டை இளையபெருமாள் அவர்கள் சென்னையில் நடத்தியபோது, அதனைத் தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்ற அன்றைய முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களைத்தான் அழைத்திருந்தார்கள். 'சலிப்பேறாத சமூகத் தொண்டர்' என்று இளையபெருமாள் அவர்களைப் பாராட்டி இருக்கிறார் தலைவர் கலைஞர் அவர்கள். இவர்கள் இருவருமே 1924 ஆம் ஆண்டு பிறந்தவர்கள், அதே ஜூன் மாதம்தான் அவர்கள் பிறந்திருக்கிறார்கள். தலைவர் கலைஞர் அவர்கள் பிறந்தது ஜூன் 3. இளையபெருமாள் அவர்கள் பிறந்தது ஜூன் 26. இது மிகமிக பொருத்தமானது ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) அத்தகைய சமூகப் போராளியைப் போற்றுவதை திராவிட மாடல் அரசு தனது கடமையாகக் கருதுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

சமூக இழிவு களையப்பட வேண்டும், சாதிய வன்முறை ஒடுக்கப்பட வேண்டும், அனைத்து சமூகங்களின் ஒற்றுமை உருவாக்கப்பட வேண்டும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சட்டரீதியான அனைத்து வாய்ப்புகளும் வழங்கப்பட வேண்டும், சமத்துவ, சுயமரியாதைச் சமூகம் உருவாக்கப்பட வேண்டும் என்ற உன்னத நோக்கத்துக்காக உழைத்த பெரியவர் இளையபெருமாள் அவர்களின் தொண்டினைச் சிறப்பிக்கும் வகையில் கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் நூற்றாண்டு நினைவரங்கம் ஒன்று அமைக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

'தீண்டாமையை ஒழிக்க, சாதி அமைப்பின் ஆணிவேரை வெட்டியாக வேண்டும். அதற்கு சாதிய அமைப்பின் பிடிப்பை உடைத்தாக வேண்டும்' என்ற பெரியவர் இளையபெருமாள் வழியில் சுயமரியாதை சமதர்ம சமூகத்தை அமைப்போம் என்று கூறி அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் திரு. இளையபெருமாள் அவர்களுக்கு நூற்றாண்டு நினைவரங்கம் அமைத்தல்—முதலமைச்சரின் அறிவிப்பிற்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ் அறிவித்திருப்பது குறித்து பேச வருகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள், வரவேற்று, நன்றி சொல்லி, ஒரு

நிமிடத்திற்குள் முடிக்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி அவர்கள்.

திரு. மு. ஜெகன் மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியவர் இளையபெருமாள் அவர்களுடைய நூற்றாண்டு விழாவினைச் சிறப்பிக்கும் வகையில் நினைவரங்கம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்பிற்கு எங்களுடைய புரட்சி பாரதம் கட்சி, வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறது. ஏழையெளிய மக்களுக்காகப் பாடுபட்டவர், குறிப்பாக, பட்டியலின மக்களுக்காகப் பாடுபட்டவர், காங்கிரஸ் கட்சியில் தன்னை இணைத்துக்கொண்டு, நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து, பல்வேறு திட்டங்களை தொகுதிக்குக் கொண்டு வருவதிலே முனைப்பாக இருந்து செயல்பட்டவர். குறிப்பாக, பட்டியலின மக்களுக்காக சிறப்பு உட்கூறு திட்டம் வருவதற்கு மிக முக்கியக் காரணமாக இருந்தவர். அப்படிப்பட்ட ஒரு தலைவருக்கு வருகின்ற ஜூன் 26 ஆம் தேதி, நூறாவது ஆண்டு பிறந்த நாள் விழாவை முன்னிட்டு நூற்றாண்டு விழா கொண்டாடுவதற்கும், அவருக்கு நினைவரங்கம் அமைப்பதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த அறிவிப்பை நான் வரவேற்று, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

முற்பகல் 11–25

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கடலூர் மாவட்டத்தில், மரியாதைக்குரிய L.E.P. என்று அன்போடு அழைக்கப்பட்டவரும், காங்கிரஸ் பேரியக்கத்தின் தலைவராகவும், 1952–ல் கடலூர் நாடாளுமன்ற உறுப்பினராகவும், கடலூர் மாவட்டத்தில் சாதியப் பதற்றங்கள் ஏற்பட்டபோதெல்லாம், அப்பகுதியினுடைய பெரும்பான்மை சமூகத்தோடு இணக்கமாக நின்று மறைந்த மாண்புமிகு முட்டம் கிருஷ்ணமூர்த்தி, நான் வகித்த பாட்டாளி கட்சியினுடைய நிறுவனர் மருத்துவர் ராமதாஸ் ஐயா, எனதருகாமையில் அமர்ந்துள்ள மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி

2023 ஏப்ரல் 18] [திரு. தி. வேல்முருகன்]

அவர்களுடைய அண்ணன் திரு. பூவை மூர்த்தியார், அன்றைய பல்வேறு அரசியல் ஆளுமைகளோடு இணக்கமாகப் பழகி, பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, மக்களிடத்தில் சாதியச் சண்டைகள், மோதல்கள், கலவரங்கள் ஏற்படாதவண்ணம் சமூக நல்லிணக்கத்திற்கு வித்திட்டவர்.

1996-ல் மறைந்த திரு. வாழப்பாடியார், திரு. பூவை ஜெகன்மூர்த்தி போன்றவரோடு ஒரு சமூக நீதிக்கான மாற்று அரசியல் கூட்டணியை இந்த மண்ணில் உருவாக்குவதற்கு காரணமாக இருந்தவர் அண்ணன் திரு. இளையபெருமாள் (LEP). டெல்லியில் மூத்த தலைவர்களோடு இணக்கமாகப் பழகிய பண்பாளர், அவருடைய நூற்றாண்டைக் கொண்டாடுகின்ற வகையில், அவர் பிறந்து வளர்ந்த சிதம்பரம் பகுதியில் அவருக்கான நினைவரங்கம் அமைத்து, அவருக்குச் சிறப்பு செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு தமிழக வாழ்வுரிமை கட்சியின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டியலின மக்களுடைய பாதுகாப்பிற்காகவும், அவர்களுடைய வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க வேண்டுமென்பதற்காகவும், பல்வேறு நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஆட்சியில் அமர்ந்த நாளிலிருந்து தொடர்ந்து எடுத்துக்கொண்டு வருகின்றார். அதற்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்லாமல் முன்னோர்கள், பெரியவர்கள், யாரெல்லாம் தமிழகத்திலே, மக்களுக்காகப்பாடுபட்டார்களோ அந்த மக்களுடைய வளர்ச்சிக்காக தங்களுடைய உயிரைத் தியாகம் செய்தார்களோ, வாழ்க்கையைத் தியாகம் செய்தார்களோ, அவர்களை எல்லாம் கண்டுபிடித்து ஒவ்வொருவருக்குமான அந்த மரியாதையை, உரிய பங்கைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். அந்த வகையிலே பெரியவர் இளையபெருமாள் அவர்களுக்குச் செய்திருக்கிற இந்தப் பெருமையை கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சியின் சார்பாக நான் வரவேற்று, அமர்கின்றேன்.

[2023 ஏப்ரல் 18

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த மாபெரும் தலைவர் இளையபெருமாள் அவர்கள் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக எந்தவிதமான சமரசமும் இல்லாமல், தொடர்ந்து அயராது பாடுபட்டவர். அவர் சிறு வயதிலிருந்து தீண்டாமையின் கொடுமையை அவருடைய வீட்டிலேயே பார்த்தார். அவருடைய தந்தை ஒரு சோதிடர். சோதிடம் பார்க்க வரக்கூடிய ஆதிக்க சாதியினர் வீட்டிற்கு உள்ளே வராமல், வெளியே நிற்கக்கூடிய ஒரு சூழல். இதைப் பற்றி அவருடைய தந்தையிடம் கேட்டபோது, அந்தப் பாகுபாடுகளைப் பற்றியெல்லாம் சொல்கின்றார். அதற்குப் பிறகு, தீண்டாமையை எதிர்க்க வேண்டுமென்ற ஒரு மிகப் பெரிய உணர்வு அவருக்கு ஏற்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விதி 110–ன்கீழ் அறிக்கையில் குறிப்பிட்டதைப் போல், பள்ளிக்கூடங்களில் தீண்டாமையின் வெளிப்பாடாகஇருந்தபானையைஉடைக்கின்றார். இதுபோன்ற பல்வேறு செயல்களில் அவர் ஈடுபடுகிறார். 1965–ல் அகில இந்திய தீண்டாமை ஒழிப்பு கமிட்டியினுடைய தலைவராக இருந்து, என்ன பாடுபட்டு அந்த அறிக்கையைச் சமர்ப்பித்தார் என்பதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

1998–ல் முதன்முதலாக அரசுரீதியாக, தமிழகத்தில் அவருக்கு அங்கீகாரம் அளித்தது, அன்றைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தலைமையிலான தி.மு.க. அரசு. 1998–ல் அவருக்கு அம்பேத்கர் விருது அளிக்கப்பட்டது. இப்போது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய மகனார், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின், இளையபெருமாள் அவர்களுடைய நூற்றாண்டை ஒட்டி, அவருக்கு சிதம்பரத்தில் ஒரு சிறப்பான நினைவரங்கம் அமைக்கப்படும் என்ற சிறப்பான அறிவிப்பை மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்று அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித நேயம் தழைக்க, சாதிகளை ஒழிக்க,

2023 ஏப்ரல் 18] [டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்]

சமூக நீதி, சமத்துவம் ஓங்கிட, நாளும் உழைத்திடும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களின், பெரியவர் இளையபெருமாள் அவர்களுக்கு நினைவரங்கம் கட்டப்படும் என்கிற அறிவிப்பை வரவேற்கிறேன்.

பெரியவர் இளையபெருமாள் அவர்கள், இதே அவையில் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றியவர். காங்கிரஸ் கட்சியினுடைய Legislative Party Leader *ஆக இருந்துப் பணியாற்றியவர். தமிழ்நாட்டு காங்கிரஸ் கட்சியினுடைய தலைவராக இருந்தவர். நாடாளுமன்றத்தையும் அலங்கரித்தவர். எல்லா ஆற்றலும், அறிவும் பெற்றவர். சாதிய ஒடுக்குமுறைகளை ஒடுக்குவதற்காகப் பாடுபட்டவர். ஒடுக்கப்பட்ட மக்களுடைய வாழ்வுரிமைக்காகப் பாடுபட்டவர். அப்படிப்பட்டவர்களையெல்லாம் கண்டுபிடித்து, அவர்களுக்கெல்லாம் சிறப்பு செய்கின்ற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தென்னிந்தியாவில் இருக்கின்ற சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கெல்லாம், குறிப்பாக, வெண்ணிக்காலாடி அவர்களுக்குச் சிலை வைப்போம் என்றும் அறிவித்திருக்கின்றார். ஆகவே, அவர்களுக்கு தமிழ்நாட்டில் வாழ்கின்ற, ஏன் உலகத்தில் வாழ்கின்ற அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களுடைய சார்பாக எனது நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும் நன்றி தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.*

முற்பகல் 11-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியவர் ஐயா இளையபெருமாள் அவர்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகவும், தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராகவும், மாணவப் பருவத்திலேயே இரட்டைப் பானையை உடைத்தவர்; அதேபோல, சமூக நீதிக்காகவும், சமத்துவத்திற்காகவும் போராடியவர்; 3 முறை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர்; அத்தகைய பெருமைமிக்க பெரியவர் இளையபெருமாள் அவர்களுடைய நூற்றாண்டையொட்டி அவர்களுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடலூர் மாவட்டம்,*

[திரு. ட்டி. இராமச்சந்திரன்] [2023 ஏப்ரல் 18

சிதம்பரத்தில் நூற்றாண்டு நினைவரங்கம் அமைக்கப்படும் என்று அறிவித்த அறிவிப்பை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்திய நாட்டில் பட்டியலின மக்கள் சட்டரீதியான சலுகைகளையும், ஏராளமான உரிமைகளையும் பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால், அது மறைந்த ஐயா இளையபெருமாள் அவர்களுடைய அந்த ஆணையம், இந்திய நாடு முழுவதும் இருக்கக்கூடிய பட்டியலின மக்களுடைய துயரங்களையும், கொடுமைகளையும் வெளிக் கொண்டு வந்து, இப்படியான சட்டங்களை அந்த மக்களுக்குப் பெற்றுத் தந்ததில் இளையபெருமாள் அவர்களுடைய பங்கு மகத்தானது. அவர் மிகச் சிறந்த போராளி. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அயோத்திதாச பண்டிதர் வகையில் வைத்துப் போற்றப்படக்கூடிய ஒரு சமூகச் சீர்திருத்தவாதி ஐயா இளையபெருமாள் அவர்கள். அவர் பட்டியலின மக்களுக்கு மட்டும் தொண்டாற்றவில்லை; நாடு முழுவதும் காங்கிரஸ் பேரியக்கத்தின் தலைவராக இருந்து, காங்கிரஸ் பேரியக்கத்திற்கும் வழிகாட்டிய ஒரு மகத்தான தலைவர் ஐயா இளையபெருமாள் அவர்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சரியான காலத்தில் அவருடைய பிறந்த மண்ணான சிதம்பரத்தில் நினைவரங்கம் அமைக்கப்படும் என்று விதி 110-ன்கீழ் அறிவித்திருக்கிறார்கள். உண்மையிலேயே, தக்க நேரத்தில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்பதற்காக நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.

***திரு. ம. சிந்தனை செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வார்த்தைகளால் விவரிக்க இயலாத உணர்வுகளோடு இந்த மாமன்றத்தில் நான் நிற்கிறேன். பெரியவர், மறைந்த தலைவர்

2023 ஏப்ரல் 18] [திரு. ம. சிந்தனை செல்வன்]

ஐயா இளையபெருமாள் அவர்களுக்கு ஒரு நினைவரங்கம் வேண்டும் என்கிற கோரிக்கையை நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாத உரையில் தங்கள் அனுமதியோடு இந்த அரங்கத்திலே நான் முன்வைத்தேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய அன்புச் சகோதரர் பாபு அவர்களும், எங்களை வழிநடத்திக் கொண்டிருக்கின்ற எழுச்சித் தமிழர், மரியாதைக்குரிய தலைவர் முனைவர் அண்ணன் திருமாவளவன் அவர்களும் இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு பல முறை கொண்டு சென்றிருக்கிறார்கள். ஆனால், இவ்வளவு சீக்கிரமாக இந்த அறிவிப்பு வரும் என்று நான் ஒருபோதும் கருதவில்லை. கேட்டு முடிந்து அமர்வதற்குள்ளாகவே இந்த அறிவிப்பினைத் தந்திருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) நன்றிப் பெருக்கோடு நிறைகிற கண்ணீர் நிறைந்த நன்றியை நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காட்டுமன்னார்கோவிலில் பிறந்த ஐயா இளையபெருமாள் அவர்கள், சமூக நல்லிணக்கத்திற்கான ஓர் அடையாளமாகத் திகழ்ந்தவர். எனக்கு முன்னால் அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுடைய தந்தையார் எம்.ஆர்.கே. என்று அழைக்கப்படுகின்ற அந்தப் பெரும் தலைவரோடு இணைந்து, முரண்படும் புள்ளிகளில் முரண்பட்டார்கள்; இணைந்து வாழ வேண்டும் என்பதையே இலக்காகக்கொண்டு, இறுதிவரை அவர்கள் இணைந்து அதைக் கொண்டு சென்றார்கள். அதனுடைய விளைவுதான், இன்று அனைத்து மக்களையும் அரவணைத்துச் செல்லக்கூடிய ஒரு மகத்தான, ஒரு சமூக நல்லிணக்கப் பகுதியாக அந்தப் பகுதி அமைந்திருக்கிறது. விருத்தாசலத்திற்கு அருகிலே வடவாடி பகுதியில், ஏழை, எளிய மாணவர்கள் கல்வி பயில வேண்டுமென்பதற்காக பள்ளிக்கூடத்தை அமைத்து, விடுதிகளையும் அமைத்து பாடாற்றியவர் ஐயா இளையபெருமாள் அவர்கள் என்பதை மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்கூட, நன்றியோடு இந்த அரங்கத்திலே சொன்னார்கள். வார்த்தைகளால் விவரிக்க இயலாத உணர்வுகளோடு இந்த அரங்கத்தில் நின்றிருக்கிற அதே சமயத்தில், ஒன்றை நான் தங்கள் அனுமதியோடு குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். 'திராவிட மாடல்' என்கின்ற அந்தச் சொல்லுக்கு ஒரு முழு பரிமாணத்தை இன்று நான் உணர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட மாடல் என்பது—'Success has many fathers' என்று

[திரு. ம. சிந்தனை செல்வன்] [2023 ஏப்ரல் 18

சொல்வார்கள். தோல்விக்கு நாம் யாரை வேண்டுமானாலும் காரணமாகச் சொல்லலாம். ஆனால் வெற்றி என்று வருகிறபோது, அது யாராக இருந்தாலும், பெருந்தலைவர்கள்கூட அதைத் தானே உரிமை கொண்டாடுவதை நாம் பார்க்கிறோம். ஆனால் அப்படிப் பார்க்காமல், ஐயா எல். இளையபெருமாள் அவர்களது பணிகளை, அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்கின்ற திட்டம் உருவாவதற்கான அந்தத் தளத்தில்கூட அவர் ஆற்றிய பணிகளை மாசு, மருவில்லாமல் இந்த அரங்கத்தில் கம்பீரமாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதிவு செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒடுக்கப்பட்ட இந்த மண்ணின் பூர்வகுடி மக்களோடு வெற்றியைப் பகிர்ந்துகொள்ள முன்வந்திருக்கிறார். விதி 110-ன்கீழ் அவர் ஆற்றிய உரை, தமிழகத்தின் ஆகச் சிறந்த உரையை இலட்சோபலட்ச மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

அப்படிப்பட்ட, எளிய மக்களின்பாலும் இரக்கம் கொண்டிருக்கின்ற மரியாதைக்குரிய நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மக்களுடைய சார்பிலும், எழுச்சித் தமிழர் அண்ணன் திருமாவளவன் அவர்களின் சார்பிலும் மனம் நிறைந்த கோடானுகோடி நன்றியை நான் காணிக்கையாக்குகிறேன்.

முற்பகல் 11–35

மணிமண்டபம் என்பது ஓர் அலங்காரச் சொல்லாக இருந்தாலும்கூட, பிறந்த நாளிலும், நினைவு நாளிலும் மட்டுமே வந்துபோகிற, கொண்டாடப்படுகிற, பயன்படுத்தப்படுகிற இடமாக அது இருக்கிறது. ஆகவே, அதையும் இவர் மிக நுணுக்கமாகக் கவனித்து, நூற்றாண்டு நினைவரங்கம் கட்டப்படும் என்கின்ற இந்த அறிவிப்பு, உண்மையிலேயே சமூக நல்லிணக்கத்திற்கான உரையாடலை, தொடர்ந்து கொண்டு செல்கின்ற அவரது மாண்பை வெளிப்படுத்துகிறது. ஆகவே 1000 முறை, மனம் நிறைந்து, நெஞ்சம் நிறைந்து மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.

திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டியலின, பழங்குடியின மக்களுக்காகப் போராடிய

2023 ஏப்ரல் 18] [திரு. நயினார் நாகேந்திரன்]
மாபெரும் தலைவர், சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் மக்களுக்காகப் பணியாற்றியவர், டாக்டர் அம்பேத்கர் முதல் அயோத்திதாசப் பண்டிதர் வரையிலும், அந்த வரிசையில் இடம்பெற்றவர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விதி 110-ன்கீழ் அவருடைய அருமை, பெருமைகளை அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதற்குமேல் அவரைப் பற்றி சொல்ல வேண்டிய அவசியம் இல்லையென்றாலும், அத்தகைய பெருமகனாருக்கு நூற்றாண்டு நினைவரங்கம் கட்டுவதை பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் வரவேற்று, நன்றி சொல்லி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்குடியைச் சேர்ந்த எல்லோராலும் போற்றப்படுகின்ற மரியாதைக்குரிய பெரியவர் எல். இளையபெருமாள் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, நினைவரங்கம் அமைக்கப்படும் என்று, விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பதை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் நெஞ்சார வரவேற்கிறேன்.*

பெரியவர் இளையபெருமாள் அவர்கள், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்தவர். நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர். அதேநேரத்தில் ஒடுக்கப்பட்ட, பட்டியலின மக்களின் உரிமைக்கு உயர்ந்து குரல் கொடுத்தவர், அதற்காகப் போராடியவர். அதேநேரத்தில் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட எல்லா சமுதாய மக்களோடும் நல்லிணக்கமாக வாழ்ந்தார் என்பதற்கு சான்றுகள் ஏராளமாக இருக்கின்றன.

குறிப்பாக, தமிழ்நாட்டில் ஒரு நல்லிணக்கம் உருவாக வேண்டுமென்று எங்கள் மருத்துவர் ஐயா அவர்கள், சமூக நீதி, சமய நல்லிணக்க உரிமை அணி என்ற அணியை உருவாக்கினார்கள். அவர் அதனுடைய நிறுவனராகவும், நான் அதனுடைய ஒருங்கிணைப்பாளராகவும் இருந்தேன். அப்போது, பெரியவர் இளையபெருமாள் அவர்களை நான் நேரில் சந்தித்து, 'இந்த அணியில் வரவேண்டும், எங்கள் மருத்துவர் ஐயா அவர்கள் விரும்புகிறார்கள்' என்று சொன்னவுடன், 'மணி, நான் ரொம்ப சந்தோஷப்படுகிறேன். இதைத்தான் உங்கள் டாக்டர் செய்ய வேண்டுமென்று விரும்பினேன், அந்த அடிப்படையில் நான்

[திரு. ஜி.கே. மணி] [2023 ஏப்ரல் 18

உங்களோடு வருகிறேன்' என்று நேராக திண்டிவனம், தைலாபுரம் தோட்டத்திற்கு வந்தவர், கை குலுக்கி வரவேற்று, எங்கள் அணியில் சேர்ந்து பல்வேறு மாநாடுகளில், கூட்டங்களில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்குப் போராடியவர், நல்லிணக்கத்தோடு வாழ்ந்தார் என்பதற்கு மிகப் பெரிய சான்றாக இது அமையும் என்பதற்காக இந்த நேரத்தில் நான் இதைச் சுட்டிக்காட்டுகிறேன்.

முற்பகல் 11–40

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அவரைப் பாராட்டி பெருமைப்படுத்துகிற வகையில்தான், அவருக்கு அண்ணல் அம்பேத்கர் விருதை தமிழ்நாட்டில் முதன்முதலாக வழங்கினார். அதை வரவேற்று, அன்று பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் அறிக்கை கொடுத்து, கலைஞர் அவர்களுக்குப் பாராட்டு தெரிவித்தோம். அந்த அடிப்படையில், 'காலம்கருதி இடத்தாற் செயின்' என்ற கூற்றிற்கிணங்க, நூற்றாண்டு விழா காணும் அவருக்கு, இந்த நூற்றாண்டு விழாவைப் பெருமைப்படுத்துகிற வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நினைவரங்கம் அமைப்பதை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் நெஞ்சார வரவேற்று, அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விதி 110-ன்கீழான இந்த அறிவிப்பு, ஓர் ஆட்சி சமத்துவமான ஆட்சி, எல்லோருக்குமான ஆட்சி, நிகருக்கு நிகரான ஆட்சி என்பதை வெளிக்காட்டுகிறது. காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக எங்களுடைய முன்னாள் தலைவர் திரு. இளையபெருமாள் அவர்களுக்கு இந்த நூற்றாண்டு விழாவில் நினைவரங்கம் கட்டுவோம் என்ற அறிவிப்பை நாங்கள் மனதார வரவேற்கிறோம், பாராட்டுகிறோம். அவர்களுக்கு காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஒவ்வொரு தலைவரும் நூறாண்டுகளுக்குப் பிறகுதான் இந்த உலகத்தில் மின்னுவார்கள் என்று பல புத்தகங்களில் நாம் படித்திருக்கிறோம். புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள் 1891 ஆம் ஆண்டில் பிறந்திருந்தாலும், அவரது புகழ் உச்சத்தைத்

2023 ஏப்ரல் 18] [திரு. கு. செல்வபெருந்தகை]

தொட்டது 1991–ல்தான். அப்போதுதான், அவருடைய பெயரைச் சொல்லியே ஒரு பெரிய மாநிலத்தில் ஆட்சியைப் பிடிக்கின்ற நிலைக்கு வந்தார்கள். அதேபோன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய நூற்றாண்டு விழா தற்போது நடைபெறப் போகிறது. இந்த நூற்றாண்டு விழாவில், உலகம் முழுவதும் இன்று குறுஞ்செய்திகள் உட்பட எல்லா செய்திகளிலும் தலைவர் கலைஞர் அவர்கள், கடந்த காலங்களில் என்னென்ன அர்ப்பணிப்புகளை கொடையாக தமிழின மக்களுக்குச் செய்தார்கள் என்பதை நாம் பார்க்க முடிகிறது. அந்த அடிப்படையில், இந்த நூற்றாண்டு விழாவை ஒரு தலைவருடைய புகழை உயர்த்துவதற்கான விழாவாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மூன்று தினங்களுக்குமுன் நடைபெற்ற கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில், காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக இந்தக் கோரிக்கையை நாங்கள் வைத்தோம். அப்போது, 1979 ஆம் ஆண்டு அன்னை இந்திரா காந்தி அவர்களால் காங்கிரஸ் பேரியத்தின் தலைவராக அமர்த்தப்பட்டவர், 1980 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களோடு கூட்டணி வைப்பதற்கு பாடுபட்டவர். அப்படிப்பட்ட ஒரு தலைவர், ஒரு சமூகத்தின் தலைவர் என்று சொல்வதைவிட எல்லா சமூகங்களுக்குமான ஒரு தலைவராக பரிணாம வளர்ச்சி பெற்ற திரு. இளையபெருமாள் அவர்களுக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த கௌரவத்தை அளித்திருக்கிறார். அவர், ஒரு சமூகத்திற்கு என்று சொல்வதைவிட எல்லா சமூகங்களுக்குமான ஒரு தலைவராக வாழ்ந்தார் என்பதை அவருடைய உரையிலே காண முடிந்தது. ஆகவே, இதையெல்லாம் யார் செய்வார்கள் என்றால், எல்லோருக்குமான ஆட்சி நடத்தக்கூடிய ஒரு தலைவர் யாரோ, அவர்களால்தான் செய்ய முடியும்.

கடந்த வாரம் நம்முடைய மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்கூட ஒரு புத்தகத்தைக் கொடுத்திருந்தார்கள். அதைப் பார்த்தபோது எனக்கு வியப்பாக இருந்தது. (மணியடிக்கப்பெற்றது) மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும் என்று சொல்வார்கள். ஆனால், மாற்றான் தோட்டத்து தலைவர்களை புகழ்ச்சியாக அவர்களது வரலாற்றைச் சொல்லி, அவர்களை எப்படியெல்லாம் வர்ணிப்பார்களோ, அப்படி புகழ்ச்சியோடு அதில் குறிப்பிட்டிருந்தார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அந்தப் புத்தகத்தைக் காண்பித்தேன். இதெல்லாம் இந்தக் காலத்திலா நடைபெறுகிறது என்பது

அதிசயமாக இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எல்லோரையும் அரவணைத்து, இந்த தேசம், இந்த நாடு எல்லோருக்குமான நாடு, சமத்துவத்திற்கான நாடு என்ற அடிப்படையில், மீண்டும் மீண்டும் அதை நிறைவேற்றி வருகிறார். எனவே, மீண்டும் ஒருமுறை மனமார்ந்த வாழ்த்துகளையும், நன்றியையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. தனபால் அவர்கள்.*

திரு. ப. தனபால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 110-ன்கீழ், மறைந்த பெரும் தலைவர் திரு. இளையபெருமாள் அவர்களுக்கு நூற்றாண்டு நினைவரங்கம் கட்டுகிற இந்த நல்ல அறிவிப்பை அறிவித்திருக்கிறார்கள். வாழ்நாள் முழுவதும் தீண்டாமைக்கு எதிராகப் பாடுபட்ட பெரியவர் திரு. இளையபெருமாள் அவர்களுக்கு நூற்றாண்டு நினைவரங்கம் அமைப்பதை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக வரவேற்று, அமர்கிறேன்.*

2. விதி 110-ன்கீழ் முதலமைச்சரின் அறிக்கை—

தொடர்ச்சி

கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் திரு. இளையபெருமாள் அவர்களுக்கு நூற்றாண்டு நினைவரங்கம் அமைப்பது குறித்த முதலமைச்சரின் அறிக்கை-*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 110-ன்கீழ் நான் படித்த அறிக்கையில், திரு. இளையபெருமாள் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்து பணியாற்றியதை விட்டுவிட்டேன். எனவே, 1980 முதல் 1984 வரையிலான காலத்தில் சென்னை எழும்பூர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருந்து பணியாற்றியிருக்கிறார் என்பதையும் தயவுகூர்ந்து அதில் பதிவு செய்துகொள்ளும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி.*

2023 ஏப்ரல் 18]

3. கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் திரு. இளையபெருமாள் அவர்களுக்கு நூற்றாண்டு நினைவரங்கம் அமைத்தல்—முதலமைச்சரின் அறிவிப்பிற்கு நன்றி—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் திரு. சி.வி. கணேசன் அவர்கள் பேசிய பிறகு, பேசுகிறீர்களா? (குறுக்கீடு) மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–45

***மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், விதி 110–ன்கீழ் ஐயா திரு. இளையபெருமாள் அவர்களுக்கு நூற்றாண்டு நினைவரங்கம் அமைக்கப்படும் என்று அறிவித்திருப்பதற்காக, மக்களின் சார்பாக, தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பாக என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அண்ணல் அம்பேத்கர் அவர்களின் நினைவாக, சென்னையில் இருக்கின்ற சட்டக் கல்லூரிக்கு அம்பேத்கர் சட்டக் கல்லூரி என்று பெயர் சூட்டிய பெருமை நம்முடைய ஐயா, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம் அண்ணல் அம்பேத்கர் பிறந்த அவருடைய மாநிலத்திலேயே அவருடைய பெயரை வைப்பதற்கு மிகப் பெரிய போராட்டம் ஏற்பட்டபோது, தலைவர் கலைஞர் அவர்கள்தான் துணிச்சலாக (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டிலே அண்ணல் அம்பேத்கர் அவர்கள் பெயரிலே சட்டக் கல்லூரிக்குப் பெயர் சூட்டி பெருமை சேர்த்திருக்கிறார். தந்தை பெரியார் அவர்கள், சாதியை ஒழிக்க வேண்டும்; மக்களிடையே இருக்கின்ற வேறுபாட்டை களைய வேண்டுமென்பதற்காக தன் இறுதி மூச்சுவரை போராடினார்கள். நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களும் அவருடைய ஆட்சிக் காலத்திலே அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்கின்ற சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றி, அந்த மக்களை முன்னிறுத்திக் காட்டினார்கள். தந்தை பெரியார் அவர்களை நான் நேரில் பார்த்ததில்லை; அறிஞர் அண்ணா அவர்களைக்கூட நான்*

[திரு. சி.வி. கணேசன்] [2023 ஏப்ரல் 18

நேரடியாகப் பார்த்ததில்லை; தலைவர் கலைஞர் அவர்களோடு நான் வாழ்ந்திருக்கிறேன். தந்தை பெரியாராக, அண்ணல் அம்பேத்கராக, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களாக மூவரையும் ஒரே உருவத்தில் நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை நான் பார்க்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல ஆண்டுகாலமாகக் கூட்டப்படாமல் இருந்த ஆதி திராவிடர்களுக்கான விழிப்புணர்வுக் கூட்டத்தை பலமுறை கூட்டி, சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சித் தலைவர்களையெல்லாம் அழைத்துப் பேசி, இந்தச் சமூக மக்களுக்கு என்னென்ன பிரச்சினைகள் இருக்கின்றன என்பதைக் கேட்டறிந்து, அவற்றையெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக நிறைவேற்றிக் கொண்டு வருகிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடம். குறிப்பாக, இன்றைக்கு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையத்தை உடனடியாகக் கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கிறார்கள். குறிப்பாக, அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய புத்தகத்தை, தமிழிலே மொழிபெயர்க்க வேண்டுமென்பதற்காக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ரூ.5 கோடியை ஒதுக்கீடு செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் புத்தகத்தை மொழிபெயர்ப்பு செய்ய உத்தரவிட்டிருக்கிறார்கள். எல்லாவற்றையும்விட மிகச் சிறப்பு என்னவென்றால், அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாளான ஏப்ரல் 14 ஆம் தேதியை சமத்துவ நாளாக (மேசையைத் தட்டும் ஒலி) அறிவித்து, நம்முடைய சமூகத்திற்கும், அண்ணல் அம்பேத்கருக்கும் பெருமை சேர்த்திருக்கிறார்கள். ஐயா, திரு. இளையபெருமாள் அவர்களோடு இரண்டு தேர்தல்களிலே நான் பணியாற்றியிருக்கிறேன். குறிப்பாக, கீழ்வெண்மணி என்ற கிராமத்தில் தலித் மக்களுக்கெதிராக நடத்தப்பட்ட கொடுமையில் பலபேர் கொளுத்தப்பட்டனர். அப்போது அறிஞர் அண்ணா அவர்களே, திரு. இளையபெருமாள் அவர்களை அழைத்துப் பேசிய பெருமை அவருக்கு உண்டு. அத்தகைய சிறப்பு மிகுந்த ஐயா திரு. இளையபெருமாள் அவர்களுக்கு நூற்றாண்டு விழா நினைவரங்கம் அமைக்கப்படும் என்று அறிவித்திருப்பதற்காக என்னுடைய நன்றியை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

2023 ஏப்ரல் 18]

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ் மரியாதைக்குரிய ஐயா திரு. இளையபெருமாள் அவர்களுக்கு, அவர் வாழ்ந்த சிதம்பரத்திலே, அவரது நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நினைவரங்கம் அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். இன்றைக்கு செய்தித் துறையின் சார்பிலே அதைச் செயல்படுத்துவது என்கின்ற வகையில், அந்தத் துறையின் அமைச்சர் என்ற முறையில் நான் பெருமையடைகிறேன். அதே நேரத்தில் பட்டியலின மக்களின் சமூக நீதிக்காகவும், அவர்களுடைய வாழ்வாதாரத்திற்காகவும், மேம்பாட்டிற்காகவும் பாடுபட்ட அவருக்கு நினைவரங்கம் அமைப்பதிலே மகிழ்ச்சியடைகிறேன். அதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அந்த மாவட்ட அமைச்சர் ஒரு நிமிடம் பேச வேண்டுமென்று வாய்ப்பு கேட்டிருக்கிறார். மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்* Action King. *(மேசையைத் தட்டும் ஒலி) கோரிக்கை வைத்த 3, 4 நாட்களிலே மறைந்த பெரியவர்* LEP *அவர்களுடைய நினைவு நூற்றாண்டு தினத்தையொட்டி ஒரு நினைவரங்கத்தை அமைப்பதாக அறிவித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பகுதியைச் சார்ந்த, எங்கள் ஊரைச் சார்ந்த பெரியவர்* LEP *அவர்கள், என் தந்தையுடன் இணக்கமாக இருந்து, என் தந்தைக்குப் பிறகு, எங்களுடன் இணக்கமாக இருந்து, அந்தப் பகுதியிலே அமைதியை நிலைநாட்டுவதற்கு உறுதுணையாக இருந்து, ஒரு சமுதாயப் புரட்சி செய்து, அந்த அளவிற்கு அந்தப் பகுதி மக்களைப் பேணிக் காத்து, அமைதியாக வாழ்வதற்கு உறுதுணையாக இருந்த மாபெரும் தலைவர் அவர். அத்தகைய தலைவர் அவர்களுடைய நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்பதற்காக, சிதம்பரத்திலே பெரியவர்* LEP *என்று எல்லோராலும் அழைக்கப்படும் பெரியவர் இளையபெருமாள் அவர்களுக்கு நினைவரங்கம் அமைத்துக் கொடுக்கப்படும் என்று அறிவித்து, அவரது பெருமையை உலகிற்கு மீண்டும் தெரியப்படுத்திய*

[திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்][2023 ஏப்ரல் 18 மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியை எங்கள் மண்ணின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நிறைவாக, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பெரியவர் இளையபெருமாள் அவர்களுக்கு ஒரு நினைவரங்கம் அமைக்கப்படும்' என்ற ஒரு நற்செய்தியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்த மாமன்றத்தில் இருக்கிற அனைத்துக் கட்சித் தலைவர் பெருமக்களும் ஒட்டுமொத்தமாக அதை வரவேற்றிருக்கிறார்கள். இதை அறிவித்ததற்காக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எங்கள் தலைவர் அவர்களைப் புகழ்வதோடு, அவர்களைப் பாராட்டவும் நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம்.*

அண்ணன் இளையபெருமாள் அவர்களைப் பற்றி எல்லோரும் பல்வேறு கருத்துகளைச் சொன்னார்கள். நான் அவரோடு சட்டமன்றத்திலே இருந்தவன். அதுமட்டுமல்ல; நானும், அவரும் ஒரே வரிசையில்தான் அமர்ந்திருந்தோம். தற்போது, மாண்புமிகு திரு. மூர்த்தி அவர்களும், மாண்புமிகு திரு. சுப்பிரமணியம் அவர்களும் உட்கார்ந்திருக்கிற இடங்களில்தான் நானும், அவரும் உட்கார்ந்திருந்தோம். அப்போது எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தார்கள். இந்தப் பக்கம் மாண்புமிகு திரு. சுப்பு அவர்களும், அந்தப் பக்கம் மாண்புமிகு திரு. ரகுமான்கான் அவர்களும் இருப்பார்கள். நான் படுவேகமாக எழுந்து பேசுகின்றபொழுதெல்லாம், என்னை அமைதிப்படுத்தி, எப்படிப் பேச வேண்டும் என்று சொல்லிக்கொடுத்தவர் அண்ணன் இளையபெருமாள் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவரோடு நான் நீண்டகாலம் பக்கத்திலே உட்கார்ந்து பல கதைகளைப் பேசியிருக்கிறேன்; பழைய சங்கதிகளையெல்லாம் அவர் தெரிவித்திருக்கிறார். அவருக்கு நினைவரங்கம் ஒன்று அமைக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்கள் அறிவித்திருப்பது பாராட்டுக்குரியது.

2023 ஏப்ரல் 18] [திரு. துரைமுருகன்]

மண்ணினுடைய விடுதலைக்காக, சமுதாயத்தின் விடுதலைக்காக, மொழியைக் காப்பதற்காக, யார், யார் பாடுபட்டார்களோ, அவர்களையெல்லாம் நினைவுகூர்ந்து, அவர்களுக்கெல்லாம் நினைவு அஞ்சலியைச் செலுத்துகின்ற வகையில், மணிமண்டபங்களையோ அல்லது அரங்கங்களையோ கட்டி மரியாதை செலுத்துகின்ற, மரியாதையை உருவாக்குகின்ற அத்தியாயத்தை முதன்முதலாக ஆரம்பித்தவர் எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில்தான், கட்டபொம்மன், பூலித்தேவன், மருதுபாண்டியர், அண்ணல் அம்பேத்கர், மற்ற கவிஞர்கள் என எல்லோருக்கும் நினைவுச்சின்னங்களை அமைத்தார்கள். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் இறந்த அன்று நாங்கள் அவரோடு இருந்து, இறந்த பெருந்தலைவருக்கு நினைவரங்கம் எங்கே வைப்பது என்பதைப் பார்த்தோம்; ஞாபகம் இருக்கும் என்று கருதுகிறேன். அன்று மழை; தலைவர் கலைஞர் அவர்கள், உடனே வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு, கிண்டியிலே அனைத்து விளக்குகளையும் போடச் சொல்லி, அந்த வெளிச்சத்திலே பெருந்தலைவர் காமராஜருக்கு இந்த இடத்தில்தான் நினைவரங்கம் அமைக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டினார்கள். அதேபோன்று, பக்தவச்சலம் அவர்கள், எங்களை இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் செம சாத்து, சாத்தினாலும், அவர் இந்த நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்டவர் என்ற முறையிலே, அவருக்குக்கூட ஒரு நினைவு மண்டபத்தை அங்கே அமைத்துக் கொடுத்தார்கள்.

முற்பகல் 11–55

மொழிக்காகவும், இனத்திற்காகவும் பாடுபட்டவர்களுக்கு மரியாதை செலுத்துவது என்பது தலைவர் கலைஞர் அவர்களுடைய உள்ளத்திலே, இரத்தத்திலே ஊறிய ஒன்றாகும். அந்த இரத்தத்திலே உருவான தளபதி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி), தந்தையைப் போலவே நற்குணங்களைப் பெற்றிருப்பதைப் பாராட்ட எனக்குப் பெருமையாக இருக்கிறது என்றுதான் நான் தெரிவிப்பேன். இவ்வாறு அறிவிப்பார் என்று நினைத்துப் பார்க்கவில்லை. பெரியவர் இளையபெருமாள் ஒரு காலத்திலே தமிழ்நாடு முழுவதும் தெரிந்தவர். அகில இந்தியாவிற்குத் தெரிந்தவர். அந்தக் காலத்தில் அவருடைய report இந்தியாவை அடக்கியது. நான் உட்கார்ந்துகொண்டு பார்த்தேன். திருவாளர்கள்

[திரு. துரைமுருகன்] [2023 ஏப்ரல் 18

பொன்னப்ப நாடார், ஜோதி வெங்கடாச்சலம், திருப்பூர் மொகைதீன், ஹாஜா ஷெரீப், உமாநாத், கல்யாணசுந்தரம், ரமணி, தங்கமணி, மூக்கையா தேவர், அப்துல் சமது, ஹண்டே, சங்கரய்யா, திண்டுக்கல் பாலசுப்பிரமணியம், அரங்கநாயகி, இப்படிப்பட்ட பெருந்தலைவர்களோடு நானும் உட்கார்ந்திருந்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அவர்களெல்லாம் இல்லை. ஆனாலும் அவர்களிடம் நான் கற்ற பாடத்தை மறக்கவில்லை. எனவே, நீண்ட காலம் இந்த அவையில் இருக்கின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கின்ற காரணத்தினால், அதிலே முக்கியமாக என்னால் மறக்க முடியாதவராக என் பக்கத்து seat, மூன்றாவது இடத்தில் உட்கார்ந்திருந்தவர் அண்ணன் இளையபெருமாள் அவர்கள். அவருக்கு இன்றைக்கு ஒரு நினைவரங்கத்தை உருவாக்கவிருக்கிறார். அதனைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த நல்ல எண்ணத்திற்காக தளபதியை நான் மீண்டும் மீண்டும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த இளம் வயதில், இந்த இளம் உள்ளத்தில்--உருவத்தில்தான் நீங்கள் இளையவராகத் தெரிகிறாய்; ஆனால் உள்ளத்தில் உங்கள் அப்பாவை உள்ளே வாங்கி அடக்கியிருக்கிறாய் என்று நான் பெருமைப்பட்டுக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கு என் வாழ்த்தைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

4. தகவல் கோரல்

கோவை வனக் கோட்டம், தொண்டாமுத்தூர் தொகுதி, மதுக்கரை வனச் சரகம், காட்டுத் தீயைக் கட்டுப்படுத்த நடவடிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள், சொல்லுங்கள்.

*__திரு. எஸ்.பி. வேலுமணி:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டம், மேற்குத் தொடர்ச்சி மலைக்குட்பட்ட தொண்டாமுத்தூர் தொகுதியில், மதுக்கரை வனச் சரகத்திற்குட்பட்ட பெருமாள் கோவில்பதி, பச்சினான்பதி உள்ளிட்ட வனப் பகுதிகளில் கடந்த ஒரு வார காலமாக காட்டுத் தீ சுமார் 5 கிலோ மீட்டர் சுற்றளவு வனப் பகுதியில் எரிந்து வருகிறது. காட்டுத் தீயைக் கட்டுப்படுத்த வனத் துறையினரும், தீயணைப்புத்

2023 ஏப்ரல் 18] [திரு. எஸ்.பி. வேலுமணி]

துறையினரும் கடுமையாகப் போராடியும் கட்டுப்படுத்த இயலாமல், மாவட்ட நிர்வாகத்தின் கோரிக்கையின்படி சூலூர் விமானப் படை தள helicopter*-மூலம் மலம்புழா அணையிலிருந்து தண்ணீர் எடுத்து 16-4-2023-ல் காட்டுத் தீயை அணைக்கும் முயற்சி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தற்போது ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.*

காட்டுத் தீ காரணமாக இயற்கை மரங்கள், வன விலங்குகள், வனப் பகுதியைச் சுற்றி வாழும் மலைவாழ் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். வனத் துறையினர் காட்டுத் தீ ஏற்பட்டவுடன், விரைந்து நடவடிக்கை எடுத்திருந்தால், தீ பரவாமல் கட்டுப்படுத்தியிருக்கலாம். வருகின்ற மே மாதம் கடும் வெயில் இருக்கும் என்பதால், கூடுதல் கண்காணிப்புடன் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த அவையின் கவனத்தை ஈர்த்து, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதே பொருள் குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள் அவர்கள் விதி 55-ன்கீழ் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். தகவல் கோரல் என்ற முறையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள் அவர்களும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரலாம்.*

திரு. இரா. அருள்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுமாதிரி தொடர்ந்து ஆங்காங்கே ஏற்படுகிற காட்டுத் தீயை அணைப்பதற்காக ஒரு நிரந்தரமான நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று இந்த அவையின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையும், மாண்புமிகு முதல்வர் அவர்களையும் முதற்கண் வணங்குகிறேன். கோவை வனக் கோட்டத்திற்குட்பட்ட மதுக்கரை வனச் சரகத்தில் 11-4-2023 அன்று மாலை சுமார் 5-30 மணியளவில் கரடிமடை பிரிவு, மங்கலப்பாளையம் கிழக்கு சுற்றுக்குட்பட்ட சாய்காரமடை சரகம் பகுதியில் காட்டுத் தீ கண்டுபிடிக்கப்பட்டது. இந்தக் காப்புக் காடானது, 1,338.73 ஹெக்டர் பரப்பளவில் காய்ந்த புற்களும், பூத்து காய்ந்த மரங்களும், மூங்கில்களும் அதிகமுள்ள*

[டாக்டர் மா. மதிவேந்தன்] [2023 ஏப்ரல் 18

பகுதியாகும். தீ ஏற்பட்ட நாள் முதல் வனச் சரக அலுவலர்கள், தீ தடுப்புக் காவலர்கள், வேட்டை தடுப்புக் காவலர்கள், தன்னார்வத் தொண்டர்கள் என 40 பேர் கொண்ட குழு தீயை அணைக்க தொடர்ந்து போராடிக் கொண்டிருந்தார்கள். இந்நிலையில் காய்ந்த புற்கள் என்பதால், காட்டுத் தீயானது வேகமாகப் பரவியது. மலைப் பகுதிகளிலும், செங்குத்தான மலைப் பகுதிகளிலும் போராட்டக் குழுவினர் அணுக முடியாத நிலையில், வேகமாக பரவி வந்தது. வேகமாகப் பரவி வந்த தீயை அணைக்கும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு, இந்த நிலையில் மாவட்ட நிர்வாகத்தின்மூலம் சூலூர் விமானப் படையின் உதவியை நாடி, helicopter ரகம் Mi-17V5 உதவியுடன் 16-4-2023 அன்று காலை 6-30 மணியளவில் Bambi Bucket-மூலம் நீரை ஊற்றி தீயை அணைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதனால் பெரும்பகுதி தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

நண்பகல் 12-00

மேலும், கோவை கோட்டப் பணியாளர்களுடன் இணைந்து, தீயை அணைக்கும் பணியில் நீலகிரி, ஈரோடு, உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி என ஐந்து கோட்டப் பணியாளர்கள், பொதுமக்கள், மலைவாழ் பழங்குடியின மக்கள், தீயணைப்புத் துறை வீரர்கள் உள்ளிட்ட 210 பேர் தொடர்ந்து ஐந்து நாட்கள் இரவு-பகல் போராடி பல்வேறு பகுதிகளில் பரவிய தீயைக் கட்டுப்படுத்தினர். இதுவரையில் சுமார் 200 ஹெக்டேர் பரப்பளவு பாதிக்கப்பட்டுள்ளது எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதில் காய்ந்த புற்களும், பூத்துக் காய்ந்த மூங்கில்கள் மட்டுமே பெரும்பாலும் பாதிப்படைந்துள்ளன. விலை உயர்ந்த மரங்கள், சோலைக் காடுகள் மட்டுமல்லாமல் வன விலங்குகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட தீயணைப்புப் பணியினை வனத் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், முதன்மை தலைமை வனப் பாதுகாவலர், கோவை மாவட்ட ஆட்சியர், மாவட்ட வன அலுவலர், ஆனைமலை புலிகள் காப்பக வனப் பாதுகாவலர் போன்ற உயர் அலுவலர்கள் களத்திலிருந்து தீயணைப்புப் பணியினைத் துரிதப்படுத்தி, கிட்டத்தட்ட 90 சதவிகிதத் தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், கோடை காலத்தில் இதுபோன்ற நிகழ்வுகளை உடனடியாகத் தடுப்பதற்காக தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் 4 முதல் 5 கண்காணிப்புக் குழுக்கள்

2023 ஏப்ரல் 18] [டாக்டர் மா. மதிவேந்தன்]

அமைக்கப்பட்டுள்ளன. இதில் 20 முதல் 25 நபர்கள் இந்தத் தீ தடுப்புப் பணிகளை மேற்கொள்வார்கள் என மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. கவன ஈர்ப்பு

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் தொகுதி, நீரோடித்துறை முதல் இரையுமன்துறை வரையுள்ள ஏ.வி.எம். கால்வாய், ஆக்கிரமிப்புகளை அகற்றி தூர்வாருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. செ. ராஜேஷ் குமார் மற்றும் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்ட மக்களுடைய நீண்டகால கோரிக்கையான கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதி, நீரோடித்துறை முதல் இரையுமன்துறை, குளச்சல், மண்டைக்காடு வரை. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதைக் கேளுங்கள். நிகழ்ச்சி நிரலில் உள்ளதை மட்டும் வாசித்துவிட்டு அமருங்கள். இரண்டு கேள்விகள் இருக்கின்றன.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் தொகுதி, நீரோடித்துறை முதல் இரையுமன்துறை வரை உள்ள ஏ.வி.எம். கால்வாயில் ஆக்கிரமிப்புகளை அகற்றி தூர்வார வேண்டியது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் விவரமாக ஒரு விவர அறிக்கை மாமன்ற உறுப்பினர்களுக்காக மாண்புமிகு உறுப்பினர்களின் மேசையில் உள்ள கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கை

அனந்த விக்டோரியா மார்த்தாண்டவர்மா என்னும் (ஏ.வி.எம்.) கால்வாயானது, 1860 ஆம் ஆண்டு திருவிதாங்கூர் கொச்சி மகாராஜாவால் முன்மொழியப்பட்டு திருவனந்தபுரம், திருவல்லம், கோவளம், விழிஞ்ஞம், வெள்ளயானி, பூவார், கொள்ளங்கோடு, தூத்தூர், தேங்காய்ப்பட்டணம், குளச்சல், மண்டைக்காடு, மணவாளக்குறிச்சி, கன்னியாகுமரி ஆகிய இடங்களை நீர் வழியில் இணைக்கத் திட்டமிட்டுச் செயல்படுத்தப்பட்ட ஒரு செயற்கை கால்வாய் ஆகும். ஜூலை 1869 ஆம் ஆண்டு இக்கால்வாய்க்கான சேவை துவங்கப்பட்டு, கேரள மாநிலம் பூவார் முதல் தமிழ்நாடு மாநிலம் மண்டைக்காடு புதூர் வரை முடிக்கப்பட்டது. சில அறியப்படாத காரணங்களால் கன்னியாகுமரி வரை முடிக்கப்படவில்லை.

ஆரம்பத்தில் இக்கால்வாயானது நீர்வழிப் போக்குவரத்துக்காக கட்டப்பட்டாலும், பின்னர் பொதுமக்கள் குளிப்பதற்கும், உள்நாட்டுப் போக்குவரத்திற்கும், பொதுத் தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டது. தற்பொழுதும் தேங்காய்ப்பட்டணம் பகுதியில் கால்வாயின் ஒரு பகுதி படகுப் போக்குவரத்திற்காகவும் பொருட்களைக் கொண்டு செல்வதற்காகவும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

கால்வாய் வெட்டப்பட்டு 150 ஆண்டுகள் ஆகிவிட்டது. முறையான பராமரிப்பின்றி ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதாலும், திட மற்றும் திரவக் கழிவுகள் சேர்வதாலும் இக்கால்வாயானது பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. கால்வாயானது முழுவதும் சகதிகள் நிறைந்து இருப்பதால் சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படுகிறது. குளச்சல் முதல் இரையுமன்துறை வரையிலான 12 கி.மீ. தூரத்திற்கு கால்வாயின் அடையாளமே தெரியாத அளவிற்கு கால்வாயானது முழுமையாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. தற்போது கால்வாயானது தமிழ்நாட்டில் மண்டைக்காடு

புதூர் முதல் குளச்சல் வரையிலான 5 கி.மீ. நீளத்திற்கும், இரையுமன்துறையிலிருந்து நீரோடித்துறை வரையிலான 10 கி.மீ. நீளத்திற்கும் ஆக இரு நீட்சிகளாக உள்ளன. பின்னர் கேரள மாநிலத்திற்குள் செல்கிறது. 26–12–2004 அன்று ஏற்பட்ட சுனாமியில் ஏ.வி.எம். கால்வாய் மிகவும் சேதமடைந்தது. கால்வாயில் சகதி அதிகமாக இருந்ததாலும் கரைகள் ஆக்கிரமிக்கப்பட்டிருந்ததாலும் மண்டைக்காடு புதூர் முதல் குளச்சல் வரையிலான பகுதிகளில் சுனாமியின்போது மிகுந்த உயிரிழப்புகள் ஏற்பட்டன.

தற்போது கால்வாய்க்கும், கடற்கரைக்கும் இடையிலான பகுதிகளில் குடியிருப்புகள் அமைந்திருப்பதால் பொதுமக்களின் அன்றாடத் தேவைகளுக்கு பல பாலங்கள் இக்கால்வாயின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ளன. கால்வாயினை நீர்வழிப் போக்குவரத்துக்கு புனரமைக்கும்போது இக்கால்வாயின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள பாலங்கள் அனைத்தும் மேல்மட்டப் பாலங்களாக மாற்றம் செய்யப்பட வேண்டியது அவசியமாகிறது. ஆனால், அதிக குடியிருப்புகள் அமைந்திருப்பதாலும், போதுமான இடமில்லாமலுள்ளதாலும் மேல்மட்டப் பாலங்கள் இல்லாததாலும் இக்கால்வாயில் நீர்வழிப் போக்குவரத்து மேற்கொள்ள இயலாது.

மேலும், தேசிய நீர்வழிச் சட்டம் 17/2016–ன்படி கேரள மாநிலம் பூவார் முதல் தமிழ்நாடு மாநிலம் கிள்ளியூர் வட்டம் இரையுமன்துறை வரையுள்ள ஏ.வி.எம். கால்வாயானது தேசிய நீர்வழிப்பாதை 15 ஆக குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, ஏற்கெனவே உள்ள ஏ.வி.எம். கால்வாயின் நீரோடித்துறை முதல் இரையுமன்துறை வரையிலான 8.5 கி.மீ. நீளத்திற்கும் குளச்சல் முதல் மண்டைக்காடு புதூர் வரையிலான 5 கி.மீ. நீளத்திற்கும் ஆன இரு நீட்சிகளையும் தற்போதுள்ள நிலைக்கு உட்பட்டு புனரமைத்து, கால்வாயிலுள்ள சகதிகளை அப்புறப்படுத்தி, ஆக்கிரமிப்புகளை அகற்றி, கட்டுமானங்களைச் சீரமைத்து நீரினை வெளியேற்றம் செய்திட உரிய கட்டுமானங்களை மேற்கொண்டு கால்வாயில் சுத்தமான தண்ணீர் செல்வதற்கும் ஏ.வி.எம். கால்வாயினைச் சுற்றியுள்ள கிராமங்களிலுள்ள நிலத்தடி நீர் மேம்படவும் கடல்நீர் உட்புகுதலைத் தடுத்து நிறுத்தும் வகையிலும், சீரமைத்து மேம்படுத்த வேண்டியுள்ளது. மேற்படி ஏ.வி.எம். கால்வாய் தேசிய நீர்வழிப் பாதையாக உள்ளதால், இதனை மேம்பாடு செய்ய தேசிய நீர்வழி ஆணையம்மூலம் நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்யப்படும்.

[2023 ஏப்ரல் 18

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களைப் பொறுத்தவரை, அனுபவம் வாய்ந்த அமைச்சர், மூத்த அமைச்சர். உங்களுடைய விவர அறிக்கையை நான் சரியாகப் படித்துப் பார்த்தேன். அதில் முழு விவரமும் இருக்கிறது. ஆனால், என்னுடைய கோரிக்கை என்னவென்று சொன்னால், தமிழ்நாட்டிலுள்ள குமரி மாவட்டத்தையும், கேரளாவையும் இணைக்கின்ற முக்கியமான கால்வாய், AVM கால்வாய். அனந்த விக்டோரியா மார்த்தாண்டவர்மாவினுடைய பெயரில் இருக்கின்ற அந்தக் கால்வாய் கட்டப்பட்டு கிட்டத்தட்ட 150 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. இன்றைக்கு அது மண்டைக்காடு புதூரிலிருந்து குளச்சல் வரை 5 கிலோ மீட்டர். குளச்சலிலிருந்து இரையுமன்துறை வரை 12 கிலோ மீட்டர். இரையுமன்துறையிலிருந்து நீரோடித்துறை வரையில் 10 கிலோ மீட்டர். ஆக மொத்தம், 27 கிலோ மீட்டர் தூரத்திற்கு அந்தக் கால்வாய் இருக்கின்றது. குளச்சலிலிருந்து இரையுமன்துறை வரை இருக்கின்ற 12 கிலோ மீட்டர் தூரம், கால்வாய் இருக்கின்ற அடையாளமே தெரியாத அளவில் இருக்கின்றது; முழுமையாக ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன.

அதேபோல், இன்றைக்கு அந்தக் கால்வாயில் கழிவுநீர் கலந்து கழிவுநீர் ஓடையாகத்தான் அந்தக் கால்வாய் இருக்கின்றது. இந்தக் கால்வாய் என்பது முக்கியமான கால்வாய். (மணியடிக்கப்பெற்றது) ஆகவே, அந்தக் கால்வாயிலுள்ள ஆக்கிரமிப்புகளை முழுமையாக அகற்ற வேண்டும். ஏற்கெனவே Supreme Court, High Court சொல்லியிருக்கின்றன. நீராதார அமைப்புகளில் இருக்கக்கூடிய அத்தனை ஆக்கிரமிப்புகளையும் அகற்ற வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கின்றன. அந்த அடிப்படையில், முழுமையாக ஆக்கிரமிப்புகளை அகற்றி, சுத்தப்படுத்தி அதனை நீர்வழிப் போக்குவரத்தாக மாற்றுவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

2023 ஏப்ரல் 18]

பிற்பகல் 12–05

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* AVM *கால்வாய் என்றால்,* cinema AVM *அல்ல.* AVM *கால்வாயை அங்கே சென்று வெட்டியிருக்கிறார்கள் என்பது அல்ல. அனந்த விக்டோரியா மார்த்தாண்டவர்மா என்று ஒரு ராஜா அந்த ஊரில் இருந்தார். அனந்த விக்டோரியா மார்த்தாண்டவர்மா என்பதற்காகத்தான்* AVM *கால்வாய் என்று சொல்கிறார்கள். அவர் என்ன நினைத்தாரென்றால், இப்போது இருப்பதுபோல் திருவனந்தபுரம் முதல் கன்னியாகுமரி வரை* road *வசதிகள் அந்தக் காலத்தில் கிடையாது. மிகவும் சிரமமாக இருந்தபோது திருவனந்தபுரத்திலிருந்து கன்னியாகுமரிக்கு கடலுக்கும் பூமிக்கும் இடையில் ஒரு கால்வாய் வெட்டினால் நீர்வழிப் போக்குவரத்து நன்றாக இருக்கும் என்பதற்காக திருவனந்தபுரம்* to *திருவல்லம்; திருவல்லம்* to *கோவளம்; கோவளம்* to *விழிஞ்ஞம்; விழிஞ்ஞம்* to *வெள்ளயானி; வெள்ளயானி* to *பூவார்; பூவார்* to *கொள்ளங்கோடு; கொள்ளங்கோடு* to *தூத்தூர்; தூத்தூர்* to *தேங்காய்ப்பட்டணம்; தேங்காய்ப்பட்டணம்* to *குளச்சல்; குளச்சல்* to *மண்டைக்காடு, மண்டைக்காடு* to *மணவாளக்குறிச்சி, மணவாளக்குறிச்சி* to *கன்னியாகுமரி என இந்தக் கால்வாயை வெட்டிவிட வேண்டுமென்று பார்த்தார். அவர் நல்ல மனிதர். அவரால் வெட்ட முடியவில்லை. அதற்குப் பிறகு வெட்டி முடித்தார். அது முடிந்துவிட்டது. ஆனால், எவ்வளவு முடிந்தது என்று கேட்டீர்களென்றால், பூவார் முதல் மண்டைக்காடு–புதூர் வரைதான் அவரால் வெட்ட முடிந்தது. நீங்கள் சொன்னதுமாதிரி 150 வருடங்கள் ஆனதால், காலப்போக்கில் இதை யாரும் கவனிக்கவில்லை. எப்போது கால்வாய் வெட்டப்பட்டதோ அப்போதே அந்தப் பக்கம் செல்வதற்கு அவரவருடைய வீட்டுக்கு நேராக ஒரு பாலம் கட்டிக்கொண்டார்கள். நிறைய பாலம் கட்டிவிட்டார்கள். மக்கள் இப்போது அந்தப் பக்கம் குடியேறிவிட்டார்கள். பாதி இடங்கள் நிறைந்துவிட்டன. இப்போது நீங்கள் சொன்ன இடங்களில், உங்களுடைய ஊரில் கொஞ்சம் படகுகள் செல்கின்றன. குளச்சலில் உள்ள நீரோடித்துறை, இரையுமன்துறை, நரையூர் போன்ற பகுதிகளிலெல்லாம் கொஞ்சம் படகுகள் செல்கின்றன. அதுவும் சேறும், சகதியுமாக இருக்கிறது. அதை இப்போது ஒன்றும் செய்ய முடியாது. சரி, இது வரையிலாவது செய்து முடித்துவிடலாம் என்று பார்த்தால், இந்தத் துறையில் இருக்கிற நிலைமை என்னவென்று கேட்டீர்களென்றால்,*

[திரு. துரைமுருகன்] [2023 ஏப்ரல் 18

தேசிய நீர்வழிச் சட்டம், 17/2016-ன்படி, கேரள மாநிலம் பூவார் முதல், தமிழ்நாடு மாநிலம் கிள்ளியூர் வட்டம், இரையுமன்துறை வரை உள்ள AVM கால்வாயானது தேசிய நீர்வழிப்பாதை 15 ஆகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதனை தேசிய நீர்வழிப்பாதைக்கு எடுத்துக்கொண்டார்கள். இப்போது நாம் அதிலே கை வைக்க வேண்டுமென்றால், மத்திய சர்க்காரிடம் permission வாங்கிக்கொண்டு வர வேண்டும். அந்தமாதிரி நிலைமை இருக்கிறது. ஆனால், நியாயமாகப் பார்த்தால், கன்னியாகுமரி மாவட்டத்தில் சுனாமி, மற்ற இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்பட்டு, எல்லா இடங்களிலும், எல்லா ஆறுகளினுடைய கரைகளெல்லாம் உடைந்திருப்பதால் ஊருக்கு தண்ணீர் இல்லாமல் இருக்கிறது. எனவே, எல்லா ஆற்றுக் கரைகளையும் பலப்படுத்த வேண்டும். ஆகையினால், இப்போது தலைவர் என்ன செய்திருக்கிறார் என்று கேட்டீர்களென்றால், கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற எல்லா பாசனங்களையும், கோதையாறு பாசனப் பகுதியிலுள்ள அத்தனை வாய்க்கால்களையும் சீரமைக்க வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டுமென்றால், அதற்கு முதலில் DPR தயார் செய்ய வேண்டும். அந்த DPR-ஐத் தயார் செய்வதற்கு 2.6 கோடி ரூபாய் இப்போது ஒதுக்கீடு செய்து கொடுத்திருக்கிறார்கள். அந்த DPR 9 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அதிலே AVM கால்வாயும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்த DPR வந்த பிறகுதான் மற்ற கால்வாய்களோடு இதுவும் சேர்த்து செய்யப்படும் என்ற உறுதியை தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார், விளக்கம் போதும்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, கடற்கரைக்கும், கரைப் பகுதிக்கும் இடையில்தான் அந்தக் கால்வாய் இருக்கிறது. முக்கியமாக, அன்றைக்கு தோற்றுவித்ததற்கான காரணம், கடலில் இருக்கக்கூடிய உப்புநீர் கரைப் பகுதிக்கு வராமல் தடுப்பதற்காகவும், வாணிபம் செய்வதற்காகவும்தான். பழைய காலத்தில் இங்கிருந்து கேரளாவுக்குச் செல்வதற்கு போக்குவரத்து வசதி கிடையாது என்பதால்தான் நீர்வழிப் போக்குவரத்து அன்றைக்கு மக்களுக்கு பயன்பட்டது. இன்றைக்கு அந்தக் கால்வாய் மிகவும் மோசமாக, சாக்கடையைவிட மிகவும் மோசமாக இருக்கிறது. எனவே, DPR-விரிவான திட்ட அறிக்கை தயார் செய்வதற்காக ஏற்கெனவே நிதி

2023 ஏப்ரல் 18] [*திரு. செ. ராஜேஷ் குமார்*]

ஒதுக்கியிருப்பதாக நீங்கள் சொல்கிறீர்கள். அதைப் போர்க்கால அடிப்படையில் செய்ய வேண்டும். ஏனென்றால், அங்கிருக்கக்கூடிய பழைய பாலங்கள், அங்கிருக்கக்கூடிய கட்டுமானங்கள் அவ்வளவும் உடைந்திருக்கின்றன. மண்டைக்காடு பகவதியம்மன் கோயிலுக்கு வழிபட வருபவர்கள் முதலில் கடலில் குளிப்பார்கள். பிறகு அந்தக் கால்வாயில் குளித்த பின்னர்தான் கடவுளை வழிபடுவார்கள். அப்படிப்பட்ட ஓர் ஐதீகமான, முக்கியத்துவம் வாய்ந்த AVM *கால்வாயைச் சீர்படுத்தித் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதெல்லாம் உண்மை. உண்மையைத் தவிர வேறல்ல. எனக்கு அதில் அனுதாபம் உண்டு. நான் அந்தப் பகுதியை நிறைய பார்த்தவன். நான் மாணவனாகப் படிக்கின்ற காலத்திலிருந்து கன்னியாகுமரியில் உள்ள எல்லா பகுதிகளுக்கும் சென்று பேசியவன். எல்லா ஊரும் எனக்குத் தெரியும். பல வழக்குகள் என்மீது போடப்பட்டு,* Court*-ல் நின்று கொண்டிருந்தவன். ஆகையினால்,* Minister *ஆன பிறகும் நான் ஆய்வு நடத்தியிருக்கிறேன். எனவே, நீங்கள் சொல்வது முழுக்க, முழுக்க உண்மைதான். இல்லையென்று நான் சொல்லவில்லை. ஆனால், இப்போது இந்தக் கால்வாயை முழுக்க சீர்படுத்துவது என்பது மிகவும் கஷ்டம். அதற்கு நிறைய பணம் வேண்டும். அதற்கு நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்றால், மாண்புமிகு அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன் அவர்களைப் பாருங்கள். நான் தலைவர் அவர்களிடத்தில்கூட தனியாகச் சொல்லியிருக்கிறேன், கன்னியாகுமரியைக் காப்பாற்றவில்லையென்றால், ஆறுகளெல்லாம் வீணாகப் போய்விடும் என்று. விவசாயத்தை மட்டும் நம்பியிருக்கின்ற பூமி அது. வேறு தொழில் எதுவும் அங்கே கிடையாது. அந்த மக்கள் ரொம்ப கஷ்டப்பட்டுவிடுவார்கள். இதற்காக தனி கவனத்தைச் செலுத்தி, ஒரு* special fund *ஒதுக்கினாலொழிய, கன்னியாகுமரியைக் காப்பாற்ற முடியாது என்று நான் சொல்லியிருக்கிறேன். ஆகையினால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனிப்பார்கள்.*

[2023 ஏப்ரல் 18

பிற்பகல் 12–10

(ஆ) பால் கொள்முதல் விலையை உயர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டியது குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. விபி. நாகைமாலி, திரு. மா. சின்னதுரை, திரு. கு. செல்வபெருந்தகை, திரு. ஜேஜி. பிரின்ஸ், திரு. தி. வேல்முருகன், திரு. ஈஆர். ஈஸ்வரன், திரு. ட்டி. இராமச்சந்திரன், திரு. K மாரிமுத்து, திரு. கேபி. முனுசாமி, திரு. அக்ரி. எஸ்எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. கி. அசோக்குமார், திரு. எஸ்பி. வேலுமணி, திரு. ஆர்பி. உதயகுமார், திரு. AK செல்வராஜ், திரு. KN விஜயகுமார் மற்றும் திரு. T.K அமுல் கந்தசாமி ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். முதலில் பல கட்சி உறுப்பினர்கள் இதுகுறித்து, தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி எண் 55–ன்கீழ் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்க வேண்டும். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை அவர்கள்.

***திரு. மா. சின்னதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் கால்நடை வளர்ப்பு என்பது பிரதான தொழிலாக இருக்கின்ற காரணத்தால் "பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டியது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள். (குறுக்கீடு) திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் கொள்முதல் விலையை உயர்த்தக் கோரி பால் உற்பத்தியாளர்கள் போராட்டம் நடத்தி வருவது குறித்து, தங்கள் கவனத்தை ஈர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் விவர அறிக்கை ஒன்று அவையில் வைக்கப்பெற்றிருக்கிறது என்பதை

2023 ஏப்ரல் 18] [பேரவைத் தலைவர்]

மட்டும் பதிவு செய்துவிட்டு, உட்காருங்கள். (குறுக்கீடு) அதற்குப் பிறகு பேச நான் வாய்ப்புத் தருகிறேன். பெயர் இருக்கிறது, நான் தருகிறேன்.

***மாண்புமிகு திரு. சா.மு. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டுமென்ற உயரிய நோக்கோடு அயராது உழைத்து, இந்திய நாடே புகழும் திராவிட மாடல் ஆட்சியின் தலைவராக உள்ள மாண்புமிகு முதல்வர் அவர்களையும். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: *விவர அறிக்கை மாண்புமிகு உறுப்பினர்களின் மேசையின்மீது வைக்கப்பட்டுள்ள சிறு கணினியில் கவன ஈர்ப்பு என்ற தலைப்பில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அதனை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

அறிக்கை

தமிழ்நாட்டில் கிராமப்புற பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பால் உற்பத்தியாளர்கள் நலனைக் கருத்தில்கொண்டு பால் கொள்முதல் விலையை பசும்பால் மற்றும் எருமைப்பால் ஆகியவற்றிற்கு லிட்டர் ஒன்றுக்கு ரூ.3.00 (ரூபாய் மூன்று மட்டும்) 5-11-2022 அன்று முதல் உயர்த்தப்பட்டுள்ளது. பசும்பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ.35/- மற்றும் எருமைப்பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ.44/-வீதம், பால் கொள்முதல் விலை உயர்த்தப்பட்டு உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

பாலின் தரத்தை உயர்த்தவும், தரமான பால் உற்பத்தி செய்ய உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் விதமாகவும் 4.3% கொழுப்புச் சத்துக்கு மேல் மற்றும் 8.2% மற்றும் அதற்கு மேல் உள்ள இதர சத்துக்கள் கொண்ட பால் வழங்கும் உற்பத்தியாளர்களுக்கு ஒவ்வொரு 0.1% கூடுதல் கொழுப்புச் சத்திற்கும் 3 பைசா கூடுதலாக வழங்கப்படுகிறது. தற்போது பால் உற்பத்தியாளர்கள் லிட்டர் ஒன்றுக்கு ரூ.7/- உயர்த்தி வழங்க கோரிக்கை வைத்துள்ளனர். பால் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்குவது என்பது அரசின் கொள்கை முடிவாகும்.

பால் உற்பத்தியாளர்கள் நல சங்கத்தினர் பால் நிறுத்தப் போராட்டம் அறிவித்ததனால், அனைத்து களப் பணியாளர்களும் பால் உற்பத்தியாளர்களைச் சந்தித்து, தனியார் நிறுவனங்களைப்போல் அல்லாமல், ஆவின் வருடம் முழுவதும் ஒரே சீரான பால் கொள்முதல் விலை வழங்குகிறது என்றும், குறைந்த விலையில் கால்நடை தீவனம் மற்றும் தாது உப்புக் கலவை வழங்குதல், கால்நடை மருத்துவம் மற்றும் இனவிருத்தி வசதி, கால்நடை காப்பீடு வசதிகள், தீவனப் புல் வளர்க்க நிதியுதவி போன்ற நலத் திட்டங்கள் பால் உற்பத்தியாளர்களுக்கு ஆவின்மூலம் வழங்கப்படுகின்றன என்பது குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது. தற்போது பால் உற்பத்தியாளர்கள் பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு எவ்வித இடையூறுமின்றி எப்பொழுதும்போல் தொடர்ந்து பால் வழங்கி வருகின்றனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை அவர்கள். அவர் ஏற்கெனவே பேசியிருக்கிறார். சரி, சரி.*

திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, நான் பேசவிடுகிறேன். (குறுக்கீடு) எல்லோரும் ஒவ்வொரு நிமிடம்தான் பேசுகிறார்கள். நிறைவாக நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்களுக்கு* mike *கொடுங்கள்.*

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு 10 ரூபாய் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை.*

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு அமைச்சரின் கவனத்தை ஈர்த்துவிடுகிறேன். பிறகு பதில் சொல்லுங்கள். மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதாவது, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து, விதி 55–ன்கீழ் வரக்கூடிய, அந்த* paper *எல்லாமே, யார் முதலில் தந்தார்களோ,* 'first come

2023 ஏப்ரல் 18] [பேரவைத் தலைவர்]

first' *என்ற முறையில்தான் இதுவரையில் எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அந்த அடிப்படையில், திரு. மா. சின்னதுரை அவர்கள்தான் முதலில் தந்திருக்கிறார்கள். தேதி, நிமிடம் வாரியாக இங்கே இருக்கிறது; அந்த அடிப்படையில்தான் சொல்கிறேன். இப்போது பேச வருகின்றவர்கள் அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன் என்று சொல்ல வேண்டாம். சுருக்கமாகப் பேசி, உங்களுடைய கேள்வியைக் கேட்டு அமரும்படி கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதைய சூழலில், கால்நடை வளர்ப்பு என்பது அரிதாகி வருகின்ற இந்தச் சூழலில், கால்நடை வளர்ப்பின்மூலம் பால் உற்பத்தி செய்து வருகின்ற பால் உற்பத்தியாளர்கள் தங்களுக்கு நியாயமான, கட்டுப்படியான விலையில்லாத காரணத்தினால் பாலினை சாலைகளில் ஊற்றி, அரசின் கவனத்தை ஈர்க்கின்ற போராட்டங்களை முன்னெடுத்தும் அரசின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில் பல்வேறு உண்ணாவிரத அறப்போராட்டங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் செய்து வருகிறார்கள். விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற எந்த ஒரு விளை பொருளுக்கும் நியாயமான, கட்டுப்படியான விலையை அரசு கடந்த காலங்களில் முறையாகத் தரவில்லை. தற்போதும் அதற்கான தீர்வுகள் இல்லாத ஒரு சூழலில், விவசாயிகள் தாங்கொணா துயரத்தில் இருக்கிறார்கள். பால் உற்பத்தியாளர்களுக்குக் கட்டுபடியாகக்கூடிய, நியாயமான குறைந்தபட்ச விலை கிடைப்பதற்கு மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்களும், அரசும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்கிற கோரிக்கையை முன்வைத்து, அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

பிற்பகல் 12–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதைப்போல, ஒரு லிட்டர் பசும்பால் ரூ.35/–க்கும், எருமைப்பால் ரூ.44/–க்கும் கொள்முதல் செய்யப்படுகிறது. இன்று இருக்கக்கூடிய சூழ்நிலையில்*

[திரு. ஜே.ஜி. பிரின்ஸ்] [2023 ஏப்ரல் 18

கால்நடைத் தீவனங்கள் விலை சுமார் 30 சதவிகிதம் அளவிற்கு அதிகரித்துள்ளது. அதனால், சாதாரண விவசாயி மாடுகளை வைத்துக்கொண்டு, பராமரிக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. இன்று இருக்கக்கூடிய சூழ்நிலையில் ஒரு லிட்டர் பசும்பால் ரூ.50/– என்ற அளவிற்கும், ஒரு லிட்டர் எருமைப்பால் ரூ.60/– என்ற அளவிற்கும் பாலின் கொள்முதல் விலை உயர்த்தப்பட்டால்தான் கட்டுப்படியாகும். அரசின் மூலமாக தீவனங்கள் கொடுக்கப்படுவதாகச் சொல்கிறார்கள். ஆனால், தீவனங்கள் போதுமானதாக, sufficient ஆக இல்லை. மேலும், பல்வேறு மருந்துகள் வழங்கப்படுவதாகவும், உதவிகளைச் செய்வதாகவும் சொல்கிறார்கள். ஆனால், விவசாயிகளை ஊக்குவிக்கவில்லை. கேரளாவைப் பொறுத்தமட்டில், மாடு கட்டக்கூடிய தொழுவம் அமைக்க ரூ.1 இலட்சம் ஆகுமென்றால், ரூ.80,000/– subsidy கொடுக்கிறார்கள். அதுபோல, ரூ.1 இலட்சம் மதிப்பில், பசு மாடு வாங்குகிறார்கள் என்றால், பஞ்சாயத்தில் ரூ.50,000/– subsidy கொடுக்கிறார்கள். அதுபோல், ஒரு மூட்டை தீவனம் வாங்குவதற்கு ரூ.1,000/– ஆகிறது என்றால், ரூ.500/– கொடுக்கிறார்கள். இப்படி பல்வேறு வகைகளில் support கொடுக்கிறார்கள். ஆனால், தமிழ்நாட்டில் அப்படிப்பட்ட நிலையில்லை. பால் மிக முக்கியமான ஒன்று. பசுமாடு வைத்திருப்பவர்களுக்கு பாலை உற்பத்தி செய்கிற விவசாயப் பெருமக்களுக்கு, support செய்ய வேண்டும். ஏனென்றால், மாடு வைத்திருப்பவர்களுக்குத்தான் அதனுடைய கஷ்டம் தெரியும். மாடுகளைப் பராமரிப்பது குறித்தும், விவசாய மக்கள் எந்தளவுக்குப் பின்தங்கியிருக்கிறார்கள் என்பது குறித்தும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் தெரியும். ஆகவே, climate–க்கு ஏற்றவகையில், மாவட்டங்களுக்கு ஏற்றவகையில், மாடுகளை விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும். சில இடங்களில் Jersey இன மாடுகள் இருக்கும்; சில இடங்களில் காங்கேயம் இன மாடுகள் இருக்கும்; இன்னும் சில இடங்களில் பல்வேறு இன மாடுகள் இருக்கும். எந்தெந்த இடங்களில் எப்படி பால் உற்பத்தி ஆகுமோ, அந்தந்த இடங்களில் நிலவும் climate–க்கு ஏற்றவகையில், மாடுகளைக் கொடுக்க வேண்டும். அதற்குத் தேவையான மருந்துகளைக் கொடுக்க வேண்டும்; தேவையான உதவிகளைச் செய்ய வேண்டும்; கறவை machines கொடுக்க வேண்டும். இத்தகைய பல்வேறு உதவிகளைச் செய்தால்தான் பசு மாடுகளை வளர்க்கின்றவர்களுக்கும், எருமை மாடுகளை வளர்க்கின்றவர்களுக்கும் உதவியாக இருக்கும் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

2023 ஏப்ரல் 18] [திரு. ஜே.ஜி. பிரின்ஸ்]

பால் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கும், பாலின் கொள்முதல் விலையை உயர்த்துவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும், ஏழை விவசாய மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்று கூறி, அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.*

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர்கள், பால் பண்ணை வைத்திருக்கிறவர்கள் அல்ல; அவர்களெல்லாம் ஏழை விவசாயிகள். 1 ஏக்கர், 2 ஏக்கர் நிலத்தைக்கொண்டு விவசாயம் செய்து பிழைத்துக் கொண்டிருப்பவர்கள். பாலை கறந்து விற்பதன் மூலமாகத்தான் அவர்கள் வாழ்வாதாரத்தைப் பெறுகிறார்கள். அப்படிப்பட்ட பால் உற்பத்தியாளர்களுக்குக் கொள்முதல் விலையை உயர்த்தித் தருவதற்கு அரசு முன்வர வேண்டுமென்பதுதான் எங்களது கோரிக்கை. இன்றைக்கு பசும்பாலுக்கான உற்பத்திச் செலவு ரூ.55/– ஆகிறது. எருமைப்பாலுக்கான உற்பத்திச் செலவு ரூ.68/– ஆகிறது. பசும்பாலுக்குக் குறைந்தபட்ச கொள்முதல் விலையாக ரூ.50/–ம், எருமைப்பாலுக்குக் குறைந்தபட்ச கொள்முதல் விலையாக ரூ.60/–ம் கொடுப்பதற்கு அரசு முன்வர வேண்டும்.*

அண்டை மாநிலங்களான கேரளாவிலும், கர்நாடகாவிலும் பால் உற்பத்தியாளர்களுக்கு ஒரு லிட்டருக்கு ரூ.5/– ஊக்கத்தொகை அரசின்மூலம் கொடுக்கப்படுகிறது. பால் உற்பத்தியாளர்களைப் பாதுகாக்க வேண்டும். இதற்காக எப்போதும் பால் உற்பத்தியாளர்களால் போராட்டங்கள்தான் நடத்தப்படுகின்றன. அதிலிருந்து தீர்வைக் காண்பதற்கு இப்போது கொள்முதல் விலையை உயர்த்தித் தரவேண்டும். அதேபோன்று, வருடா வருடம் இவ்வளவு உயரும் என்கிற நிலையைக் கொண்டுவந்தால், பால் உற்பத்தியாளர்களின் போராட்டத்தைக் குறைக்க முடியும். அதற்கு அரசு முன்வர வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

பிற்பகல் 12–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

[2023 ஏப்ரல் 18

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்பு மற்றும் மாட்டுத் தீவனப் பொருட்களின் விலை உயர்வால் இன்றைக்கு பால் உற்பத்தியாளர்கள் பாலுக்குக் கூடுதல் விலை அளிக்கப்பட வேண்டுமென்று பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். இன்றைக்கு தனியார் பால் நிறுவனங்கள்மூலம் ஒரு லிட்டர் ரூ.40/– முதல் ரூ.47/– வரை விற்கப்படுகிறது. ஆனால், நமது ஆவின்மூலம் கொள்முதல் செய்யப்படும் பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ.35/–லிருந்து ரூ.44/–க்குதான் விற்கப்படுகிறது. லிட்டர் ஒன்றுக்கு ரூ.10/– கூடுதலாக வழங்க வேண்டுமென்று பால் உற்பத்தியாளர்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆகவே, அரசு லிட்டர் ஒன்றுக்கு ரூ.10/–ஐ கூடுதலாக வழங்க வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை அவர்கள். இரண்டு முறை எழுந்தீர்கள். உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்பளிக்கவில்லை. சுருக்கமாகக் கேள்வியை மட்டும் கேளுங்கள். விரைவில் முடியுங்கள்.

திரு. மா. சின்னதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பகுதி கிராமப்புற ஏழை மக்கள் குடிசைத் தொழிலாக பால் உற்பத்தியைச் செய்து வருகிறார்கள். கால்நடை பராமரிப்புச் செலவு அதிகரித்திருக்கிறது. எனவேதான், பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டுமென்று பால் உற்பத்தியாளர்கள் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். தற்போது விற்கிற விலையிலிருந்து கூடுதலாக லிட்டருக்கு ரூ.10/– கொடுத்தால்தான் உற்பத்தியினை அதிகரிக்க இயலும். கிராமப்புற வேளாண்மைக் குடும்பங்கள் பிழைப்பதற்கு மிக வசதியாகவும் இருக்கும். இன்றைக்கு இருக்கக்கூடிய சிரமத்தைப் போக்குவதற்கு கூடுதல் விலை என்பது தவிர்க்க முடியாததாக உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விலையை உயர்த்துவதற்கு உதவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆவின் பால், 38 இலட்சம் லிட்டர் கொள்முதல் செய்யப்பட்டது. ஆனால், தற்போது அது 25 இலட்சம் லிட்டராகக் குறைந்துவிட்டது. இதனை அதிகரிக்க முயற்சி செய்ய வேண்டும். எனவே, கொள்முதல் விலையை உயர்த்தித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிறைவாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள்.

2023 ஏப்ரல் 18]

திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் பொருளாதாரத்தில் பால் உற்பத்தி என்பது, மிகவும் முக்கியமான ஒன்றாக இருக்கிறது. காரணம், ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈஸ்வரன் அவர்கள் சொன்னதுபோல், பால் உற்பத்தியாளர்கள் கிராமப்புறங்களில் பண்ணைகளை வைத்துக்கொண்டு பால் உற்பத்தி செய்வதில்லை. ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு பசு மாடு இருக்கும் அல்லது ஒரு எருமை மாடு இருக்கும். இதைப் பயன்படுத்திக் கொண்டுதான் அந்த மக்கள் குடும்ப வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கின்றனர். எனவே, பால் உற்பத்தி செய்யக்கூடிய பசு மாடுகளுக்கும், எருமை மாடுகளுக்கும் வழங்கப்படும் தீவனத்தின் விலை இன்றைக்குக் கடுமையான அளவில், 100 மடங்கு உயர்ந்திருக்கிறது. அதோடுமட்டுமல்லாமல், பால் உற்பத்தி விலை என்பது, கொழுப்பின் அடிப்படையில்தான் நிர்ணயம் செய்யப்படுகிறது. அந்தக் கொழுப்பு பால் வரக்கூடிய அளவில் தீவனத்தை அரசு வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்லாமல், தொடர்ந்து பால் கிடைக்கக்கூடிய சூழ்நிலையில், எப்படி உழவுக்கேற்ற fertilizers-க்கு விலை நிர்ணயம் செய்யப்படுகிறதோ, அதேபோன்று மாட்டுத் தீவனத்திற்கும் அரசே ஒரு குறிப்பிட்ட விலையை நிர்ணயம் செய்து, அந்தந்த Distributors-க்கு அறிவுரை வழங்க வேண்டும். இல்லையென்றால், நிச்சயமாக இந்த பால் உற்பத்தியாளர்கள் கடும் பாதிப்பிற்குள்ளாவார்கள். எனவே, 1 லிட்டர் பாலுக்கு, 10 ரூபாய் கூடுதலாக வழங்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்களின் பதில். முழுமையான பதிலைச் சொல்லி முடித்துவிடுங்கள்.

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் பாலின் கொள்முதல் விலையை உயர்த்தித் தர வேண்டுமென்று கூறினார்கள். அதேநேரத்தில், தனியார் நிறுவனங்கள் கூடுதலாகத் தருகின்றன என்கிற தகவலையும் இங்கே பதிவு செய்திருக்கிறார்கள். ‘உழவன் சேற்றில் கால் வைத்தால்தான் நாம் சோற்றில் கை வைக்க முடியும்’; ‘கடவுள் எனும் முதலாளி, கண்டெடுத்த தொழிலாளி, விவசாயி’; ‘ஏர் முனையில்லாவிட்டால் போர்

முனை இல்லை'; அப்படிப்பட்ட விவசாயிகள் நாள்தோறும் தன்னை வருத்திக்கொண்டு, பால் கூட்டுறவுத் துறையின்மூலம் நமக்கு பால் வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில், பால் விலையை உயர்த்தித் தர வேண்டுமென்று விண்ணப்பித்தபோது, 5-11-2022 அன்று நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தாயுள்ளத்தோடு 3.00 ரூபாயினை உயர்த்தித் தந்திருக்கின்றார்கள். இதன்மூலம் நாளொன்றுக்கு அரசுக்கு ஒரு கோடியே ஐந்து இலட்சம் ரூபாய் நிதிச் சுமை ஏற்படுகிறது. இருந்தாலும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அதைப் பற்றி கவலைப்படாமல் வழங்கினார்கள். 'இது இலாப நோக்கோடு நடைபெறுகின்ற நிறுவனம் அல்ல, சேவை நோக்கோடு நடைபெறுகின்ற நிறுவனம்' என்ற உணர்வோடு இன்றைக்கு இப்பணியைச் சிறப்பான முறையில் செய்து கொண்டிருக்கிறோம். அண்மையில் சில மாநிலங்களில் 10 ரூபாய் உயர்த்திக் கொடுத்தார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். நான் ஏற்கெனவே பதிவு செய்திருக்கின்றேன். அண்மையில் Lumpy skin disease *என்ற ஒரு அரிய வகை நோய் கன்னியாகுமரி-காஷ்மீர் வரை, கர்நாடகா, ஆந்திர மாநிலம், தெலுங்கானா மற்றும் கேரள மாநிலங்களிலெல்லாம் இருக்கின்ற அனைத்து மாடுகளுக்கும் வந்தது. இதனை கழுத்து கழலை என்று சொல்வார்கள். இந்த தோல் கழலை என்ற அரிய வகை நோய் வந்ததன் காரணமாக, பல இலட்சம் மாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, மகாராஷ்டிரா மாநிலத்தில் மட்டும் சொல்ல வேண்டுமானால், 3,50,000 மாடுகளுக்கு அந்த நோய் வந்திருக்கின்றது. இந்நோயால், இறந்த மாடுகள் 25,000. பஞ்சாபில் 1,74,000 மாடுகளுக்கு நோய் ஏற்பட்டிருக்கிறது; ஏறக்குறைய 18,000 மாடுகள் இறந்திருக்கின்றன. கர்நாடகாவில் 1,55,000 மாடுகளுக்கு நோய் ஏற்பட்டிருக்கிறது, 12,500 மாடுகள் இறந்திருக்கின்றன. இதேபோன்று, குஜராத், அரியானா, ஜம்மு-காஷ்மீர் ஆகிய மாநிலங்களில். . . (குறுக்கீடுகள்)*

பிற்பகல் 12-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அமைதியாக இருங்கள். தயவுசெய்து கொஞ்சம் அமைதியாக இருங்கள். அமைச்சர் அவர்களும் சுருக்கமாகப் பதிலை முடியுங்கள்.*

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: *அந்த* disease *ஏற்பட்ட காரணத்தால் ஏறக்குறைய அங்கு அனைத்து மாடுகளுக்கும் கறவை நின்றுவிட்டது. மாடுகளும் குறைந்துவிட்டதால், அந்த*

2023 ஏப்ரல் 18] [திரு. சா.மு. நாசர்]

மாநிலத்தினுடைய தேவைகளை நிறைவு செய்ய வேண்டுமென்ற உணர்வின் அடிப்படையில்—நம்முடைய border*–ல், நம் தமிழகத்தில் அந்த நோய் வரவில்லை. கர்நாடகாவை ஒட்டி இருக்கக்கூடிய தருமபுரி மாவட்டத்தில் ஒரு சில இடங்களில் அந்த நோய் வந்தபோது, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் எடுத்த கடுமையான முன்னெச்சரிக்கை நடவடிக்கையின் காரணமாக தமிழகத்தில் மட்டும் அந்த நோய் ஏற்படவில்லை. நம்முடைய* procurement *சரியான முறையில் இருந்தது. ஆனால், மற்ற மாநிலங்களிலெல்லாம் ஒட்டுமொத்தமாக கால்நடைகள் குறைந்த காரணத்தால், அந்த மாநிலங்களினுடைய தேவைகளை நிறைவு செய்ய வேண்டுமென்ற உணர்வோடு தனியார் நிறுவனங்களெல்லாம் தமிழகத்தை நோக்கி படையெடுத்து, அவர்கள் 5 ரூபாயிலிருந்து 7 ரூபாய் அதிகமாகக் கொடுத்து பாலை வாங்குகிறார்கள். மாநில* border*–ல் இருக்கக்கூடிய அனைத்து* Co–operative Societies*–ல் நாம் ஒரு லிட்டர் பாலை 35 ரூபாய் கொடுத்து வாங்குகிறோம். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 32 ரூபாயிலிருந்து 3 ரூபாய் உயர்த்திய காரணத்தால் 35 ரூபாய் கொடுத்து வாங்குகிறோம். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உரையை முடித்து விடுங்கள். அமைச்சர் என்னைப் பார்த்து பேசி முடியுங்கள். பதில் சொல்லி முடியுங்கள்.*

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: *அந்தச் சூழ்நிலை ஏற்பட்ட காரணத்தால், இன்றையதினம் மாண்புமிகு உறுப்பினர்களுடைய ஒட்டுமொத்த கோரிக்கையையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துச்சென்று, அவருடைய கருத்துகளுக்கேற்ப முடிவு செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

6. அறிவிப்புகள்

(அ) தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவு, 2023 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

6. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஆ) தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2023 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—*தொடர்ச்சி*

(ஆ) தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

[2023 ஏப்ரல் 18

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) அண்ணா பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு உறுப்பினர் தேர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அண்ணா பல்கலைக்கழக ஆட்சிக் குழுவில் Syndicate-ல் ஏற்பட்டுள்ள ஒரு வெற்றிடத்திற்கு சட்டமன்றப் பேரவை உறுப்பினரைத் தேர்ந்தெடுக்குமாறு கோரிக்கை வரப்பெற்றுள்ளது.

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினரின் பதவிக்காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து 12–9–2024 வரை ஆகும். தேர்ந்தெடுக்கப்பெற விரும்பும் வேட்பாளர்கள் தங்களின் வேட்புத்தாளினை 19–4–2023 பிற்பகல் 3 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். வேட்புத்தாள் வேண்டுவோர் பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். வேட்புத்தாள் 20–4–2023 முற்பகல் 10 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 20–4–2023 பிற்பகல் 3 மணிக்குள் தங்களது வேட்புத்தாளினைத் திரும்பப் பெறலாம்.

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்நாளோடு அவ்வமைப்பில் அவர் வகித்துவரும் உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

செல்லத்தக்க வேட்புத்தாள்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடத்திற்கு மேற்படுமாயின், இந்த அமைப்புக்கு உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க, தேர்தல் நடைபெறும். தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

8. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 19-மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2023–2024 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 19–மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.40,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 188, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. ராமச்சந்திரன்.*

திரு. தி. ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 220, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 284, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 317, மாண்புமிகு உறுப்பினர் திரு. R. ராதாகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1770, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3392, மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி.

திருமதி S. விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4036, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார்.

திரு. S. பழனி நாடார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4781, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6684, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார், இருக்கையில் இல்லை.

2023 ஏப்ரல் 18] [பேரவைத் தலைவர்]

வெட்டுத் தீர்மானம் எண் 387, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2475, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார்.

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2896, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6292, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6972, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்.

திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 662, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி.

திரு. அ. பண்ணாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 910, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன்.

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

2023 ஏப்ரல் 18] [திரு. ஈ. பாலசுப்ரமணியன்]

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1383, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா.*

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1800, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 2372, மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. *அமுல் கந்தசாமி.*

திரு. T.K. அமுல் கந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2652, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன்.*

திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3257, மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார்.

திரு. P.R.G. அருண்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3306, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். ஜெயராம்.

திரு. கே.ஆர். ஜெயராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3352, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன்.

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில்

2023 ஏப்ரல் 18] [திரு. அம்மன் K. அர்ச்சுணன்]

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3540, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி.

திரு. செ. கிருஷ்ணமுரளி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3654, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் இசக்கி சுப்பையா.

முனைவர் இசக்கி சுப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4227, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி.

திரு. மு. சக்ரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4558, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன்.

திரு. செ. சுந்தரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5994, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ.மா. மான்ராஜ்.

திரு. இ.மா. மான்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2286, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி.

டாக்டர் சி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3203, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன்.

2023 ஏப்ரல் 18]

திருமதி வானதி சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3442, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16.000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5390, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 67, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன்.*

திரு. பி. அய்யப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உசிலம்பட்டி தொகுதி, 108–ஆம்புலன்சில்*

பணிபுரியும் ஓட்டுனர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரையும் நிரந்தரப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 965, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.A. பாண்டியன்.

திரு. K.A. பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிதம்பரம் அரசினர் பொது மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1020, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.

திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதி, கம்மாபுரம் ஒன்றியம், தெற்கு சேப்ளாநத்தம் ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2023 ஏப்ரல் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1118, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி.

திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாநில நெடுஞ்சாலைகளில் ஆம்புலன்ஸ் நிறுத்தி வைக்கப்பட்டு அவசர சிகிச்சைக்கு உதவிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1292, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்.

திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல்லடம் அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1586, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. ஜெயசங்கரன்.

திரு. A.P. ஜெயசங்கரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆத்தூர் தொகுதியில் உள்ள அரசு மருத்துவமனைக்கு உயிர் காக்கும் உபகரணங்கள், (Operation Kits) கருவிகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1600, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன்.

திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள புற்றுநோய் வார்டிற்கு கூடுதல் கட்டடம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1871, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மகேந்திரன்.

திரு. சி. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மடத்துக்குளம் அரசு மருத்துவமனையில் 24 மணி நேரமும் சிகிச்சை அளிக்க போதிய மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் நியமிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1879, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.C. கருப்பணன்.

திரு. K.C. கருப்பணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உக்ரைனில் MBBS படித்த மாணவர்களை மீண்டும் நம் நாட்டில் இலவசமாக மருத்துவப் படிப்பு தொடர வழிவகை

2023 ஏப்ரல் 18] [திரு. K.C. கருப்பணன்]

செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2102, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. அர்ஜுனன்.

திரு. பொ. அர்ஜுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டிவனம் தொகுதி, ஓங்கூர் கிராமத்தில் புதிய சுகாதார நிலையம் அமைக்கவும், கீழ்சேவூர் ஊராட்சியில் பழுதடைந்த நிலையில் இயங்காமல் உள்ள துணை சுகாதார நிலையத்தைப் புனரமைத்து மீண்டும் துவக்கவும் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2179, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி.

திரு. V.P. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஒன்றியம், சின்ன வதம்பச்சேரியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2770, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்.

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொள்ளாச்சி தொகுதி, கிணத்துக்கடவு ஒன்றியம், வடசித்தூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர், கழிப்பிட வசதி அமைத்துத்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3111, மாண்புமிகு உறுப்பினர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன்.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அம்மா மினி கிளினிக் மருத்துவமனைகளில் தற்காலிகமாகப் பணியாற்றிய அனைவருக்கும் மீண்டும் பணி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3473, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி.

திரு. ஆ. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாப்பிரெட்டிபட்டி அரசு வட்டார மருத்துவமனையில் 60 படுக்கைகளுடன் மகப்பேறு மற்றும் மயக்கவியல் மருத்துவர்கள் நியமிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

2023 ஏப்ரல் 18] [*திரு. ஆ. கோவிந்தசாமி*]

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3706, மாண்புமிகு உறுப்பினர் திரு.* K.N. *விஜயகுமார்.*

திரு. K.N. விஜயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் வடக்கு தொகுதி, கணக்கம்பாளையம் ஊராட்சிப் பகுதியில் உள்ள தாய் சேய் நல விடுதியை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3774, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி.*

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கீழ்வேளூர் தொகுதி, வடுகச்சேரி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3881, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை.*

திரு. மா. சின்னதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கந்தர்வகோட்டை தொகுதி, புனல்குளம், வீரடிப்பட்டி, பெரியகோட்டை மற்றும் துவார் ஆகிய ஊராட்சிகளில் துணை சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3994, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரி. செந்தில்நாதன்.

திரு. பெரி. செந்தில்நாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகங்கை மருத்துவக் கல்லூரியில் நர்சிங் மற்றும் பார்மசி படிப்புகள் துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4072, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார்.

திரு. கி. அசோக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காவேரிப்பட்டினம் பேரூராட்சியில் உள்ள அரசு சமுதாய உடல் நல மையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2023 ஏப்ரல் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4148, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன்.*

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆரணி ஊராட்சி ஒன்றியம், அரியப்பாடி ஊராட்சியில் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4644, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர்.*

திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொன்னேரி தொகுதி, ஆரணி பேரூராட்சியில் உள்ள அரசு மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4922, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார்.*

***திரு. வே. சம்பத்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரூர் தொகுதியில் நவலை, ஈச்சம்பாடி, கீழ்மொரப்பூர், கருங்கல்பாடி, பொய்யப்பட்டி கிராமங்களுக்கு துணை சுகாதார நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4966, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன்.

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாலக்கோடு தொகுதி, காரிமங்கலம் தாலுகாவிற்கு, தாலுகா மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5008, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ஜெயக்குமார்.

திரு. S. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெருந்துறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிறுநீர் பிரித்தல் (Dialysis) வசதி ஏற்படுத்தித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5054, மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி.

திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாமல்லபுரம் அரசு மருத்துவமனையில் (பூஞ்சேரி) இரவுநேரப் பணி மருத்துவர்கள் நியமிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5463, மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து.*

திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மருத்துவத் துறையில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5516, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ்.*

திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அம்மா மினி கிளினிக்கை மீண்டும் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5678, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொரோனா காலங்களில் பணிபுரிந்த தற்காலிகப் பணியாளர்களை எந்தவித நிபந்தனையுமின்றி பணி நிரந்தரம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5884, மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல்.

திருமதி கு. மரகதம் குமரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுராந்தகம் தொகுதி, அச்சிறுபாக்கம் ஒன்றியம், வேடந்தாங்கல் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5945, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்.

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூர் தொகுதி, தனியாமங்கலம் மற்றும் திருவாதவூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச்சுவர் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

2023 ஏப்ரல் 18] [திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்]

“மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6019, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன்.

திரு. பொன். ஜெயசீலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *“நீலகிரி மாவட்டம், கூடலூர் தொகுதிக்குட்பட்ட பந்தலூரில் ஒரு தாலுகா தலைமை மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து”* விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6485, மாண்புமிகு உறுப்பினர் திரு. சா. மாங்குடி.

திரு. சா. மாங்குடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *“காரைக்குடியில் உள்ள மாவட்ட தலைமை மருத்துவமனையில் ஸ்கேன் இயந்திரம் இயக்குபவர் மற்றும் போதிய மருத்துவர்கள் பணியமர்த்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து”* விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6832, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ்.

திரு. A.K. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம் தொகுதியில் புற்றுநோய் பரவலைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7262, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "போளூர் அரசு தலைமை மருத்துவமனையில் உள்ள பிரேதப் பரிசோதனைக் கூடத்தை செயல்பாட்டிற்குக் கொண்டு வரவும், புதிய பிரேதப் பரிசோதனைக் கூடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7436, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ராஜகுமார்.

திரு. S. ராஜகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மயிலாடுதுறை தொகுதியில் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2023 ஏப்ரல் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 7460, மாண்புமிகு உறுப்பினர் திரு.* S. *சேகர்.*

திரு. S. சேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பரமத்தி வேலூர் தொகுதியில் கபிலர்மலை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு உள்ளே தார்ச்சாலை அல்லது* paver block *அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 7479, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வேலுமணி.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வைரஸ் காய்ச்சல், கொரோனா தொற்று பரவாமல் தடுக்க, மருந்துகளை தேவைக்கேற்ப தயார் நிலையில் வைத்திருக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஏதாவது முன்னுரையாகக் கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு அச்சடிக்கப்பட்டு,*

மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக, ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளது. கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேசைகளில் உள்ள சிறுகணினிகளிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அவற்றிலே தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை @ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று ஒரே ஒரு மானியக் கோரிக்கைதான். பேச வருகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள், 9 மாமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றீர்கள், முதலில் பேச வருகின்றவருக்கு 15 நிமிடங்களும், மீதி இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தலா 8 நிமிடங்களும் வழங்கப்படவிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் குறித்த நேரத்திற்குள் முடிக்க வேண்டும். காரணம், மாலை 5 மணிக்கு மீண்டும் அவை கூட இருக்கின்றது. ஆகவே, காலையில் 2 மணிக்குள் அல்லது 2.15 மணிக்குள் பேரவை அலுவல்களை முடிக்க வேண்டும். ஆகவே, அனைத்து உறுப்பினர்களும் ஒத்துழைப்பு தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து எல்லோருக்கும், குறித்த நேரத்திற்கு அதிகமாக நேரம் வழங்கப்பட மாட்டாது.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு தந்த சரித்திர நாயகன், வங்கக் கடலோரம் சந்தனப் பேழையில் துயில் கொண்டிருக்கக்கூடிய இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்குகிறேன். எங்களை

@ 459 முதல் 825 வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

வளர்த்தெடுத்த, வார்த்தெடுத்த, எங்கள் நாடி, நரம்பிலே, ஊன், உயிர், உதிரத்திலே கலந்திருக்கக்கூடிய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் அன்போடு வணங்குகிறேன்.

பிற்பகல் 12–35

தான் ஓர் அரசு பள்ளி மாணவர் என்ற அந்த உணர்வில் தமிழகத்திலே போராடி பெற்ற 7.5 சதவிகித இட ஒதுக்கீட்டின் மூலமாக (மேசையைத் தட்டும் ஒலி) ஒற்றை கையெழுத்தில் அரசு பள்ளியில் படித்த 465 மாணவர்களுக்கு மகத்தான மருத்துவக் கல்லூரியில் படிக்கக்கூடிய வாய்ப்பை உருவாக்கி, 119 மாணவர்களுக்கு பல் மருத்துவக் கல்லூரியில் படிக்கக்கூடிய மகத்தான வாய்ப்பை உருவாக்கி, இன்றைக்கும், தங்கள் கையெழுத்தால் தலைமுறையை மாற்றியிருக்கக்கூடிய மகத்தான தலைவராம் (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் இயக்கத்தை வழி நடத்திக் கொண்டிருக்கக்கூடிய, புரட்சித் தலைவர் திரு. எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழியிலே, ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த, எதிர்க்கட்சித் தலைவர், மரியாதைக்கும், போற்றுதலுக்கும் உரிய கழகத்தினுடைய பொதுச் செயலாளர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு, என்னுடைய நெஞ்சார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே உள்ள சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், பேரவைத் தலைவரின் கடைக் கண் பார்வைக்காக கடைசி bench–ஐ எப்போதும் கலகலப்பாக வைத்திருக்கக்கூடிய எங்கள் அண்ணன் திரு. செல்லூர் ராஜூ அவர்கள், அண்ணன் திரு. உடுமலை ராதாகிருஷ்ணன் அவர்கள், முன் வரிசையில் எது நடந்தாலும் பாதுகாப்பாக இருப்பதற்காக, முன் வரிசையில் ஓர் அரண்போல, எங்களையெல்லாம் காத்துக் கொண்டிருக்கும் அண்ணன் திரு. நத்தம் ஆர். விசுவநாதன் அவர்களுக்கும், அண்ணன் திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன் அவர்களுக்கும், அண்ணன் திரு. தளவாய் சுந்தரம் அவர்களுக்கும், அண்ணன் திரு. தங்கமணி போன்றவர்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், திரு. நத்தம் ஆர். விசுவநாதன் அவர்களை பாதுகாவலராக வைத்திருக்கிறீர்கள்.

[2023 ஏப்ரல் 18

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: ஒரு நல்ல சூழலை இன்றைக்கு உருவாக்கிக் கொடுத்திருக்கக்கூடிய தங்களுக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறை ஒரு மகத்தான துறை. இது ஒரு சேவைத் துறை. It is a service department. பொதுவாக, காலையில் 10-00 மணிக்கு வந்து, மாலையில் 5-00 மணிக்கு நாம் திரும்பினோம் என்றால், It is considered as a duty. அது கடமை. அந்த வேலை கடமையாக மட்டுமே கருதப்படும். ஆனால், 5-00 மணியைத் தாண்டி மட்டுமல்ல தீபாவளி, பொங்கல், ரம்ஜான், கிருஸ்துமஸ், ஏன் புத்தாண்டில்கூட, எல்லா நாட்களிலும் 24X7 என்று இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய ஒரு மகத்தான துறைதான், சேவைத் துறைதான், மக்கள் நல்வாழ்வுத் துறை. ஆகவே, அந்த மகத்தான துறையில் இன்றைக்குப் பேசுவதற்கான வாய்ப்பை நான் பெற்றிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அடிப்படையில் ஒரு மருத்துவர் என்கிற காரணத்தினால் சிலவற்றைச் சொல்கிறேன். உங்கள் எல்லோருக்கும் தெரியும் doctor ஒருவரை அணுகும்போது, doctor-க்கு இரண்டு, மூன்று mode-கள் இருக்கும். Doctor ஒருவரிடம் நல்லபடியாக அணுக வேண்டுமென்றால், சிறப்பாக இருக்க வேண்டுமானால் syrup கொடுக்கலாம், tonic கொடுக்கலாம். Syrup போல் சிறப்பாக பேச வேண்டுமென்று எனக்கு ஆசைதான். இருந்தாலும்கூட, அவசியம் ஏற்பட்டால், சில நேரங்களில், மாத்திரைகளை வழங்கத்தான் வேண்டும், மாத்திரைகளை முழுங்கித்தான் ஆக வேண்டும், tablet-ஐ சாப்பிட்டுத்தான் ஆக வேண்டும். அப்படியும் இருக்கலாம். இல்லை, ஒருவேளை அவசரம் கருதி injection போடுவார் doctor. ஆகவே, போடக்கூடிய injection-ஐ வலிக்காமல் போட வேண்டும் என்பதுதான் என் ஆசை. (குறுக்கீடு) அதுபோல் வலியில்லாமல் injection போடும்பொழுது, ஆளும்கட்சியில் reaction இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய கடமை என்று நான் கருதுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் ஊசி போடும்பொழுது சரியான மருந்தை போட வேண்டும். தவறான மருந்தைப் போடக் கூடாது. (சிரிப்பு)

2023 ஏப்ரல் 18]

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஊசி போடும்பொழுது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் எதைச் சொன்னாலும், அதற்குப் பதில் சொல்வதற்கு தயார் நிலையில் இருக்கின்றோம். அது வேறு. ஆனாலும், நாங்கள் கடைசியாக பதில் சொல்ல காத்திருக்கும் வரை அவர் இருப்பதில்லை. எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஏராளமான பணிகள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுவரைக்கும் தவறாக எதுவும் பதிவாகவில்லை.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: பெரும் பகுதியாக, கடந்த பத்து நாட்களாக அமைச்சர்களின் பதிலுரையைக் கேட்பதற்கு அவர்கள் இருப்பதில்லை. (குறுக்கீடு) எனவே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பேசி முடித்துவிடட்டும்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: கடந்த பத்து நாட்களாக காலையிலும், மாலையிலும் பார்க்கிறோம். எல்லாத் துறை அமைச்சர்களும் மிகப் பொருத்தமான பதில்களை அவர்களுடைய பதிலுரையில் சொல்லும்போது, அதைக் கேட்டுக்கொள்வதற்குரிய பெருந்தன்மையோ, பொறுமையோ எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இல்லாமல் இருப்பது வருத்தமாக இருக்கிறது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருங்கள், நான் பேச வாய்ப்புத் தருகிறேன்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: எனவே, சட்டமன்ற உறுப்பினர் சொல்லும்போதே பதில் சொன்னால்தான், அதை நிச்சயம் பத்திரிகைகளிலும், ஊடகங்களிலும் சரியாக வெளியிடுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அவர் சொல்கிற ஒவ்வொரு வரிக்கும், இங்கிருந்தும் உறுதியாக பதில் வரும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

9. பேரவை நிகழ்ச்சிகளை நேரடி ஒளிபரப்பு செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அமைச்சர்கள் பதிலுரையைக் கேட்பதற்கு எங்களுக்கு நேரமில்லை என்ற ஒரு கருத்தைச் சொன்னார். அது அல்ல. ஜனநாயக முறைப்படி சட்டமன்றத்தில் நிகழ்வுகள் நடைபெற்றால் நிச்சயமாக அவையில் நாங்கள் இருப்போம். (குறுக்கீடுகள்) இப்போது அவை நடவடிக்கைகளில் நாங்கள் கலந்து கொண்டிருக்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தயவுசெய்து எல்லோரும் அமைதியாக இருங்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *எங்களுடைய கோரிக்கையை தங்களிடம் வைத்திருக்கிறோம். இன்னும் நிறைவேற்றப்படவில்லை. அதைக் கண்டித்துதான் வெளிநடப்பு செய்து கொண்டிருக்கிறோம், புறக்கணிப்பு செய்து கொண்டிருக்கிறோமேயொழிய அவை நடவடிக்கைகளில் எப்போதும் எதிர்க்கட்சியினர் கலந்து கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேண்டுமென்றே திட்டமிட்டு எதிர்க்கட்சியினரை அவதூறாகப் பேசுவது தவறு.*

பிற்பகல் 12–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவர்கள் அவதூறாக எதுவும் பேசவில்லை.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள்? 'என்னுடைய பதிலுரையைக் கேட்க அவர்களுக்கு நேரமில்லை' என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய பதிலுரையைக் கேட்பதற்கு நாங்கள் தயார். ஆனால், எங்களுடைய தேவைகளை நீங்கள் பூர்த்தி செய்ய மாட்டேன் என்கிறீர்களே! ஜனநாயக முறைப்படி அவை நடக்கவில்லையே! நீங்கள் பேசுவது நேரடி ஒளிபரப்பு. . .*

2023 ஏப்ரல் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தயவுசெய்து சொல்கிறேன், மாண்புமிகு உறுப்பினர்கள் அமர்ந்துகொண்டு, நான் மைக் தராமல் நீங்கள் யாரும் பேசக் கூடாது. அதை நான் விரும்பவில்லை. நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். முன் வரிசையில் அதற்கு உறுப்பினர்கள் இருக்கிறார்கள். உட்கார்ந்துகொண்டே பேசுவது நல்ல பழக்கமல்ல, பார்த்துக்கொள்ளுங்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுவதை இப்போது ஒளிபரப்பு செய்துகொண்டிருக்கிறீர்கள். அதே நேரத்தில் எதிர்க்கட்சியின் சார்பாகப் பேசுவதை ஒளிபரப்பு செய்வதில்லை. அதைத்தான் நாங்கள் கேட்கிறோம். அதை நீங்கள் செயல்படுத்துங்கள். அதில் என்ன தவறு இருக்கிறது? நாங்கள் கேட்கின்ற கேள்வி என்னவென்று மக்களுக்குத் தெரிய வேண்டும். அதனடிப்படையில், நீங்கள் பதில் சொல்வது மட்டும்தான் ஒளிபரப்பு செய்யப்படுகிறது. நாங்கள் கேள்வி கேட்பது ஒளிபரப்பு செய்யப்படுவதில்லை. இதற்காக பலமுறை நாங்கள் உங்களிடம் வேண்டுகோள் வைத்திருந்தோம். ஜனநாயக முறைப்படி எங்களுக்கும் அந்த வாய்ப்பை நீங்கள் தர வேண்டும். ஆளுகின்ற தரப்பிற்கு என்ன வாய்ப்புகளைத் தருகின்றீர்களோ, அதேபோல் எதிர்க்கட்சிக்கும் வாய்ப்பு கொடுக்க வேண்டும். எதிர்க்கட்சியிலிருந்து என்ன கேள்வி கேட்கின்றோமோ அதற்குரிய பதில் ஆளுங்கட்சியினரிடமிருந்து வந்தால் மக்கள் பார்ப்பதற்கு மிகவும் வசதியாக இருக்கும். ஆகவே, நாங்கள் பேசுவதையும் நேரடி ஒளிபரப்பு செய்ய வேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். . .* (குறுக்கீடு) *நான் பதில் சொல்லிவிடுகிறேன். இது எனக்கான கேள்வி. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், ஏற்கெனவே பலமுறை தொடர்ந்து என்னிடம் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். வெளியில் சென்று சொல்லும்போதும், அந்த வாய்ப்பு இல்லாததால் நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம் என்று சொல்கிறார்கள். ஏற்கெனவே, நான் இரண்டு முறை இதற்குப் பதில் சொல்லியிருக்கிறேன். இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு—எதிர்க்கட்சித் தலைவர்*

[பேரவைத் தலைவர்] [2023 ஏப்ரல் 18

அவர்கள் அன்றைக்கு ஒரு நாள் இதைப் பற்றிக் கடுமையாகப் பேசியிருந்தார்கள். இது தேர்தல் அறிக்கையில் இருக்கிறது; அதை ஒன்று, நடைமுறைப்படுத்துங்கள், இல்லையென்றால் அதை withdraw செய்யுங்கள் என்றெல்லாம்கூடச் சொன்னார்கள். அதற்கெல்லாம் நான் அவர்களுக்குப் பதில் சொல்லியிருக்கிறேன். யாரையும் தவறாகவோ அல்லது யார்மீதும் குற்றச்சாட்டு வைப்பதையோ நான் விரும்பவில்லை. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, நேரடி ஒளிபரப்பு செய்ய வேண்டுமென்று முயற்சி எடுத்து, அது தொடர்பாக நாங்கள் ஏற்கெனவே சொன்னது போன்று, இந்தியாவில் இருக்கின்ற பல்வேறு மாநிலங்களுக்கு நேரில் சென்று வந்த பிறகு, முதற்கட்டமாக வினாக்கள்-விடைகள் நேரம் மட்டும் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டு வந்தது. அதன் பிறகு, விதி 110-ன்கீழ் அறிக்கை, Agenda-ல் இருக்கக்கூடிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் அனைத்துமே இதுவரை நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டு வருகின்றன.

Zero Hour என்பது. . . (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், கொஞ்சம் இங்கே கவனித்துக்கொள்ளுங்கள். மாண்புமிகு உறுப்பினரிடம் பிறகு பேசிக்கொள்ளலாம். Zero hour-ல் என்ன பேசப் போகிறீர்கள் என்பது யாருக்குமே தெரியாது. (குறுக்கீடு) தயவுசெய்து எல்லோரும் கொஞ்சம் அமைதியாக இருங்கள். Zero hour-ல் என்ன subject பற்றிப் பேசப் போகிறீர்கள்; யார் பேசப் போகிறார்கள் என்பதும் தெரியாது. எதிர்க்கட்சித் தலைவர்களில், பிரதான எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர் மட்டும்தான் பேசுவார் என்பதல்ல; முன்வரிசையில் பல கட்சித் தலைவர்கள் இருக்கிறார்கள். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து எல்லோருமே கைதூக்கினால், zero hour-ல் பேசுவதற்கு அவர்கள் எல்லோருக்குமே உரிமை உண்டு. ஆகவே, அந்த அடிப்படையில் அதை நேரடி ஒளிபரப்பு செய்வதில்லை.

ஏற்கெனவே கடந்த 10 ஆண்டு காலம் என்ன நடந்திருக்கிறது என்பதையெல்லாம் முழுமையாக எடுத்து, அதை CD-ல் copy செய்து வைத்திருக்கிறேன். அதை நான் உங்களுக்குத் தருகிறேன். Zero hour-ல் எதிர்க்கட்சித் தலைவரை பேசுவதற்கு அனுமதித்திருக்கிறீர்கள். முழுமையாகப் பேசி முடித்தற்குப் பிறகு பதில் சொல்லியிருக்கிறீர்கள். அந்த பதில் முழுவதையும் edit செய்து, மாலையில் கொடுக்கும்போது, பதில் முழுமையாக இருக்கிறது; எதிர்க்கட்சித் தலைவர் பேசியதில் ஒரே ஒரு கேள்வி

2023 ஏப்ரல் 18] [பேரவைத் தலைவர்]

மட்டும் இருக்கிறது. இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் கேட்டார், முதல்வர் அவர்கள் இப்படி பதில் சொன்னார்கள் என்பது மட்டும் முழுமையாக இருக்கிறது. கடந்த 10 ஆண்டு காலத்தில் என்ன நடந்தது; எங்கேயாவது எதிர்க்கட்சித் தலைவர்கள் பேசியது முழுமையாக C.D. *பதிவில் இருக்கிறதா என்று பார்த்தேன். எங்குமே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையில் நீங்கள் செய்தது போன்றுதான் இந்த ஆட்சியும் செய்கிறது என்பதற்காக நான் இதைச் சொல்லவில்லை. நான் உறுதியாகச் சொல்கிறேன்.* Agenda–*ல் இருக்கின்ற எல்லா நிகழ்வுகளும் ஒன்றன்பின் ஒன்றாக நேரடி ஒளிபரப்பு செய்வதற்கு இந்த அரசு முயற்சி எடுத்து, அது எங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, அதனடிப்படையில் முழுமையாகச் சோதித்து அறிந்து செய்து கொண்டிருக்கின்றோம். இதில் எந்த பாரபட்சமும் இல்லாமல்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே, முழுமையாக நாம் நேரடி ஒளிபரப்பு செய்தால்கூட. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன்—*முழுமையாக நேரடி ஒளிபரப்பு செய்தால்கூட* zero hour–*ல் நாம் பேசக் கூடியது, எதிர் வரிசையில் இருக்கக்கூடிய கட்சித் தலைவர்களெல்லாம் பேசுவதை நிச்சயமாக, உடனடியாக ஒளிபரப்பு செய்வதை நடைமுறைப்படுத்துவது சாத்தியமில்லை. இதுபற்றியெல்லாம் நாம் எல்லோரும் பேசி முடிவு செய்து,* zero hour–*ல் நாங்கள் இதைத்தான் பேசுவோம், இந்த* subject*தான் பேசுவோம் என்ற முழுமையான உறுதிப்பாடுகள், எல்லா கட்சித் தலைவர்களும் சேர்ந்து முடிவெடுத்தால் மட்டுமே, அதை ஒளிபரப்ப முடியுமேதவிர, இதில் எந்தத் தவறான நோக்கமோ, எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி என்பது இல்லாமல், ஜனநாயக முறையில் தெளிவாக எல்லோருக்கும் ஒரே சட்டப்படிதான் நடைபெறுகிறது என்பதை நீங்கள் எல்லோரும் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறீர்கள். அதனால், நிச்சயமாக இந்தளவிற்கு போதும், நீங்கள் தொடர்ந்து பதிலுரையைக் கேட்க அமரும்படி, நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். உங்கள் அனைவருக்கும் தேவையான அளவிற்கு நான் பேசுவதற்கு நேரம் தந்துகொண்டுதான் இருக்கிறேன். பதிலுரைக்கு நீங்கள் முழுமையாக இல்லையென்றால் நான் என்ன செய்வேன்? சொன்ன நேரத்தில் முடித்துவிட்டு, அடுத்த* Member–*க்கு போய்விடலாம் என்றுதான் நானும் நினைப்பேன். நான் உண்மையை* transparent–*ஆகச் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

பிற்பகல் 12–45

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நீங்கள் பேசிவிட்டு போய்விடுகிறீர்கள். அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது அவையில் இருப்பதில்லை' என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நாங்கள் பேசுவதையே நீங்கள் ஒளிபரப்பு செய்வதில்லையே! கொள்கை விளக்கக் குறிப்பில் இருப்பதைப் பற்றித்தான் நாங்கள் பேசுகிறோம். இன்றைக்கு இருக்கின்ற நிலவரத்தைப் பற்றி எதிர்க்கட்சி சார்பாகப் பேசுகிறோம். அதுவும், எதிர்க்கட்சித் தலைவர், பிரதான எதிரக்கட்சித் தலைவர் பேசுவதைக்கூட நேரடி ஒளிபரப்பு செய்யமாட்டேன் என்கிறீர்களே! மானியக் கோரிக்கையில் பேசுவதைக்கூட நேரடி ஒளிபரப்பு செய்யமாட்டேன் என்கிறீர்களே! நேரமில்லா நேரத்தில்தான் நேரடி ஒளிபரப்பு செய்யமாட்டேன் என்கிறீர்கள். இன்றைக்கு மானியக் கோரிக்கையில் எங்கள் உறுப்பினர் பேசுவதை நேரடி ஒளிபரப்பு செய்வதில் என்ன தவறு இருக்கிறது? அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்ற பதில் வெளிவருகிறது. ஆனால், எதிர்க்கட்சியில் இருக்கின்ற உறுப்பினர்கள் பேசுவது, வெளிவருவதில்லை. அவர் என்ன பேசினார் என்பது வெளிவந்தால்தானே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன பதில் சொன்னார் என்பது சரியாக இருக்கும். அப்போதுதானே மக்கள் பார்க்க முடியும். ஒருதலைபட்சமாக இருந்தால், நாங்கள் எப்படி அவையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலை மட்டும் கேட்டுக் கொண்டிருக்க முடியும்?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடு) உட்கார்ந்து யாரும் பேச வேண்டிய அவசியமில்லை. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுவதை நேரடியாக எப்படி ஒளிபரப்ப முடியவில்லையோ, அதேபோல் ஆளுங்கட்சி உறுப்பினர்கள்—நீங்கள் 2 பேர் பேசுகின்றீர்களென்றால், ஆளுங்கட்சியில் 4 பேர் பேசுகிறார்கள். அவர்கள் பேசுவதும் நேரடியாக ஒளிபரப்பப்படவில்லை. (குறுக்கீடு) நான் உங்களிடம் தெளிவாகப் பேசிவிட்டேன். நாம்* BAC*-ல் பேசி,* technical*-ஆக என்னவெல்லாம் செய்ய முடியும் என்பதைப் பேசி முடிவு எடுத்தோமென்றால், அதிலிருந்து யாரும் மாறப்போவதில்லை. ஒரு குறுகிய கண்ணோட்டத்தோடு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு அந்த வாய்ப்பை கொடுக்கக்கூடாது என்று ஒருபோதும், இதுவரை இந்த அரசு எண்ணியதில்லை. என்னுடைய*

2023 ஏப்ரல் 18] [பேரவைத் தலைவர்]

கவனத்திற்கும் கொண்டுவந்ததில்லை. ஆகவே, தயவுசெய்து—நான் உண்மைக்குப் புறம்பாக எதையும் பேசுவதில்லை. உங்களுக்குத் தெரியும். உண்மையைத்தான் சொல்கின்றேன். ஆகவே,-– இந்த அடிப்படையில் இந்த விளக்கத்தை ஏற்று, இன்றுமுதல் பதிலுரையிலும் இருக்க வேண்டுமென்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை அன்போடு கேட்டு அமர்கிறேன்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேசுவதெல்லாம் அவைக் குறிப்பில் பதிவாகிறது. அதுதான் வெளியிலும் வருகிறது. அதைத்தான் நாங்களும் பேசுகிறோம். அதை ஒளிபரப்பு செய்வதில் என்ன சங்கடம்?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான்தான் ஒத்துக்கொண்டேனே!*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *அப்போது அவையில் பேசுவதெல்லாவற்றையும். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் சொன்னதை நான் ஒத்துக்கொண்டேன்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *பிரதான எதிர்க்கட்சித் தலைவர் பேசுவதையாவது ஒளிபரப்பலாம் இல்லையா? எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுவதை நீங்கள் ஒளிபரப்ப மறுத்தாலும், அதில் ஏதாவது பிரச்சினைகள் இருந்தாலும், பிரதான எதிர்க்கட்சித் தலைவர் மானியக் கோரிக்கையில் பேசும்போது, அதையாவது ஒளிபரப்பலாம் இல்லையா?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் உட்காருங்கள். நிச்சயமாக நான் அதற்குப் பதில் சொல்கிறேன். நீங்கள் சொன்ன கருத்துகள் எல்லாம் கேட்கப்பட்டு—சபை முடிவதற்கு இன்னும் 3 நாட்கள்தான் இருக்கின்றன. தலைவர்கள் எல்லோரும் பேசி முடிவெடுத்து,* technical*–ஆக என்ன* level*–ல் இருக்கிறது என்பதையும் பார்த்து, 100 சதவிகிதம். . . (குறுக்கீடு) அப்படிச் சொல்ல முடியாது. நிறைய விஷயங்கள் இருக்கின்றன. ஆகவே, அந்த அடிப்படையில் நாம் எல்லாவற்றையும் செய்வோம். அந்த வாய்ப்பு நிச்சயமாக வரும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு உறுப்பினர், நேரம் பிற்பகல் 12–48 ஆகிவிட்டது. நான் கழித்துவிடுகிறேன். இப்போதெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் எழுந்தவுடனே, screen*–ல் எத்தனை நிமிடங்கள் பேசினீர்கள்*

என்பது தெரியும்; screen–ல் வந்துவிடும். 15 நிமிடங்கள் முழுவதும் கொடுத்துவிடுகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள்.

திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் வெளிநடப்பு செய்ய வேண்டும், avoid பண்ண வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு இல்லை என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தெளிவாகப் பேசிவிட்டார்கள். ஆனால் இப்போது மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இருக்கிறார், நீங்கள் அவரிடம்பேசி, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுவதையாவது—கடைசியில் அண்ணன் தெளிவாக சொல்லிவிட்டார். அதைச் செய்யலாம், அதில் ஒன்றுமேயில்லை. அவர் பேசுவதற்கு முன்பு இருப்பது ஒளிபரப்பாகிறது, அவர் பேசியதை cut செய்து, அதற்குப் பிறகு இருப்பது தொடர்ந்து வருகிறது. நீங்கள் மாண்புமிகு அவை முன்னவர் அவர்களிடமோ, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமோ, யாரிடமாவது கேட்டு இதற்கு ஒரு முடிவு எடுங்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியதை மட்டும் நீங்கள் நேரடி ஒளிபரப்பு செய்யவில்லை. அதேபோல, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது, 'ஒவ்வொன்றுக்கும் பதில் வரும்' என்று சொன்னார். நீங்கள் எதிர்க்கட்சியாக இருக்கும்போது பலதடவை புறக்கணித்திருக்கிறீர்கள். சட்டமன்றத்திற்கு வராமல் இருந்திருக்கிறீர்கள். இந்த நிகழ்வு நடந்திருக்கிறது. புதிதாக நாங்கள் செய்வதில்லை. அதேபோல பலமுறை நீங்கள் முழுமையாக வராமல் இருந்திருக்கிறீர்கள். இதேபோன்று புறக்கணித்துவிட்டு போயிருக்கிறீர்கள். இதெல்லாம் நடந்திருக்கிறது.

பிற்பகல் 12–50

நாங்கள் கண்டிப்பாக மாண்புமிகு அமைச்சர்களின் பதிலைக் கேட்போம். நாங்கள் கேள்வி கேட்போம். சில தினங்களில் நடைபெறவுள்ள காவல் துறை மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்தில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் பேசவிருக்கிறார்கள். முழுமையாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கேட்பதற்கு—ஆனால், எங்களுடைய கோரிக்கை என்பது, நாங்கள் 4, 5 நாட்களாக, ஒரு வாரமாக புறக்கணித்துக் கொண்டிருக்கிறோம். அதற்கு நீங்கள் மாண்புமிகு அவை முன்னவர் அவர்களிடமும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும் பேசி முடிவு செய்து, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்

2023 ஏப்ரல் 18] [திரு. எஸ்.பி. வேலுமணி]

பேசுவதை கண்டிப்பாக நேரடி ஒளிபரப்பு செய்ய வேண்டும். அதேபோன்று, நீங்கள் பேசப்பேச பதில் சொல்வோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நீங்கள் என்ன வேண்டுமானாலும் பதில் சொல்லலாம். எங்களுடைய முன்னாள் அமைச்சர் டாக்டர் விஜயபாஸ்கர் அவர்களும் எல்லாவற்றையும் தெளிவாகப் பேசுவார். நீங்களும் பதில் சொல்லுங்கள். ஆனால், நீங்கள் அவருக்குத் தேவையான நேரத்தைக் கொடுக்க வேண்டும். அந்த நேரத்தை மாண்புமிகு அமைச்சர்கள் எடுத்துக்கொள்ளக் கூடாது என்பதே எங்களுடைய கோரிக்கை. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா திரு. வேலுமணி அவர்கள், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுவதை நேரடி ஒளிபரப்பு செய்ய வேண்டுமென்று சொல்கிறார். ** (குறுக்கீடு) நீங்கள் நன்றாகப் பேசுங்கள் sir, நாங்கள் ஒளிபரப்பு செய்கிறோம். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ** என்று சொல்லக் கூடாது. அவர் எல்லா நிகழ்வுகளுக்கும் வருகிறார். Zero hour-ல் பேசுகிறார்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் அவை முழுமையாக நடைபெற வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபோது, எந்தவிதமான குறுக்கீடுகளும் செய்வதில்லை. குறுக்கீடு இல்லாமல்தான் பேசுகிறோம். குறுக்கீடு எழாத வகையில் பேச வேண்டும் என்று நீங்கள் சொல்கிறீர்கள். அதைப் பின்பற்றித்தான் நாங்கள் பேசிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு மூத்த அமைச்சர் அவர்கள் ஏதோ சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்கிறார்கள். எனவே, அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து தயவுசெய்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[2023 ஏப்ரல் 18

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடலாம்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *நேரமில்லா நேரத்தில்கூட பல நிகழ்வுகளை அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, அவற்றின்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற அடிப்படையில்தான் நான் பேசினேனேயொழிய, வேறு எதற்காகவும் பேசுவது கிடையாது. எந்தவித விமர்சனத்திற்கும் இடமளிப்பது கிடையாது. நேரமில்லா நேரத்தில் நான் பேசியவை எல்லாம் அவைக் குறிப்பில் இருக்கின்றன. நீங்கள் வேண்டுமானால் பார்த்துக்கொள்ளலாம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, சரி. நன்றி. (குறுக்கீடு)*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *இது பத்திரிகைகளில் வேறுவிதமாக வந்துவிடும். வேறொன்றுமில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இப்படிப்பட்ட சில பிரச்சினைகள் வரும் என்கிற காரணத்தினால்தான், அது* under consideration*-ல் இருக்கிறது. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள், காலையில் என்னுடைய அறையில் வந்து பேசியபோதுகூட, இதற்கு முன்னரும் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன என்று சொன்னீர்கள். இந்த அரசு பொறுப்பேற்றபின், அவை நடைபெறும்போது, அனைவரும் நாகரிகமாகத்தான் நடந்து கொண்டிருக்கிறார்கள் என்று உங்களுக்கே தெரியும். நீங்களும் அப்படித்தான் பேசுகிறீர்கள். ஆளுங்கட்சியினரும் அப்படித்தான் பேசுகிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களும், உறுப்பினர்களையெல்லாம் அழைத்து, எதிர்க்கட்சிமீது எந்தக் குற்றச்சாட்டும் வைக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் சொல்வதுபோன்று, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு மட்டும் அந்த வாய்ப்பைக் கொடுக்க முடியாது. ஏனென்றால், முன்வரிசையில் அமர்ந்திருக்கக்கூடிய அனைத்துக் கட்சிகளின் சட்டமன்றத் தலைவர்களும் பேசுவார்கள். (குறுக்கீடுகள்) இல்லை. நான் முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. கிருஷ்ணமூர்த்தி, சற்றுப் பொறுங்கள். நான் பேசிவிடுகிறேன். நான் தவறாக எதையும் சொல்லவில்லை. தவறான வாக்குறுதியையும் தரவில்லை. பேசி முடிவு செய்து, மிக விரைவில் அப்படி ஒரு வாய்ப்பு வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

2023 ஏப்ரல் 18]

8. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 19-மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை–*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள், பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்)*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *பேச ஆரம்பியுங்கள் என்று சொன்னீர்களானால் பொருத்தமாக இருக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் 15 நிமிடங்கள் கொடுத்தேன். (குறுக்கீடு) நீங்கள் அங்கே பாருங்கள். எவ்வளவு நேரம் பேசியிருக்கிறீர்கள் என்று தெரிகிறது பாருங்கள். (குறுக்கீடுகள்) 3 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். தெரிகிறதா? (குறுக்கீடு) 3 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். இன்னும் 12 நிமிடங்கள் இருக்கின்றன; பேசுங்கள். (குறுக்கீடு) அங்கிருப்பது எனது கண்களுக்கு* sharp *ஆகத் தெரிகிறது.*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறை, மக்களுடைய ஆரோக்கியம் சார்ந்த துறை. அதனால், இந்த விவாதமும் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமென்றுதான் என்னுடைய கருத்துகளை எடுத்து வைக்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைபோல, கொள்கை விளக்கக் குறிப்புகளை பக்கம் பக்கமாகப் படித்துவிட்டு, உள்ளதை உள்ளபடியாகவும், அதைக் கொஞ்சம் நல்லபடியாகவும் சொல்ல வேண்டுமென்றுதான் நான் இங்கே வருகை தந்திருக்கின்றேன். (குறுக்கீடு)* Injection*-ல் விட்டோம் என்று சொல்கிறார்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, injection*-ல் விட்டோம், அதற்குப் பிறகு இவ்வளவு பெரிய* gap. *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பெருந்தன்மையாக என்ன செய்வார் என்று எதிர்பார்க்கிறேன் என்றால்—பொதுவாக,* injection *போடும்போது வலி இருக்கும். அப்போது, பக்கத்தில் இருப்பவர்கள், 'சின்ன ஊசிதான், கொஞ்சம் பொறுத்துக்கொள்ளுங்கள், உடனே முடிந்துவிடும்' என்று பெருந்தன்மையாகச் சொல்வார்கள். அதுபோல, என்னுடைய கருத்துகள் கொஞ்சம் அழுத்தமாக*

வருகின்றபோது, தாங்கள் ஒத்தடம் கொடுக்கின்ற பணியை நிச்சயமாக நல்லமுறையில் செய்வீர்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர்களிடம் எப்போதுமே கடினமான வார்த்தைகளும் வராது. கடினமான ஊசியும் போட வேண்டியதில்லை. எனவே, நீங்கள் அப்படியே டாக்டர் மாதிரியே பேசி முடித்துவிடுங்கள்.

பிற்பகல் 12–55

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோரும் எல்லாத் துறைகளையும் நேசித்தார்கள் என்று சொன்னால், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களும், அம்மா அவர்களின் வழிவந்த அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களும் இந்த மக்கள் நல்வாழ்வுத் துறையை சுவாசித்தார்கள் என்று நான் அழுத்தமாகவே சொல்வேன். (மேசையைத் தட்டும் ஒலி) காரணம், அந்தளவிற்கு மக்கள் நல்வாழ்வுத் துறையில் பல்வேறு விருதுகளை வாங்கக்கூடிய அளவிற்கு, எவரெஸ்ட் சிகரத்தைத் தொடக்கூடிய அளவிற்கு ஒரு வலுவான கட்டமைப்பை, infrastructure-ஐ மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலமாக HR என்று சொல்லக்கூடிய man power-ஐ, அதிநவீன உபகரணங்களை அதிகரித்திருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், கடந்த பத்தாண்டுகளில், TNMSC துவங்கப்பட்ட ஆண்டு முதல் செயல்முறைத் திட்டத்தில் Performance Budget-ல் கொடுக்கப்பட்டிருக்கும் அந்த விகிதத்தை நீங்கள் பார்த்தீர்களென்றால், அம்மாவினுடைய கடந்த ஆட்சியில், அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில், ஒரே ஆண்டில் 44 CT scan, 18 MRI, 15 Cath Lab, 9 linear accelerator (LINAC), 11 Cath lab, 1000 Cell Counter, Dialysis machines, ventilator என ஒரே நேரத்தில் அதிநவீன உபகரணங்களை வாங்கி, இந்தத் துறையில் ஒரு வலுவான கட்டமைப்பை உருவாக்கிக் கொடுத்தது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. பொதுவாக எல்லோருக்கும் blood bank தெரியும்; eye bank தெரியும். Bone marrow bank, stem cell bank, இன்னும் சொல்லப்போனால் skin bank, அதையெல்லாம் தாண்டி இந்தியாவிலேயே முதன்முறையாக அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் breast milk bank-தாய்ப்பால் வங்கிகளை (மேசையைத் தட்டும் ஒலி) உருவாக்கிக் கொடுத்தது நம்முடைய

2023 ஏப்ரல் 18] [டாக்டர் சி. விஜயபாஸ்கர்]

புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி; அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி. நான் நேற்றெல்லாம் இந்த கொள்கை விளக்கக் குறிப்பு புத்தகத்தைப் படித்தபோது, பக்கம் 215-ஐ பார்த்தேன். தகவலுக்காக; அதில் MRB, மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் குறித்துப் பார்த்தேன். புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், MRB என்கிற Medical Services Recruitment Board-ஐ Health Department-க்காக தனியாகக் கொடுத்து, பணி நியமனங்களை மிகவும் விரைவுபடுத்தினார்கள். 2012 ஆம் ஆண்டிலிருந்து கிட்டத்தட்ட 2021 வரைக்கும், நீங்களே வருடம் வாரியாக அந்தச் செயல்முறை விளக்கப் புத்தகத்தில் மிகவும் அழகாகக் கொடுத்திருக்கிறீர்கள். ஓராண்டிற்கு சராசரியாகப் பார்த்தீர்களென்றால், 4,000 என்ற அளவில் ஆண்டிற்கு 33,223 பணி நியமனங்களை, முறையே மருத்துவர்கள், செவிலியர்கள், paramedical staff என பணி நியமனங்களை, எந்தவித விமர்சனமும் இல்லாமல் on merit-ல் நியமித்த அரசு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இரண்டு ஆண்டுகளாக, சரி அந்த வழியில் இருக்கிறதா என்று நான் பார்த்தேன். அப்படிப் பார்க்கிறபோது, முதலாண்டு சராசரியாகப் பார்த்தால், 1000; ஆனால், notification மட்டும் நீங்கள் 4,000 பேருக்குப் போட்டிருக்கிறீர்கள். ஆக, இந்த இரண்டு ஆண்டுகளில் 1000, 1000 என 2,000 பேரைத்தான் பணி நியமனம் செய்திருக்கிறீர்கள். ஆனால், நாங்கள் அதை நான்கு மடங்கு அளவுக்கு மிகச் சிறப்பாகச் செய்திருக்கிறோம்; 33,223 பணி நியமனங்களைச் செய்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Medical Services Recruitment Board என்கிற அமைப்பின் சார்பில் கடந்த ஆண்டு 4,308 பணியிடங்கள் நிரப்பப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அந்த 4,308 பணியிடங்களில், 1,021 மருத்துவர்கள், மீதமுள்ளவர்கள் மருத்துவம் சார்ந்த களப் பணியாளர்கள் ஆவர். அவற்றில், ஏற்கெனவே, இதுவரைக்கும் 1,584 பணியிடங்கள் நிரப்பப்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பணி ஆணைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. வருகிற

25 ஆம் தேதி 1,021 மருத்துவர்களுக்கான கணினி வழி தேர்வு நடைபெறவிருக்கிறது. இந்தக் கணினி வழி தேர்வில் பங்கேற்பதற்கு 25,000 மருத்துவர்கள் பதிவு செய்திருக்கிறார்கள். இந்த 1,021 மருத்துவர்களுக்கான பணியிடங்களை நிரப்புவது தொடர்பாக கடந்த 4 மாதங்களாக மதுரை உயர் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று நிலுவையில் இருந்து, அது தற்போது முடிவுற்றதற்குப் பிறகு, MRB–ன் சார்பில் தற்போது 25 ஆம் தேதி அதற்கான ஒரு கணினி வழித் தேர்வு நடைபெறவிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், MRB–ல், 859 மருந்தாளுநர்கள்—pharmacist பணியிடங்களுக்கான நேர்காணல் வருகிற 27 ஆம் தேதி நடைபெறவிருக்கிறது. அவர்கள் ஆட்சிக் காலத்தில் 4,000 பணியிடங்கள் நிரப்பப்பட்டன என்று அவர் சொன்னார். அந்த 4,000–க்கும் மேலே, 4,308 பணியிடங்களை நிரப்புவதற்கு உத்தரவிட்டவர்தான் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். அந்தப் பணியிடங்கள் இப்போது படிப்படியாக நிரப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தங்களின் வாயிலாக சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் கொடுத்த இந்தச் செயல்முறை திட்டத்தில் உள்ளதைத்தான் நான் சொல்கிறேன். அதில் பாருங்கள், ஒரே ஆண்டிலே 7,000–க்கும் மேற்பட்ட பணி நியமனங்களை நாங்கள் செய்திருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் notification போட்டதைச் சொல்கிறீர்கள். உங்களுடைய notification 4,000 and odd. அதைத்தான் நான் சொல்கிறேன்; அதாவது நான் ratio–வை மட்டும்தான் சொல்கிறேன். நாங்கள் வருடத்திற்கு சராசரியாக 4,000 பேரை பணி நியமனம் செய்தோம். இந்த இரண்டு ஆண்டுகளில் நீங்கள் வருடத்திற்கு 1,000 பேரைத்தான் பணி நியமனம் செய்திருக்கிறீர்கள். இதுதான் subject. மேலும், கொள்கை விளக்கக் குறிப்பு புத்தக பக்க எண் 117. பொதுவாக, சுகாதாரத் துறை வளர்ச்சி என்றால் ஒரு துறை வளர்ச்சி அடைகிறது அல்லது ஒரு துறை சிறப்பாக இருக்கிறது என்பதை இந்திய அளவில் அந்தத் துறை எப்படியிருக்கிறது என்பதைப் பார்ப்பதோடு, அண்டை மாநிலங்களுடனும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 'you should not

compare health department with neighbouring States, you should compare our health department with a well-developed nation' என்று சொல்வார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் சுகாதாரத் துறையை நீங்கள் பக்கத்து மாநிலங்களோடு ஒப்பிடாதீர்கள்; நீங்கள் வளர்ந்த நாடுகளோடு சுகாதாரத் துறையை ஒப்பிடுங்கள் என்று சொன்னார்கள். அதனால்தான், ஆஸ்திரேலியாவிற்குச் சென்று, அங்கே National Trauma Research Institute-உடன் நாம் ஒப்பந்தம் போட்டோம். சிங்கப்பூர் சென்று MCH-க்கு SingHealth உடன் ஒப்பந்தம் போட்டோம். அதைப்போல, ஜப்பானுக்குச் சென்று முதன்முதலாக health sector-ல் வரலாற்றிலே இல்லாத அளவிற்கு ரூ.1,684 கோடி JICA நிதியைப் பெற்றுக்கொண்டு வந்தோம். அதைத்தான், இங்கே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்கூட budget-ல் சொல்லியிருக்கிறார்கள். JICA நிதியின்மூலம் பெறப்பட்ட திட்டங்களெல்லாம் விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு வரும் என்று சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் சொல்லியிருக்கின்ற பல விஷயங்கள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் தொடங்கப்பட்டவை;

பிற்பகல் 1-00

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் உருவாக்கப்பட்டவை; மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் கொண்டுவரப்பட்டவை. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் துறை சிறப்பாக வளர்ந்திருக்கிறது என்றால், Health indicators, சுகாதாரக் குறியீடுகள் நன்றாக இருக்க வேண்டும். Health indicators என்றால் என்ன? Fertility rate, கருவளர் விகிதம் எவ்வளவு? IMR-Infant Mortality Rate எவ்வளவு? MMR-Maternal Mortality Rate எவ்வளவு? பொதுவாக, நாங்கள் மேலைநாடுகளுக்குச் செல்லும்போது, சில விவரங்கள் குறித்து பார்ப்போம். அதுபோல் இங்கு IMR-ஐ பார்த்தேன், அது ratio-படி குறைந்திருக்கிறது; Fertility rate-ஐ பார்த்தேன், கடந்த வருடம் கொஞ்சம் தவற விட்டுவிட்டீர்கள். கடந்த 10 வருடங்களாக Fertility rate 1.6-ல் இருந்தது; அதற்குப் பிறகு, அது 1.8-க்கு சென்று, தற்போது 1.4-க்கு வந்திருக்கிறது. மக்கள் நல்வாழ்வுத் துறையில் Family planning-குடும்பக் கட்டுப்பாடு என்பது மிக, மிக முக்கியம்; ஏனெனில், அதுதான் பொருளாதாரத்திற்கு அடிப்படை. அதை கடந்த வருடம் விட்டுவிட்டு, இந்த வருடம் பிடித்திருக்கிறீர்கள். என்னுடைய இன்னொரு கவலை என்னவென்றால், மத்திய அரசின் சார்பில் வெளியிடப்பட்டிருக்கின்ற ஒரு Bulletin-ஐ

[டாக்டர் சி. விஜயபாஸ்கர்] [2023 ஏப்ரல் 18

நான் பார்த்தேன். Maternal Mortality Rate, அதாவது குழந்தைப் பேற்றினை உருவாக்குகின்றபொழுது, ஓர் உயிர் இன்னோர் உயிரைத் தருகின்றபோது, அந்தத் தாயின் உயிர் பாதுகாக்கப்பட வேண்டும். பிரசவத்தில் ஒரு தாய் இறக்கின்ற அந்த நிலையை மாற்றி நிச்சயமாக நாம் மீளக்கொணர வேண்டும். World Health Organisation (WHO) சொல்கிற இலக்கை நாம் அடைய வேண்டும். நாங்கள் WHO சொன்ன இலக்கை முன்னதாகவே அடைந்துவிட்டோம் என்று சொல்வோம். அதை நாங்களும் செய்தோம். ஆனால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்றபோது, 2012–ல் மகப்பேறு இறப்பு விகிதம் என்பது 90 என்று இருந்தது. அதாவது, 1 இலட்சம் தாய்மார்களுக்கு பிரசவம் நடக்கிறது என்றால், 90 என்பது இறப்பு சதவிகிதம் ஆகும். அதைப் படிப்படியாக ஒவ்வோராண்டாகக் குறைத்து, குறைத்து, 2020–ல் 54–ல் கொண்டு வந்து நிறுத்தினோம். தற்போது என்ன விகிதம் வந்திருக்க வேண்டுமென்றால், அந்த ratio–படி, குறைந்தபட்சம் 50 வந்திருக்க வேண்டும். இந்த Maternal death குறித்து, நாம் கண்டிப்பாக audit செய்ய வேண்டும்; monitor செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மகப்பேறு இறப்பு விகிதம் 54 என்கின்ற அளவில் இருந்தது என்பது உண்மைதான். உலகம் முழுவதிலும் பெருந்தொற்று காலத்திற்குப் பிறகு, இந்த இறப்பு விகிதம் என்பது அதிகரித்துக் கொண்டேயிருந்தது. ஆனாலும், தற்போது தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, மகப்பேறு இறப்பு விகிதம் என்பது 54–லிருந்து 52.32 ஆகக் குறைந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 1 இலட்சம் மகப்பேற்றிற்கு இறப்பு விகிதம் என்பது 52.32 ஆகக் குறைந்திருக்கிறது.

மரியாதைக்குரிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போன்று, மகப்பேறு இறப்பு விகிதம் 54 என இருந்தது உண்மைதான். ஏற்கெனவே பேரிடர் காலத்தில் அதிகரித்துக் கொண்டிருந்த இந்த இறப்பு விகிதத்தை இந்த ஓராண்டு காலத்தில் 52.32 ஆகக் குறைத்திருக்கிறோம் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நன்றாக கவனத்திலே கொள்கின்றேன். இந்த இரண்டாண்டு காலத்தில், மகப்பேறு இறப்பு விகிதம்* ratio*-படி 50 சதவிகிதம் என்ற அளவில் குறைந்திருக்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பெருந்தொற்றுக் காலத்தில் மகப்பேறு இறப்பு விகிதம் அதிகரித்தது என்று சொல்கிறார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், பெருந்தொற்றுக் காலம் தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, கேரளாவிற்கு இருந்தது; தெலுங்கானாவிற்கு இருந்தது; ஆந்திரப்பிரதேசத்திற்கு இருந்தது; ஏன், உலகம் முழுவதும் இருந்தது. பக்கத்தில் இருக்கிற கேரளாவில் 19 சதவிகிதம் இருக்கிறது; தெலுங்கானாவில் 43 சதவிகிதம் இருக்கிறது; ஆந்திரப்பிரதேசத்தில் 45 சதவிகிதமாக இருக்கிறது. அவர்களால் எப்படி மகப்பேறு இறப்பு விகிதத்தைக் குறைக்க முடிந்தது?* Reduction *6.9% என்று* Bulletin*-ல் சொல்கிறார்கள்; நீங்கள்தான் சொல்கிறீர்கள். நீங்கள் கொடுத்திருப்பதில்தான் இருக்கிறது. 6.9% என்பது மிகமிகக் குறைவு; அது அதிகமாகியிருக்க வேண்டும். இதுதான் முக்கியம் என்பதை நீங்கள் முழுமையாக எடுத்துக்கொண்டு,* Maternal death*-ஐ* audit *செய்து,* review *செய்து, வருங்காலத்தில் தாய்மார்களின் இறப்பு விகிதத்தைக் குறைக்க வேண்டும். அதற்காகத்தான், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலும், மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலும், கருவிலுள்ள குழந்தைகளுக்காக ஊட்டச்சத்துப் பெட்டகம், அம்மா குழந்தைகள் நல பரிசுப் பெட்டகம் ஆகியன கொடுக்கப்பட்டன. நீங்கள் கொண்டு வந்த டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட தொகையான, 6,000 ரூபாயை 12,000 ரூபாயாகவும், 12,000 ரூபாயை 18,000 ரூபாயாகவும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உயர்த்திக் கொடுத்ததெல்லாம், இந்த மகப்பேறு இறப்பு விகிதத்தைக் குறைப்பதற்காகத்தான். அதற்காகத்தான் இத்தனை திட்டங்களையும் நாம் தொடர்ந்து கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், அதில்* outcome *வர வேண்டுமல்லவா? இவ்வளவு திட்டங்களை எல்லா ஆட்சியும் மாறி மாறி கொடுக்கின்றது. ஆனால்,* outcome *என்ன? அதன்* result *என்ன?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், மகப்பேறு இறப்பு விகிதம் ஏதோ 15, 16 என்கிற அளவில் இருந்ததைப் போன்றும், இப்போது, அது 52 ஆக உயர்ந்துவிட்டதைப் போன்றும் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறார். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், அவர் சொன்னதைப் போலவே 54 ஆக இருந்தது. இப்போது இந்த ஆட்சிக் காலத்தில், அது 52.32 ஆகக் குறைந்திருக்கிறது. United Nations Organisation, 17 Sustainable Development Goals என்பது குறித்து கூறியபோது, அதாவது, எத்தனை விகிதம் வரை இந்த இறப்பு விகிதத்தை அனுமதிக்கலாம் என்று கூறும்போது, 70 வரை அனுமதிக்கலாம் என்று கூறுகிறது. அதை நாம் support செய்யவில்லை. UNO சொல்கிறது; அதனால், 70 வரை போகலாம் என்று சொல்லவில்லை. ஆனால், மகப்பேறு இறப்பு விகிதத்தை 54–லிருந்து 52.32 ஆகக் குறைத்திருக்கிறோம். இதைக் கூறாமல், கேரளாவில் 19 விகிதமாக இருக்கிறது என்று கூறினால், நீங்கள் ஆட்சியில் இருந்தபோது, இந்த விகிதம் 12, 13 என்ற அளவிலா இருந்தது? நீங்கள் ஆட்சியிலிருந்தபோது, அதன் விகிதம் 54 ஆகத்தானே இருந்தது. அதிலிருந்து தற்போது குறைந்திருக்கிறதா, இல்லையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் எங்களுக்குக் கொடுத்தனுப்பிய செயல்முறைத் திட்டப் புத்தகம், பக்கம் 60–ல், ஒவ்வொரு வருடமும் எவ்வளவு குறைந்திருக்கிறது என்று இருக்கிறது. நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபோது, 2012 ஆம் ஆண்டில் மகப்பேறு இறப்பு விகிதம் 90 ஆக இருந்தது. அது 54 ஆகக் குறைந்தது. இந்த இரண்டு ஆண்டு காலமாகக் குறையவில்லை. சரி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 54–லிருந்து 52.32 ஆகக் குறைந்துள்ளது என்று சொல்கிறார். இன்னும் குறைக்க வேண்டுமென்று சொல்கிறேன், அவ்வளவுதான்.

2023 ஏப்ரல் 18]

பிற்பகல் 1-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினரின் ஆலோசனைக்கு நன்றி.*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *என்னுடைய விவாதங்களில் புத்தகத்தில் உள்ளதை, உள்ளது உள்ளபடியாகவும், கொஞ்சம் நல்லபடியாகவும் சொல்கிறேன். அடுத்த* subject*-க்குச் சென்றுவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Organ Transplantation*-பொதுவாக எனக்குப் பிடித்தமான ஒரு* Pet project *மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்தபோது,* Organ Transplant, TRANSTAN *என்ற அமைப்பையெல்லாம் உருவாக்கி, அதற்குப் பின்னர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் இருந்தபோது, உடல் உறுப்பு தானத்திற்காக மிகப் பெரிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, அதில்* Guinness *சாதனையெல்லாம் படைக்கப்பட்டது. மிகப் பெரிய விழிப்புணர்வை ஏற்படுத்தி,* motivation *செய்து, தானம் செய்பவர்களை ஊக்குவித்து,* Brain death certification*-ஐ நாங்கள் ஊக்குவித்து. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *இன்னும் நான் முடிக்கவேயில்லை. என்னுடைய கருத்தைச் சொன்னவுடன் மாண்புமிகு அமைச்சர் பதிலளிக்கலாம்.* Organ transplant *குறித்த எனது கருத்தை நான் முடித்துவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் பதிலையும் கேட்டுவிட்டுப் பேசுங்கள்; அவ்வளவுதானே!*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை என்கிற சட்டத்தை வேண்டுமானால் 1994-ல் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கொண்டு வந்திருக்கலாம். ஆனால், மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் 2008, செப்டம்பர் 5 ஆம் தேதி தமிழ்நாடு அரசின் சார்பில், மூளைச்*

சாவு அடைந்தவர்களிடத்திலிருந்து உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை திட்டத்தைத் தொடங்கி, அதற்கான ஓர் ஆணையத்தை உருவாக்கினார். *(மேசையைத் தட்டும் ஒலி)*

செங்கல்பட்டு பக்கத்திலிருக்கிற திருப்போரூரில் ஹிதேந்திரன் என்கிற ஓர் இளைஞன் சாலை விபத்தில் மூளைச் சாவு அடைந்தபோது, அவனுடைய பெற்றோர் மருத்துவர்களாக இருந்தார்கள். அந்த மூளைச் சாவு அடைந்த அந்த சிறுவனிடத்திலிருந்து முதன்முறையாக உறுப்பு தானங்களைப் பெற்று, அதன்மூலம் 5, 6 உயிர்கள் பிழைப்பதற்கு முத்தமிழறிஞர் காரணமாக இருந்தார். அப்போதுதான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், உறுப்பு மாற்று ஆணையத்தை உருவாக்கினார். அந்த உறுப்பு மாற்று ஆணையத்தை மாற்றி, ஏதோ அவர்கள் உருவாக்கியதுபோல சொல்வதென்பது பொருத்தமான ஒன்றல்ல என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல், என்னுடைய விவாதம் மிகவும் ஆரோக்கியமாக இருக்கிறது. ஆக, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் அவர்கள் அந்த ஆணையத்தை உருவாக்கியதற்குள் நான் செல்லவில்லை. அதற்குப் பிறகு TRANSTAN என்ற அமைப்பை அம்மா அவர்கள் உருவாக்கினார்கள் என்ற கருத்தை மட்டும்தான் நான் சொன்னேன். நீங்கள் ஹிதேந்திரனைச் சொன்னீர்கள். இதில் என்ன விஷயம் என்றால், இரண்டு அண்ணன்கள் இருக்கக்கூடிய ஆத்தூரில், இரண்டு கைகளும் இல்லாத நாராயணசாமி, ஒரு சாதாரண இளைஞன் ஒரு மனுவைக் கொண்டு சென்று அங்கிருக்கக்கூடிய மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் கொடுத்து, அது உடனடியாக அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய கவனத்திற்கு வந்தது. அது என்னவென்று பார்க்கச் சொல்லி என்னிடம் அறிவுறுத்தியதன்பேரில், அரசு ஸ்டான்லி மருத்துவமனையில், இரண்டு கைகளையும் இழந்த நாராயணசாமி என்ற அந்த இளைஞருக்கு 13 மணி நேரம் 75 மருத்துவர்கள், செவிலியர்களெல்லாம் சேர்ந்து Bilateral cadaveric hand transplant என்று சொல்லக்கூடிய உலக நாடுகளே புருவத்தை உயர்த்திப் பார்க்கக்கூடிய அளவிற்கு ஒரு சிகிச்சை அளிக்கப்பட்டது.

(மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் வளர்ந்த நாடுகளில் சென்று இதுகுறித்துப் பேசியபோது, இரண்டு கைகளையும் இழந்த ஒருவர் Basket ball *விளையாட முடியுமா?* Is it possible *என்று கேட்டார்கள்.* Yes, it is possible in Tamil Nadu. It happened in Stanley Medical College *என்று பெருமையோடு சொல்லத்தக்க வகையில் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் இந்த உடல் உறுப்பு ஆணையத்தை முறையாக, சிறப்பாகப் பயன்படுத்தியிருக்கிறோம்.*

என்னுடைய கேள்வி ஒன்றே ஒன்றுதான். 6 ஆண்டுகளாகத் தொடர்ந்து, double hat-trick-*ஓராண்டு, இரண்டாண்டு, மூன்றாண்டு அல்ல, 6 ஆண்டுகள் தொடர்ந்து இந்தியாவிலே முதல் இடத்தைப் பெற்ற துறை; கடந்த இரண்டு ஆண்டுகளாக முதல் இடத்தை நாம் விட்டுவிட்டோம். தெலுங்கானா நம்மை* overtake *செய்துவிட்டார்கள். மகாராஷ்டிரா நம்மை* overtake *செய்துவிட்டார்கள். கடந்த முறை இதுகுறித்து நான் பேசினேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்யப்படும் என்று சொன்னீர்கள் என்பதை மட்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் *மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் *தலைவர் அவர்களே, மூளைச் சாவு அடைந்தவர்களிடத்திலிருந்து உடல் உறுப்புகள் தானமாகப் பெறுகிற அந்தத் திட்டம் தொடங்கியதே, நான் தொடக்கத்தில் சொன்னதுபோல், 2008 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான். நீங்கள் அறுவை சிகிச்சை சட்டத்தை 1994-ல் கொண்டு வந்தீர்கள். அந்த ஆணையத்தை உருவாக்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர். அதுவும் ஹிதேந்திரனுடைய இறப்புக்குப் பிறகு. அதைவிட மாண்புமிகு உறுப்பினர், 'நாங்கள் விழிப்புணர்வு ஏற்படுத்தினோம்' என்று சொன்னார். எங்கள் தலைவர், வணக்கத்திற்குரிய தளபதி அவர்களும், அவருடைய துணைவியாரும், அவர்களுடைய மறைவுக்குப் பிறகு அவர்களுடைய உடல் உறுப்புகளை தானம் செய்ய ஒப்புதல் அளித்துள்ளார்கள். இதன்மூலம் இன்றைக்கு இந்தியாவிற்கே ஒரு முன்மாதிரியான அரசியல் கட்சித் தலைவராக இருப்பவர் தமிழ்நாட்டின் இன்றைய முதல்வர் அவர்கள்.* MIOT

Hospital-*ல், உடல் உறுப்பு தானம் செய்திருப்பவர் மாண்புமிகு நம்முடைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்கார்ந்து கொண்டு யாரும் பேசக்கூடாது. மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்ல, கடந்த ஆகஸ்ட் திங்கள் 13 ஆம் தேதி இந்தத் துறையின் சார்பில் மரியாதைக்குரிய உதயநிதி அவர்கள் கலந்துகொண்ட 'விடியல்' என்னும் ஒரு முழு தானியங்கி முறையை இந்தியாவிலேயே முதன்முறையாக இப்போது செயல்படுத்தத் தொடங்கியிருக்கிறோம். அவர் சொன்னதைப்போல, கடந்த 15 ஆண்டுகளாக இது முதல் இடத்தில் இருந்தது. அதற்கு முன்பு எந்த மாநிலத்திலும் இந்த உடல் உறுப்பு தானம் பெரிதாக ஊக்கப்படுத்தப்படவில்லை. தமிழ்நாட்டில்தான் அது 2008-லிருந்து தொடங்கப்பட்டு, தொடர்ச்சியாக அதனைப் பார்வையிட்டு சென்று, மற்ற மாநிலங்களில் அதனைச் செயல்படுத்தத் தொடங்கினார்கள்.*

பிற்பகல் 1-10

கொரோனா பேரிடர் காலத்தில் கொஞ்சம் முன்னும், பின்னும் வந்ததால் கடந்த ஆண்டிற்கு முந்தைய ஆண்டு மஹாராஷ்டிராவும், கடந்த ஆண்டு தெலுங்கானாவும் வந்திருந்தாலும்கூட, தமிழ்நாடு இன்றைக்கும் தொடர்ச்சியாக உடல் உறுப்பு தானத்தைப் பெறுவதில் முதல் இடம் என்பதில் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இல்லை.

இன்னொன்று, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே அவருக்குத் தெரியும். Organ Harvesting system-*த்தில் யாருக்கு* permission *கொடுத்திருக்க வேண்டுமென்றால்* Medical College Hospital-*க்கு எல்லாம் அனுமதி கொடுத்திருக்க வேண்டும். அவர்களுடைய* Government *இருக்கும்போது எத்தனை* hospital-*க்கு அனுமதி கொடுத்திருந்தார்கள் என்றால், வெறும் 13* Government Hospitals-*க்கு மட்டும்தான்* organ harvest-*க்கு* Licence *கொடுத்திருந்தார்கள். மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டிலிருக்கின்ற அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாவட்ட அரசு*

மருத்துவமனைகளுக்கும் Organ harvest-*க்கு* licence *கொடுக்க வேண்டுமென்று சொல்லி, அதற்கான உரிமங்களைத் தந்து, வெறும் 13 அரசு மருத்துவமனைகளில் மட்டுமே* Organ harvest system *இருந்ததை மாற்றி, மேலும் 23 மருத்துவமனைகளில்* organ harvest-*க்கு* licence *கொடுத்திருப்பது இந்த அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 'மே' மாதத்திலிருந்து நேற்றையதினம் வரை 158 பேர் உறுப்பு தானம் செய்திருக்கிறார்கள். இதன்மூலம் 553 உறுப்புகள் இன்றைக்கு பயன்பாட்டிற்கு வந்திருக்கின்றன. அடுத்த ஆண்டு நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ளலாம்; உறுப்பு தானத்தில் இந்தியாவில் மட்டுமல்ல, உலக அளவிலேயே தமிழ்நாடு முதலிடத்தில் இருக்கிறது என்கின்ற அந்த நிலை வரவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொஞ்சம் பதமாக. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் நீங்கள் 15 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். அவர்கள் 8 நிமிடம் 47 விநாடிகள் பேசியிருக்கிறார்கள். சீக்கிரம் உரையை முடித்துவிடுங்கள்.*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *எல்லோருக்கும் 25 நிமிடங்கள் கொடுத்திருக்கிறீர்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏனென்றால். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஏனென்றால், அவர்கள் பேசிய* time *இருக்கிறது. நீங்கள் அங்கு பாருங்கள். அதில் மஞ்சள் நிறமாக ஒரு கோடு இருக்கும். அதில் ஒவ்வோர் உறுப்பினரும் பேசிய நேரம்* count *ஆகும்.*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் அவர்கள் பேசிய நேரத்தையும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்*

[திரு. துரைமுருகன்] [2023 ஏப்ரல் 18

துறை அமைச்சர் அவர்கள் பேசிய நேரத்தையும் சொன்னீர்கள். வழக்கமாக நான் பார்த்தவரையில் debate-ல் எப்படி என்றால் எதிர்க்கட்சிகள் பேசுவார்கள், Ministers குறிப்பெடுத்துக் கொண்டு reply செய்வார்கள். ஆனால், அப்படி செய்யலாம் என்று பார்த்தால் நீங்கள் சென்றுவிடுகிறீர்கள். அதனால்தான் இப்போதே பதில் சொல்கிறார். சொல்லுங்கள், சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இனிமேல் போக மாட்டார்கள். இன்றைக்கு போக மாட்டேன் என்று சொல்லியிருக்கிறார்கள். (சிரிப்பு) இன்றிலிருந்து போக மாட்டோம் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டே வரியில் சொல்லியிருக்கலாம். இவ்வளவு நேரம், 8 நிமிடங்கள் எடுத்திருக்க வேண்டிய அவசியமே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 'தொடர்ந்து ஆறு ஆண்டு காலமாக உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் தேசிய அளவில் முதலிடத்தில் இருந்தோம். கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பின்தங்கிவிட்டது. அதை சரி செய்ய வேண்டும் என்றுதான் சொல்லியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) வேறு ஒன்றுமே கிடையாது. அதற்கு ஏதேதோ பதில் சொல்கிறாரே தவிர, சரி செய்வோம் என்று சொல்லிவிட்டால் முடிந்துவிட்டது. அவ்வளவுதான். அதற்கு 8 நிமிடங்கள் எடுத்துக்கொண்டார்.

அதுமட்டுமல்ல, ஏற்கெனவே 13 அரசு மருத்துவமனைகளில்தான் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்கு அனுமதி கொடுத்தீர்கள் என்றும், நாங்கள் மேலும் 23 மருத்துவமனைகளுக்கு அனுமதி கொடுத்திருக்கிறோம் என்று சொன்னார். அப்படி 23 மருத்துவமனைகளுக்கு அனுமதி கொடுத்திருந்தால், இன்னும் அதிகமாக உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்திருக்க வேண்டுமல்லவா! முதலிடத்தில் வந்திருக்கலாம் அல்லவா! (மேசையைத் தட்டும் ஒலி) ஏன் பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் சொன்னேன். கடந்த 'மே' மாதத்திலிருந்து இதுவரை 158 மூளைச் சாவு அடைந்தவர்களது

553 உறுப்புகள் தானமாகப் பெறப்பட்டிருக்கின்றன. இது இந்திய வரலாற்றில் மட்டுமல்ல, வேறு எப்போதும் நடைபெறாத ஒரு மிகப் பெரிய சாதனை. (மேசையைத் தட்டும் ஒலி) இது இப்போது கணக்கில் வராது. வரும் நிதியாண்டில்தான் இது கணக்கில் வரும். அதைத்தான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் நன்றி சொல்லி, உரையை முடியுங்கள். அவ்வளவுதான். (குறுக்கீடு) அவையில் இருக்கின்ற அனைவருக்கும் சேர்த்துதான் சொல்கிறேன். எந்தெந்த உறுப்பினருக்கு எத்தனை நிமிடங்கள் கொடுக்கின்றோமோ அது* count *ஆகிவிடுகின்றது. இனிமேல் ஒவ்வொருவரும் பேசும்போது நீங்கள் நேரத்தை அதிகமாகக் கொடுத்துவிட்டீர்கள், நீங்கள்தான் எடுத்துக் கொண்டீர்கள் என்கின்ற பேச்சுக்கே இடமில்லை. உங்களுக்குக் கொடுத்த நேரம், 15 நிமிடங்களைத் தாண்டிவிட்டது. பேசி, உரையை முடியுங்கள்.*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் மென்மையாக, தன்மையாக, பதமாக, இதமாக என்னுடைய கருத்துகளை நான் உங்களிடம் தெரிவிக்கிறேன். எப்போதும் கேட்பது, எல்லோரும் எல்லாவற்றையும் செய்திருக்கிறோம்.* Outcome, result *அதுமட்டும் தான் எங்களுடைய கேள்வியாக இருக்கிறது. நான் அடுத்த* subject*-க்குச் சென்றுவிடுகிறேன். ஏனென்றால், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அழகாக அந்தக் கேள்வியைக் கேட்டார்கள்.*

பொதுவாக, அம்மா குழந்தைகள் நல பரிசுப் பெட்டகமானது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்தபோது, ஒரு அரசு மருத்துவமனையில் குழந்தை பிறந்தவுடன் பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க என வாழ்த்தி, தாய் மாமன் சீர் கொண்டு வருகின்றாரோ, இல்லையோ (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய அரசு மருத்துவமனையை பரிசு மருத்துவமனையாக மாற்றுவதற்காக அம்மா குழந்தைகள் நல பரிசுப் பெட்டகத்தை 16 பொருட்களோடு கொடுத்தார்கள். என்னுடைய கேள்வி வேறு ஒன்றுமில்லை. நான் ஒரு நாள் என்னுடைய தொகுதியில் உள்ள ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சென்றபோது இந்தத் திட்டத்திற்கு தற்போது பெயர் மாற்றப்பட்டிருக்கிறது. அது என்னவென்றால், அம்மா குழந்தைகள் நல பரிசு பெட்டகம் இப்போது குழந்தைகள் நல பரிசு பெட்டகம் என்று மாற்றப்பட்டிருக்கிறது. ஒன்றும் பிரச்சினை இல்லை.

நான், அங்கு சென்றபோது ஒரு அம்மா அந்தப் பெட்டகத்தை எடுத்து வந்தார்கள். பெட்டகத்தைப் பார்த்தீர்களென்றால், அப்போது பச்சைக் கலரில் இருந்தது. இப்போது மஞ்சள் கலரில் இருக்கிறது. அதுபற்றி ஒன்றும் பிரச்சினையில்லை. இது என்னம்மா என்று கேட்டேன். அதற்கு அந்த அம்மா 'அம்மா பெட்டகம்' என்று சொன்னார். நான், அந்த அம்மாவிடம் 'யாரம்மா கொடுத்தது' என்று கேட்டேன். அந்த அம்மா nurse அம்மா கொடுத்தது என்று சொன்னார்கள். ஓ, nurse அம்மா கொடுத்தார்களா? 'ஆமாம். டாக்டர் அம்மா பக்கத்தில் இருந்தார்கள்' என்றார். என்னவென்று கேட்ட ஒரு வரிக்கு அந்த அம்மா, 'nurse அம்மா கொடுத்தது, டாக்டர் அம்மா பக்கத்தில் இருந்தது' என்று சொன்னார்கள். சரி அம்மா, இந்தத் திட்டத்தை யாரம்மா கொண்டுவந்தது என்று கேட்டபோது, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்தார்கள் என்று அந்த அம்மா சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா என்ற வார்த்தையைச் சேர்த்து, அந்தத் திட்டத்திற்கு நாங்கள் எப்படி பெயர் வைத்தோம் என்றால், ஒரு பெண் முதலில் கருத்தரித்து, பின்னர் குழந்தை பிறந்தவுடனே அம்மா என்றுதானே அழைக்கும். எல்லா குழந்தைகளும் அம்மா என்றுதான் கூப்பிடும். அந்த அம்மாவை மனதில் வைத்து அம்மா என்றும், பிறக்கிற குழந்தையை மனதிலே வைத்து. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முடித்துவிடுகிறேன். நீங்கள், சப்ஜெக்ட்டை இவ்வளவு break செய்யக் கூடாது அல்லவா! பிறந்த குழந்தையை மனதில் வைத்து. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடு) நீங்களும் இருங்கள். நான் சொல்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் பதிலுரையின்போது இருந்தீர்களென்றால், குறுக்கீடுகள் இல்லாமல் இருக்கும். நீங்கள் அந்த உத்தரவாதத்தைத் தந்துவிட்டீர்களென்றால், மாண்புமிகு அமைச்சர்கள் இடையில், இடையில் பேச மாட்டார்கள். (குறுக்கீடுகள்) இல்லை, உங்களுக்கு நான் பேச வாய்ப்பு தருகிறேன். (குறுக்கீடுகள்) இருங்கள். நான் சொல்கிறேன். (குறுக்கீடு) ஏற்கெனவே, மாண்புமிகு அமைச்சர்

அவர்கள் சொல்லிவிட்டுத்தான் பேசுகிறார்; 'நீங்கள் பதிலுரை முடியும் வரை இல்லாததால்தான், நான் உங்களுடைய கேள்விக்கு அப்போதைக்கப்போது பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. அந்த வாய்ப்பை எனக்குத் தாருங்கள்' என்றுதான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னிடத்தில் கேட்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) அதை நான் கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) உங்களுக்கு ஒதுக்கப்பட்ட அந்த 15 நிமிடங்களை நான் குறைக்கப் போவதில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுப் பதில் சொன்னதை நான் உங்களுடைய கணக்கில் சேர்க்கவில்லை. (குறுக்கீடு) அதனால், 15 நிமிடங்கள் தாண்டியவுடனே, நீங்களே நன்றி சொல்லிவிட்டு உட்கார்ந்துவிடுங்கள். (குறுக்கீடு) நன்றி. (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது என்னுடைய உரிமைதான். (குறுக்கீடு)

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவொரு மிகப் பெரிய department. இது மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் மானியக் கோரிக்கை. கிட்டத்தட்ட 8 கோடி மக்களுடைய பிரச்சினைகளைப் பேச வேண்டிய மன்றம், இந்த மாமன்றம். இந்தத் துறையில் இருக்கிற பிரச்சினைகளையெல்லாம் பேச வேண்டுமென்றால், 15 நிமிடங்களில் எப்படிப் பேச முடியும்? அவர் மூன்று சப்ஜெக்ட் குறித்து பேசினார். அந்த மூன்று சப்ஜெக்ட்டுக்கும் 15 நிமிடங்கள் ஆகிவிட்டன. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தபோது, அவைக் குறிப்பை நீங்கள் எடுத்துப் பாருங்கள். கிட்டத்தட்ட 45 நிமிடங்களிலிருந்து ஒரு மணி நேரம் வரை கொடுக்கப்பட்டிருக்கிறது. வேண்டுமென்றால், அவைக் குறிப்பை எடுத்துக் கொடுக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒருமணி நேரம் என்பது எல்லோரும் பேசியது.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: எல்லோரும் ஒருமணி நேரத்திற்குள் பேச வேண்டுமென்றால் அது எப்படி முடியும்? பிரதான எதிர்க்கட்சி, மக்களுடைய பிரச்சினைகளை எடுத்து

வைப்பது மாமன்றத்தில்தான். நீங்கள் அப்படிப் பேச வாய்ப்பு கொடுத்தால்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல முடியும். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலில் நாங்கள் குறுக்கிடவில்லை. அவருக்கு எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் கொடுங்கள். அதே அளவில், இருக்கின்ற பிரச்சினைகளை இந்த மாமன்றத்தில் எடுத்து வைப்பதற்கு எதிர்க்கட்சிகளுக்கு போதிய நேரத்தை நீங்கள் வழங்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்களும் 5 நிமிடங்கள் 13 விநாடிகள் பேசிவிட்டீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேசுங்கள். நன்றி சொல்லி முடியுங்கள். (குறுக்கீடுகள்)*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் 5 நிமிடங்கள் மட்டும் எனக்குப் பேச வாய்ப்புக் கொடுங்கள். நான்* subtitle*-ஐ மட்டும் சொல்லிவிடுகிறேன். மிகவும்* detailed *ஆக உள்ளே செல்லவில்லை. அந்த வார்த்தையை நீங்கள்* break *செய்ததைக்கூட நான் விட்டுவிடுகிறேன்.*

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம். இரண்டே சப்ஜெக்ட்தான். இப்போது incurred ratio *115 சதவிகிதம் அளவிற்குச் சென்றுவிட்டது. அதனால், இந்தத் திட்டத்தில் நிறைய* rejections *வருகின்றன.* Dialysis *செய்ய வேண்டுமென்றால், ஒரு* package, *கிட்டத்தட்ட ரூ.8 ஆயிரம் ஆகும். அதனைச் சேர்த்ததற்குப் பிறகு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் நிறைய* rejections *வருகின்றன. நாங்கள் அரசு மருத்துவமனைகளில் இத்திட்டத்தை எப்படி செயல்படுத்தினோம் என்றால், அரசு மருத்துவமனைகளில், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீடு அட்டை இருக்கிறதோ, இல்லையோ எல்லோருக்கும்* treatment *கொடுத்தோம். எல்லா சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதியிலுள்ள மக்களுக்காக நான் பேசுகிறேன். இதில் என்ன முக்கியமான விஷயம் என்றால், நிறைய* rejections *வருகின்றன. தனியார் மருத்துவமனையிலும்* rejection *வருகிறது. அரசு மருத்துவமனையில் இரண்டு நாட்களுக்குள், 48 மணி நேரத்திற்குள்* pre-authorisation*-க்கு* permission *கொடுக்க வேண்டுமென்று நீங்கள்* rule *கொண்டு வருகிறீர்கள். அப்போது அந்தமாதிரி கிடையாது. அம்மா அவர்களுடைய ஆட்சியில்* treatment first, approval next. *இப்போது,* approval first, treatment next *என்று இருக்கிறது. நீங்கள்* approval *கொடுக்காததால், அதே* patient*-ஐ இரண்டு நாட்கள் கழித்து திரும்பவும்* re-admission *போட்டு, திரும்பவும்*

2023 ஏப்ரல் 18] [*டாக்டர் சி. விஜயபாஸ்கர்*]

pre-authorisation-*க்கு அனுப்புகிறீர்கள். அதுவும்* rejection *ஆகிறது. (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தைப் பொறுத்தவரை. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கையில் அமர்ந்துகொண்டு பேசும் பழக்கத்தை மறந்துவிடுங்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தைப் பற்றி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இங்கே சொன்னார்கள். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் எப்படிச் செயல்படுத்தப்பட்டது என்பதை அவர் விவரித்தார். அப்போது அவருக்குத் தெரியும். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்,* premium *வெறும் ரூ.699/- கொடுத்தார்கள். இன்றைக்கு,* insurance premium *எவ்வளவு என்றால், ரூ.849/-. அப்போது, எத்தனை மருத்துவமனைகளில் செயல்படுத்தப்பட்டது என்றால், 970 மருத்துவமனைகளில் செயல்படுத்தப்பட்டது. இப்போது எத்தனை மருத்துவமனைகளில் செயல்படுத்தப்படுகிறது என்றால், 1,760 மருத்துவமனைகளில் செயல்படுத்தப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்போது எவ்வளவு சிகிச்சை முறைகள் இருந்தன என்றால், 1,027 சிகிச்சை முறைகள் இருந்தன. இப்போது எவ்வளவு சிகிச்சை முறைகள் இருக்கிறது என்றால், 1,513 சிகிச்சை முறைகள் இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அப்போது எவ்வளவு தொகை வரை பயன்படுத்த முடியும் என்று சொன்னால், ரூ.2 இலட்சம் வரை பயன்படுத்தலாம். இப்போது எவ்வளவு தொகை வரை பயன்படுத்தலாம் என்றால், ரூ.5 இலட்சம் வரை பயன்படுத்தலாம். (மேசையைத் தட்டும் ஒலி) அப்போது குடும்ப ஆண்டு வருமான வரம்பு எவ்வளவு என்றால், ரூ.70 ஆயிரம். இப்போது, குடும்ப ஆண்டு வருமான வரம்பை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தமாதிரி அந்தத் திட்டத்தை எடுத்துக்கொண்டு செல்வதால்தான் இந்தியாவிலேயே இந்த முதலமைச்சரின் விரிவான மருத்துவக்*

காப்பீட்டுத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு தொடர்ந்து முதலிடத்தில் இருந்து கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அந்தப் பிரச்சினைக்குள்ளே செல்லவில்லை. நீங்கள் சொல்கிற கருத்தில், ரூ.72 ஆயிரத்தை, ரூ.1 இலட்சத்து 20 ஆயிரமாக மட்டும்தான். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லிவிடுகிறேன். உங்களுக்குப் பேசுவதற்கு 15 நிமிடங்களுக்குப் பதிலாக 20 நிமிடங்கள் தந்துவிடுகிறேன். 20 நிமிடங்களில் உரையை முடித்துவிடுங்கள். நன்றி.

பிற்பகல் 1–20

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதற்குள் போக விரும்பவில்லை. ஏனென்றால், மத்திய அரசினுடைய Suraksha Bima Yojana திட்டத்தில் சேர்ந்த பிறகுதான் ரூபாய் 2 இலட்சம் என்று இருந்தது, ரூபாய் 5 இலட்சமாக ஆனது. 2018–ல் 5 இலட்சம் ரூபாய் வழங்கும் திட்டத்தை நாங்கள் கொண்டு வந்துவிட்டோம். நீங்கள் அதைக் கொண்டு வந்ததாக ஏற்கெனவே பலமுறை சட்டமன்றத்தில் சொல்லியிருக்கிறீர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அது தவறு. 72 ஆயிரம் ரூபாயாக இருந்ததை மட்டும்தான் நீங்கள் உயர்த்தினீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு இந்தத் துறை பற்றி தெரியும். இதற்கு முன்பு இருந்த உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளுக்கு அதிகபட்சமாக அவர் எவ்வளவு கொடுத்தார் என்று சொல்லட்டும். இன்றைக்கு 22 இலட்சம் ரூபாய் வரையில், கணைய மாற்று அறுவை

2023 ஏப்ரல் 18] [திரு. மா. சுப்பிரமணியன்]

சிகிச்சை, கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை, மஜ்ஜை மாற்று அறுவை சிகிக்சை, கண் விழி மாற்று அறுவை சிகிச்சை, தோல் மாற்று அறுவை சிகிச்சை. இந்த மாதிரி உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளுக்கு அதிகபட்சமாக 22 இலட்சம் ரூபாய் வரையில் தந்துகொண்டிருக்கின்ற அரசு, இந்த அரசு என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலிலிருந்து நான் கேள்வியை எடுக்க வேண்டியிருக்கிறது. நீங்கள் கணக்கை எடுத்துப் பாருங்கள், தரவுகளைப் பாருங்கள். அதிகபட்சமாக 35 இலட்சம் ரூபாய் வரையில் கொடுத்திருக்கிறோம் என்பது மட்டுமல்ல, "corpus fund" நீங்கள் சொல்லக்கூடிய liver transplant, heart transplant, lung transplant, cochlear implantation ஆகிய இவையெல்லாம் high end surgery என்று சொல்லிவிட்டு, அதற்காக 10 கோடி ரூபாய் corpus fund கொடுத்து, சிறப்பு நிதியாக, TRANSTAN-க்கு 25 கோடி ரூபாயைக் கொடுத்திருக்கிறோம். இப்போது அதுமாதிரி நிதி கொடுத்தீர்கள் என்றால், மக்கள் பயன்பாட்டிற்கு, rejection வராமல், எல்லோருக்கும் எல்லாம் கிடைப்பதற்குண்டான வழிவகைகளை இந்த அரசு ஏற்படுத்தித் தரவேண்டும் என்பதை மட்டும்தான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 2009 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 23 ஆம் தேதி, கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தைக் கொண்டுவந்ததன் நோக்கமே, ஏழையெளியவர்களுக்கான மருத்துவ சிகிச்சைக்கு ஒரு சிறப்பு அந்தஸ்து கிடைக்க வேண்டும் என்பதுதான். இது கலைஞரால் கொண்டுவரப்பட்டது. கலைஞரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் என்று இதற்குப் பெயர். உறுப்பினர் சொன்னார் 'அம்மா பெட்டகம்' என்று. அதுமாதிரி இது கலைஞரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்.

இன்னொன்று, நான் முதலில் சொல்லலாம் என்று நினைத்தேன். இந்தியாவிலேயே முதலில் நாங்கள்தான் அம்மா பெட்டகத்தைக் கொண்டு வந்தோம் என்று சொன்னார். உண்மை அதுவல்ல. 2006-லிருந்து 2011 வரைக்குமான மாநகராட்சி நிதிநிலை அறிவிப்புகளை எடுத்துப்பார்த்தார் என்றால் தெரியும். அன்றைக்கு மாநகராட்சி மகப்பேறு மருத்துவமனைகளில் பிறக்கின்ற குழந்தைகளுக்கு, இதேபோன்ற பெட்டகம், சோப்பு, டவல், சீப்பு உள்ளடங்கிய பெட்டகத்தைத் தந்து, இந்தியாவிலேயே முதன்முறையாக அந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தது என்பது தி.மு.க. ஆட்சியில் தான் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் நீங்கள் பேசத் தொடங்கி, மொத்தம் 48 நிமிடங்கள் ஆகிவிட்டன. 20 நிமிடங்களில் முடியுங்கள்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்தடுத்து subtitle மட்டும் சொல்லிவிடுகிறேன். பக்கம் 407. பொதுவாக, வளர்ந்த நாடுகளில் மகப்பேறுவில் LSCS பார்த்தீர்கள் என்றால் 15 to 25 சதவிகிதம்தான் இருக்கும். ஆனால், இப்போது 44.9 சதவிகிதம். வருங்காலத்தில், அறுவை சிகிச்சைகளைக் குறைக்கக்கூடிய அந்த வழிவகைகளை அரசு கையாள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல Amma mini clinic, ஏற்கெனவே பலமுறை விவாதம் செய்திருக்கிறோம். அதன் உள்ளே போக விரும்பவில்லை. இப்போது நீங்கள் Urban Health and Wellness Centre என்று கொண்டு வந்திருக்கிறீர்கள். Urban Health and Wellness Centre என்பதைத்தான் நாங்கள் அம்மா கிளினிக் என்று கொண்டு வந்தோம். காலையிலும், மாலையிலும் செயல்படும்வகையில், அண்ணன் எதிர்க்கட்சித் தலைவர், பரீட்சார்த்தமான முறையில் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். என்ன முக்கியமான விஷயம் என்றால், நீங்கள் மாநகராட்சியில் மட்டும் கொண்டு வருகிறீர்கள். எங்கே மருத்துவத் தேவை இருக்கிறது என்று சொன்னால், தேடல் இருக்கிறது என்று சொன்னால், நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தி பாடுபடக்கூடிய மக்கள், கிராமப்புறத்தில் பேருந்து வசதி இல்லாத மக்களுக்குத்தான் தேவை உள்ளது. இப்போது கோயம்புத்தூர்

2023 ஏப்ரல் 18] [டாக்டர் சி. விஜயபாஸ்கர்]

என்று எடுத்துக்கொண்டால், நீங்கள் 50 Urban Health and Wellness Centre ஆரம்பிக்கப்படும் என்று அறிவித்திருக்கிறீர்கள். Corporation-ல் கொடுத்திருக்கிறீகள். Building கட்டியிருக்கிறீர்கள். நான் கேட்பது, அதனை அங்கே இருக்கக்கூடிய ஆனைமலை, Topslip, உடுமலை, பொள்ளாச்சி போன்ற மலைவாழ் பகுதிகளில், கிராமப்பகுதிகளில் கொடுத்தீர்கள் என்றால் பயனுள்ளதாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். நன்றி, 20 நிமிடங்கள் முடிந்துவிட்டன. மாண்புமிகு உறுப்பினர் திரு. R.D. சேகர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அம்மா மினி கிளினிக்கைப் பற்றி சொன்னார்கள். நாம் ஏற்கெனவே இதுசம்பந்தமாக நிறைய விவாதித்து இருக்கிறோம். அம்மா மினி கிளினிக் குறித்த G.O. எல்லாம் இருக்கிறது. படித்துக்காட்டினால் நேரம் ஆகும். இவர்கள் எடுத்துக்கொண்டு வரும்போது சரியாக ஓர் ஆண்டிற்கு மட்டும் தற்காலிகமாக நிறுவப்பட்ட ஒன்று என்று சொல்லி, அந்தமாதிரிதான் அந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். ஆனால், இப்போது மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களால் திறக்கப்படவிருக்கின்ற 708 மருத்துவமனைகள், 21 மாநகராட்சிகளிலும் 63 நகராட்சிகளிலும் வரப்போகிறது. அந்த 708-ல், 500-க்கு கட்டுமானப் பணிகள் முடிவுற்று இருக்கின்றன. District Health Society மூலமாக இப்போது பணியாளர்கள் தேர்வு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மரியாதைக்குரிய மன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னது மாதிரி இதற்கும், அதற்கும் compare செய்யவே முடியாது. அம்மா கிளினிக்கில் ஒரு மருத்துவரை மட்டும்தான் பணி அமர்த்தினார்கள். 1,820 மருத்துவர்களை மட்டும்தான் நியமனம் செய்தார்கள். அதற்கு செவிலியர்கூட இல்லை. இந்த நகர்ப்புற நல வாழ்வு மையம்—அதற்கும், இதற்கும் equate செய்தார், definite ஆக equate செய்ய முடியாது. காரணம், ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு சுகாதார ஆய்வாளர், ஒரு உதவியாளர், இந்த மாதிரி 4 பணியிடங்களோடு இந்த ஒரு மருத்துவமனை, காலை 8 மணியிலிருந்து 5 மணி வரை தொடர்ந்து இயங்கும்.

இதற்கு நிரந்தர கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு 708 மருத்துவமனைகள் ஒவ்வொன்றிற்கும் ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறுக்கிட்டுப் பேசுகையில், 'சைதாப்பேட்டையில் சுடுகாட்டில் ஒன்றைக் கட்டியிருக்கிறீர்கள், வந்து பாருங்கள்' என்று சொன்னேன். அதனை இன்னும் ஒரு சாட்சியாக வைத்திருக்கிறோம். அவர்கள் கட்டிய Amma Clinic சைதாப்பேட்டை, சாரதி நகர் சுடுகாட்டில் இருக்கிறது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களிடம் நான் ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும். மணி இப்போது 1–15 ஆகிவிட்டது. இன்னும் 7 உறுப்பினர்கள் பேச வேண்டும். But we had a healthy discussion. He has vast knowledge in the subject. He is also having vast knowledge in the subject. அதிலும், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் விஜயபாஸ்கர், எதைப் பேசினாலும், நம்புகிற மாதிரியே பேசுவார். எனக்கு அவரை மிகவும் பிடிக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) நன்றாகப் பேசுவார். அது எனக்குத் தெரியும். ஆகவே, இதையே தொடராமல், அடுத்த உறுப்பினர் திரு. R.D. சேகரை பேசச் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. R.D. சேகரைப் பேச நான் அழைத்துவிட்டேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: எங்களுக்கு சாப்பாட்டுக்கு நேரமாகிவிட்டது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் 59 நிமிடங்கள் பேசி முடிந்துவிட்டது. (குறுக்கீடு) ஒரே நிமிடத்தில் பேசி, நன்றி சொல்லி உரையை முடித்துவிடுங்கள். (குறுக்கீடுகள்) ஒரு நிமிடத்தில் பேசி, நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளதைப் பேசுகின்றபொழுது, அது நம்புவது போலத்தான் இருக்கும். ஏனென்றால், உண்மை அப்படித்தான்

இருக்கும் என்பதை மாண்புமிகு அவை முன்னவர், மூத்தவர் அவர்களுக்கு சொல்லிக்கொண்டு, ஒரேயொரு கருத்தை மட்டும் பதிவு செய்ய விரும்புகிறேன்.

'புத்தன், இயேசு, காந்தி பிறந்தது பூமியில் எதற்காக?' என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பாடியிருக்கிறார்கள். 'நிழல் வேண்டும்போது, மரம் ஒன்று உண்டு; பகை வந்தபோது, துணை ஒன்று உண்டு; இருள் வந்தபோது விளக்கொன்று உண்டு; எதிர்காலம் ஒன்று எல்லோருக்கும் உண்டு' என்று சொல்லியிருக்கிறார். அந்த எதிர்காலம் மரியாதைக்குரிய அண்ணன் எடப்பாடியார் தலைமையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு வரும். (மேசையைத் தட்டும் ஒலி) அப்பொழுது நான் சொன்னதுபோல. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிறைய பேசியாகிவிட்டது. அவ்வளவும் பதிவாகியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. R.D. சேகர் அவர்கள்.

திரு. R.D. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் போன்ற சாமானிய எளியவர்களெல்லாம் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்தில் பணியாற்றுகிற வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், அறிவுலக மேதை பேரறிஞர் அண்ணா, தமிழ்நாட்டின் நவீன சிற்பி மாண்புமிகு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

Anyone who knows history, knows that major social changes are not possible without the rise of women. அதாவது, பெண்கள் எழுச்சியில்லாமல் பெரிய சமூக மாற்றம் சாத்தியமில்லை என்பது வரலாற்றை அறிந்த எவருக்கும் தெரியும் என்கிற Karl Marx-ன் கூற்றிற்கிணங்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செப்டம்பர் 15 ஆம் தேதியிலிருந்து 1 கோடி குடும்பத் தாய்மார்களுக்கு உரிமைத் தொகை மாதம் ரூ.1,000/-, (மேசையைத் தட்டும் ஒலி) அரசுப் பேருந்துகளில் மகளிருக்குக் கட்டணமில்லா பேருந்து வசதி, (மேசையைத் தட்டும் ஒலி) புதுமைப் பெண் திட்டம்மூலம் உயர் கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000/-, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு இதுவரையில் ரூ.2,088 கோடி கடன் தள்ளுபடி, கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் ரூ.46,312 கோடி கடன் வழங்கி, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர்

அவர்களுடைய கனவை நனவாக்கிக் கொண்டிருக்கிற திராவிட மாடல் முதல்வரே, (மேசையைத் தட்டும் ஒலி) கடுமையான நிதி நெருக்கடி நேரத்திலும்கூட, பலவித அற்புதங்களை நிகழ்த்திக் காட்டிக்கொண்டிருக்கிற அற்புதத் தலைவரே, நீங்கள்தான் மக்களின் முதல்வர். நீங்கள்தான் தமிழ்நாட்டின் தலைவர்; உங்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திராவிட மாடல் அரசு அமைந்தவுடன் தமிழ்நாட்டில் சர்வதேச Chess Olympiad *போட்டியை நடத்துகிற வாய்ப்பு நமக்குக் கிட்டிய நேரத்தில், அந்தப் போட்டியினை நடத்துகிற குழுவில் மாண்புமிகு சின்னவர் அவர்கள் இடம்பெறும் வாய்ப்பை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள். அவர் அந்தக் குழுவில் இடம்பெற்று வழங்கிய சிறந்த ஆலோசனைகளால், இன்று சர்வதேச நாடுகள் வியந்து பார்க்கிற அளவிற்கு அவர்களுடைய பணி அமைந்திருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவேதான், பல்வேறு சர்வதேசப் போட்டிகளும் தமிழ்நாட்டில் நடத்த முன்வரும் அளவிற்கு இன்றைக்கு தமிழகத்தின் பெருமை உயர்ந்து நிற்கிறது.*

'இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து
அதனை அவன்கண் விடல்.'

என்ற குறளுக்கு ஏற்ப, எதைக் கொடுத்தாலும் அதனை வெற்றிகரமாக முடிப்பதற்கும், 'ஒரு கவலை இனியில்லை, பெருங்கழகம் காப்பதற்கு' என அரசியல் களத்தில் கால் பதித்த நாள் முதற்கொண்டு, அனைத்துத் தேர்தல்களிலும் கழகம் வெற்றிபெற உழைத்த வெற்றியின் நாயகன், அன்பின் பிறப்பிடம், அடக்கத்தின் இருப்பிடம், மாண்புமிகு சின்னவர் அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் உள்ளிட்ட மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அரசுத் தலைமைக் கொறடா அவர்களுக்கும், என்னுடைய சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், எனக்கு வாக்களித்து வெற்றிபெற வைத்த பெரம்பூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2023 ஏப்ரல் 18] [திரு. R.D. சேகர்]

பிற்பகல் 1–30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறப்புமிக்க இந்த மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையின்மீது உரையாற்றுகின்ற வாய்ப்பினைப் பெற்றிருக்கின்ற நான், ஒரு சில கருத்துகளை உங்களிடத்தில் சொல்ல விரும்புகிறேன். எனக்கு முன்னால் உரையாற்றிய முன்னாள் அமைச்சர், மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர், டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் பேசும்போது ஆரம்பத்தில், நோய்க்கான மாத்திரை கொடுப்பது பற்றியும், injection போட்டால் வலிப்பது பற்றியும் அவர் ஒரு மருத்துவர் என்கிற முறையில் குறிப்பிட்டுச் சொன்னார்கள். நான் அவருக்குப் பதில் சொல்வதாகக் கருதிவிடக் கூடாது. இன்றைக்குக் கடுமையான நிதி நெருக்கடி என்கிற கொடிய நோய் தமிழ்நாட்டைப் பிடித்துக்கொண்ட நேரத்தில், கொடுக்க வேண்டிய மாத்திரைகளைக் கொடுத்து, injection–ஐப் போட்டு, தமிழ்நாட்டை இன்றைக்கு ஒரு healthy ஆன மாநிலமாக, வளமான மாநிலமாக ஆக்கிய முதல்வர்தான், (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) மருத்துவர்தான், எங்கள் மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவத் துறை என்பது மகத்தான துறையாகும். 24 மணி நேரமும் மக்களுக்குச் சேவையாற்றுகின்ற துறையாகும். இந்தத் துறையின்மூலம் தமிழ்நாட்டு மக்கள் மிகுந்த உட்கட்டமைப்பைப் பெற்றிருக்கும் இந்த நேர்விலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓர் அற்புதமான திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். 'இன்னுயிர் காப்போம், நம்மைக் காக்கும்–48', (மேசையைத் தட்டும் ஒலி) சாலை விபத்துகளில் பாதிக்கப்படும் நபர்களின் குடும்பங்களும், அவர்தம் குடும்பத்தைச் சார்ந்தவர்களும் எந்த அளவு பரிதவிக்கும் நிலையில் இருப்பார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களும் கண்கூடாகப் பார்த்திருப்பார்கள். அதுபோன்ற கோர விபத்துகள் நடக்கும் நேர்வுகளில், உயிர் பலி ஏதும் ஏற்பட்டுவிடக் கூடாது என்கிற தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சாலை விபத்துகள் ஏற்பட்ட 48 மணி நேரமான 'Golden hours' நேரத்தில், அவசர சிகிச்சை அளிக்கத் தேவையான திட்டத்தைத் தீட்டி, செயல்படுத்த ஏதுவாக அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளைச் சேர்த்து, ஏறக்குறைய 683 மருத்துவமனைகளை அங்கீகரித்துள்ளார்கள். இவற்றில் ஒரு சிறப்பான விஷயம் என்னவென்றால், முதலமைச்சர்

காப்பீட்டுத் திட்டத்தின் அட்டை உள்ளவர்கள் மட்டுமல்லாது, காப்பீட்டுத் திட்டத்தின் அட்டை இல்லாதவர்களும் பயன்பெறலாம். இல்லாதவர்கள் மட்டுமல்லாது, பிற மாநிலத்தவரும் பயன்பெறலாம், பிற மாநிலத்தவர் மட்டுமல்லாது, அயல்நாட்டினரும் பயன்பெறலாம். இந்தவகையில் தமிழ்நாட்டின் எல்லைக்குள் விபத்தில் பாதிக்கப்படும் அனைவருக்கும் இத்திட்டம் பயன்பெறும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இதன்மூலம் சமூக நீதிக் காவலராக நம்முடைய மக்கள் தலைவர் மாண்புமிகு தளபதி அவர்கள் விளங்குகிறார்கள். இத்திட்டத்தின்மூலம் ஏறக்குறைய 1,53,011 பேர் பயனடைந்துள்ளனர். அதைத் தொடர்ந்து, 'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டம். ஒருகாலத்தில் மக்கள் மருத்துவத்தைத் தேடி மருத்துவமனை சென்றார்கள். ஆனால், மருத்துவமனையே மக்களைத் தேடிச் செல்கிற ஒரு மகத்தான திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறார்கள். அரசு, களப் பணியாளர்கள்மூலம் ஏற்கெனவே பரிசோதனை செய்யப்பட்ட பட்டியலிடப்பட்ட நோயாளிகளுக்கு உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோய்க்கான மருந்துகளை வழங்குதல், நோய் ஆதரவு சேவைகளை வழங்குதல், இயன்முறை மருத்துவச் சேவைகள் வழங்குதல், சிறுநீரக நோய்கள் வராமல் நோயாளிகளைப் பராமரித்தல், அனைத்து சுகாதாரத் தேவைகளையும் வழங்கி, கண்காணித்து சிறப்பான முறையில் திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

இத்திட்டம் 29-12-2022 அன்று '1 கோடி பயனாளி ஆக்குதல்' என்ற இலக்கினைக் கடந்து, மார்ச் 2023 வரை, 1,00,46,429 பயனாளிகள் பயன்பெறும் வகையில், செயல்படுத்தப்பட்டு வெற்றி பெற்றுள்ளது என்று சொன்னால், இதுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெறுகிற சிறப்பான ஆட்சியாகும். மருத்துவக் கட்டமைப்பைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு மாவட்டத்திலும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் துவங்கப்பட வேண்டும் என்பது மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கொள்கையாகும். கொள்கை மட்டுமல்ல, அதனைச் செயல்படுத்தியவரும் அவர்கள்தான். அதனடிப்படையில், இன்றைக்கு ஆசிய கண்டத்திலேயே சிறப்பான மருத்துவ உட்கட்டமைப்பைப் பெற்ற மாநிலம் என்று சொன்னால், அது நம் தமிழ்நாடுதான். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையில், இந்த மாநிலத்தில் எந்தெந்த மாவட்டங்களில் மருத்துவக்

கல்லூரி மருத்துவமனைகள் அமைந்துள்ளனவோ, அங்கெல்லாம் இருதய நோய் சிகிச்சைக்காக Cath Lab for Cardiology என்கிற பிரிவு இல்லாத இடங்களில் உடனடியாக அமைத்திட வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, வட்டம் சாரா மற்றும் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் Dialysis Centre ஒன்றை உருவாக்கிட வேண்டும் என்றும் இந்த நேரத்தில் கோரிக்கை வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மருத்துவ உட்கட்டமைப்பை மேலும் வலிமையாக்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னை, Guindy King Institute-ல் ரூ.230 கோடி மதிப்பீட்டில் 1000 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையைக் கட்டி, அது செயல்பாட்டில் வரவிருக்கிறதென்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 1-35

தமிழ்நாடு இந்தியாவின் மருத்துவத்தின் தலைநகரம். அதனால்தான் வெளி மாநிலங்களிலிருந்து மட்டுமல்ல, வெளி நாடுகளிலிருந்தும்கூட தமிழ்நாட்டிற்கு வந்து சிறப்பான சிகிச்சை பெறுகின்ற நிலை, அந்த அளவிற்கு கட்டமைப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது. அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் நவீன வசதிகளுடன்கூடிய புதிய பன்னோக்கு மருத்துவப் பிரிவு உருவாக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் அறிவித்ததை என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக நான் வரவேற்கிறேன். அதுமட்டுமல்ல, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு ஏறக்குறைய 18,661 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து தமிழ்நாட்டின் பொது சுகாதார கட்டமைப்பை மேலும் வலுவாக்க உத்தரவிட்ட மாண்புமிகு முதலமைச்சருக்கு மனமார்ந்த நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று காலையில்கூட ஒரு நிகழ்வு. கரூர், நாகப்பட்டினம், திருவண்ணாமலை, தஞ்சாவூர், கடலூர் ஆகிய மாவட்டங்களுக்கு நடமாடும் பன்னோக்கு கண் சிகிச்சை பிரிவு ஒன்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். (மேசையைத்

தட்டும் ஒலி) அதுதான் மாண்புமிகு தளபதியின் ஆட்சியினுடைய சாதனை. அதுமட்டுமல்ல, பல்வேறு நிலைகளில் மருத்துவச் சேவைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தாலும்கூட, "வருமுன் காப்போம்" என்ற மகத்தான திட்டத்தின் நோக்கமே, நோய் வருவதற்கு முன்பே அறிந்து, உரிய சிகிச்சை அளிப்பதாகும். இத்திட்டம், 1999 ஆம் ஆண்டு அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்டு, மீண்டும் மேம்படுத்தப்பட்டு, புது பொலிவுடன் கிராமப்புறங்களில் 1,055 முகாம்கள், மாநகராட்சிகளில் 60 முகாம்கள், பெருநகர மாநகராட்சிகளில் 35 முகாம்கள் என 1,150 முகாம்கள் நடத்தி.. .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. அப்துல் சமது அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் நன்றி சொல்லி, உங்களது தொகுதிக் கோரிக்கைகளைக் கொடுத்தால் பதிவு செய்துகொள்ளப்படும். 10 நிமிடங்கள் ஆகிவிட்டன. இன்னும் 8 பேர் பேச வேண்டும்.

திரு. R.D. சேகர்: இந்த நிதியாண்டில் மட்டும் 14 இலட்சத்து 79 ஆயிரத்து 732 பேர் பயன்பெறுகின்ற அளவிற்கு இந்தத் திட்டம் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதேபோல, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம். முன்னாள் அமைச்சர் அவர்கள், ஒரு gift box கொடுத்தார்கள், அந்த gift box—அம்மா பெட்டகம், அம்மா கொடுத்தார்கள் என்று சொன்னார்கள். எந்த அம்மா கொடுத்தார்கள்? Nurse அம்மா கொடுத்தார்களா? Nurse அம்மா கொடுத்தார்களென்றால், Doctor அம்மா என்ன கொடுத்தார்கள்? நான்கூட சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறேன். என் அலுவலகத்திற்கு ஒரு நண்பர் வந்தார். உனக்கு உடல் நலம் சரியில்லையென்று சொன்னார்களே, அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்றார்களே, செய்துவிட்டாயா என்று கேட்டேன். செய்துவிட்டேன் அண்ணா என்று சொன்னார். எங்கே அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என்றேன், Stanley Hospital-ல் செய்தேன் என்று பதில் கூறினார். எப்படி செய்தாய் என்றேன், கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தில் செய்தேன் என்றார். (மேசையைத் தட்டும் ஒலி) இன்று காலையில் வந்துகொண்டிருந்தபோது, 'Stalin bus'-ல் போகிறேன் என்று ஒரு அம்மா சொல்கிறார்கள். இலவச பேருந்து என்றால், மகளிர் 'Stalin bus' என்கிறார்கள். அதனால், குறையாகச் சொல்லவில்லை. அவர் சொன்னதற்காகச் சொல்கிறேன். எல்லாவற்றிற்கும் எல்லாமும் சொல்ல முடியும்

என்பதற்காகத்தான் சொன்னேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரு விஷயம் மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

மருத்துவத் துறை என்பது 24 மணி நேரமும் மக்களுக்கு சிகிச்சையளிக்கும் பணி மட்டுமல்ல. அந்தத் துறையை நிர்வகிப்பதற்கு மருத்துவம் தெரிந்த மருத்துவர்தான் அமைச்சராக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, 24 மணி நேரமும், சுற்றி, சுழன்று பணியாற்றுகின்ற மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) Marathon-ல் மட்டும் ஓடவில்லை, மருத்துவச் சேவையும், வசதியும் அனைவருக்கும் கிடைத்திட வேண்டுமென்கிற எண்ணத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) எளிதில் யாரும் பயணிக்க முடியாத, செல்லக்கூட முடியாத கரடுமுரடான மலைப் பகுதியான நாமக்கல் மாவட்டம், ஜருகுமலையில் இருக்கின்ற மலைவாழ் மக்களைச் சந்தித்து, அவர்கள் பயன்பெறும் வகையில் மருத்துவ உதவிகளைச் செய்து, இன்றைக்கு ஓடிக்கொண்டிருக்கிறார். எனவே, இந்தத் துறை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் சிறப்பான பணிகளை நிறைவேற்றுகிறது. இந்தத் துறை செம்மையான துறையாக இருக்கின்றது. இந்தியாவின் முதன்மைத் துறையாக இந்தத் துறை இருக்கின்றது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய தொகுதிக் கோரிக்கைகள் ஒன்றிரண்டைச் சொல்லிவிட்டு மற்றவற்றைக் கொடுத்துவிடுகிறேன்.

என்னுடைய சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரையில், கடந்த இரண்டு ஆண்டுகளில் கணேசபுரத்தில் ஒரு மேம்பாலமும், கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் 640 கோடி ரூபாய் செலவில் biomining முறையில் சீரமைக்கின்ற பணியையும், நீண்ட நாள் வசிக்கின்ற சிறுபான்மையின மக்களின் நீண்டநாள் கோரிக்கையான இடுகாட்டிற்கு வசதியான இடத்தை கிறிஸ்து, இந்து, முஸ்லிம்களுக்குச் சேர்த்து தலா 9 ஏக்கர் நிலத்தையும் வழங்கி, அந்தப் பணிகள் நடைபெற்றிட உத்தரவிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், உறுதுணையாக இருந்த மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் சின்னவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–40

அதேபோல், என்னுடைய கோரிக்கைகள் ஒன்றிரண்டை மட்டும் சொல்லி, மீதமுள்ளவற்றைக் கொடுத்துவிடுகிறேன். என்னுடைய தொகுதியில், மூலக்கடை வழியாக மாதவரம் வரை செல்லும் மெட்ரோ இரயில் தடத்தை மூலக்கடையிலிருந்து வியாசர்பாடி தங்கசாலை வழியாக, வண்ணாரப்பேட்டையில் இருக்கிற மெட்ரோ இரயில் நிலையத்துடன் இணைக்க வேண்டும். அதேபோல், வியாசர்பாடி அம்பேத்கர் அரசு கலைக் கல்லூரியிலிருந்து எருக்கஞ்சேரி வரை உயர்மட்ட மேம்பாலம் அமைத்துத் தர வேண்டும். மற்ற கோரிக்கைகளை உங்களிடத்தில் அளிக்கிறேன். அவற்றை நான் அவையிலே படித்ததாகக் கருதி, பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். நல்ல வாய்ப்பு நல்கிய அனைவருக்கும் நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

பெரம்பூர் தொகுதி, மாதவரம், புழல் மற்றும் மணலி பகுதிகளில் தாய்சேய் நல மருத்துவமனை நிறுவ வேண்டும்.

கேப்டன் காட்டன் கால்வாய், கொடுங்கையூர் கால்வாய், வியாசர்பாடி இணைப்புக் கால்வாய்களில் வெள்ள அபாயத்தைத் தடுத்திட வெள்ளத் தடுப்புச் சுவர் அமைக்க வேண்டும்.

பெரம்பூர் தொகுதியில் அரசினர் பல்தொழில்நுட்பக் கல்லூரி (Polytechnic College) அமைக்க வேண்டும்.

பெரம்பூர் தொகுதியில் பழுதடைந்த நிலையிலுள்ள பிரதான குடிநீர் மற்றும் கழிவு நீர் குழாய்களை மாற்றி புதிதாக அமைக்க வேண்டும்.

கக்கன்ஜி காலனி, புது நகர், கந்தபிள்ளை திட்ட பகுதி, MAM ராமசாமி, நட்டால் தொட்டம் காமராஜர் நகர் (கொடுங்கையூர்), கந்தம்பிள்ளை தெரு, ஓம்சக்தி விநாயகர் கோவில் தெரு, ஆர்.ஆர்.நகர் ஆகிய நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய இடங்களில் நீண்ட காலமாக வசிப்பவர்களுக்கு விற்பனைப் பத்திரம் வழங்க வேண்டும்.

MGR நகர், தாமோதரன் நகர் ஆகிய நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டுப் பகுதியில் வசிப்பவர்களுக்கு ஒதுக்கீடு ஆணை வழங்க வேண்டும்.

BV காலனி, இந்திரா காந்தி நகர், சாஸ்திரி நகர் மற்றும் புது நகர் A-பிளாக், ஆசிரியர் தெரு ஆகிய பகுதிகளில் வசிப்பவர்களுக்கு 2009 ஆம் ஆண்டு கழக ஆட்சியில் இலவச பட்டா வழங்கப்பட்டவர்களில் விடுபட்டவர்களுக்கு பட்டா வழங்க வேண்டும்.

பெரம்பூர் தொகுதியிலுள்ள அனைத்து கழிவு நீரகற்று நிலையங்களையும் நவீனப்படுத்த வேண்டும் (Pumping Station).

பெரம்பூர் தொகுதியில் நவீன சமூக நலக் கூடம் அமைக்க வேண்டும்.

பெரம்பூர் தொகுதியில் MKB நகர், மத்திய நிழற்சாலையில் உள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய சமூக நலக் கூடத்தினை அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலத்தில் அமைக்க வேண்டும்.

கொடுங்கையூர் பகுதியில் நவீன உள்விளையாட்டு அரங்கம் அமைக்க வேண்டும்.

பெரம்பூர் தொகுதியில் இறகுப் பந்து, கூடைப் பந்து, கைப் பந்து ஆகிய விளையாட்டுகளுக்கான உள்விளையாட்டு அரங்கம் அமைக்க வேண்டும்.

அரசினர் திறன் மேம்பாட்டு மையம் (Skill Development Training) அமைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. அப்துல் சமது அவர்கள்.

திரு. ப. அப்துல் சமது: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டை இந்தியாவிலேயே முதன்மையான மாநிலமாகக் கொண்டுவர வேண்டுமென்கின்ற இலக்கை நிர்ணயித்து செயல்படக்கூடிய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அந்த இலக்கை எல்லா துறைகளிலும் அடைய வேண்டுமென்று மிக வேகமாகப் பயணித்துக் கொண்டிருக்கக்கூடிய நிலையில், நம்முடைய மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மிக விரைவாக அந்த இடத்தை அடையும் என்கின்ற ஒரு நிலை இன்றைக்கு தமிழ்நாட்டில் உருவாகியிருப்பதை முதலில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மக்கள் நல்வாழ்வுத் துறை மூலமாகக் கொண்டு வந்திருக்கக்கூடிய பல்வேறு திட்டங்கள், மக்களால் பாராட்டி வரவேற்கப்படுவதை இன்றைக்கு நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். 'மக்களைத்

TRUTH ALONE TRIUMPHS

தேடி மருத்துவம்' என்கின்ற இந்த அருமையான திட்டம்-- நேற்றையதினம்கூட ஒரு முன்னணி ஆங்கில நாளிதழில், நோயை முதலிலேயே கண்டறியக்கூடிய ஒரு வாய்ப்பு இந்த மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் மூலமாக உருவாகியிருக்கிறது என்று செய்தி வெளியிடப்பட்டுள்ளது. அதேபோன்று, 'இன்னுயிர் காப்போம், நம்மை காக்கும்-48' என்கின்ற அருமையான திட்டம்; சாலை விபத்தின் காரணமாக ஒரு நாளுக்கு 40-லிருந்து 45 நபர்கள் மரணமடைகிறார்கள், அதேபோல், ஒரு மாதத்திற்கு 1,400-லிருந்து 1,450 நபர்கள் மரணமடைகிறார்கள் என்கின்ற சூழ்நிலையில், அந்த உயிரிழப்புகளைத் தடுப்பதற்காக, உடனடியாக சிகிச்சைக்கு உதவக்கூடிய வகையில் இந்தத் திட்டம் மிகச் சிறப்பாக இன்றைக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இத்திட்டம், மருத்துவச் சேவையில் ஓர் அருமையான மைல்கல் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தபோதிலும், மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு தொடர்ந்து சவால்கள் வந்து கொண்டேயிருக்கும். கொரோனா பெருந்தொற்று, ஒரு மிகப் பெரிய சவாலாக இருந்தது. தொற்று அல்லாத நோய்களும் சவாலாக அமைந்து கொண்டிருக்கின்றன. அந்த அடிப்படையில், தற்போது இளம் வயது மாரடைப்பின் காரணமாக மரணம் நேர்வது அதிகரித்திருப்பதைப் பார்க்கிறோம். தேசிய அளவில் இன்றைக்கு, 28.1 என்ற அளவிலே மாரடைப்பு மரணங்கள் அதிகரித்திருப்பதை ஒன்றிய அரசும் தெரிவித்திருக்கிறது. அதிலும் இளம் வயதிலேயே மாரடைப்பு. உதாரணமாக, நடந்து கொண்டிருக்கும்பொழுது, தூங்கிக் கொண்டிருக்கும்பொழுது, நடனமாடிக் கொண்டிருக்கும்பொழுது என்று சுருண்டு விழுந்து மரணமடையக்கூடிய அந்த சோகமான நிகழ்வுகளை இன்றைக்குப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். 30-35 வயதிலேயே இதுபோன்ற மரணங்கள் நிகழ்கின்றன. இதைத் தடுப்பதற்காக நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை, என்னென்ன திட்டங்களை முன்னெடுக்கப் போகிறது என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். Health walking என்கின்ற ஒரு திட்டத்தைச் செயல்படுத்த இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருந்தார்கள். அத்திட்டம் எப்போது கொண்டுவரப்படும், விரைந்து நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, உடற்பயிற்சி அல்லாத ஒரு நிலையும் இதற்கு ஒரு முக்கியக் காரணமாக இருக்கிறது. இன்றைக்கு உடற்பயிற்சி என்று சொன்னவுடனேயே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர்

2023 ஏப்ரல் 18] [திரு. ப. அப்துல் சமது]

அவர்களும், இந்தத் துறையினுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும்தான் முன்மாதிரியாக இருந்து கொண்டிருக்கிறார்கள். உடற்பயிற்சி என்றவுடன் அவர்கள்தான் இன்றைக்கு நம் கண் முன்னால் வருகிறார்கள். நம்மைப்போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அதிக பயணம் செய்யக்கூடியவர்கள், உடற்பயிற்சி செய்ய முடியாத நிலையில், எப்படி செய்வது என்று நினைத்துக் கொண்டிருக்கும்போது, நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் நெடுஞ்சாலையிலே இறங்கி 10 கிலோமீட்டர் தள்ளி car*-ஐ நிறுத்திவிட்டு, அதுவரை நடந்து சென்றுவிட்டு, அதன்பிறகு,* car*-ல் ஏறிச்சென்ற செய்தியைப் பார்த்துவிட்டு, நானும் அதை நடைமுறைப்படுத்தத் தொடங்கியிருக்கிறேன் என்பதை இந்தச் சபைக்கு நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, இந்த* speciality doctors*—சிறப்பு மருத்துவர்கள், இருதய சிகிச்சை நிபுணர்கள், சிறுநீரக சிகிச்சை மருத்துவர்கள், மூளையியல் சிகிச்சை மருத்துவர்கள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மட்டும்தான் சிகிச்சை வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். அதனை, மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும் சிகிச்சை வழங்கக்கூடிய அளவிற்கு விரிவுபடுத்த வேண்டும். மிக முக்கியமாக, என்னுடைய மணப்பாறை தொகுதியிலிருந்து திருச்சி மாவட்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனை என்பது கிட்டத்தட்ட 48 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. எனவே, மாவட்டத் தலைமை மருத்துவமனைக்கு வாரத்தில் ஒரு முறையாவது, இந்தச் சிறப்பு மருத்துவர்கள் வந்து சிகிச்சையளிக்கக்கூடிய திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

பிற்பகல் 1–45

அடுத்து, மிக முக்கியமாக தமிழ்நாட்டினுடைய அரசு மருத்துவமனைகள் செயல்படுத்துவதைப்போன்று அருமையான திட்டங்களை தனியார் மருத்துவமனைகளும் இன்றைக்குச் செயல்படுத்திக்கொண்டிருக்கின்றன. தமிழ்நாட்டினுடைய நலனில் அக்கறை கொண்ட நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை மிக அருமையான திட்டங்களை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றது. அதை மேலும் உறுதிப்படுத்தும்விதமாக, இலவசமாக, பாதுகாப்பாக, தரமான சிசிச்சையை சட்டத்தின்மூலம் உறுதிப்படுத்தும் வகையில் ஒரு நல வாழ்வு உரிமைச் சட்டத்தை நம்முடைய சட்டமன்றத்தில் நிறைவேற்ற

வேண்டுமென்ற கோரிக்கையை முன் வைக்கின்றேன். தமிழ்நாட்டில் பல துறைகளில், குறிப்பாக, மருத்துவத் துறையில் நாம் முன்னேறியிருக்கிறோம். ஆனால், இராஜஸ்தான் மாநிலம் பின் தங்கியிருக்கிறது. இந்த வருடம், மார்ச் மாதம் 21–ல் சட்டமன்றப் பேரவையில் நல வாழ்வு உரிமைச் சட்டத்தை அவர்கள் இந்தியாவில் முதன்முறையாக நிறைவேற்றியிருக்கிறார்கள். மேதகு ஆளுநர் அவர்கள் ஏப்ரல் மாதம் 12 ஆம் தேதி அதற்கு ஒப்புதல் வழங்கி, சட்டமாக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தால், தளபதி அவர்களுடைய ஆட்சி காலாகாலத்திற்கும் தமிழ்நாட்டில் பேசப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்த பிரச்சினைக்கு வருகின்றேன். தமிழ்நாட்டில் சமூக நல்லிணக்கமும், வழிபாட்டு உரிமையும் தழைத்தோங்கிக் கொண்டிருக்கின்றது. அதுபோன்று திராவிட மாடல் ஆட்சி நடந்து கொண்டிருக்கக்கூடிய தமிழகத்தில் பள்ளிவாசல்கள், சர்ச்சுகள், பணம் கொடுத்து வாங்கிய பட்டா நிலத்தில் கட்டுவதற்கு, வெறுப்பு அரசியலை முன்னிறுத்தி ஒரு சிலர் பிரச்சினைகளை உருவாக்குகிறார்கள். அதனால், ஆண்டாண்டுகாலமாக அந்தப் பிரச்சினை தீர்க்கப்படாமல் கிடப்பில் போடக்கூடிய ஒரு சூழல் இன்றைக்கு திட்டமிட்டு உருவாக்கப்பட்டிருக்கிறது.

சிறுபான்மையினர் வழிபாட்டு உரிமையைப் பாதுகாக்கக்கூடிய வகையில், அதற்கு ஒரு கால நிர்ணயத்தை உருவாக்க வேண்டும். Standard Operating Procedure என்கிற SOP நிலையான நடைமுறை விதிகளை உருவாக்கி, விரைவாக இந்தப் பிரச்சினையைத் தீர்த்து, வழிபாட்டு உரிமையைப் பாதுகாத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய பரிந்துரையின் அடிப்படையில் இரண்டு ஆண்டுகாலமாக தமிழ்நாடு வக்ஃபு வாரிய உறுப்பினராகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றேன். வக்ஃபு வாரியச் சொத்துகளை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுக்க, அதனைப் பாதுகாக்க, கண்காணிக்க என பல பணிகள் இருக்கின்றன. ஆனால், அந்தப் பணிகளைச் செய்வதற்கு பணியாளர்கள் பற்றாக்குறை, வக்ஃபு வாரியத்தில் இருக்கின்றது. 150 பணியாளர்கள் இருக்க வேண்டிய இடத்தில் 50 பேர் மட்டுமே இருக்கக்கூடிய ஒரு நிலை இருக்கிறது.

2023 ஏப்ரல் 18] [திரு. ப. அப்துல் சமது]

தமிழ்நாடு வக்ஃபு வாரியம், பணியாளர்கள் பற்றாக்குறையினால் பணியாற்ற முடியாமல் திணறிக்கொண்டிருக்கிறது. 27 இளநிலை உதவியாளர்களை (Junior Assistants) தேர்ந்தெடுப்பதற்கான ஓர் அறிவிப்பை தமிழ்நாடு அரசு, வக்ஃபு வாரியத்திற்குக் கொடுத்திருந்தது. தமிழ்நாடு வக்ஃபு வாரியம் தேர்வு செய்யக்கூடிய சூழலில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக (TNPSC) பணியாளர்கள் தேர்வு செய்யப்படுவார்கள் என உத்தரவு வந்தவுடன் அது நிறுத்தப்பட்டுவிட்டது. அதனால், ஓர் ஆண்டுகாலமாக எந்தப் பணியாளரும் வக்ஃபு வாரியத்திற்கு நியமனம் செய்யப்படாத ஒரு சூழ்நிலை உள்ளது. இதனை மாற்ற வேண்டும். அண்டை மாநிலமான கேரளாவில், அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக எல்லா பணியாளர்களையும் தேர்வு செய்தாலும், வக்ஃபு வாரியத்தின் சிறப்புத் தன்மையை அறிந்து விதிவிலக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று தமிழ்நாட்டிலும் வக்ஃபு வாரியத்திற்கு பணியாளர்களைத் தேர்வு செய்வதற்கு விதிவிலக்கு அளித்து அனுமதி வழங்க வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழ்நாட்டில் அமைதியான சூழல் நிலவுகிறது. தமிழ்நாடு ஓர் அமைதிப் பூங்காவாக இருக்கிறது என்று சொன்னால், அதற்கு திராவிட இயக்கமும், சமூக நீதியும்தான் மிக முக்கியமான அடிப்படைக் காரணம். இந்த நிலை தமிழ்நாட்டில் மட்டும் இருக்கக் கூடாது, இந்தியா முழுமைக்கும் ஓர் அமைதியான சூழல் உருவாக வேண்டுமென்ற அடிப்படையில் தொலைநோக்குச் சிந்தனையில் உருவாக்கப்பட்ட ஓர் அமைப்புதான் "அகில இந்திய சமூக நீதி கூட்டமைப்பு" என்கின்ற அமைப்பு. அதனை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உருவாக்கி, அதன் மூலமாக இந்திய அளவில், இணைய வழியில் ஒரு மாநாட்டை நடத்தி, ஒரு மிகப் பெரிய விழிப்புணர்வை உண்டாக்கியிருப்பதை நாம் பார்க்கிறோம்.

பெரியாருடைய போர் முறை பற்றி, பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை குறிப்பிட்டார். எதிரியின் மூளை பலத்தை முறியடிக்க வேண்டும். அதுதான் பெரியாருடைய போர் முறை என்றார். இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுக் கால ஆதிக்கப் பாறையை உடைப்பதற்கு சமூக நீதி சம்மட்டிதான் சரியான ஆயுதம் என்பதை உணர்ந்தவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் என்ற காரணத்தினால்தான் (மேசையைத் தட்டும்

ஒலி) இந்த சமூக நீதியை உயர்த்திப் பிடிக்கின்றார். இந்த சமூக நீதி ஆயுதம் இந்தியா முழுவதும் கொண்டு சேர்க்கப்படுமேயானால், நிச்சயமாக அமைதி மாநிலமாக தமிழ்நாடு இருப்பதைப் போன்று இந்தியாவும் திகழும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி, என்னுடைய தொகுதியின் கோரிக்கைகளை சபையில் படித்ததாகப் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொண்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி.

தொகுதிக் கோரிக்கைகள்:

மணப்பாறை தொகுதி, மாரியம்மன் திருக்கோயில் முன்பு நிழற்குடை அமைக்க வேண்டும். மணப்பாறை தொகுதி, மருங்காபுரி வட்டம், தொட்டியபட்டி கிராமம், அருள்மிகு பாம்பாலம்மன் திருக்கோயிலுக்கு கழிவறை வசதியும், குடிநீர் வசதியும் ஏற்படுத்தித் தர வேண்டும்.

மணப்பாறை தொகுதி. மருங்காபுரி வட்டம், ஊனையூர் நீலியம்மன் திருக்கோயிலுக்கு ராஜகோபுரம் அமைத்துத் தர வேண்டும். மணப்பாறை தொகுதியில் உள்ள கள்ளக்காம்பட்டி, வீ.பூசாரிபட்டி, ஆனாம்பட்டி முதலிய பகுதிகளில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட வேண்டும். மணப்பாறை தொகுதி, வையம்பட்டி ஒன்றியம், பாம்பாட்டிபட்டி, எளமணம்பட்டி போன்ற பகுதிகளில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட வேண்டும். காவேரி ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள மாயனூர் கதவணையிலிருந்து பொன்னணியாறு அணைக்கு நீர் கொண்டு வரும் திட்டத்திற்கான ஆய்வுப் பணிகளுக்கு நிதி ஒதுக்கி விரைவில் ஆய்வுப் பணிகளைத் துவக்க வேண்டும்.

பிற்பகல் 1–50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம. கருமாணிக்கம்.

திரு. இராம. கருமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2023–2024 ஆம் ஆண்டின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி. எங்களது இளம் தலைவர் திரு. ராகுல் காந்தி அவர்களை தண்டித்து, பதவியைப் பறித்த ஒன்றிய

அரசைக் கண்டித்துக் குரல் கொடுத்து அறிக்கை வெளியிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மக்களைத் தேடி மருத்துவம், கிண்டியில் அனைத்து நவீன வசதிகளுடன்கூடிய பன்னோக்கு மருத்துவமனை, ஓமந்தூரார் அரசு மருத்துவமனையில் Advanced Robotic Surgery Centre போன்ற பல புரட்சிகரமான அதிநவீன திட்டங்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மூலமாக இந்த அரசு செயல்படுத்தி வருவதை நாங்கள் பாராட்டுகிறோம். கொரோனா பெருந்தொற்று காலத்தில் நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்தி, மக்களுக்குத் தேவையான அனைத்து மருத்துவ உதவிகள் மற்றும் அதனைத் தொடர்ந்து மெகா தடுப்பூசி முகாம்களை நடத்திய மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு எங்களது வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதிகரித்துவரும் கொரோனா மற்றும் பிற வைரஸ் காய்ச்சல்களுக்கு தொடர்ந்து தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறோம். மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களைப் பணியிட மாறுதல் செய்யும்போது, அவர்கள் பணிபுரிவதற்கு ஏதுவாக, அந்தந்த மாவட்டத்திற்குட்பட்டே பணியிட மாறுதல் செய்வதற்கு வழிவகை செய்து தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

இன்றைய சூழலில் தமிழ்நாட்டில் செயற்கைக் கருத்தரிப்பு மையங்கள் அதிகரித்து வருகின்றன. இதுபோன்ற மையங்களில் சிகிச்சை பெறுவதற்கு அதிக கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இந்தக் கட்டணத்தை வரைமுறைப்படுத்த வேண்டும். அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் குழந்தை இல்லாத ஏழையெளியவர்களுக்கு இந்த மருத்துவச் சேவையைக் கட்டணமில்லாமல் வழங்க வேண்டும். அதேபோன்று, முதல்வர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும்போது insurance தொகையைப் பெறுவதில் சற்று காலதாமதம் ஏற்படுகிறது. அதையும் விரைந்து தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திருவாடனை தொகுதியில், ஆர்.எஸ். மங்கலத்தை தனி தாலுகாவாகப் பிரித்து 4 வருடங்களுக்கு மேலாகிவிட்டது. அங்கு

ஆரம்ப சுகாதார நிலையம்தான் செயல்பட்டு வருகிறது. அதை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும். திருவாடனை மற்றும் பனைக்குளம் அரசு மருத்துவமனைகளில் X-Ray, Scan, Laboratory போன்ற வசதிகள் இருந்தும் அதற்குரிய பணியாளர்கள் அங்கு இல்லை. அதேபோல், போதிய மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களும் அங்கு இல்லை. அதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருவாடனை அரசு மருத்துவமனையில் பிணவறைக் கட்டடம் பழுதடைந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளது. அதற்கு புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும். பனைக்குளம் அரசு மருத்துவமனைக்கு ambulance வசதி செய்து தர வேண்டும். தொண்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும். தேவிபட்டினம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் 30 படுக்கை வசதிகள் உள்ளன. X-Ray மற்றும் Laboratory வசதிகள் உள்ளன. இங்கும் போதிய எண்ணிக்கையில் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் இல்லை. அதற்கும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனந்தூர் ஆரம்ப சுகாதார மருத்துவமனையை வட்டார மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டும். அனைத்து மருத்துவமனைகளிலும் இரவுநேர மருத்துவர்கள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

தொண்டி, தேவிபட்டினம், பாண்டுகுடி, மங்கலக்குடி, சித்தார்கோட்டை ஆகிய ஊர்களிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு போதிய கட்டட வசதி செய்து தர வேண்டும். திருவாடனை தொகுதிக்குட்பட்ட மருத்துவமனைகளில் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் தங்குவதற்கு அனைத்து வசதிகளுடன்கூடிய விடுதிகள் அமைத்துத் தர வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை பகுதிகளில் மழை இல்லாத காரணத்தால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. விளைச்சல் இல்லாமல் போய்விட்டது. சில ஆண்டுகளாக இந்தப் பகுதியில் இழப்பீட்டுத் தொகையும், காப்பீட்டுத் தொகையும் கிடைக்கவில்லை. நடப்பு ஆண்டிற்கு அதிகாரிகள் சரிவர கணக்கெடுப்பு செய்யாத காரணத்தால் இழப்பீட்டுத் தொகை கிடைப்பதற்கு வாய்ப்பு குறைவாகவே உள்ளது. ஆதலால், அரசு உடனடியாகத் தலையிட்டு விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கையான இழப்பீட்டுத் தொகையையும், காப்பீட்டுத் தொகையையும் பெற்றுத்தர முழு முயற்சி எடுக்க வேண்டும்.

பிற்பகல் 1–55

திருவாடனை தாலுகா மற்றும் R.S. மங்கலம் தாலுகா இரண்டையும் இணைத்து கோட்டாட்சியர் அலுவலகம் புதிதாக அமைத்துத் தர வேண்டும். திருவாடனையைப் பேரூராட்சியாகத் தரமுயர்த்தித் தர வேண்டும். R.S. மங்கலம் பேரூராட்சியில் மழைநீர் வடிகால் இல்லாததால், மழைக்காலங்களில் மழைநீர் வெள்ளம்போல் தேங்கி, மக்கள் அவதிப்படுகிறார்கள். அங்கு மழைநீர் வடிகால் செய்துதர வேண்டும்.

ஊராட்சி ஒன்றியக் கட்டுப்பாட்டிலுள்ள கண்மாய்களில் மராமத்துப் பணிகள் செய்துதர வேண்டும். இராமநாதபுரம் பெரிய கண்மாய் மற்றும் சக்கரகோட்டை கண்மாய் ஆகியவற்றைத் தூர்வாரி மராமத்துப் பணிகள் செய்து, மடை மற்றும் வரத்துக்கால் சரிசெய்து தர வேண்டும்.

இராமநாதபுரம் மாவட்ட மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குள் செல்லும்போது, இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவதும், கைது செய்யப்படுவதும், அவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. இதற்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும்.

தேவிப்பட்டணம் கடல் குடியிருப்புப் பகுதிகளில் கடல்நீர் உட்புகாத வகையில் தடுப்புச் சுவர் அமைத்துத்தர வேண்டும். நம்புதாளையில் fibre *படகுகள் நிறுத்துவதற்கு ஏதுவாக, அருகிலுள்ள ஆற்றைத் தூர்வாரித் தர வேண்டும். புதுக்கோட்டை மாவட்டம், ஜெகதாபட்டணத்தில் இராமநாதபுர மாவட்ட மீனவர்கள் தங்கி மீன் பிடிப்பதற்கு வழிவகை செய்துதர வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் தொடர்ந்து பல கோரிக்கைகளை இந்த அவைமுன் வைத்து வருகிறேன். பெரும்பாலான கோரிக்கைகள் இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. ஆகையால், அவற்றை விரைந்து நிறைவேற்றித் தருமாறு தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* N. *அசோக்குமார் அவர்கள்.*

திரு. N. அசோக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டின் அழகு, நோயில்லாமை, செல்வம், விளைச்சல், மகிழ்ச்சி, நல்ல காவல் இவை ஐந்தும் என நம் முன்னோர்கள் கூறுவார்கள். அவ்வகையில் இன்று தமிழ்நாட்டை வழிநடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு முதல்வரை, நம் தலைவர் அவர்களை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அன்றே பாராட்டினார். 'உழைப்பு' என்றால் கலைஞர் என்று உலகமே புகழ்ந்தபோது அந்த கலைஞரே, "உழைப்பு, உழைப்பு, அதன் மறுபெயர் மு.க. ஸ்டாலின்" என்று உச்சிமுகர்ந்து பாராட்டினார். (மேசையைத் தட்டும் ஒலி)

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர் ஆகியோரின் மொத்த வடிவமாக தமிழகத்தின் முகவரியாகத் திகழும் தங்களை வணங்கி சட்டமன்றத்தில் உரையைத் தொடங்குகிறேன்.

இந்த நூற்றாண்டின் நாயகன், தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பேரனும், இந்தியாவின் தலைசிறந்த முதல்வர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் மகனுமான, எங்களின் உதயசூரியன், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளர், வணக்கத்திற்குரிய மாண்புமிகு சின்னவர்,சேப்பாக்கம் தொகுதியின் நிரந்தர சட்டமன்ற உறுப்பினர், எங்கள் மதிப்பிற்குரிய மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களை வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை வணங்குகின்றேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, எங்கள் தஞ்சாவூர் மாவட்ட பொறுப்பு அமைச்சர், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களை வணங்குகின்றேன்.

மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் மற்றும் அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தலைவர் முதல்வராக வேண்டும், பேராவூரணியில் உதயசூரியன் உதிக்க வேண்டும் என்ற இலட்சியத்தை உதிரத்தில் ஏற்றி, தேர்தல் பணியாற்றிய மாவட்ட கழகச் செயலாளர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.

பிற்பகல் 2-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. N. அசோக்குமார்: *மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய கழகச் செயலாளர்கள், பேரூர் கழகச் செயலாளர்கள், கிளைக் கழகச் செயலாளர்கள், பிரதிநிதிகள், மாவட்ட அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், இனிய நண்பர்கள், சமூக நல அமைப்புகள், அரசு ஊழியர்கள், ஆசிரியர் சங்கங்கள், என்னை உருவாக்கிய என் தாய்-தந்தை மற்றும் என் வாழ்வில் பெரிதும் உறுதுணையாக இருக்கின்ற துணைவியார் மற்றும் உறவினர்கள் அனைவருக்கும் இந்த நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

என்மீது நம்பிக்கை வைத்து, எனக்கு வாக்களித்து என்னை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்த எனது தொகுதி மக்கள் அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மிகச் சிறந்த துறையாக விளங்குவதற்கு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் எண்ணங்களை முழுவதுமாக நிறைவேற்றி, அந்தத் துறை தற்போது மிகச் சிறப்பாக விளங்குவதற்கு காரணமாக இருப்பது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களுடைய சுறுசுறுப்புதான். காலையில் 5 மணிக்குத் தொடங்கும் ஓட்டம், அது மாரத்தான் ஓட்டமாக இருந்தாலும் சரி, காலை உடற்பயிற்சியாக இருந்தாலும் சரி, அந்த நேரத்திலிருந்தே அவர் சார்ந்த துறையின் பணியைத் தொடங்கிவிடுகிறார். அந்தத் துறையைச் சேர்ந்த அனைவரையும் தன்னுடைய சுறுசுறுப்பால் மிகச் சிறப்பாக இயக்கிக்கொண்டிருக்கிறார்.

தமிழ்நாடு முழுவதும் இருக்கும் அனைத்து மருத்துவமனைகளுக்கும் நேரடியாகச் சென்று, அந்த மருத்துவமனைகளுக்குத் தேவைப்படும் அனைத்து வசதிகளையும் உடனுக்குடன் செய்து கொடுத்து, மருத்துவத் துறைக்குப் பெருமை சேர்க்கும் அவருக்கு எனது வணக்கங்கள்.

'நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்'

என்ற திருக்குறளுக்கேற்ப, நம்முடைய கழக அரசு பல்வேறு திட்டங்களை இன்று வழங்கி வருகிறது. ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு முன்னால், மருத்துவப் படிப்புக்கு சமஸ்கிருதம் தெரிந்திருக்க வேண்டும் என்ற நிலையை மாற்றியது திராவிட இயக்கம். அதையும் தாண்டி அனைத்து விளிம்பு நிலை மக்களும், சாதாரண மக்களும் மருத்துவம் படிக்கின்ற வாய்ப்பை உருவாக்கித் தந்ததும் கழக அரசுதான்.

தரமான கல்வியும், மருத்துவ வசதிகளும் அனைத்து மக்களுக்கும் கிடைத்திடச் செய்வதே நமது அரசின் அடிப்படை நோக்கம். அதனைக் கருத்தில்கொண்டு, 'மக்களைத் தேடி மருத்துவம்', 'இன்னுயிர் காப்போம்' போன்ற பல முன்னோடித் திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டுவருவதோடு, தமிழகத்தின் பொது சுகாதாரக் கட்டமைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான பல்வேறு பணிகளையும் நமது அரசு மேற்கொண்டு வருகிறது. நமது அரசின் முன்னோடித் திட்டமான 'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டத்தில் தொற்றா நோய்களை தொடக்க நிலையிலேயே கண்டறிந்து குணப்படுத்த சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன.

மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாக விளங்கும் தொழிலாளர்களின் நலனில் தனி அக்கறை கொண்டுள்ள நமது அரசு, தொழிற்சாலைகளிலும், கட்டுமானம் உள்ளிட்ட அமைப்புசாரா தொழில்களிலும் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் தொற்றா நோய்களால் பாதிக்கப்படுவதைத் தடுக்க, ஒரு சிறப்பு முயற்சியைத் தொடங்கவுள்ளது. அதன்படி முதற்கட்டமாக, 711 தொழிற்சாலைகளிலுள்ள 8.35 இலட்சம் தொழிலாளர்களுக்கு 'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டம் விரிவுபடுத்தப்படவுள்ளது.

உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு போன்ற தொற்றா நோய்களுக்கு முக்கியத்துவம் அளித்து, இந்த மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தில் புலம்பெயர் தொழிலாளர்களும் பயனடைகின்றனர். முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் குடும்பம் ஒன்றிற்கு ஆண்டுக்கு 5 இலட்சம் ரூபாய் காப்பீடு வழங்கப்பட்டு வருகிறது. கிண்டி கிங் நோய்த் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவன வளாகத்தில் அமைக்கப்பட்டுவரும், 1,000 படுக்கை வசதி கொண்ட 'கலைஞர் நினைவு பன்னோக்கு

மருத்துவமனை' இந்த ஆண்டு திறந்து வைக்கப்படவுள்ளது.

1,020 கோடி ரூபாய் செலவில், மதுரை, கோயம்புத்தூர், கீழ்ப்பாக்கம் ஆகிய இடங்களிலுள்ள மூன்று அரசு மருத்துவக் கல்லூரி வளாகங்களில் புதிய உயர் மருத்துவமனைக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

இந்த நிதிநிலை அறிக்கையில், பேராவூரணி சட்டமன்றத் தொகுதி, குருவிக்கரம்பை, சோமநாதன்பட்டினம், ஊமத்தநாடு ஆகிய இடங்களில் தடுப்பணை கட்டப்படும் என்று அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 2-05

அதேபோன்று, பேராவூரணி தேங்காய் மற்றும் தென்னைக்கு புவிசார் குறியீடு பெற பரிந்துரை செய்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பேராவூரணி நகரில் போக்குவரத்திற்கு அவசியமாக இருந்த நான்கு தரைமட்டப் பாலங்களை உயர்மட்டப் பாலங்களாக அமைத்திட சுமார் ரூ.24 கோடி நிதியொதுக்கீடு செய்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

பேராவூரணி சட்டமன்றத் தொகுதியில், ஒரே அரசு மருத்துவமனை நகரின் மையப் பகுதியில் உள்ளது. அது 50 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டது. அது மிகவும் பழுதடைந்துள்ளது. எனவே, அனைத்து நவீன உபகரணங்களுடன் புதிய கட்டடம் கட்டித் தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

பேராவூரணி ஒன்றியத்தில் தேசிய தரச் சான்றிதழ் பெற்ற, செருவாவிடுதி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு, வெளி நோயாளிகள் பிரிவு கட்டடமும், செவிலியர் குடியிருப்பும், பின்னவாசல், காலகம் ஆகிய இடங்களில் செவிலியர் குடியிருப்பும், குறிச்சி,

இடையாத்தி, துறவிக்காடு, பெரியநாயகிபுரம் ஆகிய இடங்களில் பழுதடைந்துள்ள துணை சுகாதார நிலையக் கட்டடங்களை, புதிய கட்டடங்களாக மாற்றித் தரவும் கேட்டுக்கொள்கின்றேன்.

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெருமகளூர், அழகியநாயகிபுரம், ஊமத்தநாடு ஆகிய பகுதிகளிலுள்ள மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு செவிலியர் குடியிருப்பும், பெருமகளூர், ஊமத்தநாடு ஆகிய பகுதிகளிலுள்ள ஆரம்ப சுகாதார நிலைய மகப்பேறு பிரிவுகளுக்கு புதிய கட்டடங்கள் கட்டித் தரவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

திருவோணம் ஒன்றியம், நெய்வேலி, அதம்பை மற்றும் வெங்கரை ஆகிய பகுதிகளிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு செவிலியர் குடியிருப்பும், வெங்கரையிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஆழ்துளைக் கிணறு வசதியும் செய்துதரக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், தொகுதிக் கோரிக்கைகளைக் கொடுங்கள். அவற்றை தாங்கள் அவையில் படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பில் பதிவு செய்யப்படும். (குறுக்கீடு) இன்னும் 4 பேர் பேசிய பிறகு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையாற்ற வேண்டும்.

திரு. N. அசோக்குமார்: ஒரே நிமிடம். பேராவூரணி, சேதுபாவாசத்திரம் பகுதிகளுக்குக் குறைந்த மின்னழுத்தம் வருவதால் அதைச் சரி செய்யும்விதமாக, ஒரத்தநாடு தொகுதியிலுள்ள நெம்மேலி, திப்பியக்குடி 230 KV துணை மின் நிலையத்திலிருந்து, பேராவூரணி, சேதுபாவாசத்திரம் 110 KV துணை மின் நிலையத்திற்கு, நேரடியாக மின்சாரம் வழங்கும் பணி 5 வருடங்களாக, மிகவும் தாமதமாக நடைபெற்று வருகிறது. இந்தப் பணியை விரைந்து முடிக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன். பேராவூரணிக்கு மும்முனை மின்சாரம் விட்டு விட்டு வருகிறது. அதை குறித்த நேரத்தில் வழங்கி உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், மீதமிருக்கின்ற தொகுதிக் கோரிக்கைகள் எல்லாவற்றையும் கொடுங்கள்; அவைக்குறிப்பில் பதிவு செய்துகொள்ளப்படும். (குறுக்கீடு)

2023 ஏப்ரல் 18]

திரு. N. அசோக்குமார்: *தேங்காய் விலை வீழ்ச்சியைக் கட்டுப்படுத்திட, கூடுதலாக, தமிழக அரசு ஊக்கத் தொகை வழங்கிட வேண்டும். பேராவூரணி தொகுதி முழுவதும், தென்னை சாகுபடியைப் பெரிதும் நம்பியிருப்பதால், இப்பகுதிக்கு, அரசு கொப்பரை கொள்முதல் நிலையம் தனியாக ஒன்று அமைத்துத் தர வேண்டும். தேங்காய் மற்றும் அதன் உப பொருட்களை, எப்போதுமே ஏற்றுமதி செய்யும் வாய்ப்பு அதிகமாக இருப்பதால், தென்னை சார்ந்த ஒரு தொழிற்பேட்டை அமைத்துத் தரவும் கேட்டுக்கொள்கின்றேன். தேங்காய் எண்ணெய்யில் உடலுக்குத் தேவையான நல்ல கொழுப்புச் சத்து இருப்பதால். . .*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி அவர்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

திரு. N. அசோக்குமார்: *எனது தொகுதிக் கோரிக்கைகளை மனுவாக தங்களிடம் அளிக்கின்றேன். அவற்றை நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

தொகுதிக் கோரிக்கைகள்:

பேராவூரணி தொகுதி, அரசு மருத்துவமனையில் விபத்து சிகிச்சை மையம் ஒன்று ஏற்படுத்தித் தர வேண்டும்.

பெருமகளூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு, ஆழ்துளைக் கிணறு வசதி செய்து தர வேண்டும்.

பேராவூரணி தொகுதியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள், கிழக்குக் கடற்கரை சாலை-மல்லிப்பட்டினம், ஒட்டங்காடு, செந்தலைவயல், ரெட்டவயல், மணக்காடு ஆகிய இடங்களில் புதிய துணை சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தித் தர வேண்டும்.

அழகியநாயகிபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு இரத்த சேமிப்பு வங்கியும், அலுவலகப் பணிக்கு, நான்கு சக்கர வாகனமும் ஏற்படுத்தித் தர வேண்டும். பெருமகளூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய சித்த மருத்துவப் பிரிவு தொடங்க வேண்டும்.

திருவோணம் ஒன்றியம், ஊரணிபுரத்தில் (வெட்டுவாக்கோட்டை) ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தித் தர வேண்டும்.

[திரு. N. அசோக்குமார்] [2023 ஏப்ரல் 18

பேராவூரணியில் தற்போதுள்ள பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்து, வாரச் சந்தையை மேம்படுத்திட வேண்டும்.

குறிச்சி, அலிவலம், பாலத்தளி மற்றும் காயவூர் ஆகிய பகுதிகள் பயன்பெறுகின்ற வகையில், சீதம்பாள்புரத்தில் 110 KV துணை மின் நிலையம் அமைக்கும் பணிகளை விரைந்து முடித்திட வேண்டும்.

பேராவூரணியில் மின்சார வாரிய செயற்பொறியாளர் அலுவலகம் அமைத்திடவும், உதவி செயற்பொறியாளர், உதவிப் பொறியாளர், மின்சார வாரிய அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்கள் ஏற்படுத்தித் தரவும், மின் அலுவலகப் பயன்பாட்டிற்கு நான்கு சக்கர வாகன வசதி செய்து தரவும் வேண்டும்.

பள்ளத்தூர் மின் வாரியத்திற்குச் சொந்த இடத்தில் அலுவலகம் அமைத்திட வேண்டும்.

பேராவூரணியில், புதிதாக காவல் துணைக் கண்காணிப்பாளர் (DSP Office) அலுவலகம், மகளிர் காவல் நிலையம் மற்றும் போக்குவரத்து காவல் நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

பேராவூரணி காவல் நிலையத்தை இரண்டாகப் பிரித்து, பெருமகளூரை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய காவல் நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

சரபேந்திரராஜபட்டினம் பாப்பாங்கண்ணி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டித் தர வேண்டும்.

அக்னி ஆற்றின் குறுக்கே குறிச்சி மற்றும் ஈச்சன்விடுதி கிராமங்களில் தடுப்பணைகள் கட்டித் தர வேண்டும்.

அம்புலி ஆற்றின் குறுக்கே செங்கமங்கலம், கொரட்டூர் தடுப்பணை கட்டித்தர வேண்டும்.

மருதங்குடி ஆற்றின் குறுக்கே ரெட்டவயல் கிராமத்தில் தடுப்பணை அமைத்துத் தர வேண்டும்.

பேராவூரணி, ஆவணம், நெய்வேலி, ஊரணிபுரம் மற்றும் பள்ளத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் விளையாட்டு மைதானங்களை நவீனப்படுத்தி தரமுயர்த்தித் தர வேண்டும்.

பேராவூரணி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் உள்விளையாட்டரங்கம் அமைத்திட வேண்டும்.

பேராவூரணி பேரூராட்சியை நகராட்சியாகத் தரமுயர்த்தி பாதாளச் சாக்கடைத் திட்டத்தை அமைத்துத் தர வேண்டும்.

திருச்சிற்றம்பலத்தைப் பேரூராட்சியாகவும், திருவோணம் ஒன்றியம் ஊரணிபுரம், வெட்டுவாக்கோட்டை ஊராட்சியை பேரூராட்சியாகவும் தரமுயர்த்தித் தர வேண்டும்.

பேராவூரணியில் விவசாயிகள் விளைவிக்கும் பொருட்களைப் பாதுகாத்திட, குளிரூட்டப்பட்ட தானிய சேமிப்பு கிட்டங்கி அமைத்துத் தர வேண்டும்.

திருச்சிற்றம்பலம், பெருமகளூர் ஆகிய ஊர்களில் ஏற்கெனவே செயல்பட்டு வந்த சார்-பதிவாளர் அலுவலகங்களை மக்களின் பயன்பாட்டிற்கென மீண்டும் அதே இடத்தில் செயல்பட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

பேராவூரணியில் இயங்கிவரும் அரசுப் போக்குவரத்து பணிமனை, தரைத்தளம் மற்றும் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி போதிய பணியாளர்களைப் பணியமர்த்திட வேண்டும்.

பேராவூரணி, ஆத்தாளூர் ஸ்ரீ வீரமாகாளியம்மன் ஆலயத்திற்கு திருமண மண்டபம் அமைத்துத் தர வேண்டும்.

பேராவூரணி அரசினர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், இளநிலைப் பிரிவுகளில் புதிதாக B.Lit, B.A. *(வரலாறு),* B.A *(பொருளாதாரம்),* B.Sc. *(தாவரவியல்),* B.Sc. *(விலங்கியல்) பாடப்பிரிவுகள் தொடங்கிடவும், முதுநிலைப் பிரிவுகளில்* M.A *(ஆங்கிலம்),* M.Com, M.Sc. *(கணிதம்),* M.Sc. *(கணினி அறிவியல்), முதுநிலை தமிழ், வணிகவியல், ஆராய்ச்சிப் படிப்பு (*Ph.D) *தொடங்கிடவும், புதிதாக வகுப்பறைக் கட்டடங்கள் அமைத்துத் தரவும் வேண்டும்.*

பேராவூரணி தொகுதி, மல்லிப்பட்டினம், காரங்குடா, சேதுபாவாசத்திரம், திருவத்தேவன், செந்தலைவயல், சம்பைப்பட்டினம் ஆகிய பகுதிகளில் தூண்டில் வளைவு அமைத்துத் தர வேண்டும். ஆற்று முகத்துவாரங்களில்,

மணல் அடைப்புகளை அப்புறப்படுத்தி வெள்ளப்பெருக்கு ஏற்படாமல் இருக்க, சிறிய வகை படகுகளை ஆற்றின் உள்ளே எடுத்துச்செல்லும் வகையில், ராஜாமடம் ஆறு, கட்டப்பாடு ஆறு, மனோரா ஆறு, அம்மணி சத்திரம் ஆறு, சம்பைப்பட்டினம் ஆறு, சுப்பமாள் சத்திரம் ஆறு, மந்திரிப்பட்டினம் ஆறு, குப்பத்தேவன் ஆறு, கணேசபுரம் ஆறு ஆகியவற்றைத் தூர்வாரி, நீர் வழித் தடத்தை மேம்படுத்தித் தர வேண்டும்.

சரபேந்திரராஜபட்டினம் ஊராட்சி, "மனோரா" நினைவுச் சின்னம் அருகே "கடற்பசு பாதுகாப்பு மையம்" அமையவுள்ள நிலையில், சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகப்படுத்தும் விதமாக தற்போது உள்ள நிலையை மேலும் மேம்படுத்தித் தர வேண்டும்.

பேராவூரணி தொகுதி, விளங்குளம் ஊராட்சி, விளங்குளம், ஊமத்தநாடு இணைப்புச் சாலையில் அம்புலி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைத்துத் தர வேண்டும்.

திருச்சிற்றம்பலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு, ஒரு வட்டாட்சியர் அலுவலகமும், திருவோணம் ஒன்றியம் ஊரணிபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு வட்டாட்சியர் அலுவலகமும் தொடங்கிட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி அவர்கள்.

***திரு. எம்.ஆர். காந்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சபையில் இருக்கின்ற அனைவருக்கும் எனது இதயபூர்வமான வணக்கங்கள். எனக்கு இந்த வாய்ப்பினை வழங்கிய நாகர்கோவில் தொகுதி மக்கள் அனைவருக்கும், உலக அரசியல் தலைவர்களில் முதன்மையான தலைவராக விளங்குகின்ற மாண்புமிகு பாரதப் பிரதமர் நரேந்திர மோடிஜி அவர்களுக்கும், எங்களது சட்டமன்றக் குழுத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்களுக்கும் நன்றி.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை Multi Super Speciality Hospital ஆக இந்த அரசு தரமுயர்த்தித் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-10

அதேபோல, தற்போது ஆசாரிப்பள்ளம் மருத்துவமனையில் புற்றுநோய்க்கென சிகிச்சைப் பிரிவு ஏதும் இல்லை. எனவே, பொது மக்கள் கேரளா போன்ற வெளி மாநிலங்களுக்குச் சென்று சிகிச்சை பெறுகின்றனர். புற்று நோய்க்கென தனிப் பிரிவை அமைத்து, அதற்கென சிகிச்சை நிபுணர்களை நியமிக்கவும் அரசைக் கேட்டுக்கொள்கிறேன். தற்பொழுது புற்றுநோய் மருத்துவர் medical oncologist-ஐயும், புற்றுநோய் கதிரியக்க சிகிச்சை நிபுணர்களையும் நியமிக்க வேண்டும். மார்பகப் புற்றுநோயைக் கண்டறியும் மேமோகிராம் கருவி ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ளது. அதன் திறனை மேம்படுத்த, அந்த மேமோகிராம் கருவியை டிஜிட்டல் மயமாக்கும் கருவி இருந்தால் ஒரே நாளில் பல நோயாளிகள் பயன்பெறுவார்கள். எனவே, டிஜிட்டல் மயமாக்கும் கருவியை வழங்க வேண்டும். புற்றுநோய்ப் பரவலைக் கண்டறியும் PET scan அமைத்துத் தர வேண்டும். புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் நாகர்கோவில் அரசு மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறுவதற்கு வார்டுகளுடன் கூடிய கட்டட வசதிகள் இல்லை. எனவே, நோயாளிகளின் சிகிச்சை வசதிக்காக புதிய கட்டடம் கட்டப்பட வேண்டும்.

ஆசாரிபள்ளம், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை துவங்கிய காலகட்டத்தில் போடப்பட்ட சாலை, தற்பொழுது மிகவும் பழுதடைந்துள்ளதால் புதிய சாலை அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆசாரிபள்ளம் மற்றும் அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலுள்ள பொது கழிவுகளை அகற்றுவதற்கு வழிவகை செய்ய வேண்டும். ஆசாரிபள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அதிகமான சுகாதாரப் பணியாளர்களை நியமிக்க வேண்டும். ஆசாரிபள்ளம், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்நோயாளிகள் தங்குவதற்கு போதுமான படுக்கை வசதிகள் இல்லை. எனவே, குறைந்தபட்சம் 500 படுக்கை வசதிகள் கொண்ட ஒரு புது கட்டடத்தை அமைத்துத் தர வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை கேரளா மருத்துவமனைகளில் ஏற்றுகொள்வதில்லை. எனவே, தமிழக அரசு, கேரளா அரசிடம் பேசி மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை கேரளா மருத்துவமனைகளில் ஏற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஆசாரிபள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருதய அறுவை சிகிச்சைப் பிரிவு இல்லாததால், பொதுமக்கள் கேரளா போன்ற வெளி மாநிலங்களுக்குச் சென்று சிகிச்சை பெறுகின்றனர். இதனால் மருத்துவமனைகளில் ஏற்படும் சிகிச்சை கட்டணத்திலும், போக்குவரத்திலும், மொழிப் பிரச்சினையாலும் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, ஆசாரிபள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருதய அறுவை சிகிச்சைப் பிரிவு துவங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆசாரிபள்ளம், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் முதியோர் நலப் பிரிவும், உடல் ஊனமுற்றோர்க்கு தனிப் பிரிவும் துவங்கப்பட வேண்டும்.

மத்திய அரசும், மாநில அரசும் முறையே 60, 40 என்ற பங்களிப்போடு காலை, மாலைகளில் செயல்படுகின்ற Urban Health and Wellness Centre நாகர்கோவில் மாநகராட்சியில், பெருவிளை, எறும்புக்காடு, கோணம், பூச்சிவிளாகம், NGO காலனி போன்ற பகுதிகளில் அமைத்துத் தர வேண்டும். National Health Mission-க்கு மாவட்டந்தோறும் ஓர் இளநிலை அதிகாரியை நியமித்து, பணியைப் பாதுகாக்க வேண்டும்.

தமிழகத்தில், அரசு மருத்துவர்களுக்கு அரசாணை எண் 354-ன்படி 12 ஆண்டுகள் ஊதியப்பட்டை 4 உடனடியாக வழங்கப்பட வேண்டும். தமிழ்நாடு முழுவதும் ஒப்பந்த முறையில் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற செவிலியர்கள் இந்த வருமானத்தை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணை உள்ளத்தோடு இவர்களுக்குப் பணி நிரந்தரமும், மகப்பேறு விடுப்புடன்கூடிய சம்பளமும் வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மருத்துவமனைகளில், மருந்துகளுக்காக ஒதுக்கப்படும் நிதியை அதிகப்படுத்த வேண்டும். கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், ஆயுர்வேதா மருத்துவமனையிலுள்ள உள்நோயாளிகள் தங்குமிடம் போதுமானதாக இல்லை. எனவே, கூடுதலாக 200 படுக்கை வசதிகள் அமைத்துத்தர வேண்டும். அதற்கு போதுமான மருத்துவர்களையும், செவிலியர்களையும் நியமிக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில், தக்கலை அருகே குமாரகோவில் பெரியகுளத்தில், சுமார் 18 ஆண்டுகளுக்கு முன் சுற்றுச்சுவர் இடிந்து விழுந்தது. இதனால் குளத்தில் தண்ணீர்

2023 ஏப்ரல் 18] [திரு. எம்.ஆர். காந்தி]

தேக்கி வைக்க முடியாத நிலை உள்ளது; நீர் வீணாகச் செல்கிறது. எனவே, விவசாயிகள் தண்ணீருக்குச் சிரமப்படுகின்றனர். எனவே, குளத்தைச் சுற்றி சுற்றுச்சுவர் அமைக்கவும், குளத்தின் கிழக்கு மடை பழுதடைந்துள்ளதால் அதனைச் சரிசெய்து புதிய shutter-ஐ அமைக்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள திருக்கோயில்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு, ஓய்வூதியம் தற்போது ரூ.3,000/- வழங்கப்படுகிறது. அதனை ரூ.5,000/– ஆக உயர்த்தித்தர வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன். நியாய விலைக் கடைகளில் கொடுக்கப்படும் பாமாயில் எண்ணெய்க்குப் பதிலாக தமிழகத்தில் விளைவிக்கப்படும் தேங்காய் எண்ணெய் கொடுக்கப்பட வேண்டும். இதனால் தென்னை விவசாயிகள் பெரிதும் பயன்பெறுவார்கள்.

கன்னியாகுமரியில் விரைவில் ஒரு IT Park-ஐ அமைத்துத் தர வேண்டும். நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட மக்களுக்கு 24 மணிநேரமும் குடிதண்ணீர் கிடைத்திட முக்கூடல் அணையைத் தூர்வாரி, சுத்தப்படுத்தி, கொள்ளளவை அதிகப்படுத்த வேண்டும். புத்தன் அணை திட்டத்தையும் விரைவில் நிறைவேற்ற வேண்டும். பேச்சிப்பாறை அணையைத் தூர்வாரி கொள்ளளவு கூட்டப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–15

அரசு மருத்துவமனைகளில் அதிக விலையுள்ள மருந்துகள், ஊசிகள் போன்றவை வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள மக்களுக்கு மிக எளிதில் கிடைத்திட அரசு உதவி செய்ய வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தில் கன்னியாகுமரி முதல் களியக்காவிளை வரை மெட்ரோ இரயில் இயக்க வேண்டும். கன்னியாகுமரி பகவதி அம்மன் கோயிலில் வைகாசி மாதம் விசாக திருவிழாவில், பத்தாம் நாள் தெப்பத் திருவிழாவானது நடைபெறும். அந்தத் தெப்பத் திருவிழா நடைபெறுவதற்கு தெப்பக்குளத்தில் தண்ணீர் இல்லை. மேலும், குமரிசாலை குளத்திலிருந்து தெப்பக்குளம் கால்வாயில் அத்தனை இடங்களிலும் கழிவுநீர் கலக்கின்றது. எனவே, கழிவுநீர் கலப்பதைத் தடுத்து, தெப்பக்குளத்திற்கு தண்ணீர் விட்டு, வருகின்ற தெப்பத் திருவிழாவைச் சிறப்பாக நடத்தித் தர வேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சிப் பகுதிகளிலுள்ள ஆற்றில் கழிவுநீர் கலக்காமல் தடுக்கப்பட வேண்டும். குமரி மாவட்டத்திலிருந்தும், திருநெல்வேலி மாவட்டத்திலிருந்தும் கட்டட கனிம வளங்களான எம்–சான்ட், செங்கல், கருங்கல் முதலியவற்றை வெளி மாநிலமான கேரளாவிற்குக் கொண்டு செல்வதால், குமரி மாவட்டத்தில் கட்டட கனிம வளங்களை அதிக விலை கொடுத்து வாங்குகின்றனர். இதனால், கட்டடத் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். எனவே, இதிலிருந்து கட்டடத் தொழிலாளர்களைப் பாதுகாக்க கேரளாவிற்கு கனிம வளங்கள் கொண்டு செல்லப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற கோரிக்கைகளை, மத்திய அரசாங்கம் பட்ஜெட்டில் நிறைய நிதி ஒதுக்கீடு செய்து கொடுத்தால் நிறைவேற்ற முடியும்.

திரு. எம்.ஆர். காந்தி: நாட்டு தென்னை மரங்களை அதிகமாக முறையில் உற்பத்தி செய்ய வேண்டும். தென்னை மரங்களைப் பாதிக்கும் வண்டுகளைத் தடுப்பதற்கும், பூஞ்சை நோயைத் தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஊராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சி, ஒன்றியங்களுக்குட்பட்ட சாலைகளை நெடுஞ்சாலைத் துறை எடுத்து பராமரிக்க வேண்டும்.

நாகர்கோவில் பழைய ஆற்றில் கழிவுகள் கலக்காமல் பாதுகாக்கவும், தூர்வாரவும் மற்றும் ஆற்றில் செடி, கொடிகள், புற்கள், மணல்மேடுகள் நிறைந்திருப்பதால் அவற்றை அகற்ற தூர் வார வேண்டும் என்றும் அரசைக் கேட்டுக்கொள்கின்றேன். கடல் போல் இருந்த நாகர்கோவில் புத்தேரி பெரியகுளம் ஆக்கிரமிப்பின் காரணமாக சுருங்கி இன்றைக்கு குட்டை போல் ஆகியிருக்கின்றது. எனவே, புத்தேரி பெரியகுளத்திலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, செப்பனிட வேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நான்குவழிச் சாலைப் பணி தொடங்கி பல ஆண்டுகள் ஆகிவிட்டபோதிலும், சாலைப் பணிகள் மந்தமாகவே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இச்சாலைப் பணிகளுக்காக மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் போதுமான நிதிகளை ஒதுக்கீடு செய்துள்ளார்கள். ஆகவே, அப்பணிகளை

2023 ஏப்ரல் 18] [திரு. எம்.ஆர். காந்தி]

விரைந்து முடிக்க தமிழ்நாடு அரசு தேவையான மண் கொடுத்து உதவ வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும், அரசு மருத்துவமனைகளிலும் பணியிடங்கள் காலியாக இருப்பதால், உடனே அனைத்து காலிப் பணியிடங்களையும் நிரப்ப வேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள், (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள். உங்கள் தொகுதிக் கோரிக்கைகளைக் கொடுத்துவிடுங்கள். அவற்றை அவைக்குறிப்பில் பதிவு செய்து கொள்ளலாம்.

திரு. எம்.ஆர். காந்தி: 10 ஆண்டுகளுக்குமேல் பிற மாவட்டங்களில் அரசின் கல்வித் துறையில் பணிபுரியும் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கி, அவர்களுடைய சொந்த மாவட்டமான கன்னியாகுமரி மாவட்டத்தில் பணிபுரிய அனுமதிக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் அனைத்து இடங்களிலும் கால்நடை கிளை மருந்தகங்கள் அமைக்க வேண்டும். மேலும், அங்கு பயிற்சி பெற்ற கால்நடை மருத்துவர்களை நியமிக்க வேண்டும். தொகுதிவாரியாக நடமாடும் கால்நடை மருந்தகங்களை அமைத்திட வேண்டும். நாட்டுப் பசுக்கள் மற்றும் எருமை மாடுகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்க வேண்டும். மேலும், பணியாளர்களுக்கு கோடைக் காலங்களில் சுழற்சி முறையில் பணியாற்ற அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்; கோடைக்கால விடுமுறை அளிக்க வேண்டும். விடுமுறைக் காலங்களில் பொருட்களை குழந்தைகளுடைய வீடுகளில் கொண்டு சேர்க்க வேண்டும். இப்போது குழந்தைகளுக்குக் கொடுக்கப்படும் தொகையை அரசு உயர்த்திக் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள். (குறுக்கீடு) உங்கள் தொகுதிக் கோரிக்கைகளைக் கொடுத்துவிடுங்கள். அவற்றை, நீங்கள்

படித்ததாக அவைக்குறிப்பில் பதிவு செய்துகொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன், பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேச ஆரம்பித்து 10 நிமிடங்கள் ஆகிவிட்டன. உங்களுக்கு 8 நிமிடங்கள்தான் கொடுக்கப்பட்டன. ஆனால், 2 நிமிடங்கள் சேர்த்து கொடுக்கப்பட்டுள்ளன. (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. எம்.ஆர். காந்தி: நாகர்கோவில் மாநகராட்சிப் பகுதிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் உடனடியாக முடித்து மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அனைத்து சாலைகளும் குண்டும் குழியுமாகத்தான் இருக்கின்றன. அவற்றைச் சீரமைத்துத் தர வேண்டும்.

பிற்பகல் 2–20

வருகின்ற வைகாசி மாதம் நடைபெறவிருக்கும் விசாகத் திருவிழாவிற்கு கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து உவரி சுயம்புலிங்க சுவாமி திருக்கோயிலுக்கும், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கும் குடும்பத்தோடு பொதுமக்கள் சென்று வழிபாடு செய்வார்கள். எனவே, விசாகத் திருநாளன்று, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு விடுமுறை கொடுக்கப்பட வேண்டும் (மணியடிக்கப்பெற்றது) இன்னொன்று, திருநெல்வேலி மாநகராட்சி பேருந்து நிலையம் கட்டி முடிக்கப்பட்டு, வெகு நாட்களாகத் திறக்கப்படாமல் உள்ளது. இந்து வியாபாரிகள் சங்கம் போராட்டம் நடத்துகிறார்கள். எனவே, உடனடியாக அந்தப் பேருந்து நிலையத்தைத் திறக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென அன்போடு கேட்டு, விடைபெறுகிறேன். நன்றி,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.

***திரு. ம. சிந்தனை செல்வன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்களுக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் எங்களை அன்போடு வழிநடத்துகிற அவை முன்னவர் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களுக்கும், சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின்கீழ் நடைபெறுகிற இந்த விவாதத்திலே கலந்துகொள்கிற

வாய்ப்பினை அளித்தமைக்காக எனது நன்றியைப் பதிவு செய்கிறேன்.

பல்வேறு ஒடுக்குமுறைகளுக்கும், வாழ்க்கை முழுவதிலும், புறக்கணிக்கப்படுகிற வேறுபடுத்தி பார்க்கிற கேள்விகளுக்கு மத்தியிலும் பயணப்படுகிற எளிய மக்களின் நிலையிலிருந்து நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மருத்துவத் துறையில்தான் இந்த இரத்தம் எந்த சாதி இரத்தம் என்று கேட்கப்படுவதில்லை. இந்தத் துறையில்தான் மருத்துவம் பார்க்கிற மருத்துவர், எந்தச் சாதியைச் சார்ந்தவர் என்கிற வினாக்களை யாருமே எழுப்புவதில்லை. ஆகவே, சமத்துவமும், சமூக நீதியையும் அடித்தளமாகக் கொண்ட ஒரு துறையாக இந்தத் துறை இருக்கின்றது. தமிழகம்தான் அகில இந்திய அளவிலே மருத்துவக் கட்டமைப்பில் ஒரு முன்னோடி மாநிலமாக இருக்கின்றது என்று நோபல் பரிசு பெற்ற பொருளாதார மேதை அமர்தியா சென் அவர்கள் குறிப்பிட்டதை இங்கே நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கு தமிழ்நாட்டின் நிதியாதாரம் மட்டும் காரணமல்ல; தமிழகத்தை வழி நடத்திக்கொண்டிருக்கிற சனாதனத்திற்கு எதிரான திராவிட இயக்கத்தின் கொள்கைதான் அதற்கு அடிப்படையான காரணம். (மேசையைத் தட்டும் ஒலி) உடலை, மதவாதம், சனாதனம் கடந்த பிறவியின் சாபமாக அடையாளப்படுத்தியது. ஆனால் உடலை, மெய்யாய், உடலை உடலாய் அடையாளப்படுத்துகிற ஒரு துறையாக மருத்துவத் துறைதான் அமைந்திருக்கிறது.

அப்படிப்பட்ட மருத்துவத் துறை, கடுமையான நெருக்கடியை எதிர்கொண்டு, என்னோடு பயணப்பட்ட எனது அன்பு இளவல் ஆசிரியர் கமலேஷ் அவர்களை கடந்த தேர்தலின்போது நான் இழந்தேன். எனது துணைவியாருக்கும் கொரோனா பெருந்தொற்று வந்தது. புதிய அரசு பொறுப்பேற்று, இன்று நாம் எல்லோரும் நிம்மதியாக வாழ்கிற ஒரு வாழ்க்கையைத் தந்திருக்கிறது என்று சொன்னால், (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குக் காரணமான அடிப்படை கட்டமைப்பை உருவாக்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், இதனை இவனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து ஓர் ஆகச்சிறந்த ஆளுமையாக விளங்குகிற, அர்ப்பணிப்பு, அறிவாளுமை, எளிய மக்களிடத்திலே கனிவு, எல்லாவற்றையும் கேட்டுக்கொள்கிற பொறுமை, எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லக்கூடிய ஓர் ஆளுமை என யாராலும், எண்ணிப் பார்க்க முடியாத அளவிலான, சுறுசுறுப்பின் ஓர் அடையாளமாக விளங்கிக் கொண்டிருக்கிற மாண்புமிகு மருத்துவம் மற்றும்

மக்கள் நல்வாழ்வுத் துறையினுடைய அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனம் நிறைந்த வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் எனது சார்பிலும், எழுச்சித் தமிழர் மரியாதைக்குரிய தலைவர் அண்ணன் திருமா அவர்களின் சார்பிலும் முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

Marathon ஓட்டத்திலும் அவரை மிஞ்ச யாரும் இல்லை; மருத்துவத் துறைப் பணியிலும் அவரை மிஞ்ச யாரும் இல்லை. நேற்று கொஞ்சம் தாமதமாகத்தான் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பு வந்தது. மாலை 4 மணிக்கே வந்திருக்கும் என்று நான் ஆசையோடு சென்றேன். ஆனால் தாமதமாக வந்தாலும், தரமாக வந்த ஒரு கொள்கை விளக்கக் குறிப்பேடாக, இந்தக் கொள்கைக் குறிப்பேடு இருந்தது என்பதையும் நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, இந்தத் துறையின்கீழ் பேச வேண்டுமென்கின்ற ஒரு எண்ணம்-இந்தத் துறையில் நான் ஒன்றும் பாண்டித்தியம் பெற்றவன் அல்ல. எங்களையெல்லாம் ஆளாக்கிய என்னுடைய தந்தையார், ஒரு மருத்துவமனையினுடைய கடைநிலை ஊழியர். MNA என்று அந்தக் காலத்திலே சொல்லப்படுகிற அந்தப் பணியைச் செய்து வாழ்ந்தவர். 10 பிள்ளைகளைப் பெற்று, வளர்த்து, ஆளாக்கி இன்று எங்களையெல்லாம் தலைநிமிரச் செய்திருக்கிறார். (சிரிப்பு) 10 பிள்ளைகளைப் பெற்று, வளர்த்து, ஆளாக்கி இன்று எங்களையெல்லாம் தலைநிமிரச் செய்திருக்கிறார். அத்தனை பேரையும் தலைநிமிரச் செய்திருக்கிறார். எனக்கு இரண்டு மகன்கள் மற்றும் ஒரு மகள் இருக்கிறார்கள். மூத்த மகன் மருத்துவராக இருக்கிறார், இளைய மகன் வழக்கறிஞராக இருக்கிறார், மகள் படித்துக்கொண்டிருக்கிறார். தந்தையின் நினைவை நெஞ்சில் தாங்கியும் இந்தத் துறையின்கீழ் பேச வேண்டுமென்று நான் விரும்பினேன்.

பிற்பகல் 2–25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம் ஓர் ஆகப் பெரிய மாவட்டம். Robert Clive காலத்திலேயே கிழக்கிந்திய கம்பெனியின் தலைநகரமாக இருந்த ஒரு மாவட்டம். 1900–களிலேயே அங்கு மருத்துவக் கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டன. கடலூர் மாவட்டத்திலிருந்து பிரிந்த விழுப்புரம் மாவட்டத்திற்கு ஒரு மாவட்ட மருத்துவக் கல்லூரி கிடைத்துவிட்டது. விழுப்புரம் மாவட்டத்திலிருந்து பிரிந்த கள்ளக்குறிச்சிக்கு இன்னொரு மாவட்ட மருத்துவக்

2023 ஏப்ரல் 18] [திரு. ம. சிந்தனை செல்வன்]

கல்லூரி கிடைத்துவிட்டது. கடலூர் மாவட்டத்திலே கடந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்திலே Capper Quarry என்று சொல்லப்படுகின்ற கடலூர் வட்டத்தை ஒட்டியிருக்கின்ற அரிசி பெரியாங்குப்பம் என்கின்ற கிராமத்திற்கு உள்ளே இருக்கக்கூடிய 110 ஏக்கர் நிலத்தை அடையாளம் கண்டு, மாவட்ட மருத்துவக் கல்லூரியை அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அடிக்கல்லும் நாட்டப்பட்டதாக நான் அறிகிறேன். ஆனால், சிதம்பரம் ராஜா முத்தையா மருத்துவக் கல்லூரி இப்போது மாவட்ட மருத்துவக் கல்லூரியாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன. அண்ணாமலை பல்கலைக்கழகத்தை 2013-ல் அரசு எடுத்துக் கொண்டது. ஒரு takeover G.O. என்று சொல்லக்கூடிய ஓர் அரசாணை போடப்பட்டு, ராஜா முத்தையா மருத்துவக் கல்லூரி பயன்பாட்டிற்கு வந்திருக்கிறதே தவிர, absorption G.O. என்று சொல்லக்கூடிய சுய நிதியாதாரத்தைக் கொண்ட வகையிலே மருத்துவத் துறையோடு முழுமையாக இணைக்கப்பட்ட கல்லூரி மருத்துவமனையாக அந்த மருத்துவமனை இன்னும் உருபெறவில்லை; பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன. ஆனால், ஒவ்வொரு நாளும் மருத்துவத்திற்கான தேவை இருக்கிறது. ஆக, அந்த அளவிலே ராஜா முத்தையா மருத்துவக் கல்லூரி என்று கடந்த காலத்தில் அழைக்கப்பட்ட கடலூர் மாவட்ட மருத்துவமனையை முழுமையாக மருத்துவத் துறையின்கீழ் கொண்டு வந்து, அதற்கான உரிய absorption G.O.-வை நிதித் துறையோடு இணைந்து, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவர ஆவன செய்ய வேண்டுமென பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, அந்த Capper Quarry-லே இருக்கிற சற்றேறக்குறைய 110 ஏக்கர் நிலத்தில்—ஓமந்தூரார் வளாகத்தில் இருக்கக்கூடிய பன்னோக்கு மருத்துவமனையைப் போல-எல்லா பன்னோக்கு மருத்துவமனைகளும் மாநிலத் தலைநகரில்தான் இருக்க வேண்டுமா? கடலூரில் ஒன்று இருக்கட்டுமே! ஆகவே, கடலூர் மாவட்ட மக்களின் சார்பாக நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன், பணிவோடு கேட்டுக்கொள்கிறேன், அந்த 110 ஏக்கர் நிலம் TB மருத்துவமனைக்கு என்று அடங்கல் பதிவேடுகளிலேயே இருக்கிறது. ஆகவே, அந்த இடத்தில் ஒரு பன்னோக்கு மருத்துவமனையை அமைக்க வேண்டுமென்கின்ற கோரிக்கையை முன்வைக்கிறேன். இன்று மாண்புமிகு வேளாண்

துறை அமைச்சராக அண்ணன் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் இருக்கிறார்கள். அவர் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்தவர். மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்த அவருடைய காலத்திலேதான் என்னுடைய காட்டுமன்னார்கோவில் சட்டமன்றத் தொகுதியில் ஓர் அடுக்குமாடி குடியிருப்பைப் போன்ற ஒரு மருத்துவமனையை Non-Taluk Hospital ஆக உருவாக்கித் தந்தார். அன்றைய நிதிநிலைச் சூழலுக்கேற்ப அதை உருவாக்கித் தந்தார். இன்றுவரை அந்த இடத்திலே ஒரு முறையான மருத்துவமனை கிடையாது. மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்குப் பக்கத்திலே மரியாதைக்குரிய இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் அமர்ந்திருக்கிறார். அன்னாரிடத்திலும் நான் அன்போடு, பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். நடன சபாபதி நடராஜர் கோயிலுக்குச் சொந்தமான 8 ஏக்கர் நிலம், temple land தாசில்தாருடைய கட்டுப்பாட்டிலே அங்கே இருக்கிறது. இறைவனுடைய செயல்பாடுகளில் ஒன்று, உயிரைக் காப்பது. ஆகவே, அந்த அடிப்படையிலே அந்த இடத்தை எங்களுக்குத் தந்தால், ஓர் அழகான மருத்துவமனையைக் கட்டிக் கொடுப்பதற்கு மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்கள். (மணியடிக்கப்பெற்றது) நான் இப்போதுதான் தொடங்கியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 8 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. ம. சிந்தனை செல்வன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த அடிப்படையிலே இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்த வேண்டுமென்கின்ற அடிப்படையில்தான் இந்தத் துறையை நான் தேர்ந்தெடுத்தேன். இந்தத் துறைக்குள்ளாக ஒரு சில அடிப்படையான அம்சங்களை மாத்திரம் நேரத்தின் அருமை கருதி நான் சொல்ல விரும்புகிறேன்.

பிரதான எதிர்க்கட்சிக்கு மாத்திரமல்லாமல், கடைநிலையில் இருக்கின்ற எளிய மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சிகளின் குரலுக்கும் மதிப்பளிக்க வேண்டுமென்றும் இந்த நேரத் தளர்வைத் தர வேண்டுமென்றும் நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-30

ஒரு முறை ராஜா முத்தையா மருத்துவக் கல்லூரியிலே விழா நடைபெற்றது. எழுச்சித் தமிழர் மரியாதைக்குரிய அண்ணன் திரு. திருமாவளவன் அவர்கள் வந்திருந்தார்கள். மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே மருத்துவத் துறையில் இருக்கக்கூடிய அந்தப் படிப்புகளையெல்லாம் தமிழில் கொண்டு வர வேண்டுமென்கின்ற வேண்டுகோளை அப்போது வைத்தார். உடனடியாக எழுந்து, தமிழிலே அவற்றையெல்லாம் கொண்டுவருவதற்கான ஆகச் சிறந்த முயற்சிகளை தமிழக அரசு முனைப்போடு எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதையெல்லாம் பட்டியலிட்டார். அதற்காக என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியை நான் இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

Paramedical courses என்று சொல்லப்படுகின்ற Nursing, Physiotherapy ஆகிய படிப்புகளுக்கு முன்னுரிமை கொடுத்து, கலைஞரின் நூற்றாண்டுக் கொள்கைத் திட்டமாக உடனடியாக அந்தப் படிப்புகளை தமிழில் கொண்டுவருவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தத் தருணத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் கடிகாரத்தைப் பார்க்க வேண்டாம், என் கண்களைப் பார்க்க வேண்டுமென உங்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நீட் தேர்வுக்கு எதிரான மாநிலங்களை ஒன்றிய அரசு மதிப்பதில்லை, மாநில உரிமைகளை மதிப்பதில்லை, ஒரு பாசிசமாக அது செயல்படுகிறது என்பதை பல தளங்களில் நாம் அறிவோம். நீட் தேர்வைத் திணித்ததும் எத்தனை மாணவர்கள் தற்கொலைக்கு ஆளானார்கள் என்பதையும் நாம் அறிவோம். நீட் தேர்வு விலக்கு என்கிற அடிப்படையிலே ஒரு வலுவான முயற்சியை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். கடந்த 2021, செப்டம்பர் 13 ஆம் தேதி கொண்டுவந்த தீர்மானம், கடந்த ஆண்டு, பிப்ரவரியில் கொண்டுவந்த தீர்மானத்தையெல்லாம் நிறைவேற்றியமைக்கு நான் நன்றியோடு, பெருமையோடு வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், நம்மீது நீட் தேர்வு நிர்பந்திக்கப்படுகிறது. நம்முடைய மசோதா குடியரசுத் தலைவர் அவர்களுடைய மாளிகையிலே கிடப்பிலே கிடக்கிறது. ஆளும் ஒன்றிய அரசு எதைச் செய்யும் என்றே தெரியாது. ஆகவே, ஓர் இடைக்கால ஏற்பாடு தேவை என்பதை

[திரு. ம. சிந்தனை செல்வன்] [2023 ஏப்ரல் 18

மெத்தப் பணிவோடு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அடிப்படையிலே இன்றைக்கு நீட் தேர்வைச் சந்தித்துதான் ஆக வேண்டுமென்கிற நிலை இருக்கின்ற காரணத்தினாலே, அதைப் பயன்படுத்திக்கொண்டு தனியார் பயிற்சி மையங்கள் கடுமையான கட்டணக் கொள்ளையை நடத்திக்கொண்டிருக்கிற சூழ்நிலையில், அரசே மாவட்டத்திற்கு ஒரு நீட் தேர்வு பயிற்சி மையத்தை தனியார் நிறுவனங்களுடைய தரத்தைவிட கூடுதலான வகையில் உருவாக்குவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பிலே அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேசமயத்தில் இந்தத் தனியார் பயிற்சி மையங்களையெல்லாம் Right to Education Act என்று சொல்லக்கூடிய அந்தச் சட்டத்தின்கீழ், ஓர் அரசாணையின் மூலமாக நாம் கொண்டுவர முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வாறு கொண்டுவந்தால் அந்தப் பயிற்சி மையங்களில் 25 சதவிகிதம் இடஒதுக்கீடு ஏழையெளிய மாணவர்களுக்குக் கிடைக்கும் என்பதையும் பணிவோடு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

7.5 சதவிகிதம் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு என்கிற அந்த ஒதுக்கீட்டை நான் வரவேற்கிறேன். மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், கிராமப்புற மாணவர்களுக்கு 15 சதவிகிதம் என்பதை ஓர் அரசாணையின் மூலமாகக் கொண்டுவந்து, ஒரு மகத்தான சாதனையை நடத்திக் காட்டியவர். அதைப் பின்பற்றி இந்த ஒதுக்கீட்டையும் உயர்த்த வேண்டுமென்றும், அதில் அரசு உதவிபெறுகிற தனியார் பள்ளி மாணவர்களையும் இணைத்துக்கொள்ள வேண்டுமென்றும் நான் இந்தத் தருணத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை தொடர்பான பல்வேறு விவாதங்கள் எனக்கு முன்னதாக இங்கே நடைபெற்றன. மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய காலத்தில்தான் உலகம் பார்த்து வியக்கக்கூடிய இந்த உன்னதத் திட்டம் மிகச் சிறப்பாக இந்தியாவின் கவனத்தை ஈர்க்கக்கூடிய வகையிலே நடைமுறைப்படுத்தப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையிலே எல்லாவற்றையும் சுவீகரிக்கக்கூடிய இந்தியா என்கிற சொல் அழகான சொல். நாம் ஏற்றுக்கொள்ளக்கூடிய சொல். ஆனால், NLC இந்தியாவாக மாறிய பிறகு, NLC இந்தியா

2023 ஏப்ரல் 18] [திரு. ம. சிந்தனை செல்வன்]

என்கிறபோது, இந்தியா என்ற சொல் இணைக்கப்பட்ட பிறகு, இன்று 5 பேர், 10 பேர்கூட தமிழர்கள் இல்லை. ஆயிரம் பேர் பணியமர்த்தம் செய்யப்படுகின்ற இடங்களில், தற்போது 5 பேர், 10 பேர்கூட தமிழர்கள் இல்லாத நிலை இருக்கிறது. ஆக, இந்தச் சொல்லையே அவர்கள் ஆக்கிரமிப்புக்கான சொல்லாக மாற்றி, இந்த உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையிலும் 'One Nation One Organ Allocation' என்கிற ஒரு கொள்கையைக் கொண்டுவந்தார்கள். கடந்த ஆட்சிக் காலத்தில், அதை ஓரளவுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலே, சில தடுமாற்றங்கள் நிகழ்ந்ததாக நான் கருதுகிறேன். அந்தத் தடுமாற்றங்களையெல்லாம் தூக்கியெறிந்துவிட்டு, Adoption Act என்று சொல்லக்கூடிய வகையிலே, மைய அரசினுடைய அந்தச் சட்டத்தோடு இயைந்து போகக்கூடிய ஒரு நடைமுறை உருவாக்கப்பட்டதாக நான் கருதுகிறேன். அவற்றை மாற்றி, நாம் நமக்கான தனித்துவத்தை அந்தத் துறையில் நிலைநிறுத்த வேண்டும். அவசியமானால் அந்தத் துறையை அடிப்படையாகக் கொண்டு, Tamil Nadu University of Transplantation Sciences என்ற ஒரு University-யை, பல்கலைக்கழகத்தை உருவாக்க வேண்டுமென்று இந்தத் தருணத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்போடு, பணிவோடு நான் உங்களிடத்திலே ஒன்றை முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எல்லாவற்றிலும் நாம்தான் முதன்மையான மாநிலம். ஆகவே, Right to Health என்று ஐக்கிய நாடுகள் முன்வைத்திருக்கிற அந்த இலக்கை நோக்கி படிப்படியாக நாம் முன்னேற வேண்டும். அதுதான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு நாம் செய்யக்கூடிய உண்மையான பணியாக இருக்க முடியும். அந்த அடிப்படையிலே மருத்துவர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். பிற மாநில மருத்துவர்களுக்கு இணையான சம்பளம் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அதையெல்லாம் கனிவோடு பரிசீலிக்க வேண்டும். செவிலியர்கள் தங்களுக்கான பல கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். பல துறைகளில், செவிலியர்கள் இன்னும் நிரந்தரப்படுத்தப்படாத நிலையிலே இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் கருணையுள்ளத்தோடு நீங்கள் தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பது பெரிய மதிப்பிற்குரியது. அந்தப் பின்னணியை நேரத்தின் அருமை கருதி என்னால் சொல்ல முடியவில்லை. கொரோனா காலத்தில் பணியாற்றினார்கள். நீங்கள் நினைத்திருந்தால் அவர்களை வீட்டிற்குப் போகச்

சொல்லியிருக்கலாம். ஆனால் அவர்களைத் தக்க வைத்திருக்கின்ற அந்த ஆகப்பெரும் கருணையை அங்கீகரிக்கின்ற அதேசமயம் அந்தச் செவிலியர்களைப் படிப்படியாக பணி நிரந்தரம் செய்வது அவசியமானது. எவ்வளவு காலத்திற்கு தொகுப்பூதியத்தில் சிலரை வைத்துக்கொள்ள முடியும்? (மணியடிக்கப்பெற்றது) அரசு எல்லா துறைகளிலும் இதை ஒரு பொதுவான கொள்கை முடிவாக எடுக்க வேண்டுமென பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அண்ணாமலையாருடைய கருணையை எதிர்ப்பார்க்கிறேன்.

பிற்பகல் 2–35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், மாலையில் ஒரு மானியக் கோரிக்கை இருக்கிறது. இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். நேரம் இல்லை, நன்றி சொல்லி முடியுங்கள்.

திரு. ம. சிந்தனை செல்வன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் இரண்டொரு நிமிடங்களில் நான் முடித்துவிடுகிறேன். கனிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன். நான் மையப்புள்ளிக்கு இன்னும் வரவில்லை. நான் நெருக்கடியை அறிகிறேன். பல்வேறு சமயங்களில் வேறு விதமாக இந்த விவாதங்கள் மடை மாற்றம் செய்யப்படுகின்றபோது, ஆக்கபூர்வமான இந்த விவாதங்களுக்கு அருள்கூர்ந்து தாங்கள் இடமளிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அந்த அடிப்படையிலே, Private Practice allowance என்பது, JIPMER போன்ற மருத்துவமனைகளில் 30 விழுக்காடு தரப்படுகிறது. ஆக, அதற்கு இணையான வகையில் தனியார் practice-ஐ தவிர்க்கக்கூடிய வகையிலே நம்முடைய அரசு மருத்துவர்களுக்கு உரிய அங்கீகாரத்தைத் தர வேண்டும். குறிப்பாக, பணிபுரியும் இடத்திலேயே அவர்களுக்கான வீடு வழங்க வேண்டும். மருத்துவர்களுக்கும், செவிலியர்களுக்கும் பணிபுரிகிற இடத்திலேயே அது மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாக இருந்தாலும் சரி, வட்ட தலைமை மருத்துவமனையாக இருந்தாலும் சரி, எல்லா இடங்களிலும் அவர்களுக்கான ஒரு Inbuilt Quarters இருப்பது அவசியமானது. அதை ஒரு கொள்கை முடிவாக எடுத்து படிப்படியாக நிறைவேற்ற வேண்டுமென நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் தருணத்திலே இன்னொன்றை நான் பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு மருத்துவமனை என்பது,

2023 ஏப்ரல் 18] [திரு. ம. சிந்தனை செல்வன்]

மருத்துவர்கள், செவிலியர்கள் இவர்களோடு மாத்திரம் இயங்குவது அல்ல. Hospital Attender *என்கிற அந்த* character *என்பது மருத்துவமனையில் தவிர்க்கமுடியாத ஓர் அங்கம். நீங்கள் எண்ணிப் பாருங்கள். ஒரு மருத்துவமனையில் எந்த* Attender*-ம் இல்லாமல், வெளியே வந்துவிட்டார்கள் என்றால் என்னவாகும்? மருத்துவமனையை இயக்கவே முடியாது. ஆகவே, அந்த* Attender*-களுக்கான ஒரு கொள்கையை தமிழ்நாடு அரசு இந்தியாவிற்கே ஒரு முன்னோடியாக உருவாக்க வேண்டும்.* Attenders *அந்த மருத்துவமனையின் ஓர் அங்கம்.* Attenders *அங்கீகரிக்கப்பட வேண்டும். அவர்களுக்கான* Nodal officer *இருக்க வேண்டும். அவர்களுக்கான தங்குமிடம் இருக்க வேண்டும். படுக்கை வசதியுடன்கூடிய ஒரு தங்குமிடத்தை தயவுசெய்து ஒரு* model, *ஒரு* pilot scheme *ஆக-*atleast *சென்னைக்கு வருகின்ற இடத்திலாவது அவர்களுக்குத் தர வேண்டும் என்பதைப் பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *நேரமில்லை, நேரமில்லை. நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.*

திரு. ம. சிந்தனை செல்வன்: *அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதில்* Non-service PG *என்று சொல்லக்கூடிய ஒரு குறிப்பிட்ட தரப்பினருடைய பிரச்சினையை இந்த நேரத்தில் கருணையோடு உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். அந்த முதுநிலை படிப்புகளில் அரசு மருத்துவர்களுக்கு 50 விழுக்காடு தருவது வரவேற்கத் தகுந்தது. ஆனால், ஆண்டுதோறும்* MRB *நடந்திருந்தால் எல்லோரும் அரசு மருத்துவர்களாக ஆவதற்கான வாய்ப்பு இருந்திருக்கும். அந்த வாய்ப்பைக் கொடுத்துவிட்டு, நீ நேரடியாக ஏன்* NEET *படிக்கப்போனாய் என்று சொல்லலாம். ஆனால், கடந்த காலங்களில் ஆண்டுதோறும்* MRB *நடத்தப்படவில்லை. ஆகவே, ஒன்றிய அரசு தருகிற நெருக்கடிகளுக்கு மத்தியில், தங்கை அனிதாவை இதயத்தில் சுமந்துகொண்டு, பல மாணவர்கள்* PG NEET *தேர்வை எழுதி நேரடியாக அந்த இடத்திற்குப் போகிறார்கள். அவ்வாறு பணியாற்றுகிற மாணவர்களை கடந்த காலத்திலே* Government Servants Act, *17(1)-ன்கீழ் கொண்டுவருகின்ற நிலையிலே வைத்திருந்தார்கள். (மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள்.

திரு. ம. சிந்தனை செல்வன்: முடித்துவிட்டேன், முடித்துவிட்டேன். கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் முன்னால் அவர்களை பிரிவு 19(1) என்கிற விதியின்கீழ் கொண்டுவந்ததன் மூலமாக அவர்கள் பணியாற்றிவிட்டு, கட்டாயமாக வெளியேற்றப்பட வேண்டும் என்கிற நிலை உருவாகியிருக்கிறது என்பதையும் இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களது பிரச்சினையைக் கருணையோடு அணுகி அவர்களை அரவணைக்க வேண்டும் என்று கேட்கிறேன். அதே தருணத்தில், இன்னும் முக்கியமான பல்வேறு செய்திகள் இருக்கின்றன. முக்கியமாக ஒன்றை மட்டும் சொல்கிறேன். மாதவிடாய் என்பது என்னைப் பெற்ற தாய் முதல் என்னுடைய மகள் வரைக்குமான ஓர் இயல்பான பிரச்சினை. கொச்சின் பல்கலைக்கழகத்தில் மகளிருக்கு, மாணவிகளுக்கு மொத்த attendance-ல் வருகைப் பதிவேட்டில் 2 விழுக்காடு தளர்வு தரப்பட்டிருக்கிறது. அவர்களுடைய இந்தப் பிரச்சினை அரசால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது, ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. மற்றவர்களுக்கு எல்லாம் 80 விழுக்காடு attendance கட்டாயம் என்றால், girls-க்கு 2 விழுக்காடு தளர்வு தரலாம் என்று இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட தளங்களிலும் நம்முடைய புதிய அணுகுமுறை இருக்க வேண்டும் என்பதை இந்தத் தருணத்திலே என்னுடைய (மணியடிக்கபெற்றது) பணிவான வேண்டுகோளாக முன்வைத்து, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உடலுக்கு மருத்துவம் பார்ப்பது என்பதைத் தாண்டி உள்ளத்திற்கு மருத்துவம் பார்ப்பது என்பது இன்றைய காலத்தின் தேவையாக இருக்கிறது. மனநோய் என்பது ஒரு பெரும் துயரமாக இன்று மாறியிருக்கிறது.

பிற்பகல் 2–40

Clinical psychology படிப்பை M.Phil. படிப்பில்தான் பயிற்சி செய்ய முடியும் என்கிற நிலையிருக்கிறது. B.Sc. Psychology, M.Sc. Psychology முடித்தவர்களுக்கு அந்த வாய்ப்பு இல்லை. கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் மாத்திரம்தான் அந்தப் பயிற்சி வழங்கப்படுகிறது. இன்றைக்கு ஆயிரக்கணக்கான மருத்துவ உளவியலாளர்கள் தேவைப்படுகிறார்கள். ஆகவே, ஒட்டுமொத்தமாக அதனை அனைத்து மருத்துவக் கல்லூரிகளுக்கும் விரிவுபடுத்த வேண்டுமென்கிற கோரிக்கையை முன்வைக்க விரும்புகிறேன்.

2023 ஏப்ரல் 18]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *நேரமாகிவிட்டது. (குறுக்கீடு) சரி, சீக்கிரம் நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.*

திரு. ம. சிந்தனை செல்வன்: *நான், நன்றி சொல்லி உரையை முடித்துவிடுகிறேன். பல்வேறு மன நோய்கள் இருக்கின்றன. பெருமிதம் என்பது வேறு, இறுமாப்பு என்பது வேறு. ஒரு சமூகம் தன்னளவிலான பெருமிதத்தைக் கொள்வது இயல்பானது. சமூக நீதிக்கு உகந்தது. ஆனால், மற்றவர்களுக்கு எதிரான இறுமாப்பைக் கொள்வது சமூக நீதிக்கு உகந்ததல்ல. அப்படிப்பட்ட சாதிய மன நோயாளிகளால் ஆணவப் படுகொலைகள் நடந்துகொண்டிருக்கிறதே என்று நேற்று காலையில் நான் அழுதுகொண்டிருந்தேன். நெஞ்சமே வலித்தது. ஆனால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் சாதிய மன நோயைத் தணிக்கக்கூடிய ஒரு மகத்தான மருத்துவராக இருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அவரது தலைமையிலே, தமிழ்நாடு சாதிய மன நோய் தவிர்த்த ஒரு சமூக நீதிக் களமாக மாறும் என்கிற நம்பிக்கையைப் பதிவு செய்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக் கோரிக்கைகளை தங்களிடம் கொடுத்துவிடுகிறேன். அவற்றை அவைக்குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் காட்டுமன்னார்கோவில் சட்டமன்றத் தொகுதியின்மீதும் தனது கருணையைத் திருப்ப வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு, நன்றி கூறி, நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

கலியமலை, காவாலகுடி, மழவராய நல்லூர் ஆகிய கிராமங்களில் முற்றிலும் சிதிலமடைந்துள்ள நிலையில் உள்ள துணை சுகாதார நிலையக் கட்டடங்களை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதிய துணை சுகாதார நிலையங்களை (HSC) கட்டித்தர வேண்டும்.

காட்டுமன்னார்கோவிலிலிருந்து திருமுட்டம் தனி வருவாய் வட்டமாகப் பிரிக்கப்பட்டுள்ள நிலையில் திருமுட்டம், பேரூரிலுள்ள மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தை வட்ட மருத்துவமனையாக (Taluk Hospital) தரம் உயர்த்திட வேண்டும்.

காட்டுமன்னார்கோவில் மருத்துவ வட்டாரம் (Medical Block) ஆயங்குடி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. வருவாய் வட்டமும், ஒன்றியமும் திருமுட்டத்தைத் தலைமையிடமாகக் கொண்டு பிரிக்கப்பட்டு இயங்கி வருவதால் மருத்துவ வட்டாரத்தையும் இரண்டாகப் பிரித்து பாளையங்கோட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மருத்துவ வட்டாரத்தை உருவாக்கிட வேண்டும்.

பாளையங்கோட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தித்தர வேண்டும்.

மக்களின் தேவைகளின் நியாயங்களை ஏற்று, விதிமுறைகளைத் தளர்த்தியோ அல்லது மாநில அரசின் நிதியிலோ லால்பேட்டை பேரூராட்சியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை உடனடியாக அமைத்துத் தர வேண்டும்.

காட்டுமன்னார்கோவிலிலுள்ள அரசு மருத்துவமனை வெறும் 97 சென்ட் இடத்தில் அடுக்குமாடி கட்டடத்தில் அமைந்துள்ளது. அம்மருத்துவமனையை புதிய இடத்திற்கு மாற்றி புதிய கட்டடங்களுடன்கூடிய, பல்வகை மருத்துவ வசதிகளைக் கொண்ட தாலுகா மருத்துவமனையாகக் கட்டித்தர வேண்டும்.

திருமுட்டம்-எசனூர் அரசு துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக மேம்படுத்த வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கணபதி அவர்கள்.

***திரு. க. கணபதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கம். இந்தியத் திருநாடே போற்றுகின்ற உத்தமத் தலைவர், கழகத் தலைவர், அன்புத் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்களை முதற்கண் வணங்குகிறேன்.

ஆத்திகம் வளர்த்த வேள்வித் தீயை, நாத்திக நீரால் அணைக்கச் செய்த தந்தை பெரியார், தமிழுக்கு தன் இதயத்தைத் தாழ்வாரமாக்கிய கழக முன்னவர் பேரறிஞர் அண்ணா, ஈர அலைகள், எழும்ப, எழும்ப வங்கக் கடலால் ஈரமாகும் ஈர மனத்தோன் அன்புத் தலைவர் கலைஞர், ஓய்வையும் சாய்வு நாற்காலியிடம்

2023 ஏப்ரல் 18] [திரு. க. கணபதி]

ஒப்படைப்பு செய்யாத ஒப்பிலாத் தலைவர் மாண்புமிகு முதல்வர், கோட்டைக் கொத்தளத்தில் கும்மியடிக்கும் அரசியல் புழுதியில், விவேகம் காணும் வியப்புமிகு தலைவர், மாண்புமிகு சின்னவர், (மேசையைத் தட்டும் ஒலி) கோபாலபுரத்து விசுவாசி மாண்புமிகு அவை முன்னவர், திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர், கழகப் பொருளாளர், அண்ணன் திரு. டி.ஆர். பாலு, மக்கள் நலனே தன் நலன் என தலைவர் பாதையில் தடம் புரளாமல் நடக்கும் நடை மன்னர், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், சட்டமன்றப் பேரவையின் கழுத்து மாலையில் ஒளிமணியாய் விளங்கும் மாண்புமிகு பேரவைத் தலைவர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், என்னை வெற்றிபெறச் செய்த மதுரவாயல் தொகுதி மக்கள், வெற்றிக்குப் பாடுபட்ட தி.மு.க. மற்றும் தோழமைக் கட்சிகளின் நிர்வாகிகள், தோழர்கள் மற்றும் நண்பர்கள், சென்னை தெற்கு மாவட்டத்திலிருந்து இங்கே வருகைதந்து, மாடத்திலே பார்வையாளர்களாக அமர்ந்துகொண்டு பார்த்துக் கொண்டிருக்கின்ற கழகத்தினுடைய நிருவாகிகள் உள்ளிட்ட மாண்புமிகு பெருமக்களையெல்லாம் வணங்கிப் போற்றுகிறேன்.

சித்திரையைச் சித்திரமாக்க, வைகாசியை வைகறையாக்க, ஆனியை ஆனந்தமாக்க, ஆடியை ஆடம்பரமாக்க, ஆவணியை ஆற்றலாக்க, புரட்டாசியைப் புனிதமாக்க, ஐப்பசியை ஐஸ்வர்யமாக்க, கார்த்திகையை கருணையாக்க, மார்கழியை மாணிக்கமாக்க, தையைத் தைரியமாக்க, மாசியை மாமணியாக்க, பங்குனியைப் பங்காளியாக்க இங்கே பிறந்திருக்கும் சோபகிருது ஆண்டில் மக்கள் சோபிக்க மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் கலந்துகொள்வதிலே நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குள் போவதற்கு முன்னால், எனது தொகுதி சார்ந்த சில முக்கிய கோரிக்கைகளை உங்கள்முன் வைக்கின்றேன்.

மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, பூந்தமல்லி நெடுஞ்சாலையையும், ஆற்காடு சாலையையும் இணைக்கின்ற ஆலப்பாக்கம் பிரதான சாலை; ஆற்காடு சாலையையும்,

மவுண்ட்-பூந்தமல்லி நெடுஞ்சாலையையும் இணைக்கின்ற வள்ளுவர் சாலை ஆகிய இரண்டு சாலைகளும் தேசிய நெடுஞ்சாலை மற்றும் மாநில நெடுஞ்சாலைகளை ஒட்டி இருக்கின்ற சாலைகளாகும். போக்குவரத்து நெரிசல் மிக்க இவ்விரண்டு சாலைகளையும் 60 அடி சாலைகளாக அகலப்படுத்தி, தரமுயர்த்தித் தர வேண்டுகிறேன்.

பிற்பகல் 2–45

அரசு மற்றும் தனியார் துறைகளில் வேலைவாய்ப்பு கிடைக்காத, படித்த மற்றும் படிக்காதவர்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்கு பல்வேறு சுய தொழில்களைத் தேர்ந்தெடுத்து செய்துவருகின்றனர். அந்த வகையில், கூலி நிலத் தரகு தொழிலையும் வாழ்வாதாரத் தொழிலாக தமிழ்நாட்டில் பல ஆயிரக்கணக்கானவர்கள் செய்து வருகிறார்கள். வீடு மற்றும் நிலம் விற்பனை போன்றவற்றில் விற்பவர்களையும், வாங்குபவர்களையும் இணைத்து அந்த விற்பனையை மேற்கொள்ளச் செய்வது, அதேபோன்று குடியிருப்பை வாடகைக்கு விடுபவர்களையும், வாடகைக்கு வருபவர்களையும் இணைத்து, அந்தக் குடியிருப்பை வாடகைக்கு விடச் செய்வது போன்ற பணிகளை மேற்கொள்வதுதான் கூலி நிலத் தரகு தொழிலாளர்களுடைய பணியாகும். அப்படி முடித்துக் கொடுத்தால், அதில் கிடைக்கும் சிறிய சன்மானத்தில்தான் இந்தத் தொழிலாளர்கள் தங்களின் வாழ்வாதாரத்தைப் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. கூலி நிலத் தரகுத் தொழிலாளர்கள் 6 மாதம் முதல் ஓராண்டு காலம் வரை தொடர்ந்து உழைத்தால்தான் மேற்படி ஒரு விற்பனையோ அல்லது குடியிருப்பு வாடகைக்கு விடும் பணியோ நிறைவடையும். அதில் கிடைக்கும் அந்தச் சிறிய சன்மானம்தான் அந்த 6 மாதங்கள் முதல் ஓராண்டு காலத்திற்கான வாழ்வாதார ஊதியம் ஆகும். சில நேரங்களில், 2 ஆண்டுக் காலத்தில்கூட, சில கூலி நிலத் தரகு தொழிலாளர்களுக்கு இந்த வாய்ப்பு கிடைப்பதில்லை. கூலி நிலத் தரகு தொழிலாளர்கள் பெரும்பாலும் சைக்கிள் மற்றும் பேருந்துமூலம் சென்று இந்தத் தொழிலை மேற்கொள்ளக்கூடிய ஏழ்மை நிலையில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். பிற தொழிலாளர்கள் உழைத்தால் உழைப்புக்கேற்ற ஊதியம் வார அளவிலும், மாத அளவிலும் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. ஆனால், இந்தக் கூலி நிலத் தரகுத் தொழிலாளர்களுக்கு பல மாதங்கள் உழைத்தாலும் ஊதியம் கிடைக்காத அவல நிலையே

2023 ஏப்ரல் 18] [திரு. க. கணபதி]

நீடிக்கிறது. மேற்கூறிய நிலத் தரகர் தொழில் புரிவோரை அமைப்பு சாரா தொழிலாளர்கள் பட்டியலில் இணைத்திட வேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறையின் செயல்பாடுகள் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் செயலற்று இருந்த நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலில், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், துறையின் கட்டுப்பாட்டிலுள்ள கோயில்களுக்குச் சொந்தமான இடங்களிலுள்ள முறைகேடான ஆக்கிரமிப்புகளை அகற்றுவது, கோயில் திருப்பணிகளை முறைப்படுத்துவது முதலான பல பணிகளைத் திட்டமிட்டு, சமூக நீதிப் பார்வையுடன் சிறப்பான முறையில் பணியாற்றி வருகின்றார்கள். இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள கோயில்களுக்குச் சொந்தமான அடிமனை வாடகைதாரர்களுக்கான வாடகை நிர்ணயத்திற்கு முத்தமிழறிஞர் அய்யா கலைஞர் அவர்களது 2010 ஆம் ஆண்டு ஆட்சியில், அரசாணை எண் 298, வெளியிடப்பட்டு பயனாளிகளின் பிரச்சினைகள் சுமுகமாகத் தீர்க்கப்பட்டிருந்தன. ஆனால், கடந்த ஆட்சியில் அறநிலையத் துறையால் பிரிவு 34(ஏ)-ன் அடிப்படையில் புதிய வாடகை என்ற பெயரில் பல மடங்கு வாடகைத் தொகை நிர்ணயிக்கப்பட்டு, அந்த வாடகை பல மடங்கு உயர்த்தி அறிவிக்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்ட வாடகையின் அடிப்படையில், நிலுவைத் தொகை கட்டப்பட வேண்டுமென்று பல இலட்சங்கள் நிலுவைத் தொகையாக அறிவிக்கப்பட்டது. 90 விழுக்காடு மக்கள் ஏழை எளிய நடுத்தரப் பிரிவைச் சார்ந்தவர்களாக உள்ளனர். எனவே, அந்த அறிவிப்பு அவர்களுக்கு மிகப் பெரிய நெருக்கடியைக் கொடுத்து வருகின்றது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

கலைஞருடைய ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்ட அரசாணை 298-ன் அடிப்படையில், வாடகை நிர்ணயிக்கப்பட்டால், பயனாளிகளுக்கு அறநிலையத் துறையின்மூலம் வழக்குகளைச் சந்திக்கும் நிலையினால் காலதாமதம் ஏற்படும் என்கிற நிலை தவிர்க்கப்பட்டு, அறநிலையத் துறைக்கு வர வேண்டிய முறையான வருவாய் விரைவாக வந்து சேரும் என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. க. கணபதி] [2023 ஏப்ரல் 18

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருநகர சென்னை மாநகராட்சியில் நொளம்பூர், முகப்பேர், மதுரவாயல், நெற்குன்றம், வளசரவாக்கம், காரம்பாக்கம், போரூர் மற்றும் இராமாபுரம் ஆகிய பகுதிகளில் பல அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டு, பெருமளவிலான மக்கள் குடியேறுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது. மக்கள்தொகை அதிக அளவில் இருப்பதால், பொதுமக்களின் நலனைக் கருத்திற்கொண்டு, மதுரவாயல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 15 வார்டுகளிலும் சுமார் 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியினை ஒவ்வொரு வார்டிலும் கூடுதலாக அமைத்துத் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மந்தைவெளி மேய்க்கால் நிலங்கள். சென்னை மாநகராட்சியில் கால்நடைகள் வளர்ப்பதற்குத் தடை செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் கால்நடை பராமரிப்புத் துறைக்குச் சொந்தமான மந்தைவெளி மேய்க்கால் நிலங்கள், மதுரவாயல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நொளம்பூர் பகுதியில் சர்வே எண்கள் 45, 46, 47, 103 மற்றும் 105 ஆகியவற்றில் சுமார் 15 ஏக்கர் அளவில் உள்ளன. எங்கள் தொகுதியைப் பொறுத்தவரையில், மக்கள் பணி செய்வதற்கு ஒரு இடமும் இல்லாத நிலை உள்ளது. ஆகவே, இந்த மேய்க்கால் நிலங்களையெல்லாம் மீட்டெடுத்து, மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவந்து ஒப்படைப்பு செய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நகர்ப்புற சமுதாய நல மருத்துவமனை. சென்னைப் பெருநகர மாநகராட்சியில் வளசரவாக்கம் மண்டலம், 11, 151–வது ward, சின்னப்போரூரில் அமைந்துள்ள நகர்ப்புற சமுதாய நல மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவு இல்லாத காரணத்தால், இவ்விடத்தில் அவசர சிகிச்சை பெற வருகின்ற பொதுமக்கள் மற்றும் நோயாளிகள், அதற்கான இட வசதி இருந்தும் கட்டமைப்பு இல்லாத காரணத்தினால், ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் ஸ்டான்லி மருத்துவமனைக்கு அனுப்பப்படுகிறார்கள். அவ்வாறு அனுப்பப்படுகின்ற பயண நேரத்தில், சில உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. இதைக் கருத்திற்கொண்டு, எங்கள் தொகுதி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பொதுமக்கள் பயன்பெறும்வகையில், தீவிர சிகிச்சைப் பிரிவு ஒன்றினை தாமதமின்றி ஏற்படுத்தித் தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

2023 ஏப்ரல் 18] [திரு. க. கணபதி]

வளசரவாக்கம் மண்டலம் 11, 151-வது ward-ல், சின்னப்போரூரில் அமைந்துள்ள நகர்ப்புற சமுதாய நல மருத்துவமனையில் செவிலியர்கள் மற்றும் மருத்துவர்கள் குறைவாக இருக்கின்ற காரணத்தினால், அவர்களை நியமனம் செய்து தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று எனது தொகுதிக்கு அருகில் உள்ள விருகம்பாக்கம் தொகுதி, கலைஞர் நகர் அரசு மருத்துவமனையை Multi Speciality மருத்துவமனையாக மாற்றுவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வியிலும், மக்கள் நல்வாழ்விலும் எப்போதும் தன்னைப் பின்னிப் பிணைத்து, இணைத்துக்கொள்கிற பழக்கம் கழக ஆட்சிக்கு உண்டு. இது கடந்தகால வரலாறு. அந்த வரலாற்றின் தடம் பற்றி இன்றைய ஆட்சியிலும் பள்ளிக் கல்வி மற்றும் உயர் கல்வித் துறைகளுக்கு ரூ.47,266 கோடி நிதி ஒதுக்கீடும், நகர்ப்புற வளர்ச்சித் துறைக்கு ரூ.38,444 கோடி நிதி ஒதுக்கீடும், ஊரக வளர்ச்சித் துறைக்கு ரூ.22,562 கோடி நிதி ஒதுக்கீடும், நெடுஞ்சாலைகள் துறைக்கு ரூ.19,465 கோடி நிதி ஒதுக்கீடும் செய்து, அந்த வரிசையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு ரூ.18,661 கோடி நிதியைத் தந்திருக்கிறார், மாண்புமிகு முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாவட்டங்கள்தோறும் மருத்துவக் கல்லூரிகள் தொடங்க வேண்டுமென்ற கழக அரசின் குறிக்கோள் காரணமாக 2010 ஆம் ஆண்டு M.B.B.S. மற்றும் பட்ட மேற்படிப்பு மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை 17 ஆகவும், B.D.S. மற்றும் செவிலியர் போன்ற இதர மருத்துவப் படிப்புக் கல்லூரிகளின் எண்ணிக்கை 33 ஆகவும் அதிகரித்தன.

அதேபோன்று, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால், ஏழை எளிய மக்களுக்கான கண்ணொளி காப்போம் திட்டம், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம், நோயை அதன் தொடக்க நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சையளிக்கும் கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம், கலைஞர் காப்பீட்டுத் திட்டம், 108 இலவச ஆம்புலன்ஸ் திட்டம் போன்ற எண்ணற்ற சுகாதாரத் திட்டங்கள் தமிழகத்திலேயே முன்னோடித் திட்டங்களாகக் கொண்டுவரப்பட்டு, இன்றளவும் அவை தொய்வில்லாமல் செயல்படுத்தப்படுகின்றன.

தொண்டருக்குத் தோழராய் விளங்குகின்ற மாண்புமிகு முதலமைச்சர் தளபதியினுடைய ஆட்சியிலே கிருஷ்ணகிரியில் அவரால் தொடங்கப்பட்ட 'மக்களைத் தேடி மருத்துவம்' என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு, அதன்மூலம் பல கோடி பேர் பயனடைந்து வருகிறார்கள். கொரோனா தொற்றால் பெற்றோரை இழந்து ஆதரவின்றி தவிக்கும் குழந்தையின் பெயரில் 5 இலட்சம் ரூபாய் வைப்பீடு செய்யவும், அந்தக் குழந்தைக்கு 18 வயது நிறைவடையும்போது, அந்தத் தொகையை வட்டியோடு வழங்கிடவும் நடவடிக்கை எடுத்திருக்கிறார், நம்முடைய தலைவர் அவர்கள். அறிவும், திறமையும் எல்லோரிடமும் உள்ளது. ஆனால், அதை வழிநடத்துவதில்தான் வெற்றியும், தோல்வியும் உள்ளது. இந்திய அரசியலில் திருப்பத்தைத் தந்து, அனைவரையும் திகைக்க வைக்கும் முதல்வரிடம்தான் இந்த வெற்றிகளும் குவிகின்றன.

சாலை விபத்தில் ஏற்படக்கூடிய இழப்பைக் குறைப்பதற்கும், பொன்னான நேரம்—Golden Hour என்று சொல்லப்படும் முதல் 48 மணி நேரத்திற்குள் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் அவர்களுக்கு உயர் சிகிச்சை அளிக்க ஒரு இலட்சம் ரூபாய் வரை இலவசமாக வழங்கப்படும் 'இன்னுயிர் காப்போம், நம்மை காக்கும் 48' என்ற திட்டம் இந்த ஆட்சியில் 18–12–2021 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது தமிழ்நாட்டிலுள்ள அனைத்துத் தரப்பு மக்களுக்குமே அத்தியாவசியத் திட்டமாக இருந்துகொண்டிருக்கிறது. எல்லாத் துறைகளிலும் மலர்ந்தும் மாலையாகாது மலர்களாக உள்ள திட்டங்களை மாலைகளாகத் தொடுக்கிறார்; நேற்று வினாக்குறிகளாக இருந்த திட்டங்களை இன்று வியப்புக்குறிகளாக மாற்றுகிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும்.

திரு. க. கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொஞ்சம் நேரம் தாருங்கள்.

"அடினும் ஆவின்பால் தன்சுவை குன்றாது
சுடினும் செம்பொன் தன்னொளி கெடாது
அரைக்கினும் சந்தனம் தன் மணம் அறாது
புகைக்கினும் காரகில் பொல்லாங்கு கமழாது
கலக்கினும் தன் கடல் சேறு ஆகாது"

என்ற வெற்றிவேற்கையின் கூற்றினைப் போல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று இரக்க இதயமும், ஈகைப் பார்வையும், வாழும் காலமெல்லாம் வழுவாது என்பதை வாழ்வோருக்கு உணர்த்தும்விதமாக, வாழ்ந்து காட்டுகிறார். பரிபாடல் குறிப்பிடும் பண்பாளரைப் போல, மாண்புமிகு முதலமைச்சரின் தன்மையையும், சாயலையும் இங்கே திங்களே போற்றும்; அவரின் சுரத்தலையும், வன்மையையும் இங்கே மாரியே போற்றும்; அவரின் புரத்தலையும், நேர்மையையும் இந்த ஞாலமே போற்றும்.

ஒரு முறை அக்பர், Tansen-னிடம் 'உன் குருவின் இசை உன்னுடையதைக் காட்டிலும் உன்னதமாக இருக்கிறதே, என்ன காரணம்' என்று கேட்டாராம். அதற்குப் பதிலளிக்கும்விதமாய் Tansen சொன்னாராம், 'என் குரு இறைமைக்காகப் பாடுகிறார், ஆகவே, அது அபரிமிதமாய் இருக்கிறது. ஆனால், நானோ உங்களுக்காகப் பாடுகிறேன். அதனால் சாதாரணமாக இருக்கிறது' என்றாராம்.

அதுபோல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திட்டங்களுக்காக மக்கள் இல்லை, மக்களுக்காகவே திட்டங்கள் என்ற உயரிய நோக்கத்தோடு, ஓர் இறைமை உணர்வோடு திட்டங்களைத் தீட்டுகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) தொழிலாளர்களின் நலனில் தனி அக்கறை கொண்டுள்ள இந்த அரசு தொழிற்சாலைகளிலும், கட்டுமானம் உள்ளிட்ட அமைப்புசாரா தொழில்களிலும் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் தொற்றா நோயினால் பாதிக்கப்படுவதைத் தடுக்க சிறப்பு முயற்சி எடுக்கவுள்ளது. (மணியடிக்கப்பெற்றது) இதோ முடித்து விடுகிறேன். ஒரே ஒரு நிமிடம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

திரு. க. கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய தொகுதி, கொஞ்சம் நேரம் தாருங்கள். 711 தொழிற்சாலைகளில் உள்ள 8.35 இலட்சம் தொழிலாளர்களுக்கு "மக்களைத் தேடி மருத்துவம்" திட்டம் விரிவுபடுத்தப்படும் என்றும், அதில் புலம் பெயர் தொழிலாளர்களும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் தொகுதி சார்ந்தவற்றைக் கொடுத்துவிடுங்கள், நான் பதிவு செய்துவிடுகிறேன். அமைச்சர்

பதில் சொல்ல வேண்டும். Evening அடுத்த மானியக் கோரிக்கை இருக்கிறது. முடித்து விடுங்கள். நன்றி சொல்லிவிட்டு, அதை என்னிடம் தந்துவிடுங்கள். 11 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. க. கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள், 'ஆடிக் கறக்கிற மாட்டை ஆடிக் கறக்கணும், பாடிக் கறக்கிற மாட்டை பாடிக் கறக்கணும்' என்ற பழமொழி உண்டு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆடியும் பார்த்தாரு, பாடியும் பார்த்தாரு, எதற்கும் செவி சாய்க்கவில்லை, ஓங்கி ஒரு குட்டு வச்சாரு, அடுத்த நிமிடமே மாடு பால் கறந்துவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை, online rummy தடையை மட்டும்தான் சொன்னேன். (மணியடிக்கப்பெற்றது) தேசம் போற்றும் உத்தம தலைவர் நம் முதல்வர் அவர்களை வணங்குகிறேன். உரையை முடித்துவிடுகிறேன். அவ்வளவுதான்.

இப்படி ஏழை, எளிய விளிம்பு நிலை மக்களையும் அன்போடு அரவணைத்து, அவர்களுக்கு அனைத்துமாக இருக்கும் இந்த அரசைக் கண்டு எல்லாத் தரப்பு மக்களுமே இன்று ஏகமனதாய் பாராட்டுகிறார்கள். அரசியல் வளர்ச்சி, நிர்வாகம் ஆகியவற்றின் இடையில் நெருக்கமான உயிர்ப்புள்ள ஓர் உறவை உருவாக்குவதில் கலைஞரின் யுகம் வெற்றி கண்டது.

இப்படி எல்லா மாவட்டங்களையும், அனைத்து சமூகத்தின் எல்லாப் பிரிவினரையும் உள்ளடக்கிய வளர்ச்சியைத்தான் நாம் 'திராவிட மாடல்' என்கிறோம். இந்த பாணியில்தான் தமிழகம் வளர வேண்டும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எண்ணுகிறார். அந்த எண்ணங்களின் உயிரோட்டமே இந்த நிதிநிலை அறிக்கை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் காலத்தில் இப்பூமியில் தளும்பத் தளும்ப எத்தனை சாதனை ஊற்றுகள் வந்தாலும் மக்கள் தாகம் இங்கு தணியாது என்று சொல்லி, தங்கள் மௌனத்தைக்கூட மொழிபெயர்த்துச் சொல்பவர்கள் உங்கள் தொண்டர்கள்! அவர்கள் இருக்கும்வரை தமிழ்நாட்டில் நின்னாட்சி நிரந்தரமே என்று சொல்லி, எங்கள் பூமித் தாயின் பொன் விளக்கை, எங்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்த ஒளி

2023 ஏப்ரல் 18] [திரு. க. கணபதி]

விளக்கை மீண்டும் ஒருமுறை வணங்கி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் எனது உரையை நிறைவு செய்கிறேன்.

எனது தொகுதி சார்ந்த பிரச்சினைகளை உங்களிடம் தருகிறேன். அதை நான் இங்கே படித்ததாகக் கருதி, நிறைவேற்றித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டு, நல்ல வாய்ப்பிற்கு நன்றி பாராட்டி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

தொகுதிக் கோரிக்கைகள்:

மதுரவாயல் தொகுதி, சென்னை போரூர் முதல் கோடம்பாக்கம் வரை உள்ள மெட்ரோ இரயில் பணியோடு, ஆற்காடு சாலையை 100 அடி சாலையாக அகலப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மதுரவாயல் தொகுதி, போரூர் ஏரியை முழுவதுமாக, ஆக்கிரமிப்புகளை அகற்றி சுற்றுச் சுவர் அமைத்து, ஆழப்படுத்தி, கரைகள் மற்றும் படகுக் குழாம் அமைத்து சுற்றுலாத் தலமாக மாற்ற வேண்டும்.

மதுரவாயல் தொகுதி, திருவள்ளூர் மாவட்டம், வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம், அடையாளம்பட்டு ஊராட்சியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கொண்டு வர உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மதுரவாயல் தொகுதியில் ஆதி திராவிடர் மாணவியர் தங்கிப் படிக்கிற அளவிற்கு அனைத்து வசதிகளுடன் விடுதி ஒன்று அமைத்துத் தர வேண்டும்.

மதுரவாயல் தொகுதி, கூவம் ஆற்றை சுத்தப்படுத்தி, ஆழப்படுத்தி, அகலப்படுத்தி இருபுறமும் கான்கிரீட் கரைகள் அமைத்து, கரை ஓரத்தில் சாலை மற்றும் பூங்கா அமைத்துத் தர வேண்டும்.

மதுரவாயல் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–11, வார்டு எண் 147, மதுரவாயல் வருவாய்க் கிராமம், சர்வே எண்கள் 273, 275 276, 278, 279, 280, 281, 287, 288, 289, 291–ல் அடங்கிய 17.80 ஏக்கர் நிலத்தில் அருள்மிகு மார்க்க சகாய ஈஸ்வரர், வரசித்தி விநாயகர், கருணாகரப் பெருமாள் ஆகிய

திருக்கோயில்களுக்குச் சொந்தமான இடத்தில் தேசிய அளவிலான விளையாட்டுத் திடல் அமைத்துத் தர வேண்டும்.

மதுரவாயல் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, உள்ளாட்சி அமைப்புகளில் தினக்கூலியாகப் (NMR) பணியாற்றி வந்த 908 பேரில் 261 நபர்களுக்கு சென்னை குடிநீர் வாரியத்தில் அரசாணைமூலம் பணி நிரந்தரம் செய்யப்பட்டது. மீதமுள்ளவர்கள் பணி நிரந்தரமின்றி பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களையும் பணி நிரந்தரம் செய்ய வேண்டும்.

மதுரவாயல் தொகுதி, திருவள்ளூர் மாவட்டம், வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம், அடையாளம்பட்டு முதல் நிலை ஊராட்சியில் அடங்கிய பாடசாலைத் தெரு, குளக்கரைத் தெருக்களில் மழைநீர் வடிகால்வாய் அமைக்க வேண்டும்.

மதுரவாயல் தொகுதி, திருவள்ளூர் மாவட்டம், வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம், வானகரம் முதல் நிலை ஊராட்சிப் பகுதிகளில் கழிவுநீர்க் கால்வாய் அமைக்க வேண்டும்.

மதுரவாயல் தொகுதி, திருவள்ளூர் மாவட்டம், வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம், அடையாளம்பட்டு முதல் நிலை ஊராட்சியில் அடங்கிய 2 கிலோ மீட்டர் நீளமுள்ள ஒன்றிய சாலையை 7 மீட்டர் அகலத்தில் அமைக்க வேண்டும்.

மதுரவாயல் தொகுதி, திருவள்ளூர் மாவட்டம், வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம், அயப்பாக்கம் ஊராட்சியில் அடங்கிய கே.சி. டாகா நகர் குடியிருப்புவாசிகள் மற்றும் அடையாளம்பட்டு முதல் நிலை ஊராட்சியில் வசிக்கும் மக்களுக்கு குடிநீர் இணைப்பு வசதி அமைத்துத் தர வேண்டும்.

மதுரவாயல் தொகுதி, மதுரவாயல் புல எண் 579 என்ற இடத்தில் அதி நவீன சலவைத் துறை மற்றும் ஓய்வறை அமைத்துத் தர வேண்டும்.

மதுரவாயல் தொகுதி, நிறுத்தப்பட்ட முதியோர் மற்றும் விதவை உதவித் தொகை மற்றும் புதிதாக விண்ணப்பித்தவர்களுக்கு உதவித் தொகை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மதுரவாயல் தொகுதி, முகப்பேர் கிழக்கு, வார்டு–92 மற்றும் வார்டு–145, நெற்குன்றம், அகத்தியர் நகர் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைத்துத் தர வேண்டும்.

2023 ஏப்ரல் 18] [திரு. க. கணபதி]

மதுரவாயல் தொகுதி, அரசுப் பள்ளிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளான கழிப்பறை வசதி, குடிநீர் வசதி, சுற்றுச் சுவர் அமைத்தல், ஆசிரியர் நியமனம், தூய்மைப் பணியாளர்கள் நியமனம் போன்ற வசதிகளைச் செய்து தர வேண்டும்.

மதுரவாயல் தொகுதியில் விலங்குகளின் கருத்தடை அறுவை சிகிச்சை மையம் (Animal Birth Control Centre) ஏற்படுத்தித் தர வேண்டும். மதுரவாயல் தொகுதியில், ஆட்டிறைச்சிக் கூடம் ஒன்று கட்டித்தர வேண்டும்.

மதுரவாயல் தொகுதி, தனியார் கட்டடங்களில் இயங்கி வரும் நியாய விலைக் கடைகளுக்கு, கழிப்பறை வசதியுடன்கூடிய அரசு சொந்தக் கட்டடத்தை அரசு கட்டித் தர வேண்டும்.

மதுரவாயல் தொகுதியில் வார்டு எண் 144, பாரதியார் தெருவிலுள்ள ஆண், பெண் என இரு பாலரும் படிக்கும் அரசு மேல்நிலைப் பள்ளியை ஆண்கள் மட்டும் படிக்கும் வகையிலும், அதே போன்று வார்டு எண் 443, எம்.எம்.டி.ஏ. காலனியில் உள்ள இரு பாலர் படிக்கும் பள்ளியை பெண்கள் மட்டும் படிக்கும் வகையிலும் மாற்றியமைத்து பள்ளிக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தர வேண்டும்.

மதுரவாயல் தொகுதி, அயப்பாக்கம் ஊராட்சி VIP அவென்யூ பகுதியில் தார்ச் சாலை, மழைநீர் வடிகால்வாய், கழிவுநீர் கால்வாய் மற்றும் பூங்கா அமைத்துத் தர வேண்டும். மதுரவாயல் தொகுதி, வளசரவாக்கம், வார்டு–152, SVS நகர், Annexe பகுதியில் தாழ்வான சாலைகளைச் சீரமைக்க வேண்டும்.

மதுரவாயல் தொகுதி, வளசரவாக்கம், வார்டு–149. பழனியப்பா நகர் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைத்துத் தர வேண்டும். மதுரவாயல் தொகுதி, ராமாபுரம் வார்டு–154, குறிஞ்சி நகர் பகுதியில் சமுதாய நலக்கூடம் அமைத்துத் தர வேண்டும்.

மதுரவாயல் தொகுதி, போரூர், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். மேம்பாலத்தின்கீழ் உள்ள காலி இடத்தில் பொது கழிப்பறை கட்டித் தர வேண்டும். மதுரவாயல் தொகுதி, வார்டு–147, மேட்டுக்குப்பம், கங்கா நகர், அருள்மிகு கெங்கையம்மன் கோயில் குளத்தை மறு சீராய்வு செய்து, ஆழப்படுத்தி, சுற்றுச் சுவர் அமைத்துத் தர வேண்டும்.

பிற்பகல் 2–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார் அவர்கள்.

திரு. வே. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மனிதன் என்பவன் தெய்வம் ஆகலாம்,
வாரி வாரி வழங்கும்போது வள்ளல் ஆகலாம்"

என்ற வரிகளுக்கேற்ப வாழும்போது வள்ளலாக, அவர் மறைந்தபோது தெய்வமாக, வாழ்ந்து மறைந்த தலைவர்கள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) சத்துணவுத் திட்டம் தந்த சரித்திர நாயகன், ஓலைக் குடிசைகளுக்கு ஒரு விளக்கு மின்சாரம்மூலம் ஒளிவிளக்கேற்றிய தலைவர், தொண்டர்களால் உருவாக்கப்பட்ட இயக்கத்திற்குத் தலைவராகவும், தமிழக மக்களுக்கு முதல்வராகவும் இருந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சமுதாயத்தில் பெண் குழந்தைகள் பிறந்தாலே பாவம் எனக் கருதி, கள்ளிப்பால் ஊற்றிக் கொல்லும் நிலையை அறிந்து, அவர்களுக்கு "நான் இருக்கின்றேன் தாயாக" என 'தொட்டில் குழந்தை' திட்டத்தை உருவாக்கிய புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) +2, டிகிரி படித்த பெண்களுக்கு தாலிக்குத் தங்கம் திட்டம் வழங்கிய, பள்ளிக் குழந்தைகளுக்கு 14 வகையான உபகரணங்கள் வழங்கி, கல்வியிலே மாபெரும் புரட்சி செய்து, இடைநிற்றலைத் தடுத்து நிறுத்திய, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருக்கோயில் இருக்கின்ற திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவர் ஒரு கூட்டத்தை எதிர்த்தால், அவருக்கு பெயர் வீரன், ஒரு கூட்டமே சேர்ந்து ஒருவரை எதிர்த்தால் அவருக்குப் பெயர் தலைவன். தலைவரும் அவர்தான், வீரரும் அவர்தான். அவர்தான் எங்கள் எடப்பாடியார். (மேசையைத் தட்டும் ஒலி) எளிய மக்களின் தலைவனாக, விவசாயிகளின் நலன்காத்த, குடிமராமத்து நாயகராக, ஏரி, குளங்களைத் தூரெடுத்த, வாழும் கரிகாலச் சோழனாகத் திகழ்கிறார், மாண்புமிகு எடப்பாடியார் அவர்கள். 11

2023 ஏப்ரல் 18] [திரு. வே. சம்பத்குமார்]

*மருத்துவக் கல்லூரிகளை உருவாக்கி, வருடத்திற்கு 1,650 மருத்துவ இடங்களை ஏற்படுத்திய தலைவர், அரசுப் பள்ளியில் படிக்கின்ற மாணவர்களின் நிலையை அறிந்து, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள், 7.5 சதவிகித இட ஒதுக்கீட்டின் மூலமாக வருடத்திற்கு ஏறக்குறைய 500 மருத்துவர்களை உருவாக்கிய தலைவன். கொரோனா காலக்கட்டத்தில், ** மாவட்டந்தோறும், ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, அந்த ஆய்வுக் கூட்டத்தின் மூலமாக கொரோனாவிலிருந்து தமிழக மக்களைக் காப்பாற்றிய தலைவன். (மேசையைத் தட்டும் ஒலி) எதிரிகளுக்கும். . . (குறுக்கீடு) எதிரிகளும், துரோகிகளும் ஏற்படுத்திய போராட்டத்தில் வெற்றி கண்டு, பொதுச் செயலாளராகப் பதவியேற்ற எங்கள் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொரோனா காலத்தில் ** என்பது போன்ற கருத்தை அவர் பதிவு செய்திருக்கிறார். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீக்கி விடுகிறேன், பேசுங்கள்.*

திரு. வே. சம்பத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம் என்றாலே கல்வியில் பின்தங்கிய மாவட்டம் என்ற நிலையை மாற்றி, உயர் கல்வியில் 99.4 சதவிகிதத் தேர்ச்சி என தருமபுரி மாவட்டத்தை முன்னணி மாவட்டமாக உயர்த்திக் காட்டிய எங்கள் அண்ணன், இடைத் தேர்தலில் இரண்டு தொகுதிகளிலும், பொதுத் தேர்தலில் ஐந்து தொகுதிகளிலும் வெற்றி கண்ட நாயகன், (மேசையைத் தட்டும் ஒலி) எளியவனான என்னை இரண்டுமுறை சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றும் வாய்ப்பை வழங்கிய எங்கள் அண்ணன், தருமபுரி மாவட்டம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, கழகத்தை எஃகுக் கோட்டையாக உருவாக்கிய, நான் எந்நாளும் வணங்கக்கூடிய என் அண்ணன் அவர்களை வணங்கி, எனக்கு இந்த வாய்ப்பை ஏற்படுத்திக்*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

கொடுத்த கோவை மாவட்டம் பெற்றுத் தந்த தங்கம், மாண்புமிகு அண்ணன் கொறடா திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களையும், எதிர்க்கட்சித் துணைத் தலைவராகப் பதவியேற்று இருக்கின்ற அண்ணன் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்களையும், நடுவராக, சபாநாயகராக அமர்ந்து, ஆசிரியராக அறிவுரை வழங்கி, எனக்கு நேரத்தை வழங்கியிருக்கின்ற மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக எனக்கு வாக்களித்து, இந்த முறை பொதுத் தேர்தலிலே 30,362 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்த தொகுதியினுடைய மக்களுக்கும், என்னுடைய கழகத்தினுடைய ஒன்றியச் செயலாளர்கள், மாவட்ட பொறுப்பாளர்கள், கழக நிர்வாகிகள், என்னைப் பெற்றெடுத்த தாய், தந்தை அத்தனை பேருக்கும் வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *4 நிமிடங்கள் 21 நொடிகள் ஆகியுள்ளன. இன்னும் 3 நிமிடங்கள் இருக்கின்றன. பேசி முடியுங்கள்.*

பிற்பகல் 3-00

திரு. வே. சம்பத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி சார்ந்த சில கோரிக்கைகளைப் பதிவு செய்து, அதற்குப் பின்பாக நான் மானியக் கோரிக்கைமீது பேசிய பின்பு, மீதமுள்ளவற்றைப் பதிவு செய்துகொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, தீர்த்தமலை அருள்மிகு தீர்த்தகிரீஸ்வரர் திருக்கோயிலுக்கு, தினந்தோறும் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் வருகைதந்து, சிவபெருமானைத் தரிசித்துச் செல்கிறார்கள். இங்கே கர்நாடகா, வேலூர், சேலம் போன்ற பிற மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களிலிருந்து பக்தர்கள் நாள்தோறும் மலையேறி இறைவனை தரிசனம் செய்து வருகிறார்கள். மலைமீது ஐந்து புண்ணிய தீர்த்தங்களை சிவபெருமான் அருளியிருக்கிறார். மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அண்ணன் அவர்கள் அங்கே விஞ்ச் அல்லது தார்ச் சாலையை ஏற்படுத்தித் தந்தால் நன்றாக இருக்கும். அதேபோன்று அந்த மலைக் கோயிலைப் புனரமைத்து, குடமுழுக்கு செய்து தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

2023 ஏப்ரல் 18] [திரு. வே. சம்பத்குமார்]

அரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கே.ஈச்சம்பாடி நீரேற்று திட்டத்தின் மூலமாக, அண்ணன் எடப்பாடியார் அவர்களால் 420 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரூர், மொரப்பூர், பாப்பிரெட்டிப்பட்டி வட்டங்களுக்கு, 66 ஏரிகளுக்கு நீர் கொண்டு வரும் திட்டத்திற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆட்சி மாற்றத்திற்குப் பின்னர், தங்களுடைய ஆட்சிக் காலத்தில் இந்தத் திட்டமானது பரிசீலனையில் இருக்கின்றது, உத்தேசிக்கப்பட்டுள்ளது; மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தில் இருக்கின்றது. இந்த வருடம் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில்கூட பக்கம் 210–ல் இந்தத் திட்டம் பரிசீலனையில் இருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். இதனை உடனடியாக நிறைவேற்றித் தரும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் மாம்பட்டி குமரன் அணைக்கட்டு திட்டம். அந்த மாம்பட்டி குமரன் அணைக்கட்டு திட்டத்திற்கு 4.48 கோடி ரூபாய் மதிப்பீடு போடப்பட்டது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் பலமுறை முறையிட்டிருக்கிறேன். அந்தத் திட்டத்தை இரத்து செய்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை மீண்டும் தொடர வேண்டுமென்று வலியுறுத்தி, அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். மற்ற கோரிக்கைகளை நான் படித்ததாகப் பதிவு செய்து கொள்ளும்படி அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விரிவான காப்பீடு திட்டம், சிறப்பு அம்சங்களுடன், 2017 முதல் ஒரு குடும்பத்திற்கு வழங்கப்பட்ட காப்பீட்டுத் தொகை ரூ.2 இலட்சமாக இருந்ததை, அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ரூ.5 இலட்சமாக உயர்த்தி வழங்கினார்கள். இதன்மூலம் 1,450 நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆறு மாதங்களுக்கு மேலாக மாநிலத்தில் வசிக்கும் கட்டுமானத் தொழிலாளர்கள் உட்பட புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கும், மாநில அரசால் அனாதைகள் என்று வரையறுக்கப்பட்டுள்ளவர்களுக்கும் காப்பீட்டு அட்டை வழங்கியவர், என் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் முதன்முறையாக Medical Services Recruitment Board (MRB) மூலம்–மருத்துவப் பணியாளர்கள் தேர்வு வாரியத்தின்

மூலமாக 7,629 மருத்துவர்கள், 18,846 செவிலியர்கள் உட்பட 31,244 பணியாளர்களைப் பணியில் அமர்த்தி அழகு பார்த்தது, எங்களுடைய அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய அரசு என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் 800 மருத்துவ பட்டப் படிப்பு, 1,131 மருத்துவ பட்ட மேற்படிப்பு, 176 உயர் சிகிச்சை பட்ட மேற்படிப்பு இடங்கள் தொடங்கப்பட்டன. IRT Perundurai Medical College மற்றும் செவிலியர் பயிற்சிப் பள்ளியினை 2019-2020 ஆம் ஆண்டு அரசு மருத்துவக் கல்லூரியாக உருவாக்கியவர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். கடந்த நான்கு ஆண்டுகளில், அண்ணன் எடப்பாடியார் ஆட்சியில் 855 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 56 CT Scan, 22 MRI Scan, 18 Cath Lab, 509 Dialysis machines, 9 Linear Accelerator, 3 PET CT Scan, 15 Cobalt therapy machines மற்றும் 3,427 Ventilators வழங்கிய அரசு அண்ணன் எடப்பாடியார் அரசு.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மாவின் ஆட்சிக் காலத்தில், கடந்த பத்தாண்டுகளில் 254 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் 221.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டன. ஆனால், இந்த இரண்டு ஆண்டுகளில் எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் துவங்கப்பட்டன என்பதை அண்ணன் அவர்கள் பதிலுரையில் தெரிவிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 166 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கை வசதிகள், Scan வசதி மற்றும் அறுவை சிகிச்சை வசதிகளுடன் 198.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டன. மாநில நிதியிலிருந்து 3270.91 கோடி ரூபாயில் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை உட்கட்டமைப்பு வசதிகளைச் செய்வதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. National Health Mission (NHM) என்ற திட்டத்தின் மூலமாக மருத்துவ உபகரணங்களுக்காக 521.94 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தது, அண்ணன் எடப்பாடியார் அரசு.

நடமாடும் மருத்துவமனை திட்டத்தின்படி 16,82,979 முகாம்கள் நடத்தப்பட்டன. 12,00,62,809 பேர் பயனடைந்துள்ளார்கள்.

மாண்புமிகு அம்மாவினுடைய அரசு பள்ளிச் சிறார்களுக்கு மருத்துவச் சேவைத் திட்டத்தை விரிவு செய்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் போதும், பத்து நிமிடங்கள் நீங்கள் உரையாற்றியிருக்கிறீர்கள். உரையை முடியுங்கள்.

திரு. வே. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரசவித்த தாய்மார்கள் வீட்டிற்குச் செல்ல ஏதுவாக '102' எண்ணை அழைத்தால் வாகன வசதிகள் ஏற்படுத்தித் தர, அம்மாவின் அரசு, அண்ணன் எடப்பாடியாரின் அரசு இத்திட்டத்தைச் செயல்படுத்தியது.

வளரிளம் பெண்களுக்கு sanitary napkin வழங்கும் திட்டம். இந்தத் திட்டம் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டம். கிராமப்புற பெண்கள், பிரசவித்த தாய்மார்கள், பெண் சிறை கைதிகள், மனநல மருத்துவமனையில் உள்ள பெண்கள் என இத்திட்டத்தின்மூலம் 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 32 இலட்சம் பேர் பயனடைந்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் 3-05-க்கு உரையை முடித்துவிடுங்கள், right.

திரு. வே. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா ஆரோக்கியத் திட்டம், முழு உடல் பரிசோதனைத் திட்டத்தின்கீழ், 501 இடங்களில் 60 இலட்சம் பேர் பயனடைந்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3-05

அம்மா முழு உடல் பரிசோதனைத் திட்டம். இந்தத் திட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்வு செய்யப்பட்ட நாங்களே ஓமந்தூரார் அரசு மருத்துவமனைக்குச் சென்றோம். அங்கு சென்று பார்த்தால், மக்கள் அனைவரும் queue-ல் நின்று கொண்டிருந்தார்கள். அந்த மருத்துவமனையின் பெயரை மாற்றியது மிகவும் வருத்தமாக இருக்கிறது. ஏற்கெனவே இருந்த பெயரே தொடர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, அம்மா ஊட்டச் சத்து பெட்டகம். Amma Maternal Nutrition Kit. குழந்தை பிறந்த பிறகு இந்த kit-ஐ வழங்குகிறீர்கள். இந்தக் காலதாமதத்தை சரி செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய முன்னாள் அமைச்சர் அவர்கள் ஒரு கேள்வி கேட்டபொழுது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்லவில்லை. Syrup, tablet, Injection, இதற்குப் பின்னால் treatment first-ஆ insurance approval first-ஆ என்று கேட்டார்கள். அதற்கான விளக்கத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனது பதிலுரையில் தெரிவிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி. பதிலுரை. (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

திரு. வே. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறை என்பது ஒரு மகத்தான துறை. அது மக்களைக் காக்கக்கூடிய ஒரு துறையாக இருக்க வேண்டும். சமீபத்தில் சென்னை, ராஜீவ் காந்தி மருத்துவமனையில் **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆதாரமில்லாமல் பேச வேண்டாம். அதெல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது. நன்றி. பதிலுரை. மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) மரியாதைக்கும், போற்றுதலுக்கும் உரிய மாண்புமிகு அவை முன்னவர் உள்ளிட்ட மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே. . .

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைத்தான் நான் முதலிலே பேசும்போது சொன்னேன். எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாண்புமிகு அமைச்சர்கள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சொல்கிற பதிலைக் கேட்டுக்கொள்வதற்குரிய பொறுமையும் இருக்காது, பெருந்தன்மையும் இருக்காது என்று நான் தொடக்கத்திலேயே சொன்னேன். அதை அவர்கள் நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுந்து நின்று, நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம் என்றெல்லாம் சொல்லியிருந்தார்கள். ஆனால், வெளிநடப்பு செய்வதும், வெளியேற்றம் செய்வதும், புறக்கணிப்பதும் பாராளுமன்ற ஜனநாயக முறையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று என்றாலும், அவர்கள் இங்கிருந்து வெளியில் செல்கிறபோது ஏதாவது ஒரு குறையைச் சொல்லிவிட்டு, அதற்காக நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம் என்று சொல்லிவிட்டுச் சென்றால்கூட பரவாயில்லை; ஆனால், தொடர்ச்சியாக 10 நாட்களாக மாண்புமிகு அமைச்சர்களின் பதிலுரைக்கு மட்டும் வெளியே செல்கிறார்கள் என்பது அநாகரிகமான செயல். அவையில் இருந்து அவர்கள் கேட்பதையெல்லாம் கேட்டுவிட்டு, பதில் சொல்லும்போது அதைக் கேட்டுக்கொள்ளாமல் போவது என்ற அந்தத் தன்மை அவர்களுக்கு மட்டுமே இருக்கிறது. எதிர்காலத்தில் இதிலிருந்து அவர்கள் கொஞ்சம் மாறுபட வேண்டும். வணக்கத்திற்குரிய நம்முடைய. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரை முடிந்த பிறகு பேச வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரை முடிந்த பிறகு உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) சரி, என்னவென்று சொல்லுங்கள்.

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஏன் வெளியே போகிறார்கள் என்றும் தெரியவில்லை, ஏன் உள்ளே வருகிறார்கள் என்றும் தெரியவில்லை. இது மிகவும் வேடிக்கையாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) பேசியது போதும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசட்டும்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோழமைக் கட்சிகளைச் சேர்ந்த மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர்களே, உங்கள் அத்துணை பேருக்கும் முதலில் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும்

தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மிக, மிகச் சாதாரணமான, மிகவும் பிற்படுத்தப்பட்ட குடும்பத்தில் பிறந்த எனக்கு தொடர்ந்து மூன்றாவது முறையும் இந்தத் துறையில் பேசுவதற்கான வாய்ப்பளித்த வணக்கத்திற்குரிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மானியக் கோரிக்கையின்போது எந்தத் துறையின் மாண்புமிகு அமைச்சரானாலும், அன்று காலை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் வாழ்த்து பெறச் சென்றாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், என்னை நீங்கள் புகழ்ந்து பேசக் கூடாது என்ற ஓர் அறிவுறுத்தலைச் சொல்கிறார்கள். தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றில் வேறு எந்தவொரு முதலமைச்சரும் இதுவரை கடைப்பிடிக்காத ஓர் அணுகுமுறை. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள், இந்த விஷயத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்வதை யாரும் கேட்பதில்லை என்று சொல்கிறார்கள். நான் நிச்சயமாகக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை நான் புகழ்ந்து பேசப்போவதில்லை. அதே நேரத்தில், இந்தத் துறையில் அவர்கள் செய்திருக்கின்ற சிறு, சிறு செயல்களை, நெஞ்சை உலுக்கும் செயல்கள் ஒன்று, இரண்டினைச் சொல்லிவிட்டு (மேசையைத் தட்டும் ஒலி) எனது உரையைத் தொடங்க எண்ணுகின்றேன்.

பிற்பகல் 3-10

தென்காசியைச் சேர்ந்த இசக்கியம்மாள் என்ற 8 வயதுடைய ஒரு குழந்தை துணிகளை வெளுக்கிற திரவத்தைக் குடித்துவிடுகிறது. அதைக் குடித்தவுடன் தொண்டையெல்லாம் எரிந்து, புண்ணாகி, அந்தக் குழந்தையால் சாப்பிட முடியவில்லை; தண்ணீர்கூட பருக முடியவில்லை. 12, 13 கிலோ எடை இருந்த அந்தக் குழந்தை 4 கிலோ அளவிற்குக் குறைந்து, மிக, மிக மோசமான உடல் நிலையில் இருந்த அந்தச் செய்தி WhatsApp-ல், சமூக வலைதளங்களில் பெரிய அளவில் பரவுகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சமூக வலைதளங்களில் வந்த அந்தச் செய்தியைப் பார்த்து, எங்களை நேரில் அழைத்து, தென்காசியிலிருந்து அந்தக் குழந்தையை உடனடியாக இங்கே வரவழைத்து ஏதாவது சிகிச்சை அளிக்கலாம் என்று அறிவுறுத்தினார்கள். அந்த வகையில், நாங்கள் அந்தக் குழந்தையை சென்னைக்கு வரவழைத்து, எழும்பூர்

குழந்தைகள் நல மருத்துவமனையில் அனுமதிக்கச் செய்து, 6 மாத காலம் அந்தக் குழந்தைக்கு அளித்த மிகச் சிறப்பான தீவிர சிகிச்சையால், அந்தக் குழந்தை உடல் நலம் தேறி மீண்டும் 13 கிலோ, 14 கிலோ எடையோடு இன்றைக்கு பள்ளியில் பயின்று கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் குழந்தை நலம் பெற்றவுடன் மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறைக்கு அழைத்துச் சென்றோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் யாரும் எதிர்பார்க்காத வகையில் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 5 இலட்சம் ரூபாயை அந்தக் குழந்தைக்குத் தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) ஏழ்மையான நிலையிலிருக்கிற அந்தக் குடும்பத்தாருக்கு மிகப் பெரிய அளவிலான ஆறுதலாக இருந்தார்கள்.

இது ஒன்று மட்டுமல்ல, சேலத்தில் ஜனனி என்கின்ற பெண் குழந்தை. அந்த ஜனனி என்கின்ற பெண் குழந்தைக்கு கல்லீரல், சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்திருக்கிறார்கள். கோவையில் இருக்கின்ற ஒரு தனியார் மருத்துவமனையில் 20 இலட்சம் ரூபாய், 22 இலட்சம் ரூபாய் செலவில் அறுவை சிகிச்சை செய்ததற்குப் பிறகும் அந்தக் குழந்தை நலம் பெறவில்லை. இதுமாதிரியான சூழ்நிலை வந்தவுடன் அந்தக் குழந்தையின் தந்தை, அந்தக் குழந்தையின் தாயை விட்டுப் பிரிந்து போய்விட்டார். அந்தத் தாய், அந்தக் குழந்தையை வைத்துக்கொண்டு மிக அநாதரவான நிலையில், நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு அந்தக் குழந்தையின் வாயிலாக சமூக வலைதளத்தில் ஒரு செய்தியை வெளியிடுகிறார்கள். அந்தக் குழந்தையே பேசுகிறது. ‘எனக்கு சிறுநீரகமும், கல்லீரலும் மாற்றப்பட்டது. அந்த treatment சரியாக இல்லாததன் காரணமாக தொடர்ச்சியாக வாரத்திற்கு 2 முறை நான் dialysis செய்து கொண்டிருக்கிறேன். மிகுந்த வலியால் அவதியுற்றுக் கொண்டிருக்கிறேன். என்னைப் பார்ப்பவர்களெல்லாம் ‘நீ சீக்கிரம் செத்துவிடுவாய்’ என்று சொல்கிறார்கள். ரொம்ப பயமாக இருக்கிறது uncle. என்னைக் காப்பாற்றுங்கள்’ என்று சொல்லி, Social Media-வில் ஒரு செய்தி போடுகிறது. இந்தச் செய்தியைப் பார்த்தவுடன் மாண்புமிகு முதல்வர் அவர்கள், எங்களை அழைத்து, சேலத்திலிருந்து அவர்களை இங்கு வரவழைத்து சிகிச்சை அளிக்க உத்தரவிட்டார்கள். சேலத்திலிருந்து அந்தக் குழந்தை இங்கே வந்தது. Stanley Hospital-ல் அந்தக் குழந்தை சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு, dialysis செய்துகொண்டிருக்கிறது. திடீரென்று ஒருநாள் அந்தக் குழந்தை எங்கேயிருக்கிறது என்று கேட்டார். Stanley Hospital-ல் இப்போது dialysis செய்துகொண்டிருக்கிறோம்

என்று சொன்னோம். வாருங்கள், Stanley Hospital-க்குப் போகலாம் என்று சொல்லி, அலுவலகத்திலிருந்து நேராக Stanley hospital-க்கு வந்தார். இதுவரை எந்த முதலமைச்சரும் செய்யாத காரியம். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, Stanley Hospital-ல் treatment எல்லாம் முடிந்தபிறகு அந்த அம்மா, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில், 'Stanley Hospital-லிலும், ஓமந்தூரார் Hospital-லிலும் நல்ல சிகிச்சை இருந்தாலும் எங்களிடம் எல்லோரும் சொல்வது—Dr. Rela, கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சையில் மிகச் சிறந்த மருத்துவ நிபுணர் என்று சொல்கிறார்கள். அவரிடத்தில் சொல்லி, என்னுடைய குழந்தையைக் காப்பாற்றச் சொல்லுங்களேன்' என்று கோரிக்கை வைக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள், உடனடியாக Dr. Rela-விடம் சொல்லச் சொன்னார். இன்றைக்கு ஜனனி என்கிற அந்தக் குழந்தை (மேசையைத் தட்டும் ஒலி) Rela Hospital-ல் கடந்த ஓராண்டு காலமாக சிகிச்சை பெற்று வருகிறது.

இன்னொன்று, கோடம்பாக்கத்தில் சிந்து என்கின்ற ஒரு குழந்தை 2 ஆண்டுகளுக்கு முன்னால், 2-வது மாடியிலிருந்து கீழே தவறி விழுந்து, முதுகு தண்டுவடம் உடைந்து தாடையெல்லாம் சிதைந்து, அந்தக் குழந்தையின் தந்தை என்ன செய்வாரென்றால், school-க்குப் போகும்போது அந்தக் குழந்தையைக் கையில் தூக்கிக் கொண்டு போகிறார். அதை ஒரு social media-வில் எடுத்துப் போட்டார்கள். Social media-வில் அதைப் பார்த்தவுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களைக் கூப்பிட்டார், 'இந்த குழந்தையைப் பாருங்கள், அந்தக் குழந்தைக்கு 12, 13 வயதிருக்கும். அந்தக் குழந்தையின் அப்பா, அந்தக் குழந்தையை பள்ளிக்குத் தூக்கிக் கொண்டு போகிறார். அதற்கு ஏதாவது செய்ய முடியுமா பாருங்கள்' என்று சொன்னார். உடனடியாக நான் அந்தக் குழந்தையின் வீட்டிற்குச் சென்றேன். அந்தக் குழந்தையின் தந்தை, சாதாரணமான டீ வியாபாரம் செய்பவர். Can-ல் tea எடுத்துக்கொண்டு போய் விற்பவர். அவரிடம் கேட்டவுடன், 'நாங்கள் எவ்வளவோ treatment எடுத்துவிட்டோம். சரி செய்ய முடியவில்லை' என்று சொன்னார்கள். உடனடியாக அவர்களை அழைத்து வந்து, ஓமந்தூரார் மருத்துவமனையில் சேர்த்து அந்தக் குழந்தைக்கு treatment கொடுத்தோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கடமை—social media-வில் பார்த்தார், அதோடு விட்டுவிட்டிருக்கலாம்—ஆனால், முதலமைச்சர் அவர்கள் என்ன செய்தார்களென்றால், நேராக ஓமந்தூரார் மருத்துவமனைக்கு வந்து,

2023 ஏப்ரல் 18] [திரு. மா. சுப்பிரமணியன்]

treatment எடுக்கின்ற குழந்தையைப் பார்த்து, ஆறுதல் சொல்லி, சிறப்பான சிகிச்சைகள் அளிக்க வலியுறுத்தினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடுமட்டுமல்ல, குழந்தையின் தந்தை அங்கேயே இருந்து குழந்தையைப் பாதுகாத்துக்கொள்வதற்கு ஏதுவாக, 'இதுவரை நீ சைக்கிளில் டீ எடுத்துக்கொண்டு போய்தானே இந்தக் குழந்தையைக் காப்பாற்றிக்கொண்டிருந்தாய்? ஓமந்தூரார் மருத்துவமனையிலேயே டீ கடை வைத்து பிழைத்துக்கொள்' என்று, டீ கடை வைத்துக்கொள்வதற்கு அனுமதி கொடுத்தார். இன்றைக்கு அந்தக் குழந்தை கல்வியைத் தொடர்கிறது. அந்தளவிற்கு சிகிச்சை அளித்து அந்தக் குழந்தையைக் காப்பாற்றிய பெருமை, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னொரு மிகமிக வருத்தமான ஒரு சம்பவம். கிருஷ்ணகிரியைச் சேர்ந்த சூரியகுமார் என்கின்ற 9 வயது சிறுவன், sanitizer-ஐ எடுத்து விளையாடும்போது அடுப்பில்பட்டு burst ஆகிவிட்டது. Burst ஆனதும், அவன் உடல் முழுவதும் எரிந்துபோய்விட்டது. Abdomen-க்குக் கீழே முழுமையாக எரிந்து சிறுநீரகங்கள் எல்லாம் செயலிழக்கிற சூழ்நிலை. அதற்கு 2, 3 மாதங்கள் எங்கெங்கேயோ treatment எடுக்கிறார்கள். அந்தச் சிறுவனின் பெற்றோர்கள் விவசாயக் கூலி தொழிலாளிகள். எங்கேயும் சரியாகாததால் அந்தக் குழந்தையை அதன் தாய் கையில் எடுத்துக்கொண்டு தருமபுரி Collector office-க்குப்போய் Collector-இடம், 'என் குழந்தையை கருணைக் கொலை செய்துவிடுங்கள். இது நன்றாக ஆகாது என்று சொல்கிறார்கள். கருணைக் கொலை செய்துவிடுங்கள்' என்று ஒரு மனு கொடுக்கிறார்கள். இந்தச் செய்தியை, பத்திரிகைகளிலும், ஊடகங்களிலும் பார்த்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உடனடியாக அந்த சூரியகுமாருக்கு சிகிச்சையளிக்க ஏதாவது நடவடிக்கை எடுங்கள் என்று சொன்னார்கள். அந்தக் குழந்தையை இங்கே வரவழைத்து 8 மாத காலம் இங்கேயே தங்கவைத்து, 6 plastic surgery-க்கள் செய்து, அந்தக் குழந்தை நன்றாக உடல் நலம்பெற்று, கடந்த ஒரு மாதத்திற்கு முன்னால் மீண்டும் தருமபுரிக்குச் சென்று பள்ளியில் பயின்று கொண்டிருக்கிறான். (மேசையைத் தட்டும் ஒலி) இது மிகப் பெரிய சாதனை.

பிற்பகல் 3–15

மற்றொன்று. இது மரியாதைக்குரிய மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. சேகர்பாபு அவர்களுக்கும் தெரியும். அஸ்வினி என்ற குழந்தை. மரியாதைக்குரிய

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுடைய தொகுதியில் ஒரு நிகழ்ச்சிக்காக சென்ற மாண்புமிகு முதல்வர் அவர்களை, அஸ்வினி என்கிற குழந்தை, ஒரு compound wall ஓரமாக நின்று, 'தாத்தா, bye bye' என்று சொன்னது. 'Thatha bye bye' என்று அந்தக் குழந்தை சொன்ன வீடியோ பெரிய viral ஆனது. அந்தக் குழந்தைக்கு ஒரு பெரிய நோய். என்ன நோய் என்றால், இரத்தத்தில் இயற்கையாகவே அத்தியாவசியத் தேவையாக இருக்க வேண்டிய புரதச்சத்து இல்லாததால், எப்போதாவது அந்தக் குழந்தைக்கு அடிபட்டுவிட்டால், ஒட்டுமொத்த இரத்தமும் உடம்பிலிருந்து வெளியே வந்துவிடும். அதற்கு உடனடியாக ரூ.50,000/- செலவு செய்து ஊசி ஒன்றினைப் போட வேண்டும். அந்த மாதிரியான ஓர் அரியவகை நோய். அந்தக் குழந்தை, 'தாத்தா, bye bye' என்று சொல்லிவிட்டு, அடுத்தநாள் எல்லா social media-களிலும் அந்தக் குழந்தையின் நோய்த்தன்மை குறித்து அதன் பெற்றோர்கள் விளக்குகிறார்கள். இதைப் பார்த்தவுடனேயே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அந்தக் குழந்தையை வீட்டிற்கு வரவழைத்து, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் special treatment கொடுக்கச் செய்து, அந்த 50,000/- ரூபாய் ஊசியை இங்கே stock வைத்திருங்கள், அந்தக் குழந்தை எப்போது வந்தாலும் சிகிச்சை அளியுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே அந்தக் குழந்தையை வீட்டிற்கு வரவழைத்தார்கள். இதிலிருந்து நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், நான் தற்போது சொன்ன அத்தனை பேருக்குமே 2024-ல் ஓட்டுப்போடும் வயது கிடையாது. இவர்கள் யாரும் MP election-ல் தி.மு.க.-விற்கு ஓட்டுப்போடப்போவதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) 2026-ல் நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலிலும் ஓட்டுப் போடப்போவதில்லை. ஆனாலும், வாக்குரிமையே இல்லாத சிறுவர்களையும் இவ்வளவு அக்கறையோடு காப்பாற்றிய அவரின் மனிதாபிமானத்தை, அந்த மனிதநேயத்தை இந்த நேரத்தில் வணங்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தப் பேரவையில், பொது நிதிநிலை அறிக்கை மற்றும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் தாக்கல் செய்த வேளாண்மை நிதிநிலை அறிக்கை ஆகிய இரண்டு நிதிநிலை அறிக்கைகளைத்தான் பார்த்தோம். ஆனால், நம்முடைய மாண்புமிகு இளைஞர் நலன்

2023 ஏப்ரல் 18] [திரு. மா. சுப்பிரமணியன்]

மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், மார்ச் 28 ஆம் தேதி ஓர் அறிக்கையை வாசித்தார்கள். மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் கடனுதவி குறித்து அளித்த பதில், தமிழ்நாட்டில், சற்றொப்ப 4 கோடி மகளிருக்கான ஒரு நிதிநிலை அறிக்கையாக இருந்தது. மகளிர் சுய உதவிக் குழுக்களுக்காகச் சொன்னது. கடந்த ஜனவரி மாதம் 11 ஆம் தேதி அளித்த நிதிநிலை அறிக்கை என்பது, ஏறத்தாழ 2 கோடி இளைஞர்களுக்கான ஒரு நிதிநிலை அறிக்கையாக இருந்தது. எனவே, மகளிருக்கும், இளைஞர்களுக்குமான இரு நிதிநிலை அறிக்கைகளை சொல்லாமலேயே ஒரு புதிய ஏற்பாடாகச் செய்து, மிகச் சிறப்பான வகையில், கருத்துகளை தமிழகத்தில் விதைத்திருக்கிற பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு திரு. உதயநிதி அவர்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் துயிலும் திக்குநோக்கி தண்டனிட்டு, என்னுடைய துறை சார்ந்த மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கு நான் பதிலளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நேற்றைக்கு ஒரு பிரபல தினசரி ஆங்கில நாளிதழ் வெளியிட்ட ஒரு பெரிய செய்தி. State Planning Commission *நடத்திய ஆய்வை பத்திரிகையில் அறிக்கையாகக் கொடுத்திருந்தார்கள். அதன் தலைப்பைப் பார்த்தீர்களென்றால்,* 'Makkalai Thedi Maruthuvam has helped in early detection of health issues, finds Planning Commission survey' *என்று இருந்தது. அதில், 'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டம் குறித்து சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் ஓராண்டில் 6,503 பேரிடம்,* survey *செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு இருக்கிற நோய்த் தன்மையை, அதிலும் குறிப்பாக, நீரிழிவு நோய் கண்டறியப்பட்டுள்ளது. அவர்கள்* survey *செய்யும்போது, 73.7% பேருக்கு நீரிழிவு நோய் இருப்பது கண்டறியப்பட்டிருக்கிறது. 'மக்களைத் தேடி மருத்துவம்' என்ற திட்டத்தின்மூலம் 71 சதவிகிதம் பேருக்கு அந்த நோய் இருப்பது தற்போது கண்டறியப்பட்டதாக மிகச் சிறப்பான செய்தியை வெளியிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

இங்கே பேசியவர்களெல்லாம் சொன்னதுபோன்று... (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோன்று சர்க்கரை நோய், இரத்த அழுத்தம், Palliative care *என்கின்ற மரணவலி தணிப்பு சிகிச்சை,* Physiotherapy *என்கின்ற இயன்முறை சிகிச்சை,*

Dialysis போன்ற 5 வகையான நோய்களுக்கு வீடுகளுக்கே தேடிச் சென்று மருத்துவம் பார்ப்பது, மருந்துகள் தருவது என்கின்ற திட்டத்தை, 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5 ஆம் தேதி கிருஷ்ணகிரி மாவட்டம், சாமனப்பள்ளியில் சரோஜா என்கின்ற பெண்மணிக்கு மருந்து தந்து, அந்தத் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். நமது மாநிலம், இந்தியாவிற்கு மட்டுமல்ல, உலகிற்கே முன்னோடி. இங்கிருந்து யார் வேண்டுமானாலும் சவால் விட்டு எங்கு வேண்டுமானாலும் சென்று பார்க்கலாம். அது எவ்வளவு பெரிய நாடாக இருந்தாலும், மருத்துவமனைக்குப் போனால்தான் மருத்துவம் கிடைக்கும். ஆனால், வீடுகளுக்கே சென்று மருத்துவம் பார்ப்பதென்பது தமிழ்நாட்டில் மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அத்தகைய மிகச் சிறப்பான ஒரு திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அன்றைக்குத் தொடங்கி வைத்தார்கள்.

பிற்பகல் 3-20

திருமதி சரோஜாவிற்கு முதலாவது பயனாளியாகத் தொடங்கிவைத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சிட்லபாக்கத்தில் 50 இலட்சமாவது பயனாளிக்குரிய மருந்துப் பெட்டகத்தைத் தந்தார். ஒரு கோடியே ஒன்றாவது பயனாளி என்கின்ற வகையில் திருச்சி, சன்னாசிபட்டியைச் சேர்ந்த மீனாட்சி என்கின்ற சகோதரிக்கு அந்தத் திட்டத்தைத் தந்தார். மக்களைத் தேடி மருத்துவம் என்கின்ற திட்டம் இதுவரை எவ்வளவு பேருக்குப் பயன்பட்டிருக்கிறது என்றால், ஒரு கோடியே 47 ஆயிரத்து 475 பேருக்கு (மேசையைத் தட்டும் ஒலி) பயன்பட்டிருக்கிறது. Repeated services என்கின்ற வகையில், தொடர்ச்சியான மருந்துகள் தரப்பட்டுக் கொண்டிருப்பவர்களுடைய எண்ணிக்கை 2 கோடியே 53 இலட்சத்து 20 ஆயிரத்து 482 பேர். இவ்வாறாக, இன்றைக்கு அந்த மருத்துவம் செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. மக்களைத் தேடி மருத்துவம் என்கின்ற திட்டத்தின் வாயிலாக இன்னும் 2, 3 ஆண்டுகள் கழித்து கணக்கெடுத்துப் பார்க்கும்போது இந்திய அளவில் தொற்றா நோய்களினால் இறப்பு என்பது இல்லாத நிலை (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு தமிழகத்தில் உருவாக்கப்பட்டிருக்கிறது.

அதேபோல், இங்கே பேசியவர்கள் 'இன்னுயிர் காப்போம்– நம்மைக் காக்கும் 48' திட்டம் குறித்து சொன்னார்கள். 'இன்னுயிர்

2023 ஏப்ரல் 18] [*திரு. மா. சுப்பிரமணியன்*]

காப்போம்–நம்மைக் காக்கும் 48' என்கின்ற அந்த மகத்தான திட்டத்தை 2021, டிசம்பர் திங்கள் 18 ஆம் தேதி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மேல்மருவத்தூரில் தொடங்கிவைத்தார்கள். தமிழ்நாட்டில் எங்கேயெல்லாம் விபத்துகள் நேர்கின்றனவோ, அங்கேயெல்லாம் விபத்துக்குள்ளானவர்களைப் பாதுகாக்கிற ஓர் அற்புதமான திட்டம் ஆகும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், சுமார் 500 இடங்களில் red spot *என்று சொல்லப்படுகிற வகையில், அடிக்கடி விபத்துகள் நேர்கின்ற இடங்கள் கண்டறியப்பட்டு, அதையொட்டி இருக்கிற ஏறத்தாழ 670 மருத்துவமனைகளில் இன்றைக்கு அந்தத் திட்டம் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்தத் திட்டத்தின்மூலம் இதுவரை எவ்வளவு உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கின்றன என்றால் ஒரு இலட்சத்து 55 ஆயிரத்து 791 பேர் (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வளவு பேர் இத்திட்டத்தின்மூலம் இதுவரை பயன்பெற்றிருக்கின்றனர். முதல் 48 மணி நேரத்தில் அரசாங்கத்தின் சார்பில் ஒரு இலட்சம் ரூபாய் அவர்களுக்கு உதவித் தொகை தந்து, எந்த நாட்டினைச் சேர்ந்தவராக இருந்தாலும், எந்த மாநிலத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், எந்த மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், அவர் மனிதராக இருந்தால் போதும் என்கின்ற நிலையில் அவர்களுக்கு இந்த மருத்துவம் மிகச் சிறப்பாக செய்யப்பட்டு, இதுவரை இந்தத் திட்டத்திற்காக இந்த அரசு செலவிட்டிருக்கிற தொகை ரூ.137 கோடியே 37 இலட்சம். (மேசையைத் தட்டும் ஒலி) ரூ.137 கோடியே 37 இலட்சம் செலவில் ஒரு இலட்சத்து 55 ஆயிரத்து 791 பேருக்கு இன்றைக்கு சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கிறது.*

1999 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அன்றைக்கு முதலமைச்சராக இருந்தபோது, 'வருமுன் காப்போம்' என்கின்ற ஒரு மகத்தான திட்டத்தைக் கொண்டு வந்தார். அந்த 'வருமுன் காப்போம்' திட்டத்தின்படி, 17 சிறப்பு துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் கிராமங்கள்தோறும் சென்று அல்லது எல்லா இடங்களுக்கும் சென்று முகாம்கள் நடத்தி, மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்வார்கள். அந்த மாதிரியான முகாம்களை நடத்துகின்ற அந்தத் திட்டத்தை 1999 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்தார். அதற்குப் பிறகு, ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு, 2001 ஆம் ஆண்டிலிருந்து 2006 ஆம் ஆண்டு வரை அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அந்தத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. 2006 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரை தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மீண்டும்

[திரு. மா. சுப்பிரமணியன்] [2023 ஏப்ரல் 18

அந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. அதற்குப் பின்னர், 2011 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக 10 ஆண்டு காலம் அ.தி.மு.க. ஆட்சியில் இருந்தவரை அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தாமல் விட்டுவிட்டார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், 'வருமுன் காப்போம்' என்கின்ற திட்டத்தை உடனடியாக மீண்டும் செயல்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டுமென்று சொல்லி, கலைஞரின் வருமுன் காப்போம் என்கின்ற அந்தத் திட்டத்தை நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20 ஆம் தேதி சேலம் மாவட்டம், வாழப்பாடியில் தொடங்கினார்கள்; அந்தத் திட்டத்தைத் தொடங்கும்போது, ஓர் ஒன்றியத்திற்கு 3 முகாம்கள் நடத்தப்படும் என்றும், ஒரு மாநகராட்சிக்கு 4 முகாம்கள் நடத்தப்படும் என்றும், சென்னையைப் பொறுத்தவரை, 15 முகாம்கள் நடத்தப்படும் என்றும் ஆண்டொன்றுக்கு 1,250 முகாம்கள் நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. ஆனால், இதுவரை ஓராண்டில் நடத்தப்பட்ட மருத்துவ முகாம்களின் எண்ணிக்கை 1,532. 1,532 மருத்துவ முகாம்கள் (மேசையைத் தட்டும் ஒலி) நடத்தப்பட்டிருக்கின்றன. சொன்னது, 1,250 முகாம்கள், ஆனால் 1,532 முகாம்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. இந்த முகாம்களின்மூலம் பயன்பெற்றிருப்பவர்களின் எண்ணிக்கை 15 இலட்சத்து 8 ஆயிரத்து 460 பேர். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3–25

11 மருத்துவக் கல்லூரிகளை 2022 ஜனவரி திங்கள் 12 ஆம் தேதி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் மாண்புமிகு ஒன்றியப் பிரதமர் அவர்கள் திறந்து வைத்தார்கள். இந்த 11 மருத்துவக் கல்லூரிகளிலும் மருத்துவமனைகளின் கட்டமைப்பை உடனடியாகக் கட்டி முடிப்பதற்கு நிதியொதுக்கீடு தந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு மருத்துவக் கல்லூரியிலும் 500, 700 என்ற அளவில் படுக்கை வசதிகளுடன்கூடிய மருத்துவமனைகளில் மருத்துவச் சேவைகளைத் தொடங்கி வைக்க இன்றைக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த வகையில், திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த மரியாதைக்குரிய பால்வளத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. சா.மு. நாசர் அவர்களுடன் இணைந்து, திருவள்ளூர் மாவட்டத்தில் 500 படுக்கைகளுடன்கூடிய ஒரு மருத்துவச் சேவை தொடங்கி வைக்கப்பட்டது. மரியாதைக்குரிய கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் மாண்புமிகு

2023 ஏப்ரல் 18] [திரு. மா. சுப்பிரமணியன்]

திரு. ஆர். காந்தி அவர்களுடன் இணைந்து, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 700 படுக்கைகளுடன்கூடிய ஒரு மருத்துவச் சேவை தொடங்கி வைக்கப்பட்டது. பெருமதிப்பிற்குரிய வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களும் பங்கேற்று, விருதுநகர் மாவட்டத்தில் 500 படுக்கைகளுடன்கூடிய ஒரு மருத்துவச் சேவையைத் தொடங்கி வைத்தார்கள். மதிப்பிற்குரிய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடன் இணைந்து, கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 700 படுக்கைகளுடன்கூடிய மிகப் பிரம்மாண்டமான ஒரு மருத்துவச் சேவையைத் தொடங்கி வைத்தோம். பெருமதிப்பிற்குரிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞரணி செயலாளர் சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியின் செல்லப்பிள்ளை மாண்புமிகு திரு. உதயநிதி அவர்களுடன் இணைந்து, அரியலூர் மாவட்டத்தில் 700 படுக்கைகளுடன்கூடிய மருத்துவச் சேவை அண்மையில் தொடங்கி வைக்கப்பட்டது. அப்போது, அவருடைய கனவான அனிதாவின் பெயரில்ஓர் அரங்கமும் அங்கே திறந்து வைக்கப்பட்டது.(மேசையைத் தட்டும் ஒலி) அத்துடன் கடந்த வாரம் பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுடன் இணைந்து, திண்டுக்கல்லில் 500 படுக்கைகளுடன்கூடிய மருத்துவச் சேவை தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. இன்னமும், நீலகிரி, நாகப்பட்டினம், இராமநாதபுரம், திருப்பூர் மற்றும் நாமக்கல் ஆகிய 5 மாவட்டங்களில் மருத்துவச் சேவை தொடங்கப்பட வேண்டும். 500 படுக்கைகளுடன்கூடிய இந்த மருத்துவச் சேவை இன்னும் இரண்டு மாத காலத்தில் 5 மாவட்டங்களிலும் பயன்பாட்டிற்கு வரவிருக்கின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசியவர்களெல்லாம், ஏதோ அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மருத்துவக் கட்டமைப்புகள் மிகப்பெரிய அளவில் உயர்ந்துவிட்டதாக இங்கே தம்பட்டம் அடித்துக் கொண்டார்கள். இந்த ஆட்சி பொறுப்பேற்கிற வரை, தமிழ்நாட்டில், District Headquarters Hospital என்று சொல்லக்கூடிய மாவட்ட அரசுத் தலைமை மருத்துவமனைகளின் எண்ணிக்கை வெறும் 18 ஆக இருந்தது. ஆனால், நம்முடைய மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள், கடந்த ஆண்டு மட்டும், District Headquarters Hospital என்கின்ற வகையில், 19 மருத்துவமனைகளுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) District

Headquarters Hospital-க்கு இணையாக தரமுயர்த்துவதற்காக மேலும் 6 மருத்துவமனைகளுக்கும் என ஒட்டுமொத்தமாக 25 மருத்துவமனைகளுக்கு உத்தரவிட்டு, அதற்கான செலவு என்கின்ற வகையில் 1,018 கோடியே 85 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்து, 28-2-2022 அன்று அந்தப் பணியினைத் தொடங்கி வைத்தார்கள். தமிழக வரலாற்றில், மருத்துவத் துறையில் ஒரு மிகப் பெரிய புரட்சியாக, தமிழ்நாட்டில் புதிதாக 25 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளுக்கான பணிகள் பிரமாண்டமாகத் தொடங்கி வைக்கப்பட்டு, அப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

அதேபோன்று, இங்கே பேசிய அ.தி.மு.க.-வைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்களை ஏற்படுத்தினோம் என்று சொல்ல வேண்டும் என்று கூறினார். ஆரம்ப சுகாதார நிலையங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தவரை, தமிழ்நாட்டில் இப்போதிருக்கிற ஆரம்ப சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை 2,286 ஆகும். இந்த 2,286 ஆரம்ப சுகாதார நிலையங்கள் என்பது, ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகிய இரண்டும் ஆகும். இந்த 2,286 ஆரம்ப சுகாதார நிலையங்களும், இந்த மருத்துவத் துறை எப்பொழுது உருவானதோ, அன்றிலிருந்து தொடர்ந்து உள்ளவையாகும். ஆனால், கடந்த 4 ஆண்டுகளில் அ.தி.மு.க. ஆட்சியில் ஒரேயொரு ஆரம்ப சுகாதார நிலையம்கூட கொண்டு வரப்படவில்லை. நம்முடைய மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன், புதிதாக 50 ஆரம்ப சுகாதார நிலையங்கள் வேண்டும் என்கின்ற கோரிக்கையை ஒன்றிய அரசிடம் வைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில், 25 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 25 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவற்றைக் கேட்டுப்பெற்றார்கள். அவ்வாறு கேட்டுப்பெற்றதன் விளைவாக, ஒவ்வோர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் தலா 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் என்கின்ற மதிப்பீட்டில், 50 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மொத்தம் ரூபாய் 60 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 50 ஆரம்ப சுகாதார நிலையங்களும் மிக விரைவில் பயன்பாட்டிற்கு வரவிருக்கின்றன.

நகர்ப்புற நலவாழ்வு மையம் குறித்துப் பேசிய சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்,

2023 ஏப்ரல் 18] [திரு. மா. சுப்பிரமணியன்]

அதனை அம்மா கிளினிக்குடன் ஒப்பிட்டுப் பேசினார்கள். இந்த நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் தமிழ்நாட்டிற்குள் எப்படி வந்தன என்பதை அனைவருமே நன்றாக அறிவார்கள். மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்றிருந்தபோது, அங்கே Aam Aadmi Mohalla Clinic என்று சொல்லக்கூடிய ஒரு மருத்துவமனையை நேரடியாகப் பார்த்து, அதேபோன்ற ஒரு மருத்துவக் கட்டமைப்பை இங்கே ஏற்படுத்திட வேண்டுமென்று, 2022 மே திங்கள் 7 ஆம் தேதி விதி 110-ன்கீழ் ஓர் அறிவிப்பை வெளியிட்டார்கள். தி.மு.க. அரசின் சார்பில் எப்பொழுதெல்லாம் விதி 110-ன்கீழ் அறிவிப்புகள் வெளியிடப்படுகின்றனவோ, அவையெல்லாம் திட்டங்களாகச் செயலாக்கப்படுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தைப் பொறுத்தவரை, விதி 110-ன்கீழ் வெளியிடப்படும் அறிவிப்புகளெல்லாம் மக்களுக்கு 111 ஆகவே தொடர்ந்து மாறியிருக்கின்றன என்பதை நாம் அனைவருமே நன்றாக அறிவோம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3-30

அந்த வகையில், மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள், 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்களை 21 மாநகராட்சிகளிலும், 63 நகராட்சிகளிலும் நாங்கள் செயல்படுத்துவோம் என்று கூறினார்கள். 21 மாநகராட்சிகளிலும், 63 நகராட்சிகளிலும் 708 மருத்துவமனைகளின் கட்டமைப்புக்கு மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களால் 532 கோடியே 91 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, தற்போது அதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மிக விரைவில் இன்னும் 10,15 நாட்களுக்குள் அதற்கான பணியாளர்களை நியமிக்கின்ற பணிகள் நடைபெற்று முடியவிருக்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கிற District Health Society என்கின்ற அமைப்புகள் மருத்துவர்களை, செவிலியர்களை, சுகாதார ஆய்வாளர்களை, உதவியாளர்களை, இப்படி ஒவ்வொரு மருத்துவமனைக்கும் நான்கு பணியிடங்கள் என்கின்ற வகையில் 708 மருத்துவமனைகளுக்கும் அந்தப் பணியாளர்களை நியமிக்கின்ற பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இன்னும் 10 அல்லது 15 நாட்களில் 500 மருத்துவமனைகள், ஒரே நாளில் தமிழ்நாட்டில் திறந்து வைக்கப்படவிருக்கின்றன என்கின்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, 'கலைஞர் காப்பீட்டுத் திட்டம்' கொண்டு வந்ததானாலும் சரி, '108 ஆம்புலன்ஸ் திட்டம்' தந்ததானாலும் சரி, 'வருமுன் காப்போம்' திட்டம் கொண்டு வந்ததானாலும் சரி, இவையெல்லாம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான் தொடங்கி நடைபெற்றிருக்கிறது என்பதை நாம் நன்றாக அறிவோம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில்தான், 2009 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 23 ஆம் தேதி கலைஞர் காப்பீட்டுத் திட்டம் நடைமுறைக்கு வந்தது. அன்றிலிருந்து இதுவரை 1,26,85,664 பேர் 11,576 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பயன்பெற்றிருக்கிறார்கள் என்றால் இதற்கு மூலம், இதற்குக் காரணம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் என்பதை இன்றைக்கு நாம் அனைவருமே நன்றாக அறிவோம்.

நம்முடைய மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையின் ஆரம்பத்தில் அறிவித்தார்கள்; இப்போது கிண்டியில் King Institute வளாகத்தில் நான்கரை ஏக்கர் நிலப்பரப்பில் மருத்துவமனை ஒன்று பிரம்மாண்டமாக அமைந்து கொண்டிருக்கிறது. 19 துறைகளுடன்கூடிய மருத்துவமனை; 15 operation theatre-களைக் கொண்டிருப்பது; ஆயிரம் படுக்கைகளுடன்கூடியது; 6,03,409 சதுர அடி பரப்பளவில் ground plus six floors என்கின்ற வகையில், தரை தளம் மற்றும் 6 தளங்களுடன்கூடிய ஒரு பிரம்மாண்ட மருத்துவமனை தயாராகிக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள், அந்த மருத்துவமனை கலைஞரின் பெயரால், கலைஞரின் நூற்றாண்டையொட்டி திறந்து வைக்கப்படவிருக்கிறது என்று சொன்னார்கள். அந்த மருத்துவமனைக்கு 'கலைஞர் நினைவு பன்னோக்கு மருத்துவமனை' என்று பெயரிடப்பட்டு திறந்து வைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

எனவே, தமிழக சட்டமன்றப் பேரவையின் வரலாற்றில் multi purpose hospital என்று சொல்லக்கூடியது ஒன்றே ஒன்றுதான் ஓமந்தூராரில் தற்போது இருக்கிறது. இன்னொன்று, கிண்டியில் 230 கோடி ரூபாய் செலவில் அமையவிருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதேபோல், '108 ஆம்புலன்ஸ்' என்கின்ற திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாட்டின் அன்றைய முதலமைச்சர் கலைஞர்

அவர்கள், 2008 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15 ஆம் தேதி தொடங்கி வைத்தார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளில் 2008 ஆம் ஆண்டு தொடங்கி வைத்தார்கள். தொடங்கி வைக்கிறபோது அந்த வாகனங்களின் எண்ணிக்கை வெறும் 20 ஆக இருந்தது. இன்றைக்கு படிப்படியாக அந்த வாகனங்களின் எண்ணிக்கை உயர்ந்து, 1,353 வாகனங்களுடன் '108 ஆம்புலன்ஸ் திட்டம்' தமிழ்நாட்டில் மிகப் பெரிய வாகனப் புரட்சியைச் செய்து கொண்டிருக்கிறது. அந்த ambulance வாகனங்களைப் பொறுத்தவரை, இன்றைக்கு நீண்ட நாட்களாக பழுதான வாகனங்களை மாற்றும் முயற்சியில், மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் பொறுப்புக்கு வந்தவுடன், இந்த 24 மாதங்களில் மட்டும் 293 புதிய வாகனங்களைத் தந்து, அதனை இன்றைக்கு தொடங்கி வைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 1,353 வாகனங்களில் 293 வாகனங்கள் மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களால் 102 கோடியே 22 இலட்சம் ரூபாய் செலவில் இன்றைக்கு புதிதாக வாங்கித் தரப்பட்டிருக்கின்றன.

அதேபோன்று நடமாடும் மருத்துவமனை வாகனங்கள்; நடமாடும் மருத்துவமனை வாகனங்களில், ஒரு மருத்துவரும், ஒரு செவிலியரும், ஒரு சுகாதார ஆய்வாளரும் என்கின்ற வகையில் 3 பணியிடங்களோடு, 389 நடமாடும் மருத்துவமனை வாகனங்களை 70 கோடியே 2 இலட்சம் ரூபாய் செலவில் மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்திருக்கிறார்கள். இன்றைக்கு தமிழ்நாட்டின் மூலை முடுக்கெல்லாம் இந்த நடமாடும் மருத்துவ வாகனங்களில் மருத்துவச் சேவை என்பது மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.

அதேபோல், 2025 ஆம் ஆண்டுக்குள் 'காசநோய் இல்லா தமிழகம்' என்ற நிலையை உருவாக்குவோம் என்று மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் சூளுரைத்து, 28 digital x-ray-யுடன்கூடிய காசநோய் வாகனங்களை நொச்சிக்குப்பம் பகுதியில் மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் இயக்கி வைத்தார்கள். அவை இன்றைக்கு எல்லாப் பகுதிகளுக்கும் சென்று மக்களை screen செய்கின்ற அந்தப் பணியைச் செய்து கொண்டிருக்கிறது. அந்த 28 வாகனங்களைப் பொறுத்தவரை, 12 கோடியே 97 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் இன்றைக்கு நடைபெற்று முடிந்திருக்கின்றன.

நமக்கிருக்கிற இன்னொரு பிரதானமான பெரிய பிரச்சினை, புற்றுநோய். புற்றுநோய் இன்றைக்கு பெரிய அளவிலான ஓர் அச்சுறுத்தலாக இருந்து கொண்டிருக்கிறது. எனவே, புற்றுநோய்க்கென்று மும்பையில் Tata Memorial Centre என்ற ஒரு research institute இருக்கிறது. இந்தியாவிலேயே ஒரு மிகப் பெரிய அமைப்பு. நம்முடைய மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் Tata Memorial Centre-ஐப் போலவே தமிழ்நாட்டில் ஒரு research institute, அதுவும் குறிப்பாக cancer-க்கு வேண்டுமென்கின்ற வகையில் 230 கோடி ரூபாய் நிதியினை ஒதுக்கி, காஞ்சிபுரத்தில் ஒரு மிக பிரம்மாண்டமான கட்டமைப்பு உருவாகிக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மிக விரைவில் தமிழ்நாட்டில் Anna Memorial Cancer Research Institute வரவிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3–35

மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள், என்னையும், துறையின் செயலாளரையும் மற்ற ஏனைய அதிகாரிகளையும் அண்மையில் ஜப்பானுக்கு, குறிப்பாக டோக்கியாவிற்கு JICA நிறுவனத்தோடு பேசுவதற்காக அனுப்பியிருந்தார்கள். JICA என்றால் Japan International Cooperation Agency என்கின்ற ஒரு முகமை. மாண்புமிகு உறுப்பினர் இங்கே பேசும்போது, JICA–விலிருந்து நிதியினை நாங்கள்தான் வாங்கினோம் என்று சொன்னார்கள். ஆனால், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1989–1990–லேயே எழும்பூர் மருத்துவமனைக்கு JICA–விலிருந்து நிதியினை வாங்கியிருக்கிறார்.

அதுமட்டுமல்ல, 2006 ஆம் ஆண்டு வணக்கத்திற்குரிய தமிழ்நாட்டின் துணை முதலமைச்சராக இருந்த இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கும், சென்னை மெட்ரோ திட்டத்திற்கும் ஜப்பானுக்கு சென்று JICA நிர்வாகத்திடம் பேசித்தான் நிதியினைப் பெற்று வந்தார்கள். அந்த நிறுவனத்திடம் நாங்கள் சென்று, ஏற்கெனவே இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பணிகள் குறித்தும், அதற்காக அவர்கள் ஒதுக்கிய தொகை குறித்தும் அங்கே பேசிவிட்டு வந்திருக்கிறோம். நிச்சயம், எதிர்காலத்திலும், தமிழ்நாட்டில் மருத்துவக் கட்டமைப்பை உயர்த்துவதற்கு JICA பெரிய அளவில் உறுதுணையாக இருக்கவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

2023 ஏப்ரல் 18] [திரு. மா. சுப்பிரமணியன்]

அதேபோல், மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறையில் எதுவெல்லாம் தடுக்கப்பட வேண்டும் என்பதை உணர்ந்து, குட்கா, பான்பராக் போன்ற போதை வஸ்துக்களைத் தடுப்பதற்கு இரும்புக் கரம் கொண்டு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கின்றார். இன்றைக்கு தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியா முழுமைக்கும் hookah bars என்கின்ற ஒரு புதிய புகைக் குழல் கூடங்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. இந்த hookah bar என்று சொல்லக்கூடிய புகைக் குழல் கூடங்களை உடனடியாகத் தடுத்திட வேண்டுமென்று சொல்லி, மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் 2022 அக்டோபர் திங்கள் 19 ஆம் தேதி ஒரு தடைச் சட்டத்தை இங்கிருந்து நிறைவேற்றி அனுப்பியிருக்கிறார்.

அதோடுமட்டுமல்ல, எப்படி இந்த hookah bar இருக்கிறதோ, அதேமாதிரி இன்னும் ஒரு புதிய கலாச்சாரம், இரத்தத்தில் ஓவியங்களை வரைந்து காதலனுக்கும், காதலிக்கும் அனுப்புவதாகும். இரத்தத்தை எடுத்து ஓவியங்கள் வரைந்து, அதற்காகவே blood art centres என்று சொல்லக்கூடிய இரத்த ஓவியக் கூடங்கள் தமிழ்நாட்டில் பரவலாக ஆங்காங்கே நகரப் பகுதிகளில் வரத் தொடங்கிவிட்டன. அதனால், அந்த இரத்தத்தை எடுத்து ஓவியங்களாக வரைகின்றபோது, இரத்தத்தில் இருக்கின்ற கிருமிகள் மற்றவர்களுக்குப் பரவுவதும், அந்தத் தொற்று அதிகமாகக்கூடும் என்பதாலும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் அதற்கும் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

அதேபோல் தமிழ்நாட்டில் மட்டுமல்ல, ஒட்டுமொத்த இந்தியாவிலும் இன்றைக்கு தற்கொலை விகிதம் அதிகரித்துக் கொண்டிருக்கின்ற சூழலில், மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் மிகச் சிறந்த யோசனையின்படி, இன்றைக்கு தற்கொலைகளுக்கு ஒரு தீர்வு என்கின்ற வகையில் 7 பூச்சிக்கொல்லி மருந்துகளுக்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டை பொறுத்தவரை, 104 என்கின்ற ஓர் ஆலோசனை மையம் உருவாக்கப்பட்டு, அந்த ஆலோசனை மையத்தில் நூற்றுக்கணக்கான மனநல ஆலோசகர்கள் தமிழ்நாட்டில் எங்கேயெல்லாம் பிரச்சினைகள் வருகின்றனவோ, அங்கேயெல்லாம் அவர்களுக்கு தொடர்ந்து மனநல ஆலோசனைகளைச் சொல்கின்ற ஓர் அற்புதமான மையமாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

நீட் தேர்வு எழுதுகின்றபோது ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு மனநல ஆலோசனைகள், உக்ரைன் நாட்டிலிருந்து திரும்பியவர்களுக்கு மனநல ஆலோசனைகள், கொரோனாவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மனநல ஆலோசனைகள்—நாளை மாலைகூட, அதாவது 19-4-2023 அன்று 7-00 மணிக்கு '104 ஆலோசனை மையம்' தொடங்கப்படவிருக்கிறது. I.I.T.-ல் இருக்கின்ற 9,000 மாணவர்கள் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டு, கடந்த 3 மாதங்களில் மட்டும் 4 பேர் இறந்திருக்கிறார்கள். இப்படி அந்த 4 பேருடைய மரணங்களுக்குக் காரணம், மன அழுத்தம், மனச் சோர்வு என்று சொல்லப்படுகிறது. எனவே, அதனை நீக்குவதற்கு நம்முடைய வணக்கத்திற்குரிய தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு '104 ஆலோசனை மையம்' மிகச் சிறப்பாக செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்த '104 ஆலோசனை மையம்' கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் 4 இலட்சத்து 39 ஆயிரம் பேருக்கு மிகச் சிறப்பான மன நல ஆலோசனைகளை வழங்கி மகிழ்வித்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3-40

அதேபோல, இங்கே பேசியவர்கள் சொன்னதைப்போல, முதுகலை பட்டப் படிப்புகள், உயர் சிறப்புப் படிப்புகளைப் பொறுத்தவரை, ஒன்றிய அரசு, குறிப்பாக, மாநில உரிமையைப் பறித்து, 100 சதவிகிதமும் அவர்கள் எடுத்துக்கொள்ள துணிந்தபோது, மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள், ஒரு சிறந்த கைதேர்ந்த வழக்கறிஞரின்மூலம் வழக்குத் தொடுத்து, இன்றைக்கு நமக்கான உரிமையைப் பெற்று, அவர்களுக்கு 50 சதவிகிதம், நமக்கு 50 சதவிகிதம் என்று அந்த உரிமையை நிலைநாட்டி, மாநில சுயாட்சிக்கு மிகப் பெரிய அங்கீகாரத்தை மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் பெற்றுத் தந்திருக்கிறார்கள். மன நலம் என்கின்ற வகையில் இன்றைக்கு தமிழ்நாட்டில் 37 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் 'MaNaM' என்கின்ற ஓர் ஆலோசனை மையம் தொடங்கப்பட்டிருக்கிறது. மனம் என்றால் மனநல நல்லாதரவு மன்றம் என்கிற பெயரில் 'மனம்' என்கிற ஓர் ஆலோசனை மையம் தொடங்கப்பட்டிருக்கிறது. இந்த ஆலோசனை மையத்தில் மாணவர்கள் பயிற்சி பெற்று, அவர்களின்மூலம் எதிர்காலத்தில், கலைக் கல்லூரி மாணவர்களுக்கு, பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கு இந்தப் பயிற்சியைத் தருவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதைத்

திறந்து வைத்தவர் நம்முடைய மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள். கீழ்ப்பாக்கம் மனநல மருத்துவமனைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே நேரடியாக வந்து, 40 கோடி ரூபாய் செலவில் ஓர் ஒப்புயர்வு மையக் கட்டடம் கட்டுவதற்கான அடிக்கல்லை நாட்டினார்கள். 2 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட ஓர் இடைநிலை பராமரிப்பு மையத்தைத் தொடங்கி வைத்தார்கள். இதை நான் சொல்வதற்குக் காரணம், ஒரு முதலமைச்சர் மனநல மருத்துவமனைக்கு வருவது என்பது அரிதான விஷயம். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே அந்த மனநல மருத்துவமனைக்கு நேரடியாக வந்து, அந்தக் காரியங்களைச் செய்திருக்கிறார் என்பதை மகிழ்ச்சியோடு இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

புதிதாக வருகிற வைரஸ் காய்ச்சலைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசினார்கள். கடந்த மாதம் 10 ஆம் தேதிதான் மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள் இந்தக் காய்ச்சலுக்கு சிறப்பு முகாம்களை நடத்திட வேண்டுமென்று சொன்னார்கள். இன்ஃபுளுயன்சா என்று சொல்லப்படுகின்ற இந்தக் காய்ச்சலுக்கு கடந்த மாதம் 10 ஆம் தேதி ஒரே நாளில் ஆயிரம் முகாம்கள் நடத்தப்படும் என்று சொன்னோம். ஆயிரம் முகாம்கள் நடத்தப்படும் என்று சொல்லி, 1,586 முகாம்கள் அந்த ஒரே நாளில் நடத்தப்பட்டன. அந்த முகாம்கள் நேற்றுவரையும்கூட நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதுவரை நடத்தப்பட்டிருக்கிற முகாம்களின் எண்ணிக்கை 58,553. அதன்மூலம் பயன்பெற்றிருப்பவர்களுடைய எண்ணிக்கை 23,36,823. இதில், காய்ச்சல் கண்டறியப்பட்டவர்களின் எண்ணிக்கை 11,721. எல்லோரும் குணமடைந்து, மிகச் சிறப்பாக இருந்துகொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில்தான் இன்ஃபுளுயன்சா காய்ச்சலின்மூலம் ஒருவர்கூட பலி இல்லையென்கிற ஒரு மகத்தான விஷயம் நடைபெற்று முடிந்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி ஏராளமான நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இந்தத் துறையின் சார்பில் இன்றைக்கு எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

தொழுநோயைப் பொறுத்தவரை, 3,090 பேர் தொழுநோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தத் துறையின் சார்பில் அவர்களுக்கு மாதந்தோறும் ரூ.2,000/– உதவித்தொகை தந்து அவர்களைப் பாதுகாப்பதோடு, அவர்களுக்குத் தேவையான உபகரணங்களும் தொடர்ந்து வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அடுத்து, யானைக்கால் நோய். யானைக்கால் நோயினால் 8,023 பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000/– உதவித்தொகையும், அவர்களுக்குத் தேவையான மருத்துவ உபகரணங்களும் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இப்படி ஏராளமான விஷயங்கள் இருக்கின்றன. அனைத்து நோய்களுக்கும், தொற்று நோய்களாக இருந்தாலும் சரி, தொற்றா நோய்களாக இருந்தாலும் சரி, அனைத்து நோய்களுக்குமான தீர்வு என்கிற வகையில், மிகச் சிறப்பான நடவடிக்கைகள் தொடர்ச்சியாக எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

சித்த மருத்துவத்தைப் பொறுத்தவரை, மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள், 2–9–2021 அன்று சட்டமன்றத்தில் ஓர் அறிவிப்பை வெளியிட்டார்கள். அதாவது, தமிழ்நாட்டில் சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் தொடங்கப்படுமென்று அறிவித்தார்கள். அறிவித்து சட்ட மசோதாவை நிறைவேற்றி, ஆளுநருக்கு அனுப்பினார்கள். ஆளுநருக்கும், சித்த மருத்துவத்துக்கும் என்ன சண்டை என்றே தெரியவில்லை. ஆளுநர் அவர்கள் அதற்கு ஒப்புதல் தராமல் நீண்ட நாட்களாக தன்னுடைய இருப்பிலே வைத்திருந்தார்கள். பின்னர், மீண்டும் நம்முடைய மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்களுடைய அழுத்தத்தின் காரணமாக திருப்பியனுப்பினார்கள். திருப்பியனுப்பியதற்குப் பிறகு இரண்டாவது முறையும் அந்த மசோதா நிறைவேற்றி, அனுப்பப்பட்டது. இரண்டாவது முறையாக மசோதா நிறைவேற்றி அனுப்பியதற்குப் பிறகும் ஆளுநர் அவர்கள் அதில் நிறைவடையாமல், கடந்த மாதம், மீண்டும் அதிலே clarification–ஐக் கேட்டு, அரசுக்கு திருப்பியனுப்பியிருக்கிறார். நிச்சயம், அந்த சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் தமிழ்நாட்டுக்கு வந்தே தீர வேண்டுமென்கிற நிலையில், சமூக ஆர்வலர்கள் மட்டுமல்ல, சித்த மருத்துவத்தில் ஈடுபாடு கொண்ட அனைவருமே இன்றைக்கு விரும்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆளுநர் அவர்கள் அதற்கு ஒப்புதல் தர வேண்டுமென்று இந்த மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பதிலளிக்கிறபோது அவர்களையும் நாங்கள் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், 2,208 மலைவாழ் கிராமங்கள் இருக்கின்றன. இந்த மலைவாழ் கிராமங்களைப் பொறுத்தவரை, 9,13,876 பேர் மலைப் பகுதிகளிலே

2023 ஏப்ரல் 18] [திரு. மா. சுப்பிரமணியன்]

வசித்துக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுடைய எண்ணம், அவர்களுடைய செயல் என்னவென்றால், மலைப் பகுதிக்கும் சென்று மலைக் கிராமங்களில் வசிப்பவர்களைப் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்பதாகும். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய பெட்டமுகிலாளம்; அந்த பெட்டமுகிலாளத்தைச் சுற்றியிருக்கக்கூடிய 8, 9 கிராமங்கள், அந்தியூர் காட்டிலே இருக்கின்ற 18–க்கும் மேற்பட்ட கிராமங்கள், சத்தியமங்கலம் தாளவாடி பகுதியிலே இருக்கின்ற 18–க்கும் மேற்பட்ட கிராமங்கள், ஊட்டியில் இருக்கின்ற 20–க்கும் மேற்பட்ட கிராமங்கள், கொடைக்கானலில் இருக்கின்ற 20–க்கும் மேற்பட்ட கிராமங்கள், திண்டுக்கல்லில் பன்றிமலை போன்ற பல்வேறு மலைக் கிராமங்களுக்கு, 100–க்கும் மேற்பட்ட மலைக் கிராமங்களுக்கு, சாலை வசதியே இல்லாமல், இருசக்கர வாகனங்கள்கூட செல்ல முடியாத சாலைகளில் நாங்கள் நடந்து சென்று, அந்த மலைவாழ் மக்களைச் சந்தித்து, அவர்களுக்குத் தேவையான மருத்துவ வசதிகளைச் செய்து கொண்டிருக்கிறோம். அதோடுமட்டுமல்ல, அவர்களுக்கு இன்றைக்கு இருக்கிற மிகப் பெரிய அளவிலான நோய் பாதிப்புகளான, thalassaemia, sickle cell anemia, haemoglobinopathy போன்ற நோய்களுக்குத் தீர்வு என்கிற வகையில், பல்வேறு பரிசோதனைகள் அவர்களுக்குச் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இப்படி பல விஷயங்களைத் தொடர்ந்து அரசு செய்து கொண்டிருப்பதால், ஒன்றிய அரசு பல்வேறு விருதுகளை இந்தத் துறைக்கு கடந்த ஓர் ஆண்டில் மட்டும் வழங்கி சிறப்பித்திருக்கிறது. அவர்கள் வழங்கியிருக்கிற ஒரு சில விருதுகளை மட்டும் இங்கே சொல்லி என்னுடைய உரையை நிறைவு செய்யக் கருதுகிறேன்.

பிற்பகல் 3–45

இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் சார்பில் தமிழ்நாடு உணவு பாதுகாப்புத் துறையின் செயல்பாடுகளை இன்றைக்கு பாராட்டி உணவுப் பாதுகாப்பு குறியீட்டில் State Food Safety Index என்கின்ற வகையில் தமிழ்நாடு இன்றைக்கு இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) Eat Right Challenge என்கின்ற அந்தப் போட்டியிலும் தமிழ்நாடு இன்றைக்கு முதல் இடத்தில் வந்திருக்கிறது. கடந்த ஆண்டு பத்து மாவட்டங்களுக்குப் பரிசு அறிவித்ததில் இந்திய அளவில் நான்கு

இடங்களை தமிழ்நாடு கைப்பற்றியிருக்கிறது. நூறு இடங்கள் என்று அறிவித்ததில் 29 இடங்களைப் பிடித்திருக்கிறது. இப்படி பல்வேறு விருதுகளை உணவுப் பாதுகாப்புத் துறைக்கு ஒன்றிய அரசு வழங்கியிருக்கிறது.

அதோடுமட்டுமல்லாமல், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் தேசிய குடும்பக் கட்டுப்பாடு உச்சி மாநாடு ஒன்றில் அறிவிக்கப்பட்டபடி தற்காலிக நவீன கருத்தடை சம்பந்தமான அந்த சாதனையில் தமிழ்நாடு இன்றைக்கு முதலிடத்தில் இருந்து கொண்டிருக்கிறது. தேசிய தர உறுதி நிர்ணயத் திட்டத்தில் முதல் இடத்திற்கான விருதைப் பெற்றிருக்கிறது. அனைவருக்கும் நல்வாழ்வு திட்டத்தில் தொலைதொடர்பு மருத்துவ ஆலோசனைகள் வழங்குவதில் தமிழ்நாடு முதலிடம் பிடித்திருக்கிறது. கிராமப்புறங்களில் நல்வாழ்வு மையங்கள்மூலம் தொலை மருத்துவச் சேவை TeleConsultation சேவை செய்வதில் தமிழ்நாடு முதலிடம் பிடித்திருக்கிறது. மகப்பேறு சிக்கல்கள் உள்ள கர்ப்பிணித் தாய்மார்களைக் கண்டறிந்து சிகிச்சை வழங்குவதில் தமிழ்நாடு முதலிடம் பிடித்திருக்கிறது. மகப்பேறு மற்றும் குழந்தை இறப்பைத் தடுத்ததில் பெரிய மாநிலங்களுக்கான குறியீட்டில் தமிழ்நாடு இரண்டாம் இடத்தைப் பிடித்திருக்கிறது. பள்ளிக் கல்வித் துறையுடன் இணைந்து RBSK திட்டத்தின்கீழ் பள்ளி சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய தூதுவத் திட்டத்தில் சிறந்த மாநிலத்திற்கான விருது கிடைத்திருக்கிறது. கடந்த ஓர் ஆண்டில் மட்டும் தமிழகத்திற்கு 50–க்கும் மேற்பட்ட விருதுகள் ஒன்றிய அரசின் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பிரதமர் அவர்களாலும், ஒன்றிய அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறையின் செயலாளர் அவர்களாலும் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை மகிழ்ச்சியோடு எடுத்துக்கூறி, இந்த விருதுகளுக்கும், இன்றைக்கு மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கின்ற இந்த மாற்றங்களுக்கும் மிக முக்கியமான காரணம். இந்தத் துறையை தினந்தோறும் அறிவுறுத்தி, வழிநடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான் என்பதை அனைவருமே நன்றாக அறிவார்கள். அந்த வகையில் என்னுடைய பதிலுரையை நிறைவு செய்து, அறிவிப்புகளைப் பொறுத்தவரை 106 அறிவிப்புகள் இருக்கின்றன. இந்த 106 அறிவிப்புகளையும் நான் நிச்சயம் படிக்க மாட்டேன். யாரும் அயர்ந்துவிட வேண்டாம். காரணம் முதலாம் ஆண்டு, நிதிநிலை அறிக்கையில் 109 அறிவிப்புகளை அறிவித்தோம். இரண்டாம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 136 அறிவிப்புகளை

வெளியிட்டோம். முதலாம் ஆண்டைப் பொறுத்தவரை, இந்த 109 அறிவிப்புகளினுடைய செயல்பாட்டை ஒரு புத்தக வடிவில் போட்டு, ஒவ்வோர் உறுப்பினரின் மேசையிலும் வைத்தோம். அதற்கு அடுத்த ஆண்டு, அதாவது கடந்த ஆண்டு, 136 அறிவிப்புகளை வெளியிட்டு, அறிவிக்கின்றபோதே சொன்னேன். இந்த 136 அறிவிப்புகளின் செயல்பாட்டை புத்தகமாக மாற்றி உங்களுக்குத் தருவோம் என்று சொன்னேன். இப்போது தந்திருக்கின்றோம். அந்த 136 அறிவிப்புகளின் செயலாக்கம்தான் இவ்வளவு பெரிய புத்தகம். இந்தப் புத்தகத்தில் கடந்த ஆண்டு அறிவித்த 136 அறிவிப்புகளும் என்னென்ன நிலையில் இருக்கின்றன, எதெல்லாம் நடைமுறையில் இருக்கின்றன, எதற்கெல்லாம் அரசாணை வெளியிடப்பட்டிருக்கின்றன என்கின்ற விவரங்களை இன்றைக்கு புத்தகமாகத் தந்திருக்கின்றோம். அதேபோல் இன்றைக்கும் 106 அறிவிப்புகளை அறிவிக்க இருக்கின்றோம். இந்த 106 அறிவிப்புகளில், 13 மிக முக்கியமான பொதுவான அறிவிப்புகளை மட்டும் நான் சொல்கிறேன். மற்ற அறிவிப்புகளையெல்லாம் நீங்கள், நான் அவையில் படித்ததாகக் கருதி, பதிவேட்டில் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்த ஆண்டு நிச்சயம் சொல்கிறேன். இந்த 106 அறிவிப்புகளும் இதேபோன்று, செயலாக்கம் பெற்று, அந்த அறிவிப்புகளின் தன்மையைப் புத்தகமாக மாற்றி, அடுத்த ஆண்டும் இதைத் தருவோம் என்கின்ற நம்பிக்கையில் இந்த அறிவிப்புகளை வெளியிடுகிறோம்.

தமிழ்நாடு அரசின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, 2023–2024 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்கீழ் 106 புதிய அறிவிப்புகளை வெளியிடவிருக்கிறது.

தமிழ்நாட்டில் உலகத் தரத்திலான உட்கட்டமைப்பு வசதிகள், அதிநவீன உயிர்காக்கும் உபகரணங்கள் மற்றும் உயர் இரக ஆய்வகச் சேவைகள் மற்றும் நவீன மருத்துவ அறிவியல் அடிப்படையிலான நோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை முறைகளை உள்ளடக்கியதாக இருக்கிறது. எனவே, அந்த வகையில் மருத்துவக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்குரிய அறிவிப்புகளாக தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், நலவாழ்வு மையங்கள், Siddha, Homeopathy மற்றும் Ayurveda மருத்துவமனைகள் ஆகிய மருத்துவக் கட்டமைப்புகளை மேலும்

மேம்படுத்திடும் வகையில் 21 அறிவிப்புகளை உள்ளடக்கிய மொத்தம் 917 கோடியே 68 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மருத்துவக் கட்டமைப்புகள் மேம்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 3–50

தமிழ்நாட்டிலுள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், அரசு மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், நகர்ப்புற நலவாழ்வு மையங்கள், கண், பல் மற்றும் சித்தா மருத்துவமனைகள் ஆகிய மருத்துவமனைகளில் முறையான சிகிச்சைகள் உரிய நேரத்தில் வழங்கிடுவதற்கு ஏதுவாக, CT, MRI Scan உட்பட அதிநவீன உயிர்காக்கும் உயர் இரக உபகரணங்கள் 22 அறிவிப்புகளை உள்ளடக்கி, மொத்தம் ரூ.298 கோடியே 95 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதேபோல், 11 அறிவிப்புகளின் வாயிலாக தொற்று மற்றும் தொற்றா நோய்களுக்கான நோய் கண்டறியும் அடிப்படை மற்றும் சிறப்பு ஆய்வகப் பரிசோதனைகள் ஆகியவை அனைத்து நிலை மருத்துவமனைகளிலும் மற்றும் உணவுப் பகுப்பாய்வு பரிசோதனை மையங்களிலும் எளிய முறையில் கிடைத்திடும் வகையில், ஒருங்கிணைந்த ஆய்வகக் கட்டமைப்புகள், நுகர்பொருட்கள் மற்றும் ஆய்வகக் கருவிகள் என ரூ.304 கோடியே 12 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

மகப்பேறு குழந்தைகள் மற்றும் பச்சிளங்குழந்தைகள் நலனுக்காக தீவிர சிகிச்சைப் பிரிவுகள், பச்சிளங்குழந்தைப் பராமரிப்புப் பிரிவுகள், அதி நவீன உயர் இரக உபகரணங்கள் மற்றும் இல்லங்களில் இளம் குழந்தை பராமரிப்புச் சேவைகள் என 15 அறிவிப்புகளை உள்ளடக்கி மொத்தம் ரூ.43 கோடியே 31 இலட்சம் மதிப்பீட்டில் தாய்-சேய் நலச் சேவைகள் மாநில அளவில் மேம்படுத்தப்படவுள்ளன என்பதையும் தெரிவித்துக்கொள்வதில் பெருமையடைகிறோம்.

ஈரோடு, திருப்பத்தூர், கன்னியாகுமரி மற்றும் ராணிப்பேட்டை ஆகிய 4 மாவட்டங்களில் சமூக அளவிலான புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகள் ரூ.3 கோடியே 31

2023 ஏப்ரல் 18] [திரு. மா. சுப்பிரமணியன்]

இலட்சம் செலவில் செயல்படுத்தப்படவிருக்கின்றன. நானும், மரியாதைக்குரிய மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களும் ஈரோடு பகுதியிலிருக்கிற பொது நலச் சங்க நிருவாகிகளோடு பேசிக்கொண்டிருந்த நேரத்தில், ஈரோடு பகுதியில் புற்றுநோயின் தாக்கம் அதிகமாகயிருக்கின்றது என்றும், அதனை screen செய்து, அந்தப் பகுதி மக்களுக்கு ஒரு விடியலை ஏற்படுத்தித் தர வேண்டுமென்றும் சொன்னார்கள்.

அதேபோல், ராணிப்பேட்டையைப் பொறுத்தவரையில், உலகிலேயே மிக மோசமான pollution உள்ள நகரங்களில் 10–வது இடத்தில் ராணிப்பேட்டை இருந்து கொண்டிருக்கிறது. அங்கேயும் புற்றுநோய் பாதிப்பு இருக்கிறது.

அதேபோல், மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி அவர்கள் சொன்னதைப்போல, கன்னியாகுமரி மாவட்டத்திலும் புற்றுநோய் பாதிப்பு அதிகமாக இருக்கிற சூழலில், ஈரோடு, திருப்பத்தூர், கன்னியாகுமரி மற்றும் ராணிப்பேட்டை ஆகிய 4 மாவட்டங்களில் பரீட்சார்த்த ரீதியாக சமூக அளவிலான புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகளை ரூ.3 கோடியே 31 இலட்சம் செலவில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

அதேபோல், தூய்மைப் பணியாளர்கள் எந்தளவுக்கு இந்தச் சமூகத்திற்கு அவசியமானவர்கள் என்பதை நாம் நன்றாக அறிவோம். தமிழ்நாட்டிலுள்ள நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் பணிபுரியும் 60,584 நகர்ப்புர தூய்மைப் பணியாளர்களுக்கான சிறப்பு முகாம்கள் நகர்ப்புர நலவாழ்வு மையங்களில் நடத்தப்படுவதுடன், ஒவ்வொரு தூய்மைப் பணியாளருக்கும் வருடத்திற்கு ஒரு முறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் முழு உடல் பரிசோதனை இலவசமாக மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், தூய்மைப் பணியாளர்கள் 24 மணி நேரமும் மருத்துவமனை வளாகத்தைத் தூய்மையாகப் பராமரிப்பதன்மூலம் நோய்த் தொற்றை பெருமளவில் குறைப்பதற்கு உதவுகின்றனர். அவர்களின் பணியிட நலன் கருதி, அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் அரசு மருத்துவமனைகளிலும் அவர்களுக்கென்று தனி அறைகள் அமைத்துத் தரப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதேபோல், போதை மீட்பு சேவைகள் அதிகமாகத் தேவைப்படும் பகுதிகளைக் கண்டறிந்து உரிய மன நல ஆலோசனை, மருத்துவ சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு சேவைகள் அனைத்து நிலை மருத்துவமனைகளிலும் கிடைத்திடும் வகையில் கட்டமைப்புகள் ரூ.5 கோடியே 23 இலட்சம் செலவில் வலுப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இங்கே பேசிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், குறிப்பாக, பெருமதிப்பிற்குரிய திரு. சிந்தனை செல்வன் அவர்கள், உலகம் முழுவதிலும் இளம் வயதினருக்கு மாரடைப்பு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது என்று சொன்னார். ஒன்றிய சுகாதாரத் துறை அமைச்சரும்கூட, 10 நாட்களுக்கு முன்னால், கொரோனா பேரிடருக்குப் பிறகு, மாரடைப்பு எண்ணிக்கை கூடியிருக்கிறது என்று சொன்னார். நாம் இதனை மூன்று மாதங்களுக்கு முன்னாலேயே தமிழக அரசின் சார்பிலும் அறிவித்தோம். ஏராளமான இறப்புகள் இன்றைக்கு மாரடைப்பினால் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஒருவேளை பேரிடர் அதற்குக் காரணமாக இருக்குமோ என்கின்ற ஐயத்தைத் தெரிவித்திருக்கிறோம். இன்றைக்கு உலக சுகாதார மையம் அதனை ஒப்புக்கொண்டு அதற்கான ஆராய்ச்சிகளை நடத்தவிருக்கின்றது. மாரடைப்பு தவிர்க்க முடியாத ஒன்றாக ஆகியிருக்கின்ற சூழலில், மாரடைப்பு வந்தவுடன் உடனடியாக அவர்களுக்கு முதலுதவி அளிக்கும் வகையில் மருந்து, மாத்திரைகள் அவசியமான ஒன்றாக இருக்கின்றன. கிராமப்புறங்களில், குக்கிராமங்களில், மலைக் கிராமங்களிலிருக்கின்ற மக்களுக்கு பக்கத்திலிருக்கிற துணை சுகாதார நிலையத்திலோ அல்லது ஆரம்ப சுகாதார நிலையத்திலோ மாரடைப்புக்கான இலவசமாக வழங்கப்படும் முதலுதவி மருந்துகள் கிடைத்தால் அது அவர்களுக்கு பெரிய அளவில் உபயோகமாக இருக்கும் என்கின்ற வகையில், மாரடைப்பு ஏற்படுவதற்கான அதிக சாத்தியக்கூறுகள் உள்ள நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்த நோயாளிகளுக்கு மாரடைப்பின் அறிகுறிகள் ஏற்படும் சூழ்நிலையில், உயிர் காக்கும் இருதய பாதுகாப்பு மருந்துகளை 'Emergency Loading dose' காலதாமதமின்றி சரியான நேரத்தில் உடனடியாக அளித்து உயிரிழப்பினைத் தடுத்திட ரூ.3 கோடியே 37 இலட்சம் மதிப்பீட்டில் மருந்துகள் வழங்கப்படும். 2,286 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 8,713 துணை சுகாதார நிலையங்களில் இந்த மருந்துகள் கையிருப்பு இருப்பது உறுதி செய்யப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

பிற்பகல் 3–55

அதேபோன்று தமிழ்நாடு மருத்துவப் பணியாளர் தேர்வாணையம்மூலம் மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்கள், இந்த ஆண்டு தேர்வு செய்யப்பட்டு, 4,133 காலிப் பணியிடங்களில் அவர்கள் பணியமர்த்தப்படுவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மரியாதைக்குரிய உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள், எங்கள் ஆட்சியில் ஆண்டிற்கு 4,000 பணியாளர்களை நியமித்தோம் என்று சொன்னார்கள். கடந்த ஆண்டில் 4,308 பணியிடங்களுக்கான நியமனம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்த ஆண்டிற்கான 4,133 பணியிடங்களுக்கான நியமனம் இந்த அறிவிப்பின்மூலம் வெளியிடப்படுகின்றது.

தமிழ்நாட்டில் கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் முதல்நிலை சுகாதாரச் சேவைகளை அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் வழங்கி வருகின்றன. அவற்றின் செயல்பாடுகள் மற்றும் பாதுகாப்பு அமைப்பினைக் கண்காணித்து வலுப்படுத்தும் வகையில் 2,286 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தலா இரண்டு கண்காணிப்புக் கேமரா கருவிகள், CCTV சுமார் ரூ.10.17 கோடி மதிப்பீட்டில், அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படவிருக்கிறது என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னுமொரு மகிழ்ச்சியான செய்தி. சுகாதாரத் துறையில் தமிழ்நாட்டு மக்களுக்கு வழங்கிவரும் சேவையை வலுப்படுத்தவும், மருத்துவ ஆய்வுக் கட்டுரைகளைப் பற்றி விவாதிக்கவும், பன்னாட்டு மருத்துவ மாநாடு ஒன்று நடத்தப்படும். பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருத்துவத் துறை ஆராய்ச்சிப் பணிகளை ஊக்குவிக்கும்வண்ணம் நடப்பாண்டின் பொது சுகாதார வருடாந்திர மாநாட்டின்போது, Annual Public Health Conference 100 திறனாய்வுக் கட்டுரைகள் வெளியிட முயற்சிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

இறுதியான ஓர் அறிவிப்பு. நாம் அனைவரும் மகிழத்தக்க வண்ணமான அறிவிப்பு. மகிழ்ந்தால் மட்டும் போதாது. அதனை நடைமுறைப்படுத்திடவும் வேண்டும். உலக சுகாதார அமைப்புகளின் தரவுகளின் அடிப்படையில், உடற்பயிற்சி செய்வது, நீரிழிவு மற்றும் இரத்த அழுத்த நோய்களின் தாக்கத்தை

27 சதவிகிதமும், இதய நோயின் தாக்கத்தை 30 சதவிகிதமும் குறைக்கும் என்று கூறப்படுகிறது. நடைப் பயிற்சியானது, மக்களை சுறுசுறுப்பாகவும், ஆரோக்கியமான எடையுடன் இருக்கவும், நாள்பட்ட உடல் பிரச்சினைகள் மற்றும் மன அழுத்தத்தைக் குறைக்கவும் உதவுகிறது. ஆகவே, நடப்போம், நலம் பெறுவோம் என்பதற்கிணங்க, பொதுமக்களின் நலன் மற்றும் ஆரோக்கியத்தைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டிலுள்ள 38 மாவட்டங்களிலும் அந்தந்த மாவட்டத்திலுள்ள உள்ளாட்சி அமைப்புகளுடன் ஒன்றிணைந்து, ஒரு மாவட்டத்திற்கு ஓர் இடம், 8 கி.மீ. தூரத்திற்கு ஒரு நடைபாதையை மேம்படுத்தி, இரு பக்கமும் tree plantation, மரங்களை வளர்த்து, அந்தத் தெருவிற்கு Health Walk Street என்று பெயரிட்டு, ஒவ்வொரு கிலோ மீட்டருக்கும் ஒரு sign board வைத்து, ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிற்றுக்கிழமை சுகாதாரத் துறை அலுவலர்களோடு, அங்கே walking பயிற்சி அளித்து, அவ்வாறு பயிற்சி அளிப்பதோடு மட்டுமல்ல, அந்த 8 கிலோ மீட்டர் நடந்து முடிந்தவுடன், அவர்களுக்கான அடிப்படை பரிசோதனைகளைச் செய்வது, அவர்களுக்குத் தேவையான Hydration போன்றவற்றைத் தருவது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி 38 மாவட்டங்களிலும், 8, 8 கிலோ மீட்டர் தூரத்திற்கு 38 Health Walk Streets ஏற்படுத்துவதன்மூலம் அந்தந்த மாவட்டத்திலிருப்பவர்கள் தினந்தோறும் நடக்க வேண்டும் என்கின்ற விழிப்புணர்வைப் பெறுவார்கள். இது தொடர்ச்சியாக நடைபெற வேண்டும் என்கின்ற நிலைக்கு மக்கள் தள்ளப்படுவார்கள். அண்மையில் நாங்கள் Tokyo-விற்குச் சென்றிருந்தபோது, அங்கு இதேபோன்று 8 கிலோமீட்டர் தூரத்திற்கு ஒரு Health Walk Street என்ற ஒரு சாலையைப் பார்த்தோம். அதேபோன்று தமிழ்நாட்டிலும் 38 மாவட்டங்களிலும் Health Walk Streets உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அளவில் 106 அறிவிப்புகளின் சுருக்கம் இப்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் 105 அறிவிப்புகளா?

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 106 அறிவிப்புகள், புத்தகத்தில் 105 தான் உள்ளன. கடைசி நேரத்தில் ஒன்று சேர்த்துள்ளதால் 106 ஆக்கப்பட்டுள்ளது. 106-வது அறிவிப்பை நான் படித்துவிட்டேன்.

2023 ஏப்ரல் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது 165 என்று முதலில் கூறினீர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *இல்லை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 106 அறிவிப்புகள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 165 என்று பதிவு செய்திருந்தால் அவைக் குறிப்பினில் அதனை 106 ஆக மாற்றிக்கொள்ளவும்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 106 அறிவிப்புகள் தான். 106 அறிவிப்புகளை நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

அறிவிப்புகள்

I–இன்னுயிர் காப்போம், நம்மைக் காக்கும்-48 திட்டம்

மகத்தான மருத்துவக் கட்டமைப்பு

1. நான்கு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் தலா 50 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவு (Critical Care Blocks) ரூபாய் 95 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்

*"இன்னுயிர் காப்போம், நம்மைக் காக்கும் – 48" திட்டத்தினை மேலும் வலுப்படுத்தும் விதமாக திருவொற்றியூர் அரசு நெஞ்சக நோய் மருத்துவமனை–ஓட்டேரி, சென்னை அரசு மனநல காப்பகம்–கீழ்ப்பாக்கம், கன்னியாகுமரி மற்றும் கடலூர்–சிதம்பரம் ஆகிய 4 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் தலா 50 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவு (*Critical Care Blocks*) ரூபாய் 95 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.*

வலுவான மருத்துவ விரிவாக்கம்

2. இராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு 100 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவு (Critical Care Block) ரூபாய் 40.05 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்

தமிழ்நாட்டு மக்களால் பெரிதும் வரவேற்கப்படும் "இன்னுயிர் காப்போம், நம்மைக் காக்கும்–48" திட்டத்தின்கீழ், சென்னை–

இராயபேட்டை அரசு மருத்துவமனைக்கு 100 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவு (Critical Care Block) ரூபாய் 40.05 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

சிகரம் தொடும் தீவிர சிகிச்சை பிரிவுகள்

3. ஐந்து அரசு மருத்துவமனைகளில், 50 படுக்கைகள் கொண்ட பன்னோக்கு தீவிர சிகிச்சைப் பிரிவுகள் (Critical Care Blocks) ரூபாய் 118.75 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்

இன்னுயிர் காப்போம், நம்மைக் காக்கும்-48 திட்டத்தினை மேலும் வலுப்படுத்தும் விதமாக நாமக்கல் மாவட்டம் பரமத்தி-வேலூர், ராணிப்பேட்டை மாவட்டம்-அரக்கோணம், விருதுநகர் மாவட்டம்-சிவகாசி, தருமபுரி மாவட்டம்-அரூர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டம்-உளுந்தூர்பேட்டை ஆகிய 5 அரசு மருத்துவமனைகளில், 50 படுக்கைகள் கொண்ட பன்னோக்கு தீவிர சிகிச்சைப் பிரிவுகள் (Critical Care Blocks) ரூபாய் 118.75 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

அவசரகால ஊர்திகளும், நவீன மருத்துவக் கருவிகளும்

4. 108 அவசர கால ஊர்திகளின் சேவையை வலுப்படுத்த ரூபாய் 21.40 கோடி மதிப்பீட்டில் 62 புதிய அவசர கால ஊர்திகள் (BLS), 13 தாய்—சேய் நல ஊர்திகள் (JSSK) மற்றும் 98 நவீன மருத்துவ கருவிகள் (Transport Ventilators) வழங்கப்படும்

தமிழ்நாட்டில், தற்பொழுது 1,353 அவசர கால ஊர்திகள் மற்றும் 99 தாய்-சேய் நல ஊர்திகள் (JSSK) செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 62 கழிவு நீக்கம் செய்யப்பட்ட (Condemnation) அவசர கால ஊர்திகளுக்குப் பதிலாக புதிய அவசர கால ஊர்திகளும், 13 தாய் சேய் நல ஊர்திகளும் (JSSK) மற்றும் 98 புதிய நவீன மருத்துவ கருவிகள் (Transport Ventilators) ரூபாய் 21.40 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

நரம்பியல் துறைக்கு நவீன உபகரணங்கள்

5. 11 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு ரூபாய் 8.80 கோடி மதிப்பீட்டில் நவீன நரம்பியல் அறுவை சிகிச்சைக்கான உபகரணங்கள் வழங்கப்படும்

விபத்து காய மூளை நரம்பியல் அறுவை சிகிச்சைக்கான உயர் நுண்ணிய உபகரணங்கள் சென்னை ராஜிவ் காந்தி அரசு மருத்துவமனை, ஸ்டான்லி, கீழ்ப்பாக்கம், தஞ்சாவூர், தருமபுரி, புதுக்கோட்டை, தேனி, திருவாரூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, சேலம் ஆகிய 11 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு ரூபாய் 8.80 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

செங்கமும் செம்மையான மருத்துவமும்

6. செங்கம் அரசு மருத்துவமனையில் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில், விபத்து மற்றும் அவசர சிகிச்சைக்கான உபகரணங்களுடன் கூடிய கட்டடம் அமைக்கப்படும்

திருவண்ணாமலை மாவட்டம்-செங்கம் அரசு மருத்துவமனையில் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில், விபத்து மற்றும் அவசர சிகிச்சைக்கான புதிய கட்டடம் அமைக்கப்பட்டு தேவையான நவீன மருத்துவ உபகரணங்கள் வழங்கப்படும்.

சிறப்பு மருத்துவமும், சி.டி.ஸ்கேன் கருவிகளும்

7. ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு ரூபாய் 2.50 கோடி மதிப்பீட்டிலான புதிய சி.டி. ஸ்கேன் (CT Scan) கருவி வழங்கப்படும்

"இன்னுயிர் காப்போம், நம்மைக் காக்கும்-48" திட்டத்தின்கீழ் உயிர் காக்கும் அவசர சிகிச்சையை உரிய நேரத்தில் வழங்கிட ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு ரூபாய் 2.50 கோடி மதிப்பீட்டில் புதிய சி.டி. ஸ்கேன் (CT scan) கருவி வழங்கப்படும்.

நஞ்சு முறிவும் நலம் தரும் மருத்துவமும்

8. தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு விஷமுறிவு சிகிச்சைக்கான Plasmapheresis உபகரணம் வழங்கப்படும். மேலும், கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் விஷமுறிவு அவசர சிகிச்சைக்கான மாநில பயிற்சி மையம் அமைக்கப்படும். பாம்புக்கடி நஞ்சுமுறிவு சிகிச்சைக்கான பயிற்சிகள் மாநில அளவில் மருத்துவப் பணியாளர்களுக்கு வழங்கப்படுவதோடு, அனைத்து கிராமங்களிலும் தன்னார்வலர்களுக்கு முதலுதவிப் பயிற்சிகள் வழங்கப்படும்

தமிழ்நாட்டில் நஞ்சு உட்கொள்ளுவதால் ஏற்படும் பாதிப்புகளுக்கு வழங்கப்பட வேண்டிய நஞ்சுமுறிவு சிகிச்சை (Plasmapheresis) குறித்த பயிற்சி அளிப்பதற்கு கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மாநில அளவிலான பயிற்சி மையமாக மேம்படுத்தப்படுவதோடு, தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு Plasmapheresis உபகரணம் வழங்கப்படும். மேலும், "பாம்புக்கடி தடுப்பு மற்றும் சிகிச்சைக்கான சிறப்பு வழிகாட்டல் குழு" அமைக்கப்பட்டு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கு பாம்புக்கடி அவசர மருத்துவ உயிர் காக்கும் சிகிச்சை முறைகளுக்கான பயிற்சியும், அனைத்து கிராமங்கள் அளவில் தன்னார்வலர்களுக்கு முதலுதவி குறித்த பயிற்சிகளும் வழங்கப்படும்.

நுட்பமான சிகிச்சைக்கு நவீன மருத்துவக் கருவிகள்

9. திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் திருச்செங்கோடு அரசு மருத்துவமனைக்கு புதிய சி—ஆர்ம் கருவிகள் மற்றும் பழநி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு புதிய டிஜிட்டல் எக்ஸ்ரே கருவி ரூபாய் 1.40 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்

தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர முன்னெடுப்பு திட்டத்தின் கீழ் திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் திருச்செங்கோடு அரசு மருத்துவமனைக்கு புதிய சி–ஆர்ம் கருவிகள் ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டிலும், திண்டுக்கல் மாவட்டம் – பழநி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு புதிய டிஜிட்டல் எக்ஸ்ரே கருவி ரூபாய் 1 கோடி மதிப்பீட்டிலும் வழங்கப்படும்.

II–மக்களைத் தேடி மருத்துவம்

மக்கள் நலமும், மருத்துவப் பயன்பாடும்

10. அத்தியாவசிய மற்றும் சிறப்பு மருந்துகளுக்கு ரூபாய் 25 கோடி கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்

தமிழ்நாட்டில் மகத்தான "மக்களைத் தேடி மருத்துவம்" திட்டத்தின்மூலம் ஒரு கோடிக்கும் மேற்பட்ட மக்கள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தின்மூலம் தொற்றா நோய்களால் ஏற்படும் நோய்ச்சுமையைக் குறைக்கும்

2023 ஏப்ரல் 18] [திரு. மா. சுப்பிரமணியன்]

வண்ணம் ஒருங்கிணைக்கப்பட்ட முழுமையான சேவைகள், களப்பணியாளர்கள் மூலமாக இல்லந்தோறும் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில் அத்தியாவசிய மற்றும் சிறப்பு மருந்துகளுக்கென ரூபாய் 25 கோடி கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

ஒருங்கிணைக்கப்பட்ட ஆய்வக மேலாண்மை

11. அனைத்து அரசு மருத்துவ மையங்களில் ஆய்வக சேவைகள் ரூபாய் 185.24 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்

“அனைவருக்கும் நலவாழ்வு” எனும் இலக்கை அடைவதற்கு ஏதுவாக, அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, அரசு மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஒருங்கிணைந்த அவசிய ஆய்வக சேவைகளுக்கு வேதிப் பொருட்கள் மற்றும் ஆய்வக நுகர் பொருட்கள் (Laboratory reagent and consumables for Integrated Essential Laboratory Services) ரூபாய் 185.24 கோடி மதிப்பீட்டில் தேசிய நலவாழ்வுக் குழும நிதியில் வழங்கப்படும்.

புத்தாக்கம் பெறும் பொது சுகாதார ஆய்வகங்கள்

12. 50 வட்டாரங்களில் வட்டார பொது சுகாதார அலகுகளுக்கான புதிய கட்டடங்கள் ரூபாய் 40.44 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்

“மக்களைத் தேடி மருத்துவம்” திட்டத்தில் அனைவருக்கும் நலவாழ்வு எனும் இலக்கை அடைவதற்காக, ஒருங்கிணைந்த அவசிய ஆய்வக சேவைகளை வலுப்படுத்தும் வகையில் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் 50 வட்டார பொது சுகாதார அலகுகள் (Block Level Public Health Units) அமைப்பதற்கான புதிய கட்டடங்கள் ரூபாய் 40.44 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

புதுப்பொலிவடையும் மருத்துவமனை ஆய்வகங்கள்

13. 8 மாவட்டங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் புதிய ஒருங்கிணைந்த ஆய்வகங்கள் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்

தமிழ்நாட்டில் ஆய்வக சேவைகளை வலுப்படுத்தும் விதமாக கோவில்பட்டி, காஞ்சிபுரம், பாலக்கோடு, கோபிசெட்டிபாளையம்,

சீர்காழி, மன்னார்குடி, வேதாரண்யம் மற்றும் குன்னூர் ஆகிய 8 அரசு மருத்துவமனைகளில் புதிய ஒருங்கிணைந்த ஆய்வகங்கள் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

சுகாதார மேம்பாட்டில் ஊராட்சி மன்றங்கள்

14. அனைத்து துணை சுகாதார நிலையங்களில் "மக்கள் நலவாழ்வு குழு" ஏற்படுத்தப்படும்

அனைத்து துணை சுகாதார நிலையத்திற்குட்பட்ட பகுதிகளின் சுகாதார மேம்பாடு மற்றும் மேலாண்மை நடவடிக்கைக்காக அந்தந்த ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் கிராம சுகாதார செவிலியர்/இடைநிலை சுகாதார செவிலியர்கள் ஆகியோர் உள்ளடங்கிய "மக்கள் நலவாழ்வுக் குழு" ஏற்படுத்தப்படும்.

இருதய நலமும், எழுச்சிபெறும் மருத்துவமும்

15. மாரடைப்பினால் ஏற்படும் உயிரிழப்பினைத் தடுக்கும் பொருட்டு இருதய பாதுகாப்பு மருந்துகள் ரூபாய் 3.37 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்

மாரடைப்பு ஏற்படுவதற்கான அதிக சாத்தியக்கூறு உள்ள நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்த நோயாளிகளுக்கு மாரடைப்பின் அறிகுறிகள் ஏற்படும் சூழ்நிலையில் உயிர்காக்கும் இருதய பாதுகாப்பு மருந்துகளை (Emergency Loading Dose) காலதாமதமின்றி சரியான நேரத்தில் உடனடியாக அளித்து உயிரிழப்பினைத் தடுத்திட ரூபாய் 3.37 கோடி மதிப்பிலான மருந்துகள் வழங்கப்படும்.

III—மருத்துவக் கட்டமைப்புகள்

புதிய கட்டடங்களும், சுகாதார மேம்பாடும்

16. 29 அரசு மருத்துவமனைகளுக்கு புதிய கட்டடங்கள் ரூபாய் 161.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்

தமிழ்நாட்டில் 298 அரசு மருத்துவமனைகள் சுகாதார சேவைகளை வழங்கி வருகின்றன. கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களின் சுகாதாரத் தேவைகளை மேம்படுத்தும் பொருட்டு அணைக்கட்டு, திருக்கழுக்குன்றம், திட்டக்குடி, விருத்தாசலம், புவனகிரி, சிதம்பரம், பாப்பிரெட்டிப்பட்டி, பண்ருட்டி,

சங்கராபுரம், வேடசந்தூர், அந்தியூர், குலசேகரம், குத்தாலம், நாகூர், கீழக்கரை, சோளிங்கர், பேராவூரணி, பந்தலூர், தண்டராம்பட்டு, ஆரணி, செய்யாறு, வெம்பாக்கம், வந்தவாசி, விளாத்திகுளம், ஜல்லிப்பட்டி, கூத்தாநல்லூர், செஞ்சி மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய 28 அரசு மருத்துவமனைகளுக்கு புதிய கட்டடங்கள் ரூபாய் 161.20 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும். மேலும், கோயம்புத்தூர் மாவட்டம்-வால்பாறை அரசு மருத்துவமனையில் அமைந்துள்ள மருத்துவர் மற்றும் செவிலியர்களுக்கான குடியிருப்பு கட்டடங்கள் சீரமைக்கப்படும்.

கலைஞர் நினைவு பன்னோக்கு மருத்துவமனைக்கு சீர்நோக்கு உபகரணங்கள்

17. சென்னை கிண்டி கிங் நோய்த் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் அமைந்துள்ள கலைஞர் நினைவு பன்னோக்கு மருத்துவமனைக்கு ரூபாய் 146.52 கோடி மதிப்பீட்டில் நவீன மருத்துவ உபகரணங்கள் வழங்கப்படும்

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 3-6-2021 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கிணங்க ரூபாய் 230 கோடி மதிப்பீட்டில், சென்னை கிண்டி கிங் நோய்த் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில், ஏழை எளிய மக்களின் நலன் கருதி 1000 படுக்கை வசதிகளுடன் புதியதாக அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நினைவு பன்னோக்கு மருத்துவமனைக்கு ரூபாய் 146.52 கோடி மதிப்பீட்டில் நவீன உயர் சிறப்பு மருத்துவ உபகரணங்கள் வழங்கப்படும்.

சென்னை அரசு பல் மருத்துவமனைக்கு சீர்மிகு விடுதி

18. சென்னை—அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூபாய் 64.90 கோடி மதிப்பீட்டில் புதிய மாணவியர் விடுதி கட்டப்படும்

சென்னை—அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், ரூபாய் 64.90 கோடி மதிப்பீட்டில், 620 மாணவியர் தங்குவதற்கு ஏற்ப அனைத்து வசதிகளுடன்கூடிய புதிய மாணவியர் விடுதி கட்டப்படும்.

ஊரகப் பகுதிகளும், உயர்வான மருத்துவக் கட்டமைப்பும்

19. 52 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கூடுதல் கட்டடங்கள் ரூபாய் 62.40 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்

தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் 1,808 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் சுகாதாரச் சேவைகளை வழங்கி வருகின்றன. கிராமப்புற சுகாதார மக்களின் சேவைகளை மேம்படுத்தும் பொருட்டு 52 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கூடுதல் கட்டடங்கள் ரூபாய் 62.40 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

மழலையர் மருத்துவமனை மேம்பாடு

20. சென்னை—எழும்பூர், அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் பன்னோக்கு உயர் சிறப்பு சிகிச்சை பிரிவு கட்டடம் ரூபாய் 53 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்

சென்னை-எழும்பூர், அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் பன்னோக்கு உயர் சிறப்பு சிகிச்சைப் பிரிவு கட்டடம் ரூபாய் 53 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

ஊரகப் பகுதிகளுக்கு உரிய மருத்துவ கட்டடங்கள்

21. 136 துணை சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் ரூபாய் 49.30 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்

கிராமப்புற மக்களின் சுகாதாரத் தேவைகளை மேம்படுத்தும் வகையில் ஊரகப் பகுதிகளில் சிதிலமடைந்த மற்றும் வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டுவரும் 136 துணை சுகாதார நிலையங்களுக்கு கிராமப்புற சுகாதார செவிலியர்களுக்கான குடியிருப்புடன்கூடிய துணை சுகாதார நிலைய புதிய கட்டடங்கள் ரூபாய் 49.30 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

சேலம் அரசு மருத்துவமனையில் செவிலியர் பயிற்சிப் பள்ளி

22. சேலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு செவிலியர் பயிற்சிப் பள்ளி கட்டடம் ரூபாய் 35.15 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்

சேலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 300 மாணவிகளுக்கான விடுதியுடன்கூடிய செவிலியர் பயிற்சிப் பள்ளி கட்டடம் ரூபாய் 35.15 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

நோயைக் கண்டறிய நுட்பமான உபகரணங்கள்

23. அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு நவீன மருத்துவ உபகரணங்கள் ரூபாய் 30.27 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்

கிராமப்புற மக்களின் சுகாதாரத் தேவைகளை மேம்படுத்தும் பொருட்டு, அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு நவீன மருத்துவ உபகரணங்கள் ரூபாய் 30.27 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

மூன்று மருத்துவமனைகளில் முன்னோடி மருத்துவக் கட்டடங்கள்

24. மூன்று அரசு மருத்துவமனைகளுக்கு கூடுதல் கட்டடங்கள் ரூபாய் 27 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்

மன்னார்குடி அரசுத் தலைமை மருத்துவமனை, தேன்கனிகோட்டை மற்றும் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைகளுக்கு கூடுதல் கட்டடங்கள் தலா ரூபாய் 9 கோடி வீதம் ரூபாய் 27 கோடி செலவில் கட்டப்படும்.

மதுரை, நெல்லை, தஞ்சை மாவட்டங்களும், மருந்துக் கிடங்குகளும்

25. 3 மாவட்டங்களில் புதிய மருந்துக் கிடங்குகள் ரூபாய் 18 கோடி மதிப்பீட்டில் கூடுதலாக நிறுவப்படும்

மதுரை, திருநெல்வேலி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின்கீழ் செயல்பட்டுவரும் மருந்துக் கிடங்குகளுக்கு கூடுதலாக 3 புதிய கிடங்குகள் ரூபாய் 18 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

உலகத்தரம் வாய்ந்த எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவிகள்

26. இரண்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் புதிய "எம்.ஆர்.ஐ. ஸ்கேன்" (MRI) ரூபாய் 17 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்

அரியலூர் மற்றும் கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் புதிய "எம்.ஆர்.ஐ. ஸ்கேன்" (MRI) ரூபாய் 17 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

சீர் பெறும் அண்ணா சித்த மருத்துவக் கல்லூரி

27. சென்னை—அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கூடுதல் கட்டமைப்பு வசதிகள் ரூபாய் 5.09 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்

சென்னை–அரசு அறிஞர் அண்ணா சித்த மருத்துவமனையுடன் இணைந்த அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், உட்கட்டமைப்பை மேம்படுத்தும் பொருட்டு பட்ட மேற்படிப்பு கட்டடத்தில் நவீன மருத்துவ உபகரணங்களுடன் கூடுதலாக ஒரு தளமும் (PG Block), சித்த மருத்துவம் மற்றும் யுனானி மருத்துவ மாணவியருக்காக விடுதியில் கூடுதலாக ஒரு தளமும் ரூபாய் 5.09 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

கோவை மருத்துவமனைக்கு நீராவி சலவை வசதி

28. கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நீராவி சலவை (Steam Laundry) வசதி ரூபாய் 2.45 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்

கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நவீனமயமாக்கப்பட்ட உபகரணங்களுடன்கூடிய நீராவி சலவை (Steam Laundry) வசதிகள் ரூபாய் 2.45 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

கன்னியாகுமரி அரசு மருத்துவமனைக்கு நவீன உள்கட்டமைப்பு

29. கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நவீன மருத்துவ உபகரணங்களுடன் உள்கட்டமைப்பு வசதிகள் ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்

கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூபாய் 55 இலட்சம் மதிப்பிலான பொது அறுவை சிகிச்சைக்கான நவீன மருத்துவ உபகரணங்களுடன் உள்கட்டமைப்பு வசதிகள் ரூபாய் 1.45 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டு மொத்தம் ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

இயற்கை வளமும் சுகாதார கட்டமைப்பும்

30. மதுரை அரசு ராஜாஜி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இயற்கை எரிவாயு நிலையம் (Bio–Gas Plant) மற்றும் திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (STP/ETP) ரூபாய் 1.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்

சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும்வண்ணம் மதுரை அரசு ராஜாஜி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இயற்கை எரிவாயு நிலையம் (Bio-Gas Plant) ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டிலும், திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (STP/ETP) ரூபாய் 1 கோடி மதிப்பீட்டிலும் அமைக்கப்படும்.

IV–புற்றுநோய் மருத்துவ சேவைகள்

காஞ்சிபுரம்—அண்ணா மருத்துவமனைக்கு நவீன உபகரணங்கள்

31. காரப்பேட்டை அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனைக்கு அதிநவீன மருத்துவ உபகரணங்கள் ரூபாய் 32 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்

காஞ்சிபுரம் மாவட்டம், அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனை ரூபாய் 218.46 கோடி மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்பட்டு வருகிறது. மேலும், புற்றுநோய் சிகிச்சைக்குத் தேவையான அதிநவீன மருத்துவ உபகரணங்கள் கூடுதலாக ரூபாய் 32 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

புற்றுநோயும் உயர் இரக மகத்தான சேவைகளும்

32. புற்றுநோய் கீமோதெரபி மருந்துகளுக்கு கூடுதலாக ரூபாய் 10 கோடி வழங்கப்படும்

புற்றுநோய்களால் ஏற்படும் இறப்பினைத் தவிர்க்கவும், அவர்களுக்கு உரிய சிகிச்சை வழங்கி வாழ்வை மேம்படுத்தவும், உயிர் காக்கும் உயர்ரக புற்றுநோய்க்கான கீமோதெரபி மருந்துகள் கொள்முதல் செய்ய தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்திற்கு கூடுதலாக ரூபாய் 10 கோடி வழங்கப்படும்.

புற்றுநோய் மருத்துவமனையும் புனரமைப்பும்

33. பாலரெங்காபுரம் அரசு புற்றுநோய் மருத்துவமனை ரூபாய் 4.61 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்

மதுரை மாவட்டம்-பாலரெங்காபுரம் அரசு புற்றுநோய் மருத்துவமனை புதிய உட்கட்டமைப்பு மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு வசதியுடன் ரூபாய் 4.61 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

புதிய பாய்ச்சலோடு புற்றுநோய் பரிசோதனை

34. ஈரோடு, திருப்பத்தூர், கன்னியாகுமரி மற்றும் ராணிப்பேட்டை ஆகிய 4 மாவட்டங்களில் சமூக அளவிலான புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகள் ரூபாய் 3.31 கோடி செலவில் செயல்படுத்தப்படும்

*ஈரோடு, திருப்பத்தூர், கன்னியாகுமரி மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களில் உள்ள துணை சுகாதார நலவாழ்வு மையங்களில் (*HWC-HSCs*), "சமூக அளவிலான புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகள்" இடைநிலை சுகாதார பணியாளர்கள் (*MLHP*) மூலம் நடப்பாண்டில் ரூபாய் 3.31 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.*

V–நகர்ப்புற நலவாழ்வு

நகர்ப்புற சுகாதார மேம்பாடு

35. 200 புதிய நகர்ப்புற துணை சுகாதார நிலையங்கள் ரூபாய் 80 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்

அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குட்பட்ட நகர்ப்புற துணை சுகாதாரப் பகுதியில் செவிலியர்கள் தடுப்பூசி உள்ளிட்ட மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலத் திட்ட பணிகளைச் சிறப்பாகச் செயல்படுத்த ஒரு தனி கட்டமைப்பு அவசியப்படுகிறது. எனவே, 38 மாவட்டங்களில் 200 புதிய நகர்ப்புற துணை சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கான கட்டடங்கள் ரூபாய் 80 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

நகர்ப்புறங்களில் மேம்படும் சுகாதார சேவைகள்

36. 51 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் ரூபாய் 61.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்

2023 ஏப்ரல் 18] [திரு. மா. சுப்பிரமணியன்]

அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் அனைவருக்கும் நல்வாழ்வு திட்டத்தின்கீழ் உள்ள 12 ஒருங்கிணைந்த சுகாதார சேவைகளைத் திறம்பட வழங்க வலுவான கட்டமைப்பு அவசியம். எனவே, அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களின் கட்டமைப்பை மேம்படுத்தும் பொருட்டு 51 அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் ரூபாய் 61.20 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

சுகாதாரச் சீரமைப்பில் கூடுதல் கட்டடங்கள்

37. 40 அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கூடுதல் கட்டடங்கள் ரூபாய் 24 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்

அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் பல்வேறு சேவைகளைச் சிறப்பாகச் செயல்படுத்த கூடுதல் கட்டமைப்பு அவசியப்படுகிறது. ஆகவே, அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலச் சேவைகளுக்கான கட்டமைப்பை மேம்படுத்தும் பொருட்டு 40 அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கூடுதல் கட்டடங்கள் ரூபாய் 24 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

நகர்ப்புற மருத்துவ நிலையங்களுக்கு நவீன கருவிகள்

38. நகர்ப்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு Ultrasound Scan, Semi Auto Analyzer, ECG மற்றும் Cell Counter கருவிகள் ரூபாய் 8.65 கோடி செலவில் வழங்கப்படும்

தமிழ்நாட்டின் நகர்ப்புறங்களில் வாழும் பொதுமக்களுக்கான சிறப்பு மருத்துவத் தேவையைக் கருத்தில் கொண்டு, அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 50 Ultrasound Scan கருவிகள் ரூபாய் 6 கோடி மதிப்பீட்டிலும், 100 Cell Counter கருவிகள் ரூபாய் 1.50 கோடி மதிப்பீட்டிலும், 80 Semi Auto Analyzer கருவிகள் ரூபாய் 80 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் 50 ECG கருவிகள் ரூபாய் 35 இலட்சம் மதிப்பீட்டிலும் வழங்கப்படும்.

VI—மகப்பேறு மருத்துவ சேவைகள்

தாய்மார்கள் நலம் காக்கும் தரமான மகப்பேறு கட்டமைப்பு

39. 13 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மகப்பேறு தீவிர சிகிச்சைப் பிரிவுகள் ரூபாய் 6.88 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்

அரியலூர், திண்டுக்கல், கள்ளக்குறிச்சி, கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், நாமக்கல், நீலகிரி, திருவள்ளூர், விருதுநகர், இராமநாதபுரம், திருப்பூர், கடலூர் மற்றும் ஈரோடு ஆகிய 13 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு 6 படுக்கைகள் கொண்ட பிரத்யேக மகப்பேறு தீவிர சிகிச்சை/உயர் சார்பு பிரிவுகள் ரூபாய் 6.88 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

மகத்தான மகப்பேறு சேவைகள்

40. லக்ஷ்யா திட்டத்தின்கீழ் 188 மகப்பேறு அறைகள் ரூபாய் 6.08 கோடி செலவில் வலுப்படுத்தப்படும்

அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் அனைத்து கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் மரியாதையுடன்கூடிய தரமான மகப்பேறு பராமரிப்பு சேவைகளை உறுதிசெய்யும் வகையில் லக்ஷ்யா திட்டத்தின்கீழ் 188 மகப்பேறு அறைகளின் தரம் ரூபாய் 6.08 கோடி செலவில் வலுப்படுத்தப்படும்.

விஜயபுரம் மகப்பேறு மருத்துவமனைக்கு புதிய கட்டடம்

41. திருவாரூர் மாவட்டம்—விஜயபுரம் அரசு மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனைக்கு புதிய கட்டடம் ரூபாய் 6 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்

திருவாரூர் மாவட்டம்-விஜயபுரம் அரசு மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனைக்கு புதிய கட்டடம் ரூபாய் 6 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

இரத்தப்போக்கைத் தடுக்கும் உயிர் காக்கும் கருவி

42. பேறுகாலத்திற்குப் பின் ஏற்படும் இரத்தப்போக்கிற்கான சிகிச்சைக்கு ரூபாய் 2.98 கோடி செலவில் நவீன உபகரணங்கள் வழங்கப்படும்

பேறுகாலத்திற்குப் பின் ஏற்படும் இரத்தப்போக்கு மகப்பேறு இறப்பிற்கு முக்கிய காரணமாக உள்ளது. இதை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை வழங்குவதற்கான உயிர்காக்கும் உபகரணங்கள் (Blood Collection Drape and Uterine Tamponade) 385 வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 42 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூபாய் 2.98 கோடி செலவில் வழங்கப்படும்.

சுகப்பிரசவமும், செவிலியர் மேற்பார்வையும்

43. பாதுகாப்பான மகப்பேறு மற்றும் சுகப்பிரசவங்களை ஊக்குவிக்கும் வகையில் மகப்பேறு செவிலியர் வழிநடத்தும் பராமரிப்பு மற்றும் பயிற்சி பிரிவு உருவாக்கப்படும்

தற்போது தமிழ்நாட்டில் 40 சதவீதம் பிரசவங்கள் அறுவை சிகிச்சைமூலம் நடைபெறுகின்றன. எனவே, சுகப்பிரசவங்களை அதிகரிக்கும் வகையில் "மகப்பேறு செவிலியர் வழிநடத்தும் பராமரிப்பு மற்றும் பயிற்சிப் பிரிவு" (Midwifery Led Care and Training Unit-MLCU) அரசு கஸ்தூரிபா காந்தி தாய் சேய் நல மருத்துவமனையில் ரூபாய் 51.95 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

மகப்பேறு மருத்துவமும், மென்பொருள் சீரமைப்பும்

44. கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் பச்சிளம் குழந்தைகளைத் தொடர்ந்து கண்காணித்திடும் வகையில் தற்போது செயல்பட்டு வரும் மகப்பேறு மற்றும் சிசு கண்காணிப்பு மென்பொருள் (PICME) தரம் உயர்த்தி மறுசீரமைக்கப்படும்

கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் பச்சிளம் குழந்தைகளைத் தொடர்ந்து கண்காணித்திடும் வகையில் தற்போது செயல்பட்டு வரும் மகப்பேறு மற்றும் சிசு கண்காணிப்பு மென்பொருள் (PICME) தரம் உயர்த்தி மறுசீரமைக்கப்படும்.

VII—பச்சிளங்குழந்தை பராமரிப்பு சேவைகள்

இல்லங்களில் இளந்தளிர் பராமரிப்பு சேவை

45. அனைத்து மாவட்டங்களிலும் ஆஷா மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்கள் இணைந்து இரண்டு வயது வரை உள்ள

[திரு. மா. சுப்பிரமணியன்] [2023 ஏப்ரல் 18

குழந்தைகள் நலனைத் தொடர்ந்து கண்காணிக்கும் வகையில் "இல்லங்களிலேயே இளம் குழந்தைகளுக்கான பராமரிப்பு சேவைகள்" (Home Based Young Child Care–HBYC) செயல்படுத்தப்படும்

*தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் ஆஷா மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்கள் இணைந்து இரண்டு வயது வரை உள்ள குழந்தைகளைத் தொடர்ந்து கண்காணிக்கும் வகையில் இல்லங்களிலேயே இளம் குழந்தை பராமரிப்பு சேவைகள் (*Home Based Young Child Care–HBYC*) செயல்படுத்தப்படும். இரண்டு வயது வரையுள்ள இளம் குழந்தைகளின் முழுமையான மற்றும் ஆரோக்கியமான வளர்ச்சியை உறுதிசெய்யும் வகையில் குறைந்தது ஐந்து முறை இல்லங்களில் சந்தித்து பராமரிப்பு சேவைகள் வழங்கப்படும்.*

பச்சிளம் குழந்தைகளை காக்கும் சீர்மிகு மருத்துவம்

46. பாதுகாப்பான தாய் சேய் நல சேவைகளை மேம்படுத்திட மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துகள் உள்ளடங்கிய 553 கிராஷ் கார்ட்கள் (Crash Cart), பச்சிளங்குழந்தைகள் சிகிச்சைக்கான 16 வென்டிலேட்டர் கருவிகள் (Neonatal Ventilators), 6 உயர்ரக அதிநவீன வென்டிலேட்டர் (High Frequency Oscillatory Neonatal Ventilators) கருவிகள் மற்றும் 150 ஆக்ஸிஜன் பிளெண்டர் (Oxygen Blenders) கருவிகள் ரூபாய் 6.56 கோடி செலவில் வழங்கப்படும்

*தமிழ்நாட்டிலுள்ள 553 முதல் நிலை பரிந்துரை மையங்களுக்கு (*First Referral Unit*) மகப்பேறு சார்ந்த அவசர சிகிச்சைக்காக ரூபாய் 1.10 கோடி மதிப்பீட்டிலான மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துகள் உள்ளடங்கிய 553 கிராஷ் கார்ட் (*Crash Cart*),*

*சுவாசப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ள பச்சிளங்குழந்தைகளின் இறப்பினைக் குறைப்பதற்கு எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனை, சென்னை அரசு தாய் சேய் நல மருத்துவமனை மற்றும் கடலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ள சிறப்பு பச்சிளங்குழந்தை பராமரிப்புப் பிரிவுகளுக்கு ரூபாய் 2.4 கோடி மதிப்பீட்டில் 16 வென்டிலேட்டர் (*Neonatal Ventilator*) கருவிகள்,*

சென்னையிலுள்ள அரசு குழந்தை நல மருத்துவமனை மற்றும் அரசு தாய் சேய் நல மருத்துவமனை, திருச்சி, கோயம்புத்தூர், தருமபுரி மற்றும் சேலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு ரூபாய் 1.56 கோடி மதிப்பீட்டில் 6 உயர்ரக அதிநவீன பச்சிளங்குழந்தை வென்டிலேட்டர் (High Frequency Oscillatory Neonatal Ventilator) கருவிகள் மற்றும் 75 சிறப்பு பச்சிளங்குழந்தை பராமரிப்புப் பிரிவுகளுக்கு ரூபாய் 1.50 கோடி மதிப்பீட்டில் 150 ஆக்ஸிஜன் பிளெண்டர் (Oxygen Blender) கருவிகள் வழங்கப்படும்.

பச்சிளங்குழந்தைகளைப் பராமரிக்கும் உபகரணங்கள்

47. 75 சிறப்பு பச்சிளங்குழந்தை பராமரிப்புப் பிரிவுகளுக்கு உயிர் காக்கும் அதிநவீன மருத்துவ உபகரணங்கள் ரூபாய் 4.76 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்

தமிழ்நாட்டில் சிசு மரண விகிதத்தை மேலும் குறைப்பதற்கு 75 சிறப்பு பச்சிளங்குழந்தை பராமரிப்புப் பிரிவுகளுக்கு (SNCU) உயிர் காக்கும் அதிநவீன மருத்துவ உபகரணங்கள் ரூபாய் 4.76 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

நம் வீடு, இரத்தசோகை இல்லா தமிழ்நாடு

48. குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினருக்கு இரத்தசோகை கண்டறியும் வகையில் 820 ஹீமோகுளோபினோமீட்டர் கருவிகள் ரூபாய் 3.94 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்

"இரத்தசோகை இல்லா தமிழ்நாடு" எனும் இலக்கை எய்திடும் வகையில் தேசிய சிறார் நலத் திட்டத்தின்கீழ் (RBSK) இயங்கும் 820 மருத்துவக் குழுவினரின்மூலம் 6 மாதம் முதல் 6 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு அங்கன்வாடி மையங்களிலும், 6 வயது முதல் 18 வயது உள்ளடக்கிய குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினருக்கு பள்ளிகளிலும் இரத்தசோகையைக் கண்டறிய ஹீமோகுளோபினோமீட்டர் (Hemoglobinometer) கருவிகள் ரூபாய் 3.94 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

தாய் மற்றும் பச்சிளங்குழந்தை பராமரிப்புப் பிரிவு

49. நான்கு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் "தாய் மற்றும் பச்சிளங்குழந்தை சிறப்பு கவனிப்புப் பிரிவு" (MNCU) ரூபாய் 3.44 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்

[திரு. மா. சுப்பிரமணியன்] [2023 ஏப்ரல் 18

திருச்சி, திருவண்ணாமலை, கோயம்புத்தூர் மற்றும் தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலுள்ள பச்சிளங்குழந்தைகளுக்கான சிறப்பு சிகிச்சை மையங்களில் குழந்தையுடன், தாயையும் உடன் அனுமதித்து கவனிக்கும் வகையில் 20 படுக்கைகள் கொண்ட தாய் மற்றும் பச்சிளங்குழந்தை சிறப்பு கவனிப்பு பிரிவு (MNCU) ரூபாய் 3.44 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

பச்சிளங்குழந்தைகளுக்கு பன்னோக்கு சிகிச்சை

50. இரண்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் கூடுதல் சிறப்பு பச்சிளங்குழந்தை பராமரிப்புப் பிரிவுகள் அமைத்திடவும் மற்றும் மூன்று அரசு மருத்துவமனைகளிலுள்ள சிறப்பு பச்சிளங்குழந்தைகள் பராமரிப்பு மையங்களுக்கு அதிநவீன உயிர் காக்கும் உபகரணங்கள் வழங்கிடவும் ரூபாய் 2.91 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்

வேலூர் மற்றும் விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு வெவ்வேறு மருத்துவ நிலையங்களிலிருந்து உயர் சிகிச்சைக்காகப் பரிந்துரைக்கப்படும் பச்சிளங்குழந்தைகளின் தேவையைக் கருதி ரூபாய் 1.34 கோடி மதிப்பீட்டில் கூடுதல் சிறப்பு பச்சிளங்குழந்தை பராமரிப்புப் பிரிவுகள் அமைக்கப்படும். மேலும், கோயம்புத்தூர் மாவட்டம்-மேட்டுப்பாளையம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்-திருவரங்கம் அரசு மருத்துவமனைகளிலும் மற்றும் திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் புதியதாக நிறுவப்பட்டு உள்ள 3 சிறப்பு பச்சிளங்குழந்தைகள் பராமரிப்பு மையங்களுக்கு அதிநவீன உயிர் காக்கும் உபகரணங்கள் ரூபாய் 1.57 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

சிறார் நலத் திட்டமும், மருத்துவப் பெட்டகங்களும்

51. 5 மாவட்ட தொடக்கநிலை இடையீட்டு மையங்களுக்கு ரூபாய் 1.40 கோடி மதிப்பீட்டிலான உபகரணங்களும் மற்றும் அனைத்து மாவட்ட தொடக்கநிலை இடையீட்டு மையங்களுக்கு ரூபாய் 11.75 இலட்சம் செலவில் இளம் சிசு வளர்ச்சி கண்காணிப்பு உபகரணங்களும் வழங்கப்படும்

தேசிய சிறார் நலத் திட்டத்தின்கீழ், கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருப்பத்தூர், காஞ்சிபுரம்,

தென்காசி மற்றும் வாலாஜா ஆகிய 4 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் செயல்படும் மாவட்ட தொடக்கநிலை இடையீட்டு மையங்களுக்கு ரூபாய் 1.40 கோடி மதிப்பீட்டிலான உபகரணங்களும், 39 மாவட்ட தொடக்கநிலை இடையீட்டு மையங்கள் மற்றும் 8 மண்டல பயிற்சி மையங்களுக்கு ரூபாய் 11.75 இலட்சம் செலவில் இளம் சிசு வளர்ச்சி கண்காணிப்பு உபகரணங்களும் வழங்கப்படும்.

தனிச்சிறப்பு மருத்துவமும், தாய்ப்பால் வங்கிகளும்

52. அரசு மருத்துவமனைகளில் செயல்படும் 27 தாய்ப்பால் வங்கிகளுக்கு நவீன மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டு, வலுப்படுத்தப்படும்

தமிழ்நாட்டில் 27 தாய்ப்பால் மேலாண்மை மையங்களும், 20 தாய்ப்பால் அலகுகளும் நிறுவப்பட்டு ஆண்டுதோறும் சுமார் முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட எடை குறைந்த குறைமாத குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர். இந்தத் தாய்ப்பால் வங்கிகளை மேம்படுத்தும் வகையில் ரூபாய் 81 இலட்சம் மதிப்பீட்டிலான உபகரணங்கள் வழங்கப்படும்.

உதயமாகும் உணர்வுத் திறன் பூங்கா

53. ஐந்து மாவட்டங்களில் "ஒருங்கிணைந்த உணர்வுத் திறன் பூங்கா" அமைக்கப்படும்

கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் காஞ்சிபுரம், திருப்பத்தூர், தென்காசி, வாலாஜாபேட்டை ஆகிய 4 அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் உள்ள மாவட்ட தொடக்கநிலை இடையீட்டு மையங்களில் "ஒருங்கிணைந்த உணர்வுத் திறன் பூங்கா" (Sensory Integration Park) அமைக்கப்படும்.

சிங்காரச் சென்னையில் சிசுவிற்கு சிறப்புப் பிரிவு

54. சென்னை மாநகராட்சியில் 4 புதிய பச்சிளங்குழந்தை நிலைப்படுத்துதல் பிரிவுகள் ஏற்படுத்தப்படும்

பச்சிளங்குழந்தை பராமரிப்புக்காக சென்னை மாநகராட்சியில் சைதாப்பேட்டை, செனாய் நகர், பெருமாள்பேட்டை மற்றும்

அடையாறு ஆகிய 4 மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையங்களில் புதிய பச்சிளங்குழந்தை நிலைப்படுத்துதல் பிரிவுகள் (New Born Stabilization Units–NBSU) ஏற்படுத்தப்படும்.

VIII–வளரிளம் பருவத்தினருக்கான சேவைகள்

இரத்தசோகை இல்லா நற்றமிழ் நாடு

55. வளரிளம் பருவத்தினருக்காக 25,000 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படும்

வளரிளம் பருவத்தினர் நல்வாழ்வை மேம்படுத்திடும் வகையில் 25,000 சிறப்பு மருத்துவ முகாம்கள் அனைத்து மாவட்டங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் மாதத்திற்கு ஒரு முகாம் என்ற அளவில் நடத்தப்படும். இந்த முகாம்களில் 10 முதல் 19 வயதிற்குட்பட்ட வளரிளம் பருவத்தினருக்கு சுகாதார ஆலோசனைகள், விழிப்புணர்வு மற்றும் இரத்தசோகைக்கான பரிசோதனைகள் உள்ளிட்ட அனைத்து சிறப்புப் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படும்.

ஆசிரியர்களும், சுகாதார பயிற்சிகளும்

56. வளரிளம் பருவத்தினருக்கான நலவாழ்வுத் திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களில், தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு பள்ளி சுகாதார தூதுவர்களுக்கான பயிற்சியும், வளரிளம் பள்ளி மாணவர்களுக்கு சுகாதாரப் பயிற்சி கையேடு மற்றும் இதர பொருட்களும் வழங்கப்படும்

*அனைவருக்கும் நலவாழ்வு எனும் நோக்கில் வளரிளம் பருவத்தினருக்கான நலவாழ்வுத் திட்டம் செயல்படுத்தப்படும் 8 மாவட்டங்களிலும், பள்ளி சுகாதார தூதுவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு (*School Health Ambassadors*) "வளரிளம் பருவத்தினரின் சுகாதார மற்றும் நலவாழ்வு குறித்த பயிற்சி" வழங்கப்படும். மேலும் வளரிளம் பருவ சகவயது பயிற்றுநர்களுக்கு (*Peer Educator*) "பயிற்சி கையேடு மற்றும் இதர பொருட்கள்" சுமார் ரூபாய் 2.37 கோடி செலவில் வழங்கப்படும்.*

IX–சிறுநீரகப் பராமரிப்பு சேவைகள்

சிறுநீரகங்களைக் காக்கும் கருவிகள்

57. மதுரை அரசு ராஜாஜி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நவீன சிறுநீரக கல் அகற்றும் மருத்துவ உபகரணம் ரூபாய் 3.50 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்

*மதுரை அரசு ராஜாஜி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நவீன முறையில் சிறுநீரக கல் அகற்றும் மருத்துவ உபகரணம் (*ExtraCorporeal Shock Wave Lithotripsy*) ரூபாய் 3.50 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.*

இரத்த சுத்திகரிப்பும், சிறுநீரக பாதுகாப்பும்

58. அரசு மருத்துவமனைகளில் 50 இரத்த சுத்திகரிப்பு (Dialysis) உபகரணங்கள் ரூபாய் 3.25 கோடி செலவில் நிறுவப்படும்

*வந்தவாசி, திட்டக்குடி, குளித்துறை, சாத்தூர் அரசு மருத்துவமனைகள் உள்ளிட்ட அரசு மருத்துவமனை மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் 50 இரத்த சுத்திகரிப்பு (*Dialysis*) உபகரணங்கள் ரூபாய் 3.25 கோடி செலவில் நிறுவப்படும்.*

சுய டயாலிஸிஸ்கான திரவப் பைகள்

59. "மக்களைத் தேடி மருத்துவம்" திட்டத்தின்கீழ் சுய இரத்த சுத்திகரிப்புக்கான CAPD Bags ரூபாய் 3.01 கோடி செலவில் கூடுதலாக வழங்கப்படும்

நாள்பட்ட சிறுநீரக செயலிழப்பு நோயாளிகளின் நலனுக்காக "மக்களைத் தேடி மருத்துவம்" திட்டத்தின்கீழ் தொடர் சுய இரத்த சுத்திகரிப்புக்கான CAPD Bags *ரூபாய் 3.01 கோடி செலவில் கூடுதலாக வழங்கப்படும்.*

சிறுநீரகம் காக்கும் சீர்மிகு மருத்துவம்

60. சிறுநீரக செயலிழப்பை ஆரம்ப நிலையிலேயே கண்டறியும் பரிசோதனை ரூபாய் 2 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்

சிறுநீரில் வெளியேறும் புரதத்தின் அடிப்படையில் ஆரம்ப நிலையிலேயே சிறுநீரக செயலிழப்பை கண்டறியும் பரிசோதனை

அனைத்து துணை சுகாதார நிலையங்களிலும் ரூபாய் 2 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

X–மனநல மருத்துவ சேவைகள்

போதை மனிதரை மீட்போம், புதிய பாதை அமைப்போம்

61. போதை மீட்பு சேவைகள் அதிகமாகத் தேவைப்படும் பகுதிகளைக் கண்டறிந்து உரிய மனநல ஆலோசனை, மருத்துவ சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு சேவைகள் அனைத்து நிலை மருத்துவமனைகளிலும் கிடைத்திடும் வகையில் கட்டமைப்புகள் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் வலுப்படுத்தப்படும்

போதை மீட்பு சேவைகள் அதிகமாகத் தேவைப்படும் பகுதிகளைக் கண்டறிந்து, துரிதமான உரிய சிகிச்சைகள் அளிக்கும் வகையில் அனைத்து நிலை மருத்துவமனைகளில் போதை மீட்பு மற்றும் புனர்வாழ்வு சேவைகள் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் வலுப்படுத்தப்படும். மேலும், ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள் மற்றும் களப் பணியாளர்களுக்கு போதை மீட்பு சேவை குறித்த பயிற்சிகள் வழங்கப்படும். போதை மீட்பிற்கான தொடர் சிகிச்சைகள் ஆரம்ப சுகாதார நிலைய அளவில் தொடங்கி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வரை ஒருங்கிணைந்த முறையில் வழங்கப்படும்.

மகத்தான தாய்–சேய் மனநல சேவைகள்

62. பின்பேறுகால தாய்மார்களுக்கான தாய்–சேய் மனநல சேவைகள் அனைத்து நிலை மருத்துவமனைகளிலும் ஒருங்கிணைந்து வழங்கப்படும்

குழந்தை பிறந்ததிலிருந்து ஒரு வருடத்திற்குள், பிரசவித்த தாய்மார்களில் சிலர், மனநல பிரச்சினைகளுக்கு உள்ளாக வாய்ப்புள்ளது. இவ்வகை பாதிப்பு தாய்மார்களை மட்டுமல்லாமல் குழந்தைகளின் உடல் மற்றும் மனநல வளர்ச்சியையும் பாதிக்கக்கூடும். எனவே, இத்தகைய மனநல பிரச்சினைகளிலிருந்து, பின்பேறுகால தாய்மார்களை மீட்டெடுப்பதற்காக "தாய்-சேய் மனநல சேவைகள்" அனைத்து நிலை மருத்துவமனைகளிலும் ஒருங்கிணைந்து வழங்கப்படும்.

2023 ஏப்ரல் 18] [*திரு. மா. சுப்பிரமணியன்*]

மனநல மருத்துவமும், மாநில கருத்தரங்கும்

63. மாநில அளவிலான "தமிழ்நாடு மனநல மருத்துவ கருத்தரங்கு" நடத்தப்படும்

மனநல மருத்துவர்களின் திறன் மேம்பாடு மற்றும் மனநல சேவைகள் பற்றிய ஆராய்ச்சிகளை ஊக்குவிக்கும்வகையில் தமிழ்நாடு மாநில அளவிலான கருத்தரங்கு நடத்தப்படும்.

XI—பார்வையிழப்பு தடுப்பு சேவைகள்

ஏற்றம் பெறும் எழும்பூர் கண் மருத்துவமனை

64. சென்னை "எழும்பூர்—மண்டல கண் மருத்துவவியல் நிலையத்திற்கு" ரூபாய் 8 கோடி மதிப்பீட்டில் நவீன மருத்துவ உபகரணங்கள் வழங்கப்படும்

சென்னை எழும்பூர்-மண்டல கண் மருத்துவவியல் நிலையத்திற்கு கருவிழி மாற்று அறுவை சிகிச்சை, கண் விழித்திரை சிகிச்சை மற்றும் கண் நீரழுத்த நோய் போன்ற சிறப்பு சிகிச்சைப் பிரிவுகளுக்கான அதிநவீன கண் மருத்துவ உபகரணங்கள் ரூபாய் 8 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

கண் மருத்துவமனையும், நவீன உபகரணங்களும்

65. திருநெல்வேலி, காரைக்குடி மற்றும் உசிலம்பட்டி அரசு மருத்துவமனைகளுக்கு ரூபாய் 3.25 கோடி மதிப்பீட்டில் கண் சிகிச்சைக்கான தனிப் பிரிவு சீரமைக்கப்பட்டு, நவீன உபகரணங்கள் வழங்கப்படும்

திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ரூபாய் 2.75 கோடி மதிப்பீட்டில் கண் சிகிச்சைக்கான தனிப் பிரிவு சீரமைக்கப்படும். மேலும், காரைக்குடி மற்றும் உசிலம்பட்டி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கு ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் கண் மருத்துவ சிகிச்சைக்கான நவீன உபகரணங்கள் வழங்கப்படும்.

தன்னிறைவு பெறும் கண் மருத்துவம்

66. தாம்பரம் மற்றும் திருபெரும்புதூர் அரசு மருத்துவமனைகளில் புதியதாக கண் வங்கி நிறுவப்படும் மற்றும் மாநில அளவில் கண் மருத்துவ சேவைகளைக் கண்காணிக்க புதிதாக "கண் மருத்துவ மேலாண்மை செயலி" உருவாக்கப்படும்

தாம்பரம் மற்றும் திருபெரும்புதூர் அரசு மருத்துவமனைகளில் கண் தானத்தை ஊக்குவிக்கும்விதமாக புதியதாக கண் வங்கி நிறுவப்படும். மேலும், தமிழ்நாட்டிலுள்ள அரசு, தனியார் மற்றும் தொண்டு நிறுவனங்களில் நடைபெறும் கண் மருத்துவ சேவைகளைக் கண்காணிக்க புதிதாக "கண் மருத்துவ மேலாண்மை செயலி" உருவாக்கப்படும்.

XII–பல் மருத்துவ சேவைகள்

பள்ளி மாணவர்களுக்கு புன்னகை திட்டம்

67. பள்ளி மாணவர்களின் வாய் மற்றும் பல் சுகாதாரத்தினை மேம்படுத்திடும் வகையில் புன்னகை திட்டத்தின்கீழ் "Pit and Fissure Sealant" சிறப்பு சேவைகள் வழங்கப்படும்

சென்னை மாநகராட்சியில் உள்ள 10 முதல் 12 வயதுக்குட்பட்ட அரசுப் பள்ளி மாணவர்களுக்கு வாய் மற்றும் பல் சுகாதாரத்தினை மேம்படுத்திடும் வகையில் புன்னகை திட்டத்தின்கீழ் பற்சிதைவைத் தடுப்பதற்கான "Pit and Fissure Sealant" சிறப்பு சிகிச்சை முறை செயல்படுத்தப்படும்.

மதுரை, நெல்லை, கோவை, சேலத்தில் புதிய மருத்துவக் கட்டடங்கள்

68. நான்கு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் கட்டடம் மற்றும் உபகரணங்களுடன்கூடிய பன்னோக்கு பல் மருத்துவ நிலையம் அமைக்கப்படும்

மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி ஆகிய 4 மருத்துவமனைகளில் கட்டடம் மற்றும் உபகரணங்களுடன்கூடிய பன்னோக்கு பல் மருத்துவ நிலையம் அமைக்கப்படும்.

XIII–சிறப்பு மருத்துவ சேவைகள்

உரிய சிகிச்சையும், உயிர்காக்கும் மருந்துகளும்

69. மலைவாழ் பகுதிகளில் வசிக்கும் அனைவருக்கும் ஹீமோகுளோபினோபதி நோய் கண்டறியும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும். மேலும், ஹீமோகுளோபினோபதி நோய்க்கான உயிர் காக்கும் உயர்ரக மருந்துகள் ரூபாய் 40 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்

மலைவாழ் மக்களிடையே பரவலாகக் காணப்படும் சிக்கில் செல் அனீமியா, தலசீமியா போன்ற இரத்தம் சம்பந்தப்பட்ட நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து உரிய சிகிச்சை அளித்திடும் வகையில், அனைத்து மலைவாழ் பகுதிகளில் வசிக்கும் அனைவருக்கும் "சமூக அளவிலான ஹீமோகுளோபினோபதி நோய் கண்டறியும் பரிசோதனைத் திட்டம்", நடப்பாண்டு முதல் மூன்றாண்டுகளுக்குச் செயல்படுத்தப்படும். மேலும், ஹீமோபிலியா, தலசீமியா மற்றும் இதர ஹீமோகுளோபினோபதி நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளிலும் உரிய சிகிச்சைகள் வழங்கிட ஏதுவாக, உயிர் காக்கும் உயர்ரக மருந்துகள் ரூபாய் 40 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

காசநோய் இல்லா தமிழ்நாடு

70. காசநோய் பரிசோதனைக்கான நுகர்பொருட்கள் ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் வழங்கி, அனைத்து வட்டார அளவிலும் ஒருங்கிணைந்த காசநோய் சேவைகள் வழங்கப்படும்

"காசநோய் இல்லா தமிழ்நாடு" எனும் இலக்கினை அடையும் வகையில் காசநோய்க்கான மூலக்கூறு அடிப்படையிலான பரிசோதனைவிகிதத்தைஅதிகரிக்கும்வண்ணம்பரிசோதனைக்கான வினைபொருட்கள் மற்றும் நுகர்பொருட்கள் அனைத்து மருத்துவ நிலையங்களுக்கும் ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும். மேலும், முதன்முறையாக வட்டார ஆரம்ப சுகாதார நிலைய அளவில் காசநோயைக் கண்டறிவதற்கான பரிசோதனைகள், சிகிச்சைக்கான மருந்துகள், முதலுதவிகள் உள்ளடங்கிய அனைத்து மருத்துவ சேவைகளும் ஓரிடத்தில் ஒருங்கிணைந்து கிடைத்திடும் வகையில் "Walk in Centre for TB" உருவாக்கப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு நவீன கட்டணப் படுக்கைகள்

71. ஏழு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் எட்டு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் ரூபாய் 12 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன்கூடிய "கட்டணப் படுக்கைகள்" (Pay Wards) அமைக்கப்படும்

*திருநெல்வேலி, தஞ்சாவூர், கன்னியாகுமரி, புதுக்கோட்டை, தருமபுரி, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய 7 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் பொள்ளாச்சி, கடலூர், ஈரோடு, காஞ்சிபுரம், பெரம்பலூர், கும்பகோணம், தென்காசி மற்றும் கோவில்பட்டி ஆகிய 8 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் ரூபாய் 12 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் சிகிச்சை பெற கட்டணப் படுக்கைகள் (*Pay Wards*) அமைக்கப்படும்.*

கண்ணியமான உடற்கூறாய்வுக்கான கட்டுமானப் பணிகள்

72. கொடைக்கானல், கந்தர்வகோட்டை உள்ளிட்ட அரசு மருத்துவமனைகளிலுள்ள உடற்கூறாய்வு மையங்கள் ரூபாய் 10.50 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்

கொடைக்கானல், கந்தர்வகோட்டை உள்ளிட்ட அரசு மருத்துவமனைகளிலுள்ள உடற்கூறாய்வு மையங்களின் தரத்தை சிறந்த தடயவியல் சுற்றுச்சூழல் அமைப்பின் அடிப்படையில் மேம்படுத்திட ரூபாய் 10.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

குழந்தைப் பருவ நீரிழிவும், மருத்துவ பதிவேடும்

73. குழந்தைப் பருவ நீரிழிவு நோய் (Type–I Diabetes) சிகிச்சை மற்றும் மேலாண்மைக்காக மாநில அளவிலான பதிவேடு உருவாக்கப்படும்

*தமிழ்நாட்டில் முதன்முறையாக குழந்தைப் பருவ நீரிழிவு நோய்க்கான (*Type–I Diabetes*) மாநில அளவிலான பதிவேடு உருவாக்கப்படும்.*

சென்னை மருத்துவக் கல்லூரியில் செவித்திறன் ஆய்வகம்

74. சென்னை அரசு ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் செவியெலும்பு அறுவை திறன் ஆய்வகம் (Temporal Bone Skill Lab) ரூபாய் 2.40 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்

*செவி அறுவை சிகிச்சைக்கு செவி எலும்பின் அமைப்பு, அதன் நுணுக்கமான உட்கூறியியல் மற்றும் கட்டமைப்புகள் பற்றிய முழுமையான அறிவு அவசியமாகும். ஆகவே, அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் காது, மூக்கு, தொண்டை மருத்துவரின் அறுவை சிகிச்சைத் திறனை மேம்படுத்தும் வகையில் மாநில தலைமை நிலையமான ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் செவியெலும்பு அறுவை திறன் ஆய்வகம் (*Temporal Bone Skill Lab*) ரூபாய் 2.40 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.*

எழும்பூரும், எலும்பு மஜ்ஜை சிகிச்சையும்

75. எழும்பூரில் உள்ள குழந்தைகள் மருத்துவமனையில் "குழந்தைகள் எலும்பு மஜ்ஜை மாற்று சிகிச்சைப் பிரிவிற்குத் தேவையான அதிநவீன உபகரணங்கள்" ரூபாய் 1.75 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்

குழந்தைகளைப் பாதிக்கும் இரத்தப் புற்றுநோய் மற்றும் பிற அரியவகை நோய்களுக்கான தகுந்த சிகிச்சைகள் வழங்கிடும் வகையில் எழும்பூரில் உள்ள குழந்தைகள் மருத்துவமனையில் "குழந்தைகள் எலும்பு மஜ்ஜை மாற்று சிகிச்சைப் பிரிவிற்குத் தேவையான அதிநவீன உபகரணங்கள்" ரூபாய் 1.75 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

தேசிய அங்கீகாரமும், தரச் சான்றுகளும்

76. சென்னை கிண்டி கிங் நோய்த் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு, ஆய்வகங்களுக்கான தேசிய அங்கீகார வாரியத்தின் (NABL) தரச் சான்றிதழ் பெறுவதற்காக நவீன ஆய்வக உபகரணங்கள் மற்றும் ஆய்வகக் கட்டமைப்பு ரூபாய் 1.50 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்

சென்னை கிண்டி கிங் நோய்த் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு, ஆய்வகங்களுக்கான தேசிய அங்கீகார வாரியத்தின்

(National Accredition Board for Laboratories–NABL) தரச் சான்றிதழ் பெறுவதற்காக நவீன ஆய்வக உபகரணங்கள் மற்றும் ஆய்வகக் கட்டமைப்பு ரூபாய் 1.50 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

தரம் உயரும் சிவகங்கை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை

77. சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சிறார்களுக்கான காக்லியர் உள்வைப்பு (Cochlear Implant) எனும் சிறப்பு அறுவை சிகிச்சைக்கான நவீன மருத்துவ உபகரணங்கள் வழங்கப்படும்

சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ரூபாய் 94 இலட்சம் மதிப்பீட்டில் சிறார்களுக்கான காக்லியர் உள்வைப்பு (Cochlear Implant) எனும் சிறப்பு அறுவை சிகிச்சைக்கான நவீன மருத்துவ உபகரணங்கள் வழங்கப்படும்.

வியத்தகுவண்ணம் நவீனத்தில் சிறந்தோங்கும் மருத்துவ உபகரணங்கள்

78. மூன்று அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு லேப்ரோஸ்கோபி, ப்ரோன்கோஸ்கோபி, எலும்பு மற்றும் தண்டுவட அறுவை சிகிச்சைக்கான உபகரணங்கள் மற்றும் இரத்த சேமிப்பு அலகிற்கான உபகரணங்கள் ரூபாய் 1.58 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்

செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ரூபாய் 65 இலட்சம் மதிப்பீட்டில் ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில், அதிநவீன லேப்ரோஸ்கோபி (Laparoscopy) மற்றும் ப்ரோன்கோஸ்கோபி (Bronchoscopy) மருத்துவக் கருவிகளும், இன்னுயிர் காப்போம்–நம்மை காக்கும் 48 திட்டத்தின்கீழ் விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ரூபாய் 70 இலட்சம் மதிப்பீட்டில் நுண்துளை எலும்பு அறுவை சிகிச்சை மற்றும் தண்டுவட அறுவை சிகிச்சைக்கான நவீன மருத்துவ உபகரணங்களும், திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அமையப்பெற்ற புதிய 500 படுக்கை வசதிகள் கொண்ட பிரிவிற்கு ரூபாய் 23 இலட்சம் மதிப்பீட்டில் இரத்த சேமிப்பு அலகிற்கான (Blood Storage Unit) நவீன உபகரணங்களும் வழங்கப்படும்.

2023 ஏப்ரல் 18] [திரு. மா. சுப்பிரமணியன்]

அரசு மருத்துவக் கல்லூரிகளில் அடிப்படை நோய் மேலாண்மை

79. அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலுள்ள புறநோயாளிகள் பிரிவுகளின் நுழைவுவாயிலில் "வைட்டல்ஸ்—பே" (Vitals—Bay) என்ற தனிப் பிரிவு உருவாக்கப்படும்

தமிழ்நாட்டில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ள புறநோயாளிகள் பிரிவுகளின் நுழைவுவாயிலில் "வைட்டல்ஸ்-பே" (Vitals-Bay) என்ற தனிப் பிரிவு உருவாக்கப்படும். இப்பிரிவானது மருத்துவமனை பணியாளர்களைக் கொண்டு முக்கிய அடிப்படை மதிப்பீட்டு மருத்துவ பரிசோதனைகளான உயரம், எடை, நடுக்கை சுற்றளவு, நாடித்துடிப்பு, சுவாசவீதம், இரத்த அழுத்தம், இரத்தசோகை, இரத்த சர்க்கரை மற்றும் இரத்த உயிர்வாயு (SPO2) போன்றவை அளவிடப்பட்டு, மருத்துவரைப் பார்ப்பதற்குமுன், நோயாளிகளுக்கு அறிக்கையாக வழங்கப்படும். இந்தத் தொடக்க மதிப்பீட்டின்படி, மருத்துவர்கள் நோயாளிகளுக்கு விரைவாக சிகிச்சையை வழங்க ஏதுவாக இருக்கும்.

தரத்தில் மேம்படும் சுகாதார நிலையங்கள்

80. அரசு துணை சுகாதார அளவிலான நலவாழ்வு மையங்கள் "தேசிய தரச் சான்றிதழ்" பெற நடவடிக்கை எடுக்கப்படும்

தமிழ்நாட்டில் உள்ள அரசு துணை சுகாதார நிலையம்–நலவாழ்வு மையங்கள் படிப்படியாக தேசிய தர உத்தரவாத நிர்ணய அடிப்படையில் "தேசிய தரச் சான்றிதழ்" பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

தட்டம்மை இல்லா தமிழ்நாடு

81. தமிழ்நாட்டில் ரூபெல்லா தட்டம்மை நீக்குதல் (MR Elimination) என்ற இலக்கு 50 விழுக்காடு மாவட்டங்களில் நிறைவேற்றப்படும்

தமிழ்நாட்டில் 2023 ஆம் ஆண்டிற்குள் ரூபெல்லா தட்டம்மை நீக்குதல் (MR Elimination) என்ற இலக்கு குறைந்தபட்சம் 50 விழுக்காடு மாவட்டங்களில் நிறைவேற்றப்படும்.

[திரு. மா. சுப்பிரமணியன்] [2023 ஏப்ரல் 18

தூய்மைப் பணியாளர்களுக்கு தனி பயன்பாட்டு அறைகள்

82. அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் தூய்மை பணியாளர்களின் பயன்பாட்டிற்கென "தனி அறை" அமைத்துத் தரப்படும்

தூய்மைப் பணியாளர்கள் 24 மணி நேரமும் மருத்துவமனை வளாகத்தைத் தூய்மையாகப் பராமரிப்பதன்மூலம் நோய்த் தொற்றை பெருமளவில் குறைப்பதற்கு உதவுகின்றனர். அவர்களின் பணியிட நலன் கருதி அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவமனைகளிலும் "தனி அறை" அமைத்துத் தரப்படும்.

XIV–இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி

உயர் தர ஆயுஷ் நல மையங்கள்

83. 100 இந்திய மருத்துவ முறை மருந்தகங்கள் ரூபாய் 12.98 கோடி செலவில் ஆயுஷ் நல மையங்களாக தரம் உயர்த்தப்படும்

தேசிய ஆயுஷ் திட்டத்தின்கீழ் 100 இந்திய மருத்துவ முறை பிரிவுகளின் உட்கட்டமைப்புகளைப் புனரமைப்பதற்கும் புதிய உபகரணங்கள் மற்றும் தளவாடங்கள் வழங்குவதற்கும் அவற்றின் தரத்தினை உயர்த்தி இப்பிரிவுகளில் கூடுதலாக உடல் நலம் பேணும் யோகா முறைகளைப் பயிற்றுவிக்கும் வசதியை ஏற்படுத்திடவும் அவை அனைத்தும் ஆயுஷ் நல மையங்களாக ரூபாய் 12.98 கோடி மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்படும்.

தரம் உயரும் இந்திய மருத்துவ முறை

84. 30 இந்திய மருத்துவ முறை புறநோயாளி பிரிவுகள் ரூபாய் 6 கோடி செலவில் தரம் உயர்த்தப்படும்

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை கட்டுப்பாட்டில் அரசு மருத்துவமனை மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலைய அளவில் செயல்பட்டுவரும் 25 சித்த மருத்துவப் பிரிவுகள், 2 யோகா – இயற்கை மருத்துவப் பிரிவுகள், 1 யுனானி, 1 ஓமியோபதி மற்றும் 1 ஆயுர்வேதப் பிரிவுகளுக்கு தலா ரூபாய் 15 இலட்சம் செலவில் புதிய கட்டடம் கட்டித் தரப்படும். மேலும், இப்பிரிவுகளுக்கு தலா ரூபாய் 5 இலட்சம் செலவில் புதிய உபகரணங்கள் மற்றும் தளவாடப் பொருட்கள் வழங்கி தரம் உயர்த்தப்படும்.

நோய்த் தடுப்பில் சித்த மருந்தகங்கள்

85. தேசிய எலும்பு—தசை சிதைவு நோய் தடுப்பு மற்றும் பராமரிப்புத் திட்டம், 50 சித்த மருத்துவப் பிரிவுகளில் ரூபாய் 4.50 கோடி செலவில் செயல்படுத்தப்படும்

எலும்பு—தசை சிதைவு நோய் வராமல் தடுக்கவும் மற்றும் இந்நோய்க்கான சிகிச்சை கிடைக்கச் செய்யும் வகையிலும் தேசிய எலும்பு—தசை சிதைவு நோய் தடுப்புத் திட்டத்தின்கீழ் அரசு ஆரம்ப சுகாதார நிலைய அளவில் செயல்பட்டு வரும் 49 சித்த மருத்துவப் பிரிவுகள் மற்றும் ஓர் ஊரக சித்த மருந்தகத்திலும் இந்நோய்க்கான சிசிச்சை பெறுவதற்குத் தேவையான வசதிகள் ரூபாய் 4.50 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

சிறந்த தரத்தில் சித்த மருத்துவமனைகள்

86. ஈரோடு, காஞ்சிபுரம், மதுரை, பெரம்பலூர், திருப்பூர், வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களிலுள்ள "மாவட்ட சித்த மருத்துவமனைகள்" ரூபாய் 1.75 கோடி செலவில் தரம் உயர்த்தப்படும்

ஈரோடு, காஞ்சிபுரம், திருப்பூர், வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் உள்நோயாளிகள் படுக்கை வசதியுடன்கூடிய சித்த மருத்துவமனைகள் தனி கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன. இக்கட்டடங்களை கட்டப்பட்டு 10 ஆண்டுகளுக்கும் மேற்பட்டுள்ளதால் இக்கட்டடங்கள் தலா ரூபாய் 25 இலட்சம் செலவில் புனரமைத்து வழங்குவதற்கும், மதுரை (உசிலம்பட்டி) மற்றும் பெரம்பலூர் மாவட்ட மருத்துவமனைகளில் உள்ள சித்த மருத்துவமனைகளுக்கு தலா ரூபாய் 25 இலட்சம் செலவில் புதிய கட்டடம் கட்டுவதற்குமாக மொத்தம் ரூபாய் 1.75 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

பழங்குடி மக்களும், பயன்தரும் மருத்துவமும்

87. மலைவாழ் பழங்குடியின மக்கள் பெரும்பான்மையாக வாழும் 10 பகுதிகளில் "நடமாடும் சித்த மருந்தகங்கள்" ரூபாய் 94.25 இலட்சம் செலவில் தொடங்கப்படும்

மலைவாழ் பழங்குடியின மக்கள் பெரும்பான்மையாக வாழும் காரமடை, எரிசனம்பட்டி, சித்தேரி, வடகௌஞ்சி, நாகலூர், அகமலை, மாஞ்சோலை, டாப் செங்காட்டுப்பட்டி, ஏலகிரி மற்றும்

கரியலூர் ஆகிய 10 இடங்களில், பழங்குடியின மக்களின் உடல் நலத்தை மேம்படுத்தும் பொருட்டு அவர்கள் வாழும் இடத்திற்கே சென்று சிகிச்சை வழங்க வழிவகை செய்ய நடமாடும் சித்த மருந்தகங்கள் ரூபாய் 94.25 இலட்சம் செலவில் தொடங்கப்படும்.

மூன்று மருத்துவக் கல்லூரிகளும் நவீனமய முன்னெடுப்பும்

88. சென்னையில் உள்ள அரசினர் சித்த, யோகா—இயற்கை மருத்துவம் மற்றும் யுனானி ஆகிய மூன்று மருத்துவக் கல்லூரிகளில் நவீன வகுப்பறைகள் வசதி ஏற்படுத்தப்படும்

*சென்னையில் செயல்பட்டுவரும் அரசு சித்த மருத்துவக் கல்லூரி, அரசு யுனானி மருத்துவக் கல்லூரி மற்றும் அரசு யோகா-இயற்கை மருத்துவக் கல்லூரி ஆகியவற்றில் பயிலும் 900 மாணவ, மாணவியர்க்கு சிறப்பாக கல்வி கற்பதை மேலும் ஊக்குவிக்கும் வகையில் நவீன வகுப்பறைகள் (*Smart Classrooms*) ரூபாய் 50 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படும்.*

பொலிவுபெறும் ஆரம்ப சுகாதார நிலையம்

89. கடலூர் மாவட்டம் — நடுவீரப்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் செயல்படும் சித்த மருத்துவப் பிரிவிற்கு கூடுதல் கட்டடம் கட்டப்படும்

கடலூர் மாவட்டம்-நடுவீரப்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் செயல்பட்டுவரும் சித்த மருத்துவப் பிரிவு தற்போது பொதுப் பிரிவு கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்த சித்த மருத்துவப் பிரிவிற்கென்று தனியாக புதிய கட்டடம் கட்டப்படும்.

திறன் மேம்பாடும், பயிற்சிப் பட்டறையும்

90. ஆயுஷ் மருத்துவ அலுவலர் மற்றும் மருத்துவ ஆலோசகர்களின் "திறன் மேம்பாட்டிற்கான பயிற்சிப் பட்டறை" நடத்தப்படும்

அரசு மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களில் பணிபுரியும் இந்திய மருத்துவமுறைகளான சித்தா, ஆயுர்வேதா, ஓமியோபதி, யுனானி மற்றும் யோகா-இயற்கை மருத்துவ அலுவலர்கள்/உதவி மருத்துவ அலுவலர்கள்/மருத்துவ ஆலோசகர்கள் என 1,500-க்கும் மேற்பட்ட அலுவலர்களுக்கு திறன் மேம்பாட்டினை அதிகரிக்கச் செய்யும் வகையில் தேவையான பயிற்சியினை வழங்க பயிற்சிப் பட்டறை நடத்தப்படும்.

2023 ஏப்ரல் 18] [*திரு. மா. சுப்பிரமணியன்*]

XV–உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்து மேலாண்மை

உணவு ஆய்வகங்களும், நுண்ணுயிர் பிரிவுகளும்

91. சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய மூன்று மாவட்ட உணவுப் பகுப்பாய்வு ஆய்வகங்களில் நுண்ணுயிரியல் பிரிவு ரூபாய் 18 கோடி செலவில் மேம்படுத்தப்படும்

உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்து கட்டுப்பாடு துறையின்கீழ் இயங்கும் உணவு ஆய்வகங்களில் உணவு பகுப்பாய்வு மற்றும் தர நிர்ணயங்கள் ஆகியவை பரிசோதனை செய்யப்பட்டு வருகின்றன. உணவுப் பகுப்பாய்வகத்தில் நுண்ணுயிரியல் பிரிவை நிறுவுவதன் மூலம் குடிநீர், பால் மற்றும் பால் பொருட்கள், பழங்கள், காய்கறிகள், இறைச்சி வகைகள், கடல் உணவுகள் மற்றும் தயாரிக்கப்பட்ட உணவுகள் ஆகியவற்றிலுள்ள நுண்ணுயிரிகளின் எண்ணிக்கையைக் கணக்கிடவும், மனிதர்களுக்கு வயிற்றுப்போக்கு, காலரா போன்ற நோய்களை ஏற்படுத்தும் நுண்ணுயிரிகளைக் கண்டறியவும் உதவும். இதனை மேலும் வலுப்படுத்தும்விதமாக சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய மூன்று மாவட்ட உணவுப் பகுப்பாய்வு ஆய்வகங்களில் நுண்ணுயிரியல் பிரிவு ரூபாய் 18 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

உணவுப் பகுப்பாய்வும், இரசாயனப் பிரிவுகளும்

92. கோயம்புத்தூர், சேலம், தஞ்சாவூர், மதுரை மற்றும் பாளையங்கோட்டை ஆகிய இடங்களில் ரூபாய் 8.85 கோடி செலவில் ஐந்து உணவுப் பகுப்பாய்வு ஆய்வகங்களின் இரசாயனப் பிரிவு மேம்படுத்தப்படும்

உணவு பகுப்பாய்வுக் கூடத்தில் இரசாயனப் பிரிவை ஏற்படுத்துவதன்மூலம் புரதம், கொழுப்பு, கார்போஹைட்ரேட், நார்ச்சத்து போன்ற அடிப்படை ஊட்டச்சத்துக்கள் குறித்து ஆய்வு செய்யவும், செயற்கை நிறங்கள், உணவைப் பாதுகாக்க உதவும் வேதிப் பொருட்கள் குறித்து ஆய்வு செய்யவும் பயன்படும். இதனை மேலும் வலுப்படுத்தும் விதமாக கோயம்புத்தூர், சேலம், தஞ்சாவூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய ஐந்து மாவட்டங்களில் உணவுப் பகுப்பாய்வு ஆய்வகங்களின் இரசாயனப் பிரிவு ரூபாய் 8.85 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

உணவைப் பரிசோதிக்கும், அதிநவீன உபகரணங்கள்

93. உணவு மாதிரிகளில் பூச்சிக்கொல்லிகள் மற்றும் நுண்ணுயிர் எதிர்ப்பிகளைப் பரிசோதிப்பதற்காக கோயம்புத்தூரில் உள்ள உணவுப் பகுப்பாய்வு ஆய்வகத்தில் ரூபாய் 4.50 கோடி செலவில் நவீன உபகரணங்கள் வழங்கப்படும்

உணவுப்பொருட்களில் பூச்சிக் கொல்லிகள் மற்றும் நுண்ணுயிர் எதிர்ப்பிகளை ஆய்வு செய்வதற்காக, தமிழ்நாட்டில் கோயம்புத்தூர் உணவு பகுப்பாய்வுக் கூடத்திற்கு உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம்–2006–ன்படி பழங்கள், காய்கறிகள், மசாலாப் பொருட்கள், தானியங்கள் மற்றும் இயற்கை உணவு வகைகளில் உள்ள பூச்சிக் கொல்லிகள் மற்றும் நுண்ணுயிர் எதிர்ப்பிகளைப் பரிசோதிக்க ரூபாய் 4.50 கோடி மதிப்பீட்டில் நவீன உபகரணங்கள் வழங்கப்படும்.

சுத்தமான உணவும், சுகாதார விழிப்புணர்வும்

94. தினசரி நாளிதழ்களில் உணவை பொட்டலம் செய்வதனால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், அன்றாட உணவு முறைகளில் சிறுதானிய உணவு வகைகள் குறித்தும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்

உணவை சுகாதாரமாக சமைத்திருந்தாலும், அதனைப் பொட்டலமிடுவதற்கும், பரிமாறுவதற்கும் அச்சிடப்பட்ட தாள்களைப் பயன்படுத்தும்பொழுது அத்தகைய உணவை உட்கொள்வது ஆரோக்கியத்திற்குத் தீங்கு விளைவிக்கும். தினசரி நாளிதழ்களில் உணவை பொட்டலம் செய்வதனால் அதில் அச்சிடப்பட்டுள்ள கருப்பு மையிலுள்ள பல நச்சு வேதிப்பொருட்கள் உணவில் கலந்து பல்வேறு உடல்நலக் குறைபாடுகளை ஏற்படுத்துவதால் தினசரி நாளிதழ்களில் உணவை பொட்டலம் செய்து விநியோகிப்பதைத் தடுக்கும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பொதுமக்களின் ஆரோக்கியமான வாழ்விற்காக அவர்களின் அன்றாட உணவு முறைகளில் சிறுதானிய உணவு வகைகளின் நன்மைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். மேலும், மருத்துவமனை வளாகம் போன்ற பொது இடங்களில் ஆரோக்கியமான சிறுதானிய உணவு வகைகள் கிடைப்பது ஊக்குவிக்கப்படும்.

XVI–சுகாதார மருத்துவ மேலாண்மை சேவைகள்

மாபெரும் வளர்ச்சியும் மருத்துவ ஆராய்ச்சி இயக்ககமும்

95. தமிழ்நாடு மருத்துவக் கல்வி இயக்ககம் வருங்காலங்களில் "மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககம்" என்ற பெயரில் செயல்படும்.

தமிழ்நாடு மருத்துவக் கல்வி இயக்ககம் தற்போது 36 மருத்துவக் கல்லூரி மற்றும் அதனைச் சார்ந்த மருத்துவமனைகளுடன் இயங்கி வருகிறது. மருத்துவ ஆராய்ச்சியை ஊக்குவிக்கும் விதமாக மருத்துவக் கல்வி இயக்ககம் "மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககம்" என்ற பெயரில் செயல்படும்.

மருத்துவமும், மருந்து மேலாண்மையும்

96. அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மருந்துகள் தொடர்ச்சியாக கிடைப்பதை உறுதிசெய்வது மாநில அளவில் கண்காணிக்கப்படும்.

அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மருந்துகள் தொடர்ச்சியாகக் கிடைப்பதை உறுதிசெய்வதைக் கண்காணிப்பதற்காக, மருந்து மேலாண்மை கண்காணிப்பு அமைப்பு (DDMS) நடப்பாண்டில் உருவாக்கப்படும்.

கணினிமயமாகும் சுகாதார சேவைகள்

97. பொது சுகாதாரத் துறையில் மின் அலுவலக முறை செயல்படுத்தப்படும். மேலும் பள்ளிகளுக்கு சுகாதாரச் சான்றிதழ் (Sanitary Certificate) இணையதளம் மூலமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். அரசு ஆரம்ப சுகாதார மற்றும் அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கு சிறப்பு மருத்துவ வல்லுநர்களின் ஆலோசனை கிடைத்திடும் வகையில் தொலை மருத்துவ சேவை (Tele Consultation) வழங்கப்படும்

பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை மின்–அலுவலகத்தைத் திட்டமிட்டு செயல்படுத்தத் தொடங்கி உள்ளது. இந்த மின் அலுவலக முறையானது (e-office) தற்பொழுது

45 சுகாதார மாவட்ட அளவிலும், 385 வட்டார அளவிலும் விரிவுபடுத்தப்படும். மேலும், தமிழ்நாடு முழுவதும் பள்ளிகளுக்கு சுகாதாரச் சான்றிதழ் (Sanitary Certificate) இணையதளம் மூலமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், கடைகோடி மனிதனுக்கும் சிறப்பு மருத்துவ வல்லுநர்களின் ஆலோசனை கிடைத்திடும் வகையில் அரசு ஆரம்ப சுகாதார மற்றும் அரசு மருத்துவமனைகளில் தொலை மருத்துவ சேவை (Tele Consultation) வழங்கப்படும்.

மறுமலர்ச்சி பெறும் மருந்துகள் கட்டுப்பாட்டுத் துறை

98. செங்கல்பட்டு மாவட்டத்தில் மருந்துகள் கட்டுப்பாட்டிற்கான புதிய மண்டலம் உருவாக்கப்படும்

புதியதாகத் தோற்றுவிக்கப்பட்ட செங்கல்பட்டு மாவட்டத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதன் ஒரு பகுதியாக, மருந்துகள் கட்டுப்பாட்டுத் துறையின் காஞ்சிபுரம் மண்டலத்தை இரண்டாகப் பிரித்து செங்கல்பட்டு மாவட்டத்திற்கென புதிதாக மருந்துகள் கட்டுப்பாட்டு உதவி இயக்குநர் அலுவலகம் உருவாக்கப்படும்.

பொது சுகாதார மாநாட்டில்—ஆராய்ச்சிக் கட்டுரைகள்

99. தமிழ்நாட்டில் மருத்துவ ஆராய்ச்சிப் பணிகளை ஊக்குவிக்கும் விதமாக "பன்னாட்டு மருத்துவ மாநாடு" நடத்தப்படும். மேலும், நடப்பாண்டின் பொது சுகாதார வருடாந்திர மாநாட்டின்போது (Annual Public Health Conference) 100 திறனாய்வுக் கட்டுரைகள் வெளியிடப்படும்

சுகாதாரத் துறையில் தமிழ்நாட்டு மக்களுக்கு வழங்கிவரும் சேவையை வலுப்படுத்தவும், மருத்துவ ஆய்வுக் கட்டுரைகளைப் பற்றி விவாதிக்கவும் "பன்னாட்டு மருத்துவ மாநாடு" நடத்தப்படும். பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை ஆராய்ச்சிப் பணிகளை ஊக்குவிக்கும்வண்ணம் நடப்பாண்டின் பொது சுகாதார வருடாந்திர மாநாட்டின்போது (Annual Public Health Conference) 100 திறனாய்வுக் கட்டுரைகள் வெளியிட முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

ஏழு புதிய சிறு பணிமனைகள்

100. தமிழ்நாட்டில் சுகாதாரத் துறை வாகனங்களின் பராமரிப்பினை மேம்படுத்தும் வகையில் ஏழு இடங்களில் "புதிய சிறு பணிமனைகள்" தொடங்கப்படும்

தமிழ்நாட்டில் மருத்துவம்-மக்கள் நல்வாழ்வுத் துறையைச் சார்ந்த வாகனங்கள் தங்குதடையின்றி செயல்பட காலமுறை பராமரிப்புப் பணிகள் தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்துத் துறையைச் சார்ந்த 29 நடமாடும் பணிமனை குழுக்கள் மற்றும் 4 சிறு பணிமனைகள்மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பராமரிப்புப் பணிகளை மேலும் துரிதப்படுத்தும்விதமாக துறைக்கு பூவிருந்தமல்லி, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, ஆத்தூர், திருப்பூர், கரூர் மற்றும் சிவகாசி ஆகிய 7 இடங்களில் கூடுதலாக புதிய சிறு பணிமனைகள் தொடங்கப்படும்.

மருத்துவமும், வாகன மேம்பாடும்

101. மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்ந்த சுகாதார வாகனங்களில் செயல்திறன் மற்றும் நம்பகத்தன்மையை மேம்படுத்தும் வகையில் "வாகனத் தணிக்கை" (Vehicle Audit) மேற்கொள்ளப்படும்

மருத்துவம்-மக்கள் நல்வாழ்வுத் துறையில் உள்ள சுமார் 3,000 வாகனங்களின் செயல்திறன் மற்றும் நம்பகத்தன்மையை மேம்படுத்தவும், அவை அரசு நிர்ணயித்துள்ள அனைத்து விதிமுறைகளுக்கு உட்படுவதை உறுதி செய்யவும், தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்துத் துறையால் அனைத்து வாகனங்களிலும் வாகனத் தணிக்கை (Vehicle Audit) மேற்கொள்ளப்படும்

நிரப்பப்படும் மருத்துவப் பணியிடங்கள்

102. "தமிழ்நாடு மருத்துவப் பணியாளர் தேர்வாணையம்" மூலம் மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த 4,133 காலிப் பணியிடங்களுக்கு உரியவர்கள் தேர்வு செய்யப்பட்டு நியமிக்கப்படுவர்.

"தமிழ்நாடு மருத்துவப் பணியாளர் தேர்வாணையம்" மூலம் மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த 4,133 காலிப் பணியிடங்களுக்கு உரியவர்கள் தேர்வு செய்யப்பட்டு நியமிக்கப்படுவர்.

[திரு. மா. சுப்பிரமணியன்] [2023 ஏப்ரல் 18

XVII–சுகாதார விழிப்புணர்வு சேவைகள்

மூன்று அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் முழு உடல் பரிசோதனை

103. மூன்று அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் நவீன மருத்துவ உபகரணங்களுடன் கூடிய முழு உடல் பரிசோதனை மையம் அமைக்கப்படும்

சேலம், தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மூன்று அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் நவீன மருத்துவ உபகரணங்களுடன் கூடிய முழு உடல் பரிசோதனை மையம் அமைக்கப்படும்.

தூய்மைப் பணியாளர்கள் நலம் காப்போம்

104. தமிழ்நாட்டிலுள்ள நகராட்சி மற்றும் மாநகராட்சியில் பணிபுரியும் 60,587 நகர்ப்புற "தூய்மைப் பணியாளர்களுக்கான சிறப்பு முகாம்கள்" நகர்ப்புற நலவாழ்வு மையங்களில் நடத்தப்படுவதுடன், ஒவ்வொரு தூய்மைப் பணியாளருக்கும் வருடத்திற்கு ஒருமுறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் "முழு உடல் பரிசோதனை" நடத்தப்படும்

தமிழ்நாட்டில் நகர்ப்புறத்தின் சுற்றுப்புற சுகாதாரத்தைப் பேணும் உன்னத பணியில் 60,587 நகர்ப்புற தூய்மை பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். நீண்ட நேரம் கடுமையான பளு சுமந்து பணி செய்யும் இப்பணியாளர்களுக்கும், அவர்கள் குடும்பத்தினருக்கும் அவர்களுடைய உடல் நலம் காக்க இரத்த சோகை, தோல் பிரச்சினைகள், நீரிழிவு நோய் உள்ளிட்ட தொற்றா நோய்கள், எலும்பியல் நோய்கள், கண் நோய்கள், பற்சிதைவு, குடல் மற்றும் கருப்பை இறக்கம் மற்றும் மனச்சோர்வு போன்ற பல்வேறு நோய்களைக் கண்டறிய நகர்ப்புற நலவாழ்வு மையங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்.

மேலும் வருடத்திற்கு ஒரு முறை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் "முழு உடல் பரிசோதனையும்" நடத்தப்படும்.

நடப்போம் நலம் பெறுவோம்

105. "நடப்போம் நலம் பெறுவோம்" எனும் நோக்கில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் 8 கிலோ மீட்டர் தூரம் கொண்ட நடைபாதைகள் கண்டறியப்பட்டு பிரதி மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமை அன்று நலவாழ்வு பேணுவதற்கான நடைப்பயிற்சியை (Health Walk) ஊக்குவிக்கும் வகையில் நடைபாதைகள் உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து உருவாக்கப்படும்

உலக சுகாதார அமைப்பின் தரவுகள்படி உடற்பயிற்சி செய்வது நீரிழிவு மற்றும் இரத்த அழுத்த நோய்களின் தாக்கத்தை 27 சதவீதமும், இதய நோயின் தாக்கத்தை 30 சதவீதமும் குறைக்கின்றது என்று அறியப்படுகிறது. நடைப்பயிற்சியானது மக்களை சுறுசுறுப்பாகவும் ஆரோக்கியமான எடையுடன் இருக்கவும், நாள்பட்ட உடல் பிரச்சினைகள் மற்றும் மன அழுத்தத்தைக் குறைக்கவும் உதவுகிறது. ஆகவே "நடப்போம் நலம் பெறுவோம்" என்பதற்கிணங்க பொது மக்களின் நலன் மற்றும் ஆரோக்கியத்தைக் கருத்தில் கொண்டு, அனைத்து மாவட்டங்களில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து 8 கி.மீ. தூரம் கொண்ட நடைபாதை கண்டறிந்து, ஆரோக்கியமான நடைப்பயிற்சி மேற்கொள்வதற்கான நடைபாதைகள் ஏற்படுத்தப்படும். இதன் அடிப்படையில் அனைவரும் தினந்தோறும் நடைப்பயிற்சி மேற்கொள்ள ஊக்குவிக்கப்படுவதோடு, ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிற்றுக்கிழமை உள்ளூர் மக்களுடன் இணைந்து மாவட்ட அலுவலர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆகிய அனைவரும் "சுகாதார நடைப்பயிற்சியில்" பங்கேற்பார்கள். நடைப்பயிற்சியின் முடிவில் ஆரோக்கியமான வாழ்க்கை மற்றும் நல்வாழ்வு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படும்.

106. அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களின் செயல்பாடுகள் மற்றும் பாதுகாப்பு அமைப்பினை வலுப்படுத்தும் வகையில் கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள 2,286 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் ரூ.10.17 கோடி மதிப்பீட்டில் CCTV கேமராக்கள் பொருத்தப்படும்

தமிழ்நாட்டில் கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறங்களில் முதல் நிலை சுகாதார சேவைகளை அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் வழங்கி வருகின்றன. அவற்றின் செயல்பாடுகள் மற்றும் பாதுகாப்பு அமைப்பினைக் கண்காணித்து வலுப்படுத்தும் வகையில் 2,286 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தலா 2 கண்காணிப்பு கேமரா கருவிகள் (CCTV) ரூ.10.17 கோடி மதிப்பீட்டில் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களில் பொருத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்துறைக்கு மிக முக்கியமான நமது அலுவலர்கள் மிகச் சிறப்பான யோசனைகளைச் சொல்வது மட்டுமல்ல, மிகச் சிறப்பான முறையில் ஒருங்கிணைத்தும், ஒத்துழைத்தும் இத்துறையை மக்கள் விரும்புகின்ற அளவிலும் ஒன்றிய அரசின் பல்வேறு விருதுகளைப் பெறுகின்ற அளவிலும் தொடர்ச்சியாக இரவு பகல் பாராமல் உழைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு உழைத்துக்கொண்டும் ஆலோசனைகளைத் தந்துகொண்டிருக்கும் அலுவலர்களான அரசு தலைமைச் செயலாளர் திரு. வெ. இறையன்பு, I.A.S. அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களின் முதன்மைச் செயலாளர் திரு. T. உதயச்சந்திரன், I.A.S. அவர்களுக்கும், இந்தத் துறையைக் கண்காணிக்கும், நிர்வகிக்கும் பெருமதிப்பிற்குரிய மருத்துவர் P. உமாநாத், I.A.S. அவர்களுக்கும், திரு. M.S. சண்முகம், I.A.S. அவர்களுக்கும், மரியாதைக்குரிய திருமதி அனு ஜார்ஜ், I.A.S. அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களின் நேர்முக உதவியாளர், நண்பர் தினேஷ் ஆகிய அனைவருக்கும் எங்களது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பிற்பகல் 4-00

அதேபோல், இந்தத் துறையின் மிக முக்கிய HODs என்று சொல்லக்கூடிய தலைமை அலுவலர்கள், பெருமதிப்பிற்குரிய துறையின் செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் முதன்மைச் செயலாளர் முனைவர் பா. செந்தில்குமார், I.A.S. அவர்களுக்கும், உணவு பாதுகாப்புத் துறை ஆணையர் திரு. லால்வேனா, I.A.S. அவர்களுக்கும், தமிழ்நாடு AIDS சங்கத்தின் திட்ட இயக்குநர் மரியாதைக்குரிய திரு. T.N. ஹரிஹரன், I.A.S. அவர்களுக்கும், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் பெருமதிப்பிற்குரிய அம்மையார் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், I.A.S. அவர்களுக்கும், இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி

2023 ஏப்ரல் 18] [திரு. மா. சுப்பிரமணியன்]

இயக்குநரகத்தின் இயக்குநர் பெருமதிப்பிற்குரிய திரு. கணேஷ், I.A.S. அவர்களுக்கும், தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திரு. M. அரவிந்த், I.A.S. அவர்களுக்கும், தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்டத்தின் திட்ட இயக்குநர் மருத்துவர் S. உமா, I.A.S. அவர்களுக்கும், மருத்துவப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் மரியாதைக்குரிய திரு. A.R. கிளாட்ஸ்டன் புஷ்பராஜ், I.A.S. அவர்களுக்கும், TAMPCOL அமைப்பின் பொது மேலாளர் திரு. மோகன்ராஜ், I.A.S. அவர்களுக்கும், இந்தத் துறையின் மிக முக்கிய அலுவலர்களான DPH என்று சொல்லப்படுகிற மருத்துவர் செல்வவிநாயகம் அவர்களுக்கும், DME என்று சொல்லப்படுகிற மருத்துவர் சாந்திமலர் அவர்களுக்கும், DMS என்று சொல்லப்படுகிற மருத்துவர் சண்முக கனி அவர்களுக்கும் என்னுடைய நன்றியினையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நம்முடைய மன்ற உறுப்பினர்கள் 226 வெட்டுத்தீர்மானங்களைத் தந்திருக்கிறார்கள். 226 வெட்டுத் தீர்மானங்களில் இருக்கிற பொருள் குறித்து என்னுடைய பதிலுரையில் அநேகமாக வந்திருக்கும் என்று கருதுகிறேன். எனவே, மன்ற உறுப்பினர்கள் தந்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, இந்த மானியக் கோரிக்கைமீதான விவாதத்தில் பங்கேற்று சிறப்பித்தமைக்கு நன்றி கூறி, இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு, சிறந்த வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண் 19-மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 19-மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.17,525,38,15,000/–, மூலதனக் கணக்கில் ரூ.1,134,91,16,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.40,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் மாலை 5–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 4–02 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பிற்பகல் 5–00

மாலைக் கூட்டம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் மாலை 5–00 மணியளவில் பேரவை மீண்டும் கூடியது.*

8. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(ஆ) கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2023–2024 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

2023 ஏப்ரல் 18]

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,995,81,74,000/–, மூலதனக் கணக்கில் ரூ.497,02,81,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 146, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 661, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி.

திரு. அ. பண்ணாரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

“ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,995,81,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.497,02,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 909, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 1382, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2361, மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. *அமுல் கந்தசாமி, இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 2742, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன்.

திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,995,81,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.497,02,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3242, மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார்.

திரு. P.R.G. அருண்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,995,81,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.497,02,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3291, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். ஜெயராம்.

திரு. கே.ஆர். ஜெயராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,995,81,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.497,02,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3337, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன்.

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,995,81,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.497,02,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3527, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி.*

திரு. செ. கிருஷ்ணமுரளி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,995,81,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.497,02,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3639, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் இசக்கி சுப்பையா, இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 4218, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி.

திரு. மு. சக்ரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,995,81,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.497,02,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4542, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன்.*

திரு. செ. சுந்தரராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

[திரு. செ. சுந்தரராஜன்] [2023 ஏப்ரல் 18

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,995,81,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.497,02,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5983, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ.மா. மான்ராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 202, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. ராமச்சந்திரன்.

திரு. தி. ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,995,81,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.497,02,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 205, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 290, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 302, மாண்புமிகு உறுப்பினர் திரு. R. ராதாகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1775, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3383, மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3487, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார்.

2023 ஏப்ரல் 18]

திரு. S. பழனி நாடார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

“ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,995,81,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.497,02,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4715, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 388, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2412, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2877, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6168, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

“ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,995,81,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.497,02,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 6913, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்.*

திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,995,81,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.497,02,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2271, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி, இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 3189, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன்.

திருமதி வானதி சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,995,81,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.497,02,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3427, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 5376, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 985, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.A. பாண்டியன்.

திரு. K.A. பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிதம்பரம் நகரில் செயல்பட்டு வரும் அரசினர் நந்தனார் மேல்நிலைப் பள்ளிக்கு (பெண்கள்) கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,995,81,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.497,02,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1016, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.

திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டம், புவனகிரி வட்டம், மருதூர், ஜெயங்கொண்டம் ஆகிய கிராமங்களில் வசிக்கும் அருந்ததியர் மக்களுக்கு மயானம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,995,81,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.497,02,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1577, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. ஜெயசங்கரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1620, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1875, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.C. கருப்பணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1843, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மகேந்திரன்.

திரு. சி. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட ஜல்லிப்பட்டி ஊராட்சியில் பழங்குடியின மாணவ, மாணவிகள் தங்கும் விடுதி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,995,81,74,000/–, மூலதனக் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.497,02,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2093, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. அர்ஜுனன்.*

திரு. பொ. அர்ஜுனன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டிவனம் தொகுதி, கந்தாடு ஊராட்சியில் உள்ள ஆதி திராவிடர் நலப் பள்ளியில் புதிய வகுப்பறைகள் மற்றும் சுற்றுச்சுவர் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,995,81,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.497,02,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2130, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 3685, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.N. *விஜயகுமார்.*

திரு. K.N. விஜயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் (வடக்கு) தொகுதியில் உள்ள தொகுப்பு வீடுகளைப் புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,995,81,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.497,02,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3749, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி, இருக்கையில் இல்லை.*

2023 ஏப்ரல் 18] [பேரவைத் தலைவர்]

வெட்டுத் தீர்மானம் எண் 3820, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை.

***திரு. மா. சின்னதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்படும் வீடுகளுக்கு தலா ரூ.10 இலட்சம் நிதி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,995,81,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.497,02,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4042, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார்.*

திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதி திராவிடர் மாணவ, மாணவிகளுக்கான கல்வி உதவித் தொகையை கல்வி ஆண்டின் துவக்கத்திலேயே வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,995,81,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.497,02,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4110, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன்.*

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆரணி தொகுதி, இரும்பேடு ஆதி திராவிடர் பகுதியில் உள்ளோருக்கு இரத்து செய்யப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்களை மீண்டும் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,995,81,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.497,02,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4320, மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி.

***திரு. S.S. பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதிதிராவிடர் பழங்குடியினருக்கான தொழிற்கடன்களை TAHDCO மானியம் பெற்று மீதத் தொகையினை கடனாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,995,81,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.497,02,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4594, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4908, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4952, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன்.

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காரிமங்கலம் SC/ST விடுதியில் மாணவியர் சேர்க்கையை அதிகப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,995,81,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.497,02,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2023 ஏப்ரல் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4993, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5079, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரி. செந்தில்நாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5441, மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து.

திரு. K. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,995,81,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.497,02,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5501, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ்.

திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "25 ஆண்டுகளுக்கு மேற்பட்ட இந்திரா நினைவு குடியிருப்புகளை அகற்றி விட்டு, புதிய குடியிருப்புகள் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,995,81,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.497,02,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5555, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் உற்பத்தி செய்யும் மருந்து மற்றும் கைவினைப் பொருட்களை அரசு சார்பில் கொள்முதல் செய்து சந்தைப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,995,81,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.497,02,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5870, மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல்.

***திருமதி கு. மரகதம் குமரவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுராந்தகம் தொகுதிக்குட்பட்ட பகுதியில் ஆதி திராவிட மக்களுக்குப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,995,81,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.497,02,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5931, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6018, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6510, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி.

திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேப்பனஹள்ளி தொகுதிக்குட்பட்ட ஆதி திராவிடர்

மற்றும் பழங்குடியின மக்களுக்கு வீடுகள் மற்றும் கழிப்பறை கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,995,81,74,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.497,02,81,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6540, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6814, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ்.

திரு. A.K. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காரமடை ஒன்றியம், மூடுதுறை கிராமம், M.கவுண்டம்பாளையத்தில் ஆதி திராவிட மக்கள் பயன்பாட்டிற்கு ஒரு சமுதாயக் கூடம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,995,81,74,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.497,02,81,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7079, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி.

திரு. V.P. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சூலூர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கி, வீடு கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,995,81,74,000/-, மூலதனக் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.497,02,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7171, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாணவ, மாணவிகளுக்கு வழங்கும் உதவித் தொகையை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,995,81,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.497,02,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7423, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ராஜகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7476, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வேலுமணி.

*__திரு. எஸ்.பி. வேலுமணி:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தொண்டாமுத்தூர் தொகுதி, பழங்குடியினர் வசிக்கும் பகுதியில் கைவினைப் பொருட்கள் தொழிற்சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,995,81,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.497,02,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7492, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், இருக்கையில் இல்லை.

2023 ஏப்ரல் 18] [பேரவைத் தலைவர்]

மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக, ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளது. கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேசைகளில் உள்ள சிறுகணினிகளிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அவற்றிலே தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைமீது விவாதம். இன்று 9 மாமன்ற உறுப்பினர்கள் பேச இருக்கின்றீர்கள். முதலில் பேச வருகின்ற மாமன்ற உறுப்பினருக்கு 20 நிமிடங்களும், மற்ற மாமன்ற உறுப்பினர்களுக்கு தலா 10 நிமிடங்களும் ஒதுக்கப்படுகிறது. குறித்த நேரத்திற்குள் எல்லோரும் பேச்சை நிறைவுசெய்து தர வேண்டுமென்று உங்களை நான் அன்போடு கேட்டுக்கொண்டு, முதலில் மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல் அவர்களைப் பேச அழைக்கின்றேன். நேரம் 5-04 ஆகிறது. உரையை சரியாக 5-24-க்கு முடித்து விடுங்கள், அம்மா.

பிற்பகல் 5-05

திருமதி கு. மரகதம் குமரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இருந்தாலும், மறைந்தாலும் பேர் சொல்ல

@ 826 முதல் 902 வரையிலான பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

வேண்டும். இவர்போல யாரென்று ஊர் சொல்ல வேண்டும்." என்ற பாட்டிற்கு இலக்கணமாக வாழ்ந்து மறைந்த மக்கள் திலகம்; (மேசையைத் தட்டும் ஒலி) காவியத் தலைவன்; தமிழகத்தின் மன்னாதி மன்னன்; அச்சத்தை மடமையாக்கி; திராவிடத்தை உடமையாக்கி; நேர்மையைக் கடமையாக்கிய ஏழைகளின் ஒளி விளக்கு; பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆதி திராவிடர்களை, ஜோதி திராவிடர்களாக மாற்றியவர்; பழங்குடியின மக்களை நலங்குடியின மக்களாக மாற்றியவர்; பொதுத் தொகுதியில் பட்டியலின மக்களை நிறுத்தி, தேர்தலில் வெற்றிப் பெறச் செய்து, சமத்துவத்தை, சமதர்மத்தை இந்த மண்ணில் நிலை நிறுத்தியவர்; சமூக நீதி காத்த வீராங்கனை; மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணாவின் கொள்கையை இதயத்தில் தாங்கி; எம்.ஜி.ஆர். அவர்களின் கனவை நனவாக்கி; சாதாரண மனிதர்களை சாதனை மனிதர்களாக மாற்றிய பெருமை புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு. அரசியலில், பொது வாழ்வில் அனைத்து Man-களையும், ஜெயித்த ஒரே Woman நீங்கள்தான் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) அரசியலில், பொது வாழ்வில், அனைத்து Man-களையும் ஜெயித்த ஒரே Woman நீங்கள்தான் அம்மா! விண்ணில் இருக்கும் உங்களை, மண்ணில் இருந்து மனதார வணங்குகிறேன் அம்மா!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண, சாமானிய குடும்பத்தில் பிறந்து, திருதையூரில் வாழ்ந்த என்னை, நாடாளுமன்ற உறுப்பினராக்கிய அம்மா அவர்களுக்கு நன்றி. அம்மா வகுத்த பாதையில், என்னை சட்டமன்ற உறுப்பினராக்கி, நேர் கொண்ட பார்வையோடு என் கருத்துகளைச் சொல்ல, அண்ணல் அம்பேத்கர் வழி நின்று, தந்தை பெரியார் நெறி நின்று, புகழ் வாய்ந்த பேரவையில் இன்று பேச வைத்திருக்கும், தர்மத்தைக் காக்க, தொண்டர்களின் இதயத்தில் நம்பிக்கையை விதைத்து, வேதனைகளையும், சோதனைகளையும் தானே ஏற்று, தொண்டருக்கும், இயக்கத்திற்கும் சாதனைகளை மட்டுமே தருகின்ற, அம்மாவின் ஆசியை, அன்பை மொத்தமாய்ப் பெற்று, ஒற்றைத் தலைமையாய் உயர்ந்து நிற்கும் கழகத்தின் பொதுச் செயலாளர், அம்மாவின் ஆண் வடிவம், (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் அவர்களை வணங்குகின்றேன்.

2023 ஏப்ரல் 18] [திருமதி கு. மரகதம் குமரவேல்]

இந்த மாபெரும் சபையில் எனக்குப் பேச வாய்ப்பளித்த எதிர்க்கட்சிக் கொறடா, முன்னாள் அமைச்சர் அண்ணன் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களையும் வணங்குகின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் முதற்கொண்டு இந்த அவையில் இருக்கின்ற அனைவரையும் வணங்கி, மானியக் கோரிக்கையில் எனது உரையைத் துவங்குவதற்குமுன், எனது தொகுதியில் உள்ள 250 தொழிலாளர் குடும்பங்களின் வாழ்வாதார பிரச்சினைக்குத் தீர்வு காண மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு மாவட்டம், எனது மதுராந்தகம் தொகுதிக்குட்பட்ட நெல்வாய் கிராமத்தில் Concorde Textiles நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தில் அந்த கிராம மக்கள் சுமார் 250-க்கும் மேற்பட்டோர் நிரந்தர தொழிலாளர்களாகப் பணிபுரிந்து வருகின்றனர். கடந்த கொரோனா பெருந்தொற்று காலகட்டத்தில், அங்கு பணிபுரிந்துவந்த தொழிலாளர்களுக்குப் பணி வழங்க இயலவில்லை என Concorde Textiles நிறுவனம் கூறி, தொழிலாளர்களைப் பணி நீக்கம் செய்தது. ஆனால், அப்பொழுதும் வட மாநில ஒப்பந்தத் தொழிலாளர்களைக் கொண்டு தங்கு தடையில்லாமல் உற்பத்தி நடைபெற்றது.

கொரோனா பெருந்தொற்று முடிந்து, நிலைமை சீரடைந்த பின்பும், தொழிலாளர்களுக்கு வேலை அளிக்கப்படவில்லை. இதுகுறித்து அரசிடமும், மாவட்ட நிர்வாகத்திடமும் புகார் அளித்தோம். மாவட்ட நிர்வாகம், வருவாய்க் கோட்டாட்சியர் தலைமையில் அமைதிக் குழு (Peace Committee) அமைத்தும் 250 தொழிலாளர் குடும்பங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவில்லை. வருவாய்க் கோட்டாட்சியர் மற்றும் தொழிலாளர் நலத் துறை அலுவலர்கள் ஒரு வருட காலமாக, நான்கு முறை கூடி வழங்கிய ஆலோசனைகளைப் புறந்தள்ளி எந்தவொரு முடிவும் எடுக்காமல் தனியார் நிறுவனம் தொழிலாளர்களை வஞ்சித்து வருகிறது. மாபெரும் தனியார் தொழில் நிறுவனத் தொழிற்சாலை தொடர்ந்து இயங்குவதால், அவர்களுக்கு எவ்வித நட்டமும் இல்லை. ஆனால், 250 தொழிலாளர் குடும்பங்களும் வேலைவாய்ப்பு இல்லாமல் வறுமையின் கோரப் பிடியில் பெரும் துயரத்தைச் சந்திக்கின்றார்கள். எனவே, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கனிவோடு இப்பிரச்சினையை அணுகி பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

[திருமதி கு. மரகதம் குமரவேல்] [2023 ஏப்ரல் 18

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதருக்குள் மனித நேயம் இருக்கும். ஆனால் மனித நேயத்தின் மறு வடிவமாய். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் பேசிவிடட்டும். மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 5–10

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், தன்னுடைய தொகுதியில் 250 தொழிலாளர்களின் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள்; உண்மைதான். கடந்த கொரோனா காலத்தில், அந்த நிறுவனத்தில் பணியாற்றியவர்களுக்கு பணி இல்லாத காரணத்தினால், பல்வேறு நிறுவனங்கள் மூடப்பட்டிருந்த நிலையில், இந்த நிறுவனமும் மூடப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில், படிப்படியாக தொழிலாளர்கள் எண்ணிக்கை குறைக்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக, நமது சட்டமன்ற உறுப்பினரும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். தொழிலாளர்களும், தொழிற்சங்கங்களும் கோரிக்கை வைத்ததன் அடிப்படையில் மாவட்ட நிர்வாகமும், தொழிலாளர் நலத் துறையும் பல்வேறு கட்டங்களில் பேச்சுவார்த்தை நடத்தி, எப்படியாவது அந்தத் தொழிலாளர்களை மீண்டும் அந்தப் பணிக்கு திருப்பி அழைத்துச் செல்ல வேண்டுமென்ற அடிப்படையில் எங்கள் துறை மிகுந்த முனைப்போடு, கவனத்தோடு செயல்பட்டு வருகிறது. அந்த அடிப்படையில், பல்வேறு முறை பேச்சுவார்த்தை நடத்தினாலும், கடைசியாக 10–4–2023 அன்று நடந்த தொடர் பேச்சுவார்த்தைக்குப் பின்னர், இறுதியில் நிர்வாகத் தரப்பில் கீழ்க்கண்ட முடிவுகளை எடுப்பதற்குக் கட்டாயப்படுத்தியிருக்கிறோம்:-

அதன் அடிப்படையில் 12–4–2023 அன்று 30 தொழிலாளர்களையும், 17–4–2023 ஆம் தேதிக்குள் 20 தொழிலாளர்களையும் பணிக்கு எடுத்துக்கொள்வதாகவும், ஏனைய தொழிலாளர்களுக்கு 30–4–2023–க்குள் பணி வழங்குவதாகவும் நிர்வாகத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. ஆனால், தொழிற்சங்கத் தரப்பில் பணி நீக்கம் செய்யப்பட்ட அனைத்துத் தொழிலாளர்களையும் ஒரே நேரத்தில் பணிக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே, இத்தகைய

2023 ஏப்ரல் 18] [*திரு. சி.வி. கணேசன்*]

சூழ்நிலையில் மீண்டும் நாளை, 19–4–2023 அன்று தொழிலாளர் நலத் துறை மற்றும் வருவாய்த் துறை ஆகிய துறைகளின் மூலமாக தொழிலாளர்களையும், தொழிற்சங்கத்தினரையும் அழைத்துப் பேசி, அனைத்துத் தொழிலாளர்களையும் ஒரே நாளில் பணிக்கு எடுத்துக்கொள்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தளபதி அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லுங்கள். நீங்கள் தெரிவித்த பெரிய பிரச்சினையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தீர்த்து வைத்திருக்கிறார்கள்.*

திருமதி கு. மரகதம் குமரவேல்: *மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மனிதருக்குள் மனித நேயம் இருக்கும்; ஆனால், மனித நேயத்தின் மறுவடிவமாய், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மக்களின் வாழ்வில் ஏற்றத்தையும், மாற்றத்தையும் கொண்டு வந்து, சமூக நீதி காத்து, சரித்திரம் படைத்தவர்கள் புரட்சித் தலைவரும், புரட்சித் தலைவி அம்மா அவர்களும் என்பதை இந்த நாடே நன்கு அறியும். (மேசையைத் தட்டும் ஒலி)*

'இந்தியாவின் எதிர்காலம் வகுப்பறையில் உருவாக்கப்படுகிறது' என்றார் மேதகு முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் அவர்கள். கல்வியால் மட்டுமே ஆதி திராவிடர் சமூகத்தில் மாற்றத்தைக் கொண்டு வர முடியும் என்பதை நம்பிய புரட்சித் தலைவி அம்மா அவர்களும், அவரின் வழி நின்று ஆட்சிபுரிந்த அண்ணன் எடப்பாடியார் அவர்களும் கடந்த 10 ஆண்டுகளில் பட்டியலின மக்களுக்காக கல்வித் துறையில் செய்த சாதனைகளை பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளேன். 2020–2021 ஆம் கல்வியாண்டு வரை 1,138 ஆதி திராவிடர் பள்ளிகளும், பழங்குடியினர் நலத் துறையைப் பொறுத்தமட்டில், 2021 ஆம் ஆண்டு வரை அரசு உண்டி உறைவிடப் பள்ளிகள் 318–ம், ஏகலைவா மாதிரி பள்ளிகள் 1,628–ம் செயல்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொருளாதார விளிம்பு நிலையில் உள்ள பட்டியலின மக்கள் உயர் கல்வியைத் தொய்வின்றிப் பெற 2011 முதல் 2020 ஆம் ஆண்டு வரை சுமார் 74 பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், மேல்நிலைப்

பள்ளிகளாகவும் தரம் உயர்த்தி பெருமை சேர்த்தது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது ஆட்சிதான் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீண்டாமை என்கிற சொல்லைத் தூக்கியெறிந்து, சமூக நீதியை நிலைநாட்டி, மனித உரிமைகளை மதித்து, எல்லோருக்கும் எல்லாமும் வாரி வழங்கிய அட்சயபாத்திரம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். தீண்டாமை ஒழிப்பு வன்கொடுமைச் சட்டத்தினை முறையாக அமல்படுத்துவது ஓர் அரசின் தலையாய கடமையாகும். ஆனால், மிகுந்த வேதனையோடு, மன வலியோடு, வருத்தத்தோடு, ஒட்டுமொத்த தமிழக ஆதி திராவிட, பழங்குடியின மக்கள் சார்பாக இந்தக் கருத்தை நான் பதிவு செய்ய விரும்புகின்றேன். அருள்கூர்ந்து பொறுமையோடு இந்த அவை சிந்திக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

*தேசம் சுதந்திரமடைந்து 75 ஆண்டுகள் கடந்தபோதும், குடிநீரில் மனித மலத்தைக் கலந்த மனித மிருகங்களை இதுவரை தண்டிக்காத அரசின் செயல்பாடு மிகுந்த வருத்தம் அளிக்கிறது. அனைவருக்கும் வேதனை தருகிறது. இன்னும், இன்னும் ஆயிரம் ** ஆதி திராவிட/பழங்குடியின மக்கள் கோயிலுக்குள் நுழைவதில் உள்ள சிக்கல் இன்னும் பல மாவட்டங்களில் களையப்படவில்லை. குடிநீரில் ஆரம்பித்து, மயானம் வரை ** தமிழகத்தில் சென்னை நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் ** நிகழ்வதாக ஓர் ஆய்வறிக்கை சொல்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *** என்ற வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. ** என்ற வார்த்தைகளையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். நாட்டில் 8 கோடி மக்கள். . . (குறுக்கீடு) ஆதாரத்தைக் காட்டிவிட்டுத்தான் சொல்ல வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல் அவர்கள்.*

திருமதி கு. மரகதம் குமரவேல்: *இந்தத் தகவல்கள் எல்லா பத்திரிகைகளிலும், ஊடகங்களிலும் வந்திருக்கின்றன.*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2023 ஏப்ரல் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்திரிகைகளில் உள்ளதையெல்லாம் இங்கே சொல்லக் கூடாது. (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள்.

திருமதி கு. மரகதம் குமரவேல்: ஏட்டில் உள்ள சட்டங்கள் யாவும் தும்பிக்கையற்ற யானைபோல் பலமிழந்து காணப்படுகின்றன. அவற்றிற்கு உயிரூட்டி, ஆணவ, ஆதிக்க சக்திகளிடமிருந்து தமிழினத்தின் பூர்வ குடிமக்களான ஆதி திராவிடர்களையும், மனித இனத்திற்கே பூர்வ குடிகளான பழங்குடியின மக்களையும் இந்த அரசு காத்திட வேண்டுமென தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வளர்ச்சிக்கு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக பறைசாற்றிக்கொள்ளும் இந்த அரசு, இந்த ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டினை சுமார் 769 கோடி ரூபாய் அளவிற்குக் குறைத்துள்ளது. அதாவது, 2022–2023 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ.4,281.76 கோடி. ஆனால், 2023–2024 ஆம் ஆண்டில் இத்துறைக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ.3,513 கோடி. இந்த அளவுக்கு நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டுள்ளது. அதற்கு என்ன காரணம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்களது பதிலுரையில் விளக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. ஆட்சி அமைந்ததும், ஆதி திராவிடர் பின்னடைவு பணியிடங்கள் கணக்கிடப்பட்டு நிரப்பப்படும் என்று தி.மு.க.-வின் தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இதனை நிறைவேற்றுவது குறித்து இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்த நிலை நீடித்தால் அரசு அலுவலகங்களில் நாற்காலிகள் மட்டும்தான் இருக்குமேதவிர, மக்களுக்குப் பணியாற்ற பணியாளர்கள் இருக்கமாட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, பின்னடைவு பணியிடங்கள் உட்பட அனைத்துப் பணியிடங்களையும் நிரப்ப இந்த அரசு துரிதமாக நடவடிக்கை எடுத்திட வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கு ஒதுக்கப்படும் நிதி, இந்த ஆண்டு குறைக்கப்பட்டதாகக் கூறியிருக்கிறார்கள். கடந்த ஆண்டு ரூ.4,281.76 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு 3,513 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 2022–2023 ஆம் ஆண்டிற்கான* Post Matric *கல்வி உதவித் தொகையில் ஒன்றிய அரசின் 60 சதவிகிதப் பங்கான 930 கோடி ரூபாய் நேரடியாக மாணவர்களின் வங்கிக் கணக்கிற்கு நேரடி பயனாளி பணமாற்றமாக மாற்றப்பட்டுள்ளது.*

கடந்த நிதியாண்டில் இத்தொகை மாநில அரசின் நிதியிலிருந்து சமன் செய்யப்பட்டதாக தவறான புரிதல் ஏற்பட்டதால், 2023–2024 ஆம் நிதியாண்டில் இத்தொகை வரவு-செலவுத் திட்ட நிதியொதுக்கீட்டில் சேர்க்கப்படவில்லை. எனவே, எந்த நிதியும் குறைக்கப்படவில்லை. நீங்கள் இந்த 930 கோடி ரூபாயையும் கூட்டினீர்கள் என்றால், ரூ.4,281.76 கோடிக்கும் அதிகமாக (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய துறைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள்.

அதேபோல, பின்னடைவு காலிப் பணியிடங்களைப் பொறுத்தவரைக்கும், இது ஆதி திராவிடர் நலத் துறையால் மட்டும் நிரப்பப்படுவதில்லை. பல்வேறு துறைகளிலிருந்து இந்தப் பணியிடங்களை நிரப்ப வேண்டிய சூழ்நிலை உள்ளது. இதற்கான அரசாணை ஏற்கெனவே வெளியிடப்பட்டு, பல்வேறு துறைகளுக்கும் இந்தப் பணியிடங்களை விரைந்து நிரப்புவதற்காக, மரியாதைக்குரிய தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டு, நினைவூட்டல் கடிதங்களும் தொடர்ந்து அனுப்பப்பட்டு வருகின்றன. இக்காலிப் பணியிடங்கள் கூடிய விரைவிலேயே நிரப்பப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல் அவர்கள், அடுத்ததற்கு வாருங்கள்.*

2023 ஏப்ரல் 18]

திருமதி கு. மரகதம் குமரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை நடத்தும் மாணவர் விடுதிகளில் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும் என்று தி.மு.க.-வின் தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டிற்கான கொள்கை விளக்கக் குறிப்பு, பக்கம் 44 முதல் 49 வரை விடுதிகள் பற்றியும், புதிய விடுதிகள் கட்டப்படுவது குறித்தும், இருக்கின்ற விடுதிகளில் கூடுதல் வசதிகள் செய்து கொடுப்பது பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் கள நிலவரம் வேறு மாதிரியாக உள்ளது. விடுதிகளில் பயிலும் மாணவ, மாணவியர் **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எந்த விடுதியிலாவது particular-ஆக ** என்று சொன்னால்தான் அதைப் பதிவு செய்ய வேண்டும். அப்படி இல்லையென்றால் நீங்கள் குறிப்பிட்டுச் சொல்லுங்கள், நாம் பதிவு செய்யலாம். ** என்பது நல்ல வார்த்தையில்லை, நீக்கிடுவோம். தொடர்ந்து சொல்லுங்கள்.

திருமதி கு. மரகதம் குமரவேல்: எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விடுதிகளை ஆய்வு செய்து, அங்குள்ள அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், தரமான உணவினை வழங்கவும், பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

கொள்கை விளக்கக் குறிப்பு, பக்கம் 54-ல் மயானம் மற்றும் மயானத்திற்கான இணைப்புச் சாலை வசதிகளை ஏற்படுத்துவதற்காக நிலம் கையகம் செய்தல் மற்றும் தேவையான வசதிகளை ஏற்படுத்தித்தரும் திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இப்பணிகள் நிறைவேற்றப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பிலும் இதே வசனங்கள் இடம் பெற்று இருந்தன. தமிழ்நாட்டில் பல இடங்களில் இந்தப் பிரச்சினை இருந்து வருகிறது. இந்தத் திட்டத்திற்கு. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இதே வசனம் சென்ற ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பிலும் சொல்லப்பட்டிருப்பதாக சொல்கிறார்கள். இதுமாதிரி * ஆதி திராவிட மக்களுக்கு கொடுக்கப்பட்ட இலவச வீட்டுமனைப் பட்டாவில்—தமிழ்நாடு முழுவதும் இலவச வீட்டுமனைப் பட்டா கடந்த கால ஆட்சியில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், எந்தவொரு பட்டாவும், computer–லோ, தஸ்தாவேஜிலோ திருத்தம் செய்யப்படாமல் தமிழ்நாடு முழுவதும் அப்படியே நிலுவையில் இருக்கிறது. அதுசம்பந்தமாகத்தான் நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் கருத்துகளைச் சொன்னபிறகு, அவை அனைத்தும் விரைவில் திருத்தப்பட்டு, அவர்களுக்கு original patta வழங்கப்படும். அதாவது, பட்டா கையில் கொடுத்துவிட்டீர்கள். ஆனால், எந்த record–லும் திருத்தவேயில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Online–ல் பதிவு செய்யவில்லை.

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: Online–ல் பதிவு செய்யவில்லை. record–லும் திருத்தவில்லை. ஆகவே, மாண்புமிகு தளபதி அவர்களின் அரசில், அதுபோன்று எங்கெல்லாம் வழங்கப்படாமல் இருக்கின்றனவோ அவை விரைவில் வழங்கப்படும் என்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். வசனங்களைத் தொடர்ந்து சொல்லவில்லை. இந்த ஆட்சி நிச்சயமாக நிறைவேற்றும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 5–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல் அவர்கள். அடுத்ததற்கு வாருங்கள்.

திருமதி கு. மரகதம் குமரவேல்: எனவே, அரசு முழுமையாக சர்வே செய்து, குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் தேவைப்படும் இடங்களில் நிலம் கையகப்படுத்துவதற்குத் தேவையான நிதியை ஒதுக்க வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

எனது தொகுதியில்கூட, சின்னவெண்மணி ஊராட்சியில் ஆதி திராவிட மக்கள் பயன்படுத்தும் சுடுகாட்டிற்குச் செல்ல நிரந்தரப் பாதை இல்லாமல் தனியார் வயலில் இறங்கி சுடுகாட்டிற்குச் செல்லும் சூழ்நிலை இன்றளவும் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) பதிலை வாங்கிய பிறகு நீங்கள் பேசலாம்.*

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயானப் பாதை, மயானம் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு அனைத்து ஊராட்சிகளையும் ஆய்வு செய்து, எத்தனை கிராமங்களுக்கு மயானம் வேண்டும், மயானப் பாதை வசதி ஏற்படுத்தித் தர வேண்டும் போன்ற தரவுகளை தற்போது நாங்கள் சேகரித்திருக்கிறோம்.*

நீங்கள் ஆட்சியிலிருந்தபோது, 2017–2018–ல் 2.23 கோடி ரூபாயில் ஒரே ஒரு நிலத்தைத்தான் மயானப் பாதைக்காக எடுத்திருக்கிறீர்கள். 2018–2019–ல் 34 கோடி ரூபாயில் 4 இடங்கள் எடுத்திருக்கிறீர்கள். 2019–ல் 58.47 கோடி ரூபாய் மதிப்பிலான நிலம் எடுத்திருப்பதாகச் சொல்கிறீர்கள். ஆனால், 2019–2020 கொரோனா காலகட்டத்தில் என்ன செய்தீர்கள் என்று தெரியவில்லை. 2020–2021–ல் 5.43 கோடி ரூபாயில் ஒரு இடம் எடுத்திருக்கிறீர்கள். 2021–2022–ல் கொரோனாவிற்குப் பிறகு, நாங்கள் ஆட்சிக்கு வந்ததால், ஒரு இடத்தில் பிரச்சினை வந்து எடுத்தோம். 2022–2023–ஐப் பொறுத்தவரையில், 13 இடங்களில் பிரச்சினைகள் இருக்கின்றன என்பதைக் கண்டறிந்து, 13 இடங்களுக்கான நில எடுப்பு செய்து 27.30 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால், நில எடுப்பைப் பொறுத்தவரையில், அது இலவச வீட்டுமனைப் பட்டாவாக இருந்தாலும் சரி, மயானப் பாதையாக இருந்தாலும் சரி, நில உடைமையாளர்கள் நிலத்தைக் கொடுத்தால்தான் நாம் எடுக்க முடியும்.

மயானப் பாதையைப் பொறுத்தவரை, நில உடைமையாளர்கள், "நீங்கள் பாதி நிலத்தை வேண்டுமானால் பயன்படுத்திக்கொள்ளுங்கள்" என்று சொல்கிறார்கள். ஆகையால், கட்டாய நில எடுப்பு செய்கிற அளவிற்கு நாங்கள் போகவில்லை.

தனி நபர் பேச்சுவார்த்தை மூலமாக எடுத்துக் கொண்டிருப்பதால், இத்தகைய பிரச்சினைகள் இருக்கின்றன. இவற்றையும் கூடிய விரைவில் சரி செய்யவுள்ளோம். அதற்காகத்தான் அனைத்து தரவுகளையும் சேகரித்து வைத்திருக்கிறோம். எனவே, அனைத்து பிரச்சினைகளும் கூடிய விரைவில் சரி செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, விடுதிகளைப் பற்றி சொன்னார்கள். நாங்களும் நிறைய விடுதிகளுக்கு ஆய்வுக்குச் சென்று கொண்டுதான் இருக்கிறோம். மாவட்ட அளவிலும் சரி, மண்டல அளவிலும் சரி, எந்தவொரு விடுதியில் ஆய்வு மேற்கொள்ளும்போதும், இதற்கு முன்னர் ஆய்வுக்கு யாரேனும் வந்திருக்கிறார்களா, ஆய்வுக் கூட்டங்கள் ஏதேனும் நடத்தப்பட்டனவா என்று கேட்டால், இதற்கு முன்னர் இதுபோன்று யாரும் ஆய்வுக்கு வந்ததில்லை என்றுதான் பெரும்பாலும் சொல்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், நாங்கள் எந்தவொரு விடுதிக்குச் சென்றாலும், 10, 15 நிமிடங்களில் பார்த்துவிட்டு உடனேயே வந்துவிடுவதில்லை. சுமார் ஒரு மணி நேரம் அங்கேயே உட்கார்ந்து, அங்குள்ள மாணவர்களுடன் பேசி, அவர்களுக்கு சமைக்கப்படும் உணவை நாங்கள் சாப்பிட்டுப் பார்த்து, அவர்களுக்கு வேறு என்ன தேவை இருக்கிறது என்று கேட்டறிந்து, அவையனைத்தையும் நாங்கள் கணக்கில் எடுத்துக்கொண்டுதான் செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், விடுதிகளுக்குச் சென்று ஆய்வு செய்யுங்கள் என்று சொல்கிறார்கள். ** எங்களுடைய வேலை அது. அதை நாங்கள் சரியாகத்தான் செய்து கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களைப் பார்க்கும்போது, “hostel visit செய்தீர்களா?” என்பதைத்தான் முதல் கேள்வியாகக் கேட்கிறார்கள். அதனால், எந்தப் பிரச்சினையும் இல்லாமல் விடுதிகளை நாங்கள் நன்றாகவே நடத்திக் கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டாம் என்று சொல்கிறீர்களோ! (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 ஏப்ரல் 18]

திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது, ** என்று சொன்னார்கள். அதையெல்லாம் ** நாங்கள் இங்கே வந்திருக்கிறோம். அதற்காகத்தானே மக்கள் எங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்! எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசினால், நீங்கள் ஆரோக்கியமாக பதில் சொல்லுங்கள். எதுவுமே ** என்பதெல்லாம் சரியல்ல. அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன சொன்னார்கள் என்று சொல்கிறீர்கள்! (குறுக்கீடுகள்) சரி. அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல் அவர்கள். (குறுக்கீடு) அதேபோல, மாண்புமிகு அமைச்சர் திரு. சி.வி. கணேசன் அவர்கள் பேசும்போது, ** மக்கள் என்று சொன்னார்கள். அதை ஆதி திராவிட மக்கள் என்று திருத்திக்கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர், பேசுங்கள்.

திருமதி கு. மரகதம் குமரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயானப் பாதை பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். நான் என்னுடைய தொகுதியில், சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், இரண்டு வருட காலமாக மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகி, தொடர்ந்து இதைப்பற்றி சொல்லிக்கொண்டுதான் இருக்கிறேன். அதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 5–25

இந்த ஆண்டிற்கான கொள்கை விளக்கக் குறிப்பு, பக்கம் 58–ல், 2022–2023 ஆம் நிதியாண்டில் 1,123 கிராமங்கள் 'பிரதம மந்திரியின் முன்னோடி கிராமத் திட்டத்தின்'கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதே சமயத்தில் 2021–2022 ஆம் நிதியாண்டில் 1,357 கிராமங்கள் இந்தத் திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ளன. 2021–2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2022–2023 ஆம் ஆண்டில் 234 கிராமங்கள் குறைவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கான காரணம்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனது பதிலுரையில் விளக்க வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இல்லை என்போர் இருக்கையிலே,
இருப்பவர்கள் இல்லை என்பார்
மடி நிறைய பொருள் இருக்கும்
மனம் நிறைய இருள் இருக்கும்
எதுவந்த போதும் பொதுவென்று வைத்து
வாழ்கின்ற பேரை வாழ்த்திடுவோம்
கொடுத்ததெல்லாம் கொடுத்தான்
அவன் யாருக்காக கொடுத்தான் (மேசையைத் தட்டும் ஒலி)
ஒருத்தருக்கா கொடுத்தான்-இல்லை
ஊருக்காக கொடுத்தான்"

என்ற வாத்தியாரின் வாக்கின்படி, ஆண்டுதோறும் மத்திய, மாநில அரசுகள் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை ஆதி திராவிடர்-பழங்குடியின மக்களின் நலனுக்காக நிதியொதுக்கீடு செய்கிறது. ஆனால், அதில் ஆண்டுதோறும் குறிப்பிட்ட தொகையை செலவழிக்காமல் ** அரசின் மற்ற எந்தத் துறையும் தங்களுக்கு வழங்கப்பட்ட ** ஆனால், இந்தத் துறையில் மட்டும் ஏன் இத்தகைய நிலைமை. அரசு அலுவலர்களின் தவறா? இல்லை, ஆட்சியாளர்களின் தவறா? இல்லை, மக்களின் தவறா? எதுவாகினும் இனிமேல் இந்த நிலை தொடரக்கூடாது. தெலுங்கானா மாநிலத்திலுள்ள. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறிப்பிட்டு, எந்த இடத்தில், ** என்பதைச் சொல்லியிருக்க வேண்டும். (குறுக்கீடுகள்) அவர், பொதுவாகச் சொன்னதை நீக்குகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், இந்த வருடம், இந்த வகையில், உதாரணமாக, வீடு கட்டுவதற்காக இந்த ஆண்டு 20 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதில், 10 கோடி ரூபாய் ** என்று ஏதாவது ஓர் இடத்தில் இருப்பதைத்தான்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 ஏப்ரல் 18] [பேரவைத் தலைவர்]

நீங்கள் சொல்ல வேண்டும். அது இல்லையென்றால், அதை... (குறுக்கீடுகள்) நான் சொல்வது general ஆக. . . (குறுக்கீடுகள்) இல்லை, ஒரு குறையைச் சொல்லும்போது, இந்த இடத்தில், இந்தக் குறை இருக்கிறது என்று சொல்லுங்கள். அது இல்லையென்றால், அந்தப் பதிவை நீக்கி விடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர், பேசுங்கள் அம்மா.

திருமதி கு. மரகதம் குமரவேல்: தெலுங்கானா மாநிலத்தில் உள்ளதுபோல், ஆதி திராவிடர் நலன் மற்றும் பழங்குடியினர் நலத் துறையில் பயன்படுத்தாமல் இருக்கும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஆதி திராவிடர் துணைத் திட்டம் 1980-1981 ஆம் நிதியாண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாநிலத்தின் மொத்த திட்ட நிதியிலிருந்து தமிழ்நாட்டின் ஆதி திராவிட மக்கள்தொகைக்கு இணையாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, செயல்படுத்துவது இத்திட்டத்தின் அடிப்படை நோக்கம். மேலும், 45 துறைத் தலைமைகளை உள்ளடக்கிய 19 செயலாக்கத் துறைகளின் வாயிலாக ஆதி திராவிட மக்களின் மேம்பாடு மற்றும் நலன்களுக்காக இத்துணைத் திட்டத்தின்கீழ் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் சொல்வதை கொஞ்சம் கவனித்துக்கொள்ளுங்கள்.

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்: செலவினம் மேற்கொள்ளாத நிதி மத்திய அரசு கணக்கிற்கு ** அடுத்த நிதியாண்டில் மறு மதிப்பீடு (revalidation) செய்யப்பட்டு, அரசின் ஒப்புதல் பெற்று செலவினம் மேற்கொள்ளப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், 2023-2024 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட உரையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் ஆதி திராவிட துணைத் திட்ட செயலாக்கத்தைக் கண்காணித்திட

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திருமதி என். கயல்விழி செல்வராஜ்] [2023 ஏப்ரல் 18

தனிச் சட்டம் இயற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், முழுமையான செலவினம் மேற்கொள்ளப்பட்டு, நிதி ஒப்பளிப்பு செய்வதைத் தவிர்க்க இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், பேசுங்கள்.

திருமதி கு. மரகதம் குமரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்ற ஆணைப்படி, குறும்பர் இன பழங்குடியின மக்களுக்கு, ஊட்டி பழங்குடி ஆய்வு மைய கலாச்சார குறுமன்ஸ் அறிக்கையின்படி, அனைவருக்கும் பழங்குடியினச் சான்றிதழ் கிடைக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், தமிழகத்தின் உண்மையான பழங்குடி மக்களான லம்பாடி, குறும்பர், குறவர் உள்ளிட்ட இனங்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் உள்ள ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்களில் வீடற்றவர்களுக்கு புதிய வீடுகளை அரசு வழங்க வேண்டும். நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின்மூலம் கட்டப்படும் அடுக்குமாடி குடியிருப்புகளில் பட்டியல் வகுப்பைச் சார்ந்த மக்களுக்கு அதிகளவு வீடுகள் ஒதுக்கீடு செய்வதை அரசு உறுதி செய்ய வேண்டும்.

மேலும், இந்திரா நினைவு குடியிருப்பு வீடுகள், தொகுப்பு வீடுகள் ஆகியவை கட்டப்பட்டு 30 ஆண்டுகள் ஆகிவிட்டபடியால் சேதமடைந்து பொதுமக்கள் வசிக்க இயலாத சூழ்நிலை உள்ளது. எனவே, அவற்றை அரசே முன்வந்து முழுவதும் சேதமடைந்த வீடுகளைப் புதிதாகக் கட்டித்தர வேண்டும்; பகுதியாக சேதமடைந்த வீடுகளில் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினராக என்னைத் தேர்ந்தெடுத்த என் உயிரினும் மேலான மதுராந்தகம் தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கைகளை தங்கள் வாயிலாக அரசின் முன் வைக்கிறேன்.

2023 ஏப்ரல் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்படுவது பற்றி கூறினார்கள்.* PMAGY *திட்டத்தின்கீழ் மத்திய அரசால்தான் ஒவ்வொரு வருடமும் ஆதி திராவிட மக்களின் மக்கள்தொகைக்கேற்ப கிராமங்கள் தேர்வு செய்யப்படுகின்றன. இதனை மாநில அரசு தேர்வு செய்வது கிடையாது; மத்திய அரசுதான் தேர்வு செய்கிறது. தேர்வு செய்யப்படும் கிராமங்களுக்கு 21 இலட்சம் ரூபாய் கொடுக்கப்படுகிறது. இவ்வருடம் 1,123 கிராமங்கள் மத்திய அரசால்தான் தேர்ந்தெடுக்கப்பட்டன; இதனை நாம் தேர்வு செய்வதில்லை; மத்திய அரசுதான் தேர்வு செய்கிறது.*

அதேபோன்று, ஏற்கெனவே 30 வருடங்களுக்கு முன்பு கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகளைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு பயனாளிக்கும் மீண்டும் மீண்டும் கட்டிக் கொடுக்க முடியாத சூழ்நிலை இருப்பதால், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.50,000/- வரையிலும் சட்டமன்ற உறுப்பினர்கள் செலவு செய்து, repairing work-*ஐ செய்து கொடுக்கலாம். இதனை சென்ற வருடமே நான் சொல்லியிருக்கின்றேன். இந்தத் திட்டம் இப்போதைக்கு இல்லை. எனினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல் அவர்கள்.*

திருமதி கு. மரகதம் குமரவேல்: *எனது தொகுதி கோரிக்கைகளை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக, பதிவு செய்ய விரும்புகிறேன். மதுராந்தகம் வருவாய் வட்டம் 191 வருவாய்க் கிராமங்களைக் கொண்ட பெரிய வட்டமாகும். இதனை இரண்டாகப் பிரித்து, அச்சிறுபாக்கத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் அமைக்க வேண்டும். மதுராந்தகம் பகுதி தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளதால், அங்கு சிறப்பு விபத்து சிகிச்சை மருத்துவமனை அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

TRUTH ALONE TRIUMPHS

மதுராந்தகம் தொகுதி, அருங்குணம் உள்ளிட்ட பல கிராமங்களில் இருளர் சமுதாயத்தைச் சார்ந்த பழங்குடியின மக்கள் நீண்ட நாட்களாக வசித்து வருகின்றனர். அவர்கள் பல ஆண்டுகளாக வீட்டுமனைப் பட்டா கோரி வருகின்றனர். அவர்களுக்கு விரைந்து பட்டா வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். மேலும், அவர்களுக்குப் பழங்குடியின சாதிச் சான்றிதழ் பெறுவதில் இருக்கும் சிக்கல்களை ஆராய்ந்து, தகுதியுள்ள அனைவருக்கும் ST சான்றிதழ் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் மதுராந்தகம் தொகுதி ஜமீன்எண்டத்தூர் கிராமத்தில் அனைத்து வசதிகளுடன்கூடிய பல்நோக்கு சமுதாயக் கூடம் கட்டித் தர வேண்டும் என அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு மாவட்டம் ஏரிகள் நிறைந்த மாவட்டமாகும். மதுராந்தகம் சுற்றுவட்டாரத்திலுள்ள கண்டிராச்சேரி, கீழவலம், அவுரிமேடு, நீர்பெயர் ஆகிய இடங்களில் அமைந்துள்ள பொதுப் பணித் துறை ஏரிகளை முழுமையாகத் தூர்வாரி, வரத்துக் கால்வாய்களைச் சீரமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். அச்சிறுபாக்கம் ஒன்றியம், பெரும்பாக்கம் கிராமத்தில் கிளியாற்றின் இடையே தடுப்பணை அமைத்துத் தர வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, அடுக்குமாடிக் குடியிருப்புகளில் SC/ST மக்களுக்கு இலவசமாக வீடுகள் வழங்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"என்னதான் நடக்கும் நடக்கட்டுமே!
இருட்டினில் நீதி மறையட்டுமே!
தன்னாலே வெளிவரும் தயங்காதே!
என் தலைவன் இருக்கிறான் மயங்காதே!" (மேசையைத் தட்டும் ஒலி)
எங்கள் பொதுச் செயலாளர் இருக்கிறார் தயங்காதே!

எனக் கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

2023 ஏப்ரல் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள்.

***திரு. அ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லக்குடி என்ற தமிழ்ப் பெயர் நிலைத்திட, இரயில் தண்டவாளப் போராட்டம் நடத்தி வெற்றி கண்ட முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களை அப்பகுதியில் ஒருவன் என்ற முறையில் வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆம். திராவிட மாடல்; உள்ளாட்சித் துறையில் ஆதி திராவிடர்களுக்கென்று இட ஒதுக்கீடு செய்யப்பட்ட பொறுப்புக்கு மனு தாக்கல் செய்ய வைப்பது; அதைத் திரும்பப் பெற வைப்பது என்று தேர்தல் நடைபெறுவதைத் தடுப்பதும்; அப்படியே தேர்தல் நடைபெற்றாலும் வெற்றி பெற்றவரை ராஜினாமா செய்ய வைப்பது என்றும் இருந்த நிலையில், கடந்த 2006 ஆம் ஆண்டு நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உள்ளாட்சித் துறையின் அமைச்சராக இருந்தபோது, மதுரை மாவட்டம், பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி ஊராட்சிகளில் தேர்தலை நடத்தி, தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டியல் இனத்தவரை பதவிக் காலம் முழுவதும் ஊராட்சி மன்றத் தலைவராக பதவியில் அமர்த்தி, பணியாற்ற வைத்து, திராவிட மாடலுக்கு வித்திட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இளைஞர்களின் மனம் கவர்ந்து, பள்ளி, கல்லூரி மாணவர்கள், விளையாட்டு வீரர்கள் மனதையும் கவர்ந்து, தான் பொறுப்பேற்ற துறையில் திறம்படவும், அனைத்து மாவட்டங்களிலும் திட்டப் பணிகளை ஆய்வு செய்து, ஆட்சிக்கு நற்பெயர் ஈட்டியும், உறுதுணையாகவும் இருக்கும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்து, எங்கள் குடும்பத்தின் மூத்த அண்ணன் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மீதான மானியக் கோரிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பு வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்து உரையைத் துவங்குகிறேன்.

[திரு. அ. சௌந்தரபாண்டியன்] [2023 ஏப்ரல் 18
பிற்பகல் 5–35

பிறந்த மண்ணில் வேளாண்மையைத் தொழிலாகக் கொண்டு, உழுது வந்தவர்களை 'ஆதி குடியினர்' அல்லது 'முதல் குடியினர்' எனக் கூறுகின்றனர். வேளாண்மையை மட்டுமே குலத் தொழிலாகக் கொண்ட இவர்களைத்தான் 'ஆதி குடியினர்' எனக் கொள்ளலாம். 1881 மற்றும் 1891 கணக்கெடுப்பின்படி. மதராஸ் மாகாணத்தில் மொத்தம் 348 பிரிவுகளில் இவர்கள் இருந்ததாக குறிப்புகள் கூறுகின்றன. இப்படி சிறப்பாக வாழ்ந்தவர்களின் இன்றைய வாழ்வாதார இடங்களைப் பார்க்கின்றபோது, உட்காருவதற்குக்கூட இடம் இல்லையே என்ற நிலையில் உள்ளனர். இந்த நவ நாகரீக காலத்தில் வீடு என்றால், சமையலுக்கு என்றும், சமைப்பதற்கு என்றும், உறங்குவதற்கு என்றும், இயற்கை இடர்பாட்டை கழிப்பதற்கு என்றும், தனித்தனியாக வாஸ்து சாஸ்திரமெல்லாம் பார்த்து குடியிருந்துவரும் இந்தக் காலத்தில், அரசின்மூலம் வீடு கட்டும் சலுகை கொடுக்கப்படுகின்ற தருணத்தில் அந்தத் துறையின் அதிகாரிகள் சென்று பயனாளியின் இடத்தை அளக்கின்றபோது, 'கழிவறை கட்ட இடம் இல்லை' என்றும், ஏன், வீட்டைக் கட்டவே இன்னும் இரண்டு அடி, நான்கு அடி குறைவாக உள்ளது என்கின்ற நிலையில் அதைக் காரணம் காட்டி அந்தப் பயனாளிக்கு அந்த வீடு கட்டும் சலுகை கிடைக்காமல் போகிறது.

இதுபோன்ற நிலையில் உள்ள பயனாளிகள், 'வீடு கிடைக்குமா, பட்டியலில் நமது பெயர் உள்ளதா' என்றும், 'அப்பாடா பட்டியலில் நமது பெயர் இருக்கிறது; பயனாளியாக நாம் தேர்ந்தெடுக்கப்படுவோமா' என்றும், பயனாளி பட்டியலில் தன் பெயரைப் பார்த்ததும் 'அப்பாடா பயனாளியாகத் தேர்ந்தெடுத்தாகி விட்டது' என்று மனநிறைவு பெற்றவர், வீடு கட்டும் இடத்தை அளந்து கொடுக்க வந்த அதிகாரி, 'இந்த இடம் வீடு கட்ட போதுமானதாக இல்லை' என்றதும், அந்தப் பயனாளியின் மனது கீழே விழுந்து உடைந்து ஆயிரம் துண்டுகளாகிப் போன கண்ணாடி துகள்கள் போன்று ஆகிவிடுகின்றது.

இதுபோன்று உள்ளவர்களைக் கண்டறிந்து, இலவச வீட்டுமனைகளை அரசு வழங்கி வருவதை விரைவுபடுத்தி உறுதி செய்திடவும், அரசின்மூலம் கிடைக்கக்கூடிய தொகுப்பு வீடுகள், கான்கிரீட் வீடுகள் கிடைக்கவும், ஆண்டுதோறும் பயனாளிகளின் எண்ணிக்கையை உயர்த்திடவும் வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 18] [திரு. அ. சௌந்தரபாண்டியன்]

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு அரசு சலுகையில் வீட்டுமனைகள் வழங்க நிலம் கையகப்படுத்துவதில் பல்வேறு சிரமங்கள் இருக்கின்றன. உதாரணத்திற்கு லால்குடி ஊராட்சி ஒன்றியப் பகுதி வாய்க்கால் பாசனப் பகுதி என்பதால், அங்கன்வாடி கட்டடம் கட்டவே அரசு புறம்போக்கு நிலம் கிடைப்பது அரிதாக உள்ளது. இந்தப் பகுதியில் புறம்போக்கு இடமே இல்லை. இவர்களை புஞ்சை நிலப் பகுதிகளுக்கு இடமாற்றம் செய்வதும் கடினம். அப்படிச் செய்தால், அவர்களின் அன்றாட வாழ்வாதாரம் பாதிக்கும். எனவே, இதுபோன்ற இடங்களில் அரசு சிறப்புக் கவனம் செலுத்தி, அவர்கள் குடியிருக்கும் பகுதிகளிலேயே அடுக்குமாடி குடியிருப்புகளை உருவாக்கித் தர இயலுமா என்பதைப் பரிசீலிக்க வேண்டுகிறேன்.

பிரதம மந்திரி ஊரகக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 25 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட வீடுகளில் சிதலமடைந்த வீடுகள் விபத்துகளுக்கு உள்ளாகின்றன. உதாரணத்திற்கு, லால்குடி தொகுதியில் கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு மேலரசூர் கிராமத்தில் சமுத்திரம் என்பவரது வீட்டின் மேற்கூரை முழுவதும் இரவு 11 மணியளவில் இடிந்துவிட்டது. அந்த நிகழ்வின்போது, அந்த வீட்டின் சொந்தக்காரரும், அவரது மனைவியும் பக்கத்திலுள்ள அவர்களது உறவினர் வீட்டில் யதார்த்த நிலையில் பேசிக் கொண்டிருந்தனர். இதனால் எந்தவித விபரீதமும் இல்லாமல் தவிர்க்கப்பட்டது.

லால்குடி தொகுதி, முள்ளால் கிராமத்தில் பழுதடைந்த வீடுகளுக்குப் பராமரிப்புப் பணிகள் செய்துகொள்ள சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் கடந்த 8 ஆண்டுகளுக்கு முன்பு, தலா 25,000 ரூபாய் வீதம் என்னால் பரிந்துரை செய்யப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, பயனாளிகளுக்குப் பராமரிப்புப் பணிகளுக்குத் தேவையான கம்பி, சிமெண்ட் பொருட்கள் ஊரக வளர்ச்சித் துறையின்மூலம் கொடுக்கப்பட்டன. ஒரு சிலர், பகுதிப் பணிகளைச் செய்தனர். ஒரு சிலர் அந்தத் தொகை போதுமானதாக இல்லை என்று பணியைச் செய்திட முன்வரவில்லை. இந்த நிலையில் பயனாளிகளுக்குக் கொடுக்கப்பட்ட பொருட்களை அரசுத் துறையினர் கையகப்படுத்தினர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்ற பின்னர், எங்கள் திருச்சி மாவட்டத்தில் 21–6–2021 அன்று 14 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 703 பயனாளிகளுக்கும்,

24–11–2021 அன்று இரண்டாவது தடவையாக 14 ஊராட்சி ஒன்றியங்களில் 500 பயனாளிகளுக்கும், ஆக, 1,203 பயனாளிகளுக்கு தலா ரூபாய் 50,000 வீதம் 6 கோடியே ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்து அனுமதிக்கப்பட்டது.

இந்த இரண்டு உத்தரவுகளையும் மாவட்ட நிர்வாகம் 14–12–2021 அன்று இரத்து செய்துவிட்டது. அனுமதி வழங்கி ஐந்தரை மாதம் கழித்து இரத்து செய்ததால், இடைப்பட்ட காலத்தில் நிறைய பேர் பணிகளைத் தொடங்கி பாதி பணிகளைச் செய்தவர்களும், பணியைத் தொடங்கியவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அந்த மக்கள் போற்றிடவும், பாராட்டிடவும், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, இரத்து செய்யப்பட்ட பணிகளையும், இதுபோன்று பாதிக்கப்பட்ட வீடுகளையும் கண்டறிந்து, அவற்றைப் பழுது நீக்கி, இரவு நேரங்களில் அந்த மக்கள் நிம்மதியாக உறங்க, மாண்புமிகு முதல்வர் அவர்களால்தான் நாம் நிம்மதியாக உறங்குகிறோம் என்ற நிலையை உருவாக்கித் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மாநில அளவிலான ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம் 2013-க்குப் பிறகு 7 ஆண்டுகள் கழித்து 19–8–2021, 12–4–2022, 11–4–2023 என்று தொடர்ந்து 3 முறை கூட்டப்பட்டது. இது, அந்த மக்களின் வாழ்வாதாரம் உயர்ந்திட வேண்டுமென்ற மாண்புமிகு முதல்வர் அவர்களின் அக்கறையைக் காட்டுகின்றது.

ஆதி திராவிடர் நல ஆணையம் அமைத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆதி திராவிடர் நல ஆணையத்தின் கூட்டத்தை சென்னையில் மட்டும் கூட்டி, கலந்தாய்வு செய்வதை மாற்றி, அந்த ஆணையம் ஒவ்வொரு மாதமும் குறைந்தது இரண்டு மாவட்டங்களுக்காவது சென்று ஆய்வு செய்திடவும், எந்த மாவட்டத்திற்கு ஆய்வுக்குச் செல்கின்றதோ அங்குள்ள மக்கள் பிரதிநிதிகளையும் இணைத்துக்கொண்டு, ஆய்வுகளைச் செய்திடவும், அவ்வாறு ஆய்வு செய்திடும்போது, அரசால் அறிவிக்கப்படுகின்ற திட்டங்களைச்

2023 ஏப்ரல் 18] [திரு. அ. சௌந்தரபாண்டியன்]

செயல்படுத்தாத, நிறைவேற்றிடாத அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கவும் ஆணையத்துக்கு அறிவுறுத்த வேண்டும். இந்த ஆணையம் செயல்பட தேவையான நிதியை ஆணையத்துக்கு வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5–40

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் பொருளாதாரம் உயர்ந்திட தாட்கோமூலம் மானியத்துடன் கடன் வழங்க வங்கிகளுக்குப் பரிந்துரை செய்வதை வங்கிகள் அலட்சியம் செய்கின்றன. அந்த நபர்களுக்குக் கடனை வழங்குவதற்கு எளிதில் ஒப்புக்கொள்வதில்லை. ஆகையால், அந்தந்த வங்கிகளின் மண்டல மேலாளர்களிடம் தாட்கோமூலம் பரிந்துரைக்கப்படுகின்ற பயனாளிகளுக்கு காலம் கடத்தாமல், பல்வேறு நிபந்தனைகளை விதிப்பதிலிருந்து விலக்களித்து, பயனாளிகளுக்கு உடனடியாகவும், எளிதாகவும் கடன் கிடைக்க மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் உறுதிபடுத்தப்பட வேண்டும்.

கிறித்தவ ஆதி திராவிடர்களுக்கும், இந்து ஆதி திராவிடர்களுக்கும் உள்ள வேறுபாடு என்பது இறைவழிபாட்டைத் தவிர, குடியிருக்கும் இடம், நடக்கின்ற தெரு, குடிக்கின்ற தண்ணீர், பேசுகின்ற மொழி என்று எடுத்துக்கொண்டால் அனைத்தும் ஒன்றுதான். இவ்வாறு இவர்கள் இந்த நிலையில் இருப்பதை நாம் அனைவரும் அறிவோம். இவர்கள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலிருந்து வருவதால், அரசின்மூலம் கிடைக்க வேண்டிய அனைத்து சலுகைகளையும் பெற முடியாமல் போவதால், அவர்களின் வாழ்வாதாரம் பாதிப்படைவதை நாம் அறிவோம். இவர்கள், தங்களை ஆதி திராவிடர்கள் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்கின்ற கோரிக்கையினை பல்வேறு சந்தர்ப்பங்களில் வைத்து வருகின்றனர். இந்த கிறித்தவ ஆதி திராவிடர்களை, ஆதி திராவிடர் இனப் பட்டியலில் சேர்க்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

தேவேந்திர குல வேளாளர் இனத்தவர்களில் ஒரு சாரார் தங்களைப் பட்டியல் இனத்திலிருந்து மாற்றி, பிற்படுத்தப்பட்டோர் அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில், ஏதாவது ஒன்றில் தங்களை இணைத்திட வேண்டுமென்று கோருகின்றனர். இதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கனிவுடன் பரிசீலித்து, அவர்களுக்கு இதனால் எந்தப் பாதிப்பும் இருக்காது என்ற

[திரு. அ. சௌந்தரபாண்டியன்] [2023 ஏப்ரல் 18

முடிவுக்கு வரும்பட்சத்தில், அவர்களைப் பிற்படுத்தப்பட்டோர் அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்று ஏதாவது ஒரு பட்டியலில் சேர்க்க ஆவன செய்ய வேண்டுகிறேன்.

பூலித்தேவன் படையில் தளபதியாக இருந்து போராடிய வெண்ணிகாலாடிக்கு, அவர் வாழ்ந்த பகுதியில் மணிமண்டபம் கட்டித் தர வேண்டும் என்பதோடு, இமானுவேல் சேகரனுக்கும் மணிமண்டபம் கட்டியும், அவருக்கு அரசு விழா நடத்தவும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, திராவிட மாடல். சுய மரியாதை திருமணத்தைச் சட்ட வடிவமாக்கித் தந்தது திராவிட மாடல்; தாழ்த்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டை 18 சதவிகிதமாக்கியது திராவிட மாடல்; பழங்குடியினருக்கு ஒரு சதவிகித இட ஒதுக்கீடு செய்தது திராவிட மாடல்; பழங்குடியினருக்கு தனி இயக்குநரகம் அமைத்துத் தந்தது திராவிட மாடல்; (மேசையைத் தட்டும் ஒலி) குடிசையில் வாழ்ந்த மக்களுக்கு அடுக்குமாடி வீடு கட்டித் தர குடிசை மாற்று வாரியம் அமைத்துத் தந்தது திராவிட மாடல்; சித்திரை மாதம் கத்திரி வெயிலில் ஆதி திராவிடர்கள் குடிசைகள் எல்லாம் தீப்பற்றி எரிவதைக் கண்டு மனம் நொந்த கலைஞர் அவர்கள், இந்தியாவில் முதன்முதலாக கான்கிரீட் வீடுகளைக் கட்டித் தந்தது திராவிட மாடல்; (மேசையைத் தட்டும் ஒலி) முதன்முதலாக பெண்களுக்கு உள்ளாட்சித் துறையில் 33 சதவிகிதமும், வேலைவாய்ப்பில் 33 சதவிகிதமும் இட ஒதுக்கீடு செய்து தந்தது திராவிட மாடல்; (மேசையைத் தட்டும் ஒலி) சுதந்திர இந்தியாவில் முதன்முதலாக பெண்களுக்கு சொத்தில் சம பங்கு என்று சட்டம் கொண்டு வந்தது திராவிட மாடல்; (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாளை சமத்துவ நாளாக அறிவித்தது திராவிட மாடல்; தந்தை பெரியார் பிறந்த நாளை சமத்துவ நாளாக அறிவித்தது திராவிட மாடல்; (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றிய இந்தியாவில் முதன்முதலாக டாக்டர் அம்பேத்கர் பெயரில் சட்ட பல்கலைக்கழகம் அமைத்துத் தந்தது திராவிட மாடல்; (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் அம்பேத்கருக்கு மணிமண்டபம் கட்டி, சிலை வைத்தது திராவிட மாடல்; (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து மதத்தினரும், அனைத்து சாதியினரும் ஒரே இடத்தில் குடியிருக்கும் சமத்துவபுரத்தை உருவாக்கியது திராவிட மாடல்; (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக்கியது திராவிட மாடல். (மேசையைத் தட்டும் ஒலி)

2023 ஏப்ரல் 18] [திரு. அ. சௌந்தரபாண்டியன்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லக்குடி, கோவண்டாக்குறிச்சி, வெங்கடாஜலபுரம் ஆகிய வருவாய்க் கிராமங்களில் அரசு நிலம் 72.05.00 ஹெக்டேர், அதாவது, 180 ஏக்கர் அரசு நிலத்தை 2018 ஆம் ஆண்டு முதல் 2030 ஆம் ஆண்டு வரை 12 ஆண்டுகளுக்கு டால்மியா சிமெண்ட் நிறுவனம் சுண்ணாம்பு மண்ணை வெட்டியெடுத்துக்கொள்ள 5 கோடியே 32 இலட்சத்து 49 ஆயிரத்து 280 ரூபாய்க்கு அரசு குத்தகைக்குக் கொடுத்துள்ளது. (மணியடிக்கப்பெற்றது) இந்த நிலத்தை 26–7–2018–ல் குத்தகைக்குக் கொடுப்பதற்கு முன்பு, பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம், அன்றைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றதில் 2 பேர் கம்பெனிக்கு ஆதரவாகவும், 10–க்கும் மேற்பட்டோர் எதிராகவும் கருத்து தெரிவித்ததால், அந்தக் கூட்டம் பாதியிலேயே நிறுத்தப்பட்டது. இந்த நிறுவனத்தால் அந்தப் பகுதியில் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பாலும், மாசுக் கட்டுப்பாடு இல்லாததாலும் அதிகமானோர் காச நோயால் பாதிக்கப்பட்டு வருகின்றனர் என்பதும், நாளொன்றுக்கு 2 அல்லது 3 ஆயிரம் டன் சுண்ணாம்பு மண் வெட்டியெடுக்கின்றபோது, 12 ஆண்டுகளுக்கு குத்தகைத் தொகை 5 கோடியே 32 இலட்சத்து 49 ஆயிரத்து 280 ரூபாய் என்பது கண் துடைப்பு என்பதாலும், அந்தக் குத்தகைத் தொகை மிக சொற்பமான தொகை என்பதாலும், அரசு ஒரு குழு அமைத்து ஆய்வு செய்து, அதன் முடிவிற்கேற்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கின்ற (மணியடிக்கப்பெற்றது) அப்பகுதி மக்களின் விருப்பதை நிறைவேற்றிட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதுமே!*

திரு. அ. சௌந்தரபாண்டியன்: *தொடர்ந்து பத்து ஆண்டுகளாக வைக்கப்பட்ட கோரிக்கைகள் எதுவும் நிறைவேற்றப்படாமல் இருந்த நிலையில், லால்குடி அரசு தாலுகா மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்ட 7 கோடி ரூபாய் ஒதுக்கியமைக்கும், லால்குடி பேரூராட்சியை நகராட்சியாகத் தரமுயர்த்திக் கொடுத்தமைக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

பிற்பகல் 5–45

புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட ரூ.5 கோடியும், புள்ளம்பாடி வேளாண்மை விரிவாக்க மையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட ரூ.3 கோடியும், லால்குடி தொகுதி, அலங்கநல்லூர், கருடமங்கலம், நல்லூர் நகர்,

[திரு. அ. சௌந்தரபாண்டியன்] [2023 ஏப்ரல் 18

ஊட்டத்தூர் ஆகிய இடங்களில் நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக உயர்மட்டப் பாலங்கள் கட்ட ரூ.21 கோடியும் நிதி ஒதுக்கியதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். லால்குடி தொகுதியில் 25–க்கும் மேற்பட்ட கிராமங்கள் தொடர்புடைய மழைநீர் வடிகால் ஓடைக்கு நந்தையாறு என்று பெயர். இது தோன்றிய காலந்தொட்டு யாரும் செய்திடாத பணியை, 2021 வரை கேட்டும் கிடைக்காத பணியை, கடந்த இரண்டாண்டுக் காலமாக பல தவணைகளாகத் தூர்வாரிட ரூ.20 கோடியும், 'உங்கள் தொகுதியில் முதல்வர்' என்ற தலைப்பில், என்னால் வைக்கப்பட்ட கோரிக்கைகளில், முதல் கோரிக்கையான திருமங்கலம் அணையைப் புதிதாகக் கட்ட ரூ.15 கோடியும், கொள்ளிடம் ஆற்றில் அன்பில் கிராமத்தில் தடுப்புச் சுவர் கட்ட ரூ.7 கோடியும் என்று நீர்வளத் துறையின்மூலம் இதுவரை ரூ.42 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 11–4–2021 அன்று என்னால் எழுப்பப்பட்ட வினாவுக்கு வாய்ப்பே இல்லையென்ற பதிவை அன்றைய அமைச்சர் செய்தார்கள். இந்த மன்றத்தில் கடந்த 10 ஆண்டுகளாகக் கேட்டும் கிடைக்காத இந்தத் திட்டம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், போதும்.

திரு. அ. சௌந்தரபாண்டியன்: லால்குடி தொகுதிக்கு மட்டும் என்று தனியாக ஒரு புதிய கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் தொடங்க ரூ.246 கோடியும், புள்ளம்பாடி 43 என்ற பழைய குடிநீர்த் திட்டத்தைப் புதுப்பிக்க ரூ.9 கோடியும் என்று இதுவரை 255 கோடி ரூபாயைத் தந்து அப்பகுதி மக்களின் தாகம் தீர்த்ததற்காகவும், இந்த இரண்டாண்டுக் காலத்தில் இதுவரை பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிக் கொடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும், இதற்கு உறுதுணையாக இருந்த அண்ணன் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 18] [திரு. அ. சௌந்தரபாண்டியன்]

என்னுடைய தொகுதி சம்பந்தமான கோரிக்கைகளை தங்களிடம் கொடுத்துவிடுகிறேன். அவற்றை நான் இந்த மாமன்றத்தில் பேசியதாகக் கருதி, அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தொகுதிக் கோரிக்கைகள்:

லால்குடி தொகுதி, இடையாற்றுமங்கலம் தண்ணீர் பந்தலுக்கும் ஸ்ரீரங்கம் தொகுதி கிளிகூட்டுக்கும் இடையே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் கட்டித் தர வேண்டும்.

லால்குடி தாலுகா அலுவலகக் கட்டடம் பழுதடைந்துள்ளதால் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும். மணக்கால் இரயில் கேட்டில் மேம்பாலம் கட்டித் தர வேண்டும். ரெத்தினங்குடிக்கும், மண்ணச்சநல்லூர் தொகுதி இருங்களூருக்கும் இடையே ஊராட்சி ஒன்றியச் சாலையை இணைக்கும் வகையில், உப்பாற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் கட்டிக் கொடுக்க வேண்டும்.

பூவாளூர்-தச்சன்குறிச்சி-சிறுகனூர் நெடுஞ்சாலைத் துறை சாலையை இடைவழிச் சாலையாகத் தரமுயர்த்தித் தர வேண்டும். லால்குடி–அன்பில்–செங்கரையூர் சாலையை நெடுஞ்சாலைத் துறையின் இருவழிச் சாலையாகத் தரமுயர்த்தித் தர வேண்டும்.

இடையாற்றுமங்கலம்–பச்சம்பேட்டை–திருமணமேடு–வாளாடி வரை உள்ள நெடுஞ்சாலைத் துறையின் சாலையில் அய்யன் வாய்க்காலில் தடுப்புச் சுவர் அமைத்து இடைவழிச் சாலையாகத் தரமுயர்த்தித் தர வேண்டும்.

புதூர் உத்தமனூரில் இருக்கும் லால்குடி வட்டார தலைமை ஆரம்ப சுகாதார நிலையத்தில் பயன்படுத்தப்படாமல் உள்ள கட்டடங்களை அகற்றிவிட்டு 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரமுயர்த்தித் தர வேண்டும்.

லால்குடியில் இயங்கிவரும் நீதிமன்றங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டித் தர வேண்டும். லால்குடி நகராட்சிக்கு பாதாளச் சாக்கடைத் திட்டத்தை உருவாக்கித் தர வேண்டும். லால்குடி மகளிர் காவல் நிலையத்துக்கு சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டும்.

லால்குடி தாலுகாவை இரண்டாகப் பிரித்து, புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியத்தை முழுமையாகப் பிரித்து புள்ளம்பாடியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய தாலுகாவை உருவாக்கித் தர வேண்டும்.

புள்ளம்பாடி பேரூராட்சி இரயில்வே கேட்டில் உயர்மட்டப் பாலம் கட்டித் தர வேண்டும். புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியம், வந்தலை கூடலூர் கிராமத்திற்கும், வந்தலை கிராமத்திற்கும் இடையே ஊராட்சி ஒன்றிய சாலையிலுள்ள நந்தையாற்றில் சருக்குப் பாலத்திற்குப் பதிலாக உயர்மட்டப் பாலம் கட்டித் தர வேண்டும்.

வந்தலை கூடலூருக்கும்-பு.சங்கேந்திக்கும் இடையே ஊராட்சி ஒன்றிய சாலையில் நந்தையாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டித் தர வேண்டும். புள்ளம்பாடி-சிறுகளப்பூர்- ஊட்டத்தூர்-பாடாலூர் நெடுஞ்சாலைத் துறையின் இடைவழிச் சாலையை இருவழிச் சாலையாகத் தரமுயர்த்தித் தர வேண்டும்.

சிறுகளப்பூர்-அழுந்தலைபூர்-மால்வாய்-கல்லகம் நெடுஞ்சாலைத் துறை சாலையை இருவழிச் சாலையாகத் தரமுயர்த்தித் தர வேண்டும். புள்ளம்பாடி-ஆலங்குடி மஹாஜனம் செங்கரையூர் நெடுஞ்சாலைத் துறை சாலையில் தடுப்புச் சுவர் அமைத்து சாலையை இருவழிச் சாலையாகத் தரமுயர்த்தித் தர வேண்டும்.

தாப்பாய்-கல்லக்குடி நெடுஞ்சாலைத் துறையின் இடைவழிச் சாலையை இருவழி சிமென்ட் சாலையாகத் தரமுயர்த்த வேண்டும். மண்டபம்-பெருவளப்பூர்-நம்புகுறிச்சி நெடுஞ்சாலைத் துறையின் சாலையை இருவழிச் சாலையாகத் தரமுயர்த்தித் தர வேண்டும்.

புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியம், மால்வாய் கிராமத்தில் புதிய துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டும். புள்ளம்பாடி தீயணைப்பு நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தே. மதியழகன் அவர்கள்.

திரு. தே. மதியழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 18] [திரு. தே. மதியழகன்]

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றைத் திருத்தி எழுதிய பேரறிஞர் அண்ணா, உலகத் தமிழர்களுக்கெல்லாம் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரை வணங்கி, அவர்களின் ஆசியுடன் என் உரையைத் தொடங்குகின்றேன்.

தன் இனம் காத்திட தன்னலம் மறந்து சொல், செயல், சிந்தனை என அனைத்திலும் திராவிட மாடல் எனும் பாதையை வகுத்து அடிமட்ட ஏழை, எளிய மக்களின் வலியைப் போக்கி, அனைவருக்குமான வளர்ச்சி என சமூக நீதியின்பால் ஆட்சி நடத்தும் 21 ஆம் நூற்றாண்டின் ஆகச்சிறந்த மாபெரும் தலைவனே! அதிரடி திட்டங்களினால் தமிழக மக்களின் வாழ்வில் பிரகாச ஒளியேற்றிய உதயசூரியனே! சாதி, மதத்திற்கு இங்கு இடமில்லை, கல்வி கற்றால் இந்த உலகமே உனக்கானது. அதற்கான படியை உனக்கு உருவாக்கித் தருவதே எனது செயல்பாடு என ஓய்வறியாமல் உழைத்துக் கொண்டிருக்கும் திராவிட சிற்பியே! தமிழினத் தலைவர் கலைஞர் கண்டெடுத்த இந்தியாவின் மாண்புமிகு முதல்வர் தளபதியார் அவர்களே, தங்களை வாழ்த்தி, வணங்கி எனது உரையை ஆரம்பிக்கின்றேன்.

தந்தைக்குச் சிறிதும் சளைத்தவர் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில், அனைத்து தரப்பு மக்களையும் தனது இயல்பான, வசீகரமான பேச்சால் கட்டி இழுக்கும் எங்களின் இளம் தலைவர், மக்களின் மனம் கவர்ந்த இளவல், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அமைச்சராகப் பொறுப்பேற்ற முதல் நாள் கபடி ஆட்டத்திற்கு முதல் கையெழுத்திட்டு, தனது ஆட்டத்தைத் தொடங்கியவர், ஓயாமல் ஓடிக்கொண்டே இருக்கிறார் மக்கள் நலனுக்காக. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின்மீது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காட்டிவரும் அக்கறையைப் பார்க்கும்போது, வரும் ஒலிம்பிக்கில் தமிழகத்திலிருந்து அதிக அளவிலான வீரர்கள் கலந்துகொண்டு தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்க்கும் விதமாக, அதிகப்படியான பதக்கங்களைப் பெற்றுத் தருவார்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

[திரு. தே. மதியழகன்] [2023 ஏப்ரல் 18

அவையின் முன்னவர், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களையும், ஏனைய மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும், மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்களையும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களையும் வணங்குகிறேன். கிருஷ்ணகிரி மாவட்ட கழக உடன்பிறப்புகளுக்கும், கிருஷ்ணகிரி மாவட்ட பொதுமக்களுக்கும் மற்றும் இந்த மாபெரும் சபைக்கு என்னை அனுப்பி வைத்து அழகு பார்க்கும் பர்கூர் தொகுதி மக்களுக்கும் மற்றும் எனது குடும்பத்தாருக்கும் எனது நன்றிகலந்த வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு தலைசிறந்த நிதிநிலை அறிக்கை எப்படி இருக்க வேண்டுமென்பதற்கு சிறந்த உதாரணமே இந்த 2023–2024 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைதான். கடந்த ஆண்டுகளில் நகரப் பேருந்துகளில் மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து பயணம், இல்லம் தேடிக் கல்வி, நான் முதல்வன், நம்மைக் காக்கும் 48, பட்டப் படிப்பு படிக்கும் மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய், புதுமைப் பெண் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம் ஆகிய சிறப்பான திட்டங்களும், இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மகளிர் உரிமைத் தொகை, அரசுப் பள்ளிகளில் காலைச் சிற்றுண்டி, தூய்மைப் பணியாளர்களுக்கு ரூ.5,000/– ஊதிய உயர்வு என மலை அடுக்குகளைப் போல சாதனைகளைப் புரிந்துகொண்டே நிதிப் பற்றாக்குறையைக் குறைத்திருப்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. தனது அயராத உழைப்பாலும், உயரிய சிந்தனையாலும், அறிவார்ந்த சக அமைச்சர்களுடன் கலந்து ஆலோசித்து மக்களுக்கு வழங்கும் சேவைகளை எவ்வித சமரசமுமின்றி வழங்கிக் கொண்டே 62 ஆயிரம் கோடி ரூபாய் நிதி பற்றாக்குறையை 30 ஆயிரம் கோடி ரூபாயாகக் குறைத்து மாபெரும் சாதனையை நிகழ்த்திக்காட்டியுள்ளது தளபதியாரின் கழக அரசு.

பிற்பகல் 5–50

அரிதிலும் அரிது, பட்டை தீட்டிய வைரத்தைப்போல கூரிய சிந்தனையைக் கொண்டு செயல்படும் தங்களைப்போன்ற முதல்வர் அமைவது அரிது. அதனால்தான் இந்திய மக்கள் அனைவரும் தங்களை எதிர்பார்த்து காத்துக்கொண்டிருக்கிறார்கள். தொலைநோக்குத் திட்டத்திற்கு மட்டும் நீங்கள் நாயகர் அல்ல. உலகத்திற்கே முன்னுதாரணமாக, புரட்சிகரமான திட்டங்களுக்கும் நாயகர் நீங்கள் மட்டும்தான், தளபதியார் அவர்களே!

2023 ஏப்ரல் 18] [திரு. தே. மதியழகன்]

இன்றைய மானியக் கோரிக்கை விவாதத்திற்குப் பதிலளிக்கும் மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சியினை உறுதி செய்திடவும் மற்றும் அவர்களது சட்டபூர்வமான உரிமைகளைப் பாதுகாத்திடும் பொருட்டும், 2023–2024 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.3,513 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் கல்விக்கென அதிக நிதி ஒதுக்கியுள்ளது சிறப்பு வாய்ந்த நிகழ்வாகும்.

பள்ளி மாணவர்களுக்கு சிறப்பு மற்றும் கற்பிப்புக் கட்டணச் சலுகை, உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்குச் சிறப்பு உதவித் திட்டம், வெளிநாடு சென்று படிக்க விரும்பும் ஏழை மாணவர்களுக்கு உதவித் திட்டம் மற்றும் பெண் கல்வி சிறப்பு ஊக்கத்தொகைத் திட்டம் போன்ற சிறப்பான திட்டங்களை அமல்படுத்தி ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் 100 சதவிகித கல்வி என்கிற இலக்கினை நோக்கி நமது அரசு வேகமாக முன்னேறிக் கொண்டிருப்பது மிகவும் மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது.

மதுரை, கோயம்புத்தூர், திருச்சி மற்றும் நீலகிரியில் ஆதி திராவிடர், பழங்குடியின மாணவர்களுக்கு 100 கோடியில் புதிய விடுதிகள், தொழில் முனைவோருக்கு அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம், 1,000 கோடி ரூபாயில் அயோத்திதாசப் பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம் என அடித்தட்டு மக்களின் கைகளை இறுகப் பிடித்து தூக்கி நிற்க வைத்திருக்கிறார் சமூகநீதிச் செம்மல் மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

அகிம்சைக்கு ஒரு காந்தி, சுய மரியாதைக்கு ஒரு பெரியார், தமிழினத்திற்கு ஒரு கலைஞர் என்கிற வரிசையில் சமூக நீதி, திராவிட மாடலுக்கு மற்றொரு பெயர்தான் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என (மேசையைத் தட்டும் ஒலி) தனது செயல்பாடுகளால் ஒட்டு மொத்த இந்தியாவையும் பேச வைத்த முதல்வர்களுக்கெல்லாம் முதல்வரே, தங்களின் சமூக நீதியின் மீதான அக்கறையைக் கண்டு உள்ளபடியே வியந்து பாராட்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களில் முதல் பட்டதாரி மற்றும் அரசு வேலைவாய்ப்புகளைப் பெறாத குடும்பங்களை அடையாளம் கண்டு எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்கிற தளபதியாரின் எண்ணங்களுக்கு மேலும் வலுசேர்க்கும் வகையில் சிறப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம்-ஒழுங்கை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பாரபட்சமின்றி நீதியை நிலைநாட்டி வருவதால் தமிழகம் அமைதிப் பூங்காவாக இருந்து வருகிறது. அதற்காக எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேவேளையில், ஆதாயக் கொலைகளுக்கு உடந்தையாக கூலிக்கு வேலை செய்யும் குற்றவாளிகள் 50 நாளிலிருந்து 90 நாட்களுக்குள் ஜாமீன் பெற்று வெளியே வந்து விடுகிறார்கள். அதைப் பார்க்கும் இளைஞர்கள் தவறான கண்ணோட்டத்திற்கு வருகின்றனர். ஆகையால் இவர்களுக்கு ஜாமீன் தரும் கால அளவை 180 நாட்கள் என மாற்றியும், இறுதி அறிக்கையை 90 நாட்களில் தாக்கல் செய்து தண்டனை பெற்றுத் தரும் வகையிலும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் சட்டத் திருத்தம் செய்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 10 ஆண்டுகளில் அதிக வட்டி தருவதாக போலி விளம்பரம் செய்து, பொருளாதாரக் குற்றம் புரியும் குற்றவாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வந்தாலும், கடந்த 20 மாதங்களில் பொதுமக்களின் முதலீட்டை ஏமாற்றிச் சென்ற Aarudhra, IFS மற்றும் Hijau போன்ற நிதி நிறுவனங்களின்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, எதிரிகள் கைது செய்யப்பட்டு, முதலீட்டாளர்களுக்கு பணம் திரும்பி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவது பொதுமக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. அதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் சுமார் 5 இலட்சத்திற்கும்மேல் இருக்கும். அவர்களைக் காப்பாற்ற தனிக் கவனம் செலுத்தி, பாதிக்கப்பட்டவர்கள் முதலீடுகளைத் திரும்ப பெற ஒரு காவல் சரகத்திற்கு ஒரு சிறப்பு நீதிமன்றம் அமைத்தும் வழக்குகளைக்

2023 ஏப்ரல் 18] [திரு. தே. மதியழகன்]

கையாள அதிகப்படியான காவலர்களையும், தனி DRO-ஐயும் நியமித்து முதலீட்டாளர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இதுபோன்ற நிதி நிறுவனங்களைக் கண்காணிக்கவும், உரிமம்– Licence வழங்கும் முறையை ஆராயவும் புதிய நடைமுறைகளைக் கொண்டுவர வேண்டும்.

மேலும், கிருஷ்ணகிரி–பெங்களூரு நெடுஞ்சாலையில் அமைக்கப்பட்டுள்ள சுங்கச் சாவடி, கிருஷ்ணகிரி நகராட்சி எல்லைக்கு மிக அருகிலேயே அமைந்துள்ளது. நகர்ப் பகுதியிலிருந்து 10 கிலோ மீட்டருக்கு அப்பால்தான் சுங்கச் சாவடி அமைய வேண்டும் என விதிகள் இருந்தும் அவை கடைப்பிடிக்கப்படாமல் சுங்கச் சாவடி அமைக்கப்பட்டுள்ளதால், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காவல் துறை அலுவலகம், மருத்துவக் கல்லூரி, வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், வேளாண்மை அலுவலகம், சுகாதார அலுவலகம் மற்றும் பல்வேறு மாவட்ட அரசு அலுவலகங்கள் ஆகியவற்றிற்கு தினந்தோறும் பொதுமக்கள் சென்று வருவதற்கு பெரும் இடையூறாக இருக்கிறது. இதற்கென ஒவ்வொரு முறையும் ரூபாய் 100–க்கும் மேலாக செலவிட வேண்டியுள்ளது.

பிற்பகல் 5–55

குறிப்பாக, பழைய மாவட்டத் தலைமை மருத்துவமனைக்கு 2,800–க்கும் மேற்பட்ட நோயாளிகள் தினந்தோறும் வந்து பயன்பெற்ற நிலையில், தற்பொழுது இந்தச் சுங்கச் சாவடியைத் தாண்டியே புதிய மாவட்ட தலைமை மருத்துவமனைக்குச் செல்ல வேண்டியுள்ளதால் பாதிக்கும் குறைவாக, 1,500–க்கும் குறைவான நோயாளிகளே வந்து செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. இது கிருஷ்ணகிரி நகர மக்களின் அடிப்படை சேவையையே முடக்கும் வகையில் அமைந்துள்ளது. சட்டத்திற்குப் புறம்பாகவும் பொது மக்களின் நலனுக்கு எதிராகவும் இருக்கும் இந்தச் சுங்கச் சாவடியை அகற்றிட பலமுறை முயன்றும், நெடுஞ்சாலைத் துறை கண்டுகொள்ளாமல் இருந்து வருகிறது. ஆகையால், மக்களின் காவல் தெய்வம் மாண்புமிகு முதல்வர் தளபதியார் அவர்கள் இந்தச் சுங்கச் சாவடியை உடனடியாக அகற்றிட ஆவன செய்ய வேண்டும் என மிகவும் வேண்டி கேட்டுக்கொள்கின்றேன்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பர்கூர் மற்றும் போச்சம்பள்ளியில் அமைந்துள்ள சிப்காட் பகுதிகளில் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த நிறுவனங்களுக்கு

ஆரம்ப காலங்களில் நிலம் அளித்தவர்கள் மற்றும் உள்ளூர் பகுதியில் வசிக்கும் தகுதி வாய்ந்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் மறுக்கப்பட்டு வருகிறது. திறமையான கிராமப்புற இளைஞர்களை ஊக்குவிக்கும்பொருட்டு, இந்த நிறுவனங்களில் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்க பரிந்துரைக்க வேண்டும் என மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களையும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழக அரசின் வேளாண் நிதிநிலை அறிக்கையில் கிருஷ்ணகிரி மாவட்டம், அரசம்பட்டி தென்னைக்கும் மற்றும் கிருஷ்ணகிரி பன்னீர் ரோஜாவுக்கும் புவிசார் குறியீடு பெற்றுத் தரப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது விவசாயிகள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. அதற்காக கிருஷ்ணகிரி விவசாயிகளின் சார்பாக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாங்கனி மாவட்டமான கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான மாமரங்கள் தற்போது Thrips – சிறு பூச்சிகள் பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் மாங்காய் விளைச்சல் குறைந்தது மட்டுமல்லாமல், தரமும் குறைந்து காணப்படுகிறது. ஆதலால் “மா” மற்றும் “தென்னைக்கு” சிறந்த வேளாண் விஞ்ஞானிகளை வைத்து, சிறப்பு ஆராய்ச்சி மையம் அமைத்து, விவசாயிகளுக்குத் தேவையான பூச்சிக்கொல்லிகள், சாகுபடி மற்றும் அறுவடை பற்றிய விழிப்புணர்வை வழங்கவும், “மா” செடிக்கு காப்பீடு தொகை வழங்கவும் ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

TRUTH ALONE TRIUMPHS

என்னுடைய தொகுதியின் நீண்ட நாள் கோரிக்கையான, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள படேதலா பெரிய ஏரியிலிருந்து பர்கூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 2,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதிபெறும் வகையில் வெண்ணம்பள்ளி, ஓரப்பம், காட்டகரம் ஏரி உட்பட 11 ஏரிகளுக்குத் தண்ணீர் வழங்க வெட்டப்பட்ட கால்வாயினை மறுசீரமைப்பு செய்து ஆழமான பகுதிகளில் கட்டுமானம் மேற்கொள்ள வேண்டும். மேலும், அச்சமங்கலம் ஏரியிலிருந்து புதிதாக கால்வாய் வெட்டி குட்டூர் ஏரிக்கும், காகங்கரை ஏரிக்கும் தண்ணீர் கொண்டு செல்ல ஆவன செய்யுமாறு வேண்டி கேட்டுக்கொள்கின்றேன்.

2023 ஏப்ரல் 18] [திரு. தே. மதியழகன்]

10 ஆண்டுகளுக்கு முன்பே போச்சம்பள்ளிக்கு வட்டார வளர்ச்சி அலுவலகம் அறிவிக்கப்பட்டது, இதுநாள்வரை இத்திட்டம் நிலுவையிலே உள்ளது. அதற்கான அலுவலகத்தைக் கட்டி, உடனடியாக மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுகிறேன்.

பர்கூர் பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள ராஜ கால்வாயின் ஆக்கிரமிப்புகளை அகற்றி மழைநீர் வடிகால் அமைத்துத் தர ஆவன செய்யுமாறு வேண்டி கேட்டுக்கொள்கின்றேன்.

காவேரிப்பட்டினம் ஒன்றியத்துக்குட்பட்ட சந்தனூர் ஏரியிலிருந்து உபரிநீரை கொட்டாவூர், பாப்பாரப்பட்டி, சின்ன புளியம்பட்டி, வையம்பட்டி, இருமத்தூர், காராமூர் மற்றும் சாமாண்டப்பட்டி ஆகிய ஏரிகளுக்குத் தண்ணீர் வழங்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பர்கூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் வாழும் இருளர் மற்றும் ஆதி திராவிட மக்கள் குடியிருக்கும் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் மிகவும் பழமையானதாகவும், எந்த நேரத்திலும் இடிந்து விழும் சூழ்நிலையில் உள்ளதாலும் இவர்களுக்கு புதிய வீடுகளைக் கட்டித் தந்து, அவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

எந்த மாநிலத்திலும் இல்லாத சமூக நீதி, மத நல்லிணக்கம் அனைத்து மக்களின் ஒருமித்த வளர்ச்சி என வையகம் போற்றும் வாழ்வாங்கு சீர்மிகு பொற்கால ஆட்சியைக் கொடுத்துக் கொண்டிருக்கும் இந்தியாவின் தலைசிறந்த மாண்புமிகு முதல்வர் தளபதியார் அவர்களை வாழ்த்தி வணங்கி எனது உரையை இறுதி செய்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக் கோரிக்கைகளைத் தங்களிடம் கொடுத்துவிடுகிறேன். அவற்றை அவைக்குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தொகுதிக் கோரிக்கைகள்:

நாகரசம்பட்டி பேரூராட்சியில் 1 முதல் 15 வார்டுகளிலும் கழிவு நீர் கால்வாய்களை சரி செய்ய வேண்டும். வார்டு 1-ல்

மேம்பாலத்துக்கு அடியில் சிமெண்ட் சாலை அமைத்து உபரி நீரை வெளியேற்றிட வடிகால் அமைக்க வேண்டும்.

பர்கூர் பேரூராட்சியில் பாம்பாற்றைத் தூர்வாரி, சுத்தம் செய்து தர வேண்டும்.

கீழ்க்காணும் பகுதிகளில் கழிவுநீர் கால்வாய் அமைக்க வேண்டும்:

பர்கூர் வடக்கு ஒன்றியம், மல்லப்பாடியில் வெங்கடாபுரம் ஹவுஸிங் போர்டு முதல் முருகன் வீடு வரை, கந்திகுப்பம் ஊராட்சி, கந்திகுப்பம் குக்கிராமம், கந்திகுப்பம் முதல் காவல் நிலையம் வரை, மிட்டப்பள்ளியில் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் இருந்து நாராயணன் வீடு வரை, B.R.G.*மாதேப்பள்ளி பேரூராட்சியில் ஜோக்லூர் மாரியம்மன் கோயில் முதல்* AU Building *வரை, வெண்ணம்பள்ளி கிருஷ்ணப்ப உடையார் வீடு முதல் நடராஜன் வீடு வரை, வெண்ணம்பள்ளி உடையார் தெரு குப்பன் வீடு முதல் வெங்கடாசலம் வீடு வரை, சின்னமட்டாரப்பள்ளி ஆதி திராவிடர் காலனி, முனிரத்தினம் வீடு முதல்* VAO *ஆபீஸ் வரை, மேடுகம்பள்ளி கிராமம், பெருகோபனப்பள்ளி பேரூராட்சியில் கீதா மளிகை கடை முதல் சின்னராஜ் வீடு வரை, சின்னராஜ் வீடு முதல் தூர்வாசி வீடு வரை, அரசமரம் முதல் கிருஷ்ணன் வீடு வரை, அரசமரம் முதல் முனியப்ப செட்டி வீடு வரை, நூலகம் முதல் அறிவழகன் வீடு வரை, அதிர்வு வீடு முதல் மனோகரன் வீடு வரை, மாரியம்மா கோயில் பின்புறம் வீதிகள், குள்ளம்பட்டி வீடு முதல் மாதையன் வீடு வரை, கரடி கொள்ளப்பட்டி சுமார் 300 மீட்டர் வரை, மாதையன் ஈரல் முதல் பாபு ஜாம் வீடு வரை, செந்தில் வீடு முதல் சரவணன் வீடு வரை, பெருகோப்பனப்பள்ளி ஊராட்சிகளில் 500 மீட்டர், காலனி குடுகப்பட்டி 100 மீட்டர் முனிராஜ் வீடு வரை, சிகரலப்பள்ளி பேரூராட்சியில், சக்கில்நத்தம் கிராமத்தில் 300 மீட்டர், கப்பல்வாடி கிராமத்தில் 300 மீட்டர், வெங்கடசமுத்திரம் கிராமத்தில் 200 மீட்டர், ஐ. கொத்தப்பள்ளி பேரூராட்சியில், தொகரப்பள்ளி மேல் தெரு சிமெண்ட் சாலை கழிவுநீர் கால்வாய் 400 மீட்டர், தொகரப்பள்ளி* X–Road *300 மீட்டர், அஞ்சூர் பேரூராட்சியில், மாதப்பன் வீடு முதல் ரவி கால்வாய் வரை, ஜெகதேவி பேரூராட்சியில் ஜெகதேவி கிராமத்தில் 2,000 மீட்டர், குட்டூர் பேரூராட்சியில், குட்டூர் ஆம்பள்ளி முனிசாமி நாகராணி வீடு முதல்* OHT *பம்புரூம் வரை 130 மீட்டர், குட்டூர் ஆம்பள்ளி ஓம்சக்தி கோயிலிலிருந்து கண்ணன் வீடு வரை சுமார்*

2023 ஏப்ரல் 18] [திரு. தே. மதியழகன்]

200 மீட்டர், பட்டலப்பள்ளி பேரூராட்சியில், கொங்கன் தெருவில் சுரேஷ் வீடு முதல் வெங்கடேஷ் கடை வரை கழிவுநீர்க் கால்வாய் அமைக்க வேண்டும்.

அம்மன் நகர், வெண்ணம்பள்ளி நாகாளம்மன் கோயில் முதல் வார்டு உறுப்பினர் ரேணுகா வீடு வரை பேவர் பிளாக் அமைக்க வேண்டும்.

கீழ்க்காணும் பகுதிகளில் சாலைகள் அமைக்கப்பட வேண்டும்:

நாகரசம்பட்டி பேரூராட்சியில், வார்டு 1-ல்-தார்ச் சாலை, வேலம்பட்டி வார்டு 3-ல் வேலம்பட்டி மின் வாரிய சாலை, N. தட்டக்கல் வேலம்பட்டி வார்டு 8-ல் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி-சாக்கியம்மன் கோவில் வரை, நாகரசம்பட்டி 1 முதல் 15 வார்டுகளிலும் சிமெண்ட் சாலை மற்றும் பேவர் பிளாக் சாலைகள் அமைக்கப்பட வேண்டும்.

பர்கூர் பேரூராட்சியில் பர்கூர் 15 வார்டுகளிலும் சிமெண்ட் சாலை/பேவர் பிளாக் சாலை மற்றும் வடிகால், தாமோதர அள்ளி சந்தனூர் துவக்கப் பள்ளி முதல் சந்தனூர் பாலன் வீடு வரை ஈரடுக்கு ஜல்லியுடன் தார்ச் சாலை, பாலேகுளி, தோப்பூர் முதல் கணவாய்மூளை வரை செல்லும் சாலையை ஈரடுக்கு ஜல்லியுடன் கூடிய தார்ச் சாலை, மாரிசெட்டி அள்ளி, ஆனாங்குட்டை ஏரி பேருந்து நிறுத்தம் முதல் கொட்டாவூர் வரை செல்லும் சாலையை ஈரடுக்கு ஜல்லியுடன் தார்ச் சாலை, தளி அள்ளி, குட்டிவேடிச்சம்பட்டி கிராமம் முதல் பழனிகொட்டாய் வரை செல்லும் சாலைக்கு ஈரடுக்கு ஜல்லியுடன் தார்ச் சாலை, அகரம், கோமாளிகொட்டாய் முதல் குடிமேனஅள்ளி ரோடு வரை ஈரடுக்கு ஜல்லியுடன் தார்ச் சாலை, பெண்ணேஸ்வர மடம், பெண்ணேஸ்வர மடம் முதல் அண்ணாகொட்டாய் வரை ஈரடுக்கு ஜல்லியுடன் தார்ச் சாலை, பாப்பாரப்பட்டி, சாமாண்டப்பட்டி பெருமாள் வீடு முதல் காராமூர் சுண்ணாம்புகாரிச்சி கொட்டாய் ஈரடுக்கு ஜல்லியுடன் தார்ச் சாலை, தட்ரஅள்ளி, மாதானூர் முதல் கரிமலை அடிவாரம் வரை ஈரடுக்கு ஜல்லியுடன் தார்ச் சாலை அமைக்க வேண்டும்.

ஆவத்துவாடி, ஆவத்துவாடி மாரியம்மன் கோயில் முதல் ஆற்றுப்படுகை வரை தார்ச் சாலை, நெடுங்கல், நெடுங்கல் மாரியம்மன் கோயில் முதல் தொட்டிகொட்டாய் வரை ஈரடுக்கு

ஜல்லியுடன் தார்ச் சாலை, பண்ணந்தூர், பண்ணந்தூர் நான்கு ரோடு முதல் வேதகாரம் வழியாக கட்டகாலன் கொட்டாய் வரை செல்லும் சாலைக்கு ஈரடுக்கு ஜல்லியுடன் தார்ச் சாலை, கூரம்பட்டி பாலேகுளி தார்ச் சாலை முதல் மாங்குடிநகர் வரை தார்ச் சாலை, எருமாம்பட்டி, கூரம்பட்டி பாலேகுளி தார்ச் சாலை முதல் வேடிச்சி கொட்டாய் வரை தார்ச் சாலை, எருமாம்பட்டி, கூரம்பட்டி ஏரிக்கரை முதல் மொட்டையன் நகர் வரை தார்ச் சாலை, எருமாம்பட்டி, எருமாம்பட்டி கூச்சக்கல்லூர் தார்ச் சாலை முதல் தின்னன்கொட்டாய் வரை உள்ள மண் சாலையை தார்ச் சாலையாக மாற்றுதல், எருமாம்பட்டி, ஐகுந்தம் ரோடு முதல் கூச்சக்கல்லூர் வரை உள்ள இணைப்புச் சாலைக்கு சிமெண்ட் சாலை (CC ROAD) அமைக்கப்பட வேண்டும்.

பர்கூர் வடக்கு ஒன்றியத்தில், மல்லப்பாடி, நாடார் கொட்டாய் முதல் இலப்பு தொப்பு வரை உள்ள தார்ச் சாலை புதுப்பித்தல், மல்லப்பாடி, மரிமானப்பள்ளி ஆற்றின் மேல் இருந்து மரிமானப்பள்ளி ஊர் வரை தார்ச் சாலை புதுப்பித்தல், மல்லப்பாடி, வெங்கட்டாபுரம் முதல் சவுளூர் வரை புதிய தார்ச் சாலை, மல்லப்பாடி, பாரதி நகர் கிராமத்தில் சிமெண்ட் சாலை அமைத்தல், மல்லப்பாடி, அண்ணா நகர் கிராமத்தில் சிமெண்ட் சாலை அமைத்தல், மல்லப்பாடி, பாஷாமேன் வீடு முதல் ராஜேஷ் வீடு வரை சிமெண்ட் சாலை அமைத்தல், மல்லப்பாடி, மசூதி முதல் ஜெகதீசன் வீடு வரை சிமெண்ட் சாலை அமைத்தல், மல்லப்பாடி, காலனியில் சிமெண்ட் சாலை அமைத்தல், மல்லப்பாடி, திருப்பத்தூர் சாலை முதல் ரேசன் கடை வரை சிமெண்ட் சாலை அமைத்தல், மல்லப்பாடி, எல்லப்பன் வீடு முதல் கீதா வீடு வரை சிமெண்ட் சாலை அமைத்தல், மல்லப்பாடி, இராதாகிருஷ்ணன் வீடு முதல் பிள்ளையார் கோவில் வரை சிமெண்ட் சாலை அமைத்தல், மல்லப்பாடி, கௌரன் வீடு முதல் வினோதன் வீடு வரை சிமெண்ட் சாலை அமைத்தல், மல்லப்பாடி, வெங்கடாபுரம் ஹவுஸிங் போர்டு முதல் முருகன் வீடு வரை கழிவுநீர்க் கால்வாய் அமைக்கப்பட வேண்டும்.

மல்லப்பாடி, குண்டலகுட்டை கிராமத்தில் சிமெண்ட் சாலை அமைத்தல், மல்லப்பாடி, மரிமானப்பள்ளி கிராமத்தில் சிமெண்ட் சாலை அமைத்தல், மல்லப்பாடி, கோபால்சாமி வட்டத்தில் சிமெண்ட் சாலை அமைத்தல், வெண்ணம்பள்ளி, மேல்காத்துடிகுப்பம் தார்ச் சாலையிலிருந்து சுப்ரமணி வீடு வரை

2023 ஏப்ரல் 18] [திரு. தே. மதியழகன்]

200 மீட்டர் பேவர் பிளாக் அமைத்தல், வெண்ணம்பள்ளி, காத்தாடி குப்பம்–ஆரன்குட்டை தார்ச் சாலையிலிருந்து காத்தாடிகுப்பம் வரை தார்ச் சாலை புதுப்பித்தல், வெண்ணம்பள்ளி, முருக்கம்பள்ளம் தார்ச் சாலையிலிருந்து ஊர் வரை 300 மீட்டர் சிமெண்ட் சாலை அமைத்து தர கிணற்றுக்கு தடுப்புச் சுவர் கட்டுதல், வெண்ணம்பள்ளி, காத்தான்பள்ளம் தார்ச் சாலை முதல் ஜோசப் வீடு வரை தார்ச் சாலை புதுப்பித்தல், வெண்ணம்பள்ளி, வரட்டனப்பள்ளி–கந்திகுப்பம் சாலையிலிருந்து வீரபத்திர நகர் வரை தார்ச் சாலை புதுப்பித்தல், வெண்ணம்பள்ளி, எலத்தகிரி விநாயகர் கோயில் முதல் முனிசாமி நாயுடு வீடு வரை தார்ச் சாலை அமைத்தல், வெண்ணம்பள்ளி, காத்தான் பள்ளம் முத்து பால் கடை முதல் வெற்றிலை வியாபாரி அந்தோணி வீடு வரை சிமெண்ட் சாலை அல்லது பேவர் பிளாக் 400 மீட்டர், வெண்ணம்பள்ளி, எலத்தகிரி K.T.M நகர் புளியமரம் முதல் ஜோசப் வீடு வரை சிமெண்ட் சாலையை 250 மீட்டர், செட்டிப்பள்ளி, 1.4 கிலோ மீட்டர் தார்ச் சாலையைப் புதுப்பித்து ஏரி கோழியில் உயர்மட்ட மேம்பாலம் அமைக்க வேண்டும்.

செட்டிப்பள்ளி, பாலிநாயனப்பள்ளி தார்ச் சாலை முதல் செல்லியம்மன் கோவில் வரை உள்ள ஒரு கிலோமீட்டர் மண் சாலையை ஜல்லி சாலையாக அமைத்தல், செட்டிப்பள்ளி, மிட்டப்பள்ளி கிராமம் சுடுகாடு முதல் சிவன் வீடு வரை ஜல்லி சாலை அமைத்தல், செட்டிப்பள்ளி, கோனேரிகுப்பம் கிராமம் பெருமாள் கவுண்டர் வீடு முதல் கோவிந்தன் ADE வீடு வரை சிமெண்ட் சாலை அமைத்தல், செட்டிப்பள்ளி, செட்டிப்பள்ளி கிராமம் கவுண்டர்கொட்டாய் ஓம்சக்தி கோயில் முதல் முத்தாரி கவுண்டர் வீடு வரை சிமெண்ட் சாலை அமைத்தல், செட்டிப்பள்ளி, அழகிய புதூர் கிராமத்தில் கோழிப்பண்ணை முதல் ஏரி வரை ஒரு கிலோ மீட்டர் ஏற்கெனவே உள்ள தார்ச் சாலையை பழுது நீக்கம் செய்தல், செட்டிப்பள்ளி, சின்னசெட்டிப்பள்ளி பெரியசாமி வீடு முதல் அங்கன்வாடி வரை சிமெண்ட் சாலை அமைக்கப்பட வேண்டும்.

செட்டிப்பள்ளி, சின்னசெட்டிப்பள்ளி பெரியசாமி வீடு முதல் அங்கன்வாடி வரை சிமெண்ட் சாலை அமைத்தல், பாலிநாயப்பள்ளி, மிட்டப்பள்ளி–கீழ்வீதி-மேல்விதி-நடுவீதி சிமெண்ட் சாலை அமைத்தல், பாலிநாயப்பள்ளி, மட்டப்பள்ளி மகாலட்சுமி லேஅவுட் சிமெண்ட் சாலை அமைத்தல், பாலிநாயப்பள்ளி, குரும்பத்தெரு

ரோட்டிலிருந்து சோமு வீடு வரை தார்ச் சாலை அமைத்தல், காரக்குப்பம், சிந்தகம்பள்ளி சாலை முதல் சின்னஏரிக்கரைமீது தார்ச் சாலை அமைத்து அர்கெட்டு மாரியம்மன் கோயில் வரை தார்ச் சாலை, காரக்குப்பம், செட்டிப்பள்ளி, சிந்தகம்பள்ளி சாலை முதல் சின்னக்காரகுப்பம் சிங்காரம் வீடு வரை தார்ச் சாலை, காரகுப்பம், கொட்லேட்டி கிராமத்தில் சிமெண்ட் சாலை அமைத்தல், காரக்குப்பம், காரகுப்பம் கிராமத்தில் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு சிமெண்ட் சாலை அமைத்தல், அச்சமங்கலம், கெட்டுர் கிளை சிமெண்ட் சாலை அமைத்தல், அச்சமங்கலம், சீமனூர்-சின்னசீமனூர் வரை தார்ச் சாலை, அச்சமங்கலம், சீமனூர் சிமெண்ட் சாலை அமைத்தல், அச்சமங்கலம், சத்தலப்பள்ளி-கெட்டு இடுகாட்டிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் (300 மீட்டர்), அச்சமங்கலம், சத்தலப்பள்ளி கிராமத்தில் சிமெண்ட் சாலை, அச்சமங்கலம், ஜெய் நகர் சிமெண்ட் சாலை, அச்சமங்கலம், கொல்லப்பள்ளியில் சிமெண்ட் சாலை அமைத்தல், அச்சமங்கலம், அச்சமங்கலம் சாலை அமைத்தல், அச்சமங்கலம், அச்சமங்கலம் முதல் ஈச்சங்காடு வரை தார்ச் சாலை அமைத்தல், சின்னமட்டாரப்பள்ளி, சின்னமட்டாரப்பள்ளி கிராமத்திற்கு பழுதடைந்த சிமெண்ட் சாலை புதிய சிமெண்ட் சாலையாக மாற்றி அமைத்தல், சின்னமட்டாரப்பள்ளி, நாகப்பன் கோட்டாய்க்கு புதிய நெற்களம் அமைத்தல், சின்னமட்டாரப்பள்ளி, குப்பம் ரோடு முதல் பனந்தோப்பு எல்லம்மாள் கோயில் வரை தார்ச் சாலை அமைத்தல், சின்னமட்டாரப்பள்ளி, தாண்டவபள்ளம் கிராம அக்னிமாரியம்மன் கோயில் முதல் பெருமாள் வீடு வரை புதிய சிமெண்ட் சாலை அமைக்கக் கோருதல், சின்னமட்டாரப்பள்ளி, தாண்டவபள்ளம் கிராமத்திற்கு மிகவும் பழுதடைந்த சிமெண்ட் சாலை புதிய சிமெண்ட் சாலையாக அமைக்கக் கோருதல், சின்னமட்டாரப்பள்ளி, சாமுண்டீஸ்வரி கோயில் குப்பம் சாலை முதல் பத்மா வீடு வரை சிமெண்ட் சாலை அமைக்க வேண்டும்.

சின்னமட்டாரப்பள்ளி, மேடுகம்பள்ளி கூட் ரோடு முதல் குப்பம் சாலை வரை ஒதிக்குப்பம் கூட்ரோடு வரை தார்ச் சாலை அமைத்தல், சின்னமட்டாரப்பள்ளி, மேடுகம்பள்ளி ரோடு முதல் மோகன் வீடுவரை சிமெண்ட் சாலையாக அமைக்க கோருதல், சின்னமட்டாரப்பள்ளி, மேடுகம்பள்ளி பழனி வீடு முதல் சின்னசாமி வீடு வரை சிமெண்ட் சாலையாக அமைக்கக் கோருதல், சின்னமட்டாரப்பள்ளி, முலக்கொல்லை தங்கவேல்

வீடு முதல் கிருஷ்ணன் வீடு வரை சிமெண்ட் சாலை அமைத்தல், சின்னமட்டாரப்பள்ளி, பசவண்ணகோயில் குப்பம் சாலை முதல் ஓதிகுப்பம் கூட் ரோடு வரை புதிய கழிவுநீர்க் கால்வாய் அமைத்தல், சின்னமட்டாரப்பள்ளி, பர்கூர் சாலை குட்டைமேடு முதல் பெருமாள் வீடு வரை புதிய சிமெண்ட் சாலை அமைத்தல், சின்னமட்டாரப்பள்ளி, பர்கூர் சாலை குட்டைமேடு முதல் மீனா வீடு வரை புதிய சிமெண்ட் சாலை, சின்னமட்டாரப்பள்ளி, குப்பம் சாலை முதல் வெங்கடசாமி வீடு வரை புதிய சிமெண்ட் சாலை, சின்னமட்டாரப்பள்ளி, மேல்கோட்டாய் ராமசாமி வீடு முதல் குப்புசாமி வீடு வரை புதிய சிமெண்ட் சாலை, சின்னமட்டாரப்பள்ளி, மேல்கோட்டாய் பர்கூர் சாலை முதல் சிவாஜி வீடு வரை புதிய சிமெண்ட் சாலை அமைத்தல், சின்னமட்டாரப்பள்ளி, கெம்பிநாயனபள்ளி குமார் வீடு முதல் காதர் பாட்ஷா வீடு வரை கழிவுநீர்க் கால்வாய், சின்னமட்டாரப்பள்ளி, கெம்பிநாயனப்பள்ளி கிராமத்திற்கு புதிய கழிவு நீர் கால்வாய், சின்னமட்டாரப்பள்ளி, பர்கூர் சாலை மசூதி முதல் அரசினர் வீடு வரை புதிய சிமெண்ட் சாலை, சின்னமட்டாரப்பள்ளி, அரசு உயர்நிலைப் பள்ளி முதல் ராணி தேநீர் உற்பத்தி நிலையம் வரை புதிய சிமெண்ட் சாலை, சின்னமட்டாரப்பள்ளி, மாரியம்மன் கோவில் முதல் குலாப்ஜான் வீடு வரை புதிய சிமெண்ட் சாலை, சின்னமட்டாரப்பள்ளி, சிந்தங்கப்பள்ளி பழைய போஸ்ட் ஆபீஸ் முதல் திருநாவுக்கரசு வீடு வரை புதிய சிமெண்ட் சாலை அமைக்க வேண்டும்.

சின்னமட்டாரப்பள்ளி, நாகமாணிக்கம் வீடு முதல் சாலிவீடு வரை புதிய சிமெண்ட் சாலை அமைத்தல், சின்னமட்டாரப்பள்ளி, குல்லப்பன் கொட்டாய் குல்லப்பன் வீடு முதல் நாராயணன் வீடு வரை புதிய சிமெண்ட் சாலை, சின்னமட்டாரப்பள்ளி, குல்லப்பன் கொட்டாய் ஆறு முதல் பீரப்பன் வீடு வரை புதிய சிமெண்ட் சாலை, சின்னமட்டாரப்பள்ளி, சிந்தகம்பள்ளி அண்ணா நகர் முதல் குல்லப்பன் கொட்டாய் குல்லப்பன் வீடு வரை புதிய தார்ச் சாலை, சின்னமட்டாரப்பள்ளி, அண்ணாநகர் சிந்தகம்பள்ளி மிகவும் பழுதடைந்த சிமெண்ட் சாலையைச் சீர் செய்தல், சின்னமட்டாரப்பள்ளி, சின்ன மட்டாரப்பள்ளி நாகப்பன் கொட்டாய் புதிய சிமெண்ட் சாலை அமைத்தல், சின்னமட்டாரப்பள்ளி, சின்ன மட்டாரப்பள்ளி ST காலனி மாரியம்மன் கோயில் முதல் சந்திரன் வீடு வரை புதிய சிமெண்ட் சாலை அமைக்கப்பட வேண்டும்.

B.R.G. மாதேப்பள்ளி, பாத்தூர் மாரியம்மன் கோயில் முதல் பாலன் தொழிற்சாலை வரை சிமெண்ட் சாலை அமைத்தல், B.R.G. மாதேப்பள்ளி, கூட்டுறவு வங்கி முதல் நடுவீதி மேல்வீதி கோவில் வரை தார்ச் சாலை அமைத்தல், B.R.G. மாதேப்பள்ளி, விநாயகர் கோயில் முதல் அசோகன் வீடு வரை சிமெண்ட் சாலை அமைத்தல், B.R.G. மாதேப்பள்ளி, புதிய காலனியில் போவ்ராஜ் வீடு முதல் சந்திரன் வீடு வரை சிமெண்ட் சாலை அமைத்தல், B.R.G. மாதேப்பள்ளி, பட்டாளம்மன் கோவில் முதல் காரகுப்பம் இணைப்புச் சாலை வரை சிமெண்ட் சாலை அமைத்தல், B.R.G. மாதேப்பள்ளி, ஆஞ்சநேயர் கோயில் வீதியில் சிமெண்ட் சாலை அமைத்தல் B.R.G. மாதேப்பள்ளி, ஆஞ்சநேயர் கோயில் வீதியில் கழிவுநீர்க் கால்வாய் அமைத்தல், B.R.G. மாதேப்பள்ளி, VPRS Building முதல் காந்தி நகர் சாலை வரை தார்ச் சாலை, கந்திகுப்பம், வரட்டனப்பள்ளி ரோடு முதல் ஏரிக்கரை வரை எலத்தகிரி, அமிர்தம் ஆசிரியர் வீடு வரை நெடுங்காலமாக மண் சாலையாக உள்ள சாலையை சிமெண்ட் சாலையாக அமைத்தல். சென்னை தேசிய நெடுஞ்சாலை முதல் பைரவர் கோயில் வரை சாலையை அகலப்படுத்தி புதிய தார்ச் சாலை, பெலவர்த்தி, பெலவர்த்தி ஊராட்சி புஷ்பகிரி செல்லும் தார்ச் சாலை மிகவும் பழுதடைந்து உள்ளதை புதுப்பித்தல், பெலவர்த்தி, சின்னதிம்மிநாயனப்பள்ளி S.C காலனிக்கு சிமெண்ட் சாலை அமைத்தல், பெலவர்த்தி, தின்னூர் X-ரோடு முதல் காட்டூர் மேல் ஓனி வரை மிகவும் மோசமாக உள்ள தார்ச் சாலையைப் புதுப்பித்தல், பெலவர்த்தி, காட்டூர் மேல் ஓனி முதல் கதிரியப்பன் கோயில் வரை உள்ள மண் சாலையை தார்ச் சாலையாக மாற்றுதல், பெலவர்த்தி, தின்னூர் X-ரோடு போய் புளியமரம் முதல் குன்னூர் வரை பழுதடைந்த தார்ச் சாலை புதுப்பித்தல், பெலவர்த்தி, சந்தப்பனூர் கிராமத்தில் சிமெண்ட் சாலை மற்றும் தடுப்புச் சுவர் அமைத்தல், பெலவர்த்தி, தின்னூர் முதல் முருகன் ஆலயம் வரை செல்லும் சாலையை சிமெண்ட் சாலையாக மாற்றுதல், பெலவர்த்தி, நந்திப்பள்ளம் கிராமத்தில் சிமெண்ட் சாலை அமைத்தல், பெலவர்த்தி, நாகமரத்துப்பள்ளம் காட்டு கொள்ளை கிராமத்திற்கு புதிய பைப் லைன் அமைத்தல், பெலவர்த்தி, பெரிய பெலவர்த்தி கிராமத்தில் சிமெண்ட் சாலை அமைத்தல், பெலவர்த்தி, கோட்டூர் கிராமத்தில் சிமெண்ட் சாலை அமைத்தல், பெலவர்த்தி, வள்ளுவபுரம் தார்ச் சாலை முதல் பொன்னுசாமி வீடு வரை சிமெண்ட் சாலை அமைத்தல், பெலவர்த்தி, மாரியம்மன் கோயில் முதல் ராஜா வீடு வரை சிமெண்ட் சாலை அமைக்கப்பட வேண்டும்.

பெலவர்த்தி, சீகலப்பள்ளியில் சிமென்ட் சாலை அமைத்தல், ஒப்பதவாடி, ஒப்பதவாடி ஊராட்சி கணமூர் செல்லும் தார்ச் சாலையிலிருந்து பாரத கோயில் வரை தார்ச் சாலையைப் புதுப்பித்தல், ஒப்பதவாடி, ஒப்பதவாடி முதல் கணமூர் செல்லும் தார்ச் சாலையிலிருந்து புதிய கிருஷ்ணா நகருக்கு புதிய தார்ச் சாலை அமைத்தல், ஒப்பதவாடி, ஒப்பதவாடி 126 NH முதல் ஒப்பதவாடி செல்லும் தார்ச் சாலையிலிருந்து V.M. நகருக்கு புதிய தார்ச் சாலை அமைத்தல், ஒப்பதவாடி, மணிகளத்தானூர் முதல் NH முனுசாமி நாடார் வீடு வரை புதிய தார்ச் சாலை அமைத்தல், ஒப்பதவாடி, ஒப்பதவாடி ஊராட்சி அத்திமரத்துபள்ளம் டோர் முதல் ஓம் சக்தி கோயில் வரை தார்ச் சாலையைப் புதுப்பித்தல், ஒப்பதவாடி, பிக்கானூர் கிருஷ்ணசாமி கோயில் முதல் சின்ன கோட்டூர் பொன்னுசாமி வட்டம் வரை புதிய தார்ச் சாலை அமைத்தல், ஒப்பதவாடி, வரதராஜா போயர் வட்டம் முதல் சுக்கடர்பாய் வட்டம் வரை புதிய தார்ச் சாலை அமைத்தல், ஒப்பதவாடி, புதுக்காடு மாரியம்மன் கோயில் முதல் கோட்டூர் ஏரி வரை புதிய தார்ச் சாலையைப் புதுப்பித்தல், ஒப்பதவாடி, புது ரோடு NH முதல் திருப்பத்தூர் இணைப்புச் சாலை வரை தார்ச் சாலையைப் புதுப்பித்தல், ஒப்பதவாடி, அங்கிநாயனப்பள்ளி NH–லிருந்து நல்லிகான் வட்டம் வரை தார்ச் சாலையைப் புதுப்பித்தல், ஒப்பதவாடி, NH தருமர் வட்டம் முதல் மேல்கோட்டாய் வரை தார்ச் சாலையைப் புதுப்பித்தல், ஒப்பதவாடி, கரடிகுட்டை NH–யிலிருந்து சுடுகாடு வரை தார்ச் சாலையைப் புதுப்பிக்க வேண்டும்.

ஒப்பதவாடி, வரமலைகுண்டா கிராமத்தில் சிமென்ட் சாலை அமைத்தல், ஒப்பதவாடி, பாரத கோயில் கிராமத்தில் சிமென்ட் சாலை அமைத்தல், ஒப்பதவாடி, மேல்கோட்டை கிராமத்தில் சிமென்ட் சாலை அமைத்தல், ஒப்பதவாடி, புதுக்காடு கிராமத்தில் சிமென்ட் சாலை அமைத்தல், ஒப்பதவாடி, சின்னகோட்டூர் கிராமத்தில் சிமென்ட் சாலை அமைத்தல், ஒப்பதவாடி, சின்னசுண்டம்பட்டி கிராமத்தில் மேல்கொட்டாய் சூரன்குட்டை சாலை முதல் மேல்கொட்டாய் வழியாக பெரியசுண்டம்பட்டி வரை 1.5 கிலோ மீட்டர் தார்ச் சாலை அமைத்தல், ஒப்பதவாடி, மருதிப்பள்ளி கிராமத்தில் சிமென்ட் சாலை 500 மீட்டர் கல் பதித்தல், ஒப்பதவாடி, சின்ன ஒரப்பம், ஓம் சக்தி கோயில் முதல் ஜெமினி வீடு வரை 300 மீட்டர் தார்ச் சாலை அமைத்தல், ஒப்பதவாடி, காத்தான்பள்ளம் கிராமத்தில் சிமென்ட்

200 மீட்டர் கல் பதித்தல், ஒப்பதவாடி, தேசிய நெடுஞ்சாலை முதல் புலிகுட்டை வரை 1.5 கிலோ மீட்டர் தார்ச் சாலை அமைத்தல், ஒப்பதவாடி, கிட்டப்பநாயனபள்ளி ஆதி திராவிடர் காலனி முதல் மயானம் வரை சிமென்ட் சாலை அமைத்தல், வரட்டனபள்ளி, வரட்டனபள்ளி பள்ளி முதல் காட்டூர் வரை 3 கிலோ மீட்டர் தார்ச் சாலை சீரமைத்து புதுப்பித்தல், வரட்டனபள்ளி, தேசுபள்ளி முதல் குருமூர்த்தி நாயுடு கொட்டாய்வரை 1,300 மீட்டர் தார்ச் சாலை சீரமைத்து தார்ச் சாலை அமைத்தல், வரட்டனபள்ளி, குப்பம் மெயின் ரோட்டிலிருந்து பெரிய வட்டாரப்பள்ளி கிராமம் வரை 300 மீட்டர் தார்ச் சாலை அமைத்தல், வரட்டனபள்ளி, குப்பம் மெயின் ரோட்டிலிருந்து கீழ்காட்டூர் வரை 1500 மீட்டர் தார்ச் சாலை அமைத்தல், வரட்டனபள்ளி, மேல்பூங்குருதி முதல் சேவப்பன் கொட்டாய் வரை 1500 மீட்டர் தார்ச் சாலை அமைக்கப்பட வேண்டும்.

வரட்டனபள்ளி, சாமுடியப்பன் கொட்டாய் அருகில் 300 மீட்டர் புதிய தார்ச் சாலை அமைத்தல், வரட்டனபள்ளி, நரசிம்ம சாமி கோயில் வழியாக மேல்அக்காரம் வரை 2.5 கிலோ மீட்டர் தார்ச் சாலை சீரமைத்து புதிய தார்ச் சாலை அமைத்தல், வரட்டனபள்ளி, வரட்டனபள்ளி-மகாராச கடை சாலையிலிருந்து தோமணிக்கு வீடு வரை 400 மீட்டர் புதிய தார்ச் சாலை அமைத்தல், வரட்டனபள்ளி, புஷ்பகிரி கூட்ரோடு முதல் புஷ்பகிரி வரை தார்ச் சாலை சீரமைத்து புதிய தார்ச் சாலை அமைத்தல், வரட்டனபள்ளி, மகாராஜா ரோடு முதல் மாதவன் வீடு வரை பேவர் பிளாக் 100 மீட்டர் அமைத்தல், வரட்டனபள்ளி, தேசப்பள்ளி ரோடு காமாட்சிஅம்மன் கோயில் அருகில் தடுப்புச் சுவர் கட்டுதல் 100 மீட்டர், குருவிநாயனப்பள்ளி, காளிகோயில் இருளர் காலனி சிமென்ட் சாலை அமைத்தல், குருவிநாயனப்பள்ளி, முட்டுப்பாறை தடுப்புச் சுவர் மற்றும் சிமென்ட் சாலை அமைத்தல், குருவிநாயனப்பள்ளி, குருவிநாயன்ப்பள்ளி ஆதிதிராவிட காலனிக்கு கழிவுநீர்க் கால்வாய் அமைத்தல், குருவிநாயனப்பள்ளி, குருவிநாயனப்பள்ளி முதல் போதகேட்டு வரை சிமென்ட் சாலை அமைத்தல், குருவிநாயனப்பள்ளி, பசவண்ணகோவில் கிராமத்தில் சிமென்ட் சாலை அமைத்தல், வரட்டினம்பள்ளி, வரட்டினம்பள்ளி கீழ்த்தெரு டைலர் நரசிம்மன் வீடு முதல் நாகமரம் வரை கழிவுநீர்க் கால்வாய் அமைக்க வேண்டும்.

2023 ஏப்ரல் 18] [திரு. தே. மதியழகன்]

வரட்டினம்பள்ளி, குப்பன் சாலையிலிருந்து மிலிட்டரி சுப்பிரமணி வீடு வரை 200 மீட்டர் சிமெண்ட் சாலை, வரட்டினம்பள்ளி, பெரியண்ணா கோட்டை வரை 200 மீட்டர் சிமெண்ட் சாலை ஊசப்பன்கோட்டை வரை 150 மீட்டர் தடுப்புச் சுவர் கட்டுதல் X ரோடு முதல் பச்சை முத்து கொட்டாய் வரை 250 மீட்டர், வரட்டினம்பள்ளி, கீழ்பு மூர்த்த மாட்டுமந்தை முதல் ராமகிருஷ்ணன் வீடு வரை கழிவுநீர்க் கால்வாய் அமைக்கப்பட வேண்டும்.

அச்சமங்கலம், சத்தலப்பள்ளி–கெட்டு வரை தார்ச் சாலை அமைத்தல், பெலவர்த்தி, கோட்டூர் கிராமத்தில் சிமெண்ட் சாலை அமைத்தல், சின்னமட்டாரப்பள்ளி, சின்னமட்டாரப்பள்ளி பஸ் நிலையத்திலிருந்து சுந்தரராஜன் வீடு வரை சிமெண்ட் சாலை மற்றும் கழிவுநீர்க் கால்வாய் அமைத்தல் 110 மீட்டர், பர்கூர் தெற்கு ஒன்றியத்தில் பெருகோபனப்பள்ளி, ஊராட்சி மன்ற அலுவலகம் முதல் G.H. வரை தார்ச் சாலை அமைத்தல், பெருகோபனப்பள்ளி, நாயுடு குடும்ப பட்டி முதல் கண்டண்டஹள்ளி எல்லை வரை தார்ச் சாலை அமைத்தல், பெருகோபனப்பள்ளி, கரடி கொள்ளப்பட்டி முதல் கோட்டூர் வரை தார்ச் சாலை அமைத்தல், பெருகோபனப்பள்ளி, கரடி கொள்ளப்பட்டி ஏரி முதல் உத்தேரி கொட்டை வரை தார்ச் சாலை அமைத்தல், பெருகோபனப்பள்ளி, கரடி கொள்ளப்பட்டி கேசவன் வீடு வரை தார்ச் சாலை அமைத்தல், பெருகோபனப்பள்ளி, பெருகோபனப்பள்ளி மாரியம்மன் கோயில் முதல் Post Office வரை தார்ச் சாலை அமைத்தல், பெருகோபனப்பள்ளி, சீதா மளிகைக் கடை முதல் சின்னராஜ் வீடு வரை சிமெண்ட் சாலை, பெருகோபனப்பள்ளி, அரசமரம் முதல் கிருஷ்ணன் குமரேசன் வீடு வரை சிமெண்ட் சாலை, பெருகோபனப்பள்ளி, சுகுணா வீடு முதல் மாதேஸ் வீடு வரை சிமெண்ட் சாலை, பெருகோபனப்பள்ளி, நூலகம் முதல் அறிவழகன் வீடு வரை சிமெண்ட் சாலை, பெருகோபனப்பள்ளி, மாதையன் வீடு முதல் பாபுஜி பாய் வீடு வரை சிமெண்ட் சாலை, பெருகோபனப்பள்ளி, செந்தில் வீடு முதல் சரவணன் வீடு வரை சிமெண்ட் சாலை, பெருகோபனப்பள்ளி, குள்ளம்பட்டி கோவிந்தன் வீடு முதல் மாதையன் வீடு வரை சிமெண்ட் சாலை, பெருகோபனப்பள்ளி, மாரியம்மன் கோயில் முன்பு போரோபிளாக் அமைக்க வேண்டும்.

பெருகோபனப்பள்ளி, ஊராட்சி மன்ற ஆபீஸ் முதல் மாதையன் hospital வரை சிமெண்ட் சாலை, பெருகோபனப்பள்ளி, ஊராட்சி மன்ற ஆபீஸ் முதல் சங்கீதா (அசோகன்) வரை சிமெண்ட் சாலை, பெருகோபனப்பள்ளி, கரடி கொள்ளப்பட்டி கோயில் முதல் போரோபிளாக் அமைத்தல் சிமெண்ட் சாலை, பெருகோபனப்பள்ளி, மாரியம்மன் கோயில் பின்புறம் உள்ள நாலு தெருக்களில் சிமெண்ட் சாலை அமைத்தல், பெருகோபனப்பள்ளி, பனங்காடு சிமெண்ட் சாலை அமைத்தல், சிகரலப்பள்ளி, கப்பல்வாடி கிராமத்தில் 600 மீட்டர் வரை சிமெண்ட் சாலை அமைக்கப்பட வேண்டும்.

சிகரலப்பள்ளி, ஜிட்டிகானூர் கிராமத்தில் 200 மீட்டர் வரை சிமெண்ட் சாலை, சிகரலப்பள்ளி, வெங்கடசமுத்திரம் கிராமத்தில் 200 மீட்டர் வரை சிமெண்ட் சாலை, சிகரலப்பள்ளி, பயனூர் கிராமத்தில் 200 மீட்டர் வரை சிமெண்ட் சாலை, சிகரலப்பள்ளி, மொண்டிக்கானூர் கிராமத்தில் 100 மீட்டர் வரை சிமெண்ட் சாலை, சிகரலப்பள்ளி, ரங்கசமுத்திரம் கிராமத்தில் 100 மீட்டர் வரை சிமெண்ட் சாலை, சிகரலப்பள்ளி, கொத்தலகுட்டை எக்ஸ் ரோடு 100 மீட்டர் வரை சிமெண்ட் சாலை, சிகரலப்பள்ளி, குட்டப்ப நாயக்கனூர் கிராமத்தில் 100 மீட்டர் வரை சிமெண்ட் சாலை, சிகரலப்பள்ளி, K.K. நகர் கிராமத்தில் 100 மீட்டர் வரை சிமெண்ட் சாலை, சிகரலப்பள்ளி, E.K மேடு கிராமத்தில் 100 மீட்டர் வரை சிமெண்ட் சாலை, சிகரலப்பள்ளி, சிகரலப்பள்ளி கிராமத்தில் 200 மீட்டர் வரை சிமெண்ட் சாலை, சிகரலப்பள்ளி, கல்லேத்துப்பட்டி கிராமத்தில் 100 மீட்டர் வரை சிமெண்ட் சாலை, சிகரலப்பள்ளி, கப்பல்வாடி நாயுடு கொள்ளக்கொட்டாய் 100 மீட்டர் வரை சிமெண்ட் சாலை, சிகரலப்பள்ளி, கப்பல்வாடி மேல்நிலைப் பள்ளி மருத்துவமனை முதல் 200 மீட்டர் சிமெண்ட் சாலை, சிகரலப்பள்ளி, சிகரலப்பள்ளி கிராமத்தில் தடுப்புச் சுவர் அமைத்தல், சிகரலப்பள்ளி, தார்ச் சாலை புதுப்பித்தல் மற்றும் அமைத்தல், சிகரலப்பள்ளி, தொகரப்பள்ளி தார்ச் சாலை முதல் ஜிட்டிக்கானூர் இணைப்புச் சாலை 2 கிலோ மீட்டர் தார்ச் சாலை அமைத்தல், சிகரலப்பள்ளி, திருப்பத்தூர் தார்ச் சாலை முதல் பள்ளி இணைப்புச் சாலை புதுப்பித்தல் ஒரு கிலோ மீட்டர் தார்ச் சாலை அமைக்கப்பட் வேண்டும்.

சிகரலப்பள்ளி, சிகரலப்பள்ளி தார்ச் சாலை முதல் இந்திரா நகர் சின்னக்கொல்லம்பட்டி வரை புதியதாக 2 கிலோ மீட்டர்

2023 ஏப்ரல் 18] [திரு. தே. மதியழகன்]

தார்ச் சாலை அமைத்தல், சிகரலப்பள்ளி, எரிகொல்லமேடு ஒரு கிலோ மீட்டர் தார்ச் சாலை புதுப்பித்தல், சிகரலப்பள்ளி, சமத்துவபுரம் மயானம் வரை புதியதாக தார்ச் சாலை அமைத்தல்–ஒரு கிலோ மீட்டர், சிகரலப்பள்ளி, திருப்பத்தூர் தார்ச் சாலை முதல் சின்னக்கொல்லம்பட்டி வழி பாலர் வரை உள்ள தார்ச் சாலை புதுப்பித்தல்–2.5 கிலோமீட்டர், சிகரலப்பள்ளி, திருப்பத்தூர் தார்ச் சாலை முதல் காட்டூர் இணைப்புச் சாலை புதுப்பித்தல்–3 கிலோ மீட்டர், சிகரலப்பள்ளி, மத்தூர்–மல்லப்பாடி தார்ச் சாலை முதல் மரிமானப்பள்ளி இணைப்புச் சாலை வரை புதுப்பித்தல்–3 கிலோ மீட்டர், சிகரலப்பள்ளி, தொகரப்பள்ளி தார்ச் சாலை முதல் மொண்டிகானூர், ஜிட்டிகனூர் இணைப்புச் சாலை புதுப்பித்தல் 3 கிலோ மீட்டர், சிகரலப்பள்ளி, கப்பல்வாடி தார்ச் சாலை முதல் தொட்டில்அம்மன் கோயில் வரை இணைப்புச் சாலை புதுப்பித்தல்–1 கிலோ மீட்டர், சிகரலப்பள்ளி, திருப்பத்தூர் தார்ச் சாலை முதல் தண்ணீர்பள்ளம் வரை இணைப்புச் சாலை புதுப்பித்தல், நிலுவையிலுள்ள மண் சாலையை தார்ச் சாலையாக அமைத்தல்–ஒரு கிலோ மீட்டர், மஜித்கொல்லஹள்ளி, ஒண்டியூர் கிராமத்தில் அமைந்துள்ள மயானத்திற்கு பாடிவால் அமைத்து சிமெண்ட் சாலை, மஜித்கொல்லஹள்ளி, மஜித்கொல்லஹள்ளி கிராமத்தில் அமைந்துள்ள முனியப்பன் கோயிலுக்கு சிமெண்ட் சாலை–200 மீட்டர், கொண்டப்பநாயனபள்ளி, கொண்டப்பநாயனபள்ளி உயர்நிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் அமைத்தல், கொண்டப்பநாயனபள்ளி, பர்கூர்–தொகரப்பள்ளி சாலையில் ராமலிங்கம் வீடு முதல் நாகமலை வரையிலும் கிட்டிக்கொட்டாய் வரையிலும் தார்ச் சாலை அமைக்க வேண்டும்.

கொண்டப்பநாயனபள்ளி, பர்கூர்–கொண்டப்பநாயனபள்ளி சாலைமுதல் மஸ்திகானூர் வரை பழுதடைந்த தார்ச்சாலையை புதிய தார்ச் சாலையாக மாற்றி அமைத்தல், கொண்டப்பநாயனபள்ளி, கொண்டப்பநாயனபள்ளி–மஸ்திகானூர் சாலை முதல் தர்கா செல்லும் தார்ச் சாலையை புதுப்பித்து புதிய தார்ச் சாலையாக மாற்றி அமைத்தல், கொண்டப்பநாயனபள்ளி, அச்சமங்கலம் சாலை முதல் கிரானைட் தொழிற்சாலைகள் அமைந்துள்ள இடங்களில் புதிய தார்ச் சாலைகள் அமைத்தல், கொண்டப்பநாயனபள்ளி, அச்சமங்கலம் சாலை முதல் ஜி நாகமங்கலம் மற்றும் ஏ நாகமங்கலம் செல்லும் சாலைக்கு இணைப்புச் சாலை அமைத்தல், பண்டசீமனூர், குண்டலானூர் கெபி நாயுடு வட்டத்தில் சிமெண்ட் சாலை அமைத்தல், பண்டசீமனூர், பண்டசீமனூர் சாலை

முதல் பையனூரரான் கொட்டாய் வரை ஏற்கெனவே உள்ள தார்ச் சாலையைப் புதுப்பித்து புதிய தார்ச் சாலையாக மாற்றி அமைத்தல், பண்டசீமனூர், பையனூரரான்கொட்டாய் முதல் இராமன் வீடு வரை தார்ச் சாலை அமைக்க வேண்டும்.

பண்டசீமனூர், மொட்டாரப்பள்ளி தார்ச் சாலை முதல் கொண்டப்பநாயனப்பள்ளி சாலை வரை ஏற்கெனவே உள்ள தார்ச் சாலையைப் புதுப்பித்து புதிய தார்ச் சாலையாக மாற்றி அமைத்தல், பண்டசீமனூர், மந்தாலிகானூர் தார்ச் சாலை முதல் குண்டலானூர் சார் சாலை (ஊர் நாயுடு வட்டம்) வரை தார்ச் சாலை அமைத்தல், ஐ.கொத்தப்பள்ளி, செந்தார்ப்பள்ளி ரோடு முதல் மாட்டாமந்தை வரை 250 மீட்டர் சிமெண்ட் சாலை, ஐ.கொத்தப்பள்ளி, பீமன் கொட்டாய்யில் சிமெண்ட் சாலை 300 மீட்டர், ஐ.கொத்தப்பள்ளி, கொத்தப்பள்ளி S.C காலனிக்கு டேங்க் 30,000 லிட்டர் சிமெண்ட் சாலை, ஐ.கொத்தப்பள்ளி, தாயப்பன் கொட்டாய் வரை ஒரு கிலோ மீட்டர் தார்ச் சாலை அமைத்தல், ஐ.கொத்தப்பள்ளி, போச்சம்பள்ளி—கிருஷ்ணகிரி தார்ச் சாலை அமைக்க வேண்டும்.

ஐ.கொத்தப்பள்ளி, கப்பல்வாடி சாலை-மண்ணேரி வரை இரண்டடுக்கு ஜல்லி சாலை, குட்டூர், குட்டூர் மெயின் ரோட்டிலிருந்து ஆதி திராவிடர் சுடுகாடு வரை தார்ச் சாலை அமைத்தல் மற்றும் சுற்றுச்சுவர் அமைத்தல், குட்டூர், குட்டூர் சின்னசாமி வட்டம் மெயின் ரோட்டிலிருந்து தண்டப்பாறை வீடு வரை சிமெண்ட் சாலை அமைத்தல்-சுமார் 110 மீட்டர், குட்டூர், குட்டூர் மாரியம்மன் கோயில் அருகிலிருந்து திமிராயன் வீடு வரை தார்ச் சாலை அமைத்தல் சுமார் 1100 மீட்டர், குட்டூர், குட்டூர் காரிமங்களாத்தனூர் மெயின் ரோட்டிலிருந்து பெருமாள்ளப்பன் கோவில் வரை சிமெண்ட் சாலை அமைத்தல் சுமார் 300 மீட்டர், குட்டூர், குட்டூர் சின்னசாமி வட்டம் கோவிந்தன் வீடு முதல் பட்லப்பள்ளியின் வட்டம் வரை சிமெண்ட் சாலை அமைத்தல்–சுமார் 350 மீட்டர், குட்டூர், குட்டூர் முருகன் கோவில் அருகிலிருந்து சைடு வால் அமைத்தல்-சுமார் 150 மீட்டர், குட்டூர், குட்டூர் ஆம்பள்ளிலிருந்து செல்லும் மெயின் ரோட்டிலிருந்து தேவராஜ் கவுண்டர் வீடு வரை சிமெண்ட் சாலை அமைத்தல் 160 மீட்டர், குட்டூர், குட்டூர் முருகர் கோயில் மெயின் ரோட்டிலிருந்து வெங்கடேசன் வீடு வரை சிமெண்ட் சாலை அமைக்க வேண்டும்.

2023 ஏப்ரல் 18] [திரு. தே. மதியழகன்]

குட்டூர், குட்டூர் முனிசாமி வட்டத்திலிருந்து மணி நாடார் வீடு வரை சிமெண்ட் சாலை அமைத்தல், குட்டூர், குட்டூர் ராசி வீடு முதல் மாது வீடு வரை சிமெண்ட் சாலை அமைத்தல்—சுமார் 110 மீட்டர், குட்டூர், குட்டூர் கொல்லசேக்கினாம்பட்டி ரேஷன் கடை முதல் மாதையன் வீடு வரை சிமெண்ட் சாலை அமைத்தல்—சுமார் 120 மீட்டர், குட்டூர், ஜிஞ்சம்பட்டி மகாலிங்கம் வீடு முதல் விநாயகமூர்த்தி வீடு வரை சிமெண்ட் சாலை அமைத்தல்—சுமார் 160 மீட்டர், குட்டூர், ஜிஞ்சம்பட்டி மாதா கோவில் மெயின் ரோட்டிலிருந்து நாகேந்திரன் வீடு வரை சிமெண்ட் சாலை அமைத்தல்—370 மீட்டர், குட்டூர், ஜிஞ்சம்பட்டி முருகன் கோயில் சாலை முதல் வெங்கடேஷ் அப்பா வீடு வரை சிமெண்ட் சாலை அமைத்தல்—சுமார் 180 மீட்டர், குட்டூர், குட்டூர் புளியம்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியிலிருந்து ஓம் சக்தி கோயில் வரை சிமெண்ட் சாலை அமைத்தல்—240 மீட்டர், குட்டூர், எம்ஜிஆர் நகர் சேக்கினாம்பட்டியிலிருந்து முருகர் கோயில் சாலையிலிருந்து முத்துராஜ் வீடு வரை சிமெண்ட் சாலை அமைத்தல்—சுமார் 225 மீட்டர், குட்டூர், குட்டூர் ஆம்பள்ளி AD காலனி மெயின் ரோட்டிலிருந்து சமுதாயக் கூடம் வரை சிமெண்ட் சாலை அமைத்தல்—சுமார் 150 மீட்டர், குட்டூர், குட்டூர் பழைய காலனி மெயின் ரோட்டிலிருந்து பழைய காலனி ஆண்டியப்பன் வீடு வரை சிமெண்ட் சாலை அமைத்தல்—சுமார் 240 மீட்டர், குட்டூர், குட்டூர் ஆம்பள்ளி செல்லும் மெயின் ரோட்டிலிருந்து முருகேசன் வீடு வரை சிமெண்ட் சாலை அமைத்தல்—சுமார் 220 மீட்டர், குட்டூர், குட்டூர் சுடுகாடு செல்லும் சாலையிலிருந்து மணிவண்ணன் வீடு வரை சிமெண்ட் சாலை அமைத்தல் சுமார்—120 மீட்டர், குட்டூர், குட்டூர் ஆம்பள்ளி தேவராஜ் வீடு முதல் பச்சம்மாள் வீடு வரை சிமெண்ட் சாலை அமைத்தல்—சுமார் 160 மீட்டர், குட்டூர், குட்டூர் மாரியம்மன் கோவிலிருந்து வளர்மதி வீடு வரை சிமெண்ட் சாலை அமைத்தல்—சுமார் 240 மீட்டர், குட்டூர், குட்டூர் ஜிஞ்சம்பட்டி பலராமன் வட்டம் முருகர் கோவில் செல்லும் சாலையிலிருந்து சின்னப்பா வீடு வரை சிமெண்ட் சாலை அமைத்தல்—180 மீட்டர், அஞ்சூர், செந்தாரப்பள்ளி கிராமத்தில் மங்கா வீடு முதல் சாக்கமா வீடு வரை சிமெண்ட் சாலை ரோடு, அஞ்சூர், செந்தாரப்பள்ளி கிராமத்தில் நெல் அடிக்கும் களம், அஞ்சூர், நக்கல்பட்டி பெட் டேங்கு முதல் ஏரி வரை சிமெண்ட் சாலை ரோடு, அஞ்சூர், நாயக்கனூர் கிராமத்தில் நெல் அடிக்கும் களம், அஞ்சூர், கொல்லூர்குள்ளன் கொட்டாய் தார்ச் சாலை முதல் கமலநாதன்

வீடு வரை சிமெண்ட் சாலை, அஞ்சூர், அஞ்சூர் ரவி வீடு முதல் ஈஸ்வரன் வீடு வரை சிமெண்ட் சாலை, அஞ்சூர், பெரியபனமுட்லு ராஜா வீடு முதல் நீர்த்தேக்கத் தொட்டி வரை சிமெண்ட் சாலை அமைத்தல், அஞ்சூர், துளிகொட்டாய் கிராமத்தில் நெல் அடிக்கும் களம், அஞ்சூர், நக்கல்பட்டி இருளர் தொகுப்பு வீடுகள் அமைத்துக் கொடுக்க வேண்டும்.

அஞ்சூர், V.M. ஜோசப் முல்லைகொல்லஅள்ளி 2.5 கிலோ மீட்டர் தார்ச் சாலை அமைத்தல், ஜெகதேவி, காமாட்சிபுரம் கிராமத்தில் சிமெண்ட் சாலை 300 மீட்டர், ஜெகதேவி, அம்பேத்கர் காலனி & எம்.ஜி.ஆர். காலனி சிமெண்ட் சாலை 200 மீட்டர் அம்பேத்கர் காலனி மாரியம்மன் கோயில் பின்புறம் சிமெண்ட் சாலை, ஜெகதேவி, ஞானம்மாள் காலனியில் பேவர் பிளாக் அமைத்தல் 200 மீட்டர், ஜெகதேவி, ஜிட்டோனப்பள்ளி சிமெண்ட் சாலை அமைத்தல், ஜெகதேவி, சாப்பமுட்டு SC காலனி 400 மீட்டர் சிமெண்ட் சாலை அமைத்தல், ஜெகதேவி, கீழ்சாப்பமுட்டு கிராமத்திற்கு 100 மீட்டர் பேவர் பிளாக் அமைத்தல், ஜெகதேவி, பாகிமானூர் கிராமத்தில் 300 மீட்டர் சிமெண்ட் சாலை அமைக்க வேண்டும்.

ஜெகதேவி, பாகிமானூர் எஸ்டி காலனி 200 மீட்டர் சிமெண்ட் சாலை அமைத்தல், ஜெகதேவி, பாகிமானூர் சாலை முதல் திருப்பதி வட்டம் வரை ஒரு 1 கிலோ மீட்டர் வரை தார்ச் சாலை அமைத்தல், பெருகோப்பனபள்ளி, பெருகோப்பனபள்ளி தெரு வீதிகளில் சிமெண்ட் சாலை அமைத்தல், பெருகோப்பனபள்ளி, பெருகோப்பனபள்ளி மாரியம்மன் ஆலயத்திலிருந்து நவசக்தி விநாயகர் கோவில் வரை சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் தார்ச் சாலை அமைத்தல், பெருகோப்பனபள்ளி, ஒன்றிய தொடக்கப் பள்ளி OPP திரு. நரசிம்மன் சாலை சுமார் 200 மீட்டர் சிமெண்ட் சாலை அமைத்தல், பட்டலப்பள்ளி, கோடியூரில் சிமெண்ட் சாலை அமைத்தல், பட்டலப்பள்ளி, கோடியூரில் சிமெண்ட் தார்ச் சாலை, ராமு கிளைச் செயலாளர் வீடு வரை சிமெண்ட் சாலை அமைக்க வேண்டும்.

பட்டலப்பள்ளி, கொங்கன் தெருவில் மேல் காலனியில் சிமெண்ட் சாலை அமைத்தல்-150 மீட்டர், பட்டலப்பள்ளி, இந்திரா நகர் முதல் குப்புசாமி கிளைச் செயலாளர் வீடு வரை புதிய சிமெண்ட் சாலை அமைத்தல்-200 மீட்டர், பட்டலப்பள்ளி, தீர்த்தகிரி பட்டியில் மத்தூர் சாலை முதல் வேட்டி (எ) கண்ணன்

வீடு வரை தார்ச் சாலை அமைத்தல், பட்டலப்பள்ளி, தீர்த்தகிரி பட்டியல் குமரேசன் வீடு முதல் தேவன் வீடு வரை சிமெண்ட் சாலை அமைத்தல், பட்டலப்பள்ளி, அம்மன் நகரில் தார்ச் சாலை முதல் பிபி காவிரி செட்டி வீடு வரை சிமெண்ட் சாலை அமைத்தல், பட்டலப்பள்ளி, கொங்கன் செருவு தார்ச் சாலை முதல் பெத்தபல்லி மாரியம்மன் சாலை வழியாக கொல்லசேக்கினாம்பட்டி வரை ஜல்லி சாலை அமைத்தல் 2 கிலோமீட்டர், பட்டலப்பள்ளி, கொல்லசேக்கினாம்பட்டி தார்ச் சாலை முதல் சின்ன குட்டி வட்டம் வரை தார்ச் சாலை அமைத்தல்–1,000 மீட்டர், பட்டலப்பள்ளி, கொல்லசேக்கினாம்பட்டி இணைப்புச் சாலை முதல் பாரதிபுரம் வரை தார்ச் சாலை அமைத்தல்–1,200 மீட்டர், பட்டலப்பள்ளி, பட்டலப்பள்ளி ராஜப்பன் வீடு முதல் மாதவன் வீடு வரை 150 மீட்டர் சிமெண்ட் சாலை அமைக்கப்பட வேண்டும்.

பட்டலப்பள்ளி, தீத்தகிரிப்பட்டி ஏரிக்கரை சாலை முதல் மயானம் வரை சிமெண்ட் சாலை அமைத்தல்–400 மீட்டர், பட்டலப்பள்ளி, வீரப்பன் கொட்டாய் தார்ச் சாலை முதல் வீரப்பன் கோட்டை ஓரடுக்கு ஜல்லி சாலை 400 மீட்டர் அமைத்தல், பட்டலப்பள்ளி, கோத்தகுட்டை தார்ச் சாலை முதல் போலப்பன் கோயில் வரை ஜல்லி சாலை அமைத்தல் 400 மீட்டர், பட்டலப்பள்ளி, கோத்தலகுட்டை கோல்காரன் வட்டம் தார்ச் சாலை முதல் பெருமாள் வீடு வரை 700 மீட்டர் ஓரடுக்கு ஜல்லி மற்றும் கல்வெட்டு அமைக்க வேண்டும்.

போச்சம்பள்ளி ஒன்றியத்தில் மகாதேவகொள்ளஹள்ளி, மகாதேவகொள்ளஹள்ளி அனகோடி முதல் பூனையன்பேட்டை வரை தார்ச் சாலை அமைத்தல், காட்டகரம், வால்பாறை மாரியம்மன் கோயில் வழியாக புக்கன்கொட்டாய் பகுதிக்கு புதிய ஓரடுக்கு ஜல்லி சாலை அமைக்க வேண்டும்.

காட்டகரம், மாஹிரெட்டிகொட்டாய் கிராமத்திற்கு புதிய அங்கன்வாடி மையக் கட்டடம் அமைத்தல், காட்டகரம், சந்தூர் தார்ச் சாலையிலிருந்து குட்டப்பட்டி வழியாக செல்லியம்மன் கோயிலுக்கு புதிய தார்ச் சாலை அமைத்தல், காட்டகரம், ராம்நகர் கிராமத்திற்கு ஓரடுக்கு ஜல்லி சாலை அமைத்தல், வேப்பாலம்பட்டி, ஐயர் வீடு முதல் பெருமாள் கோயில் அடிவாரம் வரை 1.5 கிலோ மீட்டர் புதிய தார்ச் சாலை அமைத்தல், வேப்பாலம்பட்டி, மேல்குரும்பர் கொட்டாய் முதல் குடிகுப்பம் இணைப்புச் சாலை வரை 2.2 கிலோ மீட்டர் தொலைவிற்கு புதிய தார்ச் சாலை

அமைத்தல், வேப்பாலம்பட்டி, இருளன்காலனி முதல் அழகேசன் வீடுவரை 1.7 கிலோமீட்டர் தொலைவிற்கு புதிய தார்ச் சாலை அமைத்தல், புளியம்பட்டி, வடமலம்பட்டி முதல் மைலம்பட்டி வரை சுமார் 2 கிலோ மீட்டர் புதிய தார்ச் சாலை அமைக்க வேண்டும்.

போச்சம்பள்ளி, தர்மபுரி சாலையிலிருந்து அரசு மருத்துவமனை இணைப்புச் சாலை வரை புதிய தார்ச் சாலை அமைத்தல் மற்றும் அதில் ஒரு கல்வெட்டு அமைத்தல், போச்சம்பள்ளி, இளையராஜா வீட்டின் வழியாக ஆஞ்சநேயர் கோயில் வரை சுமார் ஒரு கிலோ மீட்டர் புதிய தார்ச் சாலை அமைத்தல், வீரமலை, ராமாபுரம் புட்டனூர் செல்லும் தார்ச் சாலை அமைத்தல், வீரமலை, வீரமலை முதல் சாமியார் கொட்டாய் வரை செல்லும் தார்ச் சாலை பழுதடைந்துள்ளது புதிய தார்ச் சாலை அமைத்தல், வீரமலை, பெரிய கரடியூர் மேட்டுக்கொட்டாய் முதல் சுந்தரம் கொட்டாய் செல்ல புதிய தார்ச் சாலை அமைக்கப்பட வேண்டும்.

விளங்காமுடி, விளங்காமுடி அம்பேத்கர் காலனி சுடுகாட்டிற்குச் செல்ல 400 மீட்டர் புதிய தார்ச் சாலை அமைத்தல், விளங்காமுடி, செல்லம்பட்டி மெயின் ரோட்டிலிருந்து காமராஜர் நகர் மாரியம்மன் கோயில் வரை ஈரடக்கு ஜல்லிசாலை அமைத்தல், பாரூர், பாரூர் முதல் செல்லம்பட்டி வரை சுமார் ஐந்து கிலோமீட்டர் தூரம் பழுதடைந்துள்ள தார்ச் சாலை அமைத்தல், அரசம்பட்டி, அரசம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளி முதல் பெங்காலி வரை பழுதடைந்துள்ள தார்ச் சாலை அமைத்தல், அரசம்பட்டி, அரசம்பட்டி சுடுகாட்டிற்குச் செல்லும் தார்ச் சாலை மிகவும் பழுதடைந்துள்ளது. அதனால் புதிய தார்ச் சாலை அமைத்தல், அரசம்பட்டி, புட்டன் கடையிலிருந்து PWD கால்வாயின் மேல் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி வரை தார்ச் சாலை அமைக்க வேண்டும்.

செல்லக்குட்டப்பட்டி, கண்ணப்பன் கொட்டாய் முதல் பாரூர் மெயின் ரோடு வரை சுமார் 1.75 கிலோ மீட்டர் தார்ச் சாலையாக அமைத்தல், செல்லக்குட்டப்பட்டி, கோப்பை கரையில் ஜல்லி சாலை பழுதாகிவிட்டதை மாற்றி தார்ச் சாலை மாற்றி அமைத்தல், கோட்டப்பட்டி, கோட்டப்பட்டி ஏரிக் கோடியிலுள்ள தார்ச் சாலை முதல் தாதனூர் வரை சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்கு தார்ச் சாலை அமைத்தல், கீழ்க்குப்பம், கீழ்க்குப்பம் பெரிய பாலத்திலிருந்து யுவராஜ் வீடு வரை கால்வாய் கரைமீது

தார்ச் சாலை அமைத்தல், குள்ளம்பட்டி, சந்தம்பட்டி மற்றும் எம்.ஜி.ஆர். நகரில் சிமெண்ட் சாலை அமைத்தல், புளியம்பட்டி, வடமலம்பட்டி கிராமத்தில் தெருக்களில் சிமெண்ட் சாலை அமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள ஆவன செய்ய வேண்டும்.

கீழ்க்கண்ட பல்வேறு அரசுக் கட்டடங்கள் கட்டித் தரப்பட வேண்டும்:

நககோஜஅள்ளி, நககோஜஅள்ளி பேரூராட்சிக்கு புதிய அலுவலகக் கட்டடம் அமைத்தல், நககோஜஅள்ளி, நககோஜஅள்ளி பேரூராட்சிக்கு நவீன முறையில் மின் மயானம் மற்றும் சமுதாயக் கூடம் அமைத்தல், நககோஜஅள்ளி, நாகரசம்பட்டி கால்நடை மருத்துவமனைக் கட்டடம் புதியதாக அமைத்தல், நககோஜஅள்ளி, வேளாண்மை விரிவாக்க அலுவலகக் கட்டடம் பழமையாக உள்ளதை புதிய கட்டடமாக அமைக்க வேண்டும்.

பர்கூர் பேரூராட்சியில் பர்கூர், தேசிய நெடுஞ்சாலையினையொட்டி பர்கூர் நகரப் பகுதியில் புதிய பேருந்து நிலையம் நகர வளர்ச்சிக்காக அமைத்தல், பர்கூர், தரம் உயர்ந்த அனைத்து வசதிகளுடன்கூடிய புதிய மருத்துவமனை அமைத்தல், பர்கூர், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைத்தல், பர்கூர் வட்டாரத் தலைமையிடமாக உள்ளதால் மேற்படி அடிப்படை வசதிகளை நிறைவேற்ற வேண்டும்.

காவேரிபட்டினம் கிழக்கு ஒன்றியத்தில் பெண்ணேஸ்வரம், பழுதடைந்த சமுதாயக்கூடத்தை மாற்றி புதிய சமுதாயக்கூடம் அமைத்தல், பாலேகுளி, பாலேகுளி கிராமத்தில் பயணியர் நிழற்கூடம் அமைத்தல், பாளேகுளி, செலப்பசனாம்பட்டி கிராமத்தில் உள்ள நியாய விலைக் கடைக்கு கட்டடம் அமைத்தல், பாளேகுளி, பாளேகுளி கிராமத்திற்கு பயணியர் அங்கன்வாடி கட்டடம் அமைத்தல், பாளேகுளி, பாளேகுளி கிராமத்திற்கு புதிய சமுதாயக்கூடம் அமைத்தல், பாப்பாரப்பட்டி, பாப்பாரப்பட்டி ஊராட்சி பஞ்சாயத்து கட்டட வளாகத்தில் சுற்றுச்சுவர் அமைத்தல், எருமாம்பட்டி, கூச்சக்கல்லூர் கிராமத்திற்கு புதிய சமுதாயக்கூடம் அமைத்தல், எருமாம்பட்டி, கூரம்பட்டி கிராமத்திற்கு சமுதாயக்கூடம் அமைத்தல், எருமாம்பட்டி, கூரம்பட்டி கிராமத்திற்கு நூலகக் கட்டடம் அமைத்தல், எருமாம்பட்டி, ஜீவா நகர் கிராமத்தில் இயங்கும் அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டடம் கட்ட வேண்டும்.

பர்கூர் வடக்கு ஒன்றியத்தில், ஒப்பதவாடி, ஒப்பதவாடி ஊராட்சிமன்ற அலுவலகக் கட்டடம் கட்டுதல், ஒப்பதவாடி, ஒப்பதவாடி ஊராட்சி கணமூர் கிராமத்திலுள்ள நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம், ஒப்பதவாடி, ஒப்பதவாடி ஊராட்சி குண்டியால்நத்தம் கிராமத்தில் உள்ள நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்ட வேண்டும்.

ஒரப்பம், ஒரப்பம் ஊராட்சி ஒரப்பம் பாரத கோயில் அருகில் சமுதாயக்கூடம் அமைத்தல், ஒரப்பம், ஒரப்பம் ஊராட்சி மருதேப்பள்ளி பாரத கோயில் அருகில் சமுதாயக்கூடம் அமைத்தல், சின்னமட்டராப்பள்ளி, தாண்டவபள்ளம் கிராமத்தில் புதிய அங்கன்வாடி கட்டடம் அமைத்தல், மல்லப்பாடி, மரிமானப்பள்ளி கிராமத்தில் அங்கன்வாடி கட்டடம் பழுது பார்த்தல், அச்சமங்கலம், கெட்டூர் கிராமத்தில் நியாய விலைக் கடை அமைத்தல், அச்சமங்கலம், சத்தலப்பள்ளிக் கிராமத்தில் பல்நோக்குக் கட்டடம் அமைத்தல், அச்சமங்கலம், அச்சமங்கலம் ஊராட்சியில் கிராம நிர்வாக அலுவலகக் கட்டடம் அமைத்தல், பாலிநாயப்பள்ளி, செட்டிப்பள்ளி கிராமத்தில் ஆங்கில வழிக் கல்விக்கு இரண்டு வகுப்பறைப் பள்ளிக் கட்டடம் கட்டுதல், பாலிநாயப்பள்ளி, செட்டிப்பள்ளி கிராமம் பாரத கோயில் அருகில் சமுதாயக்கூடம் அமைத்துத் தருதல், பாலிநாயப்பள்ளி, பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்தல், வெண்ணம்பள்ளி, மாதனக்குப்பம் நியாய விலைக் கடைக்குக் கட்டடம் அல்லது பல்நோக்குக் கட்டடம் கட்டுதல், செட்டிப்பள்ளி, அழகிய புதூர் கோவிந்தராஜ பெருமாள் கோவில் அருகில் சமுதாயக்கூடம் அமைத்துத் தருதல், குருவிநாயனப்பள்ளி, காளிக்கோயில் முஸ்லிம் மயானத்திற்கு சுற்றுச்சுவர் அமைத்தல், குருவிநாயனப்பள்ளி, குருவிநாயன்ப்பள்ளி முஸ்லிம் மயானத்திற்கு சுற்றுச்சுவர் அமைத்தல், வரட்டனபள்ளி, வரட்டனபள்ளி கிராமத்தில் நியாய விலைக் கடை அமைத்தல், வரட்டனபள்ளி, வரட்டனபள்ளி கிராமத்திற்கு நூலகக் கட்டடம் கட்டுதல், செட்டிப்பள்ளி, மிட்டப்பள்ளி கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல், பெலவர்த்தி பெட்ராய சுவாமி கோயில் முதல் ஓம் சக்தி கோயில் செல்லும் சாலையில் தடுப்புச் சுவர் அமைத்தல், பெலவர்த்தி, பெட்டராயசுவாமி கோயில் அருகில் சமுதாயக்கூடம், திருமண மண்டபம் அமைத்தல், கந்திகுப்பம், புதிய ஊராட்சி மன்றக் கட்டடம் மற்றும் கடைகள் அமைத்தல், கந்திகுப்பம், விளையாட்டு மைதானம் மற்றும் உடற்பயிற்சிக்

கூடம், மல்லிநாயனப்பள்ளி, பாலேப்பள்ளி ஆதி திராவிடர் காலனியில் கட்டப்பட்டுள்ள மகளிர் ஓட்டு குடியிருப்பு பழுது பார்த்தல், மல்லிநாயனப்பள்ளி, பலேப்பள்ளி வீரபத்திர சுவாமி கோயில் அருகில் தடுப்புச் சுவர் அமைத்தல், மல்லிநாயனப்பள்ளி, மாதனகுப்பம் நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் அல்லது பல்நோக்குக் கட்டடம் அமைத்தல், சின்னமட்டராப்பள்ளி, ஓதிகுப்பம் ஆதி திராவிடர் மற்றும் முஸ்லிம்களுக்கு உள்ள சுடுகாட்டிற்கு சுற்றுச்சுவர் (Compound) அமைக்க வேண்டும்.

பர்கூர் தெற்கு ஒன்றியம், பெருகோபனப்பள்ளி, அண்ணாநகர் அங்கன்வாடி மையம் அமைத்தல், பெருகோபனப்பள்ளி, கோட்டூர் அங்கன்வாடி மையம் அமைத்தல், பெருகோபனப்பள்ளி, கரடி கொல்லப்பட்டி பல்நோக்குக் கட்டடம் அமைத்தல், பெருகோபனப்பள்ளி, குட்டூர் பல்நோக்குக் கட்டடத்திற்கு சுற்றுச்சுவர் அமைத்தல், பெருகோபனப்பள்ளி, குட்டூர் மயானத்திற்கு சுற்றுச்சுவர் அமைத்தல், மஜித்கொல்லஹள்ளி, காந்திநகர் கிராமத்தில் முருகேசன் வீடு முதல் சிவலிங்கம் வீடு வரை பாடிவால் அமைத்தல், ஐ.கொத்தப்பள்ளி, வெப்பாலம்பட்டி கிராமத்தில் சமுதாயக்கூடம் அமைத்தல், ஐ.கொத்தப்பள்ளி, சீனிவாசபுரம் மல்ட்டிபர்ப்பஸ் கட்டடம் அமைத்தல், அஞ்சூர், செந்தாரப்பள்ளி அங்கன்வாடி மையம் அமைத்தல், ஜெகதேவி, ஜெகதேவி ஓம்சக்தி கோயில் அருகில் CSC கழிப்பிடம் அமைத்தல், ஜெகதேவி, அங்கன்வாடி கட்டடம் ஜெகதேவி, பெருகோபனப்பள்ளி, அண்ணா சிலை மற்றும் காமராஜ் சிலை பயணியர் நிழற்கூடம் அமைத்தல், பட்டலப்பள்ளி, அம்மன் நகரில் தொட்டியிலம்மன் கோயில் ஆர்ச் இடம் ராஜீவ் நாயுடு கிணற்று அருகில் தடுப்புச் சுவர் அமைத்தல், காட்டகரம், சந்தூர் இரண்டு நியாய விலைக் கடைகளுக்கு புதிய கட்டடம் அமைத்தல், குள்ளம்பட்டி, பள்ளிப்பட்டி கிராமத்தில் புதிய மகளிர் மன்றக் கட்டடம் அமைத்தல், வலசைகவுண்டனூர், வலசைகவுண்டனூர் கிராமத்தில் புதிய நூலகக் கட்டடம் அமைத்தல், பாரூர், பாரூர் கிராமத்தில் தென்பெண்ணை ஆற்றின் கரையில் படித்துறை அமைத்தல், கோட்டப்பட்டி, புலியூர் கிராமத்தில் புதிய நூலகக் கட்டடம் அமைத்தல், கீழ்க்குப்பம், கீழ்க்குப்பம் கிராமத்தில் புதிய நூலகக் கட்டடம் அமைத்தல், காட்டகரம் பட்டகப்பட்டி கிராமத்திற்கு புதிய நியாய விலைக் கடை அமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள ஆவன செய்ய வேண்டும்.

நாகரசம்பட்டி பேரூராட்சியில், வார்டு எண்கள் 1, 5, 6, 8, 9, 12, 13, 15 ஆகியவற்றில் 50,000 லிட்டர் கொள்ளளவுகொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க வேண்டும்.

நாகரசம்பட்டி, குடிநீர் மருதேரி ஆற்றுப் படுகையிலிருந்து சம்ப் கிணறு அமைத்தல், நாகரசம்பட்டி 15 வார்டுகளிலும் சீரான தண்ணிர் வசதிகள் தேவை மற்றும் பைப்லைன் பழுதாகியுள்ளதை புதியதாக மாற்றி அமைக்க வேண்டும்.

பர்கூர் பேரூராட்சியில், பர்கூர், தென்பெண்ணையாற்று கூட்டுக் குடிநீர் நீரை சுத்திகரிப்பு செய்து குடிநீர் ஏற்றும் நிலையங்களில் (stand by motor) அமைத்துத் தரச் செய்தல், பர்கூர், 15 வார்டுகளிலும் குடிநீர் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் அமைத்தல், பர்கூர், வறட்சி காலங்களில் பொதுமக்களுக்கு குடிநீர்த் தட்டுபாட்டைப் போக்கும் வகையில் 15 வார்டுகளுக்கும் டேங்கர் லாரி மூலம் குடிநீர் வழங்க வேண்டும்.

காவேரிபட்டினம் கிழக்கு ஒன்றியத்தில், பாலேகுளி, கணவாய்மூளை கிராமம், மாரிசெட்டி அள்ளி, கொட்டாவூர் கிராமம், தளி அள்ளி, தளி அள்ளி மேல் கூட்ரோடு கிராமம் (இராமசாமிகொட்டாய்), தளி அள்ளி, மாரிசெட்டிஅள்ளி, அகரம், துரைசாமி கொட்டாய் கிராமம், பெண்ணேஸ்வரமடம், கொட்டாவூர் கிராமம், தட்ரஅள்ளி, ஒட்டப்பட்டி வாழக்குழயான்கொட்டாய் கிராமம், குடிமேனஅள்ளி, தேவீரஅள்ளி ஊர்கவுண்டர்கொட்டாய் கிராமம், வாடமங்கலம், சிந்தாமணிகொட்டாய் கிராமம், ஆவத்துவாடி, ஆவத்துவாடி கிராமம், எருமாம்பட்டி, குட்டூர் கிராமம், மிட்டஅள்ளி, பாரத கோவில் கிராமம் ஆகியவற்றில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டும்.

பர்கூர் வடக்கு ஒன்றியத்தில், ஒப்பதவாடி, ஒப்பதவாடி ஊராட்சியிலுள்ள வரமலைகுண்டா, கணமூர் பல்ல கொல்லை வட்டம், பாரத கோவில் சிவராஜ் வட்டம், வரதப்ப நகர், சின்ன கோட்டூர் கிருஸ்துவபட்டி, வாத்தியார் கொட்டாய், அங்கிநாயனப்பள்ளி புட்டன் வட்டம் ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க வேண்டும்.

ஓரப்பம் ஊராட்சியில், மருதேப்பள்ளி கிராமம், சின்னஓரப்பம் கிராமம், ஓரப்பம் கிராமம், வெற்றிலைத் தோட்டம் கிராமம், காத்தாம்பள்ளம் கிராமம், பெரியசுண்டம்பட்டி கிராமம்,

வண்ணார்கொட்டாய் ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க வேண்டும்.

வரட்டனப்பள்ளி ஊராட்சியில், தேசுப்பள்ளி கீழ்அக்காரம், தேசுப்பள்ளி குருமூர்த்தி கொட்டாய், வரட்டனப்பள்ளி, அரசு உயர்நிலைப் பள்ளிக்கு அருகில் ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க வேண்டும்.

குருவிநாயனப்பள்ளி ஊராட்சியில், துரை ஏரி, குருவிநாயனப்பள்ளி கீழ் விதி, ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க வேண்டும்.

பெலவர்த்தி, சின்னபெலவர்த்தி, குன்கூர் களியப்பன் கொட்டாய் ஆகிய பகுதிகளில் புதிய பைப் லைன் அமைக்க வேண்டும்.

B.R.G. மாதேப்பள்ளி ஊராட்சியில், இந்திரா நகர், ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க வேண்டும்.

சின்னமட்டராப்பள்ளி ஊராட்சியில், மேல்கொட்டாய் கிராமம், குரும்பர் கொட்டாய், ஓதிகுப்பம், சிந்தகம்பள்ளி குல்லப்பன் கொட்டாய், ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க வேண்டும்.

அச்சமங்கலம் ஊராட்சியில், கெட்டுர், கெட்டுகூட்டு ரோடு ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க வேண்டும்.

அச்சமங்கலம் ஊராட்சியில் கெட்டுர் கிராமத்தில் ஆழ்துளைக் கிணறு அமைக்க வேண்டும்.

பாலிநாயப்பள்ளி ஊராட்சியில், கோனேரிக்குப்பம், மிட்டப்பள்ளி ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க வேண்டும்.

பாலிநாயப்பள்ளி ஊராட்சியில் ஆழ்துளைக் கிணறு அமைக்க வேண்டும்.

மல்லப்பாடி ஊராட்சியில், மல்லப்பாடி ஊராட்சி அங்கன்வாடி மையம் அருகில், மந்தை வீதியில், சின்னமல்லப்பாடி அரசு மேல்நிலைப் பள்ளி அருகில், இஸ்லாமியா நகர்,

[திரு. தே. மதியழகன்] [2023 ஏப்ரல் 18

மரிமானப்பள்ளி ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க வேண்டும்.

அச்சமங்கலம் ஊராட்சியில், மல்லப்பாடி, கெட்டூர் கிராமத்தில் ஆழ்துளை கிணறு அமைக்க வேண்டும்.

எமக்கல்நத்தம் ஊராட்சியில், எர்கெட்டு கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டும்.

வெண்ணம்பள்ளி ஊராட்சியில், கீழ்காத்தான் பள்ளம், முருக்கம்பள்ளம் பாரத கோயில் அருகில், மாதகுப்பம் ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க வேண்டும்.

செட்டிப்பள்ளி ஊராட்சியில், மகாலக்ஷ்மி Layout-ல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டும்.

B.R.G. மாதேப்பள்ளி, தண்ணீர் சுத்திகரிப்பு மையம் அமைக்க வேண்டும்.

பர்கூர் தெற்கு ஒன்றியத்தில், சிகரலப்பள்ளி ஊராட்சியில், ஜிட்டிகானூரில் பழுதானதை அகற்றிவிட்டு புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டும்.

கொண்டப்பநாயனபள்ளி ஊராட்சியில், கொண்டப்பநாயனபள்ளி கிட்டுகொட்டாய், மஸ்திகானூர் ஆர்லிகான் கொட்டாய், ஏ நாகமங்கலம் நாயுடு வட்டம், மேல்நேரிடமானபள்ளி, ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க வேண்டும்.

பண்டசீமனூர், பண்டசீமனூர் தொட்டி கொல்லப்பள்ளி காளியம்மன் கோவில் பகுதியில் குடிநீர் வசதி ஏற்படுத்த வேண்டும்.

அஞ்சூர் ஊராட்சியில், மோடிகுப்பம், அஞ்சூர், சின்னபனமுட்லு, துளிகொட்டாய் காலனி ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க வேண்டும்.

ஜெகதேவி ஊராட்சியில், வேடர் கொட்டாய் OHT டேங்க் மற்றும் ஆழ்துளை கிணறு அமைக்க வேண்டும்.

பட்டலப்பள்ளி ஊராட்சியில், கோடியூர், கொங்கன்சேர் மேல் காலனி, ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க வேண்டும்.

பட்டலப்பள்ளி ஊராட்சியில் வெங்கடேசன் வீடு முதல் மயான OHT டேங்க் வரை தார்ச் சாலை அமைக்க வேண்டும்.

போச்சம்பள்ளி ஒன்றியத்தில், மகாதேவகொள்ளஹள்ளி ஊராட்சியில், சின்னமங்கலப்பட்டி கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும்.

காட்டகரம் ஊராட்சியில், அனகோடி கூட்ரோடு, பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டும்.

வெப்பாலம்பட்டி ஊராட்சியில், பெருமாள் நகர், மேச்சேரி கொட்டாய், குதிரை சந்தம்பட்டி குரும்பர் கொட்டாய் ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க வேண்டும்.

குள்ளம்பட்டி ஊராட்சியில், சந்தம்பட்டி எம்.ஜி.ஆர். நகர் (கந்தசாமி குடியிருப்பில்) மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டும்.

வலசைகவுண்டனூர் ஊராட்சியில், வலசைகவுண்டனூர், ஜிம்மாண்டியூர் ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க வேண்டும்.

புளியம்பட்டி ஊராட்சியில், திப்பனூர், கெங்கிநாயக்கன்பட்டி ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க வேண்டும்.

போச்சம்பள்ளி ஊராட்சியில், போச்சம்பள்ளி ராசி நகரில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டும்.

வீரமலை ஊராட்சியில், சின்னகரடியூர், புட்டனூர் பள்ளத்து கொட்டாய் ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க வேண்டும்.

விளங்காமுடி ஊராட்சியில், காமராஜ் நகரில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டும்.

மருதேரி ஊராட்சியில், பேறுஅள்ளி காலனி, மருதேரி ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க வேண்டும்.

அரசம்பட்டி ஊராட்சியில், அரசம்பட்டியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டும்.

செல்லக்குட்டப்பட்டி ஊராட்சியில், புங்கம்பட்டி, காட்டுகொள்ளையில் பள்ளி வளாகம் ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க வேண்டும்.

கோட்டப்பட்டி ஊராட்சியில், காவேரி ஊரில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டும்.

கீழ்குப்பம் ஊராட்சியில், கீழ்குப்பம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டும்.

கீழ்க்காணும் பகுதிகளில் சிறு பாலம் மற்றும் பெரிய பாலம் அமைக்க வேண்டும்.

பாளேகுளியில் ஊராட்சியிலுள்ள சீத்தாகுட்டை, எருமாம்பட்டி ஊராட்சியில் கூரம்பட்டி ஏரிகோடி செல்லும் வழியில், மல்லப்பாடி ஊராட்சியில் மரிமானப்பள்ளி செல்லும் சாலையில் பாலம் அமைக்க வேண்டும்.

குருவிநாயனப்பள்ளி ஊராட்சியில் சம்பத்கொட்டாய், சாரகுண்டு, அச்சமங்கலம், சத்தலப்பள்ளி ஏரிக்கோடி, சின்ன சீமனூரிலிருந்து பாலிக்கான் கொட்டாய் செல்லும் வழியில் சிறு பாலங்கள் அமைக்க வேண்டும்.

மஜித்கொல்லஹள்ளி ஊராட்சியில் மோடிக்குப்பம் சாலையில் சசி வீடு முன்புறம் சிறுபாலம் அமைக்க வேண்டும்.

ஜெகதேவி ஊராட்சியில், பாகிமானூர் எஸ்டி காலனியில் சிறு பாலம் அமைக்க வேண்டும்.

கீழ்குப்பம் ஊராட்சியில், ஆமணக்கம்பட்டி ஏரி கோடி மற்றும் காவா புதூரில் கொஞ்சமா ஏரி கால்வாயின் குறுக்கே பாலங்கள் அமைக்க வேண்டும்.

பர்கூர் தொகுதியிலுள்ள பள்ளிகளுக்கான கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்:

நாகரசம்பட்டி, நாகரசம்பட்டி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, புதியதாக பள்ளி கட்டடம் அமைத்தல், வேலம்பட்டி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டடம் அமைத்தல்,

2023 ஏப்ரல் 18] [திரு. தே. மதியழகன்]

வேங்கனூர், வேங்கனூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக் கட்டடம் அமைத்தல், N.தட்டக்கலில், N.தட்டக்கலில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்குக் கட்டடம் மற்றும் விளையாட்டுத் திடல் மேம்படுத்தப்பட வேண்டும்.

பர்கூர் பேரூராட்சியில், பர்கூர், பர்கூர் பேரூராட்சிக்குட்பட்ட பள்ளிகளில் தேவைகேற்ப புதியதாக கட்டடங்கள் மற்றும் சமையலறைகள் அமைத்தல் மற்றும் பழைய கட்டடங்கள் புனரமைப்பு செய்து கொடுத்தல், காவேரிப்பட்டிணம் கிழக்கு ஒன்றியத்தில் தாமோதரஅள்ளி, தோப்பூர் கிராமத்தில் அமைந்துள்ள அரசு உயர்நிலைப் பள்ளி வளாகத்திற்கு சுற்றுச்சுவர் அமைத்தல், அகரம், அகரம் அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்திற்கு சுற்றுச்சுவர் அமைத்தல், குடிமேனஅள்ளி, தேவீரஅள்ளி கிராமத்தில் அரசு உயர்நிலைப் பள்ளி வளாகத்திற்கு சுற்றுச்சுவர் அமைத்தல், வாடமங்கலம், சிந்தாமணிகொட்டாய் கிராமத்திலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளி வளாகத்திற்கு சுற்றுச்சுவர் அமைத்தல், மிட்டஅள்ளி, கதிரிபுரம் கிராமம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு ஆய்வகத்துடன் கூடிய பள்ளிக் கட்டடம் கட்டுதல், பண்ணந்தூர், இந்திராநகர் அங்கன்வாடி பள்ளிக்கு சுற்றுச்சுவர் அமைக்கப்பட வேண்டும்.

பர்கூர் வடக்கு ஒன்றியத்தில், மல்லிநாயனப்பள்ளி, வேண்ணம்பள்ளி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் அமைத்தல், கெட்டூர், கெட்டூர் பள்ளிக்கூடம் சுற்றுச்சுவர் அமைத்தல், சீமனூர், சீமனூர் அரசுப் பள்ளி பழுதுப்பார்த்தல், வள்ளுவர்புரம், வள்ளுவர்புரம் புதிதாக இரண்டு வகுப்பறைகள் கொண்ட பள்ளிக் கட்டடம் கட்டுதல், குருவிநாயனப்பள்ளி, காளிக்கோவில் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் அமைத்தல், ஓரப்பம், ஓரப்பம் ஊராட்சி மருதேப்பள்ளி கிராமத்தில் நடுநிலைப் பள்ளிக்கு 3 வகுப்பறைகளுடன்கூடிய கட்டடம் கட்டித் தருதல், ஓரப்பம், ஓரப்பம் ஊராட்சி, ஓரப்பம் கிராமத்தில் துவக்கப் பள்ளிக்கு இரண்டு வகுப்பறைகளுடன்கூடிய கட்டடம் கட்டுதல், ஓரப்பம், ஊராட்சி பெரியசுண்டம்பட்டி கிராமத்தில் இரண்டு வகுப்பறைகளுடன்கூடிய பள்ளிக் கட்டடம் கட்டுதல், ஒப்பதவாடி, ஒப்பதவாடி ஊராட்சி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் அமைத்தல், ஒப்பதவாடி, ஒப்பதவாடி ஊராட்சி குண்டியில்நத்தம் (கோட்டூர்) அரசு உயர்நிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் அமைத்தல், ஒப்பதவாடி, ஒப்பதவாடி

ஊராட்சி புதுகாடு கிராமத்தில் அங்கன்வாடி பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டுதல், ஒப்பதவாடி, ஒப்பதவாடி ஊராட்சி, சமயபுரம் அங்கன்வாடி பள்ளிக்கு சுற்றுச்சுவர் அமைத்தல், பெலவர்த்தி, பெலவர்த்தி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் அமைத்தல், பட்டலப்பள்ளி, கொங்கன் சேரு அரசு நடுநிலைப் பள்ளியில் சுற்றுச்சுவர் அமைத்தல், பட்டலப்பள்ளி, தீர்த்தகிரி பட்டி பள்ளி வகுப்பறைக் கட்டடம் கட்டுதல், மூன்று வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்ட வேண்டும்.

பர்கூர் தெற்கு ஒன்றியத்தில் மல்லப்பாடி, மல்லப்பாடி ஊராட்சி அரசு மேல்நிலைப் பள்ளி கூடுதல் வகுப்பறைக் கட்டடம் அமைத்தல், மல்லப்பாடி, மல்லப்பாடி ஊராட்சி வெங்கடாபுரம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி கூடுதல் வகுப்பறைக் கட்டடம் அமைத்தல், சிகரலப்பள்ளி, கப்பல்வாடி சிகரலப்பள்ளி ஆகிய கிராமங்களிலுள்ள மேல்நிலைப் பள்ளிகளுக்கு கூடுதலாக மூன்று வகுப்பறைக் கட்டடங்கள், கழிவறைக் கட்டடங்கள் கட்டுதல், சிகரலப்பள்ளி, சிகரலப்பள்ளி பார்டர், காட்டூர் கப்பல்வாடி கிராமத்தில் உள்ள அரசு துவக்கப் பள்ளிக்கு புதியதாக கழிப்பறை வசதி ஏற்படுத்த வேண்டும்.

மஜித்கொல்லஹள்ளி, மஜித்கொல்லஹள்ளி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி அமைத்து சுற்றுச்சுவர் அமைத்தல், பண்டசீமனூர், பண்டசிமனூர் நடுநிலைப் பள்ளி கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்டுதல், பெருகோபனப்பள்ளி, ஒன்றிய தொடக்கப் பள்ளி மைதானம் அருகில் பழைய கட்டடத்தை இடித்துவிட்டு புதிய கட்டடம் அமைத்தல், மகாதேவகொள்ளஹள்ளி, மகாதேவகொள்ளஹள்ளி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் கூடுதல் வகுப்பறைக் கட்டடம் அமைக்க வேண்டும்.

போச்சம்பள்ளி ஒன்றியத்தில் வெப்பாலம்பட்டி, வெப்பாலம்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு புதிய பள்ளிக் கட்டடம் கட்டுதல், வெப்பாலம்பட்டி, நல்லப்ப நாயக்கனூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்டுதல், குள்ளம்பட்டி, சந்தம்பட்டி மற்றும் பாம்பட்டி கிராமங்களில் அங்கன்வாடி கட்டடம் கட்டுதல், வலசைகவுண்டனூர், வலசைகவுண்டனூர் கிராமத்தில் புதிய அங்கன்வாடி கட்டடம் அமைத்தல், அரசம்பட்டி, மஞ்சமேடு கிராமத்தில் புதிய அங்கன்வாடி கட்டடம் அமைத்தல், குள்ளம்பட்டி, கோடியூர் கிராமத்தில் ஊராட்சி

2023 ஏப்ரல் 18] [திரு. தே. மதியழகன்]

ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் புதிய வகுப்பறைக் கட்டடம் அமைத்தல், போச்சம்பள்ளி, போச்சம்பள்ளி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் புதிய வகுப்பறைக் கட்டடம் அமைத்தல், விளங்காமுடி, மல்லிகல் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் புதிய வகுப்பறைக் கட்டடம் அமைத்தல், மருதேரி, பேறுஅள்ளி கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்ட வேண்டும்.

மருதேரி, மருதேரி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் புதிய வகுப்பறைக் கட்டடம் அமைத்தல், கோட்டப்பட்டி, புலியூர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் கூடுதல் வகுப்பறைக் கட்டடம் அமைத்தல், குள்ளம்பட்டி, குள்ளம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் பெண்கள் கழிவறைக் கட்டடம் அமைத்தல், புளியம்பட்டி, புளியம்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் கூடுதல் கட்டடம் அமைத்தல், புளியம்பட்டி, கெங்கிநாயக்கன்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் கட்டடம் அமைத்தல், போச்சம்பள்ளி, குள்ளனூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் கழிவறைக் கட்டடம் மற்றும் பள்ளி வளாகம் தரை மற்றும் கட்டடம் சீரமைத்தல், வீரமலை, பெரியகரடியூர் கிராமத்தில் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் புதிய கட்டடம் அமைத்தல், பாரூர், பாரூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் கழிப்பிடக் கட்டடம் கட்டுதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

கீழ்க்காணும் பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும்:

தளிஅள்ளி, சின்னதளிஅள்ளி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் அமைத்தல், குருவிநாயனப்பள்ளி, அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல், மல்லப்பாடி, மரிமானப்பள்ளி கிராமத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல், வரட்டனப்பள்ளி, வரட்டனப்பள்ளி கிராமத்திற்கு அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல், அஞ்சூர், நக்கல்பட்டி ஆரம்ப சுகாதார மையம் அமைக்கும் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

கீழ்க்காணும் பகுதிகளில் கால்நடை மருத்துவமனைகள் அமைக்கப்பட வேண்டும்:

நாகரசம்பட்டி, நாகரசம்பட்டி கால்நடை மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்டுதல், எருமாம்பட்டி, எருமாம்பட்டி ஊராட்சி,

கூரம்பட்டி கிராமத்திற்கு கால்நடை மருத்துவமனை அமைத்தல், நெடுங்கல், கால்நடை மருத்துவமனை வளாகத்திற்கு சுற்றுச்சுவர் அமைத்தல், மல்லப்பாடி, மரிமானப்பள்ளி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைத்தல், குருவிநாயனப்பள்ளி, காளிகோயில் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைத்தல், கந்திகுப்பம், கந்திகுப்பம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைத்தல், பெலவர்த்தி, பெலவர்த்தி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைத்தல், அஞ்சூர், நக்கல்பட்டி கால்நடை மருத்துவமனை அமைத்தல், கோட்டப்பட்டி, கோட்டப்பட்டியில் கால்நடை மருத்துவமனை அமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ராஜகுமார் அவர்கள், 10 நிமிடங்கள் கழித்துப் பேசுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. S. அம்பேத்குமார் அவர்கள்.

திரு. S. அம்பேத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளரும், எனது ஆலாசூர் ஊராட்சி மன்றத் தலைவருமான, என் உடன்பிறந்த தம்பி, பிரபு அவர்கள் கடந்த 5-2-2023 அன்று இயற்கை எய்தினார். அவர், கழகத்திற்கும், 2021 சட்ட மன்றத் தேர்தலின்போது எனக்கும், மாபெரும் வெற்றிக்காக உழைத்த தம்பி, என் தம்பி, பிரபு. அவருக்கு என் இதய அஞ்சலியை செலுத்தி, என் உரையைத் துவங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழடியில் அகழ்வாய்வு செய்து, அதனை அருங்காட்சியகமாக்கி, தமிழர்களின் பெருமையை உயர்த்திக் காட்டிய திராவிட மாடல் ஆட்சியின் தலைவர், காலங்காலமாக கீழடியில் அடக்கப்பட்டுக் கிடந்த மக்களின் உரிமைகள் மீட்கப்பட்டு, அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திடும் வகையில், திட்டங்களைச் செயல்படுத்திவரும் இந்தியாவின் முதன்மை முதலமைச்சர், நாளை இந்தியாவைக் கட்டமைக்கப்போகும் தலைவர், நம் கழகத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, IPL Cricket போட்டியில் கடைசி over-ல் ஐந்து sixer-களை அடித்த Rinku Singh-ஐப் போல மக்கள் மன்றத்திலும், மாமன்றத்திலும் இந்தச் சட்டமன்றத்திலும் பல sixer-களை அடித்துக்கொண்டிருக்கும்

2023 ஏப்ரல் 18] [திரு. S. அம்பேத்குமார்]

தமிழ்நாட்டின் வருங்கால நம்பிக்கை நாயகன் அண்ணன் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

பிற்பகல் 6-00

அல்லல்கள் தீர்க்கும் அண்ணாமலையார்போல், எங்கள் இன்னல்களைப் போக்கும் திருவண்ணாமலையார், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அய்யா அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.சிறந்த முறையில் மக்கள் பணியாற்றுவேன் என்று என்மீது நம்பிக்கை வைத்து, 36,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்த வந்தவாசி சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், அதற்கு உறுதுணையாக இருந்த வடக்கு மாவட்ட கழகச் செயலாளர், அன்புக்குரிய அண்ணன் திரு. M.S.D. *அவர்களுக்கும், அருமை பெரியவர், ஒன்றிய கழக, பேரூர் நகர கழக, கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள், தோழமைக் கட்சி நண்பர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

எனது வந்தவாசி சட்டமன்றத் தொகுதியின் முக்கிய கோரிக்கைகளை மட்டும் நான் இங்கு பதிவு செய்து, மீதமுள்ள கோரிக்கைகளை நான் படித்ததாகக் கருதி பதிவு செய்துகொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். திருவண்ணாமலை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க, பரிசீலனையில் உள்ளதாக அறிகிறேன். அவ்வாறு இரண்டாகப் பிரிக்கும்போது, புதிய மாவட்டமாக வந்தவாசியைத் தலைநகராக அமைத்திட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். டச்சுக்காரர்கள் முதன்முதலில் வந்திறங்கி, ஆட்சி செய்த இடம் வந்தவாசி. இவ்விடத்தில்தான் டச்சுக்காரர்களுக்கும், கிழக்கிந்திய கம்பெனியின் பிரிட்டிஷ்காரர்களுக்கும் முதன்முதலில் போர் நடந்தது. சரித்திரப் புகழ் வாய்ந்த ஒன்றான, வந்தவாசிக் கோட்டை இங்கு அமைந்துள்ளது. ஆகவே, திருவண்ணாமலை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும்பட்சத்தில் வந்தவாசியைத் தலைமையிடமாகக் கொண்டு, ஒரு மாவட்டத்தை அமைத்துத் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். பெரணமல்லூரைத்

தலைமையிடமாகக் கொண்டு, ஒரு புதிய வட்டம் அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். பெரணமல்லூர் தெள்ளாறு ஒன்றியங்களைச் சீரமைத்து ஒரு புதிய ஒன்றியத்தை அமைத்துத் தரும்படியும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். வந்தவாசி அரசு பொது மருத்துவமனையில் CT Scan, MRI Scan, Dialysis machine போன்றவற்றை மக்கள் பயன்படுத்தும் வகையில் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வந்தவாசியில் ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரி அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை குண்டுவெடிப்பு வழக்கில் 10 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் உள்ள இஸ்லாமியர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்று 2021 தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கனிவோடு உடனடியாக செயல்படுத்துவார்கள் என்று இஸ்லாமிய பெருமக்கள் எதிர்பார்க்கிறார்கள். அதையும் நிறைவேற்றித் தர வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எளிய மக்களின் நலன் காப்பதே தனது இலட்சியம் என்கிற வகையில் இருளர் குடும்பங்களின் இல்லம் தேடிச் சென்று, நரிக்குறவ மக்களின் குடியிருப்புகளுக்குச் சென்று, நலம் விசாரித்து அவர்களின் வாழ்வு மேம்பட திட்டங்களைச் செயல்படுத்திவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்றென்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் காவலராகத் திகழ்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டியலின மக்களின் ஊராட்சிகளான பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் போன்ற ஊராட்சிகளில் நெடுங்காலமாக தேர்தல் நடத்த இயலாத, ஆதிக்கம் நிலவியிருந்த நிலையில் அந்த ஊராட்சிகளில் ஜனநாயகம் மலர்ந்திடும்வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சியில்தான் உள்ளாட்சித் துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்த தற்போதைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அங்கு தேர்தலை நடத்திக்காட்டினார்கள். தொட்டால் தீட்டு, பட்டால் பாவம், பார்த்தாலும் தீட்டு என்ற சாதீய ஒடுக்குமுறை நிலவிய காலத்தில் அவற்றைத் தகர்த்து 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்கிற சமூக நீதி சமுதாயத்தை உருவாக்கியது

2023 ஏப்ரல் 18] [திரு. S. அம்பேத்குமார்]

திராவிட இயக்கம். பெரியார் சுயமரியாதை சிந்தனை, பேரறிஞர் அண்ணாவின் இன-மொழி உணர்வு, முத்தமிழறிஞர் கலைஞரின் தொலைநோக்குத் திட்டங்கள், இவை தமிழ்நாட்டில் ஒரு சமநிலை சமுதாயத்தை உருவாக்கும் பணியில் பெரும் முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. இந்தியாவில் வேறெந்த மாநிலத்திலும் இல்லாதவகையில் அனைத்து சமுதாயத்தினரும் இணைந்து வாழும் சமத்துவபுரத்தை உருவாக்கியவர், முத்தமிழறிஞர் கலைஞர். அந்தச் சமத்துவபுரங்களில் பெரும்பாலானவற்றைத் திறந்துவைத்தவர், அன்றைக்கு துணை முதலமைச்சராக இருந்த இன்றைய நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கதை வசனத்தில் உருவான 'ஒரே ரத்தம்' திரைப்படத்தில் சாதி ஒடுக்குமுறைக்கு எதிரான சமூக நீதியையும் சமத்துவத்தையும் பேசுகிற கதாபாத்திரத்தில் திரையில் தோன்றியவர், நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். நெஞ்சுக்கு நீதி என்ற திரைப்படத்தில் சாதி ஏற்றத்தாழ்வுக்கு எதிராகக் கடமையாற்றும் காவல் துறை அதிகாரியாக தன் கலைத் திறனை வெளிப்படுத்தியவர், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 6-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைக்கம் போராட்டம். சாதியினக் கொடுமைகள் முன்பு உச்சத்தில் இருந்தன. உயர் சமூகத்தினர் தவிர மற்றவர்கள் குடை பிடிக்கக் கூடாது, செருப்பு அணியக் கூடாது, கிணறு, குளம், சாலை, சந்தை ஆகியவற்றைப் பயன்படுத்தக் கூடாது, ஆண்கள் யாரும் மீசை, தாடி வைக்கக்கூடாது; அதற்குத் தனி வரி கட்ட வேண்டும் என்ற கொடிய நிலை இருந்தது. இந்த நிலையில்தான் கேரள மாநிலம், கோட்டயம் மாவட்டம், வைக்கத்தில் உள்ள மகாதேவர் கோயிலைச் சுற்றி உயர் சமூகத்தினர் தவிர மற்றவர்கள் நடப்பதற்கு இருந்த தடைகளை நீக்கக் கோரி நடத்தப்பட்ட போராட்டம்தான் வைக்கம் போராட்டம். தந்தை பெரியார் நடத்திய போராட்டம், கேரள மாநில சமூகநீதி வரலாற்றில் மட்டுமல்ல, தமிழ்நாடு சமூகநீதி வரலாற்றிலும் மகத்தான போராட்டமாக அமைந்தது. இந்தியாவிற்கே வழிகாட்டியான ஒரு போராட்டம். சமூக ரீதியாக, கல்வி ரீதியாகப் புறக்கணிக்கப்பட்டவர்களைக் கைதூக்கி விடுவதுதான் சமூகநீதி. சமூகநீதி எனும் இட ஒதுக்கீடு என்பதை

சமூக ரீதியாகவும், கல்வி ரீதியாகவும் பின்தங்கியவர்களுக்கு இட ஒதுக்கீடு தரப்பட வேண்டுமென்பதுதான் இந்திய அரசமைப்புச் சட்ட வரையறை. 1924 ஆம் ஆண்டு மார்ச் 30 ஆம் நாள் இப்போராட்டம் தொடங்கியது. அந்த வெற்றி போராட்டம் நடைபெற்று 100 ஆண்டுகளாகின்றன. வரிசையாக கேரளத் தலைவர்கள் அனைவரும் கைதான நிலையில், ஏப்ரல் 13 ஆம் நாள் தந்தை பெரியார் அவர்கள் கேரளாவிற்குச் சென்று இறுதிவரை போராடினார்; வெற்றியும் பெற்றார். 'வைக்கம் வீரர்' என திரு.வி.க.-வால் பாராட்டப்பெற்றார். கேரளாவில் 74 நாட்கள் சிறையில் வைக்கப்பட்டார் தந்தை பெரியார். அரசியல் கைதிகளுக்குரிய மரியாதை தரப்படாமல், கொடுமைப்படுத்தப்பட்டார், சிறை உடை அணிந்திருந்தார், இரும்பு விலங்குகளால் பூட்டப்பட்டிருந்தார். இவ்வளவு கொடுமைகளும் தீண்டத்தகாத மக்கள் என்று ஒதுக்கி வைக்கப்பட்ட ஆதி திராவிட மக்களுக்காக தந்தை பெரியார் செய்த மகத்தான தியாகமாகும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமெரிக்காவில் கறுப்பின மக்கள் அடிமையாக்கப்பட்டார்கள். அங்கே நிற பேதத்தால் மக்களைப் பிரித்தார்கள். இந்தியாவில் சூத்திர பஞ்சம மக்கள் உரிமையை இழந்தவர்களாக ஆக்கப்பட்டார்கள். இங்கே, பிறப்பால் சாதி, மதத்தை உருவாக்கி, மக்களைப் பிரித்தார்கள். உலகில் ஒடுக்குமுறைக்கு ஆளாகின்ற மக்கள் எதிர்பார்ப்பது விடுதலை. அது உடனடியாகக் கிடைத்துவிடாது என்றாலும், என்றாவது ஒரு நாள் நிச்சயம் கிடைக்கும் என்ற நம்பிக்கை அவர்கள் மனதில் உதிக்க வேண்டும். தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மக்களின் நம்பிக்கைக்குரிய ஒற்றைத் தலைவராக இருப்பவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். தமிழ்நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல, இந்தியாவிலுள்ள மாநிலங்களுக்கும் அவர்தான் நம்பிக்கைக்குரியவராகத் திகழ்கிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநில உரிமைகள் பறிக்கப்பட்டால், அதை எதிர்த்து முழங்குகின்ற முதல் குரல், மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சரின் குரல். மாநில மொழிகள் நசுக்கப்பட்டால், அதை எதிர்த்து வெளிப்படுத்தும் முதல் குரல், நம் மாண்புமிகு முதலமைச்சரின் குரல். (மேசையைத் தட்டும் ஒலி) சென்னையிலிருந்து ஒலிக்கின்ற அவரது குரல்

டெல்லியை அதிர வைக்கின்றது. தமிழுக்கு மட்டுமல்ல, இந்தியாவிலுள்ள அனைத்து மொழிகளுக்கும் நன்மை தருகிறது, இந்தி ஆதிக்கத்தைத் தகர்த்தெறிகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2021 ஆம் ஆண்டு மே 7 ஆம் தேதி பதவியேற்றார். பதவியேற்றவுடன் 5 கோப்புகளில் கையெழுத்திட்டார். அதில் நகரப் பேருந்துகளில் பெண்கள் இலவசமாகப் பயணம் செய்யலாம் என்ற திட்டம், மகத்தான திட்டம். இது ஆதி திராவிட இனத்தைச் சார்ந்த பெண்கள் வெகுதூரம் சென்று வேலை செய்வதற்குப் பேருதவியாக இருக்கின்றது. நாள் ஒன்றுக்கு சராசரியாக 39.21 இலட்சம் பயணங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இதில் பெரும்பாலான பயனாளிகள் ஆதி திராவிட பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த இலவசப் பேருந்து பயணம்மூலம் பெண்களுக்கு ஒரு மாதத்திற்கு சராசரியாக 888 ரூபாய் மிச்சமாகிறது என ஆய்வறிக்கை தெரிவிக்கின்றது. ஆதி திராவிட இன மக்களின் பொருளாதாரம் மேம்பட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திட்டம் முத்தான திட்டம். இந்தியாவிற்கு முன்னோடியாக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் திராவிட மாடல் அரசைப் பார்த்து, கேரளா, ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களிலுள்ள பெண்கள் இலவசப் பேருந்து பயணத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று கோரிக்கை வைக்கின்றனர். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** அருந்ததிய மக்கள் வாழ்கின்ற பகுதியில் அவர்களுக்கு உணவுக் கூடம் மட்டுமல்லாமல் அனைத்து வசதிகளுடன்கூடிய திருமணக் கூடத்தை அமைத்துக் கொடுத்தால் அவர்களுக்கு மிகவும் பயனுடையதாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கனிவோடு அந்தந்த மாவட்ட ஆட்சியர்களுக்கு ஆணையிட்டு, ஆய்வு செய்து, உடனடியாக அதை ஏற்படுத்தித் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அருந்ததியர்களுக்கு 3 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கியது நமது முத்தமிழறிஞர் கலைஞர் என்பது குறிப்பிடத்தக்கது. (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூகநீதி என்பது அனைத்து சமூகங்களையும் உள்ளடக்கிய வளர்ச்சியாகும். (குறுக்கீடுகள்) அனைத்து சமூகங்களையும், சமமாக வாழச் செய்வதன்மூலம் தமிழ்நாடு சமத்துவ சமுதாயமாகத் திகழ வேண்டும் என்பதே திராவிட மாடல் அரசின் முக்கிய கொள்கையாகும்.

பிற்பகல் 6–10

2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கின்படி தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையான 7.21 கோடியில் சுமார் 20 விழுக்காடு, அதாவது, சுமார் 1.44 கோடி பேர் ஆதி திராவிட மக்களாக உள்ளனர். தமிழ்நாட்டில் சமூக மறுப்புகளுக்கு ஆளான ஒடுக்கப்பட்ட மக்களின் நிலையை நன்கு உணர்ந்துள்ள இந்த அரசு, அவர்களின் முன்னேற்றத்திற்கான பல்வேறு கொள்கைகள், நலத் திட்டங்கள், வரவு-செலவுத் திட்டங்களை உருவாக்கி, செயல்படுத்தி வருகிறது. ஆதி திராவிட மக்களின் கல்வியறிவை உயர்த்துவதே சமூக மாற்றத்திற்கான வித்தாக அமையும் என்பதால், திராவிட மாடல் அரசு, கல்விக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறது. ஆதி திராவிட மாணவர்களின் கல்வியறிவு வளர்ச்சி விகிதம் மற்றும் கல்வித் தரம் ஆகியவற்றை உயர்த்திடும்பொருட்டு, இத்துறை ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் மற்றும் விடுதிகளைச் சிறப்பாக நடத்துவதுடன் பல்வேறு கல்வி உதவித் தொகைத் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 2 ஆண்டுகளில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக பல்வேறு நலத் திட்டங்களை இவ்வரசு செயல்படுத்தியுள்ளது. அவற்றில் ஒருசிலவற்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, **

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 ஏப்ரல் 18]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** (குறுக்கீடு)*

(மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா திரு. எஸ்.பி. வேலுமணி, திரு. பி. தங்கமணி, திரு. சி. மகேந்திரன் மற்றும் திரு. A.K. செல்வராஜ் ஆகிய உறுப்பினர்கள் அவையில் எழுந்து நின்று கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ***

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *அப்படியிருக்கும் வார்த்தைகள் அவைக்குறிப்பைப் பார்த்து நீக்கப்படும்.*

திரு. S. அம்பேத்குமார்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இதை வேண்டுமென்றே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் வேறு subject-க்குச் செல்லுங்கள்.*

திரு. S. அம்பேத்குமார்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 2 ஆண்டுகளில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக பல்வேறு நலத் திட்டங்களை இவ்வரசு செயல்படுத்தியுள்ளது. அவற்றில் ஒருசிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மாநில அளவில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியோரது சட்டப்பூர்வமான உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களுடைய முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், தன்னாட்சி அதிகாரத்துடன் செயல்படும் மாநில ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையம் உருவாக்கப்பட்டது. 2022–2023 ஆம் ஆண்டில் 'சமபந்தி போஜனம்' எனும் பெயர், 'சமபந்தி விருந்து' என மாற்றப்பட்டது. மரியாதைக்குரிய ஐயா M.C. ராஜா அவர்களது பெயரிலான விடுதி*

** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

வளாகத்திற்குள்ளேயே தற்போது காலியாகவுள்ள இடத்தில் சுமார் 75,000 சதுர அடி பரப்பளவில் ஆறு மாடி தளத்துடன் நவீன கட்டடங்கள் ரூபாய் 40 கோடி செலவில் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது மிகவும் பாராட்டத்தக்கது.

பிற்பகல் 6–15

ஆயிரம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகளுக்கு துரித மின் இணைப்புத் திட்டத்தின்மூலம், TAHDCO scheme மூலம் மின் இணைப்பு பெற 23.28 கோடி ரூபாய் செலவில் 90 சதவிகித மானியம் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள வீடற்ற 500 தூய்மைப் பணியாளர்களுக்கு, தகுதியின் அடிப்படையில் தலா 11 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 55 கோடி ரூபாயில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின்மூலம் பயனாளிகளின் பங்களிப்புடன் கட்டப்பட்டு வரும் வீடுகள் வாங்க மானியம் வழங்கப்பட்டுள்ளதை அறிந்து பெருமைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்கள் முதல்முறையாக வீடு மற்றும் நிலம் வாங்கும்போது, அவர்களுக்கு பத்திரப் பதிவுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு செய்தால், அவர்களின் கடன் சுமை ஓரளவு குறைவதோடு, அவர்களுடைய பொருளாதாரம் மேம்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். அரசு நிறுவனங்களில் உள்ள வேலைவாய்ப்பினைவிட தனியார் நிறுவனங்களில் அதிகமாக வேலைவாய்ப்பு உள்ளது. இந்த வேலைவாய்ப்பில் பட்டியல் இனத்தவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதில்லை. இதர மாநிலங்களில் தனியார் நிறுவனங்களில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. தனியார் நிறுவனம் தொடங்கப்படும்போதே, இட ஒதுக்கீட்டை அமல்படுத்த வேண்டும் என்று ஒப்பந்தம் போட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக நீதி மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் போராடிய அய்யா

2023 ஏப்ரல் 18] [திரு. S. அம்பேத்குமார்]

இளைய பெருமாள், முதுபெரும் காங்கிரஸ் தலைவர். அவருக்கு சிதம்பரத்தில் நினைவரங்கம் கட்டப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கூட்டணிக் கட்சியைச் சேர்ந்தவர்களையும் கௌரவப்படுத்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலைக் கண்டு, பிரமிப்பு அடைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட சமூகத்தில் பிறந்த எனக்கு ஒரு குறையுமில்லை. அதில் ஒரு நிறைவுமில்லை. இது ஒரு இயல்பான நிகழ்வு என எண்ணி கடந்து செல்கிறேன். தாழ்வு மனப்பான்மையைத் தகர்த்தெறிய வேண்டும் என்று புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கர் அவர்கள் சொன்னார்கள். எனக்கு தாழ்வு மனப்பான்மை இருந்திருந்தால் ஆராசூர் எனும் கிராமத்தில் அடையாளம் தெரியாமல் போயிருப்பேன். அம்பேத்கர் என்னும் அறிவு ஆயுதத்தை எடுத்ததால்தான், இன்று அறிவாலயத்தில் இலட்சக்கணக்கான சிப்பாய்களில் நானும் ஒருவன் (மேசையைத் தட்டும் ஒலி) என்று நினைக்கும்போது நான் மட்டுமல்ல, என் சமூகமே பெருமைப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த காலம் முத்தமிழறிஞர் அவர்கள் காலம். நிகழ்காலம் தலைவர் தங்கத் தளபதியின் பொற்காலம். எதிர்காலம் இளைஞர்களின் எழுச்சி நாயகனான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் காலம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விடியலும் நமதே! வெற்றியும் நமதே! இது மக்களுக்கான ஆட்சி, இது மக்களுக்கான ஆட்சி, இது சமூக நீதிக்கான ஆட்சி! இது சமத்துவத்திற்கான ஆட்சி! இது சனாதனத்திற்கு எதிரான ஆட்சி! (மேசையைத் தட்டும் ஒலி) மொத்தத்தில் இது திராவிட மாடல் ஆட்சி! நன்றி, வணக்கம். ஜெய் பீம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

வந்தவாசி தொகுதி, வந்தவாசி நகராட்சி, பயணியர் மாளிகை அருகில் 10 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும். வந்தவாசி நகராட்சி வார்டு எண் 1, 2, 3 பகுதிகளிலுள்ள மக்களுக்கு

இடுகாட்டிற்குச் செல்வதற்கு சாலை அமைத்துத் தர வேண்டும். வந்தவாசி தொகுதி, சுகநதி ஆற்றை சுத்தப்படுத்தி, Retaining Wall அமைத்துத் தர வேண்டும்.

வந்தவாசியில் புதிய பேருந்து (கலைஞர் பேருந்து நிலையம்) நிலையத்தினை பயன்பாட்டுக்குக் கொண்டுவர வேண்டும். வந்தவாசி நகராட்சிப் பகுதியில் பாதாளச் சாக்கடை அமைத்துத் தர வேண்டும். வந்தவாசி தொகுதி, தெள்ளார் ஒன்றிய அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டித்தர வேண்டும். வந்தவாசி தொகுதியில், பொது மக்கள் பயன்பெறும் வகையில் புதிய தொழிற்பேட்டை அமைத்துத் தர வேண்டும். வந்தவாசி தொகுதியில் அரசு தொழில்நுட்ப கல்லூரி (பாலிடெக்னிக் காலேஜ்) அமைத்துத் தர வேண்டும்.

வந்தவாசி ஒன்றியத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை படுக்கை வசதிகளுடன் தரம் உயர்த்தித் தர வேண்டும். வந்தவாசி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து பெரிய ஊராட்சியாக உள்ள கீழ்க்கொடுங்காலூர் பகுதியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய ஒன்றியம் அமைத்துத் தர வேண்டும்.

வந்தவாசி தொகுதியில், நெசவாளர் பயன்பெறும் வகையில் 300 வீடுகள் கட்டித் தர வேண்டும். பெரணமல்லூர் ஒன்றியத்தில், மடம், வயலூர் ஆகிய இடங்களில் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர வேண்டும்.

பெரணமல்லூர் ஒன்றியம், வயலூர் மற்றும் வல்லம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டும். பெரணமல்லூர் ஒன்றியம், வல்லத்தில் இயங்கி வரும் நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டித்தர வேண்டும்.

பெரணமல்லூர் ஒன்றியம், ஆனபோகி ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்திட வேண்டும். வந்தவாசி தொகுதியில், மழையூர் அரசினர் மேல்நிலைப் பள்ளியின் வகுப்பறைக் கட்டடத்தைச் சுற்றி சுற்றுச்சுவர் அமைக்க வேண்டும்.

மழையூர்-புதூர் இணைப்புச் சாலையை, தார்ச் சாலையாகவோ, சிமென்ட் சாலையாகவோ அமைத்துத் தர வேண்டும். மழையூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 25 படுக்கை வசதிகளுடன் தரம் உயர்த்தித் தர வேண்டும்.

2023 ஏப்ரல் 18] [திரு. S. அம்பேத்குமார்]

மழையூர் ஊராட்சி, தோப்புத் தெருவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் திறந்தவெளி குடிநீர்க் கிணறு அமைத்துத் தர வேண்டும். கோதண்டபுரம் ஊராட்சிக்குட்பட்ட, மழையூர் பஸ் நிறுத்தம் உள்ள இடத்தில் வணிக வளாகம் அமைத்துத் தர வேண்டும்.

கோதண்டபுரம் ஊராட்சியிலுள்ள இடுகாட்டிற்குச் செல்வதற்கு 1 கிலோ மீட்டர் தூரத்திற்கு சாலை அமைத்துத் தர வேண்டும். கோதண்டபுரம் எடிசி-யிலிருந்து விவசாயிகள் நிலத்திற்குச் செல்ல 2 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஜல்லி சாலை அமைத்துத் தர வேண்டும். கோதண்டபுரம், சின்ன ஏரி அருகில் நெற்களம் அமைத்துத் தர வேண்டும். வந்தவாசி தொகுதி, சாத்தப்பூண்டி முதல் புணிமாந்தாங்கல் வரை 4 கிலோ மீட்டர் தூரத்திற்கு சாலையைப் புனரமைக்க வேண்டும். சாத்தப்பூண்டி ஊராட்சியில் 150 மீட்டர் கழிவுநீர் கால்வாய் அமைத்துத் தர வேண்டும்.

வந்தவாசி தொகுதி, பொன்னூர் முதல் கீழ்புத்தூர் வரை மண் சாலையை 2.5 கிலோ மீட்டர் வரை ஜல்லி சாலை அமைத்துத் தர வேண்டும். பொன்னூர் ஊராட்சியில் சமுதாயக் கூடம் அமைத்துத் தர வேண்டும்.

பொன்னூர் நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு நிரந்தர அலுவலகம் மற்றும் குடோன் அமைத்துத் தர வேண்டும். வந்தவாசி தொகுதி, திரவக்கோவில் ஊராட்சியில் புதியதாக திறந்தவெளிக் கிணறு மற்றும் மின் மோட்டாருடன் கூடிய பைப் லைன் அமைத்துத் தர வேண்டும்.

வந்தவாசி தொகுதி, திரவக்கோவில் ஊராட்சியில் பழுதடைந்துள்ள பைப் லைனை மாற்றி, புதிய பைப் லைன் அமைத்துத் தர வேண்டும். திரவக்கோவில் புதிய காலனி முதல் சாத்தப்பூண்டி வரை 2 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஜல்லி சாலை அமைத்துத் தர வேண்டும்.

கண்டவராட்டி ஊராட்சி, இராயனந்தல் கிராமத்தில் போக்குவரத்து சாலையில் 75 மீட்டருக்கு தடுப்புச் சுவர் அமைத்துத் தர வேண்டும். தென்னாத்தூர் ஊராட்சி முளப்பட்டு கிராமத்தில், பகுதிநேர பொது விநியோகக் கடைக்கு புதிய கட்டடம் அமைத்துத் தர வேண்டும். தென்னாத்தூர் 2-வது குறுக்குத் தெருவுக்கு சி.சி.ரோடு அமைத்துத் தர வேண்டும். தென்னாத்தூர், மருதம் தெருவுக்கு 150 மீட்டர் நீளத்திற்கு சிமெண்ட் சாலை அமைத்துத் தர வேண்டும்.

வந்தவாசி தொகுதி, பெருங்கடபுத்தூர் ஊராட்சி, அரியம்பூண்டியில் நெற்களம் அமைத்துத் தர வேண்டும். தென்னாத்தூர் ஊராட்சியில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு நிரந்தர அலுவலகம் மற்றும் குடோன் அமைத்துத் தர வேண்டும். தென்னாத்தூர் வேலங்காடு பகுதியில், 100 மீட்டர் நீளத்திற்கு பேவர் பிளாக் சாலை அமைத்துத் தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள்.

திரு. S.S. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும் மற்றும் தங்களுக்கும் எனக்கு இந்த வாய்ப்பை வழங்கியதற்கு முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் பேசுவதற்கு, எனக்கு இந்த வாய்ப்பை வழங்கிய விடுதலை சிறுத்தைகள் கட்சியினுடைய தலைவர் மேன்மைமிகு அண்ணன் எழுச்சித் தமிழர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், என்னுடைய சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் விடுதலை சிறுத்தைகள் கட்சியினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர், அண்ணன் திரு. சிந்தனை செல்வன் அவர்களுக்கும், சக தோழர்கள் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்களுக்கும், பனையூர் திரு. மு. பாபு அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

“அண்ணே, வண்டிக்கார அண்ணே” என்று முத்தமிழறிஞர் கலைஞரின் வசனத்தைப் பேசி, சிறுத்தைகளும் ஒரே இரத்தம்தான் என என்போன்ற வண்டிக்காரன் மகனையும் அரவணைக்கக்கூடிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், அண்ணன் தளபதி அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அரசு பொறுப்பேற்றவுடன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கான பல்வேறு திட்டங்களை, பல்வேறு அறிவிப்புகளைச் செய்து அவற்றை நடைமுறைப்படுத்தியிருக்கிறது. குறிப்பாக, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான

நல வாரியத்தை அமைத்திருப்பது; வன்கொடுமைகளால் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு தீர்வைத் தொகையை குறைந்தபட்சம் ஒரு இலட்சம் ரூபாய் என்றும், அதிகபட்சம் 12 இலட்சம் ரூபாய் என்றும் உயர்த்தித் தந்திருப்பது; சமத்துவபுரங்கள் தொடர்ந்து இந்த அரசுமூலம் செயல்படுத்தப்படும் என்கின்ற அறிவிப்பைச் செய்திருப்பது, இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம்.

பிற்பகல் 6–20

இன்றைக்கு பெரியவர் அய்யா இளையபெருமாள் அவர்களுக்கான நூற்றாண்டு விழாவினை ஒட்டி சிதம்பரத்தில் ஒரு நினைவரங்கம் கட்டுவது—தீண்டாமை என்பது ஏதோ ஒருவருக்கொருவர் தொட்டுக்கொள்வது அல்லது அதைத் தடுப்பது என்கின்ற முறையில் அமைந்தது அல்ல. உரிமைகளை வழங்காமை, சலுகைகள் தரப்படாமை, ஒற்றுமை இல்லாமை இவை அத்தனையும் தீண்டாமை என்கின்ற பட்டியலில்தான் வரும். இது 1966–ல் இதே மாமன்றத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சொன்னது. அதனையொட்டித்தான், உரிமைகள் மறுக்கப்படுவதும் ஒரு வகையான தீண்டாமைதான் என்பதை உணர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் இன்றைக்கு ஒரு மகத்தான அறிவிப்பை இந்த நிதிநிலை அறிக்கையில் செய்திருக்கிறார்கள். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கான துணைத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கென ஒரு சட்டத்தை அடுத்த கூட்டத்தொடரில் கொண்டு வருவோம் என்கிற ஒரு மகத்தான அறிவிப்பை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள். அப்படி இயற்றப்படுகின்ற சட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நல்லெண்ணத்திற்கேற்ற வகையிலும், அவர் விரும்புகிற வகையிலும் நிறைவான ஒரு சட்டமாக இருக்க வேண்டும் என்று பணிவோடு என்னுடைய கருத்தை முன்வைக்கிறேன்.

ஆதி திராவிடர் நலப் பள்ளிகளை, பள்ளிக் கல்வித் துறையின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்திருப்பதை வரவேற்கிறேன். அதே சமயத்தில், அதில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுடைய பணிப் பாதுகாப்பினை உறுதி செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். இத்தகைய பல பள்ளிகள் பல முன்னோடிகளால் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட பள்ளிகள் என்பதால், அவை அதே பெயரிலே செயல்பட

வேண்டும் என்ற என்னுடைய கோரிக்கையை முன்வைக்கிறேன். குறிப்பாக, சிதம்பரத்தில் இருக்கக்கூடிய அரசு நந்தனார் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளியானது சுவாமி சகஜானந்தா அவர்களால் 1917–ல் தொடங்கப்பட்ட பள்ளியாகும். அந்தப் பள்ளி அதே பெயரிலே செயல்பட வேண்டும் என்கிற கோரிக்கையை முன்வைக்கிறேன்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்கள் தொழில் ரீதியாக முன்னேற்றம் அடைவதற்கென மிகச் சிறப்பானதொரு திட்டமாக ‘அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்’ என்கிற ஒரு திட்டம் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிமுகப்படுத்தப்பட்டு, அதற்கென ரூ.100 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். இன்றைய தேதியில் பொருளாதார ரீதியாக ஒருவர் ஒரு தொழில் செய்து முன்னேற வேண்டுமென்று சொன்னால் குறைந்தபட்சம் ரூ.50 இலட்சம் முதலீடு வேண்டும். ரூ.50 இலட்சம் முதலீடு என்று சொன்னால், இதில் வரக்கூடிய மானியம் ரூ.17.50 இலட்சம். ரூ.17.5 இலட்சம் கொடுக்க முடியும் என்று சொன்னால், இந்தத் தொகையில் 500 பேர் மட்டுமே பயன்பெற முடியும் என்ற நிலை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடத்தில் இந்தத் தொகையை சற்று அதிகரித்துத் தர வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைக்கிறேன்.

பொதுவாக, TAHDCO மானியம் வழங்கக்கூடிய கடன்களைப் பெறுகின்றபோது, அந்தக் கடன்களைப் பெறுவதற்காக ** நிலைக்கு ஆதி திராவிடர்/பழங்குடியின மக்கள் ஆளாக்கப்படுகிறார்கள். ஆகவே, அத்தகைய கடன்களை தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் வழங்குவதற்குப் பதிலாக, நம்முடைய அரசின் கட்டுப்பாட்டிலே இருக்கக்கூடிய கூட்டுறவு வங்கிகளில் அந்தக் கடன்களை வழங்குவதற்கு முன்வர வேண்டும் என்கிற ஒரு கோரிக்கையையும் முன்வைக்கிறேன்.

அரசின் புள்ளிவிவரப்படி வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்தின்கீழ் 2020–2021 ஆம் ஆண்டைவிட 2021–2022–ல் 400 வழக்குகள் கூடுதலாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அதே நேரத்தில், அதிலே தண்டனை பெற்றவர்களுடைய சதவிகிதம்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 ஏப்ரல் 18] [திரு. S.S. பாலாஜி]

11 சதவிகிதத்திலிருந்து 9.59 சதவிகிதமாகக் குறைந்திருக்கிறது. இவையெல்லாம் அரசின் புள்ளிவிவரங்கள். ஆதி திராவிட பெண்கள் பாலியல் பலாத்காரத்திற்கு ஆளாக்கப்பட்டிருப்பது 2021-ல் 8 ஆக இருந்திருக்கிறது; தற்போது 16 ஆக அதிகரித்திருக்கிறது. POCSO வழக்குகளின் எண்ணிக்கை 166-லிருந்து 258 ஆக அதிகரித்திருக்கிறது. இதையெல்லாம் அரசு கவனத்தில் கொண்டு கடுமையான நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

2022 ஆம் ஆண்டில் 430 கிராமங்கள் வன்கொடுமை கிராமங்களாகக் கண்டறியப்பட்டிருக்கின்றன. இந்த 430 கிராமங்களிலும் நாம் அங்கிருக்கக்கூடிய மக்களுக்கு நல்லிணக்கத்தைப் போதிக்கின்ற வகையில், சமூகத்தில் இருக்கின்ற சமத்துவத்தைப் போதிக்கின்ற வகையில் சில திட்டங்களை முன்னெடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

DLVMC என்று சொல்லக்கூடிய District Level Vigilance and Monitoring Committee பல வன்கொடுமை வழக்குகளை, எந்த வகையிலும் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் விதி இல்லாத நிலையில் அவற்றை முடித்து வைக்கிறது. இன்னும் சொல்லப்போனால், அரசு புள்ளிவிவரத்தின்படி இப்படி 20 சதவிகித வழக்குகள் முடித்து வைக்கப்படுகின்றன. இப்படி முடித்து வைப்பதற்கான எந்தவிதமான அடிப்படையும் அந்தச் சட்டத்தில் இல்லை. இன்னும் சொல்லப்போனால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உருவாக்கியிருக்கக்கூடிய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆணையம்கூட இது தொடர்பாக அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறது. Mistake of fact என்று சொல்லி இந்த வழக்குகளை முடித்து வைப்பது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இத்தகைய நடைமுறையை உடனடியாக நிறுத்துவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உரிய அறிவுறுத்தலை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, அரசு மாநில அளவிலான குழுக்களை அமைத்திருக்கிறது. ஆனால், அது தொடர்பான மண்டல அளவிலான குழுக்களும், அதற்கடுத்த நிலையில் இருக்கக்கூடிய SDVMC என்று சொல்லக்கூடிய குழுக்களும் இன்னும் அமைக்கப்படவில்லை. அவற்றை உடனடியாக அமைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த கால ஆட்சியில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையால் சமையலர் பணிக்கு ஆட்கள் பணியமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டிற்கும், இந்த ஆண்டிற்கும் POCSO வழக்குகளாக இருந்தாலும், வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழான வழக்குகளாக இருந்தாலும், அந்த வழக்குகளின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள் குறிப்பிட்டார்கள். முன்பு பாதிக்கப்பட்டவர்கள் புகார் கொடுக்க வருவதில்லை. இப்போது அவர்கள் தைரியமாக புகார் கொடுக்க வருகின்றபோது, அதிகமாக வழக்குகள் பதியப்படுகின்றன. அடுத்தபடியாக, 'mistake of fact என்று வழக்குகளை முடிவு செய்துவிடுகிறார்கள். அது சட்டத்திலேயே கிடையாது' என்று சொல்கிறீர்கள். ஆனால், காவல் நிலையத்தைப் பொறுத்தவரைக்கும், ஆதாரங்கள் இல்லாத நிலைமையில் mistake of fact என்று சொல்லி, வழக்குகளை முடிக்கக்கூடிய உரிமை அந்தக் காவல் நிலைய அதிகாரிகளுக்கு உண்டு. அங்கு அந்த வழக்கைத் தொடுத்தவர்கள் முழு ஒத்துழைப்பு தராமல் இருந்தாலோ அல்லது தகுந்த சாட்சியங்களைத் தராமல் இருந்தாலோ, அதை mistake of fact என்று முடித்துவிடுவார்கள். இதுதான் வழக்கம். அதுதவிர வழக்குகளின் எண்ணிக்கை கூடியிருப்பதற்குக் காரணம், இன்று பாதிக்கப்பட்ட பெண்களாக இருந்தாலும், மற்றவர்களாக இருந்தாலும் தைரியமாக வழக்கு தொடுக்க முன்வருகின்ற காரணத்தினால் இன்றைக்கு அந்த வழக்குகளின் எண்ணிக்கை கூடியிருக்கின்றது.

பிற்பகல் 6–25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, TAHDCO–க்கு ** என்ற அந்த வார்த்தை அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 ஏப்ரல் 18]

திரு. S.S. பாலாஜி: *ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையில் சமையலர் பணிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டபோது, எழுதப் படிக்கத் தெரிய வேண்டுமென்ற அடிப்படை மட்டுமே வரையறுக்கப்பட்டிருந்தது. ஆனால், இன்றைக்கு அதில் பணியமர்த்தப்பட்ட பலபேரை, 'கூடுதல் கல்வித் தகுதி உள்ளது, 10 ஆம் வகுப்பு படித்திருக்கிறீர்கள்' என்று சொல்லி, அவர்களை வேலையிலிருந்து நிறுத்தியிருக்கிறார்கள். இதுதொடர்பாக 4 பேர் நீதிமன்றத்தை அணுகியபோது, நீதிமன்றம்கூட அதுதொடர்பான தன்னுடைய கருத்துகளை மிக வலிமையாகத் தெரிவித்து அவர்களைப் பணியமர்த்த உத்தரவிட்டது. ஆனால், அவர்களுக்கு மட்டுமே பணி வழங்கப்பட்டிருக்கிறது. மற்றவர்களுக்கு பணி வழங்கப்படவில்லை என்பதைத் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

பழங்குடியின இருளர் சமூகத்தின்மீது தவறாக, புனையப்பட்டு வழக்குகள் போடப்படுவது என்பது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அண்மைக் காலத்தில் மயிலம் கண்டமங்கலம் காவல் நிலையத்தில் 7-10-2022, 28-1-2023, 24-2-2023 ஆகிய தேதிகளில் பழங்குடியின இருளர்கள்மீது உண்மைக்கு மாறான வழக்குகள் பதிவு செய்யப்பட்டு முதல் தகவல் அறிக்கை எண்கள் 340 மற்றும் 341, நாள் 7-10-2022 தாக்கல் செய்யப்பட்டு, கண்டமங்கலம் பகுதியில் பழங்குடியின இருளர்கள் சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டதாக பழங்குடி இருளர் பாதுகாப்பு சங்கத்தினர் புகார் அளித்துள்ளனர். இதுகுறித்து ஆய்வு செய்து, தவறு செய்தவர்கள்மீது உரிய தண்டனை வழங்குவதற்கு வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவல் நிலைய சித்திரவதைகளில் அதிகமாகப் பாதிக்கப்படுபவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியின சமூகத்தைச் சார்ந்தவர்கள். இதை சாத்தான்குளம் சம்பவத்தின்போதும் பார்த்தோம். சமீபத்தில் அம்பாசமுத்திரம் சம்பவத்தின்போதும் நாம் பார்க்க முடிந்தது. எனவே, இதுபோன்ற செயல்களில் ஈடுபடுகின்றவர்கள்மீது கடுமையான உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

I.I.T. உள்ளிட்ட பல உயர் கல்வி நிறுவனங்களில் கடுமையான சாதியப்பாகுபாட்டிற்கு ஆளாகி, பெரும் மன உளைச்சலுக்கு ஆளாகி, பல பேர் தற்கொலை செய்துகொள்வது தொடர் நடவடிக்கையாக

நடந்து கொண்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், சமீபத்தில் ஒருமாத காலத்தில் 4 பேர் இதுபோன்று தற்கொலை செய்துகொண்டிருப்பதாக தகவல் வந்திருக்கிறது. இதுதொடர்பாக ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்புகூட கொடுத்திருக்கிறேன். ஆகவே, இவற்றையெல்லாம் தடுத்து நிறுத்துவதற்கு ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில் தேசிய அறிவுசார் ஆணையம் National Knowledge Commission என்று ஒன்று அமைக்கப்பட்டு, அது பல பரிந்துரைகளை வழங்கியிருக்கிறது. அந்தப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஆதி திராவிட மக்களுக்கு உரிமையான நிலங்கள் பலரால் ஆக்கிரமிக்கப்படுகின்றன. அப்படிப்பட்ட ஆக்கிரமிப்பும் ஒருவகையில் வன்கொடுமைதான் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். அந்தவகையில் உயர் நீதிமன்றத்தின் உத்தரவுப்படி கடந்த ஆட்சிக் காலத்தில் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் சுமார் 12 இலட்சம் ஏக்கர் பஞ்சமி நிலங்களைக் கண்டறிந்து, அதை ஆதி திராவிட மக்களிடம் ஒப்படைப்பு செய்வதற்கு உத்தரவிடப்பட்டது. ஆனால், கடந்த ஆட்சிக் காலத்தில் அவ்வாறு உத்தரவிடப்பட்டும்கூட, அப்படி எதுவும் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஏனென்றால், குறிப்பாக 2 இலட்சம் ஏக்கருக்குமேல் இதுபோன்ற நிலங்களைக் கண்டறிந்ததாக செய்திகள் சொல்கின்றன. எனவே, பஞ்சமி நிலங்களைக் கண்டறிந்து, அவற்றை குறிப்பிட்ட காலவரையறைக்குள் ஆதி திராவிட மக்களுக்குப் பகிர்ந்து கொடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தந்தை பெரியாரின் வைக்கம் போராட்டத்தை இன்றைக்கு நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். இந்தத் தருணத்தில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கோயில்களில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Time சரியாக ஓடுகிறதா?

திரு. S.S. பாலாஜி: ஒரே நிமிடம். எவ்வித பாகுபாடுமின்றி ஆதி திராவிட மக்களுடைய, பழங்குடியின சமூகத்தின் வழிபாட்டு உரிமையை நிலைநிறுத்த வேண்டும்.

வேங்கைவயலில் குடிநீர்த் தொட்டியில் மனிதக் கழிவு கலக்கப்பட்ட சம்பவத்தில் CBCID விசாரணை

மேற்கொள்ளப்பட்டும் இன்றுவரை குற்றவாளிகள் அடையாளம் காணப்படவில்லை. தமிழ்நாடு காவல் துறை, மிகவும் சிறப்பான காவல் துறை. பல்வேறு வழக்குகளில் மிகச் சிறப்பாகப் புலனாய்வு செய்திருக்கிறது என்று சொன்னாலும்கூட, ஒரு சின்னஞ்சிறு கிராமத்தில் நடந்த கொடூரச் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் இன்றுவரை கண்டறியப்பட முடியாதது வியப்பளிக்கிறது. குற்றவாளிகள் கண்டறியப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 6–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேங்கைவயல் சம்பவம் என்பது ஒரு நள்ளிரவிலே நடந்தது. அங்கு எந்தவிதமான CCTV ஆதாரங்களும் கிடையாது. அது ஒரு சிறிய குக்கிராமம். குக்கிராமங்களைப் பொறுத்தவரை, யார் அங்கே வந்து போகிறார்கள் என்பதைக்கூட கண்டுபிடிக்க முடியாத அளவிற்கு தனித்தனி பகுதியான குடியிருப்புகள்தான் இருக்கும். முதலில் காவல் துறை வழக்கு பதிவு செய்திருந்தாலும், அடுத்து, CBCID வழக்குப் பதிவு செய்து, அதனைத் தொடர்ந்து உயர் நீதிமன்றத்திலே வழக்கு தொடரப்பட்டு, தற்போது உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி (பொறுப்பு) திரு. T. ராஜா அவர்களுடைய தலைமையிலான அமர்வு, ஓய்வுபெற்ற நீதிபதி திரு. எம். சத்தியநாராயணன் தலைமையில் ஒரு நபர் ஆணையம் அமைத்து, உடனடியாக விசாரித்து அறிக்கையைத் தாக்கல் செய்ய உத்தரவிட்டிருக்கிறது. அந்த ஆணையத்தின் அறிக்கைக்காகக் காத்திருக்கின்றோம். இதற்கிடையிலே, CBCID விசாரணையும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, IIT–ல் நடைபெறுகின்ற நிகழ்வுகள் குறித்து சொன்னார்கள். அது உண்மைதான். ஆனால், IIT நமது

தமிழ்நாட்டு அரசின் கட்டுப்பாட்டில் இல்லை. ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. அதனால், அதற்கான குரலையும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அப்போதே எழுப்பி, ஒன்றிய அரசிற்கும் அதை அறிவித்திருக்கிறார்கள். ஒன்றிய அரசில் உங்கள் கட்சியைச் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் இரண்டு பேர் இருக்கிறார்கள். அவர்களின் மூலமாக அதை வலியுறுத்த வேண்டும். அத்தகைய நிகழ்வு நிச்சயமாக தடை செய்யப்பட வேண்டிய ஒன்று என்பதிலே எந்தவித வேறுபட்ட கருத்தும் இல்லை. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், IIT–க்கும் அதைப்பற்றி வலியுறுத்தியிருக்கிறார்கள். ஒன்றிய அரசிற்கும் அதைப்பற்றி வலியுறுத்தியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள், நன்றி சொல்லி முடியுங்கள் தம்பி.*

திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் கலைஞர் அரசு நிறைவேற்றிய 36 வகையான தொழிலாளர்களைப் பாதுகாக்கக்கூடிய நல வாரியங்களைப் பாதிக்கக்கூடிய அளவிற்கு, பா.ஜ.க. அரசு தொழிற்சங்கங்களுடன் கலந்து பேசாமல், விவாதம் நடத்தாமல் corporate முதலாளிகளின் நலனுக்காக 46 சட்டங்களை இரத்து செய்து, 4 தொகுப்புச் சட்டங்களை நிறைவேற்றியிருக்கிறது. இதைக் கண்டிக்கின்ற வகையில், நம்முடைய அரசு இந்தச் சட்டப் பேரவையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி செயல்படுத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)*

தமிழ்நாட்டைச் சுற்றி அரணாக உள்ள 3 கடல் எல்லைகளில், கன்னியாகுமரியில் சமத்துவத்தை உலகிற்கு முதலில் போதித்த அய்யன் திருவள்ளுவரின் சிலை நின்று கொண்டிருக்கிறது. மெரினா கடற்கரையில் சமத்துவப் பெரியார் முத்தமிழறிஞர் கலைஞருடைய பேனா நினைவுச் சின்னம் எழும்பவிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, சமத்துவத்தைக் கோட்பாடாகக் கொண்டு அரசமைப்புச் சட்டத்தைக் கொடுத்த புரட்சியாளர் அம்பேத்கர் சிலையை இராமேஸ்வரத்தில் நிறுவ வேண்டும் என்கின்ற ஒரு கோரிக்கையை முன்வைக்கின்றேன். “Injustice anywhere is a threat to justice everywhere” *என்று சொல்லப்பட்டது. மார்ட்டின் லூதர் கிங் சொன்ன வசனம் இது. எங்கேயாவது ஓரிடத்தில் அநீதி நிகழ்கிறது என்று சொன்னால்,*

அது எல்லா இடங்களிலும் இருக்கக்கூடிய நீதிக்கான அச்சுறுத்தல் என்று சொல்லியிருக்கிறார். இதை உணர்ந்தவர் நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். அந்த வகையில், "Nearly all men can stand adversity, but if you want to test a man's character, give him power" என்று ஆபிரகாம் லிங்கன் சொன்னார். அந்தவகையில், தற்போது அதிகாரத்திலே, ஆட்சியிலே அமர்ந்த பிறகு, அவருடைய முழு பரிமாணத்தையும், அவருடைய முழு பண்பு நலன்களையும் வெளிப்படுத்தக்கூடிய ஒரு மகத்தான தலைவராக, இன்னும் சொல்லப்போனால், மிகமிகப் பொறுப்பாக, தெளிவாக, துணிவாக எல்லாவற்றிற்கும் மேலாக, அறம் சார்ந்து நடக்கின்ற, அரசை வழிநடத்தக்கூடிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்களை வணங்கி, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை அவர்கள்.

திரு. மா. சின்னதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை குறித்த மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம் 3 மாதங்களுக்கு ஒருமுறை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் நடத்தப்பட்டு, அக்கூட்டத்தில் அரசியல் கட்சிகளின் சார்பில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் முன்வைக்கும் கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவது பாராட்டத்தக்கதாகும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை கல்வி மற்றும் சமூக, பொருளாதார ரீதியாக உயர்வடையச் செய்திடவும், சமத்துவ சமுதாயத்தினை உருவாக்கிடவும் நிதிநிலை அறிக்கையில் நல்ல பல திட்டங்களை அறிவிப்பு செய்தமைக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமூக, பொருளாதார ரீதியாக ஆதி திராவிட மக்களின் பின்தங்கிய நிலைமையைப் போக்கிட சிறப்பு ஏற்பாடுகளைச்

செய்வதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் அளித்ததுதான் அரசமைப்புச் சட்டம் 1951, ஷரத்து 15, பிரிவு 4-ன்படி கொண்டுவரப்பட்ட முதல் சட்டத் திருத்தமாகும். அதன் பின்னர், சிறப்பு உட்கூறு திட்டங்கள், இட ஒதுக்கீடுகள், தீண்டாமை ஒழிப்புச் சட்டங்கள், அரசு நலத்திட்ட உதவிகள், தாட்கோ கடன், சலுகைகள் என பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளுக்குப் பிறகும் ஆதி திராவிட மக்களின் சமூக பொருளாதார நிலை எந்தளவிற்கு மேம்படுத்தப்பட்டுள்ளது என்பதை ஆய்வுக்கு உட்படுத்தி, அடுத்தக்கட்ட வளர்ச்சிக்குத் திட்டம் வகுத்திட வேண்டுமென நான் கோருகிறேன்.

பிற்பகல் 6–35

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழ்வினை மேம்படுத்த வேண்டுமென்று சொன்னால் அம்மக்களுக்கு நிலம், உணவு, வேலை, கல்வி வழங்குவதற்கான உத்தரவாதம் செய்திட வேண்டும். அவ்வாறு செய்திடாமல் மாற்றம் ஏற்படும் என்று கருதுவது அவ்வளவு எளிதான காரியமாக அமைந்திடாது என்று நான் பார்க்கிறேன். கல்வி நிலையங்களில் மாணவர்கள், ஆசிரியர்களிடம் துவங்கிடும் சாதியப் பாகுபாடுகளைக் களைந்திட உறுதியான நிருவாக ஏற்பாடுகளைச் செய்திட வேண்டும். மாணவர்களிடையே சமத்துவ சிந்தனையை மேம்படுத்தும் வகையில் மனித உரிமை மற்றும் சமூக நீதிக் கல்வியை பாடத் திட்டத்தில் கொண்டு வர வேண்டுகிறேன். காவல் நிலையங்களில் பணிபுரிவோர்களிடம் சாதியப் பாகுபாடுகள் தடுக்கப்பட வேண்டும். வெளிநாடு சென்று படிக்கும் மாணவர்கள் அனைவருக்கும் உதவித்தொகை வழங்கிட வேண்டும். இளங்கலை படிக்கும் மாணவர்கள் தனியார் மருத்துவக் கல்லூரியில் படிக்கும் மாணவர்களின் நலனைப் பாதுகாத்திட வேண்டும்.

ஆதி திராவிடர் துணைத் திட்டமானது, 21 செயலாக்கத் துறைகள் மற்றும் 48 அமலாக்கத் துறைகள்மூலம் செயல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு துறையிலும் ஒருங்கிணைப்பு அலுவலர்–Nodal Officer நியமனம் செய்யப்பட்டு, திட்டங்கள் கண்காணிக்கப்படுகின்றன. ஆனாலும், ஆதி திராவிடர் நலத் துறைக்கு ஒதுக்கப்படும் நிதிகள் ** வேதனை அளிக்கிறது.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 ஏப்ரல் 18] [திரு. மா. சின்னதுரை]

குறிப்பாக, கடந்த 2016–2017 ஆம் ஆண்டில் ரூ.29,574.65 இலட்சமாக இருந்து, 2021–2022 ஆம் ஆண்டில் ரூ.2,41,853.98 இலட்சமாக ** இதற்கான ஆதாரங்களைக் கேட்டால், துறை வாரியான அனைத்து ஆதாரங்களையும் கையில் வைத்திருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இத்தகைய போக்குகளைக் களைந்திட வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்குள் ஒதுக்கீடு செய்து, ஆதி திராவிட மக்களின் நலனைக் காப்பதில் கூடுதல் கவனம் செலுத்திட வேண்டும்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கான தொகை ஆண்டொன்றுக்கு ரூ.100 கோடி என்பதை அதிகரித்திட வேண்டும். குறைந்தது ரூ.6 இலட்சம் செலவில் வீடுகள் கட்ட அரசு உதவிட வேண்டும். இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கிட கூடுதல் முக்கியத்துவம் தர வேண்டும். சமூக பொருளாதாரத்தில் பின்தங்கிய கிறிஸ்தவ ஆதி திராவிடர்களையும் பட்டியல் இனத்தவருக்குள் கொண்டுவந்து சலுகைகள் வழங்கிட வேண்டும்.

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை தொகுதிக்குட்பட்ட வேங்கைவயல் கிராமத்தில் குடி தண்ணீரில் மலத்தைக் கலந்து இழி செயலைச் செய்த குற்றவாளிகளைக் கைது செய்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். ஆனாலும், குற்றவாளிகளை இதுவரை கண்டுபிடிக்க முடியாதது கவலையளிக்கிறது; அப்பகுதியில் வேறு விதமான தீங்குகளை ஏற்படுத்துகிறது. விரைந்து வேங்கைவயல் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுகிறேன்.

திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு ஒன்றியம், தென்முடியனூர் கிராமத்தில் ஆலய வழிபாட்டு உரிமையை அரசு உறுதிபடுத்திய பிறகும் மீண்டும் கோயில் மூடப்பட்டது. அதன் உரிமையைக் கேட்டதற்காக பேராசிரியர் முருகன் மிரட்டப்பட்டுள்ளார். ஒரு கடைக்கு தீ வைத்து எரித்துள்ளனர். வழக்குகள் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுத்து வரும்போதே உரிமைகள் மறுக்கப்படுகின்றன. இப்பிரச்சினையில் அரசு தலையீடு செய்து முத்து மாரியம்மன் கோயில் வழிபாட்டு உரிமையை

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

TRUTH ALONE TRIUMPHS

உறுதிப்படுத்த வேண்டும். அங்கு வாழும் தலித் மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கிட வேண்டும். பட்டியலின ஊராட்சி மன்றத் தலைவர்கள் மீதான பாரபட்சம், பாகுபாடுகளைக் களைவதற்கு மாவட்ட ஆட்சியர்கள் மூலமாக உரிய நிருவாக அறிவுறுத்தல்களைச் செய்து. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேங்கைவயலைப்பற்றி நான் ஏற்கெனவே ஒரு கருத்தைச் சொல்லிவிட்டேன். இருந்தாலும், கூடுதலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை அவர்கள் சொல்கின்ற அந்தக் கருத்துகளுக்கு நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். முத்துமாரியம்மன் கோயிலிலே நீங்கள், நான், நம்முடைய மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர், மாவட்ட ஆட்சித் தலைவர், காவல் துறைக் கண்காணிப்பாளர், மூன்று சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஆகிய எல்லோரும் சென்று, அன்றையதினம் வழிபாடு நடத்தி, எல்லோரையும் ஒற்றுமைப்படுத்திவிட்டுத்தான் வந்திருக்கிறோம். அந்தக் கிராமத்தைப் பொறுத்தவரைக்கும், மூன்று சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் ஒற்றுமையாகத்தான் இருக்கிறார்கள். வெளியே இருந்து சென்று யாரும் பிரச்சினையைக் கிளப்பிவிடாமல் இருந்தால் அந்த ஊருக்குள் இருக்கிறவர்கள் அமைதியாக இருப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்டராம்பட்டு தாலுகா, தென்முடியனூரில் உள்ள ஒரு திருக்கோயிலைப்பற்றி இங்கே பேசினார்கள். அதற்கு ஏற்கெனவே அரசின் சார்பாக உரிய பாதுகாப்பெல்லாம் கொடுக்கப்பட்டு, அந்தக் கோயிலில் பொங்கல் வைத்து, விழாக்கள் எல்லாம் எடுத்தார்கள். அந்தக் கோயில் தொடர்ந்து மூடப்படவில்லை; அந்தக் கோயில் திறந்துதான் இருக்கிறது. இப்போதும் அனைவரும், அங்கே கோயிலுக்கு வந்து கும்பிட்டுக் கொண்டுதான்

2023 ஏப்ரல் 18] [திரு. எ.வ. வேலு]

இருக்கின்றனர், இது ஒன்று. இன்னும் சொல்லப்போனால், அந்த ஆதி திராவிட குடியிருப்புகளில் இருப்பவர்களில், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களும் இருக்கிறார். அங்கே சாதிக் கலவரம் என்றெல்லாம் ஒன்றுமில்லை. ஏற்கெனவே, பொங்கல் வைப்பது என்பது, 10 நாட்கள் திருவிழா; அந்த 10 நாட்கள் திருவிழாவில், ஒரு நாள் ஆதி திராவிட மக்களுக்குத் தர வேண்டுமென்றுதான் பிரச்சினை இருந்தது. அதில், அரசு தலையிட்டு, அவர்கள் முறையாக வந்து பொங்கலிடலாம்; அங்கே உள்ள கோயிலில் அவர்கள் ஆன்மிகக் கடமைகளைச் செய்யலாம் என்ற அடிப்படையில் அரசு அதற்குப் போதுமான பாதுகாப்பு போட்டு, அங்கு சுமுகமாக இருக்கிறதேயொழிய, அங்கு சுமுகமாக இல்லாத சூழ்நிலை ஒன்றும் இல்லை.

பிற்பகல் 6–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைய தினம் வழிபாட்டு நிகழ்ச்சிக்கு மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களும் எங்களுடன் சேர்ந்து வந்தார்கள். மேலும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மூவரும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அவர்களும் அந்த வழிபாட்டு நிகழ்ச்சியில் கலந்துகொண்டோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை அவர்கள்.*

திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு அமைச்சர்கள் கூறிய கருத்தை நான் ஏற்கிறேன். பட்டியலின ஊராட்சி மன்றத் தலைவர்கள் மீதான பாரபட்சம் மற்றும் பாகுபாடுகள் ஆகியவற்றைக் களைவதற்கு மாவட்ட ஆட்சியர்கள் மூலமாக உரிய நிர்வாக அறிவுறுத்தல்களைச் செய்து, ஜனநாயகபூர்வமாகச் செயல்படுவதை அரசு உறுதிப்படுத்த வேண்டும்.*

தஞ்சாவூர் மாவட்டம், சோழபுரம் பேரூராட்சியில் சாதி மறுப்புத் திருமணம் செய்த சரண்யா, மோகன் ஆகியோர் கௌரவக் கொலை செய்யப்பட்டனர். கிருஷ்ணகிரி மாவட்டம்,

ஊத்தங்கரையை அடுத்த அருணபதி கிராமத்தைச் சார்ந்த சுபாஷ் என்பவர் வேறு சமூகத்தைச் சார்ந்த அனுசியா என்ற பெண்ணைத் திருமணம் செய்துள்ளார். சாதி மறுப்புத் திருமணம் செய்ததற்காக இரட்டைக் கொலை நடந்துள்ளது. பெற்ற தாயைக் கொலை செய்யும் அளவிற்கு சாதிய வெறித்தனம் நீடிக்கிறது என்பதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன்.

நமது இந்திய அரசமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளான வாழ்வதற்கான உரிமை, அதிலும் குறிப்பாக, தன் உடலின் மீதான சுதந்திரம் மற்றும் யாருடன் இருக்க வேண்டும், யாருடன் வாழ வேண்டும் என்ற உரிமைகள், வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற கருத்துச் சுதந்திரத்தை முடமாக்குகிறது. சாதி, மத, இன வகுப்பு அடிப்படையில் உயர்வு, தாழ்வு கருதி, கௌரவம் என கொலை செய்தல் உள்ளிட்ட குற்றச் செயல்களைத் தடுத்திட தனிச் சட்டம் இயற்றிட வேண்டும். இதுகுறித்து 29–5–2015 அன்று பேரவைச் செயலகத்தில் அப்போதைய CPIM சட்டமன்றக் குழுத் தலைவர் தோழர் அ. சவுந்தரராசன் அவர்கள் சமர்பித்த அறிக்கையையும் கணக்கில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சாதி மறுப்புத் திருமணம் செய்தவர்களுக்கு வழங்கப்படும் பணப் பயன்கள் 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட வேண்டும். அரசுப் பணிகளில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். உசிலம்பட்டி விமலாதேவி வழக்கில் உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பின்படி, அனைத்து மாவட்டங்களிலும் சிறப்புப் பிரிவுகளை ஏற்படுத்தி செயல்படுத்திட வேண்டும்.

மலக்குழிகளில் தொழிலாளர்கள் மரணமடைவதைத் தடுத்திட வேண்டும். புதிய தொழில்நுட்பங்களையும், எந்திரங்களையும், கருவிகளையும் உருவாக்கி, மலக்குழி மரணங்களைத் தடுத்திட விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். உலகின் பல நாடுகளில் உயர் கல்வியில் ஒரு துறையாக துப்புரவுப் பொறியியல் துறை உள்ளது. தமிழ்நாட்டிலும் அண்ணா பல்கலைக்கழகத்தில் துப்புரவுப் பொறியியல் துறை துவக்கப்பட வேண்டும். திண்டுக்கல், வேடசந்தூர் ஒன்றியம், நாகையன்கோட்டையில் **

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 ஏப்ரல் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், அதுகுறித்து வழக்கு பதிவு செய்திருக்கிறார்கள். அந்த விவகாரம் காவல் துறை, நீதித் துறை சம்பந்தப்பட்டதாகும். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விடுவோம்.

திரு. மா. சின்னதுரை: பாதிக்கப்பட்டவர்கள் கோருகிற அனைத்து வழக்குகளிலும் அரசு சிறப்பு வழக்கறிஞர்களை நியமிக்க அனுமதி வழங்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், அடுத்த சப்ஜெக்ட்டிற்கு வாருங்கள்.

திரு. மா. சின்னதுரை: அருந்ததிய மக்களுக்கு இளையான்குடியில் வீடு கட்டுவதற்குத் தடை; கும்மிடிப்பூண்டி, நங்கவள்ளி பேரூராட்சிகளில் மயான வசதி மறுப்பு; பொதுவாக அருந்ததிய மக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், குடியிருப்புப் பகுதியில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைச் செய்து கொடுக்கவும் வேண்டுகிறேன். அனைத்துத் துறைகளிலும் பின்னடைவு காலிப் பணியிடங்கள், அருந்ததியர் உள் ஒதுக்கீடு காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும். தூய்மைக் காவலர், அலுவலகக் காவலர், தபால், டெங்கு கொசு ஒழிப்பு, கடைநிலை ஊழியர்கள் அனைவரும் அரசுப் பணியாளர்களாக நியமிக்கப்பட வேண்டும். பஞ்சமி நிலம், பட்டியலின மற்றும் பழங்குடி மக்களுக்காக வழங்கப்பட்ட நிலங்கள் விதிகளை மீறி ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதைக் கண்டறிந்து, பயனாளிகளிடம் ஒப்படைக்க வேண்டும். சாதியின் அழிக்க முடியாத அடையாளமாக இருக்கிற 'சாதிக்கு ஒரு மயானம்' என்கிற முறையைத் தவிர்த்து, "ஒரே ஊர்-ஒரே சுடுகாடு" என்கிற சமத்துவ மயானங்களை அமைத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

கல்வித் துறைக்கும், காவல் துறைக்கும் இன சுழற்சி அடிப்படையில் 2012 ஆம் ஆண்டு வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக தூய்மைக் காவலர்கள் பணி நியமனம் செய்யப்பட்டனர். கல்வித் துறையில் சேர்ந்தவர்களை பணி நிரந்தரம் செய்துவிட்டனர். ஆனால், 10 ஆண்டுகளுக்கு மேலாகியும் காவல் துறையில் சேர்ந்தவர்களை இதுவரை பணி நிரந்தரம் செய்யவில்லை. பாரபட்சமில்லாமல் காவல் துறையில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்து, காலமுறை ஊதியம் வழங்கிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. மா. சின்னதுரை] [2023 ஏப்ரல் 18

பழங்குடியினருக்கான வாழ்வாதார உரிமையான வன உரிமைச் சட்டத்தை முழுமையாக அமல்படுத்தி, பழங்குடியின மக்களின் அனுபவ நிலங்களுக்கு நில உரிமைச் சான்று வழங்கிட வேண்டும். புலையன், ஈரோடு மலையாளி, வேட்டைக்காரன், குறவன் இனத்தின் உட்பிரிவுகள், குருமன்ஸ் இனத்தின் உட்பிரிவுகளை பழங்குடியினர் பட்டியலில் இணைத்திட வேண்டும் எனக் கோருகிறேன்.

பிற்பகல் 6–45

பழங்குடியின மக்கள் இனச் சான்றிதழ் பெறும் முறையை எளிதாக்கிட வேண்டும். நேரடியாக விண்ணப்பங்களைப் பெற்று உரிய காலத்தில் வழங்கிட வேண்டும். சேலம் அல்லது விழுப்புரம் மாவட்டத்தை மையப்படுத்தி பழங்குடியின மாணவர்களுக்கான அரசு கலைக் கல்லூரிகள் திறக்கப்பட வேண்டும். பழங்குடியின மக்கள் வாழும் 16 மாவட்டங்களிலும், குறிப்பாக, தருமபுரி, அரூரில் ஏகலைவா மாதிரிப் பள்ளிகள் திறக்கப்பட வேண்டும்.

சேலம் மாவட்டம், ஏற்காடு மலைக்குட்பட்ட மாரமங்கலம் பகுதியில் உள்ள 18 கிராமங்களில் பழங்குடியின மக்கள் வசித்து வருகின்றனர். இவர்கள் அப்பகுதியில் உள்ள 6 ஆம் நம்பர் பீல்டு வழிச்சாலையை காலங்காலமாகப் பயன்படுத்தி வந்துள்ளனர். தற்போது அங்குள்ள estate முதலாளி மண் சாலை அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகிறார். இதுசம்பந்தமான வழக்கில் சேலம் முதன்மை நீதிமன்றம் மண் சாலை அமைக்க வேண்டுமென தீர்ப்பு கூறியும், மாவட்ட நிர்வாகம் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காமல் கிடப்பில் போட்டு வருகிறது. இதனால் அங்கே பதற்றம் நிலவுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாகத் தலையிட்டு பழங்குடியின மக்களின் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் 1990–க்குப் பிறகு கட்டப்பட்ட காலனி வீடுகளில் குடியிருக்கக்கூடியவர்களின் வீடுகள் அனைத்தும் சேதமடைந்த வீடுகளாக இருக்கின்றன. அந்த வீடுகள் அனைத்தையும் புதுப்பிப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை சட்டமன்றத் தொகுதி என்பது மிகவும் பின்தங்கிய தொகுதியாகும். பின்தங்கிய தொகுதியாக இருக்கிற காரணத்தினால், வேலைவாய்ப்பின்றி

இளைஞர்கள் தவிக்கிறார்கள். வான் மழையை நம்பியே வாழக்கூடிய ஒரு தொகுதியாக இருக்கிறது. நிலத்தடி நீராதாரம் குறைந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இங்கு SIPCOT *தொழிற்பூங்கா ஒன்றைத் தொடங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை பகுதி என்பது கிராமப்புறப் பகுதியை உள்ளடக்கியதாகும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தொகுதி சார்ந்த கோரிக்கைகளை என்னிடம் தாருங்கள். அதனை நீங்கள் அவையில் பேசியதாகப் பதிவு செய்து தந்துவிடுகிறேன். ஒரு விஷயத்தைப் பதிவு செய்து முடியுங்கள்.*

திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டையில் கோட்டாட்சியர் அலுவலகம் அமைத்திடவும், கந்தர்வகோட்டையை மையப்படுத்தி துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் நிறுவிடவும் நான் கேட்டுக்கொள்கிறேன்.*

கிராமப்புற மக்கள் அதிகமாக இருக்கிற இடங்களில் ஒவ்வோர் ஊராட்சிக்கும் ஒரு சமுதாயக் கூடம் அமைத்துக் கொடுப்பதற்கு ஆதி திராவிட நலத் துறை முன்வர வேண்டுமென நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன், உழைக்கும் மக்களுடைய உரிமைக்காக சாதாரண ஏழையெளிய மக்கள் போராடுகிறபோது, காவல் துறையில் போராட்ட உரிமைகள் மறுக்கப்படுகின்றன. காவல் துறை அனுமதி மறுக்கிறது. காவல் துறை அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை,* particular *ஆக எந்த* issue-*க்கு காவல் துறை மறுத்தது என்று சொல்ல வேண்டும். நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக் கோரிக்கைகளை அவைக்குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

தொகுதிக் கோரிக்கைகள்:

கந்தர்வகோட்டை தொகுதியில் சிப்காட் தொழிற்பூங்கா அமைத்துத் தர வேண்டும். கிராமப்புற மக்களின் ஏழ்மை நிலையைப்

போக்கிட இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திடவும், கலாச்சார ரீதியாகவே மாற்றத்தையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்துவதற்கு பயனுள்ள முறையில் தொழில் கட்டமைப்பை உருவாக்கிட தமிழ்நாடு அரசு முன்வர வேண்டும்.

குன்றாண்டர்கோவில் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர வேண்டும். செங்களூர் ஊராட்சி, இராவுசாபட்டி கிராமம், அண்டக்குளம் ஊராட்சி, கடியாப்பட்டி கிராமம், மின்னாத்தூர் ஊராட்சி, பாப்புடையான்பட்டி ஊராட்சி, வைத்தூர் ஊராட்சி, வாழமங்கலம் ஊராட்சி மற்றும் வடுகபட்டி கிராமம், கிள்ளுகுளவாய்பட்டி கேர் காலனி மற்றும் கந்தர்வகோட்டை ஒன்றியம், கறம்பக்குடி ஒன்றியத்தில் உள்ள உட் கிராமங்களான, கீரனூர் கள்ளுக்கடைத் தெரு, கீரனூர் பேரூராட்சி புறநகர் பகுதிகளில் குடியிருப்போர்களுக்கு குடிமனைப் பட்டா வழங்கிட வேண்டும்.

கந்தர்வகோட்டை தொகுதி, கீரனூர், கறம்பகுடி ஆகியவற்றில் உள்ள தாலுகா அரசு மருத்துவமனைகளில் கூடுதல் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் நியமித்திட வேண்டும். சி.டி. ஸ்கேன், டயாலிசிஸ் சென்டர் அமைத்து செயல்படுத்த அரசு முன்வர வேண்டும். கூடுதல் கட்டட வசதிகளை உருவாக்கித் தர வேண்டும். கந்தர்வகோட்டை தாலுகாவிற்கு காவல் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் அமைத்திட வேண்டும். மகளிர் காவல் நிலையம் அமைத்துத் தர வேண்டும். கந்தர்வகோட்டை பேருந்து நிலையத்தினை மறுசீரமைப்பு செய்து, வணிக வளாகம் அமைத்துத் தர வேண்டும்.

கந்தர்வகோட்டை ஒன்றியம், கந்தர்வகோட்டை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு பேருந்து வசதி செய்து கொடுக்க வேண்டும். பள்ளி வளாகத்திற்கு அருகில் விளையாட்டு மைதானம் அமைத்துத் தர வேண்டும். குளத்தூர் தாலுகாவில் உள்ள கீரனூர் பேரூராட்சி அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டுகிறேன். திருச்சி-புதுகை மார்க்கமாக புறவழிச் சாலையில் செல்லும் அனைத்துப் பேருந்துகளும் கீரனூர் பேருந்து நிலையம் வந்துபோக உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். வணிகர்கள், பள்ளி, கல்லூரி மாணவ/மாணவிகள் மற்றும் வெளி வேலைக்குச் செல்லும் தொழிலாளர்கள் மற்றும் விழாக் காலங்களில் வெளியூர் செல்லும் பொதுமக்கள் பேருந்து நிலையத்தில் காத்திருக்கும் பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காண வேண்டும். கீரனூரில்

2023 ஏப்ரல் 18] [திரு. மா. சின்னதுரை]

கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டுள்ள அருள்மிகு உத்தமநாதர் ஆலயத்திற்கு குடமுழுக்கு செய்திட வேண்டுகிறேன். மேலும், இக்கோயிலுக்கு புதிதாக தேர் செய்து திருவிழா நடைபெறுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கந்தர்வகோட்டை தொகுதி, கந்தர்வகோட்டை ஒன்றியத்திற்குட்பட்ட மு.சோழகம்பட்டி, நத்தமாடிப்பட்டி, குரும்பூண்டி, தச்சங்குறிச்சி, விராளிப்பட்டி, கோமாபுரம், மங்கனூர், வடுகப்பட்டி, பழைய கந்தர்வகோட்டை உள்ளிட்ட கிராமப்புற ஊராட்சிகளின் குடியிருப்புப் பகுதிகளுக்கு வழங்கப்படும் குடிநீரின் தரத்தினை ஆய்வுக்கு உட்படுத்தி சிறுநீரக பாதிப்பு ஏற்படாத வகையில் பாதுகாக்கப்பட்ட குடிநீரை கந்தர்வகோட்டை தொகுதி முழுமைக்கும் வழங்கிட அரசு உரிய முறையில் தீர்வு காண வேண்டும்.

கந்தர்வகோட்டை தொகுதி முழுமையிலும் 1990–க்கு முன்பாக கட்டிக்கொடுக்கப்பட்டுள்ள காலனி தொகுப்பு வீடுகளை மறுசீரமைப்பு செய்ய வேண்டும். அதே நேரத்தில் முழுமையாக சேதமடைந்துள்ள வீடுகளை இடித்துவிட்டு, புதிய வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென கோருகிறேன். செங்கமேடு–வாண்டான்வீடு ஊராட்சிக்கு உட்பட்ட மணமடை, செவிடன்விடுதி ஆற்றுக் கரையைச் சீரமைத்து தார்ச் சாலையாக மாற்றித் தர வேண்டும்.

தஞ்சாவூரிலிருந்து வெட்டிக்காடு வரை செல்லும் கல்லணைக் கால்வாய் வழியாக செல்லம்பட்டி கிராமத்தின் அருகில் பிரிந்து செல்லும் உலவயல் ஆற்று வாய்க்கால் கீராத்தூர், பாப்பாபட்டி, கிளாங்காடு, புதுக்கோட்டை விடுதி, அங்கன்விடுதி, தோப்பவிடுதி, திருவோணம், காடுபட்டி விடுதி, பள்ளத்தான்மனை, பிள்ளக்குறிச்சி, ராங்கியன் விடுதி, குளந்திரான்பட்டு கண்மாயில் இணையும் உழவயல் வாய்க்கால் தூர்வாரப்பட்டு, கடைமடை பகுதியிலுள்ள விவசாயிகள் பயனடைந்திட நிதி ஒதுக்கீடு செய்து, வாய்க்கால் சீரமைப்பை மேற்கொள்ள வேண்டும்.

கந்தர்வகோட்டை தொகுதியின் தீர்த்தான்விடுதி ஊராட்சியிலுள்ள ஊரணிபுரத்தில் புதிதாக பேருந்து நிலையம் அமைத்துத் தர வேண்டுகிறேன். கந்தர்வகோட்டை தொகுதி, கறம்பக்குடி ஒன்றியம், பத்துதாக்கு கிராமத்தில் சாலை வசதி செய்து தர வேண்டும். திருச்சியிலிருந்து காரைக்குடி மற்றும் ராமேஸ்வரம் செல்லும் ரயில்கள் அனைத்தும் கீரனூர்

ரயில் நிலையத்தில் நிறுத்திச் செல்ல அனுமதி பெற்றுத் தர வேண்டும். குன்றாண்டார்கோவில் ஒன்றியம், வத்தனாக்குறிச்சி ஊராட்சியிலுள்ள வெவ்வேல்பட்டி கிராமத்தில் பொதுமக்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் கல்குவாரி மற்றும் கிரஷரை இயக்கிட தடை விதிக்க வேண்டும். அண்டக்குளம் ஊராட்சியில் மந்தைப் பகுதியில் பேருந்து செல்லும் தார்ச் சாலையைச் சீரமைத்துத் தர வேண்டும். குன்றாண்டார்கோவிலில் பேருந்து நிலையம் அமைத்துத் தரவும், கூடுதல் பேருந்துகள் இயக்கிடவும் அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ராஜகுமார் அவர்கள்.

திரு. S. ராஜகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வராக, முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் இந்திய அரசியலை வழி நடத்தவிருக்கும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களே, இந்திய ஒன்றியத்திற்கு வழிகாட்டும் மாநிலமாக தமிழ்நாட்டின் மக்களுக்குப் பெருமைத் தேடித் தந்திருக்கும் தளபதி அவர்களின் 70-வது பிறந்த ஆண்டு, இந்த ஆண்டு. இந்திய அரசமைப்பின்படி இந்தியா மற்றும் தமிழகத்தில் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடத்தி, மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறையை 1952 மார்ச்சில் துவங்கிய முதல் சட்டமன்றம், இன்றைக்கு 16-வது சட்டமன்றம் என்கின்ற அனுபவத்தோடு, இந்த 16-வது சட்டமன்றம் என்பது 70-வது நிறைவு ஆண்டு; அந்த வகையிலே, 37 வருட சட்டமன்ற அனுபவத்தோடு தமிழகத்தை வழிநடத்திக்கொண்டிருக்கிற தளபதி அவர்களுக்கும், மூத்த அமைச்சர், அவை முன்னவர் அவர்களுக்கும், இளைஞர்களின் எதிர்காலமாய் இருக்கும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், என்னுடைய தொகுதியின் நீண்ட கால கோரிக்கைகளை நிறைவேற்றித் தந்திருக்கக்கூடிய நெடுஞ்சாலைத் துறை, நகராட்சித் துறை, வேளாண்மைத் துறை மற்றும் எங்கள் மாவட்டத்தினுடைய பொறுப்பு அமைச்சர் உள்ளிட்ட அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும், இந்த அவையில் அமர்ந்திருக்கும் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்து வந்திருக்கிற, இந்த 75 ஆண்டு கால பொது வாழ்விலும், அரசியல் வாழ்விலும் கோலோச்சி, தனக்கென ஒரு

2023 ஏப்ரல் 18] [திரு. S. ராஜகுமார்]

தனி இடத்தைப் பிடித்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு, வருகின்ற ஆண்டு. வரலாற்றுச் சிறப்புமிக்க வகையில், அனைத்துத் தரப்பு மக்களுக்கான சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டுமென்ற வகையில், நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் ஒரு சிறப்பான அறிவிப்பாக, மகத்தான அறிவிப்பாக, எங்கள் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவராக இருந்து, நீண்ட கால சித்தாந்தத்தின் செயல்பாடுகளில் மக்களுக்கான பணிகளைச் செயல்படுத்தியிருக்கக்கூடிய ஒரு தலைவராக, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றியிருக்கக்கூடிய ஓர் அனுபவம் வாய்ந்த பெருமைமிக்கவருக்கு நூற்றாண்டு நினைவரங்கம், அதற்காக ஒரு சிறப்புத் திட்டத்தை இன்றைக்கு அறிவித்திருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 6–50

அதேபோல, தனது பிறந்த தின விழாவிலே இந்திய தேசம் காப்பாற்றப்பட வேண்டும், மீண்டும் மதச் சார்ப்பற்ற இந்தியாவை முன்னேற்றப் பாதைக்குக் கொண்டு செல்ல வேண்டுமென்கின்ற தொலைநோக்குப் பார்வையோடு வருகின்ற 2024-ல் நடைபெறவுள்ள பாரதப் போருக்கு தளபதியாக நின்று, அதை நிறைவேற்றுவேன் என்கின்ற சபதம் ஏற்றுக்கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாநில சட்டமன்றம் என்பது மக்களாட்சித் தத்துவத்தின் அடையாளம். ஜனநாயகத்தின் செயல்பாட்டில் இருக்கும் நடைமுறைகளைச் சட்டமாக்கும் மன்றம், மாநில மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற கடமையும், பொறுப்பும் மாநில அரசுகளுக்கே அதிகம் உள்ளது. குறிப்பாக, தமிழகத்திற்கு ஒரு தனி இடம் உண்டு. இந்திய ஒன்றியத்திற்கே தமிழ்நாடு முன்னுதாரணமாகத் திகழ்வதற்குக் காரணம், இம்மாமன்றம் கடந்து வந்த பாதை. ஏன், உலகத்திற்கே பல முன்னுதாரணமான சட்டங்களையும், திட்டங்களையும் இயற்றிய பெருமை நம் தமிழக சட்டமன்றத்திற்கு உண்டு. அந்தவகையிலே, ஒவ்வொரு சமுதாயத்திற்கும் தனி முக்கியத்துவம் அளித்த பெருமை இந்த திராவிட அரசுக்கு உண்டு; இன்றைய திராவிட மாடல் அரசின் அடிப்படை தத்துவம் என்பது தெரிகின்றவகையிலே,

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய பணியைத் தொடர்ந்து, அதனைச் செம்மைப்படுத்துகின்றவிதமாக இன்றைய மக்களுக்கான செயல்பாடுகள் இருப்பதைத்தான் இன்றைக்கு India Today போன்ற பத்திரிகைகள் பாராட்டிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, ஆதி திராவிடர் நலத் துறையின் மூலமாக பல்வேறு திட்டங்கள்-கடந்த ஆண்டு, பள்ளிகள் தரமுயர்வு, கட்டடங்கள், வேலைவாய்ப்பு என நம்முடைய ஆட்சியிலே சட்டமன்றத்திலே அறிவித்திருக்கக்கூடிய பல திட்டங்கள் பயனுள்ள திட்டங்களாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனாலும், இன்றைக்கு ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோருக்கு வழங்கப்படுகின்ற இலவச வீட்டு மனைப் பட்டாக்களில், குடியேற முடியாமல் இருக்கக்கூடிய அந்த நிலங்களிலுள்ள மேடு பள்ளங்களைச் சரி செய்து கொடுக்கக்கூடிய தனித் திட்டத்தைச் செயல்படுத்திட வேண்டும். ஏனென்றால், சில சமயங்களிலே அவர்களுக்கு ஒதுக்கப்படுகின்ற இடங்கள், மோசமான பள்ளமாக இருக்கக்கூடிய பகுதியாக இருக்கின்ற நேரத்தில், அவர்கள் வீடு கட்டுவதில் சிரமங்கள் ஏற்படுகின்றன. அவற்றையெல்லாம் கவனத்திலே எடுத்துக் கொண்டு, அதற்கான சிறப்புத் திட்டத்தைத் தீட்டி, மனைகளை ஒதுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அன்னை இந்திரா காந்தி அவர்கள் பிரதமராக இருந்தபோது கொண்டு வந்த Scheduled Castes Sub-Plan (SCSP), Tribal Sub-Plan (TSP) சட்டம் இயற்றுவதற்கு முன்வந்திருப்பது, நம்முடைய அரசும் அதைக் கடைபிடித்துச் செயல்படுத்தவிருப்பது வரவேற்கத்தக்கது.

தெலுங்கானா, ஆந்திரா, கர்நாடகம் போன்று SC/ST மக்களுக்கான ஒரு சிறப்புத் திட்டத்தையும் நம்முடைய அரசு உருவாக்கும் என்று நான் கருதுகிறேன். ஒரே ஒரு செய்தியைக் குறிப்பிட விரும்புகிறேன். பல இடங்களில் ஆதி திராவிட மாணவர்களுக்கு 'காமதேனு' என்ற நம்முடைய கூட்டுறவு அங்காடிகள் மூலமாகப் பொருட்கள் வழங்கப்பட்டு வந்தன. தற்போது அது வேறு யாருக்கோ கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய நிலையில், சரியான முறையில் பொருட்கள் வழங்கப்படவில்லை என்று புகார்கள் வந்திருக்கின்றன. எனவே, மீண்டும் கூட்டுறவுத் துறையின் மூலமாக அவர்களுக்குப் பொருட்களை வழங்கினால், அது சிறப்பான செயல்பாடாக இருக்கும் என்று நான் இந்த நேரத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

2023 ஏப்ரல் 18] [திரு. S. ராஜகுமார்]

ஆதி திராவிடர் நலத் துறை மூலமாக மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை சார்பில் நடத்தப்படும் விடுதிகளில் படிக்கும் மாணவர்களுக்கு மாதாந்திர உணவுக் கட்டணமாக ஆயிரம் ரூபாயும், கல்லூரி மாணவர்களுக்கு ரூ.1,100/-ம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த உணவு மானியத் தொகை குறைந்தபட்சம் ரூ.2,000/- ஆக அரசால் உயர்த்தப்பட வேண்டுமென்று எல்லோரும் கோரிக்கை வைக்கிறார்கள். அதேபோல, கல்லூரி மாணவர்களுக்கு ரூ.2,500/- ஆக உயர்த்தித் தர வேண்டுமென்று கோரிக்கை வைத்து வருகிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சமூக நீதிக்கான அரசு என்பதைச் சுட்டிக்காட்டும்விதமாக கடந்த ஆண்டு அறிவித்திருக்கக்கூடிய பாராட்டுக்குரிய செயல் என்னவென்று சொன்னால், வெளிநாடு சென்று படிக்கக்கூடிய ஆதி திராவிட மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகையை அரசு வழங்கும் என்று சொல்லி, 9 பேர் சென்று படித்திருப்பதாக கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அது, பாராட்டக்கூடிய செய்தியாக இருக்கின்றது. இதற்கு முந்தைய ஆண்டுகளிலே அரசின் சார்பில் இவ்வாறு வெளிநாடு சென்று படிக்கிறார்கள் என்ற விவரம் கொள்கை விளக்கக் குறிப்பில் இல்லை. அந்த வகையில், உண்மையிலேயே இந்த அரசு ஒரு புதுமையான முயற்சியைச் செய்திருக்கிறது என்பதற்காகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

குறிப்பாக, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், இன்றைக்கு பெரியவர் LEP அவர்களுக்கு சொன்னதைப்போல, அயோத்திதாச பண்டிதர் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டப்படும் என்று அறிவித்ததாக இருக்கட்டும், அதேபோல அம்பேத்கர் பிறந்த தினத்தை சமத்துவ நாளாகக் கடைபிடிக்கப்படும் என்று அறிவித்த அறிவிப்புகளெல்லாம் ஒரு சிறந்த பாராட்டக்கூடிய செயலாக இருக்கிறது. இவை நாம் பாராட்ட வேண்டிய அறிவிப்புகளாக இருக்கின்றன.

பிற்பகல் 6-55

பள்ளிக் கல்வித் துறையில், ஆதி திராவிடர் பள்ளிகளையெல்லாம் இணைப்பது என்பது, தேர்ச்சி விகிதம்

உயர்த்தப்பட வேண்டுமென்கின்ற கருத்தோடு, ஒரு சிறந்த முயற்சியை நம்முடைய அரசு எடுத்திருக்கின்றது. இது, சமூக நீதிக்கான சிந்தனையாக, ஒரு செயலாக இருந்தாலும்கூட, குறைந்த காலம் அவர்களுக்கு சிறப்புக் கவனம் அளித்து, அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து அதற்கான இடத்தை அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்கின்ற ஒரு கருத்தும் இதில் இருக்கிறது. அந்தவகையில், இன்றைக்கு பள்ளிக் கல்வித் துறை மிகச் சிறப்பாக அந்தப் பணியைச் செய்து கொண்டிருப்பதில் மாற்றுக்கருத்து இல்லை. இப்படித் தனித்தனியாக இருக்கக்கூடிய இந்தப் பள்ளிகளினுடைய கட்டடங்களையும் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய வகையிலே நம்முடைய அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, கடந்த காலங்களில் இருந்ததைவிட, vigilance-கண்காணிப்புக் குழு இப்போது மூன்று முறை இந்தக் குழுக் கூட்டத்தை மிகச் சிறப்பாக நடத்தி, பல்வேறு அறிஞர்களுடைய, பல்வேறு முக்கியஸ்தர்களுடைய ஆலோசனைகளையெல்லாம் பெற்று, அதற்கேற்றவாறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தக்கூடிய அரசாக, மிகவும் பாராட்டப்படக்கூடிய முயற்சியாக நம்முடைய அரசு எடுத்துக்கொண்டிருப்பதை உண்மையிலேயே பாராட்ட வேண்டும்.

இன்றைக்கு நகராட்சி, மாநகராட்சி போன்ற இடங்களில் கழிவுநீரை அகற்றக்கூடிய அந்தப் பணியாளர்களுடைய நிலையைக் கருத்திலே கொண்டு, அவர்கள் எந்தவிதத்திலும் விஷ வாயு தாக்கி இறந்துவிடக் கூடாது என்பதில் மிகுந்த கவனம் செலுத்தி Zero death என்கிற முறையிலே செயல்முறைகளை உருவாக்க வேண்டுமென்பதற்காக திட்டங்களைத் தீட்டி அவற்றிற்கு DICCI என்கிற நிறுவனத்தோடு புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. விஷ வாயு தாக்கி இறந்த குடும்பத்தினரையே, victim's family-ல் யார் இருக்கிறார்களோ அவர்களையே இதனோடு இணைத்து அவர்களுக்கு இந்தப் பயிற்சியைக் கொடுக்கக்கூடிய முயற்சியை, செயலை நம்முடைய அரசு செய்திருக்கிறது என்பது மிகுந்த பாராட்டப்படக்கூடிய செயலாக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை விடுதிகளில் பணியாற்றும்

2023 ஏப்ரல் 18] [திரு. S. ராஜகுமார்]

துப்புரவுப் பணியாளர்களுக்கு மாத ஊதியமாக ரூ.2,000/– வழங்கப்பட்டு வருகிறது. அது குறைந்தபட்சம் ரூ.6,000/– ஆக உயர்த்தி வழங்கப்பட வேண்டும். பத்தாண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றிவரும் பணியாளர்களுக்கு காலமுறை ஊதியம் நிர்ணயம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கைகளும் வந்து கொண்டிருக்கின்றன.

என்னுடைய தொகுதியில், கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பாக ஓர் அறிவிப்பு வந்திருக்கிறது. அதாவது, நான், ஏற்கெனவே 2006–2011 ஆம் ஆண்டுகளில் சட்டமன்ற உறுப்பினராக இருந்த நேரத்தில், மயிலாடுதுறை, நாகை மாவட்டத்தில் இருந்தது. அப்போது மயிலாடுதுறையிலும், சீர்காழியிலும் ஓர் ஆதி திராவிடர் நலத் துறை அலுவலகம் இருந்தது. மயிலாடுதுறையிலிருந்த அந்த அலுவலகம் நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு மாற்றப்படுவதாக அப்போது திட்டம் தீட்டப்பட்டது. அன்றையதினம் நான் எனது கோரிக்கையை வலியுறுத்தி, அதைத் தடுத்து நிறுத்தினேன். இப்போது பொறுப்பேற்ற பிறகும், மீண்டும் தொடர்ந்து அதைக் கோரிக்கையாக வைக்கிறேன். இன்றைக்கு மயிலாடுதுறை 38–வது புதிய மாவட்டமாக உருவாக்கப்பட்டிருக்கிறது. அங்கிருக்கக்கூடிய ஆதி திராவிடர் நலத் துறை அலுவலகத்தை மாற்றக்கூடாது என்கிற கோரிக்கை வைக்கப்பட்ட நேரத்தில், கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பாக அந்த அலுவலகம் மாற்றப்படுவதாக G.O. வந்திருக்கிறது. அதுகுறித்து துறை சார்ந்திருக்கக்கூடியவர்களிடம் நான் கோரிக்கை வைத்திருக்கிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். ஒரு மாவட்டத்தின் தலைநகரில் இருக்கக்கூடிய அந்த அலுவலகம் அங்கேயே இருக்க வேண்டும். வேண்டுமென்றால், நாகப்பட்டினத்திற்கு ஒரு புதிய அலுவலகம் திறந்துகொள்ள வேண்டுமென்ற கோரிக்கையையும் உங்களிடத்திலே வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, பல்வேறு துறை சார்ந்திருக்கக்கூடிய பணிகள்; பல்வேறு நிலைகளில் இருக்கக்கூடிய மக்களுக்கு வழங்கப்படயிருக்கின்ற இடங்களில் ஏழை மக்கள் அனைவருக்கும் வீடுகள் கட்டித் தரப்பட வேண்டுமென்பதற்காக KVVT திட்டம்– கலைஞரின் வீட்டு வசதித் திட்டம் என்கிற ஒரு திட்டம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உங்களுக்குப் பக்கத்தில் பாருங்கள். படத்திற்குப் பக்கத்தில் உள்ள கடிகாரத்தில் நீங்கள் பேசும் time இருக்கிறது பாருங்கள். (குறுக்கீடு) நீங்கள் நன்றி சொல்லி முடியுங்கள்.*

திரு. S. ராஜகுமார்: இதோ உரையை முடித்துவிடுகிறேன். அந்தவகையிலே செயல்படுத்தப்பட்டு வரக்கூடிய அந்தத் திட்டத்தின் மூலமாக அனைவருக்கும் வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்ற ஒரு கட்டாயத்தை உருவாக்க வேண்டுமென்ற வகையில் அந்தச் செயலை நம்முடைய அரசு செய்து கொண்டிருக்கிறது.

இலவச வீட்டுமனைப் பட்டாவைப் பொறுத்தவரையில், பொருளாதார வசதி இல்லாமல் வீடு கட்ட முடியாமல் இருப்பவர்களுக்கு அந்தத் திட்டத்தைக் கொண்டுவந்திருந்தாலும், குறிப்பாக, ஆதி திராவிடர் மக்களுக்காக ஒரு தனித் திட்டத்தை நீண்டகாலமாகச் செயல்படுத்திக் கொண்டிருந்தாலும்கூட, அதற்கு முக்கியத்துவம் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

நிறைய இடங்களில் விடுதிக் காப்பாளர் பணியிடங்கள் vacant ஆக இருக்கின்றன. என்னுடைய தொகுதியிலுள்ள எல்லா பள்ளி, கல்லூரி மாணவர்கள் விடுதிகளிலும் விடுதிக் காப்பாளர் பணியிடம் இல்லாமல் இருக்கிறது. அதைச் செயல்படுத்த வேண்டும். இன்றைக்கு மிக முக்கியமான இரண்டு, மூன்று கருத்துகளை, இந்தத் துறை சார்ந்திருக்கக்கூடிய விஷயங்களாக இல்லையென்றாலும்கூட. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உங்களுடைய தொகுதி சார்ந்த கோரிக்கைகளையெல்லாம் என்னிடம் கொடுத்துவிடுங்கள். நேரமில்லை, முடிந்துவிட்டது. (குறுக்கீடு) நீங்கள் பேச ஆரம்பித்து 11 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. S. ராஜகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, இரண்டு, மூன்று கருத்துகளை மட்டும் நான் சொல்லிவிடுகிறேன். வருகிற ஆண்டு கலைஞர் அவர்களுடைய நூற்றாண்டு. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய 70–வது பிறந்த தினம். இந்தச் சட்டமன்றம் 1952–லே தொடங்கப்பட்ட சட்டமன்றம். 70 ஆண்டுகளை நிறைவு செய்திருக்கிறது. இந்த 70–வது ஆண்டு நிறைவு செய்கின்ற இடத்தில், 70–வது பிறந்த தினத்தைக் கொண்டாடவிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) மிகச் சிறப்பான திட்டங்களைச் செயலாக்க

2023 ஏப்ரல் 18] [திரு. S. ராஜகுமார்]

வேண்டும். குறிப்பாக, சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்க வேண்டிய முக்கியத்துவம். இன்று சட்டம் இயற்றுவதற்கு நிறைய அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாநில அரசு மூலமாகச் செயல்படுத்தக்கூடிய அதிகாரங்கள் நம்முடைய மக்களுக்கும் தெரியக்கூடிய வகையில் இருத்தல் வேண்டும். ஏனென்றால், எம்.எல்.ஏ.-க்களாக ஆட்சிக்கு வருவதற்காக அதைச் செய்து தருவோம், இதைச் செய்து தருவோம் என்று சொல்கிறோம். அதைச் செயல்படுத்துவதற்கு அரசு நல்ல திட்டங்களை வகுத்து, முறையாகச் செயல்படுத்திக் கொண்டிருந்தாலும்கூட, அதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்ற நேரத்தில், சில சமயங்களில் விட்டுவிடுகின்றது. உதாரணமாக, கல்வெட்டு வைப்பதாக இருக்கட்டும், எந்தத் திட்டமாக இருந்தாலும் அதையெல்லாம் முறையாகச் செயல்படுத்த வேண்டும்.

இரவு 7-00

இந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் குறித்த விஷயம், அது எதுவாக (மேசையைத் தட்டும் ஒலி) இருந்தாலும்கூட மிக முக்கியமாக இரண்டு கருத்துகளைக் கூற விரும்புகிறேன். பல மாநிலங்களில் இருக்கிறது. இப்போது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கொடுக்கப்படுகிற தொகுதி மேம்பாட்டு நிதி குறைவாக இருக்கிறது. அந்த நிதியில், விலைவாசி ஏற்றத்தின் காரணமாக, GST-ன் காரணமாக நிறைய திட்டங்களைச் செயல்படுத்த முடியாமல் இருக்கிறது. ஆகையால், நம்முடைய தலைவர் அவர்கள் ஒரு சிறந்த அளவிலே அந்த நிதியை உயர்த்தித் தருவதற்கும், அதேபோல முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்ற pension போன்றவற்றை உயர்த்தித் தரக்கூடிய முயற்சிகளை எடுக்க வேண்டும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். என் தொகுதி சார்ந்த பல்வேறு கோரிக்கைகள் இருக்கின்றன. அந்தக் கோரிக்கைகளையெல்லாம் மாண்புமிகு துறை அமைச்சர் அவர்களிடத்திலே கொடுத்திருக்கிறேன். அனைத்தையும் செயல்படுத்தித் தருமாறு இந்த நேரத்தில் கேட்டு, நன்றி சொல்லி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக் கோரிக்கைகளை தங்களிடம் கொடுத்துவிடுகிறேன். அவற்றை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தொகுதிக் கோரிக்கைகள்:

மயிலாடுதுறையின் சுற்று வட்டச்சாலைப் பணிகளை விரைவாகத் துவங்க வேண்டும். மேலும், மாப்படுகை இரயில்வே கிராஸிங்கில் மேம்பாலம் ROB கட்டும் பணியினை விரைவாகத் துவங்க வேண்டும்.

மயிலாடுதுறை–மணல்மேடு–காட்டுமன்னார்குடி வரை உள்ள சாலையினை அகலப்படுத்தி, நேர்படுத்தி மாநில நெடுஞ்சாலையாக உருவாக்கத் திட்டமிட வேண்டும். மேலும், சாலையில் நீடூர் அருகே உள்ள இரயில்வே கடவினைக் கடக்க மேம்பாலம் (ROB) அமைக்கும் பணியை விரைவுபடுத்த வேண்டும்.

மயிலாடுதுறையில் மியூசியம் போல் அருங்காட்சியகம் அமைக்க வேண்டும்.

மயிலாடுதுறை நகராட்சியில் பழுதடைந்துள்ள பாதாளச்சாக்கடைப் பணிகளைச் சீரமைப்பதற்கான சிறப்பு நிதியை அளிக்க வேண்டும். குத்தாலம் மற்றும் மணல்மேடு பேரூராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை செய்ய BIO MINING திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும்.

மயிலாடுதுறை நகராட்சி, கிட்டப்பா மேல்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு சிறப்பு நிதி அளிக்க வேண்டும்.

மணல்மேடு-முட்டம் இடையே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட உயர்மட்டப் பாலத்திற்கான அணுகுசாலைக்கு நிலம் கையகப்படுத்தும் பணியை விரைந்து செய்து முடித்து சாலை அமைக்க வேண்டும்.

வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் தரம் உயர்த்தப்பட திட்ட மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கு நிதி ஒதுக்கித் தர வேண்டும். மணல்மேடு பஞ்சாலையில் ஜவுளிப் பூங்கா அமைக்க வேண்டும்.

மயிலாடுதுறை மாவட்டத்திற்கு, மாவட்ட தீயணைப்பு அலுவலர் நியமிக்கப்பட வேண்டும். மேலும், தீயணைப்பு நிலையம் கட்ட நிதி ஒதுக்கப்பட்டும் இடம் இல்லாததால் கட்டப்படவில்லை தற்போது அதற்கான மாற்று இடத்திற்கான கருத்துரு மாவட்ட ஆட்சியரிடத்தில் வழங்கப்பட்டுள்ளது. அதில் மாவட்ட தீயணைப்பு அலுவலருக்கான இடத்தையும் சேர்த்து

கட்ட அரசு ஆவன செய்ய வேண்டும். மயிலாடுதுறை தீயணைப்பு நிலையத்திற்கு புதிய தீயணைப்பு வாகனம் வழங்க வேண்டும். மேலும், மணல்மேடு, குத்தாலம் தீயணைப்பு வீரர்களுக்கு குவாட்டர்ஸ் கட்ட வேண்டும்.

புதிய மாவட்டம் என்ற அடிப்படையில், காவல் துறை AR பயிற்சி மையம், நகரத்திற்கு தனி காவல் நிலையம், கிராமங்களை இணைத்து தாலுகா காவல் நிலையம் உருவாக்கப்பட வேண்டும்.

1956-ல் துவங்கப்பட்ட காளி ஆரம்ப சுகாதார நிலையத்தின் இடத்தினை மேற்படி PHC-க்கே வழங்கி அங்கு புதிய கட்டடம் கட்டப்பட வேண்டும்.

அரசு பெரியார் தலைமை மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவிற்கு செவிலியர் மற்றும் பணியாளர் நியமிக்கப்பட வேண்டும்.

மருத்துவக் கல்லூரி அமைத்துத் தருவதற்கும், NPKRR சர்க்கரை ஆலையை மீண்டும் துவங்கி செயல்படுத்துவதற்கும், வட்டாட்சியர் அலுவலகம் புதியதாகக் கட்டித் தருவதற்கும், கோட்டாட்சியர் அலுவலகம் புதியதாகக் கட்டித் தருவதற்கும், புதிய மாவட்ட நூலகம் கட்டித் தருவதற்கும், புதிய நூலகக் கட்டடம் கட்டித் தருவதற்கும், மணல்மேடு கிளை நூலகத்திற்கு புதிய கட்டடம் கட்டித் தருவதற்கும், கிட்டப்பா பள்ளி வளாகத்தில் மாவட்ட விளையாட்டு மைதானம் அமைத்துத் தருவதற்கும், புதிய நீதிமன்றங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டித் தருவதற்கும், மாவட்ட சிறைச்சாலை மற்றும் பெண்கள் சிறைச்சாலை கட்டித் தருவதற்கும், பட்டமங்கலம் பகுதியில் புதிய PHC ஒன்று அமைப்பதற்கும், கால்நடை மருத்துவமனையை மாவட்ட அளவிலான மருத்துவமனையாகத் தரமுயர்த்தித் தருவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. A.G. வெங்கடாசலம் அவர்கள்.

***திரு. A.G. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுய மரியாதைச் சுடர் நூற்றாண்டு கண்ட வைக்கம் வீரர் தந்தை பெரியார் அவர்களை வணங்குகிறேன். காஞ்சி தலைமகன் பேரறிஞர் அண்ணா அவர்களையும் வணங்கி, பெரியார், அண்ணா கண்ட கனவுகளை தனது வாழ்நாள் கொள்கையாக்கி, தமிழர் தம் உரிமைகளையும், உணர்வுகளையும் பெயர் சொல்லும்

[திரு. A.G. வெங்கடாசலம்] [*2023 ஏப்ரல் 18*

சட்டங்களாய், துயர் நீக்கும் திட்டங்களாய் காலன் வரும் கடைசி கனம் வரை தன்மானம் முழுக்க இருள் சூழ்ந்தாலும், தமிழர்களைத் தன்மானத்துடன் வாழ வைத்து, வங்கக் கரையிலே ஓய்வெடுத்துக்கொண்டிருக்கும், ஓய்வறியா சூரியன் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) வணங்குகிறேன்.

சுயமரியாதையில் தந்தை பெரியாராய், மாநில உரிமையில் பேரறிஞர் அண்ணாவாய், மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் முத்தமிழறிஞர் கலைஞராய், மூவரின் ஒட்டுமொத்த எண்ணங்களின் உணர்வாய், உருவமாய் கொண்டு, இந்தியத் திருநாட்டின் முதலமைச்சருக்கெல்லாம் முதலமைச்சர், மாநிலத்தின் உரிமைக்குக் குரல் கொடுப்பதில் இந்தத் தேசத்திலேயே முன்னோடி முதல்வர், திராவிட மாடலின் முதல்வர், மக்களின் முதல்வர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் நமது தளபதி அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கலைஞரின் பேரன் என்றாலும், கடைக்கோடி தொண்டனோடு கைகோர்த்து நிற்கும் எளியவர், இயக்கத்தின் எளிய போர் வாள், புறம் பேசுவதைக்கூட பயந்து கொஞ்சம், புறம் தள்ளி நின்று, பேசும் எங்களின் இளைய சூரியன், மக்களின் இதய சூரியன் (மேசையைத் தட்டும் ஒலி) சின்னவர் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அவை முன்னவர், எங்கள் பொதுச் செயலாளர் மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களை வணங்குகிறேன். மக்கள் கோரிக்கையானாலும் சரி, கழகப் பணியானாலும் சரி, இப்படித்தான் இருக்க வேண்டும் எனத் திட்டமிட்டு செய்து முடிக்கும் எங்கள் ஈரோடு மாவட்டத்தின் குரலாய் ஒலிக்கும் மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களை வணங்குகிறேன். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் மானியக் கோரிக்கையினை இந்த அவையில் சமர்ப்பித்துள்ள மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

திராவிட மாடல் ஆட்சியின் தூண்களாய், மாண்புமிகு முதல்வர் அவர்களின் படைத் தளபதிகளாய் விளங்கும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களை வணங்குகிறேன். இச்சபையின் நடுநிலை தவறாத சபையின் நாயகர் மாண்புமிகு பேரவைத் தலைவர்

2023 ஏப்ரல் 18] [திரு. A.G. வெங்கடாசலம்]

அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களையும், எங்களின் அரசுக் கொறடா அவர்களையும் வணங்குகிறேன். மேலும் இம்மாமன்றத்தின் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களையும் வணங்கி, என் வெற்றிக்குப் பாடுபட்ட தி.மு. கழகத்தினருக்கும், தோழமைக் கட்சியினருக்கும் நன்றி தெரிவித்து வணங்குகிறேன். மேலும், என்னை இம்மாமன்றத்தில் தேர்வு செய்து, அந்தியூர் சட்டமன்றத் தொகுதி மக்களின் குரலாய் ஒலித்திட வாய்ப்பினை வழங்கிய அந்தியூர் சட்டமன்றத் தொகுதி பொதுமக்களை வணங்கி, நன்றியினைத் தெரிவித்து, என் உரையைத் தொடங்குகின்றேன்.

திராவிட மாடல் ஆட்சியின் முத்தான திட்டங்களான பெண்களுக்கு கட்டணமில்லா பேருந்து, பள்ளிக் குழந்தைகளுக்கு காலைச் சிற்றுண்டி, குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை, உயர் கல்வி பயிலும் அரசுக் கல்லூரி மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்டம்மூலம் மாதம் ஆயிரம் ரூபாய் வழங்குதல் மற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு என விளிம்புநிலை மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்தான் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் ஒரே பாதுகாவலர் என்பதை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் சார்பாக இந்தச் சபையில் பெருமையுடன் கூறிக்கொள்கிறேன்.

ஒரு கால் மட்டும் பாதிக்கப்பட்டிருக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கு Scooty வழங்கும் திட்டம் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு பணம் செலுத்த முடியாத மாற்றுத் திறனாளிகளுக்கு வட்டியில்லாக் கடன் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களைத் தந்து மாற்றுத் திறனாளிகளுடைய வாழ்வாதாரத்தைக் காத்திடும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மாற்றுத் திறனாளிகளின் சார்பில் நன்றியை அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன். அதேபோல் மாற்றுத் திறனாளிகளுக்கு பட்டா வழங்கிடும் நடவடிக்கையில் காலதாமதமின்றி தங்களுக்கு முன்னுரிமையின் அடிப்படையில் பட்டா வழங்கிட வேண்டும் என்பது மாற்றுத் திறனாளிகளின் கோரிக்கையாகும். ஆகவே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னுரிமை அடிப்படையில் மாற்றுத் திறனாளிகளுக்கு பட்டா வழங்கிட ஆவன செய்திட வேண்டுமென மாற்றுத் திறனாளிகளின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. A.G. வெங்கடாசலம்] [2023 ஏப்ரல் 18
இரவு 7-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் சட்டமன்றத் தொகுதியின் இருபுறங்களிலும் கிழக்கே 20 கிலோ மீட்டர் தொலைவில் காவிரி ஆறும், மேற்கே 10 கிலோ மீட்டர் தொலைவில் பவானி ஆறும் ஓடினாலும், இடைப்பட்ட அந்தியூர் தொகுதி, மானாவாரி பூமியாகத்தான் உள்ளது. மேலும், அந்தியூர் சுற்றுவட்டார விவசாயிகள் வறட்சிக் காலத்தில் தரிசு பூமியை வைத்துக்கொண்டு, கவலையோடு, 'என்று தீரும் நம் கஷ்டம்' என்று எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். எனவே, பவானி ஆற்றின் உபரி நீரை pumping முறையில் அந்தியூர், அம்மாப்பேட்டை ஒன்றியங்களிலுள்ள ஏரிகளில் நிரப்பிடும் திட்டம் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்டது. மேலும், இத்திட்டத்தினை விரைந்து நிறைவேற்றிட, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் முத்தான பத்து திட்டங்களில் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு, திட்ட அறிக்கை தயார் செய்திட சுமார் ரூ.9.80 கோடி நிதி கோரி அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன. எனவே, பவானி ஆற்றின் உபரி நீரை pumping முறையில் ஏரியில் நிரப்பும் இத்திட்டம் என்று வரும் எனக் காத்திருக்கும் விவசாயிகளின் நீண்டகாலக் கோரிக்கையினை நிறைவேற்றித் தந்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர், அம்மாப்பேட்டை ஒன்றியங்கள் மற்றும் மேட்டூர் தொகுதி, பவானி தொகுதி விவசாயிகளின் நீண்டகாலக் கோரிக்கையான தோணிமடுவு பள்ளத்தில் வரும் காட்டாற்று நீர் மற்றும் காவிரி உபரி நீரையும் இணைத்து மேட்டூர், அந்தியூர் மற்றும் பவானி தொகுதிகளிலுள்ள ஏரிகளில் நீரை நிரப்பி மானாவாரி பூமிகளுக்குப் பாசன வசதி செய்திடும் திட்டத்திற்கு கடந்த நிதியாண்டில் ஆய்வறிக்கை தயார் செய்ய சட்டமன்றத்தில் ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்ட நிலையில், முதற்கட்ட ஆய்விற்கு வனத் துறையின் அனுமதி கோரப்பட்டுள்ளது. எனவே, மூன்று தொகுதி விவசாயிகளின் நீண்டகாலக் கோரிக்கையான இத்திட்டத்தை நிறைவேற்றிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் சட்டமன்றத் தொகுதி, T.N. பாளையம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வேதபாறை ஓடையில் ஒவ்வோர் ஆண்டும் வரும் காட்டாற்று

2023 ஏப்ரல் 18] [திரு. A.G. வெங்கடாசலம்]

வெள்ளம் பெருமளவில் வீணாகிக் கடலில் கலப்பதால், வேதபாறை அணையின் குறுக்கே அணையைக் கட்டி, வீணாகும் நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்திட திட்டமிடப்பட்டு, பொதுப் பணித் துறையால் கடந்த ஆட்சிக் காலத்தில் சுற்றுச்சூழல் துறையின் Empowered Committee அனுமதி பெறாமல் 2018 ஆம் ஆண்டில் ரூ.64 கோடிக்கு tender விடப்பட்டது. ஆனால், Empowered Committee அனுமதி வழங்காததால், அணையைக் கட்ட முடியவில்லை. இதனால், அப்பகுதி விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். இந்நிலையில் மீண்டும் Empowered Committee மறு ஆய்வு செய்திட நடவடிக்கை மேற்கொண்டு, T.N. பாளையம் விவசாயிகளின் கனவுத் திட்டமான வேதபாறை அணைத் திட்டத்தினை நிறைவேற்றித் தந்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோணிமடுவுத் திட்டம், பவானி ஆற்றின் உபரி நீரை pumping செய்யும் திட்டம், வேதபாறை அணைத் திட்டம் ஆகிய மூன்று திட்டங்களும் அந்தியூர் சட்டமன்றத் தொகுதியில் வசிக்கும் மூன்று தலைமுறை விவசாயிகளின் கனவுத் திட்டங்களாகும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எப்படியும் இத்திட்டங்களை நிறைவேற்றித் தந்துவிடுவார் என சட்டமன்றத் தொகுதி விவசாயிகள் முழு நம்பிக்கையோடு உள்ளனர். எனவே, இம்மூன்று திட்டங்களையும் நிறைவேற்றித் தந்திட வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் சட்டமன்றத் தொகுதியின் அந்தியூர், அத்தாணி, பி. மேட்டுப்பாளையம், கூகளூர் மற்றும் வாணிப்புத்தூர் ஆகிய ஐந்து பேரூராட்சிகளில் தற்போதுள்ள குடியிருப்புகளில் மூன்றில் ஒரு பங்கு மக்களுக்கு குடிநீர்த் தட்டுப்பாடு உள்ளதால் புதிய குடிநீர் இணைப்பு வழங்க வேண்டியுள்ளது. மேலும், புதிய குடிநீர் திட்டங்களைச் செயல்படுத்திட விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும் பணிகள் நடைபெற்றுவரும் நிலையில், AMRUT திட்டத்தின்கீழ் ஐந்து பேரூராட்சிகளுக்குத் தனித்தனியாகக் குடிநீர்த் திட்டத்தினை நிறைவேற்றிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. A.G. வெங்கடாசலம்] [2023 ஏப்ரல் 18

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டத்தின் பர்கூர், தாளவாடி மலைப் பகுதிகளில் வாழும் மலையாளி இன மக்கள் பொதுப் பிரிவினராகவே கருதப்படுகின்றனர். அவர்களுக்குப் பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் வழங்கப்படுவதில்லை. ஆனால், அவர்களுடைய உறவினர்கள் அருகிலுள்ள சேலம் உட்பட பிற மாவட்டங்களில் பழங்குடியினராக அங்கீகரிக்கப்பட்டு, சாதிச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

மேலும், ஈரோடு மாவட்ட மலையாளி இன மக்களை பழங்குடியினராக்கிட முன்மொழிவு ஒன்றிய அரசுக்கு கடந்த 2019 ஆம் ஆண்டே அனுப்பி வைக்கப்பட்டும், இன்றுவரையில் நிலுவையில் உள்ளது. ஆகவே, ஈரோடு மாவட்டத்தின் பர்கூர் மற்றும் தாளவாடி மலையாளி இன மக்களைப் பழங்குடியினராக அறிவித்திட நடவடிக்கையினை துரிதப்படுத்தி, சான்றிதழ் வழங்கிட வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொரோனா காலத்திற்குப் பிறகு, இந்த ஆண்டு நடைபெற்ற TNPSC Group IV தேர்வுக்கு முதலில் 7,000 காலியிடங்கள் அறிவிக்கப்பட்டு, பிறகு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 10,117 இடங்களாக அதிகரித்து அறிவிக்கப்பட்ட நிலையில், இன்னும் கூடுதலான பணியிடங்களை நிரப்பிட வேண்டுமென்பது அந்தியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இளைஞர்கள், கல்லூரி மாணவ, மாணவிகள் மற்றும் போட்டித் தேர்வாளர்கள் என அனைவரின் பொதுவான கோரிக்கையாக உள்ளது. ஆகவே, தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் TNPSC Group IV பணியிடங்களை அதிகரித்து, அறிவித்திட வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் தொகுதியில் பிரம்மதேசம், சின்னதம்பி பாளையம் மற்றும் நகலூர் உள்ளிட்ட பல்வேறு ஊராட்சிகளில் செங்கல் சூளைத் தொழிலும், அந்தியூர் மண்பாண்டத் தொழிலும் குடிசைத் தொழில்களாக பெருமளவில் நடைபெற்று வருகின்றன. இந்தத் தொழிலாளர்கள் சிரமமின்றி மண் எடுத்துக்கொள்ள, 'கனிம வளத் துறையின் உதவி இயக்குநர் அவர்கள், மண் எடுக்க அனுமதி வழங்குவார்' என்று மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே அறிவித்தமைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

அவர்களுக்கும், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும், அந்தியூர் தொகுதி மக்களின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மண் எடுக்க அனுமதி வழங்குவதில், காலதாமதமின்றி விரைவாகவும், அதே நேரத்தில் எளிதாகவும் மண் எடுக்க அனுமதி வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அந்தியூர் செங்கல் மற்றும் மண்பாண்டத் தொழிலாளர்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இரவு 7–10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் அரசு மருத்துவமனை 2016 ஆம் ஆண்டு தாலுகா மருத்துவமனையாக அறிவிக்கப்பட்டாலும், இன்றுவரை, தரமுயர்த்தப்படாமல் உள்ளது. இங்குள்ள 4 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பர்கூர் மலைப் பகுதிகளிலிருந்து வரும் அவசர சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள், கர்ப்பிணிப் பெண்கள் உட்பட அனைவரும் பயன்பெறும்வகையில், இங்கு Scan வசதி, அவசர சிகிச்சைப் பிரிவு என தேவையான எந்தக் கட்டமைப்பு வசதிகளும் இல்லை. ஆகவே, அவர்கள் சுமார் 40 கி.மீ. தொலைவிலுள்ள ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அனுப்பப்படுவதால், ஈரோட்டிற்குச் செல்லும் வழியிலேயே பல நோயாளிகள் இறந்துவிடுகின்றனர். ஆகவே, அந்தியூர் அரசு பொது மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவு, Scan வசதி போன்ற உரிய சிகிச்சைகளைப் பெறும்வகையில் போதிய வசதிகள் செய்துதர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லுங்கள். 10 நிமிடங்கள் ஆகிவிட்டன; கடைசிப் பக்கத்திற்கு வாருங்கள்.

திரு. A.G. வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் தொகுதி, பர்கூர் ஊராட்சியிலுள்ள லிங்காயத்து சமுதாயத்தினர் பெருமளவில் வழிபடும் கர்நாடக மாநிலத்தின் மாதேஸ்வரன் சுவாமியானது, மாதேஸ்வரன் மலையிலிருந்து துருசணாம்பாளையத்தில் கால்நடைத் துறைக்குச் சொந்தமான மந்தைப் புறம்போக்கு இடத்திற்கு தலைமுறை தலைமுறையாக வருகிறது. அதேநேரத்தில், பர்கூர் மலைக் கிராமத்தில் உள்ள 30 குக்கிராமங்களில் உள்ள திருக்கோயில்களில் உள்ள சுவாமிகளையும் வைத்து அந்த இடத்தில் வழிபட்டு வருகின்றனர். மேலும் அதே

இடத்தில் மற்ற திருவிழாக்களும் நடைபெற்று வருகின்றன. எனவே, கால்நடை துறைக்குச் சொந்தமான அந்த இடத்திற்குப் பதில் இரு மடங்கு வருவாய்த் துறை நிலத்தை அளித்து, வருவாய்த் துறையின் அனாதீனமாக மாற்றி எவ்விதத் தடையுமின்றி பொதுமக்கள் தொடர்ந்து நிம்மதியாக வழிபட ஏதுவாக அந்த இடத்தை வழங்கி அனுமதிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர்–அத்தாணி–கூகலூர், P. மேட்டுப்பாளையம் மற்றும் வாணிப்புத்தூர் பேரூராட்சிகளில் கான்கிரீட் சாலைகள், தார்ச் சாலைகள், வடிகால் வசதிகள், மின் விளக்கு வசதிகள் போன்ற அடிப்படை வசதிகள் செய்துதருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உங்கள் தொகுதிக் கோரிக்கைகளைக் கொடுங்கள். நீங்கள் பேசியதாகப் பதிவு செய்துகொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

திரு. A.G. வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரையை முடித்துவிடுகிறேன். என் தொகுதி மலைப் பகுதி, கர்நாடக மாநிலத்தை ஒட்டிய பகுதி. மக்கள் மிகுந்த சிரமப்படுகிறார்கள். 5 நிமிடங்கள் வாய்ப்பு கொடுங்கள், உரையை முடித்துவிடுகிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கொடுத்த கான்கிரீட் வீடுகளானது, மிகவும் மோசமாக இடிந்துவிழும் நிலையில் உள்ளன. அவ்வீடுகளில் அவர்கள் உறங்கவும் இயலாத சூழ்நிலையில், அவர்கள் வெளியே சாலையில் உறங்கும் சூழ்நிலையில், மக்கள் வசித்து வருகிறார்கள்; அந்த வீடுகளைக் கணக்கெடுத்திருக்கிறார்கள். தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் இவர்களுக்கான ஒரு சிறப்புத் திட்டத்தை அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சாலை மேம்பாட்டுத் திட்டம் என அறிவித்து, இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் நல்ல முறையில் சாலைகள் அமைப்பதற்கு எவ்வாறு உத்தரவு வழங்கப்பட்டதோ, அந்தவகையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, மிகவும் பின்தங்கிய மக்களுக்கு, அவர்கள் வசிக்கும் வீடுகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் அவர்களுக்கு வீடுகளைக் கட்டித்தர வேண்டும். அன்று நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எப்படி வீடுகளைக் கட்டிக் கொடுத்தாரோ

2023 ஏப்ரல் 18] [திரு. A.G. வெங்கடாசலம்]

அதேபோன்று, அந்த மக்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் புதியதாக வீடுகளைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரையை முடித்துவிடுகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் தொகுதியிலுள்ள காலனி பக்கம் சென்றாலே எங்களுக்கு ஒரு 'சமுதாயக் கூடம் கட்டிக் கொடுங்கள்', 'சமுதாயக் கூடம் கட்டிக் கொடுங்கள்', என்ற கோரிக்கைதான் மிகப் பெரிய அளவில் இருந்துகொண்டிருக்கிறது. நாங்கள் எங்கு சென்றுவிட்டு வந்தாலும் 'என்ன ஆயிற்று எங்கள் சமுதாயக் கூடம்' என்று கேட்கும் நிலைதான் உள்ளது. நான் எனது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒதுக்கியதில் 1 சமுதாயக் கூடத்திற்கு ரூ.43.00 இலட்சம் என்ற விகிதத்தில், 5 சமுதாயக் கூடங்களுக்கு சுமார் 2 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவு செய்து தற்போது கட்டிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, ஒட்டுமொத்த தாழ்த்தப்பட்ட மக்களின் கோரிக்கையினை ஏற்று, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தாயுள்ளத்தோடு, சமுதாயக் கூடங்கள் எங்களுக்கு எப்போது கிடைக்கும் என்ற ஏக்கத்துடன் இருக்கின்ற, அந்த வறுமையில் வாடுகின்ற மக்களுக்கு சமுதாயக் கூடங்களைக் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பிரச்சினை அனைத்து உறுப்பினர்களின் தொகுதிகளிலும் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, ஒட்டுமொத்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கான அடிப்படை வசதிகளுடன்கூடிய வீடுகள், சமுதாயக் கூடங்கள் போன்றவற்றை அம்மக்களுக்குச் செய்து கொடுத்தால், அவர்கள் காலம் முழுவதும், 'நீங்கள்தான் தெய்வம், நீங்கள் எங்கள் மாண்புமிகு முதல்வர் மட்டுமல்ல, நீங்கள்தான் எங்கள் குடும்பத் தலைவர் என்ற உணர்வோடு இருப்பார்கள். நம்மோடு பின்னிப் பிணைந்துள்ள அந்த ஆதி திராவிட பழங்குடி இன மக்களுக்கு அடிப்படை வசதிகளுடன் வீடுகள், சமுதாயக் கூடங்கள் போன்றவற்றை கட்டிக் கொடுத்தால், வாழ்க்கையில் நீங்கள் செய்கின்ற பணிகள் மிகப் பெரிய அளவில் நன்மதிப்பைப் பெற்றுக் கொடுக்கும். அந்த மக்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மிகப் பெரிய அளவில், நல்ல உயரிய இடத்தில் வைத்திருக்கிறார்கள். அம்மக்களுக்கு சமுதாயக் கூடங்களையும் வீடுகளையும் கட்டித் தர வேண்டும் என்று அந்தியூர் சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) முடித்துவிடுகிறேன்.

அதேபோன்று எங்கள் அந்தியூர் சட்டமன்றத் தொகுதியில். . . (குறுக்கீடுகள்) முடித்துவிட்டேன், கடைசி பத்திக்கு வந்துவிட்டேன். அந்தியூர் பகுதியில் புதிதாக பட்டா வேண்டுமென்றும் பட்டா மாறுதல் செய்யப்பட வேண்டுமென்றும் அதிக அளவிலான கோரிக்கைகள் உள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் அதை நான் பதிவு செய்துகொள்கிறேன்.*

திரு. A.G. வெங்கடாசலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம், முடித்துவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் உரையாற்றியது போதும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி அவர்கள். (குறுக்கீடுகள்) நன்றி சொல்லி முடியுங்கள்.*

இரவு 7–15

திரு. A.G. வெங்கடாசலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீதமுள்ள எனது தொகுதிக் கோரிக்கைகளை தங்களிடம் வழங்கிவிடுகிறேன். அதை நான் இந்த அவையிலே படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் வரிசையிலே தெற்கிலிருந்து உதித்திருக்கும் மாண்புமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்னும் இந்தச் சூரியன் சமத்துவம், சமூக நீதி, எல்லோருக்கும் எல்லாமும் என்ற தனது பேரொளியை தேசம் முழுக்க ஒளிரச் செய்து, இந்தத் தேசத்தின் இருளை நீக்கத் தொடங்கிவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) தேசத்தின் முதல்வர்களெல்லாம் போற்றும் பேரொளி வீசும் திராவிட பேரரசர் அவர்களுக்கு இம்மாமன்றத்திலே எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி மலர்களை அவர்களுடைய பொற்பாதங்களில் சமர்ப்பித்து, எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

தொகுதிக் கோரிக்கைகள்:

அந்தியூர் தொகுதி, அம்மாப்பேட்டை ஒன்றியங்கள் மற்றும் மேட்டூர், பவானி தொகுதியில், தோணிமடுவு பள்ளத்தில் வரும் காட்டாற்று நீர் மற்றும் காவிரி உபரி நீரையும் இணைத்து

2023 ஏப்ரல் 18] [திரு. A.G. வெங்கடாசலம்]

மேட்டூர், அந்தியூர் மற்றும் பவானி தொகுதிகளில் உள்ள ஏரிகளில் நீர் நிரப்பி மானாவாரி பூமிகளுக்கும் பாசன வசதி செய்திடும் திட்டத்தை நிறைவேற்றிட வேண்டும். அந்தியூர் தொகுதி, அத்தாணி, P.மேட்டுப்பாளையம், கூகலூர் மற்றும் வாணிப்புத்தூர் ஆகிய 5 பேரூராட்சிகளில் தனித்தனியான குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றிட வேண்டும். அந்தியூர் தொகுதி, பண்டிபோயர்–கொண்டா ரெட்டி இன மக்களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்கிட வேண்டும்.

அந்தியூர் தொகுதி, பவானி ஆற்றின் கரையில் அம்மாபாளையம்–கருவல்வாடிப்புதூர் இடையே உயர்மட்ட பாலத்தை ஊரக வளர்ச்சித் துறைமூலம் அமைத்திட வேண்டும். அந்தியூர் தொகுதி, நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறைமூலம் கணக்கெடுக்கப்பட்ட சேதமடைந்துள்ள வீடுகளுக்கு தனி வீடுகள் கட்டித் தர வேண்டும். இப்பகுதியில் உள்ள பழங்குடியின மக்களுக்கு சாக்கடை வசதி, குடிநீர் வசதி மற்றும் மின்விளக்கு வசதி போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும். இப்பகுதிக்கு சமுதாயக் கூடங்கள் அமைத்துத் தர வேண்டும். அந்தியூர் தொகுதி, பர்கூர் மலைக் கிராம ஊராட்சிக்கு அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டும். அந்தியூர் தொகுதி, அம்மாப்பேட்டை ஒன்றியம், டி.என்.பாளையம் மற்றும் கோபி போன்ற பகுதிகளில் குடிநீர் திட்டத்தினைச் செயல்படுத்த வேண்டும்.

அந்தியூர் தொகுதி, டி.என்.பாளையம் ஊராட்சி ஒன்றியம், கள்ளிப்பட்டியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டடங்கள் கட்டி, 30 படுக்கைகளுடன் விரிவுபடுத்தி, மருத்துவர்கள் குடியிருப்பு மற்றும் விஷக்கடி பிரிவுடன் சேர்த்து புதிய மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரமுயர்த்திட வேண்டும். ஈரோடு மாவட்டம், தாளவாடி மற்றும் பர்கூர் ஆகிய மலைப் பகுதி ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்களுக்கு இக்கல்வியாண்டிலேயே மலைப்படி வழங்கிட வேண்டும். மேலும், தொகுப்பூதியத்தில் பணியாற்றிவரும் பகுதி நேர ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களைப் பணி நிரந்தரம் செய்திட வேண்டும்.

அந்தியூர் தொகுதியில் வசித்துவரும் மக்களுக்கு, பட்டா இல்லாத நிலங்களுக்கு பட்டா மற்றும் பட்டா மாறுதல் வழங்கிட வேண்டும். அந்தியூர் தொகுதி, அந்தியூர் வெற்றிலைக்கு புவிசார்

குறியீடு வழங்கிட வேண்டும். அந்தியூர் தொகுதியிலுள்ள பர்கூர் மலைவாழ் பழங்குடியின மாணவர்களுக்கு அரசு தொழிற்பயிற்சி மையம் தொடங்கிட வேண்டும்.

அந்தியூர் தொகுதி, அத்தாணி, கூகலூர், P.மேட்டுப்பாளையம் மற்றும் வாணிப்புத்தூர் பேரூராட்சிகளில் கான்கிரீட் சாலைகள், தார்ச் சாலைகள், வடிகால் வசதிகள், மின் விளக்கு வசதிகள் மயானத்திற்கு அடிப்படை வசதிகள், ஆழ்துளைக் கிணறுகள், குடிநீர் மேல்நிலைத் தொட்டிகள், அமைத்துத் தர வேண்டும். மேலும், தொகுப்பூதியத்தில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களை பணி நிரந்திரம் செய்திட வேண்டும்.

அந்தியூர் பேரூராட்சிப் பகுதியில் செல்லும் வரட்டுப்பள்ளம் நீரூட்டு கால்வாய்களில் சாக்கடைநீர் கலப்பதைத் தவிர்த்திட இருபுறமும் கான்கிரீட் லைனிங் செய்து சாக்கடை நீர் கலக்காமல் செய்திட வேண்டும். அந்தியூர் தொகுதி, பர்கூர் மலைப் பகுதிக்கு கால்வாய்களை அகலப்படுத்தி இரு புறமும் கான்கிரீட் லைனிங் செய்திட வேண்டும். அந்தியூர் தொகுதியில் வனக் கல்லூரி அமைத்துத் தர வேண்டும்.

அந்தியூர் தொகுதியில் 32 குக்கிராமங்களைக் கொண்ட பர்கூர் மலைக் கிராம ஊராட்சியை மேலும் 5 வருவாய் கிராமங்களாகப் பிரித்திட வேண்டும். அந்தியூர் தொகுதி, வாணிப்புத்தூர் மற்றும் அத்தாணி பேரூராட்சிகளில் மின் மயானம் அமைத்திட வேண்டும். அந்தியூர் பேரூராட்சிப் பகுதிக்கு பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைத்திட வேண்டும். அந்தியூர் தொகுதி, பர்கூர் மலைப் பகுதிக்கு புதைவடக் கம்பிமூலம் மின்சாரம் கொண்டு செல்லும் திட்டத்தை விரைந்து செயல்படுத்திட வேண்டும்.

அந்தியூர் தொகுதி, பர்கூர் தாமரைகரையில் புதிய துணை மின் நிலையம் அமைக்கும் பணியைத் தொடங்கிட வேண்டும். அந்தியூர் தொகுதி, அம்மாப்பேட்டை, கோபி மற்றும் டி.என். பாளையம் ஊராட்சி ஒன்றியங்களில் புதிய உயர்மட்டப் பாலங்கள், தார்ச் சாலைகள், வடிகால் வசதிகள், மயானத்திற்கு அடிப்படை வசதிகள் ஆழ்குழாய்க் கிணறுகள், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், மின் விளக்கு வசதிகள், சமுதாயக் கூடங்கள் ஆகிய பணிகளை நிறைவேற்றித் தர வேண்டும்.

ஈரோடு மாவட்டம், அந்தியூர் பத்ரகாளியம்மன் திருக்கோயிலில் ராஜகோபுரம் தென்புறம், திருக்கோயில் முன்புறம் கொடிமரம்

உள்ள பகுதிக்கு தூக்குபதி கல்மண்டபம் அமைத்துத் தர வேண்டும். அந்தியூர் பத்ரகாளியம்மன் திருக்கோயில் கிழக்குப்புறம் பக்தர்கள், வீரமக்கள் தங்கும் இடத்தில் கல்தூண் மண்டபம் கட்டித் தர வேண்டும்.

கோயில் தேர் பாதுகாப்பின்றி நிற்பதனால் தேர் பாதுகாப்பு கான்கிரீட் மண்டபம் அமைத்திட வேண்டும். ராஜ கோபுரத்திற்கு முன்புறம் திருவிழா நிகழ்ச்சி நடைபெறும் இடத்திற்கு கல்தூண் மண்டபம் உள்ளிட்ட திருப்பணிகள் செய்து தர வேண்டும். மேலும் தேவர்மலை பந்தேஸ்வரர் கோயில், பெருந்தலையூர் சிவன் கோயில் ஆகிய கோயில்களில் ராஜகோபுரம் மற்றும் கல் மண்டபம் அமைத்துத் தர வேண்டும்.

அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்தில் பர்கூர் ஊராட்சியில் அமைந்துள்ள குட்டையூர், வேலாம்பட்டி, மட்டிமரத்தள்ளி கோவில், நத்தம் பெரிய செங்குளம் வழியாக குட்டையூர் மாக்கம்பாளையம் வரை உள்ள வனச் சாலையையும், மேலும், பர்கூர் மெயின் சாலை முதல் வேலாம்பட்டி மட்டிமரத்தள்ளி வரை குட்டையூர் வரையிலான சாலையையும் புதிய சாலையாக அமைத்திட வேண்டும். அந்தியூர்–தாமரைகரை மலைப் பகுதி சாலையில் நிலச்சரிவு ஏற்படுவதால் மடம்–முரளி சாலையை அமைத்திட வேண்டும்.

அந்தியூர் தொகுதிக்குட்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தித் தர வேண்டும். அந்தியூர் தொகுதியில் பிரம்மதேசம் மற்றும் வேம்பத்தி வருவாய்க் கிராமங்களை இரு வருவாய்க் கிராமங்களாகப் பிரித்திட வேண்டும்.

அந்தியூர் தொகுதி, பர்கூர் மலையிலுள்ள சோளகனை சாலை, சுண்டப்பூர் சாலை, தாளகரை சாலை, தம்முரெட்டி சாலை மற்றும் ஒன்னகரை சாலை போன்ற பகுதிகளில் ஊராட்சி ஒன்றியத்தின்மூலம் சாலை அமைத்திட வேண்டும். அந்தியூர் திருத்தலங்களுக்கு, கோவையிலிருந்து திருப்பதி செல்லும் பேருந்தை, சத்தி–டி.என்.பாளையம்–அந்தியூர் வழியாக நீட்டித்து இயக்கிட வேண்டும். அந்தியூர் தொகுதி, பர்கூர் மலைக் கிராம ஊராட்சிக்கு மினி பேருந்துகள் இயக்கிட வேண்டும்.

அந்தியூர் தொகுதி, அத்தாணி பேரூராட்சியில் பழுதடைந்த நிலையில் உள்ள பேரூராட்சி அலுவலகக் கட்டடத்திற்குப் பதில் புதிய அலுவலகக் கட்டடமும், வாரச் சந்தையை வணிக

வளாகங்களுடன் மேம்படுத்தப்பட்ட வாரச் சந்தையாக உருவாக்க வேண்டும். அந்தியூர் தொகுதி, அந்தியூர் பெரிய ஏரி, P.மேட்டுப்பாளையம் ஆனந்த சாகரம் ஏரி, கெட்டிசமுத்திரம் ஏரி, டி.என்.பாளையத்தின் சஞ்சீவிராயன் குளம் மற்றும் தாமரைகரை ஏரி, ஈரெட்டி நீர்வீழ்ச்சி ஆகியவற்றை சுற்றுலாத் தலமாக மாற்றிட வேண்டும்.

அந்தியூர் தொகுதி, தேர் உலாவரும் வீதிகளில் புதைவடக் கம்பி அமைக்க வேண்டும். நெடுஞ்சாலைத் துறையில் அந்தியூர் உதவிக் கோட்டத்தினை தனி கோட்டமாக அறிவித்திட வேண்டும். அந்தியூர் வரட்டுப்பள்ளம் அணையினை பொது மக்கள் பார்த்திட அனுமதி வழங்கிட வேண்டும். மேலும், அணையின் கீழ்ப் பகுதியில் பூங்கா, படகுக் குழாம் அமைத்து சுற்றுலாத் தலமாக மேம்படுத்திட வேண்டும்.

பர்கூர் மலைக் கிராம ஊராட்சியில் 30 குக்கிராமங்களுக்கும், திறந்தவெளி கிணறுகள் அமைத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டி குடிநீர் விஸ்தரிப்பு செய்து தர வேண்டும். அந்தியூர், அத்தாணி பிரிவு முதல் அந்தியூர் வழியாக அம்மாப்பேட்டை வரை நான்கு வழிச்சாலை அமைத்திட வேண்டும்.

பர்கூர் மலைக் கிராம விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் மும்முனை மின்சாரம் மற்றும் பட்டா வழங்கிட வேண்டும். டி.என். பாளையம் கள்ளிப்பட்டி முத்தமிழறிஞர் கலைஞர் சிலை பின்புறம் பாலத்திற்கு அருகில் படித்துறை அமைத்திட வேண்டும்.

அந்தியூர் தொகுதி, தடுப்பணையைச் சீரமைத்து புதிய தடுப்பணை கட்ட வேண்டும். அந்தியூர் வரட்டுப்பள்ளம் அணையின் இருபுறமும் கான்கிரீட் லைனிங் செய்திட வேண்டும். ஈரோடு மாவட்டம், அந்தியூர் தொகுதி, அம்மாபாளையம்–கருவல்வாடிப்புதூர் இடையே பவானி ஆற்றின்மீது உயர்மட்டப் பாலம் அமைக்கும் திட்டத்தினை நிறைவேற்றிட வேண்டும். அந்தியூரில் உள்ள செல்லம்பாளையம்–பர்கூர் கொள்ளேகால் சாலையில் உயர்மட்டப் பாலம் கட்ட வேண்டும். அந்தியூர்–ஆதிரெட்டியூர் சாலையில் உயர்மட்டப் பாலம் கட்ட வேண்டும்

அந்தியூர் தொகுதி, டி.என்.பாளையம் ஊராட்சி ஒன்றியம் கொண்டையம்பாளையம் அருகில் சத்தி–அத்தாணி–பவானி

சாலையில் அமைந்துள்ள தரைப்பாலத்திற்குப் பதிலாக புதிய உயர்மட்டப் பாலம் கட்ட வேண்டும். அந்தியூர் தொகுதி, சத்தி–அத்தாணி–பவானி சாலையில் பெருமாபாளையம் அருகில் குறுகிய பாலத்திற்குப் பதிலாக புதிய உயர்மட்டப் பாலமும், டி.என்.பாளையம் ஊராட்சி ஒன்றியம், பெருமுகை ஊராட்சி, வரப்பள்ளம் அருகில் சத்தி–அத்தாணி–பவானி சாலையில் விடுபட்டுள்ள இடத்தில் புதிய வடிகால் அமைத்திட வேண்டும். கோபி ஊராட்சி ஒன்றியம், சவுண்டப்பூர் ஊராட்சி, கணபதி பாளையத்தில் வடிகால் அமைக்க வேண்டும். அந்தியூர் முதல் பாலக்குட்டை சாலையில் வடிகால் வசதி அமைக்க வேண்டும்.

அந்தியூர்–அம்மாப்பேட்டை சாலையில், பள்ளிபாளையம் பகுதியில் சிறுபாலம் அமைத்து, சாலையை உயர்த்திட வேண்டும். அந்தியூர்–ஆதிரெட்டியூர் வழியாக வெள்ளித்திருப்பூர் முதல் தொட்டிக்கிணறு செல்லும் சாலையில் வடிகால் அமைத்திட வேண்டும். அந்தியூர் ஒன்றியம், முனியப்பம்பாளையம் முதல் கரட்டூர் செல்லும் சாலையில் உயர்மட்டப் பாலம் அமைக்க வேண்டும். அந்தியூர் ஊராட்சி ஒன்றியம், கெட்டிசமுத்திரம் முதல் கள்ளிமடைக்குட்டை வரை உள்ள சாலையில் உயர்மட்டப் பாலம் அமைக்க வேண்டும்.

அந்தியூர், மைக்கேல்பாளையம்–நஞ்சமடைக்குட்டை சாலையில் உயர்மட்டப் பாலம் அமைக்க வேண்டும். மேலும் தவிட்டுப்பாளையம், மலைக்கருப்புசாமி கோயில் சாலையில் உயர்மட்டப் பாலம் அமைக்க வேண்டும். அம்மாப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், வெள்ளித்திருப்பூர் தொட்டிக்கிணறு சாலையில் உயர்மட்டப் பாலம் அமைக்க வேண்டும். அந்தியூர் தொகுதி, அத்தாணி முதல் வாணிப்புத்தூர் வரையிலான சாலையை மூன்று வழிப் பாதையாக அகலப்படுத்த வேண்டும்.

அந்தியூர் தொகுதி, டி.என்.பாளையம் ஊராட்சி ஒன்றியம், கணக்கம்பாளையம் ஊராட்சி, எம்.ஜி.ஆர். நகரில் வடிகால் வசதி ஏற்படுத்திட வேண்டும். அந்தியூர் தொகுதி, மேவாணி–தாழைக்கொம்பு புதூர் சாலை மற்றும் கோபி–சவுண்டப்பூர் சாலையை இரு வழித்தடமாக அகலப்படுத்திட வேண்டும். மேவாணி–தாழைக்கொம்பு–புதூர் சாலைக்கு வடிகால் வசதி ஏற்படுத்திட வேண்டும். மேலும், கோபி ஊராட்சி ஒன்றியம், புதுக்கரைபுதூர்–வெள்ளங்காகோவில் சாலையை அகலப்படுத்தி வடிகால் வசதியினை அமைத்திட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி அவர்கள்.*

திரு. அ. பண்ணாரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். கோடையிலும் வற்றாத ஜீவ கங்கை, ஆடிக் காற்றுக்கும் அசைந்து கொடுக்காத அரண்மனை, தங்கத்தில் முகமெடுத்து, சந்தனத்தில் உடலெடுத்து வந்த சரித்திர நாயகன், சத்துணவு படைத்து பிஞ்சு உள்ளங்களில் நீக்கமற நிறைந்து நிற்கும் மனிதருள் மாணிக்கம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைப் போற்றி வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) 'எனக்கென்று தனிப்பட்ட எதிர்பார்ப்புகள் எதுவுமில்லை, நான் வாழ்வது இந்த இயக்கத்திற்காகத்தான், தமிழக மக்களுக்காகத்தான்' என ஒவ்வொரு நொடிப்பொழுதும் நம்முடைய இயக்கத்தைப் பற்றியும், தமிழ்நாட்டு மக்களைப் பற்றியும் நினைத்துப் போற்றிய பாரதி கண்ட புதுமைப் பெண், பூக்களுக்கும் புன்னகை கற்றுக் கொடுத்த பொன்மணி தாய், ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமை சாசனம், கல்வி தந்து, கணினி தந்து, காலணியும் தந்து பெண்ணினம் காத்திட்ட பெருந்தகை புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

"கருணை இருந்தால் வள்ளலாகலாம்,
கடமை இருந்தால் வீரனாகலாம்,
பொறுமை இருந்தால் மனிதனாகலாம்,
மூன்றும் இருந்தால் தலைவனாகலாம்"

இந்த மூன்றும் இருந்தால் தலைவன் ஆகலாம் என்ற பாடல் வரிகளுக்கேற்ப, அள்ள அள்ளக் குறையாத அன்பின் சின்னம், அறம் காத்த தலைவர், வாடிய பயிருக்கு வான் மழை போல, வாடிய முகத்தோடு வறுமையில் வாழும் கடைக்கோடி மக்களுக்கு எண்ணற்ற நலத் திட்டங்கள் தந்த ஏழை விவசாயிகளின் விடிவெள்ளி, உழைப்பால் உயர்ந்தவரும், புரட்சித் தலைவர் மற்றும் புரட்சித் தலைவி அம்மா ஆகியோரின் கொள்கை வழிகளில் உருவான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூன்றாம் தலைமுறை, எங்கள் பொதுச் செயலாளர் இ.பி.எஸ். ஐயா அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் மாவட்ட கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் சாதனைச் செம்மல், கோபிசெட்டிபாளையம் சட்டமன்ற உறுப்பினர் கே.ஏ.எஸ். ஐயா அவர்களையும்

வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்ற எதிர்க்கட்சிக் கொறடா அவர்களையும் வணங்குகிறேன்.

கல்வி என்பது மாணவர்களை எழுத வைப்பதோ அல்லது படிக்க வைப்பதோ அல்ல, மாறாக, படிக்கின்ற மாணவரைக் கேள்வி கேட்கவும், சிந்திக்க வைக்கவும் வேண்டும், பகுத்தறிவுடன் வாழக் கற்றுத்தரவும் வேண்டுமென்று கூறிய அண்ணல் அம்பேத்கர் அவர்களையும் வணங்குகிறேன். இந்த அவையில் இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாண்புமிகு முதல்வர் மற்றும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகின்றேன். என்னை பவானிசாகர் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்த மதிப்புமிகு பவானிசாகர் தொகுதி அன்பான வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் எனது கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் பங்கெடுத்து என் உரையைத் தொடங்குகின்றேன்.

என் உரையைத் தொடங்குவதற்குமுன், என் தொகுதியின் சில கோரிக்கைகளைப் படிக்கின்றேன். ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலத்திலுள்ள அருள்மிகு ஸ்ரீ பண்ணாரி அம்மன் திருக்கோயிலுக்கு விசேஷ தினங்களில் இலட்சக்கணக்கான பக்தர்கள் வந்து செல்வதால், கடும் இட நெருக்கடி ஏற்படுகிறது. இதனைச் சமாளிக்க திருக்கோயிலுக்கு அருகிலிருக்கும் வனத் துறைக்குச் சொந்தமான சுமார் 25 ஏக்கர் தரிசு நிலத்தை வழங்குமாறும், அதற்குப் பரிவர்த்தனையாக தாளவாடி மலைப் பகுதியில் உள்ள பைனாவரம் ஊராட்சியில் வருவாய்த் துறைக்குச் சொந்தமான 50 ஏக்கர் நிலத்தை வனத் துறைக்கு ஒப்படைக்க ஒப்புதல் அளிக்க வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

சத்தியமங்கலம் பகுதியில் பவானி ஆற்றங்கரையில் அருள்மிகு பவானீஸ்வரர் திருக்கோயில் அமைந்துள்ளது. பவானி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டபோது, மேற்படி கோயிலின் சுற்றுச்சுவர் சேதமடைந்து ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டது. இதனால் அங்கிருந்த 67 நாயன்மார் சிலைகளும் சிதிலமடைந்துள்ளன. எனவே, ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் காலங்களில் கோயிலிலுள்ள சிலைகள் பாதிக்காத வண்ணம் கோயிலுக்குச்

சுற்றுச்சுவர் அமைத்துத் தருவதோடு விரைவில் கோயிலுக்கு குடமுழுக்கு விழாவும் நடத்தித் தர வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

பவானிசாகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புளியம்பட்டி, சத்தியமங்கலம் பகுதியிலுள்ள அரசு ஆதி திராவிடர் மாணவர் நல விடுதி உட்பட தமிழகம் முழுவதுமுள்ள அரசு ஆதி திராவிடர் மாணவர் நல விடுதிகள் பல இடங்களில் பழுதடைந்தும், பராமரிப்பின்றியும் உள்ளன. எனவே, இவற்றை ஆய்வு செய்து, விரைந்து தேவையான இடங்களில் புதிய கட்டடமும், பராமரிப்புப் பணிகளும் செய்து தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன். சத்தியமங்கலம், தாளவாடி, பவானிசாகர் உள்ளிட்ட தமிழகம் முழுவதும் செயல்பட்டுவரும் ஆதி திராவிட மாணவ, மாணவியர் நல விடுதிகளில் காலியாக உள்ள காப்பாளர், சமையலர், பாதுகாவலர் உள்ளிட்ட பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

இரவு 7–20

தமிழகம் முழுவதும் செயல்பட்டுவரும் ஆதி திராவிடர் நல மாணவ, மாணவியர் பயிலும் விடுதிகளில் விளையாட்டுக் கருவிகள் மற்றும் உடற்பயிற்சிக் கருவிகள் வழங்கி அவர்கள் உடல் நலத்தையும், மன நலத்தையும் மேம்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் கிராம ஊராட்சி உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் ஒப்பந்த துப்புரவு மற்றும் தூய்மைப் பணியாளர்கள் அனைவரும் தாழ்த்தப்பட்ட, அருந்ததியினத்தைச் சேர்ந்த எளிமையான குடும்பத்தில் வசிப்பவர்கள். இவர்கள் அனைவரையும் பணி நிரந்தரம் செய்து, இவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகம் முழுவதும் பரவலாக தாழ்த்தப்பட்ட அருந்ததியின மக்கள் வசித்து வருகிறார்கள். இவர்கள் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ளதால், இவர்களுக்கு அரசால் வழங்கப்பட்டு வந்த 3.5 சதவிகித இட ஒதுக்கீட்டை, 5 சதவிகிதமாக உயர்த்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று

2023 ஏப்ரல் 18] [திரு. அ. பண்ணாரி]

கேட்டுக்கொள்கிறேன். தமிழகம் முழுவதும் அருந்ததியின சமுதாய மக்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் திருமணம் உள்ளிட்ட சுபகாரியங்கள் நடத்திட சமுதாய நலக் கூடம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகர், சத்தியமங்கலம் பகுதிகளில் கடந்த 40 ஆண்டுகளுக்குமுன் அமைக்கப்பட்ட கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது ஜல் ஜீவன் திட்டத்தின்கீழ் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்கி வருவதால், கூடுதலாக புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்தி, தண்ணீர்ப் பற்றாக்குறையைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழகம் முழுவதும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்தில் ஆதி திராவிடர்களுக்குக் கட்டித் தரப்பட்ட வீடுகள் தற்போது மிகவும் பழுதடைந்துள்ளன. எனவே, இவற்றைக் கணக்கெடுத்து, புதுப்பித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பவானிசாகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பல்வேறு இடங்களில் வருவாய்த் துறைமூலம் ஆதி திராவிடர் மற்றும் ஏழையெளிய மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க போதுமான நிலமிருந்தும், இதுவரை வருவாய்த் துறைமூலம் அளவீடு செய்யப்படாமல் உள்ளது. இதற்குக் காரணம் போதிய நில அளவையாளர்கள் இல்லாததே எனத் தெரிய வருகிறது. போதுமான நில அளவையாளர்களைப் பணியில் அமர்த்தி, உடனடியாக வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழகம் முழுவதுமுள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பெரும்பாலான ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளன. இதனால் மாணவர் சேர்க்கையும் குறைந்துள்ளது. தற்போது, இப்பள்ளிகள் பள்ளிக் கல்வித் துறையின்கீழ் கொண்டு வரப்பட்டதால், உடனடியாக ஆசிரியர் பணியிடங்களைப் பூர்த்தி செய்து, மாணவர்களின் வருகையையும் அதிகப்படுத்தி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் காக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பவானிசாகர் தொகுதிக்குட்பட்ட தாளவாடி மலைப் பகுதியில் அதிக மக்கள்தொகையுடன்கூடிய மலைக் கிராமங்கள் உள்ளன. இந்தக் கிராமங்களுக்கு தெங்குமரஹடா மாயாற்றிலிருந்து திப்பு சுல்தான் பாலம் தலமலை வழியாக ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் தீட்டி, அப்பகுதி மக்களின் குடிநீர்த்

தேவையைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தலமலை ஊராட்சியிலுள்ள இராமர் அணையிலும், திங்களூர் ஊராட்சிக்குட்பட்ட ராமையன்தொட்டியிலும் பழங்குடியின மக்கள் வசித்து வருகிறார்கள். இப்பகுதிகளுக்கு இதுநாள்வரை மின்சார வசதி செய்யப்படவில்லை. எனவே, போர்க்கால அடிப்படையில் இவர்களுக்கு மின்சார வசதி வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழகம் முழுவதும் வனங்களை ஒட்டியுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு யானைகளால் உயிரிழப்பு ஏற்படுகிறது. இறந்தவர்கள் குடும்பத்திற்கு அரசு ரூபாய் 5 இலட்சம் வழங்குகிறது. இதனை ரூபாய் 10 இலட்சமாக உயர்த்தி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, வனப் பகுதிகளை ஒட்டியுள்ள விவசாய நிலங்களை யானை, காட்டெருமை, மான் மற்றும் பன்றி போன்ற வன விலங்குகள் சேதப்படுத்தாமல் தடுக்க வனத் துறையினர் நவீன கருவிகளைக் கொண்டு, அப்புறப்படுத்த வேண்டும். விவசாயிகளின் 60 ஆண்டுகால கனவுகளை நனவாக்க அத்திக்கடவு-அவினாசி திட்டத்தை மாண்புமிகு விவசாயிகளின் முதல்வர் E.P.S. ஐயா அவர்கள். கொண்டு வந்தார். பவானிசாகர் ஒன்றியத்தில் அத்திக்கடவு-அவினாசி திட்டத்தில் 5 கி.மீ. தொலைவிலுள்ள பெரியகள்ளிப்பட்டி ஊராட்சி, பனையம்பள்ளி ஊராட்சி, காரமடை ஒன்றியத்திற்குட்பட்ட சின்னகள்ளிப்பட்டி ஊராட்சியிலுள்ள குளம், குட்டைகள் விடுபட்டுள்ளன. இந்தப் பகுதிகள் பெரும்பாலும் வானம் பார்த்த பூமியாக உள்ளன. ஆகவே, இந்த மக்களின் நலன் கருதி, இந்த மூன்று ஊராட்சிகளிலுள்ள குளம், குட்டைகளை அத்திக்கடவு-அவினாசி திட்டத்தில் சேர்த்துக்கொள்ளுமாறு அரசைக் கேட்டுக்கொள்கிறேன். பவானிசாகர் பேரூராட்சியில் இதுவரை அரசு ஆரம்ப சுகாதார நிலையம் இல்லை. இங்கு இலங்கை அகதிகள் சுமார் 7,500-க்கு மேற்பட்டவர்களும் மற்றும் பேரூராட்சியைச் சுற்றி அதிக எண்ணிக்கையிலும் பொதுமக்கள் வசித்து வருகிறார்கள். எனவே, ஆரம்ப சுகாதார நிலையங்களை இந்த அரசு அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆலவாடி மலைப் பகுதியில், வனங்களில் அடிக்கடி தீ விபத்து ஏற்படுவதால், இப்பகுதியில் பொதுமக்களுக்கு உயிர்ச்சேதம் ஏற்படாமலிருக்க ஒரு தீயணைப்பு நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது, பவானிசாகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கடம்பூர் மலைப் பகுதியில் மலையாள இன மக்கள் 5 ஆயிரம் குடும்பங்களுக்கு மேல் வசித்து வருகிறார்கள். சேலம் மாவட்டம், திருப்பத்தூர் மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டம், கொள்ளிமலை, ஜவ்வாது மலை போன்ற பகுதிகளில் வசிக்கும் மலையாள இன மக்களுக்கு வழங்கப்படும் ST சாதிச் சான்றிதழ் போல, கடம்பூர் பகுதியில் வாழும் மக்களுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தாட்கோ மூலமாக தமிழகம் முழுவதும், வங்கிக் கடன்கள் ** எனவே, இதுகுறித்து குழு அமைத்து, தாழ்த்தப்பட்ட பயனாளிகளுக்கு பயன்கள் நேரடியாகச் செல்வதைக் கண்காணிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். புஞ்சை புளியம்பட்டு . . .

இரவு 7–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் ** என்று சொல்லக்கூடாது. குறிப்பாக எங்கு என்று சொன்னீர்கள் என்றால் சரியாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி பேசுங்கள். (குறுக்கீடு) பொத்தாம் பொதுவாகச் சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். மற்றவற்றைப் பேசுங்கள்.

திரு. அ. பண்ணாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புஞ்சை புளியம்பட்டி மற்றும் சுற்றியிருக்கும் பகுதிகளில் ஏழையெளிய மாணவிகள் அதிகம்பேர் கல்வி பயின்று வருகிறார்கள். இவர்களின் நலன் கருதி, அந்தப் பகுதியில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, புஞ்சை புளியம்பட்டியைச் சுற்றி நூற்றுக்கணக்கான கிராமங்களும், அதிக எண்ணிக்கையிலான நூற்பாலைகளும் உள்ளன. இங்கு அதிகளவில் தீ விபத்துகள் ஏற்படுகின்றன. இங்குள்ள மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, ஒரு தீயணைப்பு நிலையம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சத்தியமங்கலத்தில் செயல்படும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாணவ, மாணவியர்களுக்கான தங்கும் விடுதி அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

சத்தியமங்கலம், புளியம்பட்டி, அல்லூர் வழியாக கோயம்புத்தூர் செல்லும்போது போக்குவரத்து நெரிசல் அதிக அளவில் ஏற்படுகின்றது. எனவே, அந்தச் சாலைகளை நான்கு வழிச் சாலைகளாக மாற்றித் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அரியப்பனை பேரூராட்சியில் பெரியூர் என்னும் இடத்தில் பிரசித்தி பெற்ற ஸ்ரீ மாகாளியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான திருத்தேர் பழுதடைந்துள்ளது. இந்தக் கோயிலின் விழாக் காலங்களில், அருகிலிருக்கும் நூற்றுக்கணக்கான கிராம மக்கள் சேர்ந்து விழாவைக் கொண்டாடி வருகிறார்கள். எனவே, திருத்தேரைப் புனரமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் பள்ளிகளில் விலைவாசிக்கு ஏற்றபடி மாணவர்களுக்கு உணவுக் கட்டணம் உயர்த்தி வழங்குவதாக இந்த அரசு ஏற்கெனவே அறிவித்திருந்தது. எனவே, இதனை உடனே நடைமுறைப்படுத்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன். பழங்குடியின விவசாயிகள், கூலித் தொழிலாளர்கள், முதல் தலைமுறை பெண் வாரிசுகளுக்கு மருத்துவம், பொறியியல் துறைகளில் படிக்க தகுதி பெற்றவர்களுக்கு அரசு செலவில் கல்வி, விடுதி உள்ளிட்ட கட்டணங்கள் வழங்கப்படுவதாக ஏற்கெனவே இந்த அரசு அறிவித்திருந்தது. எனவே, அதனை உடனே நடைமுறைப்படுத்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டிற்காக மத்திய அரசின் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் என இந்த அரசின் தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. இது விரைவில் நடைமுறைப்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகின்றேன். பவானிசாகர் பேருந்து நிலையத்திற்கு காமராஜர் பெயரைச் சூட்ட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

> "அச்சம் என்பது மடமையடா,
> அஞ்சாமை திராவிடர் உடமையடா,
> ஆறிலும் சாவு, நூறிலும் சாவு,
> தாயகம் காப்பது கடமையடா"

என்று புரட்சித் தலைவர் அவர்கள் முழக்கத்திலும், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கொள்கை வழியிலும் வாழ்ந்து வரும்

கழகத் தலைவர் எடப்பாடியார் அய்யா அவர்களை மீண்டும் ஒருமுறை வணங்கி, எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. S. அம்பேத்குமார் அவர்கள் பேசும்போது, ** ஆகவே, இப்படிப்பட்ட கருத்துகள் அனைத்தையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். அதோடு தொடர்புடைய மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா திரு. எஸ்.பி. வேலுமணி, மாண்புமிகு அமைச்சர் திரு. எ.வ. வேலு, மாண்புமிகு அமைச்சர் திரு. சு. முத்துசாமி ஆகியோர் அனைவரும் பேசிய பேச்சுகள் முழுமையாக நீக்கப்படுகிறது. நான் பேசியது உட்பட அனைத்துமே அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு)*

9. பேரவை நிகழ்ச்சிகளை நேரடி ஒளிபரப்பு செய்தல்—

தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வேறு விஷயம் பற்றி பேசுகிறீர்களா அல்லது இதைப் பற்றியா? மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள்.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலையில் மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது, நாங்கள் ஒரு வார காலமாக அவையைப் புறக்கணித்துக் கொண்டிருக்கிறோம். நாங்கள் போகும்போது புறக்கணிப்பதைப் பற்றி விமர்சனம் செய்து பேசினார்கள். நாங்கள் ஒரு கோரிக்கை வைத்திருக்கிறோம். இதற்குமுன் 2006, 2007 ஆம் ஆண்டுகளில் நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோது நானும் இருந்திருக்கிறேன். அப்போதும் பல கோரிக்கைகளை முன்னிட்டு புறக்கணித்து வெளியிலே சட்டமன்றத்தை நடத்தியிருக்கிறோம். அதைப்போல அண்ணன் எடப்பாடியார் முதலமைச்சராக இருந்தபோது, இப்போது இருக்கக்கூடிய முதலமைச்சர் அவர்கள் அவையைப் புறக்கணித்து சட்டமன்றத்திலிருந்து வெளிநடப்பு செய்துள்ளார்கள். ஒரு கோரிக்கையை வைக்கிறார்கள். அந்தக் கோரிக்கை நடைபெறாதபோது இதுபோன்று நடக்கிறது. அதை விமர்சனம் செய்தார்கள். அடுத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய காவல் துறை மானியக் கோரிக்கை வரவிருக்கிறது. அப்போது எதிர்க்கட்சித் தலைவர் பேசப் போகிறார். நீங்கள் நேரடி ஒளிபரப்பு*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[திரு. எஸ்.பி. வேலுமணி] [*2023 ஏப்ரல் 18*

செய்ய Zero hour-ல் முடியாது என்று சொல்லிவிட்டீர்கள். Zero hour-ஐ எப்போதும் நேரடியாக ஒளிபரப்பு செய்வதில்லை. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போதாவது நேரடியாக ஒளிபரப்பு செய்ய வேண்டும். அமைச்சர் அவர்கள் பேசுவது முழுமையாக வருகிறது. இன்றைக்குகூட ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் பேசியிருக்கிறார்கள். நாங்கள் தேவையான கோரிக்கைகளையெல்லாம் அவையில் வைத்திருக்கிறோம். பத்திரிகையாளர்கள் இருக்கிறார்கள். அமைச்சர் அவர்களுடைய பதிலுரையை மட்டும் நாங்கள் ஒரு வார காலமாகப் புறக்கணித்து இருக்கிறோம். முதலமைச்சர், அதேபோல அவை முன்னவர், எல்லாவற்றையும் Zero hour-ல் நிறைவேற்றினால். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

இரவு 7–30

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற நிகழ்ச்சியைப் பொறுத்தவரைக்கும், தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பு செய்வது என்பது அந்தந்தத் தொலைக்காட்சி நிறுவனத்தின் விருப்பத்தைப் பொறுத்தது. ஆகவே, அந்த அடிப்படையில்தான் அவர்கள் ஒளிபரப்பு செய்கிறார்களே தவிர, நாங்கள் அவற்றையெல்லாம் ஒளிபரப்பு செய்திட வேண்டுமென்று அவர்களைக் கட்டாயப்படுத்த முடியாது. இதுதான் உண்மை. இந்த உண்மையை எதிர்க்கட்சியினர் முதலில் புரிந்துகொள்ள வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே பதில் சொல்லிவிட்டார்கள். நான் காலையிலேயே தெரிவித்தேன். (குறுக்கீடு) எதிர்க்கட்சிக் கொறடா, என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன கருத்துக்கு மாற்றுக் கருத்து இல்லை. நேரலையில் ஒளிபரப்பும்போது எதிர்க்கட்சித் தலைவர் பேசுவதை மட்டும் ஒளிபரப்ப வாய்ப்புக் கொடுங்கள் என்றுதான் கேட்கிறோம். மற்றதெல்லாம்கூட நீங்கள் தொடர்ந்து செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். இப்போதைக்கு வினாக்கள்-விடைகள்*

2023 ஏப்ரல் 18] [திரு. எஸ்.பி. வேலுமணி]

நேரத்தை மட்டும் நேரடி ஒளிபரப்பு செய்கிறீர்கள். எதிர்க்கட்சித் தலைவர் பேசுவதை மட்டும் ஒளிபரப்புவதற்கு வேறு எந்த செலவும் ஆகப்போவதில்லை. எதிர்க்கட்சித் தலைவர் பேசுவதை மட்டும் நீங்கள் நேரடி ஒளிபரப்பு செய்ய வேண்டும். மாண்புமிகு அமைச்சர்கள் நிறைய பதில் சொல்கிறார்கள். ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் என்ன கேள்வி கேட்டார்கள் என்பதே வெளியில் தெரிவதில்லை. அந்தக் கோரிக்கையைத்தான் நாங்கள் வைக்கிறோம். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் இதைப் பரிசீலித்து, கண்டிப்பாக செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தக் காரணத்திற்காக நாங்கள் இப்போது இந்தப் பதிலுரையைப் புறக்கணிக்கிறோம்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) அதாவது, இன்று காலையிலேயே இதற்கான விளக்கத்தைச் சொல்லியாகிவிட்டது.* Zero hour*-ல் முன்வரிசையில் அமர்ந்திருக்கக்கூடிய கட்சித் தலைவர்கள் பேசலாம். ஆனால், அவர்கள் என்ன பேசப் போகிறார்கள் என்பது தெரியாது. ஆகவே, அதை ஒளிபரப்பு செய்ய முடியாது என்று சொல்லியாயிற்று. அதற்குத் தெளிவாக பதில் சொன்ன பிறகு, திரும்பத் திரும்பச் சொல்வது தேவையில்லாத காரணம் என்று கருதுகிறேன். பதிலுரை. மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு ஆண்டு காலமாக சட்டமன்றத்தை ஜனநாயக ரீதியாக நீங்கள் நடத்திக் கொண்டிருக்கிறீர்கள் என்பது இங்கே இருக்கின்ற அனைத்து கட்சித் தலைவர்களுக்கும் தெரியும். பொதுவாக, கடந்த ஆட்சியைப் போல, அமைச்சர்கள் எழுந்தவுடனேயே சட்டமன்ற உறுப்பினர்கள் உட்காருவது, சட்டமன்ற உறுப்பினர்களைப் பேச விடாமல் இடைமறித்து அமைச்சர்கள் பேசுவது என்கிற வாடிக்கையையெல்லாம் மறுத்து, எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுவதை முழுமையாகக் கேட்டுக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.*

[திரு. எ.வ. வேலு] [2023 ஏப்ரல் 18

நேற்றைய முன் தினமும் சரி, இன்று காலையிலும் சரி, தொடர்ந்து நீங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். அதாவது, agenda-ல் குறிப்பிட்டுள்ளபடி வினாக்கள்-விடைகள், சட்டமன்ற உறுப்பினர்கள் கேள்வி கேட்டாலும் சரி, மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொன்னாலும் சரி, அனைத்துமே நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டு வருகின்றன. அதில் ஒன்றும் மாற்றம் இல்லை. அதேபோன்று, மாண்புமிகு அமைச்சர்கள் பதிலுரையில் பேசுவதும் நேரலையில் ஒளிபரப்பு செய்யப்பட்டுக்கொண்டிருக்கிறது. திடீரென்று zero hour-ல் எழுந்து பேசி, உடனே எங்களுக்கு அதற்குப் பதில் தேவை என்று கேட்டால், மாண்புமிகு அமைச்சர்கள் உடனே அதற்குப் பதில் சொல்ல முடியாது. ஏனென்றால், zero hour-ல் என்ன கேள்வியை எழுப்பப் போகிறார்கள் என்பது மாண்புமிகு அமைச்சர்களுக்கும் தெரியாது; இன்னும் சொல்லப்போனால், பேச அனுமதிக்கின்ற மாண்புமிகு பேரவைத் தலைவராகிய தங்களுக்குக்கூட சில நேரங்களில் தெரியாமல் இருக்கின்ற அளவிற்கு, சில பிரச்சினைகளை zero hour-ல் எழுப்புகின்றபோது, அப்போதைக்கு பதில் இருக்காது. அப்போது கேள்வி கேட்டது மட்டும்தான் இருக்குமே தவிர, அதற்கான பதில் இருக்காது. அதனால்தான், நேற்றைக்குகூட தாங்கள் என்ன சொன்னீர்களென்றால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடனும், ஏனைய கட்சித் தலைவர்களுடனும் கலந்து பேசி முடிவு செய்கிறேன் என்று உரிய பதிலைச் சொல்லியிருக்கிறீர்கள். வேண்டுமென்றே திட்டமிட்டு, ஏதோ ஒரு காரணத்தை வைத்துக்கொண்டு அவையிலிருந்து வெளியே செல்கிறார்களே தவிர, காரணம் இதுவல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காலையிலேயே நான் தெளிவான பதிலைச் சொல்லிவிட்டேன். கடந்த 10 ஆண்டுகளாக எதிர்க்கட்சித் தலைவர் என்ன பேசினார்கள் என்பதை ஒரே ஒரு கேள்வியை எடுத்து, அதோடு எதிர்க்கட்சித் தலைவர் 5 நிமிடங்கள், 10 நிமிடங்கள், 20 நிமிடங்கள், 50 நிமிடங்கள் பேசினாலும், அந்த ஒரு கேள்விக்குதான். அதற்குப் பதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோ, மாண்புமிகு அமைச்சர்களோ சொன்னால், அதை முழுவதுமாக edit செய்து மாலையில் அனைத்து channel-களுக்கும் கொடுக்கப்பட்டு, அதுதான் ஒளிபரப்பப்பட்டது. அவற்றையெல்லாம் CD-யில் copy செய்து வைத்திருக்கிறேன். அதை வேண்டுமானாலும் பாருங்கள். Zero hour-ல் ஒருபோதும் என்ன பேசப் போகிறீர்கள் என்பது தெரியாது. பிரதான எதிர்க்கட்சித் தலைவருக்கு மட்டும் அந்த வாய்ப்பைத் தாருங்கள், மற்றவர்களுக்கு பின்னர் பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொல்வது

2023 ஏப்ரல் 18] [பேரவைத் தலைவர்]

ஏற்புடையதல்ல. முன்வரிசையில் அமர்ந்திருக்கக்கூடிய கட்சித் தலைவர்கள் எல்லோருமே zero hour*-ல் எழுந்து பேசுவார்கள். அவர்கள் எல்லோருக்கும் சம வாய்ப்புதான் கொடுக்கப்படும் என்று காலையிலேயே சொல்லியாகிவிட்டது. இதற்கு அனைத்து கட்சித் தலைவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்கள் உட்பட, எல்லோருடனும் பேசி முடிவெடுக்கப்படும். படிப்படியாகத்தான் நாங்கள் இதைச் செய்ய முடியும் என்று பல முறை தெளிவுபடுத்தப்பட்டுவிட்டது. ஆகவே, எதிர்க்கட்சித் தலைவர்* zero hour*-ல் பேசுவதை மட்டும் ஒளிபரப்ப வேண்டும் என்று கேட்பது ஏற்புடையதல்ல. விளக்கமாக பதில் சொல்லியாகிவிட்டது. இதற்குமேல் எந்தப் பதிலும் தேவையில்லை. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அவர்கள் கேட்கின்ற கேள்வியைப் போன்று நாங்கள் அப்போது கேட்டிருக்கிறோம். எங்களை ஏன் தொலைக்காட்சியில் காட்டுவதில்லை;* atleast *எங்கள் முகத்தையாவது காட்டுங்கள் என்று சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்ன பதில் சொன்னார்களோ, அதைத்தான் அவர்களும் சொன்னார்கள். இது எங்களால் அல்ல; பத்திரிகைகாரர்களும், தொலைக்காட்சி நிறுவனங்களும் காண்பிப்பதுதான், எங்களுக்கு ஒன்றும் தெரியாது, 'யாமறியோம் பராபரமே' என்று சொன்னார்கள். ஆனால், எப்படி செய்தார்கள் என்பது தெரியும். 'தலை வலியும், வயிற்று வலியும் தனக்கு வந்தால்தான் தெரியும்.' நாங்கள் அப்போது சொல்லும்போது, சதா இங்கேயே உட்கார்ந்திருக்க வேண்டும் என்று சொன்னார்கள். பாவம், இப்போது அவர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். இனிமேல், கடைசி உறுப்பினர் பேசி முடித்தவுடன் நீங்கள் ஓர் அறிவிப்பு செய்யுங்கள்; 'இப்போது மாண்புமிகு பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்வார்கள்' என்று சொல்லுங்கள்; அவர்கள் வெளியே சென்றுவிடுவார்கள்.*

இரவு 7–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவர்கள் கடந்த 10 ஆண்டு காலம் செய்ததனால் நாமும் அப்படிச் செய்கிறோம் என்பது அல்ல. இப்போது ஜனநாயக முறைப்படி நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடத்தச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி நடக்கிறது. எதிர்க்கட்சி உள்பட எல்லா கட்சிகளுக்கும் நல்ல வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, இதற்குமேல் தேவையில்லை என்று நான் எண்ணுகின்றேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.*

[2023 ஏப்ரல் 18

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட தொலைக்காட்சியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுவதும், மாண்புமிகு அமைச்சர்கள் பேசுவதும் வருவது கிடையாது. அதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொன்னார். அந்தந்தத் தொலைக்காட்சியில் அவர்கள் இஷ்டம் என்று தெளிவாகச் சொன்னார். நான் குறிப்பிடுகின்ற ஒரு தொலைக்காட்சியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுவதும், மாண்புமிகு அமைச்சர்கள் பேசுவதும் வருவதே கிடையாது.

8. மானியக் கோரிக்கைகள், 2023-2024, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(ஆ) கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை–தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விவாதம் என்பது கடந்த காலத்தில் நடந்ததும், நிகழ்காலத்தில் நடப்பதும், எதிர்காலத்தில் என்ன தேவை என்பதைப் பற்றியும்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே இந்த அவையில் பதிவு செய்கிறார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர்கள், வெளிநடப்பு செய்தவர்கள் எதைப் பேசினாலும் குறுக்கீடு செய்து, இதைப் பேசக்கூடாது, அதைப் பேசக்கூடாது என்றால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் உடனே அதை அவைக் குறிப்பிலிருந்து எடுக்கிறீர்கள். அவர்கள் திட்டமிட்டு, இந்த அவையைக் களங்கப்படுத்த வேண்டும், வெளிநடப்பு செய்ய வேண்டும் என்று ஏற்கெனவே அவர்களிடம் அந்தத் திட்டம் இருக்கிறது. ஆனால், ஜனநாயகரீதியாக ஜனநாயக ** முறையாக, அவர் என்ன பேசினார், மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பேத்குமார்—எனக்குத் தெரியும், நான் பட்டியலைக் கொடுக்கட்டுமா? கொங்கு மண்டலத்தில் கடந்த காலத்தில் 10 ஆண்டுகளாக எங்கெங்கே வன்கொடுமை நடந்திருக்கிறது என்று. . .

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 ஏப்ரல் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, நான் சொல்கிறேன்.

திரு. கு. செல்வபெருந்தகை: இல்லை, நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். நான் சொன்னபிறகு பேசுங்கள். தேவையென்றால் பேசுங்கள். நான் time தருகிறேன், தேவையென்றால் பேசுங்கள் என்கிறேன். நான் உங்களுக்கு time தருகிறேன். (குறுக்கீடு) ஒரு நிமிடம் உட்காருங்கள். திரு. அம்பேத்குமார் அவர்கள் பேசியதை மாண்புமிகு துணை சபாநாயகர் உட்கார்ந்து, அதில் என்ன இருக்கிறது என்பதை நான் பார்த்து தெரிந்து, தேவையில்லாததை நான் நீக்கிவிடுகிறேன் என்று சொன்னார்கள். அந்த அடிப்படையில்தான் அது நீக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் பேசியது, ** இந்த அரசல்ல. உங்களுக்கு நன்றாகவே தெரியும். அதனால், அந்த வார்த்தைகளை நீக்கிவிடுகிறோம். தயவுசெய்து இதற்கு நீங்கள் உள்நோக்கம் கற்பிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

காரணம், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அப்படிப்பட்ட அநாகரிகமான செயல் நடப்பதாகப் பதிவாகியிருக்கிறது. அப்படியொன்று நடந்ததாக எனக்குத் தெரியவில்லை.

இன்னொன்றும் சொல்கிறேன், உட்காருங்கள். **

அதேமாதிரி அவர்கள் வெளிநடப்பு செய்தது,—எதையும் அவர்கள் சொன்னதற்காக நீக்கவில்லை. நீங்கள் இப்போது பார்த்துக்கொண்டே வாருங்கள். நாகரிகமான வார்த்தைகளை மட்டும் பதிவு செய்துகொண்டு இருக்கிறோமே தவிர, வேறெந்த உள்நோக்கமும் இல்லை. தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரைக்கு வழிவிடுங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, உறுப்பினர், மாண்புமிகு திரு. முத்துசாமி அண்ணன், நம்முடைய மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர், மாண்புமிகு திரு. எ.வ. வேலு அண்ணன் உட்பட எல்லோரையும் கலந்து பேசாமல் நான்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

எதையும் செய்யமாட்டேன். ஒரு வார்த்தை யார் பேசுகிறார்களோ, இப்போது நம்முடைய திரு. முத்துசாமி அண்ணன் பேசியதை அவரிடம் கேட்காமல் நான் எப்படி நீக்க முடியும்? திரு. எ.வ. வேலு அண்ணன் பேசியதை, நான் எப்படி நீக்க முடியும்? அவர்கள் இதைப் படித்து பார்த்துவிட்டு, இப்படி செய்யுங்கள் என்று சொன்ன பிறகுதான் செய்திருக்கிறேன். அதில் உள்நோக்கம் வேண்டாம், தயவுசெய்து உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள், என்ன? ஒரு வார்த்தையில் சொல்லுங்கள்.

***திரு. ம. சிந்தனை செல்வன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணுக்கு எட்டிய தூரம்வரை எதிரிகளே இல்லை என்று எதிர்க்கட்சியை பலவீனப்படுத்தி அதை மகிழ்ச்சியாக, பெருமையாகக் கருதிய ஆட்சியாளர்களுக்கு மத்தியில், எதிர்க்கட்சி கண் முன்பாகவே இருக்க வேண்டுமென்று விரும்புகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் அவர்களின் பெருந்தன்மையை, ஜனநாயகப் பண்பை விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் நெஞ்சாரப் பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி. மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. (மேசையைத் தட்டும் ஒலி)*

இரவு 7–40

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் கலைஞர் சொன்னார்; "பம்பரமும் சுற்றியபின் ஓய்வு கொள்ளும்; பெரியாரோ படுகிழமாய் போனபின்பும் பம்பரமாய்ச் சுற்றி வந்தார்". ஈழத்து எழுச்சிக் கவிஞர் காசி ஆனந்தனோ, 'மானம் கெடுப்பாரை! அறிவைத் தடுப்பாரை! மண்ணோடு பெயர்த்த கடப்பாரை! வானமுள்ள வரை! வையமுள்ள வரை! யார் இங்கு மறப்பார் பெரியாரை!' என்றார். பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரே, உம்மை முதலில் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

உரிமை மறந்து, உணர்வு துறந்த ஊமை ஜனங்களைத் தட்டி எழுப்பிய தலைவன்; இந்திய ஜனநாயகத்தைக் கட்டி எழுப்பிய தலைவன்; அவர் சாதிக்குத் தலைவன் அல்ல; சமூகக்

2023 ஏப்ரல் 18] [திருமதி என். கயல்விழி செல்வராஜ்]

கொடுமைகளை சட்டமியற்றி சாதித்த தலைவன் அரசியல் சட்ட மாமேதை பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அழுகின்ற போதும் மேகம்போல் அழுதவன் நீ! விழுகின்ற போதும் விதைபோல் விழுந்தவன் நீ! வெறும் தலைகளை எண்ணிய தலைவர்களிடையே, தமிழர்களின் இதயங்களை எண்ணியவன் நீ! அண்ணா! நீ மண்ணுக்குள் சென்றாலும் வேராகத்தான் சென்றாய்! அதனால்தான், இன்றும், உடன்பிறப்புகளின் உள்ளங்களில், மலர்களாய் மலர்ந்து மணம் வீசுகின்றாய்! தமிழ்த் தாயின் தலைமகன்! எங்கள் அண்ணா உங்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பெரியார், அம்பேத்கர், அண்ணா ஆகியோரின் ஒட்டு மொத்தக் கூட்டுக் கலவை தலைவர் கலைஞர் அவர்கள். அரை நூற்றாண்டுக்கால தமிழக தினசரிகளின் தலைப்புச் செய்தி கலைஞர்.

கவிப்பேரரசு வைரமுத்து சொன்னார்; “கலைஞர் பிறந்தநாள்! தமிழுக்கு ஏடு திறந்த நாள்! தமிழர்க்கு சூடு பிறந்த நாள்! பகுத்தறிவுக்கு பிள்ளை பிறந்த நாள்! மேடை மொழிக்கு மீசை முளைத்த நாள்” ‘உடன் பிறப்பே’ என்ற ஒற்றைச் சொல்லால் 8 கோடி தமிழர்களையும் கட்டிப்போட்ட தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ் எங்கள் மொழி என்றாய்! திராவிடம் எங்கள் வழி என்றாய்! மாநிலம் தாண்டி உன் மகத்துவம் புரிகிறது! ஒன்றியத்தின் பார்வை உன்மீது படுகிறது! கழகத்தைக் களமாக்கி! திராவிடத்தை உயிராக்கி! வீட்டுக்கு விளக்காய்! நாட்டுக்கு தொண்டனாய்! எங்களுக்குத் தளபதியாய்! எங்கள் திராவிட இயக்கத்தின் நான்காம் தலைமுறை தலைவனாய்! திராவிட மாடல் ஆட்சியின் நாயகன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எங்களின் சின்னவர்! மக்கள் மனங்களின் மன்னவர்! தொட்ட துறையெல்லாம் பொன்னாய் மாறுது! இளைஞர் நலனே உனது இலக்காய் ஆனது! இலக்கை எய்திட, உந்தன் உழைப்பு, எங்களைப் போன்றோருக்கு மலைப்பாய் உள்ளது! நாளைய விடியலின் புதிய பூபாளம்! இயக்கத்தின் இளைஞரணி செயலாளர் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[திருமதி என். கயல்விழி செல்வராஜ்] [2023 ஏப்ரல் 18

திருப்பூர் மாவட்டத்தில் என்னை அரவணைத்து, வழிநடத்திச் செல்லும் கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் தமிழக அரசின் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அண்ணன் மு.பெ. சாமிநாதன் அவர்களையும், திருப்பூர் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் சகோதரர் இல. பத்பநாபன் அவர்களையும், என்னை இம்மாமன்றத்திற்கு அனுப்பி வைத்த தாராபுரம் தொகுதியின் கழக உடன்பிறப்புகள் மற்றும் தொகுதிவாழ் மக்கள் அனைவரையும் அன்போடு வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் எத்தனையோ பெரும் ஆளுமைகள், அறிஞர்கள் மற்றும் தலைவர்கள் செய்திட்ட எண்ணிலடங்கா சேவையை நன்றியோடு நினைவுகூர்ந்து, மாண்புமிகு பேரவைத் தலைவர், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், மாண்புமிகு முதல்வர், மாண்புமிகு அவை முன்னவர், மாண்புமிகு மூத்த அமைச்சர் பெருமக்கள், அரசு தலைமைக் கொறடா, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகிய அனைவரையும் வணங்கி என் உரையைத் துவங்குகிறேன்.

காலம் காலமாய் அடிமைப்படுத்தப்பட்டு, வறியவர்களாய், உரிமையற்றவர்களாய் இருந்த ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் சமூக, பொருளாதார நிலை ஏற்றம் பெற ஏணியாய், கரை சேர்க்கும் தோணியாய், நமது கழக ஆட்சி அமையும்போதெல்லாம் எண்ணிலடங்கா திட்டங்களுக்குச் செயல் வடிவம் கொடுத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் என்பதில் இத்துறை பெருமை கொள்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

சமூக நீதி, சமத்துவம், பெண்ணுரிமை போன்ற பல்வேறு விழுமியங்களை திராவிட சித்தாந்தம்மூலம் பரவச் செய்து, இன்று விருட்சமாய் வளர்ந்து நிற்கவும் செய்த முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நூற்றாண்டும், சமூகத்தின் அடிவரை வேர்விட்டிருந்த சாதிய அவலத்தை வேரறுக்க, அறிவாயுதம் தாங்கி சமர்புரிந்த வைக்கம் போரின் நூற்றாண்டும், ஒரே ஆண்டில் வருவது ஆச்சரியமான நிகழ்கால நிஜங்கள்.

இரவு 7–45

இந்த நேரத்தில், வைக்கம் போரின் நூற்றாண்டு நினைவை, அரசு விழாவாகக் கொண்டாட உத்தரவிட்ட மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, பெண்கள், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஆதி திராவிட,

2023 ஏப்ரல் 18] [திருமதி என். கயல்விழி செல்வராஜ்]

பழங்குடியின, விளிம்புநிலை மக்களின் முன்னேற்றத்திற்காக எண்ணற்ற திட்டங்களை வழங்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையும் அரசு விழாவாகக் கொண்டாட வேண்டும் என்ற கோரிக்கையை நம் அனைவரின் சார்பாகவும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடத்தில் சமர்ப்பிக்கின்றேன்.

பட்டியலின மற்றும் விளிம்புநிலை மக்கள் முன்னேற்றமே தனது வாழ்நாள் கடமையாகக் கருதி உழைத்தவரும், அகில இந்திய தீண்டாமை ஒழிப்புக் குழுவின் முதல் தலைவருமான பெரியவர் ஐயா L. இளையபெருமாள் அவர்களுக்கு நூற்றாண்டு நினைவரங்கம் அமைத்துத் தரப்படும் என்று விதி 110–ன்கீழ் அறிவித்த, திராவிட மாடல் ஆட்சியின் நாயகன் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு, (மேசையைத் தட்டும் ஒலி) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2022–2023 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை, மாண்புமிகு முதல்வர் அவர்களால் விதி 110–ன்கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் மற்றும் மானியக் கோரிக்கையில் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் என மொத்தம் 38 அறிவிப்புகளில், இதுவரை 36 அறிவிப்புகளுக்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மீதமுள்ள 2 அறிவிப்புகளும் அரசாணை வெளியிடும் பொருட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளன.

“கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு”

உரிய கருவி, உற்ற காலம், ஆற்றும் வகை, ஆற்றிடும் பணி ஆகியவற்றை ஆய்ந்தறிந்து செயல்படுபவனே சிறந்த அமைச்சன் என்ற குறளுக்கு இலக்கணமாய், இவ்வாண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் மனிதக் கழிவுகளை மனிதனே அகற்றும் இழிநிலையைப் போக்க, நவீன இயந்திரம் வழங்க வழிவகை செய்யப்படும் என்ற அறிவிப்பிற்கும், புதிரை வண்ணார் இன மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக, ரூபாய் 10 கோடி ஒதுக்கப்படும் என்ற அறிவிப்பிற்கும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் தொழில் தொடங்குவதை ஊக்குவிக்க, ரூபாய் 100 கோடி மதிப்பீட்டில் அண்ணல் அம்பேத்கர் தொழில்

[திருமதி என். கயல்விழி செல்வராஜ்] [2023 ஏப்ரல் 18

முன்னோடிகள் திட்டம் வழங்கியதற்கும், அறிவுச் சுடரொளி, ஆற்றலின் அடைமொழி, இந்தியாவின் கலங்கரை விளக்கம், டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கர் அவர்களின் சிந்தனைகளைப் பரப்புவதற்காக அவரது படைப்புகளைத் தமிழில் மொழிபெயர்க்க ரூபாய் 5 கோடி ஒதுக்கியதற்கும், மதுரை, கோவை, திருச்சி மற்றும் நீலகிரியில் ரூபாய் 100 கோடி செலவில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி இன மாணவர்கள் பயன்பெறும் வகையில், நான்கு புதிய பெரு விடுதிகள் நவீன வசதியுடன் அமைக்கப்படும் என்ற அறிவிப்பிற்கும், நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில் உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்பில் முழுமையான அடிப்படை வசதிகளை உறுதி செய்ய, ஐந்தாண்டுகளில் ரூபாய் 1,000 கோடி செலவில் அயோத்திதாச பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்ற அறிவிப்பிற்கும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான துணைத் திட்டம் செவ்வனே செயல்படுத்தப்படுவதை உறுதி செய்திடும் பொருட்டு, ஒரு சிறப்புச் சட்டத்தை இந்த அரசு இயற்றும் என்ற அறிவிப்பிற்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, 'நன்றி!' என்ற ஒரு சொல் மட்டும் போதாது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் சமூக, பொருளாதார மற்றும் கல்வியை மேம்படுத்தும் நோக்குடன், தமிழ்நாட்டில் ஆதி திராவிடர் துணைத் திட்டம் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டங்களுக்காக, மாநிலத்தின் மொத்த மக்கள்தொகையில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் விகிதாசாரத்திற்கு ஏற்ப முறையே 20.01 விழுக்காடு மற்றும் 1.17 விழுக்காடு அளவிற்கு இணையாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

2023–2024 ஆம் நிதியாண்டில் மாநில ஆண்டுத் திட்ட ஒதுக்கீடான ரூபாய் 77,930.30 கோடியில் ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்காக ரூபாய் 17,075.70 கோடி, அதாவது 21.91% மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டத்திற்காக ரூபாய் 1,595.89 கோடி, அதாவது 2.05% நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இரவு 7–50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச வீட்டுமனை வழங்கும் திட்டத்திற்காக ஆண்டுதோறும் ரூபாய் 6

2023 ஏப்ரல் 18] [திருமதி என். கயல்விழி செல்வராஜ்]

கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2022–2023 ஆம் நிதியாண்டில் 511 நபர்கள் பயனடைந்துள்ளனர். மேலும், கடந்த காலங்களில், இத்துறைமூலம் பட்டா வழங்கப்பட்ட 1,66,504 பயனாளிகளில், 1,32,609 நபர்களுக்கு e-பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 33,895 நபர்களுக்கும் விரைவில் e-பட்டாக்கள் வழங்க, தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சாதி வேறுபாடுகளற்ற மயானங்கள் பயன்பாட்டில் உள்ள சிற்றூர்களுக்கு தலா ரூபாய் 10 இலட்சம் வழங்கப்படும் என்ற மாண்புமிகு முதல்வர் அவர்களின் முத்தான திட்டத்தைத் தொடர்ந்து, தேர்ந்தெடுக்கப்பட்ட 70 சிற்றூர்களுக்கு தலா ரூபாய் 10 இலட்சம் வீதம் வழங்கப்பட்டு, அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்மூலம் சாதி வேறுபாடுகள் அற்ற மயானங்கள் எதிர்காலத்தில் அதிகரிப்பதோடு, சமூக நல்லிணக்கமும் ஏற்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதிலும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மறுவாழ்வு அளிப்பதிலும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தலைமையிலான இவ்வரசு முனைப்புடன் செயல்படுவதன் காரணமாக, 165 நபர்களுக்கு வேலைவாய்ப்பும், 335 நபர்களுக்கு ஓய்வூதியமும், 66 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாவும், 60 நபர்களுக்கு கல்வி உதவித் தொகையும் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 2022–2023 ஆம் ஆண்டு வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட 3,870 நபர்களுக்கு, ரூபாய் 47 கோடி தீருதவியாக வழங்கப்பட்டுள்ளது.

சட்டத்தால் மட்டுமே வன்கொடுமையைத் தடுத்திட முடியாது. மாண்புமிகு முதல்வர் அவர்களின் வார்த்தைகளில் சொல்ல வேண்டுமென்றால், மாற்றம் மட்டுமே மனங்களை இணைக்கும்! மனமாற்றம் மட்டுமே மனங்களை இணைக்கும்! மதங்களைக் கடந்தும், இனங்களைக் கடந்தும், சாதியம் கடந்தும், மனிதம் வளர்க்கும்!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம், மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தலைமையில் இதுவரை மூன்று முறை கூட்டப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துகளின் அடிப்படையில் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[திருமதி என். கயல்விழி செல்வராஜ்] [2023 ஏப்ரல் 18

மாண்புமிகு முதல்வர் அவர்களால் விதி 110–ன்கீழ் அறிவிக்கப்பட்டு உருவாக்கப்பட்ட, தன்னாட்சி அதிகாரத்துடன்கூடிய தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையம், இதுவரை பெறப்பட்ட 1,820 மனுக்களில், 987 மனுக்களுக்கு தீர்வு கண்டுள்ளது. எஞ்சிய 833 மனுக்கள் தொடர் நடவடிக்கையில் உள்ளன.

நடப்பு நிதியாண்டில் மொத்த நிதி ஒதுக்கீடான ரூபாய் 3,512.85 கோடியில், கல்வி மற்றும் கல்விசார்ந்த திட்டங்களுக்காக மட்டும் ரூபாய் 2,206.70 கோடி, அதாவது மொத்த ஒதுக்கீட்டில் 62.81 விழுக்காடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் முதுகலைப் பட்டம் மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகளைப் பயில்வோருக்கான கல்வி உதவித் தொகைத் திட்டம் முழுநேர முனைவர் ஆராய்ச்சிப் படிப்பிற்கான ஊக்கத் தொகைத் திட்டத்தில் நிதியுதவி பெறுவதற்கான ஆண்டு வருமான உச்சவரம்பு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, ரூபாய் மூன்று இலட்சத்திலிருந்து எட்டு இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், வெளிநாடுகளில் முதுகலைப் பட்டம் மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகளைப் பயில்வோருக்கான கல்வி உதவித் தொகை திட்டத்தின்கீழ், பயிலும் நாடு மற்றும் பாடப் பிரிவிற்கு ஏற்ப, ஒரு மாணவருக்கு ரூபாய் 36 இலட்சத்திற்கு மிகாமல் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில், 2020–2021 ஆம் ஆண்டில் 4 மாணவர்களே பயனடைந்த நிலையில், 2021 முதல் 2023 ஆம் ஆண்டு வரை 18 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர். மேலும், முழுநேர முனைவர் ஆராய்ச்சிப் படிப்புக்கான ஊக்கத் தொகை ரூபாய் ஐம்பதாயிரத்திலிருந்து ஒரு இலட்சமாக உயர்த்தப்பட்டதன் விளைவாக, 2022–2023 ஆம் ஆண்டில் 1,554 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2022–2023 ஆம் ஆண்டின் புதிய முன்னெடுப்புகளாக, ஆதி திராவிட நலப் பள்ளிகளுக்கு ரூபாய் 3.16 கோடி மதிப்பீட்டில், அறிவுத்திறன் பலகைகள் (Smart Boards) நிறுவ, ரூபாய் 3.15 கோடி மதிப்பீட்டில், அறிவியல் ஆய்வுக்கூட உபகரணங்கள் வாங்க, ரூபாய் 14.82 கோடி மதிப்பீட்டில் 6 பள்ளிகளை மாதிரிப் பள்ளிகளாகத் தரமுயர்த்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், ரூபாய் 15 கோடி செலவில் 366 விடுதிகள் செப்பனிடப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 18] [திருமதி என். கயல்விழி செல்வராஜ்]

இரவு 7–55

'மாற்றம் ஒன்றே மாறாதது' என்ற கூற்றிற்கிணங்க, ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் உட்பட பல்வேறு துறைகளின்கீழ் இயங்கும் பள்ளிகள் பள்ளிக் கல்வித் துறையுடன் இணைக்கப்படும் என்ற மாண்புமிகு முதல்வர் அவர்களின் இவ்வறிவிப்பானது, பல்வேறு தரப்பிலிருந்து தெரிவிக்கப்படும் வரவேற்பின்மூலம், சமூக நீதிக்கான திராவிட மாடல் அரசின் மிகச் சிறந்த முன்னெடுப்பு என்பது தெள்ளத்தெளிவாகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முத்தான திட்டமான சமத்துவபுரம் திட்டம் எப்படி அனைத்து சமுதாயமும் இணைந்து இருக்கும் வகையில், சமூகநீதி வரலாற்றில் பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட்டதோ, அதுபோல, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அனைத்துப் பள்ளிகளையும், பள்ளிக் கல்வித் துறையில் இணைக்கும் முடிவு என்பது சமூக நீதி வரலாற்றில் மேலும் ஒரு மைல் கல் என்பதில் துளியும் ஐயமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் இன்றைய நிதி நிலைமையில் அரசு மட்டுமே அனைத்துத் திட்டப் பணிகளையும் செய்துவிட முடியாது. எனவே, தனியார் நிறுவனங்களின் சமுதாயப் பங்களிப்பு நிதியிலிருந்து (CSR Fund) வளர்ச்சி திட்டப் பணிகளை மேற்கொள்வது இன்றியமையாததாகும்.

நடப்பு நிதியாண்டில், 14 தனியார் நிறுவனங்களின் சமுதாயப் பங்களிப்பு நிதியின்மூலம் ரூபாய் 4.22 கோடி மதிப்பிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், பள்ளிகளுக்கு Save the Children Organization ரூபாய் 2 கோடியில் 85 அறிவுத்திறன் பலகைகள் (Smart Boards), L&T Limited ரூபாய் 60 இலட்சம் மதிப்பில் மேசைகள் மற்றும் இருக்கைகள் வழங்கியுள்ளன. மேலும், பள்ளிகளின் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த Renault-Nissan Automotive ரூபாய் 43.44 இலட்சமும், Mumbai Bluechip Corporate Investment Centre Limited ரூபாய் 45 இலட்சமும், L&T Limited மற்றும் Smart World & Communication ரூபாய் 25 இலட்சமும் வழங்கியுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

அமைச்சர் அவர்கள் அமைச்சராக பதவியேற்ற பின் கலந்து கொண்ட முதல் நிகழ்ச்சி எங்கள் துறையைச் சார்ந்தது என்பதில், நாங்கள் மிகவும் பெருமை கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆம், ஆந்திர மாநிலம் குண்டூரில் நடைபெற்ற ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு இடையிலான, தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கச் சென்ற மாணாக்கர்களை வாழ்த்தி வழியனுப்பி வைத்தவர் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஆவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போட்டிகளில் தமிழக மாணாக்கர்கள் 50 பதக்கங்களைப் பெற்று தேசிய அளவில் 5-வது இடத்தைப் பெற்றதுடன் மாண்புமிகு முதல்வர் அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்தும் பெற்றனர்.

பள்ளி மாணாக்கர்களுக்கு, சதுரங்க விளையாட்டில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு மாவட்ட, மண்டல மற்றும் மாநில அளவில் போட்டிகள் நடத்தப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட 99 மாணாக்கர்கள், மாமல்லபுரத்தில் நடைபெற்ற 44-வது சர்வதேச சதுரங்க விளையாட்டுப் போட்டிகளை நேரில் கண்டுகளித்தனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியாரின் நீட்சியான நம் முதல்வர் அவர்களின் தொடர் நடவடிக்கையால்தான், நரிக்குறவர்கள் மற்றும் குருவிக்காரர்கள் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கப்பட்டார்கள் என்பதைக் கூற இந்நேரத்தில் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2021-2022 ஆம் ஆண்டு, 443 இருளர்களுக்கு வீடு வழங்க நிதி ஒதுக்கியதாகட்டும், 2022-2023 ஆம் ஆண்டு, அழிவின் விளிம்பிலுள்ள பண்டைய பழங்குடி மக்களுக்காக 1,094 வீடுகள் கட்ட நிதி ஒதுக்கியதாகட்டும், பத்மஸ்ரீ விருது பெற்ற, இருளர் பழங்குடி இனத்தைச் சார்ந்த திரு. வடிவேல் கோபால் மற்றும் திரு. மாசி சடையன் ஆகியோர்களை தலைமைச் செயலகத்திற்கு நேரில் அழைத்து சிறப்பித்தமையாகட்டும், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின்மூலம் கட்டப்பட்ட வீடுகளில், 227 பழங்குடியின குடும்பங்களுக்கான பங்குத் தொகையாக ரூபாய் 3.66 கோடி வழங்கியதாகட்டும், அரியலூர் மாவட்டத்திலுள்ள 16 கிராமங்களில் வாழும் இருளர் மக்களுக்கு 967 ஏக்கர் நிலப்பரப்பில் முந்திரி சேகரம் செய்வதற்கு சிறப்பினமாக, ரூபாய் 86.13 இலட்சம் வழங்கப்பட்டு, 500 குடும்பங்களைச் சேர்ந்த 2,000-க்கும் மேற்பட்ட

2023 ஏப்ரல் 18] [திருமதி என். கயல்விழி செல்வராஜ்]

கூலித் தொழிலாளிகளாக இருந்தவர்களை தற்போது தொழில் முனைவோராக மாற்றியதாகட்டும், இந்நிகழ்வுகளெல்லாம், பழங்குடியின விளிம்புநிலை மக்கள் மேல் மிகுந்த அக்கறை கொண்டது மாண்புமிகு முதல்வர் தலைமையிலான இவ்வரசு என்பதைத் தெள்ளத் தெளிவாகப் பறைசாற்றும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன உரிமைகள் அங்கீகரித்தல் சட்டம் 2006-ன்கீழ் 10,410 தனிநபர் உரிமைகளும், 528 சமுதாய உரிமைகளும் வழங்கப்பட்டுள்ளன. பழங்குடியினருக்கு வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழ்களில் மெய்த் தன்மையினைக் கூர்ந்தாய்வு செய்து, மே 2021 முதல் பிப்ரவரி 2023 வரை 1,064 சான்றிதழ்கள் மெய்த் தன்மை சரிபார்த்து வழங்கப்பட்டுள்ளன. பழங்குடியினர் பற்றிய விவரங்களைச் சேகரிக்கவும், அவர்களின் வாழ்க்கை முறை, கலாச்சாரம், மொழி, சமூக, பொருளாதார மற்றும் கல்வி நிலை குறித்து ஆராய்ச்சி செய்வதற்கும் பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் நீலகிரி மாவட்டத்தில், மு.பாலாடா என்ற இடத்தில் இயங்கி வருகிறது.

இரவு 8-00

பழங்குடியினர் ஆய்வு மைய வளாகத்தில் ரூபாய் 21 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக புகைப்பட அருங்காட்சியகம் திறந்து வைக்கப்பட்டது. பழங்குடியின சுதந்திரப் போராட்ட வீரர்களின் பங்கினைப் போற்றும்வகையில் பழங்குடியினர் பெருமை தினம் (Janjatiya Gaurav Divas) மாநில அளவில் சென்னையில் கொண்டாடப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துதல்; இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்குதல்; பள்ளிகள், விடுதிகள் மற்றும் சமுதாயக் கூடம் போன்ற கட்டுமானப் பணிகளை தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மேற்கொண்டு வருகிறது. 2022-2023 ஆம் நிதியாண்டில் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களின்கீழ், நிதியுதவி பெறுவதற்கான வருமான உச்ச வரம்பு ரூபாய் 2 இலட்சத்திலிருந்து ரூபாய் 3 இலட்சமாக உயர்த்தப்பட்டு, 19,042 ஆதி திராவிடர் மற்றும் 1,502 பழங்குடியினருக்கு ரூபாய் 171.82 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் 2022–2023 ஆம் ஆண்டு 7,098 பயனாளிகளுக்கு, தொழில் தொடங்க ரூபாய் 104.97 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

2022–2023 ஆம் நிதியாண்டில் 1,853 இளைஞர்கள் சுய தொழில் துவங்க ரூபாய் 32.17 கோடி நிதியுதவி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. 2022–2023 ஆம் நிதியாண்டில் கட்டுமானப் பிரிவின்கீழ், இதுவரை 111 பணிகள், ரூபாய் 24.32 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 312 பணிகள் ரூபாய் 239.57 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலமற்ற ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயத் தொழிலாளர்கள் விவசாய நிலம் வாங்க நிலத்தின் சந்தை மதிப்பில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூபாய் ஐந்து இலட்சம் மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்மூலம், 2022–2023 ஆம் ஆண்டு 37 பயனாளிகளுக்கு ரூபாய் 88.34 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

தாட்கோமூலம், 1,992 உறுப்பினர்கள் கொண்ட 166 மகளிர் சுய உதவிக் குழுக்கள் பயன்பெறும்வகையில் கூட்டுறவு வங்கிக்கு ரூபாய் 17.92 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. மருத்துவம், பொறியியல், செவிலியர் போன்ற முழுநேர பட்டப் படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு குறைந்த வட்டியில் கல்விக் கடன் வழங்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் 46 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு புதிய முயற்சியாக, தாட்கோமூலம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன்கூடிய கீழ்க்கண்ட சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன:

75 மாணாக்கர்களுக்கு, இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT) மெட்ராஸ் மூலம் நடத்தப்படும் இணையவழி இளங்கலை தகவல் அறிவியல் மற்றும் பயன்பாடு பட்டப் படிப்பில் சேர நுழைவுத் தேர்வுக்கான பயிற்சி; 148 மாணாக்கர்களுக்கு, HCL நிறுவனத்தில் ஓராண்டு கால உள்ளுறை பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புடன்கூடிய நுழைவுத் தேர்வுக்கான பயிற்சி; 152 இளைஞர்களுக்கு, வங்கிப் பணிகளுக்கான போட்டித் தேர்வுகளில் பங்கேற்பதற்கான பயிற்சி;

2023 ஏப்ரல் 18] [திருமதி என். கயல்விழி செல்வராஜ்]

300 மாணாக்கர்களுக்கு, மருத்துவக் குறியீடுக்கான (Medical Coding) பயிற்சி; 243 நபர்களுக்கு, மெட்ராஸ் இன்ஸ்டியூட் ஆப் டெக்னாலஜி, விண்வெளி ஆராய்ச்சி மையம்மூலம், ட்ரோன் இயக்குவதற்கான பயிற்சி; 490 மாணாக்கர்களுக்கு, விமான நிலைய வாடிக்கையாளர் சேவைக்கான பயிற்சி; 46 நபர்களுக்கு, அழகு நிலையங்களில் வேலைவாய்ப்பு பெறவும், சொந்தமாக அழகு நிலையங்கள் அமைப்பதற்கான பயிற்சி; 100 மாணாக்கர்களுக்கு IIT மற்றும் IIM போன்ற கல்வி நிறுவனங்களில் மேற்படிப்பு படிக்க, பொது நுழைவுத் தேர்விற்கான பயிற்சி போன்ற பயிற்சிகள் ரூபாய் 2.80 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன.

இரவு 8–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கையில் பங்குபெற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது பதிலுரையில் மானியக் கோரிக்கைக்குத் தேவையான தகவல்களைத் தந்து உதவிய தலைமைச் செயலாளர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களின் தனிச் செயலாளர், நிதித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் செயலாளர் திருமதி லட்சுமி பிரியா, I.A.S., ஆதி திராவிடர் நல இயக்குநர் திரு. ஆனந்த், I.A.S., தாட்கோவின் தலைவர் அண்ணன் திரு. உ. மதிவாணன், தாட்கோ மேலாண்மை இயக்குநர் திரு. கந்தசாமி, I.A.S., பழங்குடியினர் நல இயக்குநர் திரு. அண்ணாதுரை, CLS மற்றும் காவல் துறைத் தலைவர் திரு. பிரபாகரன், I.P.S. (சமூக நீதி மற்றும் மனித உரிமைகள்) ஆகியோருக்கும் மற்றும் அல்லும், பகலும் அயராது உழைத்து என்னோடு பணியாற்றிய துறை சார்ந்த அனைத்து அலுவலர்களுக்கும், எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு ஆதி திராவிடர் நலத் துறைக்கான புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன். நேரத்தின் அருமை கருதி புதிய அறிவிப்புகளின் தலைப்புகளை மட்டும் படிக்கிறேன். மீதமுள்ளவற்றை நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பில் புதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அறிவிப்புகள்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

1. வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 4 ஆதி திராவிடர் மாணாக்கர் விடுதிகளுக்கு ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் புதிய விடுதிக் கட்டடங்கள் கட்டப்படும்

ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கான உயர் கல்வி வாய்ப்புகளைப் பெருக்கிடவும், பாதுகாப்பாகத் தங்கி கல்வி பயிலவும், கல்வி அணுகு வழியை உறுதி செய்யவும் வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 4 ஆதி திராவிடர் மாணாக்கர் விடுதிகளுக்கு அனைத்து வசதிகளுடன்கூடிய புதிய விடுதிக் கட்டடங்கள் ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும். இதன்மூலம் 500 மாணாக்கர்கள் பயன்பெறுவர்.

2. விடுதிகளில் ஏற்படும் சிறு பராமரிப்பு, பழுதுபார்ப்பு மற்றும் மாணாக்கரின் எதிர்பாரா மருத்துவச் செலவினம் ஆகிய பணிகளை மேற்கொள்ள ரூ.7.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளில் உள்ள மின் விளக்குகள், மின் விசிறி, மின் மோட்டார், கிரைண்டர், மிக்ஸி ஆகிய மின் சாதனங்களின் சிறுபழுது நீக்கம் மற்றும் குடிநீர்க் குழாய், குளியலறை, கழிவறைகளின் பழுது நீக்கம், சுத்தம் செய்வதற்காக பொருட்கள் வாங்குதல், வண்டி வாடகை மற்றும் மாணாக்கருக்கு ஏற்படும் எதிர்பாரா விபத்து மற்றும் நோய்களுக்கான மருத்துவ சிகிச்சை ஆகிய செலவினங்களை விடுதிக் காப்பாளரே மேற்கொள்ளும் வகையில், ஒரு விடுதிக்கு தலா ரூ.50,000/- வீதம் ரூ.7.50 கோடி நிதி வழங்கப்படும். இதன்மூலம் 1,01,253 மாணாக்கர் பயன்பெறுவர்.

3. சென்னை மாவட்டத்தில் உள்ள 23 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளுக்கு ஒருங்கிணைந்த சமையலறை மூலம் சுகாதாரமான மற்றும் தரமான உணவு வழங்கும் திட்டம் ரூ.3.75 கோடி செலவில் செயல்படுத்தப்படும் (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை மாவட்டத்தில் உள்ள 19 ஆதி திராவிடர் நல கல்லூரி விடுதிகள், 3 பள்ளி விடுதிகள் மற்றும் 1 பழங்குடியினர்

நல கல்லூரி விடுதி என மொத்தம் 23 விடுதிகளில் தங்கிப் பயிலும் அனைத்து மாணாக்கருக்கும் சரிவிகித ஊட்டச்சத்து, சுவை மற்றும் சுகாதாரத்துடன்கூடிய உணவினை வழங்கிடும் வகையில், ஒருங்கிணைந்த சமையலறைமூலம் சுகாதாரமான மற்றும் தரமான உணவு வழங்கும் திட்டம் ரூ.3.75 கோடி செலவில் செயல்படுத்தப்படும். இதன்மூலம் 2,714 மாணாக்கர் பயன்பெறுவர்.

4. விடுதிகளில் சிறப்புப் பராமரிப்புப் பணிகள் மற்றும் கண்காணிப்புக் கேமரா, பயோமெட்ரிக் வருகைப் பதிவு வசதிகள் ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும் (மேசையைத் தட்டும் ஒலி)

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளைச் சீரான முறையில் பராமரித்து, மாணாக்கருக்கு கல்வி பயில நல்ல சூழலை உருவாக்கும் வகையில், பராமரிப்புப் பணிகள் மற்றும் கண்காணிப்பு கேமரா, பயோமெட்ரிக் வருகைப் பதிவுடன்கூடிய விடுதி மேலாண்மை அமைப்பு ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

5. கல்லூரி விடுதிகளில் நவீன வசதிகளுடன்கூடிய கற்றல் கற்பித்தல் அறை ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கும் கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கு கற்றல் சூழலை உயர்த்தவும், திறனை மேம்படுத்திக்கொள்ளவும், கணினி மற்றும் இணையதள இணைப்புடன்கூடிய நவீன கற்றல் கற்பித்தல் அறை முதற்கட்டமாக ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

6. விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணாக்கருக்கு ரூ.1.00 கோடி செலவில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும்

விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணாக்கரின் தேர்ச்சி விகிதத்தை அதிகரிக்க ரூ.1.00 கோடி செலவில் சிறப்புப் பயிற்சியும், திறன் மேம்பாட்டுப் பயிற்சியும் அளிக்கப்படும். இதன்மூலம் 23,112 மாணாக்கர் பயன்பெறுவர்.

[*திருமதி என். கயல்விழி செல்வராஜ்*] [*2023 ஏப்ரல் 18*

7. சென்னை சமூகப் பணி கல்லூரியில் (Madras School of Social Work) ரூ.2.00 கோடி மானியத்தில் சமூக நீதி மற்றும் சமத்துவ மையம் (Centre for Social Justice and Equity) நிறுவப்படும் *(மேசையைத் தட்டும் ஒலி)*

இம்மையத்தில் சமூக நீதி மற்றும் சமத்துவம் சார்ந்த சிந்தனைகளை வளர்ப்பதற்கான ஆராய்ச்சிப் படிப்புகள் மற்றும் சான்றளிக்கப்பட்ட பாடப் பிரிவுகள் தொடங்கப்படும். மேலும், சமூக நீதி மற்றும் சமத்துவம் சார்ந்த தகவல்களைச் சேகரித்தல், மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்துதல் மற்றும் ஆராய்ச்சிப் படைப்புகள் வெளியிடுதல் போன்ற பல செயல்பாடுகளுக்காக இம்மையம் நிறுவப்படும்.

8. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமைகள் குறித்த புகார் அளிக்கவும், சட்ட ஆலோசனைகள் வழங்கவும் தொழில்நுட்ப வசதியுடன்கூடிய உதவி மையம் ஏற்படுத்தப்படும்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமைகள் குறித்து புகார் அளிக்கவும், வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் தொடர்பான தகவல்கள் குறித்து சட்ட ஆலோசனை பெறவும், தேவையான உட்கட்டமைப்பு, மனித ஆற்றல் மற்றும் தொழில்நுட்ப வசதியுடன்கூடிய உதவி மையம் ஏற்படுத்தப்படும்.

9. அரசு சட்டக் கல்லூரியில் இறுதி ஆண்டு சட்டப் படிப்பு பயிலும் மாணாக்கருக்கு உட்பயிற்சி (Internship) உதவி

அரசு சட்டக் கல்லூரிகளில் இறுதி ஆண்டு பயின்றுவரும் 500 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கு அவர்களது பாடத் திட்டத்திற்கேற்ப உட்பயிற்சி (Internship) காலங்களுக்கான உதவி மற்றும் உதவித்தொகை ரூ.1.00 கோடி செலவில் வழங்கப்படும்.

10. தமிழ்நாட்டில் உள்ள 37 வகையான பழங்குடியினரின் சமூக பொருளாதார கணக்கெடுப்பு, இனவரவியல் ஆய்வு (Ethnography study)

அரசு நலத் திட்டங்களின் பலன்கள் பழங்குடியினருக்குச் சென்றடைவதை உறுதிப்படுத்தவும், புதிய திட்டங்களை

உருவாக்குவதற்கும் தரவுகள் இன்றியமையாததாகும். எனவே, அரசு சாரா தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து அடிப்படை கணக்காய்வு மேற்கொள்ளப்படும். மேலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் வசிக்கும் இரவலன், காடர், முத்துவன், மகாமலசர், மலசர் ஆகிய பழங்குடியினரின் இடப்பெயர்வினைத் தவிர்க்கவும், பழமை அழியாவண்ணம் காக்கவும், இனவரவியல் (Ethnography study) மற்றும் ஒலி/ஒளி ஆவணமாகப் பதிவு செய்யும் பணி ரூ.3.50 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

11. பழங்குடியினர் வசிக்கும் மலைப் பகுதியில் இணையதள இணைப்பு வசதி (Long Range Wireless Internet Connectivity)

இணையதள இணைப்பு மற்றும் அலைபேசி தொடர்பு வசதி (Internet Connectivity and Cell Phone Connectivity) கிடைக்கப் பெறாத பழங்குடியினக் குடியிருப்புகளுக்கு அவர்கள் வெளி வட்டார மக்களோடு தொடர்புகொள்வதற்கும், தொலை கல்வி, தொலை மருத்துவம் மற்றும் இ-சேவைகளைப் பெறுவதற்கும், பழங்குடியினர் வசிக்கும் மலைப் பகுதிகளில் இணையதள இணைப்பு வசதி (Long Range Wireless Internet Connectivity) ரூ.10.00 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

12. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைமூலம் செயல்படுத்தப்படும் அனைத்துத் திட்டங்களையும் கண்காணிக்க திட்ட கண்காணிப்பு அலகு ஏற்படுத்தப்படும்

திட்டங்கள் அனைத்தும்பயனாளிகளுக்குச்சென்றடைவதையும், ஒதுக்கப்படும் நிதி முழுமையாகச் செலவிடப்படுவதைக் கண்காணிக்கவும், தாட்கோமூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள், மாணாக்கரின் கல்வி நலனுக்காக வழங்கப்படும் கல்வி உதவித்தொகை, வன உரிமைச் சட்டம், 2006, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான சிறப்பு துணைத் திட்டம் போன்ற திட்டங்களின் செயலாக்கத்தினை கண்காணிக்க திட்ட கண்காணிப்பு அலகு (Project Monitoring Unit) ஏற்படுத்தப்படும்.

13. பழங்குடியினர் குடியிருப்புகளை நவீன கிராமங்களாக உருவாக்குதல்

[திருமதி என். கயல்விழி செல்வராஜ்] [2023 ஏப்ரல் 18

500-க்கும் அதிகமான பழங்குடியினர் வசிக்கக்கூடிய கிராமங்களில் 50 பழங்குடியின கிராமங்களைத் தேர்வு செய்து, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (SADP), மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி (SBGF) மற்றும் வனத் துறை ஆகிய துறைகளின் ஒருங்கிணைந்த திட்டங்களின் பங்களிப்புடன் நவீன கிராமங்களாக உருவாக்கப்படும்.

14. பழங்குடியினர் மக்களுக்கான வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டம்

பழங்குடியினரின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக தேனீ வளர்ப்பு, மருத்துவ மூலிகை வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, இயற்கை மிளகு விளைவித்தல், கோட்டா பானை தயாரித்தல், காளான் வளர்ப்பு, மூங்கில் தளவாடங்கள் தயாரித்தல், துரித உணவகங்கள் அமைத்தல் மற்றும் நரிக்குறவர்களுக்கான பிரத்தியேகமான கட்டமைப்புகள் போன்ற வருவாய் ஈட்டும் திட்டங்கள் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து ரூ.10.00 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

15. வீடற்ற 1,500 பழங்குடியின குடும்பங்களுக்கு ரூ.45.00 கோடி செலவில் வீடுகள் கட்டித் தரப்படும் (மேசையைத் தட்டும் ஒலி)

பொருளாதாரத்தில் பின்தங்கிய வீடற்ற 1,000 பழங்குடியினர் குடும்பங்கள் மற்றும் தற்போது பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள 500 நரிக்குறவர் குடும்பங்கள் என மொத்தம் 1,500 குடும்பங்களுக்கு வீடுகள் ரூ.45.00 கோடி மதிப்பீட்டில் தகுதியின் அடிப்படையில் கட்டித் தரப்படும்.

16. தூய்மைப் பணியாளர்களுக்கு தூய்மைப் பணியாளர் நல வாரிய மானியத்தின்மூலம் வீடுகள் வழங்கப்படும்

தூய்மைப் பணியாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள வீடற்ற 500 உறுப்பினர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வீடுகள் தூய்மைப் பணியாளர் நல வாரிய மானியத்துடன் ரூ.55.00 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

17. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் எழுத்தாளர்களின் சிறந்த தமிழ் படைப்புகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படும்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குறித்த ஆய்வுகளுக்கு உதவிடவும், இச்சமூகங்கள் தொடர்பான கலை, பண்பாடு,

2023 ஏப்ரல் 18] [திருமதி என். கயல்விழி செல்வராஜ்]

கலாச்சாரம், இலக்கியம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் சிறந்த எழுத்தாளர்களின் தமிழ் படைப்புகள் உலகளவில் வசிக்கும் மக்களைச் சென்றடைந்திடும் வகையில் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்படும்.

18. மாணாக்கர் விடுதிகளில் மன்றங்கள் அமைத்தல்

மாணாக்கர் விடுதிகளில் மாணவர்களின் சமூகத் திறன்களை வளர்த்துக் கொள்ளவும், ஆர்வத்தினைக் கண்டறிந்து, அதன் வாயிலாக தன்னம்பிக்கையை வளர்க்கவும், இசை மற்றும் கவின் மன்றங்கள், வாசித்தல் மன்றங்கள், புகைப்படக்கலை மன்றங்கள், சுற்றுச்சூழல் மன்றங்கள், சதுரங்கம், விவாதம், நாடகம், இசை, தகவல் தொழில்நுட்பம் போன்ற புத்துணர்வு அளிக்கும் செயல்களில் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் வகையில் மன்றங்கள் உருவாக்கப்படும்.

19. வெளிநாடுகளில் கல்வி பயிலுவோருக்கான கல்வி உதவித் திட்டம் இரண்டு திட்டக் கூறுகளாக திருத்தி அமைக்கப்படும்

வெளிநாடுகளில் கல்வி பயிலுவோருக்கான கல்வி உதவித் திட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்டுள்ள வருமான உச்ச வரம்பு இரண்டு கூறுகளாக மாற்றி அமைக்கப்படுகிறது. திட்டம் ஒன்றில் ரூ.8.00 இலட்சத்திற்குக் குறைவாக ஆண்டு வருமான உச்ச வரம்பு உள்ள மாணாக்கருக்கு படிப்பின் அடிப்படையில் ஆண்டிற்கு ரூ.36.00 இலட்சத்திற்கு மிகாமலும், திட்டம் இரண்டில் ரூ.8.00 இலட்சத்திற்குமேல் ரூ.12.00 இலட்சத்திற்குக் குறைவாக ஆண்டு வருமான உச்ச வரம்புள்ள மாணாக்கருக்கு ரூ.24.00 இலட்சத்திற்கு மிகாமலும் கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.

20. பணிபுரியும் மகளிருக்கான விடுதிகளை தமிழ்நாடு பணிபுரியும் மகளிருக்கான விடுதி நிறுவனம்மூலம் மேம்படுத்துதல்

*நகரப் பகுதிகளில் பணிபுரியும் மகளிரின் தங்குமிடத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், பாதுகாப்பை உறுதி செய்யவும், தமிழ்நாடு பணிபுரியும் மகளிருக்கான விடுதி நிறுவனத்துடன் (*Tamil Nadu Working Women's Hostel Corporation*) இணைந்து, துறையின் விடுதிகள் ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.*

[திருமதி என். கயல்விழி செல்வராஜ்] [2023 ஏப்ரல் 18

21. 12 ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் மாணாக்கருக்கு உயர் தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேர்வதற்கான நுழைவுத் தேர்விற்கான பயிற்சிகள்

12 ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் மாணாக்கர், உயர் தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேர்வதற்கான, JEE/NEET/CLAT/English *ஆகிய நுழைவுத் தேர்வுகளுக்கான பயிற்சிகள் சிறந்த பயிற்சி நிறுவனங்கள்மூலம் அளிக்கப்படும்.*

22. தாட்கோமூலம் வாழ்வாதார மேம்பாட்டிற்கான திறன் பயிற்சிகள்

விளிம்பு நிலையிலுள்ள மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கான திறன் மேம்பாடு, சுய தொழில் தொடங்குவதற்கான குறுகிய/நீண்ட காலப் பயிற்சி, தொழில்முனைவோருக்கான மேம்பாட்டுத் திட்டம், உலகளாவிய திறன் பயிற்சிகள் தாட்கோமூலம் வழங்கப்படும்.

23. மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் மானியத் தொகையை உயர்த்துதல்

மகளிரின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும், முன்னேற்றத்திற்கான அடிப்படை வருவாய் ஈட்டும் தொழில்களை மேற்கொள்ளவும், தற்போது தாட்கோமூலம் வழங்கப்பட்டுவரும் ரூ.2.50 இலட்சம் மானியத் தொகை ரூ.6.00 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

24. மகளிர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களை நவீனப்படுத்துதல் மற்றும் உருவாக்குதல்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மகளிரின் வாழ்க்கைத் தரம் மேன்மையடையும் வகையில், மகளிரை உறுப்பினர்களாகக் கொண்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் புதிதாக உருவாக்கப்படும். ஏற்கெனவே இயங்கிவரும் மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நவீனப்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் 5,000 மகளிர் பயனடையும் வகையில் ரூ.1.25 கோடி மானியம் வழங்கப்படும்.

25. தாட்கோமூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் திருத்தி அமைக்கப்படும்

தாட்கோமூலம் தற்போது செயல்படுத்தப்பட்டுவரும் பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள், ஆதி திராவிடர் மற்றும்

2023 ஏப்ரல் 18] *[திருமதி என். கயல்விழி செல்வராஜ்]*

பழங்குடியின இளையோரின் வாழ்வாதாரத்தினை உயர்த்திட உதவிடும் பொருட்டு தற்காலத்திற்கு ஏற்ற வகையில் திருத்தி அமைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் சிலர் கோரிய கருத்துகளுக்கு சுருக்கமான விடையை அளிக்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. *பாலாஜி அவர்கள் ஆதி திராவிடர் இளைஞர்களுக்கு தாட்கோமூலம் தொழில் தொடங்க வழங்கப்படும் தொகையை ரூ.50 இலட்சமாக உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கை குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, முடிவெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், ஆதி திராவிடர் நலப் பள்ளிகளை பள்ளிக் கல்வித் துறையுடன் இணைக்கும்போது ஆசிரியர்களின் பணிப் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என்று மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் தெளிவாகத் தெரிவித்துள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் ஆசிரியர்கள்மீதும், அரசுப் பணியாளர்கள்மீதும் மிகுந்த அக்கறை கொண்டவர்கள். அதனால் பள்ளிக் கல்வித் துறையில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும், காப்பாளர்களுக்கும் அவர்களுடைய பணி உயர்விற்கோ, பணி மாறுதலுக்கோ எந்தவிதப் பிரச்சினையும் ஏற்படாமல் சரி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

இரவு 8–10

அதுபோல ஆதி திராவிட நல விடுதிகளில் சமையலர்கள் பற்றி சொல்லியிருந்தீர்கள். ஆதி திராவிடர் நல விடுதிகளில் சமையலராக கடந்த 2019–2021 வரையிலான காலத்தில் 17 மாவட்டங்களில் 522 பேர் தேர்வு செய்யப்பட்டனர். இதுதொடர்பாக பல்வேறு புகார்கள் வரப்பெற்றதன் அடிப்படையில் இத்துறையின்மூலம் விரிவான விசாரணை செய்யப்பட்டு, 133 பேர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, பணி நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவ்வாறு பணி நீக்கம் செய்யப்பட்ட நபர்கள் சிலர் சென்னை மற்றும் மதுரை உயர் நீதிமன்றத்தில், நீதிமன்றத் தடையாணை மற்றும் மறு விசாரணை என்ற தீர்ப்பினைப் பெற்றதன் அடிப்படையில் தீர்ப்பாணையில் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், திருச்சி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களிலிருந்து, சமையலராக நியமனம்

செய்யப்பட்டவர்கள் தொடர்பாக மதுரை உயர் நீதிமன்றக் கிளை தீர்ப்பாணையின்மீது AAG அவர்களின் கருத்துரையினைப் பெற்று துறை சார்பில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் அவ்வழக்குகளில் அதன் இறுதித் தீர்ப்பிற்கு ஏற்றவாறு துறையால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ராஜகுமார் அவர்கள் மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலகத்தைப் பற்றி சொன்னார்கள். மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலகம் அந்தந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில்தான் இயங்க வேண்டும். புதியதாகப் பிரிக்கப்பட்ட நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்களில் Special Tahsildar Office மட்டும்தான் ஒரே இடத்தில் இருந்தது. அதைப் பிரிப்பதற்குத்தான் நாம் G.O. போட்டிருக்கிறோமேயொழிய மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலகம் அந்தந்த மாவட்டங்களில்தான் இயங்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முடித்துவிடுங்கள். வெட்டுத் தீர்மானத்தையெல்லாம் திரும்ப வாங்கச் சொல்லுங்கள்.

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்: ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கைமீது மாண்புமிகு உறுப்பினர்கள் 108 பேர் 123 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளனர். இந்த வெட்டுத் தீர்மானங்களை நான் படித்துப் பார்த்தேன். இந்த மானியக் கோரிக்கை தொடர்பாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் வழங்கிய கருத்துக்களுக்கு வேண்டிய விளக்கங்களை அளித்துள்ளேன் என்று நம்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களில் சுட்டிக்காட்டிய ஆலோசனைகளை நன்கு பரிசீலனை செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையைப் பெற்று, உரிய வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, வெட்டுத் தீர்மானங்களை அளித்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அவற்றைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, இம்மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2023 ஏப்ரல் 18] [திருமதி என். கயல்விழி செல்வராஜ்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இசையோ! வசையோ! தமிழால் கிட்டட்டும்!
இசையோ! வசையோ! தலைவர் மனம் சொல்லட்டும்!
தனியாத உழைப்போடு!
தளபதி தம் வழியோடு!
அவர் வழித்தடமே, எம் வழித்தடமாய்!
எளியோர்கள் ஏற்றம் பெற,
இலக்கினை எய்திடவே!
உழைத்திடுவேன் உறுதியோடு. நன்றி! வணக்கம்!

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,995,81,74,000/–, மூலதனக் கணக்கில் ரூ.497,02,81,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (19–4–2023), புதன்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை இரவு 8-14 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

—

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

101. 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து 6-10-2021 ஆம் நாளிட்ட வணிக வரிகள் மற்றும் பதிவு (எம்1)த் துறையின் அரசாணை நிலை எண் 126 இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1975) 58(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

102. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் தணிக்கை அறிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 80(9) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்–ஆங்கிலம்)

103. 2019–2020 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் தணிக்கை அறிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 80(9) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்–ஆங்கிலம்)

104. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் தணிக்கை அறிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 80(9) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்–ஆங்கிலம்)

105. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தணிக்கை அறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்குகள். [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1959) 24(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

2023 ஏப்ரல் 18]

106. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் நாற்பத்து ஏழாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1) (b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

298. மானியக் கோரிக்கை எண் 19–மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

299. மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2022–2023. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

300. மானியக் கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

301. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய வரவு செலவு செயலாக்கத் திட்டம், 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

302. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய மக்கள் சாசனம், 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

303. மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் ‘தொலைநோக்குத் தலைமை-தொடரும் தகைமை..!’ என்கிற சிறுநூல். (தமிழ்)

304. சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் ‘ஈராண்டு சாதனைகள் தொகுப்பு 2021–2023’ என்கிற சிறுநூல். (தமிழ்)

305. மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

306. சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

••••

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 18]

இணைப்பு-I

(*118 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.*)

மானியக் கோரிக்கை எண் 19-மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

அத்தியாயம்-1

அறிமுகம்

பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிவ் வைந்து (*குறள் 738*)

நோயில்லாதிருத்தல், செல்வம், விளை பொருள், வளம், இன்ப வாழ்வு, நல்ல காவல் இந்த ஐந்தும் நாட்டிற்கு அழகு என்று கூறுவர்.

1.1 பல்வேறு சுகாதாரக் குறியீடுகளில் முதல் மூன்று மாநிலங்களின் வரிசையில் தமிழ்நாடு உள்ளது. பல ஆண்டுகளாகத் தமிழ்நாடு முழுவதும் வலுவான பொது சுகாதாரக் கட்டமைப்பு, தனியான பொது சுகாதார மருத்துவப் பணியாளர்கள், திறமையான மனித வளங்கள், போதுமான கிராம, வட்டார, வட்ட, மாவட்ட மற்றும் உயர் நிலை மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மருத்துவ நிலையங்களைத் தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ளது. நாட்டிலேயே முன்னோடியான மருந்து கொள்முதல் மற்றும் விநியோக முறை, ஏழைகளுக்கான முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் (CMCHIS), *திறமையான மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பணியாளர்களைத் தேர்ந்தெடுக்கும் வெளிப்படையான பணியாளர் தேர்வு முறை, நாட்டிலேயே அதிக எண்ணிக்கையிலான அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைகள் மற்றும் பல்வேறு மருத்துவ முன்னோடித் திட்டங்கள் மற்றும் முயற்சிகள் ஆகியவை வெகுவாக அனைவராலும் பாராட்டு பெற்றுள்ளன.*

1.2 சமீபத்திய தொற்றுநோயான கோவிட்-19 உலகளாவிய சுகாதாரக் கட்டமைப்பின் தயார்நிலை குறித்து உலகின் பல்வேறு நாடுகளை சோதித்த நிலையிலும், பல சவால்கள் இருந்தபோதிலும், அவற்றை எதிர்கொண்டு பொதுமக்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யும்வகையில், தமிழ்நாடு போதுமான சுகாதார உள்கட்டமைப்பை மேம்படுத்தி, கொரோனா நோய் மேலாண்மையை மேம்படுத்தியது.

1.3 கோவிட்-19 நோய்த் தொற்றின் தீவிரம் காரணமாக, உலகம் முழுவதும் பல்வேறு சுகாதார அமைப்புகளும் கோவிட்-19 தொற்றினை எதிர்கொள்வதில் மட்டுமே கவனம் செலுத்தின. அதிகரித்து வரும் தொற்றா நோய்களை (NCDs) குறிப்பாக இணைநோய்களைக் கட்டுப்படுத்துவதன் அவசியத்தை உணர்ந்து, கோவிட்-19 நோய்த் தொற்று காலத்தில் மாநில அரசு "மக்களைத் தேடி மருத்துவம்" (MTM) என்ற புதுமையான முன்னோடி மாதிரித் திட்டத்தை தொடங்கி வைத்தது. இத்திட்டத்தின்மூலம் இதுவரை ஒரு கோடிக்கும் அதிகமான சர்க்கரை நோய், இரத்த கொதிப்பு உள்ளிட்ட தொற்றா நோயுள்ளோர் கண்டறியப்பட்டு பயன் பெற்று வருகின்றனர். மேலும், இத்திட்டம் அனைவரையும் சென்றடையும்வகையில் 8.53 இலட்சம் தொழிலாளர்களை உள்ளடக்கிய, 711 தொழிற்சாலைகளில், தொழிற்சாலை வளாகத்திலேயே சுகாதாரப் பரிசோதனை முகாம்கள் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1.4 நம் மாநிலம் விரிவான சாலை கட்டமைப்பு கொண்டுள்ளது. சாலை விபத்துகளால் ஏற்படும் உயிர் இறப்புகளைக் குறைப்பதற்காக மாநிலத்தில் "இன்னுயிர் காப்போம்: நம்மைக் காக்கும் 48" என்ற கட்டணமில்லா அவசர மருத்துவச் சிகிச்சைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

1.5 குழந்தை இறப்பு விகிதம் (IMR) மற்றும் தாய்மார்கள் இறப்பு விகிதம் (MMR) ஆகியவற்றை குறைப்பதில் தமிழ்நாடு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது. குழந்தை இறப்பு விகிதம் (IMR) மற்றும் தாய்மார்கள் இறப்பு விகித (MMR) குறியீடுகளில், 2030 ஆம் ஆண்டுக்குள் அடைய வேண்டிய நிலையான வளர்ச்சி இலக்கினை (SDG), தமிழ்நாடு ஏற்கெனவே எட்டியுள்ளது. சமூக, மருத்துவமனை, மாவட்ட மற்றும் மாநில அளவில், குழந்தை மற்றும் தாய்மார்கள் இறப்பை வளர்ந்த

2023 ஏப்ரல் 18]

நாடுகளுக்கு இணையாகக் குறைப்பதற்கு, இறப்பு தணிக்கை மேற்கொள்ளப்பட்டு, புதிய கவனம் செலுத்தப்படுகிறது.

1.6 உலகளவில், கோவிட்-19 தொற்றினால் மன நலம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. தனி நபரின் நலவாழ்வில் மன நலத்தின் பங்கைக் கருத்தில் கொண்டு, மன நலத்தை வலுப்படுத்துவதற்காக மாநில அரசு “மனம்” என்ற புதிய திட்டத்தினைக் கல்வி நிலையங்களில் தொடங்கியுள்ளது. மேலும், தேவையானவர்களுக்குத் தொலைபேசி வழி ஆலோசனை வழங்கும் கட்டமைப்பை மேம்படுத்தியுள்ளது.

1.7 சுகாதாரக் கட்டமைப்பினை மேலும், மேம்படுத்தும்வகையில் மாநிலம் முழுவதும் நகர்ப்புறப் பொது சுகாதாரக் கட்டமைப்பு விரிவுபடுத்தப்படுகிறது. மேலும், உயர்தர சிகிச்சை வசதிகளை வழங்குவதற்காக சென்னை, கிண்டியில் உள்ள கிங் நோய்த் தடுப்பு ஆராய்ச்சி மைய வளாகத்தில் 1,000 படுக்கை வசதியுடன், கலைஞர் நினைவு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை கட்டப்பட்டு வருகிறது. மேலும், மதுரை, கோயம்புத்தூர், சென்னை-கீழ்ப்பாக்கம் ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மொத்தம் 1,020 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

1.8 அவசரச் சிகிச்சையை வலுப்படுத்துவதற்காக, மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் அவசரச் சிகிச்சைத் துறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. மாநில மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள பல்வேறு இரண்டாம் நிலை மற்றும் உயர் நிலை மருத்துவ நிலையங்களில், தமிழ்நாடு விபத்து மற்றும் அவசரச் சிகிச்சை மையங்கள் (TAEI) அமைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு முழுவதும் தரமான அவசரச் சிகிச்சையை மேம்படுத்தும் விதமாக 2,099 ICU படுக்கைகளுடன்கூடிய கண்காணிப்புக் கணினிகள் கொண்ட உயர் சார்பு அலகுகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு, மாநிலம் முழுவதும் உபயோகத்தில் உள்ளன.

1.9 மக்கள் வாழும் குடியிருப்புகளிலேயே மருத்துவ வசதி பெறுவதற்கு, 70 கோடி ரூபாய் செலவில் 389 நடமாடும் மருத்துவமனை வாகனங்கள் வழங்கப்பட்டு, செயல்பாட்டில் உள்ளன. இதன்மூலம் தொலைதூர மற்றும் பழங்குடியினர்

பகுதிகளில் வசிக்கும் மக்களுக்குத் தங்கள் வாழ்விடங்களிலேயே மருத்துவச் சேவைகளைப் பெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

1.10 சுகாதாரத் துறையில் திட்டங்கள் குறித்து முடிவெடுப்பதைப் பரவலாக்க மாநில அரசு, முன்னோடி முயற்சியாக, மாவட்டம் மற்றும் மாநில அளவில் சுகாதாரக் கூட்டங்களை, நடத்தி புதிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இது அனைவராலும் வெகுவாகப் பாராட்டப்பட்டு வருகிறது.

1.11 சித்த மருத்துவ முறையின் பிறப்பிடமாகத் தமிழ்நாடு அறியப்படுகிறது. மாநில அரசு, சித்தா மற்றும் இதர இந்திய முறை மருத்துவ வசதிகளுடன் இணைந்த மருத்துவமனைகளை மாநிலம் முழுவதும் அமைத்துள்ளது. மேலும், நாட்டிலேயே முதன்முறையாக சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் அமைப்பதற்கான நடவடிக்கையை எடுத்து வருகிறது. பாளையங்கோட்டையில் உள்ள முதல் சித்த மருத்துவக் கல்லூரி, நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

1.12 அரசு மற்றும் தனியார் சுகாதார நிறுவனங்களில் உயர்தர அறுவைச் சிகிச்சைகள் கிடைப்பதை உறுதி செய்வதற்காக, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீடுத் திட்டத்தின் (CMCHIS) வருமான வரம்பு, குடும்பத்திற்கு ஆண்டுக்கு ரூ.1.20 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டம் முன்மாதிரித் திட்டமாகப் பல மாநிலங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த நிதி ஆண்டில் (2022-23) இந்தத் திட்டத்தின்கீழ் ரூ.1,329 கோடி செலவில் 10,25,550 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

1.13 தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவ மற்றும் சுகாதார வசதிகளின் விவரம் பின்வருமாறு:

வ. எண்	விவரம்	அலகுகள்
1	அரசு மருத்துவக் கல்லூரிகள்	36
2	மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்த மருத்துவமனைகள்	62

2023 ஏப்ரல் 18]

வ. எண்	விவரம்	அலகுகள்
3	தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை	1
4	தமிழ்நாடு அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை	2
5	மாவட்டத் தலைமை மருத்துவமனைகள்	37
6	வட்டம்/வட்டம் சாரா மருத்துவமனைகள்	256
7	ஆரம்ப சுகாதார நிலையங்கள்	1,830
8	துணை சுகாதார நிலையங்கள்	8,713
9	நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் (சென்னை மாநகராட்சி உட்பட)	487
10	தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனைகள்*	10
11	தொழிலாளர் ஈட்டுறுதி மருந்தகங்கள்*	235
12	இந்திய முறை மருத்துவ மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள்	1,541

(*தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை)

1.14 2023-24 ஆம் ஆண்டுக்கான மருத்துவம்-மக்கள் நல்வாழ்வுத் துறையின் மானியக் கோரிக்கை எண் 19-ல் இயக்ககம் வாரியாக அளிக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு விவரம் பின்வருமாறு:

வ. எண்	துறையின் பெயர்	தொகை (ரூபாய் கோடியில்)
1	மருத்துவம்-மக்கள் நல்வாழ்வுத் துறை, தலைமைச் செயலகம்	18.44
2	மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககம்	1,807.75

வ. எண்	துறையின் பெயர்	தொகை (ரூபாய் கோடியில்)
3	மருத்துவக் கல்வி இயக்ககம்	6,344.76
4	பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்ககம்	3,895.48
5	குடும்ப நல இயக்ககம்	211.07
6	தமிழ்நாடு உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்து நிருவாக இயக்ககம்	96.06
7	இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்ககம்	461.68
8	தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்துத் துறை	37.17
9	பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டம்	3,463.84
10	தமிழ்நாடு சுகாதாரத் திட்டம்	2,324.44
	மொத்தம்	18,660.69

அ) மேற்சொன்ன நிதி ஒதுக்கீடு தவிர, பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்படும் மருத்துவத் துறை சம்பந்தப்பட்ட கட்டடப் பணிகளுக்காக ரூ.205.84 கோடி, மானியக் கோரிக்கை எண் 39-ன்கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆ) தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மானியக் கோரிக்கை எண் 32-ல் தொழிலாளர் ஈட்டுறுதித் திட்ட மருத்துவமனைகளுக்காக ரூ.664.73 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

1.15 பொது சுகாதார நிலையங்களை மேம்படுத்துவதும், மருத்துவர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்களின் திறன்களை மேம்படுத்துவதும், மருத்துவக் கல்வியின் தரத்தில் உயர்நிலையை எட்டுவதும், ஏழைகளுக்கும், தேவையானவர்களுக்கும் இலவசமான மற்றும் தரமான மருத்துவச் சேவையை வழங்குவதும் அரசின் குறிக்கோளாகும்.

2023 ஏப்ரல் 18]

அத்தியாயம்—2

மருத்துவ நிருவாகம்

2.1 தமிழ்நாடு அரசு பல நிறுவனங்களை அமைத்துள்ளது. இவை அனைத்தும் இந்திய அளவில் முன்மாதிரி நிறுவனங்களாக உருவெடுத்துள்ளன. மேலும், மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டில் கீழ்க்கண்ட இயக்குநரகங்கள், வாரியங்கள் மற்றும் கழகங்கள் செயல்பட்டு வருகின்றன:

- மருத்துவக் கல்வி இயக்ககம்–மருத்துவக் கல்வி மற்றும் உயர்நிலை மருத்துவச் சேவைகளை வழங்குகிறது.
- மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககம் – மாவட்ட மற்றும் வட்ட அளவில் மருத்துவச் சேவை மற்றும் பல்வேறு சட்டம் மற்றும் ஒழுங்குமுறை விதிகளை செயல்படுத்துகிறது.
- பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்ககம் – பொது சுகாதாரம் பேணுதல் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவச் சேவைகளை வழங்குகிறது.
- இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்ககம் – சித்தா, ஆயுர்வேதா, யோகா & இயற்கை மருத்துவம், யுனானி மற்றும் ஓமியோபதி ஆகிய இந்திய மருத்துவ முறைகளில் மருத்துவக் கல்வி மற்றும் மருத்துவச் சேவைகளை வழங்குகிறது.
- குடும்ப நல இயக்ககம்–குடும்பக் கட்டுப்பாடு தொடர்பான திட்டங்களைச் செயல்படுத்துகிறது.
- உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து கட்டுப்பாடு நிருவாக ஆணையரகம் – உணவு பாதுகாப்பு, தர நிர்ணயம் மற்றும் மருந்து கட்டுப்பாடு நிருவாகம் என்ற இரு துறைகளின் வாயிலாக செயல்படுத்தப்படுகிறது.
- தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்துத் துறை– இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள இயக்ககங்களின் வாகனங்களைப் பராமரித்தல் மற்றும் பேணிக் காத்தலில் கவனம் செலுத்துகிறது.

- மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம்-இத்துறை பல்வேறு மருத்துவப் பணியாளர்களை விரைவாகவும், வெளிப்படையாகவும் தேர்ந்தெடுக்கிறது.

- தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் – அனைத்து அரசு மருத்துவ நிலையங்களுக்கும் தேவையான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களைக் கொள்முதல் செய்து வழங்கும் பணிகளை மேற்கொள்கிறது. மேலும், மருத்துவ உபகரணங்களையும் பராமரிக்கிறது.

- தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகம் – இந்திய மருத்துவ முறைகளுக்குத் தேவையான மருந்துகளைத் தயாரித்தல் மற்றும் அரசு ஆயுஷ் மருத்துவ நிலையங்களுக்கு மருந்துகளை விநியோகம் செய்யும் பணிகளை மேற்கொள்கிறது.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின்கீழ் இயங்கும் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககத்தின் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி (ESI) மருத்துவமனைகளுக்குத் தேவையான பணியாளர்களை மருத்துவம்-மக்கள் நல்வாழ்வுத் துறை வழங்குகிறது.

2.2 மேற்கண்ட இயக்ககங்கள் தவிர, கீழ்க்காணும் குழுமங்கள், சங்கங்கள் மற்றும் குறிப்பிட்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

- தேசிய நலவாழ்வுக் குழுமம்-மாநில நலவாழ்வுச் சங்கம்
- தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடுச் சங்கம்
- தமிழ்நாடு தேசிய பார்வை இழப்பு தடுப்புச் சங்கம்
- தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டம்
- தேசிய மன நலத் திட்டம்
- பூச்சிகளால் பரவும் நோய்களுக்கான தேசிய கட்டுப்பாடுத் திட்டம்
- நாடு தழுவிய தடுப்பூசித் திட்டம்

2.3 மன்றங்கள் (Councils): தமிழ்நாட்டில் தகுதியான மருத்துவம், செவிலியர் பணி மற்றும் மருத்துவம் சார்ந்த தொழிற்கல்வி பயின்றவர்கள் பதிவு செய்யவும், அவர்களின்

2023 ஏப்ரல் 18]

சேவையை முறைப்படுத்தவும் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் பல்வேறு சட்டங்கள்மூலம் கீழ்க்கண்ட மன்றங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன:

- *தமிழ்நாடு மருத்துவ மன்றம்*
- *தமிழ்நாடு பல் மருத்துவ மன்றம்*
- *தமிழ்நாடு செவிலியர் மற்றும் தாதியர் மன்றம்*
- *தமிழ்நாடு மருந்தக மன்றம்*
- *தமிழ்நாடு சித்த மருத்துவ மன்றம் (சித்தா மற்றும் மரபுவழி மருத்துவர்கள்)*
- *இந்திய முறை மருத்துவக் குழுமம் (ஆயுர்வேதா, யுனானி மற்றும் யோகா & இயற்கை வைத்தியம்)*
- *தமிழ்நாடு ஓமியோபதி மன்றம்*
- *தமிழ்நாடு மாநில இயன்முறை மருத்துவ மன்றம்*

2.4 மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களின் வகைப்பாடு: *மாநிலத்தில் உள்ள பல்வேறு மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:*

i. அரசு—பொது மருத்துவ நிலையங்கள்: *மாநில நிதியிலிருந்து பராமரிக்கப்படும் நவீன மருத்துவம் மற்றும் இந்திய முறை மருத்துவ நிறுவனங்கள் அனைத்தும் மாநில அரசால் நேரடியாக நிருவகிக்கப்படுகின்றன. இவை மருத்துவச் சேவை வழங்குவதில் முதுகெலும்பாகத் திகழ்கின்றன. முதல் நிலையில், சராசரியாக 5,000 மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற முறையில் 8,713 துணை சுகாதார நிலையங்களும், அடுத்த நிலையில் சராசரியாக 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற முறையில் 1,830 ஆரம்ப சுகாதார நிலையங்களும் உள்ளன. மாநிலத்தில் ஆரம்ப சுகாதாரச் சேவை நிலையங்களுக்கு மேல், வட்டம் மற்றும் மாவட்ட அளவிலும் மற்றும் மருத்துவக் கல்லூரியோடு இணைந்த மருத்துவமனைகளும் அமைந்துள்ளன. மாநிலத்தில் சென்னை மாநகராட்சி உட்பட, நகரப் பகுதிகளில் 487 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களும், சென்னை*

மாநகராட்சியில் 15 சமுதாய சுகாதார மையங்களும் செயல்படுகின்றன. மேலும், 256 வட்ட மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகள், 37 மாவட்டத் தலைமை மருத்துவமனைகளும் மற்றும் 36 அரசு மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்த 62 மருத்துவமனைகளும் செயல்படுகின்றன.

ii. **அரசு-சிறப்பு மருத்துவ நிலையங்கள்:** பொது மக்களுக்குச் சிறப்பு சேவைகளை அளிக்கும் அரசுத் துறைகளான காவல் துறை உள்ளிட்ட, மாநில அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் கழகங்கள்/நிறுவனங்கள் போன்றவற்றிற்கான மருத்துவமனைகள் மற்றும் தொழிலாளர் ஈட்டுறுதிக் கழக மருத்துவமனைகள் போன்ற சிறப்பு மருத்துவ நிலையங்கள், 10 தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழக மருத்துவமனைகள் மற்றும் 235 தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழக மருந்தகங்களும் இதில் அடங்கும்.

iii. **உள்ளாட்சி அமைப்புகளின் கீழுள்ள மருத்துவ நிலையங்கள்:** மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் நிருவாகக் கட்டுப்பாட்டில் உள்ள மருத்துவ நிலையங்கள் இப்பிரிவின்கீழ் அடங்கும். நகர்ப்புறத்தில் பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப மருத்துவ வசதிகளை வழங்குவதற்காக நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புற சமுதாய நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

iv. **அரசு நிதியுதவியுடன் இயங்கும் தனியார் மருத்துவமனைகள்:** தனியார் பங்களிப்புடனும், அரசு நிதியுதவியுடனும் செயல்படும் தனியார் மருத்துவமனைகள்.

v. **அரசு நிதியுதவியின்றி இயங்கும் தனியார் மருத்துவமனைகள்:** தனி நபர்களாலும், நிறுவனங்களாலும் நடத்தப்படும் அனைத்து மருத்துவமனைகள், மருந்தகங்கள் மற்றும் மருத்துவ நிலையங்கள்.

TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 18]

அத்தியாயம் – 3

மருத்துவக் கல்வி

3.1 மருத்துவக் கல்வி இயக்ககம், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககத்திலிருந்து 1966 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டு, தனி இயக்ககமாகச் செயல்பட்டு வருகிறது. இந்த இயக்ககம் நவீன மருத்துவத் துறையில் புதுமையான முறையில் மருத்துவச் சேவை, கல்வி கற்பித்தல், பயிற்சி மற்றும் ஆராய்ச்சி ஆகியவற்றை வழங்க உறுதிபூண்டுள்ளது. மருத்துவம், செவிலியர் மற்றும் பல் மருத்துவப் படிப்புகளுக்கு மாணவர்கள் சேர்க்கை தேர்வுக் குழுமூலம் நடத்தப்படுகிறது.

3.2 **நிருவாக அமைப்பு:** *மருத்துவக் கல்வி இயக்குநர், இவ்வியக்ககத்தின் தலைவர் ஆவார். மருத்துவக் கல்லூரிகள் மற்றும் அதனுடன் இணைந்த மருத்துவமனைகளையும், உயர் சிறப்பு மருத்துவமனைகளையும் இவர் நிருவகித்து வருகிறார். மருத்துவக் கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளை அந்தந்த முதல்வர்களும், அதனுடன் இணைந்த அரசு மருத்துவ நிலையங்களை இயக்குநர்கள்/ கண்காணிப்பாளர்கள் நிருவகித்து வருகின்றனர்.*

மருத்துவக் கல்வி இயக்ககத்தின்கீழ் இயங்கி வரும் மருத்துவக் கல்லூரிகள்/மருத்துவமனை தொடர்பான விவரங்கள் பின்வருமாறு:

அரசு மருத்துவக் கல்லூரிகள்	36
அரசு பல் மருத்துவக் கல்லூரி	2
அரசு மருந்தாளுநர் கல்லூரி (பி.பார்ம்)	2
அரசு இயன்முறை மருத்துவக் கல்லூரிகள்	3
அரசு செவிலியர் கல்லூரிகள்	6
செவிலியர் பயிற்சிப் பள்ளிகள்	25
மருத்துவமனைகள் மற்றும் அதனோடு இணைந்த நிலையங்கள்	46
அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை	2

பன்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை	1
மகப்பேறு, பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனைகள்	4
குழந்தைகள் மருத்துவமனை	1
கண் சிகிச்சை மருத்துவமனை	1
காசநோய் மருத்துவமனைகள்	5
மன நல மருத்துவமனை	1
புனர் வாழ்வு மையம்	1
கிங் நோய்த் தடுப்பு மருந்து மற்றும் ஆராய்ச்சி நிலையம்	1
மருந்தகங்கள்	13

3.3 **தேர்வுக் குழு:** பட்டயப் படிப்பு/இளங்கலை/முதுகலை/ உயர் சிறப்பு மருத்துவப் படிப்புகளுக்கான தர வரிசைப் பட்டியல் தயாரித்தல், கலந்தாய்வு நடத்துதல் மற்றும் மாணவர் சேர்க்கை இம்மாநிலத்தில் தேர்வுக் குழுவால் மேற்கொள்ளப்படுகிறது. 2022-2023 ஆம் கல்வி ஆண்டுக்கு அரசு மருத்துவக் கல்வி நிறுவனங்களில் பட்டம் மற்றும் பட்டயப் படிப்பிற்கான இடங்கள் பின்வருமாறு:

வ. எண்	பட்ட/பட்டயப் படிப்பின் பெயர்	கல்லூரிகளின் எண்ணிக்கை	மொத்த இடங்கள்*
1	மருத்துவப் பட்டப் படிப்பு (M.B.B.S.)	36	5050
2	பல் மருத்துவப் பட்டப் படிப்பு (BDS)	2	200
3	மருந்தாக்கியல் பட்டப் படிப்பு (B.Pharm)	2	120
4	மருந்தாக்கியல் பட்டப் படிப்பு (B.Pharm Lateral Entry)	2	12
5	செவிலியர் பட்டப் படிப்பு (B.Sc. Nursing)	6	350

2023 ஏப்ரல் 18]

வ. எண்	பட்ட/பட்டயப் படிப்பின் பெயர்	கல்லூரிகளின் எண்ணிக்கை	மொத்த இடங்கள்*
6	*பட்டயபின் செவிலியர் பட்டப் படிப்பு* (Post Basic B.Sc. Nursing)	*2*	*90*
7	*செவித்திறன் மற்றும் பேச்சு மொழி நோய்க்குறியியல் பட்டப் படிப்பு* (BASLP)	*1*	*25*
8	*இளங்கலை மருத்துவ ஊட்டவியல்* (B.Sc) Clinical Nutrition)	*1*	*20*
9	*இயன்முறை சிகிச்சை பட்டப் படிப்பு* (B.P.T)	*3*	*80*
10	*கதிரியியல் மற்றும் கதிர்படத் தொழில்நுட்பப் பட்டப் படிப்பு* (B.Sc., Radiology and Imaging Technology)	*15*	*250*
11	*கதிர் சிகிச்சை தொழில்நுட்பப் பட்டப் படிப்பு* (B.Sc.Radiotherapy Technology)	*4*	*50*
12	*இருதய சுவாச மேற்பரவல் தொழில்நுட்பப் பட்டப் படிப்பு* (B.Sc. Cardio Pulmonary Perfusion Technology)	*5*	*65*
13	*கண் பரிசோதனை பட்டப் படிப்பு* (Bachelor of Optometry)	*7*	*115*
14	*இருதய தொழில்நுட்பப் பட்டப் படிப்பு* (B.Sc.Cardiac Technology)	*11*	*166*
15	*தீவீர பாதுகாப்பு தொழில்நுட்பப் பட்டப் படிப்பு* (B.Sc.Critical Care Technology)	*8*	*135*

வ. எண்	பட்ட/பட்டயப் படிப்பின் பெயர்	கல்லூரிகளின் எண்ணிக்கை	மொத்த இடங்கள்*
16	இரத்த சுத்திகரிப்பு தொழில்நுட்பப் பட்டப் படிப்பு (B.Sc. Dialysis Technology)	12	195
17	அறுவை அரங்கம் மற்றும் மயக்கவியல் தொழில்நுட்பப் பட்டப் படிப்பு (B.Sc. OperationTheatre and Anaesthesia Technology)	14	280
18	மருத்துவ உதவியாளர் பட்டப் படிப்பு (B.Sc.Physician Assistant)	13	241
19	சுவாசவியல் நோய் சிகிச்சை பட்டப் படிப்பு (B.Sc. Respiratory therapy)	8	138
20	விபத்து மற்றும் அவசரச் சிகிச்சை தொழில்நுட்பப் பட்டப் படிப்பு (B.Sc. Accident and Emergency Care Technology)	11	230
21	ஆய்வக தொழில்நுட்பப் பட்டப் படிப்பு (B.Sc.Medical Laboratory Technology)	13	240
22	இளங்கலை செயல்முறை மருத்துவம் (B.O.T)	2	30
23	இளங்கலை நரம்பு மற்றும் தசை மின் உடல் இயங்கியல் (B.Sc Neuro Electro Physiology)	3	20
24	மருந்தாக்கியல் பட்டயப் படிப்பு (Diploma in Pharmacy)	3	240

2023 ஏப்ரல் 18]

வ. எண்	பட்ட/பட்டயப் படிப்பின் பெயர்	கல்லூரிகளின் எண்ணிக்கை	மொத்த இடங்கள்*
25	செவிலியர் பட்டயப் படிப்பு (Diploma in Nursing)	*25*	*2,060*
26	மருத்துவம் சார்ந்த படிப்புகள் (*25* பிரிவுகள்)	*30*	*8,910*

(*தொடர்புடைய ஆணையம்/குழுமங்கள் ஒப்புதலுக்கேற்ப ஆண்டுக்கு ஆண்டு இந்த இடங்களின் எண்ணிக்கை மாறுபடும்).

3.4 அரசு மருத்துவக் கல்வி நிலையங்களில் உள்ள பட்ட மேற்படிப்பு மற்றும் உயர் சிறப்புப் பிரிவுகள் மற்றும் அவற்றிற்கான இடங்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

வ. எண்	படிப்புகள்	சிறப்புப் பிரிவுகளின் எண்ணிக்கை	மொத்த சேர்க்கை இடங்கள் *
1.	உயர் சிறப்பு மேற்படிப்புகள் (P.G. Degree (Medical Super Specialities) DM/MCH)	*27*	*404*
2.	பட்டய மேற்படிப்பு (PG Diploma Medical)	*8*	*21*
3.	பல் மருத்துவப் பட்ட மேற்படிப்பு (MDS)	*9*	*60*
4.	பட்ட மேற்படிப்புப் (P.G. Degree (Medical Broad Specialities MD/MS)	*25*	*2,264*
5	தேசிய வாரிய பட்ட மேற்படிப்பு (DNB)	*5*	*24*
6	இயன்முறை சிகிச்சை பட்ட மேற்படிப்பு (MPT)	*5*	*10*
7	மருந்தாக்கியல் பட்ட மேற்படிப்பு (M.Pharm)	*4*	*85*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY SECRETARIAT வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 18

வ. எண்	படிப்புகள்	சிறப்புப் பிரிவுகளின் எண்ணிக்கை	மொத்த சேர்க்கை இடங்கள் *
8	செவிலியர் பட்ட மேற்படிப்பு (M.Sc Nursing)	5	101
9	எம்ஃபில் மருத்துவ சமூகப் பணி (Clinical Social Work)	1	15
10	முதுநிலை அணுத்திறமம் நோய் நுண்ணியியல் (Molecular Virology)	1	21
11	எம்ஃபில் கிளினிக்கல் சைக்காலாஜி (Clinical Psychology)	1	10
12	தேசிய வாரிய பட்ட உயர்சிறப்புப் படிப்பு (DrNB) **	2	4
13	முதுநிலை நரம்பியல் அறுவைச் சிகிச்சை பராமரிப்பு பாடநெறி	1	30
14	முதுநிலை ரேடியோகிராபி மற்றும் இமேஜிங் தொழில்நுட்பம்	1	10

(**தொடர்புடைய ஆணையம்/குழுமங்கள் ஒப்புதலுக்கேற்ப ஆண்டுக்கு ஆண்டு இந்த இடங்களின் எண்ணிக்கை மாறுபடும்).

3.5 அரசு மருத்துவ நிலையங்கள் தவிர, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்ட தனியார் சுயநிதி மருத்துவக் கல்லூரிகள், அரசுக்கு ஒப்புவிப்பு செய்து அரசால் ஒதுக்கீடு செய்யப்படும் இடங்களின் எண்ணிக்கை விவரம் கீழ்வருமாறு:

வ. எண்	கல்லூரிகள்	கல்லூரிகளின் எண்ணிக்கை	இடங்கள்*
1	தனியார் சுயநிதி மருத்துவக் கல்லூரி	19	3050
2	ESIC, கே.கே.நகர்	1	125

2023 ஏப்ரல் 18]

வ. எண்	கல்லூரிகள்	கல்லூரிகளின் எண்ணிக்கை	இடங்கள்*
3	தனியார் பல்கலைக்கழகம்	2	300
4	பல் மருத்துவக் கல்லூரி	20	1,950
5	செவிலியர் பட்டப் படிப்பு (B.Sc)	216	8,805
6	மருந்தாக்கியல் (B.Pharm)	81	4,509
7	பட்டயப் படிப்பிலிருந்து மருந்தாக்கியல் பட்ட படிப்பிற்கான சேர்க்கை (Lateral Entry)	82	701
8	இயன்முறை சிகிச்சை பட்டயப் படிப்பு (BPT)	52	2,850
9	தொழில் வழி சிகிச்சை பட்டப் படிப்பு (BOT)	9	421
10	போஸ்ட் பேசிக் செவிலியர் கல்லூரி	51	1,071

(*சம்பந்தப்பட்ட குழுமங்களின் ஒப்புதலுக்கேற்ப, ஆண்டுக்கு ஆண்டு ஒப்பளிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை மாறுபடும்)

3.6 எம்.பி.பி.எஸ். இடங்கள் உயர்த்துதல் மற்றும் புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் 11 இடங்களில் நிறுவுதல்: ஒவ்வொரு மாவட்டத்திலும் ஓர் அரசு மருத்துவக் கல்லூரி அமைக்க வேண்டும் என்பது மாநில அரசின் கொள்கையாகும். 2020-2021 ஆம் கல்வியாண்டு வரை 21 மாவட்டங்களில் 25 அரசு மருத்துவக் கல்லூரிகள் செயல்பட்டு வந்தன. 2021-2022 ஆம் கல்வியாண்டில், தேசிய மருத்துவ ஆணையம் விருதுநகர், நீலகிரி, திண்டுக்கல், நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி, கள்ளக்குறிச்சி மற்றும் அரியலூர் ஆகிய 7 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளில் தலா 150 எம்.பி.பி.எஸ். இடங்கள், இராமநாதபுரம், திருப்பூர், நாமக்கல் மற்றும் திருவள்ளூர் ஆகிய 4 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளில் தலா 100 எம்.பி.பி.எஸ் இடங்களுக்கான சேர்க்கைக்கு அனுமதி அளித்துள்ளது. இந்த அரசு உள்கட்டமைப்பு மற்றும் மனித சக்தியை உருவாக்குவதை விரைவுபடுத்தியதன்மூலம் 2021-22 கல்வியாண்டில் 1,450 கூடுதல்

எம்.பி.பி.எஸ். மாணவர்கள் சேர்க்கைக்கு வழிவகுத்துள்ளது. 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் 12.1.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களால் காணொலிக் காட்சிமூலம் திறந்து வைக்கப்பட்டது. 2021-2022 கல்வியாண்டு முதல் அரசு கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியில் 150 எம்.பி.பி.எஸ்/ இடங்களானது 200 எம்.பி.பி.எஸ். இடங்களாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், 15 அரசு மருத்துவக் கல்லூரிகளில் 38 சிறப்புப் பிரிவுகளில் 146 பட்ட மேற்படிப்பு (MD/MS) இடங்களும், 6 அரசு மருத்துவக் கல்லூரிகளில் 11 சிறப்புப் பிரிவுகளில் 21 பட்ட மேற்படிப்பு (உயர் சிறப்பு) இடங்களும் 2021-22 ஆம் கல்வியாண்டில் தொடங்கப்பட்டுள்ளன.

3.7 மருத்துவச் சேர்க்கைக்கான கொள்கை மற்றும் தேசிய தகுதி நுழைவுத் தேர்வுக்கு எதிர்ப்பு (NEET): தமிழ்நாடு அரசு, மருத்துவப் படிப்புகளுக்கான தேசிய நுழைவுத் தேர்வுக்கு தொடர்ந்து எதிர்ப்பைத் தெரிவித்து வருகிறது. மருத்துவப் படிப்பிற்கான இடங்கள் ஏழை மாணவர்களுக்குக் கிடைப்பதில் உள்ள சிரமங்களைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 5.6.2021 அன்று, ஓய்வு பெற்ற நீதியரசர் திரு. ஏ.கே. இராஜன் அவர்கள் தலைமையில், கல்வியாளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் அடங்கிய உயர்நிலைக் குழு ஒன்றை அமைத்து ஆணையிட்டார்கள். மேற்படி உயர்மட்டக் குழு, தேசியத் தகுதி மற்றும் நுழைவுத் தேர்வினை அடிப்படையாகக் கொண்ட மருத்துவ மாணவர்கள் சேர்க்கை முறை, சமூக, பொருளாதார மற்றும் கூட்டாட்சி முறையினை மோசமாகப் பாதிக்கிறதா என்பதையும் மேலும், கிராமப்புற மற்றும் நகர்ப்புற ஏழை, எளிய மாணவர்கள், அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் மற்றும் தமிழ்வழிக் கல்வி பயிலும் மாணவர்கள் அல்லது வேறு பிரிவு மாணவர்களைப் பாதிக்கிறதா என்பதையும், அவற்றைக் களைய எடுக்கப்பட வேண்டிய தகுந்த முன்னெடுப்பு நடவடிக்கைகள் குறித்து தகுந்த ஆய்வு செய்து தனது பரிந்துரைகளை 14.7.2021 அன்று அரசுக்கு சமர்ப்பித்துள்ளது. உயர் மட்டக் குழுவின் பரிந்துரைகளை ஆய்வு செய்து அதனைச் செயல்படுத்தும் பொருட்டு தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் உயர் அலுவலர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டது. மேற்காணும் குழு மருத்துவக் கல்வி சேர்க்கையின் அனைத்து நிலைகளிலும் “நீட்” தேர்வினைப் புறந்தள்ளுவதற்கு, தமிழ்நாடு மாநிலச் சட்டம் 3/2007-னைப் போன்றதொரு புதிய சட்டத்தினை இயற்றி,

2023 ஏப்ரல் 18]

மாண்புமிகு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற முயற்சிக்கலாம் என்று பரிந்துரைத்தது. இது மருத்துவக் கல்வி சேர்க்கை முறைகளில் பாகுபாடு காட்டப்படுவதால் ஒதுக்கப்படும் மற்றும் பாதிக்கப்படும் மாணவச் சமுதாயத்திற்கான சமூக நீதியைப் பாதுகாப்பதை உறுதி செய்யும். மேற்கூறியவற்றின் அடிப்படையில், மருத்துவம், பல் மருத்துவம், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆகிய பட்டப் படிப்புகளில் தகுதித் தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் மாணவர் சேர்க்கைக்கான மசோதா தமிழ்நாடு சட்டப் பேரவையில் 13.9.2021 அன்று தாக்கல் செய்யப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. இம்மசோதாவை மாண்புமிகு குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்புமாறு மாண்புமிகு ஆளுநருக்கு அனுப்பப்பட்டது. மாண்புமிகு ஆளுநர் அவையின் மறுபரிசீலனைக்காக மசோதாவை திருப்பி அனுப்பினார். தமிழ்நாட்டில் நீட் அடிப்படையிலான மாணவர் சேர்க்கையை இரத்து செய்ய 8.2.2022 அன்று தமிழ்நாடு சட்டப் பேரவையின் சிறப்புக் கூட்டத் தொடர் கூட்டப்பட்டு, தீர்மானம் மீண்டும் நிறைவேற்றப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநருக்கு மீள அனுப்பப்பட்டது. மசோதாவினை மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர், மாண்புமிகு குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பியுள்ளார். இந்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம், ஆயுஷ் அமைச்சகம் மற்றும் உயர் கல்வி அமைச்சகம் ஆகியவற்றின் கருத்துகளை இந்திய அரசின் உள் துறை அமைச்சகம் தமிழ்நாடு அரசுக்கு அனுப்பியுள்ளது. இந்திய அரசின் உள் துறை அமைச்சகத்திற்குத் தேவையான விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. தற்போது, இந்த மசோதா ஒன்றிய அரசிடம் மாண்புமிகு இந்திய குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக நிலுவையில் உள்ளது.

3.8 மருத்துவ முதுகலைப் பட்டப் படிப்புகளில், 50 விழுக்காடு அகில இந்திய ஒதுக்கீட்டிற்கும், மீதமுள்ள 50 விழுக்காடு மாநிலத்திற்கான ஒதுக்கீடாகவும் உள்ளது. மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடங்களில் உள்ஒதுக்கீடாக 50 விழுக்காடு இடங்களைத் தமிழ்நாடு அரசில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள இடங்கள் அரசுப் பணியில் உள்ள மருத்துவர்கள் மற்றும் பிற மருத்துவர்களைக் கொண்டு பொது ஒதுக்கீட்டில் நிரப்பப்படுகிறது. மேற்கண்ட இடங்களை நீட் முதுகலை பட்டப் படிப்புத் தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையிலும் மற்றும் ஊக்க மதிப்பெண் அடிப்படையிலும் நிரப்பப்படும். இவற்றில் ஊக்க

மதிப்பெண்கள் மாண்புமிகு உயர் நீதிமன்ற நீதிபதி ஓய்வுபெற்ற திரு. ஏ. செல்வம் அவர்கள் தலைமையிலான குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் கணக்கிடப்படும்.

3.9 மருத்துவ உயர் சிறப்புப் படிப்புகளில் 2021-2022 ஆம் ஆண்டு முதல் அரசு மருத்துவக் கல்லூரிகளில் உள்ள உயர் சிறப்புப் படிப்பிற்கான இடங்களில் 50 விழுக்காடு தமிழ்நாடு அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்களுக்கும், மீதமுள்ள 50 விழுக்காடு இடங்கள் ஒன்றிய அரசின் மருத்துவப் பணிகள் தலைமை இயக்குநருக்கும் ஒதுக்கப்பட்டு நிரப்பப்படுகிறது. மேற்கண்ட இடங்கள் நீட் உயர் சிறப்புப் படிப்புத் தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் நிரப்பப்படும்.

3.10 அகில இந்திய ஒதுக்கீடு (AIQ) (எம்.பி.பிஸ்., எம்.எஸ்./எம்.டி.) இடங்களில் ஓபிசி இடஒதுக்கீட்டை அமல்படுத்தாததற்காக இந்திய யூனியன் அரசுக்கு எதிராக சென்னை உயர் நீதிமன்றத்தில் திராவிட முன்னேற்ற கழகத்தால் அவமதிப்பு மனு தாக்கல் செய்யப்பட்டது. உச்ச நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில், 15 விழுக்காடு AIQ UG இடங்களிலும் 50 விழுக்காடு அகில இந்திய ஒதுக்கீடு (MD/MS/MDS) இடங்களிலும் 27 விழுக்காடு OBC இடஒதுக்கீட்டை (கிரிமி லேயர்) அமல்படுத்த இந்திய அரசு முடிவு செய்துள்ளது. (மாநிலம்/UTsமூலம் ஒப்பளிக்கப்பட்டது). இந்த இடஒதுக்கீடு 2021-22 கல்வி ஆண்டு முதல் அமலுக்கு வந்தது.

3.11 அரசுப் பள்ளிகளில் படித்த மாணவர்களுக்கு மருத்துவ மாணவர் சேர்க்கையில் 7.5 விழுக்காடு உள் ஒதுக்கீடு: ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் கலையரசன் தலைமையில் அரசால் அமைக்கப்பட்ட குழு அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில், அரசுப் பள்ளிகளில் பயின்று தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வில் தகுதியான மாணவர்களுக்கு மருத்துவம், பல் மருத்துவம், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதியில் இளங்கலை படிப்புகளுக்கான சேர்க்கையில் 7.5 விழுக்காடு முன்னுரிமை வழங்க வகை செய்யும் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 34/2020) இயற்றப்பட்டு, அரசிதழில் 30.10.2020 அன்று வெளியிடப்பட்டு, 31.10.2020 முதல் அமலுக்கு வந்தது. இந்தச் சட்டத்தின் அடிப்படையில், 2022-2023 ஆம் ஆண்டில், 465 எம்.பி.பி.எஸ். இடங்களும், 119 பல் மருத்துவ இடங்களும், 81 சித்தா, ஆயுர்வேதா மற்றும் ஓமியோபதி இடங்களும் அரசுப் பள்ளிகளில் படித்த மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டன. இம்மாணவர்களின்

2023 ஏப்ரல் 18]

பொருளாதார சூழ்நிலையினைக் கருத்தில் கொண்டு, மருத்துவப் படிப்பிற்கான விடுதிக் கட்டணம் உட்பட அனைத்து செலவினையும் மேற்கொள்வதற்காக, 16 கோடி ரூபாயில் ஒரு சுழல் நிதி ஏற்படுத்தப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

3.12 தென் சென்னையில் புதிய பன்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை: *மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் 3.6.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் டாக்டர் மு. கருணாநிதி அவர்களின் பிறந்த நாள் அன்று சென்னை கிண்டி கிங் நோய் தடுப்பு மருத்துவமனை வளாகத்தில் ரூ.230 கோடி செலவில் 500 படுக்கை வசதிகள் கொண்ட புதிய பன்நோக்கு மருத்துவமனை கட்டப்படும் என்று அறிவித்தார். மேற்கண்ட வளாகத்தில் புதிய பன்நோக்கு சிறப்பு மருத்துவமனை அமைக்க நிருவாக மற்றும் நிதி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பொதுப் பணித் துறையினரால் 1.4.2022 அன்று கட்டடப் பணிகள் தொடங்கப்பட்டு, 18 மாதங்களுக்குள் பணிகள் முடிக்கப்பட்டு, உத்தேசமாக 30.9.2023 அன்று பணிகள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. புதிதாகக் கட்டப்படவுள்ள இம்மருத்துவமனையில் 500 படுக்கை வசதிகளுக்குப் பதிலாக 1000 படுக்கை வசதிகளாக உயர்த்தி, அரசால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. கட்டடத்தின் மொத்த பரப்பளவு 51,429 சதுர மீட்டர். மருத்துவமனைக் கட்டடம் மூன்று தொகுதிகளாக* (Block A, B & C) *கட்டப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பன்நோக்கு மருத்துவமனையில் பல்வேறு சிறப்பு வாய்ந்த 19 துறைகள் நிறுவ முன்மொழியப்பட்டுள்ளன.*

3.13 தேசிய முதியோர் மையம்—கிங் நோய் தடுப்பு மருத்துவமனை வளாகம், கிண்டி, சென்னை: *சென்னை, கிண்டி, கிங் நோய் தடுப்பு மருத்துவ நிலைய வளாகத்தில் தேசிய முதியோர் மையம் நிறுவ ஒன்றிய அரசின் நிதியுதவி ரூ.126.87 கோடி செலவில் (தொடரா செலவினம் ரூ.97.75 கோடி மற்றும் தொடர் செலவினம் ரூ.29.12 கோடி) வழங்கப்பட்டு, மேலும், திருத்திய நிதி மதிப்பீட்டு ஒப்புதலின்படி மொத்தம் ரூ.151.17 கோடி செலவினத்தில் 200 படுக்கை வசதிகளுடன் நிறுவப்பட்டுள்ளது. இது முதியோர்களின் சுகாதாரப் பாதுகாப்பிற்காகப் பிரத்யேகமாக 200 படுக்கை வசதிகளுடன் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரு விரிவான முதியோர் பராமரிப்பு மையமாகும். இம்மையம் 8.64 ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. மேலும், இந்த மையம் இம்மருத்துவமனைக்கான பிரதானக் கட்டடம், பிஎச்.டி,*

[*2023 ஏப்ரல் 18*

பயிற்சியாளர்கள் மற்றும் செவிலியர்கள், இயக்குநர், RMO மற்றும் ARMO குடியிருப்புகள், நவீன சமையலறை மற்றும் சலவை பிரிவுகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. மொத்தம் 26,194 சதுர மீட்டர் (2,81,847 சதுர அடி) பரப்பளவில் கட்டப்பட்டு பணிகள் நிறைவடைந்துள்ளன.

3.14 காரப்பேட்டை, காஞ்சிபுரம் அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனையில் புற்றுநோய்க்கான சிறப்பு மையம்: *காஞ்சிபுரம், காரப்பேட்டை அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனையில் புற்றுநோய்க்கான சிறப்பு மையத்தில் அதிகமான நோயாளிகளுக்குச் சேவைகளை வழங்குவதற்கும், முழுமையான மற்றும் விரிவான புற்றுநோய் சிகிச்சை வசதியை தமிழ்நாட்டில் கொண்டு வருவதற்கும் ரூ.120 கோடியில் G+2 கட்டடங்கள் கட்டுவதற்கு நிருவாக மற்றும் நிதி ஒப்பளிப்பு அரசால் வழங்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளன. மேலும், காரப்பேட்டை, காஞ்சிபுரம் அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய்க்கான சிறப்பு மையத்தில் 750 படுக்கை வசதிகளுடன், மேலும் மேம்படுத்த ரூ.100 கோடி மதிப்பீட்டில் கூடுதலாக மூன்று தளங்கள் கட்ட நிருவாக மற்றும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

3.15 சென்னை கலைஞர் கருணாநிதி நகர் புனர்வாழ்வு மருத்துவ நிறுவனம் ஒப்புயர்வு மையமாகத் தரம் உயர்த்தல்: *சென்னை கலைஞர் கருணாநிதி நகரில் செயல்பட்டு வரும் புனர்வாழ்வு மருத்துவ நிறுவனம், உலக வங்கியின் நிதியுதவியுடன்கூடிய தமிழ்நாடு சுகாதார சீரமைப்புத் திட்டத்தின்கீழ் ஒப்புயர்வு மையமாகத் தரம் உயர்த்த ரூ.27.95 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, G+3 மூன்று தளங்கள் கொண்ட கட்டடம் கட்டப்பட்டுள்ளது. கட்டடத்தின் மொத்த பரப்பளவு 8,684.25 சதுர மீட்டர். கட்டடப் பணிகள் நிறைவடைந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 28.1.2023 அன்று பொது மக்களின் பயன்பாட்டிற்காக அர்ப்பணிக்கப்பட்டது. மேலும், ரூ.11.43 கோடி செலவினத்தில் தமிழ்நாடு மருத்துவச் சேவைகள் கழகத்தின்மூலம் உபகரணங்கள் வாங்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரை மொத்தம் 3,097 உள்நோயாளிகளும் மற்றும் 35,241 வெளிநோயாளிகளும் இம்மருத்துவ மையத்தில் சேவை பெற்றுள்ளனர்.*

2023 ஏப்ரல் 18]

3.16 சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் முழு உடல் பரிசோதனை மற்றும் மகளிர் சிறப்பு முழு உடல் பரிசோதனைப் பிரிவு: *உலக வங்கித் திட்டத்தின்கீழ் ரூ.1.65 கோடி மதிப்பீட்டில் டிஜிட்டல் மேமோகிராம், டிஜிட்டல் எக்ஸ்ரே மற்றும் எக்கோ கார்டியோகிராம் ஆகிய உபகரணங்களை வழங்கி, அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் மேம்பட்ட முதுநிலை மருத்துவ பரிசோதனைப் பிரிவு ஒன்றினை நிறுவ அனுமதி வழங்கப்பட்டுள்ளது.*

3.17 சென்னை அரசு ராஜீவ் காந்தி பொது மருத்துவமனையில் நரம்பியல் பிரிவு கட்டடம் (Neuro Science Block): *சென்னை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் ரூ.64.94 கோடி மதிப்பீட்டில் நரம்பியல் பிரிவிற்கான புதிய கட்டடம் கட்டுவதற்கும், மருத்துவ ஆக்ஸிஜன் குழாய் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதில் ரூ.60 கோடி கட்டடம் கட்டுவதற்கும், ரூ.4.94 கோடி மதிப்பிலான மருத்துவ உபகரணங்களை தமிழ்நாடு மருத்துவச் சேவை கழகத்தின்மூலம் கொள்முதல் செய்யவும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. நரம்பியல் சம்பந்தமான நோயாளிகள் (பக்கவாதம், தலைக்காயம் உள்பட) இதன்மூலம் பயன்பெற முடியும்.*

3.18 சிவகங்கை மாவட்டம், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 100 படுக்கை வசதிகள் கொண்ட விரிவான அவசரக்கால மகப்பேறு மற்றும் புதிதாகப் பிறந்த குழந்தை பராமரிப்பு (சீமாங்) மையம் (உபகரணங்களுடன்கூடிய கூடுதல் கட்டடம்) கட்டுமானம்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், 8.6.2022 அன்று சிவகங்கை மாவட்டப் பயணத்தின்போது, அம்மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் விரிவான அவசரக்கால மகப்பேறு மற்றும் பிறந்த குழந்தைப் பராமரிப்பு* (CEmONC) *மையம் ரூ.11.74 கோடி மதிப்பீட்டில் கூடுதல் கட்டடம் கட்டுவதற்காக அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து ரூ.11.74 கோடி மதிப்பீட்டில் (கட்டடம் ரூ.10.50 கோடி மற்றும் உபகரணங்கள் ரூ.1.24 கோடி) பணிகள் நடைபெற ஆணையிடப்பட்டுள்ளது. மாதத்திற்கு சராசரியாக 1,000 கர்ப்பிணிப் பெண்கள் இதனால் பயனடைவார்கள்.*

3.19 சென்னை பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனையை வலுப்படுத்துதல்: *சென்னை, கொளத்தூர் தொகுதியில் அமைந்துள்ள பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனையை வலுப்படுத்த ரூ.55.07 கோடியில் பொதுப் பணித் துறையால் புதிய கட்டடம்*

கட்டவும், ரூ.16.74 கோடியில் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்மூலம் உபகரணங்கள் வாங்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இக்கட்டடத்திற்கு கடந்த 8.3.2023 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

3.20 சென்னை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் மேம்படுத்தப்பட்ட தண்டுவட அறுவைச் சிகிச்சைப் பிரிவு: சென்னை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் உள்ள தண்டுவட அறுவைச் சிகிச்சைப் பிரிவினை மேம்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது சென்னை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் செயல்பட்டு வருகிறது.

3.21 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ஹீமோபிலியா தொடர் சிகிச்சை தினப் பராமரிப்புச் சேவை (DAY CARE CENTRE): அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ஹீமோபிலியா தொடர் சிகிச்சை தினப் பராமரிப்புச் சேவை (DAY CARE CENTRE) கீழ்க்கண்ட 14 அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைகளில் நிறுவப்பட்டுள்ளது.

1	ஸ்டான்லி அரசு மருத்துவமனை, சென்னை
2	கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சென்னை
3	அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை (B Block), ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சென்னை
4	தமிழ்நாடு அரசு பன்நோக்கு மருத்துவமனை (A Block), ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சென்னை
5	அரசு ஈரோடு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, ஈரோடு
6	அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை, கோயம்புத்தூர்
7	அரசு திருவண்ணாமலை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருவண்ணாமலை

2023 ஏப்ரல் 18]

8	அரசு திருவள்ளூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருவள்ளூர்
9	அரசு கள்ளக்குறிச்சி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கள்ளக்குறிச்சி
10	அரசு நாகப்பட்டினம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, நாகப்பட்டினம்
11	அரசு இராமநாதபுரம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, இராமநாதபுரம்
12	அரசு அரியலூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, அரியலூர்
13	அரசு திருப்பூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருப்பூர்
14	அரசு கிருஷ்ணகிரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கிருஷ்ணகிரி

3.22 அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் தொலை மருத்துவச் சேவை (Tele Medicine) விரிவாக்கம்: *அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் தொலை மருத்துவச் சேவை சிறப்புப் பிரிவு, பொது மக்களின் அதிநவீன மருத்துவச் சேவைகளுக்காகவும் சிகிச்சைகளுக்காகவும் அனைத்து உட்கட்டமைப்பு, ஒலி-ஒளி மற்றும் காணொளி திரை, தகவல் தொழில்நுட்ப வசதிகளுடன் துவங்கப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.*

அத்தியாயம் – 4

மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள்

4.1 தமிழ்நாட்டில் இரண்டாம் நிலை மருத்துவச் சேவைகளை வழங்குவது மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரின் பொறுப்பாகும். மேலும், இவ்வியக்ககத்தின்கீழ் 37 அரசு தலைமை மருத்துவமனைகள், 198 வட்ட மருத்துவமனைகள், 58 வட்டம் சாரா மருத்துவமனைகள், 7 மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனைகள், 11 அரசு மருந்தகங்கள்,

[2023 ஏப்ரல் 18

2 காசநோய் மருத்துவமனைகள், 6 தொழுநோய் மருத்துவமனைகள் மற்றும் 1 அரசு மன நல மருத்துவம் மற்றும் மறுவாழ்வு மையம் ஆகியவை செயல்படுகின்றன. அதில் வட்டம் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகள் முதல் நிலை பரிந்துரை மையங்களாகவும், மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், இரண்டாம் நிலை பரிந்துரை மையங்களாகவும் செயல்படுகின்றன. 93 ஒருங்கிணைந்த அவசரக் கால மகப்பேறு மற்றும் பச்சிளங்குழந்தை பராமரிப்பு (CEmONC) மையங்கள், 110 பச்சிளம் குழந்தை பராமரிப்பு மையங்கள் (NBSU) மற்றும் 38 பச்சிளங்குழந்தை தீவிர சிகிச்சை மையங்கள் (NICU) ஆகியவை மகப்பேறு மற்றும் குழந்தை நல்வாழ்வினை மேம்படுத்த மருத்துவச் சேவைகளை வழங்குகின்றன. 47 தமிழ்நாடு விபத்து மற்றும் அவசரச் சேவைத் திட்ட நிலையங்கள் (TAEI) வழியாக அவசரக் கால மருத்துவச் சேவைகள் அளிக்கப்படுகின்றன.

4.2 மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககம் முதல் நிலை மற்றும் மூன்றாம் நிலை மருத்துவமனைகளுக்கு இணைப்பு மையமாகச் செயல்பட்டு வருகின்றன. அதன்கீழ் இயங்கும் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை/வட்ட மருத்துவமனை/ வட்டம் சாரா மருத்துவமனைகளால் கீழ்க்கண்ட சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன:

- வெளிநோயாளிகள் மற்றும் உள்நோயாளிகள் சேவைகள்
- பேறுகால முன்கவனிப்பு மற்றும் பேறுகால பின்கவனிப்பு சேவைகள்
- 24 மணிநேர ஒருங்கிணைந்த அவசரக் கால மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தை பராமப்பு (CEmONC) மையங்கள்
- பச்சிளம் குழந்தை பராமரிப்பு மையங்கள் (NBSU)
- சிறப்பு பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு மையங்கள் (SNCU)
- பச்சிளங்குழந்தை தீவிர சிகிச்சை மையம் (NICU)


2023 ஏப்ரல் 18]

- மருத்துவம், அறுவைச் சிகிச்சை, மகப்பேறு மற்றும் மகளிர் நலம், கண், காது, மூக்கு மற்றும் தொண்டை, பால்வினை நோயியல், எலும்பு முறிவு, மயக்கவியல், குழந்தை நலம், பல் மருத்துவம், மன நல மருத்துவம், அவசரக்கால ஊர்தி சேவை, ஆய்வுக்கூட சேவை, தொழுநோய், காசநோய், நீரிழிவு நோய் மற்றும் இதய நோய்
- தொற்றா நோய்
- விபத்து மற்றும் அவசரச் சிகிச்சை
- குடும்ப நலம்
- காது கேளாமை தடுப்புத் திட்டம்
- தமிழ்நாடு விபத்து மற்றும் அவசரச் சேவைத் திட்டம் (TAEI)
- விஷமுறிவு சிகிச்சை
- மது போதை மறுவாழ்வு புனரமைப்பு மையம்
- புற்றுநோய் சிகிச்சை சேவை
- வலி மற்றும் நோய் ஆதரவு சிகிச்சை மையம்

மருத்துவமனை மேலாண்மை தகவல் திட்டத்தின் மூலமாக மருத்துவச் சேவைகளின் செயல்பாடு கண்காணிக்கப்பட்டு, தரம் மேம்படுத்தப்படுகிறது.

4.3 இந்த இயக்ககத்தின்மூலம் தேசிய காசநோய் திட்டம், கண் பார்வை இழப்பு கட்டுப்பாட்டு திட்டம், மாவட்ட மன நலத் திட்டம் போன்ற தேசியத் திட்டங்களும் மற்றும் பிற முக்கியமான மாநில மற்றும் ஒன்றியச் சட்டங்களான தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் முறைப்படுத்துதல் சட்டம் 1997, பாலின தேர்வு தடைச் சட்டம் 1994 மற்றும் மனித உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சை சட்டம், 2011 போன்றவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், இவற்றின் நடைமுறைகளைப் பற்றி பின்வரும் அத்தியாயங்களில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

4.4 நிருவாக அமைப்பு



4.5 முக்கிய சாதனைகளின் விவரங்கள்:

- *ராணிப்பேட்டை, திருநெல்வேலி, திருப்பத்தூர், செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி மற்றும் மயிலாடுதுறை ஆகிய 6 மாவட்டங்களுக்குப் புதிய இணை இயக்குநர் நலப் பணிகள் பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.*

- *ஒப்பந்த முறையில் பணியாற்றி வந்த 678 செவிலியர்கள் காலமுறை ஊதியத்தில் கொண்டுவரப்பட்டுள்ளனர்.*

- *கொரோனா-19 பெருந்தொற்று காலத்தில் உயிரிழந்த 129 அரசு முன்களப் பணியாளர்கள்/28 தனியார் முன்களப் பணியாளர்களுக்குப் பிரதான் மந்திரி கரிப் கல்யாண் திட்டம் வாயிலாக ரூ.78.50 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.*

2023 ஏப்ரல் 18]

- முதலமைச்சரின் பொது நிவாரண நிதியின்கீழ் கொரோனா-19 பெருந்தொற்று காலத்தில் உயிரிழந்தவர்களுக்கு ரூ.10.90 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (அரசு மருத்துவர் – 4, ஒட்டுநர்-1, சுகாதார ஆய்வாளர்-4, மருத்துவமனைப் பணியாளர்-1, செவிலியர்-3, மருந்தாளுநர்-1, தனியார் மருத்துவர்கள்-31 மற்றும் தனியார் மருத்துவமனை வார்டு உதவியாளர்-1)

- அரசு மருத்துவமனை, ஜெயங்கொண்டம் (அரியலூர் மாவட்டம்), அரசு மருத்துவமனை, தாம்பரம் (செங்கல்பட்டு மாவட்டம்), அரசு மருத்துவமனை, பழனி (திண்டுக்கல் மாவட்டம்), அரசு மருத்துவமனை, திருக்கோவிலூர் (கள்ளக்குறிச்சி மாவட்டம்), அரசு மருத்துவமனை, கரூர் (கரூர் மாவட்டம்), அரசு மருத்துவமனை, ஒசூர் (கிருஷ்ணகிரி மாவட்டம்), அரசு மருத்துவமனை, மயிலாடுதுறை, (மயிலாடுதுறை மாவட்டம்), அரசு மருத்துவமனை, வேதாரண்யம் (நாகப்பட்டினம் மாவட்டம்), அரசு மருத்துவமனை, இராசிபுரம் (நாமக்கல் மாவட்டம்), அரசு மருத்துவமனை, அறந்தாங்கி (புதுக்கோட்டை மாவட்டம்), அரசு மருத்துவமனை, பரமக்குடி (இராமநாதபுரம் மாவட்டம்), அரசு மருத்துவமனை, கூடலூர் (நீலகிரி மாவட்டம்), அரசு மருத்துவமனை, வள்ளியூர் (திருநெல்வேலி மாவட்டம்), அரசு மருத்துவமனை, திருத்தணி (திருவள்ளூர் மாவட்டம்), அரசு மருத்துவமனை, திருப்பத்தூர் (திருப்பத்தூர் மாவட்டம்), அரசு மருத்துவமனை, காங்கேயம் (திருப்பூர் மாவட்டம்), அரசு மருத்துவமனை, குடியாத்தம் (வேலூர் மாவட்டம்), அரசு மருத்துவமனை, திண்டிவனம் (விழுப்புரம் மாவட்டம்), அரசு மருத்துவமனை, அருப்புக்கோட்டை (விருதுநகர் மாவட்டம்) ஆகியவற்றை அரசு தலைமை மருத்துவமனைகளாகவும் மற்றும் அரசு மருத்துவமனை, குளித்தலை (கரூர் மாவட்டம்), அரசு மருத்துவமனை, திருச்செங்கோடு (நாமக்கல் மாவட்டம்), அரசு மருத்துவமனை, அம்பாசமுத்திரம் (திருநெல்வேலி மாவட்டம்), அரசு மருத்துவமனை, தாராபுரம் (திருப்பூர் மாவட்டம்), அரசு மருத்துவமனை தென்காசி, (தென்காசி மாவட்டம்) மற்றும் அரசு மருத்துவமனை

[2023 ஏப்ரல் 18

இராஜபாளையம், (விருதுநகர் மாவட்டம்) ஆகியவற்றை தலைமை மருத்துவமனைகளுக்கு இணையாகவும் தரம் உயர்த்தி புதிய கட்டடம் கட்டுவதற்கு ரூ.1018.85 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- அரசு தலைமை மருத்துவமனை, மணப்பாறை (திருச்சிராப்பள்ளி மாவட்டம்), அரசு தலைமை மருத்துவமனை, பென்னாகரம் (தருமபுரி மாவட்டம்), அரசு மருத்துவமனை, சைதாப்பேட்டை (சென்னை மாவட்டம்), அரசு மருத்துவமனை, லால்குடி மற்றும் துறையூர் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்), அரசு மருத்துவமனை, பட்டுக்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்), அரசு மருத்துவமனை, கம்பம் (தேனி மாவட்டம்) மற்றும் அரசு மருத்துவமனை, அவிநாசி (திருப்பூர் மாவட்டம்) ஆகிய மருத்துவமனைகளில் தாய்-சேய் நலக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.67.30 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- அரசு மருத்துவமனை ஸ்ரீரங்கம் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) மற்றும் அரசு மருத்துவமனை, மேட்டுப்பாளையம் (கோயம்புத்தூர் மாவட்டம்) ஆகியவற்றில் சிறப்பு பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு மையங்கள் (SNCU) அமைப்பதற்கு ரூ.60.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- அரசு மருத்துவமனை, திருப்பத்தூர் (சிவகங்கை மாவட்டம்), அரசு மருத்துவமனை, சாத்தூர் (விருதுநகர் மாவட்டம்), அரசு மருத்துவமனை, விருத்தாசலம் (கடலூர் மாவட்டம்), அரசு மருத்துவமனை, செங்கம் (திருவண்ணாமலை மாவட்டம்), அரசு மருத்துவமனை, பாலக்கோடு (தருமபுரி மாவட்டம்) ஆகியவற்றிற்கு ரூ.11.62 கோடி மதிப்பீட்டில் விபத்து மற்றும் அவசரச் சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்துவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர், அரசு மருத்துவமனைக்கு, ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 18]

- திருநெல்வேலி மாவட்டம், களக்காடு, அரசு மருத்துவமனையில் ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் விஷமுறிவு சிசிச்சை மையம் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி, அரசு மருத்துவமனையில் ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் புதிய விபத்து மற்றும் அவசரச் சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்துவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- தென்காசி மாவட்டம், செங்கோட்டை, அரசு மருத்துவமனையில் இரத்த சேமிப்பு அலகு ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவிட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- கடலூர், காஞ்சிபுரம், ஈரோடு மற்றும் பெரம்பலூர் ஆகிய அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் ரூ.20.78 இலட்சம் செலவில் விபத்து மற்றும் அவசரச் சிகிச்சைக்கான பதிவேடுகள் நிறுவுதலுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- சேலம் மாவட்டம், ஏற்காடு, அரசு மருத்துவமனையில் ரூ.1.05 கோடி செலவில் நவீன பிரேதப் பரிசோதனைக் கட்டடம் கட்டவும், கருவிகள் வழங்கவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை, அரசு மருத்துவமனையின் விபத்து மற்றும் அவசரச் சிகிச்சைப் பிரிவு (ECRC), நிறுவுவதற்கு ரூ.6.17 கோடி செலவில் புதிய கட்டடங்கள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- அரசு மருத்துவமனை, பரமக்குடி (இராமநாதபுரம் மாவட்டம்), அரசு மருத்துவமனை உடுமலைபேட்டை, (திருப்பூர் மாவட்டம்), அரசு மருத்துவமனை, பழனி, (திண்டுக்கல் மாவட்டம்), அரசு மருத்துவமனை ஓசூர், (கிருஷ்ணகிரி மாவட்டம்), அரசு மருத்துவமனை வேதாரண்யம், (நாகப்பட்டினம் மாவட்டம்), அரசு மருத்துவமனை வால்பாறை (கோயம்புத்தூர் மாவட்டம்), அரசு மருத்துவமனை திருத்துறைப்பூண்டி (திருவாரூர் மாவட்டம்) அரசு மருத்துவமனை, பூவிருந்தவல்லி (திருவள்ளூர் மாவட்டம்) ஆகியவற்றிற்கு ரூ.72.00 கோடி

செலவில் கூடுதல் கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- கடலூர் மாவட்டம், கடலூர், அரசு தலைமை மருத்துவமனையில் ரூ.40.05 கோடி மதிப்பீட்டில் 100 படுக்கைகள் கொண்ட தீவிர அவசரச் சிகிச்சைப் பிரிவை ஏற்படுத்துவதற்கும், அரசு மருத்துவமனை, ஒட்டன்சத்திரம் (திண்டுக்கல் மாவட்டம்) அரசு மருத்துவமனை, சீர்காழி (மயிலாடுதுறை மாவட்டம்), அரசு மருத்துவமனை, ஊத்தங்கரை (கிருஷ்ணகிரி மாவட்டம்) மற்றும் அரசு மருத்துவமனை, மேலூர் (மதுரை மாவட்டம்) ஆகியவற்றில் ரூ.95.00 கோடி மதிப்பீட்டில் 50 படுக்கைகள் கொண்ட தீவிர அவசரச் சிகிச்சைப் பிரிவை ஏற்படுத்துவதற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- வள்ளியூர் (திருநெல்வேலி மாவட்டம்), மேட்டூர் அணை (சேலம் மாவட்டம்), திருத்தணி (திருவள்ளூர் மாவட்டம்), தாம்பரம் (செங்கல்பட்டு மாவட்டம்), திருப்பத்தூர் (திருப்பத்தூர் மாவட்டம்), பழனி (திண்டுக்கல் மாவட்டம்), மணப்பாறை, (திருச்சிராப்பள்ளி மாவட்டம்), பொள்ளாச்சி (கோயம்புத்தூர் மாவட்டம்), உசிலம்பட்டி (மதுரை மாவட்டம்), செய்யார் (திருவண்ணாமலை மாவட்டம்) ஆகிய அரசு தலைமை மருத்துவமனைகள் மற்றும் சென்னை, சைதாப்பேட்டை, அரசு மருத்துவமனை ஆகியவற்றில் ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வகம் அமைப்பதற்கு ரூ.12.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.6 ஒருங்கிணைந்த அவசரக்கால மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தை பராமரிப்பு மையங்கள் (சீமாங்) (CEmONC): தாய்-சேய் நலப் பாதுகாப்பை அதிக அளவில் செயல்முறைப்படுத்தும் மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். கர்ப்பிணிப் பெண்களுக்கும், பிறந்த குழந்தைகளுக்கும் தொடர் அவசரச் சிகிச்சை வழங்குவதற்கு சீமாங் சேவை தமிழ்நாடு முழுவதும் மூன்று பாகங்களாக ஆரம்பிக்கப்பட்டு தற்போது மொத்தம் 129 சீமாங் மையங்கள் செயல்பட்டு வருகின்றன (36 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், 93 இரண்டாம் நிலை மருத்துவமனைகள்). பாதுகாப்பான இரத்த பரிமாற்றம்,

2023 ஏப்ரல் 18]

ஆக்சிடோசின் மற்றும் நுண்ணுயிர் எதிர்ப்பிகள் வழங்குவதும், அறுவைச் சிகிச்சைப் பிரசவங்கள், நஞ்சுகொடி அகற்றுதல், கருக்கலைப்பு மற்றும் பிறந்த குழந்தைக்குப் புத்துயிர் கொடுத்தல் ஆகியவை சீமாங் சேவைகளில் அடங்கும். பிரசவப் பிரிவு, இரத்த வங்கி, அறுவை அரங்கு மற்றும் பச்சிளங்குழந்தை பராமரிப்பு பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கிய 24X7 மணி நேர தாய்-சேய் நலப் பிரிவுகள் நல்ல முறையில் மக்களுக்கு மருத்துவச் சேவை வழங்கி வருகின்றன. மேலும், சேவையின் தரத்தை உயர்த்துவதற்கும், மதிப்பு வாய்ந்த மகப்பேறு பராமரிப்பை வழங்குவதற்கும் அனைத்து சீமாங் மையங்களிலும் லக்ஷயா (LAQSHYA) *திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. தற்போது பத்து மாவட்டத் தலைமை மருத்துவமனைகளுக்கும், ஆறு அரசு மருத்துவமனைகளுக்கும் லக்ஷயா* (LAQSHYA) *சான்று பெறப்பட்டுள்ளது. சீமாங் மையங்கள் தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்பட்டு பிரசவத்தின்போது தாய்மார்களின் நோய் மற்றும் இறப்பு விகிதங்களைக் கணிசமாகக் குறைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

சீமாங் செயல்பாடுகள் 2022-2023

வ. எண்	விவரம்	2022-2023
1	*மொத்த மகப்பேறு தாய்மார்கள் அனுமதி*	*2,55,103*
2	*மொத்த சிக்கலான மகப்பேறு தாய்மார்கள் அனுமதி*	*1,85,326*
3	*மொத்த பிரசவங்கள்*	*1,43,008*
4	*உயிருடன் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை*	*1,42,677*
5	*மொத்த அறுவைச் சிகிச்சை பிரசவங்களின் எண்ணிக்கை*	*74,377*
6	*இரவு அறுவைச் சிகிச்சை பிரசவங்களின் எண்ணிக்கை (மாலை 6 முதல் காலை 6 மணி வரை)*	*56,298*
7	*மருத்துவமனைக்குப் பரிந்துரைக்கப் பட்டவர்களின் மொத்த விவரம்*	*65,763*

வ. எண்	விவரம்	2022-2023
8	மொத்த மகப்பேறு ஸ்கேன் பயனாளிகளின் எண்ணிக்கை	3,31,714
9	சேகரிக்கப்பட்ட மொத்த குருதி பைகளின் எண்ணிக்கை	98,068
10	மகப்பேறு சிகிச்சைக்காக இரத்தம் ஏற்றப்பட்ட தாய்மார்களின் எண்ணிக்கை	46,033

4.7 மாவட்ட மன நலத் திட்டம்: மாவட்ட மன நலத் திட்டம் சமுதாயம் சார்ந்த சேவையாக இம்மாநிலத்தில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாவட்ட மன நலத் திட்டத்தின் குறிக்கோள்கள் கீழ்வருமாறு:

- சமூகத்தில் மன நலம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- மன நல மருத்துவப் பணிகளை மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறையின் அனைத்து இயக்ககங்களுடன் ஒருங்கிணைத்து செயல்படுத்துதல்.
- சமூகத்தில் மன நலம் பாதிக்கப்பட்டவரை விரைவில் இனம் கண்டு சிகிச்சை அளித்தல்.
- மக்களிடையே மன நலம் குறித்த விழிப்புணர்வு மற்றும் மன நலம் தொடர்பான சமூகத்தினரின் பார்வையை மாற்றிடல்.
- மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்கப்பட்டு குணமடைந்த மன நல நோயாளிகளுக்கு சமுதாயத்தில் மறுவாழ்வு அளித்தல்.

தமிழ்நாட்டில் உள்ள 37 மாவட்டங்களில் மாவட்ட மன நலத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

4.8 தமிழ்நாட்டில் மனித உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சை (திருத்தம்) சட்டம், 2011: உடல் உறுப்பு வியாபாரத்தைத் தடுப்பதற்காக, ஒன்றிய அரசு இந்தச் சட்டத்தை 1994-ல் இயற்றி, 2011 ஆம் ஆண்டில் சட்ட திருத்தம் கொண்டு வந்தது. இச்சட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படுகிறது.

2023 ஏப்ரல் 18]

அ. திட்ட விவரம்: *சிறுநீரகம், இருதயம், கல்லீரல், நுரையீரல், குடல், கணையம் மற்றும் கருவிழி போன்ற பல்வேறு மனித உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சைகளுக்குத் தமிழ்நாட்டில் தற்பொழுது 163 மருத்துவமனைகள் இச்சட்டத்தின்கீழ் பதிவுரிமை பெற்றுள்ளன.*

ஆ. மூளை இறப்பு ஏற்பட்டவர்களின் உடல் உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சைத் திட்டம்: *அக்டோபர் 2008-ல் தொடங்கப்பட்ட மூளை இறப்பு ஏற்பட்டவர்களின் உடல் உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சைத் திட்டம் மிகப் பெரிய வெற்றியை பெற்றுள்ளது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் இந்திய அளவில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது. இந்தத் திட்டத்தில் தற்போது 163 மருத்துவமனைகள் இணைந்துள்ளன. சென்னை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவமனை ஆகியவை இத்திட்டத்தினை முழு ஈடுபாட்டுடன் செயல்படுத்தி வருகின்றன. மாநிலத்தில் மாற்று அறுவைச் சிகிச்சை செய்யும் மருத்துவமனைகள் நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒரு மண்டலத்தில் நிகழும் உறுப்பு தானம் அந்த மண்டலத்தில் உள்ள மருத்துவமனைகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் அளிக்கப்படுகிறது.*

வடக்கு மண்டலம்	-	*சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் வேலூர்*
தெற்கு மண்டலம்	-	*திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், தஞ்சாவூர் மற்றும் பெரம்பலூர்*
மேற்கு மண்டலம்	-	*கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் சேலம்*

இதுவரை, 1,644 மூளை இறப்பு தானம் பெற்றதில் 9,795 உறுப்புகள் பெறப்பட்டன. அதில் 6,001 உறுப்புகள் முக்கியமான உறுப்புகளாகும். (இதயம் – 766, நுரையீரல்–749, கல்லீரல்–1,511, சிறுநீரகம்–2,929, கணையம்–36, சிறுகுடல்–5, பல உள்ளுறுப்பு-1, கை–4, வயிறு-1) இதர உறுப்புகள் மற்றும் திசுக்கள் 3,974 (இதய வால்வு–975, கருவிழி–2,422, தோல்–174, இரத்தக்குழாய்–2, எலும்பு–192, முதுகு எலும்பு மற்றும் டிஸ்க் திசுக்கள்–26, வயிறுமடல்–3)

[2023 ஏப்ரல் 18

4.9 கருவுறுதலுக்கு முன் மற்றும் பிறப்பிற்கு முந்தைய கருவின் தன்மையறியும் தொழில்நுட்ப முறைகள் (பாலின தேர்வைத் தடை செய்தல்) சட்டம், 1994: *பெண் கருக்கொலைகள், பெண் சிசுக்கொலைகள் மற்றும் பெண் குழந்தைகள் பிறந்ததிலிருந்தே புறக்கணிக்கப்படுதல் ஆகியவை பெண் பிறப்பு விகிதத்திற்குப் பாதகமான காரணங்களாகின்றன. பாலினத் தேர்வைத் தடுக்க ஒன்றிய அரசு கருவுறுதலுக்கு முன் மற்றும் பிறப்பிற்கு முந்தைய கருவின் தன்மையறியும் தொழில்நுட்ப முறைகள் (பாலின தேர்வைத் தடை செய்தல்) சட்டம், 1994-ஐ இயற்றியது. மேலும், இச்சட்டத்தின்மூலம் பெண் கருக்கொலை மற்றும் பெண் சிசுக் கொலை தடுக்கப்பட்டு ஆண் மற்றும் பெண் பிறப்பு விகிதம் (0-6* Years) *உயரிய அளவிலேயே பாதுகாக்கப்படுகிறது. இச்சட்டத்தைச் செம்மையாக நடைமுறைப்படுத்த மாநில, மாவட்ட மற்றும் வட்ட அளவிலான ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மார்ச் 2023 வரை, 8,229 ஸ்கேன் மையங்கள் மற்றும் 195* ART *(கருத்தரிப்பு உதவி தொழில்நுட்பம்) மையங்கள்* PCPNDT Act, *1994-ன்கீழ் பதிவு செய்யப்பட்டு, தொழில்நுட்பத்தைப் பாலினத் தேர்விற்காக தவறாக பயன்படுத்தப்படுவதைத் தடுக்கும்வகையில் கண்காணிக்கப்படுகிறது. மேலும், மார்ச் 2023 வரை விதிகளை மீறிய 155 ஸ்கேன் மையங்கள்மீது* PCPNDT Act, *1994-ன்கீழ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. பதிவு செய்யப்பட்ட 155 வழக்குகளில், 125 வழக்குகளுக்கு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 30 வழக்குகளின்மீது விசாரணை நடைபெற்று வருகிறது. இந்தச் சட்டம் குறித்தும் மற்றும் மகளிர் உரிமை தொடர்பாகவும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும்வகையில் தமிழ்நாடு அரசு ஊர்வலங்கள், தொடர் ஓட்டம், கட்டுரை எழுதுதல், குறும்படம் போன்ற பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. கருவுறுதலுக்கு முன் மற்றும் பிறப்பிற்கு முந்தைய கருவின் தன்மையறியும் தொழில்நுட்ப முறைகள் (பாலின தேர்வைத் தடை செய்தல்) சட்டம், 1994-ல் உள்ள வழிமுறைகள் மற்றும் செயல்படுத்துவது தொடர்பாகத் திறன் மேம்படுத்துதல் பயிற்சி மாவட்ட அமலாக்க அதிகாரிகளால் வழங்கப்படுகிறது.*

4.10 தமிழ்நாடு தனியார் மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டம், 2018: *தனியார் மருத்துவ நிறுவனங்கள் மட்டுமின்றி, அனைத்து மருத்துவ நிறுவனங்களின் பதிவினை மேற்கொள்வதற்கும், முறைப்படுத்துவதற்கும், இம்மருத்துவ நிலையங்கள் வழங்க வேண்டிய குறைந்தபட்ச*

2023 ஏப்ரல் 18]

வசதிகள் மற்றும் சேவைகளைப் பரிந்துரை செய்யும் நோக்குடனும், 1997 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தமிழ்நாடு தனியார் மருத்துவமனை நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) சட்டத்திற்கு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, தமிழ்நாடு தனியார் மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டம், 2018 இயற்றப்பட்டது. இச்சட்டத்தை திறம்பட செயல்படுத்துவதற்குத் தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) விதிகள், 2018 வகுக்கப்பட்டுள்ளன. இதுவரை 46,441 மருத்துவ நிறுவனங்களுக்குப் பதிவு வழங்கப்பட்டுள்ளது. மேலும், 1,536 தனியார் மருத்துவமனைகளுக்குக் கொரோனா சிகிச்சை பொது மக்களுக்கு வழங்கிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

4.11 வாடகைத் தாய் (ஒழுங்குமுறை) சட்டம், 2021, கருத்தரிப்பு உதவி தொழில்நுட்பம் (ஒழுங்குமுறை) சட்டம், 2021: *இந்தச் சட்டங்கள் ஒன்றிய அரசால் இயற்றப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசு மேற்கூறிய சட்டத்தின்கீழ் மாநில அமலாக்க அதிகாரிகளை நியமனம் செய்து தமிழ்நாடு அரசிதழிலும் வெளியிட்டுள்ளது. மேலும், மாவட்ட அளவில் அமலாக்க அதிகாரிகளை நியமனம் செய்துள்ளது. இச்சிகிச்சைகளை வழங்கும் மருத்துவமனைகள்/கிளினிக்குகள்/நர்சிங் ஹோம்கள், வாடகைத் தாய் (முறைப்படுத்துதல்) சட்டம், 2021-ன்கீழ் பதிவு செய்யப்பட வேண்டும்.*

4.12 போதை மறுவாழ்வு மையம்: *அதிகரித்து வரும் மது மற்றும் போதைப் பழக்கத்தினால் ஏற்படும் சமூக மற்றும் சுகாதாரச் சீர்கேடுகளிலிருந்து மீண்டு வருவதற்கு போதை மறுவாழ்வு மையம், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் கட்டுப்பாட்டின்கீழ் காஞ்சிபுரம் மற்றும் கடலூரில் செயல்பட்டு வருகிறது. திருப்பூர் மாவட்ட போதை மறுவாழ்வு மையம் மட்டும் மருத்துவக் கல்வி இயக்கக கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது.*

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள்:

1. *மது போதையினால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிகிச்சை மற்றும் மறுவாழ்வு வழங்குவது.*

2. *மது போதையினால், குடும்பங்களில், வேலை பார்க்கும் இடங்களில் மற்றும் சமுதாயத்தில் ஏற்படும் தீங்குகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துவது.*

[2023 ஏப்ரல் 18

3. மது போதையினால் பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறிதல், ஊக்குவித்தல், ஆலோசனை வழங்குவது, முழுமையாக மறுவாழ்வு அளிப்பது மற்றும் தனி நபரை போதைப் பழக்கத்திலிருந்து விடுவிப்பது, குற்றங்களைக் குறைப்பது மற்றும் வேலைவாய்ப்பு போன்றவற்றிற்காக உதவுவது.

4. தனிநபர், குடும்ப மற்றும் சமூக அளவில் மது மற்றும் போதைப் பழக்கத்திற்கு அடிமையானவர்களால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைத்தல்.

மேற்கூறிய இடங்களில் இத்திட்டத்திற்காக, 30 படுக்கை வசதி கொண்ட வார்டுகள் மன நல மருத்துவர், உளவியலாளர், சமூகப் பணியாளர், செவிலியர், தகவல் உள்ளீட்டாளர், மருத்துவமனைப் பணியாளர், சுகாதாரப் பணியாளர்கள், பாதுகாவலர்களுடன் செயல்பட்டு வருகிறது.

4.13 அவசரப் பாதுகாப்பு மற்றும் மீட்பு மையம்: அவசரப் பாதுகாப்பு மற்றும் மீட்பு மையம் வேலூர், தேனி, கள்ளக்குறிச்சி மற்றும் திருவண்ணாமலை ஆகிய இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் குறிக்கோள் ஆங்காங்கே மன நலம் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிகிச்சை மற்றும் மறுவாழ்வு அளிப்பதாகும். இம்மையம் 50 படுக்கை வசதி கொண்ட வார்டுடன் ஒரு மன நல மருத்துவர், உளவியலாளர், சமூகப் பணியாளர், மருந்தாளுநர், செவிலியர், தகவல் உள்ளீட்டாளர், பல்நோக்குப் பணியாளர் மற்றும் பாதுகாவலர் உடன் ஒரு குழுவாகச் செயல்பட்டு வருகிறது. மேலும், கூடுதலாக இத்திட்டத்திற்கென உணவு, மருந்து, உபகரணங்கள் மற்றும் இதரச் செலவுகளுக்கென தனித்தனியே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

4.14 இரண்டாம் நிலை மருத்துவமனைகளில் தேசிய தேர்வு வாரியத்தின் டிப்லோமேட் பட்டயப் படிப்பு: இரண்டாம் நிலை மருத்துவமனைகளில் டி.என்.பி பட்டயப் படிப்புகள் நடத்தப்படுகின்றன. மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளுக்குச் சிறப்பு சிகிச்சை வழங்கவும் மற்றும் மருத்துவமனைகளுக்கு உள்கட்டமைப்பு வசதிகளை வழங்கவும், இரண்டாம் நிலை பராமரிப்பு மருத்துவமனைகளை வலுப்படுத்தவும், கற்பித்தல் அல்லாத மருத்துவமனைகளுக்கு ஊக்கமளிக்கவும், மனித வளம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதன்மூலம்

2023 ஏப்ரல் 18]

செயல்திறனை மேம்படுத்தவும், மக்களை மையமாகக் கொண்ட கவனிப்பை மேம்படுத்தவும் இது உதவுகிறது. ஏழு மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும் (கடலூர், இராமநாதபுரம், திண்டுக்கல், ஈரோடு, கோவில்பட்டி, காஞ்சிபுரம் மற்றும் விருதுநகர்), ஒரு வட்ட மருத்துவமனையிலும் (சிதம்பரம்) டி.என்.பி படிப்புகள் தொடங்கப்பட்டன. டி.என்.பி படிப்பு மருத்துவக் கல்லூரிகள் உள்ளிட்ட பிற மருத்துவமனைகளுக்கும் நீட்டிக்கப்பட்டது.

டி.என்.பி பயிற்சியின்கீழ் 2018 முதல் 2023-2024 அங்கீகரிக்கப்பட்டுள்ள சிறப்பு மருத்துவப் பிரிவுகள்

வ. எண்	சிறப்புப் பிரிவுகள்	எம்பிபிஎஸ்—க்கு பிந்தைய படிப்பு	டிப்ளமோ—க்கு பிந்தைய படிப்பு	இரண்டாண்டு டிப்ளமோ	மொத்த அங்கீகரிக்கப் பட்ட இடங்கள்
1	பொது மருத்துவம்	7	—	—	7
2	பொது அறுவைச் சிகிச்சை	2	—	—	2
3	மகப்பேறு மருத்துவம்	7	6	35	48
4	குழந்தைகள் நல மருத்துவம்	6	6	31	43
5	எலும்பியல்	2	2	—	4
6	அவசர மருத்துவம்	15	—	—	15
7	கண் மருத்துவம்	1	1	6	8
8	குடும்ப நல மருத்துவம்	—	—	43	43
9	காது,மூக்கு, தொண்டை மருத்துவம்	—	—	2	2

வ. எண்	சிறப்புப் பிரிவுகள்	எம்பிபிஎஸ்—க்கு பிந்தைய படிப்பு	டிப்ளமோ—க்கு பிந்தைய படிப்பு	இரண்டாண்டு டிப்ளமோ	மொத்த அங்கீகரிக்கப் பட்ட இடங்கள்
10	மயக்கவியல் மருத்துவம்	—	—	13	13
11	கதிர்வீச்சு புற்றுநோயியல் மருத்துவம்	2	2	—	4
12	நோயியல் மருத்துவம்	1	1	—	2
	மொத்தம்	43	18	130	191

டி.என்.பி பயிற்சியின்கீழ் 8 இடங்களும், எஃப்.என்.பி (FNB) பயிற்சியின்கீழ் 2 இடங்களும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

வருடம்	பகுதி	சிறப்புப் பிரிவுகள்	அங்கீகரிக்கப்பட்ட இடங்கள்
2021-22	1	தலையீட்டு கதிரியக்கவியல் (DrNB)	2
2021-22	2	நரம்பியல் (DrNB)	2
2022-23	3	இருதயவியல் (DrNB)	2
2022-23	4	இரத்தக் குழாய் அறுவை (DrNB) சிகிச்சை	2
2023-24	5	வலி மருத்துவம் (FNB)	2
		மொத்தம்	10

இதுவரை மொத்தம் 201 இடங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. தற்போது கீழ்க்கண்டவாறு 339 மாணவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

2023 ஏப்ரல் 18]

டி.என்.பி. பயிலும் மாணவர்களின் விவரங்கள்:

வ. எண்	சிறப்புப் பிரிவுகள்	அரசு மருத்துவமனை/ மருத்துவக் கல்லூரி மருத்துவமனை	மாணவர்கள் சேர்க்கை		
			2020-21	2021-22	2022-23
1	பொது மருத்துவம்	ஈரோடு, கடலூர், விருதுநகர் மற்றும் இராமநாதபுரம்	5	5	6
2	பொது அறுவைச் சிகிச்சை	பொள்ளாச்சி, இராமநாதபுரம்	2	2	2
3	மகப்பேறு மருத்துவம்	பெரம்பலூர், கோவில்பட்டி, காஞ்சிபுரம், கடலூர், ஈரோடு, பொள்ளாச்சி, விருதுநகர், திண்டுக்கல் மற்றும் இராமநாதபுரம்	6	42	44
4	குழந்தைகள் நல மருத்துவம்	கடலூர், சிதம்பரம், ஈரோடு, பெரம்பலூர், நாமக்கல், விருதுநகர் மற்றும் இராமநாதபுரம்	6	36	37
5	எலும்பியல்	கடலூர்	1	1	3
6	அவசர மருத்துவம்	காரைக்குடி, ஈரோடு, கோவில்பட்டி, நாமக்கல், கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், ஓமந்தூரார் சென்னை மற்றும் புதுக்கோட்டை	4	15	15
7	கண் மருத்துவம்	கடலூர், காஞ்சிபுரம்	1	4	6

[*2023 ஏப்ரல் 18*

வ. எண்	சிறப்புப் பிரிவுகள்	அரசு மருத்துவமனை/ மருத்துவக் கல்லூரி மருத்துவமனை	மாணவர்கள் சேர்க்கை		
			2020-21	2021-22	2022-23
8	குடும்ப நல மருத்துவம்	ஈரோடு, கடலூர், காஞ்சிபுரம், விருதுநகர் மற்றும் இராமநாதபுரம்	—	28	39
9	காது, மூக்கு, தொண்டை	காஞ்சிபுரம்	—	2	2
10	மயக்கவியல் மருத்துவம்	கடலூர், காரைக்குடி, ஈரோடு மற்றும் இராமநாதபுரம்	—	9	13
11	கதிர்வீச்சு புற்றுநோயியல் மருத்துவம்	தமிழ்நாடு அரசு பன்நோக்கு மருத்துவமனை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சென்னை	—	—	3
		மொத்த இடங்கள்	25	144	170

அத்தியாயம்—5

பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து

5.1 பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவ இயக்குநரகம் 1923 ஆம் ஆண்டில் பொது சுகாதாரத்திற்கென பிரத்தியேகமாக நாட்டிலேயே முதலாவதாக அமைக்கப் பெற்ற மாநிலமாகத் தமிழ்நாடு விளங்குகிறது. இத்துறையின் முக்கியக் குறிக்கோள்கள் சீரிய முறையில் நோய் தடுப்பு முறை, நீடித்த வாழ்வை அளிப்பது மற்றும் சுகாதாரத்தினை மேம்படுத்துதல் ஆகும். இத்துறை சமூகத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் தேவையான சுகாதாரம், நோய்கள் மற்றும் ஆபத்து காரணிகளையும் அதன் போக்குகளையும் சமூக மட்டத்திலிருந்து கண்காணித்தும் மற்றும் தொற்றுநோய்கள் ஏற்படும்போது பாராட்டத்தக்க சேவைகளை சமூக நீதி மற்றும் சமத்துவ

2023 ஏப்ரல் 18]

நெறியில் வழங்கியும் வருகிறது. இத்துறையின் பிரதான செயல்பாடுகள் சுகாதார மேம்பாடு, ஆரோக்கிய வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவது, தொற்று மற்றும் தொற்றா நோய்களைத் தடுப்பது மற்றும் கட்டுப்படுத்துவது, சமூக அடிப்படையிலான தடுப்பூசி உள்ளடக்கிய மகப்பேறு மற்றும் குழந்தை நலச் சுகாதாரச் சேவைகள், குடும்ப நல சேவைகள் உள்ளிட்டவை ஆகும். மேலும், மக்களின் நலவாழ்வு தேவைகளையும், சமுதாயத்தில் பரவலாகக் காணப்படும் நோய்களையும், அதற்கான காரணிகளையும் கண்காணித்து வருகிறது. பெருந்தொற்று ஏற்படும் காலங்களில், சமுதாயத்தில் ஒவ்வொருவருக்கும் நலமான வாழ்வைக் கொடுப்பதும், மெச்சத்தக்க சேவைகளை செய்வதுமே, சமூக நீதி மற்றும் சமத்துவமாகக் கருதப்படுகின்றது. நம் நாட்டிலேயே முதன்முதலாக பொது சுகாதாரச் சட்டம், 1939 ஆம் ஆண்டு நம் மாநிலத்தில்தான் இயற்றப்பட்டது. இந்தியாவில் இன்றியமையாத சிறந்த பொது சுகாதாரப் பணிகளை முனைப்புடன் செயல்படுத்தும் ஒரு சில மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு திகழ்கின்றது. 'கர்னல் கிங்' அவர்களின் நினைவாக, கிங் நிலையம் அமைந்துள்ளது, 'கர்னல் கிங்' சென்னை மாகாணத்தின் முதலாவது சுகாதார ஆணையராகப் பணியாற்றினார், அவரால்தான் தனிமைப்படுத்துதல் என்ற முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. 1921 ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் முதலாவதாக 5 மாவட்டங்களில், மாவட்ட சுகாதாரக் குழு உருவாக்கப்பட்டது, பின்னர், அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. இதன்மூலம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட சுகாதார அதிகாரி மற்றும் சுகாதார ஆய்வாளர் பணியமர்த்தப்பட்டனர். பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை, பொது மக்களுக்கு ஆரம்ப சுகாதாரச் சேவைகளை, ஊரகப் பகுதிகளில் 424 மேம்படுத்ததப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளடங்கிய 1830 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலமாகவும், மேலும், 347 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியில் 140 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலமாகவும் தரமான ஆரம்ப சுகாதாரச் சேவைகளை அனைவருக்கும் வழங்கி வருகின்றது. மேலும், இத்துறையின்கீழ் முதல் நிலை சேவை மையங்களாகக் கிராமப்புறங்களில் 8,713 துணை சுகாதார நிலையங்களும், நகர்ப்புறங்களில் 1,643 நகர்ப்புற சுகாதாரப் பகுதிகளும் இயங்கி வருகின்றன.

[2023 ஏப்ரல் 18

5.2 இந்த இயக்ககத்தின் கட்டுப்பாட்டில் கீழ்க்கண்ட அமைப்புகள் செயல்படுகின்றன:

துணை சுகாதார நிலையங்கள் (கிராமப்புறங்களில்)	8,713
கிராமப்புறங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள்	1,830**
நகர்ப்புறங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள்	347**+ 140 (சென்னை பெருநகர மாநகராட்சி)
வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்கள் (சமுதாய சுகாதார நிலையங்கள்)	388
நகர்ப்புற சமுதாய சுகாதார நிலையங்கள்	23+ {16+3 EoCs - GCC}
மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள்	424
நகர்ப்புற சுகாதாரப் பகுதிகள் (Sectors)	1643

இதர நிலையங்கள்	
மண்டல பூச்சியியல் குழுக்கள்	9
மாநில பொது சுகாதார ஆய்வகம்	1
மாவட்ட பொது சுகாதார ஆய்வகங்கள்	38*
தேசிய யானைக்கால் நோய்த்தடுப்பு நிலையங்கள்	6
யானைக்கால் மற்றும் மலேரியா சிகிச்சை நிலையங்கள்	42
ஜப்பானிய மூளைக் காய்ச்சல் கட்டுப்பாட்டு நிலையங்கள்	3
நீர் பகுப்பாய்வு ஆய்வகங்கள்	4
மண்டல தடுப்பூசி சேமிக்கும் நிலையங்கள்	10
மண்டல சுகாதாரப் பயிற்சி நிலையங்கள்	8
துணை செவிலியர் பயிற்சிப் பள்ளிகள்	11

* 6-பொது சுகாதார ஆய்வகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

2023 ஏப்ரல் 18]

*** கிராமப்புறங்களில் 26 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களும், நகர்ப்புறங்களில் 24 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களும் 2022-2023 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு, இயங்கவிருக்கின்றன.*

5.3 நிர்வாகக் கட்டமைப்பு

இயக்குநர்

↓

இயக்குநர் (சிறப்புப்பணிகள்)

↓

கூடுதல் இயக்குநர்

↓

இணை இயக்குநர்கள் (திட்டங்கள்)

↓

நிதி ஆலோசகர் மற்றும் முதன்மை கணக்கு அலுவலர்

- பணியாளர் அலுவலர் மற்றும் இணை இயக்குநர் (நிதி மற்றும் மனித வள மேலாண்மை மற்றும் நிருவாகம்)

↓

- துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள்
- முதல்வர்கள், மண்டல பயிற்சி நிலையங்கள் மற்றும் துணை செவிலியர் பள்ளிகள்
- நல அலுவலர்கள்
- மண்டல பூச்சியில் வல்லுநர்கள் மற்றும் மாவட்ட அளவிலான பூச்சியியல் வல்லுநர்கள்
- மாவட்ட அளவிலான தொற்றுநோயியல் நிபுணர்கள்

↓

- வட்டார மருத்துவ அலுவலர்கள்
- மருத்துவ அலுவலர்கள்
- ஆரம்ப சுகாதார நிலைய மற்றும் களப் பணியாளர்கள்

5.4 மக்கள் தொகை மற்றும் சுகாதாரக் குறியீடுகளில் அடைந்துள்ள முன்னேற்றம்: *2023 ஆம் ஆண்டில் மாநிலத்தின் மதிப்பிடப்பட்ட மக்கள் தொகை 7.69 கோடியாகும். தமிழ்நாட்டில் பெருநகர சென்னை மாநகராட்சியைத் தவிர்த்து 45 சுகாதார மாவட்டங்கள் அமைந்துள்ளன. நமது சீரிய முயற்சிகளினால் மாநிலத்தின் சுகாதார நிலையைக் குறிக்கும் பல்வேறு சுகாதாரக் குறியீடுகளில் பெருமளவில் முன்னேற்றம் அடைந்துள்ளோம்.*

[2023 ஏப்ரல் 18

5.5 குழந்தை இறப்பு விகிதம்: குழந்தை இறப்பு விகிதம் என்பது குறிப்பிட்ட ஒரு பகுதியில் 1,000 உயிருடன் பிறந்த குழந்தைகளில், ஒரு வயதிற்குள் மரணமடையும் குழந்தைகளின் விகிதம். உலகளவில், குறைவான குழந்தை இறப்பு விகிதம் எனப்படுவது, அந்தந்த மாநிலங்கள்/நாடுகளின் சீரான சுகாதார நிலையின் ஒரு குறியீடாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த பன்முறை சுகாதார செயல்பாடுகளால் நமது மாநிலத்தின் குழந்தை இறப்பு விகிதம், இந்திய அளவில் இரண்டாம் இடத்திலும், உலகளவில் வளர்ந்த நாடுகளின் குழந்தை இறப்பு விகிதத்திற்கு இணையாகவும் உள்ளது. 2005 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் குழந்தை இறப்பு விகிதம், உயிருள்ள 1000 குழந்தை பிறப்புகளுக்கு 37 ஆக இருந்தது. சுகாதாரத் துறையின் சிறப்பான செயல்பாடுகளால் தற்பொழுது மாதிரி பதிவு முறை (SRS-Sample Registration System) 2020-ன்படி 13 ஆக குறைந்துள்ளது.

5.6 தாய்மார்கள் இறப்பு விகிதம்: நிலையான வளர்ச்சி இலக்கு 2030 (Sustainable Development Goals 2030)-ன்படி, தாய்மார்கள் இறப்பு விகிதம், 2030 ஆம் ஆண்டுக்குள் ஒரு இலட்சம் உயிருள்ள பிறப்புகளுக்கு 70-க்குக் குறைவாக இருக்க வேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால், தமிழ்நாடு சுகாதாரத் துறை தனது சீரிய முயற்சிகளால் 2018-2020 ஆம் ஆண்டிலேயே தாய்மார்கள் இறப்பு விகிதத்தை ஒரு இலட்சம் உயிருள்ள பிறப்புகளுக்கு 54 எனும் அளவுக்கு குறைத்து, சாதனை படைத்துள்ளது (ஆதாரம்: மாதிரி பதிவு முறை 2018-2020). இந்திய அளவில், இது 97 ஆக உள்ளது. மகப்பேறுக்கு முந்தைய தாய்மார்களின் ஆரோக்கியம் மற்றும் நலவாழ்வுக்காக பல பன்முக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தாய் இறப்புகளைத் தவிர்க்க ஒரு தாய் கரு தரித்ததிலிருந்து, பிரசவத்திற்கு முந்தைய தாயின் ஆரம்ப பதிவு தொடங்கி, பிரசவம் மற்றும் பிரசவத்திற்குப் பிந்தைய காலம் வரை அவர்களின் உடல் நலம் கண்காணிப்பது உறுதி செய்யப்படுகிறது. பிறப்பு, இறப்பு பதிவு முறை (CRS) 2017 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் கர்ப்பம் மற்றும் குழந்தை கூட்டு கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு (PICME) மென்பொருளுடன் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த புதுமையான நடவடிக்கையை எடுப்பதில் தமிழ்நாடு, நாட்டிலேயே முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது. அனைத்து கர்ப்பிணிப்

2023 ஏப்ரல் 18]

பெண்களும் 100 சதவிகிதம் கண்காணிக்கப்பட்டு, அரசின் அயராத முயற்சிகளின் காரணமாக மகப்பேறு மரண விகிதம் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

5.7 ஆரம்ப சுகாதாரச் சேவைகள்:

அ. கிராமப்புறங்கள்:

கிராமப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள்: *தமிழ்நாட்டில் 388 ஊராட்சி ஒன்றியங்களில் 1,830 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் 24 மணி நேர பிரசவக் கவனிப்பு சேவை 1,776 ஆரம்ப சுகாதார நிலையங்களில் அறிமுகப்படுத்தப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன.*

- *28 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 24X7 மணி நேர சேவை விரிவாக்கம் செய்ய தேசிய ஊரக நலத் திட்டத்திற்குக் கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.*
- *மேலும், 2022-2023 ஆம் நிதியாண்டில் 26 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டு இயங்கவிருக்கிறது.*

கிராமப்புற ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள்: *1,765 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தற்போது அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன. 39 ஆரம்ப சுகாதார நிலையங்கள் வாடகை/வாடகையில்லா கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் ஒன்பது ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 11 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படவுள்ளன. சொந்தக் கட்டடம் கட்ட 19 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு நிலமாற்றம் மற்றும் மாற்று நிலம் தேர்வு செய்தல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ள 26 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டடம் கட்ட நிலம் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்துதல்: *அரசின் கொள்கைப்படி ஓர் ஊராட்சி ஒன்றியத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்த, படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 30 படுக்கை வசதி கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் நவீன கருவிகளான அல்ட்ரா சோனாகிராம், இசிஜி, செமி ஆட்டோ அனலைஸர் மற்றும் மேம்படுத்தப்பட்ட ஆய்வக வசதிகள் இருக்கும். தற்போது 424 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.*

[2023 ஏப்ரல் 18

ஆ. நகர்ப்புறங்கள்:

நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள்: *2012-2013 ஆம் நிதி ஆண்டில் ஏற்கெனவே நகராட்சி ஆணையரின்கீழ் செயல்பட்டு வந்த 60 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களையும் சேர்த்து 135 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கட்டுப்பாட்டில் செயல்பட உரிய நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீட்டிற்கான ஒப்புதல் வழங்கப்பட்டது. 2013-2014 ஆம் நிதி ஆண்டில் மேலும், 2 புதிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டு, மொத்தம் 137 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் பொது சுகாதாரத் துறையின்கீழ் செயல்பட்டுவந்தன. பின்னர், 3 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் விரிவாக்க எல்லைக்குள் வந்ததால் தற்பொழுது பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படுகின்றன. எஞ்சியுள்ள 134 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் 50,000-க்கு குறைவான மக்கள்தொகை உள்ள 40 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் தேசிய ஊரக நலத் திட்ட நிதியின்கீழும், 50,000-க்கு அதிகமான மக்கள் தொகை உள்ள 78 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் தேசிய நகர் நலத் திட்ட நிதியின்கீழும் செயல்படுகின்றன. மேலும், நகர்ப்புற ஆரம்ப சுகாதாரச் சேவையை மேம்படுத்தும்பொருட்டு, ஏற்கெனவே செயல்பட்டு வந்த 283 சுகாதார நிலையங்கள் மற்றும் 24 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் உட்பட, 307 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் தேசிய நகர நலவாழ்வுத் திட்டத்தின்கீழ் செயல்பட அனுமதி வழங்கப்பட்டது. எனவே, தமிழ்நாட்டில், பெருநகர சென்னை மாநகராட்சி நீங்கலாக, தற்பொழுது கீழே குறிப்பிடப்பட்டுள்ள 347 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள்மூலம் நகர் வாழ் மக்களுக்கு சுகாதாரச் சேவைகள் வழங்கப்படுகின்றன:-*

வ. எண்	**சுருக்கம்**	**நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள்**
1	*தேசிய நகர் நலத் திட்டம் (50,000 அதிகமான மக்கள்தொகை)*	*307*
2	*தேசிய ஊரக நலத் திட்டம் (50,000 குறைவான மக்கள் தொகை)*	*40*
	மொத்தம்	*347*

2023 ஏப்ரல் 18]

அவ்வாறு செயல்படும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில், மாநகராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள 23 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள், சமுதாய நகர் நல மையங்களாகச் செயல்படுகின்றன. பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட 128 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிறப்பு பன்முக மருத்துவச் சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

நகர்ப்புற நலவாழ்வு ஊட்டச்சத்து நாள் (UHN Day): *நகர்ப்புறங்களில் உள்ள கர்ப்பிணிகளுக்கு அவரவர் பகுதியில் உள்ள அங்கன்வாடி மையத்தில் உள்ள பணியாளர்களின் உதவியுடன் மாதந்தோறும் (இரண்டாம் வெள்ளிக்கிழமை) ஒரு நாள் அனைத்து முற்பேறுகால தாய்மார்களுக்கும் சத்தான உணவு வகைகளை உருவாக்கும் முறைகளை அறிவுறுத்தி, அவர்களது உடல்நலம் பேணப்பட்டு வருகிறது. வயது வந்த பெண் சிறார்களுக்கும், தன் நலம், சத்தான உணவு மற்றும் பிள்ளைப்பேறு சமபந்தமான விவரங்கள், தடுப்பூசி மற்றும் சத்தான உணவு முறைகளை விளக்கி செயல்பட்டு வருகின்றன.*

நகர்ப்புற பல்நோக்கு சிறப்பு மருத்துவம் (பாலி கிளினிக்): *128 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாலை 4.30 முதல் இரவு 8.30 மணி வரை சிறப்பு மருத்துவர்களைக் கொண்டு பல்வகை சிகிச்சை முறைகள் (பாலி கிளினிக்) நடைப்பெற்று வருகிறது. நகர்ப்புற ஏழை எளிய மக்களுக்குத் தாமதமின்றி சிறப்பு சிகிச்சைகள் கிடைக்கப்பெற ஏதுவாக பொது மருத்துவம், குழந்தைகள் நலம், பல் மருத்துவம், கண் சிகிச்சை, மகப்பேறு மற்றும் மகளிர் நல மருத்துவம், இயன்முறை மருத்துவம் ஆகியவை நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.*

நகர்ப்புற நலவாழ்வு மையம் (Urban Health and Wellness Centre): *நடப்பாண்டில், 2023-2024-ல், 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள், நகர்ப்புறத்திலுள்ள நடுத்தர வர்க்க மக்கள் வசிக்கும் பகுதிகள் மற்றும் குடிசை வாழ் மக்கள் வசிக்கும் பகுதிகளில் மருத்துவ அலுவலர், செவிலியர், பன்நோக்கு சுகாதாரப் பணியாளர் (சுகாதார ஆய்வாளர் நிலை-2), மருத்துவமனைப் பணியாளர் ஆகிய பணியாளர்களுடன் செயல்படுத்தப்படும். இந்த நகர்ப்புற மருத்துவ நிலையங்களில் காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரையிலும் மாலை 4 மணி முதல் 8 மணி வரையிலும் புறநோயாளிகள் சேவைகள் வழங்கப்படும்.*

5.8 துணை சுகாதார நிலையம்: சுகாதாரப் பணியாளர்களுடன் பொதுமக்கள் சந்திக்கும் முதல் தொடர்பு மையமாக துணை சுகாதார நிலையம் உள்ளது. துணை சுகாதார நிலையங்கள் சமவெளி கிராமப்புறங்களில் ஒவ்வொரு 5,000 மக்கள் தொகைக்கும், மலைப் பகுதிகளில் ஒவ்வொரு 3,000 மக்கள் தொகைக்கும் என்ற அளவில் நிறுவப்பட்டுள்ளது. ஒவ்வோர் ஆரம்ப சுகாதார நிலையத்திலும் கிராம சுகாதார செவிலியர் மற்றும் 3 துணை சுகாதார நிலையங்களுக்கு ஓர் ஆண் சுகாதாரப் பணியாளர் என நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டில் 8,713 துணை சுகாதார நிலையங்கள் 13.49 ச.கி. பரப்பளவுடன் பொதுமக்களின் தேவையைப் பூர்த்தி செய்கின்றன. 1) தாய்-சேய் நலம், 2) குடும்ப நல சேவைகள், 3) சிறு காயங்களுக்கு சிகிச்சை அளித்தல் மற்றும் அனைத்து தேசிய மற்றும் மாநில சுகாதாரத் திட்டங்களையும் அடிமட்ட அளவில் செயல்படுத்துதல் ஆகியவை துணை சுகாதார நிலையங்களின் முக்கியப் பணிகளாகும்.

5.9 ஆரம்ப சுகாதார நிலையங்களில் வழங்கப்பட்டு வரும் சேவைகள்:

- புறநோயாளிகள் மற்றும் உள்நோயாளிகள் சேவை, பேறுகால முன்கவனிப்பு, பிரசவம் மற்றும் பேறுகால பின்கவனிப்பு, குடும்ப நல சேவைகள்
- தொற்று நோய்களான வயிற்றுப்போக்கு, காய்ச்சல் மற்றும் இதர தொற்றுநோய்களுக்கு சிகிச்சை அளித்தல்
- சமுதாயம் சார்ந்த தாய்-சேய் நல சேவைப் பணிகள்
- தொற்றுநோய்களைத் தடுத்தலும், கட்டுப்படுத்துதலும் மற்றும் தொற்றா நோய்களான நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம் மற்றும் புற்றுநோய் போன்ற நோய்களுக்கான பரிசோதனை மற்றும் தொடர் நடவடிக்கைகள்
- பள்ளி நலக் கல்வி பணிகள்–பிறவிக் குறைபாடு, தாமத வளர்ச்சி, ஊட்டச்சத்து பற்றாக்குறை, மற்ற நோய்கள் போன்ற நான்கு வகையான நோய்களை முன்கூட்டியே கண்டறிந்து ஆரம்ப நிலையிலேயே சிகிச்சை அளித்தல். இது குழந்தையின் தரமான நல்வாழ்விற்கும் நீண்ட ஆயுளுக்கும் பெரிதும் உதவி புரிகிறது.

2023 ஏப்ரல் 18]

5.10 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல்வேறு தேசிய நல்வாழ்வுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவையாவன:

மாநிலத் திட்டங்கள்:

- *மக்களைத் தேடி மருத்துவம்*
- *கர்ப்பம் மற்றும் பச்சிளம் குழந்தை கூட்டு கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு* (PICME)-*பேறுசார் மற்றும் குழந்தை நல* (RCH) *பதிவேடு*
- *தமிழ்நாடு சுகாதாரத் திட்டம்*

தேசியத் திட்டங்கள்:

- *பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டம்*
- *அனைவருக்கும் தடுப்பூசித் திட்டம்*
- *தேசிய குடும்ப நலத் திட்டம்*
- *தேசிய இரத்த சோகை நோய் தடுப்புத் திட்டம்*
- *தேசிய அயோடின் குறைபாடு தடுப்புத் திட்டம்*
- *தேசிய பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் சுற்றுப்புற சுகாதாரத் திட்டம்*
- *தேசிய பூச்சிகளால் பரவும் நோய்கள் கட்டுப்பாட்டுத் திட்டம்*
- *தேசிய வயிற்றுப்போக்கு நோய்கள் கட்டுப்பாட்டுத் திட்டம்*
- *தேசிய காசநோய் தடுப்புத் திட்டம்*
- *தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டம்*
- *தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டம்*
- *ஒருங்கிணைந்த நோய்கள் கண்காணிப்புத் திட்டம்*
- *தேசிய பார்வை இழப்பு கட்டுப்பாட்டுத் திட்டம்*
- *தேசிய புளோரோஸிஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுத் திட்டம்*
- *தேசிய காதுகேளாமை தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுத் திட்டம்*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

- தேசிய வைட்டமின் "ஏ" பற்றாக்குறை நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம்
- தேசிய புகையிலை கட்டுப்பாட்டுத் திட்டம்
- தேசிய ஊரக நல்வாழ்வு குழுமத் திட்டங்கள்
- தமிழ்நாடு சுகாதார சீரமைப்புத் திட்டம்

முகாம்கள் மற்றும் களப் பணிகள்:

- போலியோ சொட்டு மருந்து முகாம்கள்
- மிஷன் இந்திர தனுஷ் தடுப்பூசி முகாம்கள்
- வயிற்றுப்போக்கு கட்டுப்பாடு முகாம்கள்
- தேசிய குட்டப்புழு நீக்கும் திட்ட முகாம்கள்
- வைட்டமின் "ஏ" திட்ட முகாம்கள்
- மாவட்டத்தின் அனைத்து வட்டாரங்களிலும், கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம் மருத்துவ முகாம்களை நடத்துதல்
- காய்ச்சலுக்கான சிகிச்சை முகாம்கள்
- பள்ளி நலக் கல்வி முகாம்கள், சுகாதார கல்வி மற்றும் விழிப்புணர்வு முகாம்கள்

5.11 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருந்துகளுக்கான நிதி ஒதுக்கீடு: ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வழங்கப்படும் மருந்துகள், புறநோயாளிகள், உள்நோயாளிகள், பிரசவங்கள் மற்றும் அறுவைச் சிகிச்சை (Operation) பயனாளிகளின் அடிப்படையில் மருந்துகளுக்கான போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 2022-2023 நிதியாண்டில் ரூ.46,82,05,000/- (ரூபாய் நாற்பத்து ஆறு கோடியே எண்பத்து இரண்டு இலட்சத்து ஐந்தாயிரம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதில் ரூ.44,98,85,000/- (ரூபாய் நாற்பத்து நான்கு கோடியே தொண்ணூற்று எட்டு இலட்சத்து எண்பத்து ஐந்தாயிரம் மட்டும்) ஆரம்ப சுகாதார நிலைய மருந்துகளுக்காக தமிழ்நாடு மருத்துவச் சேவைக் கழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, மருந்துகள் வழங்கப்படுகிறது. ரூ.1,83,20,000/- (ரூபாய் ஒரு கோடியே எண்பத்து மூன்று இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள்

2023 ஏப்ரல் 18]

அலுவலகத்திற்கு மருந்துகள் உள்ளூர் கொள்முதல் செய்ய நிதி வழங்கப்படுகிறது.

5.12 அனைவருக்கும் நலவாழ்வுத் திட்டம் (ஒருங்கிணைந்த முதல்நிலை சுகாதாரப் பராமரிப்புச் சேவைகள்): *சுகாதார வசதி என்பது அனைவரது உரிமையும் மற்றும் தேசிய அளவிலான நலக் கொள்கையாகவும் ஒருங்கிணைந்த அடிப்படை சுகாதார வசதியை எந்தெந்தவகையில் செய்ய வேண்டுமென்ற உண்மையை, குறிப்பாக நலவாழ்வு முன்னேற்றம், நோய் தடுத்தல், சிகிச்சை, மறுவாழ்வு* (*வலி நிவாரணம்*) *ஆதரவு சிகிச்சை முதலியவற்றை உள்ளடக்கியதாகும். மேலும், 2012 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் ஐக்கிய நாடுகள்* (United Nations) *முக்கியத் தீர்மானமாக "அனைவருக்கும் நலவாழ்வு" திட்டத்தை கொண்டு வந்தது. அது முதல் உலக வங்கியும், உலக நலவாழ்வு நிறுவனம்* (WHO) *அனைவருக்குமான நலவாழ்வின் முக்கியத்தைத் தெளிவாக உணர்ந்து, அதற்கு முன்னுரிமை கொடுத்து, நிரந்தர வளர்ச்சிக்கு வித்திட்டது. "அனைவருக்குமான நலவாழ்வு" திட்ட நாள் ஒவ்வொரு வருடமும் டிசம்பர் திங்கள் 12 ஆம் நாள் அனுசரிக்கப்பட்டு வருகிறது. உலகளாவிய நலவாழ்வுத் திட்டத்தின் முக்கிய நோக்கமானது, ஒருங்கிணைந்த சுகாதாரச் சேவைகளை மக்களின் வீட்டின் மிக அருகாமையில் வழங்குவதன்மூலம் அவர்களின் தனி மனித செலவினை* (OOPE) *குறைப்பதேயாகும். மேலும், இத்திட்டம் மக்களின் நீண்ட கால சுகாதாரத் தேவைகளை உள்ளடக்கியதாகும் இத்திட்டத்தில் அத்தியாவசிய சேவைகளான நோய்த் தடுப்பு, சுகாதார மேம்பாடு, நோய் நீக்கம், மறுவாழ்வு மற்றும் நோய் தணிப்பு சேவைகள் முழுமையாகவும், தரமாகவும் வழங்கப்படுகின்றன. துணை சுகாதார நிலையங்களை வலுப்படுத்துவது இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும். உலகளாவிய நலவாழ்வுத் திட்டத்தை நமது அரசாங்கம் அனைவருக்கும் நலவாழ்வுத் திட்டத்தின் மூலமாக மக்கள் பயன்பெற வழங்கி வருகிறது. தமிழ்நாட்டில் 2016-2017 ஆம் நிதியாண்டில் முன்னோடித் திட்டமாக* (Pilot Project) *ஒருங்கிணைந்த சுகாதாரச் சேவைகளின்கீழ் "அனைவருக்கும் நலவாழ்வுத் திட்டம்" 3 சுகாதார அலகு மாவட்டங்களிலுள்ள 3 ஊராட்சி ஒன்றியங்களில் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக 2017-2018 ஆம் ஆண்டில் இத்திட்டமானது தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பிற சுகாதார மாவட்டங்களில் உள்ள 39 சுகாதார வட்டாரங்களில் விரிவுபடுத்தப்பட்டு, வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டது. மேலும், 2018-19 ஆம்*

ஆண்டு முதல் ஒன்றிய அரசின் ஆதரவோடு 985 துணை சுகாதார நிலையங்கள், 1,384 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 460 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் கூடுதல் நலவாழ்வு சேவைகளை வழங்க வழிவகை செய்யப்பட்டன. மேலும், ஒன்றிய அரசின் ஒப்புதலுக்கிணங்க 2020-21 ஆம் ஆண்டிற்கான 1,463 துணை சுகாதார நிலையங்களும் மற்றும் 2021-22 ஆம் ஆண்டிற்கான 2,400 துணை சுகாதார நிலையங்களும் நலவாழ்வு மையங்களாக மாற்றப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. இதனைத் தொடர்ந்து 2022-2023 ஆம் ஆண்டிற்கான 2,443 துணை சுகாதார நிலையங்களை நலவாழ்வு மையங்களாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நலவாழ்வு மையங்களின்மூலம் வழங்கப்படும் 12 விதமான ஒருங்கிணைந்த சுகாதாரச் சேவைகள்-நோய்த் தடுப்பு, சுகாதார மேம்பாடு, நோய் நீக்கம், மறுவாழ்வு மற்றும் நோய்தணிப்பு சேவைகளுக்கு தொடர்புடைய பேறுசார் மற்றும் மகப்பேறு பச்சிளங் குழந்தை, குழந்தைநலம் மற்றும் வளரிளம் பருவத்தினர் நலம் (RMNCH+A), தொற்றுநோய் தடுப்பு, தொற்றாநோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை, கண் மருத்துவம், காது, மூக்கு, தொண்டை சிகிச்சை, பல் பராமரிப்பு, மன நலம், முதியோர்கள் பராமரிப்பு, சிறு நோய் சிகிச்சை மற்றும் அவசர முதலுதவி சிகிச்சை, விபத்து மற்றும் அவசரகால சேவைகளும் ஆகும்.

ஆய்வகப் பரிசோதனைகள்: அனைவருக்கும் நலவாழ்வுத் திட்டத்தின்மூலம் மேல் குறிப்பிட்டுள்ள சேவைகளுக்கு கூடுதலாக ஹப் அண்ட் ஸ்போக் உருப்படிவம் (Hub and Spoke Model) மூலம் துணை சுகாதார நிலையங்களில் 14 வகை பரிசோதனைகளும், கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களில் 64 வகையான ஆய்வகப் பரிசோதனைகளும், வட்டார சுகாதார நிலையங்களில் 64 வகையான ஆய்வக பரிசோதனைகளும், மாவட்ட பொது சுகாதார ஆய்வகங்களில் 11 வகையான பரிசோதனைகளும், மேலும், 4 வகையான பரிசோதனைகள் முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டத்தின்மூலம் இலவசமாக பொது மக்களுக்கு வழங்கப்படுகிறது.

தொலைதூர மருத்துவச் சேவை: இத்திட்டத்தின்கீழ் தொலைதூர மருத்துவச் சேவையானது இ-சஞ்சீவினி (OPD) இணைய முகப்பு மூலமாகவும், இ-சஞ்சீவினி HWC மூலமாகவும் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இச்சேவையில்

2023 ஏப்ரல் 18]

நோயாளிகள் மருத்துவர்களைக் காணொளி வாயிலாகத் தொடர்பு கொண்டு சிகிச்சை பெறலாம். மேலும், இ-சஞ்சீவினி HWC இணைய முகப்பின் மூலமாக நோயாளிகளுக்காக மருத்துவர் காணொளி வாயிலாக மற்றொரு முதுநிலை மருத்துவரின் ஆலோசனையைப் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. தொலைதூர மருத்துவம் வழங்குவதில் தமிழ்நாடு தற்போது முன்னிலை மாநிலமாக உள்ளது. மேலும், இத்திட்டத்தின்கீழ் இ-சஞ்சீவினி HWC மாநில அரசால் அதிகப்படியான தொலைதூர மருத்துவச் சேவை வழங்கியதற்காக முதன்மை மாநிலமாகத் தேர்வு செய்யப்பட்டு, விருது வழங்கப்பட்டது.

திறன் மேம்பாட்டுப் பயிற்சி: அனைவருக்கும் நலவாழ்வுத் திட்டத்தின்கீழ் திறன் மேம்பாடானது ஒரு தொடர்ச்சியான செயல்முறையாக செய்யப்படுகிறது.

- இடைநிலை சுகாதார செவிலியர்களுக்கு (MLHP) 4 மாதக் கால சமூக சுகாதாரச் சேவைகளுக்கான சான்றிதழ் படிப்பு பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரகத்தின்கீழ் உள்ள 15 பயிற்சி மையங்களில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது மற்றும் நிலையான சிகிச்சை வழிகாட்டுதல் (STC) பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

- மேலும், இத்திட்டத்தில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்களுக்கு 12 விதமான ஒருங்கிணைந்த சேவைகளை வழங்குவதற்கான 3 நாள் அறிமுக பயிற்சி இத்திட்டத்தின்மூலம் வழங்கப்படுகின்றன.

- அனைத்து களப் பணியாளர்களுக்கும் மாவட்ட அளவிலான ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது.

- அனைத்து களப் பணியாளர்களுக்கும் மாவட்ட அளவிலான திறன் மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் டிஜிட்டல் சுகாதாரப் பதிவுகள் நடத்தப்படுகின்றன.

தமிழ்நாட்டில் ஆரம்ப சுகாதாரச் சேவைகளை மேம்படுத்த நலவாழ்வு மையங்கள் (HWCs) மிக முக்கியப் பங்கு வகிக்கும். இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமானது அனைத்து குடிமக்களும் அவர்களது தகுதி பாராமல் “அனைவருக்கும் நலவாழ்வு” திட்டத்தில் பயன்பெற வேண்டும் என்பதே ஆகும்.

[2023 ஏப்ரல் 18

5.13 நடமாடும் மருத்துவமனைத் திட்டம்: 2007 ஆம் ஆண்டில் மிக தொலைவில் உள்ள கிராமங்களுக்குக் குறிப்பிட்ட நாட்களில் மாதந்தோறும் அங்கேயே சென்று நோய்களைக் கண்டறிந்து அதற்கான சிகிச்சை அளித்திட, 100 நடமாடும் மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டன. 2008-ல், 285 நடமாடும் மருத்துவ வாகனங்கள் கூடுதலாகத் துவக்கப்பட்டது. அவ்வாறு துவக்கப்பட்ட நடமாடும் மருத்துவ வாகனங்களில் ஒரு மருத்துவக் குழுவில் ஒரு மருத்துவ அலுவலர், ஒரு செவிலியர், ஓர் ஓட்டுநர், ஒரு துப்புரவுப் பணியாளர் பணியமர்த்தப்பட்டு, தொலைதூர கிராமங்களில் வாழும் மக்களுக்குத் தங்கள் இருப்பிடத்திலேயே தேவையான மருத்துவ வசதி அளிக்கும் நோக்கத்தில் 385 வட்டாரங்களிலும் நடமாடும் மருத்துவக் குழு வாகனங்கள்மூலம் முகாம்கள் நடத்தப்பட்டு வந்தன. 2011-12 ஆம் நிதியாண்டில் ஏற்கெனவே செயல்படும் 385 நடமாடும் மருத்துவக் குழு வாகனங்களை நடமாடும் மருத்துவமனைகளாக மேம்படுத்தி, கூடுதலாக ஆய்வக நுட்புனர்களை நியமனம் செய்து, ஆய்வக வசதிகளுடன் கிராமப்புற ஏழை எளிய மக்களுக்குத் தரமான மருத்துவச் சேவைகள் வழங்க ஆணையிடப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாநிலம் முழுவதும், தற்போது 476 நடமாடும் மருத்துவக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த நடமாடும் மருத்துவமனைத் திட்டம்மூலம் உயர்ந்த மருத்துவச் சேவையை வழங்குவதுடன், சிறந்த தாய்-சேய் நலன், தொற்றா நோய்களுக்குச் சிறப்பு கவனம் அளித்து ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும், கிராமங்களுக்கும், குக்கிராமங்களுக்கும் வரையறுக்கப்பட்ட பயணத் திட்டத்தின்படி மருத்துவச் சேவை அளிப்பதே இத்திட்டத்தின் உயர்ந்த நோக்கமாகும். ஒவ்வொரு முகாம் நடத்தும் கிராமங்களிலும் இக்குழு சிகிச்சை அளிக்கும் நாள் மற்றும் நேரம் தகவல் பலகையில் பொதுமக்கள் வசதிக்காக தெரிவிக்கப்படும். இத்திட்டத்தின்கீழ் திட்டமிடப்பட்ட பயணத் திட்டத்தின்படி ஒரு மாதத்திற்கு ஒரு வட்டாரத்தில் 40 முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அதிக இடற்பாடுடைய தற்காலிகக் குடியிருப்புகள் நிறைந்த பகுதிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும். சர்க்கரை நோய் மற்றும் உயர் இரத்த அழுத்த நோய் உள்ளவர்களுக்கு ஒரு மாதத்திற்கான மருந்துகள் வழங்கப்படுகிறது. 2021-2022 ஆம் நிதியாண்டில், ஏற்கெனவே செயல்பட்டு வரும் 389 நடமாடும் மருத்துவமனை வாகனங்களுக்கு பதிலாகப் புதிதாக 389 வாகனங்கள் 70.02 கோடி ரூபாய் தேசிய நலவாழ்வுக் குழுமம் நிதி ஒதுக்கீட்டில் தமிழ்நாடு மருத்துவச் சேவைகள் கழகத்தின்மூலம்

2023 ஏப்ரல் 18]

வாங்கப்பட்டு, மறுவடிவமைப்பு (fabrication), *வேலைகள் மேற்கொள்ளப்பட்டு, நடமாடும் மருத்துவமனைத் திட்டத்தின்கீழ் பொதுமக்களுக்கு மருத்துவச் சேவை வழங்குவதற்காக 8.4.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் முதற்கட்டமாக 133 புதிய நடமாடும் மருத்துவமனை வாகனங்களும், இரண்டாம் கட்டமாக 17.5.2022 அன்று 256 புதிய நடமாடும் மருத்துவமனை வாகனங்களும் கொடியசைத்து துவக்கி வைக்கப்பட்டு, அந்தந்த மாவட்டங்களில் மக்களுக்கு மருத்துவச் சேவை வழங்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளன. மேலும், 2021-22 ஆம் நிதியாண்டில் (ஏப்ரல்-மார்ச்) இதுவரையில் 2.41 இலட்சம் முகாம்கள் நடத்தப்பட்டு, 1.84 கோடி மக்கள் பயனடைந்துள்ளனர். மேலும், 2022-23 ஆம் நிதியாண்டில் 2.56 இலட்ச முகாம்கள் நடத்தப்பட்டு, 1.87 கோடி மக்கள் பயனடைந்துள்ளனர்.*

5.14 கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம்: *இந்த முதன்மைத் திட்டமானது, 1999 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் நோய்களை வருமுன் தடுக்கும் அணுகுமுறையை மக்களிடையே ஏற்படுத்தும் நோக்கில் துவக்கி வைக்கப்பட்டது. இத்திட்டம் மீண்டும் புதுப்பொலிவுடன் “கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம்” என மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 29.9.2021 அன்று சேலம் மாவட்டம், வாழப்பாடியில் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் ஆண்டிற்கு 1,250* (*கிராமப்புறங்களில் 1,155 முகாம்களும், மாநகராட்சிகளில் 80 முகாம்களும், பெருநகர சென்னை மாநகராட்சியில் 15 முகாம்களும்*) *மருத்துவ முகாம்கள் நடத்தப்படும். நோய்களைத் தொடக்க நிலையிலேயே கண்டறிந்து குணப்படுத்தும்வகையில், மருத்துவ வல்லுநர் குழுக்களைக் கொண்டு மாநிலமெங்கும் மருத்துவ முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. கிராமப்புற மக்களுக்கும் நகர்ப்புற மக்களுக்கும் வருமுன் காப்போம் திட்டம்மூலம் உடல் பரிசோதனை செய்து தக்க சிகிச்சை மற்றும் சுகாதார நலக் கல்வி வழங்கப்பட்டது. சிறப்பு மருத்துவர்கள்மூலம் தொற்று மற்றும் தொற்றாத நோய் குறித்த பரிசோதனை செய்யப்படுகிறது. மேலும், சிறு நோய்களுக்கான சிகிச்சையும் அளிக்கப்படுகிறது. அனைத்து பரிசோதனைகளும் குறிப்பாக இரத்தம், சிறுநீர் போன்றவற்றிற்கு செமி ஆட்டோ அனலைசர் போன்ற அதிநவீனக் கருவிகள் பயன்படுத்தி, பரிசோதனை செய்யப்படுகிறது. அனைத்து*

கருவுற்ற பெண்களுக்கும் அல்ட்ராசோனோகிராம்மூலம் சிறப்பு பரிசோதனை செய்யப்படுகிறது. இந்த முகாம் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெறுகிறது. பரிந்துரை மற்றும் தொடர் சிகிச்சைகள் குறிப்பிட்ட நிலையங்களில் நடத்தப்படுகிறது. கிராமப்புற மக்களுக்கு சாதாரண நோய்களுக்கான மருத்துவ சிகிச்சைகள் நல நிலையங்களின் மூலமாக வழங்கப்படுகின்றன. தொற்றா நோய்களான புற்றுநோய், சர்க்கரை நோய் போன்றவற்றிற்கு சிகிச்சை பெற அவர்களுக்குப் போதுமான வசதிகள் அருகாமையில் கிடைப்பதில்லை. ஆகவே, கிராமப்புற மக்களுக்கு குறிப்பாக தொலைதூரத்தில் வசிக்கும் கிராமப்புற மக்களுக்கு புற்றுநோய், சர்க்கரை நோய், இரத்த அழுத்தம் மற்றும் இருதய நோய்கள், வயது முதிர்ச்சியினால் ஏற்படும் நோய்கள் ஆகியவற்றிற்கு சிறப்பு மருத்துவர்களைக் கொண்டு இத்திட்டத்தின்கீழ் சிகிச்சை அளிக்கப்படுகிறது. மேலும், அறுவை சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் அரசு மருத்துவமனைகளுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் புதிய காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் சிகிச்சை பெறுவதற்கும் பரிந்துரை செய்யப்படுகிறார்கள். 2021-2022 ஆம் நிதியாண்டில் 1,260 முகாம்கள் நடத்தப்பட்டு, 9,06,427 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். 2022-2023 ஆம் நிதியாண்டில், 1,502 முகாம்கள் நடத்தப்பட்டு, 14,79,732 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

5.15 தர உத்தரவாதம் (Quality) தேசிய தர உத்தரவாதத் திட்டம்: பொது சுகாதார நிலையங்களுக்காகக் குறிப்பிட்ட தேவைகள் மற்றும் உலகளாவிய சிறந்த நடைமுறைகள் ஆகியவற்றின் அடிப்படையில் தேசிய தர உத்தரவாதம் தர நிலைகள் உருவாக்கப்பட்டுள்ளன. சமூக சுகாதார மையம், ஆரம்ப சுகாதார நிலையம், நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் தேசிய தர உத்தரவாதத் திட்டம் தற்போது நடைமுறையில் இருக்கிறது.

நோக்கங்கள்: தேசிய தர உத்தரவாதத் திட்டம், பின்வரும் நான்கு முக்கியக் கொள்கைகளைக் கொண்டுள்ளது.

- நோயாளர்களின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகள் பூர்த்தி செய்வதற்கான தர உத்தரவாதம் முக்கியத்துவம் கொடுக்கிறது.
- தர உத்தரவாதம் அமைப்புகள் மற்றும் செயல் முறைகளில் கவனம் செலுத்துகிறது.

2023 ஏப்ரல் 18]

- *சேவை வழங்குதல் செயல்முறைகளை ஆய்வு செய்ய தர உத்தரவாதம் திட்டம் பயன்படுத்துகிறது.*
- *சிக்கல் தீர்க்கும் மற்றும் தரம் மேம்படுத்துவதற்குத் தர உத்தரவாதம் ஒரு குழு அணுகுமுறையை ஊக்குவிக்கிறது.*

நீடிக்கும் திறன்:

1. *எளிதாக்கல் மற்றும் நிதி ஊக்கத் தொகை, அங்கீகாரம் பெற்று தரப்படும்.*
2. *ஒவ்வொரு மூன்று வருடங்களுக்குப் பிறகும் மறுசீரமைப்பு செய்யப்படும்.*

தரமான கலாச்சாரம், சீரான முயற்சிகள் மற்றும் முதலீடுகள்மூலம் உருவாக்க முடியும். இது இயல்பான ஒன்று அல்ல, மாற்ற முடியாது. தரமான கலாச்சாரத்தை உருவாக்குவதற்கான முக்கிய முன் முயற்சியானது, வெகுமதி, அங்கீகாரம் மூலமும், மாநில மற்றும் மாவட்ட நிர்வாகம் ஆகியவற்றின் தொடர்ச்சியான கையாளுதல் உதவியும் ஆகும். தரத்திற்கான தேசிய சான்றிதழ் பெறும் வசதிகள் மற்றும் தொடர் மதிப்பீடுகளின்போது அத்தகைய நிலையைத் தக்க வைத்துக்கொள்ளும் வசதிகளை, ஊக்கமளிக்க வேண்டும். அதிக அளவில் சுகாதார நிலையங்கள் அங்கீகரிக்கப்பட்டால் மறு ஆய்வின்போது ஊக்கத் தொகையை வழங்குவதற்கான முன்முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

ஊக்கங்கள்:

தேசிய சான்றிதழ் பெறுவதில் வெற்றி பெறும் சுகாதார நிலையங்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. கொடுக்கப்படும் வெகுமானம் படுக்கை வசதி அளவு (படுக்கைகளின் எண்ணிக்கை) அளவிற்கு விகிதாசாரமாக இருக்க வேண்டும். தேசிய தர சான்றிதழ் பெறும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ.3,00,000/– வருடத்திற்கு ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. இந்த ஊக்கத் தொகையை பின்வரும் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தலாம்.

1. *25% நிதி தர உத்தரவாதத் திட்டத்தின் பங்கேற்பாளர்களாக உள்ள ஊழியர்களுக்கு நிதி ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.*

[2023 ஏப்ரல் 18

2. அத்தகைய நிதிகளில் 75% எஞ்சியுள்ள நிலையில், இந்நிதி மாநில அரசின் வழக்கமான வரவு-செலவுத் திட்டத்திலிருந்து கிடைக்கும் ஆதரவைப் பெறும் திட்ட நடவடிக்கைகளுக்கு செலவிட முடியாது. சுகாதார நிலையத்தில் வேலை நிலைமையை மேம்படுத்துவதற்கு செலவிடப்பட அனுமதிக்கப்படுகிறது.

சாதனைகள்: தற்போது வரை 298 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தேசிய தர உத்தரவாத சான்றிதழ் பெறப்பட்டுள்ளது.

வ. எண்	நிதி ஆண்டு	தேசிய தர சான்றிதழ் பெற்ற ஆரம்ப சுகாதார நிலையங்கள்			
		சமுதாய நல மையம் (CHC)	ஆரம்ப சுகாதார நிலையம் (PHC)	நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் (Urban PHC)	மொத்தம்
1	2018-19	4	7	0	11
2	2019-20	14	18	0	32
3	2020-21	0	0	0	0
4	2021-22	23	26	5	54
5	2022-23	37	127	37	201
மொத்தம்		78	178	42	298

காயகல்ப் விருது வழங்கும் திட்டம்: பொது இடங்களின் தூய்மையை ஊக்குவிப்பதற்காக "தூய்மையே சேவை இயக்கம்" (சுவச் பாரத் அபியான்) என்ற திட்டம் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் அக்டோபர் 2 ஆம் தேதி 2014-ல் தொடங்கப்பட்டது. ஒன்றிய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம், 15 மே 2015-ல் அரசு மருத்துவமனைகளின் தரத்தையும், சுகாதாரத்தையும் மேம்படுத்தும் விதமாக 'காயகல்ப்' எனும் திட்டத்தை அறிமுகப்படுத்தியது,

2023 ஏப்ரல் 18]

திட்டத்தின் நோக்கம்: இத்திட்டத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:-

- பொது சுகாதாரப் பராமரிப்பு நிலையங்களில் தூய்மை, சுகாதாரம் மற்றும் தொற்று கட்டுப்பாடு நடைமுறைகள் ஆகியவற்றை ஊக்குவித்தல் ஆகும்.
- அத்தகைய பொது சுகாதார நிலையங்களை ஊக்குவிப்பதற்கும் மற்றும் அங்கீகரிப்பதற்கும் சிறந்த செயல்திறன் உள்ள, நிலையான நெறிமுறைகளைப் பின்பற்றப்படுகின்ற பொது சுகாதார நிலையங்களைக் கண்டறிந்து அங்கீகரிக்கிறது.
- சுகாதாரம், தூய்மை மற்றும் துப்புரவு பேணுதல் ஆகியவை குறித்த மதிப்பீட்டை மதிப்பாய்வு செய்வதற்கான ஒரு பண்பாட்டை ஊக்குவிப்பதற்காகவும் ஆகும்.
- பொது சுகாதார நிலையங்களில் நிலையான நோய் கட்டுப்பாட்டு நடைமுறைகளை உருவாக்கவும், பகிர்ந்துகொள்ளவும் நேர்மறையான உடல் நல விளைவுகளை இணைக்கவும் விழைகிறது.

விருதுகளின் பகிர்வுகள்:

வ. எண்	நிதி ஆண்டு	சமுதாய நல மையம் (CHC)	ஆரம்ப சுகாதார நிலையம் (PHC)	நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் (Urban PHC)	துணை சுகாதார நிலையம் (HWC HSC)	மொத்தம்
1	2020-2021	331	837	178	353	1699
2	2021-2022	269	728	159	410	1566
3	2022-2023	324	1017	205	818	2364

சாதனைகள்: இவ்விருது வழங்கும் திட்டம் 2016-ல் இருந்து தொடங்கப்பட்டு, தமிழ்நாட்டில் உள்ள பொது சுகாதார நிலையங்களுக்கு சிறந்த முறையில் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வோர் ஆண்டும், மாநில அளவில் ஒரே ஒரு சமூக சுகாதார நிலையம் வெற்றியாளராகவும் மற்றும் அதற்கு அடுத்த நிலையில் உள்ள

சமூக சுகாதார நிலையத்திற்கும் விருதுகள் அறிவிக்கப்படுகிறது. அதேநேரத்தில் 37 மாவட்டத்திலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வெற்றியாளர் விருதும் அறிவிக்கப்படுகிறது. அதேசமயம் 70 சதவிகிதத்திற்கும் அதிகமான மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் விருது கொடுக்கப்படுகின்றன. இந்த முன் முயற்சியின் காரணமாக பல பொது சுகாதார நிலையங்கள் வெகுமதிகளையும் அங்கீகாரத்தையும் பெற்றுள்ளன. இதனால் நோயாளிகளுக்குச் சிறந்த பாதுகாப்பான சிகிச்சை, தரமான முறையில் வழங்கப்படுகிறது.

5.16 தாய்-சேய் நலம்: *அனைத்து கர்ப்பிணிப் பெண்களுக்கும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் தரமான பிரசவத்திற்கு முந்தைய பராமரிப்பு, பிரசவ கால பராமரிப்பு மற்றும் பிரசவத்திற்குப் பிந்தைய பராமரிப்பு வழங்கவும், குழந்தை வளர்ச்சிக்குத் தேவையான நடவடிக்கைகளை நட்புடனும், தரமாகவும் வழங்கவும், பல்வேறு தேசிய சுகாதாரத் திட்டங்கள் நமது மாநிலத்தில் திறம்பட செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவை பின்வருமாறு:*

1. *தாய்-சேய் மற்றும் வளரிளம் பருவத்தினர் நலத் திட்டம்* (RMNCH-A)
2. *இரத்த சோகை தடுப்புத் திட்டம்* (Aneamia Mukht Bharat)
3. *சிறப்பு தாய்-சேய் நல முகாம்* (Pradan Mantri Surakshit Matritva Abhiyan Camps)
4. *கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்குக் கால்சியம் சத்து மாத்திரைகள் வழங்குதல்* (Calcium Supplementation Of Pregnant And Lactating Mothers)
5. *கர்ப்பிணிப் பெண்களுக்கு சர்க்கரை, தைராய்ட், ஹெப்பாடிட்டீஸ் முதலிய பரிசோதனைகள்* (Antenatal Mother Screening For Gestational Diabetes, Thyroid, Hepatitis)
6. *பிரசவ உதவியாளர் பயிற்சி* (Skilled Birth Attendant Training)

2023 ஏப்ரல் 18]

7. புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கு வீடு சென்று பராமரிப்பு (HBNC)
8. இளம் குழந்தைகளுக்கு வீடு சென்று பராமரிப்பு (HBYC)
9. இளம் குழந்தைகளுக்கு உணவூட்டும் முறை குறித்த விழிப்புணர்வு (IYCF)
10. ஜனனி சிசு சுரக்ஷ யோஜனா (JSSK)
11. ஜனனி சுரக்ஷ யோஜனா (JSY)
12. குழந்தைகளுக்கான வயிற்றுப்போக்கு தடுப்பு முகாம் (IDCF)
13. குழந்தைகளுக்கான நிமோனியா காய்ச்சல் தடுப்புத் திட்டம் (SAANS)
14. தாய்க்கான முழுமையான பாசம் (MAA)/குழந்தை நேய கொள்கைகள் (BFHI)
15. புதிதாகப் பிறந்த மற்றும் குழந்தை பருவ நோய்களின் ஒருங்கிணைந்த மேலாண்மை (IMNCI)
16. தேசிய குடற்புழு நீக்க நாள் (NDD)
17. சுரக்ஷித் மாத்ருத்வ ஆஸ்வாஸன் (SUMAN)
18. அனைவருக்கும் தடுப்பூசித் திட்டம்/மிஷன் இந்திர தனுஷ்
19. தேசிய குழந்தைகள் நலத் திட்டம் (RBSK)
20. தேசிய வளரிளம் பருவத்தினர் நலத் திட்டம் (RKSK)

5.17 தேசிய சுகாதாரக் குழுமத்தின்கீழ் செயல்படுத்தப்படும் மேற்கண்ட திட்டங்கள் தவிர, மாநில அரசு பின்வரும் சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது:

- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம் & கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இரண்டு ஊட்டச்சத்து பெட்டகங்கள் வழங்குதல்
- மாதவிடாய் கால சுகாதாரத் திட்டம் (தற்பொழுது நகர்ப்புறங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது)

[2023 ஏப்ரல் 18

- வட்டார அளவிலான அவசர பேறுகால மற்றும் பச்சிளம் குழந்தைப் பராமரிப்புச் சேவைகள் (BEmONC)
- கருவுற்ற தாய்மார்களுக்கான இரண்டு சத்துணவுப் பெட்டகம்.
- மகப்பேறு சஞ்சீவினி
- தாய்-சேய் நலப் பெட்டகம்

5.18 டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம்: இத்திட்டம், வறுமைக்கோட்டிற்குகீழ் உள்ள கர்ப்பிணிப் பெண்களுக்கு ரூ.6,000/- நிதியுதவி வழங்க முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்டது. இத்திட்டம் தமிழ்நாடு அரசால் 15.9.2006 முதல் ஏழை கர்ப்பிணித் தாய்மார்களுக்குக் கர்ப்ப காலத்தில் சத்தான உணவுக்கு ஆகும் செலவை மேற்கொள்ளல், கர்ப்ப காலத்தில் ஏற்படும் வருமான இழப்பை ஈடு செய்தல், குறைந்த எடையுள்ள குழந்தைகள் பிறப்பதைத் தடுத்தல் போன்ற நடவடிக்கைகள்மூலம் சிசு இறப்பு விகிதம் மற்றும் பேறுகால இறப்பு விகிதங்களைக் குறைக்கும் உயரிய நோக்கங்களுக்காக நிதியுதவி வழங்கும் பொருட்டு செயல்படுத்தப்படுகிறது.

- இந்நிதியுதவி மாநில அரசால் ரூ.6,000/-லிருந்து ரூ.12,000/- ஆக 1.6.2011 முதல் உயர்த்தி வழங்கப்பட்டது. மேலும், பயனாளிக்கு வழங்கப்பட்டு வந்த நிதியுதவி ரூ.12,000/-லிருந்து ரூ.18,000/- ஆக உயர்த்தப்பட்டு, நிதியுதவி வழங்குவது தொடர்பாக வழிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன. ரூ.14,000/- பணப் பயனாக பயனாளியின் வங்கிக் கணக்கிலும் மற்றும் கர்ப்பிணிப் பெண்களின் இரத்தச் சோகையை குறைத்திடவும், பச்சிளம் குழந்தையின் பிறப்பு எடை அதிகரிக்கவும் தேவையான இரும்புச்சத்து திரவம் மற்றும் ஊட்டச்சத்து பொருட்கள் அடங்கிய ரூ.2,000 மதிப்புள்ள இரண்டு ஊட்டச்சத்து பெட்டகங்கள் வழங்கப்படுகிறது.

- ஒன்றிய அரசின் பிரதான் மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா திட்டம், மாநில அரசின் திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டு, செயல்படுத்தப்படுகிறது. அனைத்து கருவுற்ற தாய்மார்களுக்கும் முதல் பிரசவத்திற்கு மட்டும் 1, 2 மற்றும் 4 தவணைகளும், எஞ்சிய 3 மற்றும்

2023 ஏப்ரல் 18]

> *5 ஆம் தவணைகள் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின்கீழும் வழங்கப்படுகிறது. பிரதான் மந்திரி மாத்ரு வந்தனா யோஜனாமூலம் ரூ.8,000/– நிதியுதவியில் ரூ.5,000/– தமிழ்நாடு அரசாலும் மற்றும் ரூ.3,000/– ஒன்றிய அரசாலும் வழங்கப்படுகிறது. மேலும், இரண்டாவது குழந்தைக்கு வழங்கப்படும் மொத்த செலவான ரூ.18,000/-ஐ தற்போது மாநில அரசே வழங்குகிறது.*

இந்தத் திட்டத்திற்காக 2022-23 ஆம் ஆண்டில் ரூ.815.66 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2022-23 ஆம் ஆண்டில், 7,69,473 இலட்சம் பயனாளிகளுக்கு ரூ.701.46 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

5.18 (அ) கர்ப்பிணித் தாய்மார்களுக்கான தாய்-சேய் நல பெட்டகம்: *கர்ப்ப காலத்தில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஏற்படும் ஊட்டச்சத்து குறைபாடு (ம) இரும்புச்சத்து குறைபாடு* (Aneamia), *பெரும்பாலான தாய்மார்கள் நோயுறுவதற்கும், மகப்பேறு மரணம் ஏற்படவும் காரணமாக அமைகிறது. கர்ப்ப காலத்தில் ஏற்படக்கூடிய இரும்புச்சத்து குறைபாட்டினால், கருவில் வளரும் சிசுவிற்கு வளர்ச்சி குறைபாடு மற்றும் பிறப்பு எடை குறைவாக குழந்தை பிறக்கவும் காரணமாக அமைகிறது. இதனால் இளம் சிசு நோயுறவும், சிசு மரணம் ஏற்படவும், வளர்ச்சி குறைபாடு ஏற்படவும் நஞ்சு எடை குறைவாக இருத்தல் மற்றும் இருக்கும் எடை குறைதல் போன்றவை உண்டாகும். இரண்டாவது பருவ கர்ப்ப காலத்தின்போது இரத்த சோகையினால் குறைமாத பிரசவம் ஏற்படுகிறது. இரும்புச் சத்து குறைபாட்டால் ஏற்படும் அனிமியாவால் குறைமாத பிரசவம் ஐந்து மடங்கு அதிகரிப்பதாகவும், மேலும், மற்ற இரத்த சோகையினால் இரண்டு மடங்கு அதிகரிப்பதாகவும் உள்ளது. இரத்த சோகை, மகப்பேறு மரணங்களுக்கு நேரடி அல்லது மறைமுகக் காரணமாகிறது. இக்குறைபாட்டைக் களைவதற்காக கர்ப்ப காலத்தில் சத்தான உணவு எடுத்துக் கொள்ளும் பொருட்டு இரண்டு தாய்-சேய் நலப் பெட்டகங்கள் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின்கீழ் கருவுற்ற பெண்களுக்கு வழங்கப்படுகின்றன. இப்பெட்டகங்கள் கருவுற்ற தாய்மார்களிடையே இரத்த சோகை குறைபாடு நீங்கப்பெற்று பிறக்கும் குழந்தைகளின் எடையும் அதிகரிப்பதற்காக, இரும்புச்*

[2023 ஏப்ரல் 18

சத்து, திரவ மருந்து மற்றும் சத்துணவு பொருட்கள் அடங்கிய தாய்-சேய் நல பெட்டகம் ஒவ்வொன்றும் ரூ.2,000/– மதிப்பில் இரண்டு பெட்டகங்கள் ரூ.4,000/– மதிப்பில் வழங்கப்படுகிறது.

தாய்-சேய் நலப் பெட்டகத்தில் அடங்கியுள்ள பொருட்கள்

வ. எண்	பொருட்கள்	அளவு
1	ப்ரோ-பிஎல் (கர்ப்பிணித் தாய்க்கான சத்து பவுடர்)	2 X 500 கிராம்
2	இரும்புச் சத்து திரவம்	3 X 200 மி.லி
3	விதையில்லா பேரிச்சம்பழம்	2 X 500 கிராம்
4	ஆவின் நெய்	500 மி.லி
5	அல்பெண்டசோல் மாத்திரை	ஒன்று
6	கோப்பை	ஒன்று
7	துண்டு	ஒன்று
8	பொருட்கள் உள்ள கூடை	ஒன்று

1.4.2018 முதல் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின்கீழ் பதிவு செய்த வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள கருவுற்ற தாய்மார்கள் அனைவருக்கும் பெட்டகம் வழங்கப்படுகிறது.

தாய்-சேய் நலப் பெட்டகம் வழங்கும் முறை:

தாய்-சேய் நலப் பெட்டகம் வழங்கும் முறை		
தாய்-சேய் நலப் பெட்டகம்	தாய்-சேய் நலப் பெட்டகம் பெறுவதற்கான நிபந்தனைகள்	தொகை
பெட்டகம் – 1	• கிராம/நகர்ப்புற சுகாதார செவிலியர்கள் கர்ப்பிணித் தாய்மார்களின் கர்ப்பத்தை 12 வாரங்களுக்குள் பதிவு செய்து பிக்மி இணையதளத்தில் பதிவேற்றம் செய்திருக்க வேண்டும். (அ) கர்ப்பிணித் தாய் தனது கர்ப்பத்தை	1 (ஒன்று) (ரூ.2,000/– மதிப்புள்ள பெட்டகம்)

2023 ஏப்ரல் 18]

தாய்-சேய் நலப் பெட்டகம் வழங்கும் முறை		
தாய்-சேய் நலப் பெட்டகம்	தாய்-சேய் நலப் பெட்டகம் பெறுவதற்கான நிபந்தனைகள்	தொகை
	12 வாரங்களுக்குள் பிக்மி இணையதளத்தில் சுயமாக (Self Registration) பதிவு செய்திருக்க வேண்டும். • கர்ப்பிணித் தாய்மார்கள் கிராம/நகர்ப்புற சுகாதார செவிலியர்களிடமிருந்து RCH எண் பெற்றிருக்க வேண்டும். • ஆரம்ப சுகாதார நிலையம்/நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர்களால் கர்ப்பம் உறுதி செய்து, ஆரம்ப சுகாதார நிலைய கர்ப்ப பதிவேட்டில் பதிவு செய்திருக்க வேண்டும். • கிராம/நகர்ப்புற சுகாதார செவிலியர்களால் கர்ப்பிணித் தாயின் உயர் இரத்த அழுத்தம், உயரம் மற்றும் எடை பதிவு செய்திருக்க வேண்டும். • இரண்டு உயிருடன் பிறந்த குழந்தைகளுக்குப் பிறகு கர்ப்பம் அடைந்த தாய்மார்கள் (ம) வெளி மாநிலங்களிலிருந்து புலம்பெயர்ந்த தாய்மார்களும் மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும்பட்சத்தில் தாய்-சேய் நலப் பெட்டகம் பெற தகுதியானவர்கள். • கடைசி மாதவிடாய் நாளிலிருந்து மூன்று மாதங்கள் (12 வாரங்கள்) முடிந்ததும் முதல் பெட்டகம் வழங்க வேண்டும்.	

தாய்-சேய் நலப் பெட்டகம் வழங்கும் முறை		
தாய்-சேய் நலப் பெட்டகம்	தாய்-சேய் நலப் பெட்டகம் பெறுவதற்கான நிபந்தனைகள்	தொகை
பெட்டகம்-2	கடைசி மாதவிடாய் நாளிலிருந்து நான்கு மாதங்கள் (16 வாரங்கள்) முடிந்ததும் இரண்டாம் பெட்டகம் வழங்க வேண்டும்.	1 (ஒன்று) (ரூ.2,000/– மதிப்புள்ள பெட்டகம்)
தாய்—சேய் நலப் பெட்டகத்தின் மொத்தத் தொகை		ரூ.4,000/–

நிதி ஒதுக்கீடு: *இத்திட்டத்திற்கு ஆண்டுதோறும் சுமார் ரூபாய் 240.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இப்பெட்டகம் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தால் கொள்முதல் செய்யப்படுகிறது.*

5.19 தாய்-சேய் நலப் பரிசு பெட்டகத் திட்டம்: *தாய்-சேய் நலப் பரிசு பெட்டகத் திட்டம் 8.9.2015 முதல் அனைத்து அரசு மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் துவங்கப்பட்டது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் குழந்தையைப் பிரசவித்த தாய்மார்களின் மற்றும் பிறந்த குழந்தையின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதாகும். எனவே, குழந்தை பிறந்தவுடன் பிரசவித்த தாய்மார்களுக்கு 16 சுகாதாரப் பொருட்கள் அடங்கிய தாய் நலப் பரிசு பெட்டகம் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு நிதியாண்டும் காலாண்டு அடிப்படையில் ரூ.50 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. தற்போது இவ்வாண்டிற்குக் கூடுதலாக ரூ.17.35 கோடி* (Contingency Fund) *சேர்த்து, மொத்தம் ரூ.67.35 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகையானது தமிழ்நாடு மருத்துவச் சேவைக் கழகத்தில் செலுத்தப்பட்டு தாய்-சேய் நலப் பரிசு பெட்டகம் கொள்முதல் செய்து விநியோகம் செய்யப்படுகிறது. இத்திட்டத்தின்மூலம் நடப்பு நிதியாண்டு 2022-23-ல் 3,59,971 பிரசவித்தத் தாய்மார்கள் பயன்பெற்றுள்ளனர்.*

5.20 மாதவிடாய் கால சுகாதாரத் திட்டம்: *நம் நாட்டில், மாதவிடாய் மற்றும் மாதவிடாய் நடைமுறைகள் சமூக-கலாச்சாரக் கட்டுப்பாடுகளால் சூழப்பட்டுள்ளது. மாதவிடாய் காலங்களில் தேவையான சுகாதார நடைமுறைகளை*

2023 ஏப்ரல் 18]

பின்பற்றுவதில் உள்ள தடைகளாலும், சுகாதாரமற்ற மாதவிடாய் பொருட்களைப் பயன்படுத்துவதாலும், பெண்களுக்கு பல்வேறு உடல்நலக் குறைபாடுகள் மற்றும் நோய்தொற்று ஏற்படுகிறது. இக்குறைகளைப் போக்கும் விதமாக, மாதவிடாய் காலங்களில் சுகாதாரமான சானிட்டரி நாப்கின் வழங்கவும், அது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தவும், தமிழ்நாடு அரசு 27.3.2012 அன்று மாதவிடாய் சுகாதாரத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின்கீழ், கிராமப் பகுதிகளில் வசிக்கும் பள்ளி செல்லும் மற்றும் பள்ளி செல்லாத பருவம் அடைந்த வளரிளம் பெண்கள், அரசு மருத்துவமனைகளில் பிரசவிக்கும் தாய்மார்கள், சிறைச் சாலைகளில் உள்ள பெண் கைதிகள் மற்றும் சென்னை மன நல மருத்துவமனையில் உள்ள பெண் உள்நோயாளிகள் ஆகியோருக்கு, 'புதுயுகம்' என்ற பெயரில் இலவச சானிட்டரி நாப்கின்கள் வழங்கப்படுகின்றன. மேலும், தற்பொழுது இத் திட்டம் நகர்ப்புறங்களில் வசிக்கும் பள்ளி செல்லும் மற்றும் பள்ளி செல்லாத பருவம் அடைந்த வளர் இளம் பெண்களுக்கும், அரசு மருத்துவமனைகளில் 15 முதல் 49 வயது வரை உள்ள பெண் உள்நோயாளிகளுக்கும் இலவசசானிட்டரி நாப்கின்கள் வழங்க விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் பருவப் பெண்களின் குடும்பத்திற்கு, சானிட்டரி நாப்கின்கள் வாங்குவதற்கு ஆகும் செலவு குறைக்கப்பட்டு, அதன்மூலம் பருவப் பெண்களின் சானிட்டரி நாப்கின் பயன்பாடு அதிகரிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

வ. எண்	பயனாளியின் வகை	வழங்கப்படும் பைகள்	நாப்கின் வகை	எதிர்பார்க்கப்படும் பயனாளிகள் எண்ணிக்கை	கொள்முதல் முறை
1.	கிராமப்புறங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள 10 முதல் 19 வயது வரையுள்ள	ஆறு சானிட்டரி நாப்கின் கொண்ட ஒரு பை வீதம் மூன்று பைகள் இரண்டு மாதங்களுக்கு	நாடா இல்லாத நாப்கின்	43.34 இலட்சம்	தமிழ்நாடு மருத்துவச் சேவை கழகம்மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

வ. எண்	பயனாளியின் வகை	வழங்கப்படும் பைகள்	நாப்கின் வகை	எதிர்பார்க்கப்படும் பயனாளிகள் எண்ணிக்கை	கொள்முதல் முறை
	பள்ளி செல்லும் மற்றும் பள்ளி செல்லாத பருவம் அடைந்த வளர் இளம் பெண்கள்	ஒரு முறை வழங்கப்-ப்படுகிறது. இவ்வாறு வருடத்திற்கு 18 பைகள்			
2.	அரசு மருத்துவமனைகளில் 15-49 வயது வரை உள்ள பெண் உள் நோயாளிகள்	6 நாடாவுடன்-கூடிய சானிட்டரி நாப்கின்கள் கொண்ட ஒரு பை	நாடா இல்லாத நாப்கின்	73.51 இலட்சம்	
3.	அரசு மருத்துவமனைகளில் பிரசவிக்கும் தாய்மார்கள்	6 நாடாவுடன்-கூடிய சானிட்டரி-நாப்கின்கள் கொண்ட ஒரு பை வீதம் ஏழு பைகள்	நாடாவுடன்-கூடிய நாப்கின்கள்	5.07 இலட்சம்	சுய உதவி குழுக்களால் தயாரிக்கப்படும் நாடாவுடன்-கூடிய நாப்கின்கள் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின்-மூலம் தமிழ்நாடு மருத்துவச் சேவை கழகத்தால் கொள்முதல் செய்யப்படுகிறது.

2023 ஏப்ரல் 18]

வ. எண்	பயனாளியின் வகை	வழங்கப்படும் பைகள்	நாப்கின் வகை	எதிர்பார்க்கப்படும் பயனாளிகள் எண்ணிக்கை	கொள்முதல் முறை
4.	சிறைச்சாலைகளில் உள்ள பெண் கைதிகள்	வருடத்திற்கு 18 பைகள் (ஆறு சானிட்டரி நாப்கின் கொண்ட ஒரு பை)	நாடாவுடன்-கூடிய நாப்கின்கள்	3,000	
5.	சென்னை மன நல மருத்துவமனையில் உள்ள பெண் உள் நோயாளிகள்	வருடத்திற்கு 18 பைகள் (ஆறு சானிட்டரி நாப்கின் கொண்ட ஒரு பை)	நாடாவுடன்-கூடிய நாப்கின்கள்	100	
		மொத்த பயனாளிகள்			1.21 கோடி

5.21 வட்டார அளவிலான அவசர பேறுகால மற்றும் பச்சிளம் குழந்தை பராமரிப்புச் சேவைகள் (BEmONC):

- *அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் (PHC) அரசு அடிப்படை அவசரக்கால மகப்பேறு சிகிச்சையை (BEmOC) வழங்குகிறது. 24X7 மணி நேரமும் தாய்-சேய் நலம் மற்றும் பிரசவ பயிற்சி பெற்ற செவிலியர்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களில் இருப்பதை அரசு உறுதி செய்துள்ளது. ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிரசவித்த தாய்மார்கள் குறைந்தது 48 மணி நேரம் மருத்துவமனையில் தங்க அறிவுறுத்தப்படுவார்கள். அப்பொழுது அத்தாய்மார்களுக்குத் தேவையான உணவு மற்றும் குழந்தைகளுக்கு வழங்க வேண்டிய தடுப்பூசிகள் அனைத்தும் வழங்கப்படும். பிரசவித்த தாய்மார்கள் குறைந்தது மூன்று நாட்கள் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் தங்க*

அறிவுறுத்தப்பட்டு, தொற்று பாதிப்புகள் ஏற்படாமல் இருக்க ஒவ்வொரு பிரசவத்திற்கும் தனித் தனி பிரசவ கிட் பயன்படுத்தப்படுகிறது.

- மலைப் பிரதேசங்களில் கர்ப்பிணிப் பெண்கள் பிரசவ நேரங்களில் உடனே மருத்துவமனைக்கு வருவதில் தாமதம் ஏற்பட்டு தாய் இறப்பு நிகழ்வதால், அப்பகுதிகளிலுள்ள 17 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிரசவ காத்திருப்பு அறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- பிரசவிக்கும் தாய்மார்களுக்கு மனதளவில் ஆதரவளிக்க மகப்பேறு காலத்தில், தாய் விரும்பும் பெண் உறவினர் ஒருவர் உடனிருக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- இரத்தம் செலுத்த வேண்டிய தேவைக்கு அருகிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களிலேயே எளிதில் இரத்தம் கிடைக்கும்வகையில் இரத்த சேமிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

5.22 பள்ளி சிறார் கண்ணொளி காப்போம் திட்டம் (KKT): கண்ணொளி காப்போம் திட்டம் 2009 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது, இத்திட்டமானது, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களிடையே கிட்டப்பார்வை பரிசோதனை செய்யப்பட்டு இலவசமாகக் கண் கண்ணாடிகள் வழங்கப்படுகிறது. ஒரு சில பார்வைக் குறைபாடு உள்ள குழந்தைகளுக்கு வருடந்தோறும் பார்வைத் திறனில் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே பார்வைக் குறைபாடு உள்ள மாணவர்களுக்கு பார்வைத் திறனில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டிருந்தால் அவர்களையும் மறுபரிசோதனை செய்து புதிய கண்ணாடி வழங்கப்படுகிறது. மாணவர்கள் நலனில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மாணவர்களைப் பள்ளியில் பரிசோதனை செய்து அவர்களிடையே பார்வைக் குறைபாடு உள்ளவர்களைக் கண்டறிந்து கண் மருத்துவ உதவியாளர் அவர்களிடம் பரிசோதனைக்கு அனுப்பிடுவார்கள். கண் மருத்துவ உதவியாளர் பள்ளியில் மாணவர்களின் கண் பார்வையைப் பரிசோதித்து உரிய சீட்டு வழங்குவார். அச்சீட்டின் அடிப்படையில் கண் கண்ணாடிகள் இலவசமாகக் குறைபாடு உள்ள மாணவர்களுக்கு

2023 ஏப்ரல் 18]

வழங்கப்படுகிறது. இதுவரை, (2022–2023), மொத்தம் 38,51,605 பள்ளி குழந்தைகளுக்குப் பரிசோதனை செய்யப்பட்டு கண் கண்ணாடி வழங்க ஆவன செய்யப்பட்டுள்ளது.

5.23 பயிற்சி மற்றும் தொடர் நலக் கல்வித் திட்டம்: தொடர் பயிற்சி, பணி முன் பயிற்சி மற்றும் பணியிடைப் பயிற்சிகள் இத்துறையில் பணிபுரியும் அனைத்துச் சுகாதார அலுவலர்கள், மருத்துவ அலுவலர்கள், செவிலியர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கு எட்டு பயிற்சி நிறுவனங்களின் மூலமாக பயிற்சி வழங்கப்படுகிறது. அவை பொது சுகாதாரம் பயிற்சி நிறுவனம், பூவிருந்தவல்லி, நலவாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பயிற்சி நிலையம், எழும்பூர், மதுரை மற்றும் காந்திகிராமம், மனிதவள மேம்பாட்டு நிறுவனம், விழுப்புரம் மற்றும் சேலம், விலங்கினம் மற்றும் நோய்பரப்பிகள் கட்டுப்பாட்டு மையம், ஓசூர், கிருஷ்ணகிரி, மண்டல பொது சுகாதார பயிற்சி நிலையம், திருவரங்குளம் மூலமாகவும் பயிற்சி அளிக்கப்படுகிறது. பூவிருந்தவல்லியில் உள்ள பொது சுகாதாரம் பயிற்சி நிறுவனம், புதுதில்லி தேசிய சுகாதார மற்றும் குடும்ப நலத் துறை பயிற்சி நிறுவனத்தின் தேசிய துணை பயிற்சி நிறுவனமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதுவரை, மருத்துவ அலுவலர்கள், செவிலியர்கள், துணை செவிலியர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த பிற பணியாளர்களுக்கு இத்துறை மற்றும் தேசியக் நல குழுமம் மூலமாகக் கீழ்க்கண்ட பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

வ. எண்	பதவியின் பெயர்	பயிற்சியின் பெயர்	பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை
1	மருத்துவ அலுவலர்கள்	மருத்துவ அலுவலர்களுக்கான நிர்வாகத் திறன் பயிற்சி	6587
2	மருத்துவ அலுவலர்கள்	அடிப்படை பேறுகால மற்றும் பச்சிளம் குழந்தை பராமரிப்பு	7279
3	மருத்துவ அலுவலர்கள்/ செவிலியர்கள்/துணை செவிலியர்கள்	தாய்-சேய் நல திறன் மேம்பாட்டு பயிற்சி	15225

[2023 ஏப்ரல் 18

வ. எண்	பதவியின் பெயர்	பயிற்சியின் பெயர்	பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை
4	செவிலியர்கள்/துணை செவிலியர்கள்	இனப்பெருக்கம், மகப்பேறு, பச்சிளம் குழந்தைகள், குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினர் நலன் பயிற்சி	3270
5	மருத்துவ அலுவலர்கள்/ செவிலியர்கள்/துணை செவிலியர்கள்	பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு மற்றும் உயிர்ப்பித்தல் பயிற்சி (NSSK)	7052
6	சுகாதாரப் பணியாளர்கள்	தேசிய பள்ளி சிறார் நலத் திட்டம் பயிற்சி (RBSK)	187
7	சுகாதாரப் பணியாளர்கள்	பச்சிளம் குழந்தை மற்றும் குழந்தை பருவ நோய்களின் ஒருங்கிணைந்த மேலாண்மைப் பயிற்சி (IMNCI)	12761
8	சுகாதாரப் பணியாளர்கள்	தரம் நிர்ணயித்தல் பயிற்சி	410
9	மருத்துவ அலுவலர்கள்/ செவிலியர்கள்	பிரசவ அறை தர மேம்பாட்டு பயிற்சி (LAQshyA)	464
10	செவிலியர்கள்	இடைநிலை சுகாதாரப் பணியாளர்கள் பயிற்சி	3276 (5 Batches) + 154 (6th Batch)
11	மருத்துவ அலுவலர்கள்	தொற்றா நோய்களைப் பற்றிய பயிற்சி	1391
	செவிலியர்கள்		2111

2023 ஏப்ரல் 18]

வ. எண்	பதவியின் பெயர்	பயிற்சியின் பெயர்	பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை
12	ASHA பணியாளர்கள்	அங்கீகரிக்கப்பட்ட சமூக நல ஆர்வலர்கள் பயிற்சி	2650
13	மருத்துவ அலுவலர்கள்	விஷக்கடி மற்றும் நச்சு முறிவுக்கான மேம்பாட்டு பயிற்சி	4289
14	மருத்துவ அலுவலர்கள்	உயிர் காக்கும் மயக்கவியல் திறன் பயிற்சி	682
15	மருத்துவ அலுவலர்கள்	பேறுகால அவசரச் சேவை பயிற்சி (EmOC)	154

தேசிய நலக் குழுவால் ஒருங்கிணைக்கப்பட்ட கீழ்க்காணும் பயிற்சிகள் மேற்கண்ட பயிற்சி நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன. திறன்மிகு பிறப்பு பற்றிய பயிற்சி (SBA), பிரசவ திறன் பயிற்சி (EmONC, 6 மாதம்) மருத்துவ அலுவலர்களுக்கான உயிர்காக்கும் மயக்கவியல் பயிற்சி (LSAS, 6 மாதம்) திறன்மிகு ஆய்வகப் பயிற்சி, ஒருங்கிணைந்த குழந்தைகளுக்கான நோய் பற்றிய பயிற்சி, தடுப்பூசி பயிற்சி, ஒருங்கிணைந்த நோய் தடைகாப்பு மற்றும் கண்காணிப்பு பயிற்சி, கணினி பயிற்சி மற்றும் தேசிய சுகாதார ஒருங்கிணைப்பு பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. கர்ப்ப காலத்தில் கருவிலேயே சிசுக்களுக்குண்டாகும் பிறவி குறைபாட்டினைக் கண்டறியும் அல்ட்ராசோனோகிராம் பயிற்சியானது ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்களுக்கு அரசு மற்றும் தனியார் ஒருங்கிணைப்பின்மூலம் நடத்தப்படுகின்றது. தற்போது, 2018 ஆம் ஆண்டு முதல் மாநிலத்தில் இயங்கிவரும் 11 தாய்மை துணை செவிலியர் பயிற்சிப் பள்ளிகளில் ஒரு பள்ளியில் 60 நபர் வீதம் பயிற்சி அளித்திட அரசு அனுமதி வழங்கியுள்ளது. இப்பள்ளிகளில் இரண்டு வருட மகப்பேறு தாதியப் பயிற்சி வழங்கப்படுகிறது. அரசு சேவை இல்லங்களில் பயின்ற மாணவிகள் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பணியாற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் இப்பயிற்சிக்குத் தேர்வு செய்யப்படுகின்றனர். 2021-23

[2023 ஏப்ரல் 18

காலகட்டத்தில் பயிற்சிப் பள்ளிகளில் 660 பணியாளர்களுக்கு மேற்படி பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. மேலும், தற்போது மேற்கூறிய பயிற்சிப் பள்ளிகளில் 2022-2024 ஆண்டுகளில் 574 மாணவிகள் பயிற்சி பெற்று வருகின்றனர். அரசு பொது சுகாதாரம் (ம) நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரை, தனியார் நிறுவனங்களால் துவக்கப்படும் துணை செவிலியர் பயிற்சிப் பள்ளிகளுக்குத் தேர்வு குழும தலைவராக நியமனம் செய்துள்ளது. அதன்படி 2017-2018 ஆம் கல்வி ஆண்டு முதல் 65 தனியார் அறக்கட்டளைகள்/பயிற்சி நிறுவனங்கள் தாய்மை துணை செவிலியர் பயிற்சிப் பள்ளிகளைத் துவக்கிட அனுமதி வழங்கப்பட்டது. தனியார் நிறுவனங்களால் துவக்கப்படும் பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் (ஆண்)/சுகாதார ஆய்வாளர்/ துப்புரவு ஆய்வாளர் பயிற்சிப் பள்ளிகளுக்கு, பொது சுகாதாரம் (ம) நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரை, தேர்வுக் குழுமத் தலைவராக அரசு நியமனம் செய்துள்ளது. அதன்படி, 2017-2018 ஆம் கல்வி ஆண்டு முதல் 56 தனியார் அறக்கட்டளைகள்/ பயிற்சி நிறுவனங்களுக்கு சுகாதாரப் பணியாளர் (ஆண்)/சுகாதார ஆய்வாளர்/துப்புரவு ஆய்வாளர் பயிற்சிப் பள்ளிகளைத் துவக்கிட அனுமதி வழங்கப்பட்டது. பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் (ஆண்) பயிற்சி மதுரை மற்றும் ஓசூர் மண்டல பயிற்சி நிறுவனங்களின்மூலம் படிப்படியாக 296 பல்நோக்கு சுகாதார (ஆண்) பணியாளர்களுக்கு ஒரு மாத பணியிடை பயிற்சி வழக்கப்பட்டுள்ளது. மேலும், ஓசூர் மண்டலப் பயிற்சி நிறுவனத்தில் 40 ஆய்வக நுட்புனர் நிலை III-க்கு ஒரு வருட பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2022 ஆம் ஆண்டு 591 பல்நோக்கு சுகாதார (ஆண்) பயிற்சியாளர்களுக்கு ஒரு மாத பணியிடைப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தில் பணியாற்றிய 6 நபர்களுக்கு சுகாதார ஆண் பணியாளர் பயிற்சி வழக்கப்பட்டுள்ளது. இவை தவிர பூவிருந்தவல்லி பொது சுகாதார நிறுவனத்தில், நகராட்சி நிர்வாகத் துறையைச் சேர்ந்த 10 துப்புரவு மேற்பார்வையாளர்களுக்கு ஒரு வருட துப்புரவு ஆய்வாளர் பயிற்சி தற்போது வழங்கப்பட்டுவிட்டது. தேசிய நலக் குழுமத்தின்கீழ் வழங்கப்படும் பல்வேறு பயிற்சிகள் அத்தியாயம்-12-ல் தேசிய சுகாதார நலக் குழுமத்தின்கீழ் கொடுக்கப்பட்டுள்ளன.

5.24 தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம், 1939: பொது சுகாதாரத்திற்கான சட்டம் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான்

2023 ஏப்ரல் 18]

முதன்முதலாக இயற்றப்பட்டது. இச்சட்டமானது ஆரோக்கியமான சுற்றுசூழல், தொற்று நோய் கட்டுப்பாடு, உணவு சுகாதாரம், மகப்பேறு மற்றும் குழந்தை நலம் ஆகிய நடவடிக்கைகளில் முக்கியக் கவனம் செலுத்துகிறது. வளர்ந்து வரும் மற்றும் மீண்டும் உருவாகும் நோய்கள், சுகாதாரமான உணவு, இளம் பருவத்தினர் (ம) முதியோர் பிரச்சினைகள், அதிகரிக்கும் சுற்றுச்சூழல் ஆபத்துகள் ஓசோன் படலச் சிதைவு, பசுமை நிற வாயு குறைதல், கதிர் வீச்சு, வளர்சிதைவு மாற்றம், வாழ்க்கை முறையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தால் சுற்றுச்சூழல் மாசு போன்றவை வெளிப்பட்டு வருவதால் பொது சுகாதாரச் சட்டத்தில் 13.3.2020 அன்று திருத்தம் கொண்டுவரப்பட்டது. தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம் 1939-ன்கீழ் கோவிட்-19 தொற்று நோயை அறிவிக்கப்பட்ட நோயாக 23.3.2020 அன்று தமிழ்நாடு அரசு அறிவித்தது. மேலும், தமிழ்நாடு அரசு கருப்பு பூஞ்சை நோயினை அறிவிக்கப்பட்ட நோயாக தொற்று நோய் சட்டம், 1897-ன்கீழ் அறிவித்தது. கொரோனா நோய்த் தொற்றுக்குப் பிறகு, மக்களிடையே கட்டுப்பாடுகள் கொண்டு வர இச்சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்து 2020 ஆம் ஆண்டின் திருத்தத்தில் சில குற்றங்களுக்கு ரூ.500 முதல் ரூ.5000 வரையிலான உடனடி அபராதம் வசூலிக்கப்பட்டு, நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. இது தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டத்தைப் பரவலாகப் பயன்படுத்த உதவியது மற்றும் தொற்றுநோய் நிலைமையைக் கட்டுப்படுத்துவதில் ஒரு தடுப்பு காரணியாகச் செயல்பட்டது.

5.25 குடிமை பதிவு முறை: *பிறப்பு மற்றும் இறப்பு பதிவு முறைஎனஅறியப்படும்குடிமைபதிவுமுறையானது,தொடர்ச்சியான மற்றும் நிரந்தர அடிப்படையில் சட்ட விதிகளுக்குட்பட்ட பிறப்பு, இறப்பு போன்ற முக்கிய நிகழ்வுகளைப் பதிவு செய்வதாகும். இப்பதிவு சுகாதாரம், கல்வி போன்றவை தொடர்பான பல்வேறு திட்டங்களை மதிப்பீடு செய்வதற்கு தனி நபர்களுக்கு சட்டப்பூர்வ அடையாளத்தை வழங்குகிறது. பிறப்பு மற்றும் இறப்பு பதிவு சட்டம், 1969-ன்படி பிறப்பு, இறப்புகளைப் பதிவு செய்வது கட்டாயமாகும். மேலும், இது தமிழ்நாடு பிறப்பு மற்றும் இறப்பு பதிவு விதிகள், 2000 மூலம் மாநிலத்தில் செயல்படுத்தப்படுகிறது. இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்புத் துறை, தமிழ்நாட்டின் பிறப்பு மற்றும் இறப்புக்கான முதன்மைப் பதிவாளர் ஆவார். மேலும், தமிழ்நாடு மாநிலத்தில் பிறப்பு இறப்பு சட்டம் மற்றும் விதிகளை*

செயல்படுத்த மாநிலத்தின் தலைமை அதிகாரி ஆவார். அனைத்து பிறப்பு மற்றும் இறப்புகளும் அவை நிகழ்ந்த 21 நாட்களுக்குள் நிகழ்வு நடந்த இடத்தில் கட்டாயமாகப் பதிவு செய்யப்பட வேண்டும் மற்றும் மேற்கூறிய கால வரம்பிற்கு அப்பால் பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகளை தமிழ்நாடு பிறப்பு மற்றும் இறப்பு விதிகள், 2000-ல் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளின்படி மேற்கொள்ளலாம். மாநிலத்தின் 38 மாவட்டங்களில் சுமார் 16,348 பதிவு மையங்கள் உள்ளன. அவற்றில் சுகாதார ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், செயல் அலுவலர்கள், சுகாதார ஆய்வாளர்கள் என சுகாதாரம், வருவாய், நகராட்சி பேரூராட்சி மற்றும் மாநகராட்சி போன்ற பல்வேறு துறைகளின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர்களால் பதிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

குடிமை பதிவு முறை (CRS) பொது மென்பொருள்: மாநிலம் முழுவதும் சீரான தன்மையை மேற்கொள்ளும்பொருட்டு, பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களைப் பொதுமக்கள் சிரமமின்றி பதிவிறக்கம் செய்யவும், பொது CRS மென்பொருள் அனைத்து பதிவு மையங்களிலும் 1.1.2018 முதல் செயல்படுத்தப்பட்டுள்ளது. https://crstn.org/birth_death_tn/ மென்பொருளில் பிறப்பு மற்றும் இறப்புகள் 1.1.2018 முதல் மாநிலம் முழுவதும் பதிவு செய்யப்பட்டுள்ளன. 1.1.2018 முதல் பதிவு செய்யப்பட்ட நிகழ்வுகளுக்கான பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்களைக் குடிமக்கள் https://crstn.org/birth_death_tn/ என்ற இணையதளத்தில் இலவசமாகப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். 2022 ஆம் ஆண்டில் CRS பொது மென்பொருளில் மொத்தம் 9,30,472 பிறப்புகளும், மொத்தம் 6,94,206 இறப்புகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஜனவரி 2023 முதல் மார்ச் 2023 வரை 1,88,520 பிறப்புகள் மற்றும் 1,78,367 இறப்புகள் CRS பொது மென்பொருளில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இறப்பு காரணத்திற்கான மருத்துவச் சான்றிதழ் (MCCD): இறப்பு காரணத்திற்கான மருத்துவச் சான்றளிப்புத் திட்டம் (MCCD) பிறப்பு மற்றும் இறப்புப் பதிவுச் சட்டம் 1969-ன் ஒருங்கிணைந்த பகுதியாகும். மேலும், இறந்தவர்களின் இறப்பிற்கான காரணங்கள் பற்றிய புள்ளிவிவரங்களை வழங்கும் ஒரே ஆதாரமாகும். மேலே கூறப்பட்ட பிறப்பு இறப்பு சட்டத்தின் பிரிவு 10(3)-ன்படி, ஒரு நபர் தனது இறப்பிற்கு முன்னால்

கடைசியாக ஒரு மருத்துவரால் சிகிச்சை பெற்றவராக இருப்பின், அந்த மருத்துவர், அந்த நபரின் மரணத்திற்குப் பிறகு இறப்பிற்கான காரணத்தை, படிவம் 4 (மருத்துவமனை இறப்புகளுக்கு) மற்றும் படிவம் 4A (மருத்துவமனை சாராத இறப்புகளுக்கு) எவ்வித கட்டணமும் இல்லாமல் இறப்புக்கான மருத்துவ சான்றிதழில் இறப்புக்கான காரணத்தை வழங்க வேண்டும். பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் இறப்பு பதிவினை மேற்கொள்ளும்போது இறப்புக்கான மருத்துவச் சான்றிதழை பெற்று இறப்பினைப் பதிவு செய்ய வேண்டும். ICD-10 வகைப்பாட்டின்படி மருத்துவ ரீதியாக சான்றளிக்கப்பட்ட இறப்புக்கான காரணங்களை ஒருங்கிணைக்க ICMR-NCDIR ஆல் உருவாக்கப்பட்ட e-Mortality மென்பொருள் (e-Mor) பயன்பாட்டில் உள்ளது. மேலும், இது CRS மென்பொருளுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

பிறப்பு இறப்பு ஆவணங்களை பதிவேற்றம் செய்தல்: 1969 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை CRS இணையதளத்தில் பிறப்பு மற்றும் இறப்பு பதிவேடுகளை பதிவேற்றம் செய்வதற்கான அறிவிப்பு நடவடிக்கையை மேற்கொள்ள ரூ.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஒரு நிகழ்வின் தரவு உள்ளீடு ரூ.2/– என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அனுமதிக்கப்பட்ட தொகையில், கிராம பஞ்சாயத்து, பேரூராட்சி மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் CRS-ன்கீழ் பதிவு செய்யப்பட்ட முக்கிய நிகழ்வுகளின் தரவு உள்ளீட்டை படிப்படியாக மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. முதல் கட்டமாக 2013 முதல் 2018 வரை திட்டமிடப்பட்டு, தரவு உள்ளீடு பணிகள் நடைபெற்று வருகின்றன. மார்ச் 2023 வரை, சுமார் 29,06,781 (75%) தரவு உள்ளீடுகள் செய்யப்பட்டுள்ளன. இவை சம்பந்தப்பட்ட அதிகாரியின் சரிபார்ப்பிற்குப் பின் Civil Registration System மென்பொருளில் பதிவேற்றப்படும்.

5.26 சிகரெட் மற்றும் இதர புகையிலைப் பொருட்கள் தடுப்புச் சட்டம் (COTPA), 2003: புகையிலைப் பொருட்களின் உபயோகத்தைக் குறைக்கவும், புகையிலையினால் விளையும் தீமைகள் மற்றும் இரண்டாம் தர (SHS) புகையிலையினால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து இளைஞர்கள் மற்றும் மக்களைக் காப்பாற்றவும் ஒன்றிய அரசால், சிகரெட் மற்றும் இதர புகையிலைப் பொருட்கள் (விளம்பரம், வணிகம் மற்றும் வர்த்தகம், உற்பத்தி, வழங்கல் மற்றும் பகிர்ந்தளித்தல், தடை செய்தல்)

தடுப்புச் சட்டம், 2003, இயற்றப்பட்டுள்ளது. இந்தச் சட்டம் அனைத்து புகையிலைப் பொருட்களுக்கும் பொருந்தும். இச்சட்டத்தின் முக்கிய விதிகள் பின்வருமாறு:

- **பிரிவு-4:** பொது இடங்களில் புகை பிடிப்பது தடை செய்யப்பட்டுள்ளது.
- **பிரிவு-5:** புகையிலைப் பொருட்களை நேரடியாகவோ/மறைமுகமாகவோ விளம்பரப்படுத்துவதோ அல்லது உபயோகிக்க ஊக்கப்படுத்துவதோ கூடாது.
- **பிரிவு-6(A):** 18 வயதிற்குட்பட்டவர்களுக்கு சிகரெட் மற்றும் புகையிலைப் பொருட்களை விற்பது தடை செய்யப்பட்டுள்ளது.
- **பிரிவு-6(B):** கல்வி நிறுவனங்கள் அமைந்துள்ள இடங்களிலிருந்து 100 கெஜம் தூரத்திற்குள் புகையிலைப் பொருட்களை விற்பது தடை செய்யப்பட்டுள்ளது.
- **பிரிவு-7:** புகையிலைப் பொருட்களின் உறைகளின்மீது குறிப்பிடப்பட்ட புகைப்படத்துடன்கூடிய நல எச்சரிக்கை வெளியிடப்பட வேண்டும்.

அத்தியாயம்—6

குடும்ப நலத் திட்டம்

6.1 நமது மாநிலத்தில் குடும்ப நலத் திட்டம் 1956 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு மக்கள் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தாய்-சேய் நல சேவையை மேம்படுத்தி அதன்மூலம் மாநிலத்தில் மக்கள் தொகைப் பெருக்கத்தை நிலைப்படுத்துவதற்கு குடும்ப நல சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது. தேவையான அளவிற்கு மொத்த கருவள விகிதத்தை பராமரித்து மக்கள் தொகைப் பெருக்கத்தை சமநிலைப்படுத்துவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக உள்ளது. பிறப்பு விகிதத்தைக் குறைப்பதில் சிறப்பான சாதனையைக் கருத்தில் கொண்டு குடும்ப நலத் திட்டம் குறியீடு அடிப்படையிலான அணுகுமுறையிலிருந்து சமுதாயத்

2023 ஏப்ரல் 18]


தேவைகளின் மதிப்பீட்டு அணுகுமுறையாக மாறியுள்ளது. நிரந்தர குடும்ப நல முறைகளான ஆண் மற்றும் பெண் குடும்ப நல அறுவைச் சிகிச்சைகள் மற்றும் தற்காலிக குடும்ப நல கருத்தடை முறைகளான காப்பர்-டி கருத்தடை சாதனம் பொருத்துதல், வாய்வழி உட்கொள்ளும் மாத்திரை, ஊசிமூலம் செலுத்தப்படும் கருத்தடை முறை, ஆணுறை மற்றும் அவசரக் கால கருத்தடை மாத்திரை போன்றவை தகுதி வாய்ந்த தம்பதியர்களுக்கு அனைத்து அரசு மருத்துவ நிலையங்களிலும் இலவசமாக வழங்கப்படுகின்றன. பேறுகால பின் கவனிப்பு கருத்தடை வளையம் பொருத்துதலில் தேசிய அளவில் சிறப்பான பங்களிப்பு செய்தமைக்காக தமிழ்நாடு அரசுக்கு தேசிய குடும்பக் கட்டுப்பாடு உச்சி மாநாடு 2022-ன்போது, இந்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகம் முதல் பரிசு வழங்கியுள்ளது.

6.2 மக்கள் தொகைக் குறியீடுகள்: *மாநிலத்தின் மக்கள் தொகைக் குறியீடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:*

வ. எண்	குறியீடுகள்	தற்போதைய நிலை
1.	மொத்த கருவள விகிதம் (2020–SRS)	1.4
2.	இயற்கை வளர்ச்சி விகிதம் (2020–SRS)	0.77 விழுக்காடு ஆண்டிற்கு
3.	பிறப்பு விகிதம் (2020–SRS)	13.8/1000 மக்கள் தொகைக்கு
4.	இறப்பு விகிதம் (2020–SRS)	6.1/1000 மக்கள் தொகைக்கு
5.	மகப்பேறு தாய்மார்கள் இறப்பு விகிதம் (2018–2020–SRS)	54/1,00,000 உயிருடன் பிறந்த குழந்தைகளுக்கு
6.	சிசு மரண விகிதம் (2020–SRS)	13/1,000 உயிருடன் பிறந்த குழந்தைகளுக்கு

(SRS – Sample Registration System)

6.3 நிருவாக அமைப்பு:



6.4 குடும்ப நலத் திட்டத்தின் தாக்கங்கள்:

6.4.1 மொத்த கருவள விகிதம்: மொத்த கருவள விகிதம் என்பது ஒரு பெண்மணி சராசரியாக தன் பேறுகால வயதில் (15-49) ஈன்றெடுக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை ஆகும். தமிழ்நாட்டின் மொத்த கருவள விகிதம் தற்போது 1.4 என்ற நிலையில் உள்ளது. நாட்டின் குறைந்த மொத்த கருவள விகிதம் உள்ள மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. மேலும், இந்நிலை தேசிய அளவான 2.0 என்ற நிலையை விட குறைவாகும்.

ஆண்டு	1996	2001	2006	2011	2016	2020
மொத்த கருவள விகிதம்	2.1	2.0	1.7	1.7	1.6	1.4

2023 ஏப்ரல் 18]

6.4.2 பிறப்பு விகிதம்: *பிறப்பு விகிதம் என்பது ஆயிரம் மக்கள் தொகைக்கு ஒரு வருடத்தில் உயிருடன் பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை ஆகும். மாதிரி பதிவு கணக்கெடுப்பு–2020-ன்படி தமிழ்நாட்டின் பிறப்பு விகிதம் 13.8 என்ற நிலையில் உள்ளது.*

ஆண்டு	1996	2001	2006	2011	2016	2020
பிறப்பு விகிதம்	19.5	19.1	16.2	15.9	15.0	13.8

6.4.3 உயர் பிறப்பு வரிசை: *குடும்ப நலத் திட்டத்தில் உயர் பிறப்பு வரிசை என்பது மூன்றாவது மற்றும் அதற்கு மேற்பட்ட வரிசை பிறப்பைக் குறிக்கும். இம்மாநிலத்தில் உயர் பிறப்பு வரிசை விகிதம் 1996 ஆம் ஆண்டில் 24.8 ஆக இருந்ததை, 2021-ல் 7.0 ஆகக் குறைத்து குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடையப் பெற்றுள்ளது. மேலும், உயர் பிறப்பு வரிசையில் நிகழும் பேறுகால மரணம் மற்றும் சிசு மரணங்களைக் குறைக்கும்பொருட்டு உயர் பிறப்பு வரிசை விகிதத்தைக் குறைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

ஆண்டு	1996	2001	2006	2011	2016	2021
உயர் பிறப்பு வரிசை	24.8	21.6	14.0	9.4	7.5	7.0

6.5 குடும்ப நல சேவைகள்: *நிரந்தர மற்றும் தற்காலிக குடும்ப நலச் சேவைகள் தகுதி வாய்ந்த நபர்களுக்கு அனைத்து அரசு மருத்துவ நிலையங்களிலும் கீழ்க்கண்டவாறு இலவசமாக வழங்கப்படுகிறது.*

- *தழும்பில்லாத நவீன ஆண் கருத்தடை சிகிச்சை முறை, வழக்கமான ஆண் கருத்தடை சிகிச்சை முறை, பெண்களுக்கு பியூர்பரல், மினிலேப் அறுவைச் சிகிச்சை, (டியுபெக்டமி) பெண் கருத்தடை அறுவைச் சிகிச்சை மற்றும் லேப்ராஸ்கோபிக் அறுவைச் சிகிச்சை போன்ற நிரந்தர குடும்ப நல முறைகள்.*
- *குழந்தை பிறப்பில் போதுமான இடைவெளி ஏற்படுத்த, பேறுகாலத்தின்போதும் அதன் பிறகும் கருத்தடை வளையம் பொருத்துதல், வாய்வழி உட்கொள்ளும் மாத்திரை (மாலா-N மற்றும் சாயா), ஊசிமூலம் மருந்து*

செலுத்தப்படும் கருத்தடை முறை (அந்தாரா) மற்றும் ஆணுறை போன்ற தற்காலிகக் குடும்ப நல கருத்தடை முறைகள்.

- அவசரக் கால கருத்தடை மாத்திரை
- மருத்துவ ரீதியிலான கருக்கலைப்பு
 - ✓ மாத்திரை மூலமாக மருத்துவ முறையிலான கருக்கலைப்பு
 - ✓ உறிஞ்சு குழாய்மூலம் கருக்கலைப்பு
 - ✓ மின்சார உறிஞ்சு குழாய்மூலம் கருக்கலைப்பு
 - ✓ அறுவைச் சிகிச்சைமூலம் செய்யப்படும் கருக்கலைப்பு

6.6 மாநிலத்தில் குடும்ப நலச் சேவைகள் வழங்கும் மையங்கள்: நமது மாநிலத்தில் குடும்ப நலச் சேவைகள் அனைத்து துணை சுகாதார நிலையங்கள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், சமுதாய நல சுகாதார நிலையங்கள் (வட்டாரம்), நகர்ப்புற நலவாழ்வு மையங்கள், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள், அரசு மருத்துவமனைகள், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவ நிலையங்களில் வழங்கப்படுகின்றன.

6.7 குடும்ப நலத் திட்டத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள்:

6.7.1 ஆண்களுக்கான கருத்தடை அறுவைச் சிகிச்சை: இத்திட்டம் நமது மாநிலத்தில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வரும் திட்டமாகும். நவீன ஆண் குடும்ப நல அறுவைச் சிகிச்சையை ஏற்க ஆண்களை ஊக்குவிக்கும் பொருட்டு சிறப்பு விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் ஆண் குடும்ப நல அறுவைச் சிகிச்சையை ஏற்கும் ஆண்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.1,100/ – வழங்கப்பட்டு வருகிறது. நவீன கருத்தடை சிகிச்சை முகாம்கள் 2023-24 ஆம் ஆண்டில் 385 வட்டாரங்களிலும் ரூ.20 இலட்சம் செலவில் நடத்தப்பட உள்ளது. குடும்ப நல அறுவைச் சிகிச்சையில் ஆண்களின் பங்களிப்பினை எளிமையான நவீன ஆண் அறுவை சிகிச்சைமூலம் அதிகப்படுத்தும்வகையில் ஆண்டுதோறும் நவம்பர் 21 முதல் டிசம்பர் 4 வரை “வாசக்டமி இரு வார விழா“ செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2023 ஏப்ரல் 18]

2022-23 ஆம் ஆண்டில் 1,304 ஆண்களுக்குக் கருத்தடை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

6.7.2 பெண்களுக்கான கருத்தடை அறுவைச் சிகிச்சை: *தகுதியுள்ள அனைத்து தாய்மார்களுக்கும் மூன்று வகையான குடும்ப நல அறுவைச் சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன. அவை* (i) *பியூர்பரல் கருத்தடை அறுவைச் சிகிச்சை (டியுபெக்டமி)* (ii) *லேப்ராஸ்கோபிக் அறுவைச் சிகிச்சை* (iii) *மினிலேப்/டிஏடி (டிரான்ஸ் அப்டோமினல் டியுபெக்டமி). இரண்டு மற்றும் அதற்கு மேல் உயிருள்ள குழந்தைகளைப் பெற்றுள்ள அனைத்து பிரசவித்த தாய்மார்களுக்கும் குடும்ப நல ஆலோசனைகள் வழங்கப்பட்டு மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பும் முன் குடும்ப நல சேவை வழங்கப்படுகிறது. மேலும், குழந்தை பெற்ற தகுதியுடைய தாய்மார்களுக்கு இடைவெளியுடனான கருத்தடை (மினி லேப்/டிஏடி) சிகிச்சை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் கருத்தடை அறுவைச் சிகிச்சையை ஏற்கும் பெண்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களுக்கு ரூ.600/-ம், மற்றவர்களுக்கு ரூ.250/-ம் வழங்கப்பட்டு வருகிறது. அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் பெண் கருத்தடை அறுவைச் சிகிச்சை மற்றும் மினிலேப்மூலம் மேற்கொள்ளப்படும் அறுவைச் சிகிச்சை போன்ற கருத்தடை முறைகளுக்கான பயிற்சிகள் மருத்துவ அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், பதினோரு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் இரண்டு அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் லேப்ராஸ்கோபிக் அறுவைச் சிகிச்சைக்கான பயிற்சியும் மருத்துவ அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. 2022-23 ஆம் ஆண்டில் 2,53,827 பெண் கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

6.7.3 பேறுகால பின் கவனிப்பு கருத்தடை வளையம் பொருத்துதல்/ மருத்துவ ரீதியிலான கருக்கலைப்பிற்குப் பின் கருத்தடை வளையம் பொருத்துதல்: *மாநிலத்தில் ஒவ்வோர் ஆண்டும் நான்கு இலட்சம் கருத்தடை வளையங்கள் தாய்மார்களுக்கு பொருத்தப்படுகின்றன. மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு, பிரசவித்த தாய்மார்களுக்குப் பேறுகாலத்திற்குப் பின் கருத்தடை வளையம் பொருத்துவது தொடர்பாக பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. பேறுகாலம் மற்றும் கருக்கலைப்பிற்குப் பின், கருத்தடை வளையம்*

பொருத்தப்படும் தாய்மார்களுக்கு அடுத்தடுத்த குழந்தைகளுக்கான இடைவெளி 36-ம் அதற்கும் அதிகமான மாதங்களாக உயர்வதோடு, மாநிலத்தில் இது தாய்-சேய் நலத்தையும் உறுதிபடுத்துகிறது. அரசு மருத்துவ நிலையங்களில் குழந்தை பிறந்தவுடன் பொருத்தப்படும் பேறுகால கருத்தடை வளையம் மற்றும் மருத்துவ ரீதியிலான கருக்கலைப்பிற்குப் பின் பொருத்தப்படும் கருத்தடை வளையம் ஏற்கும் தாய்மார்களுக்கு ஊக்குவிப்புத் தொகையாக ரூபாய் 300/– வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 2022-2023 ஆம் ஆண்டில் 4,25,350 தாய்மார்களுக்குக் கருத்தடை வளையம் பொருத்தப்பட்டுள்ளது.

6.7.4 ஊசிமூலம் மருந்து செலுத்தப்படும் கருத்தடை முறை (அந்தாரா): அந்தாரா என்ற முறையின்கீழ் அனைத்து மருத்துவ நிலையங்களிலும் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மேட்ரோக்சி பிராஜெஸ்ட்ரோன் அசிடேட் மருந்து ஊசிமூலம் தகுதி வாய்ந்த நபர்களுக்கு செலுத்தப்படுகிறது. பயிற்சி எடுத்த மருத்துவர்கள், செவிலியர்கள், துணை செவிலியர்கள்மூலம் அனைத்து மருத்துவ நிலையங்களில் அந்தாரா சேவை வழங்கப்படுகிறது. இது நீண்ட காலத்திற்குக் கருவுருதலைத் தடுப்பதால் குழந்தை பிறப்பில் போதிய இடைவெளியை ஏற்படுத்த உதவுகிறது. 2022-2023 ஆம் ஆண்டில் 67,954 தாய்மார்கள் அந்தாரா ஊசி கருத்தடையினை ஏற்றுள்ளனர்.

6.7.5 சென்ட்குரோமன் மாத்திரைகள் (சாயா): சென்ட்குரோமன் ஒரு ஹார்மோன் அல்லாத கருத்தடை மாத்திரை ஆகும். இம்மாத்திரையை முதல் மூன்று மாதங்களுக்கு வாரத்திற்கு இரு முறையும், பின்பு வாரத்திற்கு ஒரு முறையும் உட்கொள்ள வேண்டும். இந்த மாத்திரைகள் அனைத்து அரசு மருத்துவ நிலையங்களிலும் சாயா என்ற பெயரில் கிடைக்கின்றன. இது பெண்களுக்கு பாதுகாப்பான இடைவெளி முறையாகும். இதனை பாலூட்டும் தாய்மார்களும் பயன்படுத்தலாம். 2022-2023 ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் வரை 1,38,245 தாய்மார்கள் சாயா கருத்தடை மாத்திரையினை உட்கொண்டுள்ளனர்.

6.8 மருத்துவ ரீதியான கருக்கலைப்புத் திட்டம்: தமிழ்நாட்டில் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 80,000 முதல் 90,000 வரை மருத்துவ ரீதியான கருக்கலைப்புகள் அரசு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவ நிலையங்களில் நடைபெறுகின்றன. இத்திட்டம் நம் மாநிலத்தில் 1972-73 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தகுதி வாய்ந்த பதிவு செய்யப்பட்ட மருத்துவர்களால்

2023 ஏப்ரல் 18]

சட்டத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் பரிந்துரைகளின்படி இச்சேவை வழங்கப்பட்டு வருகிறது. விரிவான கருக்கலைப்பு பராமரிப்பு என்பது RMNCHA + N உத்தியின் ஒருங்கிணைந்த அங்கமாகும். விரிவான கருக்கலைப்பு பராமரிப்புச் சேவைகள் பெண்களை மையமாகக் கொண்ட அணுகுமுறையாகும். இதில் கருக்கலைப்புக்குப் பிந்தைய பராமரிப்பு மற்றும் குடும்பக் கட்டுப்பாடுடன்கூடிய சேவைகள் வழங்குவதும் அடங்கும். பொது சுகாதார அமைப்பில் விரிவான கருக்கலைப்பு பராமரிப்புச் சேவைகள் மேம்படுத்துவதற்கு மாநிலத்தில் போதுமான உபகரணங்கள், பொருட்கள் மற்றும் உட்கட்டமைப்புகளுடன் குக்கிராமப்புற மக்களும் பயன்படும்வகையில் அனைத்து கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மருத்துவ ரீதியான கருக்கலைப்பு வழங்குபவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாவட்டங்களில் உள்ள அனைத்து அரசு மருத்துவ நிலையங்களுக்கும் மருத்துவ ரீதியான கருக்கலைப்பு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன.

6.9 தகவல், கல்வி மற்றும் தொடர்பு விழிப்புணர்வுப் பணிகள்: *மாநிலத்தில் உள்ள தகுதிவாய்ந்த தம்பதியர்களுக்கு நிரந்தர மற்றும் தற்காலிகக் கருத்தடை முறைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த, கீழ்க்காணும் தகவல், கல்வி மற்றும் தொடர்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:*

- *குடும்ப நல முறைகளை ஏற்க, பொது மக்களுக்கு உதவுவதற்காக உதவி மையம் பத்து முன்னுரிமை மாவட்டங்களில் உள்ள அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் அமைக்கப்பட்டுள்ளன.*

- *உயர் பிறப்பு வரிசை அதிகம் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று மாவட்டங்களில் (ஊட்டி, இராமநாதபுரம் மற்றும் திருவண்ணாமலை) குடும்ப நல நடமாடும் வாகனம்மூலம் ஒலி ஒளி வடிவில் குடும்பக் கட்டுப்பாடு விழிப்புணர்வு தகவல் கல்வி தொடர்புப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.*

- *ஒவ்வோர் ஆண்டும் ஜூலை 11 ஆம் நாள் மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் உலக மக்கள் தொகை நாள் கொண்டாடப்படுகிறது. இதன்மூலம் குடும்ப நலத் திட்டம் தொடர்பான விழிப்புணர்வு,*

மக்கள் தொகை பெருக்கம், அளவான குடும்பத்தின் முக்கியத்துவம், பாலின சமத்துவம், பிறப்புகளிடையே போதிய இடைவெளி மற்றும் திருமண வயதை உயர்த்துதல் ஆகியவை பற்றி பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

- அளவான குடும்ப அமைப்பில் ஆண்களின் பங்கேற்பினை அதிகரிப்பதற்காக மாநிலம் முழுவதும் பொது மக்களிடையேயும், தொழிற்சாலை பணியாளர்களிடையேயும் நவீன ஆண் குடும்ப நல கருத்தடை சிகிச்சை இரு வார விழா நிகழ்த்தப்படுகிறது.
- உயர்பிறப்பு வரிசை அதிகம் உள்ள முன்னுரிமை மாவட்டங்களில் உள்ள தாய்மார்களிடையே குடும்ப நல கருத்தடை சாதனங்களின் பயன்பாட்டை அதிகரித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குடும்ப நல தற்காலிக கருத்தடை முறைகளை ஏற்கும் தாய்மார்களின் விவரங்கள் பேறுகாலத்திற்கு முன்னரே பதியப்பட்டு தொடர் கவனிப்பிற்காக குடும்ப நல அட்டை வழங்கப்படுகிறது.

6.10 குடும்ப நல அறுவைச் சிகிச்சை இழப்பீட்டுத் திட்டம்: குடும்ப நலக் கருத்தடை அறுவைச் சிகிச்சை ஏற்பாளர்கள் மற்றும் இச்சேவை வழங்குபவர்களுக்கு பின்வரும் காப்பீடு பயன்கள் அளிக்க குடும்ப நல அறுவைச் சிகிச்சை இழப்பீட்டுத் திட்டம் 1.4.2013 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது.

குடும்ப நல கருத்தடை அறுவைச் சிகிச்சைக்குப்பின் மருத்துவமனையிலோ அல்லது மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்ட ஏழு நாட்களுக்குள் இறக்க நேரிட்டால்	ரூ.2,00,000/–
மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டு எட்டு நாட்களிலிருந்து முப்பது நாட்களுக்குள் இறக்க நேரிட்டால்	ரூ.50,000/–
குடும்ப நல அறுவைச் சிகிச்சையில் தோல்வி ஏற்பட்டாலோ அல்லது அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு குழந்தைப்பேறு ஏற்பட்டாலோ	ரூ.30,000/–

2023 ஏப்ரல் 18]

குடும்ப நல சிகிச்சையால் ஏற்படும் சிக்கல்களைக் குணப்படுத்த (மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டு அறுபது நாட்களுக்குள்)	ரூ.25,000/-க்கு மிகாமல் உள்ளபடியான செலவு
மருத்துவர்களுக்கான ஈட்டுறுதிக் காப்பீடு (ஒரு ஆண்டில் ஒரு மருத்துவருக்கு நான்கு முறைக்கு மிகாமல்)	ஒரு நீதிமன்ற வழக்குக்கு ரூ.2,00,000/– வரை

6.11 மாநில மற்றும் மாவட்ட தர உறுதி குழுக்கள்:

மாநிலத்தில் குடும்ப நலப் பணிகள் நல்ல தரத்துடன் வழங்கப்படுவதை உறுதிப்படுத்த மாநில மற்றும் மாவட்ட அளவில் தர உறுதிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. குடும்ப நல அறுவைச் சிகிச்சைக்கு பின் நிகழும் எதிர்பாராத இறப்புகள், அறுவைச் சிகிச்சைக்குப் பின் ஏற்படும் தோல்வி மற்றும் சிக்கல்கள் சம்மந்தமாக இந்தக் குழுக்கள் ஆராய்ந்து, அவர்களுக்கு காப்பீட்டு நிதியுதவி வழங்கவும் பரிந்துரை செய்கிறது. தமிழ்நாட்டில் அரசு மருத்துவ நிலையங்கள் மற்றும் தனியார் மருத்துவ நிலையங்களில் ஆண்டொன்றுக்கு சுமார் 2.5 இலட்சம் கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் செய்யப்படுகின்றன. தற்போது அரசு அமைப்பில் உள்ள மருத்துவ நிலையங்களை வலுப்படுத்தும் அதேவேளையில், தனியார் மருத்துவ நிலையங்களின் பங்களிப்பையும் அரசு ஊக்குவித்து வருகிறது. குடும்ப நல சேவைகளின் தரத்தை உயர்த்தவும், பிறப்புகளிடையே போதிய இடைவெளி இருப்பதை மேம்படுத்தி, அதன்மூலம் சிசு மரணம் மற்றும் தாய் இறப்பு விகிதத்தைக் குறைக்க மாநிலத்தில் குடும்ப நலத் திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அத்தியாயம்—7

மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள்

(தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம்)

7.1 தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் (தொ.அ.ஈ.) என்பது அமைப்பு சார்ந்த துறைகளில் பணிபுரியும் காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்காக வடிவமைக்கப்பட்ட ஒரு

விரிவான சமூகப் பாதுகாப்புத் திட்டமாகும். தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம், 1948 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தொ.அ.ஈ. சட்டப்படி, “தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம்” என அழைக்கப்படும் நிறுவன அமைப்புமூலம் நிர்வகிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் 1955 ஜனவரி 23 ஆம் தேதி முதல் காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு உடல்நலக் குறைவு, மகப்பேறு, உடல் ஊனம் மற்றும் பணியிடத்தில் மரணம் அல்லது தொழில்சார் நோய்கள் போன்றவற்றிலிருந்து பாதுகாக்கும்பொருட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் தமிழ்நாடு முழுவதும் 35.60 இலட்சம் தொழிலாளர்கள் மற்றும் 1.07 கோடி தொழிலாளர்களைச் சார்ந்தோர்களுக்கு (அதாவது அவர்களது மனைவி, குழந்தைகள் மற்றும் தொழிலாளர்களின் பெற்றோர்) மருத்துவச் சேவை வழங்கி வருகிறது. தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு ஆரம்ப, இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை மருத்துவத்தை முழுமையாக வழங்குவதோடு மட்டுமல்லாமல், காப்பீட்டாளரின் ஊதிய இழப்பு அல்லது உழைக்க இயலாத நிலை ஏற்படும்போது அதனை ஈடுசெய்யும் வண்ணம், பண உதவியும் வழங்கப்பட்டு வருகிறது.

7.2 தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தில் சேர்வதற்கான தகுதிகள்

- தொ.அ.ஈ. திட்டம் 10 அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்களைக் கொண்ட தொழிற்சாலைகள் மற்றும் இதர நிறுவனங்களுக்குப் பொருந்தும்.
- ரூ.21,000/ – வரை மாத ஊதியம் பெறும் தொழிலாளர்கள் இத்திட்டத்தின்கீழ் இணைக்கப்படுவதற்கு தகுதியுடையவர்கள்.
- ரூ.25,000 வரை மாத ஊதியம் பெறும் அனைத்து மாற்றுத் திறனாளி தொழிலாளர்களுக்கும் தொ.அ.ஈ. திட்டம் பொருந்தும்.
- நாள் ஒன்றுக்கு ரூ.176/– வரை வருமானம் ஈட்டும் பணியாளர்கள் தங்கள் பங்களிப்பு பங்குத் தொகையிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்கள்.

2023 ஏப்ரல் 18]

7.3 திட்டத்தின் நிதி ஆதாரம்:

தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் பயன்களைப் பெறுவதற்கு (1.7.2019 முதல்) ஊதியத்தில் முறையே 0.75% மற்றும் 3.25% மாதாந்திர பங்களிப்பைத் தொழிலாளர்கள் மற்றும் வேலையளிப்போர் தத்தம் பங்களிப்பாக வழங்குகின்றனர்.

7.4 தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகமும் மாநில அரசும் முறையே 7:1 என்ற விகிதாச்சார அடிப்படையில் செலவுகளைப் பகிர்ந்து கொள்கின்றன. இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக மாநில அரசு செலவழிக்கும் மொத்த செலவினத்தில் 7/8 பங்கினை தொழிலாளர் மாநில காப்புறுதிக் கழகம் திரும்பச் செலுத்துகிறது.

7.5 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள்:

தமிழ்நாட்டில், 235 தொ.அ.ஈ. மருந்தகங்கள் மற்றும் 10 தொ.அ.ஈ. மருத்துவமனைகளில் மருத்துவச் சிகிச்சை வழங்கப்படுகிறது.

வ. எண்	தொ.அ.ஈ. மருத்துவமனை விவரம்	துறைத் தலைவர்
1.	தொ.அ.ஈ. மருத்துவமனைகள் அயனாவரம் (சென்னை), மதுரை, சிவகாசி, சேலம், ஓசூர், திருச்சிராப்பள்ளி மற்றும் வேலூர்.	மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் (தொ.அ.ஈ.) இயக்குநரகம், தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது.
2.	அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் தொ.அ.ஈ. மருத்துவமனை, கோயம்புத்தூர்	மருத்துவக் கல்வி இயக்குநரகம், தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது.
3.	தொ.அ.ஈ. மருத்துவமனை கே.கே.நகர், சென்னை மற்றும் திருநெல்வேலி	புதுதில்லி, தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம்மூலம் நேரடியாக நிருவகிக்கப்படுகிறது.

மேலும், காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள தனியார் மருத்துவமனைகள்மூலம் உயர்சிறப்பு மருத்துவ வசதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

[2023 ஏப்ரல் 18

7.6 தமிழ்நாடு தொ.அ.ஈ. திட்ட நிருவாக அமைப்பு: தமிழ்நாடு முழுவதும் தொ.அ.ஈ. திட்டத்தின் நிருவாகம், நிதி, வளர்ச்சி மற்றும் செயல்படுத்துதல் போன்றவற்றிற்கு சென்னை, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் (தொ.அ.ஈ.) இயக்குநர் பொறுப்பு வகிக்கிறார். சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் ஏழு மண்டல நிருவாக மருத்துவ அலுவலர்களின் (தொ.அ.ஈ) தலைமையில் மாநிலம் முழுவதும் 235 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் தற்போது மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் தொ.அ.ஈ இயக்குநரின்கீழ் மருத்துவக் கண்காணிப்பாளர்கள் தலைமையில் ஏழு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் செயல்பட்டு வருகின்றன.

7.7 தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் இயங்கும் ஆயுஷ் (AYUSH) பிரிவுகள்: காப்பீட்டாளர்களுக்கு வழங்கப்படும் ஆங்கில முறை சிகிச்சையுடன், கூடுதலாக ஆயுர்வேதா, யோகா, யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி ஆகிய சிகிச்சை முறைகள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த “ஆயுஷ்” (AYUSH) சிகிச்சை வசதியும் வழங்கப்படுகின்றன.

வ. எண்	“ஆயுஷ்” பிரிவுகள்	தொ.அ.ஈ. மருத்துவமனைகள்	தொ.அ.ஈ. மருந்தகங்கள்
1	ஆயுர்வேதா	8	13
2	யோகா	8	—
3	யுனானி	3	3
4	சித்தா	8	43
5	ஹோமியோபதி	3	3

7.8 தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் பயன்கள்: தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் தொழிலாளர் மற்றும் வேலையளிப்போரின் பங்களிப்பாகச் செலுத்தப்படும் பங்களிப்பானது, அவசர மருத்துவத் தேவை மற்றும் பிற இடர்களின்போது காப்பீட்டாளரின் வருவாய் மற்றும் சேமிப்புகளில் கூடுதல் நிதிச்சுமை ஏற்படாவண்ணம் அவர்களுக்கு உதவுகின்றது. தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் கீழ்க்காணும்

2023 ஏப்ரல் 18]

பல்வேறு சமூகப் பாதுகாப்பு பயன்களைக் காப்பீட்டாளர்களுக்கும் அவர்களைச் சார்ந்தோருக்கும் வழங்குகிறது.

7.8.1 மருத்துவ உதவி: *காப்புறுதி வசதியுள்ள நிறுவனத்தில் காப்பீட்டாளர் பணியில் சேர்ந்த நாள் முதல் அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் அவர் அந்நிறுவனத்தில் பணியிலிருக்கும் வரை வழங்கப்படும் (அ) முதற்கட்ட சிகிச்சை (புறநோயாளி) மற்றும் இரண்டாம் நிலை பராமரிப்பு (உள்நோயாளி) (ஆ) உயர்சிறப்பு சிகிச்சை போன்றவை தொழிலாளர் மாநில காப்புறுதிக் கழக தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள்மூலம் முதற்கட்ட சிகிச்சையும், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள தனியார் மருத்துவமனைகள்மூலம் இரண்டாம் நிலை சிகிச்சை மற்றும் உயர்சிறப்பு சிகிச்சையும் வழங்கப்படுகின்றன.*

7.8.2 மகப்பேறுகால உதவி: *பெண் காப்பீட்டு நபர்களுக்கு முந்தைய இரண்டு பங்களிப்பு காலங்களில் 70 நாட்களுக்கு பங்களிப்பு இருப்பின், பிரசவம் மற்றும் கர்ப்ப காலத்திற்கான மகப்பேறு கால உதவி முழு ஊதிய வீதத்தில் 26 வாரங்களுக்கு வழங்கப்படும். மருத்துவரின் ஆலோசனையின் பேரில் மேலும், ஒரு மாத காலத்திற்கு இந்த உதவி நீட்டிக்கப்படும்.*

7.8.3 சார்ந்துள்ளோருக்கான உதவி: *காப்பீட்டாளர் வேலை செய்யும்போது ஏற்படும் விபத்து அல்லது அவர் செய்யும் தொழில்மூலம் ஏற்படும் நோயினால் இறக்க நேர்ந்தால், அவரின் சம்பளத்தில் 90 சதவிகிதம் அவரைச் சார்ந்தவர்களுக்கு மாதாந்திர உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.*

7.8.4 உடல் நலமின்மைக்கான உதவி: *ஒரு வருடத்தில் அதிகபட்சமாக 91 நாட்களுக்கு சான்றளிக்கப்பட்ட நோயால் பாதிக்கப்பட்ட காப்பீட்டாளர்களுக்கு ஊதியத்தில் 70% ரொக்க இழப்பீடாக உடல் நலமின்மை பலன் வழங்கப்படும். உடல் நலமின்மை உதவித் தொகைக்குத் தகுதி பெற, காப்பீட்டாளர்கள் 6 மாதக் காலத்தில் 78 நாட்களுக்கு பங்களிப்பு செய்திருக்க வேண்டும்.*

7.8.5 நீண்டகால உடல் நலமின்மைக்கான உதவி: *34 வீரியமிக்க மற்றும் நீண்ட கால நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள காப்பீட்டாளர்களுக்கு ஊதியத்தில் 80% அதிகரிக்கப்பட்ட*

விகிதத்தில் நீண்டகால உடல் நலமின்மைக்கான உதவி இரண்டு ஆண்டுகள் வரை நீட்டிப்பு செய்யப்படும்.

7.8.6 உடல் நலமின்மைக்கான அதிகரிக்கப்பட்ட உதவி: இனப்பெருக்க வயதில் உள்ள காப்பீட்டாளர்களுக்கு வாசக்டமி/ட்யூபக்டமி போன்ற கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் செய்து கொள்ளும்போது, உடல் நலமின்மைக்கான அதிகரிக்கப்பட்ட உதவி வழங்கப்படும். கருத்தடை மேற்கொள்ளும் ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு முறையே ஏழு நாட்கள் மற்றும் 14 நாட்களுக்கு முழு ஊதியத்திற்கு சமமான உடல் நலமின்மைக்கான அதிகரிக்கப்பட்ட உதவி வழங்கப்படும்.

7.8.7 இயலாமைக்கான உதவி:

(அ) தற்காலிக இயலாமைக்கான உதவி: காப்பீட்டாளர் பணியில் சேர்ந்த நாள் முதல், பணியில் இருக்கும்போது காயம் ஏற்பட்டால் எவ்வித பங்களிப்பு செய்வதை பொருட்படுத்தாமல் காப்பீட்டாளர்களுக்கான தற்காலிக இயலாமை உதவி வழங்கப்படும். இயலாமை தொடரும் வரை, ஊதியத்தில் 90% மாதாந்திர தொகையாக தற்காலிக இயலாமை உதவி வழங்கப்படும்.

(ஆ) நிரந்தர இயலாமைக்கான உதவி: காப்புறுதி வசதியுள்ள நிறுவனத்தில் காப்பீட்டாளர் பணியில் சேர்ந்த நாள் முதல், பணியில் இருக்கும்போது நிரந்தர இயலாமை ஏற்படின் நிரந்தர இயலாமைக்கான உதவி வாழ்நாள் முழுவதும் வழங்கப்படும். மருத்துவக் குழுவின் பரிந்துரையின்படி சம்பாதிக்கும் திறன் இழப்பிற்கு ஏற்ப மாத ஊதியத்தில் 90% மாதாந்திர தொகையாக வழங்கப்படும்.

7.8.8 வேலையின்மைக்கான உதவி:

(அ) ராஜீவ் காந்தி சிரமிக் கல்யாண் யோஜனா: காப்பீட்டாளர், தொழிற்சாலை மூடப்படுவதாலோ, ஆட்குறைப்பு செய்யப்படுவதாலோ, பணியில் இல்லாத நேரத்தில் நிரந்தரமாக இயலாமை ஏற்படுவதாலோ அல்லது இதர எதிர்பாராத காரணங்களாலோ சுயவிருப்பின்றி வேலை இழக்க நேரிட்டால், அவர்களுக்கு 24 மாதங்களுக்கு மருத்துவச் சிகிச்சை அளிப்பதுடன் அவர்களது சராசரி தினசரி ஊதியத்தில் முதல் 12 மாதங்களுக்கு 50%-ம் அடுத்த 12 மாதங்களுக்கு 25%-ம் வழங்கப்படும்.

2023 ஏப்ரல் 18]

(ஆ) அடல் பீமித் வ்யக்தி கல்யாண் யோஜனா: *தொழிலாளர் அரசு காப்புறுதிக் கழகமானது 1.7.2018 முதல், காப்புறுதி வசதியுள்ள நிறுவனத்தில் பணியமர்த்தப்பட்ட காப்பீட்டாளர் இரண்டு ஆண்டுகள் பணி நிறைவு மற்றும் தொடர்ச்சியாக 4 பங்களிப்பு காலங்களில் 78 நாட்களுக்குக் குறைவில்லாமல் பணி புரிந்திருந்தால் வருவாயில் 25%-க்கு மிகாமல் 90 நாட்கள் வரை இழப்பீட்டுத் தொகையினை பணப் பயனாக வாழ்நாளில் ஒருமுறை வழங்கப்படும்.*

7.9 தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் இதர உதவிகள்:

- **இறுதி சடங்கு உதவி:** *காப்பீட்டாளர் இறக்க நேரிட்டால், ஈமச்சடங்கு உதவித் தொகையாக ரூ.15,000/ – அவரைச் சார்ந்தவர்களுக்கோ அல்லது இறுதிச் சடங்குகளைச் செய்யும் நபருக்கோ வழங்கப்படும். காப்பீட்டாளர் வேலையில் சேர்ந்த முதல் நாளிலிருந்து இந்த உதவிக்கு தகுதியுடையவர் ஆவார்.*

- **மகப்பேறுகால செலவுகள்:** *காப்பீட்டாளரின் மனைவி அல்லது பெண் காப்பீட்டாளருக்கு, தொழிலாளர் அரசு ஈட்டுறுதி நிலையங்களில் பிரசவ வசதிகள் இல்லாதிருந்தால் ரூ.7,500/ – மகப்பேறுகால படியாக வழங்கப்படும்.*

- **முதியோர் மருத்துவப் பராமரிப்பு:** *முதியோர் மருத்துவப் பராமரிப்பானது, வயது முதிர்வு ஓய்வு அல்லது விருப்ப ஓய்வு/முன்கூட்டிய ஓய்வுத் திட்டம் ஆகியவற்றின்மூலம் ஓய்வு பெறும் காப்பீட்டாளர்களுக்கு முதியோர் மருத்துவ வசதி வழங்கப்படுகிறது. மேலும், இத் திட்டம் நிரந்தர இயலாமை காரணமாக ஓய்வு பெறும் காப்பீட்டாளர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.*

- *ஊன்றுகோல்கள், சக்கர நாற்காலிகள், பல்செட்கள், மூக்கு கண்ணாடிகள் மற்றும் காது கேளாதோருக்கான கருவி போன்ற உதவி சாதனங்கள் இத்திட்டத்தின்கீழ் இலவசமாக வழங்கப்படுகின்றன.*

- *தடுப்பூசிகள், எச்ஐவி/எயிட்ஸ் நோய் கண்டுபிடிப்பு மற்றும் சிகிச்சை அளித்தல் போன்ற நோய்த் தடுப்பு வசதிகள் வழங்கப்படுகின்றன.*

[2023 ஏப்ரல் 18

- தேசியத் திட்டங்களான குடும்ப நலம் மற்றும் காசநோய் கட்டுப்பாடுத் திட்டம் செயல்முறைப்படுத்தப்படுகின்றன.

7.10 மருத்துவமனை மேம்பாட்டுக் குழு: மருத்துவமனை வளர்ச்சிக் குழுமூலம் தொ.அ.ஈ. மருத்துவமனை மற்றும் மருந்தக கட்டடங்களின் பழுதுபார்க்கும் பணிகள், மருத்துவ உபகரணங்கள் கொள்முதல் மற்றும் பராமரிப்பு போன்றவற்றிக்கு மருத்துவமனை வளர்ச்சி நிதி வழங்கப்படுகிறது. இரு மாதங்களுக்கு ஒரு முறை கூட்டப்படும், மருத்துவமனை வளர்ச்சி குழுக் கூட்டத்திற்கு தொ.அ.ஈ. கழக மாநில மருத்துவ அலுவலரால் நேரடியாக நிதி வழங்கப்படுகிறது.

7.11 தொ.அ.ஈ. பயனாளிகள் தனியார் மருத்துவமனைகளில் மேற்கொண்ட மருத்துவச் செலவினை மீளப்பெறுதல்:

தொகுப்பு ஒப்பந்தம் (ஒப்பந்தம் செய்து கொண்ட மருத்துவமனைகள்): தொகுப்பு ஒப்பந்த அடிப்படையின்கீழ் (CGHS Rate) ஒப்பந்தம் செய்யப்பட்ட 93 சிறப்பு மற்றும் 124 உயர்சிறப்பு சிகிச்சை வசதி கொண்ட தனியார் மருத்துவமனைகளில் காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்குப் பணமில்லாத மருத்துவச் சிகிச்சை வழங்கப்படுகிறது. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களின் மருத்துவரின் பரிந்துரைகளின் பேரில் காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் சிகிச்சைக்காகத் தனியார் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுகிறார்கள். தனியார் மருத்துவமனைகளுடன் சென்னை, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரால் (தொ.அ.ஈ.) அங்கீகரிக்கப்பட்ட தொகுப்பு ஒப்பந்தத்தின்கீழ் தனியார் மருத்துவமனைகளுடன் ஒப்பந்தம் செய்து கொண்ட மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர்மூலம் (தொ.அ.ஈ) காப்பீட்டாளர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா மருத்துவச் சிகிச்சைக்கான பட்டிகள் நேரடியாகத் தீர்வு செய்யப்படுகின்றன.

7.12 புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் திறப்பு: 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் புதிதாகத் திறக்கப்பட்ட தொ.அ.ஈ. மருந்தகங்களின் பட்டியல் பின்வருமாறு:

2023 ஏப்ரல் 18]

வ. எண்	தொ.அ.ஈ. மருந்தகம்	தொடங்கப்பட்ட நாள்
1.	துரைசாமிபுரம்	1.7.2022
2.	பரமக்குடி	1.9.2022
3.	பர்கூர்	1.10.2022
4.	மணச்சநல்லூர்	1.10.2022
5.	பெரம்பலூர்	1.10.2022
6.	ஏற்காடு	1.11.2022
7.	அரவக்குறிச்சி	1.11.2022
8.	ஒட்டன்சத்திரம்	1.12.2022
9.	அத்திப்பட்டு	1.2.2023
10.	ஊத்துக்கோட்டை	1.2.2023

7.13 காப்பீட்டாளர்களுக்கு உயிர் காக்கும் மருந்துகள் வழங்குதல்: *தொ.அ.ஈ மருத்துவமனைகள் மற்றும் தொ.அ.ஈ. மருந்தகங்களின் தேவைகளின் அடிப்படையில், அனைத்து அத்தியாவசிய மற்றும் துணை மருந்துகளும் மத்திய ஒப்பந்தப்புள்ளி (CRC) வழியாகக் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்படுகின்றன. மேலும், புற்றுநோயியல், குருதியியல் மற்றும் சிறுநீரகவியல் நோயாளிகளுக்கான உயிர் காக்கும் மருந்துகள் அனைத்தும் பரிந்துரைக்கப்பட்டு, தேவைக்கேற்ப உடனடியாக வழங்கப்படுகின்றன.*

7.14 தொ.அ.ஈ. மருத்துவமனைகளில் வசதிகள் வலுப்படுத்துதல்: *மொத்தமுள்ள ஏழு தொ.அ.ஈ. மருத்துவமனைகளிலும் தேவைக்கேற்ப மருத்துவ நிபுணர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளின் செயல்திறனை மேம்படுத்தவும், காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்குச் சிறந்த சேவையை வழங்கவும் அனைத்து இளநிலை மருத்துவர்களுக்குப் பதிலாக முதுநிலை மருத்துவர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.*

7.15 திட்ட செயலாக்கத் திட்டத்தின்கீழ் (பிஐபி) உபகரணங்கள் வாங்குதல்: *புதுடெல்லி தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம்*

2020-21 ஆம் ஆண்டுக்கான திட்ட செயலாக்கத் திட்டத்தின்கீழ் ரூ.23 கோடிக்கு ஒப்புதல் வழங்கியதைத் தொடர்ந்து, தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களுக்கு உபகரணங்கள் வாங்குவதற்காக ரூ.23 கோடிக்கு தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது. இக்கருவிகள் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் (TNMSC) மற்றும் அரசின் கணினி வழி கொள்முதல் (GeM Portal) இணையதளம்மூலம் சம்பந்தப்பட்ட தொ.அ.ஈ மருத்துவமனை மற்றும் தொ.அ.ஈ. மருந்தகங்களுக்குக் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்படுகின்றன.

7.16 100 படுக்கைகள் கொண்ட புதிய தொ.அ.ஈ மருத்துவமனைகள் கட்டுதல்: திருப்பூர், ஸ்ரீபெரும்புதூர், கன்னியாகுமரி, வாணியம்பாடி, திண்டுக்கல், தூத்துக்குடி மற்றும் ராணிப்பேட்டை ஆகிய இடங்களில் 100 படுக்கைகள் கொண்ட புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் கட்டுவதற்குத் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தால் உத்தேசிக்கப்பட்டுள்ளது. திருப்பூர், ஸ்ரீபெரும்புதூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

7.17 நிதி ஒதுக்கீடு மற்றும் செலவீனம்:

வ. எண்	வருடம்	வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (ரூபாயில்)	செலவிடப்பட்ட தொகை (ரூபாயில்)
1.	2019-2020	572,06,81,000	571,96,33,000
2.	2020-2021	606,07,73,000	603,49,67,000
3.	2021-2022	542,56,07,122	542,06,76,340
4.	2022-2023	638,44,07,000	469,41,80,000 (28.02.2023 அன்றுள்ளவாறு)

7.18 தொ.அ.ஈ. கழகத்தின் கோவிட்-19 நிவாரணத் திட்டம்: தொழிலாளர் அரசு ஈட்டுறுதிச் சட்டம், 1948-ன்கீழ் வரும் காப்பீட்டு நபர்கள் கோவிட்-19 காரணமாக இறந்து விட்டால் அவர்களின் குடும்பத்தினருக்குக் காப்பீட்டாளரின் சராசரி ஊதியத்தில் 90% ஒவ்வொரு மாதமும் செலுத்தப்படும். இறந்த காப்பீட்டாளரின்

2023 ஏப்ரல் 18]

வாழ்க்கைத் துணைவரும் ஆண்டுக்கு ரூ.120/– பங்களிப்புடன் மருத்துவச் சேவைக்குத் தகுதியுடையவர் ஆவார்.

கோவிட் நிவாரணத் திட்டம்			
வருடம்	**இறந்த காப்பீட்டாளர்களின் எண்ணிக்கை**	**பயனாளர்களின் எண்ணிக்கை**	**பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட தொகை (ரூபாயில்)**
2021 (ஜூன் 2021 முதல் டிசம்பர் 2021)	*335*	*730*	*3,47,89,197/- (730 பயனாளிகளுக்கு)*
2022 (ஜனவரி 2022 முதல் டிசம்பர் 2022)	*76*	*255*	*5,37,71,724/- (985 பயனாளிகளுக்கு)*
2023 (ஜனவரி 2023 முதல் 17.2.2023)	*2*	*5*	*1,22,93,266/- (990 பயனாளிகளுக்கு)*
மொத்தம்	*413*	*990*	*10,08,54,187/-*

அத்தியாயம் – 8

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி

8.1 *இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநரகம் (DIMH) பாரம்பரிய மருத்துவ முறைகளான சித்தா, ஆயுர்வேதம், யுனானி, யோகா மற்றும் இயற்கை மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆகியவற்றில் மருத்துவச் சேவைகளை வழங்கி வருகிறது. மேற்குறிப்பிட்ட முறைகளில் கல்வி நிலையங்களும் அவர்களால் நடத்தப்பட்டு வருகின்றன. இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி முறைகளின் வாயிலாக வழங்கப்படும் மருத்துவச் சேவைகள் மற்றும் மருத்துவக் கல்வியின் தரத்தினை உயர்த்தும் நோக்கோடு தமிழ்நாடு அரசால் வகுக்கப்படும் கொள்கைகள், சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் திட்டங்களை இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநரகம் அமல்படுத்தி வருகிறது. மாவட்ட, வட்டார, வட்டம் சாரா மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் என அனைத்து நிலைகளுக்கும் சித்தா, இதர இந்திய மருத்துவ*

[2023 ஏப்ரல் 18

முறைகள் மற்றும் ஓமியோபதி மருத்துவச் சேவைகளை எடுத்துச் செல்லுதல், அரசு மற்றும் தனியார் துறையில் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி கல்வியின் தரத்தினை மேம்படுத்துதல், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆராய்ச்சியினை மேம்படுத்தி அதனை பிரதான நீரோட்டத்தின்கீழ் கொணர்தல் ஆகியவை இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்ககத்தின் முக்கிய நோக்கங்களாகும். பொதுமக்களுக்குக் கிடைக்கக்கூடிய இந்திய மருத்துவ முறை மருந்துகளின் தரத்தினை உறுதி செய்தல், மருந்து தயாரிப்பு நிறுவனங்களை முறைப்படுத்துதல் மற்றும் மருந்துகள் தயாரிப்பில் ஆராய்ச்சி மற்றும் ஒழுங்குபடுத்துதலும் இந்த இயக்ககத்தின் பொறுப்புகளாகும். நாட்டிலேயே அனைத்து இந்திய மருத்துவ முறைகள் மற்றும் ஓமியோபதி மருத்துவ முறைக்கும் அரசு மருத்துவக் கல்லூரிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஒரே மாநிலம், தமிழ்நாடு மட்டுமேயாகும். சித்தா, ஆயுர்வேதா, யோகா மற்றும் இயற்கை மருத்துவம், யுனானி மற்றும் ஓமியோபதி மருத்துவ முறைகள் மருத்துவச் சிகிச்சையின் நோய் தடுப்பு, ஊக்குவித்தல், குணப்படுத்துதல், மறுவாழ்வளித்தல் மற்றும் புத்துயிரளித்தல் ஆகிய அனைத்தும் கொண்ட முழுமை பெற்ற சிகிச்சைகளை வழங்குகின்றன. குறைந்த மருத்துவச் செலவு மற்றும் பொதுமக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதால் அண்மைக் காலங்களில் உலக அளவில் இந்திய மருத்துவ முறைகள் கவனம் ஈர்த்துள்ளன. இந்திய மருத்துவ முறைகள் தொடர்ந்து பல நூற்றாண்டுகளாகப் பயன்பாட்டில் உள்ளதாலும், தொடர்ச்சியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டு வருவதாலும், மாநில மருத்துவச் சேவைகளின்மீது பரவலான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆகையினால், இது நவீன மருத்துவ கவனிப்பு முறைகளில் முக்கியமான கூறு என்பதுடன் குறிப்பிடத்தக்க மற்றும் தவிர்க்க முடியாத பங்கினைக் கொண்டுள்ளது.

8.2 சித்த மருத்துவ முறை: *இம்மாநிலத்தில் பரவலாக உள்ள சித்த மருத்துவ முறை, உலகில் ஆவணப்படுத்தப்பட்ட பழமையான பாரம்பரிய மருத்துவ முறைகளில் ஒன்றாகும். இது பண்டையத் தமிழர்களின் தாய் மருத்துவமாகக் கருதப்படுவதுடன் நமது தமிழ் முன்னோர்கள் உலகிற்கு அளித்த ஒரு பெருமைக்குரிய பங்களிப்பாகும். உலகம் முழுவதும் தமிழ் பேசும் மக்கள் எங்கெல்லாம் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் சித்த மருத்துவம் பரவலாகப் பின்பற்றப்படுகிறது. சித்தர் திருமூலரின் புகழ் பெற்ற கோட்பாடு – “உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே” என்பது*

2023 ஏப்ரல் 18]

நோய்த் தடுப்பு மற்றும் நல மருத்துவத்தின் முக்கியத்துவத்தை மிகச் சரியாக சித்தரிக்கிறது. இந்திய மருத்துவ முறைகளின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் முழுமையான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதுடன் அவற்றின் உள்ளார்ந்த ஆற்றலை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளவும், உன்னதத் தன்மையை மீட்டு எடுக்கவும் தமிழ்நாடு அரசு உறுதி பூண்டுள்ளது. சித்தா, ஆயுர்வேதம், யுனானி, யோகா மற்றும் இயற்கை மருத்துவம் மற்றும் ஓமியோபதி மருத்துவச் சிகிச்சைகளைப் பெருவாரியான மக்களுக்கு வழங்குவதே மாநில அரசின் தலையாய நோக்கமாகும்.

8.3 நிருவாக அமைப்பு: *இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்டது. சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஓமியோபதி மற்றும் யோகா மற்றும் இயற்கை மருத்துவம் ஆகிய ஐந்து இந்திய மருத்துவ முறைகளில் இளங்கலை மற்றும் முதுகலை அளவில் தரமான கல்வியை அளிப்பது இத்துறையின் முக்கியமான குறிக்கோளாகும். ஐந்து இந்திய மருத்துவ முறைகளிலும் மிகச் சிறந்த சிகிச்சையினை 1,541 மருத்துவமனைகள் வாயிலாகப் பொதுமக்களுக்கு அளிப்பது இத்துறையின் முக்கியத்துவமிக்க பணியாகும். ஆணையர்/இயக்குநர் இத்துறையின் தலைவராவார். அவருக்கு, இணை இயக்குநர், நிதி ஆலோசகர் மற்றும் முதன்மை கணக்கு அலுவலர், துணை இயக்குநர் (நிருவாகம்) மற்றும் உதவி இயக்குநர் (நிருவாகம்), ஏடுகள் மொழி மாற்றத்திற்கு கூர்ந்தாய்வு மருத்துவ அலுவலர் (சித்தா மற்றும் யுனானி) மற்றும் சிறப்பு அலுவலர் (மொழி பெயர்ப்பு) ஆகியோர் உதவுகின்றனர். இயக்குநரகத்தைப் பொறுத்தமட்டில் உதவி இயக்குநர் பணம் பெற்று வழங்கும் அலுவலர் ஆவார். மாவட்ட சித்த மருத்துவ அலுவலர்கள் அவர்களின் அதிகார வரம்பிற்கு ஏற்ப பணம் பெற்று வழங்கும் அலுவலர் ஆவார்கள். இயக்குநர் (ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு), முதல்வர்கள், மாவட்ட சித்த மருத்துவ அலுவலர்கள், அறிஞர் அண்ணா இந்திய மருத்துவ முறை மருத்துவமனையின் கண்காணிப்பாளர் மற்றும் வர்மத் துறையின் இயக்குநர் ஆகியோர் ஆணையர்/இயக்குநரின் நேரடி நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படுகின்றனர். சென்னை, அரும்பாக்கத்தில் இந்திய மருத்துவ முறை ஆசிரியர்கள் மற்றும் மாணாக்கர்களின் ஆராய்ச்சியை ஊக்குவிப்பதற்காக ஓர் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பிரிவு செயல்பட்டு வருகிறது. இதற்குத் தலைவராக இயக்குநரும் (ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு), அவருக்கு உதவிட உதவி*

இயக்குநரும் (ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு) உள்ளார். இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி முறைகளில் மாநிலத்தில் ஏழு கற்பிக்கும் நிறுவனங்கள் உள்ளன. அவையாவன: பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி, சென்னை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி, மதுரை திருமங்கலம் அரசினர் ஓமியோபதி மருத்துவக் கல்லூரி, சென்னை, அரசினர் யுனானி மருத்துவக் கல்லூரி, சென்னை, அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரி, கோட்டார், நாகர்கோவில் அரசு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மற்றும் செங்கல்பட்டு சர்வதேச யோகா மற்றும் இயற்கை மருத்துவ அறிவியல் நிறுவனம். மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைகள், வட்டம் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஓமியோபதி மற்றும் யோகா மற்றும் இயற்கை மருத்துவப் பிரிவுகள் ஆகியவை 22 மாவட்ட சித்த மருத்துவ அலுவலர்களின் கட்டுப்பாட்டில் உள்ளன. சென்னையிலுள்ள அறிஞர் அண்ணா அரசு மருத்துவமனையிலும், பாளையங்கோட்டையில் உள்ள அரசு சித்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் நோயாளிகளுக்கு இலவசமாக மருந்துகள் வழங்குவதற்காக இந்திய மருத்துவ முறை மருந்துகளை உற்பத்தி செய்யும் இரண்டு மருந்துசெய் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மாநில உரிமம் வழங்கு அலுவலர் (ISM) இந்திய மருத்துவ முறை மருந்துகளுக்கான பிரத்தியேகமான அமலாக்க அலுவலராவார்.

8.4 இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறையின் நோக்கங்கள்:

- நடப்பில் உள்ள அரசு இந்திய மருத்துவ முறை கல்லூரிகளின் தரத்தை மேம்படுத்துவது மற்றும் மருத்துவக் கல்வியின் தரத்தை உயர்த்துவது.

- அனைத்து மாவட்டங்களிலும் பல்வேறு நிலைகளில் செயல்படும் இந்திய மருத்துவ முறை பிரிவுகள்/ மருத்துவமனைகளின் தரத்தினை மேம்படுத்துதல்.

- சித்தா, ஆயுர்வேதா, யுனானி, யோகா மற்றும் இயற்கை மருத்துவம் ஆகிய இந்திய மருத்துவ முறைகள் மற்றும் ஓமியோபதி மருத்துவ முறையிலும் புதிய மருத்துவக் கல்லூரிகளைத் திறப்பது.

2023 ஏப்ரல் 18]

- *மருத்துவப் பயிர்களை வளர்த்து அவற்றைப் பதப்படுத்தி இந்திய மருத்துவ முறை மருந்துகள் தயாரித்தலையும், இந்திய மருத்துவ முறையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டினை ஊக்குவித்தல்.*
- *பொது மக்களுக்கு முழுமையான மருத்துவ வசதிகளை வழங்க அனைத்து மாவட்டங்களிலும் பல்வேறு இடங்களில் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி பிரிவுகளைத் துவக்குதல்.*
- *பொது மக்களுக்குத் தரமான மருந்துகள் கிடைப்பதை உறுதி செய்ய நல்ல முறையில் மருந்துகள் தயாரிக்கப்படுவதைக் கண்காணித்தல்.*
- *தேசிய ஆயுஷ் நலத் திட்டத்தின்கீழ் நடப்பில் உள்ள ஆயுஷ் பிரிவுகளில் யோகா சிகிச்சை வசதியை ஏற்படுத்தி, அவற்றினை ஆயுஷ் நல மையங்களாக தரம் உயர்த்தல்.*
- *உயர் தரமான இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி மருந்துகள், சிகிச்சைகளை ஊக்குவிக்க இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதியில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.*

8.5 இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி மருத்துவச் சேவைகள்: *இந்திய முறை மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறையின்கீழ் இயங்கி வரும் அரசு மருத்துவ நிலையங்களின் விவரங்கள் பின்வருமாறு:*

பிரிவு	சித்தா	ஆயுர்வேதா	யுனானி	யோகா மற்றும் இயற்கை மருத்துவம்	ஓமியோபதி	மொத்தம்
மருத்துவ நிலையங்களின் எண்ணிக்கை	*1,081*	*104*	*67*	*179*	*110*	*1,541*

8.6 இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி மருத்துவப் பிரிவுகளில் உள் நோயாளர்களுக்கான வசதிகள்: *இத்துறையால்*

[2023 ஏப்ரல் 18

நிருவகிக்கப்படும் இந்திய முறை மருத்துவக் கல்லூரிகள் மற்றும் பல்வேறு மருத்துவமனையில் உள்ள படுக்கை வசதிகள் பின்வருமாறு:

- திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை அரசு சித்த மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த 350 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனை.
- சித்தா, வர்மம், ஆயுர்வேதா மற்றும் யுனானி மருத்துவ முறைகளுக்குத் தனித்தனி வார்டுகள் கொண்ட 310 படுக்கை வசதிகள் கொண்ட சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ முறை மருத்துவமனை.
- கோட்டார், நாகர்கோவில் அரசு ஆயுர்வேதா மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த 100 படுக்கை வசதிகள் கொண்ட ஆயுர்வேதா மருத்துவமனை.
- மதுரை மாவட்டம், திருமங்கலம் அரசு ஓமியோபதி மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த 50 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனை.
- சென்னை அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரி மற்றும் செங்கல்பட்டு சர்வதேச யோகா மற்றும் இயற்கை மருத்துவ அறிவியல் நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்த முறையே 100 மற்றும் 300 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனை.
- வேலூர் அரசு பென்ட்லேண்ட் மருத்துவமனையில் 25 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வரும் சித்தா பிரிவு.
- திண்டுக்கல், ஈரோடு, காஞ்சிபுரம், நாகப்பட்டினம் மற்றும் திருப்பூரில் உள்ள மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் 25 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வரும் சித்தா பிரிவு.
- மேட்டூர், நாமக்கல், நாகர்கோவில், கரூர், கும்பகோணம், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, சிவகங்கை, விழுப்புரம் மற்றும் விருதுநகர் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் 16 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வரும் சித்தா பிரிவு.

2023 ஏப்ரல் 18]

- *கடலூர், பெண்ணாகரம், இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் 15 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வரும் சித்தா பிரிவு*

- *சிதம்பரம், கடலூர் மாவட்டம், கடையநல்லூர், தென்காசி மாவட்டத்தில் உள்ள தாலுகா மருத்துவமனைகளில் 15 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வரும் சித்தா பிரிவு*

- *தேனி மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் 50 படுக்கை வசதிகள் (சித்தா-25 மற்றும் யோகா மற்றும் இயற்கை மருத்துவம்-25) கொண்ட ஒருங்கிணைந்த மருத்துவமனைகள்.*

8.7 இந்திய முறை மருத்துவம் மற்றும் ஓமியோபதி மருத்துவப் படிப்புகள்:

8.7.1 ஆயுஷ் மருத்துவக் கல்வி: *இந்திய முறை மருத்துவங்களான சித்தா, ஆயுர்வேதா, யுனானி, யோகா மற்றும் இயற்கை மருத்துவம் மற்றும் ஓமியோபதி தொடர்பான படிப்புகள் இவ்வியக்குநரகத்தின் நிருவாக கட்டுப்பாட்டின்கீழ் செயல்படுகின்றன. இந்திய முறை மருத்துவம் மற்றும் ஓமியோபதி மருத்துவப் படிப்புகள் பின்வருமாறு வழங்கப்படுகின்றன:*

வ. எண்	பாட விவரங்கள்	படிப்புப் பிரிவு	பயிற்சி காலம்
1.	*பட்ட மேற்படிப்பு*	*எம்.டி. (யோகா மற்றும் இயற்கை மருத்துவம்)*	*3 ஆண்டுகள்*
2.		*எம்.டி. (சித்தா)*	
3.		*எம்.டி. (ஓமியோபதி)*	
4.		*எம்.டி. (யுனானி)*	
5.	*பட்டப் படிப்பு*	*பி.ஏ.எம்.எஸ்.,*	*5½ ஆண்டுகள்*
6.		*பி.என்.ஒய்.எஸ்.,*	
7.		*பி.யூ.எம்.எஸ்.,*	
8.		*பி.எஸ்.எம்.எஸ்.,*	
9.		*பி.எச்.எம்.எஸ்.,*	

வ. எண்	பாட விவரங்கள்	படிப்புப் பிரிவு	பயிற்சி காலம்
10.	பட்டயப் படிப்பு	ஒருங்கிணைந்த மருந்தாளுநர் பட்டயப் படிப்பு	2½ ஆண்டுகள்
11.		செவிலிய சிகிச்சை பட்டயப் படிப்பு	

8.7.2 தமிழ்நாட்டில் மொத்தம் ஏழு அரசு இந்திய முறை மற்றும் ஓமியோபதி கல்லூரிகளும், நாற்பத்தி நான்கு தனியார் சுயநிதிக் கல்லூரிகளும் இயங்குகின்றன. அதன் விவரங்கள் பிரிவு வாரியாக பின்வருமாறு:

மருத்துவ முறை	சித்தா	ஆயுர்வேதா	யுனானி	யோகா மற்றும் இயற்கை மருத்துவம்	ஓமியோபதி	மொத்தம்
அரசு கல்லூரிகளின் எண்ணிக்கை	2	1	1	2	1	7
சுயநிதிக் கல்லூரிகளின் எண்ணிக்கை	11	6	0	16	11	44
மொத்தம்	13	7	1	18	12	51

8.7.3 அரசு இந்திய முறை மற்றும் ஓமியோபதி மருத்துவக் கல்லூரிகளின் விவரங்கள் கீழ்வருமாறு:

I. அரசு சித்த மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம்.

II. அரசு சித்த மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகம், அரும்பாக்கம், சென்னை.

III. அரசு ஓமியோபதி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, திருமங்கலம், மதுரை மாவட்டம்.

2023 ஏப்ரல் 18]

IV. அரசு யுனானி மருத்துவக் கல்லூரி, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகம், அரும்பாக்கம், சென்னை.

V. அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகம், அரும்பாக்கம், சென்னை.

VI. அரசு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, கோட்டார், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

VII. சர்வதேச யோகா மற்றும் இயற்கை மருத்துவ அறிவியல் நிறுவனம், செங்கல்பட்டு.

8.7.4 அரசு கல்லூரி மற்றும் சுயநிதி கல்லூரிகளில் உள்ள இடங்களின் எண்ணிக்கை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

வ. எண்	பாடப் பிரிவு	சேர்க்கைக்கான இடங்களின் எண்ணிக்கை விவரம் (2022-23)				மொத்தம்	
		அரசு கல்லூரி		சுயநிதிக் கல்லூரி			
		பட்டப் படிப்பு	பட்ட மேற்படிப்பு	பட்டப் படிப்பு	பட்ட மேற்படிப்பு	பட்டப் படிப்பு	பட்ட மேற்படிப்பு
1	சித்த மருத்துவம்	160	94	650	-	810	94
2	ஆயுர்வேத மருத்துவம்	60	-	310	-	370	-
3	யுனானி	60	7	-	-	60	7
4	யோகா மற்றும் இயற்கை மருத்தும்	160	45	1498	-	1658	45
5	ஓமியோபதி	50	-	860	66	910	66
	மொத்தம்	490	146	3318	66	3808	212

[2023 ஏப்ரல் 18

8.8 அரசு மருத்துவ நிலையங்களில் இந்திய முறை மற்றும் ஓமியோபதி மருத்துவப் பிரிவுகளை ஒருங்கிணைத்தல்: இந்திய மருத்துவ முறை சிகிச்சையினை அரசு மருத்துவமனைகளுடன் இணைக்க வேண்டும் என்ற கொள்கையின்கீழ், தற்போது அனைத்து அலோபதி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் உள்ள தமிழ்நாடு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை, மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், வட்டம் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில், கீழ்க்கண்டவாறு இந்திய மருத்துவ முறை மற்றும் ஓமியோபதி மருத்துவப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. (தேசிய நலவாழ்வுக் குழும நிதியுதவியுடன் செயல்படும் 475 இந்திய மருத்துவப் பிரிவுகள் மற்றும் 74 ஆயுஷ் நல சிகிச்சை மையங்களை உள்ளடக்கியது):

	சித்தா	**ஆயுர்வேதா**	**யுனானி**	**ஓமியோபதி**	**யோகா மற்றும் இயற்கை மருத்துவம்**	**மொத்தம்**
மாநில வரவு-செலவுத் திட்டத்தின்கீழ் இயங்கும் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி மையங்கள்						
கல்லூரிகள்	2	1	1	1	2	7
பிரதான மருத்துவனை	2	2	1	1	2	8
மருத்துவக் கல்லூரி மருத்துவனை	15	4	2	9	24	54
கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை	1	1	1	1	1	5

2023 ஏப்ரல் 18]

	சித்தா	ஆயுர்வேதா	யுனானி	ஓமியோபதி	யோகா மற்றும் இயற்கை மருத்துவம்	மொத்தம்
பன்னோக்கு உயர் சிகிச்சை மருத்துவமனை (ஓமந்தூரார்)	0	0	0	0	1	1
மாவட்டத் தலைமை மருத்துவமனை	31	4	3	20	30	88
வட்ட மருத்துவமனை	191	2	0	9	31	233
வட்டம் சாரா மருத்துவமனை	58	2	4	0	0	64
ஆரம்ப சுகாதார நிலையம்	406	24	14	5	2	451
முறையான மருந்தகம்	13	6	0	5	1	25
பழங்குடியினர் மருந்தகம்	7	0	0	0	0	7
நடமாடும் மருந்தகம்	1	0	0	0	0	1
ஊரக மருந்தகம்	45	3	0	0	0	48
மொத்தம்	772	49	26	51	94	992
தேசிய சுகாதார திட்டங்கள்						
வட்ட மருத்துவமனை (தேசிய நலவாழ்வுத் திட்டம்)	4	0	1	0	0	5
ஆரம்ப சுகாதார நிலையம்	271	52	39	57	20	439
யோகா மற்றும் இயற்கை மருத்துவ மகப்பேறு மருத்துவப் பிரிவு (ஆரம்ப சுகாதார நிலையம்)	0	0	0	0	29	29

	சித்தா	ஆயுர்வேதா	யுனானி	ஓமியோபதி	யோகா மற்றும் இயற்கை மருத்துவம்	மொத்தம்
யோகா மற்றும் இயற்கை மருத்துவ மகப்பேறு மருத்துவப் பிரிவு (வட்ட மருத்துவமனை)	*0*	*0*	*0*	*0*	*2*	*2*
மொத்தம்	*275*	*52*	*40*	*57*	*51*	*475*
ஆயுஷ் திட்டங்கள்						
மருத்துவக் கல்வி இயக்ககக் கட்டுப்பாட்டில் உள்ள மருத்துவமனைகள்	*0*	*0*	*0*	*0*	*2*	*2*
வட்ட மருத்துவமனை	*4*	*0*	*0*	*1*	*30*	*35*
வட்டம் சாரா மருத்துவமனை	*2*	*0*	*1*	*0*	*0*	*3*
ஆரம்ப சுகாதார நிலையம்	*26*	*3*	*0*	*1*	*0*	*30*
பழங்குடியினர் நடமாடும் யூனிட்	*2*	*0*	*0*	*0*	*0*	*2*
முறையான மருந்தகம்	*0*	*0*	*0*	*0*	*2*	*2*
மொத்தம்	*34*	*3*	*1*	*2*	*34*	*74*
ஆக மொத்தம்	*1081*	*104*	*67*	*110*	*179*	*1541*

2022-2023 ஆம் ஆண்டில் 3,42,20,649 வெளி நோயாளிகளும், 2,24,940 உள் நோயாளிகளும் மேற்காணும் இந்திய மருத்துவ முறை மற்றும் ஓமியோபதி மையங்களில் சிகிச்சைப் பெற்றுள்ளனர்.

8.9 ஆயுஷ் மருத்துவம் சார்ந்த பட்டயப் படிப்பு: *சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை இணைப்பு*

2023 ஏப்ரல் 18]

வளாக மேற்கு கட்டட தொகுதியிலும், பாளையங்கோட்டை, அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி வளாகத்திலும் செயல்படும் அரசினர் ஆயுஷ் துணை மருத்துவப் படிப்பு பள்ளிகளில் சுய ஆதாரத்தின் அடிப்படையில் ஆயுஷ் துணை மருத்துவப் படிப்புகள், அதாவது ஒருங்கிணைந்த மருந்தாளுநர் மற்றும் செவிலிய சிகிச்சை பட்டயப் படிப்புகள் இத்துறையால் நடத்தப்படுகிறது. ஒருங்கிணைந்த மருந்தாளுநர் மற்றும் செவிலிய சிகிச்சை பட்டயப் படிப்புகளில் ஒப்பளிக்கப்பட்டுள்ள இருக்கைகளின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளது:

வ. எண்	**கல்லூரியின் பெயர்**	**சேர்க்கைக்கான இடங்களின் எண்ணிக்கை**		**மொத்தம்**
		ஒருங்கிணைந்த மருந்தாளுநர் பட்டயப் படிப்பு	**செவிலிய சிகிச்சை பட்டயப் படிப்பு**	
1	*அரசினர் ஆயுஷ் துணை மருத்துவப் படிப்பு பள்ளி, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகம், சென்னை*	*50*	*50*	*100*
2	*அரசினர் ஆயுஷ் துணை மருத்துவப் படிப்பு பள்ளி, அரசு சித்த மருத்துவக் கல்லூரி வளாகம், பாளையங்கோட்டை, திருநெல்வேலி*	*50*	*50*	*100*
	மொத்தம்	*100*	*100*	*200*

8.10 மாநில மருந்து உரிமம் வழங்கும் அலுவலர் (இந்திய மருத்துவம்):

- *தமிழ்நாட்டில் சித்தா, ஆயுர்வேதா, யுனானி மருந்துகளுக்கு மருந்துகள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் சட்டம், 1940 மற்றும் விதிகள்,*

1945-ன்படி உரிமம் வழங்குவதற்காக மாநில உரிமம் வழங்கும் அலுவலகம் 29.11.2007 முதல் செயல்பட்டு வருகிறது.

- மாநில உரிமம் வழங்கும் அலுவலகம் சித்தா, ஆயுர்வேதா, யுனானி மருந்துகளைத் தயாரிக்கும் உரிமம் பெற்ற மருந்து உற்பத்தி நிறுவனங்களுக்காக, மேற்கூறிய மருந்துகள் மற்றும் அதன் மூலப்பொருட்களின் தரத்தைப் பரிசோதித்து அங்கீகாரம் மற்றும் புதுப்பித்தல் உரிமத்தினை, தனியார் மருந்து பரிசோதனைக்கூடங்களுக்கு வழங்குகிறது.

- மருந்துகள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் சட்டம், 1940 மற்றும் விதிகள், 1945-ன்படி, 1.11.2019 முதல் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை இயக்குநர் அவர்கள் சித்தா, ஆயுர்வேதா மற்றும் யுனானி மருந்து உற்பத்தியாளர்களுக்கு மேற்படி மருந்துகளின் ஒழுங்குமுறை அமலாக்கத்தைச் செயல்படுத்துவதற்கான ஒப்புதல்/வழிமுறை/அனுமதி அளிக்கும் கட்டுப்பாட்டு அலுவலராகச் செயல்பட்டு வருகிறார்.

- 2018 ஆம் ஆண்டு மருந்துகள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் (11-வது திருத்தம்) விதிகளில் விதி 170-ன்படி தமிழ்நாட்டில் சித்தா, ஆயுர்வேதா, யுனானி மருந்துகளின் விளம்பரங்கள், கூர்ந்தாய்வு செய்து தகுதியான விளம்பரங்களுக்குத் தனித்துவமான அடையாள எண் மாநில உரிமம் வழங்கும் அலுவலரால் வழங்கப்பட்டு வருகிறது.

- 1954 ஆம் ஆண்டின் மருந்துகள் மற்றும் மாய தீர்வுகள் (கண்டனத்திற்குரிய விளம்பரங்கள்) சட்டத்தின் பிரிவு 8, உட்பிரிவு 1-ன்படி 11.1.2018 முதல் சித்தா, ஆயுர்வேதா, யுனானி மருந்துகள் குறித்த செய்தித்தாள், மின்னணு, இணையம் மற்றும் ஒலி-ஒளி வழி விளம்பரங்களைத் தங்களின் நிருவாக வரம்பிற்குள் வரும் பகுதிகளில் கண்காணிப்பதற்கு மாவட்ட சித்த மருத்துவ அலுவலர்கள் அரசிதழ் அலுலவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

8.10.1 சாதனைகள்:

- 2021 ஆம் ஆண்டு மருந்துகள் (4-வது திருத்தம்) விதிகளில் விதி 156(1)-ன்படி சித்தா, ஆயுர்வேதா, யுனானி

மருந்துகளைத் தயாரித்து விற்பனை செய்ய நவம்பர், 2021 முதல் மார்ச், 2023 வரை 168 நிரந்தர உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- தமிழ்நாடு அரசின் மின் ஆளுமை முகமையின் வாயிலாக மாநில உரிமம் வழங்கும் அலுவலகத்திற்கென தனி இணையதளம் www.tnslAim.com என்ற முகவரியில் துவங்கப்பட்டுள்ளது.

- 2018 ஆம் ஆண்டு மருந்துகள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் (11-வது திருத்தம்) விதிகளில் விதி 170-ன்படி, சித்தா, ஆயுர்வேதா, யுனானி மருந்துகளின் விளம்பரங்களுக்காக 21.12.2018 முதல் 31.3.2023 வரையிலான காலகட்டத்தில் 157 தனித்துவமான அடையாள எண் மாநில உரிமம் வழங்கும் அலுவலரின் (இ.ம) மூலம் வழங்கப்பட்டுள்ளது.

8.11 மாநில மருந்துகள் பகுப்பாய்வுக் கூடம் (இந்திய மருத்துவம்): இயற்கை மூலிகை மருந்துகளில் உள்ள இரசாயனப் பொருட்கள், சுற்றுச்சூழல் மற்றும் அது வளரும் நிலத்திற்கேற்ப மாறுபட வாய்ப்புள்ளதால், அம்மருந்தின் தர நிர்ணயம் அறிவியல் வல்லுநர்களுக்குப் பெரும் சவாலாக உள்ளது. மூலிகை மருந்துகள் மற்றும் இயற்கை மருந்துகளைக் கொண்டு இந்திய மருத்துவ முறையின்கீழ் தயாரிக்கப்படும் பல்வேறு மருந்துகளின் தரத்தினை உறுதி செய்வதற்கு ஏற்றவகையில் 2003-ல் மாநில மருந்து பகுப்பாய்வுக்கூடம் (இந்திய மருத்துவம்) உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது. மருந்துகள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் சட்டம், 1940-ல் பிரிவு 33G-ன்கீழ் மருந்து ஆய்வாளரால் எடுத்து அனுப்பப்பட்ட சட்டப்பூர்வ மாதிரிகளின் தரத்தை சோதிப்பதே மாநில மருந்துகள் பகுப்பாய்வுக் கூடத்தின் முதன்மைச் செயல்பாடாகும். மாநில மருந்துகள் பகுப்பாய்வுக் கூடம் (இந்திய மருத்துவம்) சித்தா, ஆயுர்வேதா மற்றும் யுனானி மருந்துகளை பகுப்பாய்வு செய்ய வேதியியல், தாவர மருந்தியல், நுண்ணுயிரியல் ஆய்வகங்களைக் கொண்டுள்ளது. இப்பகுப்பாய்வுக் கூடம் மருந்துகள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் சட்டம், 1940 மற்றும் விதிகள், 1945-ல் IV-A அத்தியாயத்தின் அமலாக்க வழிமுறையைப் பின்பற்றி இந்திய மருத்துவ முறையின் பல்வேறு மூலப் பொருட்களிலிருந்து தயாரிக்கப்படும் சித்தா, ஆயுர்வேதா மற்றும் யுனானி மருந்துகளின் தரத்தினை உறுதி செய்கிறது.

மாநில மருந்துகள் பகுப்பாய்வுக் கூடம் (இந்திய மருத்துவம்), சித்தா, ஆயுர்வேதா மற்றும் யுனானி முறையில் தயாரிக்கப்பட்ட பாரம்பரிய மற்றும் தனியுரிம மருந்துகள் மற்றும் மூல மருந்துப் பொருட்களின் தரத்தை, இந்திய சித்தா, ஆயுர்வேதா, யுனானி மருந்தியல் மற்றும் தரநிலை புத்தகங்கள் அடிப்படையில் உறுதி செய்து வருகிறது. மாநில மருந்து பகுப்பாய்வுக் கூடத்தில் (இ.ம), நவீன மற்றும் மேம்படுத்தப்பட்ட கருவிகளான உயர் செயல்திறன் மெல்லிய அடுக்கு நிறமூர்த்தம் (HPTLC), உயர் அழுத்தத் திரவ வண்ணப்படிவுப் பிரிகை (HPLC), வளிம வண்ணப்படிவுப் பிரிகை (GC), அணுவியல் உட்கவர் அலைமாலையியல் (AAS) போன்றவை சித்தா, ஆயுர்வேதா மற்றும் யுனானி மருந்துகளைத் தரப்படுத்துதல் மற்றும் தரக் கட்டுப்பாடு செய்ய நிறுவப்பட்டுள்ளன. தாவர மருந்தியல் மற்றும் நுண்ணியிரியல் மதிப்பீடு, முறையே பட செயலியுடன்கூடிய முக்கோண நுண்ணோக்கி மற்றும் லேமினார் காற்றோட்ட கருவி கொண்டு செய்யப்படுகின்றன. மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் சட்டம், 1940 மற்றும் விதிகள், 1945-ன் IV-A அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ளபடி 33E (தவறான முத்திரை மருந்துகள் பிரிவு) கீழும், பிரிவு 33EE (கலப்பட மருந்துகள்) கீழும் மற்றும் பிரிவு 33EEA (போலியான மருந்துகள்) கீழும், தவறாக முத்திரை செய்யப்பட்ட மருந்துகள், கலப்பட மருந்துகள், போலியான மருந்துகள் மற்றும் தரமற்ற மருந்துகளைக் கண்டறிவதே மாநில மருந்துகள் பகுப்பாய்வுக் கூடத்தின் (இ.ம) முக்கியச் செயல்பாடாகும். டாம்ப்காலால் தயாரிக்கப்படும் மருந்துகளும் மற்றும் ஒருங்கிணைப்பு முகமைகளால் பிற மருந்து தயாரிப்பாளர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் அனைத்து மருந்துகளும் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட பிறகே அரசு இந்திய முறை மருத்துவ நிலையங்களுக்கு வழங்கப்படுகின்றன. மாநில மருந்துகள் பகுப்பாய்வுக் கூடத்தின் (இந்திய மருத்துவம்) அரசு பகுப்பாய்வாளர், அந்தமான் நிக்கோபார் யூனியன் பிரதேசத்திற்கு, அரசு மருந்து பகுப்பாய்வாளராக, மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் சட்டம், 1940 பிரிவு 33-F(2)-ல் வகுக்கப்பட்ட பணிகளைச் செய்யும்பொருட்டு, நியமிக்கப்பட்டு அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. மாநில மருந்துகள் பகுப்பாய்வுக் கூடத்தில் (இந்திய மருத்துவம்) நிறைவேற்றப்பட்ட பணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

2023 ஏப்ரல் 18]

- *மருந்து ஆய்வாளர்களால் எடுக்கப்படும் சட்டபூர்வமான மாதிரிகள், டாம்ப்கால் நிறுவனம் மருந்துகள் தயாரிக்க பயன்படுத்தும் மூல மருந்துகளின் மாதிரிகள் மற்றும் டாம்ப்கால் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மாதிரிகள் உள்ளிட்ட 3,340 மாதிரிகள் 2022–2023 ஆம் ஆண்டில் மாநில மருந்துகள் பகுப்பாய்வுக் கூடத்தால் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.*

- *தனியார் இந்திய மருத்துவ நிறுவனங்களால் தயாரிக்கப்படும் மருந்துகளின் தரத்தினை மாநில மருந்துகள் பகுப்பாய்வுக் கூடம் இந்திய மருத்துவ முறைக்கான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பிரிவுடன் இணைந்து பரிசோதனை செய்கிறது.*

- *மாநில மருந்துகள் பகுப்பாய்வுக் கூடம் (இந்திய மருத்துவம்), அரசு இந்திய முறை மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு திட்டப் பணிகள் செய்ய பயிற்சியும், வழிகாட்டுதலும் அளித்து வருகிறது.*

- *தனியார் இந்திய முறை மருத்துவக் கல்லூரி மற்றும் பிற பாடப் பிரிவு மாணவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூலிக்கப்பட்டு சிறப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது.*

ஆண்டு	**பெறப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை**	**சோதனை செய்யப்பட்ட மொத்த மாதிரிகளின் எண்ணிக்கை**	**தர நிலைப் படுத்தப்பட்ட மாதிரிகள்**	**தர நிலையற்ற மாதிரிகள்**
2022-2023	*3,985*	*3,340*	*3,285*	*55*

8.12 அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை, (அ.அ.அ.இ.ம), சென்னை: *சென்னை அரும்பாக்கத்தில் தற்போதுள்ள வளாகத்தில் அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை 1970 ஆம் ஆண்டு 110 படுக்கை வசதிகளுடன் நிறுவப்பட்டது. இம்மருத்துவமனை 310 படுக்கைகளுடன் சித்தா, வர்மா, ஆயுர்வேதா, யுனானி மற்றும் யோகா மற்றும் இயற்கை மருத்துவம் ஆகிய மருத்துவ முறை உள் நோயாளிகளுக்கான சிகிச்சை வசதியுடன் தற்போது இயங்கி வருகிறது. இந்தியாவில்*

உள்ள ஆயுஷ் மருத்துவமனைகளிலேயே அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையின் சிறப்பு அம்சம் யாதெனில், இங்கு இந்திய மருத்துவ முறைகளின் ஐந்து முறைகளிலும் [சித்தா (வர்மாவை உள்ளடக்கியது), ஆயுர்வேதா, யுனானி, ஓமியோபதி மற்றும் யோகா மற்றும் இயற்கை மருத்துவம்] புற நோயாளிகள் வசதியும், இந்திய மருத்துவ முறைகளின் நான்கு முறைகளில் அதாவது, சித்தா (வர்மாவை உள்ளடக்கியது), ஆயுர்வேதா, யுனானி மற்றும் யோகா மற்றும் இயற்கை மருத்துவத்திற்கான உள் நோயாளிகள் வசதியையும் ஒரே குடையின்கீழ் கொண்டுள்ளது. இதனால், நோயாளிகள் தங்களுக்கு எந்த மருத்துவ முறையில் சிகிச்சை பெற விருப்பமோ அதைத் தேர்ந்தெடுத்து சிகிச்சைப் பெறும் சுதந்திரம் அவர்களுக்கு கிடைக்கின்றது.

8.12.1. சித்தா: அனைத்து நாட்களிலும் பொதுவான புற நோயாளிகள் சிகிச்சை வசதி வழங்கப்பட்டு வருவதுடன், புற்றுநோய், எய்ட்ஸ் மற்றும் பிற வாழ்வியல் நோய்களான நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், கருவுறாமை, மூச்சுக்குழாய் ஆஸ்துமா, முதுகெலும்பு மற்றும் தோல் கோளாறுகள் போன்றவற்றுக்கான சிறப்பு புற நோயாளிகளுக்கான சிகிச்சை வசதி வழங்கப்பட்டு வருகின்றது. கொரோனா பெருந்தொற்று பரவிய காலத்தில் சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் சிறப்பு சித்த மருத்துவ மையம் தொடங்கப்பட்டது.

8.12.2 வர்மா: இத்துறை வர்மா இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருவதுடன், 35 படுக்கை வசதிகளுடன், புற நோயாளிகளுக்கான சிகிச்சைப் பிரிவினையும் கொண்டுள்ளது. இதில் அனைத்து நரம்பியல் நோய்கள் மற்றும் நாட்பட்ட வலிகளுக்கு சிறப்பான முறையில் சிகிச்சையளிக்கப்படுகிறது.

8.12.3 ஆயுர்வேதா: ஆயுர்வேதா பிரிவு புற நோயாளிகளுக்கான வசதியுடன், உள் நோயாளிகளுக்கான 55 படுக்கை வசதியுடன்கூடிய பிரிவுடனும் செயல்பட்டு வருகிறது. அனைத்து வகையான நாட்பட்ட நோய்களுக்குப் பொதுவான மற்றும் பஞ்சகர்மா மற்றும் கிரியாக்ரமம் போன்ற சிறப்பு சிகிச்சைகள்மூலம் சிகிச்சை அளிக்கப்படுகிறது. மேலும், அபியங்கம் என்கிற எண்ணெய் தேய்த்து சிகிச்சை செய்தல், புற நோயாளிகள் பிரிவிலும் அளிக்கப்படுகிறது. உள்நோயாளிகள் பிரிவில் ஸ்நேகபானம் (எண்ணெய் பருகும் சிகிச்சை),

உத்வர்த்தனம் (பொடி திமிர்தல்), சிரோதாரா (தலையில் எண்ணெய் ஊற்றும் சிகிச்சை), சிரோவஸ்தி (தலையில் எண்ணெய் தேக்கி வைக்கும் சிகிச்சை), வமனம் (வாந்தி செய்விக்கும் சிகிச்சை), விரேசனம் (பேதி செய்விக்கும் சிகிச்சை), மாத்ராவஸ்தி (எண்ணெய் கொண்டு செய்யும் எனிமா), கஷாயவஸ்தி (கஷாயம் கொண்டு செய்யும் எனிமா), கடி வஸ்தி (இடுப்பில் எண்ணெய் தேக்கி வைக்கும் சிசிச்சை), ஜானுவஸ்தி (மூட்டில் எண்ணெய் தேக்கி வைக்கும் சிசிச்சை), க்ரீவாவஸ்தி (பின்கழுத்தில் எண்ணெய் தேக்கி வைக்கும் சிசிச்சை), உபநாஹம் (மூலிகை கட்டு), நேத்ரதர்ப்பணம் (கண்ணில் நெய் தேக்கி வைத்து சிகிச்சை), ஷஷ்டிகபிண்டஸ்வேதம் (அரிசியை கொண்டு ஒற்றடம் கொடுக்கும் சிகிச்சை), நஸ்யம் (நாசியில் மருந்திடுதல்), சிரோபிசு (தலையில் எண்ணெய் வைத்தல்), லேபனம் (பற்று), தான்யாம்லதாரா (புளித்தகாடி நீரை ஊற்றும் சிகிச்சை), கஷாயதாரா (மூலிகை கஷாயத்தை ஊற்றும் சிகிச்சை), க்ஷீரதாரா (மூலிகை பாலை ஊற்றும் சிகிச்சை), காயசேகம் (மூலிகை எண்ணெய்யை உடல் முழுவதும் ஊற்றும் சிசிச்சை) போன்ற சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன.

8.12.4 யுனானி: யுனானி புற நோயாளிகள் பிரிவில் நாளொன்றுக்கு சராசரியாக 400 முதல் 500 நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுவதுடன், உள்நோயாளிகள் சிகிச்சைக்கென்று 100 படுக்கை வசதிகளுடன் யுனானி பிரிவு அரசு யுனானி மருத்துவக் கல்லூரியின்கீழ் இயங்கி வருகிறது. தலக் (தேய்த்தல் சிகிச்சை), ஹமாம் (குளியல்), ஹிஜாமா (கோப்பை சிகிச்சை), ஃபாசத் (அசுத்த இரத்தம் வெளியேற்றுதல்), புஹுர் (வேது பிடித்தல்), இர்சால் அலக் (அட்டை விடுதல்) போன்ற யுனானி மருத்துவத்திலுள்ள சிறப்பு சிகிச்சைகள் அளிக்கப்படுகிறது.

8.12.5 மருந்து செய் நிலையம்: அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகத்திலேயே மருத்துவமனையுடன் இணைந்து ஒரு தனித் தன்மையான மருந்து செய் நிலையம் செயல்பட்டு வருவதுடன், அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை மற்றும் அதனுடன் இணைந்த 10 பிரிவுகளின் உள் மற்றும் புறநோயாளி பிரிவுகளுக்குத் தேவைப்படும் சித்தா, ஆயுர்வேதா மற்றும் யுனானி மருந்துகள் தயாரித்து வருகிறது. அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை மருந்து செய் நிலையத்தில் தயாரிக்கப்படும் சித்தா, ஆயுர்வேதா மற்றும் யுனானி மருந்துகளின் தர உத்தரவாதத்தை மதிப்பிடுவதற்காக

ஓர் உள்ளிருப்பு தரக் கட்டுப்பாடு பகுப்பாய்வகத்தினையும் கொண்டுள்ளது. தயாரிக்கப்பட்ட மருந்துகளின் தரம் மற்றும் அளவு பகுப்பாய்வுகளைச் செய்வதற்காக வேதியியல், மருந்தியல் மற்றும் நுண்ணுயிரியல் துறைகள் இப்பகுப்பாய்வுக் கூடத்தில் செயல்பட்டு வருகின்றன.

8.13 இந்திய மருத்துவ முறைக்கான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பிரிவு, சென்னை: இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்ககம், சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஓமியோபதி மற்றும் யோகா & இயற்கை மருத்துவம் போன்ற இந்திய மருத்துவ முறைகளின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆராய்ச்சி மேற்கொள்வதற்காக இந்திய மருத்துவ முறைகளுக்கென்று பிரத்யேகமான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பிரிவினை நிறுவியுள்ளது. மேம்பட்ட உபகரணங்களுடன் நிறுவப்பட்ட வேதியியல், நுண்ணுயிரியல் மற்றும் மருந்தியல் & நச்சுவியல் ஆகிய மூன்று முக்கிய ஆய்வகங்களுடன் இப்பிரிவு 2020 ஆம் ஆண்டு முதல் செயல்படத் துவங்கியது. இவ்வாராய்ச்சிப் பிரிவு, சென்னையில் உள்ள சித்தாவிற்கான மத்திய ஆராய்ச்சி நிலையம், தேசிய தொற்றுநோயியல் நிலையம், இந்திய மருத்துவத்திற்கான மாநில மருந்துகள் பகுப்பாய்வுக் கூடம் ஆகியவற்றுடன் இணைந்து மருத்துவச் சிகிச்சைசார் மற்றும் கண்காணிப்பு ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. கோவிட்-19 பெருந்தொற்று காலத்தில் பொது மக்கள் நேரடியாகத் தொடர்பு கெண்டு பயன்பெற ஏதுவாக ஒரு மைய கட்டுப்பாட்டு அறையைத் துவக்கியும், சித்தர் காயகற்பம் என்கிற சித்தா கோவிட் பிந்தைய கவனிப்பு மையத்தை அதன் வளாகத்தில் ஏற்படுத்தியும், தொற்று நோய் ஏற்பட்ட சூழ்நிலையில், இப்பிரிவு ஆராய்ச்சி நடவடிக்கைகளில் முனைப்புடன் ஈடுபட்டது. இந்திய மருத்துவ முறைகளில் ஆராய்ச்சிகளை முன்னெடுக்க மாணவர்களை ஊக்குவிப்பதற்காக சித்தாவிற்கான மத்திய ஆராய்ச்சி நிலையத்துடன் இணைந்து பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டுள்ளன. 2021 ஆம் ஆண்டு சிசிச்சைசார் ஆராய்ச்சித் தரவுகளைச் சேகரிப்பதற்காக ஒரு தரவு அலகு இப்பிரிவில் ஏற்படுத்தப்பட்டது. இந்திய மருத்துவத்திற்கான மாநில பகுப்பாய்வுக் கூடத்துடன் இணைந்து தனியார் இந்திய மருத்துவ முறை மருந்து தயாரிப்பு நிறுவனங்களால் தயாரிக்கப்படும் மருந்துகளின் தர பரிசோதனை குறைந்த செலவில் இப்பிரிவில் செய்யப்பட்டு வருகிறது.

2023 ஏப்ரல் 18]

8.14 பிற செயல்பாடுகள்:

- கோவிட்-19 பெருந்தொற்றைக் கட்டுப்படுத்த/தடுக்க இந்திய மருத்துவ முறைகள் மற்றும் ஓமியோபதியை உள்ளடக்கிய "ஆரோக்கியம்" என்ற சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.
- 350 படுக்கை வசதி உடைய பாளையங்கோட்டை அரசு சித்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், மதுமேகம் (நீரிழிவு), இரத்த அழுத்தம், சிறுநீரக கல்லடைப்பு, குழந்தைப் பேறின்மை முதலிய நோய்களுக்குச் சிறப்பு சிகிச்சைகள் நடத்தப்பட்டு வருகின்றன.
- 85 படுக்கை வசதி கொண்ட சென்னை, அரசு சித்த மருத்துவக் கல்லூரியில், தொக்கணம், வர்மம், பற்று, ஒற்றடம் போன்ற தனித்துவமான சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றன.
- 100 படுக்கை வசதி கொண்ட நாகர்கோவில், கோட்டார் ஆயுர்வேதா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பக்கவாதம்,தோல்,கீழ்வாய்வு முதலிய நோய்களுக்கு நீராவி குளியல், தொக்கணம், பஞ்சகர்மா முதலியவற்றின்மூலம் சிறப்பான சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றன.
- 100 படுக்கை வசதி கொண்ட சென்னை அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, இயற்கை உணவு, இயற்கை மூலிகை சிகிச்சை, உணவு உண்ணாமை, மண் குளியல் சிகிச்சை, நீராவிக் குளியல் சிகிச்சை, வாழையிலை குளியல் சிகிச்சை மற்றும் யோகா போன்ற இயற்கை வழியில் உடல் பருமன் குறைக்கும் சிகிச்சை வழங்குவதில் தனித்தன்மையுடன் இயங்கி வருகிறது.
- செங்கல்பட்டு மாவட்டத்தில், சர்வதேச யோகா மற்றும் இயற்கை மருத்துவ அறிவியல் நிலையத்தினைத் தமிழ்நாடு அரசு நிறுவியுள்ளது. இக்கல்லூரி 14.4.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இக்கல்லூரியில் பட்டப் படிப்பில் 100 மாணவர்களும், பட்ட மேற்படிப்பில் 30 மாணவர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

[2023 ஏப்ரல் 18

8.15 தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகம் (டாம்ப்கால்): இந்திய மருத்துவ முறை மருந்துகளான சித்தா, ஆயுர்வேதா மற்றும் யுனானி மருந்துகளைத் தயாரித்து விநியோகம் செய்யும் முக்கிய நோக்கத்திற்காக 1983 ஆம் வருடம் செப்டம்பர் திங்கள் 27 ஆம் நாள் டாம்ப்கால் நிறுவனம் துவக்கப்பட்டது. இதன் தலைமை அலுவலகம் சென்னை, அரும்பாக்கத்தில், அறிஞர் அண்ணா இந்திய மருத்துவ முறை மருத்துவமனை வளாகத்திலும், மருந்துகள் உற்பத்தித் தொழிற்சாலை செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் அருகில் ஆலத்தூரில் உள்ள மருந்து செய்யும் நிறுவனங்களுக்கான சிட்கோ வளாகத்திலும் அமைந்துள்ளன. இத்தொழிற்சாலையில், 87 சித்தா மருந்துகள் (61 புத்தக உரிமை மற்றும் 26 தனி உரிமை) 43 ஆயுர்வேதா மருந்துகள் (40 புத்தக உரிமை மற்றும் 3 தனி உரிமை) 21 யுனானி மருந்துகள் (13 புத்தக உரிமை மற்றும் 8 தனி உரிமை) 11 கால்நடை மருந்துகள் (9 புத்தக உரிமை மற்றும் 2 தனி உரிமை) 13 யோகா மற்றும் இயற்கை மருத்துவ மருந்துகள் ஆக மொத்தம் 175 வகையான மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. இம்மருந்துகளை இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி இயக்குநரகத்தின் கட்டுபாட்டின்கீழ் இயங்கும் நிலையங்களுக்கு விநியோகிக்கப்படுவதுடன், இதர அரசு நிலையங்களுக்கும், டாம்ப்காலின் சொந்த விற்பனையகங்களுக்கும் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநரகத்திற்கு மருந்துகள், இயந்திரங்கள், கருவிகள் மற்றும் பிறவற்றைக் கொள்முதல் செய்து விநியோகிக்கும் ஒருங்கிணைப்பு முகமையாக டாம்ப்கால் உள்ளது. இக்கழகம் சென்னை, பாளையங்கோட்டை மற்றும் நாகர்கோவில் ஆகிய மூன்று இடங்களில் விற்பனை நிலையங்களைக் கொண்டுள்ளது. இக்கழகத்தின் தலைமை அலுவலகத்தில் இந்திய மருத்துவ முறையான சித்தா, ஆயுர்வேதா, யுனானி, யோகா மற்றும் இயற்கை முறையிலான இலவச சிகிச்சையகத்தில் உரிய மருத்துவர்களால் சிகிச்சை மற்றும் ஆலோசனை சுழற்சி முறையில் வழங்கப்பட்டு வருகிறது. உலக அளவில் உள்ள பயனாளிகளுக்குக் கொண்டு சேர்க்கும் நோக்கத்தில், இக்கழகத்தின் புகழ் பெற்ற தயாரிப்பான மூலிகை கூந்தல் தைலம் மற்றும் விரைவாக விற்பனையாகும் இதர மருந்துகள் மின்னணு கொள்முதல் இணையதளங்களில் அதாவது அமேசான் இணையதளம் மற்றும் டாம்ப்காலின் சொந்த இணையதளமான www.tampcol.in வாயிலாகக் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. டாம்ப்காலின் இரண்டாவது உற்பத்தி அலகு புதுக்கோட்டையில்

2023 ஏப்ரல் 18]

அரசினர் மாவட்டத் தலைமை மருத்துவமனை வளாகத்தில் 25.2.2021 அன்று துவங்கப்பட்டு, கோவிட்-19 பெருந்தொற்றினை எதிர்கொள்ள நிலவேம்புக் குடிநீர் மற்றும் கபசுரக் குடிநீர் உற்பத்தி செய்யப்பட்டு 28 மாவட்டங்களுக்கு விநியோகிக்கப்பட்டது. இதுதவிர, 15 சித்தா மற்றும் ஆயுர்வேதா மருந்துகளும் இந்த அலகில் தயாரிக்கப்படுகின்றன. இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.300.00 இலட்சம் ஆகும். 2022-2023 ஆம் நிதியாண்டின் தணிக்கை செய்யப்படாத கணக்குகளின்படி இக்கழகத்தின் விற்பனை மதிப்பு ரூ.77.85 கோடி ஆகும். இக்கழகம் 2022-23 ஆம் நிதியாண்டில் கீழ்க்காணும் திட்டங்களுக்கு மருந்துகள் விநியோகித்துள்ளது.

வ. எண்	**திட்டங்கள்**	**ரூபாய் (இலட்சத்தில்)**
1.	*மகப்பேறு சஞ்சீவி*	*400.00*
2.	*குழந்தைகள் நல பெட்டகம்*	*292.81*
3.	*கலைஞரின் வருமுன் காக்கும் திட்டம்*	*44.10*
4.	*தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை*	*317.18*

இவ்வாண்டில் "மக்களைத் தேடி மருத்துவம்" என்ற திட்டத்தின்கீழ் நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்த நோய்களுக்காக இரண்டு தனித்தனி சித்தா மருந்து பெட்டகங்கள் தயார் செய்து, ஆரம்ப சுகாதார நிலையங்களில் செயல்பட்டு வரும் 308 சித்தா பிரிவுகளுக்கு வழங்குவதற்காக டாம்ப்கால் நிறுவனம், தமிழ்நாடு மாநில ஆயுஷ் குழுமத்திடமிருந்து ரூ.65,97,540/-ஐ பெற்றுள்ளது. டாம்ப்காலின் விரைவாக விற்பனையாகும் மருந்துகளான ஆடாதொடை மணப்பாகு, நிலவேம்புக் குடிநீர், டாம்ப்கால் வலி நிவாரண களிம்பு, சயவனபிராஷ் லேகியம், அஸ்வகந்தா லேகியம், கபசுரக் குடிநீர் போன்றவை பொதுமக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளதுடன் அவற்றின் அதிகரித்த விற்பனை இந்திய மருத்துவ முறை மருந்துகளின் செயல்திறனை எடுத்துரைப்பதுடன், அவற்றிற்கு மக்களிடையே உள்ள விழிப்புணர்வு அதிகரித்து வருவதையும் காட்டுகிறது.

8.15.1 டாம்ப்காலின் இதர செயல்பாடுகள்:

- இந்நிறுவனம் தற்போது தமிழ்நாடு காதி மற்றும் கிராமத் தொழில் வாரியம்மூலம் (TNKVIB) நடத்தப்படும் கடைகள் மற்றும் மாநிலம் முழுவதும் உள்ள கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் மருந்துகள் கடைகள் மூலமாகவும் தனது மருந்துகளை விற்பனை செய்து வருகிறது.

- மின் நுகர்வைக் குறைக்க வேண்டும் என்ற நோக்கத்தின்படி, ஆலத்தூர் தொழிற்சாலையில் 110 கிலோவாட் கிரிட் இணைக்கப்பட்ட சூரியஒளி மின் தகடு கூரை அமைத்து இயக்கி வருவதுடன், தனித்து நின்று செயல்படும் வகையிலான 50 சூரிய ஒளி தெரு விளக்குகளையும் நிறுவியுள்ளது.

- குழல் மாத்திரைகள் மற்றும் மாத்திரைகளின் உற்பத்தியை அதிகரிக்கப்பதற்காக ஆலத்தூர் தொழிற்சாலையில் முற்றிலும் செமிஆட்டோமேடிக் இருவழி குப்பி நிரப்பும் இயந்திரம் மற்றும் இருவழி மாத்திரை அழுத்தும் இயந்திரம் நிறுவப்பட்டுள்ளன. சூரணம் உற்பத்தியை அதிகரிக்க 50 குதிரை திறன் கொண்ட இம்பாக்ட் தூளாக்கும் இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது. மூலப் பொருட்கள் சேமிப்பதற்காக நவீன குளிர்பதனக் கிடங்கு அமைக்கப்பட்டுள்ளது.

- பொது மக்களுக்கு, நியாயமான விலையில் கிடைக்கும்வகையில் புதிய அழகு சாதனப் பொருட்கள் அதாவது, 1. டாம்ப்கால் ஹெர்பல் ஏ.டி. ஹேர் ஆயில், 2. டாம்ப்கால் ஹெர்பல் ஷாம்பு, 3. டாம்ப்கால் ஹெர்பல் ஹேர் வாஷ் பொடி, 4. டாம்ப்கால் ஹெர்பல் ஃபேஸ் பேக், 5. டாம்ப்கால் ஹெர்பல் ஃபேஸ் க்ரீம், 6. டாம்ப்கால் ஹெர்பல் சோப்புகள் (பசுமை மற்றும் வெண்மை) 5.4.2023 அன்று சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டன. இவை தவிர, 1. டாம்ப்கால் சன் ஸ்கிரீன் லோஷன், 2. டாம்ப்கால் பூஞ்சை எதிர்ப்பு கிரீம், 3. டாம்ப்கால் வலி நிவாரண கிரீம், 4. டாம்ப்கால் செறிவூட்டப்பட்ட ஹேர் ஆயில் மற்றும் 5. டாம்ப்கால் ஹெர்பல்

ஹேர் டை ஆகியவை விரைவில் சந்தையில் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

8.16 மாநில ஆயுஷ் குழுமம் – தமிழ்நாடு: ஒன்றிய ஆயுஷ் குழுமத்தின் திட்டத்தின்கீழ் மாநிலத்திற்கு ஒப்பளிக்கப்படும் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக “மாநில ஆயுஷ் குழுமம்–தமிழ்நாடு” ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் 60:40 என்ற விகிதத்தில் வழங்கும் நிதியில் ஒப்பளிக்கப்பட்ட திட்டங்களை மாநில ஆயுஷ் குழுமம் – தமிழ்நாடு செயல்படுத்துகிறது. 2022-23 ஆம் ஆண்டு மாநில ஆண்டு செயல் திட்டத்திற்கு ரூ.8095.623 இலட்சம் நிதி ஆதாரமாக ஒதுக்கப்பட்டு, ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் பங்காக இதுவரை ரூ.2450.078 இலட்சம் மாநில அரசின் வாயிலாக விடுவிக்கப்பட்டுள்ளது.

8.17 தமிழ்நாடு மாநில மூலிகை தாவர வாரியம்: தமிழ்நாடு மாநில மூலிகை தாவர வாரியம் உருவாக்கப்பட்டு, 26.10.2009 நாளிட்ட பதிவு எண் 286/2009-ன்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசின் மருத்துவம்-மக்கள் நல்வாழ்வுத் துறையின் முதன்மைச் செயலர் தலைமையில் 11 உறுப்பினர்களைக் கொண்ட பொதுக் குழு மற்றும் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட செயற்குழுவின்மூலம் இந்த வாரியம் நிர்வகிக்கப்படுகிறது. தேசிய மூலிகை தாவர வாரியத்தின் ஆதரவில் வழங்கப்படும் சுழல் நிதியில் தமிழ்நாடு மாநில மூலிகை தாவர வாரியம் சார்பில், விவசாயிகள் மற்றும் மூலிகைத் தொழில் பங்குதாரர்களுக்கு மருத்துவப் பயிர்களின் முக்கியத்துவத்தை தெரிவிக்கும்வகையில் மாவட்ட மற்றும் மாநில அளவிலான விழிப்புணர்வுக் கூட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் கண்காட்சிகள் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வாரியத்தில் உறுப்பினராகப் பதிவு செய்து கொண்டுள்ள அரசு, தனியார் மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் திட்ட முன்மொழிவுகளை முறையாகச் சமர்ப்பித்து, ஒன்றிய அரசின் தேசிய மூலிகை தாவர வாரியத்தின் மானியத்தைப் பெற்று வழங்குவது இவ்வாரியத்தின் முக்கிய நோக்கமாகும்.

[2023 ஏப்ரல் 18

அத்தியாயம்—9

உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிருவாகம்

I. உணவு பாதுகாப்பு:

9.1 உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம், 2006, இந்தியா முழுவதும் 5.8.2011 முதல் அமலுக்கு வந்தது. இச்சட்டம் உணவுப் பாதுகாப்புத் துறைமூலம் மாநிலத்தில் செயல்படுத்தப்படுகிறது.

- மாநில அளவில், இந்தத் துறையானது உணவுப் பாதுகாப்பு ஆணையரின் தலைமையில் செயல்படுகிறது.
- மாவட்ட அளவில், 32 நியமன அதிகாரிகள் (DO), 391 உணவு பாதுகாப்பு அதிகாரிகள் (FSO) வட்டாரம்/ நகராட்சி/மாநகராட்சி அளவில் பணியாற்றி வருகின்றனர்.
- தமிழ்நாட்டில், சென்னை, தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி (பாளையங்கோட்டை), சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் ஆறு உணவுப் பகுப்பாய்வு ஆய்வகங்கள் அமைந்துள்ளன.
- ஆறு ஆய்வகங்களும் மேற்கண்ட சட்டத்தின்படி உணவு தொடர்பான மாதிரிகளைப் பரிசோதிப்பதற்காக அறிவிக்கப்பட்டுள்ளன. ஆய்வக அறிக்கையின் அடிப்படையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

9.2 உரிமம் மற்றும் பதிவுச் சான்றிதழ் (License and Registration Certificate): ஜூன் 2013-ல் அனைத்து மாவட்டங்களிலும் இணையதளம்மூலம் உரிமம் மற்றும் பதிவு தொடங்கப்பட்டுள்ளது. உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டத்தின்கீழ் அனைத்து உணவு வணிகர்களும் கீழ்க்கண்டவாறு தங்களது ஆண்டு விற்றுக் கொள்முதல் அடிப்படையில், பதிவு/உரிமம் பெற்றுக்கொள்ளலாம்:-

- ரூ.12 இலட்சம் வரை–பதிவு சான்றிதழ்.
- ரூ.12 இலட்சம் முதல் 20 கோடி வரை–உரிமம் சான்றிதழ் (மாநில அளவில்).

2023 ஏப்ரல் 18]

- *ரூ.20 கோடிக்கு மேல்-ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் அனைத்து ஒன்றிய உணவு நிறுவனங்கள் ஒன்றிய உரிமம் சான்றிதழ்.*

உணவு பாதுகாப்பு தர நிர்ணய ஆணையம், இதற்காக இணையதளத்தை ஏற்படுத்தியுள்ளது. இணையதளம்மூலம் உரிமம் மற்றும் பதிவுச் சான்று வழங்கப்படுகிறது. உரிமம் மற்றும் பதிவுச் சான்று வழங்குவதற்குச் சிறப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன. மார்ச், 2023 வரை 1,15,205 உணவு உரிமங்கள் (Licence) *மற்றும் 4,64,763 பதிவு சான்றிதழ்கள்* (Registration Certificates) *செயல்பாட்டில் உள்ளன.*

9.3 தகவல்/கல்வி/தொடர்பு மற்றும் விழிப்புணர்வு (Information, Education & Communication): *உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் வழிகாட்டுதல்படி பாதுகாப்பான உணவு கிடைப்பதை உறுதி செய்ய உணவு வணிகர்கள் மற்றும் பொது மக்களுக்குத் தகவல்/கல்வி/தொடர்பு* (IEC) *நடவடிக்கைகள் வாயிலாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.*

விவரம்	2022-2023
நடத்தப்பட்ட மொத்த விழிப்புணர்வு நிகழ்வுகள்	*5,017*
விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் எண்ணிக்கை	*12,39,971*

9.4 அமலாக்க நடவடிக்கைகள் (Enforcement Activities): *நியமன அலுவலர்கள்/உணவு பாதுகாப்பு அலுவலர்கள், அவர்களின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள உணவு தயாரிப்பு நிறுவனங்கள், சேமித்து வைக்கும் இடங்கள், விற்பனையகங்களில் தொடர்ச்சியாக ஆய்வு செய்து வருகிறார்கள்.*

விவரம்	2022-2023
ஆய்வு செய்யப்பட்ட உணவு மாதிரிகளின் எண்ணிக்கை	*24,190*
பாதுகாப்பற்றது (Unsafe)	*1,651*
தரம் குறைவானது (Substandard) மற்றும் தப்பு குறியிடப்பட்டது (Misbranded)	*6,284*

9.5 தர நிர்ணயச் சட்ட விதிகளின்படி சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டவை:

9.5.1 உரிமையியல் வழக்குகள்: *அனைத்து வருவாய் மாவட்டங்களிலும் உள்ள மாவட்ட வருவாய் அலுவலர்கள் தீர்ப்பாய அலுவலர்களாக* (Adjudicating Officer) *உணவு பாதுகாப்பு தர நிர்ணயச் சட்டம் 2006-ன்கீழ் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு நீதிமன்றத்திற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.*

விவரம்	2022-2023
பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	4,572
தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	3,751
அபராதம் விதிக்கப்பட்ட தொகை	Rs.3,98,53,750

9.5.2 குற்றவியல் வழக்குகள் (Criminal Cases): *உணவு பாதுகாப்பு தர நிர்ணயச் சட்டம், 2006 விதிகளை மீறுவோர்மீது குற்றவியல் நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரப்படுகின்றன.*

விவரம்	2022-2023
பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	732
தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	732
அபராதம் விதிக்கப்பட்ட தொகை	Rs.2,07,32,000/-

9.5.3 சிறுகுற்ற செயல்களுக்குத் தீர்வு செய்தல் (Compounding Offence): *உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம் பிரிவு 30(3)-ன்கீழ் ஆண்டுக்கு 12 இலட்சத்திற்கும் குறைவாக வருவாய் ஈட்டும் உணவு வணிகர்கள் செய்யும் குற்றங்களுக்கு ரூபாய் 25,000/– வரை அபராதம் விதிக்க மாவட்ட நியமன அலுவலர்களுக்கு அதிகாரம் 1.12.2019 முதல் வழங்கப்பட்டுள்ளது.*

விவரம்	2022-2023
கண்டறியப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை	7,421
அபராதம் விதிக்கப்பட்ட தொகை	Rs.2,94,44,500/-

2023 ஏப்ரல் 18]

9.5.4 புகையிலை மற்றும் நிக்கோட்டினை சேர்மானமாகக் கொண்ட உணவுப் பொருட்கள் தடையின்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் (Ban On Food Products Containing Tobacco/Nicotine):

மே 2013 முதல் புகையிலை மற்றும் நிக்கோட்டினை சேர்மானமாகக் கொண்ட உணவுப் பொருட்கள் தமிழ்நாட்டில் தடை செய்யப்பட்டுள்ளது.

விவரம்	2022–2023 ஜனவரி வரை
உணவு பாதுகாப்பு துறையால் கைபற்றப்பட்டது (கிலோ கிராமில்)	77.045 டன்
ஆய்வு செய்யப்பட்ட உணவு மாதிரிகளின் எண்ணிக்கை	258
தரம் குறைவானது மற்றும் தப்பு குறியிடப்பட்டது	24
பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	24
தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	10
அபராதம் விதிக்கப்பட்ட தொகை	ரூ.2,03,000/-
பாதுகாப்பற்றது (Unsafe)	228
பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	81
தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	36
அபராதம் விதிக்கப்பட்ட தொகை	ரூ.10,88,500/-

9.5.5 தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்களை விற்பனை செய்பவர்கள்மீது விதிக்கப்பட்ட அபராதம் (Compounding Offences Of Banned Food Products Containing Tobacco/Nicotine):-

விவரம்	2022–2023 ஜனவரி வரை
கண்டறியப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை	4,372
அபராதம் விதிக்கப்பட்ட தொகை	ரூ.2,35,64,000/-

இதற்கிடையில், மெல்லும் புகையிலைப் பொருட்களின்மீது உணவுப் பாதுகாப்புத் துறை ஆணையரால் விதிக்கப்பட்ட தடை ஆணையை மாண்புமிகு மெட்ராஸ் உயர் நீதிமன்றம் இரத்து செய்தது. உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம், 2006 பிரிவு 30(2)(A)-ன்படி உணவு பாதுகாப்புத் துறை ஆணையர், ஆண்டுக்காண்டு தடையாணை பிறப்பிப்பதன்மூலம் தனது அதிகாரத்தை மீறியுள்ளார் என்று மாண்புமிகு மெட்ராஸ் உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. தமிழ்நாடு அரசு மற்றும் நியமன அலுவலர், விழுப்புரம் மாவட்டம் ஆகியோர் மேற்படி தடையாணையினை இரத்து செய்ததை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் S.L.P. No.3933-3955/2023-ன் மூலமாக மேல்முறையீடு செய்துள்ளனர். இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

9.6 குறைதீர்க்கும் முறை (Complaint Redressal): வாட்ஸ்ஆப் செயலி மூலமாக உணவு தொடர்பான புகாரினைப் பெற்று நடவடிக்கை எடுத்து குறைதீர்க்கும் (94440 42322) முறை இத்துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தால் இந்த வாட்ஸ்ஆப் குறைதீர்க்கும் செயலிமுறை பாராட்டப்பட்டுள்ளது.

விவரம்	2022-2023
வாட்ஸ் ஆப் செயலிமூலம் பெறப்பட்ட புகார்களின் எண்ணிக்கை	8,221

9.7 உணவு பாதுகாப்பு பயிற்சி மற்றும் சான்றிதழ் (Food Safety Training And Certification): FoSTAC உணவு பாதுகாப்பு பயிற்சி மற்றும் சான்றிதழின்கீழ் 54,439 அங்கன்வாடி மையங்கள் உணவு பாதுகாப்பு பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டு அதனடிப்படையில் சான்றிதழ்கள் வழங்கப்படுகிறது. இப்பயிற்சிக்காக ரூ.32 இலட்சம் செலவிடப்பட்டு, அங்கன்வாடி மையங்களுக்கான உண்ணத் தகுந்த வளாகத்தின் (Eat Right Campus) பயிற்சி அமர்வுகள் (Training Session) நிறைவடைந்தன.

விவரம்	2022-2023
1. நடத்தப்பட்ட பயிற்சி வகுப்புகள் எண்ணிக்கை	1,093
2. பயிற்சி பெற்ற உணவு பாதுகாப்பு மேற்பார்வையாளர்கள் எண்ணிக்கை	48,833

2023 ஏப்ரல் 18]

9.8 Food Safety Compliance Through Regular Inspection System (Foscoris): இது Foscoris-ல் நடந்து வரும் தொடர் திட்டங்களில் ஒன்றாகும். உரிமம்/பதிவு மற்றும் பிற புகார்களுடன் உணவு வணிகர்கள் தொடர்பான அனைத்து வளாகங்களின் ஆய்வுகளையும் ஆய்வு செய்ய FSSAI அறிவுறுத்துகிறது. இது டிஜிட்டல் மற்றும் இணையவழியில் இருப்பிடம் இணைக்கப்பட்ட அடிப்படையிலான ஆய்வு.

விவரம்	2022-2023
நடத்தப்பட்ட ஆய்வுகளின் எண்ணிக்கை	76,635

9.9 கடவுளுக்கு சுகாதாரம் மற்றும் சுத்தமான பிரசாதம் படைத்தல் (Blissful Hygienic Offering to God) (BHOG): FSSAI-ன் BHOG திட்டத்தின்மூலம் வழிபாட்டுத் தலங்களில் (Place of Worship) உணவுப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தைப் பின்பற்றுவதற்கும், பராமரிப்பதற்கும் ஊக்குவிக்கிறது. அதே நேரத்தில் பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமாகத் தயாரிக்கப்பட்ட பிரசாதம் வழங்குவதை உறுதிபடுத்துகிறது. இத்திட்டத்தின் வாயிலாக தமிழ்நாட்டில் உள்ள அனைவருக்கும் பாதுகாப்பான உணவு கிடைக்க வேண்டும் என்னும் நோக்கத்தினை உணவு பாதுகாப்புத் துறை ஊக்குவிக்கிறது. இதன் தொடர்ச்சியாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வழிபாட்டுத் தலங்களிலும் இத்திட்டம் செயல்முறைப்படுத்தப்பட்டுள்ளது.

விவரம்	2022-2023
BHOG திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை	153

9.10 சுகாதார மதிப்பீடு (Hygiene Rating): FSSAI-ன் வழிகாட்டுதலின்படி, உணவு விடுதி, உணவகங்கள், தங்கும் விடுதிகள், இறைச்சிக் கடைகள் மற்றும் இனிப்பகங்கள் ஆகியவற்றுக்கு "சுகாதார மதிப்பீடு" திட்டத்தின்கீழ் சான்றிதழ் அளிக்கப்பட்டு வருகிறது.

விவரம்	2022-2023
அளிக்கப்பட்ட சுகாதார மதிப்பீடு சான்றிதழ்கள்	1,675

[2023 ஏப்ரல் 18

9.11 சுத்தமான தெரு உணவு மையம் (Clean Street Food Hub): ஈட் ரைட் சேலஞ்சிங்-ல் (Eat Right Challenging), ஈட் ரைட் இந்தியா (Eat Right India) செயல்பாட்டின் திட்டங்களில் ஒன்று சுத்தமான தெரு உணவு மையம். இது தெரு உணவு விற்பனையாளர் சுகாதாரத்தை உள்ளடக்கியது மற்றும் தெரு உணவு விற்பனையாளர்களை மேம்படுத்த தனியார் நிறுவனங்கள் ஏற்றுக்கொள்வதற்கான பயிற்சி மற்றும் அறிவுறுத்தலுக்காக, தெரு ஓர உணவு வியாபாரிகளுக்குப் பயிற்சி வழங்கப்பட்டு, தெரு உணவு மையத்திற்கு இந்தத் திட்டத்தின்கீழ் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

விவரம்	2022-2023
சுத்தமான தெரு உணவு மையத்திற்கு அளிக்கப்பட்ட சான்றிதழ்கள்	34

9.12 சுத்தமான பழம் மற்றும் காய்கறிகள் விற்பனை வளாகம் (Clean Fruit and Vegetable Market): நுகர்வோருக்கு சுத்தமான பழங்கள் மற்றும் காய்கறிகள் கிடைப்பதை உறுதி செய்வதற்காக, தேவையான கட்டட வசதிகள் மற்றும் அடிப்படை சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு வசதிகளுடன் செயல்பட்டு, சுத்தமான பழங்கள் மற்றும் காய்கறிகள் விற்பனை செய்யும் வளாகத்திற்கு "Clean Fruit and Vegetable Market" என்னும் சான்று உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தால் வழங்கப்படுகிறது. மொத்த விற்பனை நிலையங்களுக்கு இச்சான்றிதழ் வழங்கப்படுவதில்லை.

விவரம்	2022-2023
சுத்தமான பழம் மற்றும் காய்கறிகள் விற்பனை வளாகத்திற்கு அளிக்கப்பட்ட சான்றிதழ்கள்	51

9.13 உண்ணத் தகுந்த வளாகம் (EAT RIGHT CAMPUS): பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், மருத்துவமனைகள், பணிபுரியும் இடங்கள், தேயிலைத் தோட்டங்கள் ஆகிய வளாகங்களில் ஆரோக்கியமான, பாதுகாப்பான மற்றும் தரமான உணவு தொடர்ந்து வழங்குவதை ஊக்குவிக்கும்பொருட்டு இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தால் உண்ணத் தகுந்த வளாகம் (Eat Right Campus) என்னும் சான்று வழங்கப்படுகிறது.

2023 ஏப்ரல் 18]

விவரம்	2022-2023
உண்ணத் தகுந்த வளாகத்திற்கு அளிக்கப்பட்ட சான்றிதழ்கள்	*351*

9.14 சமையல் எண்ணெய் மறுபயன்பாடு (Re-purpose Used Cooking Oil): *ஈட் ரைட் இந்தியா* (Eat Right India) *திட்டத்தில்* FSSAI (Food Safety and Standards Authority of India) *முன்முயற்சிகளில்* RUCO *திட்டம் ஒரு முக்கியமான ஒன்றாகும். இத்திட்டம் தமிழ்நாட்டில் 2019 ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டுள்ளது. சமையலுக்கு பயன்படுத்தப்பட்ட எண்ணெயை மீண்டும் பயன்படுத்துவதனால் உணவுப் பொருளில் அதிகரிக்கும் கொழுப்பு சத்தினைத் தவிர்ப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் ஆகும். இந்தத் திட்டத்தில் பயோடீசல் மாற்றத்திற்காக* FSSAI-*ல் பதிவு செய்யப்பட்ட தனியார் நிறுவனங்கள் மூலமாக பயன்படுத்தப்பட்ட சமையல் எண்ணெய் உரிய தொகையினை (ஒரு லிட்டருக்கு ரூ.25-45) உணவு வணிகர்களுக்குச் செலுத்தி, பயன்படுத்தப்பட்ட சமையல் எண்ணெயை சேகரிக்கின்றனர்.*

விவரம்	2022-2023
சேகரிக்கப்பட்ட சமையல் எண்ணெய் மறுபயன்பாடு	*3101 கிலோ லிட்டர்கள்*

9.15 உபரி உணவை வீணாக்காமல் பயன்படுத்துவோம் (Save Food and Share Food): *தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை ஊக்குவித்து, திருமணம் மற்றும் இதர விழாக்களில், அதிகப்படியான உணவு வீணாவதைத் தவிர்க்கும் விதமாக, அந்த உணவைச் சேகரித்து, உணவை நாடுகின்ற எளியோருக்குச் சேர்க்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.*

விவரம்	2022-2023
உபரி உணவுகள் பெறப்பட்டு எளியோருக்கு வழங்கப்பட்ட நிகழ்வுகள்	*43,482*

9.16 நடமாடும் உணவு பகுப்பாய்வுக் கூடம்: *கோயம்புத்தூர், சேலம், தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் நடமாடும் உணவு பகுப்பாய்வுக் கூடத்திற்கு* (Food Safety on

Wheels) தேவையான நான்கு வாகனங்கள் ரூ.168 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கப்பட்டு, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களால் கடந்த 12.1.2023-ல் துவக்கி வைக்கப்பட்டது. இந்த நடமாடும் உணவு பகுப்பாய்வுக் கூடங்கள் முன் பயண திட்டத்தின் அடிப்படையில் மாவட்டங்களுக்குச் சென்று பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, உணவுப் பொருட்களில் உள்ள கலப்படத்தையும் கண்டறிந்து வருகிறது.

விவரம்	2022-2023
நடத்தப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கை	11,321
தரம் குறைவான உணவு மாதிரிகளின் எண்ணிக்கை	1,271
நடத்தப்பட்ட விழிப்புணர்வு முகாம்களின் எண்ணிக்கை	429
நடத்தப்பட்ட பயிற்சி வகுப்புகளின் எண்ணிக்கை	155

9.17 நெகிழி பைகளில் சூடான உணவுப் பொருட்களை விற்கும் நடைமுறைக்கு எதிராக விழிப்புணர்வு ஏற்படுத்துதல்: சூடான உணவு பொருட்களை நெகிழி பைகளில் பொட்டலமிட்டு விற்பனை செய்வது சட்டப்படி குற்றமாகும். அவ்வாறு நெகிழி பைகளில் உணவுப் பொருட்களைப் பொட்டலமிடும்போது அப்பைகளில் உள்ள நுண்துகள்கள் உணவில் கலந்து உணவின் தரத்தை முற்றிலும் மாற்றி விடுகிறது. மேலும், இதனால் புற்றுநோய் ஏற்படும் அபாயமும் அதிகரிக்கிறது. இது தொடர்பாக உணவகங்களுக்கும், தேநீர் கடைகளுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதோடு, பொதுமக்களுக்குத் தங்கள் இல்லங்களிலிருந்து பாத்திரம் எடுத்து செல்லும் வழக்கத்தை ஊக்குவிப்பதோடு, விழிப்புணர்வையும் ஏற்படுத்த வேண்டும். இந்தச் செயலில் தொடர்ந்து ஈடுபடும் உணவகங்கள்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நடத்தப்பட்ட விழிப்புணர்வு முகாம்களின் எண்ணிக்கை	ஆய்வு செய்யப்பட்ட கடைகளின் எண்ணிக்கை	உணவுப் பொருட்களைப் பிளாஸ்டிக் பைகளில் பொட்டலமிட்டு விற்பனை செய்த கடைகளின் எண்ணிக்கை	விதிக்கப்பட்ட அபராத தொகை 2022-2023 (ரூபாயில்)
1,022	1,42,682	4,064	78.41 இலட்சம்

2023 ஏப்ரல் 18]

9.18 உணவுப் பொருட்களின் பாக்கெட்டுகளில் உள்ள முகப்பு சீட்டில் (Label) உள்ள விவரங்கள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்: *உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டத்தின்படி உணவுப் பொருட்கள் முறையாகப் பொட்டலமிடப்பட்டு அதன் முகப்புச் சீட்டின்மீது* (Labelling) *உணவுப் பொருளில் அடங்கியுள்ள ஊட்டச்சத்துக்களின் விவரம் சைவம் அல்லது அசைவம் போன்ற விவரம், அந்தப் பொருள் தயாரிக்கப்படும் இடத்தின் பெயர், உற்பத்தி மற்றும் காலாவதியாகும் நாள் விவரம், உற்பத்தி செய்த நாளிலிருந்து பயன்படுத்தப்பட வேண்டிய கால அளவு போன்ற முழுமையான விவரம் பொதுமக்களின் நன்மைக்கு அச்சிடப்படுகிறது. இது குறித்து பொதுமக்களிடம் போதிய விழிப்புணர்வு இல்லை. இந்த உணவுப் பொட்டலங்களின் முகப்புச் சீட்டில் உள்ள முழுமையான விவரங்களைப் பொதுமக்கள் அறிந்து பயன்பெற ஏதுவாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.*

நடத்தப்பட்ட விழிப்புணர்வு முகாம்களின் எண்ணிக்கை	ஆய்வு செய்யப்பட்ட கடைகளின் எண்ணிக்கை	லேபிள் குறைபாடுகள் கண்டறியப்பட்ட கடைகளின் எண்ணிக்கை	விதிக்கப்பட்ட அபராத தொகை (ரூபாயில்)
956	*1,36,702*	*3,124*	*88.87 இலட்சம்*

9.19 வேளாண் துறையினருடன் இணைந்து ஆர்கானிக் உணவுப் பொருட்களினுடைய உற்பத்தி முறைகள், பரிசோதனை முறைகள் மற்றும் விற்பனை குறித்து உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்: “Organic” *உணவு என்ற பெயரில் உரிய வழிமுறைகளைப் பின்பற்றாமல் அதிக விலையில் பொருட்கள் விற்கப்படுகின்றன. எனவே, வேளாண் துறையினருடன் இணைந்து ஆர்கானிக் உணவுப் பொருட்களினுடைய உற்பத்தி முறைகள், பரிசோதனை முறைகள் மற்றும் விற்பனை குறித்து உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.*

நடத்தப்பட்ட விழிப்புணர்வு முகாம்களின் எண்ணிக்கை	ஆய்வு செய்யப்பட்ட கடைகளின் எண்ணிக்கை	இயற்கை உணவுகளுக்கான லேபிள் குறைபாடுகளுடன் விற்பனை செய்த கடைகளின் எண்ணிக்கை	பறிமுதல் செய்யப்பட்ட உணவுப் பொருட்களின் அளவு (கிலோ கிராமில்)
373	13,368	74	174.55

9.20 உணவு செறிவூட்டல் (Food Fortification):

ஈட் ரைட் இந்தியா திட்டங்களில் ஒன்று உணவு செறிவூட்டல் ஆகும். இது ஊட்டச்சத்து குறைபாட்டை நீக்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட திட்டம் ஆகும். அன்றாடம் பயன்படுத்தப்படும் உணவுப் பொருட்களான பால், உப்பு, அரிசி, எண்ணெய், மாவு ஆகியவற்றில் ஊட்டச்சத்து மற்றும் தாது உப்புகளை சேர்ப்பதன்மூலம் உணவு செறிவூட்டல் செய்யப்படுகிறது. இத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் ஊட்டச்சத்து வளர்ச்சி மையம் (Integrated Child Development Scheme), மதிய உணவுத் திட்டம் (Noon Meal Programme), தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் (Tamil Nadu Civil Supplies Corporation) மற்றும் பொது விநியோகத் திட்டம் (Public Distribution System) ஆகியவற்றிற்கு உணவு செறிவூட்டல் குறித்த தொழில்நுட்ப உதவிகளை வழங்கி வருகிறது. உணவு செறிவூட்டல் செய்வது குறித்த பயிற்சிப் பட்டறை வகுப்புகள் தொடர்புடைய துறைகளுக்கும், உணவுப் பொருள் உற்பத்தி செய்பவர்களுக்கும் இத்துறையால் வழங்கப்பட்டு வருகிறது.

விவரம்	பயிற்சி வகுப்புகளின் எண்ணிக்கை	பயனாளர்களின் எண்ணிக்கை
துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்புக் கூட்டம்	5	112
உணவு வணிகர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சி வகுப்புகள்	27	1,618

2023 ஏப்ரல் 18]

விவரம்	பயிற்சி வகுப்புகளின் எண்ணிக்கை	பயனாளர்களின் எண்ணிக்கை
முன்களப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சி வகுப்புகள் (நியமன அலுவலர், உணவு பாதுகாப்பு அலுவலர், அங்கன்வாடி பணியாளர், சத்துணவுப் பணியாளர்)	*15*	*1,305*

9.21 விருதுகள்: *2021-2022 ஆண்டிற்கான உணவு பாதுகாப்புக் குறியீட்டில்* (Food Safety Index) *சிறப்பாகச் செயல்பட்டதற்காக தமிழ்நாடு முதல் மாநிலமாக அறிவிக்கப்பட்டு, விருது வழங்கப்பட்டது. உணவு பாதுகாப்பு தர நிர்ணய ஆணையம், மாநில உணவு பாதுகாப்பு குறியீட்டின்மூலம்* (State Food Safety Index) *மாநில உணவு பாதுகாப்பு துறையின் பல்வேறு செயல்பாடுகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்து, மதிப்பெண்கள் வழங்கப்படுகிறது.*

II. மருந்துகள் கட்டுப்பாடு நிருவாகம்:

9.22 *மருந்துகள் கட்டுப்பாடு நிருவாக இயக்குநரகம், மருந்துகள் கட்டுப்பாடு இயக்குநரைத் தலைவராகக் கொண்டு, தமிழ்நாடு உணவு பாதுகாப்பு மற்றும் மருந்துகள் கட்டுப்பாடு நிருவாகத் துறையின்கீழ் செயல்பட்டு வருகிறது. மருந்துகள் கட்டுப்பாடு இயக்குநர், அலோபதி மருந்துகள், மருத்துவச் சாதனங்கள்* (வகை A *மற்றும்* வகை B), *ஹோமியோபதி மருந்துகள் மற்றும் அழகு சாதனப் பொருட்களுக்கு உற்பத்தி உரிமம் வழங்கும் அதிகாரியாகவும் மற்றும் கட்டுப்படுத்தும் அதிகாரியாகவும் செயல்படுகிறார். அலோபதி மருந்துகளுக்கான தயாரிப்பு உரிமங்கள், ஒன்றிய மற்றும் மாநில முதுநிலை மருந்துகள் ஆய்வாளர்கள்/ மருந்துகள் ஆய்வாளர்களின் கூட்டாய்விற்குப் பிறகு மருந்துகள் கட்டுப்பாடு இயக்குநர்மூலம் வழங்கப்படுகிறது.* Vaccine *மற்றும்* Large Volume Parenterals *போன்ற சில சிறப்பு வகை மருந்துகளுக்கான தயாரிப்பு உரிமங்கள் ஒன்றிய மற்றும் மாநில முதுநிலை மருந்துகள் ஆய்வாளர்கள்/மருந்துகள் ஆய்வாளர்களின் கூட்டாய்விற்குப் பிறகு, ஒன்றிய உரிமம் ஒப்புதல் வழங்கும்*

அதிகாரியின் (புதுடெல்லி) ஒப்புதலுடன் மருந்துகள் கட்டுப்பாடு இயக்குநர்மூலம் வழங்கப்படுகிறது.

9.23 மருத்துவ சாதனங்கள் (வகை A மற்றும் வகை B)-ன் தயாரிப்பு உரிமங்கள் மருந்துகள் கட்டுப்பாடு இயக்குநர்மூலம் வழங்கப்படுகிறது. இரத்த நிலையங்களுக்கான புதிய உரிமம் மற்றும் புதுப்பித்தல் ஆகியவை ஒன்றிய மற்றும் மாநில முதுநிலை மருந்துகள் ஆய்வாளர்கள்/மருந்துகள் ஆய்வாளர்களின் கூட்டாய்விற்குப் பிறகு, ஒன்றிய உரிமம் ஒப்புதல் வழங்கும் அதிகாரியின் (புதுடெல்லி) ஒப்புதலுடன் மருந்துகள் கட்டுப்பாடு இயக்குநர்மூலம் வழங்கப்படுகிறது. மருந்துகள் மற்றும் மருத்துவச் சாதனங்களின் விற்பனை மற்றும் தயாரிப்பு உரிமங்கள், தமிழ்நாடு ஒற்றை சாளரதளம் (TNSWP) மற்றும் ஒன்றிய மருந்துகள் தரக் கட்டுப்பாடு அமைப்பு (CDSCO) ஆகிய இணையதளங்களின் வாயிலாக வழங்கப்படுகின்றன. இந்த இயக்குநரகத்தின்கீழ் 24 மண்டலங்கள் உதவி மருந்துகள் கட்டுப்பாடு இயக்குநர்களின் தலைமையில் செயல்படுகின்றன. அவர்கள் அலோபதி மற்றும் ஹோமியோபதி மருந்துகளுக்கான விற்பனை உரிமம் வழங்கும் அதிகாரிகளாகச் செயல்படுகின்றனர்.


9.24 மாநிலத்தின் வட மற்றும் தென் பகுதி மக்களிடமிருந்து பெறப்படும் புகார்களை விசாரணை செய்யவும், திடீர் சோதனைகள் மற்றும் சிறப்பு புலனாய்வுகள் மேற்கொள்ளவும் முறையே இயக்குநரின் அலுவலகத்தில் புலனாய்வுப் பிரிவும், மதுரையில் நடமாடும் ஆய்வுக் குழுவும் செயல்படுகின்றன. மாநிலத்தின் வட மாவட்டங்களிலிருந்து, முதுநிலை மருந்துகள் ஆய்வாளர்கள்/மருந்துகள் ஆய்வாளர்களால் எடுக்கப்படும் மருந்து மாதிரிகளை பகுப்பாய்வு செய்வதற்கு சென்னையில் ஒரு மருந்துகள் ஆய்வுக்கூடம் செயல்படுகின்றது. உலகத்தரம் வாய்ந்த மருந்துகள் ஆய்வுக்கூடம் மதுரையில் ரூபாய் இருபது கோடி செலவில் மாண்புமிகு முதலமைச்சரால் திறந்து வைக்கப்பட்டு, மாநிலத்தின் தென் மாவட்டங்களிலிருந்து, முதுநிலை மருந்துகள் ஆய்வாளர்கள்/மருந்துகள் ஆய்வாளர்களால் எடுக்கப்படும் மருந்து மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்ய செயல்பட்டு வருகின்றது.

9.25 மருந்துகள் கட்டுப்பாடு இயக்குநரகம் பின்வரும் சட்டங்களின்படி மருந்துகள், அழகு சாதனப் பொருட்கள் மற்றும் மருத்துவச் சாதனங்களின் தயாரிப்பு, விநியோகம் மற்றும் விற்பனையைக் கட்டுப்படுத்துகிறது.

2023 ஏப்ரல் 18]

1. *மருந்துகள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் சட்டம், 1940.*
2. *மருந்துகள் விதிகள், 1945.*
3. *மருந்துகள் மற்றும் மாயாஜால தீர்வுகள் (ஆட்சேபனைக்குரிய விளம்பரங்கள்) சட்டம், 1954.*
4. *மருந்துகள் மற்றும் மாயாஜால தீர்வுகள் விதிகள், 1955.*
5. *போதை மருந்துகள் மற்றும் மனநிலையைப் பாதிக்கும் பொருட்கள் சட்டம், 1985 மற்றும் விதிகள், 1985.*
6. *மருந்துகள் (விலை கட்டுப்பாடு) ஆணை, 2013.*
7. *மருத்துவச் சாதனங்கள் விதிகள், 2017.*
8. *புதிய மருந்துகள் மற்றும் மருத்துவ பரிசோதனை விதிகள், 2019.*
9. *அழகு சாதனப் பொருட்கள் விதிகள், 2020.*

9.26 நிருவாக அமைப்பு



9.27 கண்காணிப்புப் பணிகள்: மருந்துகள் கட்டுப்பாடு துறை, மருந்துகளின் தரம், பாதுகாப்பு, செயல்திறன், முறையான பயன்பாடு, கட்டுப்படுத்தப்பட்ட விலைகளில் மருந்துகள் கிடைத்தல், தவறாக வழிநடத்தும் மருந்துகள் குறித்த விளம்பரங்களை ஆய்வு செய்து பொது மக்களைப் பாதுகாத்தல் மற்றும் பாதுகாப்பான இரத்தம் மற்றும் இரத்தத்தின் உட்பொருட்கள் சேகரித்தல் மற்றும் விநியோகித்தல் போன்ற நடவடிக்கைகளைக் கண்காணிக்கிறது.

பணியாளர் விவரம்:

அமலாக்கப் பிரிவு

வ. எண்	பதவியின் பெயர்	பதவிகளின் எண்ணிக்கை
1.	மருந்துகள் கட்டுப்பாடு இயக்குநர்	1
2.	மருந்துகள் கட்டுப்பாடு இணை இயக்குநர்	2
3.	மருந்துகள் கட்டுப்பாடு துணை இயக்குநர்	2
4.	மருந்துகள் கட்டுப்பாடு உதவி இயக்குநர்	25
5.	மருந்துகள் கட்டுப்பாடு உதவி இயக்குநர் (நிருவாகம்)	1
6.	முதுநிலை மருந்துகள் ஆய்வாளர்	15
7.	மருந்துகள் ஆய்வாளர்	146
8.	சட்ட ஆலோசகர்	1
9.	உதவிக் கணக்கு அலுவலர்	1
10.	அலுவலகக் கண்காணிப்பாளர்	16
11.	உதவியாளர்	39
12.	சுருக்கெழுத்துத் தட்டச்சர் நிலை I	1
13.	சுருக்கெழுத்துத் தட்டச்சர் நிலை III	2
14.	இளநிலை உதவியாளர்	47
15.	தட்டச்சர்	15
16.	பதிவறை எழுத்தர்	3

2023 ஏப்ரல் 18]

வ. எண்	பதவியின் பெயர்	பதவிகளின் எண்ணிக்கை
17.	அலுவலக உதவியாளர்	79
18.	ஓட்டுநர்	4
19.	தொலைபேசி இயக்குபவர்	1
	மொத்தம்	401

மருந்துகள் ஆய்வுக்கூடங்கள்

வ. எண்	பதவியின் பெயர்	பதவிகளின் எண்ணிக்கை
1.	அரசு பகுப்பாய்வாளர்	2
2.	அரசு துணைப் பகுப்பாய்வாளர்	3
3.	முதுநிலைப் பகுப்பாய்வாளர்	20
4.	இளநிலைப் பகுப்பாய்வாளர்	44
5.	இளநிலை நிருவாக அலுவலர்	1
6.	தொழில்நுட்பப் பணியாளர் நிலை-1	6
7.	தொழில்நுட்பப் பணியாளர் நிலை-2	4
8.	மின்பணியாளர் நிலை-1	1
9.	குழாய் பொருத்துபவர்	1
10.	ஆய்வகப் பணியாளர்	7
11.	விலங்கியல் பணியாளர்	1
12.	அலுவலகக் கண்காணிப்பாளர்	2
13.	உதவியாளர்	5
14.	இளநிலை உதவியாளர்	4
15.	பண்டகக் காப்பாளர்	1

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 18

வ. எண்	பதவியின் பெயர்	பதவிகளின் எண்ணிக்கை
16.	தட்டச்சர்	2
17.	அலுவலக உதவியாளர்	5
18.	துப்புரவாளர்	1
19.	இரவுக் காவலர் மற்றும் துப்புரவாளர்	1
	மொத்தம்	111

9.28 மாநிலத்தில் உள்ள உரிமங்களின் விவரம்:

I) *மருந்து உற்பத்தி உரிமங்களின் மொத்த எண்ணிக்கை மார்ச், 2023 வரை:*

ஆங்கில வழி மருந்து உரிமம்	ஆங்கில வழி மருந்து லோன் (Loan) உரிமம்	ஹோமியோபதி மருந்து உரிமம்	அழகு சாதனப் பொருட்கள் உரிமம்	அழகு சாதனப் பொருட்கள் லோன் (Loan) உரிமம்
761 (மருந்துகள் – 658, மருத்துவச் சாதனங்கள் – 103)	134	9	226	10

II) *இரத்த நிலைய உரிமங்களின் மொத்த எண்ணிக்கை மார்ச், 2023 வரை:*

மாநில அரசின் இரத்த நிலையங்கள்	96
ஒன்றிய அரசின் இரத்த நிலையங்கள், இ.எஸ்.ஐ. இரத்த நிலையங்கள், இராணுவ மருத்துவமனை இரத்த நிலையங்கள் உள்பட	10
தனியார் இரத்த நிலையங்கள்	229
தொப்புள்கொடி குருதி குறுத்தணுக்கள் வங்கிகள்	03

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

2023 ஏப்ரல் 18]

III) *இரத்த சேமிப்பு நிலைய அனுமதிகளின் மொத்த எண்ணிக்கை மார்ச், 2023 வரை:*

அரசின் இரத்த சேமிப்பு நிலையங்கள்	381
தனியார் இரத்த சேமிப்பு நிலையங்கள்	149

IV) *விற்பனை உரிமங்களின் மொத்த எண்ணிக்கை மார்ச், 2023 வரை:*

சில்லறை விற்பனை உரிமங்களின் எண்ணிக்கை	35,511
மொத்த விற்பனையுடன்கூடிய சில்லறை விற்பனை உரிமங்களின் எண்ணிக்கை	3,473
மொத்த விற்பனை உரிமங்களின் எண்ணிக்கை	10,213
கட்டுப்படுத்தப்பட்ட விற்பனை உரிமங்களின் எண்ணிக்கை	447
ஹோமியோபதி மருந்து உரிமங்களின் எண்ணிக்கை	366

V) *மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் மொத்த எண்ணிக்கை மார்ச், 2023 வரை:*

1	விற்பனை நிறுவனங்களில் ஆய்வுகளின் எண்ணிக்கை	77,120
2	உற்பத்தி நிறுவனங்களில் ஆய்வுகளின் எண்ணிக்கை	1,540
3	மருத்துவமனை மற்றும் மருந்து கிடங்குகளில் ஆய்வுகளின் எண்ணிக்கை	3,001
4	இரத்த வங்கி மற்றும் இரத்த சேமிப்பு நிலையங்களில் ஆய்வுகளின் எண்ணிக்கை	937
	ஆய்வுகளின் மொத்த எண்ணிக்கை	82,598

VI) வழங்கப்பட்ட உரிமங்களின் மொத்த எண்ணிக்கை மார்ச், 2023 வரை:

1	வழங்கப்பட்ட உற்பத்தி உரிமங்களின் எண்ணிக்கை (மருந்துகள், ஹோமியோபதி மருந்துகள், அழகு சாதன பொருட்கள் மற்றும் மருத்துவச் சாதனங்கள்)	78
2	வழங்கப்பட்ட உற்பத்தி லோன் உரிமங்களின் எண்ணிக்கை (மருந்துகள் மற்றும் மருத்துவச் சாதனங்கள்)	8
3	வழங்கப்பட்ட விற்பனை உரிமங்களின் எண்ணிக்கை	8,860
4	வழங்கப்பட்ட இரத்த நிலைய உரிமங்களின் எண்ணிக்கை	17
5	வழங்கப்பட்ட இரத்த சேமிப்பு நிலைய அனுமதிகளின் எண்ணிக்கை	39
6	அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ நிறுவன அனுமதிகளின் எண்ணிக்கை	3
7	பகுப்பாய்வு ஆய்வக அனுமதிகளின் எண்ணிக்கை	1

VII) பகுப்பாய்வுக்காக எடுக்கப்பட்ட மாதிரிகள் மற்றும் பகுப்பாய்வு செய்யப்பட்ட விவரம் மார்ச், 2023 வரை:

எடுக்கப்பட்ட மாதிரிகளின் மொத்த எண்ணிக்கை	13,049
பகுப்பாய்வு செய்யப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை	12,420
தரமற்றதாக அறிவிக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை	226
கண்டறியப்பட்ட போலி மருந்துகளின் எண்ணிக்கை	4

VIII) மருந்து மற்றும் அழகு சாதனப் பொருட்கள் சட்டம், 1940 மற்றும் அது சார்ந்த சட்டங்களின்கீழ் நடைபெற்ற விதிமீறல்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரம் மார்ச், 2023 வரை:

மருந்து விற்பனை நிறுவனங்களின்மீது துவங்கப்பட்ட சட்ட நடவடிக்கைகளின் எண்ணிக்கை	516

2023 ஏப்ரல் 18]

இரத்து செய்யப்பட்ட மருந்துகள் விற்பனை உரிமங்களின் எண்ணிக்கை	14
தற்காலிகமாக முடக்கம் செய்யப்பட்ட மருந்துகள் விற்பனை உரிமங்களின் எண்ணிக்கை	56
மருந்து விற்பனை நிறுவனங்களின்மீது பதிவு செய்யப்பட்ட குற்றவியல் வழக்குகளின் எண்ணிக்கை	340
தரமற்ற மருந்துகள் தயாரித்த நிறுவனங்களின்மீது தொடரப்பட்ட குற்றவியல் வழக்குகளின் எண்ணிக்கை	109
தரமற்ற மருந்துகளின் தயாரிப்புக்காக தற்காலிகமாக முடக்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கை	40
தரமற்ற மருந்துகளின் தயாரிப்புக்காக இரத்து செய்யப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கை	5

அத்தியாயம் — 10

தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்து

10.1 தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்துத் துறையானது, மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறையில் உள்ள வாகனங்களைப் பிரத்தியேகமாகப் பராமரிப்பதற்காக 1981 ஆம் ஆண்டு தனி இயக்குநரகமாக நிறுவப்பட்டது. இத்துறையானது சுகாதாரத் துறை வாகனங்களின் தங்கு தடையற்ற இயக்கத்தை உறுதி செய்வதன்மூலம் சுகாதாரத் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதன் பின்னணியில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

10.2 தொலைநோக்குப் பார்வை மற்றும் குறிக்கோள்:

10.2.1 தொலைநோக்குப் பார்வை: அனைத்து விதத்திலும் ஒரு ‘முன்மாதிரி துறை’யாகச் செயல்பட்டு அனைத்து சுகாதாரத் துறை ஊர்திகளும் ஓடும் நிலையில் இருப்பதை உறுதி செய்வது.

10.2.2 குறிக்கோள்: மருத்துவம்–மக்கள் நல்வாழ்வுத் துறையைச் சார்ந்த வாகனங்கள் அனைத்தையும் நேர்த்தியாகவும், சிக்கனமாகவும் பராமரிப்பதுடன், ஒரு சிறப்பான குறைகளைவு திட்டத்தையும் செயல்படுத்துதல், வாகன பழுது நீக்கம், பராமரிப்பு, இயக்கம் மற்றும் கழித்தொதுக்கம் தொடர்பாக வாகன உபயோகிப்பாளர்கள் எதிர்கொள்ளும் அனைத்து

பிரச்சினைகளையும் ஒரே இடத்தில் இத்துறையின்மூலம் தீர்வு காண்பதற்கு வழிவகை செய்தல்.

10.3 நோக்கங்கள் மற்றும் முக்கியச் செயல்பாடுகள்:

i) துறையின் ஆதாரங்களை விவேகமாகப் பயன்படுத்தி பராமரிப்புத் தொகுப்பில் உள்ள வாகனங்களை செம்மையாகப் பராமரிப்பதுடன், ஊர்திகளுக்குத் தேவையான அனைத்து பழுது நிவர்த்தி பணிகளை மேற்கொண்டு குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் விடுவித்தல்.

ii) மருத்துவம்-மக்கள் நல்வாழ்வுத் துறையைச் சார்ந்த இயக்குநரகங்கள் புதிய வாகனங்களைக் கொள்முதல் செய்யும்போது சரியான வகை ஊர்தியினைத் தேர்ந்தெடுப்பதற்கும், சிக்கனமற்ற, தேய்மானமடைந்த வாகனங்களைக் கண்டறிந்து, அந்த வாகனங்களை மாற்றுவதற்கும் தொழில்முறை உதவிகளை வழங்குதல்.

iii) சிறப்பு தேவைகளுக்கேற்ப வாகனங்களில் உள்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளும்போது சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குதல்.

iv) இத்துறையால் பராமரிக்கப்படும் வாகனங்கள் தொடர்பான தரவுகளின் தகவல் களஞ்சியமாக செயல்படுதல்.

v) மருத்துவம்-மக்கள் நல்வாழ்வுத் துறையைச் சார்ந்த ஊர்திகள், 108 அவசரச் சேவை ஊர்திகள் மற்றும் இலவச அமரர் ஊர்திகள் ஆகியவற்றில் கழித்தொதுக்கம் செய்யப்பட்ட வாகனங்களை மின்னணு ஏல முறையில் காலதாமதமின்றி தீர்வு செய்தல்.

10.4 துறை சார்ந்த பணிமனைகள்: சென்னை, சேலம், வேலூர், திருச்சி, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய ஏழு இடங்களில் மண்டல பணிமனைகளும், செங்கல்பட்டு, தருமபுரி, விழுப்புரம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, ஈரோடு, உதகமண்டலம், விருதுநகர் மற்றும் நாகர்கோவில் ஆகிய ஒன்பது இடங்களில் மாவட்ட பணிமனைகளும் மற்றும் ஒரு மறுசீரமைப்பு நிலையம் சென்னையிலும் இத்துறை நிர்வாகத்தின்கீழ் இயங்கி

2023 ஏப்ரல் 18]

வருகின்றன. இதனைத் தவிர்த்து, மாநிலம் முழுவதும் அமையப் பெற்றுள்ள இருபத்தொன்பது நடமாடும் பணிமனைகள் மூலமாக முகாம்கள் மேற்கொண்டு வாகனம் உபயோகிக்கும் அலுவலர்களின் இருப்பிடத்திற்கே சென்று காலமுறைப் பருவப் பணிகள் மேற்கொள்வதுடன், சிறு பழுதுகளும் நிவர்த்தி செய்யப்படுகின்றன.

10.5 வழங்கப்படும் சேவைகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட கால அளவுகள்:

i. உருளிப்பட்டைகள், காற்றடைப்பான்கள், மின்கலன்கள் மற்றும் மசக்கெண்ணெய் புதுப்பித்தல் – உடனடியாக.

ii. வாகன பராமரிப்பு, வாகன பதிவேடுகள், மோட்டார் வாகன சட்டம், வாகன பொறுப்புறுதி உரிமை கோருதல், பாதுகாப்பான வாகன இயக்கம், பழுது நீக்கம் மற்றும் கொள்முதல் விதிமுறைகள், கழிவு/ கழித்தொதுக்கம் செய்யப்பட்ட மற்றும் ஓடும் நிலையில் உள்ள ஊர்திகளின் புள்ளியியல் விவரங்கள் தொடர்பாக துறையின் குறைகளைவு திட்டம்மூலம் கோரப்படும் தகவல்கள் – உடனடியாக.

iii. காலமுறை பருவப் பணிகள், பழுதான வாகனங்களை மீட்டுத் தருதல், நிலைகுலைவு ஊர்திகளின் பழுதுகளை நிவர்த்தி செய்தல் – அன்றைய தினமே.

iv. குறை தீர்க்கும் திட்டத்தின்மூலம் பெறப்படும் வாகன பராமரிப்புத் தொடர்பான புகார்களை உரிய பழுது நிவர்த்தி செய்து தீர்வு அளித்தல் – ஐந்து நாட்கள்.

v. பெரும் பழுது நீக்கம் உள்ளிட்ட அனைத்து வகை பணிகளுக்காகவும் அனுமதிக்கப்படும் நடமாடும் மருத்துவமனை ஊர்திகள், தடுப்பூசி மற்றும் நோய்த் தடுப்பு மருந்துகளை எடுத்து செல்லும் வாகனங்கள் மற்றும் ஏனைய முக்கிய திட்ட வாகனங்களைப் பழுது நிவர்த்தி செய்து விடுவிக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள அதிகபட்ச கால அளவு – 20 நாட்கள்.

10.6 கணினிமயமாக்கப்பட்ட செயல்பாடுகள்: அனைத்து பணிமனைகளிலும் மின்னணு அலுவலக (e-office) மென்பொருள் நிறுவப்பட்டுள்ளது. மேலும், இத்துறையின் பணியாளர்களால் இத்துறையின் தேவைக்கேற்ப

வடிவமைக்கப்பட்டுள்ள வாகன விவர மேலாண்மை மென்பொருள், அனைத்து பணிமனைகள், பண்டக சாலைகள் மற்றும் இயக்குநரகத்தின் தொழில்நுட்பப் பிரிவுகளில் நிறுவப்பட்டு துறையின் அனைத்து நடவடிக்கைகளும் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

10.7 கருத்து கேட்பு மற்றும் குறைகளைவு திட்டங்கள்:

- துறை சார்ந்த பணிமனைகளில் பழுதுநிவர்த்தி செய்யப்பட்ட ஒவ்வொரு வாகனத்தின் ஓட்டுநரிடமும் கருத்து கேட்பு திட்டத்தின்மூலம் தொலைபேசியில் தலைமை அலுவலகத்தினால் தொடர்பு கொள்ளப்பட்டு, அவர்களின் ஆக்கப்பூர்வமான கருத்துகள் பெறப்பட்டு, சுட்டிக் காட்டப்படும் குறைபாடுகள் உடனடியாக நிவர்த்தி செய்யப்படுகின்றன.
- ஓட்டுநர்கள் மற்றும் வாகனம் உபயோகிக்கும் அலுவலர்களின் வாகனங்களில் உருளைப்பட்டைகள், மின்கலன்கள் மற்றும் மசக்கெண்ணெய் மாற்றுதல் உள்ளிட்ட வாகனம் தொடர்பான தேவைகளை, துறையின் குறைகளைவு திட்டமான வாகன பராமரிப்பு உதவி மற்றும் தகவல் திட்டத்தின் (HICORP) உதவி எண்ணான 94896 21111-ஐ தொடர்பு கொண்டு பூர்த்தி செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. அனைத்து வாகன உபயோகிப்பாளர்கள் மற்றும் ஓட்டுநர்கள் பயன்பெறும்வகையில் 24X7 மணி நேரமும் இயங்கும் சேவையாக இந்த முன்னோடித் திட்டம் இத்துறையால் செயல்படுத்தப்படுகிறது.
- இத்துறையினால் மேற்கொள்ளப்படும் பணிகளின் தரத்தில் தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கும், வாகனங்களின் அதிகபட்ச பயன்பாட்டிற்கும் இச்சிறப்புத் திட்டங்கள் வழிவகுக்கின்றன.

10.8 வாகன தணிக்கை: வாகனங்களின் செயல்திறன் மற்றும் நம்பகத்தன்மையை மேம்படுத்தவும், ஊர்திகள் அரசு நிர்ணயித்துள்ள விதிமுறைகளுக்கு இணங்குவதை உறுதி செய்யவும், பராமரிக்கப்படும் அனைத்து ஊர்திகளிலும் வாகன தணிக்கை மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு வாகனத்தின்

2023 ஏப்ரல் 18]

விரிவான தணிக்கை அறிக்கையானது, ஊர்தியின் முக்கிய அமைப்புகளின் நிலை, வெளிப்புற/உட்புற புகைப்படங்கள் மற்றும் செயல்திறன் மதிப்பீடு போன்ற விவரங்களை உள்ளடக்கியதாக இருக்கும்.

அத்தியாயம் – 11

மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம்

11.1 *மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையில் உள்ள பல்வேறு பதவிகளுக்கு தகுதியான பணியாளர்களைத் தேர்ந்தெடுக்க மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் 2012 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. தகுதிவாய்ந்த நபர்களைத் தேர்வு செய்வதற்காக, மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தால் செய்தித்தாள்களில் விளம்பரங்கள் செய்யப்பட்டு, இணையவழி வாயிலாக விண்ணப்பங்கள் பெறப்பட்டு, கீழ்க்கண்ட தேர்வு வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன:-*

1. *போட்டித் தேர்வு* (OMR *முறையில்*)
2. *கணினி வழித் தேர்வு* (*இணையவழி முறையில்*)
3. *தகுதி மதிப்பெண்கள் அடிப்படையில் தேர்வு* (*பதவிக்கான கல்வி தகுதியில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில்*)

நடைமுறையில் உள்ள பணி விதிகள் மற்றும் இனசுழற்சி முறையின் அடிப்படையில் தகுதிவாய்ந்தோர் தேர்வு செய்யப்படுகின்றனர்.

11.2 *மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக 31.3.2023 வரையில், 14,543 உதவி மருத்துவர்கள், 13,287 செவிலியர்கள் மற்றும் 8,818 மருத்துவம் சார்ந்த பணியாளர்கள் உள்ளடக்கிய பணிப் பிரிவுகளில் 36,648 பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்:-*

வ. எண்	பதவியின் பெயர்	தேர்வு செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை
1.	*உதவி மருத்துவர் (பொது)*	*10,055*

[2023 ஏப்ரல் 18

வ. எண்	பதவியின் பெயர்	தேர்வு செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை
2.	உதவி மருத்துவர் (சிறப்பு)	2,042
3.	தமிழ்நாடு சிறப்பு பன்னோக்கு மருத்துவமனைக்குத் தேர்வு செய்யப்பட்ட மருத்துவர்கள்	72
4.	உதவி மருத்துவர் (பல்-பொது)	59
5.	உதவி மருத்துவர் (பல்-சிறப்பு)	67
6.	உதவி மருத்துவர் (பொது) (சிறப்பு தகுதி தேர்வு)	1,939
7.	உதவி மருத்துவ அலுவலர் (சித்தா)	213
8.	உதவி மருத்துவ அலுவலர் (ஓமியோபதி)	17
9.	உதவி மருத்துவ அலுவலர் (ஆயுர்வேதா)	6
10.	உதவி மருத்துவ அலுவலர்/ விரிவுரையாளர் தரம் – II (யோகா மற்றும் இயற்கை மருத்துவம்)	73
11.	மருத்துவ இயற்பியலாளர்	34
12.	இயன்முறை சிகிச்சையாளர் தரம் – II	126
13.	செவிலியர்	12,752
14.	செவிலியர் (சிறப்பு பச்சிளம் சிசு பராமரிப்புப் பிரிவு)	508
15.	செவிலியர் (மாற்றுத் திறனாளிகள் மட்டும்)	27
16.	முதுநிலை விரிவுரையாளர் (விழி ஒளி ஆய்வியல்)	2

2023 ஏப்ரல் 18]

வ. எண்	பதவியின் பெயர்	தேர்வு செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை
17.	மருந்தாளுநர்	1,002
18.	மருந்தாளுநர் (சித்தா)	218
19.	மருந்தாளுநர் (ஆயுர்வேதா)	44
20.	மருந்தாளுநர் (ஓமியோபதி)	25
21.	மருந்தாளுநர் (யுனானி)	22
22.	ஆய்வக நுட்புநர் தரம்-II	528
23.	ஆய்வக நுட்புநர் தரம்-III	2,398
24.	நுண்கதிர் வீச்சாளர்	287
25.	நுண்கதிர் சிகிச்சை நுட்புநர்	25
26.	பல் நலவியலாளர்	1
27.	கிராம சுகாதார செவிலியர்	2,560
28.	இதய வரைபட நுட்புநர்	37
29.	நோய் தீர்வியல் உதவியாளர்	162
30.	செயற்கை கைவினைஞர்	62
31.	மின்னணு/காந்தவியல் நுட்புநர் (EEG/EMG)	12
32.	செவித்திறன் ஆய்வாளர்	18
33.	தொழில்முறை சிகிச்சையாளர்	18
34.	இருட்டறை உதவியாளர்	427
35.	மாவுக்கட்டு நுட்புநர் தரம்-II	87
36.	இதயம் மற்றும் நுரையீரல் வெப்பக்குறைப்பு இயந்திர நுட்புநர்	7
37.	மயக்கவியல் நுட்புநர்	77

வ. எண்	பதவியின் பெயர்	தேர்வு செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை
38.	திறன்மிகு உதவியாளர் தரம்-II (பொருத்துநர் தரம்-II)	139
39.	மருத்துவ உதவியாளர்	12
40.	இரத்த சுத்திகரிப்பு நுட்புநர் தரம்-II	160
41.	திறன்மிகு உதவியாளர் தரம்-II (பற்றவைப்பவர் தரம்-II)	3
42.	திறன்மிகு உதவியாளர் தரம்-II (மின்வினைஞர் தரம்-II)	3
43	கள உதவியாளர்	172
44	ஆய்வக நுட்புநர் தரம்-II (உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத் துறை)	19
45	உணவு பாதுகாப்பு அலுவலர்	131
	மொத்தம்	36,648

11.3 இனி நடைபெறவிருக்கும் தேர்வுகள் குறித்து விண்ணப்பதாரர்கள் விழிப்புடன் இருந்திட, 2023 ஆம் ஆண்டிற்கான உத்தேச தேர்வு கால அட்டவணையை மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் வெளியிட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் கீழ்க்கண்ட 29 பணிப் பிரிவுகளில், 4,133 பணியிடங்களுக்கான தேர்வுகள் நடத்தி முடித்திட திட்டமிடப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன:-

வ. எண்	பதவியின் பெயர்	எண்ணிக்கை
1.	நோய் தீர்வியலாளர் (ஆண்கள்)	31
2.	நோய் தீர்வியலாளர் (பெண்கள்)	36
3.	இயன்முறை சிகிச்சையாளர் தரம் – II	35

2023 ஏப்ரல் 18]

வ. எண்	பதவியின் பெயர்	எண்ணிக்கை
4.	கண் மருத்துவ உதவியளார்	*93*
5.	அறுவை அரங்கு உதவியாளர்	*335*
6.	இதய வரைபட நுட்புநர்	*95*
7.	துயர் ஆற்றுப்படுத்துநர்	*4*
8.	ஆய்வக நுட்புநர் தரம்–III	*332*
9.	சுகாதார ஆய்வாளர் தரம்–II	*1,066*
10.	மருந்தாளுநர் (சித்தா)	*26*
11.	மருந்தாளுநர் (யுனானி)	*1*
12.	மருந்தாளுநர் (ஆயுர்வேதா)	*1*
13.	கிராம சுகாதார செவிலியர்	*1,594*
14.	நுண்கதிர் வீச்சாளர்	*114*
15.	நுட்புநர் நிலை–I	*3*
16.	இரத்த சுத்திகரிப்பு நுட்புநர் தரம்-II	*28*
17.	திறன்மிகு உதவியாளர் தரம்-II (பற்றவைப்பவர் தரம்-II)	*1*
18.	தொழில்முறை சிகிச்சையாளர்	*8*
19.	செவித்திறன் ஆய்வாளர்	*14*
20.	கதிரியக்க சிகிச்சை நுட்புநர்	*20*
21.	குளிரூட்டி சாதனம் பழுது நீக்குபவர்	*6*
22.	மின்னனு காந்தவியல் நுட்புநர்	*10*
23.	செயற்கை கைவினைஞர்	*36*
24.	மின்வினைஞர் தரம்-II	*102*
25.	பல் மெக்கானிக்	*40*
26.	பல் நலவியலாளர்	*23*
27.	குளிர்பதனப் பெட்டி பழுது நீக்குபவர்	*41*

[2023 ஏப்ரல் 18

வ. எண்	பதவியின் பெயர்	எண்ணிக்கை
28.	உதவி மருத்துவர் (பல்)	20
29.	ஆய்வக நுட்புநர் தரம்-III (ST பின்னடைவு பணியிடம்)	18
	மொத்தம்	4,133

தேர்வுகளை நெறிப்படுத்திட வலுவான நடைமுறைகள் ஒளிவுமறைவற்றவகையில் மேற்கொள்ளப்பட்டு, தேர்வு நடைமுறைகளை விரைவாகவும் மற்றும் எளிதாக்கிடவும் மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அத்தியாயம்-12

தேசிய நலவாழ்வுக் குழுமம்/மாநில நலவாழ்வுச் சங்கம்–தமிழ்நாடு

12.1 முன்னுரை:

தேசிய நலவாழ்வு சுகாதாரக் குழுமம் (NHM) 2005-ல் நாட்டின் அனைத்து சுகாதாரச் சேவைகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் நிறுவப்பட்டது. குடிமக்கள் அனைவருக்கும், குறிப்பாக கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் வசிப்பவர்களுக்கு ஒருங்கிணைந்த மற்றும் எளிதில் அணுகக்கூடிய சுகாதாரச் சேவையை வழங்குவதற்கு இந்த அமைப்பு முக்கியத்துவம் அளிக்கிறது. மேலும், நாட்டில் குறிப்பிடத்தக்க சுகாதார தேவைகள் மற்றும் சவால்களை எதிர்கொள்ளும் கொள்கைகள் மற்றும் திட்டங்களைச் செயல்படுத்துவதன்மூலம் பொது சுகாதார மேலாண்மை மற்றும் சேவை வழங்குதலை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டம் தேசிய கிராமப்புற சுகாதாரக் குழுமமாக (NRHM) தொடங்கப்பட்டு, பின்னர் 2013 ஆம் ஆண்டில் நகர்ப்புறங்களையும் சேர்த்து தேசிய நகர்ப்புற சுகாதாரக் குழுமமாக (NUHM) விரிவாக்கப்பட்டது. இந்தத் திட்டத்திற்கான நிதியை ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசுகள் முறையே 60:40 என்ற விகிதத்தில் பகிர்ந்துகொள்கின்றன. தேசிய நலவாழ்வுக் குழும திட்டங்களின்மூலம் அனைத்து குடிமக்களின் சுகாதாரம்

2023 ஏப்ரல் 18]

மற்றும் நலவாழ்வை மேம்படுத்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்ட ஒரு இலட்சிய தொடர் முயற்சியாகும். சுகாதாரத் திட்டங்களின் நிர்வாகத்தை நெறிப்படுத்தவும், மேம்படுத்தவும், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கத்தைத் தவிர்த்து தொழுநோய், காசநோய், பார்வை இழப்புத் தடுப்பு உள்ளிட்ட பல்வேறு சுகாதாரக் குழுமங்களை ஒன்றிணைத்து மாநில சுகாதாரச் சங்கம் உருவாக்கப்பட்டது. மாநில மற்றும் மாவட்ட அளவில் அனைத்து தேசிய சுகாதார திட்டங்களும் இத்திட்டத்தின்கீழ் ஒருங்கிணைக்கப்பட்டது.

12.2 குறிக்கோள் மற்றும் நோக்கம்: *பொதுமக்களுக்குக் குறைந்த செலவில் சமமான மற்றும் தரமான சுகாதாரச் சேவைகளை, அனைவரும் அணுகத்தக்கவகையில் வழங்குவதற்குப் பொறுப்பேற்பதுடன், மக்களின் தேவைகளுக்கு ஏற்றவாறு சுகாதாரச் சேவைகளை வழங்குதல்.*

நோக்கங்கள்:

- *மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தைகளின் இறப்பின் விகிதத்தைக் குறைத்தல்.*
- *அனைத்துத் தரப்பினருக்கும் பொது சுகாதாரம்/மகளிர் நலம், குடிநீர், சுற்றுப்புற சுகாதாரம், ஊட்டச்சத்து, அனைவருக்கும் தடுப்பூசி எளிதில் கிடைக்கச் செய்தல்,*
- *தொற்று மற்றும் தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்துதல் மற்றும் தடுத்தல்.*
- *பாலின விகிதத்தினை மக்கள்தொகைக்கேற்ப சமன்படுத்தும் செயல்பாடுகள்.*
- *ஒருங்கிணைந்த மற்றும் விரிவான ஆரம்ப சுகாதாரச் சேவைகள் கிடைக்கச் செய்தல்.*
- *மரபு சார்ந்த உள்ளூர் மருத்துவம் மற்றும் இந்திய மருத்துவ முறைகளுக்குப் புத்துயிர் அளித்தல்.*
- *ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளை ஊக்குவித்தல்.*

12.3 தேசிய நலவாழ்வுக் குழுமத்தின் இலக்கு: *தேசிய நலவாழ்வுக் குழுமம் தனது இலக்கினை அடைவதற்காக, சமுதாயத்திற்குப் பொறுப்புணர்வுடன்கூடிய முழுமையான பொது சுகாதாரச்*

சேவைகளை கிடைக்கச் செய்வது, சமுதாய ஈடுபாடு, மனித வள மேலாண்மை, பரவலாக்கல், தர நிலையை அடைய தீவிரமான கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்வு, கிராமங்கள் தொடங்கி மேல்நோக்கியவகையில் சுகாதாரத் திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்துதல், புதிய வழிமுறைகளை கண்டறிதல், சுகாதாரக் குறியீடுகளை மேம்படுத்துவதற்கு நெகிழ்வுத் தன்மையுடைய நிதியுதவி ஆகியவற்றைப் பயன்படுத்துகிறது.

12.4 தேசிய நலவாழ்வுக் குழுமத்தின் இலக்குகளை அடைவதற்கான உத்திகள்:

- அனைவருக்கும் தரமான சுகாதாரச் சேவைகள் எளிதில் கிடைத்திடவும் மற்றும் அதனை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளவும் வழிவகை செய்தல்.
- ஒன்றிய, மாநில மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் ஆகியன கூட்டாகச் செயல்படுவதற்கான கருவியாக செயல்படுதல்.
- ஆரம்ப நிலை சுகாதாரச் சேவைகளான நோய்த்தடுப்பு, ஆரோக்கிய மேம்பாடு ஆகியவற்றை எய்துவதற்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளையும், சமூகத்தினரையும் இணைத்து ஈடுபடுத்துவதற்கான ஒரு தளத்தை அமைத்தல்.
- நலவாழ்வில் சமத்துவம் மற்றும் சமூக நீதியை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளை வழங்குதல்.
- உள்ளூர் முயற்சிகளை ஊக்குவிக்கும் விதமாக மாவட்டங்களுக்கும், சமூகத்திற்கும் நெகிழ்வு தன்மையுடைய ஒரு செயல்முறையை நிறுவுதல்.
- ஆரோக்கிய மேம்பாடு மற்றும் நோய் தடுப்பு செயல்முறைகளில் பல் துறை ஒருங்கிணைப்பிற்கான கட்டமைப்பை உருவாக்குதல் மற்றும் ஊக்குவித்தல்.

சுகாதாரக் குறியீடுகளை அடைவதில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. நமது மாநிலம் ஐக்கிய நாடுகள் சபை நிர்ணயித்த இரண்டாயிரம் ஆண்டிற்கான வளர்ச்சிக்கான இலக்குகளை ஏற்கெனவே அடைந்துள்ளது. ஒன்றிய அரசின் நிதி ஆயோக் வெளியிட்டுள்ள 2019 ஆம்

2023 ஏப்ரல் 18]

ஆண்டுக்கான நிலையான வளர்ச்சி இலக்கு குறியீட்டு அறிக்கையில், நமது மாநிலம் தேசிய அளவில் இரண்டாம் இடத்தை பெற்றுள்ளது. இலக்கு ஆண்டான 2030-க்கு முன்னதாகவே தமிழ்நாடு அனைத்து நிலையான வளர்ச்சி இலக்குகளையும் (SDG) அடைவதற்கு உறுதிபூண்டுள்ளது.

தேசிய நலவாழ்வுக் குழும செயலாக்கக் கட்டமைப்பு:

திட்ட மேலாண்மை அலகுகள்: *மாநில அளவில், மாநில நலவாழ்வுச் சங்கமானது குழும இயக்குநரின் தலைமையில் செயல்படுகிறது. இச்சங்கத்தின் பணிகளுக்கு மாநில திட்ட மேலாண்மை அலகு துணை புரிகிறது. மாநில சுகாதாரச் சங்கம் பின்வரும் திட்ட அமலாக்க அலகுகளைக் கொண்டுள்ளது.*



தேசிய சுகாதாரக் குழுமம் மாநில அளவில், மாநில சுகாதாரக் குழுமத்தில் (SHS) நிர்வகிக்கப்படுகிறது. இது குழும இயக்குநரின் தலைமையில் உள்ளது.

12.5 மாவட்ட நலவாழ்வுச் சங்கம்: *மாவட்ட நலவாழ்வுச் சங்கமானது மாவட்ட ஆட்சித் தலைவரின்கீழ் பல்வேறு தேசிய சுகாதாரத் திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படுகிறது. மாவட்ட நல்வாழ்வுச் சங்கமானது மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் தேசிய மாவட்ட சுகாதாரக் குழும*

திட்டங்களைத் திட்டமிடுவதற்கும், நிர்வகிப்பதற்கும் ஏதுவாக மாவட்ட ஆட்சியரைத் தலைவராக கொண்ட ஒரு நிர்வாகக் குழுவைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மாவட்டத் திட்ட மேலாண்மைப் பிரிவு மற்றும் ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள திட்ட மேலாண்மைப் பிரிவுகள், தேசிய நலவாழ்வுக் குழுமத்தின் பல்வேறு திட்டக் கூறுகளை முறையாக செயல்படுத்தப்படுவதை மேற்பார்வை செய்கின்றன.

12.6 நோயாளர் நலச் சங்கம் (PWS): நோயாளர் நலச் சங்கம் என்பது அனைத்து சுகாதார மையங்களிலும் செயல்படும் ஒரு எளிய ஆனால் பயனுள்ள மேலாண்மை கட்டமைப்பாகும். மேலும், நோயாளர்கள் நலச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்ட அமைப்பாகச் செயல்படுகின்றன.

நோயாளர்கள் நலச் சங்கத்தின் நோக்கங்கள்:

- பொது மக்களின் பங்களிப்பை மேம்படுத்துதல்.
- மருத்துவமனைகளின் பயன்பாட்டிற்காக சமூக வளங்களைத் திரட்டுதல்.
- மருத்துவமனைகளில் வழங்கப்படும் சேவைகளின் தரத்தை மேம்படுத்துதல்.

12.7 நிபந்தனையற்ற நிதி—நோயாளர் நலவாழ்வுச் சங்கம்: தேசிய நலவாழ்வுக் குழுமமானது செயல்பாட்டு அடிப்படையிலும், நிர்வாகம் மற்றும் நிதி ஆதாரங்களின் மூலமாகவும் மருத்துவத் துறையில் சீர்திருத்தங்கள் மேற்கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இச்சங்கங்களில் 36 மாவட்டத் தலைமை மருத்துவமனைகளும், 198 வட்ட மருத்துவமனை, 58 வட்டம் சாரா மருத்துவமனைகளும், 385 சமுதாய சுகாதார நிலையங்களும் (CHC), 1,422 கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களும், 8,713 சுகாதார துணை நிலையங்களும் மற்றும் 15,015 கிராம நலவாழ்வு, குடிநீர், சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து குழுக்களும் நடைபெறுகின்றன. இந்த நிபந்தனையற்ற நிதியானது சிறிய அளவிலான கட்டடப் பராமரிப்பு பணிகள், உபகரண பழுதுபார்ப்புப் பணிகள், நுகர்பொருட்கள், சுகாதார மையங்களைப் பராமரித்தல் மற்றும் நோயாளிகளுக்கான வசதிகளை மேம்படுத்துதல் ஆகியவற்றை மேற்கொள்வதற்காக அந்தந்த மருத்துவ நிலையங்களின் மருத்துவ அலுவலர்களுக்கு வழங்கப்படுகிறது.

2023 ஏப்ரல் 18]

12.8 கிராம நலவாழ்வு, குடிநீர், சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்துக் குழு (VHWSNC): *தேசிய நலவாழ்வுக் குழுமத்தின்கீழ் ஒவ்வொரு கிராமத்திலும் கிராம நலவாழ்வு, குடிநீர், சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுக்களின் முக்கிய நோக்கம் கிராம அளவில் சுகாதார செயல்பாடுகள் திட்டமிடுதலில் சமூக ஈடுபாட்டை ஊக்குவிப்பதாகும். இக்குழுக்கள் சுகாதார திட்டமிடல் பரவலாக்கத்தினை ஊக்குவிக்கும். இந்த குழு சுகாதாரச் சேவைகள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும், சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், சமூக ஈடுபாட்டை ஊக்குவிப்பதற்கான தளத்தை வழங்குவதுடன், பொது மக்களின் தலைமை பண்பினை ஊக்குவிக்கிறது. இக்குழுக்கள், கிராம சுகாதார செவிலியர், ஊராட்சி மன்றத் தலைவர், அங்கன்வாடி ஊழியர், உள்ளூர் பள்ளி ஆசிரியர், சுகாதார ஆய்வாளர் மற்றும் சுய உதவிக் குழுக்களின் பிரதிநிதி ஆகியோரின் சமூகப் பங்களிப்புடன் கூட்டப்படுகிறது. மேலும், பயனுள்ள தகவல் தொடர்பினை உருவாக்கவும், நோய்களைத் தடுப்பதற்காகவும் இக்குழுக்கள் பயன்படுகின்றன. ஒவ்வொரு கிராம அளவிலான குழுவிற்கும் ஆண்டுதோறும் ரூ.10,000/– வழங்குவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.*

12.9 மகப்பேறு நலன்:

- *மாநிலத்தில் மகப்பேறு இறப்பு விகிதம், தரமான மகப்பேறு சேவைகளின் முக்கியமான குறியீடுகளில் ஒன்றாகும். கர்ப்பிணித் தாய்மார்களின் நல்வாழ்வு அவர்களின் உரிமை மட்டுமல்ல, பொருளாதார, சமூக மற்றும் வளர்ச்சி சவால்களைத் தீர்ப்பதற்கும் இன்றியமையாததாகும். தேசிய சுகாதாரக் குழுமத்தின்கீழ் பல்வேறு முன்முயற்சிகளை செயல்படுத்தியதன்மூலம், தரமான மகப்பேறு சேவைகளை வழங்கவும், தடுக்கக்கூடிய மகப்பேறு இறப்புகளைக் குறைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

- **சுமன் — தவிர்க்கக்கூடிய மகப்பேறு மரணங்கள்:** *"சுமன்–சுரக்ஷித் மாத்ரித்வா ஆஷ்வாசன்" என்பது பல்நோக்கு, ஒருங்கிணைந்த மற்றும் தற்போதுள்ள அனைத்து மகப்பேறுநல முன்முயற்சிகளையும் ஒரே குடையின்கீழ் உள்ளடக்கிய அணுகுமுறையாகும்.*

இது மகப்பேறு நல உரிமைகளை வழங்குவதுடன், சேவை உத்தரவாதத்தையும் வழங்குகிறது. இத்திட்டம் மகப்பேறு நல சேவைகளில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்து, தடுக்கக்கூடிய மகப்பேறு இறப்புகளைக் குறைத்து சிறப்பான மகப்பேறு சேவைகளை வழங்குகின்றது.

- **தாய்-சேய் நல சேவை உத்திரவாத சாசனம்:** பொது சுகாதார மையங்களுக்கு வரக்கூடிய அனைத்து கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் இளம் சிசுகளுக்கு கீழ்க்கண்ட சேவைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

- தாய்-சேய் நல பாதுகாப்பு அட்டை.

- குறைந்தது 4 கர்ப்பகால பார்வை மற்றும் வீட்டளவிலான 6 இளம் சிசு கவனிப்பு.

- வீட்டிலிருந்து மருத்துவமனைக்குச் செல்ல இலவச வாகன வசதி மற்றும் மேற்சிகிச்சைக்காகப் பிற மருத்துவமனைக்குப் பரிந்துரை செய்யப்பட்டவர்கள் குறைந்தது ஒரு மணி நேரத்திற்குள் மருத்துவமனையை சென்று அடைவதை உறுதி செய்தல்.

- மருத்துவமனையிலிருந்து சிகிச்சைக்குப்பின் வீட்டிற்குச் செல்ல வாகன வசதி செய்தல்.

- மரியாதையுடனான கவனிப்பு, கண்ணியத்துடன் நடத்துதல் மற்றும் உரிய தனி உரிமை பாதுகாப்பு.

- பிரசவம் பயிற்சி பெற்ற செவிலியர்கள்/உதவியாளர்களால் நடத்தப்படுதல்.

- பிரசவத்தின போது தாமதமாகத் தொப்புள் கொடியைக் கட்டுவதை உறுதி செய்தல்.

- மகப்பேறு சிக்கல்கள் அடையாளம் காணுதல் மற்றும் இலவச பிரசவ அறுவைச் சிகிச்சை சேவை கிடைக்கச் செய்தல்.

- பிறந்த உடன் தாய் பால் கொடுப்பதற்கு உறுதுணையாக இருத்தல்.

2023 ஏப்ரல் 18]

- *தாயிடமிருந்து குழந்தைக்குத் தொற்று* (HIV, HBV *மற்றும்* Syphilis) *பரவாமல் தடுத்தல்.*
- *குழந்தை பிறந்தவுடன்* 'Zero' Dose *தடுப்பூசி வழங்குதல்* (Hep 'B', OPV, BCG).
- *நோயுற்ற இளம் சிசுக்களுக்குக் கட்டணமில்லா சிகிச்சை வழங்குதல்.*
- *குழந்தை பிறந்த மருத்துவமனைகளிலேயே பிறப்பு பதிவு மற்றும் பிறப்பு சான்றிதழ் வழங்குதல்.*
- *மகப்பேறு திட்டங்களின்படி மகப்பேறு நிதியுதவி கிடைக்கச் செய்தல்.*
- *பிரசவத்திற்குப் பின்பான குடும்ப நல ஆலாசனைகள் மற்றும் சேவைகள் வழங்குதல்.*
- *பாதுகாப்பான தாய்மைக்குத் தகவல் நலக் கல்வி மற்றும் ஆலோசனை வழங்குதல்.*
- *உதவி எண் மற்றும் தொலைபேசி அழைப்பு மையம்மூலம், தாய்-சேய் நல குறைகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்தல்.*
- *கருக்கலைப்பு சட்டத்தின்படி ஒருங்கிணைந்த பாதுகாப்பான கருக்கலைப்பு சேவைகள் வழங்குதல்.*
- **உறுதியளிக்கப்பட்ட மகப்பேறு சேவைகள்:** *சுமன் (சுரக்ஷத் மாத்ரித்வா ஆஷ்வாசன்) சேவைகளின் வழியாக பாதுகாப்பான, தனித்துவ மகப்பேறு மற்றும் குழந்தை பராமரிப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ள 6,054 மையங்களில் வழங்கப்படுகின்றன:*
- *விரிவான அவசரக்கால மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தைகள் பராமரிப்புச் சேவைகள், 126 சீமாங்க்* (CEmONC) *மையங்களில் வழங்கப்படுகின்றன.*
- *அடிப்படை அவசரக்கால மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தைகள் பராமரிப்புச் சேவைகள், 629 (380 மேம்படுத்தப்பட்ட சமுதாய சுகாதார நல மையம், 44 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம், 198 மாவட்ட மருத்துவமனை, 7 மகப்பேறு மற்றும்*

[2023 ஏப்ரல் 18

குழந்தை நல மையம்) பீமாங்க் (BEmONC) மையங்களில் வழங்கப்படுகின்றன.

- பொதுவான சேவைகள் 5,299 மையங்களில் வழங்கப்படுகின்றன. (1,383 கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம், 441 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம், 38 நகர்ப்புற சமுதாய சுகாதார நிலையம், 3,437 துணை சுகாதார மையம்)
- மகப்பேறு நலனின் மேம்பாட்டின் பயனாக, தடுக்கப்படக்கூடிய மகப்பேறு மற்றும் குழந்தை இறப்புகள் இல்லாமல் தரமான மகப்பேறு சேவைகள் கண்ணியத்துடன் வழங்கப்படுகின்றன. அதிக எண்ணிக்கையில் சுமன் நிலையங்களைக் கொண்ட மாநிலங்களில் இரண்டாவது மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கின்றது.

12.10 பேறுசார், மகப்பேறு, பச்சிளம் குழந்தை, குழந்தை நலம் மற்றும் வளரிளம் பருவத்தினருக்கான (Reproductive, Maternal, NewBorn, Child Health and Adolescent Health RMNCH+A) சேவைகள் மற்றும் முயற்சிகள்: தேசிய நலவாழ்வுக் குழுமம் மகப்பேறு மற்றும் குழந்தை நல சேவைகளை மேம்படுத்த முயற்சிகளை மேற்கொள்கின்றது. அவற்றுள் மருத்துவமனைப் பிரசவம், அவசரக்கால மகப்பேறு சேவை, பாதுகாப்பான கருக்கலைப்பு, குடும்பக் கட்டுப்பாடு சேவைகள் மற்றும் வளரிளம் பருவத்தினருக்கான சுகாதாரச் சேவைகளும் அடங்கும். மேலும், பேறுசார், மகப்பேறு, இளம் சிசு குழந்தை நலம் மற்றும் வளரிளம் பருவத்தினருக்கான சேவைகள், அனைத்து தரப்பினருக்கும் கிடைக்க கூடுதல் கவனம் செலுத்தப்படுகிறது.

- **ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டம்:** மருத்துவமனைகளில் நிகழும் பிரசவங்களை அதிகரிக்க, அரசு மருத்துவமனைகளில் பிரசவிக்கும் அனைத்து தாய்மார்களுக்கும், ஊரகப் பகுதிகளில் 700 ரூபாயும், நகர்ப்புறங்களில் 600 ரூபாயும் வழங்கப்படுகிறது. 2022 – 2023 ஆம் ஆண்டு 3,25,907 தாய்மார்கள் இத்திட்டத்தின்மூலம் பயனடைந்துள்ளனர்.
- **ஜனனி சிசு சுரக்ஷா காரியா கிராம் (JSSK):** இத்திட்டத்தின்மூலம் பொது சுகாதார மையங்களில்

சிகிச்சை பெறும் அனைத்து கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் மிகவும் ஆபத்தான நிலையில் உள்ள நோயுற்ற குழந்தைகளுக்கும் சிகிச்சைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்மூலம் கட்டணமில்லா மருந்து, நோய்கண்டறிதல், குருதியேற்றுதல், மருத்துவமனையில் தங்கும் நாட்களில் இலவச உணவு ஆகியவற்றோடு வீட்டிலிருந்து மருத்துவமனைக்கும் மருத்துவமனையிலிருந்து பரிந்துரை மையங்களுக்கும், சிகிச்சைக்குப் பின் வீட்டிற்கு அழைத்துச் செல்ல கட்டணமில்லாப் போக்குவரத்து சேவைகளும் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் 9,06,280 கர்ப்பிணிப் பெண்களுக்கு இலவச மருந்து, உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 4,86,164 தாய்மார்கள் வீட்டிலிருந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். 2,89,947 பிரசவித்த தாய்மார்களுக்கு வீட்டிற்கு அழைத்துச் செல்ல கட்டணமில்லா போக்குவரத்து சேவைகள் வழங்கப்பட்டுள்ளன.

- **விரிவான பிரதான் மந்திரி சுரக்ஷத் மாத்ரித்வா அபியான் (e-PMSMA):** *இத்திட்டத்தின்மூலம் கர்ப்பகால சிக்கல்கள் உள்ள கர்ப்பிணித் தாய்மார்களை கண்டறிந்து சிகிச்சை அளிக்க, ஒவ்வொரு மாதமும் 9 ஆம் தேதி மற்றும் 24 ஆம் தேதி அன்று சிறப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன. இம்முகாம்களின்மூலம் கர்ப்பகால சிக்கல்கள் உள்ள தாய்மார்களைக் கண்டறிந்து மகப்பேறு மருத்துவர்கள்மூலம் தொலை தொடர்பு மற்றும் நேரடி ஆலோசனை மற்றும் சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன. 2022-2023 ஆம் ஆண்டில் 3,16,875 கர்ப்பிணித் தாய்மார்கள் பயடைந்துள்ளனர். கர்ப்பகால சிக்கல்கள் உள்ள கர்ப்பிணித் தாய்மார்களை அதிக அளவில் கண்டறிந்து சிகிச்சை வழங்கியதில் தமிழ்நாட்டிற்கு முதல் இடத்திற்கான விருது வழங்கப்பட்டது.*

- **லக்க்ஷயா:** *மகப்பேறு இறப்புகளை எதிர்வரும் ஆண்டுகளில் மேலும் குறைப்பதற்காக சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம்மூலம் பிரசவ அறை தர மேம்பாட்டிற்காக லக்ஷயா திட்டம் உருவாக்கப்பட்டது.*


ஒருங்கிணைந்த இலக்குடன்கூடிய அணுகுமுறை, பிரசவ அறை மற்றும் மகப்பேறு அறுவைச் சிகிச்சை அறைகளின் தரத்தை வலுப்படுத்த உதவுகின்றது. 9 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், 22 மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் மற்றும் 18 அரசு மருத்துவமனைகள் என மொத்தம் 49 மையங்கள் தேசிய தரச்சான்றிதழ் பெற்று செயல்படுகின்றன.

- **நிபுணர்களின் சேவைகளைப் பயன்படுத்துதல்:** *அவசரக் காலங்களில், கிராமப்புறங்களில் தரமான மகப்பேறு சிகிச்சைகள் வழங்க, மகப்பேறு நிபுணர்களின் சேவைகளைப் பெறுவதில் இருக்கும் இடைவெளியை நிர்வகிக்க, தேவையின் அடிப்படையில், மகப்பேறு மருத்துவர்கள் மற்றும் நிபுணர்கள் ஊக்கத் தொகை அளிக்கப்பட்டு பணியமத்தப்படுகின்றனர்.*
- **மகப்பேறுகால இரத்த சோகை தடுத்தல்—அனிமியா முக்த் பாரத் (AMB):** *மாநிலத்தின் அனைத்து வயதினரும் இரத்த சோகையினால் பாதிக்கப்படுகின்றனர். இதனைக் கையாள தீவிர செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் பேறுகாலத்தில் உள்ள பெண்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு இரும்பு சத்து மாத்திரைகள் வழங்கப்படுகின்றன. ஹீமோகுளோபின் 7.1 கிராம் முதல் 8.9 கிராம் வரை (மிதமான இரத்த சோகை) குறைபாடு உள்ள தாய்மார்களுக்கு சுக்ரோஸ் ஊசி வழங்கப்படுகின்றது. 2022-2023 ஆம் ஆண்டு 1,82,846 தாய்மார்களுக்கு சுக்ரோஸ் ஊசி வழங்கப்பட்டுள்ளது.*
- **கர்ப்பகால நீரிழிவு நோய்:** *மகப்பேறு மற்றும் குழந்தை நலத்தை மேம்படுத்த அனைத்து கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், கர்ப்பகால நீரிழிவு நோய் கண்டறிதல் "ஒரல் குளுக்கோஸ் சேலன்ஜ் பரிசோதனை" 12-16 வார கர்ப்பிணிகளுக்கு பரிந்துரைக்கப்படுகின்றது. 24-28 வாரம் மற்றும் 32-34 வார கர்ப்பிணிகளுக்கு மீண்டும் இப்பரிசோதனை செய்யப்படுகின்றது. 2022-23 ஆம் ஆண்டு வரை 16,78,757 கர்ப்பிணிகளுக்குப் பரிசோதனை செய்யப்பட்டதில், 34,577 தாய்மார்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.*

2023 ஏப்ரல் 18]

- **குருதியேற்ற சேவைகள் (Blood and Blood Products):** *இரத்த சேமிப்பு மையங்கள் மற்றும் இரத்த வங்கிகள் சுகாதார அமைப்பின் ஒருங்கிணைந்த சேவையாகும். இரத்த மாற்றம் தேவைப்படும் நோயாளிகளுக்கு சரியான நேரத்தில் பாதுகாப்பான இரத்தம் வழங்கப்பட, இரத்தப் பற்றாக்குறை ஏற்படாமல் இருக்க, முறையான தன்னார்வ இரத்த தான முகாம்களை நடத்தி, அறுவைச் சிகிச்சையின்போது ஏற்படும் இரத்த குறைப்பாடுகள் சரிசெய்யப்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது. 2022–2023 ஆம் ஆண்டில், 98 இரத்த வங்கிகள்மூலம் 7,17,372 யூனிட் இரத்தம் சேகரிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் 4,22,521 யூனிட் இரத்தம் மற்றும் இரத்தக்கூறுகள் 4,191 தன்னார்வலர் இரத்ததான முகாம்கள்மூலம் பெறப்பட்டு, 10,836 யூனிட் இரத்தம், நோயாளிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளது.*

12.11 மகப்பேறு இறப்பு விகிதம்: *தமிழ்நாடு அரசு மகப்பேறு இறப்புக்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றைக் கண்காணிக்க சான்று அடிப்படையிலான வழிகாட்டுதல்கள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதில், தாய் இறப்பு விகித்தைக் குறைப்பதில் முக்கியப் பங்களிக்கின்றது. மாதிரி பதிவு சேவை* (SRS) (*2018-2020*)-*ன்படி மகப்பேறு இறப்பு விகிதம் 1 இலட்சம் உயிருடன் பிறக்கும் குழந்தைக்கு 54 எனக் குறைந்துள்ளது.*



ஆதாரம்: *மாதிரி பதிவு அமைப்பு*

[2023 ஏப்ரல் 18

மகப்பேறு இறப்புகளில் 61 சதவிகிதம் பங்களிக்கும் மகப்பேறு இறப்புகான முதல் 5 காரணங்கள் தீர்க்கப்படுவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது.

2020-2023 ஆம் ஆண்டின் மாநில சுகாதார மேலாண்மைத் தகவலின்படி முதல் ஐந்து காரணங்கள் பின்வருமாறு:-

1. இரத்தப்போக்கு (19%)
2. கர்ப்பகாலத்தில் உயர் இரத்த அழுத்தம் (20%)
3. கர்ப்பத்தை சிக்கலாக்கும் பேறுகால இருதய நோய் (9%)
4. நோய் தொற்று (9%)
5. கருக்கலைப்புகள் (5%)

வ. எண்	பேறுகால இறப்புகளின் காரணங்கள்	தற்போதைய திட்டங்கள்
1.	கர்ப்ப காலத்தில் உண்டாகும் உயர் இரத்த அழுத்த நோய்	i. அனைத்து சீமாங்க் மையங்களுக்கும் தேவையான உபகரணங்கள், கட்டமைப்புகள் மற்றும் இரத்த வங்கிகளை நிறுவுதல் ஆகிய சேவைகளை வலுப்படுத்துதல்.
		ii. மகப்பேறு சிகிச்சையின்போது ஏற்படும் சிக்கல்களை எதிர்கொள்ள "சீமாங்" மையங்களில் உள்ள (HDU) உயர் தீவிர சிகிச்சைகளை வலுப்படுத்துதல்.
		iii. அபாய அறிகுறிகள் உள்ள கர்ப்பிணிப் பெண்களுக்கு இரத்த அழுத்த பரிசோதனை களப்பணியாளர்கள்மூலம் குறிப்பாக அங்கன்வாடி பணியாளர்கள்மூலம் கண்காணித்தல்.

வ. எண்	பேறுகால இறப்புகளின் காரணங்கள்	தற்போதைய திட்டங்கள்
		iv. வட்டார மகப்பேறு மருத்துவர்களின்மூலம் தாய்மார்களுக்குத் தொடர் கண்காணிப்பு வழங்குதல்.
2.	பிரசவத்திற்குப் பின் உதிரப்போக்கு	i. பதிவேடுகளில் இணைக்கப்பட்டுள்ள திருத்திமைக்கப்பட்ட அவசரக்கால மகப்பேறு முன்னெச்சரிக்கை அறிகுறி படிவத்தின்மூலம் (ME-OWS) தாய்மார்களின் பொது நலம் மற்றும் அபாய அறிகுறிகளைக் கண்டறிதல்.
		ii. பிரசவத்திற்குப் பின் உதிரப் போக்கு (Atonic PPH) ஏற்படும் நேரத்தில் Suction Cannulas கருவி பயன்படுத்துதல்.
		iii. பிரசவம் நடக்கும் அனைத்து மையங்களிலும் இரத்த வங்கி அல்லது இரத்த சேமிப்பு மையம் இருப்பதை உறுதி செய்தல்.
3.	நோய்த்தொற்று	i. கைசுத்தம், தனிப்பட்ட பாதுகாப்பு, உபகரணங்களைப் பயன்படுத்துதல், இரத்தம் மற்றும் உடல் திரவ மேலாண்மை, நோயாளிகளின் சிகிச்சை உபகரணங்கள், கழிவுகள் மற்றும் ஈரத்துணிகளை கையாளும் பொழுதும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

வ. எண்	பேறுகால இறப்புகளின் காரணங்கள்	தற்போதைய திட்டங்கள்
		ii. அனைத்து மருத்துவமனைகளிலும் உயிரியல் மருத்துவ கழிவு மேலாண்மைகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட விதிமுறைகளைக் கடைப்பிடிப்பதை உறுதிசெய்தல்
		iii. பேறுகால நோய்த்தொற்று பராமரிப்பு, நோயாளியின் நலன்களை மேம்படுத்துவதற்கும், உடல் நலப் பாதுகாப்பு தொடர்பான நோய்த் தொற்றுகளைக் குறைப்பதற்கும், ஒவ்வொரு நோயாளிக்கும் செய்ய வேண்டிய நடைமுறைகளை உறுதிசெய்தல்
4.	பேறு கால இருதய நோய்கள்	i. RBSK திட்டத்தின்மூலம், பள்ளி சுகாதார மேற்பார்வையின் பொழுது, வளரிளம் பருவத்தினருக்கு முன்கூட்டியே இருதய நோய் அறிகுறிகளைட்க கண்டறிந்து அறுவைச் சிகிச்சை செய்தல். முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்மூலம் மருத்துவமனைகளில் இலவச அறுவை சிசிச்சைகள் செய்தல்.
		ii. பேறுகால இருதய நோய் உள்ள தாய்மார்களைப் பிரசவம் மற்றும் பிரசவத்திற்கு முன்கூட்டியே கண்டறிந்து மகப்பேறியல் நிபுணர்கள், கதிரியக்க நிபுணர்கள், பொது

2023 ஏப்ரல் 18]

வ. எண்	பேறுகால இறப்புகளின் காரணங்கள்	தற்போதைய திட்டங்கள்
		நல மருத்துவர், இருதய நிபுணர், பச்சிளம் குழந்தை நிபுணர் கொண்ட குழு அமைந்துள்ள மருத்துவமனைக்குப் பரிந்துரைத்தல்.
5.	கருக்கலைதல் (Abortion)	i. பெண்களின் கருக்கலைப்புக்கான மருத்துவ முறை (MMA) கருக்கலைப்பு (MTP) அருகிலுள்ள பொது சுகாதார நிலையங்களில் இலவச ஆலோசனைகளைப் பெற அணுகலாம்.
		ii. மருத்துவரின் பரிந்துரை இல்லாத கருக்கலைப்பு மருந்து வழங்கும் மருந்து நிலையங்களைக் கண்காணித்தல்.
		iii. கருவுறுதலுக்கு முன் மற்றும் பிறப்பிற்கு முந்தைய கருவின் தன்மை அறியும் தொழில்நுட்ப முறைகள் (பாலின தேர்வை தடை செய்தல்) சட்டம், 1994-ன்படி (PC-PNDT Act), பாலினம் தேர்வு மற்றும் இரண்டாம் மற்றும் மூன்றாம் பருவ கருக்கலைப்புகள் செய்யும் தனியார் ஸ்கேன் நிறுவனங்களை கண்காணித்தல்.

மகப்பேறு மரணங்கள் தணிக்கை:

I. அனைத்து மாவட்டங்களிலும், மகப்பேறு மரண விகிதத்தைக் கண்காணிக்க, ஒவ்வொரு மாதமும் மாவட்ட ஆட்சியர்களால், சமூகம் மற்றும் மருத்துவமனை சார்ந்த, பேறுகால மரணம் தணிக்கை செய்யப்படுகிறது.


[2023 ஏப்ரல் 18

II. பிரதி மாதமும்,மாநில அளவில் காணொலிக் காட்சிமூலம், மகப்பேறு இறப்புகள் மாநில தேசிய நலவாழ்வுக் குழும இயக்குநரால் தணிக்கை செய்யப்படுகிறது.

12.12 குழந்தைகள் நலம்:

தேசிய நலவாழ்வுக் குழுமத்தின்கீழ் (NHM) உள்ள குழந்தை நலத் திட்டம், குழந்தைகளின் உயிர் வாழ்வை மேம்படுத்தும் தலையீடுகளை ஒருங்கிணைத்து, சிசு மற்றும் ஐந்து வயதுக்குட்பட்ட இறப்புக்குப் பங்களிக்கும் காரணிகளை நிவர்த்தி செய்கிறது.

குழந்தை இறப்பு விகிதம் (IMR)



ஆதாரம்: மாதிரி பதிவு அமைப்பு

2010 ஆம் ஆண்டில் 1000 உயிருள்ள பிறப்புகளுக்கு 24 குழந்தை இறப்பு என்கிற விகிதம் (IMR) கணிசமாகக் குறைந்து, மாதிரி பதிவு அமைப்பு தரவு 2020-ன்படி, தேசிய அளவில் குழந்தை இறப்பு விகிதம் 28 என்ற நிலையில், தமிழ்நாட்டில் குழந்தை இறப்பு விகிதம் 13 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கு, நம் மாநிலத்தில் குழந்தைகளின் நலனை மேம்படுத்துவதற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பைக் குறிக்கிறது. நாட்டின் பெரிய மாநிலங்களின்

2023 ஏப்ரல் 18]

பட்டியலில் குழந்தை இறப்பு விகிதத்தைக் குறைத்ததில் தமிழ்நாடு இரண்டாவது மாநிலமாக இருக்கின்றது.

12.13 மருத்துவமனை அடிப்படையிலான சேவைகள்:

1. பச்சிளம் குழந்தை பராமரிப்புப் பிரிவு (NBCC): *குழந்தை பிறந்தவுடன் அத்தியாவசிய பச்சிளம் குழந்தை பராமரிப்புச் சேவை வழங்குதல், தாய்ப்பாலூட்டுவதை விரைவாகத் தொடங்க ஊக்குவித்தல், தேவைப்படின் உயிர்ப்பித்தல் சிகிச்சை அளித்தல் போன்ற சேவைகளைப் பயிற்சி பெற்ற மருத்துவப் பணியாளர்கள்மூலம் வழங்குவதற்காக ஒவ்வொரு பிரசவ அறையிலும் இப்பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. நமது மாநிலத்தில் உள்ள 2,429 பிரசவம் நடைபெறும் மருத்துவமனைகளிலும் பச்சிளம் குழந்தை பராமரிப்பு பிரிவு நிறுவப்பட்டுள்ளது. 2022-2023 ஆம் ஆண்டில் 4,98,474 பச்சிளம் குழந்தைகள் இந்த பிரிவின் சேவைகள்மூலம் பயனடைந்துள்ளனர்.*

2. பச்சிளம் குழந்தை நிலைப்படுத்துதல் பிரிவு (NBSU): *பச்சிளம் குழந்தை நிலைப்படுத்துதல் பிரிவு, துணை மாவட்ட அளவில் (முதல் பரிந்துரை பிரிவு/சமுதாய சுகாதார மையம்) சுகாதார நிலையத்தில் பிரசவிக்கும் குழந்தைகளுக்கும், அருகில் உள்ள பிற சுகாதார நிலையங்களில் பிறந்த குழந்தைகளுக்கும், நோயுற்ற குழந்தைகளுக்கும் பராமரிப்பு மற்றும் சிகிச்சை ஆகியவற்றை ஒருங்கிணைந்து செயல்படுத்துவதில் முக்கியப் பங்காற்றுகிறது. 109 வட்டம்/வட்டம் சாரா மருத்துவமனைகள் மற்றும் 37 நிலை இரண்டு மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார மையங்களில் 146 பச்சிளம் குழந்தை நிலைப்படுத்துதல் பிரிவுகள் நிறுவப்பட்டு, நிலையான குறைப்பிரசவம், குறைவான பிறப்பு, குறைந்த எடை கொண்ட குழந்தைகளை பராமரிக்கவும், ஆபத்தான அறிகுறிகளுடன் பிறந்த குழந்தைகளைக் காக்கவும் உதவுகின்றன. 2022-2023 ஆம் ஆண்டில் 21,987 பிறந்த குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.*

3. சிறப்பு பச்சிளம் குழந்தை பராமரிப்புப் பிரிவு (SNCU): *ஆண்டிற்கு 3000-க்கும் மேற்பட்ட பிரசவங்கள் நிகழும் அனைத்து அரசு மருத்துவமனைகளிலும், மிக ஆபத்தான நிலையில் நோயுற்ற மற்றும் எடை குறைவான/குறைமாத குழந்தைகளின் உயிர்காக்கும் பொருட்டு, சிறப்பு பச்சிளம் குழந்தை பராமரிப்புப் பிரிவுள்ளது. 37 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும்*

[2023 ஏப்ரல் 18

39 மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில், மொத்தம் 76 சிறப்பு பச்சிளம் குழந்தை பராமரிப்புப் பிரிவுகளில் உயர்தரமான பச்சிளம் குழந்தை பராமரிப்புச் சேவைகள் வழங்கப்படுகின்றன. இந்த சிறப்பு பச்சிளம் குழந்தை பராமரிப்பு பகுதியில் உயர்தர உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளன. மேலும், தகுதி வாய்ந்த சிசு நல மருத்துவர், குழந்தை நல மருத்துவர் மற்றும் பயிற்சி பெற்ற செவிலியர்களைக் கொண்டு மருத்துவச் சிகிச்சை வழங்கப்படுகிறது. 2022-2023 ஆம் ஆண்டில், 1,27,859 குழந்தைகள் இதன்மூலம் சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர்.

4. குழந்தை உயிர்ப்பு மற்றும் அவசர மேலாண்மைப் பிரிவு (PREM): 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதத்தைக் குறைப்பதை நோக்கி கவனம் திருப்பப்பட்டுள்ளது. இக்குறிக்கோளை அடைய 22 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், 16 அரசு தலைமை மருத்துவமனைகள் மற்றும் 12 அரசு மருத்துவமனைகளை உள்ளடக்கிய 38 மருத்துவ நிலையங்களில் குழந்தைகளுக்கான உயிர்ப்பித்தல் மற்றும் அவசர மேலாண்மை பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒரு மாதத்திற்கு மேற்பட்ட வயதுடைய குழந்தைகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கு தொடர்ச்சியான நேர்மறை அழுத்த சுவாச மற்றும் பிற உபகரணங்களை உள்ளடக்கிய பிரத்தியேக படுக்கைகள் குழந்தைகளுக்காக வழங்கப்பட்டுள்ளன. இந்தப் பிரிவுகள் முக்கியமாகக் குழந்தைகளுக்கு ஏற்படும் அவசர நோய்களான தீவிர வலிப்பு, தீவிர இளைப்பு நோய், மூச்சுத் திணறல், தொற்றினால் ஏற்படும் அதிதீவிர காய்ச்சல், விஷ மருந்துகள், விஷக்கடிகள் போன்றவற்றிற்கு சிகிச்சை அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன. 2022-2023 ஆம் ஆண்டு 10,774 குழந்தைகள் இப்பிரிவில் உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர்.

5. குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சைப் பிரிவு (PICU): 24 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சைப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. இவை மண்டல மையங்களாகச் செயல்பட்டு, அப்பகுதியில் உள்ள பெருவாரியான மக்களுக்கு மூன்றாம் நிலை மற்றும் சமுதாயம் சார்ந்த குழந்தை நல மருத்துவச் சேவையை நல்கி வருகின்றன. இந்த மையங்கள், தீவிர நோய்வாய்ப்பட்ட குழந்தைகளுக்கான சிகிச்சை, இருதய அறுவைச் சிகிச்சை, உடலுறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சை

2023 ஏப்ரல் 18]

ஆகிய ஒருங்கிணைந்த சேவைகளை வழங்கி வருகின்றன. இந்த மையங்கள் இருதய நோய் மற்றும் நரம்பியல் நோய்களுக்கான சிறப்பு தீவிர சிகிச்சைப் பிரிவுகளை உள்ளடக்கியதாகும். 2022-2023 ஆம் ஆண்டு 61,888 குழந்தைகள் இந்தப் பிரிவில் உள்நோயாளிகளாக சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர்.

6. ஊட்டச்சத்து மறுவாழ்வு மையம் (NRC): *ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளின் நோயுற்ற தன்மை மற்றும் இறப்பிற்கு ஊட்டச்சத்து குறைபாடு ஒரு குறிப்பிடத்தக்க காரணமாக உள்ளது. ஊட்டச்சத்து மறுவாழ்வு மையம் என்பது மிகக் குறைவான ஊட்டச்சத்து குறைபாடு உள்ள குழந்தைகள் அனுமதிக்கப்படும் ஒரு சுகாதார மையம் ஆகும். ஊட்டச்சத்து மறுவாழ்வு மையங்கள் குழந்தைகளின் தசை சிதைவு மற்றும் வளர்ச்சி குன்றிய எடை குறைப்பில் பயனுள்ளதாக இருக்கின்றது. ஆறு ஊட்டச்சத்து மறுவாழ்வு மையங்கள் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் நிறுவப்பட்டுள்ளன. இந்த மையங்களில் 2022-2023 ஆம் ஆண்டில், 2,327 ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகள் சிகிச்சைப் பெற்றுள்ளனர்.*

7. விரிவான பாலூட்டுதல் மேலாண்மை மையம் (CLMC)/ பாலூட்டுதல் மேலாண்மை அலகு (LMU): *இரண்டாம் நிலை பராமரிப்பு நிலையங்களில் உள்ள நோயுற்ற பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு பிரிவுகளில் இறப்பு மற்றும் நோயுற்ற தன்மையை குறைக்க எடை குறைவான குழந்தைகள் மற்றும் மிக அதிக குறைமாத குழந்தைகளுக்கு உணவளிக்க, தாய்ப்பால் வழங்குவதற்காக தமிழ்நாட்டில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட மருத்துவமனைகளில் மொத்தம் 27 விரிவான பாலூட்டுதல் மேலாண்மை மையங்கள்* (CLMC) *மற்றும் 8 பாலூட்டுதல் மேலாண்மை அலகுகள்* (LMU) *செயல்படுகின்றன. 2022-2023 ஆம் ஆண்டில் 8,323 லிட்டர் தாய்ப்பால் சேகரிக்கப்பட்டு, 52,414 பச்சிளம் குழந்தைகள் விரிவான பாலூட்டுதல் மேலாண்மை மையத்தின்மூலம் பயனடைந்துள்ளனர். 2022-2023 ஆம் ஆண்டில் 719 லிட்டர் தாய்ப்பால் மேலாண்மை அலகுகள்மூலம்* (LMU) *சேகரிக்கப்பட்டு, 6,521 பச்சிளம் குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.*

8. சமூக அடிப்படையிலான குழந்தை பராமரிப்பு முறைகள்: *பின்வரும் சமூக அடிப்படையிலான குழந்தை பராமரிப்பு முறைகள் மற்றும் நடவடிக்கைகள்மூலம் குழந்தை பராமரிப்புச் சேவைகள் மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.*

[*2023 ஏப்ரல் 18*

- **வீட்டு அடிப்படையிலான பச்சிளம் குழந்தை பராமரிப்பு (HBNC):** *பச்சிளம் குழந்தைகளின் உயிரைக் காப்பாற்ற, வீட்டு அடிப்படையிலான குழந்தைப் பராமரிப்பை மருத்துவமனை பராமரிப்புடன் இணைப்பது முக்கியம். வீட்டு அடிப்படையிலான பராமரிப்பு ஆபத்து அறிகுறிகளை முன்கூட்டியே கண்டறிவதற்கான வாய்ப்பை வழங்கும் அதே வேளையில், குழந்தைகளை தேவைப்படின் மேல் சிகிச்சைக்காக பொருத்தமான சுகாதார நிலையத்திற்கு உடனடியாக பரிந்துரைப்பது மற்றும் உயிர்களைக் காப்பாற்ற உதவுகிறது. 2022-2023 ஆம் ஆண்டில், 7,33,654 பச்சிளம் குழந்தைகளுக்கு வீட்டு அடிப்படையிலான பராமரிப்புச் சேவைகள் முன்கள சுகாதாரப் பணியாளர்கள்மூலம் வழங்கப்படுகின்றது.*

- **வீட்டு அடிப்படையிலான இளம் குழந்தை பராமரிப்பு (HBYC):** *வீட்டு அடிப்படையிலான பச்சிளம் குழந்தை பராமரிப்புத் திட்டத்தின்கீழ், சமூக சுகாதாரப் பணியாளர்கள் முதல் 6 வாரங்களில் பச்சிளம் குழந்தைகளை 6 அல்லது 7 முறை வீடுகளுக்குச் சென்று பார்வையிடுவர். பிறப்பு முதல் 2 வயது வரை தொடர்ந்து பராமரிப்பை வழங்க இரண்டு வயதுக்குட்பட்ட குடும்பங்களுக்கு* HBYC *திட்டத்தின்கீழ் கூடுதலாக 5 முறை வீட்டுப்பார்வை திட்டமிட்டுள்ளது. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்* (ICDS) *திட்டத்துடன் ஒருங்கிணைந்து மாநிலம் முழுவதும் உள்ள 38 மாவட்டங்களுக்கும் வீட்டு அடிப்படையிலான இளம் குழந்தை பராமரிப்புத்* (HBYC) *திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. அனைத்து மாவட்டங்களிலும் பயிற்சிகள் முடிந்துள்ளன. 2022-2023 ஆம் ஆண்டில், இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் ஆகிய இரண்டு மாவட்டங்களில் 2,58,896 குழந்தைகளுக்கு வீட்டு அடிப்படையிலான இளம் குழந்தை பராமரிப்புச் சேவைகள் வழங்கப்பட்டு பயன்பெற்றுள்ளனர்.*

9. அனிமியா முக்த் பாரத் (AMB): *குழந்தைகள் பிறந்த முதல் 5 ஆண்டுகளில், விரைவான வளர்ச்சி காலங்களில் இரும்புச்சத்து தேவைகள் அதிகரிப்பதால் இரும்புச்சத்து குறைபாடு/இரத்தசோகையால் பாதிக்கப்படுகின்றனர்.*

2023 ஏப்ரல் 18]

அ. 6-59 மாத குழந்தைகளில், ஒரு வருடத்தில் இரும்பு-ஃபோலேட் திரவ மருந்தை, உரிய கண்காணிப்புடன் வாரத்திற்கு இருமுறை கூடுதலாக வழங்குவது கருத்தில் கொள்ளத்தக்கது. தேசிய குடும்ப நல கணக்கெடுப்பு 5-ன்படி (NFHS-5) 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 57.4% இரத்தசோகை உள்ளதாகக் கூறுகின்றது. 2022-2023 ஆம் ஆண்டில், 5 வயதுக்குட்பட்ட 45,29,745 குழந்தைகளுக்கு வாரத்திற்கு இருமுறை இரும்பு மற்றும் ஃபோலிக் அமிலம் சிரப் வழங்கப்பட்டது.

ஆ. 5-9 வயதுக்குட்பட்ட குழந்தைகள் – வாராந்திர இரும்பு மற்றும் ஃபோலிக் அமில மாத்திரைகள்–5 முதல் 9 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு (பள்ளிக்கு செல்லும்/செல்லாத), வாரந்தோறும் ஒரு மாத்திரை வீதம் 50 வாரங்களுக்கு வழங்கப்படுகிறது. 45 மி.கி. தனிம இரும்பு + 400 மைக்ரோகிராம் ஃபோலிக் அமில மாத்திரையும் கூடுதல் ஊட்டச்சத்திற்காக வழங்கப்படுகிறது. 5-9 வயதுடைய 45,63,809 குழந்தைகளுக்கு இரும்பு மற்றும் ஃபோலிக் அமில மாத்திரைகள் 2022-2023 ஆம் ஆண்டில் வாராந்திர அடிப்படையில் வழங்கப்பட்டன.

10. தேசிய குடற்புழு நீக்க நாள் (NDD): *மேம்படுத்தப்பட்ட குழந்தை ஆரோக்கியம், ஊட்டச்சத்து நிலை, கல்விக்கான அணுகல் மற்றும் வாழ்க்கைத் தரம் ஆகியவற்றை உயர்த்தும் பொருட்டு, தேசிய குடற்புழு நீக்க முகாம் நடத்தப்படுகிறது. இம்முகாம் ஆண்டுக்கு இருமுறை பிப்ரவரி மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் அங்கன்வாடி மையங்கள் மற்றும் பள்ளிகளில், 1-19 வயதுடைய (சேர்க்கப்பட்ட மற்றும் சேர்க்கப்படாத) அனைத்து குழந்தைகளுக்கும் (ஆண்கள் மற்றும் பெண்கள்) குடற்புழு நீக்கம் செய்வதே இதன் நோக்கமாகும். மார்ச் 2023 இரண்டாவது சுற்றில், 2.07 கோடி குழந்தைகளுக்குக் குடற்புழு நீக்க மாத்திரை வழங்கப்பட்டது.*

- **வைட்டமின் ஏ கூடுதல் திட்டம்:** *ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் வைட்டமின் ஏ தேவைகளை இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பூர்த்தி செய்வதன்மூலம், 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் நோயுற்ற தன்மை மற்றும் இறப்பு குறைக்கப்படுகிறது. 2022-2023 ஆம் ஆண்டில் இலக்கு மக்கள் தொகையில் 98% விழுக்காடு,*

50,68,307 பயனாளிகளுக்கு வைட்டமின் 'ஏ' கூடுதலாக வழங்கப்பட்டது.

- **தீவிர வயிற்றுப்போக்குக் கட்டுப்பாட்டு இரண்டு வார நிகழ்ச்சித் திட்டம் (IDCF):** 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் வயிற்றுப் போக்கு இறப்புகளைக் குறைப்பதற்காக இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு, 2022 ஜூலை 16 முதல் ஜூலை 31, 2022 வரை இரு வார முகாம் நடத்தப்பட்டது. கடுமையான வயிற்றுப்போக்கு நோயால் 5 வயதுக்குட்பட்ட இறப்புகள் இல்லை என்ற குறிக்கோளுடன் செயல்படுத்தப்பட்டது. IDCF-2022 முகாமின்போது 58,81,859 குழந்தைகளுக்கு ORS மற்றும் 76,393 குழந்தைகளுக்கு ஜிங்க் மாத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன.

11. நிமோனியாவை (SAANS) நடுநிலையாக்குவதற்கான சமூக விழிப்புணர்வு மற்றும் நடவடிக்கை: நிமோனியாவை (SAANS) நடுநிலையாக்குவதற்கான சமூக விழிப்புணர்வு மற்றும் நடவடிக்கை பிரச்சாரத்தின் நோக்கங்கள் குழந்தைப் பருவ நிமோனியாவைத் தடுப்பதற்கும் சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குமாகும்.

12. தாயின் முழுமையான பாசம் (MAA): தாயின் முழுமையான பாசம் (MAA) திட்டத்தின் குறிக்கோள் உகந்த IYCF மற்றும் குழந்தை ஊட்டச்சத்தை அடைவதற்காக, சுகாதார அமைப்புகள்மூலம் தாய்ப்பால் கொடுக்கும் நடைமுறைகள் மற்றும் இளம் குழந்தைகளுக்கு உணவளிக்கும் நடைமுறைகளை மேம்படுத்துதல், பாதுகாத்தல் மற்றும் ஆதரவளிப்பதற்கான முயற்சிகளைப் புத்துயிர் அளிப்பதாகும். பிறந்து 1 மணி நேரத்திற்குள் தாய்ப்பால் கொடுப்பதையும், ஆறு மாதங்கள் வரை பிரத்தியேகமான தாய்ப்பால் கொடுப்பதையும், ஆறு மாதங்கள் முதல் இரண்டு வயது வரையிலான குழந்தைகளுக்கான வயதுக்கு ஏற்ற உணவுகளையும் வழங்க ஏதுவாக இது வலுப்படுத்துகிறது. 2022-2023 ஆம் ஆண்டில் 7,62,970 புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கு பிறந்த 1 மணி நேரத்திற்குள் தாய்ப்பால் கொடுக்கத் தொடங்கியுள்ளனர்.

13. தடுப்பூசி: குழந்தைப் பருவ நோய்கள் மற்றும் குறைபாடுகளைத் தடுப்பதற்கான மிக முக்கியமான மற்றும்

2023 ஏப்ரல் 18]

செலவு குறைந்த உத்திகளில் ஒன்று தடுப்பூசி. ஆண்டுதோறும், சுமார் 10.21 இலட்சம் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் 9.31 இலட்சம் குழந்தைகள்/கைக்குழந்தைகள் இந்த UIP *திட்டத்தின்கீழ் காப்பீடு செய்யப்படுகிறார்கள் மற்றும் மாநிலம் தொடர்ந்து 99%-க்கும் அதிகமான முழு நோய்த் தடுப்பு* (*கவரேஜை*) *அடைகிறது.*

12.14 குழந்தை இறப்பு தணிக்கை மதிப்பாய்வு (CDR): *குழந்தை இறப்பு தணிக்கை மதிப்பாய்வு* (CDR) *என்பது சமுதாய விளைவுகள் ஏற்படக்கூடிய குழந்தை இறப்புக்கான மருத்துவக் காரணங்களை அறிந்து, குறிப்பிட்ட குழந்தை சுகாதாரத் வழிகாட்டுதல்களை ஏற்படுத்த வழிவகுக்கும். மாவட்ட ஆட்சியர்களால் மாவட்டங்களில் மற்றும் மாநிலத்திலுள்ள நிபுணர் குழுவால் காணொலிக் காட்சியின்மூலம் அவ்வப்பொழுது ஆய்வு செய்வது, குழந்தை இறப்பு தணிக்கை நடத்தும் மாநிலத்தில் சிசு இறப்பு குறைப்பதற்கான காரணங்களைக் கற்றுக்கொள்வதற்கு வழிவகுக்கும்.*

12.15 தேசிய இளம் சிறார் நலத் திட்டம் (Rashtriya Bal Swasthya Karyakram): *தேசிய சிறார் நலத் திட்டம் குழந்தைகளின் உடல் நல பரிசோதனை மற்றும் நோய்களை ஆரம்ப நிலையில் கண்டறிந்து இடையீடு* (Intervention) *செய்து, சிகிச்சை அளிப்பதில் முக்கிய காரணம் செலுத்துகிறது. 0-18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு 4* Ds *உள்ள குழந்தைகள்* (*பிறவி குறைப்பாடு நோய்கள், ஊட்டக் குறைபாடுகள் மற்றும் வளர்ச்சி குறைபாடு*) *ஆரம்ப நிலையில் கண்டறிந்து சிகிச்சை அளிப்பதில் முக்கிய காரணம் செலுத்துகிறது. இத்திட்டத்தின் கூறுகள் பின்வருபவை:*

0-18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான பரிசோதனை:

1) மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கான பரிசோதனை (பிறந்த 48 மணி நேரத்திற்குள்ளாக): *அனைத்து அரசு பிரசவ மையங்களில் பிறக்கும் குழந்தைகளுக்குப் பிறவி குறைபாடுகளைக் கண்டறிய பரிசோதனை செய்யப்படுகிறது. இந்த பயனுள்ள சுகாதாரத் தலையீடுகள் பெற்றோரின் செலவுகளை குறைத்துள்ளன. மருத்துவப் பணியாளர்களுக்கு, இப்பரிசோதனையை மேற்கொள்ளவும் குறைபாடுடன் பிறந்த குழந்தைகளைக் கண்டறிந்து பதிவு செய்து மாவட்ட மருத்துவமனையில் உள்ள ஆரம்ப நிலை இடையீட்டு மையங்களுக்கு*

(DEIC) பரிந்துரை செய்யவும் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. 2022-2023 ஆம் ஆண்டில் 4,98,478 புதிதாகப் பிறந்த குழந்தைகள் பரிசோதிக்கப்பட்டுள்ளனர்.

2) பச்சிளம் குழந்தைகளுக்கான சமுதாயம் சார்ந்த பரிசோதனை (0-6 வாரம் வரை): கிராமப்புற/நகர்ப்புற சுகாதார செவிலியர்கள் எளிய கருவிகளின்மூலம் பிறவி குறைபாடுகளைக் கண்டறிவதற்கான பயிற்சியினைப் பெற்றுள்ளனர். மேலும், குழந்தைகள் மற்றும் அவர்களின் பெற்றோர்களை அங்கன்வாடி மையங்களுக்கு அழைத்துச் சென்று நடமாடும் மருத்துவக் குழுவின்மூலம் பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. இந்த பரிசோதனைத் திட்டத்தை மேம்படுத்துவதற்காக கிராம/நகர்ப்புற சுகாதார செவிலியர் குறிப்பாக எடை குறைந்த குழந்தைகளைப் பரிசோதனைக்கு பரிந்துரைக்கின்றனர். ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டு சேவைகளின் ICDS போஷன் டிராக்கர் மென்பொருள், எடை குறைந்த குழந்தைகளைக் கண்காணிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது. கர்ப்பம் மற்றும் குழந்தை கூட்டு கண்காணிப்பு PICME மென்பொருளில் உள்ள அனைத்து புதிதாகப் பிறந்த குழந்தைகளின் குறிப்புகள் மற்றும் மதிப்பீடு (9.2 இலட்சம்) அங்கன்வாடி பணியாளர்களால் பின்பற்றப்படும் ICDS-ன் போஷன் டிராக்கர் மென்பொருளில் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

3 a) 6 வாரம் முதல் 18 வயதுள்ள குழந்தைகளை அங்கன்வாடி மற்றும் பள்ளிகளில் பள்ளி சிறார் மருத்துவக் குழுமூலம் பரிசோதனை செய்தல்: தமிழ்நாட்டில் 805 நடமாடும் குழுக்கள் உள்ளன. இதில் கிராமங்களில் 770 நடமாடும் குழுக்கள், சென்னை மாநகராட்சியில் 15 நடமாடும் குழுக்கள், மேலும், தமிழ்நாட்டில் உள்ள மற்ற நகர்ப்புறங்களில் 20 நடமாடும் குழுக்கள் உள்ளன. நடமாடும் மருத்துவக் குழு 6 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளையும், அங்கன்வாடி மையத்தில் வருடத்திற்கு இரண்டு முறை மற்றும் 6 முதல் 18 வயதான குழந்தைகளை ஒருமுறை என பரிசோதனை செய்கிறது. நடமாடும் மருத்துவக் குழு 11,17,875 குழந்தைகளை பரிசோதனை செய்து, அதில் 1,44,085 குழந்தைகளை குறைபாடுகளுடன் கண்டறிந்து உறுதிசெய்வதற்கு மாவட்ட ஆரம்ப நிலை இடையீட்டு மையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். ICDS-ன் போஷன் டிராக்கரின் மென்பொருள், ICDS-ல் பதிவு செய்யப்பட்ட 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளைக் கண்காணிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. 4 வித

2023 ஏப்ரல் 18]

குறைபாடுகள் உள்ள குழந்தைகள் (பிறவி குறைப்பாடு நோய்கள், ஊட்டக் குறைபாடுகள் மற்றும் வளர்ச்சி குறைபாடு) மருத்துவம் மற்றும் அறுவைச் சிகிச்சை மேலாண்மைக்காக மாவட்ட ஆரம்ப நிலை இடையீட்டு மையத்திற்கு (DEIC) பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

b) *பள்ளிக் கல்வித் துறை, தேசிய நலவாழ்வுக் குழுமம், தமிழ்நாடு (NHM), பொது சுகாதாரத் துறை (DPH) மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி சேவைகள் துறையுடன் (ICDS) இணைந்து வகுப்பு 1 முதல் 12 வரை அரசு பள்ளியில் பயிலும் 49 இலட்சம் குழந்தைகளுக்கு விரிவான சுகாதாரப் பரிசோதனை (முதன்மை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை) மேற்கொள்ள கல்வி மேலாண்மைத் தகவல் மையம் (EMIS) மென்பொருளை உருவாக்கியுள்ளது. ஆசிரியர்களின் முதல் கட்ட பரிசோதனையில், 1. கண் பரிசோதனை, 2. உடல் எடை குறியீடு பரிசோதனை (BMI) 3. முப்பது நோய் நிலைக்கான பொது பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அதன் குறிப்புகள் TN-SED செயலியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. முதல் கட்டமாக ஜனவரி 2023 நிலவரப்படி, மாநிலத்தில் உள்ள 38 மாவட்டங்களில் 41,62,792 குழந்தைகள் ஆசிரியர்களால் பரிசோதிக்கப்பட்டுள்ளனர். ஆசிரியரால் அடையாளம் காணப்பட்ட குழந்தைகள் மருத்துவ மற்றும் சுகாதார நிபுணர்களால் (RBSK குழுக்கள்) இரண்டாம் நிலை பரிசோதனைக்குப் பரிந்துரைக்கப்படுகிறார்கள். எனவே, இதுவரை 11,59,322 குழந்தைகள் நடமாடும் மருத்துவக் குழுவுக்கு (MHT) பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். இதில் 3,84,687 குழந்தைகள் கண் மருத்துவ உதவியாளர்களுக்கும் (PMOA) மற்றும் 4,166 குழந்தைகள் DEIC-க்கும் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.*

தேசிய பள்ளி சிறார் நலத் திட்டத்தின்கீழ் பள்ளிக் கல்வித் துறையுடன் ஒருங்கிணைந்து, பள்ளி சுகாதாரம் மற்றும் ஆரோக்கியத் தூதுவர் திட்டத்தினைச் சிறப்பாக செயல்படுத்தியதற்காகத் தமிழ்நாட்டிற்கு "சிறந்த ஒருங்கிணைப்பு செயல்முறை விருது" 2022-23 ஆம் ஆண்டில் ஒன்றிய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகத்தால் வழங்கப்பட்டது.

4) மாவட்ட ஆரம்ப நிலை இடையீட்டு மையம் (DEIC): *இம்மையங்கள் 31 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் 3 மாவட்ட மருத்துவமனைகள் என 34 இடங்களில் உருவாக்கப்பட்டு, முன்கூட்டியே நோய் கண்டறிந்து*

சிகிச்சை அளித்தல் மூலமாக வளரும் குழந்தைகளிடையே பார்வை குறைபாடுகளைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மருத்துவச் சேவைகள் மற்றும் செவிப்புலன், பேச்சு, பார்வை, உணர்ச்சி நரம்பு மற்றும் நடத்தை சிகிச்சை துறையில் பயிற்சி பெற்ற வல்லுநர்கள் இத்தகைய நிலைமைகளுடன் அடையாளம் காணப்பட்ட குழந்தைகளுக்குத் தேவையான சிறந்த சேவைகளை வழங்குகிறார்கள். 12 உறுப்பினர் குழுமூலம் சமூக, கல்வி, தொழில் மற்றும் பொருளாதார மறுவாழ்வு சேவைகளை வழங்குவதற்குத் தேவையான வசதிகளை DEIC கொண்டுள்ளது. RBSK குழுக்களால் ஏதேனும் நோய்கள் இருப்பதாகக் கண்டறியப்பட்ட குழந்தைகள், அடுத்தகட்ட பரிசோதனை மற்றும் சிகிச்சைக்கு DEIC-க்கு பரிந்துரைக்கப்படுகிறார்கள். 2022-2023 ஆம் ஆண்டு 4,01,131 குழந்தைகள் தமிழ்நாட்டில் அனைத்து 34 DEIC-ல் சிகிச்சைப் பெற்றனர். ஏழு பெரிய குறைபாடுகளைக் களைய 2,804 அறுவை சிகிச்சைகள் 2022-2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அனைத்து மாவட்ட ஆரம்ப நிலை இடையீட்டு மையங்களும் (DEIC) முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும், புதிய மாவட்டங்கள் உருவாக்கப்பட்டதால், மாநிலத்தில் ஏற்கெனவே உள்ள 34 DEIC-களுடன் கூடுதலாக காஞ்சிபுரம், திருப்பத்தூர், தென்காசி, வாலாஜாபேட்டை மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் மற்றும் கள்ளக்குறிச்சி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகிய இடங்களில் DEIC-கள் நிறுவப்பட்டு அதற்கான உபகரணங்களும் வழங்கப்படுகின்றன. மேலும், அத்துடன் DEIC-க்கு உணர்வு ஒருங்கிணைப்புப் பூங்கா நிறுவப்படவுள்ளது.

5) வட்டார அளவிலான ஆரம்ப நிலை இடையீட்டு மையம்: பள்ளிக் கல்வித் துறை, அனைவருக்கும் கல்வி இயக்கம் (Sarva Shiksha Abhiyan) மூலம் ஒருங்கிணைந்து, மாற்றுத் திறனாளி குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு அவர்கள் வீட்டிற்கு அருகாமையில் இருந்து உதவுவதற்காக, 127 வட்ட அளவிலான ஆரம்ப தலையீட்டு மையங்களில், 42 ஆரம்ப தலையீட்டு மையங்களுக்கு TANII-ன் நிதி ஆதரவு அளித்து பலப்படுத்தியுள்ளது. 127 வட்ட அளவிலான ஆரம்ப தலையீட்டு மையங்களில் 2600 குழந்தைகள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

2023 ஏப்ரல் 18]

12.16 வளரிளம் பருவத்தினருக்கான சுகாதாரச் சேவைகள்: *தேசிய வளரிளம் பருவத்தினருக்கான நல்வாழ்வுத் திட்டம்* (RKSK) *24 மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. வளரிளம் பருவத்தினருக்கு ஊட்டச்சத்தினை மேம்படுத்துதல், பாலியல் மற்றும் இனப்பெருக்க நலச் சேவைகள் கிடைக்கச் செய்தல், மன நலத்தினை மேம்படுத்துதல், காயங்கள் மற்றும் வன்முறைகளைத் தடுத்தல், போதைப் பொருட்கள் பயன்படுத்துதலைத் தடுத்தல், தொற்றா நோய்கள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் சிகிச்சை அளிப்பது ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். வளரிளம் பருவத்தினருக்கான சுகாதாரத் திட்ட முறையின்படி 10-19 வயதினர்களில் ஆண்கள் மற்றும் பெண்கள் பள்ளி செல்லும்/ பள்ளி செல்லாதவர்கள், திருமணமான/திருமணமாகாத, பாதிக்கப்பட வாய்ப்புள்ள வளரிளம் பருவத்தினர் மற்றும் சேவைகள் முழுமையாக கிடைக்கப்பெறாதவர்கள், நகரம்/ கிராமத்தை சேர்ந்தவர் எனப் பகுத்தாய்ந்து, அவர்கள் நலனில் கவனம் செலுத்தப்படுகிறது. இதில் பின்வரும் சுகாதாரச் சேவைகள் மேற்கொள்ளப்படுகின்றன.*

மருத்துவமனை அளவிலான சேவைகள்:

1. வளரிளம் பருவத்தினருக்கான நட்புணர்வுடன்கூடிய சுகாதார மையங்கள் (AFHCs): *வளரிளம் பருவத்தினருக்கான நட்புணர்வுடன்கூடிய சுகாதார மையங்கள்* (AFHCs), *245 வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களில் அனைத்து வெள்ளிக் கிழமைகளிலும், 166 அரசு மருத்துவமனைகளிலும், 12 மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும் மற்றும் 19 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் அனைத்து வார நாட்களிலும் வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருகின்றன. 2022-2023 ஆம் ஆண்டில், 11,49,462 வளரிளம் பருவத்தினர், இம்மையங்களில் பதிவு செய்யப்பட்டு, சிகிச்சை மற்றும் ஆலோசனை பெற்றுள்ளனர்.*

சமூகம் சார்ந்த சேவைகள்:

2. சகாக்கள் குழு (Peer Educator): *தேசிய வளரிளம் பருவத்தினருக்கான நல்வாழ்வுத் திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களில் ஒவ்வொரு கிராம நல்வாழ்வு, குடிநீர், சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து குழுவின்கீழ் ஒவ்வொரு*

[2023 ஏப்ரல் 18

கிராமத்திலும் நான்கு சகாக்கள் வீதம் 39,532 சகாக்கள் (இரண்டு சிறுவர்கள் மற்றும் இரண்டு சிறுமிகள் (2 பள்ளிக்கு செல்பவர்கள் மற்றும் 2 பள்ளிக்கு செல்லாதவர்கள்)) தேர்ந்தெடுக்கப்பட்டு, பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இவர்கள் சக இளம் பருவத்தினருக்கும் சுகாதார நிபுணர்களுக்கும் இடையே மருத்துவ ஆலோசனை குறித்த மருத்துவச் சேவைகளை பெற்றுத்தருவதில் பாலமாக இருப்பார்கள்.

3. வளரிளம் பருவத்தினருக்கான தினம்: இத்தினம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஒவ்வொரு கிராமம் மற்றும் பேரூராட்சி அளவில் நடத்தப்படுகின்றது. இதில் வளரிளம் பருவத்தினரின் நலன் மற்றும் பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வு/தகவல்கள், கிராம நல்வாழ்வு, குடிநீர், சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து குழு உறுப்பினர்கள் மற்றும் சகாக்கள்மூலம் வழங்கப்படுகின்றன. 2022-2023 ஆம் ஆண்டில் 9,883 கிராம நல்வாழ்வு, குடிநீர், சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து குழுவில் 29,017 வளரிளம் பருவ சுகாதார நாட்கள் நடத்தப்பட்டுள்ளன.

4. வளரிளம் பருவத்தினருக்கானக் குழு: இக்குழு மாதத்திற்கு ஒருமுறை துணை செவிலியர்/கிராம சுகாதார செவிலியர் வழிகாட்டுதலின்படி அனைத்து வளரிளம் பருவத்தினரையும் சகாக்கள்மூலம் துணை சுகாதார நிலையத்தில் ஒன்றிணைத்து சமூகத்தில் வளரிளம் பருவத்தினரின் பிரச்சினைகளுக்கு ஆலோசனை வழங்குகிறது. 2022-2023 ஆம் ஆண்டில் 5461 சுகாதார துணை மையங்களில் 60,071 இளம்பருவ சுகாதாரக் குழுக்கள் நடத்தப்பட்டுள்ளன.

5. வாராந்திர இரும்பு சத்து மற்றும் ஃபோலிக் அமில மாத்திரை அளித்தல் (WIFS): இத்திட்டத்தின்கீழ் இரத்த சோகையின் பரவல் விகிதத்தைக் குறைக்க ஒரு IFA (பெரிய) மாத்திரை வாரம் ஒருமுறை இளம் பருவத்தினருக்கு அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் மற்றும் பள்ளிக்குச் செல்லாத இளம் பருவத்தினருக்கும் ஆசிரியர்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்களின் நேரடி மேற்பார்வையில் வழங்கப்படுகிறது. தேசிய குடற்புழு நீக்க தினத்தின்கீழ் இளம் பருவத்தினருக்கு T.Albendazole-வருடத்திற்கு இரண்டு முறை ஒவ்வொரு பிப்ரவரி மற்றும் ஆகஸ்ட் மாதங்களிலும் வழங்கப்படுகிறது. 2022-2023 ஆம் ஆண்டில் 55,65,341 இளம் பருவத்தினர் இந்தத் திட்டத்தின்மூலம் பயனடைந்துள்ளனர்.

2023 ஏப்ரல் 18]

12.17 மாதவிடாய் சுகாதாரத் திட்டம்: *கிராமப்புறங்களில் பருவம் அடைந்த இளம் பெண்களுக்கான மாதவிடாய் சுகாதாரத் திட்டம் தமிழ்நாட்டில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வோர் ஆண்டும் இத்திட்டத்தின்கீழ் கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறங்களில் பருவமடைந்த 10-19 வயதுடைய இளம் பெண்கள் இத்திட்டத்தின்கீழ் பயனடைகின்றனர். மாதவிடாய் சுகாதாரத் திட்டத்தின்கீழ் கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள 43,34,727 இளம் பெண்கள் 2022-2023 ஆம் ஆண்டில் பயனடைந்துள்ளனர்.*

பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்குநரகம்மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் மாதவிடாய் சுகாதாரத் திட்டதிற்காக தமிழ்நாட்டிற்கு "சிறந்த மாதவிடாய் குறித்த சுகாதார விழிப்புணர்வு" விருது 2022-23 ஆம் ஆண்டில் ஒன்றிய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகத்தால் வழங்கப்பட்டது.

12.18 ஆயுஷ்மான் பாரத்-பள்ளி சுகாதாரம் மற்றும் ஆரோக்கியத் திட்டம்: *தேசிய வளரிளம் பருவத்தினருக்கான நல்வாழ்வுத் திட்டம் செயல்படுத்தப்பட்ட 24 மாவட்டங்களில், ஆயுஷ்மான் பாரத்-பள்ளி சுகாதாரம் மற்றும் ஆரோக்கியத் திட்டம்மூலம் 8 மாவட்டங்களில் (இராமநாதபுரம், விருதுநகர், கரூர், அரியலூர், வேலூர், விழுப்புரம், தென்காசி மற்றும் பெரம்பலூர்) அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஒரு பள்ளிக்கு இரண்டு ஆசிரியர்கள் வீதம் தேர்வு செய்து 5 நாட்கள் பயிற்சி அளிக்கப்பட்டு பள்ளி சுகாதாரத் தூதுவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். பயிற்சி பெற்ற சுகாதாரத் தூதுவர்களான ஆசிரியர்கள், பள்ளியிலுள்ள வளரிளம் பருவ மாணவ மாணவியர்களுக்கு வாரத்திற்கு ஒருமுறை வகுப்பறைகளில் உடல்நலம் தொடர்பான தகவல்களை கற்பிக்கின்றனர். இதுவரை தென்காசி, விழுப்புரம், பெரம்பலூர் ஆகிய மூன்று மாவட்டங்களில் உள்ள 7,961 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் முதல் கட்டமாக 15,922 பள்ளி சுகாதாரத் தூதுவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். 2022-2023 ஆம் ஆண்டில் இத்திட்டம் புதிதாக 8 மாவட்டங்களுக்கு (கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், மதுரை, தஞ்சாவூர், தூத்துக்குடி, திருச்சி, திருநெல்வேலி மற்றும் திருவண்ணாமலை) விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதில் இரண்டாம் கட்டமாக 12,319 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில்*

[2023 ஏப்ரல் 18

24,638 ஆசிரியர்களுக்குப் பள்ளி சுகாதாரத் தூதுவர்களாகப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

12.19 பயிற்சி:

1) தேசிய நலவாழ்வுக் குழுமத்தின்மூலம் அளிக்கப்படும் பயிற்சிகள் 2 வகைப்படும்: *அவை அறிவுசார் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளாகும். இதுமட்டுமல்லாமல் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலன் பற்றிய பயிற்சிகள் குடும்ப நலன் சம்பந்தமான பயிற்சிகள், நிர்வாக திறன் சம்பந்தமான பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் ஆறு மண்டல பயிற்சி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த ஆறு மண்டல பயிற்சி மையங்கள்மூலம் மேற்கண்ட பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. அவை பின்வருவன:*

- *பொது சுகாதார நிறுவனம், பூந்தமல்லி*
- *நலவாழ்வு மற்றும் குடும்ப நல பயிற்சி மையம், எழும்பூர்*
- *நலவாழ்வு மற்றும் குடும்ப நல பயிற்சி மையம், மதுரை*
- *சுகாதார மனிதவள மேம்பாட்டு நிறுவனம், சேலம்*
- *சுகாதார மனிதவள மேம்பாட்டு நிறுவனம், விழுப்புரம்*
- *நலவாழ்வு மற்றும் குடும்ப நல பயிற்சி மையம், காந்திகிராம்*

2) மருத்துவ அலுவலர்களுக்கான நிர்வாகத்திறன் பயிற்சி: *புதிதாக பணியமர்த்தப்பட்ட அனைத்து மருத்துவ அலுவலர்களும் இந்த அமைப்புக்கு புதியவர்கள் என்பதால், அவர்களுடைய பொறுப்புகள் மற்றும் பங்களிப்புகள் பற்றியும், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து அரசின் சுகாதாரத் திட்டங்கள் மற்றும் அதில் மருத்துவர்களின் பங்கு குறித்தும், நிர்வாகத் திறன் மற்றும் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தவும் இந்த பயிற்சி அனைத்து மருத்துவ அலுவலர்களுக்கும், 15 நாட்களுக்கு வழங்கப்படுகிறது. 2011 முதல் நாளது வரை 6,707 மருத்துவ அதிகாரிகளுக்கு இப்பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.*

3) அடிப்படை பேறுகால மற்றும் பச்சிளம் குழந்தை பராமரிப்பு: *இப்பயிற்சி, மகப்பேறு மற்றும் மகப்பேறின்போது ஏற்படும் அவசர நிலை சிகிச்சைகளைக் கையாள தேவையான திறன்களை உள்ளடக்கியது. மேலும், இப்பயிற்சியில் கூடுதலாக பிரசவத்திற்குப்*

2023 ஏப்ரல் 18]

பின் தொற்று, எக்லாம்ப்சியா, பிரசவத்திற்குப் பின் ஏற்படும் அதிக இரத்தப்போக்கு மற்றும் பச்சிளம் குழந்தை பராமரிப்பு ஆகியவை பற்றியும் விரிவாகக் கற்பிக்கப்படுகின்றது. இப்பயிற்சி ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்களுக்கு, மண்டல பயிற்சி மையங்கள் மற்றும் மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்து ஆறு நாட்களுக்கு நடத்தப்படுகிறது. 2012 முதல் நாளது வரை 7,279 மருத்துவ அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

4) தாய்-சேய் நல திறன் மேம்பாட்டுப் பயிற்சி: *பொது சுகாதார நிறுவனங்கள் முழுவதும்* RMNCH+A *சேவைகளில் ஈடுபடுகின்ற அனைத்து சுகாதாரப் பணியாளர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கான தளத்தினைத் திறன் ஆய்வகங்கள் வழங்குகின்றன. இப்பயிற்சி அவசர சேவைகளை அளிக்கின்ற பொது சுகாதார வசதிகளில் பணியாற்றும் மகப்பேறு மருத்துவர்கள், மருத்துவ அதிகாரிகள், செவிலியர்கள், துணை செவிலியர்கள் ஆகியோரின் பயிற்சிக்கான தேவைகளை உள்ளடக்கியுள்ளது. மண்டல நலவாழ்வு மற்றும் குடும்ப நல பயிற்சி நிறுவனங்களில் அமைக்கப்பட்டுள்ள தாய்-சேய் நல திறன் மேம்பாட்டுப் பயிற்சியகத்தில் அனைத்து மருத்துவர் / செவிலியர், துணை செவிலியர்களுக்கு மகப்பேறு–பச்சிளம் குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினரின் நலன் பற்றிய திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்படுகின்றது. இப்பயிற்சி தாய் மற்றும் சேய்க்கு ஏற்படும் நோய் தாக்கத்தினைக் குறைப்பதற்கும், மகப்பேறு/ சிசு மரணம் ஆகியவற்றைக் குறைப்பதற்கும் வழிவகுக்கின்றது. 2012 முதல் நாளது வரை 15,241 மருத்துவம் சார்ந்த பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.*

5) இனப்பெருக்கம், மகப்பேறு, பச்சிளங் குழந்தைகள், குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினர் நலன் பயிற்சி: *இனப்பெருக்கம், மகப்பேறு, பச்சிளங் குழந்தைகள், குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினர் நலம் பற்றிய பயிற்சியை* (RMNCH +A), *முழுமையான அவசரக்கால மகப்பேறு மற்றும் பச்சிளங் குழந்தைகள் பராமரிப்பு* (CEmONC) *மற்றும் தீவிர பச்சிளங் குழந்தைகள் பராமரிப்புப் பிரிவு* (NICU) *போன்ற இடங்களில் பணிபுரியும் செவிலியர்களுக்கு 30 நாட்களுக்கு மண்டல பயிற்சி நிறுவனங்களில் 12+12+6 நாட்களுக்கு 3 பிரிவுகளாகப் பிரித்து அளிக்கப்படுகிறது. இது அவர்களின் அறிவு மற்றும் திறனை மேம்படுத்த*

[2023 ஏப்ரல் 18

அத்தியாவசியமான மகப்பேறு மற்றும் பச்சிளங் குழந்தைகள் நலன் பராமரிப்புச் சேவைகளைத் தரமாக வழங்க உதவி செய்கின்றது. இதுவரை 3,450 செவிலியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

6) நவ்ஜாத் ஷிஷீ சுரக்ஷா காரியக்ரம் (NSSK) பச்சிளங் குழந்தைகள் பராமரிப்பு மற்றும் உயிர்ப்பித்தல் பயிற்சி: இந்தப் பயிற்சி பொதுவாக பச்சிளங் குழந்தைகளுக்கு ஏற்படும் பிறந்த குழந்தைக்கு மூச்சுத்திணறல், தொற்றுக்கள், உடல் சில்லிட்டுப்போதல் மற்றும் தாய்ப்பால் குடிப்பதில் பிரச்சினை போன்றவற்றைச் சமாளிக்க மருத்துவ அலுவலர்கள் மற்றும் செவிலியர்களுக்குப் போதுமான அடிப்படைத் திறன்களை அளிப்பதை நோக்கமாகக் கொண்டது. இதுவரை 7,202 மருத்துவம் சார்ந்த பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

7) தேசிய சிறார் நலத் திட்டம் பயிற்சி (RBSK): இப்பயிற்சி களப் பணியாளர்கள் மற்றும் மாவட்ட ஆரம்ப கால சிகிச்சை வழங்கும் மையங்களில் (DEIC) பணிபுரியும் பணியாளர்களுக்குக் குழந்தைப் பருவ காசநோய் மற்றும் தொழுநோய் உட்பட 38 நோய் நிலைகளுக்காகப் பரிசோதித்தல் மற்றும் சிகிச்சையளித்தல் போன்றவை பற்றிய பயிற்சியாகும். இதுவரை 187 மருத்துவம் சார்ந்த பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

8) பச்சிளம் குழந்தை மற்றும் குழந்தை பருவ நோய்களின் ஒருங்கிணைந்த மேலாண்மைப் பயிற்சி: இப்பயிற்சி சுகாதாரப் பணியாளர்களின் திறனை மேம்படுத்துவதன்மூலம் பச்சிளம் குழந்தைகளுக்கு ஏற்படும் மூச்சுத்திணறல், வயிற்றுப்போக்கு, மலேரியா, அம்மைநோய், மூளைக் காய்ச்சல் மற்றும் ஊட்டச்சத்துக் குறைபாடு ஆகியவற்றைக் கட்டுப்படுத்தவும், அதன்மூலம் குழந்தைகளுக்கு ஆரோக்கியமான வளர்ச்சி மற்றும் மேம்பாடு அடையவும் உதவுகிறது. இந்நாள் வரையில் 12,761 சுகாதாரப் பணியாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

9) குடும்ப நலப் பயிற்சி: இந்தப் பயிற்சி பொது சுகாதார அமைப்பின் பல்வேறு நிலைகளில் குடும்ப நல முறைகள் மற்றும் சேவைகளை நடத்துவதற்குத் தேவையான அறுவைச் சிகிச்சைத் திறன்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டது. மினிலாப் மற்றும் வயிற்றறை உட்காட்டிமூலம் குடும்பக் கட்டுப்பாடு

2023 ஏப்ரல் 18]

அறுவைச் சிகிச்சை, விதைநாள அறுவைச் சிகிச்சை (வாஸெக்டமி) மற்றும் மருத்துவ ரீதியிலான கருக்கலைப்பு முறைகள் ஆகியவற்றில் சுகாதாரப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

10) தரம் நிர்ணயித்தல் பயிற்சி: *இப்பயிற்சி அளிப்பதன் நோக்கமானது தரமான நலச் சேவைகளை வழங்குதல் மற்றும் சமுதாயத்தினருக்குப் பாதுகாப்பான சேவைகளை வழங்குதல் மற்றும் சமுதாயத்தினருக்குப் பாதுகாப்பான சேவைகளை வழங்குவதன்மூலம் சுத்தம், சுகாதாரம், துப்புரவு, தேவையற்ற பொருட்கள் மற்றும் கழிவுகளைக் கையாளுதல் மற்றும் நலச் சேவை மையங்களில் தொற்றினைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளைக் கடைபிடிப்பதன்மூலம் தரமான சேவைகளை வழங்கலாம். 2022-23 ஆம் ஆண்டில் 410 சுகாதாரத் துறை ஊழியர்களுக்கு இப்பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.*

11) பிரசவ அறை தர மேம்பாட்டுப் பயிற்சி (LAQshyA): *லக்ஷயா மையங்கள் என்று தெரிவு செய்யப்பட்ட மையங்களில் பணிபுரியும் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்குப் பயிற்சி அளிப்பதன்மூலம் தரமான, கண்ணியத்துடனான மகப்பேறு பராமரிப்புச் சேவைகள் மேம்படுத்தப்படுகின்றன. 2022-23 ஆம் ஆண்டில் 464 மருத்துவம் சார்ந்த பணியாளர்களுக்கு இப்பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.*

12) இடைநிலை சுகாதாரப் பணியாளர்கள் பயிற்சி (MLHP): *இப்பயிற்சியின் முக்கிய நோக்கமாவது இடைநிலை சுகாதாரப் பணியாளர்களின் களத்திறன் சேவையை மேம்படுத்துவதாகும். இந்தப் பயிற்சியானது களப்பயிற்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் நடத்தப்படும் நேரடி வகுப்பு மற்றும் இணையவழி பயிற்சி மற்றும் தொழில் முறை கற்றல் பயிற்சி இவை அனைத்தும் உள்ளடக்கமாகும். மேலும், இந்த பயிற்சி மாநில மற்றும் மாவட்ட அளவிலான வல்லுநர் குழுவினரால் கண்காணிக்கப்படுகிறது. மேலும், அனைவருக்கும் நல வாழ்வு என்ற திட்டத்தின்கீழ் வரும் 12 வகையான விரிவாக்கப்பட்ட ஆரம்ப நிலை சுகாதாரச் சேவையைப் பற்றி தெரிந்துகொள்வதற்கும், வழிகாட்டுவதற்கும் ஏதுவாக மருத்துவ அலுவலர்களுக்கு மூன்று நாட்கள் புத்துணர்வுப் பயிற்சி அளிக்கப்பட்டது. பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை தேர்வு வாரியத்தின்மூலம் நான்கு மாத இடைநிலை சுகாதாரப் பணியாளர்களின் இணைப்புப் பயிற்சி வழங்கப்படுகிறது.*

13) தொற்றா நோய்கள் மேலாண்மைப் பயிற்சி: இப்பயிற்சியில் தொற்றா நோய்களைப் பற்றிய அடிப்படை புரிதலை மேம்படுத்தவும், முதியோர் நலன், வலி மற்றும் நோய்த் தடுப்பு சேவை மற்றும் புற்றுநோய் பரிசோதனை பற்றியும் பயிற்றுவிக்கப்படுகின்றது. 2022-23 ஆம் ஆண்டில் 1,391 மருத்துவ அலுவலர்கள், 2,928 செவிலியர்கள் மற்றும் 10,594 பெண் சுகாதார தன்னார்வலர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது

14) அங்கீகரிக்கப்பட்ட சமூக நல ஆர்வலர்கள் பயிற்சி (ASHA): ஆஷா பணியாளர்களுக்கு கர்ப்பகால பராமரிப்பு, பிரசவ பின்கால பராமரிப்பு, வீட்டளவிலான பச்சிளங் குழந்தைகள் பராமரிப்பு, தொற்று நோய்கள் மற்றும் தொற்றா நோய்கள் பற்றிய அடிப்படைப் பயிற்சி வழங்கப்படுகின்றது. இது அவர்களின் அறிவினை மேம்படுத்த உதவுகின்றது. இதன்மூலம் அவர்கள் பணிபுரியும் சமூகத்தினரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும். 2022-2023 ஆம் ஆண்டில் 2,650 ஆஷா பணியாளர்களுக்கு, தொற்றா நோய்கள், தொற்று நோய்கள், நரம்பியல், மன நலம் மற்றும் போதைப் பொருட்களுக்கு அடிமையாதலைத் தடுப்பது பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

15) விஷக்கடி மற்றும் நச்சு முறிவுக்கான மேம்பாட்டுப் பயிற்சி: நச்சுத்தன்மையினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்குத் தீவிர விஷமுறிவு சிகிச்சை மற்றும் தரமான மருத்துவச் சேவைகளை வழங்குவதற்காக இப்பயிற்சி மருத்துவ அதிகாரிகளுக்கு மூன்று நாட்களுக்கு வழங்கப்படுகிறது. 2014 முதல் நாளது வரை 4,409 மருத்துவ அலுவலர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

16) உயிர் காக்கும் மயக்கவியல் திறன் பயிற்சி (LSAS): அனைத்து கர்ப்பிணிப் பெண்களுக்கும் பிரசவம் மற்றும் பிரசவத்தின்போது மகப்பேறியல் சிக்கல் மற்றும் உயிருக்கு ஆபத்தான சிக்கல்கள் ஏற்படும் அபாயம் உள்ளது. முதல் பரிந்துரை நிலையங்களில் (FRU) பயிற்சி பெற்ற மருத்துவ நிபுணர்கள் முக்கியமாக மயக்க மருந்து பிரிவில் இல்லாத காரணத்தால் பிரசவ நேர அவசரக் காலங்களில் செயல்பாடு பாதிக்கப்படுகிறது. எனவே, அவசர மகப்பேறு சிகிச்சைத் தேவைப்படும் கர்ப்பிணிப் பெண்களைக் கையாள்வதற்கு முதல் பரிந்துரை நிலையங்களான அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மருத்துவர்களுக்கு அவசரக்கால மகப்பேறு சிகிச்சைக்குத் தேவையான உயிர்காக்கும் மயக்கவியல் பயிற்சி வழங்கப்பட்டு

வருகிறது. உயரிய மயக்க மருந்து சிகிச்சை அளிக்க, பிரசவ நேரத்தில் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளை இந்த உயிர் காக்கும் மயக்கவியல் பயிற்சியில் வருடத்திற்கு 48 மருத்துவ அலுவலர்களுக்கு 24 வாரங்களில் மகப்பேறு மயக்க மருந்து பயிற்சியும் மற்றும் இருதயம், மூளை மற்றும் சுவாசம் மீட்பு பயிற்சியும் 11 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் 2007 ஆம் ஆண்டு முதல் அளிக்கப்படுகிறது. இதுவரை 683 மருத்துவ அலுவலர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

17) பேறுகால அவசர சேவை பயிற்சி (EmOC): இந்த பயிற்சி உயர்தர அவசரக்கால மகப்பேறு பராமரிப்பு (EmOC) மற்றும் மருத்துவ ரீதியான சேவைகளை வழங்கி அதன்மூலம் தாய் இறப்பு மற்றும் நோயுற்ற தன்மையைத் தடுக்க ஆரம்ப சுகாதார அமைப்பில் உள்ள மருத்துவர்களுக்குப் பயிற்சி அளிப்பதாகும். அரசு மருத்துவமனைகளில் அவசரக்கால மகப்பேறு சிக்கல்களுக்குப் பாதுகாப்பான சிகிச்சை அளிக்க, 5 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் 25 வார பேறுகால அவசரக்கால சேவை பயிற்சி வருடந்தோறும் 2009 ஆம் ஆண்டு முதல் மருத்துவ அலுவலர்களுக்கு அளிக்கப்படுகிறது. இதுவரை 154 மருத்துவ அலுவலர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

18) தேசிய செவிலியர் பயிற்சி சிறப்பு மையம்: சென்னை மருத்துவக் கல்லூரியில் உள்ள தேசிய அளவிலான சிறப்பு செவிலியர் பயிற்சிக் கல்லூரி (NNC) மாநில அளவில் ஒப்புயர்வு மையமாகத் திகழ்கின்றது. இப்பயிற்சி செவிலியர்களுக்குக் கற்பித்தலை வலுப்படுத்தும் நோக்கில் அறிவு மற்றும் திறன் பயிற்சி ஆறு வார காலத்திற்கு கல்லூரிகள் மற்றும் மண்டல பயிற்சி மையங்களில் பணிபுரியும் செவிலியர் ஆசிரியர்களுக்கு கற்றுத்தரப்படுகிறது. 2016 முதல் நாளது வரை 161 செவிலியர் ஆசிரியர்களுக்கு இப்பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

19) பேறுகால உதவி செய்யும் பணியாளரை செவிலியர் பயிற்சியாளராக்கும் பயிற்சி (அடிப்படை பேறுகால உதவி பணியாளர் டிப்ளமோ படிப்பிற்கு பின்): அரசு மருத்துவக் கல்லூரிகள், மாவட்ட மருத்துவமனைகள், முதல் பரிந்துரை பிரிவுகள் மற்றும் சுகாதார மையங்களில் உள்ள மகப்பேறு பயிற்சியாளர்களால் நிர்வகிக்கப்படும் மகப்பேறு செவிலியர் பராமரிப்பு மேற்பார்வை பிரிவு (MLCU) என்ற கருத்து அறிமுகப்படுத்தப்பட்டு, தரமான பராமரிப்பு, கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பிறந்த

குழந்தைகளுக்கான மரியாதைக்குரிய பராமரிப்பை உறுதி செய்ய வழிவகை செய்கிறது. செவிலியர் கல்லூரி, அரசு சென்னை மருத்துவக் கல்லூரி, தென் மாநிலங்களுக்கான தேசிய/மாநில அளவிலான பயிற்சியை நடத்துவதற்காக பயிற்சி நிறுவனமாக நியமிக்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டில், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் முதன்மை சுகாதார நிலையங்களில் உள்ள மென்டார் செவிலியர்களில் ஆறு செவிலியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு தெலுங்கானாவில் உள்ள தேசிய மகப்பேறு பயிற்சி நிறுவனம்-பெர்னாண்டஸ் நிறுவனத்தில் ஆறு மாதங்கள் மாநில மருத்துவச் செவிலியர்களாகப் பயிற்சி பெற்றனர். மேலும் 30 செவிலியர்களுக்கு, மகப்பேறு செவிலியர் கல்வியாளர் பயிற்சி பட்டயப்படிப்பு 18 மாதங்களுக்கு மாநில மகப்பேறு பயிற்சி நிறுவனத்தில் அளிக்கப்படும். இப்பயிற்சி முடித்து வரும் மகப்பேறு செவிலியர் சுகப்பிரசவங்களை ஊக்குவிக்கும் "Midwifery Led Care Unit" எனப்படும் சிறப்பு பிரிவில் பணிபுரிவர். இவை LAQshyA சான்றளிக்கப்பட்ட மருத்துவமனைகள் குறிப்பாக ஒருங்கிணைந்த அவசரக்கால மகப்பேறு மற்றும் பச்சிளங்குழந்தை பராமரிப்பு (CEmONC) மையங்களிலும், அதிக பிரசவ சுமையுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் செயல்படும். மேலும், சென்னை சமூக மகப்பேறியல் மற்றும் கஸ்தூரிபா காந்தி அரசு மருத்துவமனையில் மகப்பேறு செவிலியர் மேற்பார்வை பராமரிப்புப் பிரிவு மகப்பேறு செவிலியர் பயிற்சிக்கான தளமாகச் செயல்படும்.

20) மாவட்ட மருத்துவமனைகளில் DNB திட்டம்: அரசு மாவட்ட மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் இடையே பாலமாகச் செயல்படுகின்றன. அரசு மாவட்ட மருத்துவமனைகளை வலுப்படுத்தும் முயற்சியாக DNB பட்டயப்படிப்பு தொடங்கப்பட்டு அதற்கு உதவித் தொகை, மனித வளங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளும் வழங்கப்படுகின்றன. இது மேலும் மக்களுக்கான மருத்துவச் சேவையின் செயல்திறனை மேம்படுத்துகிறது. சிறப்பு மருத்துவப் பிரிவுகளின் சேவையின் தரத்தை மேம்படுத்துவதன்மூலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் கிடைக்கும் சேவைகள் இரண்டாம் நிலை பராமரிப்பு சேவையை வழங்கும் அரசு மாவட்ட மருத்துவமனைகளிலேயே கிடைக்கப்பெறுகின்றது.

2023 ஏப்ரல் 18]

டிஎன்பி-ல் வழங்கப்படும் படிப்புப் பிரிவுகள்

1. டிஎன்பி முதன்மைப் படிப்பு (எம்.பி.பி.எஸ்.-க்குப் பின் 3 ஆண்டுகள் படிப்பு)
2. இரண்டாம் நிலை (முதுகலை டிப்ளமோ பின் 2 ஆண்டுகள் படிப்பு)
3. எம்.பி.பி.எஸ்.-க்கு பின் (2 ஆண்டு டிப்ளமோ படிப்பு)
4. டிஎன்பி முனைவர் படிப்பு (DrNB)
5. பெல்லோஷிப் படிப்பு (FNB)

DNB-ல் வழங்கப்படும் மருத்துவப் பிரிவுகள்

(எம்பிபிஎஸ்-க்கு பின் 3 ஆண்டுகள் படிப்பு) இரண்டாம் நிலை (முதுகலை டிப்ளமோ பின் 2 ஆண்டுகள் படிப்பு), எம்பிபிஎஸ்-க்கு பின் (2 ஆண்டு டிப்ளமோ படிப்பு)	டிஎன்பி முனைவர் படிப்பு/ பெல்லோஷிப் படிப்பு
பொது மருத்துவம்	தலையீட்டு கதிரியக்கவியல்
பொது அறுவைச் சிகிச்சை	நரம்பியல்
எலும்பு மருத்துவம்	இதயவியல்
மகப்பேறு மற்றும் மகளிர் மருத்துவம்	இரத்த குழாய் அறுவைச் சிகிச்சை
அவசர மருத்துவம்	வலி மருத்துவம்
கண் மருத்துவம்	
குழந்தை மருத்துவம்	
மயக்க மருந்தியல்	
குடும்ப மருத்துவம்	
காது, மூக்கு, தொண்டை (ENT)	
நோய் ஆய்வியல்	
கதிர்வீச்சு புற்றுநோயியல்	

[2023 ஏப்ரல் 18

இன்றைய தேதியின்படி 8 மாவட்டத் தலைமை மருத்துவமனை (DHQH), 1 தாலுகா அல்லாத அரசு மருத்துவமனை (GH) மற்றும் 9 மருத்துவக் கல்லூரிகள் (4 புதிதாக உருவாக்கப்பட்ட மருத்துவக் கல்லூரிகள்) DNB படிப்புகளை நடத்துவதற்கான, மாநிலத்தில் 201 பணியிடம் கொண்ட 17 சிறப்பு பிரிவு நடத்துவதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன.

12.20 பழங்குடியினர் நலம்:

1. **பிரசவக்கால காத்திருப்பு அறை:** தொலைதூரம் மற்றும் மலைக் கிராமத்திலுள்ள சாலை வசதி குறைபாடுகளைக் கருத்தில் கொண்டு பழங்குடியினர் வசிக்கும் மலையடிவாரங்களில் உள்ள 17 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிரசவக் காத்திருப்பு அறைகள் அமைக்கப்பட்டு பிரசவிப்பதற்காக வரும் தாய் மற்றும் உடனிருப்பவர் 7 நாட்களுக்கு தங்க வைக்கப்படுகின்றனர். பிரசவக் கால காத்திருப்பு அறையில் இலவசமாக சத்தான உணவு, கருவுற்ற தாய்க்கும் அவரது உறவினருக்கும் அவர்கள் தங்கியுள்ள 7 நாட்களுக்கும் அளிக்கப்படுகிறது. 2022-2023 ஆம் ஆண்டில், 1,509 மலைவாழ் பகுதி தாய்மார்கள் இத்திட்டத்தின்மூலம் பயனடைந்துள்ளனர்.

2. **பழங்குடியினர் மாவட்டங்களில் பரிந்துரை சேவைகள்:** நமது மாநிலத்தில், தேசிய அவசர ஊர்தி சேவை திட்டத்தின்கீழ் மருத்துவச் சிகிச்சைக்கு செல்வதற்கான சிறந்த போக்குவரத்து அமைப்பினைப் பெற்றுள்ளது. எளிதில் அணுக முடியாத பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளுக்கு விரைவில் செல்லும் பொருட்டும், தொலைதூர பயணம் செய்ய ஏற்றவாறு நான்கு சக்கர வாகனங்கள், அவசரக்கால ஊர்திக்கு உரிய அனைத்து மருத்துவ உபகரணங்களுடன் 14 மையங்களிலிருந்து இயக்கப்பட்டு வருகின்றன. இதன்மூலம் பழங்குடி மக்களை உரிய நேரத்தில் சிகிச்சைக்கு அழைத்து சென்று அவசரக்கால மருத்துவச் சேவைகளை எளிதில் பெறுவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

3. **மலைவாழ் மக்களுக்கான மருத்துவச் சேவைத் திட்டம்:** இத்திட்டத்தின்கீழ் மலைவாழ் மக்களுக்கு மருத்துவப் பரிசோதனைகள், மருந்துகள், அறுவைச் சிகிச்சை

மற்றும் உணவு இலவசமாக வழங்கப்படுகின்றது. இத்திட்டமானது மாவட்டத்திலுள்ள துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்திற்கிடையே மேற்கொள்ளப்படும் ஒப்பந்த அடிப்படையில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் பழங்குடி மக்களிடையே சுகாதாரச் சேவைகளை நாடி பெறுவதற்கான அணுகுமுறையை அதிகப்படுத்தி, அவர்களின் மருத்துவச் செலவினையும் வெகுவாகக் குறைத்துள்ளது. 2022-2023 ஆம் ஆண்டு வரை, 1189 மலைவாழ் மக்கள் இத்திட்டத்தின்மூலம் பயன்பெற்றுள்ளனர்.

4. **பழங்குடியின ஆற்றுப்படுத்துனர்கள்:** பழங்குடியினர் வசிக்கும் மாவட்டங்களில் உள்ள 10 அரசு மருத்துவமனைகளில்,பழங்குடியின ஆற்றுப்படுத்துனர்கள் (Tribal Counsellors) நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள், சுகாதாரத் துறைக்கும் பழங்குடி மக்களுக்கும் இடையே தூதுவராகச் செயல்படுவர். இவர்கள் அரசு மருத்துவ முறைகளில் சுகாதார ஆர்வலராகச் சேவை புரிந்து மருத்துவச் சேவை பற்றிய விழிப்புணர்வை பழங்குடியின மக்களிடையே ஏற்படுத்தி, அவர்கள் சமூகத்தை சுகாதாரமாகவும், ஆரோக்கியமாகவும் வாழ வழிவகை செய்கின்றனர்.

5. **சிக்கிள் செல் இரத்த சோகை நோய் திட்டம் (அரசு சாரா நிறுவனங்கள்):** பழங்குடி மக்களிடம் காணப்படும் சிக்கிள் செல் இரத்த சோகை நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் திட்டம் கோத்தகிரி, கூடலூர், குன்னூர் (நீலகிரி மாவட்டம்) மற்றும் பெரியநாயக்கன்பாளையம், காரமடை (கோவை மாவட்டம்) ஆகிய பகுதிகளில் அஸ்வினி மற்றும் நாவா என்கிற அரசு சாரா நிறுவனங்கள் வழியாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 2022-2023 ஆம் ஆண்டு வரை, 2,602 மலைவாழ் மக்கள் இத்திட்டத்தின்மூலம் பயன்பெற்றுள்ளனர்.

6. **ஹீமோகுளோபினோபதிஸ் (Hemoglobinopathies) தடுப்புத் திட்டம்:** தென்னிந்திய மாநிலங்களில், தமிழ்நாட்டில்தான் முதன்முறையாக பழங்குடி மக்களிடம் காணப்படும்

தலசீமியா மற்றும் சிக்கிள் செல் இரத்த சோகை நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிவதற்கான திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. தேசிய நலவாழ்வுக் குழுமம், சுகாதாரத் துறையின் பல்வேறு இயக்குநரகங்களுடன் இணைந்து 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பள்ளி மாணவ, மாணவிகளிடையே மற்றும் 14 வயதுக்கு மேல் உள்ள, பள்ளிக்கு செல்லாத, திருமணம் ஆகாத வளர் இளம் பருவத்தினரிடையேயும், ஹீமோகுளோபினோபதிஸ் (Hemoglobinopathies) (சிக்கிள் செல் மற்றும் தலசீமியா) நோயினைக் கண்டறியும் திட்டத்தினைப் பழங்குடியினர் வசிக்கும் 30 வட்டாரங்களில் நவம்பர் 2017 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டமானது தருமபுரி, சேலம், கிருஷ்ணகிரி, நாமக்கல், நீலகிரி, கோயம்புத்தூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, வேலூர், திருப்பத்தூர், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், ஈரோடு மற்றும் கன்னியாகுமரி ஆகிய 14 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. மரபணு மாற்றம் கண்டறியப்பட்ட நிலையில் உள்ள குழந்தைகள் மற்றும் பெற்றோருக்கு மரபணு ஆலோசனை, மாவட்ட முன் இடையீட்டு சேவை மையங்களில் (DEIC) வழங்கப்படுகிறது. 2017 ஆம் ஆண்டு முதல் 26,992 குழந்தைகள் இந்த நோய்க்காகப் பரிசோதிக்கப்பட்டு, நோய் பாதிப்பிற்கான விழுக்காடு 13% ஆக உள்ளது என அறியப்பட்டுள்ளது. பள்ளி சிறார்களுக்கான நோய் கண்டறியும் திட்டத்துடன், கூடுதலாக செப்டம்பர் 2021 முதல் கருவுற்ற தாய்மார்களுக்கான ஹீமோகுளோபினோபதிஸ் நோய் கண்டறியும் பணி 30 மலைவாழ் பகுதி வட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு இதுவரை சுமார் 29,890 கருவுற்ற தாய்மார்களுக்கு நோய் விவரம் கண்டறிப்பட்டுள்ளது.

7. ஒருங்கிணைந்த ஹீமோபிலியா மற்றும் ஹீமோகுளோபினோபதிஸ் சிகிச்சை மையங்கள்

ஹீமோபிலியா மற்றும் ஹீமோகுளோபினோபதிஸ் நோயினால் பாதிக்கப்பட்ட சிறுவர் மற்றும் பெரியோருக்குத் தொடர் சிகிச்சை மற்றும் பராமரிப்பு அளிக்கும் வகையில் ஒருங்கிணைந்த சிகிச்சை

மையங்கள் கீழ்க்கண்ட 10 அரசு மருத்துவமனைகளில் நிறுவப்பட்டுள்ளது.

1. அரசு குழந்தைகள் நல மருத்துவமனை, எழும்பூர், சென்னை-8. (ஒருங்கிணைப்பு மையம்)

2. அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சேலம்

3. அரசு தருமபுரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தருமபுரி

4. அரசு இராஜாஜி மருத்துவமனை, மதுரை

5. அரசு தேனி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தேனி

6. அரசு வேலூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, வேலூர்

7. அரசு அண்ணல் மகாத்மா காந்தி நினைவு மருத்துவமனை, திருச்சிராப்பள்ளி.

8. அரசு கன்னியாகுமரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, ஆசாரிப்பள்ளம்.

9. அரசு கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர்

10. அரசு விழுப்புரம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, விழுப்புரம்

இம்மையங்களில் தலசீமியா மற்றும் ஹீமோபிலியா நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் / பெரியோருக்கான இரத்த மாற்று சிகிச்சை/ காரணிகள் மாற்று சிகிச்சை அளிக்கப்படுகிறது. 2018 ஆம் ஆண்டு முதல் 5,230 நோயாளிகளுக்கு இரத்த மாற்று சிகிச்சை மற்றும் 7,032 நோயாளிகளுக்கு காரணி மாற்று சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

8. பழங்குடியினருக்கான நடமாடும் மருத்துவம்: பழங்குடியினருக்கான நடமாடும் மருத்துவச் சேவைகளை அதிகரிக்கும் பொருட்டு அரசு சாரா நிறுவனங்கள்மூலம் பழங்குடியினர் வாழும் 14 மாவட்டங்களில் உள்ள வட்டாரங்களில் 20 நடமாடும் மருத்துவக் குழுக்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் மருத்துவச் சேவைகள் வழங்கப்படுகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஒரு மருத்துவ அலுவலர், செவிலியர், ஆய்வக நுட்புனர் மற்றும் ஓட்டுநர் கொண்ட பழங்குடியினருக்கான நடமாடும் மருத்துவக் குழுமூலம் சிறு நோய்களுக்கான சிகிச்சை, பிறப்புக்கு முந்தைய பரிசோதனை, தொற்றா நோய்க்கான பரிசோதனை, ஆய்வக சோதனை மற்றும் இலவச மருந்துகள் வழங்குதல் போன்ற சேவைகள் வழங்கப்படுகின்றன. இவற்றைத் தவிர, வட்டார அளவில் 10 ஆம் மற்றும் 12 ஆம் வகுப்பு படிக்கும் பழங்குடியினர் மற்றும் பழங்குடியினர் அல்லாத வளர் இளம் பருவ மாணவர்கள் மற்றும் பள்ளிக்குச் செல்லாத திருமணம் ஆகாத அனைத்து 14 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் ஹீமோகுளோபினோபதிஸ் பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. 2022-2023 ஆம் ஆண்டு வரை இந்த 20 நடமாடும் மருத்துவக் குழு 11,799 பழங்குடி மலை கிராமங்களுக்கு சென்று, 2,80,294 நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்துள்ளது.

12.21 நடமாடும் மருத்துவமனைத் திட்டம் (MMU): மாநிலம் முழுவதும் ஏற்கெனவே செயல்படும் 406 நடமாடும் மருத்துவக் குழு வாகனங்கள் நடமாடும் மருத்துவமனைகளாக ஆய்வக வசதிகளுடன் கிராமப்புற ஏழை, எளிய மக்களுக்குத் தரமான மருத்துவச் சேவைகள் வழங்கி வருகின்றன. தற்போதுள்ள 406 நடமாடும் மருத்துவக் குழுக்களில் கிராமப்புறங்களில் 396 நடமாடும் மருத்துவக் குழுக்களும், மாநகராட்சிகளில் 10 நடமாடும் மருத்துவக் குழுக்களும் செயல்பட்டு வருகின்றன. இந்த நடமாடும் மருத்துவமனைத் திட்டத்தின்மூலம் உயர்ந்த மருத்துவச் சேவையை வழங்குவதுடன், சிறந்த தாய்-சேய் நலன், தொற்றா நோய்களுக்குச் சிறப்பு கவனம் அளித்து ஒவ்வொரு வட்டாரத்திலும் 40 முகாம்கள் வரையறுக்கப்பட்ட பயணத் திட்டத்தின்படி நடத்தப்படுகிறது. இக்குழு சிகிச்சை அளிக்கும் நாள் மற்றும் நேரம் தகவல் பலகையில் பொதுமக்கள் வசதிக்காகத் தெரிவிக்கப்படும். அதிக இடர்பாடுடைய தற்காலிகக் குடியிருப்புகள் நிறைந்த பகுதிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. 2022-2023 ஆம் ஆண்டில், தற்போதுள்ள நடமாடும் மருத்துவ வாகனங்களுக்குப் பதிலாக 387 புதிய நடமாடும் மருத்துவ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதுவரை, 406 நடமாடும் மருத்துவமனைத் திட்டதின்மூலம் 2,09,256 முகாம்கள் நடத்தப்பட்டு, 1,61,52,823 பயனாளிகள் இச்சேவைகளைப் பெற்றுள்ளனர்.

2023 ஏப்ரல் 18]

12.22 கிராம சுகாதார தன்னார்வலர்கள் (ஆஷா): *2,650 பயிற்சியளிக்கப்பட்ட கிராம சுகாதார தன்னார்வலர்கள் (ஆஷா) பழங்குடியினர் பகுதி/மலைப்பகுதி/தொலைதூரம்/ கடினமான இடத்தில் வசிக்கும் மக்களுக்குக் கர்ப்பகால பராமரிப்பு, பிரசவத்திற்கு பின் பராமரிப்பு, வீட்டளவிலான பச்சிளம் குழந்தை பராமரிப்பு, தடுப்பூசிப் பணிகள், தொற்று நோய் கண்டறிதல், அனைத்து சமூகத்தினரையும் கிராம சுகாதார ஊட்டச்சத்து தினத்தன்று அழைத்து சென்று அடிப்படை சுகாதாரச் சேவைகளை வழங்குகின்றனர். இச்சேவைகளை மேற்கொள்வதற்காகக் கிராம சுகாதாரத் தன்னார்வலர்களுக்கு மருந்துகள், சீருடை, பை, குடை, டார்ச் லைட் போன்றவை வழங்கப்படுகிறது. மேலும், கிராம சுகாதாரத் தன்னார்வலர்களுக்குச் செயல்திறன் அடிப்படையிலான ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.*

12.23 மருத்துவமனை தர உத்தரவாதத் திட்டங்கள்:

1) **தேசிய தர உத்தரவாதத் திட்டம் (NQAS)** *தேசிய உத்தரவாத சான்றிதழ் திட்டம் தற்பொழுது மாவட்டத் தலைமை மருத்துவமனை, துணை மாவட்ட மருத்துவமனை, சமூக சுகாதார மையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையம், நலவாழ்வு மையம் ஆகியவற்றின் தரத்தை மேம்படுத்தவும், அவை சான்றிதழ் பெற வைப்பதற்கான பணிகள் தற்பொழுது நடைமுறையில் உள்ளன. மூன்று ஆண்டுகளுக்கான இச்சான்றிதழ் அதைத் தொடர்ந்து மீண்டும் ஆய்விற்கு உட்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான நெறிமுறைகளின்படி தகுதியை நிறைவு செய்யும் மருத்துவ நிலையங்களுக்கு சான்றளிக்கப்பட்ட ஆண்டிலும் மற்றும் அதற்கு அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கும் செயல்பாட்டில் உள்ள படுக்கை ஒன்றுக்கு ரூ.10,000/- வீதம் ஊக்க நிதி அளிக்கப்படுகிறது. 2018 ஆம் ஆண்டிலிருந்து 337 மருத்துவ நிலையங்கள் தேசிய தரச் சான்றிதழ் விதிமுறைகள் மற்றும் தர நிர்ணயங்களின்படி தேசிய அளவில் சான்றிதழ் பெற்றுள்ளன. 2022-23 ஆம் ஆண்டில் 3 மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், 17 துணை மாவட்ட மருத்துவமனைகள், 34 சமூக சுகாதார மையங்கள் 114 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 35 நகர்ப்புற மருத்துவ நிலையங்கள் உள்ளிட்ட 203*

மருத்துவ நிலையங்கள் தேசிய அளவில் சான்றிதழ்கள் பெற்றுள்ளன.

2) **காயகல்ப் சான்றிதழ் திட்டம்:** காயகல்ப் சான்றிதழ் திட்டம் அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனை, துணை மாவட்ட மருத்துவமனை, சமூக சுகாதார மையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையம்-நலவாழ்வு மையம் ஆகியவற்றில் நடைமுறைப்படுத்தப்பட்டு மற்றும் கண்காணிக்கப்பட்டு வருகிறது, மருத்துவமனை பராமரிப்பு, சுகாதாரம், கழிவு மேலாண்மை, தொற்று கட்டுப்பாடு நடைமுறைகள், துணை சேவைகள், சுகாதாரத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றை ஊக்குவிப்பதை இத்திட்டம் உறுதி செய்கிறது. 2022-23 ஆண்டில் 2,616 மருத்துவ நிலையங்களில் காயகல்ப் திட்டத்தில் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

3) **முஸ்கான் (Musqan):** முஸ்கான் சான்றிதழ் என்பது குழந்தைகள் நோயின் தன்மை மற்றும் இறப்பைக் குறைப்பதற்காக மருத்துவமனையில் குழந்தைகளுக்கு அடிப்படையிலான சேவைகள் வழங்குவதை உறுதி செய்வதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு புதிய முயற்சியாகும். தேசிய தர உத்தரவாதத் திட்டத்தின்படி (NQAS) பராமரிப்பு தரத்தை (QOC) மேம்படுத்துவதற்காக 2022-23 ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட 17 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், 12 மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், 6 துணை மாவட்ட மருத்துவமனைகள் மற்றும் 5 சமூக சுகாதார மையங்கள் உள்ளடக்கிய 40 மருத்துவ நிலையங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. மேற்குறிப்பிட்டபடி மருத்துவ நிலையங்களின் மருத்துவ அலுவலர்கள் மற்றும் செவிலியர்களுக்குத் தக்க பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. 2023-24 ஆம் ஆண்டில் மேற்கண்ட 40 மருத்துவ நிலையங்கள் உள்மதிப்பீடு செய்யப்பட்டு, மாநில மதிப்பீடுகள் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

4) **சுமன் (SUMAN):** சுமன் என்பது கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பிறக்கும் குழந்தைகளின் இறப்புகளை

முற்றிலுமாகத் தடுக்க துவங்கப்பட்டுள்ள ஒரு திட்டம். தேசிய தரச் சான்றிதழ் வழங்கப்படும் பராமரிப்பின் தரத்தை உறுதி செய்வதற்கும் சுமன் நிலையங்களின் தரத்தை மேலும் நிலை நிறுத்துவதற்கும் தேசிய தர உறுதிச் சான்றிதழ் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதில் முதல்கட்டமாக 163 சுமன் சுகாதார துணை நிலையம் மற்றும் நலவாழ்வு மையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆய்விற்காக உட்படுத்தப்பட்டுள்ளன. 2023-24 ஆம் ஆண்டில் 50 சுகாதார துணை நிலையம் மற்றும் நலவாழ்வு மையங்கள் உள்மதிப்பீடு செய்யப்பட்டு, மாநில மதிப்பீடுகள் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

5) **எனது மருத்துவமனை (Mera Aspataal):** எனது மருத்துவமனை என்பது குறுஞ்செய்தி சேவை (SMS), வெளிச்செல்லும் அழைப்பு (OBD), கைப்பேசி பயன்பாடு மற்றும் இணைய முகப்பு போன்ற பயன்பாட்டாளர்களுக்கு எளிதான பல இணைப்புகள்மூலம் அரசு மருத்துவமனைகளில் பெறப்பட்ட சேவைகளுக்கான நோயாளிகளின் கருத்துகளைப் பெறுவதற்கான ஒரு முயற்சியாகும். நோயாளிகள் கடந்த 7 நாட்களில் பார்வையிட்ட மருத்துவமனைகளுக்கான கைப்பேசி செயலி மற்றும் இணைய முகப்பில் நோயாளி தமிழ் மொழியில் கருத்துகளைச் சமர்ப்பிக்கலாம். அனைத்து மாவட்ட மருத்துவமனைகள் (சென்னை நீங்கலாக), எனது மருத்துவமனையில் உருவாக்கப்பட்ட நோயாளிகளின் மன நிறைவு மதிப்பெண்ணை அடிப்படையாகக் கொண்டு மாவட்ட மருத்துவமனைகளின் தரவரிசை முறையின்கீழ் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. நோயாளியின் திருப்தி, மதிப்பெண் நோயாளியால் நிர்ணயிக்கப்பட்டு பொறுப்பேற்பதற்குரிய சுகாதார அமைப்பை உதவுகிறது. ("எனது மருத்துவமனை" தொடர்பாக பயன்பாட்டைப் புனரமைக்கும் பணியில் ஒன்றிய அரசாங்கம் உள்ளது). கருத்துகளின் தரவு நடப்பு ஆண்டிலிருந்து பெறப்பட்டு "எனது மருத்துவமனை" தொடர்பான விண்ணப்பங்களை புனரமைக்கும் பணியில் ஒன்றிய அரசு ஈடுபட்டுள்ளது.

6) **மருத்துவமனையின் சுத்தம் பராமரிப்பு நடவடிக்கை (Clean Hospital Campaign):** *மாநில மற்றும் மாவட்ட அளவில் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, துணை மாவட்ட மருத்துவமனை, சமூக சுகாதார மையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களின் சுத்தம் மற்றும் சுகாதாரத்தை மருத்துவமனைகளில் உள்ள அனைத்துப் பிரிவுகளிலும் பராமரிக்கவும், அந்த நிலையை தக்கவைத்துக் கொள்ளவும் குழுக்கள் அமைத்து அவற்றைக் கண்காணிக்க அரசு ஜனவரி 2023-ல் அரசாணை வெளியிட்டுள்ளது. அதன்படி பராமரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

12.24 ஆரோக்கிய வாழ்விற்கான சமூக நடவடிக்கை (CAH): *ஆரோக்கிய வாழ்விற்கான சமூக நடவடிக்கை மக்களை மையமாகக் கொண்டு சமூகத்தின் சுகாதாரத் தேவைகள் மற்றும் அதைச் சார்ந்த உரிமைகளைப் பூர்த்தி செய்வதை உறுதி செய்யும் ஒரு திட்டமாகும். இதன்மூலம் தேசிய நலவாழ்வு குழுமத்தினால் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்களின் பயன்களை மக்கள் எளிதில் பெறவும், சமூகத்தில் ஏற்படும் முன்னேற்றத்தைத் தீவிரமாகவும், தொடர்ச்சியாகவும் கண்காணிக்க வழிவகை செய்யப்படுகிறது. இதன் விளைவாக சமூகத்தின் பங்களிப்பு மற்றும் சுகாதாரச் சேவைகள் வலுப்படுத்தப்படுகிறது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்கீழ் இயங்கும் மகளிர் சுய உதவிக் குழுக்கள்மூலம் சமூக கண்காணிப்பு செயல்முறையை உருவாக்குவதும், சமூக ஆதரவு கட்டமைப்புகளை வலுப்படுத்தவும், அனைத்து இயக்குநகரங்களுடனும் ஒருங்கிணைந்து மாநிலத்தில் கண்காணிப்பதற்கான ஒரு வழிமுறையை அமைப்பதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.*

- *ஜன் ஆரோக்ய சமிதி* (JAS)*: ஆயுஷ்மான் பாரத் நலவாழ்வுத் திட்டத்தின்கீழ்* (AB-HWC) *ஜன் ஆரோக்ய சமிதி* (JAS) *அறிமுகப்படுத்தப்படும். இது உள்கட்டமைப்பு மற்றும் சேவைகளின் தன்மை மற்றும் தரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளைச் செயல்படுத்தவும், பொது சுகாதார அமைப்பில் சேவை வழங்குபவர்களின் பொறுப்புக் கூறலை மேம்படுத்தவும் உருவாக்கப்பட்டுள்ளது. ஜன் ஆரோக்ய சமிதி* (JAS)

என்பது ஆரோக்கியத்தை ஜனநாயகப்படுத்துவதற்கும், சுகாதாரப் பராமரிப்பில் பொதுமக்களின் பங்கேற்பை ஊக்குவிப்பதற்கும் உதவுகிறது. ஜன் ஆரோக்ய சமிதி (JAS), செயல்படுத்துவதன் நோக்கம், அனைத்து உறுப்பினர்களுக்கும் தரமான சேவையை வழங்குவதை உறுதி செய்ய வசதியாகவும் நிர்வாகத்தில் மக்களின் பங்களிப்பை ஊக்குவிப்பதற்கும் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பைத் தேடுவதில் அவர்களின் குறைகளைத் தீர்ப்பதாகும். ஜன் ஆரோக்ய சமிதி (JAS) மாநிலத்தில் செயல்படுத்தப்படவுள்ள ஆரோக்கிய வாழ்விற்கான சமூக நடவடிக்கை (CAH) திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்படும்.

12.25 முறைசாரா தொழிலாளர்களுக்கான தொழில்சார் சுகாதாரச் சேவைகள்: 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி அமைப்பு சாரா தொழிலாளர்கள் 93 சதவிகிதம் உள்ளனர். அவர்கள் தொழில் சார்ந்த நோய்களான சிலிக்கோசிஸ் (Silicosis), அஸ்பேஸ்டாஸிஸ் (Asbestosis), காது கேளாமை, எரிச்சலுடன்கூடிய தோல் வியாதி (Irritant Dermatitis), தண்டுவட கோளாறு (Spondylosis) போன்றவற்றால் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு, அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு அனைத்து வட்டாரங்களிலும் நடமாடும் மருத்துவக் குழுக்களின்மூலம் தொழில்சார் சுகாதாரச் சேவைகள் வழங்க ஆணை பிறப்பித்துள்ளது. நடமாடும் மருத்துவக் குழுக்கள் ஒவ்வொரு சனிக்கிழமையும் அமைப்பு சாரா தொழிலாளர் பணிபுரியும் இடங்களுக்குச் சென்று மருத்துவச் சேவைகள் வழங்குகின்றன. மேலும் மாதத்தின் முதல் வியாழக்கிழமை அல்லது ஒரு வேலை நாளில், தொழில்சார் சுகாதாரச் சேவைகளை வழங்குகின்றனர். பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையின்கீழ் 35 மற்றும் சென்னை மாநகராட்சியின்கீழ் 15 ஆக மொத்தம் 50 நடமாடும் மருத்துவக் குழுக்கள்மூலம் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு அவர்கள் பணியிடத்திலேயே தொழில்சார் சுகாதாரச் சேவைகள் வழங்க தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதற்கான நிதி ஆதாரம் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையால் அளிக்கப்பட்டு தேசிய நலவாழ்வு குழுமத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2022-2023 ஆம் ஆண்டில் 3,56,753 அமைப்பு சாரா தொழிலாளர்கள் பரிசோதிக்கப்பட்டு, அவர்களில் தொழிற்சார் நோய்கள் கண்டறியப்பட்ட

9,406 தொழிலாளர்கள் உயர் பரிசோதனை மற்றும் சிகிச்சைக்கு மாவட்ட மருத்துவமனைகளுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

12.26 மூன்றாம் பாலினத்தவர் சிகிச்சை மையங்கள்: மூன்றாம் பாலினத்தவரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, அரசு ராஜாஜி மருத்துவமனை, மதுரை, அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சேலம், திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருநெல்வேலி, வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை,வேலூர் மற்றும் விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, விழுப்புரம் ஆகியவற்றில் சிறப்பு மூன்றாம் பாலினத்தவருக்குச் சிகிச்சை மையங்களை அரசு நிறுவியுள்ளது. மூன்றாம் பாலினத்தவர்களுக்கான பன்னோக்கு சிகிச்சை மையங்கள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நடத்தப்படுகிறது. 2022-2023 ஆம் ஆண்டில் 2,361 மூன்றாம் பாலினத்தவர்கள் இந்த சிகிச்சை மையங்களின்மூலம் பயனடைந்துள்ளனர்.

12.27 தேசிய வாய் சுகாதாரத் திட்டம் (NOHP): வாய் சுகாதாரம் என்பது உடல் சுகாதாரத்தில் மிக முக்கியப் பங்கு வகிக்கும் ஒன்றாகும். தேசிய வாய் சுகாதாரத் திட்டத்தின் முதன்மை நோக்கம் பொதுமக்களுக்கு தரமான பல் மருத்துவச் சேவைகளை வழங்குவதற்காக 477 பல் மருத்துவப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு, மருத்துவச் சேவைகளை வழங்குவதற்கான உபகரணங்கள், பொருட்கள் மற்றும் நுகர்பொருட்களை உள்ளடக்கியபோதுமான உள்கட்டமைப்பை தேசிய நலவாழ்வு குழுமம் வழங்கி வருகிறது. 2022-2023 ஆம் ஆண்டில் 13,46,636 பயனாளிகளுக்கு பல் சிகிச்சை சேவைகள் வழங்கப்பட்டுள்ளது.

12.28 பிரதம மந்திரியின் தேசிய இரத்த சுத்திகரிப்பு திட்டம் (PMDNP): தற்போதைய காலகட்டத்தில் வாழ்க்கை முறை, மரபணு காரணிகள் இன்னும் வேறுபல காரணங்களாலும், நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்த நோய் அதிகரித்து வருகிறது. நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்த நோய்கட்டுப்பாட்டில் இல்லையெனில் நாள்பட்ட சிறுநீரக நோய் ஏற்பட வாய்ப்பு உள்ளது. நாளடைவில் சிறுநீரகம் முழுவதாக செயலிழந்து, உயிர் வாழ இரத்த சுத்திகரிப்பு சிகிச்சை அவசியம் என்ற நிலை ஏற்படும். தமிழ்நாடு அரசு, சிறுநீரக நோயாளிகளின் பயன்பாட்டிற்காக, 38 அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளிலும், 83 மாவட்ட அரசு மருத்துவமனைகளிலும் மற்றும் சென்னை

2023 ஏப்ரல் 18]

மாநகராட்சியின் கீழுள்ள 7 ஆரம்ப சுகாதார நிலையங்கள் உட்பட 128 மையங்களில் 1,080 இரத்த சுத்திகரிப்பு (Dialysis) *இயந்திரங்கள் செயற்படுத்தி வருகின்றது. ஏப்ரல் 2022 முதல் டிசம்பர் 2022 வரை 4,77,722 இரத்த சுத்திகரிப்பு சிகிச்சைகள் 11,093 நோயாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டோரின் காத்திருப்பு நேரத்தை குறைப்பதுற்கு மேலும் 50 இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் மாவட்ட மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட உள்ளது. மேலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் முதன்மைத் திட்டமான “மக்களை தேடி மருத்துவம்’ திட்டத்தின்கீழ், அரசு மருத்துவமனைகளில் பெரிடோனியல் டயாலிசிஸ் சிகிச்சை பெறும் 220 சிறுநீரக நோயாளிகளுக்கு வீடு தேடி பெரிடோனியல் டயாலிசிஸ் திரவ பைகள் வழங்கப்படுகின்றன.*

12.29 தேசிய நகர்ப்புற சுகாதார குழுமம் (NUHM): *நகர்ப்புற வாழ் மக்களின் தேவைகள் மற்றும் பல்வேறு சுகாதார தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு தேசிய சுகாதார குழுமத்தின்மூலம் 21 மாநகராட்சிகள் மற்றும் 73 நகராட்சிகளில் ஒவ்வொரு 50,000 மக்கள் தொகைக்கு ஒரு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையமும்* (UPHC), *2,50,000 மக்கள் தொகைக்கு ஒரு நகர்ப்புற சமுதாய நல மையம்* (UCHC), *முதல் பரிந்துரை மையமாக நிறுவப்பட்டுள்ளன. இது வரை தேசிய சுகாதார குழுமத்தின்மூலம் 416 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள், 39 நகர்ப்புற சமுதாய சுகாதார நல மையங்கள் மற்றும் 3 தாய்-சேய் நல மையங்கள் நிறுவப்பட்டு அவை நகர்ப்புற நலவாழ்வு மையங்களாக மாற்றப்பட்டுள்ளன.*

மாநகராட்சி / நகராட்சி	நகரங்களின் எண்ணிக்கை	நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை	நகர்ப்புற சமுதாய நல மையங்களின் எண்ணிக்கை	தாய்சேய் நல மையங்களின் எண்ணிக்கை	மொத்த சுகாதார நிலையங்கள்
பெருநகர சென்னை மாநகராட்சி	1	140	16	3	159
இதர மாநகராட்சி	20	178	22	0	200

மாநகராட்சி / நகராட்சி	நகரங்களின் எண்ணிக்கை	நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்-களின் எண்ணிக்கை	நகர்ப்புற சமுதாய நல மையங்-களின் எண்ணிக்கை	தாய்சேய் நல மையங்-களின் எண்ணிக்கை	மொத்த சுகாதார நிலையங்கள்
இதர நகராட்சி	77	98	1	0	99
மொத்தம்	98	416	39	3	458

1. நகர்ப்புறங்களில் ஆரம்ப சுகாதாரச் சேவைகளை வலுப்படுத்துவதற்காக, 2022-23 ஆம் நிதியாண்டில் கீழ்க்காணும் புதிய நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன.

- 34 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு (UPHC) புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு தலா ரூ.120.00 இலட்சம் வீதம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள 4 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தலா ரூ.60.00 லட்சம் வீதம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியிலும், இதர மாநகராட்சி மற்றும் நகராட்சியிலும் 73 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ஒரு இயந்திரத்துக்கு 12 இலட்சம் வீதம், அல்ட்ராசோனாகிராம் இயந்திரங்கள் வழங்கி கர்ப்பிணி தாய்மார்களுக்கு சிறப்பான பேறுகால மருத்துவக் கண்காணிப்பு வழங்க வழிவகுக்கப்பட்டது.

- நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் நோய் கண்டறியும் பயன்பாட்டுக்காக 10 சிடிஜி, 32 ஈ.சி.ஜி இயந்திரம் மற்றும் 10 இரத்த சேகரிப்புக்கான குளிர்சாதன பெட்டி ஆகிய மருத்துவ உபகரணங்கள் மொத்தமாக ரூ.67 இலட்சம் பொருட்செலவில் வழங்கப்பட்டுள்ளன.

- மாநகராட்சி பகுதிகளின் விரிவாக்கம் காரணமாக சமூக அளவிலான சுகாதாரச் சேவைகளை வழங்குவதற்கான 21 நகர உள்ளாட்சி அமைப்புகளில் புவியியல் தகவல் அமைப்பு மேப்பிங்கைப் பயன்படுத்தி

2023 ஏப்ரல் 18]

எல்லைகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

- *ஆய்வகச் சேவைகளை வலுப்படுத்துவதற்கும், ஆய்வகத் தகவல் மேலாண்மை அமைப்பின் (LIMS) கீழ் அறிக்கையிடுவதற்கும் அனைத்து 458 சுகாதார மையங்களுக்கும் கணினி, லேசர் அச்சு இயந்திரம் மற்றும் பார்கோடு ரீடர் ஆகியன வழங்கப்பட்டுள்ளன.*
- *நகர்ப்புறங்களில் டெலி மெடிசின் சேவைகளை செயல்படுத்த, மாநிலத்தின் ஒவ்வொரு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும், நகர்ப்புற சமுதாய நல மையங்களுக்கும் காணொலி பொருட்கள் (வீடியோ கான்பரன்ஸ்) வழங்கப்பட்டுள்ளன.*

2. **பன்னோக்கு சிறப்பு மருத்துவச் சேவைகள்:** *பன்னோக்கு சிறப்பு மருத்துவ சிகிச்சை என்பது நகர்ப்புற மக்களுக்கு ஏற்படும் செலவினங்களைக் குறைப்பதற்காக பல சிறப்பு மருத்துவச் சேவைகளை வழங்குவதற்காக தமிழ்நாட்டில் உள்ள 128 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் நிறுவப்பட்ட ஒரு மாலை வேளை வெளிநோயாளர் சேவை ஆகும். ஆலோசனைகள், மருத்துவ ஆய்வுகள் மற்றும் மருந்துகள் வழங்குதல் ஆகியவை இந்த சேவைகளில் அடங்கும். அவை கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின்படி மாலை 4.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை வழங்கப்பட்டு வருகின்றன:*

நாள்	சிறப்பு மருத்துவம்
திங்கள்	பொது மருத்துவம் மற்றும் தோல்நோய்
செவ்வாய்	மகப்பேறு மற்றும் பல் மருத்துவம்
புதன்	குழந்தை நலம் மற்றும் கண் மருத்துவம்
வியாழன்	எலும்பு மற்றும் இயன்முறை மருத்துவம்
வெள்ளி	காது, மூக்கு, தொண்டை மற்றும் பல் மருத்துவம்
சனி	மன நல மருத்துவம்

3. **மக்களைத் தேடி மருத்துவம்:** *தமிழ்நாடு அரசின் முதன்மை திட்டமான மக்களைத் தேடி மருத்துவம்*

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து 21 மாநகராட்சிகள் மற்றும் 103 நகராட்சிகளில் 2,256 பெண் சுகாதார தன்னார்வலர்களுடன் (WHVs) நகர்ப்புற மக்களின் வீட்டிற்கு சென்று பரிசோதனை செய்தல் மற்றும் தொற்றா நோய்களுக்கான மருந்துகளை விநியோகம் செய்தல். மேலும் செவிலியர் மற்றும் இயன்முறை மருத்துவர்களைக் கொண்ட 78 நடமாடும் குழுக்கள் உருவாக்கப்பட்டு, நோய்த் தடுப்பு சிகிச்சை, இயன்முறை மருத்துவம் மற்றும் சிறுநீரக நோயாளிகளை பராமரித்தல் ஆகியன செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்மூலம் 31.03.2023 வரை 1,00,46,429 நோயாளிகள் முதல் கட்ட மருத்துவச் சேவைகளை பெற்றுள்ளனர். இவற்றில், உயர் இரத்த அழுத்த நோயாளிகள், நீரிழிவு நோயாளிகள், உயர் இரத்த அழுத்தம் (ம) நீரிழிவு இரண்டும் உள்ள நோயாளிகள், நோய் ஆதரவு, இயன்முறை மருத்துவம் மற்றும் சிறுநீரக சிகிச்சை ஆகியவை அடங்கும். இத்திட்டத்தின்மூலம் 2,76,90,102 நோயாளிகள் தொடர் சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர்.

4. **15–வது நிதிக்குழு:** நகர்ப்புற சுகாதாரம் (ம) நலவாழ்வு மையம் மற்றும் ஆய்வக உள்கட்டமைப்புகளை நகர்ப்புறங்களில் ஏற்படுத்துவதற்கு இந்திய அரசு 2021–2026 ஆம் நிதியாண்டிற்கு 15-வது நிதிக்குழு ரூ.4,280 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. அனைவருக்கும் நல்வாழ்வு எனும் திட்டத்தின் நோக்கம், தரமான மற்றும் அத்தியாவசிய மருத்துவச் சேவையை மிகுந்த பொருட்செலவு இல்லாமல் சாதாரண குடிமக்கள் மற்றும் பிற்படுத்தப்பட்ட குடிமக்களிடம் கொண்டு போய் சேர்ப்பது ஆகும். இந்நோக்கத்தை செயல்படுத்தவும், நகர்ப்புறங்களில் வசிக்கும் குடிமக்களின் நலனை காக்கவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நகர்ப்புறங்களில் வசிக்கும் ஏழை எளிய மக்களின் சுகாதார தேவைகளை மேம்படுத்திட, சட்டப்பேரவை 110 விதியின்கீழ் 07.05.2022 அன்று அறிவிப்புகளை வெளியிட்டார்கள். அதன்படி தமிழ்நாட்டில் 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் அமைத்திட

உத்தரவிட்டார்கள். அதற்கிணங்க தலா ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் ரூ.177 கோடி செலவில் தமிழ்நாடு முழுவதும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் முதற்கட்டமாக 500 மையங்களில் மருத்துவர், செவிலியர், சுகாதார ஆய்வாளர் மற்றும் தூய்மைப் பணியாளர் உள்ளிட்ட குழுவினர் காலை மற்றும் மாலை நேரங்களில் ஆரம்ப சுகாதாரச் சேவைகளை 20,000 முதல் 25,000 மக்கள் வசிக்கும் பகுதிகளில் அவர்களின் இல்லங்களுக்கு அருகாமையில் மருத்துவச் சேவைகளை வழங்குவார்கள். இத்திட்டத்தின்மூலம் நகர்ப்புறங்களில் வசிக்கும் ஏழை எளிய மக்கள் தங்கள் நோய்களுக்கான ஆரம்பசிகிச்சைகளை பொருள் செலவின்றி மற்றும் அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்காமல் சிகிச்சைகள் பெற்று பயன்பெற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழிவகை செய்தார்கள்.

12.30 ஒருங்கிணைந்த அவசிய ஆய்வக சேவைகள்: அனைத்து அரசு சுகாதார நிலையங்களிலும் தரமான மற்றும் மேம்படுத்தப்பட்ட ஆய்வக சேவைகள் வழங்குவதை உறுதி செய்வதற்காக ஒருங்கிணைந்த அவசிய ஆய்வக சேவைகள் திட்டமானது மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆய்வகங்களை மேலும் வலுப்படுத்தும் வகையில், ஆய்வகங்களின் பரிசோதிக்கும் திறனை அதிகப்படுத்த, பொருத்தமான மற்றும் சாத்தியமான முறையில் மாதிரிகளை பரிசோதிக்கத் தேவையான ஆய்வக உபகரணங்கள் மற்றும் நுகர்பொருட்கள் இத்திட்டத்தின்மூலம் வழங்கப்பட்டுள்ளது. அனைத்து ஆய்வகங்களையும் ஒருங்கிணைத்து, ஆய்வக செயல்திறனைக் கண்காணிக்கவும், உபகரணங்களின் செயல்பாடு, நுகர்பொருட்களின் பயன்பாடு, மற்றும் ஆய்வக மாதிரிகளை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்வதை கண்காணிக்கவும் ஆய்வக தகவல் மேலாண்மை அமைப்பு (Laboratory Information Management System) அனைத்து சுகாதார நிலையங்களிலும் நிறுவப்பட்டுள்ளது. Hub and Spoke முறையின்மூலம் ஆய்வக மாதிரிகளை பரிசோதனை செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இதன்மூலம் spoke நிலை ஆய்வகங்களில் இருந்து உயர்நிலை ஆய்வகங்களுக்கு (HuB) மாதிரிகள் பரிசோதனைக்கு கொண்டு செல்லப்படுவதுடன்,

மாதிரிகள் சேகரிக்கப்பட்ட இடத்திலேயே நோயாளிகளுக்கு முடிவுகள் வழங்கப்படுவதால், நோயாளிகள் வெவ்வேறு இடங்களுக்கு செல்வது தவிர்க்கப்பட்டு சரியான நேரத்தில் விரைவான சேவைகளை வழங்க ஏதுவாகிறது. ஆய்வகங்களின் செயல்திறனை கண்காணிக்கவும், மதிப்பீடு செய்யவும் மற்றும் மேம்படுத்தவும் தரக்கட்டுப்பாட்டு அமைப்புடன் (Quality Assurance) அனைத்து ஆய்வகங்களும் இணைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் தரமான ஆய்வக சேவைகளை வழங்குவதை இத்திட்டம் உறுதி செய்கிறது.

12.31 ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்பு திட்டம் (IDSP)

1. ஒருங்கிணைந்த சுகாதார தகவல் தளம் (IHIP): ஒருங்கிணைந்த சுகாதார தளம் (IHIP) 1.4.2021-ல் ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்பு திட்டத்தை (IDSP) மறு சீரமைப்பு செய்து தொடங்கப்பட்டது. அனைத்து அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் நோய் பரவும் பகுதிகளில் S படிவங்களில் சந்தேகத்திற்குரிய நோய்கள் / அறிகுறிகள் பற்றிய விவரங்கள், P படிவங்களில் நோய் சாத்தியக்கூறுகள் / மருத்துவ முறையில் நோயறிதல்மூலம் பெறப்பட்ட விவரங்கள் மற்றும் L படிவங்களில் ஆய்வக அறிக்கைகள்மூலம் உறுதி செய்யப்பட்ட நோய்கள் பற்றிய விவரங்கள் பதிவு செய்யப்பட்டு, தீவிர நோய் பரவலுக்கான சாத்தியக்கூறுகள் இருப்பின் அவற்றை முன் கூட்டியே கணித்து, அது குறித்த விவரங்களை மாவட்ட அளவிலான நோய் கண்காணிப்பு குழுக்களுக்கு தெரிவித்து நோய் பரவல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதில் முக்கிய பங்காற்றுகிறது.

2. மாவட்ட பொது சுகாதார ஆய்வகம் (DPHL):

- மாவட்ட பொது சுகாதார ஆய்வகங்கள் குறித்த நேரத்தில் நோய் பரிசோதனைமூலம் நோய் பரவலை கண்டறிந்து அவற்றை தடுப்பதில் முக்கியப் பங்காற்றுகின்றன, இதனால் சமூகத்தில் நோயுறும் தன்மை மற்றும் இறப்பு விகிதம் குறைகிறது.
- தமிழ்நாட்டில் தற்போது 32 DPHL ஆய்வகங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும் 6 புதிய DPHL ஆய்வகங்கள் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட ஆறு வருவாய் மாவட்டங்களில் (தென்காசி, செங்கல்பட்டு,

2023 ஏப்ரல் 18]

திருப்பத்தூர், மயிலாடுதுறை, கள்ளக்குறிச்சி மற்றும் இராணிப்பேட்டை) நிறுவப்பட்டு வருகிறது.

- DPHL *ஆய்வகங்கள் பரிசோதனை மாதிரிகளை சேகரித்து அவற்றை பரிசோதிக்கும் மையங்களாகும். மாதிரிகளை உயர் பரிசோதனை கூடங்களுக்கு அனுப்பி வைக்கும் மையங்களாகவும் செயல்பட்டு வருகின்றன.*

- *பரிசோதனைகளை மேற்கொள்வதன்மூலம் குறிப்பிட்ட இடங்களில் அதிக அளவு நோய் பரவல் இருப்பின் அவற்றை முன்கூட்டியே கணித்து எச்சரிக்கை சமிக்கைளை அனுப்புவதற்கும்* (EWS) *உதவுகிறது.*

- *மேலும் நீர் பகுப்பாய்வு, அறுவைச் சிகிச்சை அரங்குகளில் தொற்று நீக்கம், தொழில்நுட்புனர்களுக்கு பயிற்சி வழங்குதல், மருத்துவக் கழிவு மேலாண்மை மற்றும் மருத்துவமனைகளில் தர மேலாண்மை ஆகியவற்றில் உதவுகின்றது.*

12.32 தொலைதூர மருத்துவம் (Telemedicine): *(தேசிய சேவை- இ-சஞ்சீவனி, தொலைதூர மருத்துவம்) நோயாளிகள் தாங்கள் இருக்குமிடத்திலிருந்து மருத்துவர்களுடன் காணொலிமூலம் நிகழ்நேரத்தில் சிகிச்சை தொடர்பாக ஆலோசனை பெறுவதற்காக இ-சஞ்சீவினி தொலைதூர மருத்துவச் சேவைதிட்டம் செயல்படுத்தப்படுகிறது. இணையவழியில் நடைபெறும் மருத்துவ ஆலோசனைகளின் முடிவில், இ-சஞ்சீவனி மின்னணு செயலிமூலம் வழங்கப்படும் மருந்துகளுக்கான பரிந்துரை சீட்டினைக் கொண்டு தேவையான மருந்துகளை பெற்றுக்கொள்ளலாம். இந்திய அரசாங்கத்தின் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின்கீழ் மருத்துவர்களுக்கு இடையேயான தொலைதூர இணைய தளமான இ-சஞ்சீவனியானது, அனைத்து சுகாதார மற்றும் ஆரோக்கிய மையங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. இ-சஞ்சீவனி சேவைகள் மூலமாக, தமிழ்நாட்டில் 1,18,46,483 மருத்துவ ஆலோசனைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இ-சஞ்சீவனி புறநோயாளிகள் பிரிவு சேவை என்பது பொதுமக்கள் நேரடியாக தொலை மருத்துவச் சேவைகளை பெறுவதற்கு செயல்படுத்தப்பட்டு வரும் திட்டமாகும். இதுவரை, 17.47 இலட்சத்துக்கும் மேற்பட்ட மருத்துவ ஆலோசனை மற்றும் சிகிச்சை இ-சஞ்சீவனி புறநோயாளிகள் பிரிவில் பதிவு செய்யப்பட்டுள்ளன.*

இ-சஞ்சீவனி மூலமாக 1.35 கோடிக்கும் மேற்பட்ட தொலைதூர மருத்துவ ஆலோசனைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. e-Sanjeevani 2.0 ஏப்ரல் 2023 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. e-Sanjeevani 2.0, தொழில்நுட்பம் மற்றும் புதுமை ஆகிய இரண்டிலும் ஏராளமான புதிய அம்சங்களுடன் மேம்படுத்தப்பட்டுள்ளது.

12.33 சுகாதார மேலாண்மை தகவல் திட்டம் (HMIS)

(1) தமிழ்நாட்டில் சுகாதாரத் துறையின் தரவு மேலாண்மைக்காக HMIS செயலி பயன்படுத்தப்பட்டு வருகிறது. HMIS இல் நான்கு கூறுகள் உள்ளன.

1. **மருத்துவமனை மேலாண்மை திட்டம் (HMS):** HMS-ன் மூலமாக, வெளிநோயாளிகள் மற்றும் உள்நோயாளிகள் ஆகிய இரு நோயாளிகளின் தினசரி நிகழ்நேர தரவுகள் பதிவேற்றப்படுகின்றன. ஆய்வகப் பரிசோதனைகள் மற்றும் சிகிச்சை விவரங்களுடன் கூடிய நோயாளிகளின் வரிசைப் பட்டியல் இதில் அடங்கும்.

2. **மேலாண்மை தகவல் திட்டம் (MIS):** MIS என்பது மாதாந்திர அல்லது வாராந்திர அறிக்கையிடல் ஆகும். மேலும், நோயாளியின் விவரங்கள் வரிசைப் பட்டியல் அடிப்படையில் இல்லாமல் மொத்தமாக பதிவேற்றப்படுகின்றன. நோயாளி விவரங்கள் தவிர கூடுதலாக, சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் உள்கட்டமைப்பு, மனித வளங்கள், நிதி விவரங்கள் மற்றும் தளவாடங்கள் பதிவேற்றப்படுகின்றன.

3. **கல்லூரி மேலாண்மை திட்டம் (CMS):** இது பல்வேறு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்திற்கான சேர்க்கை, பதிவு எண் ஒதுக்கீடு, தேர்வு நுழைவுச்சீட்டு, மதிப்பெண் பட்டியல் தயாரித்தல், முடிவுகள் வெளியீடு, விருதுகள், சான்றிதழ்கள் மற்றும் இட ஒதுக்கீடு ஆகியவற்றிற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

4. **பல்கலைக்கழக தானியங்கு திட்டம் (UAS):** இது தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தால் மனித வள மேலாண்மை, கொள்முதல் மேலாண்மை

2023 ஏப்ரல் 18]

திட்டம் மற்றும் கணக்குகள் மற்றும் கோப்பு மேலாண்மை திட்டம் போன்ற உள் செயல்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

12.34 மக்கள் தொகை சுகாதாரப் பதிவேடு (PHR): மக்கள் தொகை சுகாதாரப் பதிவேடு (PHR), டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் பலன்களை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் ஒரு சுகாதாரப் பாதுகாப்பு முன்முயற்சியாக ஒரு விரிவான சுகாதாரத் தகவல் தொழில்நுட்பத் தளமாக நிறுவப்பட்டுள்ளது. இந்த மக்கள் தொகை சுகாதார பதிவேடு PHR நவம்பர் 2021 இல் ஆரம்பிக்கப்பட்டது. தரவு சார்ந்த முடிவை செயல்படுத்துவதற்காக மாநிலத்தில் வசிக்கும் அனைத்து குடிமக்களுக்கும் தனிப்பட்ட சுகாதார அடையாள (UHID) எண்ணை வழங்கும் கருத்தின் அடிப்படையில் இந்த முயற்சி நிறுவப்பட்டது. மக்கள்தொகை சுகாதாரப் பதிவேடு அனைத்து சுகாதாரம் மற்றும் தொடர்புடைய பயன்பாடுகளுக்கு 'ஒற்றை ஆதாரமாக' செயல்படும், இது அனைத்து சுகாதாரச் சேவைகள் மற்றும் திட்டங்களுக்கு ஒரு பொதுவான வகுப்பைக் கொண்டுவருவதையும் பல்வேறு நிலைகளில் சுகாதார நிகழ்வுகளை டிஜிட்டல் மயமாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. மக்கள் தொகை சுகாதாரப் பதிவேட்டு அமைப்பின் தரவு நிர்வாகத்தின் முக்கியக் கொள்கைகள் பின்வருமாறு:

- ஒருமுறை மட்டுமே தரவு சேகரிப்பு
- பூஜ்ஜிய அறிவு ஆதாரம்–அடிப்படையிலான முன்கணிப்பு சேவை வழங்கல்

உருவாக்கப்பட்ட PHR பயன்பாடுகள்

- இணைய நிர்வாகி
- இணைய நிர்வாக டாஷ்போர்டு:
- கைபேசி பயன்பாடு:

12.34.1 முன்மாதிரி சோதனைத் திட்டம்: PHR செயலியின் வளர்ச்சிக்குப் பிறகு, 7 ஜூலை 2021 அன்று விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள கண்டமங்கலம் வட்டாரத்தில்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

முன்மாதிரி சோதனை மேற்கொள்ளப்பட்டது, அங்கு முழு தொகுதியிலும் SFDB சரிபார்ப்பு மேற்கொள்ளப்பட்டது. 25 ஏப்ரல் 2022 முதல் உலக வங்கியின் ஆதரவுடன் TNHSRP இன் DLI இன்கீழ், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் PHR செயலியை அமல்படுத்த மறுமுடிவெடுக்கப்பட்டு கிருஷ்ணகிரி மாவட்டத்தில், மாவட்டம் முழுவதும் SFDB சரிபார்ப்பு செய்யப்பட்டு, கிருஷ்ணகிரியில் உள்ள வேப்பனப்பள்ளி தொகுதியில் PHR செயலி சோதனை முறையில் செயல்படுத்தப்படுகிறது. இதுவரை, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள கத்திரிப்பள்ளி HSC இல் 90% மற்றும் ஒட்டுமொத்தமாக 30%-ம் மக்கள் தரவுதளத்தில் சரிபார்க்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளது. இது முடிந்ததும், PHR செயலியைப் பயன்படுத்தி சரிபார்ப்பு மற்றும் வீடு வீடாக நடத்தப்படும் சோதனை ஆகியவற்றை தமிழ்நாட்டின் பிற மாவட்டங்களுக்கு படிப்படியாக விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

12.34.2 PHR HMIS மற்றும் ABHA உடன் ஒருங்கிணைப்பு: எதிர்காலத்தில் PHR செயலியை HMIS-2.0 மற்றும் ABHA எண்களுடன் ஒருங்கிணைக்கப்படுவதற்கான செயல்கள் நடைபெற உள்ளது. இதன் மூலமாக இந்தியா முழுவதும் உள்ள பல்வேறு மருத்துவமனைகளில் நோயாளியின் சிகிச்சையின் முழு தகவல்களைப் பெற இது உதவும்.

12.35 பதினைந்தாவது நிதி ஆணைய தொகுப்பு—சுகாதாரத் துறை மானியம்—15th FC: ஒன்றிய அரசு, பதினைந்தாவது நிதி ஆணையத்தின்கீழ் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்மூலம் சுகாதாரத் துறையில் குறிப்பிட்ட செயல்பாடுகளை மேம்படுத்த நிதி ஒதுக்கியுள்ளது. இந்த மானியத்தின்மூலம், 2021-22 நிதியாண்டு முதல் 2025-26 நிதியாண்டு வரையிலான ஐந்தாண்டு காலத்திற்கு அடிப்படை சுகாதார சீரமைப்புகளை மேற்கொள்ளவும், சுகாதார மையங்களை மேம்படுத்தவும் வழி வகை செய்யப்பட்டுள்ளது. பதினைந்தாவது நிதி ஆணையத்தின் பரிந்துரையின்படி, புதிய திட்டங்களை செயல்படுத்த மாநிலம் மற்றும் மாவட்ட அளவிலான செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய 5 வருட காலத்திற்கு பதினைந்தாவது நிதி ஆணையத்தின்கீழ் தமிழ்நாட்டிற்கு ரூ.4280 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2021-22 நிதியாண்டிற்கு ரூ.805.93 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது.

2023 ஏப்ரல் 18]

மேலும், 2022-23 நிதியாண்டிற்கு ரூ.801.21 கோடி ரூபாய் நிதி கீழ்க்கண்டவாறு துறை சார்ந்த செயல்பாடுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது:

வ. எண்	**மானிய விவரம்**	**2021-22 (ரூபாய் கோடியில்)**	**2022-23 (ரூபாய் கோடியில்)**	**செயல்படுத்தும் துறைகள்**
FR*3.1*	துணை சுகாதார நிலையங்களில் நோய் ஆய்வக உள் கட்டமைப்புகளை வலுப்படுத்துதல்	*64.16*	*64.16*	
FR.*3.2*	ஆரம்ப சுகாதார நிலையங்களில் நோய் ஆய்வக உள் கட்டமைப்புகளை வலுப்படுத்துதல்	*69.25*	*69.25*	மருத்துவம்– மக்கள் நல்வாழ்வுத்துறை
FU.*1*	நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் நோய் ஆய்வக உள் கட்டமைப்புகளை வலுப்படுத்துதல்	*18.75*	*18.88*	
FU.*2*	நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களை நலவாழ்வு மையங்களாக மேம்படுத்துதல்	*356.48*	*356.35*	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
FR.*2*	வட்டார அளவிலான பொது சுகாதார அலகுகள் அமைத்தல்	*77.47*	*72.75*	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 18

வ. எண்	மானிய விவரம்	2021-22 (ரூபாய் கோடியில்)	2022-23 (ரூபாய் கோடியில்)	செயல்படுத்தும் துறைகள்
FR.1	ஆரம்ப மற்றும் துணை சுகாதார நிலையங்களுக்கான புதிய கட்டடங்கள்	71.21	71.20	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
FR.4	கிராமங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களை நலவாழ்வு மையங்களாக மாற்றியமைத்தல்	148.61	148.61	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
	மொத்தம்	805.93	801.21	

2023-2024 ஆம் நிதியாண்டில், பதினைந்தாவது நிதி ஆணையத்தின்கீழ் திட்ட வழிகாட்டுதல்களின்படி 846 கோடி ரூபாய்க்கான திட்டங்கள் ஒன்றிய அரசுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

12.36 பிரதமர் ஆயுஷ்மான் பாரத் சுகாதார உள்கட்டமைப்பு இயக்கம் (Ayushman Bharat): *பிரதம மந்திரியின் ஆயுஷ்மான் பாரத் சுகாதார உள்கட்டமைப்பு இயக்கம் 2021 அக்டோபரில் ஒன்றிய அரசால் தொடங்கப்பட்டது. இது 2021-22 நிதியாண்டு முதல் 2025-2026 ஆம் நிதியாண்டு வரையிலான அடுத்த 5 ஆண்டுகளில் நீண்டகால பொது சுகாதார உள்கட்டமைப்பை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துவதற்கான நாடு முழுவதற்குமான திட்டமாகும். இது ஒன்றிய அரசின் பங்கு (983.57 கோடி ரூபாய்), மாநில அரசின் பங்கு (655.72 கோடி ரூபாய்) மற்றும் 15-வது நிதி குழுவின் பங்கு (1362 கோடி ரூபாய்) என மொத்தம் 3001.29 கோடி ரூபாய் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு செலவிடப்படும். மேற்கண்ட தொகையில், 2021-2022ஆம் நிதி ஆண்டிற்கு ரூ.116.30 கோடியும், 2022-2023ஆம் நிதி ஆண்டிற்கு ரூ.216.30 கோடியும் குறிப்பிட்ட இனங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தேசிய சுகாதார குழுமத்தின் தற்போதைய கட்டமைப்பு, நிறுவனங்கள்*

2023 ஏப்ரல் 18]

மற்றும் வழிமுறைகள்மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படும். திட்டத்தின் செயல்பாடுகள் பின்வருமாறு:

1. *நகர்ப்புறங்களில் ஆயுஷ்மான் பாரத்–சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய மையங்கள்* (AB-HWCs) *அமைத்தல்.*
2. *ஒருங்கிணைந்த மாவட்ட பொது சுகாதார ஆய்வகங்கள் அமைத்தல்*
3. *100 படுக்கைகள் மற்றும் 50 படுக்கைகள் கொண்ட வட்டார அவசர கால கவனிப்பு மருத்துவமனைகள் அமைத்தல்.*

மேலும், 2021-22 மற்றும் 2022-23 நிதியாண்டிற்கு கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது:

மானிய விவரம்	2021-22		2022-23	
	எண்ணிக்கை	ரூபாய் (கோடியில்)	எண்ணிக்கை	ரூபாய் (கோடியில்)
ஒருங்கிணைந்த மாவட்ட பொது சுகாதார ஆய்வகங்கள்	*4*	*5.00*	*8*	*10.00*
100 படுக்கைகள் கொண்ட வட்டார அவசர கால கவனிப்பு மருத்துவமனைகள்	*1*	*40.05*	*1*	*40.05*
50 படுக்கைகள் கொண்ட வட்டார அவசர கால கவனிப்பு மருத்துவமனைகள்	*1*	*23.75*	*3*	*71.25*
50 படுக்கைகள் கொண்ட வட்டார அவசர கால கவனிப்பு மருத்துவமனைகள்	*2*	*47.50*	*4*	*95.00*
மொத்தம்	*8*	*116.30*	*16*	*216.30*

[2023 ஏப்ரல் 18

2023-24, 2024-25 மற்றும் 2025-26 ஆகிய நிதியாண்டுகளுக்கு, பிரதம மந்திரியின் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின்கீழ் ரூபாய் 698.98 கோடிக்கு திட்டங்கள் ஒன்றிய அரசுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அத்தியாயம்—13

தமிழ்நாடு நகர்ப்புற சுகாதாரத் திட்டம்

13.1 *நகர்ப்புறங்களில் அமைந்துள்ள அரசு மருத்துவமனைகளை அணுகும் ஏழை நடுத்தர மக்களுக்கு, உயர்தர மருத்துவச் சேவைகளை வழங்குவதற்காக "தமிழ்நாடு நகர்ப்புற சுகாதாரத் திட்டத்தை" ஜப்பான் சர்வதேசக் கூட்டுறவு முகமையின் நிதியுதவியுடன் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.*

i. *நகர்ப்புற மருத்துவமனைகளுக்கு மேம்படுத்தப்பட்ட வசதிகள் மற்றும் உயர் மருத்துவக் கருவிகள் வழங்க வலுப்படுத்தல் மற்றும்*

ii. *தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் மருத்துவ மனிதவளத்தை வலுப்படுத்துதல் ஆகிய நடவடிக்கைகள்மூலம் இத்திட்டத்தின் நோக்கம் நிறைவேற்றப்படும்.*

13.2 இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோள்

i. *இதய நாளநோய், புற்றுநோய், நாள்பட்ட சுவாச நோய்கள், நீரிழிவு போன்ற நோய்களுக்கு நவீன சிகிச்சைகள் வழங்குவதன்மூலம் தொற்றா நோய்களுக்கான சிகிச்சைகளை மேம்படுத்துதல்.*

ii. *மருத்துவமனைகளில் பழைய கட்டமைப்பு வசதிகளைச் சீரமைத்து 'நோய் கண்டறிதல் பிரிவு மையம்' ஆக மாற்றுவதன்மூலம் மருத்துவமனைகள் எதிர்கொள்ளும் சிக்கல்களைத் தீர்த்து, அவற்றின் தரத்தை மேம்படுத்தி, நீண்டகால பெருந்திட்டம் வகுத்து, நோயாளிகளின் பாதுகாப்பு மற்றும் திறமையான மருத்துவமனை நிருவாகத்தை ஏற்படுத்துவது.*

iii. *ஜப்பானிய மருத்துவத் தொழில்நுட்பங்களுடன்கூடிய உயர்ரக அறுவைச் சிகிச்சை அரங்கம் மற்றும் நவீன*

2023 ஏப்ரல் 18]

ஆஞ்சியோ பரிசோதனைகள் ஆகியவற்றை ஊக்குவிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம், சர்வதேச தரத்திலான அறுவைச் சிகிச்சை அரங்கம் மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவுகளை வடிவமைத்து செயல்படுத்தவும், இதற்காக ஒப்புயர்வுமிக்க வசதிகளை அமைத்தல் மற்றும் அந்த வசதிகளைப் பராமரித்தல் ஆகியவற்றை மேற்கொள்ளவும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

13.3 தமிழ்நாடு நகர்ப்புற சுகாதாரத் திட்டமானது ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் (JICA) நிதியுதவியுடன் ரூ.1,634 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் JICA கடன் பங்கு ரூ.1,388 கோடி (85%) மற்றும் மாநிலப் பங்கு ரூ.245.6 கோடி (15%) ஆகும். இந்தத் திட்டம் ஜூலை 2024 வரை எட்டு ஆண்டுகளுக்குச் செயல்படுத்தப்படவுள்ளது.

13.4 திட்ட நடவடிக்கைகள்

13.4.1 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளை மேம்படுத்துதல்

நவீன கட்டடங்கள் மற்றும் உயர் தொழில்நுட்ப உபகரணங்களுடன் மூன்று மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளை வலுப்படுத்துதல்.

வ. எண்	மருத்துவமனைகள்	கட்டட செலவு (ரூபாய் கோடி.)	கருவிகள் செலவு (ரூபாய் கோடி)	மொத்தம் செலவு (ரூபாய் கோடி)
1.	அரசு ராஜாஜி மருத்துவமனை, மதுரை.	187.79	125.46	313.25
2.	அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சென்னை	196.66	162.21	358.87
3.	அரசு கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர்	168.96	122.60	287.56
	மொத்தம்	549.41	410.27	959.68

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

13.4.1.1 கட்டடப் பணிகள்

i. மதுரை, அரசு ராஜாஜி மருத்துவமனை, G+6 தளங்கள் (22580 சதுர மீட்டர்) கொண்ட பல மாடிக் கட்டடத்துடன் ரூ.187.79 கோடியில் 22 ஆபரேஷன் தியேட்டர்கள் +1 ஹைப்ரிட் ஆபரேஷன் தியேட்டர் அமைத்தல்.

ii. அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சென்னை G+6 தளங்கள் (24,973 சதுர மீட்டர்) கொண்ட பல மாடிக் கட்டடத்துடன் ரூ.196.66 கோடியில் 12 ஆபரேஷன் தியேட்டர்கள் +1 ஹைப்ரிட் ஆபரேஷன் தியேட்டர்.

iii. கோயம்புத்தூர், அரசு கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, G+6 தளங்கள் (20,617 சதுர மீட்டர்) கொண்ட பல மாடிக் கட்டடத்துடன். ரூ.168.96 கோடியில் 9 ஆபரேஷன் தியேட்டர்கள் அமைத்தல்.

இரத்தநாள அறுவைச் சிகிச்சை, இதயம் மற்றும் நெஞ்சக நோய் பிரிவு, ஒட்டு உறுப்பு அறுவைச் சிகிச்சைப் பிரிவு, சிறுநீரக நோய், காது மூக்கு தொண்டைப் பிரிவு, குழந்தைகள் நல அறுவைச் சிகிச்சைப் பிரிவு, ஹைபிரிட் அறுவைச் சிகிச்சை அரங்கம், ஆஞ்சியோகிராபி அறைகள், அறுவைச் சிகிச்சைக்கு முந்தைய சிகிச்சைப் பிரிவு, நோய் தீவிர சிகிச்சைப் பிரிவு, அறுவைச் சிகிச்சைக்குப் பிந்தைய சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றுக்கான OT மையம் கொண்ட மேம்படுத்தப்பட்ட அறுவை அரங்கம் (OT), மயக்க மருந்து சிகிச்சைப் பிரிவு, இமேஜிங் மையம், போன்றவை மதுரை, கீழ்ப்பாக்கம் மற்றும் கோவையில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

13.4.1.2 மருத்துவக் கருவிகள்

நவீன அறுவைச் சிகிச்சை அரங்கம் மற்றும் நவீன கருவிகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதில் அறுவைச் சிகிச்சை அரங்கத்திற்கான மயக்க மருந்து கருவிகள், C-Arm எக்ஸ்ரே கருவி, Endoscopes, Hybrid OT கருவிகள், IVR அமைப்பு, Biplane Angiography அமைப்பு, MRI, CT ஸ்கேன், இன்ட்ரா ஏர்டிக் பலூன் பம்ப் (IABP), வீடியோ எண்டோஸ்கோபி சிஸ்டம், சிஆர்ஆர்டி, ஃப்ளோரோஸ்கோபியுடன்கூடிய டிஜிட்டல் எக்ஸ்ரே போன்றவை

2023 ஏப்ரல் 18]

மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வழங்கப்பட உள்ளன.

13.4.2 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளை வலுப்படுத்துதல்

நவீன உயர் தொழில்நுட்ப மருத்துவக் கருவிகள் வழங்கி 11 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மூன்று மாவட்டத் தலைமை மருத்துவமனைகளை வலுப்படுத்துதல்.

வ. எண்	மருத்துவமனைகள்	மதிப்பீடு ரூ.
1.	வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை	23,61,00,000
2.	திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை	22,36,00,000
3.	கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை	16,92,00,000
4.	சேலம் எம்.கே.எம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை	25,92,00,000
5.	தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை	14,90,00,000
6.	மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனை, திருச்சி	26,60,00,000
7.	தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை	31,87,00,000
8.	புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை	10,28,00,000
9.	திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை	5,04,00,000
10.	கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை	4,82,00,000

[2023 ஏப்ரல் 18

வ. எண்	மருத்துவமனைகள்	மதிப்பீடு ரூ.
11.	திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை	4,72,00,000
12.	மாவட்டத் தலைமை அரசு மருத்துவமனை, ஈரோடு	5,70,00,000
13.	மாவட்டத் தலைமை அரசு மருத்துவமனை, பெரியகுளம்	2,47,00,000
14.	மாவட்டத் தலைமை அரசு மருத்துவமனை, கடலூர்	5,77,00,000
	மொத்தம்	200,98,00,000

மேற்கண்ட மருத்துவமனைகளுக்கு வழங்கப்படும் மருத்துவக் கருவிகளில் இமேஜிங் பிரிவில் சி.டி. ஸ்கேன் கருவி, மேமோகிராபி போன்ற கதிரியக்கக் கருவிகள் மற்றும் காஸ்ட்ரோஃபைபர்ஸ்கோப் கருவி, ஆப்பரேட்டிங் மைக்ரோஸ்கோப், அல்ட்ராசவுண்ட் ஸ்கேன், சி-ஆர்ம், எக்ஸ்ரே மெஷின் போன்ற மருத்துவக் கருவிகளுடன்கூடிய எண்டோஸ்கோபி மையம் ஆகியவை அடங்கும். மேலும், சேலம், வேலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, தூத்துக்குடி, கன்னியாகுமரி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி மற்றும் திருப்பூரில் உள்ள 11 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் ஈரோடு, கடலூர் மற்றும் பெரியகுளத்தில் உள்ள 3 மாவட்டத் தலைமை மருத்துவமனைகளுக்கு சி.டி ஸ்கேன், டிஜிட்டல் ஃப்ளோரோஸ்கோபி, எண்டோஸ்கோபி, இமேஜிங் துறைக்கான காஸ்ட்ரோ-ஃபைபர்ஸ்கோப் மற்றும் சி-ஆர்ம், எக்ஸ்ரே பிரிவு, மயக்க மருந்து கருவி போன்றவை வழங்கப்பட்டுள்ளன.

13.4.3 மாவட்ட மருத்துவமனைகளை வலுப்படுத்துதல்

நவீன கட்டடங்கள் மற்றும் உயர் தொழில்நுட்ப உபகரணங்களுடன் நான்கு மாவட்ட மருத்துவமனைகளை வலுப்படுத்துதல்.

2023 ஏப்ரல் 18]

வ. எண்	மருத்துவமனைகள்	கட்டட செலவு (ரூபாய் கோடி)	கருவிகள் செலவு (ரூபாய் கோடி)	மொத்தம் செலவு (ரூபாய் கோடி)
1	அரசு மருத்துவமனை, ஆவடி	37.90	10.12	48.02
2	அரசு மருத்துவமனை, வேலம்பாளையம்	40.83	6.73	47.56
3	அரசு புற மருத்துவமனை, அம்மாபேட்டை (சேலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையுடன் இணைக்கப்பட்டது)	38.88	6.13	45.01
4	அரசு புற மருத்துவமனை, கண்டியப்பேரி (திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையுடன் இணைக்கப்பட்டது)	39.71	6.79	46.50
	மொத்தம்	157.32	29.77	187.09

13.4.3.1 கட்டடப் பணிகள்

மேற்கண்ட மருத்துவமனைகளில் கட்டப்படும் பல மாடிக் கட்டடங்களில் உள் நோயாளிகள் பிரிவு, அறுவைச் சிகிச்சைப் பிரிவு, அவசரச் சிகிச்சைப் பிரிவு, பொது மருத்துவம் மற்றும் அறுவைச் சிகிச்சைக்கான வெளிநோயாளர் பிரிவு, மகப்பேறு மற்றும் மகளிர் மருத்துவம், குழந்தை மருத்துவம், காது, மூக்கு, தொண்டை மற்றும் கண் மருத்துவம், விரிவான அவசர மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தை பராமரிப்புப் பிரிவு ஆகியவை அடங்கும். சீமாங் (CEmONC) மற்றும் நோய்வாய்ப்பட்ட புதிதாகப் பிறந்த குழந்தைகள் பராமரிப்புப் பிரிவு (SNCU), விபத்து சிகிச்சைத் துறை போன்றவை அமைக்கப்படுகின்றன.

13.4.3.2 மருத்துவக் கருவிகள்

மேற்குறிப்பிட்ட மருத்துவமனைகளுக்குப் படுக்கைகள், உள்நோயாளிகள் பிரிவினை மேம்படுத்துதல், அறுவைச் சிகிச்சை

[2023 ஏப்ரல் 18

மேசைகள், அனஸ்தீசியா மயக்கக் கருவி, புறநோயாளர் பிரிவில் பல் மருத்துவக் கருவி, கார்டியோடோகோகிராபி, ரேடியன்ட் வார்மர், SNCU மற்றும் CEmONC-ல் வென்டிலேட்டர், விபத்து பிரிவில் டிஃபிபிரிலேட்டர், டிஜிட்டல் எக்ஸ்ரே கருவி கணினி உடன்கூடிய எக்ஸ்ரே ஆகிய நவீன கருவிகள் வழங்கப்படுகின்றன.

13.4.4 மருத்துவமனை நிர்வாகத்தை வலுப்படுத்துதல்

மருத்துவமனை நிர்வாகத்தை வலுப்படுத்தும் விதமாக இத்திட்டத்தின்மூலம் பின்வரும் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

i. மருத்துவர்களுக்கான மருத்துவமனை மேலாண்மைப் பயிற்சி, செவிலியர்களுக்கான செவிலியர் மேலாண்மைப் பயிற்சி மற்றும் அமைச்சுப் பணியாளர்களுக்கான அலுவலக நடைமுறைகள் பயிற்சி

ii. மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த நுட்புனர்களுக்கான மருத்துவக் கருவி பராமரிப்புப் பயிற்சி

iii. மருத்துவர்கள், செவிலியர்கள், மகளிர் சுகாதாரத் தன்னார்வலர்கள் மற்றும் ஆய்வக நுட்புனர்களுக்கான தொற்றா நோய்த் தடுப்புத் திட்டத்தில் பயிற்சி

iv. மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட மருத்துவமனைகளில் அவசரச் சிகிச்சைப் பிரிவில் பணிபுரியும் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கான விபத்து, காயம் மற்றும் அவசரச் சிகிச்சைப் பயிற்சி.

பயிற்சித் திட்டங்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

பயிற்சிகள்	பயிற்சி பெறுபவர்	பயிற்சி நிறுவனம்	பயிற்சி பெறுவோர் எண்ணிக்கை	மதிப்பீடு ரூ.
மருத்துவமனை நிர்வாகம்	மருத்துவர்கள், செவிலியர்கள், அமைச்சுப் பணியாளர்கள்	அண்ணா நிர்வாக பயிற்சி நிறுவனம்	1620	3,34,98,000

2023 ஏப்ரல் 18]

பயிற்சிகள்	பயிற்சி பெறுபவர்	பயிற்சி நிறுவனம்	பயிற்சி பெறுவோர் எண்ணிக்கை	மதிப்பீடு ரூ.
மருத்துவக் கருவிகள்	மருத்துவர்கள், செவிலியர்கள் மருந்தாளுனர்கள் ஆய்வக நுட்புனர்கள் எக்ஸ்ரே நுட்புனர்கள் அறுவை அரங்க உதவியாளர்கள்	தமிழ்நாடு மருத்துவச் சேவைக் கழகம்	*1870*	*1,39,50,775*
தொற்றா நோய்கள்	மருத்துவர்கள், செவிலியர்கள் மருந்தாளுனர்கள் ஆய்வக நுட்புனர்கள்	தேசிய சுகாதார குழுமம்	*10,930*	*2,92,06,163*
அவசரக்கால சிகிச்சை	மருத்துவர்கள், செவிலியர்கள்	தேசிய சுகாதார குழுமம், தமிழ்நாடு சுகாதார சங்கம் TAEI பிரிவு	*440*	*57,20,688*
ஆர்த்ரோஸ்கோபி பயிற்சி	மருத்துவர்கள்,	தமிழ்நாடு அரசு பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை ஓமந்தூரார் சென்னை	இரண்டு முடநீக்கவியல் மருத்துவர்கள் – மூன்று மாதத்திற்கான பயிற்சி வீதம் மொத்தம் ஏழு தொகுதிகள்	–
மொத்தம்				*8,23,75,626*

13.4.5 தொற்றா நோய்களில் பொது சுகாதாரத் துறையின் பயிற்சி மையங்களை மேம்படுத்துதல்: பொது சுகாதாரத் துறையின்

[2023 ஏப்ரல் 18

பூந்தமல்லியில் உள்ள பயிற்சி நிறுவனம் மற்றும் மதுரையில் உள்ள சுகாதாரம் மற்றும் குடும்ப நலப் பயிற்சி மையத்திற்கு ரூ.2,98,33,974/– செலவில் சுகாதார வல்லுநர்களுக்குத் தொற்றா நோய்களுக்கான தடுப்பு முறைகள், பரிசோதனை, சிகிச்சை மற்றும் தொடர் சிகிச்சை குறித்த பயிற்சிகளை வலுப்படுத்தும் விதமாக சிறப்பு பயிற்சிக் கருவிகள் வழங்கப்படவுள்ளன.

பயிற்சிக் கருவிகள்: உடற்கூறியல் மாதிரிகள், மேம்பட்ட செவிலியர் பயிற்சி மாதிரிக் கருவிகள் (Mannequin), கணினி, மடிக்கணினி, ஊசி பயிற்சி மாதிரி, நரம்பு கண்டறிந்து உறிஞ்சும் சிமுலேட்டர், இதய மற்றும் நுரையீரல் புத்துயிர் வழங்கும் சிகிச்சை மாதிரிக் கருவி போன்ற நவீனக் கருவிகள் வழங்கப்படுகின்றன.

13.5 திட்டத்திற்கான செயல்பாடுகள்

- இத்திட்டத்திற்கான மருத்துவக் கருவிக் கொள்முதல்கள் ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமை வழிகாட்டுதல்படி தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்படுகின்றன.
- கட்டடப் பணிகள் பொதுப் பணித் துறைமூலம் நடைபெற்று வருகின்றன.

13.6 திட்டப் பயன்கள்

திட்டம் செயல்படுத்தப்படும் மருத்துவமனைகளில் ஏழை, எளிய மக்களுக்கு,

i. அதிக எண்ணிக்கையில் மேம்பட்ட அறுவைச் சிகிச்சைகள் மற்றும் பரிசோதனைகள் நடைபெறும்.

ii. உயர்நிலை சிகிச்சைக்கான நோய் கண்டறியும் செயல்பாடுகள் பல மடங்கு அதிகரிக்கும்.

iii. உயர் மருத்துவமனைகளுக்குத் தேவையற்ற நோயாளிகளைப் பரிந்துரைத்தல் வெகுவாகக் குறைந்துவிடும்.

iv. டயாலிசிஸ் நடைமுறைகளின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரிக்கும்.

2023 ஏப்ரல் 18]

v. *உள் நோயாளிகள் அதிக அளவில் அனுமதிக்கப்பட்டு படுக்கை பயன்பாடு விகிதம் (BOR) அதிகரிக்கும்.*

vi. *சிறந்த உள்கட்டமைப்பு மற்றும் உயர் மருத்துவக் கருவிகள் இருப்பதால் நோயாளிகள் உயர்தர சேவைகளைப் பெறுவார்கள்.*

vii. *அதிக எண்ணிக்கையிலான சிறப்பு மருத்துவர்கள், செவிலியர்கள், தொழில்நுட்புனர்கள் உயர்நிலை நடைமுறைகள் மற்றும் தரமான பராமரிப்பில் பயிற்சி பெறுவார்கள்.*

viii. *நோயாளிகளின் சில்லறை செலவினங்களைக் குறைத்து, முழுமையான தரமான சிகிச்சை வழங்கப்படும்.*

ix. *பணியாளர்களின் செயல்திறன் அதிகரிக்கும்.*

13.7 திட்ட நடவடிக்கைகளின் முன்னேற்ற நிலை

பகுதி	செயல்பாடு	முன்னேற்ற நிலை
	கட்டடப் பணிகள்	
1.1.1	*மதுரை, அரசு ராஜாஜி மருத்துவமனையில் கூடுதலாக பன்னடுக்கு மாடிக் கட்டடம் (டவர் பிளாக்) கட்டுதல்*	*80%*
1.1.2	*சென்னை – கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கூடுதலாக பன்னடுக்கு மாடிக் கட்டடம் (டவர் பிளாக்) கட்டுதல்*	*88%*
1.1.3	*கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கூடுதலாக பன்னடுக்கு மாடிக் கட்டடம் (டவர் பிளாக்) கட்டுதல்*	*72%*
3.1.1	*அரசு மருத்துவமனை ஆவடியில் அடுக்கு மாடிக் கட்டடம் கட்டுதல்*	*85%*
3.1.2	*அரசு மருத்துவமனை வேலம்பாளையத்தில் (திருப்பூர்) அடுக்கு மாடிக் கட்டடம் கட்டுதல்*	*80%*

பகுதி	செயல்பாடு	முன்னேற்ற நிலை
3.1.3	சேலம், அம்மாபேட்டையில் அடுக்கு மாடிக் கட்டடத்துடன் அரசு மருத்துவமனை நிறுவுதல்	65%
3.1.4	அரசு மருத்துவமனை கண்டியப்பேரியில் (திருநெல்வேலி) அடுக்கு மாடிக் கட்டடம் கட்டுதல்	69%
	மருத்துவக் கருவிகள்	
1	மூன்று அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு உயர் தொழில்நுட்ப உபகரணங்களை வழங்குதல் (கீழ்ப்பாக்கம்-சென்னை, கோயம்புத்தூர், மதுரை)	தமிழ்நாடு மருத்துவச் சேவைக் கழகத்தில் கொள்முதல் செயல்பாட்டில் உள்ளது.
2	11 மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகள் மற்றும் 3 மாவட்டத் தலைமை மருத்துவமனைகளுக்கு உயர் தொழில்நுட்பக் கருவிகளை வழங்குதல் மொத்தம் – 14 மருத்துவக் கல்லூரி மருத்துவமனை–11 (வேலூர், திருநெல்வேலி, கன்னியாகுமரி, சேலம், தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, திண்டுக்கல், கிருஷ்ணகிரி & திருப்பூர்) மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் – 3 (ஈரோடு, பெரியகுளம் & கடலூர்)	மருத்துவக் கருவிகள் கொள்முதல் மற்றும் விநியோகம் முடிந்து பயன்பாட்டில் உள்ளது.

2023 ஏப்ரல் 18]

பகுதி	செயல்பாடு	முன்னேற்ற நிலை
3	நான்கு மாவட்ட மருத்துவ மனைகளுக்கு உயர் தொழில்நுட்ப உபகரணங்களை வழங்குதல் (ஆவடி–1, வேலம்பாளையம்–1, கண்டியப்பேரி–1, அம்மாபேட்டை–1)	தமிழ்நாடு மருத்துவச் சேவை கழகத்தில் கொள்முதல் செயல்பாட்டில் உள்ளது.
4	இரண்டு இடங்களில் (பூந்தமல்லி–1, சமயநல்லூர்–1) பொது சுகாதாரத் துறையின் பயிற்சி மையங்களை மேம்படுத்துதல்	தமிழ்நாடு மருத்துவச் சேவை கழகத்தில் கொள்முதல் செயல்பாட்டில் உள்ளது.
	பயிற்சிகள்	
5	மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்களுக்குப் பயிற்சி வழங்குதல்	பயிற்சி நடை பெற்று வருகிறது

- *14 மருத்துவமனைகளுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்ட நவீன உயர் தொழில்நுட்ப உபகரணங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு அவ்வப்போது கண்காணிக்கப்பட்டு வருகின்றன. மீதமுள்ள கட்டடப் பணிகள், மருத்துவக் கருவிகள் கொள்முதல் பணிகள் திட்ட கால கெடுவுக்குள் முடிவடைய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

- *இத்திட்டம் முழுமையாக நிறைவடைந்ததும், இந்த மருத்துவமனைகளில் பயன்பெறும் ஏழை, எளிய மக்களுக்கு உயர்தர சிகிச்சை அளிக்கப்படும். தனியார் மருத்துவமனைகளுக்கு நிகரான தரமான மருத்துவச் சேவைகள் இலவசமாக வழங்கப்படும்.*

[2023 ஏப்ரல் 18

அத்தியாயம்—14

தமிழ்நாடு சுகாதாரச் சீரமைப்புத் திட்டம்

14.1 திட்ட வடிவம்: *தமிழ்நாடு சுகாதாரச் சீரமைப்புத் திட்டம் உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. முன்கூட்டியே வரையறுக்கப்பட்ட இலக்குகளை அடைவதன்மூலம் உலக வங்கி நிதி பெறும் வகையில், இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடான ரூ.2,857.003 கோடியில், ரூ.1,999.902 கோடி, உலக வங்கி நிதி உதவியாகவும், ரூ.857.101 கோடியை தமிழ்நாடு அரசு ஏற்கும் வகையிலும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம், செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ள காலவரையறை 5 ஆண்டுகள் ஆகும்.*

'**அனைத்து வயதினருக்கும் சுகாதார நலவாழ்வு மற்றும் அனைவருக்குமான ஆரோக்கிய மேம்பாடு**' *என்ற உலக சுகாதார அமைப்பின் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கு எண் 3-ஐ* (SDG) *அடையும் குறிக்கோளுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.*

திட்டத்தின் முக்கியக் குறிக்கோள்கள்

- *மேம்படுத்தப்பட்ட தரமான சிகிச்சையை அனைத்து மக்களுக்கும் வழங்குதல்*
- *தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்துதல் மற்றும் விபத்துக் காய சிகிச்சை தரத்தினை உயர்த்துதல்*
- *மாவட்டங்களிடையே வேறுபாடின்றி தமிழ்நாட்டின் பேறுசார் மற்றம் குழந்தைகள் நலச் சேவைகளை அனைவருக்கும் சமமாகக் கொண்டு சேர்த்தல்*

14.2 திட்டத்தின் செயல்பாடுகள்

- *அரசு மருத்துவமனைகளில் மேம்படுத்தப்பட்ட தரமான சிகிச்சை மற்றும் ஒன்றிய அரசின் மருத்துவமனைகளின் தரக்கட்டுப்பாடு சான்றிதழ்* (NQAS/NABH) *பெற்ற மருத்துவமனைகளின் எண்ணிக்கையை உயர்த்துதல்.*
- *தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்த, உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோயாளிகளின் நோய் கட்டுப்பாட்டு விகிதத்தை அதிகப்படுத்துதல்,*

2023 ஏப்ரல் 18]

பெண்களுக்கு ஏற்படும் மார்பகப் புற்றுநோய் மற்றும் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயைக் கண்டறிவதற்கான பரிசோதனைகளை அதிகப்படுத்துதல், பக்கவாதம், மாரடைப்பு, நாள்பட்ட சிறுநீரகச் செயலிழப்பு போன்ற சிக்கல்கள் ஏற்படாத வண்ணம் 'மக்களைத் தேடி மருத்துவம்' என்ற திட்டத்தின்மூலம் தொற்றா நோய்க்கான மருந்துகளை நோயாளிகளின் இல்லத்திற்குச் சென்று வழங்குதல் மற்றும் நோயாளிகளைக் கண்காணித்தல்.

- மாநிலத்தில் தற்கொலையினால் ஏற்படும் இறப்பின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதைக் கருத்தில் கொண்டு தற்கொலைத் தடுப்புக்கான அவசர உதவித் தொலைபேசி (104) சேவையை அமைத்து 20 மன நல ஆலோசகர்கள் வாயிலாக மன நல ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. மன நலத் திறன் வளர்ப்புத் திட்டம்மூலம் மன நோய்களை முன்கூட்டியே கண்டறிந்து சிகிச்சை வழங்குவதற்கான பயிற்சி, மருத்துவப் பணியாளர்களுக்கு வழங்குதல்.

- சாலை விபத்துகளில் ஏற்படும் காயங்களுக்கு, உடனடி சிறப்பு சிகிச்சை அளித்திட அவசரக் கால மருத்துவத் துறையை உருவாக்குதல், அவசரச் சிகிச்சை பணியில் உள்ள மருத்துவப் பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல் மற்றும் அவசர ஊர்திகளின் சேவையை வலுப்படுத்துதல்.

- பேறுசார் மற்றும் குழந்தைகள் நலப் பணிகளில் மாவட்டங்களுக்கிடையே உள்ள ஏற்றத் தாழ்வுகளை நிவர்த்தி செய்ய, முன்னுரிமை மாவட்டங்களான அரியலூர், தருமபுரி, இராமநாதபுரம், தேனி, தூத்துக்குடி, திருநெல்வேலி, நீலகிரி, திருவண்ணாமலை மற்றும் விருதுநகர் ஆகிய ஒன்பது மாவட்டங்களில், பேறுகாலத்துக்கு முந்தைய முழு கவனிப்பு சேவைகள், தடுப்பூசி மற்றும் நவீன கருத்தடை முறைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, பேறுகால தாய் இறப்பு விகிதம் (MMR) மற்றும் சிசு இறப்பு விகிதம் (IMR) குறைக்கப்படுகிறது.

- 'மாவட்ட சுகாதாரப் பேரவை' ஒவ்வோர் ஆண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் அம்மாவட்ட ஆட்சியர் தலைமையில் சுகாதார மற்றும் அதன் தொடர்புடைய பள்ளிக் கல்வி துறை, ஊரக வளர்ச்சி

மற்றும் ஊராட்சித் துறை, சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை போன்ற அரசு துறையைச் சார்ந்த கொள்கை வகுப்பவர்கள், அரசு சாரா அமைப்புகள் (NGO), பொது சமூக அமைப்புகள் (CSO), பொது மக்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், தனியார் துறையினர் ஆகியோர் கலந்து கொண்டு, பொது மக்களின் ஆரோக்கிய வாழ்விற்கான தேவைகளை நேரிடையாக மக்களிடம் இருந்தே கேட்டறிந்து, அக்கோரிக்கைகளுக்குத் தீர்வு காணும் வகைகளில் சுகாதார அமைப்பை வலுப்படுத்துவதற்கான தீர்மானங்கள் நிறைவேற்றப்படும். மேலும், மாற்றுத் திறனாளிகள், பழங்குடியினர், பெண்கள், இளைஞர்கள் போன்றோருடைய தனித்துவமான தேவைகள் முன்னிலைப்படுத்தப்பட்டு தீர்வு காணப்படுகிறது. இதைப்போன்று, மாநில அளவில் சுகாதாரப் பேரவை ஒவ்வோர் ஆண்டும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் நடத்தப்படவுள்ளது. இதன்மூலம் மருத்துவம் தொடர்பான கொள்கை முடிவு வகுப்பதில் குடிமக்களின் ஈடுபாடும், பங்கேற்பும் உறுதி செய்யப்படுகின்றது.

14.3 சாதனைகள் (2019—மார்ச், 2023): மேற்கண்ட நோக்கங்களை அடைய பல்வேறு திட்டங்கள் செயல்பாட்டில் உள்ளன.கீழ்க்காணும் சாதனைகள் முக்கியமானவையாகும்.

வ. எண்	செயல்பாடுகள்	திட்ட பயன்கள்	செலவின தொகை ரூபாய் (கோடி)
1	961 அவசரக்கால ஊர்திகள் கொள்முதல் செய்யப்பட்டு (185 அவசரக்கால ஊர்திகள் தேசிய நலவாழ்வுக் குழுமத்தால் வழங்கப்பட்டது) பயன்பாட்டிற்கு இணைக்கப்பட்டுள்ளது	அவசரக் காலச் சேவையை மேம்படுத்துதல்	261.23

2023 ஏப்ரல் 18]

வ. எண்	செயல்பாடுகள்	திட்ட பயன்கள்	செலவின தொகை ரூபாய் (கோடி)
2	சென்னை – கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உயர் சிறப்புச் சிகிச்சை வழங்க புதிய கட்டடம் மற்றும் கருவிகள் வழங்குதல்	இதன்மூலம் உயர் சிறப்புச் சிகிச்சை தரம் உயர்த்தப்படும்	*125.00*
3	காஞ்சிபுரம், காரப்பேட்டை அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனையில் புற்றுநோய்க்கான சிறப்பு மையத்திற்கு அதிகமான நோயாளிகளுக்கு சேவைகளை வழங்குவதற்கும், முழுமையான மற்றும் விரிவான புற்றுநோய் சிகிச்சை வசதியை தமிழ்நாட்டில் கொண்டு வருவதற்கும் ரூ.120 கோடியில் G+2 கட்டடங்கள் கட்டுவதற்கு நிருவாக மற்றும் நிதி ஒப்பளிப்பு அரசால் வழங்கப்பட்டு கட்டுமான பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளது. மேலும், காரப்பேட்டை,	இதன்மூலம் புற்றுநோயால் பாதிக்கப்படும் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்படும்	*100.00*

[2023 ஏப்ரல் 18

வ. எண்	செயல்பாடுகள்	திட்ட பயன்கள்	செலவின தொகை ரூபாய் (கோடி)
	காஞ்சிபுரம் அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய்க்கான சிறப்பு மையத்தில் 750 படுக்கை வசதிகளுடன் மேலும் மேம்படுத்த ரூ.100 கோடி மதிப்பீட்டில் கூடுதலாக மூன்று தளங்கள் கட்ட நிருவாக மற்றும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது		
4	தர அங்கீகாரம் (NQAS/ NABH) பெற ஆயத்த பணிகள்	301 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 75 அரசு மருத்துவமனைகள் மற்றும் 4 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள்	90.15
5	மக்களைத் தேடி மருத்துவம்–திட்டம் செயல்படுத்துதல்	388 தொகுதிகள் மற்றும் 11 மாநகராட்சி பகுதிகளில் தொற்றா நோய்களுக்கான மருந்துகளை மக்களிடம் நேரடியாக வீடுகளுக்கே கொண்டு சேர்த்தல்	87.00

2023 ஏப்ரல் 18]

வ. எண்	செயல்பாடுகள்	திட்ட பயன்கள்	செலவின தொகை ரூபாய் (கோடி)
6	*சென்னை பெரியார் நகர் மருத்துவமனையில் முழு உடல் பரிசோதனை, விபத்துக் காய சிகிச்சைப் பிரிவு, தொற்றா நோய் பிரிவு, டயாலிசிஸ், இரத்த வங்கி போன்ற சேவைகளுடன் கூடுதல் கட்டடம் மற்றும் உபகரணங்கள் வழங்குதல்.*	*இதன்மூலம் நோயாளிகளுக்கு முழுமையான சிகிச்சை அளிக்கப்படும்.*	*71.81*
7	*சென்னை – ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் நரம்பியல் சிறப்புச் சிகிச்சை வழங்க புதிய கட்டடம் மற்றும் கருவிகள் வழங்குதல்*	*இதன்மூலம் மூளை மற்றும் நரம்பு பாதிக்கப்படும் நோயாளிகளுக்கு முழுமையான சிகிச்சை அளிக்கப்படும்.*	*65.00*
8	*13 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் 29 மாவட்ட மருத்துவமனைகளை முதல்நிலை மற்றும் இரண்டாம் நிலை விபத்துக் காய சிகிச்சைப் பிரிவுகளாக மேம்படுத்துதல்*	*இதன்மூலம் விபத்து காயத்தினால் ஏற்படும் உயிரிழப்பு குறைக்கப்படுகின்றது*	*44.32*

[2023 ஏப்ரல் 18

வ. எண்	செயல்பாடுகள்	திட்ட பயன்கள்	செலவின தொகை ரூபாய் (கோடி)
9	சென்னை கே.கே.நகர் அரசு புனர்வாழ்வு மையத்திற்கு கூடுதல் மனிதவளம், உபகரணங்கள் மற்றும் கட்டடங்கள் வழங்கி வலுப்படுத்துதல்	இதன்மூலம் மேலும் சிறப்பான புனர்வாழ்வு சிகிச்சை அளிக்கப்படும்.	32.70
10	36 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் அவசரச் சிகிச்சைத் துறை உருவாக்குதல்	இதன்மூலம் முழுமையான அவசரச் சிகிச்சை உடனுக்குடன் வழங்கப்படுகின்றது	20.23
11	8,713 துணை சுகாதார நிலையங்கள், 2,343 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 73 இரண்டாம் நிலை மருத்துவமனைகள் 25 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்குத் தொற்றா நோய் சிகிச்சைக்காகக் கருவிகள் வழங்குதல்	இதன்மூலம் தொற்றா நோய் ஆரம்ப நிலையிலேயே கண்டறியப்பட்டு சிகிச்சைகள் வழங்கப்படும்.	13.89
12	சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புதிதாக CEmONC கட்டடம் மற்றும் கருவிகள் வழங்குதல்	இதன்மூலம் மகப்பேறு காலத்தில் தாய் மற்றும் சேய் நலம் பாதுகாக்கப்படும்	11.74

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2023 ஏப்ரல் 18]

வ. எண்	செயல்பாடுகள்	திட்ட பயன்கள்	செலவின தொகை ரூபாய் (கோடி)
13	சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் அரசு மருத்துவமனை, விருதுநகர் மாவட்டம்-சாத்தூர் அரசு மருத்துவமனை, கடலூர் மாவட்டம்-விருத்தாசலம் அரசு மருத்துவமனை திருவண்ணாமலை மாவட்டம்-செங்கம் அரசு மருத்துவமனை, மற்றும் தருமபுரி மாவட்டம் - பாலக்கோடு அரசு மருத்துவமனைகளில் விபத்து மற்றும் அவசரச் சிகிச்சை மையங்கள் அமைத்தல்.	இதன்மூலம் விபத்து காயத்தினால் ஏற்படும் உயிரிழப்பு குறைக்கப்படுகின்றது	11.62
14	120 ஆரம்ப சுகாதார நிலையங்களில் மக்கள் நல்வாழ்வு பூங்கா அமைத்தல்	இதன்மூலம் மக்களின் நலவாழ்வுக்கான சூழல் உருவாகும்	11.00
15	8,713 துணை சுகாதார நிலையங்கள், 2,343 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 73 இரண்டாம் நிலை மருத்துவமனைகள் 25 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு தொற்றா நோய்க்கான மருந்துகள் கொள்முதல் செய்தல்	இதன்மூலம் தொற்றா நோய் தொடர்ந்து கட்டுபடுத்தப்படும்	38.22

வ. எண்	செயல்பாடுகள்	திட்ட பயன்கள்	செலவின தொகை ரூபாய் (கோடி)
16	காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் அரசு மருத்துவமனையில் புதிய கட்டடம்	இதன்மூலம் புறநோயாளிகள் மற்றும் அவசரச் சிகிச்சை சேவைகள் தரம் மேம்படும்	10.00
17	8,713 துணை சுகாதார நிலையங்கள், 2,343 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 73 இரண்டாம் நிலை மருத்துவமனைகள் 25 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்குத் தொற்றா நோய்க்கான ஆய்வகமூலப்பொருட்கள் வழங்குதல்	இதன்மூலம் தொற்றா நோய்கள் கண்டறியும் பரிசோதனைகள் தொடர்ந்து நடைபெறும்	38.33
18	10 முன்னுரிமை மாவட்டங்களில் 630 மருத்துவ நிலையங்களில், (382 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 57 நகர்ப்புற சுகாதார நிலையங்கள், 109 மேம்படுத்தபட்ட சுகாதார நிலையங்கள், 73 அரசு மருத்துவமனைகள், 9 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள்) கணினி மற்றும் அச்சுப்பொறி வழங்குதல்	இதன்மூலம் தாய்-சேய் நலச் சேவைகளின் ஆவணங்கள் மற்றும் தரவு பதிவுகள் செம்மைப்படுத்தப்படும்	5.73

2023 ஏப்ரல் 18]

வ. எண்	செயல்பாடுகள்	திட்ட பயன்கள்	செலவின தொகை ரூபாய் (கோடி)
19	திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அரசு மருத்துவமனையில் மேம்பாட்டு பணிகளுக்காகப் புதிய கட்டடங்கள் CT scan கருவி மற்றும் மருத்துவ உபகரணங்கள் வழங்குதல்,	இதன் மூலம் முழுமையான அவசரச் சிகிச்சை உடனுக்குடன் வழங்கப்படும்	5.00
20	செயல்பாட்டு ஆராய்ச்சி திட்டத்தில் இதுவரை 23 முன்மொழிவுகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது	இதன்மூலம் திட்டத்தின் செயல்முறை மதிப்பீடு செய்யப்படும்	5.00
21	2249 துணை சுகாதார நிலையங்களுக்கு (Digital BP Apparatus / Weighing machine / Foetal Doppler) போன்ற கருவிகள் வழங்குதல்	இதன் மூலம் பேறுகாலத்தில் தாய் மற்றும் சேய்க்கு ஏற்படும் சிக்கல்கள் தவிர்க்கப்படும்	2.59
22	தருமபுரி அரசு மருத்துவமனைக்கு CT scan மற்றும் C-arm உடன் எலும்பு முறிவு அறுவைச் சிகிச்சை மேசை (Fracture Table) வழங்குதல்.	இதன்மூலம் விபத்து மற்றும் அவசரக் கால சிகிச்சைத் தரம் உயரும்	2.30
23	48 அரசு மருத்துவமனைகளில் விபத்துக் காய பதிவேடு செயல்படுத்துதல்	இதன்மூலம் விபத்து காய நோயாளிகளின் சிகிச்சை முழுமையாகக் கண்காணிக்கப்படும்	92.1

வ. எண்	செயல்பாடுகள்	திட்ட பயன்கள்	செலவின தொகை ரூபாய் (கோடி)
24	36 மருத்துவக் கல்லூரிகளில் விபத்துக் காய பதிவேடு செயல்படுத்துதல்	இதன்மூலம் விபத்து காய நோயாளிகளின் சிகிச்சை முழுமையாகக் கண்காணிக்கப்படும்	1.78
25	30 மாவட்டங்களில் சுகாதார பேரவை நடத்துதல்	இதன்மூலம் சுகாதார அமைப்பில் வெளிப்படைத் தன்மை அதிகரிக்கும். மேலும் மருத்துவம் தொடர்பான கொள்கை முடிவு எடுப்பதில் மாவட்ட அளவில் சமுதாயத்தின் ஈடுபாடும் பங்கேற்பும் உறுதி செய்யப்படும்.	1.70
26	சென்னை, அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் முழு உடல் பரிசோதனை, மற்றும் பெண்களுக்கான சிறப்பு முழு உடல் பரிசோதனை போன்ற சேவைகளை வழங்க உபகரணங்கள் வழங்குதல்.	இதன்மூலம் நோயாளிகளுக்கு முழு உடல் பரிசோதனை செய்யப்படும்	1.65
27	மாநிலம் முழுவதும் தொற்றா நோய்க்கான STEPS ஆய்வு கணக்கெடுப்பு செய்தல்	இதன்மூலம் நீரிழிவு நோய் மற்றும் உயர் இரத்த அழுத்தக் கட்டுப்பாடு	1.64

2023 ஏப்ரல் 18]

வ. எண்	செயல்பாடுகள்	திட்ட பயன்கள்	செலவின தொகை ரூபாய் (கோடி)
28	தர மேம்பாட்டு பணிகளை ஒருங்கிணைக்க மருத்துவக் கல்லூரி முதல்வர் / மருத்துவக் கண்காணிப்பாளர்கீழ் 36 சுகாதார மேலாண்மை அலுவலர்கள் நியமனம்.	இதன்மூலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளின் சேவைகளின் தரத்தை மேம்படுத்துதல்	*1.54*
29	புதுக்கோட்டை மாவட்டம்-காரையூர் மற்றும் புதுநகர், சிவகங்கை மாவட்டம்-பூவந்தி, விருதுநகர் மாவட்டம்-தாயில்பட்டி மற்றும் ஜமீன் கொல்லன்கொண்டான், திருவண்ணாமலை மாவட்டம்-மங்களம், தூத்துக்குடி மாவட்டம்-புதுக்கோட்டை மற்றும் தென்காசி மாவட்டம்-செங்கோட்டை ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்களில் இரத்த சேமிப்பு அலகு நிறுவுதல்.	இதன்மூலம் அவசர காலத்தில் சிகிச்சை விரைவாக அளிக்கப்படும்	*1.20*
30	சேலம் மாவட்டம், ஏற்காடு அரசு மருத்துவமனையில் நவீன பிரேத பரிசோதனைக் கட்டடம் மற்றும் கருவிகள் வழங்குதல்	இதன்மூலம் மக்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டது	*1.05*

வ. எண்	செயல்பாடுகள்	திட்ட பயன்கள்	செலவின தொகை ரூபாய் (கோடி)
31	10 முன்னுரிமை மாவட்டங்களைச் சார்ந்த 14 சுகாதார மாவட்டங்களில் 12810 அங்கன்வாடி பணியாளர்களுக்கும் மற்றும் 1000 சுகாதார செவிலியர்களுக்கும் தடுப்பூசி மற்றும் PICME பயிற்சிகள் வழங்குதல்	இதன்மூலம் தாய் மற்றும் சேய் நலம் கண்காணிக்கப்படும்	1.03
32	திருவண்ணாமலை, அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு நவீன லேப்ராஸ்கோப்பி கருவிகள் வழங்குதல்.	இதன்மூலம் மகப்பேறு காலத்தில் தாய்-சேய் நலம் உயர்த்தப்படும்	1.00
33	பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையில் விபத்துக் காய சிகிச்சைப் பிரிவை கருவிகள் மற்றும் கட்டடங்கள் வழங்கி மேம்படுத்துதல்	இதன்மூலம் விபத்துக் காயத்தினால் ஏற்படும் உயிரிழப்பு குறைக்கப்படுகின்றது	0.98

2023 ஏப்ரல் 18]

வ. எண்	செயல்பாடுகள்	திட்ட பயன்கள்	செலவின தொகை ரூபாய் (கோடி)
34	*தற்கொலை தடுப்புத் திட்டத்தின்கீழ் 104 தொலைபேசி எண் சேவையை வலுப்படுத்த 20 மன நல ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டு மன நல ஆலோசனைகள் வழங்குதல்*	*இதன்மூலம் மாநிலத்தில் தற்கொலையினால் ஏற்படும் இறப்பின் எண்ணிக்கை குறைக்கப்படுகின்றது*	*0.83*
35	*245 துணை சுகாதார நிலையங்களுக்கு ரத்தசோகை கண்டறியும் கருவிகள் (*Haemoglobinometer*) வழங்குதல்*	*இதன்மூலம் கர்ப்பிணிப் பெண்களுக்கு இரத்தசோகை ஆரம்ப நிலையிலேயே கண்டறியப்படும்*	*0.78*
36	*நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு நடமாடும் இரத்த சேமிப்பு வாகனம்,* HPLC *கருவி மற்றும் வேதியியல் பொருட்கள் வழங்குதல்.*	*இதன்மூலம் அவசர காலத்தில் சிகிச்சை விரைவாக அளிக்கப்படும்*	*0.50*
37	*குடும்ப நல கட்டுப்பாட்டு ஆய்வை 10 முன்னுரிமை மாவட்டங்களில் நடத்துதல்*	*இதன்மூலம் தாய்சேய் நலச் சேவைகளை மேம்படுத்துதல்*	*0.47*

[2023 ஏப்ரல் 18

வ. எண்	செயல்பாடுகள்	திட்ட பயன்கள்	செலவின தொகை ரூபாய் (கோடி)
38	101 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 54 இரண்டாம் நிலை மருத்துவமனைகளில் தகவல், கல்வி மற்றும் தொடர்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்	இதன்மூலம் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல்	0.46
39	25 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் விபத்து மற்றும் அவசரக் கால கண்காணிப்பு மையங்களை நிறுவுதல்	இதன்மூலம் விபத்து மற்றும் அவசரக் கால சிகிச்சை தரம் கண்காணிக்கப்படும்	0.44
40	திருநெல்வேலி மாவட்டம்–களக்காடு அரசு மருத்துவமனையில் பாம்பு கடி விஷமுறிவு சிகிச்சை மையம் அமைத்தல்.	இதன்மூலம் பாம்பு கடி விஷ முறிவு சிகிச்சை உடனடியாக வழங்கப்படும்	0.40
41	தேனி மாவட்டம்– இராஜதானி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் செவிலியர் குடியிருப்பு அமைத்தல்.	இதன்மூலம் நோயாளிகளுக்கு 24 மணி நேர சேவை உறுதி செய்யப்படும்	0.30
42	27 அரசு மருத்துவமனைகள் 9 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் குடும்ப கட்டுப்பாடு உதவி மையம் அமைத்தல்	இதன்மூலம் குடும்ப கட்டுப்பாடு குறித்த சந்தேகங்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்படும்	0.23

2023 ஏப்ரல் 18]

வ. எண்	செயல்பாடுகள்	திட்ட பயன்கள்	செலவின தொகை ரூபாய் (கோடி)
43	*10 முன்னுரிமை மாவட்டங்களில் மனிதவளம் மற்றும் கருவிகள் வழங்கி* PICME *மையங்களை வலுப்படுத்துதல்*	*இதன்மூலம் கர்ப்ப காலத்தில் ஏற்படும் சந்தேகங்களுக்கு ஆலோசனைகள் வழங்குதல்*	*0.22*
44	*இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு* C – arm *உடன் எலும்பு முறிவு அறுவைச் சிகிச்சை மேசை (*Fracture Table*) வழங்குதல்.*	*இதன்மூலம் விபத்து மற்றும் அவசரக் கால சிகிச்சைத் தரம் உயரும்*	*0.20*
45	*10 முன்னுரிமை மாவட்டங்களில் தகுதிவாய்ந்த தம்பதிகளுக்குக் குடும்ப கட்டுப்பாடு ஆலோசனை அட்டை வழங்குதல்*	*இதன்மூலம் குடும்ப கட்டுப்பாடு முறைகளை தேர்வு செய்வது குறித்த ஆலோசனை வழங்கப்படும்*	*0.12*
மொத்தம்			**1,074.57**

14.4 உலக வங்கியிடம் பெறப்பட்ட தொகை: *இத்திட்டத்தின்மூலம் இதுவரை உலக வங்கியிடமிருந்து ரூ.1,303.56 கோடி பெறப்பட்டுள்ளது.*

பெறப்பட்ட மொத்த தொகை விவரம்: (2019 முதல் 31.3.2023 வரை)

வ. எண்	செயல்பாடுகள்	பெறப்பட்ட தொகை கோடி ரூபாய்
1	பேறுசார் மற்றும் குழந்தைகள் நலப் பிரிவு	419.36
2	தரம் மேம்பாடு பிரிவு	362.02
3	இணைந்த செயல்பாடுகள்	258.63
4	தொற்றா நோய்கள் பிரிவு	93.80
5	விபத்துக் காய சிகிச்சை மற்றும் மன நலம் பிரிவு	123.60
6	தகவல் மேம்பாடு	46.15
	பெறப்பட்ட மொத்த தொகை	1,303.56

இத்திட்டத்தில் தற்போது ஐந்தாம் ஆண்டிற்கான செயல்பாடுகளின் ஆயத்த பணிகள் நடைபெற்று வருகின்றன.

அத்தியாயம்-15

கொரோனா-19 மேலாண்மை மற்றும் தடுப்பூசி பணி

15.1 கோவிட்–19 கொள்ளை நோய் உலகம் முழுவதும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தமிழ்நாடு அரசு கோவிட்–19 தொற்று நோயை பேரிடர் மேலாண்மைத் தடுப்பு சட்டம் 2005, கொள்ளை நோய் சட்டம், 1897 மற்றும் தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம் 1939-ன்கீழ் அறிவிக்கப்பட்ட தொற்று நோயாக பிரகடனப்படுத்தி தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டது. 2020 ஆம் ஆண்டில், தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம், 1939-ன்கீழ் கூடுதல் விதிமுறைகளை உருவாக்கியது. இதுவரை 3 கோவிட் அலைகளைத் தமிழ்நாடு அரசு வெற்றிகரமாக கட்டுப்படுத்தியுள்ளது. மார்ச் 7, 2020 அன்று காஞ்சிபுரம் மாவட்டத்தில் கோவிட்–19 தொற்று நோயின் முதல் நோயாளி கண்டறியப்பட்டார். கோவிட்–19 முதல் அலையில் மொத்தம் 8,15,691 நபர்கள் பாதிக்கப்பட்டனர். அதிகபட்சமாக 2020 ஆம் ஆண்டு ஜூலை 27 அன்று 6,993 நபர்கள் பாதிக்கப்பட்டனர். 2020 ஆம் ஆண்டு, மார்ச் 24 முதல் முழு ஊரடங்கு அமல்படுத்தப்பட்டது.

2023 ஏப்ரல் 18]

தமிழ்நாடு அரசு, பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்குநரகத்தில் 24 மணி நேர (24X7) மாநில அவசர கட்டுப்பாட்டு அறையை 2020 ஆம் ஆண்டு மார்ச் 14 அன்று ஏற்படுத்தியது. தமிழ்நாடு அரசு விமான நிலையக் கண்காணிப்பு, நோயாளியுடன் தொடர்பில் இருந்தவர்களைக் கண்டறிதல், கட்டுப்பாட்டு பகுதிகளைக் கண்காணித்தல் போன்றவற்றைத் தீவிரமாகச் செயல்படுத்தியது. மேலும், ஆரம்பம் முதலே அதிக அளவில் தொற்று நோய் பரிசோதனைகளை மேற்கொள்ளுதல், பாதிக்கப்பட்ட நபர்களைத் தனிமைப்படுத்துதல் மற்றும் உரிய சிகிச்சைகளை மேற்கொள்வதில் தீவிரம் காட்டியது. 2021 ஆம் ஆண்டு மே மாதம் 7 ஆம் தேதி, இந்த அரசு பொறுப்பேற்ற அன்று ஒரு நாள் கோவிட்–19 தொற்று பாதிப்பு 26,465 ஆக இருந்தது. கோவிட் இரண்டாவது அலையில் மொத்தம் 17,08,055 நபர்கள் பாதிக்கப்பட்டனர். அதிகபட்சமாக 2021 ஆம் ஆண்டு மே 20 அன்று 36,184 நபர்கள் பாதிக்கப்பட்டனர். 2021 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் கோவிட் இரண்டாம் அலை இந்தியா முழுவதும் ஏற்பட்டபோது, தமிழ்நாட்டில் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் படுக்கை மற்றும் ஆக்ஸிஜன் பற்றாக்குறை ஏற்பட்டது. அதனால் ஏற்கெனவே பாதிக்கப்பட்டிருந்த மருத்துவமனை மற்றும் மருத்துவப் பணியாளர்களுக்குக் கூடுதல் சுமை ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து, இந்த அவசரக் காலத்தில் அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து நிர்வகிக்க வேண்டிய கட்டாயம் உருவானதால், 2021 ஆம் ஆண்டு மே 8, அன்று தேசிய சுகாதாரக் குழும அலுவலகத்தில் மாநில கோவிட் கட்டளை அறை (State Covid-*19* War Room) *உருவாக்கப்பட்டது. இந்த அரசு கோவிட் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு முன்னுரிமை கொடுத்து தேவையான நேரங்களில் முழு ஊரடங்கை அமல்படுத்தியும், சுகாதாரக் கட்டமைப்பை மேம்படுத்தியும், தொடர் ஆய்வுகளை மேற்கொண்டும், களப்பணியைத் துரிதப்படுத்தியும், கோவிட் தொற்றைக் கட்டுப்படுத்தியது. ஒன்றிய அரசுடன் ஒருங்கிணைந்து பிராண வாயு வசதிகள் அதிகரிக்கப்பட்டது. ஆக்ஸிஜன் செறிவூட்டிகள் கொள்முதல் செய்தல், 130 ஆக்ஸிஜன் கிடங்குகளை உருவாக்கிடுதல் மற்றும் காற்றிலிருந்து ஆக்ஸிஜனை உறிஞ்சி சேமிக்கும் ஆலைகளை அமைத்தல்* (PSA Plants) *ஆகியவற்றின்மூலம் ஆக்ஸிஜன் அளவு அதிகரிக்கப்பட்டது. தற்போது காற்றிலிருந்து ஆக்ஸிஜனை உறிஞ்சி சேமிக்கும் 260 ஆலைகள் தமிழ்நாடு முழுவதும் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 24,061 ஆக்ஸிஜன் செறிவூட்டிகள் அரசு*

மருத்துவ நிலையங்களில் உள்ளன. தற்போது தமிழ்நாட்டில் 2067.63 மெட்ரிக் டன் அளவு வரை திரவ நிலை ஆக்ஸிஜனை சேகரிக்கும் வசதி உள்ளது.

15.2 மூன்றாவது கோவிட் அலை 2021 ஆம் வருடம் டிசம்பர் மாத இறுதி வாரத்தில் தொடங்கி மொத்தம் 7,01,328 நபர்கள் பாதிக்கப்பட்டனர். அதிகபட்சமாக 2022 ஆம் ஆண்டு, ஜனவரி 22 அன்று 30,744 நபர்கள் பாதிக்கப்பட்டனர். மூன்றாவது அலையில் பெரும்பாலான நபர்கள் ஓமிக்ரான் வகை தொற்றால் பாதிக்கப்பட்டனர். மூன்றாம் அலையில் கோவிட் தொற்று தீவிர பாதிப்புகளை ஏற்படுத்தாமல் சாதாரண சளி, காய்ச்சலாக இருந்ததால் பெரும்பாலான நபர்கள் வீட்டு தனிமைப்படுத்துதல் மற்றும் உரிய சிகிச்சைமூலம் குணப்படுத்தப்பட்டனர். மூன்றாவது கோவிட் அலையில் புதிய வகை ஓமிக்ரான் பாதிப்பு கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து மாநில மற்றும் மாவட்ட கட்டளை அறைகள் மீண்டும் 2022 ஆம் ஆண்டு ஜனவரி 3 அன்று திறக்கப்பட்டு, கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டது. இந்த அரசின் தொடர் முயற்சியால் மூன்றாவது அலை 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி மாத இறுதியில் கட்டுப்படுத்தப்பட்டது.

15.3 தமிழ்நாடு அரசால் சென்னையில் உள்ள மாநில பொது சுகாதார ஆய்வகத்தில் ரூபாய் நான்கு கோடி செலவில் கொரோனா வைரஸின் உருமாற்றங்களை கண்டறிய முழு மரபணு பகுப்பாய்வு ஆய்வகம் ஏற்படுத்தப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 14.9.2021 அன்று துவக்கிவைக்கப்பட்டது. இந்த ஆய்வகத்தின்மூலம் 31.3.2023 வரை 2,965 தொற்று மாதிரிகள் முழு மரபணு பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு, கொரோனா வைரஸின் உருமாற்றங்கள் உடனுக்குடன் கண்டறியப்பட்டு உரிய கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2023 ஆம் ஆண்டு பிப்ரவரி மாத இறுதி முதல் இந்திய அளவில் கொரோனா தொற்று அதிகரித்து வருகிறது. தமிழ்நாட்டில் மார்ச் மாத துவக்கத்திலிருந்து கொரோனா தொற்று சிறிது அதிகரித்து வருகிறது. கொரோனா தொற்று அதிகரித்ததைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, 10.3.2023 முதல் சிறப்பு காய்ச்சல் முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. 4.4.2023 வரை நடமாடும் மருத்துவக் குழுக்கள் மற்றும் பள்ளி சிறப்பு மருத்துவக் குழுக்களின்மூலம் 49,341 சிறப்பு காய்ச்சல் முகாம்கள் நடத்தப்பட்டு, 19,89,235

2023 ஏப்ரல் 18]

நபர்களுக்கு பரிசோதனை செய்யப்பட்டு, காய்ச்சலால் பாதிக்கப்பட்ட 10,784 நபர்கள் கண்டறியப்பட்டு, உரிய சிகிச்சைகள் அளிக்கப்பட்டுள்ளன.

15.4 மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் 21.3.2023 அன்று துறை தலைவர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டு, தற்போது அதிகரித்து வரும் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது இந்திய அளவில் அதிகரித்து வரும் கொரோனா தொற்று உருமாறிய ஓமிக்ரான் வகையைச் சார்ந்த XBB*.1.16 எனக் கண்டறியப்பட்டுள்ளது.* XBB*.1.16 வகை உருமாறிய கொரோனா தீவிர நோயை ஏற்படுத்துவதில்லை என்றாலும் அனைத்துத் தொற்று மாதிரிகளும் முழு மரபணு பகுப்பாய்விற்குட்படுத்தப்பட்டு வருகிறது. இது நாள் வரை தமிழ்நாட்டில் உருமாறிய ஓமிக்ரான்* XBB*.1.16 வகை தொற்று கண்டறியப்படவில்லை.*

அத்தியாயம் – 16

மக்களைத் தேடி மருத்துவம்

16.1 மக்களைத் தேடி மருத்துவம் திட்டம்

தமிழ்நாடு அரசின் முதன்மைத் திட்டமான "மக்களைத் தேடி மருத்துவம்" திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டம் ஒருங்கிணைந்த மற்றும் விரிவான இல்லம் தேடி வரும் மருத்துவச் சேவைகள் வாயிலாக, நோய் சிகிச்சைக்கான தொடர் கவனிப்பு, நிலையான சேவைகளை உறுதி செய்வதுடன் குடும்பத்தில் உள்ள அனைத்து நபர்களின் சுகாதாரத் தேவைகளைக் கண்டறிந்து ஆவன செய்ய உதவுகிறது.

16.2 சமூகத்தை மையப்படுத்தும் திட்டத்தின் களப் பணியாளர்கள்

- *தமிழ்நாடு பெண்கள் மேம்பாட்டுக் கழகத்தின்கீழ்* (TNCDW) *செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுவில் உள்ள 8,713 மகளிர் சுகாதாரத் தன்னார்வலர்கள் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின்கீழ்*

செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுவில் உள்ள 2,256 மகளிர் சுகாதாரத் தன்னார்வலர்கள் என மொத்தமாக 10,969 நபர்கள் அனைத்து ஊரக மற்றும் நகர்ப்புற சுகாதாரத் துணை மையங்களில் முறையே ஈடுபட்டுள்ளனர்.

- வட்டார அளவில், 463 நோய்த் தடுப்புச் சிகிச்சைச் செவிலியர்கள் மற்றும் 463 இயன்முறை சிகிச்சையாளர்கள் கொண்ட குழுவானது வீடு வீடாக சென்று நோய்த் தடுப்பு சிகிச்சை மற்றும் இயன்முறை சிகிச்சைகளை மாநிலம் முழுவதும் வழங்குகிறார்கள்.
- மருத்துவ மையங்களின் தரத்திற்கேற்ப தொற்றா நோய்களுக்கான மருத்துவச் சேவையை வழங்க ஆரம்ப சுகாதார மையங்களில் ஒரு செவிலியர், அரசு மருத்துவமனைகளில் இரண்டு செவிலியர்கள் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு இரண்டு செவிலியர்கள் வீதம் மொத்தம் 2,892 செவிலியர்கள் முதன்மை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை பராமரிப்பு மருத்துவமனைகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

16.3 திட்டத்தின்கீழ் பயனாளிகளின் இல்லங்களில் மற்றும் மருத்துவ மையங்களில் வழங்கப்படும் சேவைகள்

தொற்றா நோய்களினால் ஏற்படும் நோய் பாதிப்பை எதிர்கொள்ளும் விதமாக "மக்களைத் தேடி மருத்துவம்" வடிவமைக்கப்பட்டு, களப் பணியாளர்கள்மூலம் ஏற்கெனவே பரிசோதனை செய்து பட்டியலிடப்பட்ட நோயாளிகளில் 45 வயதும் அதற்கு மேற்பட்டவர்கள் மற்றும் இயலாமையில் உள்ள நபர்களுக்கு உயர் இரத்த அழுத்தம் / நீரிழிவு நோய்க்கான மருந்துகளைக் களப் பணியாளர்கள் இல்லங்களுக்கே சென்று வழங்குதல், நோய் ஆதரவு சேவைகள், இயன்முறை மருத்துவச் சேவைகள், சிறுநீரக நோயாளிகளைப் பராமரித்தல், அத்தியாவசிய மருத்துவச் சேவைகளுக்கான பரிந்துரை, குழந்தைகளின் பிறவிக் குறைபாடுகளைக் கண்டறிந்து தெரிவித்தல் போன்ற ஒரு குடும்பத்திற்குத் தேவையான அனைத்து சுகாதாரத் தேவைகளையும் வழங்குவதுடன் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது ஆரம்ப சுகாதார மையங்கள், அரசு மாவட்டத் தலைமை மருத்துவ மனைகள், அரசு துணை மாவட்ட

2023 ஏப்ரல் 18]

மருத்துவமனைகள் / மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம் (ம) நீரிழிவு நோய்க்கான பரிசோதனை மற்றும் நோயாளிகளுக்கு மருந்துகள் வழங்கப்படுகிறது. மேலும், ஆரம்ப சுகாதார மையங்கள், அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் இயன்முறை மருத்துவர்கள்மூலம் மருத்துவமனைகளில் இயன்முறை மருத்துவச் சேவைகளும், நோய் ஆதரவு செவிலியர்மூலம் மருத்துவமனைகளில் நோய் ஆதரவு சிகிச்சைச் சேவைகளும் வழங்கப்படுகின்றன.

16.4 திட்டத்தின் செயல்பாடுகளைக் கண்காணித்தல் *"மக்களை தேடி மருத்துவம்" திட்டமானது தேசிய நலவாழ்வுக் குழுமத்தின் கண்காணிப்பில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்குநரகம், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரகம் மற்றும் மருத்துவக் கல்வி இயக்குநரகம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் தொடர்ச்சியாக, ஆம்புலேட்டரி பெரிட்டோனியல் டயாலிசிஸ்* (CAPD) *திட்டத்தைப் பொறுத்தவரை, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ்* (CMCHIS) *பெரிட்டோனியல் டயாலிசிஸ் பைகளை வழங்குவது தொடர்பான நடவடிக்கை எடுப்பதற்கு, தேசிய நலக் குழும இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தைக் கண்காணிக்க மாநில மற்றும் மாவட்ட அளவிலான அதிகாரிகள் மூலமாக கள ஆய்வு மற்றும் மேற்பார்வை ஆகியன தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிறது. "102" தொலைபேசி மையத்தின் வழியாக மக்களை தேடி மருத்துவப் பயனாளிகளின் கருத்து / குறைகளைக் கேட்டு அறிய சுகாதார ஆலோசனை அதிகாரிகள் பணியமர்த்தப்பட்டு அவர்கள்மூலம் பெறப்படும் பின்னூட்டங்கள், ஆய்வறிக்கை அடிப்படையிலான தரவுகள் சேகரிக்கப்பட்டு, வழங்கப்படும் மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் பற்றியும் கண்காணிக்கப்படுகிறது.*

16.5 திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு

2021-22 மற்றும் 2022-23 ஆம் நிதியாண்டுகளில் தமிழ்நாடு அரசால் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் தொற்றா நோய்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு தவிர, மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின்கீழ் சிறப்பு நிதி ஒதுக்கீடாக ரூ.681.64 கோடி வழங்கப்பட்டுள்ளது.

16.6 திட்டத்தின் செயல்திறன்: *5.8.2021 அன்று துவக்கப்பட்ட "மக்களைத் தேடி மருத்துவம்" திட்டம், 29.12.2022 அன்று ஒரு கோடியாவது பயனாளி என்ற இலக்கை கடந்து, திட்டத்தின்கீழ் மார்ச் 2023 வரை 1,00,46,429 பயனாளிகள் முதன்முறை சேவைகளையும், 2,76,90,102 நபர்கள் தொடர் சேவைகளையும் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.*

அத்தியாயம் – 17

இன்னுயிர் காப்போம்-நம்மைக் காக்கும் 48 திட்டம்

17.1 தமிழ்நாடு அரசின் "இன்னுயிர் காப்போம்-நம்மை காக்கும் 48" என்னும் முன்னோடித் திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரால் 18.12.2021 அன்று தொடங்கப்பட்டது. இவ்வுயிர் காக்கும் திட்டம், சாலை விபத்தினால் ஏற்படும் உயிர் இழப்புகளைக் குறைத்திடும் வகையிலும், அதனால் குடும்பங்களுக்கு ஏற்படும் மருத்துவச் செலவைக் குறைப்பதற்கும் உதவுகிறது. இத்திட்டத்தின்மூலம் சாலை விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, "முதல் 48 மணி நேரத்திற்கான அவசர மருத்துவச் சிகிச்சைச் செலவை" தமிழ்நாடு அரசே ஏற்கும். சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு, விபத்து நடந்த முதல் 48 மணி நேர நெருக்கடியான காலகட்டத்தில், துல்லியமான திட்டமிடல்மூலம், காலவிரயத்தை தவிர்த்து உயிரைக் காக்கும் உடனடிச் சிகிச்சையை இலவசமாக பெறுவதை இத்திட்டம் உறுதி செய்கிறது.

17.2 திட்ட விவரங்கள்: இத்திட்டத்தில், 500 விபத்து நிகழும் பகுதிகளுக்கு (500 Accident Grid) *அருகில் உள்ள 235 அரசு மருத்துவமனைகள், 448 தனியார் மருத்துவமனைகள் என மொத்தம் 683 மருத்துவமனைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டு அட்டை உள்ளவர்கள், இல்லாதவர்கள், பிற மாநிலத்தவர்கள், வேற்று நாட்டவர்கள் என அனைவருக்கும் தமிழ்நாடு எல்லைக்குள் ஏற்படும் சாலை விபத்துகளுக்கு மருத்துவச் சிகிச்சை அளிக்கப்படுகின்றது. சேத குறைப்பு அடிப்படையில்* (Damage Control) *உயிர் காக்கும் அறுவைச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட 81 மருத்துவச் சிகிச்சை முறைகளுக்கு, நபர் ஒருவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் கட்டணம் சிகிச்சை மேற்கொள்ளப்படுகின்றது.*

2023 ஏப்ரல் 18]

17.3 வழிகாட்டு நெறிமுறைகள்

i) *சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர் உடனடியாக உள்நோயாளியாக அனுமதிக்கப்படும் மருத்துவமனையிலேயே முதல் 48 மணி நேரம் வரை அங்கீகரிக்கப்பட்ட சிசிச்சை முறைகளில் சிகிச்சை மேற்கொள்ளலாம்.*

ii) *48 மணி நேரத்திற்கு மேலும் சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர் நிலையற்றவராக* (unstable) *இருந்தால் அல்லது மேலும் தொடர் சிகிச்சை நடைமுறைகள் தேவைப்பட்டால், கீழ்க்காணும் வழிகாட்டுதல்களின்படி சிகிச்சைகள் மேற்கொள்ளலாம்:*

வ. எண்	வகைபாடு	சிகிச்சை முறை
a)	முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட பயனாளியாக இருந்தால்	நோயாளி மேற்கொள்ளும் சிகிச்சை காப்பீட்டுத் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்தால், நோயாளியை நிலைப்படுத்தி அம்மருத்துவமனையிலேயே மேலும் சிகிச்சை தொடரலாம்
b)	முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட பயனாளியாக இல்லாமல் இருந்தால்	நோயாளியை நிலைப்படுத்தி அரசு மருத்துவமனைக்கு மாற்ற வேண்டும்.
c)	சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர் அரசு மருத்துவமனைக்கு செல்ல தயாராக இல்லை என்றாலோ (அல்லது) தனியார் காப்பீட்டிலோ (அல்லது) பணம் செலுத்தியோ சிகிச்சையைத் பெற விரும்பினால்	நோயாளியை நிலைப்படுத்தி 48 மணி நேரத்திற்கு பிறகு அதே மருத்துவமனையிலோ அல்லது அவர் தேர்ந்தெடுக்கும் பிற மருத்துவமனையிலோ சிகிச்சைக்கான கட்டணத் தொகையை தனி நபரே செலுத்தி சிகிச்சையைத் தொடரலாம்.

[2023 ஏப்ரல் 18

இத்திட்டத்தின்மூலம் 18.12.2021 முதல் 31.3.2023 வரை 135.01 கோடி ரூபாய் காப்பீட்டுத் தொகையில் 1,53,011 நபர்கள் பயனடைந்துள்ளனர். இதில் அரசு மருத்துவமனைகளில் 1,39,011 நபர்கள் 111.63 கோடி ரூபாய் காப்பீட்டுத் தொகையில் பயனடைந்துள்ளனர்.

சாலை விபத்தில் சிகிச்சை பெற்றவர்கள் எண்ணிக்கை			சிகிச்சைக்கான செலவினம் ரூபாய் கோடியில்		
அரசு மருத்துவ மனை	தனியார் மருத்துவ மனை	மொத்தம்	அரசு மருத்துவ மனை	தனியார் மருத்துவ மனை	மொத்தம்
1,39,011	14,080	1,53,091	111.63	23.38	135.01

இந்த அரிய திட்டத்தினால், சாலை விபத்துகளால் பாதிக்கப்பட்டு காயமுற்றவர்களுக்கு உடனடியாக அருகிலுள்ள மருத்துவமனையில் மருத்துவச் சிகிச்சை அளிப்பதால், உயிரிழப்பு மற்றும் காயங்களால் ஏற்படும் ஊனங்கள் பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளன.

அத்தியாயம்-18

கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம்

18.1 இந்த முதன்மை நோய்த் தடுப்புத் திட்டமானது, மக்களிடையே நோய்களை வருமுன் தடுக்கும் அணுகுமுறையை ஏற்படுத்தும் நோக்கில் 1999 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. வருமுன் காப்போம் திட்டம் மீண்டும் மேம்படுத்தப்பட்டு புதுப்பொலிவுடன் கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம் என செயல்படுத்தப்படும் என்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் 02.09.2021 அன்று மாண்புமிகு அமைச்சர் (மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை) அவர்கள் அறிவித்தார். இத்திட்டத்தின்கீழ் ஆண்டிற்கு (கிராமப் புறங்களில் 1,155 முகாம்களும், மாநகராட்சிகளில் 80 முகாம்களும், பெருநகர சென்னை மாநகராட்சியில் 15 முகாம்களும்) ஆக மொத்தம் 1,250 மருத்துவ முகாம்கள் நடத்தப்படும். கிராமப்புற மக்களுக்கும் நகர்ப்புற மக்களுக்கும்

2023 ஏப்ரல் 18]

வருமுன் காப்போம் திட்டம்மூலம் உடல் பரிசோதனை செய்து தக்க சிகிச்சை மற்றும் சுகாதார நலக் கல்வி கலைஞரின் வருமுன் காப்போம் திட்ட முகாமில் வழங்கப்படுகிறது. இந்த முகாமில், நோய்களைத் தொடக்க நிலையிலேயே கண்டறிந்து குணப்படுத்தும் வகையில் பல்வேறு நிபுணத்துவம் வாய்ந்த மருத்துவ வல்லுநர்கள்மூலம் தொற்றும் மற்றும் தொற்றா நோய் குறித்த பரிசோதனை செய்யப்படுகிறது. மேலும் சிறு நோய்களுக்கான சிகிச்சையும் முகாம் இடத்திலேயே அளிக்கப்படுகிறது. அனைத்து பரிசோதனைகளும் குறிப்பாக இரத்தம், சிறுநீர் போன்றவற்றிற்கு செமி ஆட்டோ அனலைசர் போன்ற அதிநவீன கருவிகள் பயன்படுத்தி பரிசோதனை செய்யப்படுகிறது. அனைத்து கருவுற்ற பெண்களுக்கும் அல்ட்ராசோனோகிராம்மூலம் சிறப்பு பரிசோதனை செய்யப்படுகிறது. இந்த முகாம் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெறுகிறது.

18.2 இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்

- **பல்நோக்கு சிறப்பு முகாம்கள்:** *பொது மக்களுக்கு ஆலோசனை மற்றும் முதல் கட்ட சிகிச்சையைச் சிறப்பு வல்லுநர்கள் பொது மருத்துவம், அறுவைச் சிகிச்சை, குழந்தை நலம், மகப்பேறு மருத்துவம், கண் மருத்துவம், காது, மூக்கு (ம) தொண்டை மருத்துவம், எலும்பியல், இருதய நோய் சிகிச்சை, மன நலம், சிறுநீரகவியல், நரம்பியல் மற்றும் பிற சிறப்பு பிரிவுகளில் வழங்குகின்றனர்.*

- **பரிசோதனை:** *25 வகையான இரத்தப் பரிசோதனைகள் மற்றும் 5 வகையான மருத்துவப் பரிசோதனைகள்/ ஸ்கேன்கள் மேற்கொள்ளப்படுகின்றன.*

- *சிகிச்சை: பொது மக்களுக்கு முதல் கட்ட சிகிச்சை மற்றும் மருந்துகள் சிறப்பு வல்லுநர்களால் முகாம் நடைபெறும் இடத்திலேயே வழங்கப்படுகிறது.*

- *பரிந்துரை: பிற பரிசோதனைகள் மற்றும் சிகிச்சை தேவைப்படுபவர்கள், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் உயர் சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைகள் / தனியார் மருத்துவமனைகளுக்குப் பரிந்துரைக்கப்படுகிறார்கள்.*

[2023 ஏப்ரல் 18

2021-2022 ஆம் நிதியாண்டில் 1,260 முகாம்கள் நடத்தப்பட்டு, 9,06,427 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். 2022-2023 ஆம் நிதியாண்டில், 1,502 முகாம்கள் நடத்தப்பட்டு, 14,79,732 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

அத்தியாயம் – 19

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்

19.1 தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் 1.7.1994-ல் அரசுக்கு முழுதும் உரிமையான ஒரு நிறுவனமாக, நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் தமிழ்நாடு அரசால் தொடங்கப்பட்டது. இக்கழகம் இந்தியாவிலேயே முதல் முறையாக மருந்துகள், மாத்திரைகள், அறுவைச் சிகிச்சை நுகர்பொருட்கள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்து வழங்க திறமையான ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனமாக உருவாக்கப்பட்டது. கடந்த 28 ஆண்டுக் கால செயல்பாடுகளின்மூலம், மருந்துகள் கொள்முதல் செய்து வழங்கும் திறமை முறைமைகளில் நிரூபிக்கப்பட்டதோர் மாதிரி நிறுவனமாக வளர்ந்து, உலகளாவிய நன்மதிப்பைப் பெற்றதோடு, பிற மாநிலங்களிலும் இதேபோன்று ஒரு நிறுவன அமைப்பை ஏற்படுத்திட வழிகாட்டியாக விளங்குகிறது. மேலும், இக்கழகம் மருத்துவ உபகரணங்களைக் கொள்முதல் செய்து அனைத்து அரசு மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ நிறுவனங்களுக்கு வழங்கி வருகிறது. இது ஒரு ஐ.எஸ்.ஓ. 9001 : 2015 தரச் சான்று பெற்ற நிறுவனமாகும்.

19.2 தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் முக்கியப் பணிகள்

- *பொது மற்றும் சிறப்பு மருந்துகள், மாத்திரைகள், அறுவைச் சிகிச்சை மற்றும் தையல் நுகர்பொருட்கள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்து, ஆய்வுக்குட்படுத்தி, சேமித்து, கால்நடை நிறுவனங்கள் உட்பட அனைத்து மருத்துவ நிலையங்களுக்கும் வழங்குதல்.*

- *மருத்துவமனைகளுக்கு மருத்துவக் கருவிகளைக் கொள்முதல் செய்து வழங்குதல் மற்றும் அதன் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்.*

2023 ஏப்ரல் 18]

- *சி.டி.ஸ்கேன்* (Computed Tomography), *எம்.ஆர்.ஐ.ஸ்கேன்* (Magnetic Resonance Imaging), *லித்தோட்ரிப்சி போன்ற உயர் மருத்துவக் கருவிகளை நிறுவி, சேவை கட்டண வசூல் அடிப்படையில் இயக்குதல் மற்றும் பராமரித்தல். கோபால்ட் தெரபி, நேரியல் முடுக்கி, பிராக்கிதெரபி போன்ற புற்றுநோய் சிகிச்சை கருவிகளை முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்மூலம் பெறப்படும் வருவாயைக் கொண்டு இயக்குதல் மற்றும் பராமரித்தல்.*

- *அரசு மருத்துவமனைகளில் கட்டண பிரிவுகளை* (Pay Ward) *இயக்கி பராமரிக்க ஒத்துழைப்பை வழங்குதல்.*

- *மருத்துவமனைகளில் தூய்மை மற்றும் காவல் பணிகள், உணவு வழங்குதல், உயிரி கழிவு அகற்றுதல், ஆக்ஸிஜன் வழங்குதல், ஆய்வுக்கூட சேவைகள் போன்ற பணிகளுக்கு விலைப்புள்ளி மற்றும் ஒப்பந்ததாரர்களை இறுதி செய்தல்.*

19.3 கழகத்தின் அமைப்பு: *தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் நிர்வாக இயக்குனரின் தலைமையின்கீழ் மருந்துகள், மருத்துவக் கருவிகள் மற்றும் சேவைகள் ஆகிய மூன்று முக்கியப் பிரிவுகளுடன் இயங்கி வருகிறது. இக்கழகம், மருத்துவம்-மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் தலைமையின்கீழ், சிறப்புச் செயலாளர், நிதித் துறை, தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழக நிர்வாக இயக்குநர், தேசிய நல்வாழ்வுக் குழும இயக்குநர், மருத்துவக் கல்வி இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர், மருந்துக் கட்டுப்பாட்டு இயக்குநர் மற்றும் பொதுப் பணித் துறை* (*கட்டடப் பிரிவு*) *தலைமைப் பொறியாளர் ஆகியோரை இயக்குநர்களாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.*

19.4 மருந்துகள் மற்றும் மருத்துவக் கருவிகள் கொள்முதல் மற்றும் வழங்கல்: *மருந்துகள், சிறப்பு மருந்துகள், அறுவை மற்றும் தையல் நுகர்பொருட்கள் மற்றும் குருதி உறைவு மருந்துகளைக் கொள்முதல் செய்ய ஒப்பந்தப் புள்ளிகளை வரவேற்பதற்கு முன்பு, மென்பொருள்மூலம் கடந்த மூன்று ஆண்டுகளின் சராசரி நுகர்வினை அடிப்படையாகக் கொண்டு, மருத்துவக்*

கல்வி இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத் துறை இயக்குநர், குடும்ப நல இயக்குநர், மருந்துக் கட்டுப்பாட்டு இயக்குநர் ஆகியோர் கொண்ட ஒரு குழு மூலமாக அரசு மருத்துவ நிறுவனங்களிலுள்ள வல்லுநர்களின் ஆலோசனைகளைப் பெற்று ஆண்டுதோறும் ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்படுகிறது. தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் மற்றும் விதிகளின் அடிப்படையில் ஓராண்டு அல்லது ஈராண்டுகளுக்கு ஒருமுறை விலைப் புள்ளிகளை இறுதி செய்து, அத்தியாவசிய மற்றும் சிறப்பு மருந்துகளைக் கொள்முதல் செய்து வழங்கி வருகிறது. தற்பொழுது இக்கழகமானது 338 அத்தியாவசிய மருந்துகள், 294 மருத்துவ அறுவை மற்றும் தையல் நுகர்பொருட்கள், 301 சிறப்பு மருந்துகளை அரசு மருத்துவ நிறுவனங்களுக்காகக் கொள்முதல் செய்து வருகிறது. மாவட்டத்திற்கு ஒரு மருந்துக் கிடங்கு வீதம் 32 மருந்துக் கிடங்குகளில் மருந்து மற்றும் மருந்துப் பொருட்களைக் கொள்முதல் நுகர்வு முறையின் அடிப்படையில் குறைந்தபட்ச கையிருப்பு மூன்று மாதக் கால அளவில் உறுதி செய்யப்பட்டு வருகிறது. ஒவ்வோர் அரசு மருத்துவ நிலையத்திற்கும் சம்மந்தப்பட்ட இயக்குநரகங்களால் நிதி ஒதுக்கப்பட்டு கடவுப் புத்தகம் (Pass Book) மூலம் மாவட்ட மருந்துக் கிடங்குகளின்மூலம் மருந்துகள் மற்றும் நுகர் பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் கால்நடை பராமரிப்புத் துறைக்குத் தேவையான 202 கால்நடை மருந்துகளை ஆண்டுதோறும் கொள்முதல் செய்து மண்டல இணை இயக்குநரகங்களுக்கு வழங்கி வருகிறது. மருத்துவக் கருவிகள் கொள்முதல் என்பது அரசு அல்லது தேசிய நலக் குழும நிதிகளுடன் அரசு ஆணைகளின்மூலம் வழங்கப்படும் அனுமதியின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகிறது. மேலும் உலக வங்கி, ஜப்பான் பன்னாட்டு உதவி முகமை போன்ற வெளிப்புற நிதியுதவி திட்டங்களின்கீழ் அவற்றின் வழிமுறைகளைப் பின்பற்றி மருத்துவக் கருவிகள் கொள்முதல் செய்யப்படுகின்றன.

19.5 தர உறுதி அமைப்பு: இக்கழகத்தின்மூலம் கொள்முதல் செய்யப்படும் மருந்துகளின் மாதிரிகள் மருந்துக் கிடங்குகளிலிருந்து சேகரிக்கப்பட்டு தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு, அம்மாதிரிகளிலிருந்து மருந்து வாரியாக பொது மாதிரி தேர்ந்தெடுக்கப்படுகிறது. பின்னர் மருந்துகளின்

2023 ஏப்ரல் 18]

வெளியுறை விவரங்கள் அகற்றப்பட்டு ஒவ்வொரு மாதிரிக்கும் ஒரு மாதிரி எண் வழங்கப்பட்டு, ஒப்பந்தம்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட தேசிய தரச்சான்று பெற்ற ஆய்வுக் கூடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. தர தேர்ச்சி பெற்ற மருந்துகள் மட்டுமே மருத்துவ மனைகளுக்கு வழங்கப்படுகிறது. தர தேர்ச்சி பெற்ற மருந்துகளும், மருந்துக் கிடங்குகளிலிருந்தும் மருத்துவமனைகளிலிருந்தும் அவ்வப்போது மீண்டும் மாதிரிகள் எடுக்கப்பட்டு ஆய்வு செய்யப்படுவதன்மூலம் அவற்றின் தரம் உறுதி செய்யப்படுகிறது.

19.6 சேவை நடவடிக்கைகள்: *பொதுமக்களுக்கு உயர் நோயறிதல் மற்றும் சிகிச்சை வசதிகளை உறுதி செய்வதற்காக, இக்கழகம் உயர்வகை சி.டி ஸ்கேனர்கள், எம்.ஆர்.ஐ ஸ்கேனர்கள் மற்றும் சிறுநீரகக் கல் உடைப்பு கருவிகள் ஆகியவற்றை அரசு மருத்துவமனைகளில் குறைந்தபட்ச பயனாளிகள் கட்டண வசூல் அடிப்படையிலும் மற்றும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் கட்டணமில்லா சேவையையும் வழங்கி வருகிறது. இவற்றோடு கோபால்ட் சிகிச்சை, நேரியல் முடுக்கி* (Linear Accelerator) *பிரேக்கிதெரபி போன்ற புற்றுநோய் பராமரிப்பு மற்றும் சிகிச்சைக் கருவிகளின் சேவைகள், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் உள்ள குடும்பங்கள் கட்டணமில்லாமல் பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.*

19.6.1 ஸ்கேன் மையங்கள்: *90 மையங்களில் 118 சி.டி.ஸ்கேனர்கள், 32 மையங்களில் 33 எம்.ஆர்.ஐ. ஸ்கேனர்களும் மற்றும் தனியார் பங்களிப்புமூலம் மேலும், 6 மையங்களில் 6 எம்.ஆர்.ஐ. ஸ்கேனர்களும் இக்கழகத்தின் செயல்பாட்டில் உள்ளன. டெலிரேடியோலஜி வசதியை அனைத்து சி.டி. மையங்கள் மற்றும் எம்.ஆர்.ஐ. மையங்களில் நிறுவி கதிர் இயக்க மருத்துவரின் அறிக்கையைத் தொலைதூரத்திலுள்ள மருத்துவமனைக்கும் விரைவாக வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் 4 மையங்களில் 4 சிறுநீரகக் கல் உடைப்பு கருவிகள் நிறுவப்பட்டு குறைந்தப்பட்ச பயனாளிகள் கட்டண வசூல் அடிப்படையில் இயக்கி வருகிறது. மேலும் தனியார் பங்களிப்புமூலம் 2 பெட் சி.டி. ஸ்கேன்கள்* (Positron Emission Tomography-Computed Tomography) *இயங்கி வருகின்றன. தற்போது 5 இடங்களில் பெட் சிடியானது தனியார் பங்களிப்புமூலம் நிறுவும் பணி நடைபெற்று வருகிறது.*

[2023 ஏப்ரல் 18

19.6.2 கதிரியக்க சிகிச்சை மையங்கள்: 9 மையங்களில் 9 நேரியல் முடக்கி கருவிகளையும் 14 மையங்களில் 15 கோபால்ட் சிகிச்சை கருவிகளையும், 8 பிராக்கி தெரப்பி கருவிகளை 8 மையங்களிலும் முதலமைச்சர் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட வருவாயின்மூலம் இயக்கி பராமரிக்கும் பொறுப்பினை இக்கழகம் ஏற்றுக்கொண்டுள்ளது.

19.6.3 மருத்துவக் கருவிகள் பராமரிப்புச் சேவை: அரசு மருத்துவமனைகளில் உள்ள மருத்துவக் கருவிகளை அவற்றை நிறுவிய நிறுவனங்களின்மூலம் உயிரி மருத்துவப் பொறியாளர்களின் உதவியோடு ஆண்டு பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டு வருவதோடு, அப்பராமரிப்பு சேவைகளுக்கான தொகையையும் அந்தந்த நிறுவனங்களுக்கு வழங்கியும் வருகிறது. இதற்கென சிறப்பான மென்பொருள் (EMMS) ஒன்று பயன்பாட்டில் உள்ளது.

19.7 கட்டணப் பிரிவுகளுக்கு நடைமுறை ஒத்துழைப்பு, வழங்கல்: இக்கழகம் சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் உள்ள கல்லீரல் மாற்று அறுவைச் சிகிச்சை மையம், சென்னை மகளிர் மற்றும் மகப்பேறு நல மருத்துவமனையில் உள்ள மகப்பேறு பிரிவு, கஸ்தூரிபா காந்தி மகளிர் மருத்துவமனை மற்றும் சென்னை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைகளில் அமைக்கப்பட்டுள்ள கட்டணப் பிரிவுகளின் வரவு-செலவுக் கணக்குகளைப் பராமரித்து நடைமுறை ஒத்துழைப்பு நல்குவதன்மூலம் மிகவும் குறைந்த கட்டணத்தில் சிறந்த மருத்துவச் சேவைகளை பொதுமக்கள் பெற உதவி வருகிறது. தற்போது கூடுதலாக மதுரை, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய மூன்று மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் இக்கழகத்தின்மூலம் நிறுவப்பட்டுள்ளது.

19.8 கோவிட்-19 சிகிச்சைக்கான கொள்முதல்:

- இக்கழகம் கோவிட்-19 சிகிச்சைக்குத் தேவையான மருந்துகள், மருத்துவக் கருவிகள் மற்றும் நுகர்வுப்பொருட்களை போர்க்கால அடிப்படையில் விரைவாக வாங்கி வழங்கியுள்ளது.

2023 ஏப்ரல் 18]

- *99 ஆர்.டி.பி.சி.ஆர். கருவிகள் 110 தானியங்கி ஆர்.என்.ஏ பகுப்பு கருவிகள் மற்றும் ஆழ் உறைநிலை சேமிப்புகலன், ஆய்வக குளிர்சாதன பெட்டிகள், உயிரி பாதுகாப்பு அறைகலன்கள் போன்ற கருவிகளையும் கொள்முதல் செய்து தமிழ்நாட்டில் ஆய்வக திறனை வலுப்படுத்தியது. ஒரு மாவட்டத்திற்கு குறைந்தபட்சம் ஓர் ஆய்வகமாவது இருப்பதை உறுதி செய்யப்பட்டு, அதன்மூலம் மாநில அளவில் நாளொன்றுக்கு 2,03,500 மாதிரிகள் 78 அரசு ஆய்வகங்களில் ஆய்வு செய்யும் திறன் ஏற்படுத்தப்பட்டது. ஒட்டு மொத்தமாக, தனியார் ஆய்வகங்களுடன், தமிழ்நாட்டின்* RT-PCR *பரிசோதனை திறன் நாளொன்றுக்கு 3.68 இலட்சங்களாக உயர்ந்துள்ளது.*
- *மேலும், கோவிட்-19 சிகிச்சைக்குக் கூடுதலாக தேவைப்பட்ட ஆக்சிஜன் சேமிப்புக்காகக் கூடுதல் திரவ ஆக்சிஜன் சேமிப்புக் கலன்களை அரசு மருத்துவமனைகளில் மொத்தம் 1387.02 கி.லி கொள்ளளவில் நிறுவியுள்ளது.*

அத்தியாயம்—20

தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடுச் சங்கம்

20.1 தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடுச் சங்கம் 22.4.1994 அன்று ஏற்படுத்தப்பட்டது. இச்சங்கம் தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு நிதியுதவி மற்றும் வழிகாட்டுதலின்படி எச்.ஐ.வி./எய்ட்ஸ் தொற்று தடுப்புப் பணிகளைச் செயல்படுத்தி வருகிறது. மாவட்ட அளவிலான எய்ட்ஸ் திட்டங்கள், மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகுகள்மூலம் (DAPCU) *செயல்படுத்தப்பட்டு கண்காணிக்கப்படுகிறது.*

20.2 இந்தியாவில் எச்.ஐ.வி./எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு பணிக்காக தேசிய அளவில் முதன் முறையாகத் தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடுத் திட்டம் 1992-ல் தொடங்கப்பட்டது. காலப்போக்கில் இத்தொற்றின் தன்மைக் கருதி, தேசிய அளவில் எச்.ஐ.வி./எய்ட்ஸ் விழிப்புணர்வோடு கூடிய நடத்தை மாற்று செயல்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, தேசியளவில்

திட்ட செயல்பாடுகள் பரவலாக்கப்பட்டன. பிறகு, தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடுத் திட்டத்தின் ஐந்தாவது கட்டத்தில் (NACP-V) அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் எச்.ஐ.வி.-யுடன் வாழ்வோர் கூட்டமைப்புகளை இணைத்துத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில், தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடுத் திட்டத்தின் தொடர்ச்சியாக தடுப்பு மற்றும் கவனிப்புச் சேவைகளை அளிப்பதில் மைய முகமையாகத் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடுச் சங்கம் விளங்குகிறது. தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடுச் சங்கத்தின் மூலமாக வழங்கப்படும் பல்வேறு சேவைகள் பின்வருமாறு:

அ) எச்.ஐ.வி. ஆலோசனை மற்றும் பரிசோதனைச் சேவைகள் பொதுமக்கள், கருவுற்ற தாய்மார்கள் மற்றும் எச்.ஐ.வி. தொற்று தாக்கும் வாய்ப்பு அதிகமுள்ள மக்களுக்கு (பெண் பாலியல் தொழிலாளர், ஆண் ஓரினச் சேர்க்கையாளர், திருநங்கையர், ஊசிமூலம் போதை மருந்து உபயோகிப்பவர்களுக்கு) வழங்கப்பட்டு வருகின்றன.

ஆ) பொது மக்கள், எச்.ஐ.வி.. தொற்றுக்குள்ளானோர், கருவுற்ற தாய்மார்கள் மற்றும் எச்.ஐ.வி. தொற்று தாக்கும் வாய்ப்பு அதிகமுள்ள மக்களுக்கு பாலியல் நோய் தொற்று குறித்து ஆலோசனை, பரிசோதனை மற்றும் சிகிச்சை சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இ) தாயிடமிருந்து குழந்தைக்குப் பரவும் எச்.ஐ.வி. மற்றும் கிரந்தி நோய் தொற்றை நீக்க ஆலோசனை, பரிசோதனை மற்றும் தொடர் சிகிச்சை சேவைகள் கருவுற்ற தாய்மார்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

ஈ) 1.25 இலட்சம் எச்.ஐ.வி. தொற்றுடைய மக்களுக்குக் கவனிப்பு, ஆதரவு மற்றும் சிகிச்சைச் சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2023 ஏப்ரல் 18]

உ) *எச்.ஐ.வி. தாக்கும் வாய்ப்பு அதிகமுள்ள குழுக்களுக்கும், பொதுமக்களுக்கும் இடையே பால்வினை நோய் தொற்று மற்றும் எச்.ஐ.வி. நோய்த்தொற்று ஏற்பட பாலமாக உள்ள புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் லாரி ஓட்டுநர்களுக்கு ஏற்படும் தொற்றைத் தடுப்பதற்காகத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் சமூகம் சார்ந்த நிறுவனங்கள் ஈடுபடுத்தப்படுகின்றன.*

ஊ) *எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளானோர், எச்.ஐ.வி. தொற்று தாக்கும் அபாயம் அதிகமுள்ள மக்கள் சமூக நலம் மற்றும் சமூக உரிமைத் திட்டத்தின்கீழ் இணைக்கப்பட்டு பல்வேறு அரசு நிதியுதவி பெற வழிவகை செய்யப்படுகிறது.*

எ) *பொது மக்கள் மற்றும் இலக்கு மக்களிடையே பால்வினைத் தொற்று மற்றும் எச்.ஐ.வி. குறித்த விழிப்புணர்வைத் தகவல், கல்வி தொடர்பு மூலமாகத் தெரிவித்தல்.*

20.3 தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடுச் சங்கத்தின் கூட்டமைப்பு மற்றும் செயல்பாடுகள்: *தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடுச் சங்கம் எச்.ஐ.வி./எய்ட்ஸ் தடுப்பின் தொடர்ச்சியான சேவைகளை மேலாண்மைச் செய்யும் பொருட்டு அதன் தொடர்புடைய கூட்டமைப்புகளின்மூலம் 2,962 ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையங்கள், 1,867 வசதியுள்ள ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையங்கள், 16 நடமாடும் ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை வாகனங்கள், 774 பால்வினை / பிறப்பு உறுப்பு நோய் தொற்று சிகிச்சைப் பிரிவுகள், 67 கூட்டு மருந்து சிகிச்சை மையங்கள், 174 இணைப்புக் கூட்டு மருந்து சிகிச்சை மையங்கள், 86 இலக்கு மக்கள் திட்டம் மற்றும் 17 தொடர் பணியாளர் திட்டங்களின் வாயிலாகச் செயல்படுத்தப்படுகிறது. எச்.ஐ.வி. / எய்ட்ஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வாழ்நாள் முழுவதற்குமான கட்டணமில்லாத கவனிப்பு, ஆதரவு மற்றும் சிகிச்சைச் சேவைகள் வழங்குவதில் அரசு உறுதியாக உள்ளது. தற்பொழுது 1,25,000 எச்.ஐ.வி. / எய்ட்ஸ் தொற்றுள்ளோர் 67 கூட்டு மருந்து சிகிச்சை மையங்கள் மூலமாக இலவச சிகிச்சையினை மேற்கொண்டு வருகின்றனர். கூடுதலாக, 174 இணைப்புக் கூட்டு மருந்து சிகிச்சை மையங்கள், அவரவரின் இல்லங்களுக்கு அருகில் அமைந்திருக்கும் மருந்து விநியோகிக்கும் மையங்களாகச்*

செயல்படுகிறது. மேலும், தீவிர தொடர் விழிப்புணர்வினை பொது மக்கள் மற்றும் கருவுற்ற தாய்மார்கள் மத்தியில் தன்னிறைவை ஏற்படுத்தியும், கருவுற்ற தாய்மார்களிடமிருந்து குழந்தைக்குப் புதிய எச்.ஐ.வி. தொற்று ஏற்படுவதை பூஜ்ஜியமாக்க, சிறப்பு கவனத்துடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

20.4 புதிய தொற்றினைத் தடுத்தல்

20.4.1 எச்.ஐ.வி. ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை சேவைகள்

- *2022-2023 ஆம் ஆண்டில் வரையில் எச்.ஐ.வி. ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனைச் சேவைகள் 40,87,719 பொது மக்களுக்கும், 13,78,062 கர்ப்பிணிப் பெண்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.*

- *எச்.ஐ.வி. ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனைச் சேவைகள், மாநிலத்திலுள்ள பலதரப்பட்ட சுகாதாரக் கவனிப்பு மையங்களில் அமைந்துள்ள 2,962 மையங்கள் மூலமாக வழங்கப்படுகிறது. அதன் விவரங்கள் பின்வருமாறு:-*

1. *தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு நிறுவனத்தின் உதவியுடன், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும், மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும் மற்றும் அரசு மருத்துவமனைகளிலும் அமைந்துள்ள 377 உறுதிப்படுத்தும் ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையங்களும், 16 நடமாடும் மையங்களும் செயல்பட்டு வருகின்றன.*

2. *தேசிய நலவாழ்வுக் குழுமத் திட்டத்தின்கீழ் 403 உறுதிப்படுத்தும் ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையங்களும், 1,867 முதற்கட்ட பரிசோதனை செய்ய வசதியுள்ள ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையங்களும் செயல்படுத்தப்படுகின்றன.*

3. *தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கமானது, 188 பொது மற்றும் தனியார் பங்களிப்பாளர்கள் அமைப்புடன் இணைந்து செயல்பட்டு வருகிறது. மேலும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் எச்.ஐ.வி.*

கூட்டமைப்புகளுடன் இணைந்து 104 ஆலோசனை மற்றும் பரிசோதனை சேவைகள் தொடங்கப்பட்டுள்ளன.

20.4.2 தாயிடமிருந்து குழந்தைக்குப் பரவும் எச்.ஐ.வி. மற்றும் கிரந்தி நோய் தொற்றைத் தடுத்தல் (EVTHS):

- தமிழ்நாடு அரசு, பிறந்த குழந்தைகளுக்கு எச்.ஐ.வி. மற்றும் சிபிலிஸ் (கிரந்தி நோய்) தொற்றினை முற்றிலும் அகற்றுவதற்காகக் கர்ப்ப காலத்தில் அனைத்து பெண்களுக்கும் அத்தியாவசியமாகப் பரிசோதனை செய்வதை உறுதி செய்கிறது.
- "பச்சிளம் குழந்தை நோயறிதல் (EID)" திட்டம் ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையத்தின் (ICTC) மூலமாக செயல்படுத்தப்படுகிறது.
- பாதிக்கப்பட்ட தாய்மார்களுக்குப் பிறந்த குழந்தைகளுக்கு, தாய்-சேய் மேவா நீக்கத் திட்டத்தின் (EVTHS)-படி, ஏ.ஆர்.வி (ARV Prophylaxis) பிறப்பு முதல் ஆறு (அ) பன்னிரெண்டு வாரம் வரை Nevirapine (அ) Zidovudine சொட்டு மருந்து (அ) இரண்டும் இணைந்த இரட்டை தடுப்பு சொட்டு மருந்து வழங்கப்பட்டு வருகிறது.
- எச்.ஐ.வி. தொற்றால் பாதிக்கப்பட்ட தாய்மார்களுக்கு வாழ்நாள் முழுவதற்குமான கூட்டு மருத்துவச் சிகிச்சை மற்றும் தொடர் ஆலோசனைச் சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

20.5 பால்வினைத் தொற்று/இனப்பெருக்க வழி தொற்று சேவைகள்

20.5.1 நியமிக்கப்பட்ட பால்வினைத் தொற்று மற்றும் இனப்பெருக்க வழி தொற்று மையங்கள்:

- தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடுச் சங்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனை, அரசு மருத்துவமனை மற்றும் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள 774 (DSRCs) மையங்களை "சுகவாழ்வு மையங்களாக" விரிவுபடுத்தியுள்ளது.

- இம்மையங்களில் இனப்பெருக்க மண்டலம் மற்றும் பால்வினைத் தொற்று உள்ளவர்களுக்குக் கூட்டு மருந்து சிகிச்சை அளிக்கப்படுகிறது. மேலும், இந்த சுகவாழ்வு மையத்திலுள்ள புறநோயாளிகள் அனைவருக்கும் கிரந்தி (சிபிலிஸ்) மற்றும் எச்.ஐ.வி. தொற்றுக்கான பரிசோதனையும் மேற்கொள்ளப்படுகிறது. அனைத்துக் கருவுற்ற பெண்களுக்கும் கிரந்தி நோயால் குழந்தைகளுக்கு ஏற்படும் பிறவி குறைப்பாட்டினைத் தவிர்ப்பதற்காக கிரந்தி பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது.
- இந்நோய் தாக்கும் அபாயம் அதிகமுள்ள மக்களுக்கு, பால்வினைத் தொற்று தொடர் பரிசோதனை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்படுகிறது.
- பயிற்சி பெற்ற மருத்துவரால் பால்வினை நோயின் அறிகுறிகளைப் பரிசோதித்த பின் தேவையின் அடிப்படையில், நிறப்பட்டைக் கொண்ட பால்வினை நோய்க்கான மருந்துகள் அளிக்கப்பட்டு, சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. மேலும், பயிற்சி பெற்ற ஆலோசகர்மூலம் பால்வினைத் தொற்று, எச்.ஐ.வி. பரவல் மற்றும் தடுப்பு முறை சிகிச்சை, வாழ்க்கைத் துணைவருக்கான சிகிச்சை, ஆணுறை பயன்பாடு பற்றிய விழிப்புணர்வு ஆகிய சேவைகள் வழங்கப்படுகின்றன.

20.6 இலக்குப் பணிகள் (Targeted Intervention):

20.6.1 அதிக நோய்த் தொற்றுக்கு வாய்ப்புள்ள குழுக்கள்: இலக்குப் பணிகளின் முக்கிய நோக்கமானது எச்.ஐ.வி. பாதிப்பு அதிக நோய்த் தொற்றுக்கு வாய்ப்புள்ள குழுக்களுக்கு எச்.ஐ.வி. தடுப்பு சேவைகளைப் பெறுவதை ஊக்குவிப்பதும், அவர்களது நடத்தையை நலம் பேணும் வகையில் முன்னேற்றுவதும் ஆகும். இதன்மூலம் பாலியல் தொற்று ஆபத்திலிருந்து அவர்களைக் காக்கவும், மேலும் ஆணுறை பயன்பாடு, சுத்திகரிக்கப்பட்ட ஊசி அளிப்பது, பால்வினைத் தொற்று சிகிச்சை, எச்.ஐ.வி. மற்றும் கிரந்தி நோய் பரிசோதனை மற்றும் கூட்டு மருந்து சிகிச்சை மையத்திற்கு இணைப்பது போன்றவை இலக்கு பணிகள்மூலம் நடைபெறுகிறது. தொழிலுக்காகப் புலம் பெயர்ந்து பின் வீடு திரும்புவோர் மற்றும் அவர்களது துணைவருக்கும் அவர்களது சொந்த கிராமங்களிலும் முக்கிய இடங்களிலும் விழிப்புணர்வுப்

2023 ஏப்ரல் 18]

பிரச்சாரம் மற்றும் சுகாதார முகாம்களின்மூலம் எச்.ஐ.வி. தடுப்புச் சேவைகள் அளிக்கப்படுகின்றன. புலம் பெயர் தொழிலாளர்களின் முதலாளிகளின் மூலமும் புலம் பெயர்வோர் கண்காணிப்பு அமைப்பு வழியாகவும் இவர்களுக்கான சேவைகள் வழங்கப்படுகின்றன.

- *அரசு சார்பற்ற அமைப்புகள், சமூக அமைப்புகள்மூலம் நம் மாநிலத்திலுள்ள அதிக நோய் தொற்றுக்கு வாய்ப்புள்ள குழுக்களுக்கான பெண் பாலியல் தொழிலாளர்கள், ஆணுடன் பாலுறவுகொள்ளும் ஆண்கள், போதை ஊசி உபயோகப்படுத்துபவர்கள், கனரக வாகனம் ஓட்டுபவர்கள், புலம் பெயர்ந்தோர் மற்றும் மூன்றாம் பாலினத்தவர் ஆகிய எச்.ஐ.வி. தொற்று வாய்ப்புள்ளோர்களுக்கு நடத்தை மாற்றத்தினை ஏற்படுத்துதல் இலக்குப் பணிகள்மூலம் மேற்கொள்ளப்படுகிறது.*
- *மார்ச் 2023 ஆம் ஆண்டின்படி, 87 தொண்டு நிறுவனங்கள் மற்றும் சமூகம் சார்ந்த நிறுவனங்கள்மூலம் 76,446 அதிக நோய் தொற்றுக்கு வாய்ப்புள்ள இலக்கு மக்களுக்கு (பெண் பாலியல் தொழிலாளர்கள்-40,898, ஆண் ஓரினச் சேர்க்கையாளர்கள்-28,759, திருநங்கைகள்-6,326, போதை ஊசி மருந்து பழக்கம் உள்ளவர்கள்-465)* Bridge Population*-1,53,126 (புலம் பெயர்ந்தோர்கள்-94,189 மற்றும் ஓட்டுநர்கள்-58,937) ஆகியோர்களுக்கும் எச்.ஐ.வி. தடுப்பு பணி சென்றடைந்துள்ளது.*

20.6.2 சமூகம் சார்ந்த எச்.ஐ.வி. பரிசோதனை:

- *சமூகம் சார்ந்த எச்.ஐ.வி. பரிசோதனை, உலகளாவிய கொள்கையான 2030-ல் எச்.ஐ.வி. / எய்ட்ஸ்-ஐ முடிவுக்குக் கொண்டு வருவதற்கு செயல்படுத்தப்படுகிறது. தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு அமைப்பு மற்றும் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடுச் சங்கம் சமூகம் சார்ந்த எச்.ஐ.வி./ எய்ட்ஸ் பரிசோதனையை தொண்டு நிறுவனங்கள், சமூகம் சார்ந்த நிறுவனங்கள் மற்றும் தொடர்பு பணியாளர்கள் திட்ட தொண்டு நிறுவனங்கள்மூலம் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.*

[2023 ஏப்ரல் 18

- தொடர்ச்சியாக மார்ச் 2023-ன்படி, சமூகம் சார்ந்த எச்.ஐ.வி. பரிசோதனைமூலம் 1,45,408 இலக்கு மக்கள் பரிசோதிக்கப்பட்டு, 167 எச்.ஐ.வி. தொற்று உள்ளவர்கள் கண்டறியப்பட்டு, ஏ.ஆர்.டி. மையங்களில் பதியப்பட்டு, சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

20.6.3 தொடர்பு பணியாளர்கள் திட்டம்

தொடர்பு பணியாளர்கள்மூலம் சமுதாயம் சார்ந்த பணிகள் வாயிலாக எச்.ஐ.வி. தடுப்பு மற்றும் கவனிப்புச் சேவையைக் கிராமப்புறத்தில் உள்ள அதிக பாதிப்புக்குள்ளாகும் வாய்ப்புள்ள குழுக்களுக்கு எச்.ஐ.வி. விழிப்புணர்வு, ஆணுறை பயன்பாடு ஊக்குவிப்பு மற்றும் விநியோகித்தல், மேலும் எச்.ஐ.வி. ஆலோசனை, பரிசோதனை மற்றும் பால்வினை நோய் தொற்றை அறிய பரிந்துரைக்கப்படுகிறது.

- தமிழ்நாட்டில் முன்னுரிமை அடிப்படையில் 17 மாவட்டங்களில் பால்வினைத் தொற்று, எச்.ஐ.வி. / எய்ட்ஸ் மற்றும் காசநோய் ஆகியவற்றைத் தடுப்பதை இலக்காகக் கொண்டு ஊரகப் பகுதி இலக்கு மக்கள், அபாய நடத்தை உள்ளவர்கள் மற்றும் ஓட்டுநர்கள், புலம் பெயர்ந்தவர்கள் மத்தியில் தொடர்பு பணியாளர் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- தற்பொழுது, 17 தொடர்பு பணியாளர்கள் திட்டம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு தொடர்பு பணியாளர்கள் திட்டமும் அவர்களுக்குரிய மாவட்டங்களில் அதிகம் எச்.ஐ.வி. பரவியுள்ள 100 கிராமங்களில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தத் தொடர்பு பணியாளர் திட்டம்மூலம் 6,902 அதிக தொற்றுக்குள்ளாகும் நிலையில் உள்ளவர்கள், 5,712 பெண் பாலியல் தொழிலாளர்கள், 1,098 ஆண் ஓரினச் சேர்க்கையாளர்கள், 92 திருநங்கைகள், 1,16,537 புலம் பெயர்ந்தோர் மற்றும் 57,093 கனரக வாகன ஓட்டுநர்கள் ஆகியவர்களுக்குப் பால்வினைத் தொற்று எச்.ஐ.வி. மற்றும் காசநோய்த் தடுப்பு சேவைகள் வழங்கப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 18]

20.6.4 ஆணுறை பயன்பாடு:

பொது மக்கள் மற்றும் இலக்கு மக்கள் மத்தியில் பால்வினைத் தொற்று மற்றும் எச்.ஐ.வி. தொற்றைத் தடுக்கும் முக்கியமான திறனுள்ள கருவியாக ஆணுறை பயன்பட்டுக் கொண்டிருக்கிறது. தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடுச் சங்கம் பால்வினை நோய் மையங்கள், நம்பிக்கை மையங்கள், ஏ.ஆர்.டி. மையங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் (இலக்கு மக்கள் மற்றும் தொடர்பு பணியாளர்கள்) சமூகம் சார்ந்த நிறுவனங்களின் களப்பணிகள் மூலமாக ஏப்ரல் 2022 முதல் மார்ச் 2023 வரை 1.96 கோடி இலவச ஆணுறைகள் வழங்கப்பட்டுள்ளன.

20.7 தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சிறைச்சாலைகள், பெண்கள் குறுகிய கால தங்கும் இல்லங்கள் மற்றும் பெண்கள் மறுவாழ்வு மையங்களில் செயல்படுத்தப்படும் எச்.ஐ.வி. மற்றும் காசநோய்த் தடுப்புத் திட்டம்:

- *தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடுச் சங்கம் மாநிலம் முழுவதிலுமுள்ள அனைத்து வகை சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளுக்கும், பெண்கள் குறுகிய கால தங்கும் இல்லங்கள் மற்றும் பெண்கள் மறுவாழ்வு மையங்களில் உள்ள பெண்கள் மத்தியில் பால்வினை நோய், எச்.ஐ.வி., காசநோய் மற்றும் ஹெபடைட்டிஸ் வைரஸ் தொற்று தொடர்பான தடுப்புப் பணிகள் (விழிப்புணர்வு, பயிற்சி, ஆலோசனை, பரிசோதனை, பரிந்துரை, கவனிப்பு மற்றும் சிகிச்சை வழங்குதல்) திட்டத்தினை செயல்படுத்த செப்டம்பர் 2018-ல் சிறைத் துறை மற்றும் சமூக நலத் துறையுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.*

- *இதன் தொடர்ச்சியாக 58,425 சிறைவாசிகளுக்கு எச்.ஐ.வி. பரிசோதனை செய்து அவர்களில் 90 நபர்களுக்கு எச்.ஐ.வி. கண்டறியப்பட்டு, 81 நபர்களுக்கு ஏ.ஆர்.டி பதிவு செய்யப்பட்டு, சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. அவர்களில் 58,244 சிறைவாசிகளுக்கு காசநோய் பரிசோதனை செய்ததில் 25 காசநோயாளிகள் கண்டறியப்பட்டு, அவர்களுக்கு காசநோய்க்கான சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.*

[2023 ஏப்ரல் 18

20.8 எச்.ஐ.வி./எய்ட்ஸால் பாதிக்கப்பட்டவர்களைத் திறம்பட ஈடுபடுத்துதல்: *எச்.ஐ.வி. / எய்ட்ஸ் உடன் வாழும் மக்கள் மற்றும் அவர்கள் சார்ந்த நிறுவனங்களை மாவட்ட அளவில் எச்.ஐ.வி. குறித்த திட்டம் சார்ந்த செயல்பாடுகளில் திறம்பட ஈடுபடுத்துதல் ஆகும்.*

- *கடைநிலையில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனைத்து சேவைகளும் கிடைப்பதை உறுதி செய்தல்*
- *ஆதரவு சிகிச்சை பராமரிப்பு திட்டங்களைச் செயல்படுத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது.*

20.9 ஹலோ + உதவி எண் 1800 419 1800: எச்.ஐ.வி. / எய்ட்ஸ் மற்றும் பால்வினைத் தொற்று குறித்த சந்தேகங்களை நிவர்த்தி செய்வதற்கும், மாவட்டந்தோறும் செயல்படும் சேவை மையங்கள் (ICTC, DSRC and ART Centres) *பற்றிய தேவையான தகவல்களை வழங்குவதற்கும், மேலும், இது குறித்த தவறான கருத்துகளைக் களைவதற்கும், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடுச் சங்கத்தின் வாயிலாகப் பிரத்யேக உதவி எண் வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.*

20.10 சட்ட உதவி மையங்கள்:

- *தமிழ்நாடு சட்டப் பணிகள் ஆணைக் குழுவுடன் இணைந்து அனைத்து மாவட்டங்களிலும் இலவச சட்ட உதவி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.*
- *இத்திட்டத்தின்கீழ் எச்.ஐ.வி./எய்ட்ஸ் உடன் வாழ்வோர் மற்றும் இலக்கு மக்களின் சட்டம் சார்ந்த மற்றும் சட்டம் சாராத பிரச்சினைகளைக் கூட்டு மருத்துவச் சிகிச்சை மையங்களில் பணியாற்றும் முதுபெரும் ஆலோசகர்கள் மூலமாக அணுகுதல்.*

20.11 செஞ்சுருள் சங்கம்:

- *நாட்டிலேயே முதன் முதலாக இளைஞர்களிடையே எச்.ஐ.வி. / எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் மற்றும் நடத்தை மாற்றத்தைக் கொண்டு வரவும், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தால், 2005 ஆம் ஆண்டில் செஞ்சுருள் சங்கம் தொடங்கப்பட்டது.*

2023 ஏப்ரல் 18]

- *மாநிலத்தில் உள்ள 2,279 கலை மற்றும் அறிவியல், தொழிற்கல்வி, பொறியியல், மருத்துவம் மற்றும் ஆசிரியர் கல்லூரிகள் மற்றும் ஆசிரியர் பயிற்சி மையங்களில் செஞ்சுருள் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.*

20.12 வாழ்வியல் திறன் கல்வித் திட்டம் (LSEP): *எச்.ஐ.வி./ எய்ட்ஸ் தொற்றுப் பரவலைத் தடுக்கும் வகையில், எச்.ஐ.வி./ எய்ட்ஸ் பரவுதல் மற்றும் தடுத்தல் தொடர்பான தகவல்களை 9,830 பள்ளிகளில் ஒன்பதாம் மற்றும் பதினொன்றாம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு வாழ்வியல் திறன் பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டம் மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்* (SCERT) *வாயிலாக நடத்தப்படுகிறது.*

20.13 சமூக நன்மைகளை ஒருங்கிணைத்தல்:

- *எச்.ஐ.வி./எய்ட்ஸால் தொற்றுக்குள்ளான மற்றும் பாதிப்புக்குள்ளான அனாதையான குழந்தைகளின் நலன் கருதி 'தமிழ்நாடு அரசு எச்.ஐ.வி.-ஆல் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான தமிழ்நாடு அரசின் அறக்கட்டளை'* (TNTCAA) *2009-10 ஆம் நிதியாண்டில் துவங்கப்பட்டது. இதுவரையில் ரூ.25.00 கோடி தமிழ்நாடு அரசின் நிதி பெறப்பட்டு, தமிழ்நாடு பவர் பைனான்ஸ் கார்ப்பரேஷனில் தொகுப்பு நிதியாக வைக்கப்பட்டுள்ளது. அந்நிதியிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் எச்.ஐ.வி. / எய்ட்ஸால் தொற்றுக்குள்ளாக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் கல்வி, மருத்துவம் மற்றும் ஊட்டச்சத்திற்காக நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.*

- *எச்.ஐ.வி./எய்ட்ஸ் தொற்றுடன் வாழ்பவர்கள் கூட்டு மருந்து சிகிச்சை மையங்களுக்குச் சென்று வர, கட்டணமில்லாப் பேருந்து பயணச் சீட்டு வழங்கப்பட்டு வருகிறது.*

- *எச்.ஐ.வி./எய்ட்ஸ் தொற்றுடன் வாழும் மக்களுக்குத் தமிழ்நாடு அரசின் கீழ்க்காணும் திட்டங்களில் முன்னுரிமை வழங்கப்படுகிறது.*

 1. விதவை ஓய்வூதியம்

 2. முதியோர் ஓய்வூதியத் திட்டம்

[2023 ஏப்ரல் 18

3. மாண்புமிகு முதலமைச்சரின் சூரிய சக்தியுடன்கூடிய பசுமை வீடு திட்டம்

20.14 கவனிப்பு, ஆதரவு மற்றும் சிகிச்சை:

- எச்.ஐ.வி./எய்ட்ஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வாழ்நாள் முழுவதற்குமான கட்டணமில்லாத கவனிப்பு, ஆதரவு மற்றும் சிகிச்சை சேவைகள், அரசு மருத்துவமனைகளுடன் இணைக்கப்பட்டுள்ள கூட்டு மருந்து சிகிச்சை மையங்கள் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றது.

- வழக்கமான பரிசோதனைகள், சிடி4 பரிசோதனை, இரத்தத்தில் வைரஸ் அளவைக் கண்டறியும் பரிசோதனை, ஏ.ஆர்.வி. கூட்டு மருந்து, சந்தர்ப்பவாத நோய் தொற்றிற்கான மருந்து, பலதரப்பட்ட ஆலோசனைச் சேவைகள், பரிந்துரை மற்றும் இணைப்புச் சேவைகள் முதலியன கூட்டு மருந்து சிகிச்சை மையங்களின்மூலம் அளிக்கப்பட்டு வருகிறது. இத்துடன் விருப்பப்படும் எச்.ஐ.வி. தொற்றுள்ளோரை யோகா பயிற்சி மற்றும் வாழ்வியல் முறையை மாற்றியமைப்பதற்கான பயிற்சிகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக இணைக்கப்பட்டு வருகிறது.

- ஏறத்தாழ 1,25,000 எச்.ஐ.வி. / எய்ட்ஸ் தொற்றுள்ளோர், 67 கூட்டு மருந்து சிகிச்சை மையங்கள் மூலமாக இலவச சிகிச்சையினைப் பெற்று வருகின்றனர். கூடுதலாக, அவரவரின் இல்லங்களுக்கு அருகில் அமைந்திருக்கும் 174 இணைப்பு கூட்டு மருந்து சிகிச்சை மையங்கள், மருந்து விநியோகிக்கும் மையங்களாக செயல்படுகின்றன.

- இதுதவிர, 31 கவனிப்பு மற்றும் ஆதரவு மையங்கள், சிகிச்சையைத் தவறவிட்ட எச்.ஐ.வி. / எய்ட்ஸ் தொற்றுள்ள நபர்களைக் கண்காணித்து சிகிச்சை பெறவும், உளவியல் சமூக ஆதரவு மற்றும் பலவிதமான நலம் தரும் திட்டங்களுடன் இணைக்கும் சேவை மையங்களாகச் செயல்பட்டு வருகின்றன.

2023 ஏப்ரல் 18]

20.15 கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு:

தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பிரிவு, ஆதார அடிப்படையில் தரவுகளைச் சேகரித்தும், தொடர்புடைய ஆய்வின் மூலமாகவும் எச்.ஐ.வி. / எய்ட்ஸ் தடுப்புத் திட்டங்களின் வளர்ச்சியை கண்காணிக்கிறது. ஒருங்கிணைந்த மேலாண்மை அமைப்பின் (IMS)*மூலம் இணையதள அறிக்கைகளின் வாயிலாகத் திட்ட வளர்ச்சி கண்காணிக்கப்படுகிறது. இந்தப் பிரிவு கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் அதிக அளவில் தொற்று பரவக்கூடும் என கண்டறியப்பட்ட குழுக்களிடையே எச்.ஐ.வி. / எய்ட்ஸ் பரவலை அளவிடுவதற்குத் தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு நிறுவனத்தால் நியமிக்கப்பட்ட ஆராய்ச்சி நிறுவனத்தின் உதவியுடன் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை எச்.ஐ.வி. தீவிர கண்காணிப்பு ஆய்வை நடத்துகிறது.*

அ) எச்.ஐ.வி. தீவிர கண்காணிப்பு (HSS):

- *எச்.ஐ.வி.-யின் தாக்கம் எந்த அளவுக்கு உள்ளது என்பதைக் கண்டறிய இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நாடு முழுவதும் கருவுற்ற தாய்மார்கள் மற்றும் அதிக பாதிப்பிற்குள்ளாகக்கூடிய பிரிவினர்கள் மத்தியில், கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது.*

- *18-வது சுற்று* ANC *2023 தீவிர கண்காணிப்பு 1.1.2023 அன்று துவங்கப்பட்டு தற்பொழுது முடிக்கப்பட்டுள்ளது. சிறைச்சாலைகளில் உள்ள சிறைவாசிகளுக்கு எச்.ஐ.வி. தீவிர கண்காணிப்பு பரிசோதனை 2023 ஆம் ஆண்டில் பிப்ரவரி முதல் தேதியிலிருந்து துவங்கப்பட்டுள்ளது.*

- *கர்ப்பிணிப் பெண்களுக்கு பரிசோதனை செய்யும் 82 மையங்கள்* (ANC), *46 அதிக பாதிப்புக்குள்ளாகக்கூடிய பிரிவினர்கள்* (HRGs) *மற்றும் நான்கு சிறைச்சாலைகளில் எச்.ஐ.வி. தீவிர கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது.*

- *தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடுச் சங்கத்தின்மூலம் கர்ப்பிணிப் பெண்கள் மத்தியில் எச்.ஐ.வி. / எய்ட்ஸ் தொற்றின் தாக்கம், 2003-ல் 0.83 சதவிகிதமாக இருந்த தொற்று விகிதமானது 2021-ல் 0.17 சதவிகிதமாகக் குறைந்துள்ளது.*

- சிறைவாசிகள் மத்தியில் எச்.ஐ.வி. தீவிர கண்காணிப்பு 2021 ஆம் ஆண்டில் முதன்முறையாக நடத்தப்பட்டது. இக்கண்காணிப்புமூலம் அவர்களிடையே எச்.ஐ.வி. பாதிப்பு 0.5 சதவிகிதமாக இருப்பது கண்டறியப்பட்டது.

20.16 மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகுகள்:

- தமிழ்நாட்டில் 27 மாவட்டங்களில் தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு அமைப்பின் நிதியுதவியுடனும், திருப்பூர் மற்றும் அரியலூர் ஆகிய இரண்டு மாவட்டங்களில் மாநில அரசின் நிதியுதவியுடனும், மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகுகள் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன.
- எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகுகளின் மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாடு அலுவலராகத் துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் அவர்கள் செயல்படுகிறார். இவ்வலகுகள் அதன் தலைவராகச் செயல்படும் மாவட்ட ஆட்சியரின் பங்களிப்போடு நிர்வகிக்கப்படுகிறது.

20.17 இரத்தப் பரிமாற்றுச் சேவைகள்:

இரத்த பரிமாற்றச் சேவைகள் புது டெல்லியிலுள்ள இந்திய அரசின் சுகாதார அமைச்சகம் மற்றும் குடும்ப நலம், பொது மருத்துவப் பணிகள் இயக்குநரக (DGHS) கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது.

- தமிழ்நாட்டில் இரத்தம் தேவைப்படும் நபர்களுக்குப் போதுமான, பாதுகாப்பான, தரம் வாய்ந்த இரத்தம் மற்றும் இரத்த உட்பொருட்களை வழங்கும் நோக்கத்துடன் 332 இரத்த மையங்களும் (98 அரசு இரத்த மையங்கள், 8 ஒன்றிய அரசு இரத்த மையங்கள் மற்றும் 226 தனியார் இரத்த மையங்கள்), 520 இரத்த சேமிப்பு மையங்களும் (375 அரசு மையங்கள் மற்றும் 145 தனியார் மையங்கள்) செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் 2022-2023 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் அரசு இரத்த மையங்கள் வாயிலாக மட்டும் சுமார் 4,152 இரத்த தான முகாம்கள் நடத்தப்பட்டு 4,22,751 இரத்த அலகுகள் சேகரிக்கப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 18]

மொத்தம் உள்ள 98 அரசு இரத்த மையங்களில், 43 அரசு இரத்த மையங்கள் இரத்த பகுப்பாய்வு மையங்களாகச் செயல்பட்டு வருகின்றன.

- இரத்த தானத்திற்குப் பிறகு தானமாகப் பெறப்பட்ட அனைத்து இரத்த அலகுகளையும் இரத்த பரிமாற்றத்தின்மூலம் பரவும் ஐந்து வகையான நோய்த்தொற்றினை (HIV, HBV, HCV, Syphillis and Malaria) கண்டறியவும் மற்றும் இரத்தப் பிரிவு கண்டறியவும் தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு நிறுவனத்தால் வழங்கப்படும் பரிசோதனைப் பொருட்கள்மூலம் (Kits) பரிசோதனை செய்யப்படுகிறது. இதற்காக எலிசா (Elisa) மற்றும் ரேபிட் கார்டு (Rapid Card) முறை பரிசோதனை பயன்படுத்தப்படுகிறது.

- இரத்த மையங்கள் மற்றும் ஆய்வகங்களின் தரம் மூன்று வழிகளில் உறுதி செய்யப்படுகிறது. ஒவ்வொரு மாதமும் வெளிப்புற தர உத்திரவாதத் திட்டம், உட்புற தர உத்திரவாதத் திட்டம் மற்றும் நேரடி தணிக்கை ஆய்வுமூலம் இரத்த மையங்களின் சேவைகளின் தரம் உறுதி செய்யப்படுகிறது.

- அரசு இரத்த மையங்களில், இரத்த அலகுகள் மற்றும் இரத்த உட்கூறுகளின் இருப்பு, இரத்தம், இரத்தக் கூறுகளின் சேகரிப்பு மற்றும் சிகிச்சைப் பயன்பாட்டைத் தினசரி அடிப்படையில் விநியோகச் சங்கிலி மேலாண்மை (Supply Chain Management-SCM) மென்பொருள் மற்றும் e-RaktKosh இணைய முகப்பால் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

20.18 இளைப்பாறுதல் மையம்: தமிழ்நாடு அரசு இளைப்பாறுதல் மையங்களின் சேவைகளைப் புதுப்பித்துள்ளது. 32 மாவட்டங்களில் 34 இளைப்பாறுதல் மையங்களை (சென்னையில் 3) துவக்க தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்திற்கு அனுமதி அளித்துள்ளது. இளைப்பாறுதல் மையங்களின் நோக்கங்கள் பின்வருமாறு:

- தற்காப்பு தன்மையுள்ள ஆலோசனை மற்றும் ஆதரவு சேவைகள் வழங்குதல்

- ஆதரவுக் குழு கூட்டங்கள் நடத்துதல்

[2023 ஏப்ரல் 18

- *நேர்மறை பேச்சாளர்களுடன் எச்.ஐ.வி. / எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வுக் கூட்டங்களை நடத்துதல்*
- *எச்.ஐ.வி. உள்ளோருக்கு உளவியல் ரீதியாக ஆதரவு வழங்குதல்*
- *கவனிப்பு மற்றும் ஆதரவுச் சேவைகள் வழங்குவோருடன் இணைத்தல்*
- *அரசு நலத் திட்டங்களுடன் இணைத்தல்*
- *எச்.ஐ.வி. தொற்றுடன் வாழும் மக்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் வாழ்வு மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் சுமூகமான சூழ்நிலையினை உருவாக்குதல்.*

அத்தியாயம்—21

தமிழ்நாடு மாநில பார்வை இழப்பு தடுப்புச் சங்கம்

21.1 நமது மாநிலத்தில் தேசிய பார்வை இழப்பு தடுப்புத் திட்டத்தினைச் செயல்படுத்த தமிழ்நாடு மாநில பார்வை இழப்பு தடுப்புச் சங்கம் மற்றும் 38 மாவட்ட பார்வை இழப்பு தடுப்புச் சங்கங்களும் தமிழ்நாடு தேசிய நலக் குழுமத்தின் ஒரு பிரிவாக செயல்பட்டு வருகின்றன. 2025 ஆம் ஆண்டிற்குள் நமது மாநிலத்தில் பார்வை இழப்பு விகிதத்தை 0.25 விழுக்காட்டிற்குக் குறைவான இலக்கை அடைய இத்திட்டம் செயல்படுகிறது. தமிழ்நாடு மாநில பார்வை இழப்புத் தடுப்புச் சங்கத்தின் ஒட்டுமொத்தத் தலைவராக நமது மாநில நலவாழ்வுக் குழும இயக்குநர் அவர்களும், மாவட்ட பார்வை இழப்பு தடுப்புச் சங்கங்களுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சியர் தலைவராகச் செயல்பட்டு வருகிறார்கள்.

21.2 இத்திட்டத்திற்குத் தேவையான நிதி 60:40 என்ற பங்களிப்பில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு மாநில பார்வை இழப்பு தடுப்புச் சங்கம் திட்ட இயக்குநர் அவர்களாலும், மாவட்ட பார்வை இழப்பு தடுப்புச் சங்கங்கள் அம்மாவட்டத்தின் திட்ட மேலாளர் அவர்களாலும் கண்காணிக்கப்படுகின்றன.

2023 ஏப்ரல் 18]

21.3 நமது மாநிலத்தில் சமீபத்தில் நடைபெற்ற "தவிர்க்கக்கூடிய பார்வை இழப்பு மற்றும் சர்க்கரை நோயினால் ஏற்படும் விழித்திரைப் பாதிப்பு" சம்பந்தமான துரித மதிப்பீட்டு ஆய்வறிக்கையின்படி பார்வை இழப்பிற்கான பொதுவான காரணிகளாகக் கருதப்படுபவை:

1. *கண்புரை - 82 சதவிகிதம்*
2. *கண் நீர் அழுத்த நோய் - 6 சதவிகிதம்*
3. *சர்க்கரை நோய் - 6 சதவிகிதம்*
 விழித்திரை பாதிப்பு
4. *மற்றவை - 6 சதவிகிதம்*

21.4 நமது மாநிலத்தில் ஒரு மண்டல கண் மருத்துவமனை, 36 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், 37 மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், 32 காணொளி கண் பரிசோதனை மையங்கள், 20 கண் வங்கிகள், 3 நடமாடும் கண் மருத்துவப் பிரிவு மற்றும் 61 தனியார் தொண்டு நிறுவன கண் மருத்துவமனைகள்மூலம் முறையே கண் சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

21.5 இத்திட்டத்தின் முக்கியச் செயல்பாடுகள்

1. *நமது மாநிலத்தில் பார்வைக் குறைபாடு உள்ளவர்களைக் கண்டறிந்து தேவைகேற்ப முதல் நிலை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை மருத்துவமனைகளில் முறையான சிகிச்சை அளிக்க வழிவகை செய்யப்படுகிறது.*
2. *நமது மாநிலத்தில் அனைத்துப் பகுதிகளிலும் மேம்பட்ட கண் சிகிச்சை சேவைகள் கிடைக்க மண்டல கண் மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், மாவட்டத் துணை மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார மையங்கள் மற்றும் நடமாடும் கண் மருத்துவப் பிரிவுகளை வலுப்படுத்துதல் மேற்கொள்ளப்படுகிறது.*
3. *நமது மாநிலத்தில் உள்ள அரசு மருத்துவமனைகள் மற்றும் வட்டார அரசு ஆரம்ப சுகாதார மையங்களில் இணையவழி கண் பரிசோதனை வலையம்மூலம்*

அனைத்து சர்க்கரை நோயாளிகளுக்கும் வருடத்திற்கு ஒரு முறை கண் விழித்திரை பரிசோதனை மேற்கொண்டு தேவையான சிகிச்சை அளிக்கப்படுகிறது.

4. நமது மாநிலத்தில் குறைமாத மற்றும் குறைந்த எடையுடன் பிறக்கும் பச்சிளங் குழந்தைகளுக்கு விழித்திரையில் ஏற்படும் "ரெட்டினோபதி ஆப் ப்ரிமெட்யூரிட்டி" பார்வை இழப்பைத் தடுப்பதற்கு இணையவழி சிறப்பு விழித்திரைப் பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது.

5. நமது மாநிலத்தில் அனைத்து குழந்தைகளுக்கும் கண்களில் ஏதேனும் குறைபாடுகள் மற்றும் ஒளிவிலகல் பிழையைக் கண்டறிந்து தேவைக்கேற்ப இலவசமாகக் கண் கண்ணாடிகள் வழங்கப்படுகிறது.

6. நமது மாநிலத்தில் ஏழை, எளிய முதியோர்களுக்குக் கிட்டப் பார்வைக் குறைபாட்டைச் சரி செய்ய இலவசமாகக் கண் கண்ணாடிகள் வழங்கப்படுகிறது.

7. நமது மாநிலத்தில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டு, ஏழை, எளிய மக்களுக்குக் கண்புரை பரிசோதனை முகாம்கள் நடத்தி, தேவைப்படுவோர்க்குக் கண்புரை அறுவைச் சிகிச்சை செய்து செயற்கை லென்ஸ் பொருத்தப்படுகிறது. இதற்காக ஒரு கண் அறுவைச் சிகிச்சைக்குத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு ரூ.2,000/ – வீதம் வழங்கப்படுகிறது.

8. நமது மாநிலத்தில் கண் வங்கிகளின்மூலம் கண் தானம் செய்தவர்களின் கண்களைத் தேவைப்படுவோர்க்குப் பயன்படுத்தி கருவிழி மாற்று அறுவைச் சிகிச்சை செய்யப்படுகிறது. இதற்காக ஒரு கண் பெறுவதற்கு ரூ.1,000/ – வீதம் கண் வங்கிகளுக்கு உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

9. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் அரசு மருத்துவமனைகளில் சேவை பிரிவுகளையும், பயனாளிகளின் எண்ணிக்கையும் மேம்படுத்தப்படுகிறது.

2023 ஏப்ரல் 18]

21.6 சாதனைகள் 2022-2023:

1. இத்திட்டத்தின்கீழ் அரசு மற்றும் தொண்டு நிறுவன கண் மருத்துவமனைகளில் 2,83,780 பயனாளிகளுக்கு இலவசமாக கண்புரை அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு, செயற்கை லென்ஸ் பொருத்தப்பட்டுள்ளது. இதற்காக ரூ.4,800 இலட்சம் மானியத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

2. இத்திட்டத்தின்கீழ் 20 கண் வங்கிகள்மூலம் 8,428 கண்கள் தானமாகப் பெறப்பட்டுள்ளன. இதற்கு ரூ.84.28 இலட்சம் மானியத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

3. அனைத்து பள்ளிக் குழந்தைகளுக்குக் கண் பரிசோதனை செய்யப்பட்டு, குறைபாடு கண்டறியப்பட்ட 1,20,266 குழந்தைகளுக்குக் கண் கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ.170 இலட்சம் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்மூலம் செலவிடப்பட்டுள்ளது.

4. எழும்பூர், அரசு கண் மருத்துவமனையில் கண் சிகிச்சைக்கான ஒப்புயர்வு மையம் ரூ.64 கோடியிலும், தஞ்சாவூர் அரசு இராஜா மிராசுதார் மருத்துவமனையில் ஒரு மண்டல கண் சிகிச்சை மையம் ரூ.16.4 கோடியிலும் நிறுவப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

5. நடமாடும் கண் சிகிச்சைப் பிரிவு சேலம், இராமநாதபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் ரூ.90 இலட்சம் செலவில் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

6. அரசு வட்டம் / வட்டம் சாரா மருத்துவமனைகளில் கண் சிகிச்சை சேவையை வலுப்படுத்துவதற்கு அரியலூர், குடியாத்தம், காஞ்சிபுரம், மயிலாடுதுறை, நீலகிரி, கம்பம், ஈரோடு, கோபிசெட்டிபாளையம், குளித்தலை, வந்தவாசி, சங்கரன்கோவில், தென்காசி, இராமநாதபுரம் மற்றும் தாம்பரம் மாவட்டங்களில் உள்ள தேவையான கண் சிகிச்சைக் கருவிகள் ரூ.390 இலட்சம் செலவில் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்மூலம் வழங்கப்பட்டுள்ளது.

7. நமது மக்களிடையே கண் பார்வை குறைபாடுகளைக் களைய தேவையான விழிப்புணர்வு பிரச்சாரங்கள் ரூ.20 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

[2023 ஏப்ரல் 18

அத்தியாயம்—22

விரிவான அவசரக்கால மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தைகள் பராமரிப்புச் சேவைகள் (CEmONC)

22.1 தமிழ்நாட்டில் 99.9 சதவிகிதப் பிரசவங்கள் மருத்துவமனைகளில் நடைபெறுகின்றன. அவற்றுள் தோராயமாக 60 சதவிகிதப் பிரசவங்கள் அரசு மருத்துவமனைகளில் நடைபெறுகின்றது. கர்ப்பகால பாதுகாப்பிற்குத் தரமான மகப்பேறு சேவை வழங்கும் பொருட்டும், திறமையான மகப்பேறு மருத்துவர்களால் பாதுகாப்பான சேவைகள் கிடைக்கப் பெறவும், முன்னுரிமையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மருத்துவமனைக்குக் கூடுதல் மனிதவளம், உபகரணங்கள், கட்டுமானப் பணிகள், பயிற்சி ஆகியவற்றை வழங்கி விரிவான அவசரக்கால மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு மையங்களாக வலுப்படுத்தப்பட்டுள்ளன. இதுவரை 129 ஒருங்கிணைந்த அவசர பேறுகால மற்றும் பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு மையங்கள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மாவட்ட மற்றும் வட்ட / வட்டம் சாரா மருத்துவமனைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அறுவைச் சிகிச்சை அரங்கம், மகப்பேறு தீவிர சிகிச்சைப் பிரிவு, ஆய்வுக்கூடம் மற்றும் இரத்த சேமிப்பு வங்கி வசதிகள், ஆலோசனைகள் போன்ற தாய்-சேய் நலச் சேவைகள் இம்மையங்களில் 24X7 மணி நேரமும் வழங்கப்பட்டு வருகின்றன.

22.2 சீமாங்க் மையங்களில் உள்ள சேவைகள்:

- *கர்ப்பகால அவசரச் சிகிச்சை மேலாண்மை*
- *பச்சிளம் குழந்தைக்கான அவசரச் சிகிச்சை மேலாண்மை*
- *குருதியேற்ற சேவைகள்*
- *ஆய்வகம் மற்றும் ஊடு கதிரியல் சேவைகள்*
- *தாயிடமிருந்து, குழந்தைக்கு எச்.ஐ.வி. நோய்தொற்றைத் தடுக்கும் சேவைகள்*
- *கர்ப்பகால மற்றும் பிரசவத்திற்குப் பின் ஆலோசனை வழங்குதல்*
- *இலவச 108 அவசரக்கால ஊர்தி*
- *தடையில்லா மின்சாரம் வழங்குதல்*

2023 ஏப்ரல் 18]

- *சுகாதார கழிவு மேலாண்மை*
- *24 மணி நேர மகப்பேறு மருத்துவர் மற்றும் செவிலியர் சேவைகள்*
- *அவசரச் சிகிச்சை அறை, பிரசவ அறை மற்றும் பச்சிளம் குழந்தை பராமரிப்பு அறைகளில், அவசரக்கால சிகிச்சை நெறிமுறைகளைக் காட்சிப்படுத்துதல்*
- *அவசர சிகிச்சை அறையில், மருத்துவக் கருவிகள் மற்றும் மருந்துகள் இருப்பதை உறுதி செய்தல்*
- *பிரசவ நேர கண்காணிப்புக்காகப் பார்டோகிராப் பயன்படுத்துதல்*
- *பச்சிளம் குழந்தைகளுக்கான உயிரூட்டும் சிகிச்சை அளித்தல்*
- *குழந்தை பிறந்த உடன் தாய்பால் வழங்குவது*

22.3 'சீமாங்க்' செயல்பாடு (2022-23):

வ. எண்	விவரங்கள்	2022-23
1	*உள் நோயாளிகளாக அனுமதிக்கப்பட்ட தாய்மார்களின் எண்ணிக்கை*	*6,73,052*
2	*பிரசவங்கள்*	*3,93,334*
3	*அறுவைச் சிகிச்சை பிரசவங்கள்*	*1,95,442*
4	*இரத்தம் செலுத்தப்பட்ட தாய்மார்கள்*	*1,40,133*
5	*ஸ்கேன் எடுக்கப்பட்ட தாய்மார்கள்*	*8,16,679*
6	*இளம் சிசுக்களின் சேர்க்கை*	*1,22,931*

22.4 ஒருங்கிணைந்த அவசரக்கால மகப்பேறு மற்றும் குழந்தை நல மையங்களை வலுப்படுத்துதல்: *அதிகரிக்கும் மகப்பேறு மற்றும் குழந்தை நலச் சேவைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்து அதிநவீன மகப்பேறு மற்றும் குழந்தை நல சிகிச்சை வழங்கிட ஒருங்கிணைந்த அவசரக்கால மகப்பேறு மற்றும் குழந்தை நல மையங்கள் தேசிய சுகாதாரக் குழுமத்தின்மூலம் வலுப்படுத்தப்பட்டு வருகிறது.*

[2023 ஏப்ரல் 18

2008 ஆம் ஆண்டு முதல் 59 ஒருங்கிணைந்த அவசரக்கால மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு மையங்கள் தேசிய சுகாதார குழுமத்தின்மூலம் வலுப்படுத்தப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த அவசரக்கால மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு மையங்களில் நடைபெறும் அதிக பிரசவங்களைக் கையாள்வதற்காக 2022-2023 ஆம் ஆண்டில் 15 புதிய ஒருங்கிணைந்த அவசரக்கால மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு மையக் கட்டடங்கள் கட்டப்பட்டு மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தை சேவைகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

22.5 மகப்பேறு அறுவைச் சிகிச்சைத் தணிக்கை: (LSCS) Audit: மகப்பேறு அறுவைச் சிகிச்சைத் தாய் மற்றும் சேயின் உயிர்காக்கும் சிகிச்சை முறை ஆகும். முன்னெப்பொழுதும் இல்லாத அளவில், அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் மகப்பேறு அறுவைச் சிகிச்சை சதவிகிதம் உயர்ந்துள்ளது குறித்து அரசு அக்கறை கொள்கின்றது. உலக சுகாதார அமைப்பு பரிந்துரை செய்த அறுவைச் சிகிச்சை பிரசவத் தணிக்கை மிகவும் பயனுள்ள மருத்துவம் சாராத தலையீடு ஆகும். மேலும், இது அறுவைச் சிகிச்சை பிரசவத்தைக் குறைக்க உதவுகின்றது. தேசிய குடும்ப சுகாதார ஆய்வு அறிக்கை 2020-21-ன்படி, 44.9% அறுவைச் சிகிச்சை பிரசவங்கள் நடைபெற்றுள்ளன. மாற்றியமைக்கப்பட்ட ராப்சன்ஸ் வழிமுறைகளை பின்பற்றி அறுவைச் சிகிச்சைத் தணிக்கை அனைத்து மகப்பேறு மையங்களிலும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. முதல் பிரசவத்தில் நடைபெறும் அனைத்து அறுவைச் சிகிச்சைப் பிரசவங்களுக்குத் தணிக்கை மேற்கொள்ள வழிகாட்டு நெறிமுறைகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இத்தணிக்கையில் இரண்டாம் அல்லது அதற்கு மேற்பட்ட பிரசவங்களின் அறுவைச் சிகிச்சைப் பிரசவங்களை விட, முதல் பிரசவ அறுவைச் சிகிச்சை முக்கியத்துவம் பெறுகின்றது. பிரசவ அறுவைச் சிகிச்சை நடந்த அடுத்த நாளிலேயே, மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின், மகப்பேறு துறையின் தலைவர் மற்றும் மாவட்ட மருத்துவமனைகளில் மகப்பேறு மருத்துவர்மூலம் இத்தணிக்கை நடைபெறுவதினால், பிரசவ அறுவைச் சிகிச்சை சதவிகிதம் குறைந்துள்ளது. 86 சதவிகிதம் (சுகாதார தகவல் மேலாண்மை அமைப்பு 2022-2023) அறுவைச் சிகிச்சை பிரசவங்களுக்கு, 129 விரிவான அவசரக்கால மகப்பேறு

2023 ஏப்ரல் 18]

மற்றும் பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு மையங்களின்மூலம் தணிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அறுவைச் சிகிச்சை தணிக்கை மேற்கொள்ளப்பட்டதன்மூலம் அறுவைச் சிகிச்சை விகிதம் 2021 – 2022 (State HMIS) *43%-ல் இருந்து 40%-ஆக 2022 –2023* (State HMIS) *குறைந்துள்ளது* (*சுகாதார தகவல் மேலாண்மை அமைப்பு 2022–2023*)

குறியீடு	2021-22	2022-23
மொத்த பிரசவங்கள்	9,10,645	9,06,798
அ. அரசு மருத்துவமனை பிரசவங்கள்	5,49,794	5,39,973
ஆ சுகப்பிரசவம்	3,13,657	3,21,418
விழுக்காடு	57%	60%
இ அறுவைச் சிகிச்சை பிரசவம் (அரசு மருத்துவமனை)	2,36,141	2,18,555
விழுக்காடு	43%	40%

அத்தியாயம்—23

தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டம்

23.1 தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டம், 2025 ஆம் ஆண்டிற்குள் காசநோயை ஒழிப்பதற்கான தொலைநோக்குப் பார்வையுடன் காசநோய் பராமரிப்புச் சேவைகளை வழங்குகிறது. தமிழ்நாடு அரசு “கண்டறிதல் – சிகிச்சை – கட்டமைத்தல்-தடுப்பு (DTBP)” *என்ற 4 தூண்களுக்கு முக்கியத்துவம் அளித்து “காசநோய் இல்லாத தமிழ்நாடு–2025” என்ற புதிய உத்தி அனைத்து மாவட்டங்களிலும் துவக்கப்பட்டுள்ளது.*

23.2 திட்டத்தின் குறிக்கோள்கள்:

குறிக்கோள்கள்	அடிப்படை	இலக்கு		
	2015	2020	2023	2025
புதிதாக உருவாகும் காசநோயாளிகள் எண்ணிக்கையைக் குறைத்தல் (ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு)	217	142	77	44
காசநோயால் இறப்பவர்களின் எண்ணிக்கையைக் குறைத்தல் (ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு)	32	15	6	3
காசநோயால் பாதிக்கப்படும் நோயாளிகளின் குடும்பத்தினர் இந்நோய்க்கு செலவிடும் தொகையை பூஜ்ய சதவிகிதத்திற்கு கொண்டு வருதல்	35%	0%	0%	0%

23.3 காசநோய்க்கான சேவைகள்: இத்திட்டத்தின்கீழ் காசநோய் கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட 1968 மைக்ரோஸ்கோபிக் மையங்கள் செயல்படுகின்றன. மேலும் காசநோய் சேவைகள், உலகளாவிய மருந்து பாதிப்பு பரிசோதனை மற்றும் DRTB சோதனைகள்மூலம் கண்டறியப்பட்ட அனைத்து காசநோயாளிகளுக்கும் வழங்க 127 CBNAAT, 147 TruNAAT மையங்கள், 2 CDST மற்றும் 2 IRL-கள் செயல்படுகின்றன. மாநிலத்தில் DRTB சேவைகளை வழங்க 31 மாவட்ட DRTB மையங்களும், 7 நோடல் DRTB மையங்களும் செயல்பட்டு வருகின்றன. 2023-ன் முதல் காலாண்டில், 23,480 TB நோயாளிகள் அடையாளம் காணப்பட்டனர், அவர்களில் 5,156 TB நோயாளிகள் தனியார் துறையைச் சேர்ந்தவர்கள். அனைத்து நோயாளிகளுக்கும் பொருத்தமான எடை பட்டைகளின்படி நிலையான மருந்து சேர்க்கைகள் (FDC) வழங்கப்படுகின்றன. மேலும், 2023-ன் முதல் காலாண்டில், 431 H மோனோ/பாலி நோயாளிகள், 192 MDR TB

2023 ஏப்ரல் 18]

நோயாளிகள் மற்றும் 94 XDR TB *நோயாளிகள் அடையாளம் காணப்பட்டு தகுந்த சிகிச்சை முறை தொடங்கப்பட்டது.*

23.4 நிக்ஷய் போஷன் யோஜனா (NPY): *காசநோயாளியின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்தும் பொருட்டு, நிக்ஷய் போஷன் யோஜனா திட்டத்தின்கீழ், அனைத்து அறிவிக்கப்பட்ட காசநோயாளிகளுக்கும் மாதத்திற்கு ரூ.500/ – காசநோயாளிகளின் வங்கி கணக்கில் நேரடி பயனாளர் பரிமாற்ற முறையின்* (DBT)*மூலம் வழங்கப்படுகிறது. 2023-ன் முதல் காலாண்டில், 10,040 காசநோயாளிகளுக்கு* DBT *வழங்கப்பட்டது.*

23.5 காசநோயை ஒழிக்க செயல்படுத்தப்படும் உத்திகள்:

- *சமூகத்தில் காசநோய் கண்டறிதலை மேம்படுத்த, அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்துவதற்காக ஏற்கெனவே உள்ள 14 நடமாடும் எக்ஸ்ரே வாகனங்களுடன் 28 புதிய நடமாடும் எக்ஸ்ரே வாகனங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.*
- *செயற்கை நுண்ணறிவு இடைமுகம், நெஞ்சக* CT *மற்றும் எக்ஸ்ரே காசநோயைக் கண்காணிப்பதில் பயன்படுத்தப்படுகிறது.*
- *2025 ஆம் ஆண்டிற்குள் காசநோயை அகற்றுவதை இலக்காகக் கொண்டு பரிசோதனைகளைத் துரிதப்படுத்த 46* NAAT *இயந்திரங்கள் வழங்கப்பட்டன.*
- Interferon Gamma Release Assay (IGRA) *சோதனை– காசநோயாளியின் இளம் பருவத்தினர் மற்றும் வயது வந்தோருக்கான காசநோய் தடுப்புச் சிகிச்சை, கன்னியாகுமரி, திருவண்ணாமலை மற்றும் திருவள்ளூர் ஆகிய 3 மாவட்டங்களில்* IGRA *பரிசோதனை மற்றும் சிகிச்சை கொள்கையுடன் செயல்படுத்தப்படுகிறது.*

23.6 காசநோய் இறப்பில்லா திட்டம் (TN-KET): *காசநோய் இறப்பைக் குறைப்பதற்காக, காசநோய் இறப்பில்லாத் திட்டம் ஒவ்வொரு காசநோயாளிக்கும் நோயறிதலின்போது கடுமையான நோய்க்கான பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. அதைத் தொடர்ந்து விரிவான மதிப்பீடு மற்றும் பொருத்தமான உள்நோயாளி பராமரிப்பு சேவையும் அளிக்கப்படுகிறது.*

TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 18

23.7 காசநோய்த் தடுப்பு சிகிச்சையின் திட்ட மேலாண்மை (PMTPT): *6 வயதிற்குட்பட்ட குழந்தைகள் குறிப்பாக கடுமையான பரவும் காசநோய் மற்றும் காசநோய் தொடர்பான இறப்பு ஆகியவற்றால் பாதிக்கப்படுகின்றனர்.* NTEP-*ன்கீழ் காசநோய் கண்டறியப்பட்டவர்களுடன் தொடர்பில் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் தொடர்ந்து பரிசோதனை செய்யப்பட்டு, ஐசோனியாசிட் தடுப்பு சிகிச்சை* (IPT) *வழங்கப்படுகிறது.* PLHIV *நோயாளிகள் காசநோய்க்கு பரிசோதிக்கப்பட்டு ஐசோனியாசிட் தடுப்பு சிகிச்சை அளிக்கப்படுகிறது.*

23.8 விருதுகள்: *ஒன்றிய காசநோய் பிரிவால் வழங்கப்பட்ட 2015 நிகழ்வு மதிப்பீடுகளுடன் ஒப்பிடும்போது காசநோயின் சுமை குறைந்துள்ள மாவட்டங்கள்/மாநிலங்களுக்குத் துணை தேசிய சான்றிதழைச் சான்றளிக்க இந்திய அரசு முன்மொழிந்துள்ளது. “காசநோய் இல்லாத” நிலையை அடைவதற்கு ஒரு மாவட்டம் அல்லது மாநிலம் அங்கீகரிக்கப்படும். கோடிட்டுக் காட்டப்பட்ட இலக்குகளின் வெற்றிகரமான சாதனை சரிபார்க்கப்பட்டதன்மூலம் சான்றளிக்கப்படும்* (SDG *கட்டமைப்பின்படி 2015 முதல் காசநோய் பாதிப்பு 80% குறைப்பு). 2022 ஆம் ஆண்டிற்கான இந்த முயற்சியின்கீழ் நீலகிரி மாவட்டம், காசநோய் இல்லாத மாவட்டமாக அறிவிக்கப்பட்டது. மேலும், 2023 ஆம் ஆண்டில் காசநோய் இல்லாத நிலையை எட்டியதற்காக திருச்சிராப்பள்ளி, திருவாரூர் ஆகிய மாவட்டங்களுக்கு தங்கப் பதக்கமும், பாராட்டு சான்றிதழும் வழங்கப்பட்டது. காசநோயை வெகுவாகக் குறைத்தமைக்காக தூத்துக்குடி, மதுரை, திருவண்ணாமலை, கன்னியாகுமரி, கரூர், ஆகிய மாவட்டங்களுக்கு வெள்ளி பதக்கமும், கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வெண்கலப் பதக்கமும் வழங்கப்பட்டது.*

அத்தியாயம்—24

தேசிய மன நலத் திட்டம்

24.1 மாவட்ட மன நலத் திட்டம்: *மாவட்ட மன நலத் திட்டம், தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வரும் சமூக அளவிலான சுகாதாரத் திட்டமாகும். தமிழ்நாட்டில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஆறு புதிய மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு*

2023 ஏப்ரல் 18]

வருகிறது. தமிழ்நாட்டின் தலைசிறந்த சுகாதாரக் கட்டமைப்பின் வாயிலாக, சமூகத்தில் சுகாதாரச் சேவைகளைப் பெற இயலாத நிலையில் இருப்பவர்களுக்கும், மன நலச் சேவையை இத்திட்டம் கொண்டு சேர்த்துள்ளது. 2022-2023 ஆம் ஆண்டில் 5,28,395 நபர்கள் அவர்களது மன நல தேவைகளுக்காக மாவட்ட மன நலத் திட்டத்தின்மூலம் பயன்பெற்றுள்ளனர். ஒரு மனிதனின் மன நலத்தை, உயிரியல், உளவியல் மற்றும் சமூக காரணிகள் ஆகியவை தீர்மானிப்பவையாக உள்ளதால், இத்தகைய உயிரியல்-உளவியல்-சமூக அணுகுமுறையின் அடிப்படையில், மன நலச் சேவைகள் மாவட்ட மன நலத் திட்டத்தின் வாயிலாக வழங்கப்படுகின்றன. மன நலத்தைப் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குதல், மாணவர்கள், வேலைக்குச் செல்லும் பெண்கள் போன்ற குறிப்பிட்ட குழுக்களுக்கான சேவைகளை வழங்குதல், ஆசிரியர்களுக்கு வாழ்வியல் திறன்கள் சார்ந்த பயிற்சிகளை வழங்குதல் போன்றவை மாவட்ட மன நலத் திட்டத்தின் வாயிலாக வழங்கப்படும் சிறப்பான சேவைகள் ஆகும். மேலும், இத்திட்டத்தின் வாயிலாக அனைத்து மாவட்ட அரசு மருத்துவமனைகள் மற்றும் வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவற்றில் உளவியல் பிரச்சினைகள் உள்ள நபர்களுக்கு ஆலோசனை மற்றும் சிகிச்சை அளிக்கும் சேவைகள் செயல்படுத்தப்படுகிறது. கூடுதலாக, உளவியல் சிக்கல்களுக்கு உள்ளாகும் பள்ளி மாணவர்களை ஆரம்ப நிலையில் பள்ளி சிறார் நலத் திட்டத்தின் வாயிலாகக் கண்டறிதல், சுயதீங்கு ஏற்படுத்திக் கொள்பவர்களுக்கு சிகிச்சை அளித்து, 18 மாதங்கள் வரை அவர்களைக் கண்காணித்தல், தொலைபேசி வழி மன நலச் சேவை, 104 வழியாக நீட் தேர்வு கவுன்சிலிங் வழங்குதல், தீவிர மன நோய் மற்றும் மனவளர்ச்சி குன்றியோர்க்கான மாற்றுத் திறனாளி சான்றிதழ் வழங்குதல் உள்ளிட்ட சேவைகள் அனைத்தும் மாவட்ட மன நலத் திட்டத்தின் வாயிலாக அனைத்து மாவட்டங்களிலும் வழங்கப்பட்டு வருகிறது.

24.2 மனம் திட்டம் – மன நல நல்லாதரவு மன்றம்: *பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களின் மன உறுதி காக்கும் வகையில் தமிழ்நாடு அரசின் சிறப்புத் திட்டமான "மனம் திட்டம்" தேசிய நலவாழ்வுக் குழுமம்-தமிழ்நாடு மூலமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மனம் திட்டத்தின் ஒரு பகுதியாக, அனைத்து மருத்துவக் கல்லூரிகளிலும் மன நல நல்லாதரவு மன்றங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. கடந்த 22.12.2022 அன்று,*

[2023 ஏப்ரல் 18

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மனம் திட்டம் அனைத்துப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு விரிவாக்கம் செய்யப்பட்டது. விழிப்புணர்வு நடவடிக்கைகள் மூலமாக மாணவர்களின் மன நலத்தை மேம்படுத்துவதும், மன நல மேம்பாடு குறித்து ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதும் இத்திட்டத்தின் முதன்மை நோக்கங்களாகும். மன நல நல்லாதரவு மன்றத்தின் உறுப்பினர்கள், "சக இணை ஆதரவு" குழுக்களாகச் செயல்பட்டு, மன நலம் சார்ந்த அறிவியல் பூர்வமான தகவல்களைச் சக மாணவர்களிடம் எடுத்துரைப்பர். மேலும், மன உளைச்சலுக்கு உள்ளாகும் மாணவர்களுக்கு உளவியல் முதலுதவி அளிப்பதும், அவர்களுக்கு ஆதரவு மற்றும் வழிகாட்டுதலை வழங்குவதும், மன நல நல்லாதரவு மன்ற உறுப்பினர்களின் பணியாகும். மனம் திட்டம், "நட்புடன் உங்களோடு மன நலச் சேவை" மற்றும் மாவட்ட மன நலத் திட்ட சேவைகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக, மாணவர்களின் மன நலத்தை மேம்படுத்துவதற்கான ஆசிரியர் கையேடு உருவாக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது.

24.3 நட்புடன் உங்களோடு – தொலைபேசி வழி மன நலச் சேவை: நட்புடன் உங்களோடு மன நலச் சேவை, என்ற தொலைபேசி வழி மன நல ஆலோசனை வழங்கும் சேவை ரூ.2,06,80,000/ – மதிப்பில், 27.10.2022 அன்று தொடங்கப்பட்டு, 14416 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்தச் சேவை, அனைத்து நாட்களிலும் 24 மணி நேரமும், மன நல மருத்துவர் தலைமையிலான 20 மன நல ஆற்றுப்படுத்துனர்களைக் கொண்ட குழுவால் வழங்கப்பட்டு வருகிறது. கூடுதலாக இதர அரசுத் துறைகளின் ஒருங்கிணைப்பின்மூலம் சேவைகள் மேம்படுத்தப்பட்டு, மாவட்ட அளவில் மாவட்ட மன நலத் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. பொது மக்களிடம் சமூக வலைதளங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக, நட்புடன் உங்களோடு மன நலச் சேவை விழிப்புணர்வு காணொளி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 22.12.2022 அன்று வெளியிடப்பட்டது. சராசரியாக நாளொன்றுக்கு 95 அழைப்புகளை இச்சேவை மையம் கையாள்கிறது.

2023 ஏப்ரல் 18]

24.4 தமிழ்நாடு மன நல மற்றும் நரம்பியல் நிறுவனம் (TNIMHANS): *சென்னை கீழ்ப்பாக்கத்தில் உள்ள அரசு மன நல காப்பகத்தை ஒப்புயர்வு மையமாகத் தரம் உயர்த்தி, மன நலம் மற்றும் நரம்பியல் அறிவியலுக்கான அதிநவீன நிறுவனத்தை உருவாக்க தமிழ்நாடு அரசு அனுமதி வழங்கியுள்ளது. மன நலம், மன நலம் சார்ந்த நரம்பியல், நரம்பியல் அறுவைச் சிகிச்சை மற்றும் மன நல ஆராய்ச்சி, ஆகிய துறைகளில் விரிவான சேவைகளை வழங்குவதற்காக, ரூ.40 கோடி மதிப்பில் கற்பித்தல் மற்றும் பயிற்சி வழங்கும் ஒரு சிறப்பு மையமாக* (Centre of Excellence) *உருவாக்கப்படும். மன நல நோய்களை தீர்க்கவும், அவை ஏற்படாமல் தடுக்கவும், மனநோய் பற்றிய புரிதல் மற்றும் சிகிச்சையை மருத்துவ ஆராய்ச்சிமூலம் மேம்படுத்தி, மன நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதும் இந்நிறுவனத்தின் நோக்கமாகும்.*

24.5 சுயதீங்கு தடுப்புச் சேவை: *2019 ஆம் ஆண்டிற்கான தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் அறிக்கையின்படி, தேசிய தற்கொலை விகிதம் 10.4 ஆகும். அதாவது இந்தியாவில் ஒரு இலட்சத்திற்கு 10 பேர் தற்கொலை செய்து கொள்கிறார்கள். 2019 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் தற்கொலை விகிதம் 17.8 ஆக இருந்தது. 2023 ஆம் ஆண்டில் (மார்ச் வரை)* TAEI *செயலியில் பதிவு செய்யப்பட்ட 49,367 நபர்களுக்கு உளவியல் ஆலோசனை வழங்கப்பட்டது. மேலும், அடுத்த 18 மாதங்களுக்கு அவர்களின் மன நலம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டில், மாநிலத்தில் நீட் தேர்வெழுதிய 1,45,988 மாணவர்களுக்கு, 104 சேவை வழியாக, தேர்வுக்கு முன்பும், பின்பும் ஆற்றுப்படுத்துதல் சேவை வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம், விரும்பத் தகாத நிகழ்வுகளைத் தடுப்பதற்கு உரிய கவனமும் அக்கறையும் செலுத்தப்பட்டது.*

24.6 போதை மீட்பு மையம்: *அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ள மன நலத் துறையின்கீழ் இயங்கும் போதை மீட்புப் பிரிவுடன், 10 மாவட்டங்களில் 30 படுக்கை வசதிகளுடன், போதைப் பொருள் பயன்பாட்டுக் கோளாறுகளால் பாதிக்கப்பட்ட நபர்களுக்குப் போதை மீட்பு சேவைகளை வழங்குவதற்காக போதை மீட்பு மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்த மையங்கள் ஒவ்வொன்றும் வருடத்திற்கு சுமார் 1,200 முதல் 1,700 நபர்களுக்குப் புறநோயாளி சிகிச்சை மற்றும் 300 முதல் 500 நபர்களுக்கு உள்நோயாளி சிகிச்சை வழங்குகின்றன. அதிகரித்து வரும் மதுப்பழக்கக் கோளாறுகளை அடுத்து,*

மேலும் சென்னையில் உள்ள துறைப்பாக்கம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் (மண்டலம் 15) மற்றும் சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அரசு மருத்துவமனையில் தலா ஒருமையம் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் 2022 முதல் மார்ச் 2023 வரை 5,882 நபர்களுக்கு போதை மீட்பு சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

24.7 மன நல வியாழன் விழிப்புணர்வுத் திட்டம்: மன நலம் பற்றிய விழிப்புணர்வு போதாமை மற்றும் சமூக களங்கம் ஆகியவை பொதுமக்களிடையே தங்களது மன நல பிரச்சினைகளுக்காக 'உதவியை நாடுவதற்கு' தடையாக உள்ளன. மேலும் மன நலச் சேவைகள் குறித்து தொடர்ச்சியான விழிப்புணர்வை, சமூக மட்டத்தில் பணிபுரியும் சுகாதாரப் பணியாளர்களுக்கும் ஏற்படுத்த வேண்டியுள்ளது. அதிக எண்ணிக்கையிலான பொது மக்களை சென்றடைய, சமூக ஊடகதளங்கள் சிறந்த கருவியாகும். இவற்றை கருத்தில்கொண்டு, ஒவ்வொரு வியாழக்கிழமையும் மன நலம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், ஆரம்ப சுகாதார நிலையங்களில் "மன நல வியாழன்" என்ற பெயரில் மன நல விழிப்புணர்வு வார நாள் அனுசரிக்கப்பட்டு மன நலம் குறித்த விழிப்புணர்வு மின்னணு துண்டறிக்கைகள் வெளியிடப்படுகின்றன. வண்ணமயமான துண்டறிக்கைகள் வடிவமைக்கப்பட்டு, சமூக வலைதளங்கள்மூலம் பரப்பப்படுகின்றன. மாவட்ட மன நலத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் மன நல விழிப்புணர்வுக்கான எளிய மற்றும் பயனுள்ள சமூக அளவிலான சேவைகளில் மன நல வியாழன் விழிப்புணர்வு திட்டமும் ஒன்றாகும்.

24.8 அவசரச் சிகிச்சை மற்றும் மீள் மையங்கள்: ஆதரவற்ற, வீடற்ற மன நலம் பாதிக்கப்பட்ட நபர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், 10 மாவட்டங்களில் தலா 50 படுக்கைகள் கொண்ட மன நல அவசரச் சிகிச்சை மற்றும் மீள் மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. வேலூர், விழுப்புரம், தேனி, திருவண்ணாமலை, திருப்பூர், புதுக்கோட்டை, சென்னை, திருநெல்வேலி, கரூர் மற்றும் தருமபுரி ஆகிய 10 மாவட்டங்களில் உள்ள இத்தகைய அரசுக்குச் சொந்தமான மையங்கள்மூலம் விரிவான மருத்துவம், அறுவைச் சிகிச்சை, மன நல சிகிச்சை மற்றும் பராமரிப்பு, தங்குமிடம், மறுவாழ்வு, தொழில் பயிற்சி மற்றும் குடும்பத்தினரைக் கண்டறிந்து அவர்களுடன் மீண்டும் சேர்த்துவைக்கும் சேவைகள்

2023 ஏப்ரல் 18]

வழங்கப்படுகின்றன. இதுவரை 1,768 வீடற்ற மன நலம் பாதிக்கப்பட்டவர்கள் மன நல அவசரச் சிகிச்சை மற்றும் மீள் மையங்கள் மூலமாக, பயனடைந்துள்ளனர், அவர்களில் 439 பேர் அக்டோபர் 2018 முதல் மார்ச் 2023 வரை தங்கள் குடும்பங்களுடன் மீண்டும் இணைந்துள்ளனர். 2021 ஜனவரியில் அரசு சாரா நிறுவனங்கள் உதவியுடன் கூடுதலாக 6 மாவட்டங்களில் இத்தகைய மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

24.9 மாநில மன நல ஆணையம்: *மாநிலத்தில் வழங்கப்படும் மன நலச் சேவைகளை, மன நல பராமரிப்புச் சட்டம், 2017-ன்படி, கண்காணித்து ஒழுங்குப்படுத்தும் வகையில் மாநில மன நல ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாணையத்தின்மூலம் மன நல பராமரிப்புச் சட்டம், 2017-ல் சட்டப்பிரிவு 74-ன்படி அனைத்து மாவட்டங்களையும் உள்ளடத்தியதாக மாவட்ட மன நல சீராய்வு மன்றங்கள் 13 இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி தலைமையில், மன நல மருத்துவர், பொது மருத்துவர், மாவட்ட ஆட்சியரின் பிரதிநிதி, மன நல பிணியாளர் அல்லது அவரின் உறவினர், மன நலத் துறையில் ஈடுபட்டுள்ள அரசு சாரா நிறுவனத்தின் பிரதிநிதி என 6 உறுப்பினர்களைக் கொண்டு மாவட்ட மன நலச் சீராய்வு மன்றம் அமைக்கப்பட்டுள்ளது. உறுப்பினர்களில் பெரும்பாலானவர்களின் ஒருமித்த கருத்தின் அடிப்படையில் இம்மன்றத்தின் முடிவுகள் எடுக்கப்படும்.*

24.10 2023-2024-க்கான செயல்பாடுகள், வாய்ப்புகளும், சவால்களும்: *தமிழ்நாட்டில் தொலைதூர இடங்களுக்கும் சுகாதாரச் சேவைகளை வழங்குவதற்கு வலுவான பொது சுகாதார உள்கட்டமைப்பு உள்ளதால், தேவைப்படுபவர்களுக்கு மன நலச் சேவைகளை அளிப்பதற்கு இது ஒரு சிறந்த வாய்ப்பை வழங்குகிறது. சமூகத்தின் பின் தங்கிய பிரிவினருக்கும் சமூக நலச் சேவைகளை வழங்குவதற்கு நமது மாநிலம் உறுதி பூண்டுள்ளது. அதேசமயம், அனைவருக்குமான, மன நலச் சேவைகளை வழங்குவதில் பல்வேறு சவால்கள் உள்ளன. இதில் மாவட்ட மன நலத் திட்டத்திற்கான கட்டமைப்பு மற்றும் நிர்வாக அமைப்பை உருவாக்குதல், திட்ட செயலாக்கச் சவால்களைக் குறைப்பதற்கான அமைப்பு முறைகள், மாவட்ட மன நலத் திட்ட சேவைகளுக்கான செயல்திறன் குறியீடுகளை*

உருவாக்குதல், மனநோய் தொடர்பான களங்கத்தை எதிர்கொள்ள பல துறைகளுடன் ஒருங்கிணைந்த அணுகுமுறை, ஆகியவை அடங்கும். மாவட்ட மன நலத் திட்டத்தை "தனித்து இயங்கும்" திட்டமாக அல்லாமல் "ஒருங்கிணைந்த" மற்றும் 'விரிவான' மன நலச் சேவை வழங்கும் திட்டமாக செயல்படுத்துவதற்கு, துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பை வலுப்படுத்துதலும், நம் முன் இருக்கும் முக்கியச் சவாலாகும். இத்திட்டத்தை மேலும் வலுப்படுத்த 2023-24 ஆம் ஆண்டிற்கு பின்வரும் நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன:

- மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட மன நலத் திட்டத்திற்கு ஒரே மாதிரியான சேவைகள் மற்றும் கட்டமைப்பைக் கொண்டு வருதல் மற்றும் மன நலச் சேவைகள் தடையின்றி வழங்கப்படுவதை உறுதி செய்ய மாவட்ட மன நலத் திட்டத்திற்கான நிர்வாக அமைப்பை உருவாக்குதல்.
- மாவட்ட மன நலத் திட்ட சேவைகளுக்கான கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு முறையை நிறுவுதல்.
- மன நோயால் பாதிக்கப்பட்டவர்கள் அனுபவத்தால் வல்லுநர்கள் என மதிப்பிடப்படுவதை ஒப்புக்கொள்வதன் மூலமும், திட்டமிடல் மற்றும் முக்கியமான முடிவெடுக்கும் அம்சங்களில் அவர்களை நேரடியாக ஈடுபடுத்துவதன் மூலமும் மன நலப் பிரச்சினைகளுடன் வாழும் நபர்களை அங்கீகரித்தல். ஆரம்ப சுகாதார நிலையம் அல்லது கிராம பஞ்சாயத்து அளவில், சமூக நீதிக் கொள்கையின் அடிப்படையில், மனநோயிலிருந்து மீண்டவர்களை உள்ளடக்கிய நோயர் ஆதரவு குழுக்களை உருவாக்குதல்.
- அதிக மன நல பாதிப்பிற்கு ஆளாகக்கூடியவர்களின் (எடுத்துக்காட்டாக தூய்மைப் பணியாளர்கள், பணிக்குச் செல்லும் பெண்கள், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், மூத்த குடிமக்கள், அமைப்பு சாரா தொழிலாளர்கள், முதல் தலைமுறை பட்டதாரிகள்) உளவியல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான திட்டங்களை "விகிதாச்சார பொதுமைத்துவத்தின்" (Proportionate Universalism) அடிப்படையில் உருவாக்குதல். விகிதாச்சார பொதுமைத்துவம் என்பது

சேவைகள் அனைவருக்கும் பொதுவாக வழங்கப்படும் அதே வேளையில், அதிகம் பாதிக்கப்படுவோர்க்கு, அவர்களின் தேவை அல்லது பாதிப்பின் தீவிரத்தின் தன்மைக்கேற்ற விகிதாச்சார அளவில் சேவைகள் வழங்குவதைக் குறிக்கும்.

- போதை மீட்பு சேவைகளுக்கான மாநிலக் கொள்கையை வகுத்தல் மற்றும் இதர 28 மாவட்டங்களிலும் ஒரு பிரத்யேக போதை மீட்பு மையத்தை நிறுவுதல், பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து விரிவான உடல் நலம் மற்றும் மறுவாழ்வு சேவைகளை வழங்குதல் மற்றும் ஆரம்ப நிலை, இடை நிலை மற்றும் மூன்றாம் நிலை என போதை மீட்பு சேவைகளைக் கிடை மட்டமாக ஒருங்கிணைத்தல் (Horizontal Integration).
- அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட மன நலத் திட்டத்துடன் புகையிலை கட்டுப்பாட்டு சேவைகளை இணைத்தல்.
- அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட மன நலத் திட்டத்தின் ஒரு பகுதியாக, உளவியல் ஆலோசனை, தொலைபேசி வழி ஆலோசனை மற்றும் நலத் திட்டங்களை வழங்கும் மாவட்ட அளவிலான மையமாக "ஒருங்கிணைந்த மன நல ஆலோசனை மையங்களை" நிறுவுதல்.
- பிரசவித்த தாய்மார்களின் மன நலத்தைப் பேணுவதற்கு, பெங்களூரில் உள்ள தேசிய மன நல மற்றும் நரம்பியல் ஆராய்ச்சி நிறுவனத்தில் இயங்கும் தாய்-சேய் மன நலப் பிரிவை போன்று தாய்-சேய் மன நலப் பிரிவினை உருவாக்குதல்.
- கல்லூரி மாணவர்களுக்கான மன நல மேம்பாடு குறித்த பயிற்சி தொகுதிகள் மற்றும் கையேடு தயாரித்தல், போதை மீட்பு சேவைகள், தாய்வழி மன நலச் சேவைகள், மாவட்ட மன நலத் திட்ட சேவைகள், மற்றும் களப்பணியாளர்கள் மற்றும் மாணவர்களுக்கான மன நலம் குறித்த பயிற்சி கையேடுகள் உருவாக்குதல்.
- சுகாதார களப் பணியாளர்களுக்கு மன நல அறிகுறிகள் அடிப்படையிலான, சீரான பயிற்சி அளித்தல்.

- மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில், மாவட்ட ஆரம்ப நிலை இடையீட்டு மையங்கள் போன்று மன நலப் பிரிவுக்கான கட்டட உள்கட்டமைப்பை உருவாக்குதல்.

- அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மாவட்ட மன நலத் திட்ட அலுவலர்களுக்கு தலைமைத்துவம் மற்றும் மருத்துவமனை மேலாண்மைத் திறன் மேம்பாட்டுப் பயிற்சியை நடத்துதல்.

- மன நல சுகாதாரச் சேவைகள் குறித்த கொள்கை முடிவுகளுக்கு தேவையான உள்ளீடுகளை வழங்குவதற்கும், மக்களின் மன நலம் சார்ந்த குறிப்பிட்ட தேவைகளை நிவர்த்தி செய்வதற்கும், மருத்துவ மற்றும் சமூக அளவிலான மன நல ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேம்படுத்துதல்.

- மாவட்ட மன நலத் திட்டத்தின்கீழ், மாநிலத்தில் மன நலச் சேவை வழங்குதலை திட்டமிடவும், செயல்படுத்தவும் மற்றும் வலுப்படுத்தவும் வருடாந்திரக் கருத்தரங்குகள் நடத்துதல்.

அத்தியாயம்–25

தொற்று நோய்கள் மேலாண்மை

25.1 தொற்று நோய்கள் எனப்படுவது, தனி மனித அல்லது பிற விலங்குமூலம் கிருமிகளால் பரவக்கூடிய நோய்களாகும். தொற்று நோய்களின் அறிகுறியானது கடுமையான பாதிப்பிலிருந்து அறிகுறி அல்லது அறிகுறியற்ற நிலையிலிருந்து இறப்பு வரை தீவிரத்தன்மை கொண்டதாக இருக்கலாம். பொது சுகாதாரத் துறை, முன்களப் பணியாளர்களின் ஈடுபாட்டுடன் பிற துறைகளுடனும் இணைந்து, கொரோனா–19-ன் மூன்று அலைகளையும் கட்டுப்படுத்துவதில் திறம்பட செயல்பட்டது. தொற்று நோய்களைத் தடுப்பூசிகளால் தடுக்கக்கூடிய நோய்கள் மற்றும் தடுப்பூசியின்றி கட்டுப்படுத்தக்கூடிய நோய்கள் என இருவகையாக பிரிக்கலாம். தமிழ்நாட்டில், கொரோனா–19 தொற்றின் மூன்றாவது அலையைக் கட்டுப்படுத்துவதில் கொரோனா–19 தடுப்பூசி முக்கிய பங்கு வகித்தது. தொற்றா மற்றும் தொற்று நோய்களைத்

2023 ஏப்ரல் 18]

தடுப்பது, கட்டுப்படுத்துவது மற்றும் சிகிச்சை அளிப்பதில் தமிழ்நாடு எப்பொழுதும் முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. மாநில அளவில், ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்பு திட்டத்தின் ஒரு பகுதியாக, தினமும் பல்வேறு நோய்களின் நிலைமை கண்காணிக்கப்படுகிறது. மாநில கொள்ளை நோய்த் தடுப்புக்குழு இதனை ஆய்வு செய்கிறது. மாவட்ட அளவில், பல்வேறு துறைகளின் தீவிர ஒருங்கிணைப்பை உறுதி செய்வதில் மாவட்ட ஆட்சியர்களின் பங்களிப்பு மகத்தானது. மேலும், புதியதாகத் தோன்றும் நோய்களாலும், தற்போதுள்ள நோய்களின் புதுவிதமான தாக்கத்தினாலும் பொது சுகாதாரத் துறை எப்போதும் விழிப்புடன் இருந்து எந்த நோயையும் திறம்படத் தடுத்து கட்டுப்படுத்துகிறது.

25.2 தடுப்பூசித் திட்டம்:

அ. தமிழ்நாட்டில் தடுப்பூசித் திட்டம்: *தமிழ்நாட்டில் சுகாதாரம் சார்ந்த திட்டங்களை, குறிப்பாக தடுப்பூசித் திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருவதால், தடுப்பூசியினால் தடுக்கப்பட கூடிய நோய்களிலிருந்து பாதுகாப்பு அளிப்பதில், முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. தமிழ்நாட்டில், ஆறு நோய்களைத் தடுப்பதற்கான விரிவுபடுத்தப்பட்ட தடுப்பூசித் திட்டம் 1978-ல் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தை மேலும் வலுப்படுத்துவதற்காக, நாடு தழுவிய தடுப்பூசித் திட்டம் 1985 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. தடுப்பூசி திட்டத்தின்கீழ், 11 வகையான தடுப்பூசிகளை கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் அளித்து, 12 வகையான தடுப்பூசியினால் தடுக்கப்படக்கூடிய காசநோய், தொண்டை அடைப்பான், கக்குவான் இருமல், மஞ்சள் காமாலை, H இன்புளூயன்ஸா-நிமோனியா மற்றும் மெனிஞ்ஜிடிஸ், இரணஜன்னி, போலியோ, தட்டம்மை, ருபெல்லா, ரோட்டா வைரஸ் வயிற்றுப்போக்கு நோய், நியுமோகோக்கல் நியுமோனியா மற்றும் ஜப்பானிய மூளைக் காய்ச்சல் (தொற்றுநோய் பரவக்கூடிய அபாயமுள்ள 14 மாவட்டங்கள்) ஆகிய நோய்களிலிருந்து பாதுகாப்பு அளிக்க முடியும். ஒவ்வொரு வருடமும், 9.15 இலட்சம் பச்சிளம் குழந்தைகள் மற்றும் 10.00 இலட்சம் கர்ப்பிணிப் பெண்கள் இத்திட்டத்தில் பயனடைந்து வருகின்றனர். இம்மாநிலம் தடுப்பூசி போடுவதில் தொடர்ந்து 99 சதவிகித சாதனை படைத்து வருகிறது. தடுப்பூசி அமர்வுகள் வாரத்தின் அனைத்து நாட்களில் ஆரம்ப சுகாதார*

நிலையங்களிலும், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளின் குழந்தைகள் பிரிவுகளிலும், மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளிலும், அரசு தாலுகா மற்றும் தாலுகா அல்லாத மருத்துவமனைகளிலும், மேலும் ஒவ்வொரு புதன்கிழமையும் outreach அமர்வுகளாகக் கிராமம் மற்றும் நகரங்களில் நடத்தப்பட்டு வருகின்றன.

ஆ. தடுப்பூசி அட்டவணை:

1. **ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு வழக்கமாக வழங்கப்படும் தடுப்பூசிகள்:** *குழந்தை பிறந்த ஒரு வருடத்திற்குள் மொத்தமாக 20 டோஸ் தடுப்பூசி வழங்கப்படுகிறது. அவையாவன 1 தவணை* Hepatitis B *(குழந்தை பிறந்த 24 மணி நேரத்திற்குள்), 1 தவணை* BCG, *4 தவணை* OPV, *3 தவணை* Rota, *3 தவணை* IPV, *3 தவணை* PCV, *3 தவணை* Penta, *1 தவணை* JE (JEEV) *மற்றும் 1 தவணை* MR.

2. **இரண்டு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு வழக்கமாக வழங்கப்படும் தடுப்பூசிகள்:** *இரண்டு வயதிற்குட்பட்ட குழந்தைக்கு 2 ஆம் தவணை* Measles-Rubella, Japanese Encephalitis, OPV *ஊக்குவிப்பு மற்றும்* DPT *(முத்தடுப்பூசி முதல் தவணை) ஆக மொத்தம் 4 தவணைகள் அளிக்கப்படுகின்றன.*

3. **5-6 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு வழக்கமாக வழங்கப்படும் தடுப்பூசிகள்:** *இந்த வயது குழந்தைகளுக்கு* DPT *(முத்தடுப்பூசி இரண்டாம் தவணை) அளிக்கப்படுகிறது.*

4. **10-16 வயது சிறார்களுக்கு வழக்கமாக வழங்கப்படும் தடுப்பூசிகள்:** *இந்த வயது சிறார்களுக்கு* Td *தடுப்பூசி அளிக்கப்படுகிறது.*

5. **கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழக்கமாக வழங்கப்படும் தடுப்பூசிகள்:** *அனைத்து கர்ப்பிணித் தாய்மார்களுக்கு* Td *தடுப்பூசி முதல் தவணை கர்ப்பம் பதிவு செய்தவுடன் மற்றும் இரண்டாம் தவணை ஒரு மாதத்திற்குப் பிறகு அளிக்கப்படுகிறது. ஊக்குவிப்பு தவணையானது, முந்தைய கர்ப்பத்திலிருந்து மூன்று வருடத்திற்குள் இருந்தால், இரணஜன்னி மற்றும்*

2023 ஏப்ரல் 18]

தொண்டை அடைப்பான் நோயை தடுப்பதற்காக அளிக்கப்படுகிறது.

இ. தடுப்பூசித் திட்டத்தின் சாதனை: பொது சுகாதாரப் பணியாளர்கள் திறம்படச் செயல்பட்டதனால், தமிழ்நாட்டில் முழுமையாகத் தடுப்பூசி பெற்றவர்கள் 99 சதவிகிதம் ஆகும். மேலும், தற்போது வெளியான தேசிய குடும்ப நல ஆய்வு 2021 (NFHS 5) அறிக்கையின்படி, தமிழ்நாட்டில் முழுமையாகத் தடுப்பூசிப் பெற்றவர்களின் எண்ணிக்கை 90.4 சதவிகிதம் ஆகும். தேசிய குடும்ப நல ஆய்வு NFHS 4 & 5, 2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டில் தடுப்பூசிமூலம் பயனடைந்தோர் ஒப்பீடு விவரம் கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது:-

தடுப்பூசிமூலம் 2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டில் பயனடைந்தோர்

(சதவிகிதம்)

தடுப்பூசி விவரம்	2021-22 (மாநில இணையம்)	2022-23 (மாநில இணையம்)	NFHS 4 2015-16	NFHS 5 2020-21
பிசிஜி	100	99	96.9	97.6
போலியோ சொட்டு மருந்து	98	101	82.3	91.5
பென்டாவேலண்ட்	97	101	84.5	94.8
தட்டம்மை ரூபெல்லா முதல் தவணை	99	102	85.1	95.8
முழுமையாகத் தடுப்பூசிப் பெற்றவர்கள்	96	101	69.7	90.4

ஈ. சிறப்பு தடுப்பூசித் திட்டங்கள்

1. தீவிர பல்ஸ் போலியோ சொட்டு மருந்து முகாம்: போலியோ வைரஸ் வகை-II முற்றிலுமாக ஒழிக்கப்பட்ட நிலையில், போலியோ வைரஸ் வகை-I ஒழிப்பதற்காக ஒன்றிய அரசு

ஒவ்வொரு வருடமும் தீவிர பல்ஸ் போலியோ முகாம் நடத்தி வருகிறது. தமிழ்நாட்டில் கடந்த 2004-லிருந்து 19 வருடங்களாக போலியோ நோயினால் எந்தக் குழந்தையும் பாதிக்கப்படவில்லை. தீவிர பல்ஸ் போலியோ சொட்டு மருந்து முகாம் 27.2.2022 அன்று தமிழ்நாடு முழுவதும் நடைபெற்றது. இதில் 63.72 இலட்சம் குழந்தைகள் பயனடைந்தார்கள்.

2. மிஷன் இந்திரதனுஷ்: மிஷன் இந்திரதனுஷ் சிறப்பு தடுப்பூசி முகாம் டிசம்பர் 2014-ல் இரண்டு வயதுக்குட்பட்ட தடுப்பூசி பெறாத மற்றும் விடுபட்ட குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள் பயன் பெறும் வகையில் துவங்கப்பட்டது. இது பல்வேறு பெயர்களில் மிஷன் இந்திரதனுஷ், கிராம சுவராஜ் அபியான் (IMI-1), தீவிர மிஷன் இந்திரதனுஷ் 2.0 (IMI-2.0) மற்றும் தீவிர மிஷன் இந்திரதனுஷ் 3.0 (IMI-3.0) செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் இதுவரை 8 கட்டங்களாக மிஷன் இந்திரதனுஷ் நடத்தப்பட்டுள்ளது.

3. நியுமோகோக்கல் கான்ஜுகேட் தடுப்பூசி (PCV) திட்டம்: இந்தியாவில் 5 வயதிற்குட்பட்ட 1.2 மில்லியன் குழந்தைகள் நோய்வாய்ப்பட்டு இறக்கின்றனர். இதில் 15.9 சதவிகித இறப்புகள் நிமோனியா நோய் தொற்றால் ஏற்படுகிறது. இதனைத் தடுக்கும் நோக்கில் நியுமோகோக்கல் கான்ஜுகேட் தடுப்பூசி (PCV) தேசிய தடுப்பூசித் திட்டத்தில் இணைக்கப்பட்டு குழந்தைகளுக்கு 6-வது வாரம், 14-வது வாரம் மற்றும் 9-வது மாதத்தில் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை முதல் தவணையாக 8,85,809 குழந்தைகள், இரண்டாம் தவணையாக 8,83,202 குழந்தைகளும் மற்றும் மூன்றாம் தவணையாக 8,37,543 குழந்தைகளும் பயனடைந்துள்ளனர்.

4. சுகாதாரப் பணியாளர்களுக்கான ஹெபடைடிஸ் பி தடுப்பூசி: சுகாதாரப் பணியாளர்களுக்குத் தொற்று உள்ள பொருட்கள், இரத்தம் மற்றும் உடல் திரவங்கள், அசுத்தமான மருத்துவப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் அல்லது அசுத்தமான சுற்றுச்சூழல் மேற்பரப்பு ஆகியவற்றால் பாதிப்பு ஏற்பட அதிக வாய்ப்பு உள்ளது. ஆதலால், 2022-2023 ஆம் ஆண்டில் 61,114 சுகாதாரப் பணியாளர்களுக்கு முதல் தவணை தடுப்பூசியும், 41,880 நபர்களுக்கு இரண்டாம் தவணையும், 17,088 நபர்களுக்கு மூன்றாம் தவணையும் செலுத்தப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 18]

5. கோவிட் தடுப்பூசி: *தமிழ்நாடு அரசு, மார்ச் 13, 2020 ஆம் ஆண்டில், தமிழ்நாடு அரசு பொது சுகாதாரச் சட்டம், 1939-ன்படி கோவிட்-19 அறிவிக்கப்பட்ட பெரும் தொற்றாக அறிவித்தது. மேலும், தொற்று நோய் சட்டம், 1897-ன்கீழ் கோவிட்-19 தொற்று பரவல் குறித்த தடுப்பு நடவடிக்கைகளை அறிவித்தது.*

கோவிட் தடுப்பூசித் திட்டம் துவங்கப்பட்ட நாள்	*16.1.2021*
முதற்கட்டமாக மருத்துவப் பணியாளர்கள் / முன்களப் பணியாளர்களுக்கான தடுப்பூசித் திட்டம் துவங்கப்பட்ட நாள்	*16.1.2021*
45-59 வயதிற்குட்பட்ட, இணை நோய் மற்றும் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசித் திட்டம் துவங்கப்பட்ட நாள்	*1.3.2021*
கோவிட் தடுப்பூசி தனியார் மருத்துவமனைகளில் செலுத்த அனுமதிக்கப்பட்ட நாள்	*1.3.2021*
45 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசித் திட்டம் துவங்கப்பட்ட நாள்	*1.4.2021*
தனியார் மருத்துவமனைகளில், ஒன்றிய அரசின் கொள்முதல் மற்றும் தமிழ்நாடு அரசின்மூலம் பெறப்பட்ட தடுப்பூசிகளை செலுத்த கடைசி நாள்	*30.4.2021*
18-44 வயதுடையவர்களுக்கான தடுப்பூசி அளிக்க அறிவித்த நாள்	*1.5.2021*
பாலூட்டும் தாய்மார்களுக்குத் தடுப்பூசித் திட்டம் துவங்கப்பட்ட நாள்	*20.05.2021*
கர்ப்பிணித் தாய்மார்களுக்குத் தடுப்பூசித் திட்டம் துவங்கப்பட்ட நாள்	*3.7.2021*
15-18 வயதுடையவர்களுக்கான தடுப்பூசித் திட்டம் துவங்கப்பட்ட நாள்	*3.1.2022*
முன்னெச்சரிக்கை தவணை (சுகாதாரப் பணியாளர்கள், முன்களப் பணியாளர்கள் மற்றும் 60 வயதிற்கு மேற்பட்ட இணை நோய் உள்ளவர்கள்) தடுப்பூசித் திட்டம் துவங்கப்பட்ட நாள்	*10.1.2022*

முன்னெச்சரிக்கை தவணை மருத்துவ/ முன்களப் பணியாளர்கள் / 60 வயதுக்கு மேற்பட்ட இணை நோய் உள்ளவர்கள் முகாம் (வியாழக்கிழமை)	20.1.2022
12-14 வயதுடையவர்களுக்கான தடுப்பூசித் திட்டம் ஒன்றிய அரசால் துவங்கப்பட்ட நாள்	16.3.2022
Har Ghar Dastak Abhiyan 2.0 திட்டம் துவங்கப்பட்ட நாள்	01.06.2022
முன்னெச்சரிக்கை தவணை 18-59 CSR நிதியின்மூலம்	06.7.2022
முன்னெச்சரிக்கை தவணை 18 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு அரசு கோவிட் தடுப்பூசி மையத்தில் இலவசமாக 75 நாட்களுக்கு (15-7-2022 முதல் 30-9-2022)	15.7.2022
18 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு Corbevax தடுப்பூசி முன்னெச்சரிக்கை தவணை	12.8.2022
தனியார் மருத்துவமனைகளில் 18 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு iNCOVACC தடுப்பூசி துவங்கப்பட்ட நாள்	23.12.2022

ஒன்றிய அரசிடமிருந்து இன்று வரை 11,93,50,720 டோஸ்களும், தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்திடமிருந்து 29,18,110 டோஸ்களும் கோவிட் தடுப்பூசிகள் பெறப்பட்டன. தமிழ்நாடு அரசின் அறிவுரைப்படி, இதுவரை 38 மெகா கோவிட் தடுப்பூசி முகாம் நடைபெற்றது. இதன்மூலம் 5,51,30,576 டோஸ்கள் வழங்கப்பட்டுள்ளன. 31.3.2023 வரை, 12 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு 11,84,35,477 டோஸ்கள் கோவிட் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளன. இதில் முதல் தவணை 96.62 சதவிகிதமும், இரண்டாம் தவணை 90.31 சதவிகிதமும் மற்றும் முன்னெச்சரிக்கை தவணை 90,94,069 டோஸ்கள் (17.05 சதவிகிதம்) ஆகும்.

6. தமிழ்நாட்டில் fIPV 3-வது தவணை அறிமுகம்: தடுப்பூசித் திட்டம் சிறப்பாகச் செயல்பட்டு வருவதாலும் மற்றும் தீவிர போலியோ சொட்டு மருந்து முகாம்கள் தொடர்ந்து 27 வருடங்களாக நடத்தப்பட்டதாலும், தமிழ்நாட்டில் கடந்த 19 வருடங்களாகப் போலியோ நோய் இல்லாத நிலை உள்ளது. 14-ஆவது வாரம் மற்றும் 9-வது மாதத்தில் அளிக்கப்படும்

2023 ஏப்ரல் 18]

இரண்டு தவணை IPVமூலம் ஏற்படும் சிறந்த Sero மாற்றத்தைக் கருத்தில் கொண்டு, IEAG பரிந்துரையின் பேரில், NTAGI-ன் ஒப்புதலின் அடிப்படையில், fIPV-ன் மூன்றாவது தவணை தடுப்பூசி 9-12 மாதத்தில் கூடுதலாக வழங்கப்பட்டு வருகிறது. ஏற்கெனவே இரண்டு தவணைகளாகிய 6 மற்றும் 14-வது வாரங்களில் அளிக்கப்படும் fIPV, தற்பொழுது திருத்தப்பட்ட தடுப்பூசி அட்டவணையின்படி, 3 தவணைகளாக fIPV 6-வது வாரம், 14-வது வாரம் மற்றும் 9-12 மாதங்களில் 4, ஜனவரி 2023 முதல் தமிழ்நாட்டில் வழங்கப்பட்டு வருகிறது.

7. U-WIN ஓர் அறிமுகம்

- ஏற்கெனவே தமிழ்நாட்டில் தடுப்பூசித் திட்டத்தின்கீழ் தடுப்பூசிகள்/தளவாடங்களை e-WIN என்ற மென்பொருள் மூலமும்,கோவிட்-19 தடுப்பூசித் தொடர்பான சேவைகளை CoWIN என்ற மென்பொருள் மூலமும் இணையதளம் வாயிலாகக் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம், தடுப்பூசியினால் தடுக்கப்படக்கூடிய நோய்களைப் பெரும்அளவில் சமுதாயத்திலிருந்து குறைக்க முடியும்.
- தற்பொழுது பயன்பாட்டிலுள்ள e-WIN மற்றும் Co-WIN தளங்களின் அடிப்படையில், ஒன்றிய அரசு மூன்றாவது தூணாக U-WIN டிஜிட்டல் தளத்தை உருவாக்கியுள்ளது.
- இது தொடர்பாக, புது தில்லியில் நோய்த் தடுப்பு திட்டத்திற்கான U-WIN தளம் பற்றிய பயிற்சி கருத்தரங்கம் 10 சனவரி, 2023 அன்று நடைபெற்றது. தமிழ்நாட்டில் திண்டுக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் U-WIN மென்பொருள் தளம் இயக்க பயிற்சி 11 சனவரி, 2023 அன்று காணொலி வாயிலாக நடத்தப்பட்டது.
- Healthcare Professional Registry (HPR), Healthcare Facility Registry (HFR) மற்றும் ABHA ஆகியவற்றை இணைப்பதற்காக ABDM-ன்படி U-WIN வடிவமைக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள அனைத்து மேலாண்மைத் தகவல் அமைப்புகளுடனும் U-WIN இயங்கக்கூடியதாக இருக்கும்.

8. தமிழ்நாட்டில் HPV தடுப்பூசி ஓர் அறிமுகம்:

- HPV தடுப்பூசி அளிப்பதன்மூலம் பெண்களுக்கு ஏற்படும் கர்ப்பப்பை வாய் புற்றுநோயின் பெரும்பாலான நிகழ்வுகளைத் தடுக்கலாம்.

- 9-14 வயதுக்குட்பட்ட பள்ளி செல்லும் மற்றும் பள்ளி செல்லாத பெண் குழந்தைகளுக்கு HPV தடுப்பூசியைத் தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்த NTAGI பரிந்துரைத்துள்ளது. இது முகாம் அடிப்படையில் நடத்தப்பட்டு பின்னர் வழக்கமான நோய்த் தடுப்புத் திட்டத்தில் இணைக்கப்படும்.

- பள்ளி செல்லாத 9-14 வயதுடைய அனைத்துக் குழந்தைகளுக்கும் வழக்கமான தடுப்பூசி அமர்வின் மூலமும் மொபைல் குழுக்கள் மூலமும் தடுப்பூசி போடப்படும்.

- மேலும் 9-14 வயதுடைய அனைத்துப் பெண் குழந்தைகளுக்கும் தொடர்ந்து அடுத்த ஆண்டில் UIP-ல் வழக்கமான தடுப்பூசித் திட்டத்தில் ஒரு தவணை தடுப்பூசியாக இணைக்கப்படும்.

- RGI கணிப்புகள் 2011-2036-ன்படி 2023 ஆம் ஆண்டிற்கான மாநிலத்தின் மத்திய ஆண்டு மதிப்பிடப்பட்ட மக்கள் தொகை பின்வருமாறு:

 மொத்த மக்கள் தொகை: 7,69,35,997, 9 முதல் 14 வயது மக்கள் தொகை @ 8.23% 63,31,831. இதில் 9 முதல் 14 வயது வரையிலான பெண் மக்கள் தொகை 30,67,772 ஆகும்.

- எனவே, 9-14 வயதுக்குட்பட்ட 30,67,772 பெண் குழந்தைகளுக்கு HPV தடுப்பூசித் திட்டத்தை முக்கியமாகப் பள்ளிகள்மூலம் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

உ. தடுப்பூசியினால் தடுக்கப்படக்கூடிய நோய்கள் பற்றிய விவரம்: தமிழ்நாட்டில் உலக சுகாதார நிறுவனத்தின் ஆதரவுடன் தடுப்பூசியினால் தடுக்கப்படக்கூடிய நோய்களின் தடுப்புப் பணி நடந்து வருகிறது. 2022-23 ஆம் ஆண்டில் 60 தட்டம்மை மற்றும் நான்கு தொண்டை அடைப்பான் நோய் பாதிப்பு உறுதி செய்யப்பட்டது. இவ்வாறு பாதிக்கப்பட்ட பகுதிகளில் அரசு

2023 ஏப்ரல் 18]

அனைத்து கட்டுப்பாடு நடவடிக்கைகளையும் மற்றும் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

ஊ. நோய் பரப்பிகளால் பரவும் நோய்களுக்கான தேசிய கட்டுப்பாடுத் திட்டம்: *நோய் பரப்பிகளால் பரவும் நோய்களான மலேரியா, டெங்கு, யானைக்கால் நோய், சிக்குன்குன்யா மற்றும் ஜப்பானிய மூளைக்காய்ச்சல் ஆகியவற்றை கட்டுப்படுத்த பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை, அனைத்து நடவடிக்கைகளையும் உள்ளாட்சித் துறையுடன் இணைந்து தேசிய நல வாழ்வுக் குழுமத்தின் பங்களிப்புடன் அனைத்து பன்முக தடுப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மேலும் தண்ணீர்மூலம் பரவும் நோய்களான வயிற்று போக்கு மற்றும் காற்றின்மூலம் பரவும் பன்றிக் காய்ச்சல், ப்ளு காய்ச்சல் மற்றும் வெறிநாய்க்கடி போன்ற நோய்களிலிருந்தும் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் தொடர் கண்காணிப்புப் பணியை மேற்கொண்டு வருவதன் விளைவாக மலேரியா மற்றும் யானைக்கால் நோய் பரவல் முற்றிலும் கட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில், நோய் ஒழிப்பு நிலை சான்றினை ஒன்றிய அரசிடமிருந்து பெறுவதற்குத் தேவையான ஆதாரங்களைச் சமர்ப்பிக்கும் நிலையில் தமிழ்நாடு உள்ளது. இத்துறை மற்ற உள்ளாட்சித் துறைகளுடன் இணைந்து கொசு மற்றும் நோய் பரப்பும் பூச்சிகள் ஒழிப்புப் பணியைச் செவ்வனே செய்து வருவதால், உயிர்கொல்லி நோயான டெங்கு காய்ச்சல் கடந்த மூன்று ஆண்டுகளாக வெகுவாகக் குறைந்துள்ளது. ஆண்டுதோறும் தற்காலிகக் களப்பணியாளர்கள் ஒரு வட்டாரத்திற்கு 20 எனவும், பேரூராட்சிக்கு 10 எனவும், நகராட்சி மற்றும் மாநகராட்சியில் 250-லிருந்து 300 வீடுகளுக்கு ஒரு களப்பணியாளர் என மொத்தத்தில் சுமார் 25,000 களப்பணியாளர்கள் நாள்தோறும் உள்ளாட்சித் துறைகள்மூலம் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த செயல்பட்டு வருகின்றனர். இப்பணியாளர்களைக் கொண்டு ஏடிஸ் கொசுக்கள் வளரும் நீர்நிலைகள் மற்றும் நீர் தேங்கி இருக்கும் பொருட்கள் ஆகியவற்றைக் கண்காணித்தும், அதனை அழித்தும் கொசுப் புழு ஒழிப்பு மருந்துகளைத் தெளித்தும், முதிர் கொசுக்கள் ஒழிப்பிற்கான புகை மருந்து அடித்தும், கொசுவினால் பரவும் நோய்கள் மற்றும் இறப்புகள் தடுக்கப்பட்டுள்ளன. மேலும் கடந்த காலங்களிலிருந்து நோய் பாதிப்பு படிப்படியாகக் கனறைக்கப்பட்டு வருகிறது மற்றும் மருத்துவமனைகளில், கொசுவினால் பரவும் நோய்களுக்குத் தேவையான மருந்துப் பொருட்கள், இரத்தம், இரத்தத்*

[2023 ஏப்ரல் 18

தட்டுக்கள், வெள்ளையணுக்கள் போன்றவை தேவையான அளவு கையிருப்பில் வைக்கப்பட்டுள்ளன. மேலும் பல்வேறு நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொண்ட விவரம் பின்வருமாறு:

1. டெங்கு: 'ஏடிஸ்' (Aedes) கொசுக்களால் பரப்பப்படும் டெங்கு காய்ச்சல், தொற்று நோயாகப் பெருக வாய்ப்புள்ள ஒரு வைரஸ் நோயாகும். காய்ச்சல், தலைவலி, தசைவலி, மூட்டுவலி, தோலில் சிவப்பு புள்ளி, குமட்டல் மற்றும் வாந்தி ஆகியவை டெங்கு காய்ச்சலின் அறிகுறிகளாகும். இந்நோய் தொற்று காரணமாக, டெங்கு இரத்தக் கசிவு காய்ச்சல், நோயாளியின் இரத்தக் குழாய்களில் மிகப் பெரிய பாதிப்பினை உருவாக்கி, உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் வகையில் அமையும்.

- தமிழ்நாட்டில் 131 எலிசா பரிசோதனை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு டெங்கு காய்ச்சலுக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தியாவில் தமிழ்நாட்டில்தான் டெங்கு காய்ச்சலுக்கு அதிக அளவில் பரிசோதனை நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.
- டெங்கு பரிசோதனைக்குத் தேவையான உபகரணங்கள், மருந்துகள், இரத்தம், இரத்தத் தட்டணுக்கள் உடனுக்குடன் கிடைப்பதற்கு உறுதி செய்யப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் காய்ச்சல் பிரிவு உருவாக்கப்பட்டு 24 மணி நேரமும் (24X7) செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- நிலவேம்பு குடிநீர், காய்ச்சல் உள்ளவர்கள், மாணவர்கள் உட்பட பொது மக்கள் அனைவருக்கும் முறையாக வழங்கப்பட்டு வருகிறது.
- பூச்சியியல் மதிப்பீடுகள் மற்றும் கண்காணிப்புகள்மூலம் டெங்கு காய்ச்சல் பரவுவதைக் கட்டுப்படுத்த முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- கொசுப்புழு அடர்த்தி அறிக்கையை மையமாகக் கொண்டு, மாவட்ட ஆட்சியர், பொது சுகாதாரத் துறை பணியாளர்கள், ஊரக வளர்ச்சி, கிராம பஞ்சாயத்து மற்றும் நகராட்சி நிர்வாக அலுவலர்கள்மூலம் மாவட்ட அளவில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு கொசு ஒழிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2023 ஏப்ரல் 18]

- மேலும், இந்நோயைப் பரப்பும் கொசுக்களில் டெங்கு வைரஸ் உள்ளதா என RTPCR பரிசோதனை முறையில் கண்டறிந்து உடனடித் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.
- டெங்கு மற்றும் காய்ச்சல், பொது சுகாதாரத் துறையால் 24 மணி நேரமும் (24X7) கண்காணிக்கப்பட்டு வருகிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் டெங்கு காய்ச்சல் நிலவரம்:

வ. எண்	வருடம்	பாதிக்கப்பட்ட நபர்கள்	இறப்புகள்
1	2019	8,527	5
2	2020	2,410	0
3	2021	6,039	8
4	2022	6,430	8
5	2023 (ஜனவரி முதல் மார்ச் வரை)	2,019	0

2. சிக்குன்குனியா: 'சிக்குன்குனியா' காய்ச்சல் 'ஏடிஸ்' கொசுக்கள்மூலம் மனிதருக்குப் பரவும் ஒரு வகை வைரஸினால் ஏற்படுகிறது. அரசால் மேற்கொள்ளப்பட்ட நோய்த் தடுப்பு நடவடிக்கைகளால் சிக்குன்குனியா நோயின் பாதிப்பு மிகவும் குறைந்துள்ளது. டெங்குக் காய்ச்சலுக்கு எடுக்கப்பட்ட ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு மற்றும் தடுப்பு நடவடிக்கையால் சிக்குன்குனியா பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் சிக்குன்குனியா காய்ச்சல் நிலவரம்:

வ. எண்	வருடம்	பாதிக்கப்பட்ட நபர்கள்
1	2019	681
2	2020	224
3	2021	153
4	2022	181
5	2023 (ஜனவரி முதல் மார்ச் வரை)	30

[2023 ஏப்ரல் 18

3. மலேரியா: மலேரியா நோய், பிளாஸ்மோடியம் வைவாக்ஸ் (பி.வைவாக்ஸ்), பிளாஸ்மோடியம் ஃபால்சிபாரம் (பி.பால்சிபாரம்) போன்ற ஒட்டுண்ணிகளால் பரவும் நோயாகும். அனாபிலஸ் என்ற ஒருவகை பெண் கொசு கடிப்பதால் மனிதர்களிடையே இந்த நோய் பரவுகிறது. தேசிய மலேரியா கட்டுப்பாட்டுத் திட்டம் தமிழ்நாட்டில் 1953 முதல் செயல்பாட்டில் உள்ளது. இத்திட்டம் பல்வேறு காலகட்டங்களில் விரிவுபடுத்தப்பட்டு, தற்சமயம் 2016 முதல் 2030-க்குள் இந்தியாவிலிருந்து மலேரியா பரவுவதை நிரந்தரமாக நீக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில், தமிழ்நாட்டிலும் மலேரியா நோயை நீக்குவதற்கான கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1. அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், தனியார் மருத்துவமனைகள் மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் காய்ச்சல் கண்காணிப்பு பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.
2. சுகாதார ஆய்வாளர்கள்மூலம் களப் பணியின்போது எடுக்கப்படும் நேர்முகக் கண்காணிப்பு (Active Surveillance) மற்றும் மலேரியா பாதிக்கப்பட்ட வீட்டிலும் அதைச் சுற்றியுள்ள வீடுகளிலும் தொடர்/ஒட்டுமொத்த கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
3. மலேரியா நோய் கண்டறிதல் மற்றும் உடன் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு பூரண சிகிச்சை அளித்ததன்மூலம், தமிழ்நாடு அரசு மலேரியா நோயை நீக்குவதற்கான நடவடிக்கைகளை நோக்கி முன்னேறியுள்ளது. மற்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவையாவன:

- மலேரியா நோய் கண்டவர்களை தொடர்ந்து கண்காணித்தல்.
- மலேரியா பாதிப்பு அதிகம் காணப்பட்ட மாவட்டங்களில் வீடு வீடாகச் சென்று வீட்டின் உட்புறத்தில் மருந்து தெளிக்கும் பணி.

2023 ஏப்ரல் 18]

- *மண்டல பூச்சியியல் வல்லுநர் அவர்களின் தலைமையின்கீழ் செயல்படும் மண்டல பூச்சியியல் குழுக்கள் அவ்வப்பொழுது நோய் பரப்பிகளின் அடர்த்தியைக் கண்டறிதல்.*
- *கொசுப் புழு உண்ணும் கம்பூசியா மீன்களை மலேரியா நோயை பரப்பும் அனாபிலஸ் கொசுப் புழுக்கள் வளரும் நீர்நிலைகளில் (கிணறுகள் etc.) விடுதல்.*
- *கொசு வளர்நிலை புழு ஒழிப்பு நடவடிக்கைகள்.*
- *புலம் பெயர்ந்தவர்களுக்கான கண்காணிப்புப் பணி.*
- *மலேரியா நோய் பாதிப்புள்ள இடங்களில் குவி மருந்து தெளிப்பு (focal spray) ஆகியவை மேற்கொள்ளப்பட்டதனால் மலேரியா நோயை நீக்குவதற்கு ஏதுவாக உள்ளது.*

தீவிர தடுப்பு நடவடிக்கைகளினால் மலேரியா பாதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 2021-ல் 772-லிருந்து 2022-ல் 354 ஆகக் குறைந்துள்ளது. தமிழ்நாட்டிலுள்ள 38 மாவட்டங்களில் 31 மாவட்டங்கள் மலேரியா நோய் இல்லாத நிலைக்கு முன்னேறியுள்ளன. மேலும், மீதமுள்ள 7 மாவட்டங்களில் மலேரியா நோய் பாதிப்பில்லா நிலைக்கு முன்னேற அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மலேரியா நோயை நீக்குவதற்காக, தமிழ்நாடு அரசு எடுத்த முயற்சியினால் தேசிய அளவில் 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுக்கு சிறப்பான நடவடிக்கை எடுத்ததற்கான ஒன்றிய அரசின் விருது வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் மலேரியா காய்ச்சல் நிலவரம்:

வ. எண்	வருடம்	பாதிக்கப்பட்ட நபர்கள்
1	2019	2,088
2	2020	891
3	2021	772
4	2022	354
5	2023 (ஜனவரி முதல் மார்ச் வரை)	60

4. ஜப்பானிய மூளைக்காய்ச்சல்: ஜப்பானிய மூளைக்காய்ச்சல் இந்தியாவில் கொசுக்களால் பரவும் முதன்மையான நோய்களில் ஒன்றாகும். ஜப்பானிய மூளைக்காய்ச்சல், விலங்குகளிலிருந்து மனிதனுக்கு கொசுக்கள்மூலம் பரவும் வைரஸ் நோயாகும். இயற்கை ஒட்டுண்ணிகளாகச் செயல்படும் விலங்குகள், பறவைகள் மற்றும் பன்றி ஆகியன இவ்வகை வைரஸ்களுக்கு உறைவிடமாக உள்ளன. நோய் பரவும் சுழற்சியில், பன்றிகள் மற்றும் பறவைகளில், இவ்வகை வைரஸ் பெருகுவதால், இவை 'வைரஸ் பெருக்கி விருந்தோம்பி' என அழைக்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் 14 மாவட்டங்களான அரியலூர், கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, விருதுநகர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருவாரூர், மதுரை, புதுக்கோட்டை, கரூர் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நோயின் அறிகுறிகள் கண்டறியப்பட்டுள்ளன. மேற்காணும் மாவட்டங்களில் குழந்தைகளுக்கு வழக்கமான தேசிய தடுப்பூசித் திட்டத்தின்கீழ் ஜப்பானிய மூளைக்காய்ச்சல் தடுப்பூசியும் போடப்படுகிறது. 1-15 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மேற்கண்ட அனைத்து மாவட்டங்களிலும் பிரச்சார முறையில் ஜப்பானிய மூளைக்காய்ச்சல் தடுப்பூசியைச் செலுத்திய பிறகு, ஜப்பானிய மூளைக்காய்ச்சல் தடுப்பூசி இப்போது வழக்கமான தடுப்பூசியின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. முதல் தவணை குழந்தை பிறந்த 9 ஆம் மாதத்திலும், இரண்டாம் தவணை 16-24 மாதக் குழந்தைகளுக்கும் தடுப்பூசி வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இந்நோயை பரப்பும் கொசுக்களில் ஜப்பானிய மூளைக்காய்ச்சல் வைரஸ் உள்ளதா என RTPCR பரிசோதனை மேற்கொண்டு நோய் பரப்பும் கொசுக்களை ஆய்வு செய்து களத்தில் தடுப்பு நடவடிக்கைகள் நோய் பரவுவதற்கு முன்னரே மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த ஐந்து ஆண்டுகளில் ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நிலவரம்:

வ. எண்	வருடம்	பாதிக்கப்பட்ட நபர்கள்	இறப்பு எண்ணிக்கை
1	2019	231	1
2	2020	47	1
3	2021	38	2

2023 ஏப்ரல் 18]

வ. எண்	வருடம்	பாதிக்கப்பட்ட நபர்கள்	இறப்பு எண்ணிக்கை
4	2022	28	0
5	2023 (ஜனவரி முதல் மார்ச் வரை)	4	1

5. யானைக்கால் நோய்: யானைக்கால் நோய் க்யூலக்ஸ் என்ற ஒரு வகை கொசுக்கடியால் பரவும் கால் வீக்க நோய். தமிழ்நாட்டில், 1957 ஆம் ஆண்டு முதல் தேசிய யானைக்கால் நோய்த் தடுப்புத் திட்டம் செங்கல்பட்டு, கும்பகோணம், சிதம்பரம், வேலூர் மற்றும் நாகர்கோவில் போன்ற மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 'டையீத்தைல் கார்பமைசின் சிட்ரேட்' (DEC) மாத்திரை வழங்கும் முறை, மக்கள் திறன் மருந்து அளிக்கும் திட்டத்தின்கீழ், 1996 ஆம் ஆண்டு கடலூர் மாவட்டத்தில் முதன் முறையாக முன்னோடித் திட்டமாக துவங்கப்பட்டது. பின்னர் ஒட்டுமொத்த 'டையீத்தைல் கார்பமைசின் சிட்ரேட்' மாத்திரை வழங்கும் திட்டம், 1997-98 ஆம் ஆண்டு அனைத்து யானைக்கால் நோய் பாதித்த மாவட்டங்களிலும் வழங்கப்பட்டது. யானைக்கால் நோய் பரவியுள்ள பெரும்பான்மையான மாவட்டங்களில் யானைக்கால் நுண்புழு விகிதம் ஒரு விழுக்காட்டிற்கும்கீழ் காணப்பட்டதால், உலக சுகாதார நிறுவனத்தின் வழிகாட்டுதலின்படி, பைலேரியா டெஸ்ட் ஸ்டிரிப் (FTS) பரிசோதனைமூலம் பரவல் மதிப்பீட்டுப் பணி 26 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டது. மக்கள் திறன் மருந்து அளிக்கும் திட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர், இம்மாவட்டங்களில் யானைக்கால் நோய் பாதித்தவர்களுக்கு நோய் பராமரிப்பு உபகரணங்கள் அளித்து பராமரிப்பு பயிற்சி, விரைவீக்க அறுவைச் சிகிச்சை மற்றும் புலம்பெயர் மக்களை பரிசோதித்தல் முதலிய கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாநில அரசு, நான்காம் நிலை யானைக்கால் நோயாளிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000/ – நிதியுதவி வழங்குகிறது. இத்திட்டத்தின்கீழ் 2022 ஆம் ஆண்டில் ரூ.9.62 கோடி நிதி ஒதுக்கீட்டில் 8,023 நோயாளிகள் பயனடைந்துள்ளனர். யானைக்கால் நோயை முற்றிலும் தமிழ்நாட்டிலிருந்து 2030 ஆம் ஆண்டுக்குள் அகற்றிட சான்றிதழ் பெற ஏதுவாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் வட்டார அளவில் ஒரு முறை நுண்ணுயிர் ஒட்டுண்ணி கண்டறியும் பணி நடைபெற்று வருகிறது.

6. லெப்டோஸ்பைரோஸிஸ்: லெப்டோஸ்பைரோஸிஸ் என்பது விலங்குகளிலிருந்து மனிதனுக்கு ஒரு பாக்டீரியாவால் இந்நோய் பாதிக்கப்பட்ட விலங்கின் சிறுநீர்மூலம் பரவக்கூடிய நோயாகும். இந்நோயை உண்டாக்கக்கூடிய பாக்டீரியாக்கள் பல வகையான வீட்டு விலங்குகள் மற்றும் காட்டு விலங்குகளில் காணப்படுகின்றன. உதாரணம்–எலி, பூனை, நாய், முயல், பன்றி மற்றும் குதிரைகள் போன்றவை. பாதிக்கப்பட்ட விலங்குகளின் சிறுநீரில் பாக்டீரியாக்கள் சில மாதங்கள் முதல் பல வருடங்கள் வரை காணப்படும். பாக்டீரியாக்கள் மனிதனின் தோலில் ஏற்படும் வெட்டுக்காயங்கள்/ சிராய்ப்புகள்மூலம் மனிதனின் உடலுக்குள் புகுந்து விடும். மழைக்காலங்களில் வெள்ளம் சூழ்ந்துள்ள மாசுப்பட்ட நீரின்மூலம் இந்நோய் பாதிப்பு அதிகமாக வாய்ப்பு உள்ளது. இந்நோய்க்கு ஆய்வக பரிசோதனை வசதிகள் அனைத்து மாவட்ட பொது சுகாதார ஆய்வகங்கள், தலைமையிட பரிசோதனை மையம், மனித இன விலங்கின பரிவர்த்தனை நோய்க் கட்டுப்பாட்டு மையம் (ஐ.வி.சி & இசட்), ஓசூர் மற்றும் தமிழ்நாடு கால்நடை மற்றும் விலங்கு அறிவியல் பல்கலைக்கழகம் (தனுவாஸ்) மாதவரம், சென்னை, தனியார் மருத்துவமனைகள் மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் ஆகிய இடங்களில் உள்ளது. இந்நோய் டாக்சிசைக்கிளின் மருந்துமூலம் குணப்படுத்தப்படுகிறது. இந்நோய் வராமல் தற்காத்துக் கொள்ள மழைநீர் / வெள்ள நீரில் நடப்பதற்கு முன் காலணிகள் உபயோகிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. பொது மக்களுக்கு இந்நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, தகுந்த மின்னணு விழிப்புணர்வு, கைப்பிரதிகள், ஒலி–ஒளி அமைப்புகள் மூலமும் நோய் பரவல் தடுப்பு விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் லெப்டோஸ்பைரோஸிஸ் நிலவரம்:

வ. எண்	வருடம்	பாதிக்கப்பட்ட நபர்கள்	இறப்பு எண்ணிக்கை
1	2019	849	0
2	2020	376	0
3	2021	1,046	0
4	2022	2,612	1
5	2023 (ஜனவரி முதல் மார்ச் வரை)	755	0

2023 ஏப்ரல் 18]

25.3 மாநில மற்றும் மாவட்ட அளவிலான தொற்று நோய்கள் கண்காணிப்புத் தடுப்பு நடவடிக்கைகள்:

தொற்று நோய்கள் பரவுதலைக் கண்காணிக்கவும் பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து நோய் பரவலைத் தடுக்கவும் மாநில, மாவட்ட அளவில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து துறை செயல்பட்டு வருகிறது. நோய்த் தடுப்பு பணிகளை ஒருங்கிணைக்கவும், கண்காணிக்கவும் மாநில, மாவட்ட அளவில் 24X7 அளவில் இயங்கும் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சியரின் கண்காணிப்பில், துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள்மூலம் மாவட்ட அளவில் தொற்று நோய்த் தடுப்பு ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொது சுகாதாரத்தைப் பாதுகாக்கும் வகையில் நோய் பரவுதலைக் கட்டுப்படுத்தும் வகையிலான கீழ்க்காணும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்:

i. *கொசு மற்றும் கொசுப் புழு உற்பத்தியை கட்டுப்படுத்துதல்.*

ii. *நீர் பகுப்பாய்வு மற்றும் நீர் வழங்கல் அமைப்புகளைக் கண்காணிப்பதன்மூலம் பொது மக்களுக்குப் பாதுகாப்பான குடிநீர் விநியோகம் செய்வதை உறுதி செய்தல்.*

iii. *திடக் கழிவு மேலாண்மை மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்புப் பணிகளைக் கண்காணித்தல்.*

சுகாதாரத் துறை மற்றும் தொடர்புடைய பிற துறைகளுடன் இணைந்து, சீரான இடைவெளியில் மாவட்ட ஆட்சியரின் தலைமையில் ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, தகுந்த அறிவுரைகளை வழங்கி மலேரியா, டெங்கு, பன்றிக்காய்ச்சல், வயிற்றுப்போக்கு, வெறிநாய்க்கடி போன்ற பிற தொற்று நோய்கள் பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றன.

25.4 ஒருங்கிணைந்த சுகாதாரத் தகவல் தளம் (IHIP): *ஒருங்கிணைந்த சுகாதாரத் தகவல் தளம் (IHIP), ஒரு தினசரி நோய் கண்காணிப்புத் தளமாகும். இத்தளம் 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதி வாராந்திர கண்காணிப்புத் தளமான ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்புத் திட்டத்தை (IDSP) மறுசீரமைப்பு செய்து தொடங்கப்பட்டது. இத்தளத்தின் நோக்கம், அனைத்து தொற்று நோய்கள் குறித்த தகவல்களையும் ஒரே தளத்தில் கொண்டு வருவதாகும். அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள்*

[2023 ஏப்ரல் 18

இத்தளத்தில் சுகாதாரம் மற்றும் தொற்று நோய் குறித்த தகவல்களை S (நோய் அறிகுறிகள்) P (நோய் சாத்தியக்கூறு அறிகுறிகள்) மற்றும் L (ஆய்வகத்தில் உறுதிபடுத்தப்பட்ட நோய் அறிகுறிகள்) படிவங்களில் தினசரி பதிவேற்றம் செய்கின்றனர்.

25.5 மாவட்ட பொதுச் சுகாதார ஆய்வகம் (DPHL): மாவட்ட பொதுச் சுகாதார ஆய்வகங்கள் சரியான நேரத்தில் நோய்களைக் கண்டறிந்து, நோய் கண்காணிப்பில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இதனால் சமூகத்தில் நோய்களைக் கட்டுப்படுத்தி இறப்பு விகிதம் குறைக்கப்படுகிறது. தற்பொழுது 32 மாவட்ட பொதுச் சுகாதார ஆய்வகங்கள் (DPHL) செயல்பட்டு வருகின்றன. மேலும், ஆறு மாவட்ட பொது சுகாதார ஆய்வகங்கள் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட மாவட்டங்களில் ஏற்படுத்தப்படவுள்ளன.

25.6 நீர் பகுப்பாய்வு ஆய்வகங்கள்: நான்கு மண்டல நீர் பகுப்பாய்வு ஆய்வகங்கள், சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்களில் செயல்பட்டு வருகின்றன. இந்நீர் பகுப்பாய்வு ஆய்வகங்கள் குடிநீரின் தரத்தினை உறுதிசெய்திட, நீர் நிலைகளிலிருந்து நீர் மாதிரிகளைச் சேகரித்து ஆய்வுக்குட்படுத்தி, பொது மக்கள் பாதுகாப்பான குடிநீரினை உபயோகப்படுத்துவதை உறுதி செய்கின்றன. இந்த ஆய்வகங்களின் சுகாதார ஆய்வாளர்கள், மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், கிராம பஞ்சாயத்துகள், அரசு மருத்துவமனைகள், இரயில் நிலையங்கள், சிறைகள், அரசு நிறுவனங்கள், அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகள் போன்றவற்றில் உள்ள பாதுகாக்கப்பட்ட நீர் வழங்கல் அமைப்புகளைப் பார்வையிடுவதுடன், கிணறுகள், மேல்நிலைத் தொட்டிகள், சுத்திகரிப்பு நிலையங்கள், நீர் பகிர்மான இடங்கள், நீர் தேக்கங்களிலிருந்தும் நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, நீர் மாதிரிகளின் உடலியல், வேதியியல் மற்றும் நுண்ணுயிரியல் தன்மை குறித்த ஆய்வுகள் இந்நீர் பகுப்பாய்வு ஆய்வகங்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

25.7 தொற்று நோய்த் தடுப்புக் கட்டுப்பாட்டு மையம் (24X7): பொது சுகாதார மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்ககத்திலிருந்து செயல்படும் 24X7 கொள்ளை நோய்த் தடுப்பு கட்டுப்பாட்டு மையம், பத்திரிகைச் செய்திகள், ஊடகங்கள், பொதுமக்கள் வாயிலாகப் பெறப்படும் நோய் பரவல், இயற்கைப் பேரிடர் குறித்த செய்திகளை ஒருங்கிணைக்கும் தொடர்பு மையமாகச் செயல்பட்டு, சேகரிக்கப்பட்ட விவரங்களைத் தொடர்புடைய மாநில / மாவட்ட

2023 ஏப்ரல் 18]

அளவிலான அதிகாரிகளுக்கு உடனடியாக தகவல் தெரிவித்து நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

25.8 தேசிய வைரஸ் ஹெபடைடிஸ் கட்டுப்பாட்டுத் திட்டம்: தேசிய வைரஸ் ஹெபடைடிஸ் கட்டுப்பாட்டுத் திட்டமானது 2018 ஆம் ஆண்டில் ஓர் ஒருங்கிணைக்கப்பட்ட திட்டமாக ஹெபடைடிஸ் தொற்றினைத் தடுக்கவும் மற்றும் கட்டுப்படுத்துவதோடு அல்லாது தேசிய அளவில், 2030 ஆம் ஆண்டிற்குள் ஹெபடைடிஸ் சி தொற்றினை முற்றிலும் ஒழிக்கவும், குறிப்பிடத்தக்க அளவில் ஹெபடைடிஸ் பி/சி-யினால் ஏற்படும் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை, நோயுறும் தன்மை மற்றும் இறப்பினைக் குறைக்கவும், ஹெபடைடிஸ் ஏ மற்றும் ஈ-தொற்றினால் ஏற்படக்கூடிய ஆபத்துக் காரணிகள், நோயுறும் தன்மை மற்றும் இறப்பினை குறைக்கவும் இத்திட்டம் தொடங்கப்பட்டது.

25.8.1 முக்கிய நோக்கங்கள்:

- ஹெபடைடிஸ் தொற்று குறித்த சமூக விழிப்புணர்வை மேம்படுத்துதல் மற்றும் பொது மக்களிடையே குறிப்பாகத் தொற்றிற்கு எளிதாக நோய்த் தொற்று பாதிப்புக்குள்ளாகும் ஆபத்து மிகுந்த குழுவினர் (High Risk Groups) மற்றும் அதிக எண்ணிக்கையில் பாதிப்புக்குள்ளானோர் வசிக்கும் (Hot Spot) பகுதிகளில் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து வலியுறுத்துதல்.
- வைரஸ் ஹெபடைடிஸினை ஆரம்ப கால நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சையினை அனைத்து மருத்துவ மையங்களிலும் வழங்குதல்.
- வைரஸ் ஹெபடைடிஸ்ற்கு சிகிச்சை அளிக்கவும் மற்றும் அதனால் ஏற்படும் தீவிர பாதிப்புகளைக் கையாளவும் நிலையான வழிகாட்டி நெறிமுறைகளை உருவாக்குதல்.
- நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் வைரஸ் ஹெபடைடிஸ் மற்றும் அதன் பாதிப்புகளை நிர்வகித்து விரிவான சேவைகளை வழங்குவதற்காக, தற்போதுள்ள உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல், ஏற்கெனவே உள்ள மனித வளத்தின் திறன்களை மேம்படுத்துதல் மற்றும் கூடுதல் மனித வளங்களை அதிகரித்தல்.

[2023 ஏப்ரல் 18

- தற்போதுள்ள பிற தேசிய திட்டங்களோடு ஒருங்கிணைந்து ஹெபடைடிஸ் வைரஸ் தொற்று குறித்த விழிப்புணர்வு, நோய்த் தடுப்பு, நோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை போன்றவற்றை வழங்குதல்.

- வைரஸ் ஹெபடைடிஸ் மற்றும் அதன் பின்விளைவுகளால் பாதிக்கப்பட்ட நபர்களைப் பற்றிய விவரங்களைப் பராமரிக்க இணைய அடிப்படையிலான “வைரல் ஹெபடைடிஸ் தகவல் மற்றும் மேலாண்மை அமைப்பு” ஒன்றை உருவாக்குதல்.

25.8.2 திட்டத்தின் உட்கூறுகள்:

- பிறந்த குழந்தைகள், எளிதாக நோய்த்தொற்று பாதிப்புக்குள்ளாகும் ஆபத்து மிகுந்த குழுவினர் (High Risk Groups) மற்றும் சுகாதாரப் பணியாளர்களுக்கு ஹெபடைடிஸ் பி தடுப்பு மருந்து வழங்குதல்.

- பாதுகாப்பான முறையில் இரத்தம் மற்றும் இரத்தம் சார்ந்தவற்றை வழங்குதல்.

- பாதுகாப்பான முறையில் ஊசி போடுதல் மற்றும் பாதுகாப்பான சமூக-கலாச்சாரப் பழக்கங்களைப் பின்பற்றுதல்.

- பாதுகாப்பான குடிநீர், தூய்மையான மற்றும் சுகாதாரமான கழிப்பறைகள்.

- நோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை: (i) மருத்துவமனையில் நிகழும் பிரசவங்கள் 80%க்கு குறைவாக உள்ள பகுதிகளில் கர்ப்பிணிப் பெண்களுக்கு HBsAg பரிசோதனை செய்து, அதில் நோய் தொற்று உள்ளோரை உயர் நிலை மருத்துவ நிலையத்திற்குப் பரிந்துரை செய்வதோடு அல்லாது பிறக்கப் போகும் குழந்தைக்குப் பிறப்பு டோஸ் ஹெபடைடிஸ் பி தடுப்பூசி அளிக்கப்பட்டதை உறுதிப்படுத்துதல். (ii) ஹெபடைடிஸ் பி மற்றும் சி-க்கு இலவசமாகப் பரிசோதனை, நோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை அளித்தல் போன்றவற்றை அனைத்து நிலை மருத்துவ மையங்களிலும் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்தல்.

2023 ஏப்ரல் 18]

- *இலாப நோக்கத்துடன் இல்லாமல் தனியார் துறையுடனும் இணைந்து நோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை வழங்குதல்.*
- *சமூக அளவில் பயிற்றுனர்களை ஈடுபடுத்தி சிகிச்சையை விடாமல் தொடர்ந்து மேற்கொள்ளுதல் மற்றும் திட்ட சேவைகளைச் சமூகத்தில் உள்ள மக்கள் முன்வந்து பெறுவதை உறுதி செய்து அதிகரித்தல்.*
- *மேற்பார்வையிடல், தொடர் கண்காணிப்பு மற்றும் மருத்துவ ஆராய்ச்சி செய்தல்.*
- *பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு: இது தொடர்ச்சியாக நடைபெறும் ஒன்றாகும். மாவட்ட அளவில் இத்திட்டத்தில் பங்குபெற்று பணியாற்றும் பல்வேறு நிலையினருக்கு திட்டத்தின்கீழ் நோய் பரிசோதனை, நோய் உறுதிப்படுத்துதல், நோய்க்கான சிகிச்சை மற்றும் பிற துறையினரோடு ஒருங்கிணைந்து செயல்படுவதற்கான பயிற்சி அளிக்கப்படுகிறது.*

2022–2023 ஆம் ஆண்டில் 8,06,111 தாய்மார்கள் பரிசோதிக்கப்பட்டனர் அதில் 1,147 தாய்மார்களுக்கு ஹெபடைடிஸ்-பி இருப்பது கண்டறியப்பட்டது மற்றும் அவர்களுக்கு CEmONC *மையத்தில் சிகிச்சை வழங்கப்பட்டது. 721 ஹெபடைடிஸ்-பி நோயினருக்கும் 906 ஹெபடைடிஸ்-சி நோயினருக்கும், 1,17,624 பயனாளிகளுக்கு ஹெபடைடிஸ்-பி தடுப்பூசி 2022-2023 ஆம் ஆண்டில் அளிக்கப்பட்டுள்ளது.*

அத்தியாயம்–26

தொற்றா நோய்த் தடுப்பு, கட்டுப்படுத்துதல் மற்றும் சிகிச்சை

26.1 தொற்றா நோய்களுக்கான சிகிச்சை திட்டம்: *சமூகத்தில் வேகமாக வளர்ந்து வரும் தொற்றா நோய்களானது, நோய் விகிதம் மற்றும் இறப்பு விகிதங்களில் பெரும்பான்மை வகிக்கின்றது. தொற்றா நோய்கள் நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களில் தற்போதுள்ள வாழ்க்கை முறை மாற்றங்களினாலும், அதனோடு தொடர்புடைய நோய் காரணிகளாலும் மிகப் பெரிய சவாலாகத் திகழ்கிறது. தொற்றா நோய் கண்டறியும் திட்டமானது முன்னோடித் திட்டமாகத் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும்*

செயல்படுத்தப்பட்டு வருகிறது. தேசிய புற்றுநோய், நீரிழிவு, இருதய நாள நோய்கள், பக்கவாத நோய்கள் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுத் திட்டம் (NPCDCS), தேசிய நலவாழ்வுக் குழுமத்தின்கீழ் (NHM) செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் மாநிலத்தில் அனைத்து மாவட்டங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள்/ நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள்/அரசு மருத்துவமனைகள்/அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் உட்பட 2,610 மருத்துவ மையங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 30 வயது மற்றும் அதற்கு மேல் வயதுடைய மக்களுக்கு இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், கருப்பை வாய் புற்றுநோய் மற்றும் மார்பகப் புற்றுநோய்க்கான நோய் கண்டறியும் ஆய்வுகள், சிகிச்சை மற்றும் தொடர் கண்காணிப்பு ஆகிய சேவைகள் அளிக்கப்படுகின்றன. மேலும், அரசு மருத்துவ மையங்களுக்கு வரும் 18 முதல் 29 வயதிற்குட்பட்டோருக்கு தொற்றா நோயின் ஆபத்து குறித்து ஆய்வு செய்யப்படுகிறது. இந்தத் திட்டமானது, அரசு மருத்துவ மைய அளவில் தொற்றா நோய் கண்டறிவது மற்றும் சமூகம் சார்ந்த தொற்றா நோய் கண்டறிவது என இரு வகையில் அமல்படுத்தப்படுகிறது. அனைவருக்கும் நலவாழ்வுத் திட்டத்தின்கீழ் தொற்றா நோய் கண்டறியும் சேவையை வலுப்படுத்துதல் மற்றும் நோயாளிகள் ஆதரவு குழு அமைப்பது ஆகிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், வாழ்க்கை முறை மாற்றம் குறித்த ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன.

26.2 அரசு மருத்துவ மைய அளவில் தொற்றா நோய்கள் கண்டறிதல்: இத்திட்டத்தின்படி ஏப்ரல் 2021 முதல் மார்ச் 2023 வரை மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு மருத்துவ நிலையங்களிலும் தொற்றா நோய் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:-

26.2.1 இருதய நோய்த் தடுப்பு மற்றும் சிகிச்சைத் திட்டம்: இத்திட்டத்தின்கீழ், 2,21,58,482 தனி நபர்களுக்கு பரிசோதனை செய்யப்பட்டதில், 7,31,609 நபர்களுக்கு உயர் இரத்த அழுத்தம் இருப்பது கண்டறியப்பட்டது. உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்குச் சிகிச்சையளிக்கப்பட்டு பின் தொடரப்படுகிறது.

26.2.2 நீரிழிவு நோய்த் தடுப்பு மற்றும் சிகிச்சைத் திட்டம்: இத்திட்டத்தின்கீழ் 1,65,26,017 நபர்களுக்கு நீரிழிவு நோய்க்கான பரிசோதனை செய்யப்பட்டதில், 5,02,017 நபர்களுக்கு

2023 ஏப்ரல் 18]

நீரிழிவு நோய் இருப்பது கண்டறியப்பட்டது. நீரிழிவு நோய் கண்டறியப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டு பின்தொடரப்படுகிறது.

26.2.3 கருப்பைவாய் புற்றுநோய்த் தடுப்பு மற்றும் சிகிச்சைத் திட்டம்: *31,62,017 பெண்களுக்குக் கருப்பைவாய் புற்றுநோய் பரிசோதனை செய்யப்பட்டதில் 59,705 பெண்களுக்குக் கருப்பைவாய் புற்றுநோய் அபாயம் இருப்பது கண்டறியப்பட்டது. பரிசோதனையில் கண்டறியப்பட்ட பெண்களுக்கு கோல்போஸ்கோபி பரிசோதனை செய்யப்பட்டு, இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.*

26.2.4 மார்பகப் புற்றுநோய்த் தடுப்பு மற்றும் சிகிச்சைத் திட்டம்: *மார்பக புற்றுநோய்க்கான பரிசோதனைகள்* (clinical Breast examination) *அனைத்து தொற்றா நோய்களுக்கான சிகிச்சை மருத்துவமனைகளில்* (NCD Clinic) *செய்யப்படுகின்றன. மேலும், 47,95,899 பெண்களுக்கு மார்பகப் புற்றுநோய்க்கான பரிசோதனைகள் செய்யப்பட்டதில், 38,951 பெண்களுக்கு மார்பக புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டது. அவர்கள் நோய்க்குரிய மேல் சிகிச்சைக்காக மருத்துவமனைகளுக்குப் பரிந்துரைக்கப்படுகிறார்கள்.*

26.3 மாநில மற்றும் மாவட்ட அளவில் புற்றுநோய் மையங்களை வலுப்படுத்துதல்: *காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள காரப்பேட்டையில் அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் நிலையம், புற்றுநோய் சிகிச்சை, பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக்கான அதிநவீன மையமாக, 750 படுக்கை வசதிகளுடன் ரூ.220 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது. கண்காணிப்பு முதல் நோய்த் தடுப்பு பராமரிப்பு வரை புற்றுநோய் கட்டுப்பாட்டின் அனைத்து கூறுகளும் ஒரே குடையின்கீழ் வழங்கப்படும். தற்போது தமிழ்நாடு அரசின்கீழ் புற்றுநோய்க்கான பிரத்தியேக சிகிச்சை அளிக்கும் ஒரே மருத்துவமனை காரப்பேட்டை அரசு அறிஞர் அண்ணா நினைவு மருத்துவமனை ஆகும். எனவே, ஏழை புற்றுநோயாளிகளுக்கு அதிநவீன புற்றுநோய் சிகிச்சை அளிக்கும் வகையில் இம்மருத்துவமனை அனைத்து வசதிகளுடன் ஐந்து அடுக்குக் கட்டமைப்புகளாகத் தரம் உயர்த்தப்பட்டு வருகிறது. அனைத்து முக்கிய புற்றுநோயியல் துறைகளையும் உள்ளடக்கிய உறுப்பு அடிப்படையிலான வெளிநோயாளர் பிரிவு சேவைகள், கதிர்வீச்சு சிகிச்சை மற்றும் கதிரியக்கச் சேவைகள், நவீன அறுவைச்*

[2023 ஏப்ரல் 18

சிகிச்சைகள், ஸ்டீரியோடாக்டிக் நரம்பியல் அறுவைச் சிகிச்சை மற்றும் ரோபோடிக் அறுவைச் சிகிச்சைக்கு பயனுள்ள வகையில் வடிவமைக்கப்பட்ட நரம்பியல் மற்றும் எலும்பு புற்றுநோயியல் சேவைகள், பிரத்தியேக எலும்பு மஜ்ஜை மாற்றுப் பிரிவு, குழந்தை புற்றுநோயியல் பிரிவுகள் மற்றும் மேம்பட்ட புற்றுநோய் தொடர்பான மரபணு ஆராய்ச்சிக்குரிய வசதி ஆகியவை முக்கிய அம்சங்களாகும்.

26.4 மாவட்ட அளவில் புற்றுநோய்க்கான கீமோதெரபி சிகிச்சை மையங்கள்: பொள்ளாச்சி, கடலூர், பெண்ணாகரம், ஈரோடு, காஞ்சிபுரம், பத்மநாபபுரம், உசிலம்பட்டி, பெரம்பலூர், மேட்டூர் அணை, காரைக்குடி, கும்பகோணம், பெரியகுளம், கோவில்பட்டி, மணப்பாறை, தென்காசி, மன்னார்குடி மற்றும் வாலாஜா ஆகிய 17 மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் மற்றும் அரியலூர், நாமக்கல், இராமநாதபுரம், நாகப்பட்டினம், திருவள்ளூர், திண்டுக்கல், விருதுநகர், நீலகிரி, கள்ளக்குறிச்சி, திருப்பூர், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, கரூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய 14 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் பகல் நேர சிகிச்சை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. மருத்துவமனையின் புற்றுநோய் மருத்துவ வல்லுநர் (Tumor Board) வாரியம் நோயாளிகளுக்கான உயர்தர சிகிச்சை முடிவை எடுக்கும். மேலும் ஆரம்ப கீமோதெரபி சுழற்சியும் அங்கு வழங்கப்படும். இதன் பிறகு, மாவட்ட மருத்துவமனையில், பின் தொடர்தல் அல்லது பராமரிப்பு கீமோதெரபியின் கூடுதல் சுழற்சிகள், தினப் பராமரிப்பு ஆகியவை கீமோதெரபி பயிற்சியைப் பெற்ற மருத்துவர் மற்றும் செவிலியரின் மேற்பார்வையின்கீழ் அளிக்கப்படும். புற்று நோயாளிகள் குறிப்பிட்ட இடைவெளியில் தொடர் கீமோதெரபி சிகிச்சைக்காக நோய் கண்டறிந்து சிகிச்சை தொடங்கப்பட்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை மீண்டும் மீண்டும் அணுக சிரமப்படுகின்றனர். இவ்வாறு சிகிச்சையை மக்கள் தொடர்ந்து தவறாமல் பெற்றிட இத்திட்டம் வழிவகுக்கின்றது.

26.5 தேசிய அளவிலான நோய் ஆதரவு சிகிச்சைத் திட்டம் (NPPC): நோய் ஆதரவு சிகிச்சையின் முதன்மையான நோக்கம் உயிரை பாதிக்கக்கூடிய மற்றும் வாழ்நாளை குறைக்கக்கூடிய

2023 ஏப்ரல் 18]

நோய்களினால், பாதிக்கப்பட்ட சிறியவர் மற்றும் பெரியவர்களின் பாதிப்பைக் குறைத்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதே ஆகும். நோயாளிகளின் குடும்பத்தினரை இச்சிகிச்சை முறையில் பங்கேற்க செய்வதும் இதில் உள்ளடங்கும். தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் சுமார் 7% பேருக்கு நோய்த் தடுப்பு சிகிச்சை தேவைப்படுகிறது. 2016-2023 வரை, 34 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், 15 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் மற்றும் 385 வட்டார சுகாதார நிலையங்கள் ஆகியவற்றில் தேசிய அளவிலான நோய் ஆதரவு சிகிச்சைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்த திட்டத்தின் பயனாளிகளில் புற்றுநோய், இதய செயலிழப்பு, நாள்பட்ட நுரையீரல் தடுப்பு நோய் (COPD), *நாள்பட்ட சிறுநீரக நோய், மன நலக் குறைபாடு, பக்கவாதம், பிறவி மன மற்றும் உடல் குறைபாடுகள், அல்சைமர், பார்கின்சன், வயதானவர்களுக்கு நாள்பட்ட பலவீனம் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் ஆகியோர் அடங்குவர். நோய்த் தடுப்பு சிகிச்சை தேவைப்படும் பிரிவுகள் புற்றுநோய், பெறப்பட்ட நோய்த் தடுப்பாற்றல் குறைபாடுகளின் நோய்க்கூட்டறிகுறி* (HIV/AIDS) *மற்றும் பிறவி குறைபாடுகள் போன்றவை. மேலும் வட்டார மற்றும் சமூக அளவிலான நோய் ஆதரவு சேவை செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் சமூக சுகாதார மாவட்ட செவிலியர்களுக்கு, படுத்த படுக்கையாக இருக்கும் நோய்வாய்ப்பட்டவர்களுக்கு நோய் ஆதரவு சிகிச்சை மற்றும் சேவைகளை வழங்க பயிற்சியளிக்கப்படுகிறது. இந்த செவிலியர்கள் நோயாளிகளின் இறுதி நாட்களில் அவர்கள் வேதனை இல்லாது அமைதியாக உணர உதவுவதற்காக, வீட்டிலேயே அவர்களைச் சந்திக்கின்றனர். தற்போது அனைத்து மாவட்டங்களிலும் உள்ள அனைத்து 385 தொகுதிகளிலும்* (Block) *சமூக அடிப்படையிலான நோய் ஆதரவு சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது மற்றும் 385 செவிலியர்களுக்கு நோய் ஆதரவு சிகிச்சைக்கான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. தற்போது இத்திட்டம் அனைத்து மாவட்டங்களில் உள்ள வட்டார சுகாதார நிலையங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் துவக்கம் ஏப்ரல் 2021 முதல் மார்ச் 2023 வரை 6,38,910 பயனாளிகள் சமூக நோய் ஆதரவு சிகிச்சைமூலம் பயன் பெற்றுள்ளனர்.*

[*2023 ஏப்ரல் 18*

அத்தியாயம்-27

தேசிய முதியோர் சுகாதாரத் திட்டம்

27.1 *தமிழ்நாட்டில் 60 வயதும் அதற்கு மேற்பட்ட வயதினரின் எண்ணிக்கை சமூகத்தில் கூடிக் கொண்டு இருக்கும் நிலையைக் காண்கிறோம். இதற்கு ஆயுள் அதிகரிப்பு மற்றும் பிறப்பு விகிதம் குறைதல் ஆகியவை மிக முக்கியக் காரணமாகும். 2011 மக்கள் தொகை அடிப்படையில் தமிழ்நாட்டில் 13.6% சதவிகிதத்தினர் முதியோராக உள்ளனர். இது தேசிய சராசரி அளவிலான 8.6 சதவிகிதத்தைவிட கூடுதலாக உள்ளது. முதியோர் நலன் கருதி அவர்களுக்கான பிரத்தியேகமான சேவைகளை நல்கும் வகையில் தேசிய முதியோருக்கான சுகாதாரத் திட்டம் தேசிய நலவாழ்வு குழுமத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

27.2 தேசிய முதியோர் சுகாதாரத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் சேவைகள்:

(i) தேசிய மூப்பியல் மையம், சென்னை: *இம்மையம் சென்னை கிண்டியில் உள்ள கிங் நோய்த் தடுப்பு மருத்துவ மைய வளாகத்தில் ஒன்றிய அரசு மற்றும் தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் நிறுவப்பட்டது. 200 படுக்கை வசதிகள் கொண்ட இந்த மையம் முதியோர்களுக்கான சேவையை வழங்கி வருவது தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. சென்னை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் உள்ள முதியோர் மருத்துவத் துறையானது, பிராந்திய முதியோர் மையமாகச் செயல்பட்டு, மூன்றாம் நிலை பராமரிப்பு, சுகாதார வல்லுநர்களுக்கான பயிற்சி மற்றும் ஆராய்ச்சியை வழங்கி வருகிறது.*

(ii) மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் மாவட்ட மருத்துவமனைகளில் முதியோருக்கான சிகிச்சை: *தேசிய முதியோர் சுகாதாரத் திட்டமானது கடலூர், ஈரோடு, பெரம்பலூர் ஆகிய மூன்று மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும் கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர், விழுப்புரம், வேலூர், தருமபுரி, காஞ்சிபுரம் (செங்கல்பட்டு), கன்னியாகுமரி, கரூர், புதுக்கோட்டை, சிவகங்கை, தேனி, திருவாரூர், தூத்துக்குடி,*

திருவண்ணாமலை, அரியலூர், திண்டுக்கல், கிருஷ்ணகிரி, நாமக்கல், நாகப்பட்டினம், இராமநாதபுரம், திருவள்ளூர், திருப்பூர், விருதுநகர் மற்றும் நீலகிரி உள்ளிட்ட 28 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் செயல்படுத்தப்பட்டு முதியோருக்கான சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

(iii) தேசிய முதியோர் சுகாதாரத் திட்டத்தின்கீழ் மாவட்ட அளவிலான மருத்துவமனைகளில் வழங்கப்படும் முதியோருக்கான சேவைகள் பின்வருமாறு :

1. முதியோருக்கான புறநோயாளிகள் பிரிவு சேவைகள் வாரம் முழுவதும் வழங்குதல்.
2. புறநோயாளிகள் பிரிவு, மருந்தகம், ஆய்வக பரிசோதனை மற்றும் கதிரியக்க சோதனையில் முதியோர்களுக்கான தனிவரிசை.
3. 20 படுக்கைகள் கொண்ட சறுக்கல் இல்லாத தரை, கைப்பிடி மற்றும் நவீன மேற்கத்திய கழிப்பறைகள் ஆகிய வசதிகளுடன் முதியோருக்கான உள் நோயாளிகள் சிகிச்சைப் பிரிவு.
4. முதியோர்களுக்கான இயன் முறை மருத்துவ சிகிச்சை (பிசியோதெரபி) பிரிவு.
5. முதியோர்களுக்காக ஒரு செயற்கை சுவாசக் கருவியுடன் கூடிய நான்கு தீவிர சிகிச்சை படுக்கைகள் (ICU cots).

(iv) செயல்பாடுகள்: 2022-2023 வரை முதியோருக்கான சிகிச்சை பிரிவில் பயன்பெற்ற முதியோர்களின் எண்ணிக்கை மற்றும் விவரங்கள் பின்வருமாறு:

1.	புறநோயாளிகள் பிரிவில் பயன்பெற்ற முதியோர்களின் எண்ணிக்கை	6,07,336
2.	மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்ட முதியோர்களின் எண்ணிக்கை	33,514
3.	புனர்வாழ்வு சேவை பெற்ற முதியோர்களின் எண்ணிக்கை	1,56,584
4.	ஆய்வக பரிசோதனை மேற்கொண்ட முதியோர்களின் எண்ணிக்கை	15,23,364

[*2023 ஏப்ரல் 18*

(v) வட்டார அளவில் வழங்கப்படும் சேவைகள்: *தமிழ்நாட்டில் உள்ள 385 வட்டார அளவிலான சுகாதார நிலையங்களில் ஒரு வட்டார சுகாதார நிலையத்திற்கு ஓர் இயன்முறை மருத்துவ நிபுணர் என்கிற விகிதத்தில் 385 பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இயன்முறை மருத்துவ நிபுணர்கள் வட்டார மற்றும் சமூக அளவில் முதியோர்களுக்கான நலவாழ்வு சேவைகளை வழங்குகின்றனர். மேலும் 385 வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிரதி வாரம் வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில் முதியோர் புறநோயாளி பிரிவு சேவைகள் தொடங்கப்பட்டுள்ளன. இப்பொழுது இந்த முதியோர் புறநோயாளி பிரிவானது நீண்ட கால பராமரிப்பு புறநோயாளி பிரிவு என்று பெயர் மாற்றப்பட்டுள்ளது. இந்த பிரிவில் முதியோர் நலச்சிகிச்சை, நோய் ஆதரவு சிகிச்சை, மன நலச் சிகிச்சை, கண் சிகிச்சை மற்றும் காது, மூக்கு, தொண்டைச் சிகிச்சை ஆகியவற்றிற்கு ஒருங்கிணைந்த சிகிச்சை அளிக்கப்படுகிறது.*

அத்தியாயம்-28

பிற திட்டங்கள்

28.1 தேசிய காது கேளாமை தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுத் திட்டம்: *காது கேளாமை காரணியை ஆரம்ப நிலையிலேயே அறிந்து அதற்கு உரிய சிகிச்சை அளிப்பதே காது கேளாமை தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் முதன்மை நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் செவித்திறன் குறைபாட்டை ஆரம்பத்திலேயே கண்டறிவதற்கும் சிகிச்சை அளிப்பதற்கும் தேவையான ஒலியியல் ஆய்வகங்கள் மற்றும் அறுவைச் சிகிச்சைக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. பச்சிளம் குழந்தைகளுக்குச் செவித்திறன் பரிசோதனை செய்வதற்கு ஏதுவாக, அதிக பிரசவங்கள் ஏற்படும் 25 அரசு மருத்துவமனைகளில்* OAE / BERA *உபகரணங்களுடன்கூடிய ஒலிபுகா அறைகள் நிறுவப்படவுள்ளன. மேலும், சமூகத்தில் காது கேளாமையை எளிய பரிசோதனைகள்மூலம் கண்டறியும் பயிற்சியும் கள நிலை பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 89,417 செவித்திறன் பரிசோதனைகள், 5,725 காது அறுவைச் சிகிச்சைகள் மற்றும்*

2023 ஏப்ரல் 18]

14,603 காது கேட்கும் கருவிகள் இத்திட்டத்தின்கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளன.

28.2 தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டம்: *தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டம் ஒன்றிய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டமாகும். தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தின் செயல்பாடு வழிமுறைகள் மற்றும் திட்டங்கள், ஒன்றிய அரசால் உருவாக்கப்பட்டு, 1955 ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. உலக சுகாதார நிறுவனம், தொழுநோய் ஒழிப்பு சங்கங்களின் உலக நாடுகள் அமைப்பு மற்றும் சில தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், இத்திட்டத்தைச் செயல்படுத்த உறுதுணையாக உள்ளன.*

தொழுநோயை பற்றி:

- *தொழுநோய் மைக்கோ பாக்டீரியம் லெப்ரே என்ற பாக்டீரியாவின்மூலம் உருவாகும் ஒரு கடுமையான நோய் ஆகும். இந்நோய் தோல் மற்றும் நரம்புகளைப் பாதிக்கிறது.*
- *நீண்ட கால அடைவுத்தன்மை பொதுவாக 2 முதல் 5 வருட கால வெளிப்படும் காலம் மற்றும் பாக்டீரியாவின் அளவைப் பொறுத்து தொழுநோய் கிருமி குறைந்த வகை* (Paucibacillary Leprosy) *மற்றும் கிருமி மிகுந்த வகை* (Multibacillary Leprosy) *என இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகிறது.*
- *நிரந்தர உடல் ஊனம் ஏற்பட தொழுநோய் ஒரு காரணமாக அமைகிறது.*
- *ஆரம்ப நிலையில் நரம்புகள் பாதிப்புக்குள்ளாவதற்கு முன்னரே இந்த நோயைக் கண்டுபிடித்து சிகிச்சை மேற்கொண்டால், உடல் ஊனம் ஏற்படுவதைத் தவிர்க்கலாம்.*

அ. திட்டத்தின் நோக்கம்:

- *சமுதாயத்தில் தொழுநோய் பரவுதலைத் தடுத்தல் மற்றும் புதிய தொழுநோயால் பாதித்தோர் எவருமில்லை என்ற நிலையை அடைதல்.*

- உடல் ஊனத்தினால் (நிலை-2) புதிதாகப் பாதித்தோர் எண்ணிக்கை பத்து இலட்சம் மக்கள் தொகைக்கு ஒன்றுக்குக்கீழ் என்ற நிலையை அடைதல்.
- குழந்தைகளுக்கு ஏற்படும் உடல் ஊனம் பூஜ்யம் என்ற நிலையை அடைதல்.
- சமுதாயத்தில் தொழுநோயால் பாதிக்கப்பட்ட எவரையும் புறக்கணிக்காத நிலை உருவாக்குதல்.

தொழுநோய் சிகிச்சை: தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டம் 1983 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. முதலில் டாப்சோன் மருந்து வழங்கப்பட்டது. ரிபாம்சின், குளோபாசமின், டாப்சோன் ஆகிய மூன்று மருந்துகள் அடங்கிய கூட்டு மருந்து சிகிச்சை 1983 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இது உலக சுகாதார நிறுவனத்தால் பரிந்துரைக்கப்பட்டு, குறுகிய காலத்தில் நோயைக் குணப்படுத்தவும், சமுதாயத்தில் நோய் பரவலை தடுக்கவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. 1991 ஆம் ஆண்டு அனைத்து மாவட்டங்களிலும், கூட்டு மருந்து சிகிச்சை விரிவுபடுத்தப்பட்டது. சமுதாயத்தில் தொழுநோயை குறைக்க, கூட்டு மருந்து சிகிச்சை முறை என்ற திட்டமே தற்போதுள்ள ஒரே முறையாகும். தீவிர சுகாதார நலக் கல்வி மற்றும் கூட்டு மருந்து சிகிச்சையின் காரணமாக குணமானவர்களைச் சமுதாயம் ஏற்றுக்கொள்கிறது.

விவரங்கள்	2021-2022	2022-2023
தற்போது சிகிச்சையில் இருப்போர் எண்ணிக்கை	2017	2310
நோய் பாதித்தோர் விகிதம் / 10,000 நபர்களுக்கு	0.24	0.30
தொழுநோய் பாதிப்பு அறியப்பட்ட புதிய நபர்கள் எண்ணிக்கை	2434	3090
தொழுநோய் பாதிப்பு அறியப்பட்ட புதிய நபர்கள் / ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு	2.92	3.98
தொழுநோயிலிருந்து குணமானோர் எண்ணிக்கை	1,846	2,646

2023 ஏப்ரல் 18]

விவரங்கள்	2021-2022	2022-2023
தொழுநோய் பாதிப்பு அறியப்பட்ட புதிய நபர்களில் சிறுவர் எண்ணிக்கை	228	364
சிறுவர்கள் விகிதம்	9.37	11.78
தொழுநோய் பாதிப்பு அறியப்பட்ட புதிய நபர்களில் மகளிர் எண்ணிக்கை	1,020	1,206
மகளிர் விகிதம்	41.32	39.03
தொழுநோய் பாதிப்பு அறியப்பட்ட புதிய நபர்களில் உடல் ஊனம் (நிலை-2) எண்ணிக்கை	97	105
உடல் ஊனம் (நிலை-2) பாதித்தோர் விகிதம் / ஒரு மில்லியன் மக்கள் தொகைக்கு	1.16	1.35
ஊனம் (நிலை-2) பாதித்தோர் விகிதம்	3.99	3.40

ஆ. புதிய முயற்சிகள்:

1. **தொழுநோய் கண்டுபிடிப்பு முகாம் (LCDC):** *35 மாவட்டங்களில் சிறப்பு தொழுநோய் கண்டுபிடிப்பு முகாம் நடத்தப்பட்டதில், 388 புதிய நோயாளிகள் கண்டறியப்பட்டனர். பத்து புதிய உடல் ஊனம் நிலை-2 உள்ளவர்கள் இந்த முகாமில் கண்டறியப்பட்டனர்.*

2. **ஸ்பர்ஷ் தொழுநோய் விழிப்புணர்வு முகாம் (SLAC):** *மகாத்மா காந்தியின் நினைவு தினத்தை அனுசரிக்கும் பொருட்டு 2017 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் ஜனவரி 30ஆம் தேதி நாடு முழுவதும் தொழுநோய் ஒழிப்பு தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. 2023 ஆம் ஆண்டு ஜனவரி 30 முதல் பிப்ரவரி 13 வரை நடைபெற்ற இரு வார நடவடிக்கைகளில் தொழுநோயால் பாதிக்கப்பட்ட 214 புதிய நோயாளிகள் கண்டறியப்பட்டு, அவர்களுக்கு கூட்டு மருந்து சிகிச்சை அளிக்கப்பட்டது.*

3. *2022-2023 ஆம் ஆண்டில் தொழுநோய் பாதித்தோர் தொடர்பில் இருந்த 29,030 நபர்களுக்கு தொழுநோய் வராமல் தடுப்பதற்காக ஒரு தவணை ரிபாம்சின் மருந்து வழங்கப்பட்டது* (Post Exposure Prophylaxis).

[2023 ஏப்ரல் 18

4. தொழுநோய் பாதித்தோர் வசிக்கும் பகுதிகளில் நடைபெறும் களப் பணி: (Contact Survey):

வருடம்	பரிசோதிக்கப்பட்ட நபர்கள்	புதியதாக பாதித்தோர் எண்ணிக்கை
2021–2022	9,52,864	86
2022–2023	12,67,770	110

5. தொழுநோய் பாதித்தோருக்கான ஊனம் தடுப்பு மற்றும் மருத்துவ மறுவாழ்வு:

விவரங்கள்	2021-2022	2022-2023
புனரமைப்பு அறுவைச் சிகிச்சைகள்	90	93
சுய பராமரிப்பு பெட்டகம் வழங்கப்பட்ட எண்ணிக்கை	20,664	17,782
MCR காலணிகள் வழங்கப்பட்ட எண்ணிக்கை	10,627	11,315
எதிர்செயல் மற்றும் நரம்பு அழற்சி நோய்களுக்குச் சிகிச்சை	365	520
மாற்றுத் திறனாளிகள் நலத் துறைமூலம் மாதாந்திர ஊனப் பராமரிப்பு தொகை ரூ.2000/– பெறும் நபர்கள் எண்ணிக்கை	9,439	9,764
சமூக நலத் திட்டத்தின்கீழ் மாதாந்திர உதவித் தொகை ரூ.1,000/– பெறும் நபர்கள் எண்ணிக்கை	2,285	2,197

இ. 2023-2024 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டங்கள்:

- ஒன்றிய அரசின் வழிகாட்டு நெறிமுறைகள்மூலம் தொழுநோய் கண்டுபிடிப்பு முகாம் (LCDC) மாவட்டங்களில் மேற்கொள்ளுதல்.

2023 ஏப்ரல் 18]

- *11 மாவட்டங்களில் எளிதில் சென்றடைய முடியாத 43 இடங்களுக்குச் சென்று தொழுநோய் கண்டுபிடிப்பு களப்பணி முகாம் மேற்கொள்ளுதல்.*
- *மருத்துவ அலுவலர் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் அனைவருக்கும் தொழுநோய் பயிற்சி அளித்தல்.*
- *தொழுநோயினால் ஏற்படும் ஊனத்தினைப் புனரமைப்பு அறுவைச் சிகிச்சைமூலம் சரி செய்தல்.*
- *தகவல், கல்வி மற்றும் தொடர்பு* (IEC)*மூலம் தொழுநோய் விழிப்புணர்வை உருவாக்குதல் மற்றும் மக்களை தாமாகவே சிகிச்சைக்கு வரவழைத்தல்.*
- *தொழுநோயால் பாதித்தவரின் குடும்ப நபர்கள் மற்றும் அருகில் வசிப்போர்க்கு நோய் வராமல் தடுக்கும் விதமாக ரிபாம்சின் மருந்து ஒரு முறை மட்டும் வழங்கப்படுதல்* [Post Exposure Prophylaxis (PEP)].
- *ஊனம் பாதித்தோர் வசிக்கும் இடங்களில் தொழுநோய் நிலை-2 கண்டுபிடிப்பு பணி மேற்கொள்ளுதல்* (Focused Leprosy Campaign).
- *ஊனம் தடுப்பு மற்றும் மருத்துவ மறுவாழ்வு செயல்பாட்டின்கீழ் ஊனம் பாதித்த நபர்களுக்கு* MCR *காலணிகள் மற்றும் சுய பராமரிப்புப் பெட்டகம் ஊனத்தைத் தடுக்கும் விதமாக வழங்குதல்.*
- *40 சதவிகிதத்திற்கு மேல் நிலை-2 ஊனம் பாதிப்புள்ள நபர்களுக்கு அரசு வழங்கும் ஊனப் பராமரிப்பு மாதாந்திரத் தொகை பெற்றுத்தர உதவி செய்தல்.*

28.3 தேசிய புகையிலை கட்டுப்பாட்டுத் திட்டம்:

i. *தேசிய புகையிலை கட்டுப்பாட்டுத் திட்டம் தமிழ்நாட்டில் துவங்கப்பட்டு, பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்ககத்தின்கீழ் மாநில புகையிலை கட்டுப்பாட்டு மையம் 2007 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் சிகரெட் (ம) இதர புகையிலைப் பொருட்கள் தடுப்புச் சட்டம், 2003 பிரிவுகள் 4, 5, 6 மற்றும் 7-ன்கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு, தடுப்பு*

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தேசிய புகையிலை கட்டுப்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2008 ஆம் ஆண்டு முதல் விழுப்புரம், காஞ்சிபுரம் மாவட்டங்கள் முன்மாதிரி மாவட்டங்களாகவும் 2015-16 ஆம் ஆண்டில் மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மூன்று மாவட்டங்களிலும், 2017-2018 ஆம் ஆண்டில் புதுக்கோட்டை, கடலூர், நாகப்பட்டினம், திருப்பூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் புகையிலை கட்டுப்பாடு மையங்கள் படிப்படியாக நிறுவப்பட்டுள்ளன. மேலும் 2021-2022 ஆம் ஆண்டில், அரியலூர், பெரம்பலூர், சேலம், ஈரோடு, நாமக்கல், தூத்துக்குடி, கன்னியாகுமரி, திருவள்ளூர், வேலூர் மற்றும் தருமபுரி ஆகிய பத்து மாவட்டங்களில் புகையிலை கட்டுப்பாட்டு மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. மாநில மற்றும் மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு, சிகரெட்டுகள் மற்றும் இதர புகையிலைப் பொருட்கள் தயாரிப்புச் சட்டம், 2003-ல் பிரிவு 5-ன்கீழ் விதிமீறல்களைக் கண்காணிக்க நிறுவப்பட்டுள்ளன.

ii. **முக்கியச் செயல்திறன்:** மாநில மற்றும் மாவட்ட புகையிலை கட்டுப்பாட்டுப் பிரிவு திட்டங்களின் குறிப்பிடத்தக்க செயல்பாடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

1. **தீவிர செயலாக்கம்:** மாநிலம், மாவட்டம், வட்டார, கிராம, நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் அமலாக்கக் குழு அமைக்கப்பட்டு, பொது இடங்களைக் கண்காணித்தல் மற்றும் புகையிலைப் பொருட்கள் கட்டுப்பாட்டுச் சட்டங்களை (COTPA, 2003) அமல்படுத்தி சட்டமீறல் செய்த 3,16,278 நபர்களிடமிருந்து ரூ.5,68,06,587/- அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டுள்ளது.

2. **பயிற்சி:** புகையிலைப் பொருட்கள் உபயோகத்தினால் ஏற்படும் தீமைகள் மற்றும் புகையிலைப் பொருட்கள் தடுப்புச் சட்டம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த இதுவரை 1,336 பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, 81,251 பேர் இந்த பயிற்சி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பயன் பெற்றுள்ளனர்.

2023 ஏப்ரல் 18]

3. **பள்ளி செயல்பாடு:** மாநிலம் முழுவதும் பள்ளி மற்றும் கல்லூரிகளில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதன் விளைவாக ஒன்றிய அரசின் புகையிலை கட்டுப்பாட்டுச் சட்டத்தின் விதிமுறைகளைக் கடைபிடிக்கும் 1,344 கல்லூரிகள் மற்றும் 13,080 பள்ளிகள் 'புகையிலையில்லா கல்வி நிறுவனங்கள்' என அறிவிக்கப்பட்டுள்ளன. மேலும், ஒன்றிய அரசின் திருத்தப்பட்ட வழிகாட்டுதலின்படி, மே 2022 முதல் மார்ச் 2023 வரை 691 கல்லூரிகள் மற்றும் 9,098 பள்ளிகள் 'புகையிலையில்லா கல்வி நிறுவனங்கள்' என அறிவிக்கப்பட்டுள்ளன.

4. **புகையிலை பழக்கத்திலிருந்து விடுபடுதல்:** தேசிய புகையிலை கட்டுப்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்ட 20 மாவட்டங்களில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள்/மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் புகையிலை நிறுத்த மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. 684 மருத்துவர்கள், 53 ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மைய ஆலோசகர்கள், 148 தொற்றுநோய் பணியாளர்கள் மற்றும் 78 தன்னார்வலர்களுக்குப் புகையிலை நிறுத்தம், புகையிலை சார்ந்திருத்தல் பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டது.

 1. புகையிலை நிறுத்த மையங்களில் ஆலோசனை பெற்றவர்களின் மொத்த எண்ணிக்கை 45,139

 2. புகையிலை பழக்கத்திலிருந்து விடுபட மருந்தியல் சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை 1,093

 3. புகையிலை பழக்கத்திலிருந்து விடுபட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 297

5. **தகவல், கல்வி மற்றும் தொடர்பு:** புகையிலை பொருட்களின் தீமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், புகையிலை பொருட்கள் உட்கொள்வதை நிறுத்துவதை ஊக்கப்படுத்தவும், புகையிலை எதிர்ப்பு தினக் கொண்டாட்டம், பேரணி, வாகனங்களில் விழிப்புணர்வு, மனித சங்கிலி, கையெழுத்து பிரச்சாரம், புகையிலை பயன்பாட்டிற்கு எதிரான உறுதிமொழி போன்ற பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. துண்டு

[2023 ஏப்ரல் 18

பிரசுரங்கள் விநியோகம் மற்றும் ஊடகங்கள்மூலம் புகையிலை விழிப்புணர்வு வாசகங்கள் மற்றும் செய்திகள் ஒலிப்பரப்பப்பட்டன.

iii. **புகையிலையில்லா பொது இடங்கள்:** தமிழ்நாடு முழுவதும் விழிப்புணர்வுக் கூட்டங்கள் மற்றும் பயிற்சிகள் நடத்தப்பட்டதன் விளைவாகப் பல தரப்பட்ட பொது இடங்கள் புகையிலையில்லா பொது இடங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. ஐந்து புகையிலையில்லா கிராமங்கள், சென்னையில் உள்ள புகையிலையில்லா தூதரகங்கள், புகையிலையில்லா சென்னை காவல் துறை ஆணையரகம் மற்றும் 144 சென்னை மாநகரக் காவல் நிலையங்கள், புகையிலையில்லா சிறைச்சாலைகள், புகையிலையில்லா போக்குவரத்து நிறுவனங்கள் மற்றும் வாகனங்கள், புகையிலையில்லா அஞ்சலகங்கள், புகையிலையில்லா கல்வி நிறுவனங்கள் மருத்துவக் கல்லூரிகள் / பல் மருத்துவக் கல்லூரி / மருத்துவமனைகள் / ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு கட்டடங்கள் புகையிலையில்லா உணவு விடுதிகள் / வணிக வளாகங்கள், புகையிலையில்லா தொழிற்சாலைகள், புகையிலையில்லா குடிசைப் பகுதிகள், புகையிலையில்லா திரையரங்குகள்.

iv. **மின்னணு சிகரெட் தடை செய்தல்:** தமிழ்நாட்டில் மின்னணு சிகரெட் தடை செய்யப்பட்டது புகையிலை கட்டுப்பாட்டுத் திட்டத்தில் முக்கிய அம்சமாகும். அரசின் ஆணைப்படி மின்னணு-நிக்கோட்டின் வழங்கும் முறைகளான சிகரெட் தயாரிப்பு, விற்பனை (ஆன்லைன் வர்த்தகம் உட்பட), விநியோகம், வர்த்தகம், காட்சிப்படுத்துதல், சந்தைப்படுத்துதல், பயன்பாடு, இறக்குமதி, விளம்பரம் ஆகிய அனைத்திற்கும் விதிக்கப்பட்ட தடையானது தீவிரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

28.4 தேசிய அயோடின் பற்றாக்குறை குறைபாடுகள் தடுப்புத் திட்டம் (NIDDCP):

அயோடின் என்பது அத்தியாவசியமான ஒரு நுண்ணூட்டச்சத்து ஆகும். ஒரு நாளைக்கு 100 முதல் 150

2023 ஏப்ரல் 18]

மைக்ரோ கிராம் வரையிலான அயோடின் மனிதனின் உடல் வளர்ச்சி மற்றும் மன வளர்ச்சிக்குத் தேவை. அயோடின், தைராய்டு ஹார்மோன் தைராக்ஸின் (T4), டிரைஅயோடோதைரோனின் (T3) உருவாதலில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

நோக்கங்கள்:

- *மாவட்டங்களில் அயோடின் பற்றாக்குறை குறைபாடுகளை மதிப்பீடு செய்தல்*
- *சாதாரண உப்பிற்கு மாற்றாக அயோடின் உப்பினை விநியோகித்தல்*
- *அயோடின் பற்றாக்குறைக் குறைபாடுகள் மற்றும் அயோடின் உப்பின் தாக்கத்தை மதிப்பீடு செய்ய ஒவ்வோர் 5 வருடங்களுக்கும் மறு கணக்கெடுப்பு செய்தல்*
- *அயோடின் உப்பு மற்றும் சிறுநீரில் வெளியேறும் அயோடின் அளவினை ஆய்வகப் பரிசோதனையின்மூலம் கண்காணித்தல்*
- *சுகாதாரக் கல்வி மற்றும் விளம்பரம்*

தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் செயல்பாடுகள்: *பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருத்துவ இயக்குநரகத்தில், 2017 ஆம் ஆண்டில், மாநில அயோடின் பரிசோதனை ஆய்வகம் நிறுவப்பட்டது. உப்பில் உள்ள அயோடின் அளவை மாநில பரிசோதனை ஆய்வகத்தில் வழக்கமாக அனைத்து மாவட்டங்களிலிருந்து பெறப்படும் மாதிரி உப்பு, துல்லியமாகப் பரிசோதனை செய்யப்படுகிறது. சிறுநீரில் வெளியேறும் அயோடின் அளவினை ஆய்வகப் பரிசோதனையின்மூலம் கண்காணித்தல், அயோடின் பற்றாக்குறைக் குறைபாட்டின் தாக்கத்தை மதிப்பீடு செய்ய ஒவ்வோர் 5 வருடங்களுக்கும் மறு கணக்கெடுப்பு செய்தல், மாநில அளவிலான ஒருங்கிணைப்பு மற்றும் தொழில்நுட்பக் குழு மருத்துவம்-மக்கள் நல்வாழ்வுத் துறை செயலாளர் தலைமையிலும் மற்றும் மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்பு மற்றும் தொழில்நுட்ப அளவிலான குழு மாவட்ட ஆட்சியர் தலைமையிலும் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்களின் கூட்டம் வருடத்திற்கு இரண்டு முறை நடைபெறும்.*

தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் சாதனைகள்: ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 21 உலக அயோடின் பற்றாக்குறைக் குறைபாடுகள் தடுப்பு தினத்தினை அனுசரிக்கும் வகையில் வானொலி மற்றும் பத்திரிக்கை விளம்பரம் வாயிலாக அயோடின் உப்பின் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. அயோடின் பற்றாக்குறை குறைபாடுகள் இல்லாத தமிழ்நாட்டினை உருவாக்கும் நோக்கில், ஆஷா பணியாளர்கள் வாயிலாக வீடுகள்தோறும் அயோடின் உப்பின் பயன்பாடு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வருவதோடு, சோதனை கரைசல் கொண்டு வீடுகளில் பயன்படுத்தும் உப்பில் உள்ள அயோடின் அளவு பரிசோதிக்கப்படுகிறது. பள்ளிகளில் உள்ள சமையல் கூடங்கள் மற்றும் அங்கன்வாடி (ICDS) மையங்களிலும் உப்பில் அயோடின் இருப்பதை பரிசோதித்து, உறுதி செய்து, கண்காணிக்கப்படுகிறது.

2022-2023 ஆம் ஆண்டிற்கான உப்பு மாதிரி பகுப்பாய்வு: சுகாதார ஆய்வாளர்களால் கடைகள் மற்றும் வீடுகளில் உப்பு மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, மாநில அயோடின் பரிசோதனை ஆய்வகத்திற்குப் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது. இதன்மூலம் அயோடின் உப்பு விற்பனை மற்றும் பயன்பாடு கண்காணிக்கப்படுகிறது. உணவுப் பாதுகாப்புத் துறையின் வாயிலாக தமிழ்நாடு முழுவதிலும் உள்ள உப்பு உற்பத்தியாளர் / உப்பு விநியோகிப்பாளர் / சில்லறை விற்பனையாளர்களிடமிருந்து உப்பு மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, ஆய்வகப் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

உப்பு மாதிரி பகுப்பாய்வு

உப்பு மாதிரி பகுப்பாய்வு	மொத்த உப்பு மாதிரிகள்	>15PPM		<15PPM		0 PPM	
		உப்பு மாதிரிகளின் எண்ணிக்கை	%	உப்பு மாதிரிகளின் எண்ணிக்கை	%	உப்பு மாதிரிகளின் எண்ணிக்கை	%
2022–2023	7298	6206	85	1040	14	52	1

2023 ஏப்ரல் 18]

அத்தியாயம்–29

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

29.1 *தமிழ்நாடு அரசு, உயிர்காக்கும் சிகிச்சைக்கான முதலமைச்சர் கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தை ஏழை மற்றும் குறைந்த வருவாய் பெறும் குடும்பங்கள் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் கட்டணமில்லாமல் உயர் மருத்துவச் சிகிச்சை பெறவேண்டும் என்ற உயரிய நோக்குடன் 23.7.2009 அன்று தொடங்கியது. புரட்சிகரமான இத்திட்டத்தின் துவக்கத்தில் ஒவ்வொரு பயனாளி குடும்பத்திற்கும் ஒரு இலட்சம் ரூபாய் வரை இலவசமாகச் சிகிச்சை பெற காப்பீடு செய்யப்பட்டு, 1.34 கோடி பயனாளி குடும்பங்களுக்கான முழு பிரீமியம் தொகையையும் அரசே செலுத்தியது. இத்திட்டம் 11.1.2012 முதல் தொடரப்பட்டு இன்று வரை 1.40 கோடி குடும்பங்கள் பயனடையும் வகையில் குடும்பத்திற்கு, ஆண்டு ஒன்றுக்கு காப்பீட்டுச் சந்தா தொகையாக ரூ.849/– தமிழ்நாடு அரசால் செலுத்தப்பட்டுள்ளது. இதற்கென 2022-2023 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.1505.86 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தில் மேலும் அதிக பயனாளிகள் பயன்பெறும் வகையில் ஆண்டு குடும்ப வருமானம் ரூ.1,20,000/– ஆக 16.12.2021 முதல் உயர்த்தப்பட்டது.*

29.2 *ஒன்றிய அரசின் பிரதான் மந்திரி மக்கள் ஆரோக்யத் திட்டம், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்துடன் 23.9.2018 முதல் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் 86.70 இலட்சம் குடும்பங்களுக்கு ஒன்றிய அரசின் பங்களிப்பாக 60 விழுக்காடு பிரிமீயம் தொகை வழங்கப்படுகிறது.*

29.3 ஒருங்கிணைந்த முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் – பிரதான் மந்திரி மக்கள் ஆரோக்கியத் திட்டம் சிறப்புக் கூறுகள்:

- *இத்திட்டத்தில், தற்போது 1,760 மருத்துவமனைகள் (810 அரசு மருத்துவமனைகள் மற்றும் 950 தனியார் மருத்துவமனைகள்) அங்கீகரிக்கப்பட்டுள்ளன.*

- *காப்பீட்டுத் தொகை-இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஆண்டொன்றுக்கு ஐந்து இலட்சம் ரூபாய் வரை காப்பீடு வழங்கப்படுகிறது.*

[2023 ஏப்ரல் 18

- சிகிச்சை முறைகள்–ஒருங்கிணைந்த இத்திட்டத்தின்கீழ் 1,513 சிகிச்சை முறைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. (11 தொடர் சிகிச்சை முறைகள், 52 முழுமையான பரிசோதனை முறைகள், 8 உயர் சிறப்பு சிகிச்சை முறைகள் உட்பட)

- புலம் பெயர்ந்த தொழிலாளர்கள், பழங்குடியினர்கள் மற்றும் குடிசைவாழ் மக்கள் உள்ளிட்ட சமூக பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள பிரிவினர்கள் இத்திட்டத்தில் தொடர்ந்து சேர்க்கப்பட்டு பயன்பெற்று வருகின்றனர்.

- இத்திட்டத்தின் சிறப்பம்சமாக 2021 முதல் கோவிட் தொற்றினால் பெற்றோரை இழந்து (தாய்/தந்தை (ம) இருவரையும்) ஆதரவின்றி தவிக்கும் 1,320 குழந்தைகளுக்குச் சிறப்பு அங்கீகாரமாக (special enrolment) வழங்கப்பட்டுள்ளது.

- செய்தித் துறையில் அங்கீகரிக்கப்பட்ட 1,414 செய்தியாளர்கள் மற்றும் பருவ இதழ் செய்தியாளர்கள், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் பயனாளிகளாக வருமான வரம்பின்றி சேர்க்கப்பட்டுள்ளனர்.

- சென்னை, கீழ்ப்பாக்கம் மன நலக் காப்பகத்தில் தங்கி சிகிச்சை பெறும் 520 நோயாளிகளுக்குக் குடும்ப அட்டை மற்றும் வருமானச் சான்றிதழ் இன்றி முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு அட்டை வழங்கி பயனாளிகளாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

- தர நிர்ணயச் சான்றிதழ்–ஒன்றிய அரசின் தர அளவுகோல்கள் மற்றும் தேசிய மருத்துவமனைகள் அங்கீகரிப்புக் குழுவால் (NABH/NQAS) வரையறுக்கப்பட்ட ஆரம்ப நிலை தர நிர்ணய சான்றிதழ், அரசு மருத்துவமனைகள் உட்பட அனைத்து மருத்துவமனைகளுக்கும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

- குறைந்தபட்ச மருத்துவத் தகவல் பதிவுகளை (Minimal Electronic Health Record) மின்னணுமூலம் வலைதளத்தில் பயனாளிகள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

2023 ஏப்ரல் 18]

29.4 குறைகள் தீர்த்தல்: *குறைகளைத் தீர்க்க மாநில மற்றும் மாவட்டக் கண்காணிப்பு மற்றும் குறைதீர்க்கும் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. கணினியில் நேரடித் தொடர்புமூலம் கண்காணித்தல் மற்றும் குறுஞ்செய்தி ஒப்புகை வழங்குதல் உட்பட குறைகள் தீர்க்கும் வழிமுறைகள் கடைபிடிக்கப்படுகின்றன. 24X7 மணி நேரமும் செயல்படும் கட்டணமில்லாத் தொலைபேசி எண் 1800 425 3993 மற்றும் 104 என்ற எண்ணை பொது மக்கள் தொடர்பு கொண்டு புகார்களைப் பதிவு செய்யவும், திட்டம் பற்றிய சந்தேகங்களை நிவர்த்தி செய்யவும், அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளின் விவரங்கள் மற்றும் அனுமதிக்கப்பட்ட சிகிச்சைகள் பற்றிய விவரங்களையும் தெரிந்துகொள்ளலாம். 'முதல்வரின் முகவரி' இணையதளம் வாயிலாகப் பெறப்படும் மனுக்களை உடனுக்குடன் பரிசீலனை செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.*

29.5 செயல்திறன்: *மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் 23.7.2009 முதல் 31.3.2023 வரை 1,26,85,664 பயனாளிகள் ரூ.11,576 கோடி மதிப்பிற்கான சிகிச்சைப் பெற்றுள்ளனர். இதில் அரசு பொது மருத்துவமனைகளில் ரூ.4,048 கோடி மதிப்பில் 34,79,087 பயனாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. 2022-23 ஆம் ஆண்டில், ரூ.1,329 கோடி மதிப்பீட்டிலான சிகிச்சையின்மூலம் 10,25,550 நோயாளிகள் பயனடைந்துள்ளனர். இதில் ரூ.679 கோடி (48%) செலவில் 6,40,646 நோயாளிகள் அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை வழங்கப்பட்டு பயனடைந்துள்ளனர்.*

சிறப்பு சிகிச்சைகள்: *சிறப்பு சிகிச்சைகள் வாரியாக, 11.01.2012 முதல் 31.03.2023 வரை அனுமதி அளிக்கப்பட்ட விவரம் கீழ்க்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது:*

வ. எண்	சிறப்பு சிகிச்சைகள்	ஒப்புதல் எண்ணிக்கை	ஒப்புதல் தொகை (ரூபாய் கோடியில்)
1	*சிறுநீரக நோய் சிகிச்சை–டயாலிசிஸ்*	*13,16,345*	*1,077.99*
2	*இருதய ஸ்டெண்ட் சிகிச்சை*	*1,21,585*	*816.70*

வ. எண்	சிறப்பு சிகிச்சைகள்	ஒப்புதல் எண்ணிக்கை	ஒப்புதல் தொகை (ரூபாய் கோடியில்)
3	இருதய பைபாஸ் அறுவைச் சிகிச்சை	52,904	511.57
4	இருதய வால்வு மாற்று அறுவைச் சிகிச்சை	1,56,784	422.21
5	புற்று நோய் – கதிர்வீச்சு சிகிச்சை	46,838	382.04
6	முழங்கால் மூட்டு மாற்று அறுவைச் சிகிச்சை	50,782	332.76
7	எலும்பு முறிவு சிகிச்சை	2,04,722	358.46
8	புற்று நோய் – கீமோதெரப்பி சிகிச்சை	6,77,652	398.82
9	பிறவி இருதய கோளாறு சிகிச்சை	39,947	312.54
10	சிறுநீரக கல் அறுவைச் சிகிச்சை	1,49,497	286.99
11	பச்சிளம் குழந்தைகள் சிகிச்சை	2,14,722	247.87
12	மாரடைப்பு மருத்துவ சிகிச்சை	95,839	224.22
13	முதுகு தண்டுவட அறுவைச் சிகிச்சை	64,220	227.13
14	புற்றுநோய் சிகிச்சை	52,837	162.55
15	இரைப்பை குடல் வழி அறுவைச் சிகிச்சை	1,13,202	230.96
16	கண் விழித்திரை அறுவைச் சிகிச்சை	1,02,146	147.21

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2023 ஏப்ரல் 18]

வ. எண்	சிறப்பு சிகிச்சைகள்	ஒப்புதல் எண்ணிக்கை	ஒப்புதல் தொகை (ரூபாய் கோடியில்)
17	இடுப்பு மூட்டு மாற்று அறுவைச் சிகிச்சை	19,211	140.74
18	இரத்த குழாய் அறுவைச் சிகிச்சை	59,270	144.86
19	கருப்பை நீக்கம் அறுவைச் சிகிச்சை	79,199	127.45
20	காதொலி கருவி	1,52,969	123.27
21	உடலுறுப்பு சீரமைப்பு அறுவைச் சிகிச்சை	61,339	114.68
22	இதர நோய்கள்	11,75,949	1,992.89
	மொத்தம்	**50,07,959**	**8,783.96**

29.6 தொகுப்பு நிதி: அதிகச் செலவாகும் கல்லீரல் மாற்று அறுவைச் சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை, எலும்பு மஜ்ஜை அறுவைச் சிகிச்சை, காதுவால் நரம்பு உள்வைப்பு அறுவைச் சிகிச்சை மற்றும் ஸ்டெம் செல் மாற்று அறுவைச் சிகிச்சை, நுரையீரல் மற்றும் இருதய மாற்று அறுவைச் சிகிச்சை, நுரையீரல் மாற்று அறுவைச் சிகிச்சை, செவிப்புல மூளை தண்டு உள்வைப்பு அறுவைச் சிகிச்சை மற்றும் மேற்குறிப்பிட்ட அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் தேவைப்படும் நோய்த் தடுப்புச் சிகிச்சைகளை மேற்கொள்ளும் வகையில் தொகுப்பு நிதி (Corpus fund) ஒன்று அரசால் உருவாக்கப்பட்டுள்ளது. இத்தொகுப்பு நிதிக்கு அரசின் பங்காக 35 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. அரசு மருத்துவமனைகள், காப்பீட்டு நிறுவனத்திற்கு அனுப்பும் கோரிக்கைத் தொகையில் 27 விழுக்காடு தொகை தொகுப்பு நிதியில் சேர்க்கப்படுகிறது. நிபுணர் குழுவால் மேற்குறிப்பிட்ட சிறப்பு சிகிச்சைகளுக்கு ஒப்புதல் அளிக்கப்படுகிறது. 11.1.2012 முதல் 31.3.2023 வரை மொத்தத்தில் 13,257 பயனாளிகளுக்கு, ரூ.1085.43 கோடி காப்பீட்டுத் தொகையில் சிறப்பு அறுவைச் சிகிச்சைகளுக்குக் கீழ்க்கண்டவாறு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது:

[2023 ஏப்ரல் 18

வ. எண்	அறுவைச் சிகிச்சை முறைகள்	பரிந்துரைக்கப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை	தொகை (ரூபாய் கோடியில்)
1.	*கல்லீரல் மாற்று அறுவைச் சிகிச்சை*	*1,376*	*298.03*
2.	*சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை*	*4,583*	*180.06*
3.	*காது வால் நரம்பு உள்வைப்பு அறுவைச் சிகிச்சை*	*5,178*	*367.58*
4.	*எலும்பு மஜ்ஜை மாற்று அறுவைச் சிகிச்சை மற்றும் ஸ்டெம் செல் சிகிச்சை*	*1,868*	*191.37*
5.	*இருதய மாற்று அறுவைச் சிகிச்சை*	*163*	*29.18*
6.	*நுரையீரல் மற்றும் இருதய மாற்று அறுவைச் சிகிச்சை*	*28*	*6.99*
7.	*நுரையீரல் மாற்று அறுவைச் சிகிச்சை*	*27*	*6.02*
8.	*செவிப்புல மூளை தண்டு உள்வைப்பு மாற்று அறுவைச் சிகிச்சை*	*34*	*6.20*
மொத்தம்		**13,257**	**1085.43**

2023 ஏப்ரல் 18]

அத்தியாயம்-30

தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர மருத்துவ முன்னெடுப்புத் திட்டம் (TAEI) மற்றும் 108 அவசரக்கால ஆம்புலன்ஸ் சேவை

30.1 *தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர மருத்துவ முன்னெடுப்புத் திட்டம் தமிழ்நாட்டின் அவசர மருத்துவச் சேவைகளை தனது செயலாக்கத்தின் மூலமாக முற்றிலும் மாற்றியமைத்துள்ளது. கருத்தாக்கம், வடிவமைப்பு மற்றும் செயல் திட்டத்தின் அடிப்படையில் இத்திட்டமானது நாட்டிற்கு முன் மாதிரியாக விளங்குகின்றது. சர்வதேசத் தரத்திற்கு ஒப்பான நெறிமுறைகளை நடைமுறைப்படுத்தியதன் வாயிலாக அரசு மருத்துவச் சேவை அமைப்பின் வடிவத்தை எழில் கூட்டியதோடு மட்டுமின்றி சேவைகளின் தரத்தை உயர்த்தி பிற மாநிலங்களுக்கான பெருமைமிக்க முன்னோடியாக 'தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர மருத்துவ முன்னெடுப்பு' திகழ்கிறது. பன்னெடுங்காலமாக இயங்கி வந்த* Casualty *என்ற அமைப்பை அவசர மருத்துவத் துறை என கட்டமைப்பு, மனிதவளம் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றின் கூட்டுதிறன் அடிப்படையில் தரம் உயர்த்தி* MD (*அவசர மருத்துவம்*) *பட்டப்படிப்பை துவக்கிய பெருமையும் தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர மருத்துவ முன்னெடுப்புத் திட்டத்தையே சாரும். இதை முதலில் நிகழ்த்திக்காட்டிய பெருமை தேசிய அளவில் தமிழ்நாடு அரசுக்குக் கிட்டியுள்ளது. நாட்டின் பிற பகுதிகளில் புதிதாகத் துவங்கப்படும் மருத்துவக் கல்லூரிகளுக்குக் கட்டாய தேவையாக அவசர மருத்துவத் துறையை தேசிய மருத்துவ ஆணையம் பரிந்துரைத்துள்ளது. 2022-23 ஆம் கல்வியாண்டில் தமிழ்நாட்டில் 22 மருத்துவக் கல்லூரிகளில் 84* MD (*அவசர மருத்துவம்*) *பட்ட மேற்படிப்பு மாணவர்கள் சேர்ந்துள்ளனர்.*

30.2 தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர மருத்துவ முன்னெடுப்புத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள்: *இத்திட்டத்தின்கீழ் நோயாளர் கவனிப்பு தெளிவாக வகுக்கப்பட்ட கால நிர்ணய அடிப்படையில் உறுதி செய்யப்படுகிறது. அதற்கான அறிவியல்பூர்வ வழிகாட்டு நெறிமுறைகள் இயற்றப்பட்டுள்ளன. அவை முறையே நடைமுறைபடுத்துவதைக் கண்காணிக்கும் ஆய்வு பட்டியல்களும் தர நிர்ணய பதிவேடுகளும் ஆகும்.*

30.3 அவசரச் சிகிச்சை மருத்துவத் துறை: *அவசரச் சிகிச்சை மருத்துவத் துறையின்கீழ் அவசரக் கவனிப்பு அறை* (ER),

[2023 ஏப்ரல் 18

மேம்படுத்தப்பட்ட அதிதீவிர கவனப் பிரிவு (HHDU), அவசர அறுவைச் சிகிச்சை அரங்கம் (EOT), சி.டி. ஸ்கேன் (CT Scan), எம்.ஆர்.ஐ. ஸ்கேன் (MRI Scan), நடமாடும் நுண் கதிர் சாதனம் (Mobile X-Ray), ஆலோசனை மற்றும் மறுவாழ்வு மையம் ஆகியன முறையே அவசர மருத்துவப் பிரிவில் உருவாக்கப்பட்டுள்ளன. அவசர மருத்துவ பிரிவில் நோயாளர்களை, நோயின் தீவிரத் தன்மை அடிப்படையில் பகுத்தறிந்து கவனிப்பின் தன்மையை முதன்மைப்படுத்துதல் (Triage), வருகைக்கு முன் தகவல் பரிமாற்றம், மருத்துவமனை சிறப்பு நிபுணர்கள் வரவழைத்தல், வலி நிவாரண சிகிச்சைத் திட்டங்கள், காயவியல் செவிலியர் பணியிருத்தல், உயிர் மீட்புக் கூடம், சிவப்பு, மஞ்சள், பச்சை மண்டலப் பிரிவுகள், வழிகாட்டு நெறிமுறைகள் அடிப்படையிலான மருத்துவச் சேவைகள், அவசரக்கால கேளா ஒலி (அல்ட்ராசவுண்டு) ஸ்கேன், ஆய்வகம், அனைத்துப் பணியாளர்களுக்கான சீருடைகள் மற்றும் மின்னணு மருத்துவச் சட்ட பதிவேற்றம் ஆகியன இப்பிரிவில் உருவாக்கப்பட்டுள்ளன.

30.4 2022-23 ஆம் ஆண்டிற்கான நடவடிக்கைகள்: இத்திட்டமானது, பொதுமக்களின் அவசர மருத்துவச் சிகிச்சை தேவைகளை கருத்தில் கொண்டு முழு அளவில் செயல்பாட்டிற்குக் கொண்டு வந்துள்ளது. மேலும் கூடுதலாக 8 அரசு மருத்துவமனைகள் தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர மருத்துவ முன்னெடுப்பு திட்டத்தின்கீழ் இணைக்கப்பட்டுள்ளன. அவை அரசு வட்ட மருத்துவமனை, செங்கம், அரசு வட்ட மருத்துவமனை, விருத்தாசலம், அரசு வட்ட மருத்துவமனை, திருப்பத்தூர் (சிவகங்கை), அரசு வட்ட மருத்துவமனை, சாத்தூர், அரசு வட்ட மருத்துவமனை, வந்தவாசி, அரசு வட்ட மருத்துவமனை, திருமயம் மற்றும் அரசு வட்ட மருத்துவமனை, உத்தமபாளையம். தற்போது 39 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், 20 அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், 35 வட்டம்/ வட்டம் சாரா அரசு மருத்துவமனைகள் என அதிகம் விபத்து நடைபெறும் இடங்களுக்கு அருகில் அமைந்துள்ள மொத்தம் 94 மருத்துவமனைகளில் தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர மருத்துவ முன்னெடுப்பு தனது சேவைகளை வழங்கி வருகிறது.

- இதன்கீழ் மேற்கூறிய அரசு மருத்துவமனைகளிலுள்ள அனைத்து மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பணியாளர்களுக்குத் தொடர் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. எந்த ஒரு நோயாளியையும் அவசரக்

காலத்தில் உயர் சிகிச்சைக்காக வேறு மருத்துவமனைக்கு பரிந்துரைத்து அனுப்புவதற்கு முன் தேவையான அனைத்து முதலுதவிகளையும் முறையே செய்த பின்னரே அனுப்பி வைக்கப்படும் வண்ணம் இப்பயிற்சி தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகிறது.

- தேசிய நலவாழ்வுக் குழுமம் நவம்பர் 2022 முதல் மாரடைப்பு, பக்கவாதம், விபத்துக் காயவியல் நோயாளிகள், விஷ முறிவு நோயாளிகள் மற்றும் தீக்காயம் ஆகிய பிரிவுகளின்கீழ் ஏற்பட்ட மரணங்களை மாநில அளவிலான தணிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு குறைகள் களையப்பட்டு வருகின்றன.

(I) விபத்து: நவம்பர் 2022 முதல் விபத்து இறப்பு தணிக்கைகள் (State level) நடத்தப்படுகின்றன. சரியான நோயாளி, சரியான நேரத்திற்குள், சரியான மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்படுவதை உறுதி செய்யும் வண்ணம் இதனை முக்கியக் கருத்தாகத் தொடர்ந்து வலியுறுத்துகிறது. அவசரச் சிகிச்சைப் பிரிவில் ஆபத்தான நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கான வழிகாட்டு நெறிகள் தயார் செய்யப்பட்டு அனைத்து மருத்துவமனைகளுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 3 நாட்கள் TAEI Skill Grading (TSG) பயிற்சிகள் 13 மருத்துவக் கல்லூரி மருத்துவமனை பயிற்சி மையங்களில் நடத்தப்படுகின்றன. இந்த ஆண்டு மொத்தம் 894 மருத்துவர்கள் மற்றும் 1,518 செவிலியர்கள் 98 குழுக்களாக TAEI திறன் தரப் பயிற்சியில் பயிற்சி பெற்றுள்ளனர்.

(II) STEMI திட்டத்தின்கீழ்: 2022 ஆம் ஆண்டில் 18 கேத் லேப்கள் உள்ள மையங்கள் 188 அரசு மருத்துவமனைகளுடன் இணைக்கப்பட்டு STEMI திட்டமானது சிறந்த செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. இதன் காரணமாக CMCHIS கீழ் நோயாளிகளுக்கு உயிர் காக்கும் வகையில் அவசர இருதய கிசிச்சைச் சேவைகள் அதிக எண்ணிக்கையில் வழங்கப்பட்டுள்ளன. 2022-2023 ஆம் ஆண்டில் 3,948 கேத்லேப் அவசர இருதய இணையீட்டு சிகிச்சைகள் 24 மணி நேரத்திற்குள் வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம், மாரடைப்பு ஏற்படும் நோயாளிகளுக்கு, அறிகுறிகள் தோன்றிய 24 மணி

நேரத்திற்குள் ஆஞ்சியோகிராம், ஆஞ்சியோ பிளாஸ்டி ஆகியவற்றைப் பெறுவதை உறுதி செய்துள்ளது. மேலும் பவர் இன்ஜெக்டர்கள் 15 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு ரூ.300 இலட்சம் செலவிலும், Mid-Range ECHO கார்டியோகிராம் கருவி 13 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு ரூபாய் 520 இலட்சம் செலவிலும் மற்றும் கேத்லேப் கருவிகள் 4 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ரூ.1,600 இலட்சம் செலவிலும் தமிழ்நாடு மருத்துவச் சேவைகள் கழகத்தின் மூலமாக வழங்கப்பட்டுள்ளன.

(III) விஷ மேலாண்மை: மாநிலத்தில் எலிக்கொல்லி நச்சினை உட்கொள்வதினால் நிகழும் உயிரிழப்பினைக் கருத்தில் கொண்டு, பிப்ரவரி 2022 முதல், அவசர விஷமுறிவுப் பிரிவு, மருத்துவம், நச்சுயியல், குழந்தை மருத்துவம், கல்லீரல் மருத்துவம் (ஹெபடாலஜி) / இரைப்பைக் குடல், இரத்த மாற்று மருத்துவம், சிறுநீரக மருத்துவம், உயிர் வேதியியல் துறைகளை உள்ளடக்கிய TAEI மையங்களில் எலிக்கொல்லி நச்சு மேலாண்மை மற்றும் பிளாஸ்மா எக்ஸ்சேஞ்ச் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் PLEX என்ற எலிக்கொல்லி நச்சுமுறிவு இரத்த சுத்திகரிப்பு மேலாண்மைக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன. எலிக்கொல்லி பசை விற்பனைக்குத் தடை விதித்ததுடன் PLEX இயந்திரங்கள் ஆறு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு வழங்க மாண்புமிகு அமைச்சர் (மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு) அவர்களால் அறிவிக்கப்பட்டது. விஷ மேலாண்மை வழிகாட்டுதல்கள் மற்றும் விழிப்புணர்வு அடங்கிய வாசகங்கள் (IEC) தயாரிக்கப்பட்டு மாண்புமிகு அமைச்சர் (மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு)அவர்களால் அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்டது. தற்போது மாநிலத்தில் உள்ள 16 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் PLEX சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. 2022-2023 ஆம் ஆண்டில் மொத்தம் 7,339 நபர்கள் உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டு, 850 நோயாளிகள் PLEX சிகிச்சைக்கு பரிந்துரைக்கப்பட்டதால், 64 சதவிகித இறப்புகள் தவிர்க்கப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 18]

(IV) குழந்தைகள் அவசர மருத்துவ மேலாண்மை: *மாநிலம் முழுவதும் 89 குழந்தைகள் மருத்துவ அவசரப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. எழும்பூர் குழந்தைகள் அரசு மருத்துவமனையில் மாநில குழந்தைகள் அவசர மருத்துவப் பயிற்சிக்கூடம் செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சி மையத்தில் 669 மருத்துவர்கள் மற்றும் 640 செவிலியர்களுக்கு 55 குழுக்களாகப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.*

(V) TAEI பதிவேடு: *விபத்து, தீக்காயங்கள், விஷம், சுய-தீங்கு, மாரடைப்பு, பக்கவாதம் மற்றும் குழந்தைகளுக்கான அவசர மருத்துவ மேலாண்மை* (PREM) *தொடர்பான தரவுகள் தினசரி அடிப்படையில்* TAEI *மின் பதிவேட்டில் சேகரிக்கப்படுகின்றன. இம்மின் பதிவேடு அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு உடனுக்குடன் தகவல்கள் துல்லியமாகப் பெறப்பட்டு அறிவியல் பூர்வமான ஆராய்ச்சிமூலம் அவசர மருத்துவச் சேவைகளில் தரத்தினை அனைத்து* TAEI *மையங்களிலும் வழங்குவது உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த முறையை நாட்டிலேயே முதன்முதலாக நடைமுறைப்படுத்திய பெருமை தமிழ்நாட்டை சாரும்.*

பதிவேட்டின் முக்கிய அம்சங்கள்:

1. *மருத்துவமனைக்கு வருவதற்கு முன் வழங்கப்பட்ட சிகிச்சைகள், மருத்துவமனையில் வழங்கப்பட்ட சிகிச்சைகள் மற்றும் மறுவாழ்வு இடையீடுகள் என முப்பரிமாண பதிவுகளை உள்ளடக்கியது.*
2. *நோயாளிகளின் நிகழ்நேர கண்காணிப்பு.*
3. *நோயாளி வருகையை மருத்துவமனைக்கு முன் அறிவித்தல்.*
4. *முக்கிய உடலியக்க அறிகுறிகள் அடிப்படையில் தானியங்கி விபத்துக்காய மதிப்பெண்கள்.*
5. *நோயாளிகளின் உடலியக்க அளவீடுகளைக் காட்சிப்படுத்துதல்.*
6. *மருத்துவ சட்ட சாட்சியத்திற்கான மின் பதிவேடு.*

[2023 ஏப்ரல் 18

(VI) இன்னுயிர் காப்போம் திட்டம்:

- இன்னுயிர் காப்போம்: நம்மைகாக்கும்-48 திட்டத்தின்கீழ் (IKT : NK-48), ஆறு மணி நேரத்திற்குள் அவசர அறுவைச் சிகிச்சைகள் தேவைப்படும் நோயாளிகளுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்படுவதை உறுதி செய்கிறது. டிசம்பர் 2021 முதல் மார்ச் 2023 வரை மொத்தம் 1,53,091 சாலை விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்கள் இத்திட்டத்தின்கீழ் ரூ.135.01 கோடி மதிப்பீட்டிற்கான சிகிச்சையைப் பெற்றுள்ளனர்.
- TAEI திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதன்மூலம் 2019 ஆம் ஆண்டை ஒப்பிடும்போது 2022 ஆம் ஆண்டில் சாலை போக்குவரத்து விபத்துகளால் ஏற்படும் இறப்புகள் 1.35 சதவிகிதமாகக் குறைந்துள்ளது.

30.5 '108'–அவசரக்கால ஊர்தி சேவை: மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் 15.9.2008 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் இலவச அவசரக்கால ஆம்புலன்ஸ் சேவையைத் தொடங்கினார். ஒவ்வோர் அவசரக்கால ஊர்தியிலும் விபத்துக்குள்ளான நபரை மருத்துவமனையில் சேர்ப்பதற்கு முன் தேவைப்படும் மருத்துவச் சிகிச்சைகளை அளிக்க பயிற்சி பெற்ற அவசர கால மருத்துவ நுட்புனர் ஒருவரும், ஓட்டுநர் ஒருவரும் உள்ளனர்.

30.6 மாநிலத்தில் உள்ள 38 மாவட்டங்களிலும் '108' அவசரக்கால ஊர்திகள் நிறுத்தி வைக்கப்பட்டு, தேவையின் அடிப்படையில் இயக்கப்படுகின்றன. தற்போது மாநிலத்தில் 1,353 அவசரக்கால ஊர்திகள் உள்ளன. அடிப்படை வசதி கொண்ட அவசரக்கால சேவை, மேம்படுத்தப்பட்ட அவசரக்கால சேவை, பச்சிளம் குழந்தைகளுக்கான அவசரக்கால சேவை மற்றும் வி.வி.ஐ.பி. அவசரக்கால ஊர்தி சேவை ஆகியவை வழங்கப்படுகின்றன. இதுதவிர, 41 இருசக்கர அவசரக்கால வாகனங்களும் இச்சேவையில் உள்ளன.

2023 ஏப்ரல் 18]

30.7 ஆம்புலன்ஸ்களின் எண்ணிக்கை விவரம்:

வ. எண்	ஆம்புலன்ஸ் வகைகள்	எண்ணிக்கை
1.	அடிப்படை வசதி கொண்ட அவசரக்கால ஊர்திகள்	*1,079*
2.	மேம்படுத்தப்பட்ட அவசரக்கால ஊர்திகள்	*205*
3.	பச்சிளம் குழந்தைகளுக்கான அவசரக்கால ஊர்திகள்	*65*
4.	வி.வி.ஐ.பி. அவசரக்கால ஊர்திகள்	*4*
	மொத்த அவசரக்கால ஊர்திகள்	**1,353**
5.	இரு சக்கர அவசரக்கால வாகனங்கள்	*41*

30.8 இச்சேவையின்கீழ் பயன்பெற்ற நபர்களின் விவரம்:

வ. எண்	கால கட்டங்கள்	2018-2019	2019-2020	2020-21	2021-2022	2022-2023
1	கர்ப்பிணித் தாய்மார்கள்	*3,14,932*	*3,02,036*	*3,14,913*	*4,93,841*	*5,30,008*
2	சாலை விபத்துகள்	*2,45,049*	*2,13,953*	*1,78,935*	*2,44,684*	*3,13,851*
3	இதர அவசர சேவைகள்	*7,31,565*	*7,19,799*	*8,38,974*	*12,06,792*	*9,46,999*
4	மொத்த பயனாளிகள்	*12,91,546*	*12,35,788*	*13,32,822*	*19,45,317*	*17,90,858*
5	பழங்குடியினர் / மலைவாழ் மக்கள்	*62,562*	*64,604*	*67,026*	*92,250*	*98,307*

30.9 பச்சிளம் குழந்தைகளுக்கான அவசர ஊர்தி: பிறந்தது முதல் 28 நாட்கள் வயதுடைய குழந்தைகளுக்கு மட்டும் அவசரக்காலங்களில் அவசரச் சிகிச்சை அளிப்பதற்காக, ஆரம்ப சுகாதார நிலையம்/ அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு அவசரச் சிகிச்சைத் தேவைப்படும்போது, அவர்களை மருத்துவக் கல்லூரி

மருத்துவமனைகளில் அமைந்துள்ள பச்சிளம் குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சை மையங்களுக்கு அழைத்துச் செல்வதற்கு இத்திட்டம் துவங்கப்பட்டது. 2022-23-ல் 24,463-க்கும் மேற்பட்ட குழந்தைகள் இச்சேவையினால் பயனடைந்துள்ளனர். தற்போது அனைத்து மாவட்டங்களிலும் 65 ஊர்திகள் இயங்கி வருகின்றன.

30.10 இருசக்கர அவசரக்கால ஊர்தி மற்றும் நடமாடும் மருத்துவப் பெட்டகம்: இவ்வூர்திகளில் இருக்கும் முதலுதவிப் பெட்டகம், கையில் எளிதில் கொண்டு செல்லக்கூடியதாகவும், அவசரக்கால தேவை உள்ள இடத்தில் எளிய முறையில் விரைவில் செயல்படுத்தக் கூடியதாகவும் உள்ளது. இச்சேவை மூலமாக 2022-2023 ஆம் ஆண்டில் 33,009 பேர் பயனடைந்துள்ளனர்.

30.11 104 தொலைபேசி மருத்துவ உதவி மற்றும் தகவல் மையம்: இச்சேவை 24X7 மணி நேர சேவையாகும். இச்சேவையின் வாயிலாகப் பொதுமக்களுக்கு உடல் நலம் குறித்த அறிவுரைகள், தகவல்கள் மற்றும் மருத்துவ ஆலோசனைகள் ஆகியவை அளிக்கப்படுகின்றன. மேலும் அரசாங்கத்தின் நலத் திட்டங்கள் பற்றிய கீழ்க்கண்ட தகவல்கள் / சேவைகள் வழங்கப்படுகின்றன:

- மருத்துவர்கள் மற்றும் சுகாதார வல்லுநர்களைக் கொண்டு, தேவையான மருத்துவ ஆலோசனைகள் மற்றும் சுகாதாரம் சம்பந்தமான தகவல்களை வழங்குதல்.
- இவ்வாண்டு (2022-2023) 1,45,988 நீட் தேர்வு எழுதிய மாணவர்களுக்கு உளவியல் ஆலோசனை மற்றும் தற்கொலைத் தடுப்பு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.
- மகப்பேறு கால சிரமங்களை எதிர்கொள்ளும் தாய்மார்களுக்கு, உரிய மகப்பேறு மருத்துவ வசதிகள் அமைந்துள்ள மருத்துவமனைகள் குறித்து தகவல் அளிக்கப்படுகிறது.
- அரசு சேவைகள் குறித்த விவரங்கள்-முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டம், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு உதவி சேவை பற்றிய விவரங்கள் வழங்கப்படுகின்றன.

2023 ஏப்ரல் 18]

- *ஊட்டச்சத்து குறித்த ஆலோசனைகள் மற்றும் தற்கொலை எண்ணம் உள்ளவர்களுக்கு மருத்துவ ஆலோசனைகள் அளிக்கப்பட்டு வருகின்றன.*
- *சுகாதாரச் சேவைகள் வழங்குவதில் ஏதேனும் குறைகள், கருத்துகள் மற்றும் ஆலோசனைகள் இருந்தால் பொதுமக்கள் இச்சேவையின் வாயிலாகப் பதிவு செய்யலாம்.*
- *2022-23 ஆம் ஆண்டில் 4,68,557 மக்கள் பயனடைந்துள்ளனர்.*

30.12. 102 இலவச ஊர்திகள் சேவை: *2022-2023 ஆம் ஆண்டில் மொத்தம் 2,52,563 தாய்மார்கள் / குழந்தைகள் இச்சேவைமூலம் பயன்பெற்றுள்ளனர். தற்போது தமிழ்நாடு முழுவதும் 99 இலவச தாய்-சேய் நல ஊர்திகள் இயங்கி வருகின்றன. 102 இலவச தாய்-சேய் நல ஊர்திகள் சேவை (ஜனனி சிசு சுரக்க்ஷா சேவை), அரசு மருத்துவமனைகளில் பிரசவிக்கும் தாய்மார்கள் மற்றும் சிகிச்சை அளிக்கப்பட்ட நோயுற்ற குழந்தைகளை இலவசமாக அவர்கள் இல்லத்திற்குக் கொண்டு சேர்க்கும் சேவையாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

30.13 இலவச அமரர் ஊர்தி சேவை: *அரசு மருத்துவமனைகளில் நோயாளிகள் இறக்க நேரிட்டால், அவர்கள் உடலை தமிழ்நாட்டில் உள்ள எந்த பகுதிக்கும் இலவசமாக அவர்களின் இருப்பிடத்திற்கோ அல்லது இடுகாட்டிற்கோ இவ்வூர்திகள்மூலம் கொண்டு செல்லலாம். இச்சேவையைப் பெற 155 377 என்ற மைய அழைப்பு எண்ணைத் தொடர்பு கொள்ளலாம். 2022-23 ஆம் ஆண்டில் 1,48,495 இறந்தோரது உடல்கள் இலவசமாக அவர்களின் சொந்த ஊர்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. தற்போது தமிழ்நாடு முழுவதும் 194 ஊர்திகள் இச்சேவையின்கீழ் இயங்கி வருகின்றன.*

அத்தியாயம்-31

அனைவருக்கும் நலவாழ்வுத் திட்டம் (UHC)

31.1 *அனைவருக்கும் நலவாழ்வு திட்டம்* (UHC) *என்பது, "அனைத்து மக்களும் நிதி நெருக்கடியை எதிர்கொள்ளாத வகையில் நோய்த்தடுப்பு, சுகாதார மேம்பாடு, நோய் சிகிச்சை, புனர்வாழ்வு*

சேவை மற்றும் நோய் ஆதரவு உள்ளிட்ட விரிவான மற்றும் தரமான அத்தியாவசியச் சுகாதாரச் சேவைகளை அணுகுவதாகும்”. நாட்டின் பொது சுகாதாரத்தின் முன்னோடியான தமிழ்நாடு, 2030 ஆம் ஆண்டிற்குள் அனைவருக்கும் சுகாதாரச் சேவையை அளிக்க உறுதி பூண்டுள்ளது. மேலும், இது மற்ற நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கும் அடிப்படையாகும். தமிழ்நாட்டில், அனைவருக்கும் நலவாழ்வுத் திட்டமானது 2017-ல் செயல்படுத்தப்பட்டது பின்னர் சமீபத்தில் மாநிலத்தின் முதன்மைத் திட்டமான “மக்களைத் தேடி மருத்துவம்” (MTM) திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. இன்றுவரை, தமிழ்நாடு 4,848 துணை சுகாதார நிலையங்களை (HSC) நலவாழ்வு மையங்களாக (HWC) மாற்றியுள்ளது. நலவாழ்வு மையம் – துணை சுகாதார நிலையங்களில் (HWC-HSC) 4,848 இடைநிலை சுகாதாரப் பணியாளர்கள் (MLHPs) மற்றும் 2,448 சுகாதார ஆய்வாளர்கள் (HI) நிலை-II நியமிக்கப்பட்டுள்ளனர். இந்தப் பணியாளர்கள் மதிப்பெண் அடிப்படையில் மதிப்பிடப்பட்டு, அதில் குடியிருப்பு அளவுகோல்களுக்குக் கூடுதல் மதிப்பெண் வழங்கப்பட்டு தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அதே வட்டாரத்தைச் சார்ந்த ஊழியர்களை பணியமர்த்துவதை ஊக்குவித்தும், பணியிலிருந்து நீங்கும் விகிதத்தைக் குறைக்கும் வகையிலும் பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். பணியமர்த்தப்பட்ட அனைத்து இடைநிலை சுகாதாரப் பணியாளர்களும் (MLHP) அறிமுகப் பயிற்சியை முடித்துவிட்டு, தற்பொழுது நான்கு மாத தொடர் பயிற்சியான பிரிட்ஜ் கோர்ஸ் (Bridge Course)-ஐ முடித்துள்ளனர். தமிழ்நாட்டில் அனைவருக்கும் நலவாழ்வுத் திட்டத்தை நோக்கிய பயணத்தில் இடைநிலை சுகாதாரப் பணியாளர்களைப் பணியமர்த்துவது முக்கியமானதாகும். ஏனெனில், தற்பொழுது நலவாழ்வு மையம் – துணை சுகாதார நிலையங்கள் (HWC-HSC) சரியான பயிற்சி பெற்ற ஆரம்ப சுகாதாரக் குழுவால் நிறுவப்பட்டு, 12 விரிவான சுகாதாரச் சேவைகளை சமூகத்திற்கு இல்லத்தின் அருகாமையிலேயே வழங்கி வருகிறது. அதன்மூலம் மக்களின் செலவையும் குறைக்கிறது. மேலும், புதிதாகப் பணியமர்த்தப்பட்ட ஊழியர்களின் பணி நிலை மற்றும் பணி பொறுப்புகளானது, களப் பணியாளர்களுடன் நெருங்கிய ஒருங்கிணைப்பை உறுதி செய்து, நலவாழ்வு மையங்கள் (HWC) இல்லாத தொலைதூர, பின் தங்கிய பகுதிகளில் சுகாதாரச் சேவையை அணுகவும் மற்றும் சேவை

2023 ஏப்ரல் 18]

உள்ளடக்கத்தை மேம்படுத்தவும், எந்தவொரு தனி நபரையும் விட்டுவிடாமல் அல்லது சுகாதாரச் சேவை மறுக்கப்படாததை உறுதி செய்யும் நோக்கங்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

31.2 தமிழ்நாட்டின் அனைவருக்கும் நலவாழ்வுத் திட்டம் (TN UHC) உத்தி, சமத்துவ அடிப்படையிலான சேவை விநியோக முறையை நோக்கிய பயணம்: *தமிழ்நாடு "அனைவருக்கும் நலவாழ்வுத் திட்ட"-த்தை அடையும் நோக்கில் தற்பொழுது தனது சுகாதாரக் கொள்கை மற்றும் உத்தியை மீண்டும் கண்டறிந்து வலுப்படுத்த விரும்புகிறது. தற்போதுள்ள வசதிகளில் பயிற்சி பெற்ற பணியாளர்களை நியமித்து, மாநிலம் முழுவதும் நலவாழ்வு மையம் – துணை சுகாதார நிலையங்களின் (HWC-HSC) எண்ணிக்கையை அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளது. இதன் விளைவாக ஒரு நிலையான மற்றும் சமமான சேவை வழங்கல் மாதிரியை உருவாக்குவதே தமிழ்நாட்டின் அனைவருக்கும் நலவாழ்வுத் திட்டத்தை (UHC) நோக்கிய உத்தியின் முக்கிய அம்சமாகும். இந்த மாதிரியானது பொருளாதார மூலதனத்தின் கவனத்தை நோயாளிகள்மீது செலுத்தி அவர்களின் நலனுக்குச் செலவிடும் வகையில் அதிக செலவினத்தில் உருவாக்கப்படுவதாகும். மேலும், மாநிலத்தின் சுகாதார அமைப்பின் அடித்தளமாக 'சுகாதார உரிமை' மற்றும் 'சுகாதாரச் சேவை உரிமையை' செயல்படுத்துவதே தமிழ்நாட்டின் அனைவருக்கும் நலவாழ்வுத் திட்டத்தின் உத்தி மற்றும் சுகாதாரக் கொள்கையின் முக்கிய அம்சமாகும். இவ்விரு உரிமைகளும் உரிய நேரத்தில் மற்றும் போதுமான சுகாதாரச் சேவையை வழங்குதலை நோக்கமாகக் கொண்ட, அனைவரையும் உள்ளடக்கிய முழுமையான உரிமையாகும். மேலும், நிலையான வளர்ச்சி இலக்குகளின் குறிக்கோள் மற்றும் கட்டமைப்பிற்கு இணங்குமாறும் அடிப்படை சமூக – பொருளாதாரத்தினை தீர்மானிக்கும் காரணிகளை எடுத்துரைக்கும் கொள்கையாகவும் தமிழ்நாடு அரசு கருதுகிறது. ஆரோக்கியத்திற்கான உரிமையை நிலைநாட்டுவதே தமிழ்நாடு அரசின் முக்கிய நோக்கமாகும், பின்வரும் அம்சங்களை உறுதிசெய்வதன்மூலம் இந்த நோக்கத்தை அடைய முடியும்:*

- ❖ *பல்வேறு நிலைகளில் போதுமான கட்டமைப்பு*
- ❖ *அனைத்து சுகாதார நிலையங்களிலும் போதுமான பயிற்சி பெற்ற மனிதவளம்*
- ❖ *குறிப்பிட்ட சேவைகள் முழுமையாகக் கிடைப்பது*

❖ அனைத்து அடிப்படை மருந்துகள் மற்றும் பொருட்கள் எளிதாகக் கிடைப்பது

மார்ச் 2023 ஆம் ஆண்டு வரை அனைவருக்கும் நலவாழ்வுத் திட்டத்தின்கீழ் (UHC) 6,692 நலவாழ்வு மையங்களில் (HWC) 17 கோடிக்கும் அதிகமான மக்கள் புறநோயாளிகள் (OP) சேவையைப் பெற்றுள்ளனர். அனைவருக்கும் நலவாழ்வுத் திட்டத்தின்கீழ் (UHC) இதுவரை 438 இலட்சம் மற்றும் 571.01 இலட்சம் நபர்களுக்கு உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோய்களுக்கும், 199.8 இலட்சம் நபர்களுக்கு வாய் புற்றுநோய்க்கும், 119.3 இலட்சம் நபர்களுக்கு மார்பகப் புற்றுநோய்க்கும், 86 இலட்சம் நோயாளிகளுக்குக் கருப்பைவாய் புற்றுநோய்க்கும் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன. மாநிலம் முழுவதும் சுமார் 230 இலட்சம் பங்கேற்பாளர்களுடன் 47 இலட்சத்திற்கும் அதிகமான நலவாழ்வு அமர்வுகள் (Wellness Sessions) நடைபெற்றுள்ளன. தனி நபர்கள் மற்றும் சமூகங்களின் சுகாதார விழிப்புணர்வு மற்றும் நல்வாழ்வு மேம்பட சரியான உணவை உண்போம், பள்ளி சுகாதாரத் தூதுவர், நலவாழ்வு அமர்வுகள் மற்றும் முக்கியமான சுகாதாரத் தினங்கள் போன்ற பிரச்சாரங்கள் சமூகத்தினால் கொண்டாடப்படுகின்றன. திறம்பட நோய் சிகிச்சை அளிப்பதற்கும், நோய்சுமையை முழுவதுமாக நிவர்த்தி செய்வதற்கும், செலவைக் குறைப்பதற்கும், அரசாங்க சுகாதார வசதிகளைப் பயன்படுத்துவதை அதிகப்படுத்துவதற்கும் மற்றும் தொடர் கவனிப்பை உறுதி செய்வதற்கும் அனைவருக்கும் நலவாழ்வு திட்டத்தை (UHC) மாநிலத்தில் திறம்பட செயல்படுத்த வேண்டும். தமிழ்நாடு அனைவருக்கும் நலவாழ்வுத் திட்டம் (UHC) என்ற இலக்கை நோக்கி நெருங்கி கொண்டு இருப்பதற்குக் காரணம் திறம்பட்ட மனிதவளம் மற்றும் புதுமையான உத்தியை ஏற்றுக் கொண்டதாகும்.

31.3 இடைநிலை சுகாதாரப் பணியாளர்கள் பயிற்சி (MLHP): இப்பயிற்சியின் முக்கிய நோக்கமானது இடைநிலை சுகாதாரப் பணியாளர்களின் களத் திறன் சேவையை மேம்படுத்துவதாகும். இந்த நான்கு மாதப் பயிற்சியானது களப் பயிற்சி, மண்டல பயிற்சி நிறுவனத்தால் நடத்தப்படும் நேரடி வகுப்பு மற்றும் இணையவழி பயிற்சி இவை அனைத்தையும் உள்ளடக்கியதாகும். அனைவருக்கும் நலவாழ்வு என்ற திட்டத்தின்கீழ் 12 விரிவாக்கப்பட்ட ஆரம்ப நிலை சுகாதாரச் சேவைகளை வழங்குவதற்கு ஏற்ப கூடுதல் பயிற்சியாக விரிவாக்கப்பட்ட

2023 ஏப்ரல் 18]

தொகுப்பு பயிற்சி வாய், கண், காது, மூக்கு, தொண்டை மற்றும் அவசர சேவைக்கான (OEEE) பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒன்றிய அரசின் பணிக் குழு முன்மொழிந்ததை ஏற்று, பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்புத் துறை தேர்வு வாரியத்தின்கீழ் நான்கு மாத இடைநிலை சுகாதாரப் பணியாளர்களின் இணைப்புப் பயிற்சி வழங்கப்படுகிறது.

அத்தியாயம்—32

நிலையான வளர்ச்சிக் குறிக்கோள் எண்: 3

32.1 *தமிழ்நாட்டில் 2030 ஆம் ஆண்டுக்குள் அனைவருக்கும் உயர்தர பயன்தரக்கூடிய மற்றும் எளிதில் அணுகத்தக்க சுகாதாரச் சேவைகளை உருவாக்குதல், தொற்று, தொற்றா மற்றும் வாழ்க்கைமுறை நோய்களால் ஏற்படும் உயிரிழப்புகளைக் குறைப்பதை உறுதிசெய்தல் நிலையான வளர்ச்சித் திட்டம் 3-ன் நோக்கமாகும். நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளை அடைய உதவும் மைய அமைப்பாக 'நிதி ஆயோக்' எனும் அமைப்பு, இந்தியாவில் உள்ளது. இந்தியாவில் நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளைத் தேசிய மற்றும் மாநில குறியீடுகளை உள்ளடக்கிய ஒரு குறியீடு கட்டமைப்பாக மாற்றப்பட்டுள்ளது. 'நிதி ஆயோக்' தயாரித்த நிலையான வளர்ச்சி இலக்கு 2020-21 ஆம் ஆண்டு அட்டவணைத் தரவுகளின்படி, தமிழ்நாடு 74 மதிப்பெண்களைப் பெற்று தரவரிசையில் இரண்டாம் இடத்திலும், நிலையான வளர்ச்சி திட்டம் நோக்கம் 3-ல் 81 மதிப்பெண்களைப் பெற்று தரவரிசையில் மூன்றாமிடத்திலும் உள்ளது.*

32.2 நிலையான வளர்ச்சி இலக்கு — குறிக்கோள் 3 — செயல்படுத்துதல்: *தமிழ்நாட்டில் தலைமைச் செயலாளர் அவர்களைத் தலைமையாகக் கொண்டு மருத்துவம்-மக்கள் நல்வாழ்வுத் துறையின் முதன்மைச் செயலாளர் அவர்களை உள்ளடக்கிய ஓர் உயர் அதிகார குழுவால் நிலையான வளர்ச்சி இலக்கம்-3 கண்காணிக்கப்படுகிறது. நடைமுறையில் உள்ள செயல்பாட்டின்படி, திட்டமிடல் மற்றும் வளர்ச்சித் துறையானது, நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளை முறைப்படுத்தும் ஓர் அமைப்பாக உள்ளது. திட்டமிடல், செயல்படுத்துதல் மற்றும் கொள்கை அளவிலான விவாதங்கள் மேற்கொள்ளுதல் ஆகியவற்றை மாநிலத் திட்டக் குழு நடைமுறைப்படுத்துகிறது. தரவுகளைக் கையாளும் மைய அமைப்பாக பொருளாதாரம்*

மற்றும் புள்ளியியல் துறை அமைந்துள்ளது. நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளை அடைய மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மருத்துவமனைகளுக்கான கோட்பாடுகளை வகுத்துள்ளது. உயர் அதிகார குழுவிற்கு இலக்கு 3 மற்றும் இலக்கு 6 அடைவதற்கான திட்டமிடல், செயல்படுத்துதல், கண்காணித்தல் மற்றும் அதற்கான அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள முதன்மைச் செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை தலைமையிலான பணிக் குழு–2 உருவாக்கப்பட்டுள்ளது. பணிக் குழு–2 ஆனது நிலையான வளர்ச்சி இலக்கு 3-ஐ அடைவதற்காகக் குறியீடுகளை உருவாக்குதல், அதற்கான இலக்குகளை வகுத்தல், கண்காணித்தல் மற்றும் இலக்குகளையும் குறியீடுகளையும் ஒன்று சேர்ப்பது போன்ற பணிகளைச் செயல்படுத்துகிறது. மாநில அளவிலான நிலையான வளர்ச்சி இலக்கு 3-க்கான குறியீடுகளையும், மாவட்ட மற்றும் வட்டார அளவிலான குறியீடு கட்டமைப்பினையும் தமிழ்நாடு இறுதி செய்துள்ளது. குறியீடுகளை இறுதி செய்வது, (குறியீடுகளை வரையறுத்தல் மற்றும் கண்காணிப்பின் ஒரு வெளிப்பாடாகவே உள்ளது) அனைத்துத் தரவுகளும் உள்ளடக்கிய கட்டுப்பாட்டுப் பலகை (Dash Board) உருவாக்கப்பட்டு, அத்துறையின் செயல்பாடுகளின் முன்னேற்றம் குறித்தும் கண்காணிக்கப்படுகிறது.

32.3 நிலையான வளர்ச்சி இலக்கு 3 முக்கியமான குறிக்கோள் இலக்குகள் மற்றும் சாதனைகள்:

வகைகள்	குறியீடு	இலக்கு	தமிழ்நாட்டின் தற்போதைய நிலை	ஆதாரம்
தாய்-சேய் நலம்	மகப்பேறு இறப்பு விகிதம்	70	54	SRS 2018-2020
	குழந்தை இறப்பு விகிதம்	25	13	SRS 2020
	இளம் சிசு மரண விகிதம்	12	9	SRS 2020

2023 ஏப்ரல் 18]

வகைகள்	குறியீடு	இலக்கு	தமிழ்நாட்டின் தற்போதைய நிலை	ஆதாரம்
தொற்று நோய்கள்	எய்ட்ஸ், காசநோய், மலேரியா, கவனத்தில் கொள்ளப்படாத வெப்ப மண்டல தொற்று நோய்களை முடிவுக்கு கொண்டு வருதல்	0	1.2 % (DALYs)	GBD 2018
	காசநோய் (2022) மொத்த அறிவிப்பு	1,20,000	93,296 (78%)	NIKSHAY 2022
	ஒரு இலட்சத்திற்கு விபத்து விகிதம்	44	77	NIKSHAY 2022
	மலேரியா (2022)			
	வருடாந்திர ஒட்டுண்ணி குறியீடு <1		வருடாந்திர ஒட்டுண்ணி குறியீடு < 1	மாவட்டத்திலிருந்து பெறப்பட்ட மாநில அறிக்கை
	வருடாந்திர இரத்த பரிசோதனை வீதம்>10%		வருடாந்திர இரத்த பரிசோதனை வீதம்>10.6	
	இறப்பு		இறப்பு இல்லை	
	எய்ட்ஸ் (2022) மொத்த அறிவிப்பு	1.62	1.54	NACO

வகைகள்	குறியீடு	இலக்கு	தமிழ்நாட்டின் தற்போதைய நிலை	ஆதாரம்
தொற்றா நோய்கள்	அகால மரணத்தை மூன்றில் ஒரு பங்காகக் குறைத்தல்	1,40,000	98,859	CRS-MCCD 2021
அதிர்ச்சி/ காயங்கள்	2030-க்குள் ஆர்டிஏவை 50% குறைக்கவும்	8,125	17,473	SCRB 2022

32.4 நிலையான வளர்ச்சிக்கான குறிக்கோள் 3-ன்கீழ் உள்ள இலக்குகள் மற்றும் செயலாக்க வழிமுறைகள்:

நிலையான வளர்ச்சி இலக்கு எண்	நிலையான வளர்ச்சிக்கான குறிக்கோள்	தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் அணுகுமுறைகள்
3.1	2030 ஆம் ஆண்டிற்குள் உலக அளவில் மகப்பேறு மரண விகிதத்தினை 1,00,000 குழந்தை பிறப்புக்கு 70 என்ற விகிதத்தில் குறைத்தல்	➢ 24/7 மணி நேர பாதுகாப்பான பிரசவ சேவை வழங்குதல் ➢ சுமன் சேவையின்கீழ் 126 மையங்களில் ஒருங்கிணைந்த பேறுகால மற்றும் பச்சிளங் குழந்தைகளுக்கான சேவைகளும், 629 மையங்களில் அடிப்படை பேறுகால மற்றும் பச்சிளங் குழந்தைகளுக்கான சேவைகளும், 3,437 மையங்களில் அடிப்படை சேவைகளும் வழங்கப்படுகின்றன.

2023 ஏப்ரல் 18]

நிலையான வளர்ச்சி இலக்கு எண்	நிலையான வளர்ச்சிக்கான குறிக்கோள்	தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் அணுகுமுறைகள்
		➢ மருத்துவமனையில் நிகழும் பிரசவங்களை அதிகரித்தல் ➢ பயிற்சி பெற்றவர்களால் பிரசவ சேவைகளை அளித்தல் ➢ சென்னை உட்பட அனைத்து 400 வட்டாரங்களிலும் மகப்பேறு மருத்துவர்கள் மூலமாக நேரடி மற்றும் மெய்நிகர் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்குதல் ➢ கர்ப்பகால சிக்கல் உள்ள தாய்மார்களை பிக்மி மென்பொருள்மூலம் கண்காணித்தல். ➢ மரு.முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டத்தை செயல்படுத்துதல் ➢ ஒருங்கிணைந்த அவசரக்கால பிரசவம் மற்றும் பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு சேவைகள் ➢ பேறுகால சிக்கல்களுடைய கர்ப்பிணி தாய்மார்கள்மீது சிறப்பு கவனம் செலுத்துதல் ➢ மகப்பேறு மற்றும் குழந்தை நலனுக்கான வழிமுறைகளை உறுதிப்படுத்துதல் ➢ ஜனனி சுரக்ஷா யோஜனா (JSY) ➢ ஜனனி சிசு சுரக்ஷா கார்யக்கிரம் (JSSK) ➢ மருந்துகள் / நோய் கண்டறிதல் / உணவு / வாகன வசதிகளை வழங்குதல்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

நிலையான வளர்ச்சி இலக்கு எண்	நிலையான வளர்ச்சிக்கான குறிக்கோள்	தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் அணுகுமுறைகள்
		➢ அவசரக்கால போக்குவரத்து வசதி சேவைகளை வழங்குதல் ➢ கர்ப்ப கால இரத்தசோகை நோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை (இரத்த வங்கி, இரும்பு சத்து – ஊசி) அளித்தல். ➢ பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் (சமூக நலத் துறை) செயல்படுத்துதல் ➢ மகப்பேறு இறப்புத் தணிக்கை (மாநிலம் மற்றும் மாவட்ட அளவில்) நடத்தப்படுகிறது ➢ தேசிய உயர்நிலை மருத்துவப் பட்டப்படிப்பினை (DNB) மாவட்ட மருத்துவமனைகளில் தொடங்கி வலுப்படுத்துதல்
3.2	2030 ஆம் ஆண்டிற்குள் இளம் சிசுக்கள் மற்றும் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் தடுக்கக்கூடிய மரணத்தை முடிவுக்கு கொண்டு வருதல், இளம் சிசு மரணத்தை 1000 உயிருடன் பிறக்கும் குழந்தைகளுக்கு	➢ அவசியமான பச்சிளம் குழந்தைகள் உயிர்கொடுத்தல் மற்றும் பராமரிப்பு சேவைகளை வழங்குதல் ➢ அனைத்து மருத்துவமனை அளவிலான பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு பிரிவு(FBNC) ➢ வீட்டளவில் பிறந்த குழந்தைகள் கவனிப்பு (HBNC) சேவைகள். ➢ ஒருங்கிணைந்த பச்சிளம் குழந்தை மற்றும் குழந்தைகளுக்கான நோய் பராமரிப்பு சேவைகள் (IMNCI)

2023 ஏப்ரல் 18]

நிலையான வளர்ச்சி இலக்கு எண்	நிலையான வளர்ச்சிக்கான குறிக்கோள்	தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் அணுகுமுறைகள்
	12 கீழாகவும் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் மரணத்தை 1000 குழந்தைகளுக்கு 25 கீழாகவும், குறைப்பதற்கு அனைத்து நாடுகளும் முடிவெடுத்துள்ளன.	➢ இளம் சிசுவிற்கான சிறப்பு ஊர்தி / சிறப்பு பச்சிளம் குழந்தை பராமரிப்பு பிரிவு / இளம் சிசுநிலைப்படுத்துதல் / கங்காரு தாய் பராமரிப்பு ➢ நோய்த் தடுப்பூசி சேவைகளை வழங்குதல் ➢ தேசிய பள்ளி சிறார் நலத் திட்டத்தின்கீழ் பிறவிக் குறைபாடுகள், நோய்கள், வளர்ச்சி தாமதம் மற்றும் ஊட்டச்சத்து குறைபாடுகள் போன்றவை உள்ளதா என்பதை கண்டறிவதற்கான பரிசோதனைகள் (RBSK) ➢ ஊட்டச்சத்து மறுவாழ்வு மையங்கள் ➢ ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின்மூலம் வளர்ச்சி கண்காணிப்பு மற்றும் கூடுதல் சத்துணவு வழங்குதல்
3.3	*2030 ஆம் ஆண்டுக்குள் எய்ட்ஸ், காசநோய், மலேரியா, கவனத்தில் கொள்ளப்படாத வெப்ப மண்டல நோய்களை முடிவுக்கு கொண்டு வருதல், மஞ்சள் காமாலை, நீர்மூலம் பரவக்கூடிய நோய்கள் மற்றும்*	➢ தேசிய எய்ட்ஸ் கட்டுபாட்டுத் திட்டத்தை தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தின்மூலம் திறம்பட செயல்படுத்துதல் ➢ அனைத்து கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் எச்.ஐ.வி. பரிசோதனை மேற்கொள்ளுதல். ➢ தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத்தில் பன்மருந்து எதிர்ப்பு காசநோய் மற்றும் தீவிரமருந்து எதிர்ப்பு

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

நிலையான வளர்ச்சி இலக்கு எண்	நிலையான வளர்ச்சிக்கான குறிக்கோள்	தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் அணுகுமுறைகள்
	பிற தொற்று நோய்களை எதிர் கொள்ளுதல்	காசநோய் மேலாண்மைத் திட்டங்களைச் செவ்வன செயல்படுத்துதல் ➢ மாநில காசநோய் கணக்கெடுப்புமூலம் காசநோய் அதிகம் உள்ள இடங்களைக் கண்டறிந்து சமுதாய அளவிலானத் தனிப்பட்ட இடையீடுகளை அமல்படுத்துதல் ➢ பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து, பூச்சிகளால் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான தேசிய திட்டத்தினை செயல்படுத்துதல். கொசு ஒழிப்பு பணிக்காக தற்காலிக களப்பணியாளர்களை நியமித்தல். ➢ மலேரியாவை கண்டறிய காய்ச்சல் கண்காணிப்பை அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளின்மூலம் செயல்படுத்துதல். ➢ வருடாந்திர இரத்த பரிசோதனை விகிதம் = › 10% ➢ பூச்சு கொல்லி மருந்துகளை அதிக கவன பகுதிகளில் செலுத்துதல்

2023 ஏப்ரல் 18]

நிலையான வளர்ச்சி இலக்கு எண்	நிலையான வளர்ச்சிக்கான குறிக்கோள்	தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் அணுகுமுறைகள்
		➢ ஆஷாக்கள்மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் ➢ ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்புத் திட்டத்தினைச் செயல்படுத்துதல் ➢ ஆய்வக தகவல் அமைப்புமூலம் மாவட்ட பொது சுகாதார ஆய்வகங்களை 32 மாவட்டங்களில் நிறுவுதல். ➢ ஏற்கெனவே உள்ள ஆய்வக சேவைகளை இந்திய பொது சுகாதார அமைப்பு வகுத்துள்ள தரத்தினை பூர்த்தி செய்யும் வகையில் வலுப்படுத்ததல்
3.4	2030 ஆம் ஆண்டிற்குள் தொற்றா நோய்களினால் ஏற்படும் அகால மரணத்தினை உரிய நோய்த் தடுப்புமூலம் மூன்றில் ஒரு பங்காகக் குறைத்தல், மன நலம் மற்றும் ஆரோக்கிய மேம்பாடு அளித்தல்	**மக்களைத் தேடி மருத்துவம்:** • ஒருங்கிணைந்த வீட்டளவிலான சுகாதாரச் சேவைகள் • அனைத்து சுகாதார நிலையங்களிலும் தொற்றா நோய்களுக்கான தனி பிரிவுகளை நிறுவுதல் • முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் தொற்றா நோய்களால் ஏற்படும் சிக்கல்களுக்கான சிகிச்சையை சேர்த்தல் • தேசிய மன நலத் திட்டத்தை செயல்படுத்துதல்

நிலையான வளர்ச்சி இலக்கு எண்	நிலையான வளர்ச்சிக்கான குறிக்கோள்	தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் அணுகுமுறைகள்
		• வீட்டளவிலான இயன்முறை சிகிச்சை மற்றும் நோய் ஆதரவு சிகிச்சை வழங்குதல் • இறுதிகட்ட சிறுநீரக செயலிழப்பு நோயாளிகளின் பராமரிப்பு / தொடர்ச்சியான வயிற்று பகுதி சவ்வு (வழியாக) இரத்த சுத்திகரிப்பு சேவைகள் வழங்குதல்
3.5	*போதைப் பொருட்களை தவறாகப் பயன்படுத்துதல், போதை மருந்து நுகர்வு மற்றும் மதுவினால் ஏற்படும் தீங்குகள் போன்றவற்றைத் தடுப்பதற்கான உறுதியான நடவடிக்கை எடுத்தல் மற்றும் சிகிச்சையளித்தல்*	• போதைப் பழக்க தடுப்பு மையங்களை அனைத்து அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் அமைத்தல் • அனைத்து பள்ளிகள், கல்லூரிகள் பணித்தளங்கள், சிறைச்சாலைகளில் மாவட்ட மன நல சுகாதார குழுவில் இலக்கு தலையீடு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு போதை பொருட்கள் மற்றும் அதன் தீய விளைவுகள், அதற்கான சிகிச்சை சேவைகள் குறித்த விழிப்புணர்வு வளரிளம் பருவத்தினருக்கு ஏற்படுத்த பிரத்யேகமாக 24X7 மணி நேரமும் தொலை மன நல சுகாதார உதவி சேவை 14416 என்ற எண்ணில் வழங்கப்படுகிறது.

2023 ஏப்ரல் 18]

நிலையான வளர்ச்சி இலக்கு எண்	நிலையான வளர்ச்சிக்கான குறிக்கோள்	தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் அணுகுமுறைகள்
3.6	*2030 ஆம் ஆண்டிற்குள் உலக அளவில் சாலை போக்குவரத்து விபத்துகளால் ஏற்படும் மரணங்கள் மற்றும் காயமடைவோர் எண்ணிக்கையை பாதியாக குறைத்தல்*	• *தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர மருத்துவ முன்னெடுப்பு திட்ட செயலாக்கம் முழுமை பெற்று மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. நெடுஞ்சாலைகளில் மொத்தம் 94 மருத்துவமனைகள் நிலை 1, 2 மற்றும் 3* TAEI *மையங்களாக நிலை நிறுத்தப்பட்டுள்ளன* • IT BAsed TrAumA Registry– *காய மின் பதிவேடு அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு தற்போது தகவல்கள் உடனுக்குடன் துல்லியமாக பெறப்பட்டுள்ளது. இதன்மூலம் திரட்டப்படும் தகவல் அனைத்தும் நேரடி கண்காணிப்பு மற்றும் பகுப்பாய்வின் வழியாக அவசர மருத்துவச் சேவைகளின் தரம் அனைத்து* TAEI *மருத்துவமனைகளிலும் உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் மாநிலம் முழுவதும் உள்ள 222 பிரேத பரிசோதனை மையங்களில் இருந்து மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனைகள் குறித்த நிகழ்நேரத் தரவுகளைப் பெறுவதற்கும், மருத்துவமனைகளில் பதிவு செய்யப்பட்ட சாலை விபத்து*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

நிலையான வளர்ச்சி இலக்கு எண்	நிலையான வளர்ச்சிக்கான குறிக்கோள்	தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் அணுகுமுறைகள்
		மரணங்கள் மற்றும் காவல்துறை பதிவேடுகளை ஒருங்கிணைப்பதற்கும், மாநிலத்தில் சாலைவிபத்தில் உயிரிழப்புகளின் சரியான எண்ணிக்கையை பெறுவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இது 2030-க்கு முன்னர் எஸ்.டி.ஜி (SDG) இலக்கு 3.6-ஐ அடைய உதவுகிறது. • இன்னுயிர் காப்போம், நம்மை காக்கும் 48 திட்டத்தின் மூலமாக 6 மணிநேரத்திற்குள் அவசர அறுவைச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இத்திட்டம் டிசம்பர் 2021 – மார்ச் 2023 வரை 1,53,091 பயனாளிகளுக்கு ரூபாய் 135.01 கோடி செலவில் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. மேலும் இது போன்ற அவசர கால மருத்துவ செலவுகளினால் குடும்பங்களுக்கு ஏற்படும் பொருளாதார இழப்புகள் இதன்மூலம் தடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென 235 அரசு மருத்துவமனைகள், 447 தனியார் மருத்துவமனைகள் என மொத்தம் 682 மருத்துவமனைகள் மருத்துவ

2023 ஏப்ரல் 18]

நிலையான வளர்ச்சி இலக்கு எண்	நிலையான வளர்ச்சிக்கான குறிக்கோள்	தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் அணுகுமுறைகள்
		சிகிச்சைகள் வழங்கிட அங்கீகரிக்கப்பட்டுள்ளன. • 108 அவசர கால ஊர்திகள் சேவையை (108 Emergency AmBulAnce Services) மேலும் வலுப்படுத்த ரூபாய் 25.50 கோடி மதிப்பீட்டில் கூடுதலாக 75 அவசரச் சிகிச்சை ஊர்திகள் புதியதாக வழங்கப்பட்டு, அதிக விபத்துகள் நிகழும் இடங்களில் பயன்பாட்டில் உள்ளது. • தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர மருத்துவ முன்னெடுப்பு திட்டத்தின் முயற்சியால் விபத்துகளின் எண்ணிக்கை 2019ஆம் ஆண்டை விட 2022ஆம் ஆண்டில் 1.4% அதிகரித்தப்போதிலும் விபத்தினால் ஏற்படும் மரணங்கள் 3% குறைந்துள்ளது.
3.7	2030 ஆம் ஆண்டிற்குள் உலக அளவில் அனைவருக்கும் குடும்ப நலச் சேவை தகவல் மற்றும் கல்வி, பாலின மற்றும் பேறுசார் சுகாதார கவனிப்பு	• தேசிய வளரிளம் பருவத்தினர் சுகாதார (RKSK) திட்டத்தினை செயல்படுத்துதல் • வளரிளம் பருவத்தினருக்கான இணக்கமான சுகாதார மையங்களை நிறுவுதல்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

நிலையான வளர்ச்சி இலக்கு எண்	நிலையான வளர்ச்சிக்கான குறிக்கோள்	தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் அணுகுமுறைகள்
	மற்றும் தொடர்பான சிசிச்சை கிடைத்திட செய்தல்	• தேசிய உத்திகளுடனான பேறுசார் சுகாதார ஒருங்கிணைப்பு வளமையங்களாக செயல்படக் கூடிய நவீன வளரிளம் பருவ இணக்க சுகாதார மையங்கள் நிறுவுதல் • 16 RKSK மாவட்டங்களில், பள்ளி சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய தூதுவருக்கான பயிற்சி • ஒருங்கிணைந்த ஆலோசனை மற்றும் பரிசோதனை மையம்-சிகிச்சை ஆலோசகர்கள் நியமித்தல் • வாரந்தோறும் இரும்புச் சத்து மாத்திரைகள் வழங்குதல் • மாதவிடாய் கால சுகாதார திட்டத்தின்கீழ் விலையில்லா இலவச சானிடரி நாப்கின்கள் வழங்குதல் • 104 இலவச பொது அழைப்பு மைய சேவை வழங்குதல்.
3.8	அனைவருக்கும் சுகாதார திட்டம்மூலம் அனைத்து மக்களுக்கும் நிதிப் பாதுகாப்புடன் கூடிய தரமான அத்தியவசியமான மருத்துவ சேவைகள், மருந்துகள் மற்றும்	• மக்களைத் தேடி மருத்துவம் • மக்கள் தொகை நல பதிவேடுமூலம் பயனடைவோர் விவரம் பதிவு செய்தல் • நலவாழ்விற்கான உரிமை • நலவாழ்வு மையங்களை வலுப்படுத்துதல் • 12 ஒருங்கிணைந்த நலவாழ்வு சேவைகளை துணை சுகாதார நிலையங்கள்மூலம் வழங்குதல்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 18]

நிலையான வளர்ச்சி இலக்கு எண்	நிலையான வளர்ச்சிக்கான குறிக்கோள்	தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் அணுகுமுறைகள்
	தடுப்பு மருந்துகள் கிடைக்கச் செய்தல்.	• ஆரோக்கிய வாழ்விற்கான சமூக நடவடிக்கை மற்றும் கிராம சுகாதார தூய்மை மற்றும் ஊட்டச்சத்து குழு
3.9	2030 ஆம் ஆண்டிற்குள் தீ, வேதிப்பெருட்கள், காற்று, நீர், நிலம் மாசுபாடு / அசுத்தத்தால் ஏற்படும் உயிரிழப்பு மற்றும் நோய் பாதிப்பினை குறிப்பிடத்தக்க அளவு குறைத்தல்	• மாநில அளவில் பருவ நிலை மாற்றம் குறித்த தனி பிரிவினை ஏற்படுத்துதல் • உயிர் மருந்தியல் கழிவுகள் மேலாண்மை விதிகள் – 2016 திறம்பட அமல்படுத்துதல் • உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய சட்டத்தினை திறம்பட அமல்படுத்துதல். (FSSA)
3.10	புகையிலை தடுப்பு சார்ந்த வழிகாட்டுதல்களை செயல்படுத்துவதை தீவிரப்படுத்துதல்	• தேசிய புகையிலை தடுப்பு திட்டத்தை அமல்படுத்துதல் • மாநில மற்றும் மாவட்ட புகையிலை தடுப்பு அலகினை ஏற்படுத்துதல் • சிகரெட் மற்றும் இதர புகையிலை சார்ந்த பொருட்கள் தடைச் சட்டத்தை அமல்படுத்துதல் • அனைத்து பள்ளி/ கல்லூரிகளிலும் புகையிலை இல்லாத பள்ளி/கல்லூரி வளாகத்தினை உறுதி செய்தல்

TRUTH ALONE TRIUMPHS

நிலையான வளர்ச்சி இலக்கு எண்	நிலையான வளர்ச்சிக்கான குறிக்கோள்	தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் அணுகுமுறைகள்
3.11	அனைவருக்கும் மருந்து மற்றும் தடுப்பூசி வழங்குதல் மற்றும் ஆராய்ச்சிகளுக்கு ஆதரவு அளித்தல்	• அனைத்து அரசு சுகாதார மையங்களிலும் மருந்துகள், தடுப்பூசிகள் மற்றும் நோய் பரிசோதனை வசதிகளை அளித்தல் • கிங் நோய்த் தடுப்பு மருந்து மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு தேவையான நிதி ஆதரவு அளித்தல்
3.12	வளரும் நாடுகளில் சுகாதாரத்திற்கான நிதி ஒதுக்கீடு மற்றும் சுகாதார மனித வளத்தை அதிகரித்தல்.	• சுகாதார வரவு—செலவுத் திட்டத்திற்கு அதிக அளவில் நிதி ஒதுக்கீட்டினை 10% உயர்த்துதல் • மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக சுகாதாரப் பணியாளர்களை தேர்வு செய்தல்
3.13	சுகாதார பாதிப்பு குறித்து முன்னெச்சரிக்கை சுகாதார இன்னல்கள் குறைப்பு நடவடிக்கைகள் மற்றும் மேலாண்மையை வலுப்படுத்துதல்.	• ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்பு திட்டத்தை அமல்படுத்துதல் • ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்பு திட்டத்தின்மூலம் தீவிர நோய் பரவல் தகவல்கள் பதிவு செய்யப்பட்டவை

2023 ஏப்ரல் 18]

<table>
<tr><th>நிலையான வளர்ச்சி இலக்கு எண்</th><th>நிலையான வளர்ச்சிக்கான குறிக்கோள்</th><th>தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் அணுகுமுறைகள்</th></tr>
<tr><td></td><td></td><td>
<table>
<tr><th>வருடம்</th><th>பதிவான மொத்த தீவிர நோய் பரவல்</th><th>உருவாக்கப்பட்ட மொத்த ஆரம்ப எச்சரிக்கை மதிப்பெண்</th><th>சுகாதார நிலை எச்சரிக்கை</th></tr>
<tr><td>2021</td><td>48</td><td>1,036</td><td>0</td></tr>
<tr><td>2022</td><td>94</td><td>1,149</td><td>248</td></tr>
<tr><td>2023</td><td>5</td><td>27</td><td>0</td></tr>
<tr><td>மொத்தம்</td><td>147</td><td>2,212</td><td>248</td></tr>
</table>
• சுகாதாரப் பணியாளர்களுக்கான திறன் மேம்பாடு நடவடிக்கைகளை மேம்படுத்தல்
</td></tr>
</table>

நமது மாநிலம் தாய்-சேய் நல மேம்பாட்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை அடைந்துள்ளது. தமிழ்நாட்டில் 99.99 விழுக்காடு மருத்துவமனைப் பிரசவங்கள் மருத்துவமனையில் நிகழ்கின்றன (HMIS *2021). மகப்பேறு மரண விகிதம்* (MMR), *ஒரு இலட்சம் பிரசவங்களில் 54 இறப்புகளாக* (SRS *2018-20*) *குறைக்கப்பட்டதன்மூலம் நிலையான வளர்ச்சி இலக்கினை 2030 ஆம் ஆண்டிற்கு முன்னதாகவே தமிழ்நாடு அடைந்துள்ளது. மேலும் மாதிரி பதிவு அமைப்பு 2020-ன்படி, 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம்* (IMR) *2015-ல், 1000 உயிருடன் பிறந்த குழந்தைகளுக்கு 20 என்ற நிலையிலிருந்து, 13 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. இது தேசிய அளவிலான 32-ஐ விடக் குறைவானதாகும். மேலும் இளம்சிசு இறப்பு விகிதம்* (IMR), *தமிழ்நாட்டில் 2015 ஆம் ஆண்டில் 1000 உயிருடன் பிறந்த குழந்தைகளுக்கு 19 என்ற நிலையில் இருந்து, 13 ஆக 2020-ல் குறைக்கப்பட்டுள்ளது. இது தேசிய அளவிலான சிசு மரண விகிதம் விட (1000 உயிருடன் பிறந்த குழந்தைகளுக்கு) 28-ஐ விடக் குறைவாக உள்ளது. மேலும் தடுப்பூசி அளிக்கப்பட்ட*

[2023 ஏப்ரல் 18

குழந்தைகளின் எண்ணிக்கை விகிதம் 99 சதவிகிதமாக (State HMIS 2022–2023) இருந்து வரும் நிலையில் அனைவருக்கும் தடுப்பூசி என்ற இலக்கினை அடையும் தருவாயில் உள்ளது.

32.5 இதுவரை அடைந்துள்ள சாதனைகளை நிலைநிறுத்தி மேலும் மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதோடு, புதிதாகத் தோன்றிவரும் சுகாதாரச் சவால்களைச் சமாளித்தல் ஆகிய இரட்டை சவால்களில் சமாளிக்க வேண்டியுள்ளது. குறைந்த கருவுறு விகிதம், குறைந்த இறப்பு விகிதம், நீடித்த சராசரி ஆயுட்காலம் ஆகிய சாதனைகளுடன், உணவுப் பொருட்கள், உணவு பழக்க மாற்றங்கள், சுற்றுச்சூழல் மற்றும் சமூகக் காரணி மாற்றங்களினால் ஏற்படும் சூழ்நிலை மாற்றம் மற்றும் மக்கள் தொகை, வயது மாற்றம் போன்ற காரணங்களால் சார்ந்த மாறுபட்ட தொற்றா நோய்களின் பாதிப்பு மாநிலத்தில் அதிகரித்து வருகிறது.

நமது மாநிலம் தற்போது எதிர் கொண்டு வரும் சவால்கள்:

- முக்கியச் சுகாதாரக் குறியீடுகளில் அடைந்துள்ள சாதனைகளை நீடித்து நிலைக்க செய்தல்.
- தொற்றா நோய்கள், வயது முதிர்ந்தோர் நலம், மன நலம், பருவநிலை மாற்றம் ஆகியவற்றோடு மற்றும் பிற தொற்றுநோய்கள் காரணமாக அதிகரிக்கும் நோய்கள் மற்றும் மரணத்தை எதிர்கொள்ளுதல்.
- அனைவருக்கும் எளிதாகக் கிடைக்கக்கூடிய வகையில், தரமான குறைந்த செலவில் இதுவரை விடுபட்ட மருத்துவச் சேவைகளை வழங்குதல்.
- சமுதாய அதிகார பகிர்வு மற்றும் பங்களிப்புடன்கூடிய நிர்வாகம்.

அத்தியாயம்—33

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம்

33.1 1987 ஆம் ஆண்டில் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக சென்னை சட்டம், 1987 (தமிழ்நாடு சட்டம் 37 / 1987)படி இப்பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது; 1988 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் செயல்பட்டு வருகிறது. இந்தியாவிலுள்ள மிகப் பெரிய மருத்துவப் பல்கலைக்கழகங்களில்

2023 ஏப்ரல் 18]

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகமும் ஒன்றாகும். இப்போதளவில், இப்பல்கலைக்கழகத்தின் இணைப்பு பெற்ற கல்வி நிறுவனங்களில், சுமார் 2,00,000 மாணாக்கர்கள் பயின்று வருகின்றனர். இப்பல்கலைக்கழகமானது மருத்துவம், பல் மருத்துவம், ஆயுஷ், மருந்தாக்கியல், செவிலியர் படிப்பு, இயன்முறை சிகிச்சை, தொழில்வழி சிகிச்சை மற்றும் துணை மருத்துவப் படிப்புகளுக்கான கல்விப் புலங்களைக் கொண்டு, 710-க்கும் மேலான இணைப்பு கல்வி நிறுவனங்களுடன் செயல்பட்டு வருகின்றது. தரமான கல்வி மற்றும் பயன்பாட்டு ஆராய்ச்சி ஆகிய இரட்டைக் குறிக்கோள்களே, இப்பல்கலைக்கழகத்தின் முக்கிய நோக்கங்களாகும். தமிழ்நாட்டில் செயல்படக்கூடிய அரசு மற்றும் சுயநிதி மருத்துவக் கல்லூரிகள், பல் மருத்துவக் கல்லூரிகள், ஆயுஷ் கல்லூரிகள், மருந்தாக்கியல் கல்லூரிகள், செவிலியர் கல்லூரிகள், தொழில் வழி சிகிச்சைக் கல்லூரிகள், துணை மருத்துவ மற்றும் மருத்துவச் சார்புக் கல்லூரிகள் ஆகியவற்றைத் தொடங்குவதற்கான அனுமதி வழங்குவதற்கும், மேற்படி கல்விச் சான்றுகளையும் பட்டங்களையும் வழங்குவதற்கும், அரசால் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகம் இதுவே ஆகும்.

33.2 இப்பல்கலைக்கழகத்தில் கீழ்க்கண்ட துறைகள் உள்ளன:

அ) குருதி ஏற்றத்துறை: எம்.டி. குருதி ஏற்ற மருத்துவம்

ஆ) தொற்றுநோயியல் துறை: எம்.எஸ்.சி. தொற்றுநோயியல், எம்.எஸ்.சி. பொது சுகாதார இதழியல், எம்.எஸ்.சி. பொது சுகாதாரம்

இ) பரிசோதனை மருத்துவத் துறை

ஈ) மருத்துவ மரபியல் துறை

உ) நோய்த் தடுப்புத் துறை

ஊ) சித்த மருத்துவத் துறை

எ) மருத்துவக் கல்வி மற்றும் பாடத் திட்ட மேம்பாட்டுத் துறை

33.3 ஒருங்கிணைப்பு — புரிந்துணர்வுச் செயல்பாடுகள்: *மருத்துவக் கல்வி மற்றும் ஆய்வுப் பணிகளைச் சர்வதேச அளவில் மேற்கொள்ளும் வகையிலும், பன்னாட்டு ஒத்துழைப்பை மேம்படுத்தும் வகையிலும்,*

TRUTH ALONE TRIUMPHS

[*2023 ஏப்ரல் 18*

- *எடின்பரோ ராயல் காலேஜ் ஆஃப் சர்ஜன்ஸுடன் இணைந்து சில செயல்பாடுகளை 2021 முதல் மேற்கொண்டு வருகிறது. இக்கல்லூரி இங்கிலாந்தை விட்டு வெளியூரில் முதன்முறையாக கருத்தரங்கம் இந்தப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடத்தியது.*

- *இந்தியன் கவுன்சில் ஆப் மெடிக்கல் ரிசர்ச் ஆகியவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் 2021 அன்று ஏற்படுத்திக் கொண்டது. இவற்றின் வழியாகவும், கல்வியியல் மற்றும் ஆய்வுப் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன.*

- *2022 அன்று அண்ணா பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆய்வுப் பணிகளுக்காக ஏற்படுத்திக்கொண்டது.*

33.4 தேர்வுகளின் இணையவழிக் கண்காணிப்பு – விடைத்தாள் மதிப்பீடு: *தேர்வுகளிலும், விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியிலும், வெளிப்படைத் தன்மை வேண்டும் என்பதற்காக, தேர்வு மையங்கள் அனைத்தும் நேர்மையாகக் கண்காணிக்கப்படும் முறையை, 2020 ஆம் ஆண்டில் இப்பல்கலைக்கழகம் அறிமுகப்படுத்தியது. தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்திலிருந்தே கண்காணிக்க இயலும், முறைகேடுகளின்றித் தேர்வுகள் நடத்தப்பட வேண்டும் என்பதில் இப்பல்கலைக்கழகம் உறுதியாக உள்ளது. விடைத்தாள்களைக் கையில் தொடாமல், கணினித் திரையில் மதிப்பீடு செய்யும் முறை ஏற்கெனவே இப்பல்கலைக்கழகத்தில் நடைமுறையில் உள்ளது. இந்த முறையினால், மதிப்பீடு மற்றும் மதிப்பெண் முறைகேடுகள் முழுமையாகத் தவிர்க்கப்பட்டுள்ளன. இப்பல்கலைக்கழகத்தின் விடைத்தாள் மதிப்பீட்டுச் செயல்பாட்டில், 'பொய்நிகர் இடைமுக முறை'* (Virtual Desktop Interface) *அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இம்முறையில், மதிப்பீட்டாளர்கள் தத்தம் இடங்களிலிருந்தே, பல்கலைக்கழகத்தின் கணினித் திரைகளை அணுகுவார்கள். பொய்நிகர் மதிப்பீடு மற்றும் பொய்நிகர் இடைமுக முறை* (UDI)-*க்கான தொழில்நுட்ப ஆலோசனைகள் மதராஸ் சேம்பர்ஸ் ஆப் காமர்ஸினால் வழங்கப்பட்டது.*

2023 ஏப்ரல் 18]

33.5 இணைப்பு – பல்வேறு படிப்புகளில் உள்ள கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை:

பாடத் திட்டங்கள்	மொத்த கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை
மருத்துவம்	57
பல் மருத்துவம்	22
இந்திய மருத்துவம்	54
மருந்தியல்	84
செவிலியர்	227
இயன்முறை சிகிச்சை	53
தொழில்வழி சிகிச்சை	12
பிந்தைய முனைவர் பட்டய படிப்பு	43
மருத்துவம் சார்ந்த துணை மருத்துவக் கல்வி	174

33.6 கல்வி பிரிவு: பல்கலைக்கழக அனைத்து சேவைகளும் இணையமூலம் நடைபெறுகிறது. மாணவர்கள் மற்றும் அரசின் கோரிக்கைக்கு இணங்க கட்டணம் பெருமளவுக் குறைக்கப்பட்டுள்ளது.

33.7 மானியங்கள் – பிற செயல்பாடுகள்: ஆண்டுதோறும், மருத்துவ ஆய்வுகள், பல் மருத்துவ ஆய்வுகள், ஆயுஷ் மருத்துவ ஆய்வுகள் மற்றும் மருத்துவச் சார்பு ஆய்வுகள் ஆகியவற்றுக்கு பல்கலைக்கழக ஆய்வு நிதியுதவி வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும் ஆறு கல்வி நிறுவனங்களுக்கு (சுழற்சி முறையில்) விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கான நிதியுதவி, இணைப்புக் கல்வி நிறுவனங்களுக்குக் கல்விக் கருத்தரங்குகளும் தொடர் கல்வி நிகழ்வுகளும் நடத்துவதற்கான நிதியுதவிகளும் ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன. மருத்துவம் மற்றும் சுகாதார அறிவியல் கல்வியின் வளர்ச்சிக்கு இப்பல்கலைக்கழகம் சாதகமாகப் பங்களிக்கிறது. அதே நேரத்தில் மிக உயர்ந்த நெறிமுறை மற்றும் தொழில்முறை தரங்களை நிலை நிறுத்துகிறது.

இணைப்பு-II

(301 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 4-ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

முன்னுரை:

"சாதி ஒழித்திடல் ஒன்று – நல்ல
தமிழ் வளர்த்தல் மற்றொன்று
பாதியை நாடு மறந்தால் – மற்ற
பாதி துலங்குவதில்லை"

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் இவ்வரிகளுக்கேற்ப, சாதி வேறுபாடுகளற்ற, சமூக நீதி அடிப்படையிலான சமத்துவ சமுதாயத்தினை நிறுவுவதில் உறுதி பூண்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆற்றல் மிக்க தலைமையின்கீழ் இயங்கி வரும் தமிழ்நாடு அரசு, சமூகத்தின் விளிம்பு நிலையில் இருக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை அனைத்து நிலைகளிலும் உயர்வடையச் செய்வதற்கான திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது.

தொலைநோக்குத் திட்டம்

- *ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கரின் கல்வி மேம்பாட்டில் தனிக் கவனம் செலுத்துவதன்மூலம் அவர்களின் கல்வி, தன்னம்பிக்கை மற்றும் ஆளுமைத் திறன் போன்ற செயல்திறன்களை உயர்த்துதல்.*

- *சமூகத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் மேம்பாட்டின்மீது கவனம் செலுத்துவதன்மூலம் அம்மக்களின் சமூக பொருளாதார நிலையினை உயர்த்தி அவர்களை சமூக நீரோட்டத்திற்குள் கொண்டு வருதல்.*

2023 ஏப்ரல் 18]

- *ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் குறிப்பாக, வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளோர், பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆகியோரின் நலன் தொடர்பான ஒருங்கிணைந்த வளர்ச்சி இலக்கினை 2030 ஆம் ஆண்டிற்குள் எட்டுதல்.*

சமூகத்தின் இதர பிரிவினருக்கு இணையாக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை கல்வியறிவு மற்றும் சமூக-பொருளாதார நிலைகளில் உயர்த்தி, அவர்களது வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் நோக்கத்துடன் 1988 ஆம் ஆண்டில் சமூக நலத் துறையிலிருந்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை தோற்றுவிக்கப்பட்டது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ், ஆதி திராவிடர் நல இயக்குநரகம், பழங்குடியினர் நல இயக்குநரகம், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் காவல் பிரிவு, தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ), தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையம் மற்றும் பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் ஆகிய துறைத் தலைமை அலுவலகங்கள் மற்றும் பல நல வாரியங்களும் இயங்கி வருகின்றன.

ஆதி திராவிட மக்களின் முன்னேற்றத்திற்காக பள்ளிகள் மற்றும் விடுதிகளைத் தோற்றுவித்து நடத்துதல், அவர்களது குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், வீட்டுமனைப் பட்டா வழங்குதல், பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்துதல் மற்றும் ஆதி திராவிட மக்கள் எதிர்கொள்ளும் சமூக சிக்கல்களுக்குத் தீர்வு அளித்தல் ஆகிய பணிகள் ஆதி திராவிடர் நல இயக்குநரகம் மூலமாக கையாளப்பட்டு வருகின்றன.

பழங்குடியினரின் கல்வி மற்றும் சமூக மேம்பாடு தொடர்பாக பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் விடுதிகளை நடத்துதல், அவர்களது குடியிருப்புகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், வன உரிமைச் சட்டத்தினைச் செயல்படுத்துதல் மற்றும் அவர்களது பொருளாதார மேம்பாட்டிற்கான திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆகிய பணிகள் பழங்குடியினர் நல இயக்குநரகம் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

[2023 ஏப்ரல் 18

தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் மூலம் (தாட்கோ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை பொருளாதார மேம்பாடு அடையச் செய்து அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்குடன் மானியத்துடன் கூடிய பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துதல் மற்றும் இளைஞர்கள் சுய தொழில் துவங்கிட மற்றும் வேலைவாய்ப்புக்கான திறன் பெற்றிட ஏதுவாக அவர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்குதல் மற்றும் கட்டுமானப் பணிகள் ஆகியவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குடிமையியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1955 மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம், 1989 ஆகிய சட்டங்களை அமல்படுத்துவதன்மூலம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான பல்வேறு கொடுமைகளைத் தடுத்து, அவர்களின் உரிமைகளை காவல் துறையின் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு பாதுகாத்து வருகிறது.

நீலகிரி மாவட்டத்தில் இயங்கி வரும் பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் தமிழ்நாட்டில் வசிக்கும் 37 வகையான பழங்குடி இனங்களின் மொழி மற்றும் கலாச்சாரம் குறித்த ஆராய்ச்சியினை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையம் தமிழ்நாட்டில் வசிக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் சட்டப்பூர்வமான உரிமைகளை பாதுகாத்திடும் மேலான பணியிலும், அவர்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பணியிலும் ஈடுபட்டு வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான மாநில அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு 1955 ஆம் ஆண்டு குடிமையியல் பாதுகாப்புச் சட்டம் மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம், 1989 மற்றும் திருத்தச் சட்டம் 2015 ஆகியவற்றின் செயலாக்கத்தினை கண்காணித்து வருகிறது.

தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம் மூலமாக புதிரை வண்ணார் இன மக்களுக்கான பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2023 ஏப்ரல் 18]

பழங்குடியின மக்களின் நலனுக்கான பல்வேறு திட்டங்கள் அவர்களைச் சென்றடைவதை உறுதிப்படுத்தும் வகையில் தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியம் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியம் தூய்மைப் பணிபுரிவோருக்கான நலத்திட்டங்களின் செயலாக்கத்தைக் கண்காணித்து வருகிறது.

தமிழ்நாடு பழங்குடியினர் ஆன்றோர் மன்றம், தமிழ்நாட்டில் வசித்து வரும் பழங்குடியின மக்களுக்கான புதிய திட்டங்களை திட்டமிடவும், அவர்களது ஒருங்கிணைந்த முன்னேற்றத்திற்கான சிறப்பான ஆலோசனைகளை வழங்கிடவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சியினை அதிகரித்திடும் வகையில் பல்வேறு நலத் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்திடும் பொருட்டு, 2023-2024 ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.3,512.85 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டங்கள் (SCSP & TSP)

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை சமூக-பொருளாதார மற்றும் கல்வி நிலைகளில் உயர்த்திடும் நோக்குடன் தமிழ்நாட்டில் ஆதி திராவிடர் துணைத் திட்டம் 1980-1981 ஆம் ஆண்டிலிருந்தும் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டம் 1976-1977 ஆம் ஆண்டிலிருந்தும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டங்களுக்காக மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் விகிதாசாரத்திற்கு ஏற்ப முறையே 20.01% மற்றும் 1.17% அளவிற்கு இணையாக மாநில அரசின் ஆண்டு திட்ட ஒதுக்கீட்டில் இருந்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

இத்திட்டங்களின் கண்காணிப்புத் துறையாக (Nodal Department) *ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை செயல்பட்டு வருகிறது. இத்துறையின் செயலாளர் அவர்கள் மாநில அளவில் கண்காணிப்பு அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.*

அனைத்து செயலாக்கத் துறைகளும் இந்நிதியினை விரைவாகவும், முழுமையாகவும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக செலவிடும் பொருட்டு, ஒவ்வொரு மாதமும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கான முன்னேற்ற அறிக்கைகள் அனைத்து செயலாக்கத் துறைகளிலிருந்தும் பெறப்பட்டு, துணைத் திட்டங்களின் முன்னேற்றம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. தலைமைச் செயலாளர் அவர்களைத் தலைவராகக் கொண்ட மாநில அளவிலான கண்காணிப்புக் குழுவால் (State Level Monitoring Committee) அனைத்து துறைகளின் திட்ட முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

2023-2024 ஆம் நிதியாண்டில், மாநில ஆண்டுத்திட்ட ஒதுக்கீடான ரூ.77,930.30 கோடியில், ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்காக ரூ.17,075.70 கோடி (21.91%) மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டத்திற்காக ரூ.1,595.89 கோடி (2.05%) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர் துணைத் திட்டம் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் பிரிவு (SECTORAL) வாரியாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட விவரம்

(ரூ. கோடியில்)

வ. எண்	பிரிவு	ஆதி திராவிடர் துணைத் திட்டம்	பழங்குடியினர் துணைத் திட்டம்
1	ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன்	2,760.49	654.70
2	வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி	1,425.38	191.43
3	ஊரக வளர்ச்சி	1,708.81	206.79
4	சமூகநலன் மற்றும் சத்துணவு	3,899.82	189.77

2023 ஏப்ரல் 18]

வ. எண்	பிரிவு	ஆதி திராவிடர் துணைத் திட்டம்	பழங்குடியினர் துணைத் திட்டம்
5	குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவு	1,221.00	103.00
6	வேளாண்மையும் தொடர்பான நடவடிக்கைகளும்	1,193.93	31.71
7	கல்வி, விளையாட்டு மற்றும் பண்பாடு	1,061.38	113.17
8	மக்கள் நல்வாழ்வு - குடும்பநலன்	855.42	45.95
9	போக்குவரத்து	150.00	0.00
10	பொதுவான பொருளாதாரப் பணிகள்	2,547.00	7.07
11	தொழிலாளரும் தொழிலாளர் நலனும்	58.35	7.71
12	சிறப்பு பகுதித் திட்டங்கள்	30.75	7.50
13	தொழிலும் கனிமங்களும்	150.35	32.46
14	ஏனைய சமூகப் பணிகள்	13.02	4.63
	மொத்தம்	**17,075.70**	**1,595.89**

நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள்-2030

2015 ஆம் ஆண்டு நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் மாநாட்டில் ஏற்படுத்தப்பட்ட "நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள்" உலகளாவிய 17 குறிக்கோள்கள் மற்றும் 169 இலக்குகளின் முக்கியமான அங்கமாக விளங்குகின்றன.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் நீடித்த மற்றும் நிலையான வளர்ச்சி இலக்கு

"எவரும் விடுபடாமல் உள்ளடக்கிய வளர்ச்சி" எனும் மையக் கருத்து இத்துறையுடன் நேரடித் தொடர்புடையதாகும். இத்துறையின் அடிப்படைக் கொள்கையான சமூக நீதி என்பது அனைத்து நிலையான வளர்ச்சி இலக்குகளிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

[2023 ஏப்ரல் 18

நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளின் சாதனைகள் மற்றும் செயல்பாட்டினை ஆய்வு செய்வதற்காக ஒருங்கிணைப்புத் துறைகளின் செயலாளர்களைத் தலைவராகக் கொண்ட 8 செயல்பாட்டுக் குழுக்கள் அமைக்கப்பட்டு காலமுறைக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இலக்குகள் 1, 2, 4, 10 மற்றும் 16 ஆகியவற்றை அடையும் நோக்கில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை செயற்பாட்டுக் குழுக்கள் I, III, IV மற்றும் VIII – ல் உறுப்பினராக உள்ளது.

I. ஆதி திராவிடர் நலன்

2011 ஆம் ஆண்டின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையான 7.21 கோடியில் 20.01 விழுக்காடு (1.44 கோடி) ஆதி திராவிட மக்கள் வசித்து வருகின்றனர்.

சமூகத்தின் விளிம்பு நிலையில் வாழும் ஆதி திராவிட மக்களை கல்வி, சமூக மற்றும் பொருளாதார நிலைகளில் உயர்த்தி அவர்களை சமூக நீரோட்டத்தில் ஒன்றிணைக்கும் நோக்குடன் பல்வேறு கொள்கைகள், நலத் திட்டங்கள், வரவு செலவுத் திட்டங்கள் மற்றும் செயல்முறைத் திட்டங்கள் ஆகியவற்றை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை உருவாக்கி செயல்படுத்தி வருகிறது. இதன் விளைவாக மாநிலத்தின் பல்வேறு நிலைகளிலான ஒட்டுமொத்த கல்வி சேர்க்கை விகிதம் தேசிய சராசரியைவிட உயர்ந்து காணப்படுகிறது.

1. கல்வி மேம்பாட்டுத் திட்டங்கள்

“கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை.”

கல்வி ஒன்றே அழிவற்ற செல்வமாகும். அதற்கொப்பான சிறந்த செல்வம் வேறு எதுவும் இல்லை எனும் தெய்வப் புலவரின் வாக்கிற்கிணங்க, ஆதி திராவிட மக்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு அடிப்படையான கல்வி மேம்பாட்டிற்கு இத்துறை முன்னுரிமை அளித்து வருகிறது.

2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் பொதுப் பிரிவினரின் கல்வியறிவு 80.09

2023 ஏப்ரல் 18]

விழுக்காடாகவும், ஆதி திராவிட மக்களின் கல்வியறிவு 73.26 விழுக்காடாகவும் உள்ளது. இத்துறைக்கான 2023–2024 ஆம் நிதியாண்டின் வரவு-செலவுத் திட்ட மொத்த நிதி ஒதுக்கீடான ரூ.3,512.85 கோடியில், கல்வி சார்ந்த திட்டங்களுக்காக மட்டும் ரூ.2,206.70 கோடி (62.81 விழுக்காடு) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆதி திராவிட மாணாக்கரின் கல்வியறிவு வளர்ச்சி விகிதம் மற்றும் கல்வித்தரம் ஆகியவற்றை உயர்த்திடும் பொருட்டு இத்துறை ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் மற்றும் விடுதிகளை சிறப்பாக நடத்துவதுடன், பல்வேறு கல்வி உதவித்தொகைத் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

1.1 ஆதி திராவிடர் நலப் பள்ளிகள்

ஆதி திராவிட இனத்தைச் சார்ந்த இளைய தலைமுறையினரை முன்னேற்றத்தின் பாதையை நோக்கி வழிநடத்திடும் பெரும் பணியில் அவர்களுக்கு கல்வி புகட்டுவதன் அவசியத்தை உணர்ந்து அவர்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகளில், இத்துறையால் 1,138 பள்ளிகள் தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

ஆதி திராவிடர் நலப் பள்ளிகளின் விவரம் 2022-2023

பள்ளிகள் வகைப்பாடு	எண்ணிக்கை	மாணவர்	மாணவியர்	மொத்தம்
தொடக்கப் பள்ளிகள்	833	18,343	18,130	36,473
நடுநிலைப் பள்ளிகள்	99	4,762	4,612	9,374
உயர்நிலைப் பள்ளிகள்	108	6,012	5,439	11,451
மேல்நிலைப் பள்ளிகள்	98	16,000	14,431	30,431
மொத்தம்	1,138	45,117	42,612	87,729

ஆதி திராவிடர் மாணாக்கர் இடைநிற்றலின்றி உயர்கல்வி பெறுவதை உறுதி செய்திடும் வகையில் ஆதி திராவிடர் நலப் பள்ளிகள், அடுத்த நிலைக்கு தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன.

[2023 ஏப்ரல் 18

இப்பள்ளிகளுக்குத் தேவையான கூடுதல் வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகங்கள், குடிநீர், கழிவறைகள் ஆகிய அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்ந்து ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் பயிலும் மாணாக்கரின் கல்வித்தரத்தை உயர்த்திட ஆசிரியர்களுக்கு நவீன கற்பித்தல் உத்திகள், கணினி தொழில்நுட்பம், மொழியாற்றல் குறித்த பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளுள் 104 பள்ளிகளில் அறிவுத்திறன் வகுப்பறைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், தனியார் தொண்டு நிறுவனங்கள் மூலம் 85 பள்ளிகளில் அறிவுத்திறன் பலகைகள் (Smart Boards) அமைக்கப்பட்டுள்ளன. மேலும், 83 மேல்நிலைப் பள்ளிகள், 103 உயர்நிலைப் பள்ளிகளில் உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் (High-Tech Lab) அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

2022-2023 ஆம் ஆண்டின் முன்னெடுப்புகள்

- 51 ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள கணினி ஆய்வகங்களுக்கு ரூ.87.00 இலட்சம் மதிப்பீட்டில் தடையில்லா மின்சாரம் (UPS) வழங்கப்பட்டுள்ளன.

- 305 ஆதி திராவிடர் நலப் பள்ளிகளுக்குத் தேவையான அறைகலன்கள் மற்றும் தளவாடப் பொருட்கள் ரூ.8.37 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன.

- 87 ஆதி திராவிடர் நல உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு அறிவுத்திறன் வகுப்பறைகளுக்கு அறிவுத்திறன் பலகைகள் (Smart Boards) ரூ.3.16 கோடி செலவில் வழங்கப்பட்டு வருகின்றன.

- 126 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள அறிவியல் ஆய்வகங்களுக்கு ரூ.3.15 கோடி மதிப்பீட்டில் ஆய்வுக்கூட உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

2023 ஏப்ரல் 18]

- *2022-2023 ஆம் கல்வியாண்டில் இத்துறையின்கீழ் இயங்கி வரும் 3 ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகள் அறிவுத்திறன் வகுப்பறைகள், உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள், ஆங்கில மொழிப் பயிற்சி மற்றும் தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு* (NEET) *உள்ளிட்ட போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி ஆகிய வசதிகளடங்கிய மாதிரிப் பள்ளிகளாக ரூ.7.82 கோடி மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.*
- *ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் இயங்கி வரும் தொடக்கப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் கல்வி பயின்று வரும் மாணாக்கரின் கற்றல் திறன் மேம்பாடு அடையும் நோக்கில், 2021–2022 ஆம் கல்வியாண்டு முதல் மாணாக்கருக்கு இணையவழிக் கல்விமூலம் கற்பிக்கப்பட்டு வருகிறது.*

கல்விச் சுற்றுலா

தமிழ்நாட்டில் உள்ள இயற்கை வளங்கள், பறவைகள், விலங்குகள், சரணாலயங்கள் போன்றவற்றையும் நமது நாட்டின் வரலாற்றினை அறிந்துகொள்ளும் வகையில், இத்துறையின்கீழ் இயங்கும் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணாக்கரை கல்விச் சுற்றுலா அழைத்துச்செல்ல ஒரு பள்ளிக்கு ரூ.25,000/ – வீதம் 206 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்காக 2023-2024 ஆம் நிதி ஆண்டில் ரூ.50.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.2 கல்வி உதவித் தொகைத் திட்டங்கள்

அனைத்து குழந்தைகளுக்கும் தரமான, எளிதில் அணுகும் வகையிலான கல்வியை வழங்கி முழுமையான வளர்ச்சி அடையச் செய்திட வேண்டும் என்ற அரசின் நோக்கத்திற்கேற்ப ஆதி திராவிடர் மாணாக்கரை கல்வி கற்க ஊக்கப்படுத்தும் வகையிலும் அவர்கள் கல்விக்கு உறுதுணையாக விளங்கி அம்மாணவர்கள் உயர் கல்வியில் மேம்பாடு அடையச் செய்யும் வகையிலும், இத்துறை பல்வேறு கல்வி உதவித் தொகை மற்றும் கட்டணச் சலுகைத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

[2023 ஏப்ரல் 18

(அ) போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்டம்

பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்புகளில் கல்வி பயிலும் மாணாக்கர் தமது கல்வியை பொருளாதாரத் தடையின்றித் தொடரவும், உயர்கல்வியில் ஆதி திராவிடர் மாணாக்கரின் மொத்த சேர்க்கை விகிதத்தை உயர்த்திடும் நோக்குடனும் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தினைச் செயல்படுத்த ஏற்படும் செலவினத் தொகை 60:40 என்ற விகிதத்தில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் பகிர்ந்துகொள்ளப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் பயன்பெற ஆதி திராவிட மாணாக்கரின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இத்திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளில் கல்வி பயிலும் ஆதி திராவிட மாணாக்கருக்கு கல்விக் கட்டணங்கள் மற்றும் கல்விப்படி (Academic allowances) ஆகியவை கல்வி உதவித் தொகையாக மாணாக்கரின் வங்கி சேமிப்புக் கணக்குகளில் அரசால் வரவு வைக்கப்படுகிறது.

(i) கல்விக் கட்டணங்கள்

அரசு/அரசு உதவி பெறும் கல்வி நிலையங்கள் மற்றும் சுயநிதிக் கல்லூரிகளில் அரசு / நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களில் கல்வி பயிலும் ஆதி திராவிட மாணாக்கருக்கு, அரசு/அரசால் நியமிக்கப்பட்ட கட்டண நிர்ணயக் குழுவால் நிர்ணயிக்கப்படும் கட்டாய மற்றும் திரும்பப் பெற இயலாத கட்டணங்கள் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

(ii) கல்விப்படி (Academic Allowance)

போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் கல்வி சார்ந்த செலவினங்களுக்காக கீழ்க்கண்ட அட்டவணைப்படி படிப்பு வாரியாக கல்விப்படியும் வழங்கப்படுகிறது.

2023 ஏப்ரல் 18]

தொகுதி	படிப்புகள்	ஒரு வருடத்திற்கான கல்விப்படி (ரூ.)	
		விடுதி மாணாக்கர் (Hosteller)	வெளி மாணாக்கர் (Day Scholar)
I	*பொறியியல், மருத்துவம், சட்டம், நவீன ஆடை வடிவமைப்பு தொழில் நுட்பம்* (Fashion Technology), *கால்நடை, வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த தொழிற்படிப்புகளில் பட்டம் மற்றும் முதுநிலை பட்டப்படிப்பு, மேலாண்மை மற்றும் மருத்துவம் சார்ந்த பல்வேறு படிப்புகளில் முதுநிலை பட்டயம்/ பட்டயக் கணக்கர்* (CA/ ICWA/CS/CFA etc.) *மற்றும் முதுநிலை ஆராய்ச்சி மற்றும் முனைவர் பட்டப்படிப்பு* (M.Phil, Ph.D. & Post Doctoral programmes)	*13,500/-*	*7,000/-*
II	*12 ஆம் வகுப்பு படிப்பினை நுழைவுத் தகுதியாகக் கொண்ட மருந்தாக்கியல், செவிலியர், விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் ஹோட்டல் மேலாண்மை போன்ற தொழிற்படிப்புகளில் பட்டம், பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகள்* [B.Sc. (Nursing), B.Pharm, B.O.T, B.P.T, M.Sc (Nursing), M.Pharm, M.P.T, etc.]	*9,500/-*	*6,500/-*

தொகுதி	படிப்புகள்	ஒரு வருடத்திற்கான கல்விப்படி (ரூ.)	
		விடுதி மாணாக்கர் (Hosteller)	**வெளி மாணாக்கர் (Day Scholar)**
III	*தொகுதி I மற்றும் II-ல் இடம் பெறாத இதர இளங்கலை பட்டப்படிப்பு மற்றும் முதுகலை பட்டப்படிப்புகள்* (B.A./B.Sc./B.Com./M.A./ M.Sc./M.Com. etc.)	*6,000/-*	*3,000/-*
IV	*10 ஆம் வகுப்பு படிப்பினை நுழைவுத் தகுதியாகக் கொண்ட தொழில்நுட்பப் பட்டயப் படிப்புகள், சான்றிதழ் படிப்புகள், மேல்நிலைக் கல்வி படிப்புகள் மற்றும் தொழிற்பயிற்சி படிப்புகள்.* (XI, XII, ITI, *தொழிற்பயிற்சிக் கல்வி* etc.)	*4,000/-*	*2,500/-*

மொத்த கல்வி உதவித் தொகையில் 60 விழுக்காடு ஒன்றிய அரசு பங்குத் தொகை மாணவர்களுக்கு நேரடியாக விடுவிக்கப்படும் நிலையில் 2023-2024 ஆம் நிதியாண்டில் 40 விழுக்காடு மாநில அரசு பங்குத் தொகையை விடுவிக்கும் பொருட்டு இத்திட்டத்திற்கென, ரூ.559.56 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) மாநில அரசின் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்டம்

ஒன்றிய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்டத்தின்கீழ் வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகளால் உதவித்தொகை பெற இயலாத ஆதி திராவிடர் மற்றும் கிறித்துவ ஆதி திராவிடர் மாணாக்கருக்கு உதவிடும் பொருட்டு மாநில அரசால் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திலும் கல்வி உதவித்தொகை மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படுகிறது.

2023 ஏப்ரல் 18]

இத்திட்டத்தின்கீழ் பயன்பெற ஆதி திராவிடர் மற்றும் கிறித்துவ ஆதி திராவிடர் இனத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும். மேலும் மாணாக்கரின் பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். அரசுப் பணியாளர்களுக்கு அவர்களது அகவிலைப்படி நீக்கி வருமானம் கணக்கிடப்பட வேண்டும்.

இத்திட்டத்திற்கென 2023-2024 ஆம் நிதியாண்டில், ரூ.80.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) மாநில அரசின் உயர்கல்வி சிறப்பு உதவித் தொகை திட்டம்

அரசு விடுதிகள் அல்லாத கட்டண விடுதிகளில் தங்கி அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிலையங்களில் உயர்கல்வி பயிலும் ஆதி திராவிட மற்றும் கிறித்துவ ஆதி திராவிடர் மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் அவர்களது விடுதி செலவினை ஈடுசெய்ய சிறப்பு உதவித்தொகை கீழ்க்கண்டவாறு வரவு வைக்கப்படுகிறது.

வ. எண்	**படிப்புகள்**	**உதவித் தொகை (ஒரு ஆண்டுக்கு)**
1	*கலை மற்றும் அறிவியல் பட்டப் படிப்புகள் மற்றும் பல்தொழில்நுட்ப பட்டயப் படிப்புகள்*	*ரூ.7,500/-*
2	*தொழிற்படிப்புகள் மற்றும் கலை, அறிவியல் பட்ட மேற்படிப்புகள்*	*ரூ.8,000/-*

இத்திட்டத்தின்கீழ் பயன்பெற மாணாக்கரின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இத்திட்டத்திற்கென, 2023-2024 ஆம் நிதியாண்டில், ரூ.8.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) வெளிநாடுகளில் முதுகலைப்பட்டம் மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகளை பயில்வோருக்கான கல்வி உதவித்தொகைத் திட்டம்

ஆதி திராவிடர், கிறித்துவ ஆதி திராவிடர் மாணாக்கரை வெளிநாடுகளில் உள்ள கல்வி நிறுவனங்களில் முதுகலைப்

பட்டம் மற்றும் அதற்கு மேற்பட்ட முனைவர் ஆராய்ச்சிப் படிப்புகளை மேற்கொள்ள ஊக்குவிக்கும் வகையில், இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இக்கல்வி உதவித்தொகையைப் பெறுவதற்கான ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.8.00 இலட்சமாக 2022-2023 ஆம் ஆண்டு முதல் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் 10 மாணாக்கர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் பயிலக்கூடிய நாடு மற்றும் பயிலும் படிப்பினடிப்படையில் ஒரு மாணவருக்கு ஆண்டிற்கு ரூ.36.00 இலட்சத்திற்கு மிகாமல் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

கல்வி நிறுவனங்களுக்கான உலகளாவிய தரவரிசைப் பட்டியலில் Quacquarelli Symonds (QS) எனும் தர நிர்ணய அமைப்பால் தரப்படுத்தப்படும் முதல் 1000 கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெறும் மாணவர்களுக்கு இவ்வுதவித் தொகை வழங்கப்படுகிறது. மேலும் ஒரு குடும்பத்தில் ஒருவர் மட்டுமே இத்திட்டத்தின்கீழ் பயன்பெற இயலும்.

திருத்தி அமைக்கப்பட்ட இத்திட்டத்தின்கீழ் இதுவரை 18 மாணவர்கள் வெளிநாடுகளில் சென்று கல்வி பயில உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

மேலும் வெளிநாடுகளின் கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெறத் தேவையான TOEFL/IELTS/GRE/GMAT ஆகிய தகுதித் தேர்வுகளில் தேர்ச்சி பெறச் செய்ய, தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்மூலம் பயிற்சி வழங்கப்படுகிறது.

2023-2024 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்துவற்காக ரூ.5.57 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(உ) முழு நேர முனைவர் ஆராய்ச்சிப் படிப்பிற்கான ஊக்கத்தொகை

அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் முழுநேர முனைவர் ஆராய்ச்சிப் படிப்பை மேற்கொள்ளும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ ஆதி திராவிடர் மாணாக்கருக்கு இந்த ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

2023 ஏப்ரல் 18]

மருத்துவம், பொறியியல், கலை, அறிவியல், சட்டம் ஆகிய பிரிவுகளில் ஆய்வுகளில் ஈடுபடும் மாணாக்கரை பொருளாதார ரீதியாக ஊக்குவிக்கும் வகையில் இக்கல்வி உதவித் தொகைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதுடன், இதற்கான ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.8.00 இலட்சமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வோர் ஆண்டும் இத்திட்டத்தின்கீழ் தகுதி பெறும் 1,600 மாணாக்கருக்கு தலா ரூ.1,00,000/- வீதம் கல்வி ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

2022-2023 ஆம் நிதியாண்டில் 1,554 ஆராய்ச்சி மாணாக்கருக்கு ரூ.15.54 கோடி ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2023-2024 ஆம் நிதியாண்டில் ரூ.16.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஊ) ப்ரிமெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்டம்

2021-2022 ஆம் நிதியாண்டு முதல், ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்பு பயிலும் ஆதி திராவிடர் மாணாக்கருக்கான ப்ரிமெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டம் மற்றும் ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் சுகாதாரத் தொழில் புரிவோரின் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகைத் திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு ஒரே திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், இத்திட்டத்திற்கான மொத்த செலவினம் ஒன்றிய, மாநில அரசுகளால் முறையே 60:40 என்ற விகிதத்தில் பகிர்ந்துகொள்ளப்படுகிறது.

திட்டக்கூறு-1

ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்புகளில் பயிலும் மாணாக்கருக்கான ப்ரி மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டம்

அரசு மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற அல்லது ஒன்றிய/ மாநில கல்வி நிலையங்களால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்புகளில் பயிலும் ஆதி திராவிட மாணாக்கருக்கு இத்திட்டத்தின்கீழ் உதவித்தொகை வழங்கப்படுகிறது. இம்மாணாக்கரின் பெற்றோர் அல்லது பாதுகாவலரது ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

திட்டக்கூறு-2

தூய்மைப் பணி மற்றும் சுகாதாரக்கேடு விளைவிக்கும் பணிகளில் பணிபுரிவோரின் குழந்தைகளுக்கான ப்ரி மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம்

தூய்மைப் பணி, தோல் பதனிடுதல், தோல் உரித்தல் மற்றும் கழிவுப் பொருட்களிலிருந்து மறுசுழற்சிக்கு உகந்த பொருட்களைப் பிரித்து சேகரித்தல் ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ளோருக்கு சுகாதாரக்கேடு ஏற்பட வாய்ப்புள்ளதால் அத்தகைய பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு, சாதி, மத வேறுபாடு மற்றும் வருமான வரம்பின்றி இக்கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரையிலான படிப்புகளை அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்களில் பயிலும் மாணாக்கர் இக்கல்வி உதவித் தொகை பெற தகுதி பெறுவர்.

ப்ரி மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டத்தின்கீழ் பின்வரும் வீதத்தில் மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் கல்வி உதவித் தொகை வரவு வைக்கப்படுகிறது.

திட்டக் கூறு	**வெளி மாணாக்கர் (Day Scholar)**	**விடுதி மாணாக்கர் (Hosteller)**
	(ஒரு ஆண்டுக்கு) (ரூபாய்)	
திட்டக்கூறு – 1	*3,500/-* *(வகுப்பு 9-10)*	*7,000/-* *(வகுப்பு 9-10)*
திட்டக்கூறு – 2	*3,500/-* *(வகுப்பு 1-10)*	*8,000/-* *(வகுப்பு 3-10)*

இத்திட்டத்திற்காக, 2023-2024 ஆம் நிதியாண்டில் ரூ.53.73 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.3 கல்விக் கட்டணச் சலுகைகள்

அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்களில் கல்வி பயிலும் ஆதி திராவிடர் மற்றும் கிறித்துவ ஆதி திராவிடர் மாணாக்கர் அனைவருக்கும், வருமான உச்ச வரம்பின்றி, பின்வரும் கல்விக் கட்டணச் சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2023 ஏப்ரல் 18]

(அ) கல்லூரி மாணாக்கருக்கான கற்பிப்புக் கட்டணச் சலுகை

(ஆ) பட்டப் படிப்பு பயிலும் மாணாக்கருக்கான சிறப்பு மற்றும் தேர்வுக் கட்டணச் சலுகை

(இ) முதுகலை பட்டப் படிப்பு பயிலும் மாணவியருக்கு சிறப்பு மற்றும் தேர்வுக் கட்டணச் சலுகை

(ஈ) கல்லூரி மாணாக்கருக்கான விண்ணப்பக் கட்டண விலக்கு

(உ) பள்ளி மாணாக்கருக்கு சிறப்புக் கட்டணச் சலுகை

(ஊ) பத்து, பதினொன்று மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு மாணாக்கருக்கான பொதுத் தேர்வுக் கட்டண விலக்கு.

மேற்காணும் திட்டங்களுக்காக 2023-2024 ஆம் நிதியாண்டில், ரூ.14.64 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.4 பெண் கல்வி சிறப்பு ஊக்கத்தொகைத் திட்டம்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் ஆதி திராவிடர் மாணவியர் இடைநிற்றலின்றி தமது படிப்பைத் தொடர்வதை ஊக்குவிக்கும் வகையிலும், மாணவியர் 100 விழுக்காடு பள்ளியில் சேர்வதை உறுதி செய்வதற்கும் பெண் குழந்தைகளுக்கு ஊக்கத்தொகை வழங்கும் இச்சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் மாணவியருக்கு வழங்கப்படும் ஊக்கத் தொகை குறித்த விவரங்கள் பின்வருமாறு:

வகுப்பு	தொகை (ஆண்டொன்றுக்கு) (ரூபாயில்)
3 முதல் 5 வரை	500/-
6	1,000/-
7 மற்றும் 8	1,500/-

இத்திட்டத்தின்கீழ் 2022-2023 ஆம் நிதியாண்டில், 4,52,043 மாணவியருக்கு ரூ.43.44 கோடி மதிப்பிலான ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென, 2023-2024 ஆம் நிதியாண்டில் ரூ.45.31 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.5 பரிசுத் தொகைத் திட்டம்

இளங்கலை, முதுகலை மற்றும் தொழிற்படிப்பு ஆகிய உயர்கல்வி படிப்புகளில் அதிக மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சிபெறும் மாணாக்கரை ஊக்குவிக்கும் விதமாக, இப்பரிசுத்தொகைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி 60 விழுக்காட்டுக்கு மேல் மதிப்பெண் பெறும் முதல் 1000 ஆதி திராவிடர், கிறித்துவ ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கு பரிசுத் தொகை பின்வருமாறு வழங்கப்படுகிறது.

படிப்பு	பரிசுத் தொகை (ஒருவருக்கு) (ரூபாயில்)	மாணாக்கர் எண்ணிக்கை
இளங்கலை	3,000/-	500
முதுகலை	5,000/-	300
தொழிற்படிப்பு	6,000/-	200

இத்திட்டத்திற்கென 2023-2024 ஆம் நிதியாண்டில், ரூ.42.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.6 பாடப்புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்குதல்

இத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் ஆதி திராவிடர், கிறித்துவ ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கு அவர்களது பொருளாதார சுமையினைக் குறைத்திடும் வகையில் பாடப் புத்தகங்களும், 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கருக்கு குறிப்பேடுகளும் பள்ளிக் கல்வித் துறை மூலமாக வழங்கப்படுகின்றன.

2022-2023 ஆம் நிதியாண்டில், ரூ.94.02 இலட்சம் செலவில் 10 ஆம் வகுப்பில் பயிலும் 17,316 மாணாக்கருக்கும் மற்றும் 12 ஆம் வகுப்பில் பயிலும் 16,576 மாணாக்கருக்கும் சிறப்பு வழிகாட்டி கையேடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கென 2023-2024 ஆம் நிதியாண்டில் ரூ.1.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.7 சீருடைகள் வழங்குதல்

இத்துறையால் நடத்தப்படும் பள்ளிகள் மற்றும் விடுதிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை தங்கிப் பயிலும்

2023 ஏப்ரல் 18]

மாணாக்கருக்கு பள்ளிக் கல்வித் துறை மூலமும், 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் மாணாக்கருக்கு நான்கு இணை சீருடைகள் சமூக நலத் துறையின்கீழ் இயங்கும் மகளிர் தையல் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தாட்கோ மூலமாகவும் தைத்து வழங்கப்படுகின்றன.

2022-2023 ஆம் நிதியாண்டில், இத்திட்டத்தின்கீழ் ரூ.12.95 கோடி செலவில் 36,782 மாணவர்களுக்கும் மற்றும் 24,290 மாணவியருக்கும் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கென, 2023-2024 ஆம் நிதியாண்டில் ரூ.10.57 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.8 பருவ இதழ்கள் மற்றும் புத்தகங்கள் வழங்குதல்

வேலை வாய்ப்புக்கான சந்தையில் தற்போது நிலவும் போட்டிச் சூழலில் பள்ளி / கல்லூரிகளில் கற்பிக்கப்படும் பாடங்களுடன் கூடுதலாக மாணாக்கர் தமது பொது அறிவுத் திறனை வளர்த்துக் கொள்வது அவசியமாகும். மாணாக்கரின் பொது அறிவுத் திறனை மேம்படுத்தவும், அவர்கள் குடிமைப்பணித் தேர்வுகள் உள்ளிட்ட இதர போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ள தயாராகும் வகையிலும், இத்துறையால் நடத்தப்படும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் விடுதிகளில் புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்கள் பின்வருமாறு ஆண்டுதோறும் வாங்கி வழங்கப்படுகின்றன.

வ. எண்	**பள்ளிகள் / விடுதிகள்**	**நூலக புத்தகங்கள் / பருவ இதழ்கள் (ஆண்டுக்கு) (ரூபாயில்)**
1.	*உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகள்*	*1,450/-*
2.	*பள்ளி விடுதிகள்*	*2,070/-*
3.	*கல்லூரி விடுதிகள்*	*7,997/-*

விடுதிகளுக்கு செய்தித்தாள்கள் (2 தமிழ் மற்றும் 1 ஆங்கில நாளிதழ்), மாத இதழ்களான காம்படிசன் சக்ஸஸ் ரிவ்யூ, திட்டம், யோஜனா, குருக்ஷேத்ரா, வார இதழ்களான வேலைவாய்ப்புச் செய்திகள், இந்தியா டுடே மற்றும் வருட புத்தகங்களான இந்தியா இயர் புத்தகம், மனோரமா இயர் புத்தகம் ஆகியவை வழங்கப்படுகின்றன.

TRUTH ALONE TRIUMPHS

இத்திட்டத்தின்கீழ் 2022-2023 ஆம் நிதியாண்டில், ரூ.11.17 இலட்சம் மதிப்பிலான புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கென 2023-2024 ஆம் நிதியாண்டில் ரூ.13.74 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.9 மிதிவண்டிகள் வழங்கும் திட்டம்

ஆதி திராவிடர், கிறித்துவ ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர் குறித்த நேரத்தில் பள்ளிக்குச் செல்ல உதவிடும் நோக்குடன் அரசு, அரசு உதவி பெறும் மற்றும் பகுதியாக உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு படிக்கும் அனைத்து மாணாக்கருக்கும் மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்திற்கென 2023-2024 ஆம் நிதியாண்டில் ரூ.103.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.10 விடுதிகள்

தொலைதூர கிராமப் பகுதிகளைச் சேர்ந்த மாணாக்கர் கல்வி நிறுவனங்கள் அமைந்துள்ள இடங்களில் போதிய அளவு விடுதி வசதிகள் கிடைக்காததால், தங்கள் படிப்பை நிறுத்தும் நிலையினை மாற்றி தமது கல்வியினைத் தொடர்ந்திடும் வகையில், அவர்கள் படிக்கும் கல்வி நிறுவனங்களுக்கு அருகில் இத்துறையால் ஆதி திராவிடர் நல விடுதிகள் நடத்தப்படுகின்றன.

இத்துறையின்கீழ் இயங்கி வரும் ஆதி திராவிடர் நல விடுதிகளும் அவற்றில் ஒப்பளிக்கப்பட்டுள்ள மாணாக்கரின் எண்ணிக்கையும் பின்வருமாறு:-

2023 ஏப்ரல் 18]

ஆதி திராவிடர் நல விடுதிகளின் விவரம் (2022-2023)

விடுதியின் வகை	விடுதிகளின் எண்ணிக்கை			மாணாக்கரின் எண்ணிக்கை		
	மாணவர்	மாணவியர்	மொத்தம்	மாணவர்	மாணவியர்	மொத்தம்
பள்ளி விடுதிகள்	738	403	1,141	53,881	28,530	82,411
கல்லூரி விடுதிகள்	71	81	152	7,881	5,849	13,730
ஐ.டி.ஐ. விடுதிகள்	16	2	18	1,356	116	1,472
பாலிடெக்னிக் விடுதிகள்	3	2	5	178	110	288
முதுகலைப் பட்டதாரி கல்லூரி விடுதிகள்	9	6	15	693	315	1,008
மொத்தம்	**837**	**494**	**1,331**	**63,989**	**34,920**	**98,909**

- *தமிழ்நாடு கேரள எல்லையோரப் பகுதிகளில் உள்ள காபி / தேயிலைத் தோட்டங்களில் பணிபுரியும் தமிழ்நாட்டை பூர்வீகமாகக் கொண்ட தமிழர்களின் குழந்தைகள் தங்கிக் கல்வி பயில ஏதுவாக தேனி மாவட்டத்தில் உள்ள 16 விடுதிகளில் தலா 10 இடங்கள் (160 மொத்த இடங்கள்) கூடுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.*
- *ஒவ்வொரு விடுதியிலும் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகள் தங்கிக் கல்வி பயில ஏதுவாக 5 கூடுதல் இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.*

புதிய முன்னெடுப்புகள்-2022-2023

➢ *எம்.சி.இராஜா கல்லூரி விடுதி வளாகத்தில் ரூ.44.50 கோடி மதிப்பீட்டில் 10 தளங்களுடன் நவீன வசதிகளுடன் புதிய விடுதிக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

- ரூ.25.00 கோடி மதிப்பில் 366 விடுதிக் கட்டடங்கள் சிறப்பு பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு மறுசீரமைக்கப்பட்டுள்ளன.
- கல்லூரி மாணாக்கருக்கான விடுதிகளின் தேவையினை கருத்தில் கொண்டு 2022-2023 ஆம் நிதியாண்டில் புதிதாக மூன்று ஆதி திராவிடர் நல கல்லூரி மாணாக்கர் விடுதிகள் ரூ.21.97 இலட்சம் செலவில் தொடங்கப்பட்டுள்ளன.
- ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் மற்றும் விடுதிகளுக்கு ரூ.5.70 கோடி செலவில் கூடுதல் கழிவறைகள் மற்றும் குளியலறைகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- 60 ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதிகளுக்கு சுற்றுச்சுவர் கட்டுதல் / சுற்றுச்சுவர் உயரப்படுத்தும் பணிகளுக்கு ரூ.3.16 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.
- விடுதி மாணாக்கருக்கு ஆண்டுக்கு மூன்று முறை மருத்துவப் பரிசோதனை முகாம்கள் நடத்தப்படுகின்றன.
- விடுதிகளில் பயிலும் மாணவியர் மற்றும் அவர்தம் தாயாருக்கு மருத்துவ ஆலோசனை மற்றும் நல்வழி வகுப்புகள் ஆண்டுக்கு இருமுறை நடத்தப்படுகின்றன.
- 25 கல்லூரி விடுதிகளுக்கு நூலகங்களும், மேலும் 23 கல்லூரி விடுதிகளில் இணையவழி நூலகங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- கல்லூரி விடுதிகளில் பயிலும் மாணாக்கருக்கு அவர்களின் மொழி, ஆளுமைத்திறன் மற்றும் வேலைவாய்ப்பு பெறும் தகுதியினை ஏற்படுத்தும் வகையில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

அ. விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கு செய்து தரப்பட்டுள்ள வசதிகள்

(i) கல்லூரி விடுதிகளுக்கு இரண்டு அடுக்கு படுக்கை வசதி கொண்ட கட்டில்கள், ஜமக்காளம், பாய், போர்வை, உறையுடன்கூடிய தலையணைகள், எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர், மருந்துகள் அடங்கிய முதலுதவிப் பெட்டி, விளையாட்டு உபகரணங்கள்

2023 ஏப்ரல் 18]

(ii) *சமையல் எரிவாயு இணைப்பு, குடிநீர் சுத்திகரிப்புக் கருவிகள், ஈர அரவை இயந்திரங்கள், நீராவி கொதிகலன்கள், மின்னணு எடை இயந்திரங்கள், மின் அரைப்பான்கள்*

(iii) *ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதிகளுக்கு சலவை இயந்திரங்கள் மற்றும் சுகாதாரக் குட்டைத் தகளிகள்.*

iv) *நூலக வசதி.*

ஆ. உணவு மற்றும் சில்லரைச் செலவினங்கள்

ஆதி திராவிடர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கு உணவுக் கட்டணம், விழா நாட்களுக்கான சிறப்பு உணவுக் கட்டணம் மற்றும் சில்லரைச் செலவினங்களுக்கான கட்டணம் ஆகியவை பின்வருமாறு வழங்கப்பட்டு வருகின்றன.

கட்டணங்கள்	**பள்ளி விடுதி மாணாக்கர்**	**கல்லூரி விடுதி மாணாக்கர்**
உணவுக் கட்டணம் (ஒரு மாதத்திற்கு)	*ரூ.1,000/-*	*ரூ.1,100/-*
சில்லரைச் செலவினம் (சோப்பு, எண்ணெய், சிகைக்காய் வாங்குதல் மற்றும் முடி வெட்டுதல்) (ஒரு மாதத்திற்கு)	*ரூ.100/-*	*ரூ.150/-*
சிறப்பு உணவுக் கட்டணம் (பொங்கல், குடியரசு தினம், தமிழ் வருடப் பிறப்பு, சுதந்திர தினம் மற்றும் தீபாவளி விழா நாட்களில்)	*ரூ.40/-*	*ரூ.80/-*

இ. தனியார் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் பள்ளி மற்றும் விடுதிகளுக்கு நிதியுதவி

(i) விடுதிகள்

ஆதி திராவிடர் குழந்தைகளுக்கு கல்வி அளிப்பதில் அரசுடன் இணைந்து சேவை செய்து வரும் 16 தனியார் தொண்டு

நிறுவனங்களால் நடத்தப்படும் 18 விடுதிகளில் தங்கிப் பயிலும் 4,432 ஆதி திராவிட மாணாக்கருக்கு இத்துறை விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கு வழங்கப்படுவது போலவே, உணவுக் கட்டணம், பல்வகைச் செலவினம் மற்றும் இதர சலுகைகளும் இத்துறைமூலம் வழங்கப்படுகின்றன.

(ii) பள்ளியுடன் இணைந்த விடுதிகள்

ஆதி திராவிடர் மாணாக்கருக்காக தூத்துக்குடி மாவட்டம், முத்துக்கருப்பன் நினைவு கல்வி அறக்கட்டளை, பள்ளி ஒன்றை நடத்தி வருகிறது. இப்பள்ளியில் 3,500 மாணாக்கர் பயின்று வருகின்றனர். மேலும், 2 விடுதிகள் இந்த அறக்கட்டளையால் நடத்தப்பட்டு வருகின்றன. இங்கு பணிபுரியும் 160 ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியிடங்களுக்கான ஊதியம் அரசால் மானியமாக 2006 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கென, 2023-2024 ஆம் நிதியாண்டில் ரூ.12.29 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.11 அரசு ஆதி திராவிடர் தொழிற்பயிற்சி நிலையங்கள்

தொழிற்பயிற்சி பயில விரும்பும் ஆதி திராவிடர் மாணாக்கரின் நலனுக்காக பின்வரும் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் பிரத்தியேகமாக செயல்பட்டு வருகின்றன.

வ. எண்	மாவட்டத்தின் பெயர்	தொழிற் பயிற்சி நிலையம் அமைந்துள்ள இடம்	மாணாக்கரின் எண்ணிக்கை
1.	கடலூர்	சிதம்பரம்	*252*
2.	திருவள்ளூர்	வடகரை	*188*
மொத்தம்			**440**

2. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

சொந்தமாக வீடுகள் இல்லாத ஆதி திராவிடர் மக்களுக்கு அவர்களுடைய சமூக, பொருளாதார நிலையினை அடிப்படையாகக் கொண்டு இலவச வீட்டுமனை வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

2023 ஏப்ரல் 18]

தற்போது நில மதிப்பு மிகவும் அதிகமாகி விட்ட நிலையில் தேவைக்கேற்ப தனிநபர் பேச்சுவார்த்தையின் மூலமாகவும் மற்றும் நடைமுறையிலுள்ள நில எடுப்பு சட்டங்களின்படியும் நிலம் கையகம் செய்து உரிய பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு இலவசமாக வீட்டு மனைப் பட்டாக்கள் பின்வருமாறு வழங்கப்பட்டு வருகின்றன:

பகுதி	**நிலத்தின் பரப்பளவு**	**பயனாளியின் ஆண்டு வருமான வரம்பு**
கிராமப்புறம்	*3 சென்ட்*	*ரூ.72,000/-*
நகராட்சி	*1 ½ சென்ட்*	
மாநகராட்சி	*1 சென்ட்*	

இதுவரையில் இலவச வீட்டுமனைப் பட்டா பெற்ற 1,66,504 பயனாளிகளுள் முதற்கட்டமாக 1,32,609 பயனாளிகளுக்கு 2022-2023 ஆம் நிதியாண்டில் தமிழ் நிலம் இணைய தளம் மூலமாக இணையவழி பட்டாக்கள் (e-patta) *வழங்கப்பட்டுள்ளன.*

மேலும், ஆதி திராவிடர் நலத் துறையின்மூலம் கையகம் செய்யப்பட்டு, ஏற்கெனவே இலவச வீட்டு மனைப்பட்டா வழங்கப்பட்டு காலியாக இருந்த மனைகளில் 24,081 பயனாளிகளுக்கு இணைய வழி பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கென 2023-2024 ஆம் நிதியாண்டில் மொத்தம் ரூ.6.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3. மயானங்கள் மற்றும் மயானப் பாதை வசதி

ஆதி திராவிட மக்கள் வசிக்கும் பகுதிகளில் மயானம் மற்றும் மயானத்திற்கான இணைப்புச் சாலை வசதிகளை ஏற்படுத்துவதற்காக நிலம் கையகம் செய்தல் மற்றும் தேவையான வசதிகளை ஏற்படுத்தித் தரும் திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இப்பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்திற்கென 2023-2024 ஆம் நிதியாண்டில் ரூ.74.91 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4. சாதி வேறுபாடுகளற்ற மயானங்களை பயன்பாட்டில் கொண்டிருக்கும் கிராமங்களுக்கு பரிசுத் தொகை வழங்குதல்.

சாதி வேறுபாடுகளற்ற மயானங்களை பயன்பாட்டில் கொண்டிருக்கும் முன்மாதிரி சிற்றூர்களில், வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள ஊக்கத் தொகையாக தலா ரூ.10.00 இலட்சம் பரிசு வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2022-2023 ஆம் நிதியாண்டில் 70 சிற்றூர்கள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற்றுள்ளன.

இத்திட்டத்திற்கென 2023-2024 ஆம் நிதியாண்டில் ரூ.8.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5. ஆதி திராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்

ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு ஒவ்வோர் ஆண்டும் ரூ.100.00 கோடி செலவில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் செய்து தரப்படுகின்றன. நகர்ப்புரப் பகுதிகளிலும், ஊரகப் பகுதிகளிலும் ஆதி திராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை உறுதி செய்து, முழுமையான சமூக பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த "அயோத்திதாச பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம்" 2023-2024 ஆம் நிதியாண்டு முதல் ஐந்தாண்டுகளில் 1,000 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படவுள்ளது.

வன்கொடுமை நிகழும் கிராமங்கள் என காவல் துறை இயக்குநர் மூலமாக கண்டறியப்பட்ட கிராமங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்திட இத்திட்டத்தின்கீழ் முன்னுரிமை அளிக்கப்பட்டு அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்திற்கென 2023-2024 ஆம் நிதியாண்டில் ரூ.200.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6. ஈமச்சடங்கு உதவித்தொகை

ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ ஆதி திராவிடர் இனத்தைச் சார்ந்தவர்களின் குடும்பங்களில் நிகழும் துக்க நிகழ்வுகளுக்கு ஈமச்சடங்கு உள்ளிட்ட எதிர்பாராச் செலவுகளை மேற்கொள்ள ரூ.5,000/ – நிதியுதவி வழங்கப்படுகிறது.

2023 ஏப்ரல் 18]

2022-2023 ஆம் நிதியாண்டில், ரூ.9.81 கோடி மதிப்பிலான இவ்வுதவித்தொகை 19,900 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2023-2024 ஆம் நிதியாண்டில் ரூ.9.95 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7. பிரதம மந்திரியின் ஆதி திராவிட மக்கள் முன்னேற்றத் திட்டம் (Pradhan Mantri – Anusuchit Jaati Abhyuday Yojana – PM-AJAY)

பிரதம மந்திரியின் முன்னோடி கிராமத் திட்டம் (Pradhan Mantri Adarsh Gram Yojana-PMAGY), *ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்கான ஒன்றிய அரசின் சிறப்பு நிதியுதவித் திட்டம்* (Special Central Assistance to Scheduled Castes Sub Plan – SCA to SCSP) *மற்றும் பாபு ஜெகஜீவன்ராம் விடுதி கட்டும் திட்டம்* (Babu Jagjivan Ram Chatrawaas Yojana-BJRCY) *ஆகிய மூன்று திட்டங்களை ஒருங்கிணைத்து பிரதம மந்திரியின் ஆதி திராவிட மக்கள் முன்னேற்றத் திட்டம்* (Pradhan Mantri – Anusuchit Jaati Abhyuday Yojana – PMAJAY) *எனும் புதிய திட்டமாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது .*

2022-2023 ஆம் நிதியாண்டில் 1,123 கிராமங்கள் பிரதம மந்திரி கிராம முன்னோடித் திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

40 சதவீதத்திற்கு மேல் ஆதி திராவிடர் மக்கள் வசிக்கும் பகுதிகளில், தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை உறுதி செய்வதே இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் ஆகும்.

8. சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையை சரிபார்த்தல்

உண்மையான ஆதி திராவிட மக்களின் சட்டப்பூர்வமான உரிமைகளைக் காத்திடும் பொருட்டு ஆதி திராவிடர் சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையினை அறிய மாவட்ட அளவிலான விழிப்புணர்வுக் குழு பின்வருமாறு அமைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட அளவிலான விழிப்புணர்வுக் குழு

1.	மாவட்ட ஆட்சியர்	தலைவர்	ஆதி திராவிடர் என வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையினைக் கூர்ந்தாய்வு செய்து இறுதி ஆணை பிறப்பிக்கலாம். இந்த ஆணையினை ஏற்கவில்லையெனில் இந்திய அரசியலமைப்புச் சட்டக்கூறு 226-ன்படி உயர் நீதிமன்றத்திலும், சட்டக்கூறு 136-ன்படி உச்சநீதிமன்றத்திலும் மேல்முறையீடு செய்யலாம்.
2.	மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்	உறுப்பினர் – செயலர்	
3.	மானுடவியல் வல்லுநர்	உறுப்பினர்	

9. 1955 ஆம் ஆண்டு குடிமையியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம், 1989 மற்றும் திருத்தச் சட்டம், 2015

தீண்டாமை மற்றும் வன்கொடுமைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அளித்திட வழி வகுக்கும் குடிமையியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1955, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம் 1989 மற்றும் திருத்தச் சட்டம், 2015, வன்கொடுமைகள் தடுப்பு விதிகள், 1995 மற்றும் திருத்த விதிகள், 2016 மற்றும் 2018 ஆகிய சட்டங்கள் இந்திய அரசால் இயற்றப்பட்டு, அவை தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

மாநில அளவில் காவல் நிலையங்களில் இச்சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை, ஒரு காவல் துறை இயக்குநர், காவல் துறை உதவித் தலைவர் மற்றும் மாவட்ட அளவில் 31 காவல் துணை கண்காணிப்பாளர்கள் மற்றும் 7 காவல் உதவி ஆணையர்கள் மேற்பார்வையில் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவுகள் கண்காணித்து வருகின்றன.

2023 ஏப்ரல் 18]

(அ) தனியுறு சிறப்பு நீதிமன்றங்கள்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக நடைபெறும் குற்றங்கள் மற்றும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய தீருதவிகள் மற்றும் மறுவாழ்வு தொடர்பான வழக்குகளை விரைந்து முடிக்க ஏதுவாக திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, விழுப்புரம், சிவகங்கை, திண்டுக்கல், இராமநாதபுரம், விருதுநகர் (ஸ்ரீவில்லிபுத்தூர்), புதுக்கோட்டை, கடலூர், நாமக்கல், தேனி, திருவண்ணாமலை, பெரம்பலூர், வேலூர், தூத்துக்குடி, கன்னியாகுமரி (நாகர்கோவில்), செங்கல்பட்டு, திருப்பூர், திருவாரூர், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் 22 தனியுறு சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அதிக எண்ணிக்கையிலான வழக்குகள் நிலுவையில் உள்ள சேலம், கிருஷ்ணகிரி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் கூடுதலாக நான்கு புதிய தனியுறு சிறப்பு நீதிமன்றங்கள் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு முதற்கட்டமாக, சேலத்தில் ஒரு புதிய தனியுறு சிறப்பு நீதிமன்றம் தொடங்கப்பட்டுள்ளது. இதர மாவட்டங்களில் இவ்வழக்குகளை விசாரணை செய்ய தற்போதுள்ள குற்றவியல் அமர்வு நீதிமன்றங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

2022–2023 ஆம் ஆண்டு முதல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழக்கின் தன்மைக்கேற்றவாறு தற்போது வழங்கப்பட்டு வரும் குறைந்தபட்சத் தீருதவித் தொகை ரூ.85,000/-லிருந்து ரூ.1,00,000/– ஆகவும், அதிகபட்சம் ரூ.8,25,000/– லிருந்து ரூ.12,00,000/– ஆகவும் மாநில அரசின் நிதியிலிருந்து உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

2022–2023 ஆம் நிதியாண்டில், 3,870 நபர்களுக்கு தீருதவித் தொகை, கருணைத் தொகை மற்றும் ஓய்வூதியத்திற்காக ரூ.47.00 கோடி வழங்கப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் நிதியாண்டில், இச்சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ரூ.60.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம்

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் பொது மக்களிடையே தீண்டாமைக்கெதிரான விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக, ஆண்டுதோறும் ஜனவரி மாதம் 24 ஆம் தேதி

[*2023 ஏப்ரல் 18*

முதல் 30 ஆம் தேதி வரை "மனிதநேய வார விழா" நடத்தப்படுகிறது. இவ்விழாவினை நடத்துவதற்காக மாவட்டங்களுக்கு தலா ரூ.50,000/– மற்றும் மாநில அளவில் ரூ.1,00,000/– நிதி வழங்கப்படுகிறது.

ஆண்டுதோறும் ஜனவரி 26, ஆகஸ்டு 15 மற்றும் அக்டோபர் 2 ஆகிய நாட்களிலும், அந்தந்த மாவட்டங்களில் முக்கியத்துவம் வாய்ந்த உள்ளூர் விடுமுறை நாட்களிலும் சமத்துவ விருந்து ஏற்பாடு செய்யப்படுகிறது. சமத்துவ விருந்து ஏற்பாடு செய்வதில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் ஈடுபடுத்தப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் 2022-2023 ஆம் நிதியாண்டில், ரூ.24.07 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2023-2024 ஆம் நிதியாண்டில் ரூ.25.37 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) சமூக நல்லிணக்கத்துடன் திகழும் சிறந்த கிராமங்களைத் தேர்ந்தெடுத்தல்

தீண்டாமை கடைபிடிக்கப்படாமல் பொது மக்கள் அனைவரும் நல்லிணக்கத்துடன் வாழும் கிராமங்கள் தமிழ்நாட்டின், அனைத்து மாவட்டங்களிலும் (சென்னை தவிர்த்து) தேர்ந்தெடுக்கப்பட்டு, அக்கிராமங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திடும் பொருட்டு ரூ.10.00 இலட்சம் நிதி வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2022-2023 ஆம் நிதியாண்டில், ரூ.3.70 கோடி செலவில் 37 மாவட்டங்களில் உள்ள 37 கிராமங்கள் பயனடைந்துள்ளன.

இத்திட்டத்திற்கென 2023-2024 ஆம் நிதியாண்டில், ரூ.3.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

10. தமிழ்நாடு ஆதி திராவிடர் கலை மற்றும் இலக்கிய மேம்பாட்டுச் சங்கம்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினச் சமூகங்கள் தொடர்பான கலை, பண்பாடு, இலக்கிய படைப்புகளை ஊக்குவிக்கும் பொருட்டு தமிழ்நாடு ஆதி திராவிடர் கலை மற்றும் இலக்கிய மேம்பாட்டுச் சங்கம் செயல்பட்டு வருகிறது.

இப்பணிக்கான தனி பணிக் குழு நிதியாக (Corpus Fund) *ரூ.50.00 இலட்சம் வழங்கப்பட்டு வைப்புத் தொகை கணக்கில்*

2023 ஏப்ரல் 18]

வைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் பெறப்படும் வட்டித்தொகை கதை, கட்டுரை, கவிதை, வரலாறு மற்றும் புதினம் ஆகியவற்றில் சிறந்த படைப்புகளை உருவாக்கும் சிறந்த எழுத்தாளர்களுக்கு பரிசுத் தொகை வழங்க பயன்படுத்தப்படுகிறது.

ஆதி திராவிடர்/பழங்குடியினர்/கிறித்துவ ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்த 9 எழுத்தாளர்கள், ஆதி திராவிடர் பிரச்சினைகளைப் பற்றி எழுதும் ஆதி திராவிடர்/பழங்குடியினர் அல்லாத ஒரு எழுத்தாளர் மற்றும் பழங்குடியினர் பற்றி எழுதும் ஆதி திராவிடர்/பழங்குடியினர்/ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் அல்லாத ஒரு எழுத்தாளர் என மொத்தம் 11 எழுத்தாளர்களுக்கு ரூ.1,00,000/– அல்லது தெரிவு செய்யப்பட்ட நூல்களை வெளியிட ஆகும் செலவு இவற்றில் எது குறைவோ அத்தொகை நிதி உதவியாக 2022-2023 ஆம் நிதியாண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

11. டாக்டர் அம்பேத்கர் விருது

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்காக தொண்டாற்றி வரும் நபருக்கு தமிழ்நாடு அரசால் 1998 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை 24 நபர்களுக்கு டாக்டர் அம்பேத்கர் விருது வழங்கப்பட்டது.

ஆண்டுதோறும் திருவள்ளுவர் தினத்தன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் டாக்டர் அம்பேத்கர் விருது வழங்கப்படுகிறது. தற்போது, இவ்விருதுடன் பரிசுத் தொகையாக ரூ.5,00,000/-க்கான காசோலை, தகுதியுரை மற்றும் தங்கப் பதக்கம் வழங்கப்பட்டு வருகிறது.

2022 ஆம் ஆண்டிற்கான "டாக்டர் அம்பேத்கர் விருது" திரு. எஸ்.வி. ராஜதுரை அவர்களுக்கு வழங்கப்பட்டது. இவர் 85-க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். இவர் புரட்சிகரமான கருத்துக்களை தனது நூல்களில் வெளிக்கொணர்ந்துள்ளார். இவர் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பெரியார் உயர் ஆய்வு மையத்தின் தலைவராக நியமிக்கப்பட்டு பணியாற்றியது குறிப்பிடத்தக்கது.

II. பழங்குடியினர் நலன்

தமிழ்நாட்டில் 2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, 37 வகையான உட்பிரிவுகளைச் சார்ந்த 8,41,558 பழங்குடியின மக்கள் வசித்து வருகின்றனர். இது மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 1.17 விழுக்காடு ஆகும்.

தமிழ்நாட்டில், சேலம், திருவண்ணாமலை, திருப்பத்தூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, வேலூர், இராணிப்பேட்டை, தருமபுரி, நாமக்கல், திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, நீலகிரி, கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, ஈரோடு, திருச்சிராப்பள்ளி, கடலூர், மதுரை, அரியலூர், திருநெல்வேலி, தென்காசி மற்றும் சென்னை ஆகிய 23 மாவட்டங்களில் பழங்குடியின மக்கள் அதிகம் வசித்து வருகின்றனர்.

பழங்குடியின மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடும் விதமாக தகுந்த வேலைவாய்ப்பினை அமைத்து தருவதன்மூலம் தனிநபர் பொருளாதார நிலையை உயர்த்துதல், குறைந்த கல்வியறிவிற்கான காரணிகளை இனம் கண்டு கல்வித் தரத்தினை உயர்த்துதல், தகுந்த திட்டங்கள்மூலம் ஊட்டச்சத்து தொடர்பான குறைபாடுகளைக் களைதல், சுகாதார அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்துவதன்மூலம் ஆரோக்கியமான வாழ்க்கை சூழலை உருவாக்குதல், பழங்குடியின மக்களின் கலாச்சாரம் மற்றும் பண்பாட்டுக் கூறுகளை சரியாகப் புரிந்துகொண்டு அதனைப் பாதுகாத்தல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு பழங்குடியினர் நல இயக்குநரகம் 2000 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தோற்றுவிக்கப்பட்டு முழு நிதி அதிகாரத்துடன் கூடிய தனித் துறையாக 2018 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1. கல்வி

கல்வியினால் ஏற்படும் வளர்ச்சி மட்டுமே எதிர்கால சந்ததியினருக்கு நீடித்த, நிலைத்த சமூக பொருளாதார மேம்பாட்டினை அளிக்கும் என்பதால் பழங்குடியின மாணாக்கரின் கல்வி தொடர்பான திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது.

மாணாக்கரின் கல்வியறிவினை உயர்த்தும் விதமாக பள்ளிக் கல்வி முதல் உயர் கல்வி வரை பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தப்பட்டு வருகிறது. பழங்குடியினர் நலத் துறை நிதி ஒதுக்கீட்டில் 54.66 சதவீதம் கல்விக்காக செலவிடப்படுகிறது.

2023 ஏப்ரல் 18]

(அ) பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள்

பழங்குடியின மக்களுக்கு தரமான பள்ளிக் கல்வியை அளிக்கும் பொருட்டு இத்துறை தொடக்க கல்வி முதல் மேல்நிலைக் கல்வி வரை பள்ளிகளை நடத்தி வருகிறது. பள்ளிகள் வாழ்விடங்களுக்கு அருகாமையில் அமைப்பதன்மூலம் இடைநிற்றலை முற்றிலும் தவிர்த்து, கல்வி அறிவு விகிதத்தினை அதிகரிக்கலாம் என்பதின் அடிப்படையில் குடியிருப்புகளுக்கு அருகாமையில் உணவு மற்றும் தங்கும் வசதிகளுடன் கூடிய பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளை நடத்தி வருகிறது.

அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் மாணாக்கர் எண்ணிக்கை விவரம் (2022-2023)

பள்ளிகள்	பள்ளிகளின் எண்ணிக்கை	மாணவர்	மாணவியர்	மொத்தம்
தொடக்கப் பள்ளிகள்	212	5,045	4,633	9,678
நடுநிலைப் பள்ளிகள்	49	2,187	2,062	4,249
உயர்நிலைப் பள்ளிகள்	31	2,200	1,811	4,011
மேல்நிலைப் பள்ளிகள்	28	4,829	4,401	9,230
மொத்தம்	320	14,261	12,907	27,168

புதிய முன்னெடுப்புகள் (2022 – 2023)

- 131 பழங்குடியின உண்டி உறைவிடத் தொடக்க / நடுநிலைப் பள்ளிகளில் ரூ.4.64 கோடி செலவில் ஆங்கில மொழித்திறன் பயிற்சி கரடிபாத் நிறுவனம்மூலம் அளிக்கப்பட்டு வருகிறது.
- 39 பள்ளிகளில் ரூ.20.20 கோடி மதிப்பீட்டில் 65 கூடுதல் வகுப்பறைகள் மற்றும் 34 பள்ளிகளில் சுற்றுச் சுவர்கள் கட்டுதல்.
- 88 பள்ளிகளில் ரூ.9.24 கோடி செலவில் வைப்பறையுடன் கூடிய நவீன சமையலறைகள் கட்டுதல்.

- 3 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளிகள் ரூ.7.00 கோடி செலவில் அறிவுத் திறன் வகுப்பறைகள், உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் (High Tech Lab), ஆங்கில மொழிப்பயிற்சி மற்றும் உயர்கல்வி சேர்க்கைக்கான பல்வேறு நுழைவுத் தேர்வுகளுக்கான பயிற்சிகளை வழங்கிடும் விதத்தில் மாதிரிப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

- 31 பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் ஒரு வனத் துறைப் பள்ளியில் ரூ.4.85 கோடி செலவில் புதிய கழிப்பறைகள் கட்டுதல்.

- ரூ.70.00 இலட்சம் மதிப்பில் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வக உபகரணங்கள் வழங்குதல்.

- ரூ.13.89 இலட்சம் மதிப்பீட்டில் பள்ளிகளில் நவீன ஸ்மார்ட் போர்டு (Smart Board) வசதிகள் ஏற்படுத்துதல்.

- சுற்றுலா செல்லவும், சாரண சாரணிய இயக்கச் செயல்பாடுகளுக்காகவும், ரூ.20.25 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

பள்ளிகளின் சிறப்பான செயல்பாடுகள்

மாநில அளவிலான கலைத்திருவிழா போட்டியில் சிறப்பிடம் பெற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கீழ்க்கண்ட பள்ளிகளின் மாணாக்கர் பரிசு பெற்றனர்.

- அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளி செம்புளிச்சாம்பட்டி, திருச்சி மாவட்டம் "கிராமிய குழு" நடனத்தில் மாநில அளவில் இரண்டாம் இடம்.

- அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளி பத்துகாணி, கன்னியாகுமரி மாவட்டம் – "கேலிச்சித்திரம்" வரைதலில் மாநில அளவில் மூன்றாம் இடம்.

- அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளி பர்கூர், ஈரோடு மாவட்டம் "தெருக்கூத்து" போட்டியில் மாநில அளவில் இரண்டாம் இடம்.

2023 ஏப்ரல் 18]

மாமல்லபுரத்தில் நடைபெற்ற 44-வது சர்வதேச சதுரங்க விளையாட்டுப் போட்டிகளை முன்னிட்டு மாவட்ட, மண்டல மற்றும் மாநில அளவில் (30.07.2022, 31.07.2022) போட்டிகள் மாணாக்கருக்கு நடத்தப்பட்டன. தேர்வு செய்யப்பட்ட 99 மாணாக்கர் ரஷ்யன் கலாச்சார மையம் மற்றும் சர்வதேச சதுரங்க போட்டிக்கான பயிற்சி ஆணையத்தின் தலைவர் திரு. மிகைல் கோபாலியா மற்றும் ரஷ்ய நாட்டின் சர்வதேச கிராண்ட் மாஸ்டர் திரு. வலோடார் முர்சீன் அவர்களுடன் விளையாடி 44-வது சர்வதேச சதுரங்க போட்டியினை நேரில் கண்டுகளித்தனர்.

(ஆ) ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகள்

மாநில மற்றும் ஒன்றிய அரசின் நிதிப் பங்களிப்புடன் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை ஆங்கில வழிக் கல்வி முறையில் 8 ஏகலைவா மாதிரி உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

வ.எண்	மாவட்டம்	இடம்	மாணவர்	மாணவியர்	மொத்தம்
1	கள்ளக்குறிச்சி	வெள்ளிமலை	460	0	460
2	சேலம்	அபிநவம்	0	480	480
3	நீலகிரி	மு.பாலாடா	160	122	282
4	நாமக்கல்	செங்கரை	273	108	381
5	திருவண்ணாமலை	அத்திப்பட்டு	235	167	402
6	திருப்பத்தூர்	புதூர்நாடு	157	114	271
7	செங்கல்பட்டு	குமிழி	92	70	162
8	சேலம்	ஏற்காடு (நாகலூர்)	104	64	168
மொத்தம்			**1,481**	**1,125**	**2,606**

சிறப்பான செயல்பாடுகள்.

தேசிய பழங்குடியினர் நல உண்டி உறைவிட கல்வி மற்றும் நிறுவனச் சங்கத்தின்கீழ் ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் 2022-2023 ஆம் ஆண்டிற்கான 3-வது தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகள் ஆந்திர மாநிலம் குண்டூரில் 07.12.2022 முதல் 22.12.2022 வரை நடைபெற்றது. தமிழகத்தைச் சார்ந்த 8 பள்ளிகளின் 94 மாணவர் மற்றும் 83 மாணவியர் உட்பட 177 மாணாக்கர் போட்டிகளில் கலந்து கொண்டு தனிநபர் பிரிவில் 10 தங்கம், 13 வெள்ளி மற்றும் 27 வெண்கலப் பதக்கங்களுடன் 50 பதக்கங்களைப் பெற்று தேசிய அளவில் 5-வது இடத்தைப் பெற்றனர். ஆண்களுக்கான கைப்பந்து (Volley Ball) *குழு போட்டியில் வெள்ளிப் பதக்கம்* (Runner up) *பெற்றனர்.*

பதக்கப்பட்டியல் விவரம்

வ.எண்	போட்டி	தங்கம்	வெள்ளி	வெண்கலம்
1	நீச்சல் போட்டி	6	6	8
2	குத்துச்சண்டை	2	5	15
3	குண்டெறிதல்	1	1	0
4	சதுரங்கம்	1	0	0
5	100 மீட்டர் தொடர் ஓட்டம் (4X100)	0	1	1
6	100 மீட்டர் ஓட்டம்	0	0	1
7	200 மீட்டர் ஓட்டம்	0	0	1
8	நடைபோட்டி	0	0	1
மொத்தம்		**10**	**13**	**27**

2023 ஏப்ரல் 18]

(இ) பழங்குடியினர் நல விடுதிகள்

பழங்குடியின மக்களின் தொடர்ச்சியான இடம் பெயர்தலால் ஏற்படும் மாணாக்கரின் இடைநிற்றலை முற்றிலும் தவிர்த்து அவர்கள் தொடர்ச்சியாக கல்வி கற்பதை உறுதி செய்யும் பொருட்டு அனைத்து அடிப்படை வசதிகளுடன் கூடிய விடுதிகள் பழங்குடியின மாணாக்கருக்காக நடத்தப்பட்டு வருகின்றன.

பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் மாணாக்கர் எண்ணிக்கை விவரம் (2022-2023)

விடுதிகள்	விடுதிகளின் எண்ணிக்கை	மாணவர்	மாணவியர்	மொத்தம்
பள்ளி விடுதிகள்	40	1,010	888	1,898
கல்லூரி விடுதிகள்	2	0	81	81
தொழிற்பயிற்சி நிலைய விடுதிகள்	6	365	0	365
மொத்தம்	**48**	**1,375**	**969**	**2,344**

- *பழங்குடியின மாணவியரின் உயர் கல்வியை உறுதி செய்யும் பொருட்டு 2022-2023 ஆம் நிதியாண்டில் புதியதாக நாமக்கல், திருப்பத்தூர், தருமபுரி, திருச்சி ஆகிய மாவட்டங்களில் நான்கு கல்லூரி மாணவியர் விடுதிகள் ரூ.2.40 கோடி செலவில் துவங்கப்பட்டுள்ளன.*

- *அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள்/ விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கான உணவுக் கட்டணம் பள்ளி மாணாக்கருக்கு ரூ.1,000/- ஆகவும், கல்லூரி மாணாக்கருக்கு ரூ.1,100/-ஆகவும் வழங்கப்பட்டு வருகிறது.*

- *சிறப்பு விழா நாட்களில் வழங்கப்படும் உணவுக் கட்டணம் பள்ளி மாணாக்கருக்கு ரூ.40/- ஆகவும் மற்றும் கல்லூரி மாணாக்கருக்கு ரூ.80/- ஆகவும் வழங்கப்பட்டு வருகிறது.*

- *சோப்பு, எண்ணெய், முடிவெட்டுதல் போன்ற ஏனைய சில்லரைச் செலவினங்களுக்காக வழங்கப்படும் தொகை, பள்ளி விடுதி மாணாக்கருக்கு ரூ.100/- ஆகவும், கல்லூரி விடுதி மாணாக்கருக்கு ரூ.150/- ஆகவும் வழங்கப்பட்டு வருகிறது.*

- *மலைப்பாங்கான இடங்களில் அமைந்துள்ள விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கு ஆரோக்கியமான கல்வி பயிலும் சூழலை உருவாக்கிட சூரிய ஒளி மின்விளக்கு* (Solar Light), *கம்பளி ஆடை* (Sweater) *மற்றும் மழை அங்கி* (Rain coat) *ஆகியவை கூடுதலாக வழங்கப்பட்டு வருகின்றன.*

சிறப்பு அம்சங்கள்

2022-2023 ஆம் நிதியாண்டில், 128 பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் எரிவாயு இணைப்பு, சென்னை மற்றும் நீலகிரி மாவட்டத்தில் உள்ள 2 கல்லூரி மாணவியர் விடுதிகளில் 55 அங்குல தொலைக்காட்சிப் பெட்டிகள், இணைய வழி நூலகங்கள், மருத்துவப் பரிசோதனை முகாம்கள் மற்றும் 18 விடுதிகளில் கண்காணிப்புக் கேமராக்கள் ஆகிய வசதிகள் ரூ.94.75 இலட்சம் செலவில் செய்து தரப்பட்டுள்ளன.

(ஈ) தொழிற்பயிற்சி நிலையங்கள்

பழங்குடியின மாணாக்கர் உற்பத்தித் துறைகளில் வேலைவாய்ப்பைப் பெற வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையுடன் இணைந்து பழங்குடியினருக்கென பிரத்யேகமாக ஆறு தொழிற்பயிற்சி நிலையங்கள் விடுதி வசதியுடன் இயங்கி வருகின்றன. 2022-2023 ஆம் ஆண்டில் 904 மாணாக்கருக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 18]

தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் மாணாக்கர் விவரம் (2022-2023)

தொழிற்பயிற்சி நிலைய மையங்கள்	தையல் தொழில் பயிற்சி	மின்னியல் வல்லுனர்	பொருத்துபவர்	வண்டி பழுதுபார்ப்பவர்	குழாய் செப்பனிடுபவர்	பற்ற வைப்பவர்	கம்பி பற்ற வைப்பவர்	மொத்தம்
கூடலூர்	—	—	*20*	*24*	*48*	*40*	*20*	*152*
ஆனைக்கட்டி	—	*20*	*20*	*24*	—	*40*	*20*	*124*
கொல்லிமலை	*40*	*20*	*20*	*48*	—	*40*	—	*168*
கருமந்துறை	—	*20*	*20*	*24*	*29*	*40*	—	*133*
சங்கராபுரம்	—	*20*	*60*	*48*	—	*40*	*20*	*188*
ஜமுனாமரத்தூர்	—	—	*20*	*24*	*39*	*36*	*20*	*139*
மொத்தம்	**40**	**80**	**160**	**192**	**116**	**236**	**80**	**904**

இத்தொழிற்பயிற்சி நிலையங்களின் மாணாக்கருக்கான விடுதிகள் பழங்குடியினர் நலத் துறையால் நடத்தப்படுகின்றன.

இத்தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் விடுதிகளின் செயல்பாட்டிற்காக 2022-2023 ஆம் நிதியாண்டில் ரூ.8.17 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் நிதியாண்டில் இத்தொழிற்பயிற்சி நிலையங்களின் நிருவாகச் செயல்பாட்டிற்காக ரூ.9.74 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(உ) தொண்டு நிறுவனங்கள் நடத்தும் பள்ளி மற்றும் விடுதிகளுக்கான நிதியுதவி

(i) விடுதியுடன் கூடிய பள்ளி

திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலையில் வசிக்கும் பழங்குடியின மாணாக்கருக்காக Society For Rural Development (SFRD) *தொண்டு நிறுவனத்தால் நடத்தப்பட்டு வரும் மேல்நிலைப் பள்ளியில் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும்*

[2023 ஏப்ரல் 18

1,808 மாணாக்கரின் கல்வி நலன் கருதி, இப்பள்ளியில் பணிபுரியும் 36 ஆசிரியர் மற்றும் 7 ஆசிரியர் அல்லாத பணியிடங்களுக்கான ஊதியம் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. விடுதியில் தங்கிப் பயிலும் 550 பழங்குடியின மாணாக்கருக்கான உணவுக் கட்டணம், சில்லரைச் செலவினம் மற்றும் இதர சலுகைகள் 2005 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இப்பள்ளி மாணவர்கள் ஆண்டு தோறும் நடத்தப்படும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் 100% தேர்ச்சி பெற்று வருகின்றனர்.

2022-2023 ஆம் நிதியாண்டில் ரூ.3.12 கோடி மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் நிதியாண்டில், இத்திட்டத்தின்கீழ் ரூ.3.44 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ii) விடுதிகள்

கோயம்புத்தூர் மாவட்டம் - வித்யாவனம் மற்றும் விருதுநகர் மாவட்டம் - ராம்கோ & குருப் ஆகிய தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் 100 பழங்குடியின மாணாக்கருக்கு உணவுக் கட்டணம் மற்றும் இதர சலுகைகள் அரசுப் பள்ளி மாணாக்கருக்கு இணையாக வழங்கப்படுகிறது.

(ஊ) பழங்குடியினர் வாழும் உட்புறப் பகுதிகளில் பள்ளிகள் துவங்கிட முன்வரும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கான நிதியுதவி வழங்கும் திட்டம்

தொலைதூர கிராமங்களில் வசிக்கும் பழங்குடியின மாணாக்கர் அனைவருக்குமான தரமான கல்வியை அளிக்கும் பொருட்டு ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் பள்ளிகள் நடத்த முன்வரும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

2022-2023 ஆம் நிதியாண்டில் மான்ட்போர்டு சமுதாய அமைப்பு ஏற்காடு, சேலம் மற்றும் சமுதாய சேவை மையம், கள்ளக்குறிச்சி ஆகிய தொண்டு நிறுவனங்களால் பழங்குடியின மாணாக்கருக்காக நடத்தப்படும் பள்ளிகளுக்கு ரூ.3.04 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மான்ட்போர்டு சமுதாயப் பள்ளியின்மூலம் 895 மாணாக்கரும், சமுதாய சேவை மையம்மூலம் 284 மாணாக்கரும் பயனடைந்துள்ளனர்.

2023 ஏப்ரல் 18]

இத்திட்டத்திற்கென, 2023-2024 ஆம் நிதியாண்டில் ரூ.14.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. கல்வி உதவித் தொகை

பழங்குடியின குழந்தைகளை அவர்தம் பெற்றோர் பள்ளிக்கு தொடர்ந்து அனுப்பவும், அவர்களின் நிதிச்சுமையைக் குறைக்கவும், பள்ளிக் கல்வியை முடித்து உயர் கல்வியில் மாணவர்கள் சேருவதை ஊக்கப்படுத்தவும் பல்வேறு கல்வி உதவித் தொகை மற்றும் கட்டணச் சலுகைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

(அ) பெண் கல்வி ஊக்குவிப்புத் திட்டம்

பெண் குழந்தைகளின் கல்வி இடைநிற்றலைத் தவிர்க்கவும், அனைத்துபெண் குழந்தைகளும் பள்ளி செல்வதை உறுதிப்படுத்தவும், 3 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவியருக்கு கீழ்க்கண்டவாறு ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.

வ. எண்	வகுப்பு	ஊக்கத்தொகை (ரூ)
1	*3 முதல் 5 வரை*	*500/-*
2	*6*	*1000/-*
3	*7 மற்றும் 8*	*1500/-*

2022-2023 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின் மூலம் 27,098 மாணவியர் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்காக, 2023-2024 ஆம் நிதியாண்டில் ரூ.3.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ)ப்ரிமெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்டம்

பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்கும் ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்பு பயிலும் பழங்குடியின மாணாக்கரின் கல்விக்கான செலவினத்தில் ஒரு பகுதியை அரசே ஏற்றிடும் வகையில், ப்ரிமெட்ரிக் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கான செலவினத் தொகை 75:25 என்ற விகிதத்தில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் பகிர்ந்துகொள்ளப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் உதவித்தொகை மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் பின்வருமாறு செலுத்தப்படுகிறது.

	விடுதி மாணாக்கர் (Hosteller)	**வெளி மாணாக்கர் (Day Scholar)**
	(ரூபாயில்)	
பராமரிப்புப் படி (ஒரு மாதத்திற்கு)	*525/-*	*225/-*
தனி மானியம் (ஒரு ஆண்டுக்கு)	*1,000/-*	*750/-*

2022-2023 ஆம் நிதியாண்டில் 17,697 மாணாக்கர் பயனடையும் வகையில் ரூ.5.34 கோடி கல்வி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2023-2024 ஆம் நிதியாண்டில் ரூ.5.90 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டம்

பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் உள்ள பழங்குடியின மாணாக்கர் இக்கல்வித் திட்டத்தின்கீழ் பயன்பெற தகுதியுடையவர்கள். இக்கல்வி உதவித் தொகைக்கான செலவினம் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் 75:25 என்ற விகிதத்தில் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

(i) அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில், பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளை பயிலும் பழங்குடியின மாணாக்கரால் கல்வி நிறுவனங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டாய மற்றும் திரும்பப் பெற இயலாத கல்விக் கட்டணங்கள் மற்றும் பராமரிப்புப்படி கல்வி உதவித் தொகையாக மாணாக்கரின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படுகிறது.

2023 ஏப்ரல் 18]

(ii) சுயநிதிக் கல்வி நிறுவனங்கள்

சுயநிதிக் கல்லூரிகளில் கல்வி பயிலும் பழங்குடியின மாணாக்கரால் கல்வி நிறுவனங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய, அரசு / சுயநிதிக் கல்லூரிகளுக்கான கல்விக் கட்டண நிர்ணயக் குழுவால் நிர்ணயிக்கப்பட்ட கல்விக் கட்டணம் அம்மாணாக்கர் சார்பாக கல்வி நிறுவனங்களின் வங்கிக் கணக்குகளிலும் பராமரிப்புப்படி மாணாக்கரின் வங்கிக் கணக்கிலும் நேரடியாக செலுத்தப்படுகிறது.

பராமரிப்புப் படி விவரம்

போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் மாணாக்கருக்கு வழங்கப்படும் பராமரிப்பு படி குறித்த விவரம் பின்வருமாறு:

தொகுதி	படிப்புகள்	ஒரு மாதத்திற்கான பராமரிப்புப்படி (ரூ.)	
		விடுதி மாணாக்கர் (Hosteller)	வெளி மாணாக்கர் (Day Scholar)
I	*பொறியியல், மருத்துவம், சட்டம், நவீன ஆடை வடிவமைப்பு தொழில் நுட்பம்* (Fashion Technology), *கால்நடை, வேளாண்மை மற்றும் அதைச்சார்ந்த தொழில் படிப்புகளில் பட்டம் மற்றும் முதுநிலை பட்டப்படிப்பு மேலாண்மை மற்றும் மருத்துவம் சார்ந்த பல்வேறு படிப்புகளில் முதுநிலை பட்டயம் / பட்டயக் கணக்கர்* (CA/CWA/CS/CFA etc.,) *மற்றும் முதுநிலை ஆராய்ச்சி மற்றும் முனைவர் பட்டப்படிப்பு* (M.Phil, Ph.D., & Post Doctoral programmes)	*1,200/-*	*550/-*

தொகுதி	படிப்புகள்	ஒரு மாதத்திற்கான பராமரிப்புப்படி (ரூ.)	
		விடுதி மாணாக்கர் (Hosteller)	வெளி மாணாக்கர் (Day Scholar)
II	12 ஆம் வகுப்பு படிப்பினை நுழைவுத் தகுதியாக கொண்ட மருந்தாக்கியல், செவிலியர், விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் ஹோட்டல் மேலாண்மை போன்ற தொழிற்படிப்புகளில் பட்டம், பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகள் (B.Sc., (Nursing), B.Pharm, B.O.T, B.P.T, M.Sc (Nursing), M.Pharm, M.P.T etc.,)	820/-	530/-
III	தொகுதி I மற்றும் II-ல் இடம் பெறாத இதர இளங்கலை பட்டப்படிப்பு மற்றும் முதுகலை பட்டப் படிப்புகள் (B.A./B.Sc./ B.Com./ M.A.,/M.Sc./M.Com., etc.,)	570/-	300/-
IV	10 ஆம் வகுப்பு படிப்பினை நுழைவுத் தகுதியாகக் கொண்ட தொழில் நுட்பப் பட்டயப்படிப்புகள், சான்றிதழ் படிப்புகள், மேல்நிலைக் கல்வி படிப்புகள் மற்றும் தொழிற்பயிற்சி படிப்புகள். (XI, XII, ITI, தொழிற்பயிற்சிக் கல்வி etc.,)	380/-	230/-

2022-2023 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின்மூலம் 25,684 மாணாக்கர் பயன்பெறும் வகையில் ரூ.37.31 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2023-2024 ஆம் நிதியாண்டில் ரூ.46.44 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 18]

(ஈ) உயர் கல்விக்கான இதர கல்வி உதவித் தொகை திட்டங்கள்

பழங்குடியின மாணாக்கரின் உயர்கல்வி சேர்க்கையை ஊக்கப்படுத்தவும் உயர்கல்வி தொடர்ந்து பயில்வதை உறுதி செய்யவும் பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன:-

- *கற்பிப்புக் கட்டணம், விண்ணப்பக் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணம் ஈடு செய்தல்.*
- *உயர் கல்விச் சிறப்பு படிப்பு உதவித் தொகை.*
- *இளங்கலை மாணாக்கருக்கான கல்விக் கட்டணச் சலுகை.*
- *முதுகலை மாணவியருக்கான கல்விக் கட்டணச் சலுகை.*
- *வெளிநாடுகளில் தங்கி கல்வி பயிலும் மாணாக்கருக்கான கல்வி உதவித் தொகை திட்டம்.*
- *முழுநேர முனைவர் ஆராய்ச்சி படிப்பிற்கான ஊக்கத்தொகை திட்டம்.*

2. அடிப்படைக் கட்டமைப்பு மற்றும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

(அ) விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்

பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் நில மேம்பாடு, வீடுகள் கட்டித் தருதல், சாலை, குடிநீர், தெருவிளக்கு வசதிகளை மேம்படுத்துதல் தனிநபர் மற்றும் குழுக்களுக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்துதல் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்குதல் ஆகியவை இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2022-2023 ஆம் நிதியாண்டின் புதிய முன்னெடுப்புகள்

- *ரூ.50.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் அழிவின் விளிம்பிலுள்ள வீடற்ற 1,094 பழங்குடியின மக்களுக்கு வீடுகள் கட்டுதல்.*
- *தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்மூலம் செங்கல்பட்டு, தேனி, கோயம்புத்தூர்*

ஆகிய மாவட்டங்களில் கட்டப்பட்ட வீடுகளின் 226 குடும்பங்களுக்கான பங்குத் தொகை ரூ.3.66 கோடி வழங்கப்பட்டுள்ளது.

- அரியலூர் மாவட்டத்தில் உள்ள 16 கிராமங்களில் வாழும் இருளர் மக்களுக்கு 967 ஏக்கர் நிலப்பரப்பில் முந்திரி சேகரம் செய்வதற்கு சிறப்பினமாக ரூ.86.13 இலட்சம் வழங்கப்பட்டு 500 குடும்பங்களைச் சேர்ந்த 2,000-க்கும் மேற்பட்ட கூலித் தொழிலாளிகளாக இருந்தவர்கள் தற்போது தொழில் முனைவோராக தரம் உயர்த்தப்பட்டு உள்ளனர்.
- 'ஈரோடு மற்றும் நீலகிரி மாவட்டங்களில் உள்ள பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் வகையில் உன்னிக்குச்சிமூலம் ரூ.1.36 கோடி செலவில் தளவாடப் பொருட்கள் உற்பத்திக்கான தொழிற்கூடம் அமைக்கப்பட்டுள்ளது.

2022-2023 ஆம் நிதியாண்டில் ரூ.95.75 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 2,126 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2023-2024-ஆம் நிதியாண்டிற்கு ரூ.94.99 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் (Integrated Tribal Development Programme

வருவாய் வட்டார அளவில் மொத்த மக்கள் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதற்கு மேல் பழங்குடியின மக்கள் வசிக்கும் சேலம், நாமக்கல், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, திருச்சிராப்பள்ளி, தருமபுரி மற்றும் திருப்பத்தூர் ஆகிய ஏழு மாவட்டங்களில் உள்ள 10 மலைப் பகுதிகள் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இப்பகுதிகளின் மேம்பாட்டிற்காக பழங்குடியினருக்கான ஏழு திட்ட அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்டு பல்வேறு நலத் திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2023 ஏப்ரல் 18]

ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகள்

வ.எண்	மாவட்டம்	திட்டப்பகுதிகள்
1.	சேலம்	ஏற்காடு, பச்சமலை, அருநூத்துமலை மற்றும் கல்வராயன்மலை
2.	நாமக்கல்	கொல்லிமலை
3.	கள்ளக்குறிச்சி	கல்வராயன்மலை
4.	திருவண்ணாமலை	ஜவ்வாதுமலை
5.	திருச்சிராப்பள்ளி	பச்சமலை
6.	தருமபுரி	சித்தேரிமலை
7.	திருப்பத்தூர்	ஜவ்வாது மற்றும் ஏலகிரிமலை

இத்திட்டத்தின்கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் ரூ.3.23 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2023-2024 ஆம் நிதியாண்டில் ரூ.3.71 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) பழங்குடியினர் குடியிருப்புகளில் வீடுகள் மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் திட்டம்

பழங்குடியினர் வசிக்கும் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை முழுமை அடையச் செய்வதன் பொருட்டு சுகாதாரமான குடிநீர், மேம்படுத்தப்பட்ட சாலை வசதிகள், நவீன சூரிய மின்விளக்கு, தெருவிளக்குகள், நவீன கழிப்பறைகளுடன் கூடிய வீடுகள் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இப்பணிகளுக்காக சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பழங்குடியினர் நலத் துறை, வனம் மற்றும் கால நிலை மாற்றம் துறை மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆகிய துறைகள்மூலம் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:-

- ரூ.294.00 கோடி மதிப்பீட்டில் 25 மாவட்டங்களில் 8,803 வீடுகள்.

[2023 ஏப்ரல் 18

- ரூ.135.00 கோடி மதிப்பீட்டில் 187 சாலைப் பணிகள்.
- ரூ.5.61 கோடி மதிப்பீட்டில் 2,806 தெரு விளக்குகள்.
- ரூ.105.38 கோடி மதிப்பீட்டில் 1,173 குடிநீர் பணிகள்.
- ரூ.12.86 கோடி மதிப்பீட்டில் 4,288 சூரிய மின் விளக்குகள்.
- ரூ.126.00 கோடி செலவில் 2,787 வீடுகள் 22 மாவட்டங்களில் கட்ட ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2023-2024 ஆம் நிதியாண்டில் ரூ.100.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) பிரதம மந்திரியின் பழங்குடியினர் முன்மாதிரி கிராமத் திட்டம் (Pradhan Mantri Aadi Adarsh Gram Yojana)

மொத்த மக்கள்தொகையில் 50 விழுக்காடு அல்லது 500-க்கும் அதிகமான பழங்குடியின மக்கள் வசிக்கும் 167 கிராமங்களின் அடிப்படை உட்கட்டமைப்புத் தேவைகளை 5 ஆண்டுகளுக்குள் பூர்த்தி செய்திட (2021-2022 முதல் 2025-2026 வரை) இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் 167 கிராமங்கள் கண்டறியப்பட்டு அடிப்படை வசதிக்கான தேவைகளைக் கணக்கிட்டு ஒரு கிராமத்திற்கு ரூ.20.38 இலட்சம் வீதம் இத்திட்டத்தின்கீழ் நிதி பெறப்பட்டு மற்ற திட்டங்களிலிருந்தும், பிற துறைகளிலிருந்தும் கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டி "இடை நிரப்புதல்" (Gap Filling) என்பதன் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் 2023-2024 ஆம் நிதியாண்டில் ரூ.7.33 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(உ) இந்திய அரசியலமைப்புச் சட்டக்கூறு 275 (1)

பழங்குடியினரின் கல்வி மேம்பாடு, சுகாதாரம், குடிநீர் வசதி, சாலை வசதிகள், இணையதள சேவை, பொருளாதார நிலை உயர்வு போன்றவற்றிற்காக இத்திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2022-2023 ஆம் நிதியாண்டில் ரூ.11.46 கோடிக்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2023 ஏப்ரல் 18]

2023-2024 ஆம் நிதியாண்டில் ரூ.15.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஊ) அழிவின் விளிம்பிலுள்ள பண்டைய பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்

பழங்குடியினர் மக்கள் தொகை வளர்ச்சியில் தேக்கம் அல்லது குறைவு, அதீத வேளாண்மை சார்ந்த பொருளாதாரம் மற்றும் குறைந்த கல்வியறிவு போன்ற காரணிகளை அடிப்படையாகக் கொண்டு தோடர், கோத்தர், இருளர், குரும்பர், பனியன் மற்றும் காட்டுநாயகன் ஆகிய ஆறு இனத்தவர்கள் "அழிவின் விளிம்பில் உள்ள பண்டைய பழங்குடியினர்" என வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இத்தகைய மக்கள் குறித்த தளநிலை கணக்கெடுப்பு (PVTGs Baseline Survey) *மேற்கொள்ளப்பட்டு அதனடிப்படையில் வீட்டு வசதி, கல்வி மேம்பாடு, சுகாதாரக் கட்டமைப்பு, நில மேம்பாடு, சூரிய உயர் மின் கோபுர விளக்கு, மேம்படுத்தப்பட்ட வேளாண்மை, கால்நடைப் பராமரிப்பு, பாசன வசதி, திறன் மேம்பாடு மற்றும் அவர்களின் கலாச்சார பாதுகாப்பு போன்ற கூறுகளில் திட்டங்கள் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன.*

அழிவின் விளிம்பில் உள்ள 6 பண்டைய பழங்குடியினரின் இனவரவியல் குறித்து ரூ.48.00 இலட்சம் செலவில் ஆய்வு செய்யப்பட்டு அவர்களது கலாச்சாரங்கள் ஒலி/ஒளி ஆவணங்களாக பதிவு செய்து ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

2022-2023 ஆம் நிதியாண்டில் ரூ.36.31 கோடிக்கான திட்டங்களுக்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2023-2024 ஆம் நிதியாண்டிற்கு ரூ.40.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(எ) சிறு வன விளை பொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலைத் திட்டம்

வனங்களை சார்ந்து வாழும் பெரும்பாலான பழங்குடியின மக்கள் வாழ்வாதாரத்திற்காக சிறு வனப் பொருட்களையே சார்ந்துள்ளனர்.

வன உரிமைச் சட்டம் 2006-ன்படி, மூங்கில், தேன், மெழுகு, அரக்கு, மூலிகைகள், கிழங்குகள் போன்ற பல வகையான பொருட்கள் சிறுவனப் பொருட்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இத்தகைய சிறு வனப் பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கவும், மதிப்புக் கூட்டவும், சந்தைப்படுத்துதல் வாய்ப்புகளை உருவாக்கவும், "சிறு வன விளை பொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை" என்ற திட்டம் பழங்குடியினர் கூட்டுறவு சந்தைப்படுத்துதல் மேம்பாட்டு கூட்டமைப்பு (TRIFED) மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு வன வள மையமும் 20 உறுப்பினர்களைக் கொண்ட 15 சுய உதவிக் குழுக்களைக் கொண்டு (300 உறுப்பினர்கள்) உருவாக்கப்பட்டு ஒரு வனவள மையத்திற்கு ரூ.15.00 இலட்சம் 100% மானியமாக வழங்கப்படுகிறது. இத்தொகை இயந்திரங்கள் வாங்குதல், பயிற்சி அளித்தல், மதிப்புக் கூட்டுதல் போன்றவற்றிற்காக செலவிடப்படுகிறது.

தமிழ்நாட்டில் பின்வரும் 4 மாவட்டங்களில் 8 வன வள மையங்கள் செயல்பாட்டில் உள்ளன:

வ. எண்	மாவட்டம்	வனவள மைய இருப்பிடம்
1	திருவண்ணாமலை	ஜவ்வாது மலை (3)
2	சேலம்	ஏற்காடு, கருமந்துறை, அருநூத்துமலை
3	திருப்பத்தூர்	புதூர்நாடு
4	வேலூர்	பீஞ்சமந்தை

3. பழங்குடியினர் மற்றும் பிற மரபுவழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டம் 2006

வாழ்வாதாரம், குடியிருப்பு, சமூக கலாச்சார மற்றும் இதர தேவைகளுக்காக வனங்களைச் சார்ந்து வாழும் பழங்குடியினர் மற்றும் இதர மரபுவழி வாழ்பவர்களின் வனம் சார்ந்த உரிமையினை சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கும் பொருட்டு “பழங்குடியினர் மற்றும் பிற மரபுவழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டம், 2006-ல் இயற்றப்பட்டு, 29.12.2006 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இச்சட்டத்தின்படி 13.12.2005

2023 ஏப்ரல் 18]

ஆம் நாளுக்கு முன்பு வனங்களில் குடியிருப்போர் மற்றும் வனங்களைச் சார்ந்து சுற்றுப்புறங்களில் வாழும் பழங்குடியினரும் இத்தேதிக்கு முன்பு மூன்று தலைமுறைகளாக (75 ஆண்டுகளாக) வனங்களில் குடியிருப்போர் மற்றும் வனங்களைச் சார்ந்து சுற்றுப்புறங்களில் வாழும் இதர மரபினரும் வன உரிமைகள் பெற தகுதியுள்ளவர்கள் ஆவர்.

வன உரிமைகள் அங்கீகரித்தல் சட்டம் 2006-ன்கீழ் தனிநபர் வனநில பயன்பாடு, வன வளப் பொருட்களைச் சேகரித்தல் மற்றும் விற்பனை செய்தல், மேய்ச்சல் நிலப்பயன்பாடு, வன நிலங்களை சாலை, பள்ளி மற்றும் வழிபாட்டுத் தலங்கள் போன்ற பொதுப் பயன்பாட்டிற்காக பயன்படுத்துதல் ஆகிய செயல்பாடுகளுக்கு கீழ்க்கண்ட 5 வகையான வன உரிமைகள் வழங்கப்படுகின்றன.

1. *தனிநபர் உரிமை*
2. *சமுதாய உரிமை*
3. *சமுதாய வன வள உரிமை*
4. *சமுதாய மேம்பாட்டு உரிமை*
5. *அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினருக்கான குடியிருப்பு உரிமை* (Habitat Right)

இச்சட்டத்தின்கீழ் பெறப்படும் விண்ணப்பங்களைக் கூர்ந்தாய்வு செய்து உரிமைகள் வழங்க கிராம சபை, வருவாய்க் கோட்டக் குழு மற்றும் மாவட்டக் குழு ஆகிய மூன்று அளவில் குழுக்கள் செயல்படுகின்றன.

தலைமைச் செயலாளர் தலைமையிலான மாநில அளவிலான கண்காணிப்புக் குழு இச்சட்டத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்கிறது.

வன உரிமைச் சட்டம் 2006 தொடர்பான பயிற்சியினை வழங்கிடும் வகையில் திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தேனி, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, வேலூர் மற்றும் விருதுநகர் ஆகிய 9 மாவட்டங்களைச் சேர்ந்த வனத் துறை, வருவாய்த் துறை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை ஆகிய துறைச் சார்ந்த மாவட்ட அலுவலர்கள், மாவட்ட, கோட்ட அளவிலான குழு உறுப்பினர்கள் மற்றும் கிராம வன உரிமைக் குழு உறுப்பினர்கள் ஆகியோருக்கான 2 நாட்கள்

விழிப்புணர்வு மற்றும் செயலாக்கப் பயிற்சி முகாம் திருச்சியில் நடைபெற்றது. இதில் 200 அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இச்சட்டத்தின்கீழ் இதுவரை 10,410 தனிநபர் உரிமைகளும், 528 சமூக உரிமைகளும் வழங்கப்பட்டுள்ளன.

4. பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் மெய்த்தன்மை சரிபார்த்தல்

வருவாய்க் கோட்டாட்சியர்/சார் ஆட்சியரால் பழங்குடியினருக்கு வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையினைக் கூர்ந்தாய்வு செய்து இறுதி ஆணை பிறப்பிக்க மாநில அளவில் மூன்று கூர்நோக்குக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மாநில அளவிலான கூர்நோக்குக் குழுக்கள்

அரசுச் செயலாளர்/கூடுதல் செயலாளர்/ இணைச் செயலாளர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	தலைவர்
பழங்குடியினர் நலத் துறை இயக்குநர்/ பழங்குடியினர் நலத் துறை இயக்குநர் தரத்திற்கு சமமான இந்திய வனப் பணி அலுவலர்	உறுப்பினர் – செயலர்
இயக்குநர், பழங்குடியினர் ஆராய்ச்சி மையம்/ மானுடவியல் வல்லுநர்	உறுப்பினர்

கண்காணிப்புப் பிரிவுகள்

சென்னை, சேலம், வேலூர் மற்றும் மதுரை ஆகிய நான்கு மண்டலங்களில் வழங்கப்பட்ட பழங்குடியினர் சாதிச் சான்றிதழின் மெய்த்தன்மை பற்றி கள ஆய்வு செய்து, மாநில கூர்நோக்குக் குழுக்களுக்கு அறிக்கை அளிக்க துணை காவல் கண்காணிப்பாளர் தலைமையில் கண்காணிப்புப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன.

மேலும், காவல் துறைத் தலைவரின் தலைமையின்கீழ் அனைத்து மாவட்டங்களிலும் இயங்கிவரும் சமூகநீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் மெய்த்தன்மை அறிதல் பணியில் ஈடுபடுத்தப்பட்டு, கள ஆய்வு மேற்கொண்டு மாநில கூர்நோக்குக் குழுக்களுக்குப் பரிந்துரை செய்கின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 18]

5. பழங்குடியினர் ஆராய்ச்சி மையம்

பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் தமிழ்நாட்டில் வசிக்கும் பழங்குடியினரின் வாழ்க்கை முறை, கலாச்சாரம், மொழி, சமூக பொருளாதார மற்றும் கல்வி நிலை குறித்து ஆய்வு செய்வதற்காக 1985 ஆம் ஆண்டு நீலகிரி மாவட்டத்தில் மு.பாலாடா என்ற இடத்தில் தொடங்கப்பட்டது.

இம்மையத்தில் திறந்தவெளி அருங்காட்சியகம் அமைக்கப்பட்டு பழங்குடியினர் குறித்த கலைப்பொருட்கள் மற்றும் புகைப்படங்கள் பாதுகாக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

2022-2023 ஆம் ஆண்டில் பழங்குடியினர் ஆராய்ச்சி மையத்தால் மேற்கொள்ளப்பட்ட முக்கியப் பணிகள்

- இந்தியாவின் 75-வது சுதந்திர தினத்தையொட்டி (Azadi ka Amrut Mahotsav), ஒடிசா மாநிலத்தில் நடத்தப்பட்ட 9-வது தேசிய பழங்குடியின கைவினைப்பொருட்கள் திருவிழாவில் தமிழகத்தின் சார்பில் தோடர் பழங்குடியின பெண்கள் மூவர் பங்கு கொண்டு முதல் பரிசு பெற்றமைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கௌரவிக்கப்பட்டனர்.
- பழங்குடியின சுதந்திரப் போராட்ட வீரர்களின் பங்கினைப் போற்றும் வகையில் பழங்குடியினர் பெருமை தினம் (Janjatiya Gaurav Divas) மாநில அளவில் சென்னையில் கொண்டாடப்பட்டது.
- பழங்குடியினர் ஆராய்ச்சி மைய வளாகத்தில் ரூ.21.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக வடிவமைக்கப்பட்ட தகவல் களஞ்சியத்துடன் கூடிய புகைப்பட அருங்காட்சியகம் திறந்து வைக்கப்பட்டது.
- 23.11.2022 மற்றும் 24.11.2022 அன்று "பழங்குடி சமூகங்களின் நிலையான வளர்ச்சி, பிரச்சினைகள் மற்றும் சவால்கள்" என்ற தலைப்பில் தேசிய கருத்தரங்கு நடைபெற்றது.

இம்மையத்தின் நிருவாகச் செலவினங்கள் மாநில அரசாலும், திட்ட நடவடிக்கைகள் குறித்த செலவினங்கள் ஒன்றிய அரசின் பழங்குடியினர் நல அமைச்சகத்தாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[2023 ஏப்ரல் 18

2023-2024 ஆம் நிதியாண்டில் இம்மையத்தின் நிருவாகச் செலவுகளுக்காக ரூ.56.44 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6. சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம்

நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் இயங்கி வரும் பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம், பழங்குடியின இளைஞர்கள் தமது வேலையினைத் தேர்ந்தெடுக்க ஆலோசனை மற்றும் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சிகளை வழங்கி வருகிறது.

இம்மையத்தின் செயல்பாட்டிற்காக 2022-2023 ஆம் நிதியாண்டில் ரூ.34.37 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் நிதியாண்டில் இம்மையத்தின் செயல்பாட்டிற்காக ரூ.39.69 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

III. தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ)

ஆதி திராவிட மக்களுக்கு அரசின் சார்பில் வீடுகளைக் கட்டிக் கொடுக்கும் நிறுவனமாக 1974 ஆம் ஆண்டில் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) தொடங்கப்பட்டது. சமூகத்தின் அடித்தட்டு நிலையில் உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை பொருளாதார ரீதியில் மேம்படச் செய்யும் வகையில் பல்வேறுபட்ட தொழில் முனைவு மற்றும் திறன் மேம்பாட்டிற்கான அரசின் திட்டங்களைச் செயல்படுத்திடும் நிறுவனமாக தாட்கோ செயல்பட்டு வருகின்றது.

இக்கழகத்தின் தற்போதைய அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ.200.00 கோடியும், செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.147.11 கோடியும் உள்ளது. இக்கழகத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் 1980 ஆம் ஆண்டிலிருந்து மாநில அரசால் 51 விழுக்காடும், ஒன்றிய அரசால் 49 விழுக்காடும் என்கின்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

தாட்கோவின் நடவடிக்கைகள்

1 பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

2023 ஏப்ரல் 18]

2 இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்குதல்.

3 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளுதல்.

1. பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் பொருளாதார நிலையினை மேம்படுத்தி அவர்களது சமூக நிலையினை உயர்த்திடும் வகையில் பல்வேறுபட்ட தொழில் முனைவுத் திட்டங்கள் தாட்கோமூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் மாநில மற்றும் ஒன்றிய அரசின் நிதியுதவி, வங்கிகள் மற்றும் தேசிய பட்டியலினத்தோர் நிதி மேம்பாட்டுக் கழகம், தேசிய பழங்குடியினர் நிதி மேம்பாட்டுக் கழகம் மற்றும் தேசிய துப்புரவுப் பணியாளர்கள் நிதி மேம்பாட்டுக் கழகங்களிலிருந்து பெறப்பட்ட நிதியாதாரங்கள்மூலம் கடனுதவி வழங்கி செயல்படுத்தப்படுகிறது.

விவசாயம், சிறுதொழில், வணிகம் மற்றும் போக்குவரத்து ஆகிய துறைகளில் தொழில் புரிந்து பொருளீட்ட உதவும் வகையில் ஆதி திராவிடர் மக்களுக்கு திட்டத் தொகையில் 30 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.2.25 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது.

பழங்குடியினருக்கு திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.3.75 இலட்சம் மற்றும் இலகுரக வாகனம் வாங்கிட ரூ.4.00 இலட்சம் வரையிலும், கனரக வாகனம் வாங்கிட ரூ.5.50 இலட்சம் வரையிலும் மானியமாக வழங்கப்படுகிறது.

தாட்கோவால் செயல்படுத்தப்படும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களின்கீழ் நிதியுதவி பெறுவதற்கான ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.2.00 இலட்சத்திலிருந்து 2022-2023 ஆம் ஆண்டு முதல் ரூ.3.00 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் தொழில் தொடங்க சாதகமாக உள்ள தொழில் திட்டங்களைக் கண்டறிந்து இளைஞர்கள் புதிய வகை தொழில்களில் ஈடுபட உதவிடும் பொருட்டு மாவட்ட வாரியாக தொழில்நுட்ப பொருளாதார ஆய்வு (Techno-Economic Survey) நடத்தப்பட்டு, அதன்மூலம் திட்ட அறிக்கை வங்கி (Project Bank) ரூ.1.00 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ளது.

2022-2023 ஆம் நிதியாண்டில், பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களின்கீழ், 19,042 ஆதி திராவிடர் மற்றும் 1,502 பழங்குடியினருக்கு ரூ.171.82 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

1.1 தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், 18 வயது முதல் 65 வயது வரை உள்ள தனிநபர் மற்றும் குழுக்கள் தமது பொருளாதார நிலையினை உயர்த்திக்கொள்ளும் பொருட்டு, பின்வரும் வருவாய் ஈட்டும் தொழில்கள் புரிந்திட உதவும் வகையில் வங்கிகள்மூலம் மானியத்துடன் கடன் உதவி வழங்கப்படுகிறது.

- விவசாயம் தொடர்பான வாகனங்கள் வாங்குதல்
- இலகுரக, கனரக வாகனங்கள் மற்றும் மகிழுந்து வாகனம் வாங்குதல்.
- பால் பண்ணை மற்றும் கோழிப் பண்ணை அமைத்தல்.
- பல்பொருள் அங்காடி, எழுதுபொருள் விற்பனை, உடற்பயிற்சிக் கூடம், அழகு நிலையம், வெதுப்பகம், தையலகம், மின்சாதனங்கள் விற்பனை, உணவகம், வாகன உதிரி பாகங்கள் விற்பனை, செல்லிடைபேசி பராமரிப்பு, துணிக் கடை அமைத்தல் மற்றும் கட்டுமானப் பொருட்கள் விற்பனை.

2022-2023 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ் 7,098 பயனாளிகளுக்கு ரூ.104.97 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

1.2 நிலம் வாங்கும் திட்டம் மற்றும் நில மேம்பாட்டுத் திட்டம்

விவசாயத் தொழிலாளர்களாக உள்ள ஆதி திராவிட மக்களை நில உடமையாளர்களாக மாற்றி அவர்களின் சமூக நிலையினை உயர்த்திடும் வகையில் நிலம் வாங்கும் திட்டம் 2004-2005 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு இத்திட்டத்தில் மகளிருக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் நிலம் பிற இனத்தவரிடமிருந்து வாங்கப்பட வேண்டும். அவ்வாறு வாங்கப்படும் நிலங்களுக்கு முத்திரைத்தாள் மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்துவதில் இருந்து முழு விலக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

2023 ஏப்ரல் 18]

தற்போது, நிலத்தின் சந்தை மதிப்பு உயர்ந்துள்ளதால், இத்திட்டம் திருத்தி அமைக்கப்பட்டு, 2022-2023 ஆம் நிதியாண்டில் நிலமற்ற ஆதி திராவிட மற்றும் பழங்குடியின விவசாயத் தொழிலாளர்கள் விவசாய நிலம் வாங்க நிலத்தின் சந்தை மதிப்பில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.5.00 இலட்சம் மானியம் 200 பயனாளிகளுக்கு வழங்கிட ரூ.10.00 கோடி தாட்கோவிற்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் நில உடைமையை அதிகரிப்பது மட்டுமல்லாமல், அந்நிலங்களில் விவசாயத்தை மேம்படுத்திடும் வகையில் ஆழ்துளைக் கிணறு/திறந்தவெளிக் கிணறுகள் அமைத்தல் போன்றவற்றிற்கு மானியத்துடன் கூடிய கடனுதவிகள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ், 2022-2023 ஆம் நிதியாண்டில் 36 பயனாளிகளுக்கு (17-நிலம் வாங்குதல், 19-நில மேம்பாடு) ரூ.88.34 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

1.3 இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், படித்த 18 வயது முதல் 45 வயதிற்குட்பட்ட இளைஞர்கள் தங்களுக்குத் தெரிந்த/விருப்பமான சுய தொழில் துவங்க மானியத்துடன் கடன் உதவி வழங்கப்படுகிறது.

ஓட்டுநர் உரிமம் மற்றும் பேட்ஜ் வைத்துள்ள ஆதி திராவிட இளைஞர்களுக்கு கனரக வாகனம் வாங்கிட திட்டத் தொகையில் 30 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.2.25 இலட்சம் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு கனரக வாகனம் வாங்கிட திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.5.50 இலட்சம் வரையும், பயணியர் வாகனம்/ஈப்பு வாகனம் வாங்கிட திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்ச மானியம் ரூ.4.00 இலட்சம் வரையிலும் இதர தொழில்களுக்கு திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.3.75 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது.

தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களுடன் பின்வரும் தொழில்களையும் மேற்கொள்ள நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

- *கால்நடை வளர்ப்பு, பால் பண்ணை மற்றும் கோழிப்பண்ணை அமைத்தல்*
- *மலர் நிலையங்கள் அமைத்தல்.*

[2023 ஏப்ரல் 18

- உள்நாட்டு மீன் வளர்ப்பு, நன்னீர் இறால் வளர்ப்பு

இத்திட்டத்தின்கீழ் 2022-2023 ஆம் நிதியாண்டில் 1,853 பயனாளிகளுக்கு ரூ.32.17 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

1.4 இளைஞர்களுக்கான மருத்துவம் மற்றும் சுகாதாரம் சார்ந்த சிறப்பு சுய வேலை வாய்ப்புத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், மருத்துவம் (MBBS), பல் மருத்துவம் (BDS), சித்த மருத்துவம் (BSMS), ஆயுர்வேத மருத்துவம் (BAMS) இயற்கை மருத்துவம் மற்றும் யோகா (BNYS) ஆகிய படிப்புகளில் பட்டம் பெற்றவர்கள், சொந்தமாக மருத்துவ சிகிச்சை மையம்/ ஆய்வகம் / மருந்தகம் அமைப்பதற்கு மானியத்துடன் கடன் வழங்கப்படுகிறது.

இத்திட்டம் முட நீக்கு வல்லுநர், மருந்தாளுநர், கண்ணாடி வினைஞர் (optician) மற்றும் ஆய்வகத் தொழில்நுட்ப வல்லுநர் முதலிய மருத்துவம் சார்ந்த படிப்புகளில் தகுதி பெற்றுள்ளவர்கள் சொந்தமாக மருத்துவ சிகிச்சை மையம் / கண் கண்ணாடி கடை / ஆய்வகம் / மருந்தகம் அமைப்பதற்கும் உதவிடும் வகையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 2022-2023 ஆம் நிதியாண்டில் 13 பயனாளிகளுக்கு ரூ.26.16 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

1.5 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான பொருளாதார உதவித் திட்டம்

மகளிரின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும், மகளிர் முன்னேற்றத்திற்கான அடிப்படை வருவாய் ஈட்டும் தோட்டக்கலை, மலரியல், கைவினைப் பொருட்கள், சுற்றுலாத் தலங்களில் சிற்றுண்டிக் கடைகள் அமைத்தல் மற்றும் சுற்றுலா சார்ந்த தொழில்கள் மேற்கொள்ளவும் மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் வழங்கப்படுகிறது.

இருமுறை தர நிர்ணயம் செய்யப்பட்ட ஆதி திராவிட சுய உதவிக் குழுக்கள் தங்களுக்குத் தெரிந்த வருமானம் ஈட்டக்கூடிய தொழில் அல்லது வணிக நிறுவனத்தினைத் துவக்குவதற்காக ஒவ்வொரு குழுவிற்கும் திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.2.50 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது.

2023 ஏப்ரல் 18]

இருமுறை தர நிர்ணயம் செய்யப்பட்ட பழங்குடியின மகளிரை மட்டுமே உறுப்பினர்களாகக் கொண்டு இயங்கும் சுய உதவிக் குழுக்களுக்கு, அவர்கள் தொழில் செய்து வருவாய் ஈட்டிட உதவும் வகையில், திட்ட மதிப்பீட்டில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.3.75 இலட்சம் மானியம் வழங்கப்படுகிறது.


இத்திட்டத்தின்கீழ், 2022-2023 ஆம் ஆண்டு 3,650 உறுப்பினர்களைக் கொண்ட 296 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.7.31 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

தேசிய பட்டியலினத்தோர் நிதி மேம்பாட்டுக் கழகத்தின் மகிளா சம்ரிதி யோஜனா திட்டத்தின்கீழ் நிதி பெற்று 1,992 உறுப்பினர்கள் கொண்ட 166 மகளிர் சுய உதவிக்குழுக்கள் பயன்பெறும் வகையில் ரூ.17.92 கோடி கூட்டுறவு வங்கிக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

1.6 விவசாயிகள் துரித மின் இணைப்பு பெற மானிய உதவித் திட்டம்

இத்திட்டம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகள் துரித மின் இணைப்பு பெறுவதற்காக 90 விழுக்காடு மானியம் மற்றும் 10 விழுக்காடு பயனாளியின் பங்களிப்புடன் வைப்புத் தொகை செலுத்தும் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு வைப்புத் தொகையாக வழங்கப்பட்டு வந்த நிதியுதவி ரூ.10,000/-லிருந்து படிப்படியாக உயர்த்தப்பட்டு 2021-2022 ஆம் நிதியாண்டிலிருந்து கீழ்க்கண்ட முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



இத்திட்டத்தின்கீழ் 2022-2023 ஆம் நிதியாண்டில் 1,000 விவசாயிகள் பயன்பெறும் வகையில் அவர்களுக்கான வைப்புத் தொகையாக ரூ.23.37 கோடி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு செலுத்தப்பட்டு, துரித மின் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

1.7 மகளிர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம் அமைத்தல்

அதிக அளவில் கறவை மாடு வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள மகளிருக்கான பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களை அமைத்து அவர்களின் வாழ்க்கைத்தரம் மேன்மை அடையும் வகையில், 2,000 உறுப்பினர்களைக் கொண்ட 40 சங்கங்களை ஏற்படுத்திடும் திட்டம் 2022-2023 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், சங்கத்திற்குத் தேவையான பதிவேடுகள், பரிசோதனை உபகரணங்கள் மற்றும் பால் கேன்கள் வாங்குவதற்காக ஒரு சங்கத்திற்கு ரூ.1.00 இலட்சம் வீதம் ரூ.40.00 இலட்சம் நிதி வழங்கப்படுகிறது.

2022-2023 ஆம் நிதியாண்டில் 2,000 உறுப்பினர்களைக் கொண்ட 40 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு ரூ.40.00 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1.8 தீவனப்புல் வளர்க்க விதைத் தொகுப்பு மற்றும் புல்கறணைகள் வழங்கும் திட்டம்

தீவனப்புல் வளர்க்க விதைத் தொகுப்பு மற்றும் புல்கறணைகள் வழங்கும் திட்டம் 2022-2023 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்டு 1,000 விவசாயிகளுக்கு ரூ.1.00 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1.9 ஆவின் பாலகம் அமைக்க மானியம்

ஆதி திராவிட தொழில் முனைவோரின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில், மின் வாகனம் மற்றும் உறைவிப்பான், குளிர்விப்பான் போன்ற உபகரணங்களைக் கொள்முதல் செய்து ஆவின் பாலகம் அமைத்து வருவாய் ஈட்டிட 50 நபர்களுக்கு ரூ.45.00 இலட்சம் மானியம் வழங்கும் திட்டம் 2022-2023 ஆம் நிதியாண்டில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 18]

1.10 கறவை மாடுகள் வாங்க மானியம்

இத்திட்டத்தின்கீழ் 450 ஆதி திராவிடர் மற்றும் 50 பழங்குடியினர் என மொத்தம் 500 நபர்களுக்கு ரூ.2.25 கோடி மானியத்தில் கறவை மாடுகள் வழங்கும் திட்டம் 2022-2023 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் 2022-2023 ஆம் நிதியாண்டில் 500 பயனாளிகளுக்கு ரூ.2.25 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

1.11 தமிழ்நாடு சிமென்ட் விற்பனை நிலையம் அமைக்க மானியம்

100 ஆதி திராவிட தொழில் முனைவோருக்கு, தமிழ்நாடு சிமென்ட் கழகத்தின் விற்பனை முகவராக ரூ.3.00 கோடி மதிப்பீட்டில், சிமென்ட் விற்பனை நிலையம் அமைத்து பல்வகை கட்டுமானப் பொருள் விற்பனை செய்து வருவாய் ஈட்டிட ரூ.90.00 இலட்சம் மானியம் 2022-2023 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

1.12 தேசிய பட்டியலினத்தோர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்

தேசிய பட்டியலினத்தோர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் நிதியினை குறைந்த வட்டிக்குப் பெற்று தாட்கோமூலம் பருவக்கடன் ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

ஆதி திராவிட மாணாக்கருக்கு மருத்துவம், பொறியியல், செவிலியர் போன்ற முழுநேர பட்டப்படிப்பு பயில்வதற்காக குறைந்த வட்டியில் (மாணவியருக்கு 4 விழுக்காடு மற்றும் மாணவர்களுக்கு 4.5 விழுக்காடு) தாட்கோமூலம் கல்விக்கடன் வழங்கப்பட்டு வருகிறது.

2022-2023 ஆம் நிதியாண்டில் கல்விக்கடன் திட்டத்தின்கீழ் 44 மாணாக்கருக்கு ரூ.1.44 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

1.13 தேசிய துப்புரவுப் பணியாளர்கள் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்

தேசிய துப்புரவுப் பணியாளர்கள் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் நிதியினை பெற்று குறைந்த வட்டியில் தூய்மைப் பணிபுரிவோரின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான பல்வேறு பருவக்கடன் திட்டங்கள் தாட்கோமூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தூய்மைப் பணியாளர் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்கள் பருவக்கடன் பெற்று பயனடையும் வகையில், 2022-2023 ஆம் ஆண்டுக்கு 1,265 நபர்களுக்கு ரூ.20.00 கோடி கடன் வழங்க தேசிய துப்புரவுப் பணியாளர்கள் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழக நிறுவனத்தால் அனுமதிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

1.14 தேசிய பழங்குடியினர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்

தேசிய பழங்குடியினர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் நிதியினை குறைந்த வட்டிக்குப் பெற்று தாட்கோமூலம் பழங்குடியினருக்கு பருவக்கடன் வழங்கப்படுகிறது.

தேசிய பழங்குடியினர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்திடமிருந்து ரூ.20.00 கோடிக்கு நிதி பெற்று வழங்கிட அரசால் அனுமதி அளிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

பழங்குடியின மாணாக்கருக்கு மருத்துவம், பொறியியல், செவிலியர் போன்ற படிப்புகள் பயில தாட்கோமூலம் குறைந்த வட்டியில் கல்விக்கடன் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், 2022-2023 ஆம் ஆண்டு 2 பழங்குடியின மாணாக்கருக்கு ரூ.15.84 இலட்சம் கல்விக் கடன் வழங்க அனுமதி அளிக்கப்பட்டு முதல் தவணைத் தொகையாக ரூ.3.96 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

2. இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்குதல்

பொருளாதார நிலையில் குறைவாக உள்ள இளைஞர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிப்பதும் அவசியம் ஆகும். எனவே, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்/தேசிய திறன் மேம்பாட்டுக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள்மூலம் பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2023 ஏப்ரல் 18]

2022-2023 ஆம் ஆண்டில் அறிமுகப் படுத்தப்பட்ட வேலைவாய்ப்புடன் கூடிய சிறப்புப் பயிற்சிகள்

2.1 இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT) மெட்ராஸ்மூலம் பட்டப் படிப்பு

பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணாக்கர், இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT) *மெட்ராஸ்-ல் இணைய வழியாக வழங்கப்படும் இளங்கலை தகவல் அறிவியல் மற்றும் பயன்பாடு* (BS-Data Science and Application) *நான்கு வருட பட்டப்படிப்பினைப் பயில நுழைவுத் தேர்வுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, அதில் தேர்ச்சி பெறும் மாணாக்கருக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. மாணாக்கர் ஒரே நேரத்தில் தங்களுக்கு விருப்பமான பட்டப்படிப்பினை படித்துக் கொண்டே இப்படிப்பினை இணையதளம் வழியாக பயிலலாம்.*

இத்திட்டத்தின்கீழ் 2022-2023 ஆம் நிதியாண்டில், 75 மாணாக்கருக்கு நுழைவுத் தேர்வுக்கு ரூ.1.12 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டு, நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற்ற 9 மாணாக்கர் ரூ.10.09 இலட்சம் செலவில் இப்படிப்பினை பயின்று வருகின்றனர்.

2.2 HCL நிறுவனத்தில் வேலைவாய்ப்புடன் கூடிய நான்கு வருட பட்டப்படிப்பு

2020-2021 மற்றும் 2021-2022 ஆம் ஆண்டுகளில் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணாக்கருக்கு HCL *நிறுவனத்தில் ஒரு ஆண்டு கால உள்ளுறைப் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புடன் கூடிய பட்டப்படிப்பு பயில நுழைவுத் தேர்வுக்கு 10 நாட்கள் பயிற்சி அளிக்கப்பட்டு, ஒரு ஆண்டு பயிற்சிக்கான நிதியுதவி வழங்கப்படுகிறது.*

இத்திட்டத்தின்கீழ், 2022-2023 ஆம் நிதியாண்டில் 148 மாணாக்கருக்கு நுழைவுத் தேர்வுக்கான 10 நாட்கள் பயிற்சி ரூ.11.10 இலட்சம் செலவில் வழங்கப்பட்டு, நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற்ற 19 மாணாக்கர் ரூ.22.42 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றனர்.

[2023 ஏப்ரல் 18

2.3 ஹோட்டல் மேலாண்மை மற்றும் கேட்டரிங் தொழில்நுட்ப பட்டப் படிப்பு

பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணாக்கர், சென்னை தரமணியில் உள்ள ஹோட்டல் மேலாண்மை மற்றும் கேட்டரிங் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் இளங்கலை – விருந்தோம்பல் மற்றும் ஹோட்டல் நிருவாகம் (B.Sc – Hospitality & Hotel Administration) மூன்று வருட முழு நேர பட்டப்படிப்பு மற்றும் உணவு உற்பத்தி பட்டயப்படிப்பு பயில நிதியுதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், 2022-2023 ஆம் நிதியாண்டில், இப்படிப்புகளைப் பயில 18 மாணாக்கருக்கு ரூ.24.40 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

2.4 வங்கி போட்டித் தேர்விற்கான பயிற்சிகள்

இளங்கலை மற்றும் முதுகலை பட்டப் படிப்பு முடித்த ஆதி திராவிட இளைஞர்களுக்கு அரசு மற்றும் தனியார் வங்கிகள் நடத்தும் போட்டித் தேர்வுகளில் பங்கேற்று வேலை வாய்ப்பினைப் பெற சிறந்த பயிற்சி நிறுவனங்கள்மூலம் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

2022-2023 ஆம் நிதியாண்டில், ரூ.9.85 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டு, இப்பயிற்சியின்மூலம் 152 இளைஞர்கள் பயன் அடைந்துள்ளனர்.

2.5 மருத்துவக் குறியீடு (Medical Coding) பயிற்சி

இளங்கலை மற்றும் முதுகலை அறிவியல் பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்ற மாணாக்கருக்கு மருத்துவக் குறியீடு (Medical Coding)-க்கான பயிற்சி அளிக்கப்பட்டு இந்திய மென்பொருள் நிறுவனங்களில் மருத்துவக் குறியீட்டுக்கான வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படுகிறது.

2022-2023 ஆம் நிதியாண்டில், 300 மாணாக்கருக்கு ரூ.16.38 இலட்சம் செலவில் பயிற்சி ஆணை வழங்கப்பட்டு, அதில் முதற்கட்டமாக பயிற்சி முடித்த 84 மாணாக்கருள் 50 மாணாக்கர் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மீதமுள்ள மாணாக்கருக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

2023 ஏப்ரல் 18]

2.6 ட்ரோன் (Drone) இயக்கப் பயிற்சி

பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு விவசாய நிலங்களில் பூச்சிக்கொல்லி மருந்து மற்றும் நுண்ணுயிர் உரங்களை ட்ரோன் கருவிமூலம் தெளிப்பதற்கு மெட்ராஸ் இன்ஸ்டியூட் ஆப் டெக்னாலஜி, விண்வெளி ஆராய்ச்சி மையம் மூலமாக ட்ரோன்கள் இயக்குவதற்கு பயிற்சி பெறவும் மற்றும் சொந்தமாக ட்ரோன்கள் வாங்கி பயன்படுத்துவதற்கும் மானியத்துடன் கூடிய கடன் தொழில்முனைவோர் திட்டத்தின்கீழ் வழங்கப்படுகிறது.

2022-2023 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.96.44 இலட்சம் செலவில் 243 நபர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம் (DGCA) மூலம் உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

2.7 விமான நிலைய வாடிக்கையாளர் சேவை பயிற்சி

பன்னிரெண்டாம் வகுப்பு மற்றும் பட்டப்படிப்பு முடித்த இளைஞர்களுக்கு விமான நிலைய வாடிக்கையாளர் சேவை பயிற்சி வழங்கப்பட்டு, அதன் தொடர்புடைய நிறுவனங்களில் பணிபுரிய வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் ரூ.83.69 இலட்சம் செலவில் 490 மாணாக்கர் பயிற்சி பெற்று வருகின்றனர்.

2.8 கணக்கு நிர்வாகப் (Accounts Executive) பணி சம்பந்தப்பட்ட பயிற்சி

இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பு முடித்த இளைஞர்களுக்கு வங்கியல்லாத நிதி நிறுவனங்கள், காப்பீட்டு நிறுவனங்கள் மற்றும் இதர நிதி நிறுவனங்களில் கணக்கு நிர்வாகப் பணிக்கான வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கு (Accounts Executive) பயிற்சிகள் வழங்கப்பட்டு வேலை வாய்ப்பு ஏற்படுத்தி தரப்படுகிறது.

2022-2023 ஆம் நிதியாண்டில் ரூ.11.59 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டு, 90 மாணாக்கர் பயனடைந்துள்ளனர்.

2.9 ஒப்பனையியல் பயிற்சி

பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற இளைஞர்களுக்கு அழகு நிலையங்களில் வேலைவாய்ப்பு பெறவும், சொந்தமாக அழகு

நிலையம் அமைப்பதற்கும் முன்னணி பயிற்சி நிறுவனங்கள்மூலம் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் ரூ.12.06 இலட்சம் செலவில், 46 நபர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

2.10 வேலைவாய்ப்புக்கான போட்டித் தேர்வுகளை எதிர்கொள்வதற்கான பயிற்சி (Aspiring Minds Computer Adaptive Test)

இளநிலை மற்றும் முதுகலை இறுதியாண்டு படிக்கும் மாணாக்கர் வேலை வாய்ப்புக்கான போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ளும் வகையில், ஆதி திராவிட மாணாக்கருக்கு ரூ.7.60 கோடி செலவிலும், பழங்குடியின மாணாக்கருக்கு ரூ.2.40 கோடி செலவிலும் பயிற்சி வழங்கப்படுகிறது.

2.11 பொது நுழைவுத் தேர்வு பயிற்சி (Common Admission Test – CAT)

இளநிலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பு முடித்த மாணாக்கருக்கு இந்திய மேலாண்மைக் கழகம் (IIM) மற்றும் இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT) போன்ற கல்வி நிறுவனங்களில் முதுகலை வணிக மேலாண்மை (MBA) மேற்படிப்பு படிக்க நடத்தப்பெறும் பொது நுழைவுத்தேர்வில் தேர்ச்சி பெறும் வகையில் தலைசிறந்த பயிற்சி நிறுவனங்கள் மூலமாக 100 மாணாக்கருக்கு ரூ.50.00 இலட்சம் செலவில் பயிற்சி வழங்கப்படுகிறது.

இவை மட்டுமன்றி இதர துறைகளில் படித்த இளைஞர்களுக்கு கீழ்க்கண்ட பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

- ஆயத்த ஆடை வடிவமைத்தல், வீட்டு அலங்கார பொருட்கள் வடிவமைத்தல் தொடர்பான பயிற்சிகள்
- தானியங்கி மற்றும் தொடர்புடைய பயிற்சிகள்
- மின்னணு மற்றும் வன்பொருள் தொடர்பான பயிற்சிகள்
- தோல் தொழில் நுட்பம் அதனுடன் தொடர்புடைய பயிற்சிகள்
- தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பயிற்சிகள்.

2023 ஏப்ரல் 18]

3. கட்டுமானப் பணிகள்

தாட்கோ நிறுவனத்தின் கட்டுமானப் பிரிவு, இத்துறையால் நடத்தப்படும் பள்ளிகள், வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வுக் கூடங்கள், கழிவறை, சுற்றுச்சுவர், விடுதிகள் மற்றும் சமுதாயக் கூடங்கள் ஆகியவை கட்டும் பணியினை மேற்கொண்டு வருகிறது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை சார்பில் ரூ.37.66 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள விடுதிகள், பள்ளிக் கட்டடங்கள் மற்றும் செங்கல்பட்டு, திருப்பத்தூர், இராணிப்பேட்டை, கள்ளக்குறிச்சி, தென்காசி மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள தாட்கோ மாவட்ட அலுவலகங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் காணொலிக் காட்சிமூலம் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

தாட்கோ கட்டுமானப் பிரிவுமூலம் தற்போது பல்வேறு திட்டங்களின்கீழ் ரூ.380.00 கோடி மதிப்பிலான 426 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2022-2023 ஆம் நிதியாண்டின் பணிகள் விவரம்

திட்டம்	கூறுகள்	பணிகளின் எண்ணிக்கை	மதிப்பீட்டுத் தொகை (ரூ.கோடியில்)
ஆதி திராவிடர் நலம்	விடுதிகள்	50	151.55
பழங்குடியினர் நலம்	விடுதிகள்	9	17.29
நபார்டு	விடுதிகள்	2	2.52
ஆதி திராவிடர் நலம்	பள்ளிகள்	42	6.01
பழங்குடியினர் நலம்	பள்ளிகள்	38	19.87
ஆதி திராவிடர் நலம்	சுற்றுச்சுவர்	61	10.76
நபார்டு	XXV & XXVIII	166	113.13
ஆதி திராவிடர் நலம்	சமுதாயக் கூடம்	48	41.52
BJRCY	விடுதிகள்	10	17.35
மொத்தம்		**426**	**380.00**

3.1 ஒன்றிய அரசின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் பணிகள்

பாபு ஜெகஜீவன் ராம் சத்ரவாஸ் யோஜனா திட்டத்தின்கீழ் மாணவ, மாணவியருக்கான 13 விடுதிக் கட்டடங்கள் ரூ.21.80 கோடி மதிப்பீட்டில் கட்ட ஒப்புதல் வழங்கப்பட்டு 3 விடுதிகள் கட்டி முடிக்கப்பட்டு 10 விடுதிகள் பல்வேறு மாவட்டங்களில் கட்டப்பட்டு வருகின்றன.

செங்கல்பட்டு மாவட்டம் – குமிழி, திருப்பத்தூர் மாவட்டம் – கீழூர், திருவண்ணாமலை மாவட்டம் – புளியம்பட்டி, நாமக்கல் மாவட்டம் – செங்கரை மற்றும் நீலகிரி மாவட்டம் – மு.பாலாடா ஆகிய 5 இடங்களில் இயங்கி வரும் ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கான பள்ளி வகுப்பறை மற்றும் ஆய்வுக்கூடங்கள் மற்றும் இருபாலருக்கான விடுதிக் கட்டடங்கள் ரூ.60.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன.

3.2 மாநில அரசின் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் பணிகள்

தரம் உயர்த்தப்பட்ட ஆதி திராவிடர் நல மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் ஆய்வுக் கூடங்கள், விடுதிகள், சுற்றுச்சுவர் மற்றும் சமுதாயக் கூடங்கள் கட்டுதல், சிறப்பு பழுதுபார்க்கும் பணி மற்றும் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதித் திட்டத்தின்கீழ் கல்வராயன் மலையில் உள்ள அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பணிகள் மாநில அரசின் நிதியுதவியின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது, மாநில அரசின் நிதியிலிருந்து ரூ.247.02 கோடி மதிப்பீட்டிலான 248 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

3.3 நபார்டு திட்டப்பணிகள் (ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி)

தற்போது, நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியுதவியுடன் ரூ.115.65 கோடி மதிப்பீட்டிலான 168 கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

IV. தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையம்

தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையம் தமிழ்நாட்டில் வசிக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் சட்டப்பூர்வமான உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் அவர்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு அளித்தல் ஆகிய நோக்கங்களுடன் தன்னாட்சி அதிகாரத்துடன் செயல்படும் அமைப்பாக உருவாக்கப்பட்டு 13.10.2021 முதல் செயல்பட்டு வருகிறது.

சென்னை உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசர் இவ்வாணையத்தின் தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். மேலும், இவ்வாணையத்திற்கு ஒரு துணைத் தலைவர் மற்றும் நான்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இவர்களது பதவிக்காலம் மூன்று ஆண்டுகள் ஆகும். மேலாண்மை இயக்குநர், தாட்கோ அவர்கள் உறுப்பினர் செயலாளராக உள்ளார்.

இவ்வாணையத்தில் இதுவரை 1,826 மனுக்கள் பெறப்பட்டு அவற்றுள் 987 வழக்குகள் முடித்து வைக்கப்பட்டுள்ளன.

V. நலக் குழுக்கள்

அ) மாநில அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம் 1989 மற்றும் திருத்தச் சட்டம் 2015, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) விதிகள் 2016, ஆகியவற்றின் செயலாக்கம் மற்றும் இச்சட்டத்தின்கீழ் பதியப்பட்டுள்ள வழக்குகள் குறித்து ஆய்வு செய்தல், வன்கொடுமைக்கு ஆளானோருக்கு வழங்கப்பட வேண்டிய தீருதவிகள் மற்றும் இச்சட்டத்தைச் செயல்படுத்தும் பல்வேறு அலுவலர்கள்/அமைப்புகளின் பணி/பங்கு குறித்தும் ஆய்வு செய்தல் ஆகிய நோக்கங்களுடன் மாநில அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக்குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இக்குழு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் மாண்புமிகு அமைச்சர்கள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

[2023 ஏப்ரல் 18

இக்குழுவின் முதல் கூட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது தலைமையில் 19.08.2021 அன்றும் 2022 ஆம் ஆண்டிற்கான கூட்டம் 12.04.2022 அன்றும் 2023 ஆம் ஆண்டிற்கான கூட்டம் 11.04.2023 அன்றும் நடைபெற்றது.

ஆ) தமிழ்நாடு பழங்குடியினர் ஆன்றோர் மன்றம்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஐந்தாவது அட்டவணையில் விதி எண் 4(1)-ல் கூறப்பட்டுள்ளவாறு, தமிழ்நாட்டில் வாழும் பழங்குடியினரின் நலன் மற்றும் அவர்களது முன்னேற்றத்திற்கு ஆலோசனை வழங்கும் விதமாக பழங்குடியினர் ஆன்றோர் மன்றம் 1961 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

இம்மன்றத்தின் தலைவராக மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களும் மற்றும் உறுப்பினர்-செயலராக பழங்குடியினர் நல இயக்குநர் அவர்களும் உள்ளனர். இம்மன்றத்தில் 3 அலுவல் சார்ந்த உறுப்பினர்களும், பழங்குடி இனத்தைச் சார்ந்த 15 அலுவல் சாரா உறுப்பினர்களும், பழங்குடியினர் அல்லாத அலுவல் சாரா 2 உறுப்பினர்களும் சேர்த்து 20 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

VI. நல வாரியங்கள்

1. புதிரை வண்ணார் நல வாரியம்

புதிரை வண்ணார் சமுதாயத்தின் சமூக, பொருளாதார கல்வி மேம்பாட்டிற்கென மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் 2009 ஆம் ஆண்டு புதிரை வண்ணார் நல வாரியம் அமைக்கப்பட்டது.

இவ்வாரியத்தில் 12 அலுவல் சார்ந்த உறுப்பினர்களும், 13 அலுவல் சாரா உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வாரியத்தின் உறுப்பினர்-செயலர் ஆதி திராவிடர் நல இயக்குநர் ஆவார்.

இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள 2,276 உறுப்பினர்களுக்கும், அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் நிதியுதவி வழங்கிட 2009 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கப்பட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 18]

புதிரை வண்ணார் நல வாரியத்திற்கு புத்துயிர் அளித்து, வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள 2023-2024 ஆம் நிதியாண்டில் ரூ.10.00 கோடி கூடுதல் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

2. தூய்மைப் பணியாளர்கள் நல வாரியம்

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் தூய்மைப் பணியாளர்களின் குடும்பத்தாருக்கு கல்வி, சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கென அரசு செயல்படுத்தும் பல்வேறு திட்டங்களின் செயலாக்கத்தைக் கண்காணித்து, அவற்றின் முன்னேற்றத்தை உறுதி செய்திடும் பொருட்டு 2007 ஆம் ஆண்டு 'தூய்மைப் பணியாளர்கள் நல வாரியம்' அமைக்கப்பட்டது.

இவ்வாரியத்தில் ஒரு துணைத் தலைவர், 13 அலுவல் சார்ந்த உறுப்பினர்கள் மற்றும் 14 அலுவல் சாரா உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தாட்கோ மேலாண்மை இயக்குநர் இவ்வாரியத்தின் உறுப்பினர்-செயலராக உள்ளார்.

இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள 68,700 உறுப்பினர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் பொருட்டு ரூ.3.00 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 2022-2023 ஆம் நிதியாண்டில், 6-வது மாநில நிதி ஆணையத்தின்மூலம் தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்திற்கு ரூ.15.00 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

2022-2023 ஆம் நிதியாண்டில், வீடற்ற 500 தூய்மைப் பணியாளர்கள் நல வாரிய உறுப்பினர்களுக்கு ரூ.55.00 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்மூலம் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு அரசு மானியம் 90 விழுக்காடு, வாரியத்தின் பங்களிப்பு 9 விழுக்காடு மற்றும் 1 விழுக்காடு பயனாளிகளின் பங்களிப்புடன் வீடுகள் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3,078 உறுப்பினர்களைக் கொண்ட 13 மகாத்மா காந்தி தொழிலாளர்கள் ஒப்பந்தம் மற்றும் திறன் மேம்பாட்டு கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் சுகாதார அங்காடிகள் அமைப்பதற்கு ரூ.98.00 இலட்சம் மானியம் வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

[*2023 ஏப்ரல் 18*

3. பழங்குடியினர் நல வாரியம்

தமிழ்நாட்டிலுள்ள பழங்குடியின மக்களின் சமூக, பொருளாதார, கல்வி நிலைகளில் திட்டமிடப்பட்ட உறுதியான முன்னேற்றத்தை அடைவதற்கென பழங்குடியினர் நல வாரியம் மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்டு 2007 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இவ்வாரியத்தில் 8 அலுவல் சார்ந்த உறுப்பினர்களும் 13 அலுவல் சாரா உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். பழங்குடியினர் நல இயக்குநர் இவ்வாரியத்தின் உறுப்பினர்-செயலராக உள்ளார்.


இவ்வாரியங்கள்மூலம் இயற்கை மரணம், விபத்து மரணம் ஆகியவற்றிற்கான உதவித்தொகை, ஈமச்சடங்கிற்கான உதவித் தொகை, கல்வி உதவித் தொகை, திருமண உதவித்தொகை, ஓய்வூதியம் மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

VII. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கு 2023-2024 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு

(ரூ. கோடியில்)


வ. எண்	அலுவலகங்கள்	வருவாய்	மூலதனம்	மொத்தம்
1.	தலைமைச் செயலகம்	*13.77*	*0*	*13.77*
2.	ஆதி திராவிடர் நலத் துறை	*2608.20*	*246.43*	*2854.63*
3.	பழங்குடியினர் நலத் துறை	*389.23*	*250.60*	*639.83*
4.	தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையம்	*4.62*	*0*	*4.62*
மொத்தம்		**3015.82**	**497.03**	**3512.85**

2023 ஏப்ரல் 18]




2022-2023 பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்
பயனாளிகள்
மானியம்
ரூ. (கோடியில்)
7098
3650
1853
1000
1000
40
104.97
7.31
32.17
23.37
1
0.4

[2023 ஏப்ரல் 18



தொழில் வாரியான ஒப்பீடு
டிராக்டர் 2782
பால் பண்ணை 2220
இதர தொழில்கள் 1390
சுமை வாகனம் 297
இலகுரக வாகனம் 281
பயணியர் ஆட்டோ 229
ஆடைகள்/ தையல் தொழில் 191
பல்பொருள் அங்காடி 139
செண்ட்ரிங் 136
மின் மற்றும் மின்னணுவியல் 132
போட்டோ மற்றும் பிரிண்டிங் 52

2023 ஏப்ரல் 18]



திறன் மேம்பாட்டுப் பயிற்சி
ரூ. இலட்சத்தில்
ரூ.36.72
490
ரூ.16.38
300
ரூ.96.44
ரூ.9.85
152
ரூ.12.00
90
ரூ.12.06
46
ரூ.34.00
19
ரூ.50.00
18
ரூ.10.09
9

[2023 ஏப்ரல் 18


கட்டுமானப் பணிகள்
3
BJRCY விடுதிகள்
ரூ. 4.50 கோடி
9
ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலம் மற்றும் நபார்டு விடுதிகள்
ரூ. 13.35 கோடி
188
ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலம் மற்றும் நபார்டு பள்ளிகள்
ரூ. 89.83 கோடி
8
ஆதிதிராவிடர் நலம் சமுதாயக்கூடம்
ரூ. 5.06 கோடி
14
ஆதிதிராவிடர் நலம் சுற்றுச்சுவர்
ரூ. 3.06 கோடி

* * * * *

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai, Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the
Tamil Nadu Legislative Assembly Rules and
printed by the
Commissioner of Stationery and Printing,
Chennai-600 002.